தமிழர் பண்பாட்டு வரலாறு

இரண்டாம் பாகம்

'பண்பாட்டுச் செல்வர்'
செ. வைத்தியலிங்கன், எம்.ஏ., எம்.லிட்.
ஆராய்ச்சி இணைஞர்
தமிழ், சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகள்
ஆராய்ச்சி நிறுவனம்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் — 608 002
1987

தமிழ்ப் பண்பாட்டு வரலாறு

இரண்டாம் பாகம்

'பண்பாட்டுச் செல்வர்'
செ. வைத்தியலிங்கன், எம்.ஏ.,எம்.லிட்.
ஆராய்ச்சி இணைஞர்
தமிழ் சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகள்
ஆராய்ச்சி நிறுவனம்
தமிழியல் துறை
அண்ணாமலைப்பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் - 608 002.
1997

முதல் பதிப்பு 1997

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, இரண்டாம் பாகம்

TAMIL PANPATTU VARALARU, Vol.: II

விலை.

U.S.$

அச்சிட்டோர்:-

மீனாட்சி பிரிண்டர்ஸ்

சிதம்பரம்.

டாக்டர் எம். ஜி. முத்துக்குமாரசாமி,
துணைவேந்தர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அணிந்துரை

உலகத்தில் பல வகைப்பட்ட உயிரினங்கள் உள்ளன. அவற்றை இனம்பிரித்தும், அவற்றிலிருந்து தனிப்பட்ட நிலையில் இனமேன்மை காணுமாறு சிறப்புற்றும் விளங்குவது மனித இனமேயாகும். இத்தகைய சிறப்பிற்குக் காரணங்கள், மக்களின் எண்ணங்களும் மொழிகளும் செயற்பாடுகளுமேயாகும்.

எண்ணம் சொல் செயல் காரணமாக அமைந்த பழக்க வழக்கங்களைப் பாகுபடுத்திக் காணும்வகையில், உலகில் பல பகுதிகளில் 'பண்பாடும் நாகரிகமும்' பல கூறுகளுடன் (Features) உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாடும் தத்தம் நாகரிகத்தினை உயர்ந்ததாகக் கொண்டு, தனித்தன்மையுடன் உயிரெனப் போற்றிக் காத்தன; எனினும், காலப்போக்கில் சில நாகரிகங்களே வரலாற்றில் நிலையான இடம் பிடித்துள்ளன; பல நாகரிகங்கள் தம் பெயர்களை வரலாற்று ஏடுகளில் கூறுமாறு செய்தநிலையில், சுற்றுச்சூழல்களாலும் பிற காரணங்களாலும் மறைந்துவிட்டன. இதனை ஆராய்ந்து எழுதிய ஆராய்ச்சி வல்லுநரான ஆர்னால்ட் டாயின்பி (Arnold Toynbee) இன்றுவரையில் 23 தொன்மையான (Primitive) நாகரிகங்கள் அழிந்துபட்டுள்ளன என்று கூறியுள்ளார். கால வெள்ளத் திடையே எதிர்நீச்சலடித்துக் கொண்டு இக்காலத்திலும் உயிரோட்டமுடன் வாழக்கூடிய நாகரிகங்களாக ஆறு நாகரிகங்கள் உள்ளன. அவை, 1. மேற்கத்திய நாகரிகம் (Western Society) 2. கடவுள் நம்பிக்கையுள்ள கிறித்துவ நாகரிகம் (Orthodox Christian Society) 3. தூரக்கிழக்கு (நாட்டு) நாகரிகம் (Far eastern Society) 4. இசுலாமிய நாகரிகம் (Islamic society) 5. உருசிய நாகரிகம் (Russian Society) 6. இந்திய நாகரிகம் (Indic Society); இவற்றிடையே இந்திய நாகரிகத்தின்

சீர்மையை ஓரளவு பிற நாகரிகங்களுடன் ஒப்பிட்டு ஆராயும் முயற்சி, அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இந்திய நாகரிகத்தின் மேன்மையைப் பிற நாடுகள் நன்கு புரிந்து கொள்ளவேண்டுமெனின், தென்னிந்திய நாகரிகம் - அதிலும் சிறப்பாகத் **'தமிழ்நாட்டு நாகரிகம்'** - உணர்த்தப்படுதல் வேண்டும். இந்த நல்ல நோக்கத்தை மனத்துட்கொண்டே **'தமிழ்ப்பண்பாட்டு வரலாறு'**, அண்ணாமலைப்பல்கலைக் கழகத் தமிழியல் துறை திட்டமிட்டு எழுதிக் கொண்டு வருகிறது.

பொதுவாக நோக்குகையில், பண்டைய நாகரிகங்கள் இனக்குழுக்களால் அமைக்கப்பட்டவை என்பர்; எனினும், அவை தனித்தனியாக வளரவில்லை என்பதும், நாகரிக மக்கள் அண்டைநாட்டு மக்களின் தொடர்பைக் காலப்போக்கில் ஏற்படுத்திக் கொண்டு, வாழ்வியலை அமைத்துக் கொண்டனர் என்பதும் தெரியவரும். மேலும், நாட்டின் உயர்ந்த வாழ்வியல் நாகரிகம் வளர்ந்தோங்குவதற்கு அங்குள்ள மண்வளம், தட்ப வெப்பம், பொருளாதாரம், கலை, அரசியல், பழக்கவழக்கங்கள் முதலியவை காரணமாகும் என்பதும் தெரியவரும். இவற்றையெல்லாம் மனத்துட்கொண்டு எழுதப்படும் பண்பாட்டு வரலாறே நாகரிகத்தினை உணர்ந்து கொள்ளப் பெரிதும் துணை நிற்கும். இதனை நன்குணர்ந்த நிலையில், **'தமிழ்ப்பண்பாட்டு வரலாறு'**, சில பாகங்களாக வெளிவருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

'தமிழ்ப் பண்பாட்டு வரலாறு - முதல் பாகம்' தமிழியல் துறையில் பணியாற்றும் ஆராய்ச்சி இணைஞர் (Research associate) திரு.செ. வைத்தியலிங்கன் அவர்களால் எழுதப்பட்டு 1991 ஆம் ஆண்டில் அண்ணாமலைப்பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்த இரண்டாம் பாகம் அதே ஆசிரியரால் எழுதப்பட்டு இப்பொழுது வெளிவருகிறது.

இந்த நூலில், 'மதம் - பண்பாட்டுக்கூறுகள்', 'சமயப்பண் பாடு', 'ஊரமைப்பு - பண்பாட்டுக்கூறுகள்', 'கட்டடக் கலை - பண்பாட்டுக்கூறுகள்', 'கோயிற்கட்டடக்கலை - வளர்ச்சிநிலை கள்', சிற்பக்கலை - பண்பாட்டுக்கூறுகள்' எனும் தலைப்புக்களில் பொருள்வகைமையைப் பாகுபாடு செய்து கொண்டு, பொது வாகச் சிற்சில இடங்களில் ஒப்பீட்டு நோக்கிலும், சிறப்பாகப் பல இடங்களில் தமிழ்ப்பண்பாட்டின் தனித்தன்மை விளங்கும் பார்வையிலும் நூலாசிரியர் தம் கருத்தோட்டத்தை அமைத்துக் கொண்டது போற்றுதற் குரியதாகும். தொன்மைக் காலத்தி லிருந்து இக்காலம் வரையில், தமிழ்ப் பண்பாட்டின் மேன்மைக் கூறுகளைப் பலரும் உணர்ந்து போற்றும் வகையில் இந்த நூல் எழுதப்பட்டிருப்பதால், தமிழ்கூறும் நல்லுலகம் இதனை வர வேற்று ஊக்கமளிக்கும் என்று நம்புகிறேன். இந்த இரண்டாம் பாகத்தினைத் தொடர்ந்து பிற பாகங்களும் அண்ணாமலைப் பல்கலைக்கழக நூல் வெளியீட்டுத் துறையினரால் வெளியிடப் பட்டு அவை தமிழ்ப்பெருமக்களின் பண்பாட்டுக் கருவூலங்களாக விளங்குமாக என எல்லாம் வல்ல அருள்மிகு நடராசப் பெருமானை இறைஞ்சுகின்றேன்; நூலாசிரியருக்கு எம் உள மார்ந்த வாழ்த்துக்கள் உரியனவாகும்.

இந்த அரியநூலை அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர் மாண்புமிகு டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களுக்கு பல்கலைக்கழகத்தின் அன்பின் அடையாள மாக வழங்குவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். வாழிய உலகெலாம்.

எம் ஜி. முத்துக்குமாரசாமி
13—5—96

டாக்டர் அ. ஆனந்தநடராசன்,
எம்.ஏ.,எம் ஓ.எல்.,பிஎச் டி.,
தமிழியல் துறைத்தலைவர் &
இந்திய மொழிப்புல முதன்மையர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அறிமுகவுரை

உலகளாவிய நோக்கில் ஒவ்வொரு நாடும் தத்தம் பெருமையைப் பல் நாடுகளிடையே உணர்த்திப் பூரிப்படையக் காண்கிறோம். அறிவியலுலகத்தில் பொறியியல் திறமையாலும், வேளாண்மை முன்னேற்றத்தாலும், மருத்துவச் சாதனையாலும் பலநாடுகள் சிறந்தோங்கியிருப்பினும், சமயம் கலைகள் பண்பாடுகள் ஆகியவற்றால் சிறந்தொளிரும் நாகரிக நாடுகளே மக்களின் மனநிறைவிற்கு ஆக்கந்தரும் நிலையில் உள்ளன. மேலை நாடுகளும் தூரக்கிழக்கு நாடுகளும் ஆன்ம நலத்திற்காகவும் பாரதநாட்டையே கூர்ந்து கவனித்து வருகின்றன. இந்நிலையில் பாரதப் பெருநாட்டிலுள்ள ஒவ்வொரு மாநில மக்களும் தத்தமக்குரிய சமய மாட்சியையும் பண்பாட்டுப் பெருமையையும் பழக்கவழக்கங்களின் சீர்மையையும் வரலாறாக வடித்துக் காட்டவேண்டிய கடமையை உணர்ந்துள்ளனர்.

இந்தியப் பெருநாட்டில் மக்களின் பண்பாட்டைப் பற்றி ஆராயும் அறிஞர்கள், காலம் இடம் என்பவற்றின் அடிப்படையிலே மக்களின் எண்ணம் மொழி செயல் ஆகியவற்றுக்கிடையே ஊடுருவி நிற்கும் பண்பாட்டை உணர்ந்து போற்றுகின்றனர்; பண்பாட்டுக்கிடையே பன்மையில் ஒருமையினையும், ஒருமையில் பன்மையையும் காண்கையில் ஒருவகை நெசவினைப் போல் உணர்ந்து, தேசிய ஒருமைப்பாட்டினைப், புலப்படுத்திக் காட்டுகின்றனர். இவ்வாற்றான் அறிஞர்கள் சிந்திக்கும் சீரியதேசியப் பண்பாட்டுக்கு உதவும்வகையில் தமிழகத்தின் சீரிய 'தமிழ்ப் பண்பாடு' தன் பெரும் பங்கினை அளிக்க முன்வர வேண்டியது உயிர்ப்பொறுப்பல்லவா? அந்தப் பொறுப்பினை ஓரளவு நிறை

வேற்றவே, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்—தமிழியல் துறை, பதிப்புத்துறை வாயிலாக இந்தத் 'தமிழ்ப்பண்பாட்டு வரலாறு' எனும் நூலினைப் பாகம் பாகமாக வெளியிட்டு வருகிறது. இந்நிலையில் இப்பொழுது வெளிவருவது இரண்டாம் பாக மாகும். இதனை எழுதிய நூலாசிரியர், திரு.செ. வைத்திய லிங்கம் அவர்கள், அறிஞர்களால் 'பண்பாட்டுச் செல்வர்' என்ற சிறந்த விருது வழங்கிச் சிறப்பிக்கப்பட்டுள்ளவர்.

சென்னை, சமஸ்கிருதம் மற்றும் தமிழ்மொழிகள் நிறுவனச் சார்பில் ஆராய்ந்து எழுதப்பட்ட இந்த நூல், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறைச் சார்பில் வெளியிடப்படு கின்றது. தமிழ்ப்பண்பாட்டினை ஒவ்வொரு பொருண்மைத் தலைப்பில் (Subject - wise) காலவரிசைப்படி எழுதும் இத் தகைய முயற்சி அறிஞர்களால் பெரிதும் வரவேற்கப்படும் என்று நம்புகின்றேன். இதனை எழுதிய நூலாசிரியர் திரு செ. வைத்தியலிங்கன் அவர்களை உளமாரப் போற்றிப் பாராட்டு கிறேன். இதே வரிசையில் தமிழ்ப்பண்பாட்டு வரலாற்றின் பிற பாகங்களும் விரைவில் வெளிவர இருக்கின்றன என்பதை யும் தமிழ்ப் பெருமக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த நன்முயற்சிக்குப் பெரிதும் ஆதரவு நல்கிவரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர் மாண்பமை டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களுக்கும், துணை வேந்தர் மாண்பமை டாக்டர்' எம்.ஜி. முத்துக்குமாரசாமி அவர்களுக்கும், மதிப்பிற்குரிய பதிவாளர் டாக்டர் பழ. சபா ரெத்தினம் அவர்களுக்கும், பல்கலைக்கழகப் பதிப்புத்துறைப் பெருமக்களுக்கும் தமிழியல் துறைச் சார்பில் நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

தமிழர்களின் பண்பாட்டைத்தாரணி முழுதும் பரப்ப வழி வகுக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர் மாண்பமை டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களுக்கு இந்த நூல் அன்புக் காணிக்கையாக வழங்கப் பெறுகிறது.

அ. ஆனந்த நடராஜன்
13—5—96

ஆக்கியோனின் முன்னுரை

வாழ்வியல் பண்பாடு என்பது மக்களின் வழிவழியே வரப் பெற்ற பெறலருஞ்செல்வம்; இம் முன்னேற்றத்திற்கும் இன்ப நற்பேறுகளுக்கும் வழிவகுக்கும் வற்றாத அமுத ஊற்றுக்களம் அது.

இந்தியத் துணைக்கண்டத்திலே பல மாநிலங்களிலும் சமயம், கலை, தொழில் முதலியவற்றின் தொடர்பாலான பழக்க வழக்கங்கள் உள்ளன; அவற்றால் மக்கள் பல பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டுள்ளனர் என்பது தெளிவு; எனினும், எல்லா மாநிலங்களிலும் இழையோடி நிற்கும் **தேசியப் பண்பாட்டு ஒருமைப்பாடு** (Notional cultural integration) என்பதைப் பலர் சரிவரப் புரிந்து கொள்வதில்லை. நன்கு ஆராய்ந்து பார்த்தால் தேசிய அளவில் மக்களிடையே ஒற்றுமைக்கு வழியுண்டே தவிர வேற்றுமையுணர்வு தலையெடுக்க வழியில்லை.

இந்தியப் பெருநாட்டில் சமயவுணர்வுக்கும் தத்துவச் சிந்தனைக்கும் நிரம்ப இடமுண்டு. நாட்டின் பல பகுதிகளிலும் சமய வழிபாட்டுத்தலங்களும் சமய நிறுவனங்களும் இருப்பது கொண்டு, சமயமென்பது மக்களிடையே ஒருவகை உயிரோட்டமாகவே இருந்து வருதலை உணரலாம். இத்தகைய சிந்தனைகளுக்கிடையே தமிழ்நாட்டைக் காண்கையில், இந்நாடு **'கோயிற் பண்பாடு'** என்பதை உயிர்மூச்சாகக் கொண்டிருப்பது நன்கு தெரியவரும்.

கோயிற்பண்பாட்டின் கீர்த்தியைப் பல நூற்றாண்டுகளாக வளர்த்துவரும் தமிழ்நாட்டில், கோயிலைச் சார்ந்தே பல கவின் கலைகளும் சமயச் சிந்தனைகளும், தொழில்களும் தழைத்தோங்கலாயின. இவற்றைத் தமிழ்நாட்டினரும் பிறரும் நன்கு புரிந்து கொள்ளும் வகையில், இந்த நூற்றாண்டில் சமயவுணர்வும் கலைச் சுவையும் கொண்ட நன்மக்கள் பலர், தரமான கட்டுரைகள் - நூல்கள் - வாயிலாகத் தம் எண்ணங்களைப் புலப்படுத்தி வந்துள்ளனர். அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி

என்னாலியன்றவகையில் சுருக்கமாகத் '**தமிழ்ப் பண்பாட்டு வரலாறு**' எனும் தலைப்பில், பல கருத்துக்களைச் சில பாகங்களாகப் பகுத்துக்கொண்டு, எழுத முயன்றேன். எனது சீரிய முயற்சிக்குக் கொழுகொம்பாக அமைந்தது அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல்துறை. அதன் ஆதரவில், 'தமிழ்ப் பண்பாட்டு வரலாறு - முதல் பாகம்', அண்ணாமலைப் பல்கலைக்கழக **இணைவேந்தர் மாண்பமை டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களது** அறுபதாம் ஆண்டு நிறைவுவிழாவில்-மணிவிழாவில் – **திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால்** 28 9—1991 ஆம் நாள் சிறப்பாக வெளியிடப்பெற்றது. அதன் தொடர்ச்சியாகவே இப்போது இரண்டாம் பாகம் வெளியீடப் பெறுகிறது.

உலகம் நன்கறிந்த நிலையில் தமிழ்ப்பெருமக்கள் தேசிய வொருமைப்பாடும் சமய நல்லிணக்கமும் கொண்டு ஒற்றுமை யுணர்வுடன் தம் தமிழ்ப்பண்பாட்டை வளர்த்து வருபவர்கள்; எனவே, மதம்-சமயம் பற்றிய பண்பாட்டுக் கூறுகளை நன்கு தேர்ந்து புரிந்து கொள்வது மிகவும் உகந்தது. இந்த நோக்கத்தில் '**மதம்–பண்பாட்டுக்கூறுகள்**' என்ற இயலும், அதனையடுத்து மதத்தின் கிளைகளாகிய **சமயங்களைப்** புரிந்து கொள்ளும் வகையில், '**சமயம்–பண்பாட்டுக் கூறுகள்**' என்ற இயலும் இந் நூலில் முதற்கண் அமைந்துள்ளன.

நாட்டமைப்பைப் பொறுத்தே பண்பாட்டு மலர்ச்சி அமைவதால், அவற்றைத் தொடர்ந்து, '**ஊரமைப்பு–பண்பாட்டுக்கூறுகள்**' எனும் இயல் அமைந்துள்ளது. ஊரின் சிறப்பிற்குப் பல்கலைக் கட்டடங்கள் அமைந்து அணி செய்வது அடிப்படையாதலின், கவின் கலைகளுள் பயன்பாடு மிக்க '**கட்டடக்கலை–பண்பாட்டுக் கூறுகள்**' எனும் இயலும், தமிழ்ப்பண்பாட்டுச் சிறப்பையளிக்கும் '**கோயிற்கட்டடக்கலை-வளர்ச்சி நிலைகள்**' எனும் இயலும் அமைந்துள்ளன.

இன்று உலக அரங்கில் இந்தியப் பெருநாட்டின், தனித் தன்மையுடன் கூடிய கவின்கலையாகத் தமிழ்த்திருநாட்டின் பெருமையை வானளாவ உயர்த்திடுஞ்சீர்மை வாய்ந்தது **சிறபக்**

கலையாகும். எனவே, தமிழகச் சிற்பக்கலையைப் பல கோணங்களில் ஓரளவு புரிந்து கொண்டு, அதனை மக்கள் உணர்ந்து போற்றிடும் வகையில், **'சிற்பக்கலை-பண்பாட்டுக்கூறுகள்'** எனும் பெரிய இயல், இந்த நூலின் (இரண்டாம் பாகத்தின்) நிறைவாக அணிசெய்யுமாறு அமைந்துள்ளது

இந்த நூலை உருவாக்கத் தெய்வத் திருவருளும், பலரின் ஆதரவும், ஒத்துழைப்பும் எனக்குத் துணை நின்றுள்ளன; ஈண்டு நன்றியுணர்வுடன் அவற்றைப் போற்றி மகிழ்கிறேன்.

அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தின் வெளியீடாக இந்த நூல் வெளிவருவதற்குப் பெரிதும் ஆதரவு தந்தருளிய பல்கலைக் கழக இணைவேந்தர் **மாண்பமை டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி** அவர்களுக்கும், ஆதரவுடன் அணிந்துரை வழங்கி ஊக்குவித்த துணைவேந்தர் மாண்பமை **டாக்டர் எம்.ஜி. முத்துக்குமாரசாமி** அவர்களுக்கும், அவ்வப்போதும் ஊக்கம் வழங்கிய பதிவாளர் **டாக்டர் பழ. சபாரத்தினம்** அவர்களுக்கும், இந்த நூல் வெளி வருவதற்குக் கண்ணுங்கருத்துமாய் ஆக்கக் குறிப்புக்கள் வழங்கியதுடன் முன்னுரையும் தந்து துணைநின்ற இந்திய மொழிப்புல முதன்மையர் **டாக்டர் அ. ஆனந்த நடராச தீட்சிதர்** அவர்களுக்கும் என் மனம் மொழி மெய்களால் பணிவார்ந்த நன்றியைப் புலப் படுத்திக் கொள்கிறேன்: மேலும், இந்நூல் வெளிவருவதற்கு ஆக்கக்குறிப்புக்கள் வழங்கிய பேராசிரியர், கலைமாமணி, **டாக்டர் ஆறு அழகப்பன், டாக்டர் சு. சுவாமிஐயா** ஆகியோர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி. இந்நூல் வனப்புற வெளி வருவதற்குத் துணைநின்ற **அண்ணாமலைப்பல்கலைக்கழகப் பதிப்புத்துறையினருக்கும்** உளமார்ந்த நன்றி உரியதாகும்.

யான் இந்நூலை எழுதிவருங்கால், ஊக்கமளித்த தமிழியல் துறையினருக்கும் நன்றி; மேலும், உதவியாளர் **டாக்டர் செல்வி சுபாஷிணி** (இப்போது சிங்கப்பூரில் பணியாற்றுபவர்), இப்போது துறையில் பணியாற்றும் **டாக்டர் அ. சிவபெருமான்**, டாக்டர் பட்ட ஆய்வாளர் **திரு. நெல்லையப்பன்** ஆகியோர் என் கையெழுத்துப் படிகளை ஓரளவு படியெடுத்து உதவியுள்ளனர்; அவர்களுக்கு என் வாழ்த்தும் நன்றியும் உரியன.

நூலுக்கு **விளக்கத்துடன்** அணிசெய்ய **விளக்கப்படங்கள்** தேவையல்லவா? **எனவே,** விளக்கப்படங்களைப் பற்றிச் சிந்திக்கையில், நன்னெஞ்சுடைய பலர், இந்தத் தூய 'வேள்வி'க்குத் துணைபுரிய முன் வந்தனர். நிழற்படங்களைப் பல்வேறு வகையில் எடுத்துத் தந்து சிறப்பாகத் துணைபுரிந்த, சிதம்பரம் **திரு வைத்தியநாதன்** (ஆர். டி. வேலு பிரதர்ஸ்) அவர்களுக்கு நன்றி.

தாமே சில நிழற்படங்களை எடுத்து உதவியவர்கள் உண்டு. **அவர்களுள்,** பல்கலைக்கழகப் பொருளாதாரப் பேராசிரியர் **டாக்டர் அ.வே. ரங்காச்சாரியார்** அவர்கள், சிதம்பரம் அணிகல வணிகர் தருமபூஷணம் **செ. ரெத்தினசாமி செட்டியார்** குமாரர்கள் **திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்,** கயிலைச்செல்வர் **திரு எஸ். ஆர். இராமநாதன் அவர்கள், திரு எஸ். ஆர். திருநாவுக்கரசு அவர்கள்,** அணிகல வணிகர் **திரு பா. பழநி** அவர்கள், பட்டுக் கோட்டை அணிகல வணிகர் **திரு அக் கி. மோகன்தாஸ்** அவர்கள் **ஆகியோருக்கு** என் உளமார்ந்த நன்றி.

பல நிழற்படங்கள் கிட்டும்வகையில் துணைநின்ற பல **ஆலய நிருவாகங்களுக்கும்,** தமிழ்நாடு **அறநிலையத்துறையினருக்கும்,** தொடர்புள்ள பிற நிறுவனத்தார்க்கும், சிறப்பாகத் தமிழ் **நாடு அரசுக்கும்** நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் வனப்புறும்வகையில் துணைநின்ற சிதம்பரம் **மீனாட்சி அச்சகத்தாருக்கும்** நன்றி. இறைவன் திருவருளால் இந்த நூல், தமிழ்ப்பெருமக்களின் நல்லாதரவினைப் பெறும் என்ற நம்பிக்கையுடையேன்.

இந்த நூல், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைக் கண்ணெனப் பாதுகாத்து வரும், பல்கலைக்கழக இணைவேந்தர் மாண்பமை **டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி** அவர்களுக்கு அன்புக் காணிக்கையாக வழங்கப் பெறுகின்றது. வாழிய உலகெலாம்.

செ. வைத்தியலிங்கன்

தமிழ்ப் பண்பாட்டு வரலாறு - 2

பொருளடக்கம்

1. மதம் - பண்பாட்டுக் கூறுகள்

பக்கம்

1.	மதக்கொள்கை - பொதுப்பார்வை	1
1.1.	உலகமும் மதமும்	2
1.2.	மதங்கள் தோன்றிய காலம்	6
1.3.	மதங்களும் மறைகளும் - பொதுப்பார்வை	8
2.	இந்துமதம் - விளக்கமும், தத்துவமும்	14
3.	இசுலாம் மதம் - விளக்கமும், தத்துவமும்	15
4.	கிறித்துவமதம் - விளக்கமும், தத்துவமும்	17
5.	பௌத்தம் - விளக்கமும், தத்துவமும்	19
5.1.	இந்துமதத்தில் பௌத்த மதத்தாக்கம்	21
6.	சமணம் - கோட்பாடும், தத்துவமும்	22
6.1.	இந்துமதத்தில் சமணத்தாக்கம்	25
6.2.	மதத்தொடர்பின் பண்பாட்டுப் பிறழ்ச்சியும் அதனைக் காக்க முற்பாடும்	26
7.	சீக்கியமதம் - தத்துவங்கள்	28
8.	மதமும் சித்து விளையாட்டும்	30
9.	மதங்களில் தொன்மத்தின் (myth) தாக்கம்	33
10.	பக்தர்கள் (அடியவர்கள்)—இயல்பும் பெருமையும்	35
10.1.	வடநாட்டிலும், தமிழ்நாட்டிலும் வாழ்ந்த அடியார்கள்-ஒப்பியல் நோக்கு	37
10.2.	அயல்மதத்தினர் இந்துமதத் தொடர்பான ஆர்வமும், திருப்பணிகளும்	38
11.	மதப்பண்பாடு - தவம்	39
11.1.	நோன்புகள்	42
11.2.	மதங்களில் வீடுபேறு அல்லது முத்திநிலை	44
11.3.	மதப்பண்பாடு-குருவருள்	48
11.4.	இயற்கை கடந்த ஆற்றல்கள் (Supernatural elements)	50

11.4 1. இயக்கர்கள் 52
11.4.2. கந்தருவர் 54
11.4.3. கின்னரர் 55
11.4.4. கிம்புருடர் 56
11.4.5. பூதகணங்கள் 57
11.4.6. வித்தியாதரர் 60
12. நாகர் தாக்கம் 60
13 மதம் - தலப்பயணமும், வழிபாடும் 61
13.1. வடக்கிலும் தெற்கிலும் ஒரே தலப்பெயர்கள்- 62
14. மதவாதங்கள் 64
15. மதம் மாறிய-மாற்றிய-ஆலயங்கள் 66
15.1 மத, சமயநெறி விளைவித்த தீங்குகள்-கலையுலகில் (சிறப்புப்பார்வை) 70
15 2. மத, சமயநெறி விளைவித்த தீங்குகள் - இலக்கியத் துறையில் (சிறப்புப்பார்வை) 72
16. மதங்களின் சீர்மைக்குப் புத்துணர்வு 76
16.1 மதப்பண்பாடு-நாட்டுப்பாதுகாப்பு 77
17. மத வழிபாட்டு முறைகள்-பொதுநோக்கு 79
17.1. வழிபாடு-மதங்களுக்கிடையே வேறுபாடு 81
17 2. வழிபாடு-செபம் (பொதுநோக்கு) 82
17.3. இறைஞ்சி வேண்டல் (பிரார்த்தனை-prayer) 84
17.4. வழிபாடு-தியானம் 89
18. மதம் வழங்கும் மனநிறைவு 91

2. சமயப் பண்பாடு (Culture of Religious cult)

1 சமய உயிரோட்டம்-அடிப்படை 94
1.1. சமயம்-சிறப்பு விளக்கம் 95
1.2. சமயத்தின் தேவை 97
1.3. சமயவுணர்வும் சமயப்புலப்பாடும 99
1.4. சமய ஆராய்ச்சி 105
1.5. சமயத்தெளிவு-படிநிலைகள் 108
அ) பிறப்பு வகை, ஆ) மானுடப்பிறவிச் சிறப்பு
இ) தத்துவவிசாரணை-தன் நிலையறிதல்,
ஈ) நான் என்பது யாது? உ) அகப்பற்றும் புறப்பற்றும், ஊ) உடம்பு எப்படி வந்தது?

எ) இறைவன் எங்கிருக்கிறான்? ஏ) இறைவன் எத்தகையவன்? ஐ) இறைவன் விளக்கங் கொள்ளும் நிலை எவ்வாறு? ஒ) இறைவன் எவ்வாறு இயங்குகிறான்? ஓ) இறைவனைக் காணும் உத்தி (உபாயம்) எது?

1.6. சமய வழிப்பண்பாடு-பொதுப்பார்வை 116
1.7. சமய நெறிப் பண்பாடு-பொதுநலம் 117
1.8. இறைத்தொடர்பு நிலைகள் 121
1.8.1 பக்திக் கூறுகள் 124
1.9. சமயமும் வாழ்க்கைநலமும் 126
2. இயற்கையில் இறைமையைக்காணும் மனப்பாங்கு 128
3. சமயநோக்கில் இறைவனும், மன்னனும் 132
4. சமய நூல்கள் 138
5. அகச்சமயங்களும், புறச்சமயங்களும் 140
5.1. புறப்புறச்சமயம் 140
5.2. புறச்சமயம் 141
5.3. அகப்புறச்சமயம் 141
6 சைவசமய உட்பிரிவுகளில் காணலாகும் சில கடுங்கோட்பாடுகள் 142
7 சமய நம்பிக்கைகள் 145
7.1. சமய நம்பிக்கைகள்-சிறப்புநோக்கு 149
7.2. சூரிய, சந்திர கிரகணங்கள் 150
8. சமய வாழ்வில் மனவொருமைப்பாடு 152
9. ஆன்மநலத்தேவை – சிறப்புநோக்கு 154
10. யோக நெறிகள் 156
10.1. அருளனுபவம்—நாத தரிசனம் 160
11. வினைக்குரிய விளைவு 162
12. இயற்கை வழிபாடு—சூழற்காரணம் 164
12.1. ஐம்பெரும்பூதங்களை வழிபடுதல் 165
12.2. சூரிய வழிபாடு 167
12.2.1. சூரிய வழிபாடு – தத்துவ விளக்கம் 169
12.3. சந்திரவழிபாடு 169
12.4. வான்சிறப்பு – மழைநீரின் தேவை 170
12.5. துளசிமாடம்—அமைப்பதற்கான பின்னணி 174

12.6. துளசிவழிபாடு—சமயச்சிறப்புக்குறிப்புகள் 175
13. சமயச்சடங்குகள் 176
13.1 வேள்வி(யாகம்)புரிதல் 179
13.1.1. வேள்வி—இயல்பும் நோக்கமும்—.. ——————.———182
13.2. மந்திரத்தில் நம்பிக்கை 185
13.2.1 மந்திரம்—பிரணவம் 188
13.2.2. சமயப்பண்பாடு—உபதேசம் 189
14. மத, சமயப்பண்பாடு: பிரசாதம்(சேடம்) 194
14.1. வழிபாட்டுப்பொருள்களும் (பிரசாதமும்)
தத்துவமும் சிறப்புநோக்கு 196
15. திருத்தலப்பெயர்கள்—மாற்றங்களும், விளைவுகளும் 199
15.1. மரூஉநிலை மாற்றங்கள் 200
15.1.1. பதமாற்றங்கள் 201
16. சமயநெறிகளுக்கான கலைக்கற்பனை—சிறப்புக்
குறிப்பு 202
17. சமய ஒருமைப்பாடு 203
17.1. சைவ—வைணவ சமயவொருமைக்கூறுகள் 204
17.2. சமயவொருமை புலப்படும் திருத்தலங்கள் 205
17.3 சமய விழாத்தொடர்பிலமைந்த ஒருமைப்
பாட்டுக்கூறுகள் ... ... — 207
18. சமயத்தாக்கம்—பெயரிடல்; சிறப்புக்குறிப்பு 208
19 தேவகணங்கள்—சிறப்புநோக்கு 208
20. பக்திவளாகத்தில் நாயக—நாயகி பாவம் 211
21. திருத்தொண்டர் மாட்சி 213
21.1. அடியாரிணக்கப் பெருநிலை 214
21.2. தெய்வத்துக்கும் அடியார்க்குமிடையேயுள்ள
'பேரம்' அல்லது பரிமாற்றம் 216
22. அருட்சான்றோர்களை நினைவுகூரும் உத்திகள் 219
23. சமயத்தொடர்புடன் கூடிய மகளிரின் சில
பழக்கவழக்கங்கள் 224
24. தெய்வங்களின் பெயரிடுவதால் கிட்டும் பயன்கள் 227
24.1. சமயத்தாக்கம்—குழந்தைகளுக்குப் பெயரிடுகையில்
பின்பற்றும் மரபுகள் — — — — – — — — — — 229
25. மத, சமயச் சின்னங்கள்—பொதுநோக்கு 231

25.1. தெய்வத் தொடர்பில் அடையாளங்கள் (சின்னங்கள்) தத்துவம் 232
25.2. சைவசமயம்—நிறுவன அடையாளம் 235
25.2.1. சைவ சமயம் – தனிப்பட்டோர் அடையாளம் 236
25.3. வைணவ சமயம்—தனிப்பட்டோர் அடையாளம் 238
25-3.1. திருமண் அணிவதன் தத்துவம் 238
26. வழிபாடும் வழிபாட்டுக்கூறுகளும்-திரண்ட கருத்து 239

3. ஊரமைப்பு—பண்பாட்டுக்கூறுகள்

1. ஊரமைப்பு—முன்னுரிமை 243
1.1. ஐந்திணை மக்கட்கும் அமைந்த ஊரமைப்பும் உறையுளமைப்பும்—வளர்நிலைகள் 245
1.1.1. குறிஞ்சி ஊர்கள் 246
1.1.2. முல்லை ஊர்கள் 247
1.1.3. மருதம் ஊர்கள் 248
1.1.4. நெய்தல் ஊர்கள் 250
1.1.5. பாலை ஊர்கள் 251
1.2. ஊரமைப்பு-சிறப்புக்குறிப்பு 252
2. நகரமைப்பு 253
2.1. நகரமைப்பு-வகைகள் 255
3. நாடும் பாகுபாடும் 258

4. கட்டடக்கலை—பண்பாட்டுக் கூறுகள்

1. கட்டடக்கலை-பரிணாமப் படிநிலைகள் 261
1.1. கவின்கலைகளுள் கட்டடக்கலைக்குரிய இடம் 263
1.2. உறையுள்-கட்டட அமைப்புச் சிந்தனைகள் 264
1.2.1. பண்டைக்கால வாழ்மனைகள்-வளர்ச்சிக்கூறுகள் 266
1.3 மனைகள்-கலைவளர்ச்சி நோக்கில் 271
2. தமிழகக் கட்டடக்கலை-ஒரு சிறப்புக்குறிப்பு 273
2.1. மாடங்கள் 275
2.2. கோட்டை, கொத்தளங்கள் 278
2.3. மாளிகைகளிலும், மனைகளிலும் சாளரங்கள் 285
2.4. அறைகள் 286
2.5. மன்றங்களும், மண்டபங்களும் 287

2.5.1. அபிடேக மண்டபம்-சிறப்புக்குறிப்பு.................... 290
2.5.2. மண்டபப் படிக்கட்டுகள் (சோபானங்கள்) 291
2.6. அங்கணமும் இடைகழியும் 291
2.7. சைத்தியமும் விகாரையும் நிசிதிகையும் 293
2.8. நிலவறை (சுரங்க)அமைப்பு..............................296
2.9. பண்டகச்சாலைகள்.......................................297
2.10. கலங்கரை விளக்கம்......................................298
3. கட்டடக்கலைக்கூறுகள்-கற்பனைக்கிடையே காண வேண்டியவை............................299
4. அயலவர் ஆட்சியும் தமிழகக் கட்டடக்கலையும் 301

5. கோயிற்கட்டடக்கலை-வளர்ச்சிநிலைகள்

1. கோயிற்கட்டட அமைப்புக்கு முன்னோடிக்கூறுகள் 306
1.1. மரவழிபாடும் தலமரமும் 307
2. திருக்கோயில்கள்-பாகுபாடு..............................312
2.1. தேர்க்கோயில்கள்-பல்வகைக் கூறுகள் 317
2.2. கோயிலும் செய்யுளமைப்பும்..............................321
2.3. கோயிற்கட்டடம்-தெய்வநலப்பிழம்பு 323
2.4. கோயில் அமைத்தல்......................................325
2.5. கோயிற் கட்டடம்-திட்டம்..............................326
2.6. பூமிப்பரீட்சையும் தானியப் பரீட்சையும் 328
2.7. பள்ளிப்படைகள்-கோயில்கள்..............................331
2.8. ஆலயம்-தத்துவமும், விளக்கமும்..........................332
2.9 மானுட உடலுறுப்புக்களும் ஆலய உறுப்புக்களும் 337
2.9.1. ஆலயம்-மெய்ஞ்ஞான விளக்கம்..........................340
3. திருக்கோயிலமைப்பும் சூரியவழிபாடும்-கலைநுட்பக் குறிப்பு......................................341
3.1. திருக்கோயிலமைப்பும் சந்திர வழிபாடும்-கலைநுட்பக் குறிப்பு......................................343
4. கருவறை (கருப்பக்கிரகம்)..............................344
4.1. கருவறை-சிறப்புப்பார்வை..............................345
5. விமானம்-பெருமையும் வகைகளும்..........................348
5.1. நகரத்தார் திருப்பணியில் கோயில் விமானம் 355
5.2. கோபுரங்களும் விமானங்களும்..............................357

5.3. கோயில்-பிரமரந்திரக்கல் (சிறப்புக்குறிப்பு) 358
6. கோயிற்கோபுரம் ... ... — 359
6.1. கோபுர, கோயில் வாசல்கள் 361
6.2 கோயில்வாசல்-சிறப்புக்குறிப்பு — — — — — — 362
6.3. கோபுரவாசலில் தத்துவம் — — — — — — — 363
6.4. இராசகோபுரம்-பெயர்க்காரணமும், பிற விளக்கங்களும் — — — — — — — — — — 365
6.5. கோயில் கோபுரக்கலசங்களும் விமானக் கலசங்களும் — — — — — — — — — — — 366
7. கூரையில்லாக் கோயில்கள் — — — — — — — 368

கோயிற்கட்டடக்கலை - வளர்ச்சி நிலைகள்
(தொடர்ச்சி-1)

1 மண்டபங்கள் — — — — — — — — — — — 370
1.1. அந்தராளம் — — — — — — — — — — — 370
1.2. அர்த்தமண்டபம் — — — — — — — — — — 371
1.3. மகாமண்டபம் 371
1.4. படன மண்டபம் — — — — — — — — — — 371
1.5. நடன மண்டபம் — — — — — — — — — — 372
1.6. நாடக மண்டபம் — — — — — — — — — — 372
1.7. புராண மண்டபம் — — — — — — — — — 372
1.8. தருக்க மண்டபம் ... ... — — 372
1.9. வியாகரணதாரண (வியாக்கியான) மண்டபம் 373
1.10. எழுத்து மண்டபம் — — — — — — — — 373
1.11. ஊஞ்சல் மண்டபம் — — — — — — — — 374
1.12. திருவந்திக்காப்புமண்டபம் — — — — — — 374
1.13. திருப்பள்ளித்தாம மண்டபம் — — — — — — 374
1.14. முத்தி மண்டபம்———————————.—.——374
1.15. நித்த மண்டபம்———————————————374
2. நீர்நிலை மண்டபங்கள்————————.———.———.——375
3. தூண்களைப் பொறுத்து மண்டபப் பெயர்கள் 376
4. கோயில் வளாகத்தில் மண்டபங்கள் 379
5. மண்டபம்-'மகால்' என வழங்குதல் 381

6. இறைவன் திருமுன்னரமைந்த படி-தெய்வ நலச்சிறப்பு 382
6.1. கோயில்-படிகள் 384
6.2. தளவரிசையிலும் படியிலும் கலைச்சிறப்பு 386
7. பலிபீடம் 388
8. கோயில் சுற்றாலை (பிராகாரம்) 389
9. கோயில் மதில்கள் 392
10. கொடுங்கைகள் 394
11. கோயில் வளாகமும் கட்டடச் சிற்பச் செல்வங்களும் 397
12. சுவர்ச்சிற்பங்கள் 397
13. மண்டப விதானச் சிற்பங்கள் 401
13.1. மண்டப-கோபுர-உத்திரச்சிற்பங்கள் 402
14. கட்டடத்திற்குத் தூண்களின் தேவையும் கந்திற்பாவையும் பிறவும் 403
14.1. சிற்பத்தூண்கள்-வளர்ச்சிப் படிநிலைகள் 405
14.2. ஆலயத்தூண்கள்-கலைநுட்பமும் தத்துவமும் 407
14.3 தீபத்தூண்கள் 413
14.4. இசைத்தூண்கள் 414
15 கோபுரந்தாங்கிகளும் சுமைதாங்காத்தூண்களும் 418
16 கோயிற்கட்டடச் சிற்பம்: கிருஷ்ணாபுரம் சிற்பங்கள் 419
17. மயன்-கட்டடச் சிற்பக்கலை வல்லுனன் 423
18. திருக்குடமுழுக்கு (கும்பாபிடேகம்) நோக்கம் 424
18.1. திருக்குடமுழுக்கு - அமைப்புமுறை 427
18.2. திருக்குடமுழுக்கு (கும்பாபிடேகம்)-சிறப்புச் செய்திகள் 430

கோயிற்கட்டடக்கலை-வளர்ச்சி நிலைகள் (தொடர்ச்சி-II)

1. தலச்சிறப்பும் ஆலய அருளியல் முறைகளும் 435
2. திருத்தில்லை: பெருமைக் கூறுகள் 439
2.1. திருத்தில்லை: கட்டடக்கலைக் கூறுகள் 441
2.2. தில்லை நடராசர் கோயில்-இரணியவர்மனும் சோழர்களும் 445

2.3.	தில்லையில் பிற கோயில்கள்	447
3.	திருவண்ணாமலை-பெருமைக் கூறுகள்	447
3.1.	திருவண்ணாமலை-கட்டடக்கலைக் கூறுகள்	449
3.2.	நகரத்தார் திருப்பணி	449
4.	திருவானைக்கா-பெருமைக் கூறுகள்	450
4.1.	திருவானைக்கா-புராணப் பின்னணி	451
4.2.	திருவானைக்கா-கட்டடக்கலைக் கூறுகள்	452
5.	திருவாரூர் - பெருமைக் கூறுகள்	454
5.1.	திருவாரூர் - கட்டடக்கலைக் கூறுகள்	456
6.	காஞ்சிபுரம் - பெருமைக் கூறுகள்	459
6.1.	காஞ்சி அத்திகிரிப்பெருமாள் (வரதராசப்பெருமாள்) கோயில் கட்டடக்கலைக் கூறுகள்	460
7.	திருக்காளத்தி-சிறுகுறிப்பு	461
8.	திருவிடைமருதூர்க் கோயில் - பெருமைக் கூறுகள்	462
9.	ஆறுமுகனின் படைவீடுகளும் தத்துவமும்	464
10.	திருப்பரங்குன்றம் - பெருமைக் கூறுகள்	465
10.1.	திருப்பரங்குன்றம் - கட்டடக்கலைக் கூறுகள்	466
11.	திருச்செந்தூர் - பெருமைக் கூறுகள்	467
11.1.	திருச்செந்தூர் - கட்டடக்கலைக் கூறுகள்	469
12.	திருவாவினன்குடி (பழநி)- பெருமைக் கூறுகள்	470
12.1.	பழநி - கட்டடக்கலைக் கூறுகள்	472
13.	திருவேரகம் (சுவாமிமலை) - பெருமைக் கூறுகள்	472
13.1	சுவாமிமலை - கலைப்பெருமைக் கூறுகள்	474
13.2.	சுவாமிமலை - கட்டடக்கலைக் கூறுகள் (சிறப்பு நோக்கு)	475
14.	திருத்தணிகை - பெருமைக் கூறுகள்	476
14.1.	திருத்தணிகை - கட்டடக்கலைக் கூறுகள்	477
15.	பழமுதிர் சோலை	478
16.	வைப்புத் தலங்கள்	478
17.	வைணவத் திருத்தலங்கள் - பொதுப்பார்வை	480
18.	ஆஞ்சநேயர் கோயில்	4 1
19.	ஔவையார் திருக்கோயில்	483
20	துணைக்கோயில்கள் (பரிவாரக்கோயில்கள்)	485

21. சமண, பௌத்தக் கொள்கையினரின் வழிபாட்டு இடங்கள் 486
22. பூம்புகாரில் அமைந்திருந்த இந்திரவிகாரம் 438
23. திருச்சாரணப் பல்கலைக்கழகம் 490
24. கிறித்துவக் கட்டடக்கலை 491
25. இசுலாமியர் கட்டடங்கள் 493

6. சிற்பக்கலை - பண்பாட்டுக் கூறுகள்

(சிற்பக்கலை - வளர்ச்சி நிலைகள்)

1. சிற்பக்கலை 496
1.1. சிற்பம் - விளக்கம் 496
1.2. சிற்பியர் திறம் 497
1.3. சிற்பியரின் தியானம் 500
1.4. சிற்பத்தில் சில சிறப்பு நுண்கூறுகள் 501
2. சிற்பப் பொருள் தொடர்பிலும் பயன்நோக்கிலும் சிற்ப வகைகள் 504
2.1. சுதைச் சிற்பம் 505
2.1.1. சுதைச் சிற்பநோக்கில் சில அரிய படைப்புக்கள் 509
அ. திருவரங்கத்திலுள்ள அரங்கநாதர் சிலை 509
ஆ. சமயபுரத்திலுள்ள மாரியம்மன் சிலை 509
இ. சீர்காழியிலுள்ள தோணியப்பர் சிலை 510
ஈ. காஞ்சியில் பாண்டவர்தூதப் பெருமாள் கோயில் மூலவர்சிலை 510
உ. இராமேசுவரம் நந்தி 511
ஊ. திருப்பாற்கடல் கடைதலும் அதன் தத்துவமும் 511
எ. நாட்டுப்புறவியற் சிற்பங்கள்: கிராமதேவதைகள் (சிறப்புக் குறிப்பு) 513
3. சுடுமண் சிற்பம் 514
4. மரச்சிற்பம் 515
4.1. தேர்ச்சிற்பக்கலை 517
5. நவபாஷாணக் கலவைச் சிற்பம் 520
6. கடுசர்க்கரையோகச் சிற்பம் 521
7. மாக்கல் சிற்பம் 523

8.	மதிப்பரிய மணி (இரத்தின)ச் சிற்பம்	524
9.	சலவைக்கல் சிற்பமும் பளிங்குச் சிற்பமும்	525
10.	தந்தச் சிற்பம்....	527
11.	உலோகச் சிற்பம் — பஞ்சலோகக்கலவை	528
11.1.	படிமங்கள் — உருவாக்கும் முறை	529
11.2.	படிமக்கலை — உலோகத்திருமேனிகள்	531
11 3.	சிலைவார்க்கும் செய்முறை — சிறப்புக்குறிப்பு	532
11.4	செப்புச்சிலைகள் — சிறப்புநோக்கு	534
11.5.	சிற்பம் — கை அவிநயங்கள் ... ... (வரத அத்தம், அபய அத்தம், கடக அத்தம், லோலஅத்தம், சயஅத்தம், அர்த்த சந்திர அத்தம், தமருக அத்தம், சிங்க கர்ணஅத்தம், திரிபதாகா அத்தம், கட்யவலம்பித அத்தம்; அஞ்சலி அத்தம், சூசி அத்தம், நித்திரா அத்தம், அர்த்தபதாக அத்தம், பல்லவ அத்தம்; வியாக்கியான அத்தம்)	535
12.	வார்ப்படக்கலை; விளக்குகள்......................	541
13.	சிற்பம் - அமைப்புவகைகள்....	542
14.	தெய்வச் சிலைகள் - பண்பாட்டுப் பின்னணி	544
15.	தெய்வச் சிலைகள் அமைப்பும் காப்புமுறையும்	545
16.	கற்சிலைகள் நீடித்திருக்கக் கையாளப்படும் உத்திகள்..	547
17.	தெய்வச் சிலை விளைவித்த தாக்கம்	548
18.	தெய்வச் சிலைகளைக் கல்லாலும் செம்பாலும் அமைப்பதன் நோக்கம்... ... ... ,...	551
19.	இயற்கையன்னை வடித்திடுஞ் சிற்பங்கள்	553
20.	வரலாற்று நோக்கில் சிற்பங்களும் படிமங்களும்	555
20.1.	சிற்பங்களும் இலக்கிய மலர்ச்சியும்	556
21.	தெய்வப் படிமங்கள் - திருக்கோலங்கள்	558
21.1.	நடனச் சிற்பங்கள்..	560
21.2	சிற்பத்தில் ஆடுபவரும் பெண், ஆட்டிவைப்பவரும் பெண்...	561
22.	சிற்பக்கலைச் சார்பில் நகாசு வேலை	563

23. பல்லவர் காலச் சிற்பங்கள் - சிற்பக்கலை முன்னோடி நிலை 565
24. பாண்டியர் காலப் பண்டைய சிற்பங்கள் 568
25. சிற்பியர் திருப்பெயர்கள் 570
26. சிவலிங்கத் தோற்றம்... 571
26.1. இலிங்கமும் வீரசைவமும்... 575
26.2. இலிங்கம்-வகைகள் (திருமூலர் பார்வையில்) 579
அ) அண்டலிங்கம்... 579
ஆ) பிண்டலிங்கம்... 580
இ) சதாசிவலிங்கம்...............................581
ஈ) ஆத்மலிங்கம்....................................582
உ) ஞானலிங்கம்....................................583
ஊ) சிவலிங்கம்ல்....................................584
எ) சிவலிங்கம் - சிறப்பு நோக்கு 587
27. பூசையில் சிவலிங்கமும் சோதிவடிவமும் 588
27.1. சிவலிங்கமும் விடங்கர் திருமேனியும் 588
27.2. சிவலிங்க வழிபாடும் சோதி வழிபாடும் 590
27.3. வியத்தகு சிவலிங்கங்கள் (தலப்பெருமையுடன்) 591
அ) சுசீந்திரம் தாணுமாலயர். 591
ஆ) சகசிரலிங்கம் - ஆயிரத்தளி 591
இ) காஞ்சி ஏகம்பத்து 1008 சிவலிங்கங்கள் கொண்ட ஒரே லிங்கம் 592
ஈ) திருப்புனவாயில் - சிவலிங்கம் 592
உ) திருப்பனந்தாள் சிவ்லிங்கம் 593
28. சிவபிரானுக்குரிய சில சிறப்புப் பெயர்கள் 593

சிற்பக்கலை - பண்பாட்டுக் கூறுகள்
(தொடர்ச்சி-1)

28.1. தாமரை மலரில் அமரும் சிவபிரான் 597
28.1.1. சிவத்திருமேனிகளின் உருவபேதங்கள் 598
28 1.2. மகேசுவர மூர்த்தங்கள் - சிறப்புக்குறிப்பு 600
28.1.3. இலிங்கமும் மகேசுவர மூர்த்தங்களும்-ஒப்பீடு 605
28.2. அர்த்த நாரீசவரர்... 607

28.2.1. சிறபக்கலையில் அர்த்த நாரீசுவரர் 608
28.2.2. அர்த்தநாரீசுவரர் - தத்துவம் 611
28.3. ஆடல்வல்லான் - திருவுருவச்சிறப்பு 614
28.3.1. ஆடல்வல்லான் - தத்துவநுட்பம் 616
28.3.2. நடராசத் திருமேனியில் காணலாகும் சில நுணுக்கங்கள் 626
28.3.3. நடராசத் திருமேனி - ஒரு சிறப்புக் குறிப்பு 626
28.4. சோமாஸ்கந்த மூர்த்தி - விளக்கமும் சிறப்பும் 627
28.5. சந்திரசேகரர் : திருவுருவச் சிறப்பு 629
28.5.1. சந்திரசேகரர் - கலைநோக்கில் — — — — — — 630
28.6. உமாமகேசர் — — — — — — — — — — 631
28.7. இடபாரூடர் — — — — — — — — — — — 632
28.7.1. இடபவாகனமூர்த்தி - சிறப்புக்குறிப்பு 633
28.8. கலியாணசுந்தரமூர்த்தி (திருமணவழகர்) 633
28.8.1. கலியாண சுந்தரர் - கலைநோக்கில் 635
28.9. பிட்சாடனர் (பிச்சையுகக்கும் பெருமான்) 636
28.10. காமாரி (காமனை எரித்த கண்ணுதற் கடவுள்) 639
28.10.1. காமதகனத்துக்கு அமைந்த புராணப் பின்னணி 640
28.11. காலசம்மாரர் — — — — — — — — — — 641
28.11. காலசம்மாரர் - கலைக் குறிப்பு 643
28.12. திரிபுராந்தகமூர்த்தி — — — — — — — — — 645
28.13. சலந்தராரி (சலந்தரவதமூர்த்தி) 648
28.14. கச சம்மாரமூர்த்தி — — — — — — — — ... 649
28.14.1. கச சம்மாரமூர்த்தி - புராணப்பின்னணி 650
28.14.2. கச சம்மாரர் - கலைநோக்கில் சிறப்புக் குறிப்புக்கள் — — — — — — — — — — 651
28.15. வீரபத்திரர் — — — — — — — — — — 652
28.16. சங்கர நாராயணர் 653
28.16.1. சங்கர நாராயணர் - கலைக்குறிப்பு 654
28.16.2. சங்கர நாராயணர் - தத்துவம் 655
28.17. கிராதமூர்த்தி — — — — — — — — — — — 655
28.18. கங்காளமூர்த்தம் — — — — — — — — — — 657
28.19. சண்டேச அனுக்கிரகமூர்த்தி; சண்டேசுவரர்-கோயில் சிறப்பு — — — — — — — — — — 658

28.19.1 சண்டேசுவரர் - வரலாற்றுப் பின்னணி 659
28.19.2. சண்டேசுவரரும், சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தியும் ... ... — — ... ... — — 661
28.20. நீலகண்டர் (திருநீலகண்டமூர்த்தி) 662
28.21. சக்கரப்பிரதர் 664
28.22. விக்கினப் பிரசாதர் 665
28.23. ஏகபாதமூர்த்தி 666
28.24. சுகாசனமூர்த்தி 668
28.25. இலிங்கோத்பவர் 670
28.26. ஏக்ஞேசுவரர் 671
28.27. ஆபற்சகாயர் (ஆபத்து சகாயர்) 672
28.28. இடபாந்திகர் 672
28.29. கங்காதரர் - சிற்பவடிவம் 673
28.29.1. துங்க கங்காதரன் 674
28.29.2. கங்காதரர் - புராணப் பின்னணி 675
28.30. கங்கா விசர்ச்சனமூர்த்தி 678
28.31. சரபமூர்த்தி - புராணப்பின்னணி 679
28.31.1. சரபமூர்த்தி - கலைக்குறிப்பு 679
28.32. அகோரமூர்த்தி 682
28.33. பைரவர் ... ... 68?
28.34. மகா சதாசிவமூர்த்தி (சிறப்புக்குறிப்பு) 687

சிற்பக்கலை - பண்பாட்டுக் கூறுகள்

(தொடர்ச்சி - 2)

29. திருமாலின் ஐவகை நிலைகள் 689
29.1. சிற்பக்கலை நோக்கில் திருமால் திருவுருவம் (தியானசுலோகம்) 692
29.2. திருமாலின் அவதாரச் சிறப்பு — — — — — — 693
29.2.1. தசாவதாரத் தோற்றம் — சிறப்புக்குறிப்பு 695
29.2.2. திருமாலின் அவதாரங்கள் — விளக்கம் 696
29.3. மச்சாவதாரம் — — — — — — — — — — — 701
29.3.1. மச்சாவதாரத்துடன் இணைத்துச் சிந்திக்கப் பெறும் அன்ன அவதாரம் — — — — — — — 702

29.4. கூர்மாவதாரம் 704
29.5. வராக அவதாரம் 705
29 5.1. வராக அவதாரம் — சிற்பக்கலைநோக்கு 707
29.6. நரசிம்மாவதாரம் 708
29.6.1. நரசிம்மாவதாரம் — சிற்பக்கலை நோக்கு 710
29.7 வாமனாவதாரமும் திரிவிக்கிரம அவதாரமும் 712
29.7.1. திரிவிக்கிரம அவதாரம் — சிற்பக்கலைநோக்கு 714
29.8. பரசுராமாவதாரம் 714
29.8.1. திருமாலின் கூறாகிய பரசுராமன் தசரத ராமனிடம் தோற்றதன் உட்கிடை... 716
29.8.2. பெருவலிமைக்கு எடுத்துக் காட்டாகிய பரசுராமன் 717
29.8.3. பரசுராமாவதாரம் — சிற்பக்கலைநோக்கு 718
29.9. இராமாவதாரம் 719
29.9.1. இராமாவதாரம் — சிற்பக்கலைநோக்கு 722
29.10. கிருட்டிணாவதாரம் 722
29.10.1. கிருட்டிணாவதாரம் — பண்பாட்டுச் சிறப்பு நோக்கு 724
29 10.2. கிருட்டிணாவதாரம் — சிற்பக்கலை நோக்கு 725
29.10.2.1. காளியமர்த்தனர் — சிறப்புநோக்கு 726
29.11. பலராமாவதாரம் 728
29.12. கல்கியவதாரம் 729
29.13. திருமால் பெருமை - அர்ச்சைநோக்கில் 731
29.14. திருமாலின் சயனக்கோலம் - விளக்கமும் வகைகளும் 734
29.15. பலவகையான திருமால் திருவடிவங்கள் 736
29.16. திருவரங்கப்பெருமாள் - திருவுருவச் சிறப்பு 737
அ. வாத்சல்யம் 737
ஆ. சுவாமித்துவம் 738
இ. சௌசீல்யம் 738
ஈ. சௌலப்பியம் 738
உ. ஞானம் 738
ஊ. சக்தி 738

29.16.1. திருவரங்கப் பெருமானிடம் காணலாகும் ஆறு தெய்வ நலப்பண்புகள் — — — — — — 739
30. சைவ வைணச் சமயங்களிடையே ஒற்றுமைக் கூறுகள் … … … … … … … … — — — — — 739
30.1. அர்த்தநாரி நாராயணர் — — — — — — — 741
30.2. திருமாலின் அங்கங்களும் நம்மாழ்வாரின் அங்கங்களும்- ஒப்பியல் நோக்கு — — — — … 742
30.3. மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியே 743

சிற்பக்கலை - பண்பாட்டுக் கூறுகள்
(தொடர்ச்சி - 3)

31. சக்தி வழிபாடு — — — — — — — — — — 746
31.1. சக்தி சமயம் — — — — — — — — — — 746
31.2. சக்தி - தத்துவ நோக்கு — — — — — — — — 748
31.2.1. சக்திபேதங்கள் - கலைநோக்கு — — — — — — 750
31.3. சக்தியின் வியத்தகு சிற்பம்; நிசும்பசூதினி 752
31.3.2. சக்தியின் பல்வேறு திருவுருவங்கள் 753
அ) பாலாம்பாள் — — — — — — — — — 753
ஆ) லலிதாம்பாள் — — — — — — — — — 754
இ) இராசராசேசுவரி … … … … … … … … 754
ஈ) நவாட்சரி பாலா … … … … … … … … 755
உ) அன்னபூரணி … … … … … … … … … 755
ஊ) அசுவாரூடாம்பாள் … … … … … … … … 755
எ) இராச மாதங்கி … … … … … … … … … 755
ஏ) லகுசியாமளா (லகு சியாமா) 756
ஐ) வாக்வாதினி … … … … … … … … … 756
ஒ) நகுளி … … … … … … … … … … … 756
ஓ) வராகி … … … … … … … … … … 756
ஔ) புவனேசுவரி … … … … … … … … … 757
க) சிண்டி … … … … … … … … … … … 757
கா) துர்க்கை … … … … … … … … … … 757
கி) மகிடா சூரமர்த்தினி … … … … … … … 758
கீ) வனதுர்க்கை … … … … … … … … … 760
கு) எட்டுத்திருக்கை துர்க்கை … … … … … 761

31.4.	திருமாலின் சக்தி தேவிகள்	762
31.4 1.	வைண நோக்கில் சக்தி - பிராட்டி (சிறப்பு நோக்கு)	763
31.5.	சரசுவதி - பெருமையும் சிற்பச் சிறப்பும்	766
31.6.	சப்த மாதர்கள்	768
31.6 1.	புராணப் பின்னணி	768
31.6.2.	நடனமாடும் சப்தமாதர்கள்	770
31.7.	கலையமைப்பில் சப்தமாதர்களும் வீரபத்திரரும் விநாயகரும்	771
	அ) வீரபத்திரர்	771
	ஆ) பிராமி	77
	இ) மகேசுவரி	772
	ஈ) கௌமாரி	772
	உ) வைஷ்ணவி	772
	ஊ) வராகி	772
	எ) இந்திராணி ... ... —	772
	ஏ) சாமுண்டி	773
	ஐ) விநாயகர்	773
31 7.1.	சப்தமாதர் - தத்துவம்	773
31 7.2.	சிற்பத்தில் சப்தமாதர்கள்	774
31 8.	சேட்டை (மூதேவி) - புராணக் குறிப்பும் உருவ அமைப்பும் ... ... — — —	776
31.8.1.	சேட்டை வழிபாடு - சிறப்புக் குறிப்பு	778
31.9.	கொடிப் பெண்கள் - அமைப்பு — — — — — —	779
32.	சிற்பம் போற்றும் பெண்மை — — — — — —	780
33.	ஆறுகள் - சிற்பம் — — — — — — — —	783
33.1.	கங்கையம்மன் — — — — — — — — — —	784
34.	விநாயக வழிபாட்டின் தொன்மை	786
34.1.	விநாயகர் - பண்பாட்டுத்தாக்கம்	787
34.2.	விநாயகர் மூர்த்திச் சிறப்பு — — — — — — —	788
34.2 1	விநாயகன் - தத்துவம் — — — — — — — —	786
34.3.	விநாயகர் - சிலை செய்யப்பயன்படும் பொருள்கள்	795
34.4	விநாயகர் - பல்வேறு திருவுருவங்கள்	795
34.5.	விநாயகர் - கச்சியப்பமுனிவர் கற்பனையில்	797

34.6 விநாயகர் புரிந்த வியத்தகு செயல்கள் 798
34.7. பிள்ளையார் சுழி - தத்துவம் — — — — — — 799
34.8. விநாயகரும் தோப்புக் கரணமும் — — — — — 800
34.9. விநாயகர் - சில சிறப்புப் பெயர்களும் தலங்களும் 801
34.10. விநாயகர் - வியத்தகு சிற்பங்கள் 804
அ) வலம்புரி விநாயகர் — — — — — — — 804
ஆ) நாக யஞ்ஞோபவீத கணபதி 805
இ) ஓங்காரஒலி விநாயகர் — — — — — — 805
ஈ) கற்பக கணபதி — — — — — — — — — 805
உ) முக்குறுணிப் பிள்ளையார் — — — — — 807
ஊ) சாளிக்கிராமப்பிள்ளையார் 807
எ) பாலகணபதி — — — — — — — — — 807
ஏ) பஞ்சமுக விநாயகர் — — — — — — — 808
ஐ) திருவண்ணாமலையில் சிம்மக்கால் விநாயகர் 808
ஒ) அர்த்தநாரி கணபதி அல்லது சக்தி கணபதி 808
ஓ) நிறம் மாறும் விநாயகர் — — — — — — 809
ஔ) சர்ப்ப நடன விநாயகர் — — — — — — 809
க) உப்பூர் வெயிலுகந்த விநாயகர் 810
34.11. விநாயகரும் விசுவக்சேனரும் — — ... ... — ...810
34.12. விநாயகர் - பிற சமயங்களில் தாக்கம் 811
35. வேலன் - பெருமைக் கூறுகள் — — — — — — 813
35.1. கந்தன் - புராணப் பின்னணி — — — — — — 813
35.2. முருகன் - தமிழ்க்கடவுள் — — — — ... — ... 815
35.3. முருகப்பெருமானின் பல்வகைத்திருவுருவங்கள் 816
அ) ஞானசக்திதரன் — ... — — — — — — 817
ஆ) கந்தசாமி — — — — — — ... — 817
இ) தேவசேனாபதி ... ... — 817
ஈ) சுப்பிரமணியர் ... ... — 817
உ) களிற்றூர்திப் பெருமான் ... ... — 817
ஊ) சரவணபவன் ... ... — 817
எ) கார்த்திகேயன் — — 818
ஏ) குமாரன் 818
ஐ) ஆறுமுகவர் ... ... — ... 818
ஒ) தாரகாந்தகர் ... ... — 818
ஓ) சேனாபதி 818

ஔ) பிரமசாத்தன் 818
க) ள்ளி கல்யாண சுந்தரர் 819
கா) பாலசுப்பிரமணியர் 819
கி) கிரவுஞ்ச பேதனர் ... ... — — — 820
கீ) சிகிவாகனர் — — — — — — — — — 820
35.4. முருகனது மயில் - தத்துவம் ... ... — ... 820
35.5. கார்த்திகேயன் - ஒரு பிரம்மச்சாரி 821
35.6. முருகன் திருக்கைகளின் சிறப்பும் படைக்கலச் சிறப்பும் ... — 823
35.7. வியத்தகு முருகன் சிற்பங்களும் செப்புச் சிலைகளும் 826
அ) வேலுடையான்பட்டி (வேல்ராம்பட்டு) முருகன் 829
ஆ) வெட்டுவான் கோயில் 826
இ) பொருள் வைத்த சேரி 826
ஈ) ஓதி மலை முருகன் 827
உ) சென்னிமலை - அக்கினி ஜாத சுப்பிரமணியன் 828
36. நந்திகேசுவரர் 829
36.1. நந்தியம் பெருமான் - தத்துவம் 831
36.2. நந்தி விலகிய இடங்கள் 832
37. சிற்றூர்ப்புறத் தெய்வங்கள் (கிராம தேவதைகள்) 833
37.1. குலதெய்வம் 836
37.2. ஊர்த்தெய்வம் 839
38. மண்ணுக்குள் மறைந்து கிடந்து கிடைக்கும் கற்சிலைகளும் செப்புத் திருமேனிகளும் 841
39. நவக்கிரகங்கள் 842
39.1. நவக்கிரகத்தலங்கள் 844
39.2. சுசீந்திரம் - நவக்கிரகக் கோயில் 847
39.3. நவக்கிரகச் சிலைகள் - சக்கர அமைப்பு 848
39.4. சூரியன் 849
39 4.1. கலைநோக்கில் சூரியன் 854
39.4.2. அர்த்தநாரி சூரியன் 856
39.5. சந்திரன் 856
39.6. செவ்வாய் 858

39.7. புதன் 859

39,8. வியாழன் (குரு) 861

39·9. வெள்ளி (சுக்கிரன்) 862

39.10. சனீசுவரன் 864

39.11. இராகு (செம்பாம்பு) 865

39.12. கேது (கரும்பாம்பு) 866

40. சிற்ப நோக்கில் அரிய சிறு தெய்வங்கள் 867

40.1. குபேரன் 867

40,2. இயமன் - வழிபாடு 869

40.2.1. சித்திரகுப்தர் வழிபாடு 870

41. தெய்வப் படைக்கலங்கள்-பன்முகப்பயன்பாடு 871

41.1 அத்திரதேவர் 873

41.2. சக்கரத்தாழ்வார் 875

42. நாகர் தாக்கம் - அன்னை வேண்டவராசியம்மன் (சிறப்புக்குறிப்பு) 877

43. கோயில் வாயிற் காவலர்கள் (துவாரபாலகர்கள்) 878

43.1 துவாரபாலகரும், துவாரபாலிகைகளும்- கலைநோக்கு 880

43.2. சிறப்பான சில துவாரபாலகர்கள் 881

அ. தஞ்சைப் பெருவுடையார்கோயில் 881

ஆ. திருவரங்கம் அரங்கநாதர் 882

இ. தஞ்சை அரண்மனை அருங்காட்சி யகத்திலுள்ள துவார பாலகர் 882

ஈ. இரணியூர்க்கோயில் துவார பாலகர்கள் 883

உ. புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில் 884

43.3. துவார பாலகர்கள் - சிறப்புக்குறிப்பு 884

44. சமய அருளாளர் சிலைகள் 885

44.1. அருளாளர் சிலை - சிறப்புக்குறிப்பு 887

44.2. சமயத் தொண்டாற்றிய பிற சான்றோர் சிலைகள் -- ... ... — — ... ... — — — — 888

44.2.1. மன்னர் முடிகள் தொடர்பான சிற்பங்கள் 889

45. சிற்பவுலகில் சிம்மம் பெறும் சிறப்பு 891

45.1. சிம்மக்கேணிகள் — — — — — — — — — 893

46. சாமரம் (சாமரை) இடங்கொண்ட சிற்பங்கள் 894

47. உடற்பயிற்சிச் சிற்பங்கள் 895
48. தண்டனை புலப்படுத்துஞ் சிற்பங்கள் 896
49. தியாகமுத்திரைப் புலப்பாட்டுச் சிற்பங்கள் 898
50. வெற்றிக்கு அறிகுறியாகக் கலைப் பொருள்கள் களைத் தம் நாட்டிற்குக் கொணர்தல் 899
51. உலகினர்க்குப் பாடம் புகட்டும் சிற்பங்கள் 901
52. பதினாறுவகை தானச் சிற்பங்கள் 901
53. பௌத்த, சமணச் சிற்பங்கள் - சிறப்புக்குறிப்பு 902
53.1. புத்தரும் மகாவீரரும் - சிறப்புக்குறிப்பு 904
53.1.1. சமணச் சிற்பங்கள் - பழையன 905
53.1.2 சமணச் சிற்பங்கள் - புதியன 908
53.2. தலைசாய்ந்த புத்தரும் திருநாமம் தரித்த புத்தரும் 908
54. தமிழ்த்தாய் - திருவுருவச்சிலை 911

6 அ. சிற்பக்கலை — பண்பாட்டுக் கூறுகள்
(அரிய சிறப்புக் கலைப்படைப்புக்கள்) முத்திரையுரை 914

வியக்கத்தகு கற்சிற்பங்கள்:

1. திருச்சத்திமுற்றம் இறைவித்திருவுருவம் 916
2. திருவண்ணாமலை அர்த்த நாரீசுவரர் 917
3. திருக்கண்டியூர் அர்த்த நாரீசுவரர் 917
4. திருக்கொடுங்குன்றம் பைரவர் 918
5. சங்கரன்கோயில் சங்கர நாராயணர் 918
6. புதுமுறையிலமைந்த நவக்கிரகபீடம் 920
7. திருவாரூர் எமசண்டீசர் 920
8. கொடுங்கலூர் கண்ணகி சிலையும் சேஷத்திர பாலர் சிலையும் 92
9. திருவக்கரை முகலிங்கம் 921
10. பஞ்சேஷ்டி சிற்பங்கள் 922
11. அன்னூர் (அன்னியூர்) மன்னீசுவரர் கோயில் - இறக்கைகளுடன் சிவலிங்கம் 923
12. மன்னார்குடி வாசுதேவர் 923
13. தஞ்சாவூர் மாவட்டத்தில் வாகீசுவரசிவன் வாகீசுவரி - சிற்பங்கள் ... ... — — — ... 923

14. இராசசிம்ம பல்லவ திரிபுராந்தக ஆலயத்தில்
ஊர்த்துவ தாண்டவம் — — — — — — — — 924
15. சுருட்டுப்பள்ளியில் சிவனது சயனத் திருக்கோலம் 925
16. திருச்செங்காட்டங்குடி நவதாண்டவர்கள் 925
17. திருப்புத்தூரில் கௌரிதாண்டவரென வழங்கும்
ஆனந்த தாண்டவர் — .— — — — — — — 925
18. தஞ்சைக்கலைக் கூடம் - பிட்சாடனரும்
ரிஷிபத்தினிகளும் —- — — — — — 926
19. உத்தமர் கோயிலில் காணலாகும் மும்மூர்த்திகள் 927
20. திருவதிகை விரட்டானேசுவரர் ஆலயம் 928
21. கல்லங்குறிச்சி - கலியுக வரதராசப்பெருமாள் 928
22. சேலம் உடையார்ப்பட்டிக் கந்தாசிரமத்தில்
அருள்மிகு ஆத்யந்தப்பிரபு ... ... — ... ... — 929
23. திருநாவலூரர் ஆலமர் செல்வனும் சுந்தரரும் 929
24. பாபநாசம் சர்ப்ப விநாயகர் 930
25. திருக்கண்ணபுரம் - சௌரிராசப்பெருமாள்
சிலைகள் ... . ,... 930
26. பெரம்பலூரர்ப் பெருமாள் கோயிலின்
பஞ்சபாண்டவர்கள் 931
27. நாச்சியார் கோயில் கருடாழ்வார் 932
28. திரிபுவனம் சுந்தரப் பெண்மணிகள் 932
29. பவானி சங்கமேசுவரர் கோயிற்சிற்பங்கள் 9.2
30. நெற்றித்திலகப் பெருமையும் திலகமிடும்
பெண்சிற்பமும் 933
31. பெண்மையெழில் தேய்ந்த சிற்பங்கள் 935
32. அட்டமாசித்திகள் - சிற்பங்கள் 936
33. வடபொன்னம்பலம் யாளித்தூண்கள்
(ஈர்க்கு பிளக்கும் அதிசயம்) 936
34. பிரம்ம ஹத்தியும் கற்சிற்பமும் 937
35. தேவிப்பட்டினம் நவபாஷாணத் தம்பங்கள் 938
36. திருவாதவூரில் காணலாகும் புருஷா மிருகம் 938

அன்புப்புலப்பாட்டுச் சிற்பங்கள்

1. மணாளனைச் சுமந்து நிற்கும் மங்கை 939

2 மனிதாபிமானத்தால் மங்கையின் காலில் தைத்த முள்ளை யெடுக்குங்காட்சி 940
3. சூலுற்ற பெண்யானைக்குக் கருவுயிர்க்குங் காலத்துக் களிறு உதவிபுரியுங்காட்சி 940
4. திருபுவனத்தில் ஒருத்தி யானைக்குட்டிக்குப் பால் கொடுக்கும் காட்சி 940
5. தாய்ப்பாசம் புலப்படுத்துஞ் சிற்பங்கள் 941
6. தஞ்சைப்பெரியகோயிலில் அம்மையின் இடுப்பில் குழந்தை 942
7. திருவாரூரில் நீலோத்பலாம்பிகையும் குழந்தை முருகனும் 943
8. கடிதம் எழுதும் நங்கை 943
9. ஸ்ரீ பெரும்புதூர் - பசு, லிங்கத்தின் மீது பால் சொரியும் காட்சி 944

III வியத்தகு செப்புத் திருமேனிகள்

1. கால்மாறி ஆடின தாண்டவர் 944
2. பொன்பதிர்கூடம் - ஸ்ரீ சதுர்புஜ ராமர் 945
3. அனந்தமங்கலத்து அனுமன் 946
4. திருப்பூவணநாதர் சிலை 947
5. காரமடை நஞ்சுண்டேசுவரர் கோயில் சந்திரசேகர் 947
6. வடமதுரை வடிவழகிய இராமர் 948
7. அழகர்கோயில் ஆண்டாள் 949
8. அரன்வாயல் நிசும்ப சூதனி 949
9. திருஅம்பர் மாகாளத்து மோகினி 950
10. தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ள இரிடப தேவரும் அம்பிகாவும் 950
11. வைணவ ஆலயங்களில் பாலகிருஷ்ணன் சிலை 951

IV சிற்பியர் திறம்புலப்பாடு :-

1. சிற்பச் சங்கிலிகளும் கல்வளையமும் 952
2. குடந்தை சாரங்கபாணி கோயிலில் நவராத்திரி மண்டபச் சிற்பங்கள் 953
3. பட்டீசுவரர் - இசையொலியுடன் கூடிய நந்தி 953

4 குரங்குச்சிற்பம் 954

5 தருமபுரி ஆலயத்தில் தொங்கும் தூண்கள் 954

6 மேலைக்கருவேலங்குளத்தில் சுழலுந்தூண் 955

V பிற சிற்பக்கலைப் படைப்புக்கள்

1 மரச்சிற்பம் – நீரினுள் சிலை நிறுவும் விந்தை 955

2 எருமை வெட்டிப்பாளையம் சாளக்கிராமக்கல்லில் சீதாராமர் 956

3 திரு உத்தரகோசமங்கை மரகத நடராஜர் 957

4 தஞ்சை புன்னைநல்லூர் அருள்மிகு மாரியம்மன் சிலை 958

5 சென்னை மயிலாப்பூரில் உரைக்கல் கண்ணன் 959

தமிழ்ப் பண்பாட்டில் உயிர்நிலை
தமிழ்ப் பெருமக்கள் போற்றும்

அருள்மிகு

தெய்வத்தமிழ்த்தாய்

தமிழ்ப்பண்பாட்டு வரலாறு - II

படவிளக்கம்

1 இலட்சுமி நரசிம்மர்; வழுவூர் அருள்மிகு கோதண்டராம சாமி கோயில் திருமேனிகள், மோகூர் சக்கரத்தாழ்வார்

நன்றி: 1) அம்மன் தரிசனம் (திங்களிதழ்)
2) வழுவூர் ஆலய நிருவாகம்
3) மோகூர் ஆலய நிருவாகம்

2 மணவாள மாமுனிகள், இராமாநுசர், வேதாந்ததேசிகர்

நன்றி: பேராசிரியர் டாக்டர் ஏ.வி. ரங்காச்சாரியார், சிதம்பரம்

3 மாமல்லபுரமும் நேப்பாளக் கோயிலமைப்பும்

நன்றி: தமிழ்நாடு அரசு & தொடர்புடைய கோயில் நிருவாகம்

4 முப்பெருஞ்சக்திகள் (மலைமகள், அலைமகள், கலை மகள்); கலைமகள்

நன்றி: 1) மகாராட்டிரமாநில ஆலயநிருவாகம்.
2) கங்கைகொண்ட சோழபுரம் (தமிழ்நாடு அரசு)

5 ஆண்டாளும், ரங்கமன்னாரும், தில்லை கோவிந்த ராசரும் தேவியரும்,

நன்றி: 1) கோபுர தரிசனம் (திங்களிதழ்)
2) தில்லை கோவிந்தராசர் ஆலய நிருவாகம். சிதம்பரம்

6 கலியபெருமாள் கோயில் சுவாமி & உறயக்கிரிவப் பெருமாள்

நன்றி: 1) அருள்மிகு கலியபெருமாள் சுவாமி ஆலய நிருவாகம்
2) ஞானபூமி (திங்களிதழ்) & திருவகீந்திபுரம் ஆலய நிருவாகம்

7 மரச்சிற்ப தேர்த்தியில் வேய்ங்குழலூதுங் கண்ணன், நான்கு திருக்கை கொண்ட சக்தி

நன்றி: தமிழ்நாடு அரசு

8 திருவிடை மருதூர் மகாலிங்கம், பர்வதவர்த்தினி உடனாய இராமலிங்கேசுவரர், சோமநாதபுரக் கோயிலும், கடலில் லிங்கமும், டால்மியாபுரம் சிவன் கோயிலும் மாரியம்மன் கோயிலும்

நன்றி: தொடர்புடையஆலய நிருவாகம்

9 நடராசர், சிவகாமி, காரைக்காலம்மையார், சமயாசாரியார்கள்

நன்றி: தொடர்புடைய ஆலய நிருவாகம்

10 அந்தகாசுரவத மூர்த்தி, திருச்செந்தூர் முருகன்

நன்றி: 1) மங்கை (திங்களிதழ்)
2) அம்மன் தரிசனம் (திங்களிதழ்)

11 தந்தச்சிற்பநேர்த்தியில் விநாயகர்

நன்றி: தமிழ்நாடு அரசு

12 உருவாரம், முனியாண்டி

நன்றி: தமிழ்நாடு அரசு (எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர்)

13 சரபமூர்த்தி, கொடிமகள்

நன்றி: திரிபுவனம் அருள்மிகு சரபேசுவரர் ஆலய நிருவாகம்

14 நடனச்சிற்பங்களின் பின்னணியில் சிதம்பரம் செல்வி அகிலா

நன்றி: திரு பா, பழநி செட்டியார், சிதம்பரம்

15 கமலாம்பிகையும் திருவாரூர்த்தியாகராசரும்

நன்றி: திருவாரூர் அருள்மிகு தியாகராசர் ஆலய நிருவாகம்.

16 வைத்தீசுவரன் கோயில் முத்துக்குமாரசுவாமி, திருவிடைக்கழித் திருமுருகன்; இடபாருடர்.

நன்றி: டாக்டர் ஆ. மங்கலமுடையார், சிதம்பரம்.

17 போதி சத்துவ மைத்திரேயர்; நாகையில் வழிபாட்டிலிருந்த புத்தர்.

நன்றி: தமிழ்நாடு அரசு (எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர்)

18 கருப்பண்ணசுவாமி.

நன்றி: கல்கண்டு, 'தீபாவளிமலர்' 95.

19 இராமேசுவரக் காட்சிகள்.

நன்றி: அருள்மிகு இராமநாதசுவாமி ஆலய நிருவாகம்.

20 திருக்கயிலைக் காட்சியும் காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலும்

நன்றி: 1) கயிலைச்செல்வர் எஸ்.ஆர். இராமநாதன் செட்டியாரும் சகோதரர்களும்
2) தமிழ்நாடு அரசு தொல் பொருளியல் துறை

21 விழுப்புரம் திருக்கோயிலூர் நெடுஞ்சாலை வழியிலுள்ள அருள்மிகு அய்யனார்

நன்றி: தமிழ்நாடு அரசு (எட்டாவது உ.த.மா. மலர்)

22 மகாராட்டிரர் காலத்து அய்யன் கோயில் குதிரை (தஞ்சை மாவட்டம்)

நன்றி: தமிழ்நாடு அரசு (எட்டாவது உ. த மா. மலர்)

23 மீனாட்சியம்மை, பகவதியம்மன்

நன்றி: தொடர்புடைய ஆலய நிருவாகம்

24 அட்டலட்சுமிகள்

நன்றி: ஞானபூமி (திங்களிதழ்) & அருள்மிகு அஷ்ட லட்சுமி ஆலயம், சென்னை

25 கஜசம்ஹாரமூர்த்தி, வெக்காளியம்மன்

நன்றி: 1) மங்கை (திங்களிதழ்);
2) உறையூர் அருள்மிகு வெக்காளியம்மன் கோயில் நிருவாகம்.

26 காஞ்சி வரதராசர் கோபுரம்; திருவரங்க கோபுரம்.

நன்றி: தொடர்புடைய கோயில் நிருவாகம்

27 டால்மியாபுரம் பெருமாள்கோயில் விமானம்; சுசீந்திரம் கோயிலும் குளமும்.

நன்றி: தொடர்புடைய கோயில் நிருவாகம்.

28 வீணாதர தட்சணாமூர்த்தி; ஐயப்பன்

நன்றி: ஸ்ரீ ராமகிருஷ்ணவிஜயம் (திங்களிதழ்)

29 நவக்கிரகங்கள்

நன்றி: அருள்மிகு சூரியனார் கோயில் நிருவாகம்

30 மயிலைப்புனிதர் தாமஸ் தேவாலயம்

நன்றி: தமிழ்நாடுஅரசு

31 படிகலிங்கம், பண்ணாரியம்மன், சமயபுரம் மாரியம்மன், ஸ்ரீ சக்கரம்

நன்றி: தொடர்புடைய ஆலய நிருவாகம்.

3- பைரவமூர்த்தி

நன்றி: தமிழ்நாடு அரசு தொல் பொருளியல் துறை

33 கலியாணசுந்தரர், பிச்சையுகக்கும் பெருமாள், பார்வதி திருமணம், யாளித்தூண் (தில்லைக் கோயிற்சிறபங்கள்)

நன்றி: ஆனந்தவிகடன் (திங்களிதழ்)

34 ஆவுடையார் கோயில் — இசைத்தூண்களைச் சுற்றிப் பல தலங்களிலுள்ள சிற்பத்தூண்களும்; யானையும் காளையும் தலைகளால் பிணைப்புள்ள சிற்பமும்

நன்றி: தொடர்புடைய கோயில் நிருவாகம்

35 சிதம்பரம் பொற்சபையும், அருள்மிகு ஆடல் வல்லான் தாண்டவக் கோலங்களும்

நன்றி: 1) தமிழ்நாடுஅரசு;
2) தில்லைப்பொது தீட்சதர்கள் நிருவாகம்.

36 ஸ்ரீரங்கம் திலகமிடும் பெண்ணும், வடநாட்டுக்கோயிலில் திலகமிடும் பெண்ணும்

நன்றி: தொடர்புடைய கோயில் நிருவாகம்.

37 சிற்பங்களில் சரசுவதி

நன்றி: அம்மன் தரிசனம் (திங்களிதழ்)

38 பூம்புகார்ச்சிற்பக் காட்சிகள்

நன்றி: தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறை

39 காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில்

நன்றி: காஞ்சி அருள்மிகு ஏகாம்பரநாதர் கோயில் நிருவாகம்.

40 ஆவுடையார் கோயில்-கோயிற்சிற்பங்கள் (மணிவாசகர்

நன்றி: தொடர்புடைய கோயில் நிருவாகம்.

41 அன்பால் கட்டுண்ட தாயும் சேயும்

நன்றி: தொடர்புடைய கோயில் நிருவாகம்

42 சப்தமாதர்கள், கணபதி, மதுரைவீரன்

நன்றி: சிதம்பரம் தருமபூஷணம் செ. ரெத்தினசாமி செட்டியார் குமாரர்கள்

43 விழாக்கால வாகனச்சிற்பங்கள், தேர்ச்சிற்பங்கள்
நன்றி: மங்கை (திங்களிதழ்)

44 நாகூர் மீரான் சாயபு தர்கா
நன்றி: தமிழ்நாடு அரசு

45 மதுரைக்கோயிற் காட்சியும், தஞ்சைப்பெரிய கோயிலும்
நன்றி: தமிழ்நாடு அரசு

46 கங்கை கொண்ட சோழபுரம்; தஞ்சைப்பெரிய கோயில்; தாராசுரம் கோயில்
நன்றி: தமிழ்நாடு அரசு தொல்பொருளியல் துறை

47 பைரவர், சோமாஸ்கந்தர், அகத்தியர் (தில்லைக் கோயிற் சிற்பங்கள்)
நன்றி: ஆனந்தவிகடன் (திங்களிதழ்)

48 கல்லில் காவியம் (கே.ஜி. நடேசன்)
இயக்கன் இயக்கி, குபேரன்
நன்றி: தொடர்புடைய ஆலய நிருவாகம்

49 யானைக்குட்டிக்குப் பாலூட்டும் நங்கை
நன்றி: தினமணி (நாளிதழ்)

50 கணபதியும், கணேசாயினியும்
நன்றி: தொடர்புடைய ஆலய நிருவாகம்

51 வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயமும் சிற்பமாட்சியும்
நன்றி: தொடர்புடைய ஆலய நிருவாகம்

52 சோடசோபசார அங்கங்கள் பூசை விளக்குகள்
நன்றி: மங்கை (திங்களிதழ்)

பார்வை நூற்பட்டியல் - செய்யுள் நூல்கள்

1 **அகநானூறு:** ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரை. சை.சி.நூ. கழகம், சென்னை-1 (1947, 1970)

2 **அஷ்டப்பிரபந்தம்:** பிள்ளைப் பெருமாளய்யங்கார், எஸ். இராஜம் வெளியீடு, சென்னை (1957)

3 **ஐங்குறுநூறு:** கழகப்பதிப்பு, சென்னை-1 (1966)

4 **கந்தபுராணம்:** திருப்பனந்தாள் மடத்துப்பதிப்பு, (1952)

5 **கம்பராமாயணம்:** (எல்லாக்காண்டங்களும்), அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, அண்ணா மலைநகர்

6 **கலிங்கத்துப்பரணி:** கழகப்பதிப்பு, சென்னை-1

7 **கலித்தொகை:** கழகப்பதிப்பு, சென்னை - (1958)

8 **காஞ்சிப்புராணம்:** சிவஞானசுவாமிகள்; மகாவித்வான் அருணைவடிவேல் முதலியார் உரை, மெய்கண்டார் கழகம், காஞ்சிபுரம், (1937)

9 **குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள்:** ஸ்ரீ காசிமடம், டாக்டர் உ.வே சா. பதிப்பு, திருப்பனந்தாள், (1936)

10 **குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்:** சிவஞான சுவாமிகள், கழகப்பதிப்பு, சென்னை - 1 (19:5)

11 **குறுந்தொகை** டாக்டர் உ.வே.சா. பதிப்பு, சென்னை-41 (1947)

12 **சிலப்பதிகாரம்** டாக்டர் உ.வே.சா.பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், (1985)

13 **சீவகசிந்தாமணி:** டாக்டர் உ.வே.சா. பதிப்பு சென்னை - 41, (1969)

14 **தாயுமான சுவாமிகள் திருப்பாடல்கள்:** *சித்தாந்தச் சிறப்புரை, கழகப்பதிப்பு, சென்னை* - 1 (1975)

15 **திருச்செந்தூர்ப் பிரபந்தங்கள்:** *வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் தேவஸ்தான வெளியீடு, திருச்செந்தூர்*

16 **திருத்தொண்டர் புராணம்:** *(எல்லாப் பகுதிகளும்), சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் பதிப்பு, கோவை*

17 **திருப்புகழ்:** *(அருணகிரிநாதர்), வாரியார் பதிப்பு, சென்னை* - 2

18 **திருப்பூவண நாதருலா.** *டாக்டர் உ.வே.சா. பதிப்பு, சென்னை* - 41

19 **திருமந்திரம்:** *கழகப்பதிப்பு, சென்னை,* (1942)

20 **திருவருட்பா:** *(இராமலிங்க அடிகள்), ஊரனடிகள் பதிப்பு, சமரச சன்மார்க்க ஆராய்ச்சிநிலையம், வடலூர்,* (1972)

21 **துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் பிரபந்தங்கள்:** *மயிலம்மடம், மயிலம்*

22 **தொல்காப்பியம்:** பொருளதிகாரம் (இளம் பூரணம்), *கழகப்பதிப்பு, சென்னை*

23 **நந்திக்கலம்பகம்:** *மணிவாசகர் நூலகம், சிதம்பரம்,* (1969)

24 **நற்றிணை:** *கழகப்பதிப்பு, சென்னை,* (1952)

25 **நாலடியார் உரைவளம்:** *(இரு தொகுதிகள்), சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர்*

26 **நாலாயிர திவ்யப்பிரபந்தம்:** *திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை,* (1951)

27 **நீதிக்களஞ்சியம்:** N.C B.H, *சென்னை,* (1951)

28 **பதினோராந்திருமுறை:** *கழகப்பதிப்பு, சென்னை*

29 **பதினெண்கீழ்க்கணக்கு:** *இராசம் அய்யர் பதிப்பு,* N.C.B.H., (1984)

30 **பதிற்றுப்பத்து:** *டாக்டர் உ.வே.சா. பதிப்பு, சென்னை,* (1957)

31 **பத்துப்பாட்டு:** *டாக்டர் உ.வே.சா. பதிப்பு, சென்னை* (1918)

32 **பரிபாடல்:** *கழகப்பதிப்பு, சென்னை,* (1957)

33 **பன்னிருதிருமுறைகள்;** *(முதல் 9 திருமுறைகள்), தருமையாதீனப்பதிப்பு, தருமபுரம்.*

34 **பாரதிதாசன் கவிதைகள்:** *(தொகுதிகள்), செந்தமிழ், நிலையம், இராமச்சந்திரபுரம்*

35 **பாரதியார் பாடல்கள்:** *மணிவாசகர் நூலகம், சிதம்பரம்,* (1987)

36 **புறப்பொருள்வெண்பாமாலை:** *டாக்டர் உ.வே.சா. பதிப்பு, சென்னை,* (1934)

37 **புறநானூறு:** *டாக்டர் உ.வே.சா. பதிப்பு. சென்னை,* (1971)

38 **பெருங்கதை:** *டாக்டர் உ.வே.சா. பதிப்பு, சென்னை,* (1953)

39 **மணிமேகலை:** *ந.மு.வே. நாட்டார் உரை, கழகப் பதிப்பு, சென்னை* - 1 (1951)

40 **மூவருலா:** *டாக்டர் உ.வே.சா. பதிப்பு, சென்னை,* (1946)

41 **வில்லிபுத்தூராழ்வார்:** **மகாபாரதம்.** *கதிரைவேல் பிள்ளை பதிப்பு,* (1925)

கலை இலக்கிய உரைநடை நூல்கள்

1 'அண்ணா', சௌந்தரியலகரி - பாஷ்யம், ஸ்ரீராம கிருஷ்ணமடம், மயிலாப்பூர், சென்னை, (1884)

2 அப்பாத்துரை, கா. இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு, கழகப்பதிப்பு, சென்னை, (1984)

3 அறிவொளி, அ., குடந்தைக் கோயில்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், (1984)

4 அறிவொளி, அ. காஞ்சி காமாட்சி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், (1983)

5 இராஜமாணிக்கனார், டாக்டர் மா., தமிழகக்கலைகள், பாரிநிலையம், சென்னை - 1 (1959)

6 இராஜமாணிக்கம். தி., எண்பெரும் வீரட்டத்தலங்கள், கழகப்பதிப்பு, சென்னை, (1985)

7 இராமன், கே.வி., பாண்டியர் வரலாறு, சென்னை, (1977)

8 இராமகிருஷ்ணன், எஸ்., இந்தியப்பண்பாடும் தமிழரும், மீனாட்சி புத்தகநிலையம், மதுரை - 1 (1982)

9 உதயமூர்த்தி, டாக்டர் எம். எஸ்., மனம் பிரார்த்தனை மந்திரம், கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளுதெரு, தி.நகர், சென்னை, (1992)

10 ஏகாம்பரநாதன், டாக்டர் ஏ., தமிழகச்சிற்ப, ஓவியக் கலைகள், கழகப்பதிப்பு, சென்னை, (1983)

11 கந்தசாமி. V., தமிழ்நாட்டின் தலவரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 14, (1983)

12 குடவாயில் பாலசுப்ரமணியன், **திருவாரூர்த்திருக்கோயில்** தேவஸ்தான வெளியீடு, திருவாரூர். (1988)

13 குருசாமி தேசிகர், வி.சா.&பாசுபதீஸ்வரசிவாச்சாரியார் **சிவமூர்த்தங்கள்,** தருமபுரம்

14 கோதண்டராமன், பி., **இந்திய ஓவியக்கலை** (வரலாறு), தேவி நூற்பதிப்பகம், திருவூடல்தெரு, திருவண்ணாமலை (1956)

15 கோதண்டராமன், பி., **இந்தியக்கலைகள்,** N.C.B.H. (1987)

16 சிவராமமூர்த்தி, க (தமிழாக்கம்: இராமசாமி மே.சு) **இந்திய ஓவியம்,** N.C.B.H. புதுடெல்லி, (1974)

17 சுப்ரமணிய பிள்ளை, வ.த., **சிவஸ்தல மஞ்சரி.** மயிலேறும் பெருமாள் பதிப்பு, சென்னை, (1958)

18 சுப்புரெட்டியார், டாக்டர் ந., **தொண்டை நாட்டுத்திருப் பதிகள்,** வெளியீடு: சுப்பிரமணியப்பிள்ளை, எஸ். ஆர், திருநெல்வேலி & சென்னை, (1973)

19 சுவாமி சித்பவானந்தர், **கடவுளின் வடிவங்கள்,** ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம் திருப்பராய்த்துறை (1977)

20 செந்துறை முத்து, புலவர்., **சக்தித்தலங்கள்,** மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், (1995)

21 செல்வம் V.T. **தமிழக வரலாறும் பண்பாடும்,** மணிவாசகர் நூலகம், சிதம்பரம், (1995)

22 சோமசுந்தரம் பிள்ளை, ஜே.எம்,. **இராஜராசேச்சுரமும் பிற சோழர் கோயில்களும்,** தஞ்சாவூர் அரண்மனை தேவத்தானம், (1958)

23 சோமசுந்தரம் பிள்ளை, ஜே.எம்., **சோழர் கோயிற் பணிகள்,** பாரி நிலையம், சென்னை, (1962)

24 சோமலே, **தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்,** N.C.B.H., சென்னை, (1981)

25 தொண்டன், **மேல் மருவத்தூர் அன்னையின் அற்புதம்,** கல்வி, மருத்துவ, பண்பாட்டு அறநிலைய வெளியீடு, மேல்மருவத்தூர்

26 நாகசாமி, டாக்டர் இரா., **தமிழகக் கோயிற்கலைகள்,** தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, (1973)

27 பரந்தாமனர், அ.கி., **மதுரை நாயக்கர் வரலாறு** பாரிநிலையம், சென்னை.

28 பாலசுப்பிரமணியன், டாக்டர் சி., **சேரநாட்டுச்செந்தமிழ் இலக்கியங்கள்,** முதற்பதிப்பு, நறுமலர்ப்பதிப்பகம், சென்னை.

29 பிள்ளை, டாக்டர் கே.கே., **தமிழர் வரலாறு—மக்களும் பண்பாடும்,** தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, (1972)

30 மீனாட்சி சுந்தரனார், டாக்டர் தெ.பொ., **தமிழும் பண்பாடும்,** N.C.B.H., சென்னை. (1980)

31 முத்துப்பிள்ளை, புலவர் சி., **புனித கோயில்களும் புண்ணிய தீர்த்தங்களும்,** இலக்குமி நிலையம், 10, காசிம் சாகிப்தெரு, இராயப்பேட்டை, சென்னை. (1981)

32 இராதாகிருஷ்ண பிள்ளை, எம்., **தென்னாட்டுக் கோயில்கள்,** (மூன்றாம்பாகம்), பிஸ்மி பதிப்பகம், (1989)

33 வித்தியானந்தன், சு., **தமிழர் சால்பு,** பாரி புத்தகப் பண்ணை, சென்னை.

34 வெள்ளைவாரணனார். க., **பன்னிரு திருமுறை வரலாறு,** (இருதொகுதிகள்), அ ப க. வெளியீடு, அண்ணாமலை நகர்

35 வேங்கடசாமி, மயிலைசீனி., **தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்,** கழகப்பதிப்பு, சென்னை, (1972)

36 வைத்தியநாதன், T.S,, **நவமணிகள்**, திருவாவடுதுறை ஆதீனம் பதிப்பு, (1959)

37 வைத்தியலிங்கம், செ., **அழகுக்கலைத்திறன்**, செல்ல முத்தகம் வெளியீடு, பரங்கிப்பேட்டை, (1970)

1 Fine arts and Crafts in Pattu-P-Pattu and Ettu-t-tokai, S. Vaithilingam, A.U. Edition, (1977)

2 Jouveau - Dubreuil - S. Krishnaswami Aiyangar(ed) Varanasi - 1972

3 S. Padmanabhan - Temples of South India.

பார்வை (Reference) தொகுப்பு நூல்களும் இதழ்களும்:

1 அபிதான சிந்தாமணி ஆ. சிங்காரவேலு முதலியார், ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், (1981)

2 ஆய்வுக்கோவை (இதுவரை வெளிவந்த தொகுதிகள்), அனைத்திந்தியப் பல்கலைக் கழகத்தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலைநகர் & புதுச்சேரி.

3 கோயிற்கலைக்களஞ்சியம் (தொகுதிகள்), தமிழ்ப்பல் கலைக்கழகம்: தஞ்சாவூர்.

4 சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் நடத்திய மாநாட்டுச் சொற்பொழிவுகள்.

5 தமிழ்க்கலைக் களஞ்சியம் (தொகுதிகள்), தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.

6 வாழ்வியல் களஞ்சியம் (தொகுதிகள்), தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

7 கலைமகள், கல்கி, கோபுரதரிசனம், திருக்கோயில், அமுதசுரபி, ஆனந்தவிகடன், ஓம்சக்தி, ஞானபூமி, ஸப்தகிரி, ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம் தர்மசக்கரம், யுனெஸ்கோ கூரியர் முதலிய இதழ்களும், மலர்களும் ஆலயக்குடமுழுக்கு மலர்களும், பிற விழாமலர்களும்.

* * * * * * * * * * * * * * * *

*** வாழிய தமிழ்ப்பண்பாடு ***

* * * * * * * * * * * * * * * *

மதம் — பண்பாட்டுக் கூறுகள்

I. மதக்கொள்கை - பொதுப்பார்வை

உலகில் எத்தனையோ மதங்கள் தோன்றியிருப்பினும் அவற்றுள் சிலவே காலவெள்ளத்தில் எதிர்நீச்சலிட்டுத் தம் அசைவிலாக் கொள்கைகள் காரணமாக இன்றும் வாழ்ந்து வருகின்றன. இக்காலத்தில் நிலைபேறு கொண்டுள்ள ஒவ்வொரு மதத்தையும் ஊன்றி ஆராயின் அந்த அந்த மதத்துக்கும் அடிப் படையாயுள்ள **ஆத்ம தத்துவம்** நன்கு புலப்படும்; அத்தகைய தத்துவத்தைப் பற்றிய கருத்துக்களிடையே முரண்பாடு இல்லை யென்பதும், அவை ஒன்றற்கொன்று துணைபுரிபவையாக அமைந் திருக்கின்றன என்பதும் தெளிவாகும். மதவுண்மைகளைத் தேர்ந் துணர்ந்த மதச்சான்றோர் சிலரே மதநெறிமுறைகளில் பரந்த நோக்கத்துடன் ஒருமைப்பாடு காண முயன்றுள்ளனர்; ஆனால், பலரோ சிறிதும் நெகிழ்ச்சி (flexibility) இன்றித் தாம் கண்டதே உண்மையென எழுதியும் பேசியும் மதங்களிடையே வேற்றுமையைப் பாராட்டி வருகின்றனர்.

பொதுவாக மாபெரும் உண்மையின், **பரிபூரணத்தின்** ஒரு பகுதியை ஒருமதம் எடுத்துக்கொண்டு, அது தன் முழு வல்லமை யையும் முயற்சியையும் அதில் செலுத்தி உண்மை காண விழைகிறது; ஆராய்ச்சியில் கண்ட முடிவுகளைக் - கொள்கை களை - உலகம் பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறது. அவ்வாறு பின்பற்றாதவர்களிடம் நல்லுறவு கொள்ளாமல் பகைமை கொள்ளவும் முனைகிறது. இந்நிலையில்தான் தீர்க்க முடியாத சிக்கல்கள் எழும்புகின்றன.

ஒரு மதம் தான் செய்த ஆராய்ச்சியின் முடிவு அதற்குரிய உழைப்பின் - முயற்சியின் - பயனும் வெற்றியும் ஆகும்; அஃது உண்மைக்குப் புறம்பானதன்று. ஆகவே, அதனை ஆத்ம தத்துவத்தில் கண்ட ஒருவகை விளக்கமாகக் கொள்ளுதல் மதத்துக்கும் நல்லது; உலக நலத்துக்கும் உகந்தது. அதனைத் தள்ளிவிட வேண்டுவதில்லை.

பல்வேறு மனமுடையவர்களாக மக்கள் பிறப்பெடுக்கும் நிலையில், **'மதக்கொள்கை' என்பதில் ஒருமைப்பாடு-வேற்றுமைக் கிடையே ஒற்றுமை-காண வேண்டுவதே மதத்தை வாழ்விக்கும் உத்தியாகும்.**

பல்வேறு மனம் படைத்தவர்களையும் திருப்திப்படுத்திப் போதுமான அளவுக்குக் கொள்கைகளையும் சீரிய கருத்துக்களையும் வாங்கச் செய்யும் வகையில் **மனத்தைப் பக்குவப்படுத்தும் பரந்த கொள்கையுடைய மதமே உலகில் சீரிய குறிக்கோளுடைய மதம்** - இலட்சிய மதம் - எனலாம். இவ்வாற்றான் தத்துவ ஞானிக்குத் தத்துவங்களையும், பல்வகைச் சடங்குகளில் ஈடுபாடு உள்ளவர்க்குக் கடவுள் வடிவங்களையும் ஆராதனைகளையும், அடியவர்களுக்குப் பக்தியுறைப்பையும், தொண்டர்களுக்குத் தொண்டின் மேன்மையையும், கலைஞர்களுக்கு ஆக்கப்பூர்வமான கலைக்கற்பனைகளையும், கலைப் படைப்புக்களை உருவாக்கும் எழிலனுபவ ஊற்றத்தையும், சிறப்பாகத் தோத்திரம் பாடவல்ல கலைஞர்களுக்கு அவர்கள் உள்ளம் ஆன்ம நலத்தால் பொங்கிப் பூரித்து வடித்தெடுக்கும் பாநலத்தையும் வழங்கவல்லது எதுவோ அதுவே சிறந்த மதமாகும்; அதுவே சிறந்த மதக்கொள்கையாகும்.

சுருங்கக் கூறவேண்டுமெனின், மக்களுக்காகத் தோன்றிய ஆன்மிகச் சாதனமே மதமென்பதையுணர்ந்து, மக்களாகத் தோன்றியவர்கள் குறிக்கோளிலாத மக்களாகவோ மக்களினும் தாழ்ந்த விலங்குகளாவோ வாழாமல், மக்களினத்தை மேம்படுத்த வல்ல **நன்னெறிக் கடைப்பிடியே** உயிரெனக் கொள்வது மதக் கொள்கையாகும்; இந்த உயரிய கொள்கையைத் தியானவாழ்வும் தவயோக வாழ்வும் வாழ்ந்தமையால் - உள்ளுணர்வின் உந்துதலால் - புலப்படுத்திய மெய்ஞ்ஞானியரின் உபதேசங்களைக் கொண்டு தெளியலாம்.

1.1 உலகமும் மதமும்

உலகில் தோன்றிய மானுடன், எத்தனையோ மாறுதல்களைக் கண்டு கொண்டே பரிணாம வளர்ச்சியில் படிப்படியே சிறந்து கொண்டே வந்துள்ளான். ஏனைய உயிரினங்களுக்கு இல்லாத- மக்களுக்கே உரிய - **சிறப்பான பண்பு, எதனையும் சிந்தித்துத் தேர்ந்து தெளிதலாகும்.** சிந்திக்கத் தெரிந்த மானுடன், இயற்கையின் ஊடே அளவிலா ஆற்றல் ஒன்று இருந்துகொண்டு செயற்படுவதை உணரலானான். இயற்கையினூடே பொதிந்து கிடக்கும் பேரறிவும் பேருண்மையுங் கண்டு, தெய்வமெனக்

கொண்டு களிப்புடன் வழிபடத் தொடங்கினான். இயற்கைச் சீற்றங்களினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனின் அச்சவுணர்வும், அதனடிப்படையிலெழுந்த பக்தியுணர்வும் தேவையேயென்பதை அனுபவத்தால் உணர்ந்து, மற்றையோர்க்கும் உணர்த்தத் தலைப்பட்டான். இவ்வாற்றான் அவன் கொண்ட **வாழ்வியற் கொள்கை** அல்லது **கோட்பாடு, மதம்** என வழங்கலாயிற்று.

உலகத்தில் வாழும் பல பகுதிகளிலும் அவரவர்க்கு உகந்த வாழ்வியல் போக்கிலே மதங்கள் பலவாக அமையலாயின. எனினும், **கடவுள்** அல்லது **பரம்பொருள்** என்பதை உண்மையாகத் தேர்ந்து உணரும் நிலையில் **ஒவ்வொரு மதமும் தான் கண்ட காட்சி** அல்லது **நெறி** அல்லது **தத்துவம்** என்ற கோட்பாட்டின்படி **தரிசனம்** அல்லது **மார்க்கம்** அல்லது **நல்லறம்** எனப் பெயர்பெறக் கூடிய சூழல் உருவாயிற்று. "எல்லா மதங்களும் உண்மைதான்; ஒரு மதமும் முழு உண்மையன்று. ஆதலால் மதப் பிரிவுகளைக் கருதி மனிதர் பிரிந்துவிடக் கூடாது. எல்லா மதத்தினரும் ஒரே தெய்வத்தை (பரம்பொருளை) வணங்குகிறார்கள். லௌகிக விஷயங்களைப் போலவே மத விஷயங்களிலும் ஒப்பு, உடன் பிறப்பு, விடுதலை மூன்றும் பாராட்ட வேண்டும்"[1] என்று **மகாகவி பாரதியார்** குறிப்பிடுவது ஈண்டு இயைபுடன் சிந்திக்கத் தகும். இதனால், மதவாதிகள் **தம்தம் மதமே சிறந்தது எனக் கூறுவது 'யானை கண்ட குருடர்கள் கதை'யையே நினைவு படுத்துவதாகும்.**

மானுடன் காட்டுமிராண்டியாக இருந்து, படிப்படியே பழைய கற்காலம், புதிய கற்காலம், உலோகக் காலம் முதலிய காலங்களைக் கடந்து, இன்றைய அறிவியற் காலம் கண்டது வரையில் எத்தனையோ சிந்தனைகளுக்கிடையே அலைமோதிய நிலையில் பல உண்மைகளைக் கண்டுள்ளான். அவ்வாறான உண்மைகளுள் சில, மதமெனும் பெயருடன் நம்மிடையே காணப்படுகின்றன.

இந்தியப் பெருநாட்டைப் பொறுத்த வரையில் நாட்டின் உயிரோட்டம் அல்லது ஆன்மா, மதங்களின் உள்ளார்ந்த பொருண்மையிலும் நெறிமுறைகளிலுமே உள்ளது என்பது

1 பாரதியார் கட்டுரைகள் (வானதி பதிப்பகம், 1981), பக், 43

ஆன்றோர்களின் அனுபவத் தெளிவாகும். உலகில் மதங்கள் பலவாகக் காணப்படினும் சில மதங்களே உலகளாவிய பெருமையைக் கொண்டுள்ளன. அவற்றுள் **இந்துமதம், இசுலாம் மதம், யூதமதம், கிறித்துவ மதம், கன்பூசியம், பௌத்தமதம், பார்சிமதம்** குறிப்பிடத்தக்கவையாகும்

மதம் என்பது மக்களின் மனநலத்திற்காகவும், சமுதாய நலத்திற்காகவும், உலக மேம்பாட்டிற்காகவும், ஆன்மநல மேம்பாட்டிற்காகவும் தோன்றிய ஒருவகைப் பண்பாட்டு அமைப்பாகும். நாகரிகத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் மத நம்பிக்கையும் ஆன்மநல விழிப்பும் பிடிப்பும் அடிப்படையாகும். "ஒரு நாகரிகத்தின் நடை அதன் மதப் புலப்பாட்டில் உள்ளது" (A civilisation's style is the expression of its religion)[1] என **ஆர்னால்டு டாயின்பி** குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

மதம் என்பதற்குக் கொள்கை, மார்க்கம், வழிநெறி, தரிசனம், கோட்பாடு எனப் பல பொருள் அமைவதைக் கண்டோம். மதம் என்பதைச் சமயம் எனக்கொண்டு, மதமும் சமயமும் ஒன்றெனவே கருதிப் பலர் எழுதியும் பேசியும் வருவது நடைமுறையில் காணக் கூடியதே. சான்றோர் பலரும் இவ்வாறு கருதினாலும், **பயில்வோர் தெளிவிற்காக மதம் என்பது விரிந்த பொருண்மை கொண்ட அகலச் சொல்** (Broad term) **எனவும், சமயம் என்பது மிகவும் வரையறுத்த பொருண்மை கொண்ட குறுகல்** (வரையறுத்த) **சொல்** (Narrow term) **எனவும் கொள்ளுதல் ஏற்புடையதாகும்**. இதற்கு இயைபாக **வடலூர் வள்ளற்பெருமான்**, "சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே"[2] எனப் பாடிச் செல்கையில் **மதத்தையும், சமயத்தையும்** தனித் தனியே பிரித்துக் காட்டுதலைக் காண்க. இவ்வாறான இயைபுடன் சிந்திக்கும்போது இந்து மதத்தில் சைவம், வைணவம், சாக்தம் முதலிய சமயங்கள் இருத்தலைக் காண்க. இந்நூலில் இத்தகைய வரையறை கொள்வது தேவைப்படுகிறது.

மதம் என்பது ஆறறிவு படைத்த மக்கள் இறைவனைத் தேடி நாடும் ஒருவகை வாழ்வியல் நெறி; எனவே இறைத்

1 Hindu (Daily News Paper), 14-1-1986

2 திருவருட்பா, 5566 (6, 133, 1)

தொடர்பு கொண்டதே மதம் என்றும், இறைவனின் பேராற்றலையும் பேரறிவையும் பேரருளையும் நினைத்து மானுடன் ஓங்கும் உள்ளப்பண்பும் ஓங்கி நிற்கும் உள்ளத்திற்கு இறைவன் காட்டும் அருள்பாலிப்புமே மதம் என்றும் கூறுவர். அது நிற்க, அறக்கோட்பாடுகளையே உயிரோட்டமாகக் கொண்டு **கடவுளைப் பற்றி நம்பிக்கை கொள்ளாத வாழ்வியல் நெறிகளெல்லாம் கோட்பாடுகளே** (Concepts) **அன்றி மதங்கள் எனக் கருதத் தக்கவையல்ல என்பதையும் கூறி வருகின்றனர்.** இந்தியத் தத்துவஞான அடிப்படையில் கூறப்பெறும் **ஆத்திக மதங்கள்** (Orthodox religions), **நாத்திக மதங்கள்** (Hetrodox religions) ஆகிய பாகுபாடுகளை ஈண்டு மனத்துட் கொள்வோம்.

பொதுவாக மதங்களிலே **கோட்பாடுகள், சடங்குகள் ஆசாரங்கள்** முதலியவை கூறப்படும். நாத்திக மதங்கள் கோட்பாடுகளை விடாப்பிடியாகக் பிடித்துக் கொண்டு உலகில் தம் தனித்தன்மையையே நிலைநாட்ட முற்படலாம். எடுத்துக் காட்டாகக் கொல்லாமை நெறி எனும் கோட்பாடு சமண மதத்திற்கு இருத்தலைக் காண்க.

ஆத்திக மதங்கள் சடங்குகளை விரிவாகக் கொண்டு அவற்றைப் பின்பற்றுதலில் ஆசாரங்களை அழுத்தமாகக் கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக **அர்ச்சை நெறி** (கடவுட் சிலையில் திருமாலின் இருப்பினைப் போற்றியிருத்தல்) எனுங் கொள்கை வைணவ மதத்திற்கு இருத்தலைக் காண்க

நமக்காக விதிக்கப்பட்டுள்ள கொல்லாமை நெறியையோ அர்ச்சை நெறியையோ அதிதீவிர நிலையில் கடைப்பிடித்தல் மட்டும் மதமாகாது; மதச்சடங்குகளையே உயிரோட்டமாகக் கொண்டு பின்பற்றுவதும் மதமாகாது. இவையெல்லாம் படி நிலைகளேயல்லாமல் மதங்களின் முடிந்த குறிக்கோளாகி விடா.

நம் உள்ளார்ந்த இயல்புகளை **உள்ளொளி நாட்டத்துடனும் உலக நலக் குறிக்கோளுடனும் புதுப்பித்துக் கொள்வதில்தான் மதத்தின் உயிர்நாடியுள்ளது.** அஃதாவது, நம் இயல்பையே மிகவுயர்ந்த குறிக்கோளுக்காக உருமாற்றிக் கொள்வதில்தான் மதத்தின் ஆயுள் நீட்டிக்கப்படும்; அதுவே இக்காலத் தேவை

யாகும். இதனைப் பல்வேறு கோணங்களில் ஒரு சிறிது ஆராய முற்படுவோம்.

1.2 மதங்கள் தோன்றிய காலம்

உலகில் மக்களின் நாகரிக உயிரோட்டமாகிய பண்பாட்டின் ஒரு சிறப்புக் கூறாகத் தோன்றி, உலக நாட்டத்தைப் பெற்றுள்ளது மதமாகும். அஃது அன்பில் முகிழ்த்து, அறிவியலில் பக்குவப்பட்டு, அருளியலாகக் கனிந்து, நாட்டு நலத்துக்குப் பயன் நல்க வல்லது; **தத்துவத்தாலும், சடங்காலும், அனுட்டானத்தாலும்** உணரப்படும். அதன் பெருமையைவிட, அது வலியுறுத்தும் மக்கட் பண்பெனும் **உயிரிரக்கத்தாலும் தொண்டாலுமே** அதன் பெருமை சிறக்கிறது; இது வரலாற்று அனுபவ உண்மையாகும். இத்தகைய பெருமைக்குரிய மதத்துக்கு உலகமே வளாக நிலைக்களமாகும். எனவே, அதற்கு நாடு, இனம், சாதி, மொழி முதலிய வரையறுக்கும் எல்லைகள் இருப்பதற்கு நியாயமில்லை. ஆனால், மதங்களின் பரிணாம வளர்ச்சியில், மதத்தினரால் அவற்றுக்கு இடமுண்டாகிவிட்டது.

நாட்டு நடப்புகளுக்கு வரலாறு காண்கின்ற போக்கிலே ஒவ்வொரு மதத்துக்கும் இயன்ற அளவு வரலாறு வரையப்பட்டுள்ளது. உலக நோக்கில் ஆராய்கின்றபோது எண்ணிறந்த மதங்கள் தோன்றியுள்ளன என்பதும், அவற்றில் சில மதங்கள் பிற மதங்களோடு இணைந்து விட்டன என்பதும், சில மதங்கள் தடம் தெரியாத அளவில் அழிந்துவிட்டன என்பதும் வரலாற்றால் புரிந்து கொள்ளலாம்.

உலகில் நிலவும் பல்வகை மதங்களுள் **மிகத் தொன்மை வாய்ந்த மதமாகப் பீடுநடையுடன் இயங்கிவருவது இந்து மதமே** என்பது அறிஞர்களின் கருத்து. எத்தனையோ பிறநாட்டுப் படையெடுப்புக்களுக்கும், பிற மதத்தவர்களின் தொல்லைகளுக்கும், பிற அரசியல் ஆதிக்கங்களின் கொடுமைக்கும், ஆட்பட்ட நிலையிலும் இந்துமதம் வலிவுடனும், பொலிவுடனும் விளங்கி வருவது கண்டு உலகமே வியக்கிறது. காரணம், ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட ஒருவரால் இந்துமதம் தோற்றுவிக்கப்பட்டது என யாராலும் கூறுதற்கு இயலாது.

வாழையடி வாழையென வந்த திருவருட்செல்வர்களால்- மகரிஷிகளாகிய மாமுனிவர்களால் - உலக நன்மை கருதித் தம் சிந்தனைக் கட்டுக்கோப்பால் அமைக்கப்பட்டதே இந்து மதமாகும். வானில் இயங்கும் மின்சாரத்தைப் பார்த்த அளவில் நின்றுவிடாமல் அஃது அறிவியல் முறையான முயற்சி மேற்கொண்டது. மண்ணியல் வாழ்க்கையின் வசதிகளுக்கான மின்சாரம் அந்த அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டது. பிறகு அறிவியலாராய்ச்சியின் தொடர்முயற்சிகளால் பல கூறுகளில் பயன்பாட்டளவில் மின்சாரம் உருவாக்கப் பெற்றுள்ளது. இத்தனை மின்சார வசதிகளுக்கும் அறிவியலாளர் பலரின் பெரு முயற்சியே காரணமாகும். இதை விடுத்து, ஒருவரே அனைத்தையும் சாதித்தவர் என்பது பொருந்தாது. அதுபோலவே, இந்து மதக் கொள்கைகளையெல்லாம் ஒருவரே உருவாக்கினார் என்பதும் பொருந்தாது.

நடைமுறைச் செல்வாக்குடன் திகழும் சில மதங்களையும் அம்மதங்களை மக்களிடையே தோற்றுவித்த நாயகர்களையும் இயைபுடன் சிந்திக்கையில், மதங்கள் தோன்றிய காலம் வரலாற்றால் தெளிவாகும். அவ்வாற்றான் சில குறிப்புக்களைக் கீழே காண்க.

மதத்தின் பெயர்	**தோற்றுவித்தவர்**	**தோன்றிய காலம்**
யூதம் (கிறித்துவமும் இசுலாமியமும் கலந்து உருவானது)	ஆபிரகாமும் மோசசும்	கி.மு. 1500-1200
ஷிண்டோயிசம்	ஷிண்டோ (Shinto)	கி.மு. 660
சொராஸ்ட்ரியனிசம்	சொராஸ்ட்ரர் (Zoroaster)	கி.மு. 604
டாவோயிசம்	டாவோ (Lao-Tze)	கி.மு. 604
சமணம்	மகாவீரர்	கி.மு. 599
பௌத்தம்	கௌதமபுத்தர்	கி.மு. 560
கன்பூசியம்	கன்பூசியசு	கி.மு. 551
கிறித்துவம்	இயேசுகிறித்து	கி.பி. 4
இசுலாமியம்	முகம்மது நபிகள் நாயகம்	கி.பி. 570
சீக்கியம்	குருநானக்	கி.பி. 1469

மதங்கள் பலவற்றையும் ஒப்பீட்டு நோக்கில் சீர் தூக்குகையில், கிறித்துவம் முதலிய பலவும் தனிப்பட்ட அருளாளர் அல்லது **நிறுவியவர் வாழ்க்கையையும் வாழ்வியலடிப்படையான போதனைகளையுமே** உயிர்க் கோட்பாடுகளாகக் கொண்டு விளங்குதலையும், **இந்துமதம் மட்டும்** தனிப்பட்ட அருளாளரையோ நிறுவியவரென வரையறுத்த ஒருவரையோ கூறவியலாத நிலையில் **தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.**

1.3 மதங்களும் மறைகளும் - பொதுப்பார்வை

உலகத்தில் பல்வேறு பகுதியிலுள்ள மக்களுக்கும் இயைந்த முறையில் வாழ்வியல் செந்நெறிகளாக மதங்கள் தோன்றியுள்ளன எனக் கண்டோம். மக்கள்தம் வாழ்வைச் செம்மையாக்கிக் கொள்ளும் வகையிலும், அறக்கோட்பாடுகளை உணர்ந்து செய்வனவற்றையும் தவிர்வனவற்றையும் உணர்ந்துகொள்ளும் வகையிலும், ஒவ்வொரு மதத்தின் கொள்கைக்கு அரணாக அமைந்த மறை அல்லது வேதம் இன்றியமையாச் சிறப்பினதாக உணரப்பட்டது. அந்நிலையில் ஒவ்வொரு மதத்துக்கும் வேத மார்க்கம் என்பது ஜீவநதி போன்றதாக அமைந்தது.

இந்துமதத்துக்கு **இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்** ஆகிய நான்கும் மறைகளாகவும், கிறித்துவ மதத்துக்கு **பைபிள்** மறையாகவும், இசுலாமிய மதத்துக்குக் **குர்ஆன்** மறையாகவும், பார்சி மதத்துக்கு **அவெஸ்தா** மறையாகவும், பௌத்தமதக் கோட்பாட்டிற்குத் **தம்மபதம்** மறையாகவும், சமணமதக் கோட்பாட்டிற்கு **ஐந்திரம்** மறையாகவும், சீக்கிய மதத்துக்கு **ஆதிகிரந்தம்** மறையாகவும் போற்றப்பெறும். வேத ஞானத்தை நிறைஞானம் என்றே நம்புவது மதத்தைப் பின்பற்றுவோர் கடப்பாடாயிற்று. ஈண்டு இந்து மதத்திற்கு உயிர்நாடியாக விளங்கும் மறைகள் பற்றிச்சிறிது காண்போம்.

ஞானக் களஞ்சியமாகிய வேதங்கள் இந்து மதத்தைப் போன்று வரையறுத்துக் காணவியலாத தொன்மை வாய்ந்தவை. வேதங்கள் இந்து மதத்துக்கு ஆணிவேர் எனின், அவற்றின் தொடர்புடைய உபவேதங்கள், வேதாந்தங்கள், ஸ்மிருதிகள் அல்லது அறநூல்கள், உபஸ்மிருதிகள், இதிகாசங்கள், புராணங்கள், உபபுராணங்கள், சாத்திரங்கள், தரிசனங்கள் முதலியவை

இந்து மதமெனும் மரத்துக்கு ஊட்டஞ் சேர்க்கும் பாகங்களாகும். இந்து மதத்தில் பல்வேறு மொழியினருக்கு ஒப்ப வேத அணுகு முறைகள் உண்டு. எடுத்துக் காட்டாகத் தமிழர்க்குத் **திருக் குறளே** உத்தர வேதம் என்றும், **திருக்குறளும் திவ்யப்பிரபந்தங் களும்** வேதங்கள் என்றும் பாகுபடுத்திக் கூறுதலையும் இயைபுடன் சிந்திக்கலாம். இத்தகைய தொடர்பில் வைணவப் பேரருளாளர் நம்மாழ்வார் **'வேதம் தமிழ் செய்த மாறன்'** என்று அழைக்கப்படுதலை ஈண்டு நினைவிற் கொள்ளலாம்.

முதற்கண் பொது நோக்கில் இந்து மதத்துக்கெனத் தோன்றிய வேதங்கள் பற்றிச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

முக்திகோபனிடதத்தில், இராமச்சந்திரமூர்த்தி அனுமனுக்கு உபதேசிக்கையில், "வேதங்கள் மகாவிஷ்ணுவின் மூச்சுக்காற்றின் வழியாக வெளியே வந்தவை" (அத். 1-9)[1] எனும் பொருண்மை யில் வடமொழியில் குறிப்பிட்டுள்ளார் என்பர். "ஆகாசத்தில் மிதந்து வந்த அவ்வேத சப்தங்களைச் சிருட்டிகர்த்தாவும் ஆதி பிதாவுமாகிய **பிரம்மதேவன்** தன் காதால் கேட்டு அவற்றைத் தனது மானசீக புத்திரர்களான **மரீசி, வசிட்டர், நாரதர்** முதலியோர்க்கு உபதேசம் செய்தார். அவர்கள் தம் சீடர்களுக்கு உபதேசித்தனர். இப்படி ஒருவர் சொல்லிப் பலர் கேட்டுத் தெரிந்து கொண்டு வந்ததால் வேதங்களைச் **சுருதிகள்** என்று அழைக்கிறோம்"[2] என வருங் குறிப்பு மனங்கொள்ளத் தக்க தாகும்.

இந்து மதத்தில் புராண அடிப்படையில் கலைக் கற்பனை விரிந்து விரிந்து சென்ற காரணத்தால் தெய்வநலத் தொடர் புடைய வேதம் முதலிய பலவும் கற்பனைக்கு இடந்தந்து காணப்பட்டன.

வேதம் பயில்கையில் பொருள் நோக்கில் உரிய சந்தத்துடன் மொழிதல் வேண்டும். நினைவாற்றலுடன் காக்கப்பெற்ற சுருதியாகிய **வேதம் சுவடிகளில் பின்னரே எழுதப்பட்டது** என்பர். அத்தகைய வேதம் சடப்பொருள் என்பது தெளிவு; எனினும் மக்களிடையே உயிர்ப்பொருளாகவும் தோற்றுவதற்குரிய வகையில் புராண நிகழ்ச்சிகள் அமையலாயின.

1 & 2. அம்மன் தரிசனம்: செப்டம்பர், 1991

பொதுவாகச் சிவபிரான் தன் காலுக்கணியும் **சிலம்பாக** மறைகள் கருதப்படும். ஆனால், அவனே திரிபுரசங்கார காலத்தில் தன் தேருக்குப் பூட்டும் உயிர்ப்பொருளாம் **குதிரைகளாக** நான்மறைகளைக் கொண்டான்; அவனே வேடுவனாகத் தோன்றி அருச்சுணனுக்குப் பாசுபத அத்திரம் வழங்குஞ் சூழலில் **வேட்டை நாய்களாக** நான்மறைகளைக் கொண்டான்.

சிவபிரானைத் திருமறைக் காட்டில் மறைகளே பூசித்து வணங்கியுள்ளன. தாம் பூசித்து வழிபட்ட திருக்கோயிற்கதவினை மூடிவிட்ட காரணத்தால் அடியார்கள் நேரே இறைவன் திருமுன்னர்ச் செல்ல இயலாமல் துன்பப்பட்டனர். கோயிற் கதவு அவ்வாறு மூடப்பட்ட நிலையில், திறக்கவும் மூடவுமான பொறுப்பினை - வழக்கத்தினை - மீட்டுத்தந்த அருட்செல்வர்கள் **அப்பரும் சம்பந்தரும்** என்பது **பெரிய புராணத்தால்** அறியலாகுஞ் செய்தியாகும்.

வேதங்களை அருளிய சிவபிரானையே **வேதம், வேதப்பொருள், வேதகாரணன்** என்றெல்லாம் அழைப்பர். சிவனுக்குக் கோயிலெடுப்பது சைவசமயத்தினருக்கு இயல்பாக ஏற்படும் ஆர்வமும் கடமையுமாகும். சிவனுக்குக் கோயில் அமைப்பது, போலவே தமிழ்நாட்டில் திருவாரூரில் **வேதங்களுக்கும் கோயில்** அமைத்திருக்கின்றனர் என்பது வியக்கத்தக்க செய்தியாகும்.

யோக நெறியில் இயங்கிய சுந்தரமூர்த்திகளுடன் பெரிதும் தொடர்பு கொண்டது திருவாரூர்த்தியாகேசர் கோயில். எனவே இத் தலத்தினைச் சிவயோகத் தலமாகவே கொள்வர். "வேதங்களுக்குத் தனிக்கோயில் இக் கோயிலில்தான் உண்டு. வேதம் என்பது யோக நெறியிடைப் பயிற்சியாகவும், சடங்காகவும், மந்திரஒலி (நாதம்) ஆகவும். கொள்கையாகவும் விளங்கும் நான்கு தன்மையுடையது. இதனால்தான் யோகக் கோயிலாகிய ஆரூரில் வேதங்களாகிய யோக நூல்களுக்குக் கோயில்கள் உள்ளன"[1] என **டாக்டர் அ. அறிவொளி** எழுதிச் செல்வது சிந்தித்துப் போற்றற்குரியதாகும்.

வைணவச் சமய மரபுகளை ஆராய்ந்தால், திருமாலுக்கு **வேதங்கள் கருடாழ்வாராகத்** தோன்றி ஊர்தியாகப் பயன்படு

1. அருள்மிகு தியாகராஜசாமி திருகோயில் (திருவாரூர்) திருக்குடமுழுக்குப் பெருவிழாமலர் . 1988, பக். 83

தலையும், அவருடைய **கொடியில் கருடத் திருவுருவமாகப்** பயன்படுதலையும் காணலாம்.

இத்தகைய பெருமை பல கொண்ட வேதங்களின் சிறப்புக் கூறுகள் ஆராய்ந்து தெள்ளிதின் உணர்ந்து கொள்ள வேண்டுவது இந்தியக் குடிமக்கள் எல்லோருக்கும் கடமையேயாகும்.

வேதங்களின் இயல்பையும் நோக்கையும் பயனையும் சிந்தித்துப் பார்த்தால் அவை, இந்தியத் துணைக் கண்டத்தில் மக்களிடையே எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன என உணர்ந்து கொள்ளலாம்.

இந்துமதம் எனும் நிலையான பெரிய மாளிகைக்கு அடிப் படையான அறங்களையும் நீதிகளையும் தத்துவங்களையும், பிரார்த்தனைகள் விளக்கவுரைகள் ஆகியவற்றின் வாயிலாகப் போதிப்பவையே நான்மறைகளெனும் வேதங்களாகும். இக்கால ஆரவாரச் சூழலுக்கும் எந்திரயுகத்துக்கும் அவை பொருந்தி வருமோ என்ற வினா பலர் மனத்தில் எழக்கூடும், இன்னும் எத்தகைய முன்னேற்றங்கள் மக்கள் காண நேர்ந்தாலும் அந்தச் சூழலிலும் நிலையான உண்மைகள் தனிப்பட்டோர்க்கும் மனையறத்திலுள்ளோர்க்கும் துறவியர்க்கும் பயன்படக்கூடியவை வேதங்களாகும்; அவை வீட்டளவிலும் நாட்டளவிலும் உலக அளவிலும் துன்பங்களைக் குறைத்து மேலான வாழ்க்கைக்கு அறிவுபூர்வமான அணுகுமுறைகளை வகுத்துள்ளன.

வாழ்க்கையிலே பல்வேறு காலகட்டங்களிலும் மானுட வாழ்வில் நம்பிக்கை வைக்கவே வேதங்கள் தோன்றின. சில சூழ்நிலைகள் காரணமாகத் துன்பங்களைத் தவிர்க்கும் பொருட்டுச் சமுதாயத்தை விட்டு ஓடிப்போய்த் துறவு மேற் கொள்ள அவை தூண்டுவதாகச் சிலர் கருதுகின்றனர்: அது தவறு. மக்களின் மனப்பக்குவத்தைப் பொறுத்தே இல்லறமும் துறவறமும் ஊழ்வயப்பட்டு அமைகின்றன. மக்கள் தம் முயற்சியில் பெரிதும் ஈடுபாடு உடையவர்களாக இருக்க வேண்டுமென்பது நியாயமே. எனினும், ஊழின் வலிமையையும் உணர்ந்து அதற்கேற்பவே திருவருளிடம் தம்மை ஒப்படைத்த நிலையில் வாழ்வியல் போக்கு களை மக்கள் அமைத்து வருகின்றனர். ஊழின் இயல்பினைக்

குறிப்பிடும் தமிழிலக்கியங்களாலும் இதனைத் தெளியலாம். எடுத்துக்காட்டாகத் **திருவள்ளுவர்,**

> "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான்முந் துறும்"[1]

எனும் **பொய்யாமொழியையும், கணியன் பூங்குன்றன்**

> "......... மின்னொடு
> வானந் தண்டுளி தலைஇ யானாது
> கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
> நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
> முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
> காட்சியில் தெளிந்தனம்........."[2]

எனும் **புறநானூற்றுச்** செய்யுட் பகுதியையும், **கம்பநாட்டாழ்வார்,**

> "நதியின் பிழையன்று நறும்புன லின்மை யற்றே
> பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாள்
> மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
> விதியின் பிழைநீ இதற்கு என்னை வெகுண்டது
> என்றான்"[3]

எனும் **இராமாயணச் செய்யுளையும்** இயைபுடன் சிந்திக்கலாம்.

வைணவச் சமய மரபுகளை ஆராய்ந்தால் திருமாலுக்கு வேதங்கள் கருடாழ்வாராகத் தோன்றி வாகனமாகப் பயன் படுதலையும், அவருடைய கொடியில் தோன்றும் கருடத் திருவுருவமாகப் பயன்படுதலையும் குறிப்பாகக் கண்டோம். திருமாலுக்குப் பெரிய திருவடியாகிய **கருடாழ்வாரே வேதவடிவம் எனக் கருதுவது கொண்டு வேதத்திற்கு வைணவச்சமயத்தில் தரப்படும்** ஏற்றமும் **தோற்றமும் புலப்படும்.**

மதங்கள் பலவும் ஆறுகளாகப் பரம்பொருளாகிய பெருங் கடலை அடைகின்றன என்பதைச் சமய ஞானியர் கூறிவருதலைக்

1. குறள், 380
2. புறநானூறு, 192, 6.11
3. அயோத்தியா காண்டம். நகர்நீங்கும்படலம். 130

கண்டோம். ஒவ்வொரு மதமும் பெரிய நீர்நிலையாக உருவகிக்கப்படுகையில், ஒவ்வொரு கிளைச் சமயமும் கரையாக உருவகிக்கப்படும், இதனைச் **சேக்கிழார் சுவாமிகள்** திருத்தொண்டர் புராணத்தில்,

''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க''[1] எனக் கூறிச்செல்வதால் உணரவாம்.

வேதங்களைக் கருவியாகக் கொண்டு இந்துமதம் தன் தாக்கத்தை மக்களிடம் கொண்டுள்ளதால், வேதவழிப்பட்ட சடங்குகளெல்லாம் மக்களின் வாழ்வியலில் பிறப்பிலிருந்து இறப்புமுடிய, ஒவ்வொரு கட்டத்திலும் ஆட்சி செலுத்தி வருகின்றன.

வேதங்களை ஓதியும் ஓதுவித்தும் வாழ்வியலை நடத்துகின்ற வேதியர் வாழ்விலே மட்டுமன்றி, அரசர், வணிகர், வேளாளர் ஆகிய வருணத்தாரின் வாழ்வியலிலும் **வேதங்கள் விதித்திடும் கிரியைகள்** நிரம்ப இடம் பிடித்துள்ளன.

வணிகர்குலத் தோன்றலாகிய **கோவலன், கண்ணகியைத் திருமணம் புரிந்த நிகழ்ச்சி** வேதவிதிப்படி அமைந்ததேயாகும். இதனை **இளங்கோவடிகள்,**

''முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன
பணிலம் வெண்குடை
அரசெழுந்ததோர் படியெழுந்தன அகலுள் மங்கல
அணி யெழுந்தது
மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியம் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது **பார்ப்பான் மறைவழி காட்டிடத்**
தீவலம் செய்வது காண்பார்கள் நோன்பென்னை''[2]

எனக் கூறிக் காட்டுதலால் உணரலாம்.

1. திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம், 1
2. சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்துப்பாடல், 46.52

2. இந்துமதம் - விளக்கமும் தத்துவமும்

இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றில் மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்ட மதங்கள் பலவாக இருப்பினும், இந்துமதம் தன் ஆன்மநல ஆதிக்கத்தைப் பன்னெடுங் காலமாகச் செலுத்தி வருகிறது. இந்நாட்டில் தோன்றிய சமுதாயச் சீர்திருத்தங்களும் அவை தொடர்பான ஆன்மிக இயக்கங்களும் பொதுவாக மதத் தொடர்புள்ளவையாகவே இருக்கின்றன. இந்நிலையில் வாழ்வொடு ஒட்டிய இந்து மதத்தைப் பின்பற்றும் ஒவ்வொருவனும் இந்துவாகவே அழைக்கப்படுகிறான்; ஒவ்வொரு நாள் வாழ்வும் மதத்துடன் பின்னிப் பிணைந்த சூழலில் ஒவ்வொரு பருவத்திலும் ஏதாவது ஒரு சிறப்பினைக் குறித்துச் சடங்கினைச் செய்து கொண்டு மன நிறைவு கொள்கிறான். சமயத் தொடர்பான சில மரபுகளைச்-சடங்குகளைச் - செய்ய மறுத்தால் நாத்திகனாகக் கருதப்படுகிறான். ''சமயம் ஒரு கோட்பாடு அன்று; அது ஒரு வாழ்க்கை முறை'' என்று கூறிய **டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்** கருத்தும், 'சமுதாயத்தில் இந்தச் சமயத்தின் தொடர்பைத் தினசரி சமூக உறவுகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம்' என விளக்கிய **காந்தியடிகள்** கொள்கையும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை. இவற்றால் மதத்திற்கும் சமுதாயத்திற்குமுள்ள நெருக்கமான உறவு புலப்படும்; சமுதாயத்தின் ஒரு சிறப்பு அங்கமான **இந்துமதம்** தன்னிடையே பணிபுரியும் கிளைகளாகிய பல சமயங்களுடன் திகழ்கிறது என்பதும் தெளிவாகும்.

இந்தியப் பெருநாட்டின் போற்றுதலுக்குரிய நாகரிகத்தையும், அதன் சமயப்பண்பாட்டுக் கூறுகளையும் உருவாக்கிக் கடந்த 5000 ஆண்டுகளாக அவற்றைத் திட்பத்துடன் இயங்கச் செய்த பேராற்றல் இந்து மதத்திற்கு உள்ளது. இக்காலத்திலும் மக்களிடையே ஆன்ம நலப்பிணைப்புச் சக்தியாக நெஞ்சங்களை ஒன்றுபடுத்தி, நாட்டின் பண்பாட்டுப் பெருமையையும் நாகரிகப் பெருமையையும் அயல்நாட்டுப் படையெடுப்புக்களிலிருந்தும், வலிய முறையில் நடைபெற்ற மத மாற்றங்களிலிருந்தும் காப்பாற்றியுள்ளது இந்து மதத்தின் உயிரோட்ட ஆற்றலே யாகும்.

இந்து மதத்தின் ஆற்றலுக்குக் காரணம், அது **சத்தியம்** (உண்மை) **சிவம்** (அன்பு) **சுந்தரம்** (அழகு) ஆகியவற்றில் வேரூன்றிய நிலையில், **மனம் மொழி செயல் ஆகியவற்றின் தூய்மையிலே** இயங்குவதை வலிவுறுத்துவதேயாகும்.

கிரியா மார்க்கத்தில் **வேள்வி** பல வகைகளில் மக்களுக்கு நலம்பயக்கும் என்பது இந்து மதத்தில் தொன்மைக் காலத்திலிருந்து வலியுறுத்தப்படும் கோட்பாடாகும்.

3. இசுலாம்மதம்—விளக்கமும் தத்துவமும்:

'**இசுலாம்**' என்ற சொல்லின் பொருள் 'அமைதி' ஆகும். இசுலாம் மதத்தினருக்கு **அல்லா** எனும் கடவுளிடமும், **நபிகளிடமும்** (இறைத்தூதர்களிடமும்) பெரிதும் நம்பிக்கையுண்டு. ஓரிறைக் கொள்கை (**Mono-theism**) என்பது அம்மதத்தின் உயிரான கோட்பாடாகும். அல்லாவின் சமயத் தூதுவர்களாக நபிமார்கள் பலர் தோன்றினர் என்றும், அவர்களுள் ஒருவரே **நபிகள் நாயகமாகப்** போற்றப் பெறும் **முகம்மது(ஸல்)** என்றும் கூறுவர். இசுலாம் மதத்துக்கு வரன்முறையான விதிகள் வகுத்துத் தந்தவர் முகம்மது நபிகள் ஆவார்.

பல்வேறு கடமைகளை இசுலாம் எடுத்துக் கூறினும், **பணிவுடைமை**, அருளாளர்களுக்குக் **கீழ்ப்படிதல்**, **அடக்கம்**, **மரியாதையுடன்கூடிய தொழுகை**, **தூய்மையுடையதாகிய நற்பண்பு**, **உண்மை**, **விருந்தோம்பல்** ஆகியவற்றைச் சிறப்பாக வலியுறுத்திச் செல்லும். எல்லா வல்லமையுடைய அல்லாவைக் காட்டிலும் மேற்பட்ட சக்தி இவ்வுலகத்தில் வேறில்லை என்பது இசுலாமிய நம்பிக்கை. உருவமில்லாதவர் 'அல்லாஹ்' என்பதும், **மானுட உருவிலோ வேறு எவ்வுருவிலோ அவர் பூமியில் இறங்கி வருவது (அவதாரமெடுப்பது) இல்லை என்பதும் மதக் கோட்பாடாகும்**. எனவே, அல்லாவையோ நபிகள் பெருமானையோ உருவ அமைப்பில் காட்டவே கூடாது என்பது உறுதியான நம்பிக்கை.

குர்ஆன் இசுலாம் மார்க்கத்தின் வேதம். இதனைத் தம் வாக்காகச் சொல்லாமல், கடவுளுடைய திருவாக்கே தேவ தூதரின் வாயிலாகத் தமக்குக்கிட்டிய நிலையில் அதனைப்புலப் படுத்துவதாகக் கூறிச்சென்றுள்ளார் நபிகள்நாயகம். அஃதாவது.

அவர் தம்மையே அல்லாவுக்கு வாய்த்த ஒருவகைக் கருவியாகக் கருதிக்கொண்டு வேதவாக்கை அருளிச் சென்றுள்ளார். எனவே, முகம்மது நபிகள் அருளிய போதனையே இசுலாம் மதச் சார்பாக இசுலாமியரை வாழ்வித்துக் கொண்டிருக்கிறது. அவ்வாற்றான் மதக் கோட்பாடுகள் சிலவற்றைக் காண்போம்.

"அல்லாவைத்தவிர வேறு அல்லா இல்லை (லா இலாஹா இல்அல்லா). அவர் நம்மைப் போல் தோலுடம்பும் கைகால் முதலிய உறுப்புக்களும் உடையவரல்லர். அவரைச் சிலைகள் வைத்துத் தொழுவதிலும் அவருக்கு உங்களுடைய ஆகாரங்களை நைவேத்தியம் பண்ணுவதிலும் பயனில்லை. அவர் எல்லாவற்றையும் படைத்து எல்லாவற்றையும் தம்முடைய ரூபங்களாகவும் உடையவர்; அறிவு வடிவமாக நிற்பவர்; அருள் வடிவமாக நிற்பவர். அவரை மனமாகிய கோயிலில் நிறுத்தி, வீரியம் பக்தி என்ற பூக்களால் அருச்சிப்பதே சரியான முறையான வழிபாடு. இடைவிடாமல் அசையாமல் அவரிடம் தீராத மாறாத பக்தி செலுத்துங்கள் அவ்விதமான பக்தி இஸ்லாம் என்று சொல்லப்படும். இந்த இசுலாமைத் தரித்திருப்போர் நித்தியானந்த வாழ்க்கையாகிய முத்தி வாழ்க்கையை எய்துவார்கள். ஆதலால், நீங்கள் புராதனக் கிரியைகளையும் கொள்கைகளையும் விட்டுவிட்டு என் மதத்தில் சேர்ந்து அல்லாவின் திருவடி நீழலை அடைந்து வாழ முற்பட்டு வாருங்கள்"[1] என்று முகம்மது நபியாண்டவர் திருவாய் மலர்ந்தருளியதாகத் **தேசிய கவி பாரதியார்** எழுதிக் காட்டுகிறார்.

மேலும், இசுலாமியக் கோட்பாட்டை விளக்குகையில், "சைதன்யம் அல்லது சுத்தமான அறிவே கடவுளின் மூலரூபம். மனிதருடைய சாதாரணச் செயல்கள் யாவுமே கடவுளின் செய்கைகளேயன்றி வேறில்லை. எனினும் ஜகத்தில் ஞானமயமான கடவுள் எங்கும் நிரம்பிக் கிடப்பதை நேரே ஒருவன் கண்டபிறகு, அந்த மனிதனுடைய செயல்களில் பல, கடவுளின் நேரான கட்டளையின்படி செய்யப்படுகின்றன. அப்படிப்பட்ட நிலைமையை எய்தின மனிதனை **நபி** அல்லது **தீர்க்கதரிசி** என்கிறோம். அப்பால் அல்லா, எப்போதுமே ஒருவனுடைய ஹிருதயத்தில் அந்தக்கரணத்துக்கு நன்றாக விளங்கும் வண்ணம் குடிபுகுந்து, கற்றறிந்தவனுடைய அறிவு முழுவதையும் தாம்

1. பாரதியார் கட்டுரைகள் (வானதி பதிப்பகம்) 1981, பக் 67-68

விலைகொடுத்து வாங்கிய கருவிபோல ஆக்கிக்கொண்டு புறச் செயல்களும் உலகத்தாருக்கு வழிகாட்டிகளாகும்படி **பரிபூரண சைதன்ய** நிலையிலே நடத்திக் கொண்டு வரத்திருவுருப் பற்று வராயின், அப்படிப்பட்ட மனிதனைக் கடவுளின் அவதாரம் என்று சொல்லலாம். ஆனால், கிறிஸ்துநாதர் இந்நிலை அடைந்ததாக முகமதுநபி நம்பவில்லை போலும்!'', எனக் குறிப்பிட்டுப் **பாரதியார்** எழுதிச் செல்வது சிந்திக்கத்தக்கதாகும்.

4. கிறித்துவமதம் - விளக்கமும் தத்துவமும்:

கன்னி மரியாளுக்குப் பிறந்த **இயேசுகிறித்து**வின் பெயரால் தோன்றிய மதமே கிறித்துவம் ஆகும். கிறித்து என்பதற்குத் **திருமுழுக்கு** (ஞானக் குளியல்) **பெற்றவர்** எனப் பொருள்கூறுவர். இயேசுநாதர் திருமுழுக்கைப் பெற்றதால் கிறித்துவானார்.

கடவுள், அனாதி காலந்தொடங்கிப் **பிதா, குமாரன், பரிசுத்த ஆவி** என மூவராகவும், ஏக இறைவனாகவும் விளங்குபவர் என்பதுகிறித்துவ நம்பிக்கை; இதற்கேற்பத்,

''துங்கமுடைப் **பிதாச் சுதன்சுத் தாவி**யெனத்
திரித்துவத்திற் றுலங்கி யேகந்
தங்கியொரு தூநிலையிற் சத்துக்கள்
தொழவிருப்பன் தலைவன் அன்றே''

எனுஞ் சான்றோர் வாக்கினைக் கூறுவர்.

ஆத்துமா, தாயின் கருப்பத்தில் உண்டாக்கப்பட்டுப் பிறந்த உடலின்கண் அமைந்திருப்பதாகும். எனினும், தேவனால் அருளப்பட்ட ஆவியுடன் தொடர்புகொள்வதால், ஆண் பெண் ஆகிய இருபாலரும் ஆவி, ஆத்துமா, உடல் எனும் முக்கூட்டுப் பொருள்களினால் ஆகியவரென்பர். உடல், இறப்பினால் அழியக்கூடியதாகும்.

பிறவிச் சுழற்சியாகிய பல பிறவிக் கொள்கையைக் கிறித்துவம் ஏற்றுக் கொள்வதில்லை. ஒரேயொருமுறை மானுடப் பிறவியைத் தேவனருளால் பெற்றதும், ஒருவன் இப்பிறவியிலேயே பாவமன்னிப்பினைப் பெற்று விண்ணுலகில் தேவன் முன்னிலை

யில் நித்தியவாழ்வை அடைவதையே கிறித்துவம் புலப் படுத்துகிறது.

பிறரிடம் கொள்ளும் சகிப்புத்தன்மை ஒருவனை உயர்த்தும் என்பதையும், கடவுளின் இராச்சியம் மனத்திலேயுள்ளது என்பதையும் கிறித்துவம் புரிய வைக்கிறது. தீயதைப் புரிவதும் நன்மையைச் செய்யாமல் விடுவதும் பாவமாகும்; இப்பாவம் சன்ம பாவம், கன்ம பாவம் என இரு வகைப்படும். **சன்மபாவம்** என்பது, முதல் தந்தை ஆதாமின் வழிவழியே சங்கிலித் தொடர்போல் கருப்பத்திலேயே ஒவ்வொருவரையும் தொடர்ந்து வருவதாகும். **கன்ம பாவம்** என்பது, எண்ணத்தாலும் பேச்சாலும் செயலாலும் ஒவ்வொருவரும் தம் சுய சித்தத்தின்படி ஈட்டிக் கொள்வதாகும். பாவத்தைச் செய்யும்படி தூண்டுவது **சாத்தான்** எனும் பேயாகும். தேவதூதுவரில் முதன்மையான **லூசி** என்பவன் தன் மனமேட்டிமை காரணமாக வீழ்ச்சியுறுவதால், விண்ணுலகிலிருந்து இறங்கிப் பேயாயினான்; அவனைச் சேர்ந்த சிறு கூட்டத்தினரும் பேய்களாயினர். இத்தகைய பேய்களாலேயே மக்கள் பல தரப்பட்ட பாவங்களைச் செய்கின்றனர் என்பது கிறித்துவக் கொள்கையாகும்.

இயேசு கிறித்துவின் பிறப்பு, பாடு, இறப்பு, உயிர்த்தெழுதல் முதலியவை நற்செய்தி (சுவிசேடம்) ஆகும். மக்கள் பாவத்தினின்றும் விடுபட்டுக் கர்த்தரிடம் இணைவதற்கு இந்த நற்செய்தியே வழிகோலும். மக்களை மீட்பவர் இயேசுகிறித்து ஒருவரே. சுவிசேடம், சிலுவை மரணம், சிலுவையில் சிந்திய பரிசுத்த இரத்தம் ஆகியவற்றில் நம்பிக்கையுடையவர்களைக் கர்த்தர் மீட்டுத் தேவ பிள்ளைகளாக ஆக்கிக் கொள்கிறார் என்பதும், விண்ணுலகில் தேவன் முன்னிலையில் நித்தியப் பேரின்பங் கொள்வதே முத்தியென்பதும் கிறித்துவக் கோட்பாடாகும்.

இயேசு கிறித்துவின் வாழ்க்கையே ஒருவகையில் கிறித்துவ மத விளக்கமும் கோட்பாடுமாகவே அமைந்தது எனலாம். ''ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டுக'' என **இயேசுபிரான்** கூறியதிலிருந்து, அவர் எந்த அளவுக்கு

வாழ்க்கையில் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை உணர்த்தியுள்ளார்; மேலும், இதனால் பகைவர்கள் பகைமை காட்டினாலும் ஒருவர் தம் மன்னிக்கும் மனப்பான்மையால் உயரவேண்டும் என்பதையும் உணர்த்தியுள்ளார் என அறியலாம்.

உலகத்தையே அன்புநெறியால் பிணைக்க வேண்டும் என்பதும் இயேசு பிரானின் வாழ்வியல் நற்செய்தியாகும்.

5. பௌத்தம் - விளக்கமும், தத்துவமும்:

கௌதம புத்தரால் உருவாக்கப்பட்ட பௌத்தக் கோட்பாடு, உலகில் பல இன மக்களுடைய **கல்வி அறிவு ஒழுக்கம்** முதலிய பல துறைகளையும் ஆன்மநல மேம்பாட்டுக்காக மாற்றியமைத்த மாபெரும் இயக்கமாகும்; இது சிந்தனையில் நன்னெறிச் சுதந்திரத்துக்கு வழிகோலிய அறக்கோட்பாடுமாகும்.

கடுந்தவத்துக்குப் பிறகு, தவப்பயனாய்த் தாம் கண்ட உண்மைகளைப் புத்தர், வாழ்வியலுடன் தொடர்புபடுத்திக் கூறினார். மக்களின் வாழ்வியலில், மனத்திலே ஆசாபாசங்களாகிய தீப்பற்றியெரிவதை அவித்தாலொழிய உய்தி கிடையாது என்று நம்பினார்; எனவே, **துக்கத்தின் காரணத்தையும், துக்க நிவாரணத்தையும்** கண்டு கொண்டு செயற்பட்டால் பிறவிச் சக்கரத்தில் சிக்கிக் கொள்ளாமல், ஒழுக்கத்தால் உய்தி பெற வழி புலப்படும் என்றார். மானுடன் தன் முயற்சியால் தானாக முயன்று ஈடேற வேண்டுமேயன்றி, வேறுயாரும் அவனை ஈடேற்ற முடியும் என்ற நம்பிக்கையில் சோம்பியிருத்தலாகாது. ''புத்தர்கள் வழிகாட்டி உதவக்கூடிய நண்பர்கள் மட்டுமேயாவர். மனிதன் ஈடேற வேண்டுமானால் அவன் மேற்கொள்ள வேண்டியது அறவொழுக்கமேயாகும். ஆசாபாசங்களை விட்டொழித்தால் மட்டும் போதாது. அறியாமையினாலேயே துக்கம் உண்டாவதால் அறிவை வளர்ப்பதும் அவனுடைய கடனாகும். அதனால் இலக்கியம், இசை, நாடகம் போன்ற கலைகளையும் பயில வேண்டும்''[1] என்றும், ''உலகத்திலுள்ள எல்லா உயிர்களிடத்தும் அன்பும் அருளும் கொள்ளுமாறு மேற்

1. கலைக் களஞ்சியம், தொகுதி ஏழு, பக். 747

கொள்ளும் தியான நிலையையும் புத்தர் வற்புறுத்திக் கூறுகிறார். அந்த நிலை கைகூடும் போது அதைச் **சமாதி** என்று கூறுவர். **தியான நிலைகளில் தேர்ச்சி பெறுவோர் வானத்தில் சஞ்சரிப்பது போன்ற சித்திகளைக் கூடப் பெறுவர்.** ஆனால், அதைப் பெறுவதற்காக முயல்வது தவறு. **நிருவாணம்** அடைய விரும்பு கிறவன் அறவொழுக்கத்தை மேற்கொள்ளக் கடவன். ஆனால் அறவொழுக்கம் ஒரு சாதனமேயன்றிக் குறிக்கோளாகாது......... நல்ல செயல்களை வளர்த்து வரவேண்டும். **காமம் குரோதம் மோகங்கள் மனத்தால் எண்ணிச் செய்யப் பெறும் தீய செயல் களாக இருப்பதால் அவற்றை விட்டொழிக்க வேண்டும்**''[1] என்றும், ''சாதாரணமாக நிருவாண நிலையை ஒரே பிறப்பில் அடைந்துவிட முடியாது. ஆனால், பிறப்பென்பது ஆன்மா என்ற ஒன்று வெவ்வேறு உடல் பெறுவது என்பதன்று. **ஆன்மா என்று ஒன்று கிடையாது.** 'நான், எனது' என்று கூறிக் கொள்ளும் நனவு வேறு வேறு விதமாக அமைவதே வேறு வேறு பிறவி எடுத்தலாகும்''[2] என்றும் பௌத்த மதச்சாரமான தத்துவங்களை **ஜி. பி. மல்லசேகர** எழுதிச் செல்வது சிந்திக்கத் தக்கது.

பௌத்தத்தில் **ஹீனயானா, மகாயானா** எனப் பிரிவுகள் உண்டு. முன் தோன்றிய ஹீனயானாவைப் பின்தோன்றிய மகாயானா கொள்கையடிப்படையில் விளக்கிச் செல்கிறது.

பிறப்பும் இறப்புமற்ற நிலையில் பேரின்ப நிலையாகிய பரி நிருவாணத்துக்கு இட்டுச் செல்வதாகக் கூறப்படும் பௌத்தம், தமிழ்நாட்டில் தருக்க முறையாகத் **தருமபாலரால்** (அறவண அடிகளால்) வளர்ச்சி கொண்டு விளக்கம் பெற்றது. இதனை **மணிமேகலைக்** காப்பியத்தில் கண்டு கொள்ளலாம்.

ஒவ்வொரு நொடியிலும் (கணத்திலும்) பொருள்கள் மாறுபட்டு வருகின்றன எனக் கொள்ளும் **'கணபங்க வாதம்'** (Theory of Momentariness) பௌத்தத் தத்துவத்தில் குறிப்பிடத் தக்கதாகும். ஒவ்வொருவர் இன்பத்துக்கும் துன்பத்துக்கும்

1. கலைக்களஞ்சியம், தொகுதி ஏழு. பக்-747
2. மேலது

அவரவரே பொறுப்பாவரன்றிப் பிறரைக் குறை கூறுவது சரியன்று என்பதும் பௌத்தக் கொள்கையாகும். இதனைத்,

"தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே......"[1]

எனும் **புறநானூற்று** அடிகளுடன் சார்த்தி ஒருவாறு உணரலாம்.

5-1 இந்து மதத்தில் பௌத்த மதத் தாக்கம் :

இந்து மதத்தினர் புரியும் யாகங்களில் உயிர்ப் பலியிடுவதைக் கண்டு வெறுத்த நிலையிலே **கௌதமபுத்தர்**, மிகுந்த சிந்தனையின் விளைவாகவே கண்டது பௌத்தப் பேரியக்கமாகும். பிறகு, காலச் சுழற்சியில் **"சங்கராச்சாரியாரால்** உண்டாக்கப்பட்ட **'மாயாவாத மதம்'** என்றும், **'ஏகான்மவாத மதம்'** என்றும், **'ஸ்மார்த்தமதம்'** என்றும் சொல்லப்படுகின்ற **அத்துவைத மதத்தின்** அடிப்படையான கொள்கை **மகாயான பௌத்த மதத்திலிருந்து** ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிற் சிறந்த ஆன்றோர் கூறுகின்றனர். அத்துவைத மதத்தை உண்டாக்கின **சங்கரர் பௌத்த குரு ஒருவரிடம் பயின்ற மாணவர்** என்று சிலர் கூறுவர். அங்ஙனம் அன்று; சங்கராச்சாரியாரின் குரு **கோவிந்த பாதர்** என்றும், கோவிந்த பாதரின் குரு **கௌட பாதர்** என்றும் பௌத்தர் என்றும் வேறு சிலர் கூறுவர். அன்றியும் பௌத்த மதத்தின் பிரிவுகளான **விஞ்ஞானவாத சூனிய வாத மதங்கள்** அதிகமாகப் பரவியிருந்த சௌராஷ்டிர தேசத்தில் கல்வி பயின்றார் என்றும், அங்கும் பயின்ற படிப்பினால்தான் **சூனியவாத பௌத்தத்தினின்றும்** மாயாவாதக் கருத்தினைப் பெற்றுக் கொண்டார் என்றும் மற்றும் சிலர் கூறுவர்".[2] என **மயிலை சீனி. வேங்கடசாமி** ஆராய்ந்து கூறுவது சிந்திக்கத்தாகும்.

வைணவ ஆசாரியராகிய விசிட்டாத்துவைத **இராமாநுசரும்'** துவைதமத ஆசாரியராகிய **மத்துவாசாரியாரும்**, சங்கரருடைய

1. புறநானூறு, 162: 2-5
2. பௌத்தமும் தமிழும், பக், 47, 48

அத்துவைதமதத்தைப் **'பிரசன்ன பௌத்தம்'** (மாறு வேடங் கொண்ட பௌத்தம்) என்றே கூறியுள்ளனர். இதனைக் காண்கையில் பௌத்த மதம் தான் தோன்றிய இந்துமதத் திலேயே மீண்டும் புகுந்து வேறொரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

சிற்பக்கலைப் **பண்பாட்டு** நோக்கில் ஆராய்கையில், **திருமாலின்** வடிவங்கள் **நின்ற** கோலத்திலும், **அமர்ந்த** கோலத் திலும், **கிடந்த** கோலத்திலும் இருத்தலைக் காணலாம்; இந்த மூவகைக் கோலங்கள் **புத்தரின்** வடிவங்களுக்கும் அப்படியே பொருந்தி வருகின்றன. மேலும், வைணவச் சான்றோர்கள் **புத்தரைத் திருமாலின் ஓர் அவதாரமாகவே** வெளிப்படையாக ஒப்புக் கொள்கின்றனர்.

சைவர்களோ **அரிக்கும் அரனுக்கும்** பிறந்த **அரிஹர புத்திரன் ஐயப்பனாகவே** போற்றி வழிபட்டு வருகின்றனர். ஐயப்பனே முற்காலத்துச் சாத்தன் என்பதும், **சாத்தனே பௌத்தப் பெயர்** என்பதும் இயைபுடன் சிந்திக்கத் தக்க செய்திகளாகும். மேலும். **அப்பரடிகள்** தம் தேவாரத்தில் **சாத்தனாரைச்** சிவபிரானின் மகனாகவே கொண்டு கூறியுள்ளார்: இதனைப்,

"பார்த்தனுக் கருளும் வைத்தார் பாம்பரை
யாட வைத்தார்
சாத்தனை மகனா வைத்தார்......"[1]

எனப்பாடிச் செல்வதால் உணரலாம்.

6. சமணம் - கோட்பாடும் தத்துவமும்.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், மக்கள் சமுதாயம் நன்மை தீமைகளைப் போதிய அளவு பகுத்துணராது சீர்குலைந் திருந்தது. **கண்டதே காட்சி கொண்டதே கோலம்** என்று வாழ்வியல் மேற்கொண்ட அக்காலத்தில் பகவான் **விருஷபதேவர்** தோன்றிச் சமுதாயத்தினைச் செம்மைப்படுத்த முயன்றார். பல்வேறு திட்டங்களின் தலையாய அறமாக **உயிர்க்குறுகண்**

1 திருமுறை, 4, 32, 4

செய்யாமை (அகிம்சை)யை அமைத்தார். பொருளியல் சமதர்ம சமுதாயங்காணப் பல வழிவகைகளைக் கூறினார்''. உள்ளத்தாலும் உரையாலும் செயலாலும் பிறருக்கு ஊறுநேரா வகையில் அருளறத்தைக் கடைப்பிடிப்பது போன்று. பொருளாலும், பிறருக்கு இன்னல் விளையலாகாதென்ற கொள்கையை முதன் முதல் உலகுக்கு உரைசெய்த பொருளாதார நிபுணர் நாம் போற்றற்குரிய பகவான் **விருஷபதேவர்**''[1] என்று டி.எஸ். **ஸ்ரீபால்** எடுத்து விளக்குவது மனங்கொள்ளுதற்குரியது.

அகிம்சா சமுதாயம் எனும் அறநெறிச் சமுதாயத்தையே மக்கள் **ஜைனம்** (சமணம்) என அழைக்கலாயினர் இதற்குக் கி.மு. 599இல் பீகாரைச் சேர்ந்த குண்டலபுரத்தில் அரசர் குடும்பத்தில் தோன்றிய **மகாவீரர்** மறுமலர்ச்சியை உண்டாக்கினார். **இவர், சமணப் பேரருளாளராகிய தீர்த்தங்கரர் வரிசையில் இருபத்து நான்காமவர் என்பதால் சமணத்தின் தொன்மை புலப்படும்**. இவர் அகிம்சையின் அடிப்படையில் எல்லா உயிர்களையும் நேயமாக்கிக் கொள்ளுமாறு மக்களிடம் போதித்தார். மிகு பொருள் விரும்பாமை, பகுத்துண்டு வாழ்தல், பொய் கூறாமை, களவாடாமை, கள்ளுண்ணாமை. ஊனுண்ணாமை, பிறன்மனை நயவாமை, சான்றோரை இகழாமை போன்ற நல்லறங்களை நாடெங்கும் பரப்பி, மக்களைத் தூயவர்களாக வாழுமாறு வேண்டினார். உலகியலில் இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை முதலிய நிலையாமைகளை உணர்ந்து கொண்டும் ஊழியின் ஆற்றலைப் புரிந்துகொண்டும் உயிர்க்குறுதி தேடுமாறு உணர்த்தலானார்,

சமணர்களுள் ஒருவகைத் துறவியர் தம் தூயவுள்ளம் போன்றே **வெண்ணிற ஆடை** உடுத்திக் கொண்டனர். அவர்கள் **சுவேதம்பரர்** என அழைக்கப்பட்டனர் மற்றொரு வகைத் துறவியர் தாம் உடுக்கும் ஆடையும் மிகையென்ற நோக்கில் நிர்வாணக் கோலத்தில் வாழ்ந்தனர்; **திகம்பரர்** (திக்கினையே ஆடையாகக் கொண்டவர்) என அழைக்கப் பட்டனர். சமணத்துறவியர் மழித்த தலையினராய்க் கையில் உணவு வாங்கி உண்டனர். தாம் நடக்கும்போது புழு பூச்சிகள் காலில்பட்டு அழிந்துவிடாமல் இருக்கும்வகையில், மயிற்பீலியால்

1. திருக்கோயில் (திங்களிதழ்) ஏப்பிரல், 1975

தரையைத் தேவையான இடங்களில் துடைத்துக்கொண்டே செல்வர். மிகக் கடுந்துறவினை மேற்கொண்டவர்கள் நுண்ணுயிர்கள் அழியாதிருக்கும் பொருட்டு நீர்க்குளியலையும் தவிர்த்தனர்; அஃதாவது கழுவாமேனியராகவும் வாழ்ந்துள்ளனர்.

சமணர்களுள் இல்லறத்தார் சாவகநோன்பிகளாக நல்லற நெறியில் வாழ்ந்துள்ளனர். கோவலன் சாவக நோன்பியாய் வாழ்ந்தமை பற்றிச் சிலப்பதிகாரத்தால் அறியலாம் இல்லறத்தார்க்குரிய பேரறங்களாகக் கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனைநயவாமை, மிகுபொருள் விரும்பாமை ஆகிய **பஞ்ச சீலங்களும்** சமணத்தில் வலியுறுத்தப்பெறும். இதனைத் **திருக்கலம்பக ஆசிரியர்,**

"விரையார் மலர்மிசை வருவார்
திருவறம் விழையார்
கொலையினை விழையார் பொய்
யுரையார் களவினை யொழுகார்
பிறன்மனை யுவவார்
மிகுபொருள் உவவார்"

என அழகாக விளக்கியுள்ளார். இவை போன்றே பகுத்துண்டு வாழ்தலைப் பற்றித் **திருத்தக்கதேவர்** தமது **நரி விருத்தத்தில்,**

"பாங்கமை செல்வராகிப்
பகுத்துண்டு வாழ்த லொன்றே
தாங்கிய தவத்தின் மிக்க
தவநிலை நிற்றல் ஒன்றே"

என்றும், **சீவகசிந்தாமணியில்,**

"அட்டு நீர் அருவிக் குன்றத் தல்லது வயிரந்தோன்றா
குட்டநீர்க் குளத்தி னல்லால் குப்பைமேற் குவளைபூவா
விட்டுநீர் வினவிக் கேண்மோ விழுந்தகையவர் கட்கல்லால்
பட்டது பகுத்துண்பார்இப் பார்மிசை இல்லை கண்டீர்"[1]

என்றும் வலியுறுத்தியுள்ளார்"[2] என எழுதிச் செல்லுங் குறிப்பினையும் காண்க.

1 புத்திரிலம்பகம், 327
2. திருக்கோயில், ஏப்ரல், 1975

பொதுவாகச் சமண முனிவர்கள் எழுதியுள்ள **நாலடியார்** எல்லும் நூல், **திருக்குறள்** போன்று நீதிகளையும் நல்லறங்களையும் வகுத்துக்கூறும் இயல்பினது என்பது தமிழ்மக்களின் கருத்தாகும். ''ஆலும் வேலும் பல்லுக்குறுதி, **நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி**'' எனும் பழமொழி தமிழ்மக்களிடையே நன்கு அறிமுகமாகியுள்ளமையால் இதனை உணரலாம். ஈண்டு, '**நாலும் இரண்டும்**' என்பது நாலடியாரையும் திருக்குறளையும் குறிக்கும்.

சமண மதக்கோட்பாடுகளைச் சுருங்கக் கூறவேண்டுமெனின், 'உயிர்க் குறுகண் செய்யாமையும், உண்மையும், தன்னடக்கமும் தூயஒழுக்கமுமே சமண வாழ்வியற் கூறுகள்' எனலாம். சமண தத்துவத்தை விளக்கிச் செல்லும் **எஸ். ஏ. ஜெயின்**, ''இச் சமயத்தின் அடிப்படையான தத்துவங்களில் முக்கியமானவை சில வருமாறு; துறவு, உள்ளத் தூய்மை, ஒழுக்கத் தூய்மை, தன்னலமின்மை, பிறர்நலங்கருதுதல், கடுங்கோபம் மூட்டப் பட்ட காலத்தும் மன்னித்தல், துன்பம் வந்திட்டகாலைப் பொறுமையோடும் களிப்போடும் சகித்தல், எல்லா உயிரினங்களிடத்தும் அன்பு பாராட்டுதல், பரிபூரண நேர்மை ஆகிய இவையே ஆகவே, இச்சமயம் மெய்ப்பொருள் நுட்பத்தை விளக்குகிறது. வீண் நம்பிக்கைகளையும் ஆடம்பர மொழிகளையும் கொண்டு அது நம்மை ஏமாற்றுவதில்லை''[1] எனக்கூறிச் செல்வது மனங் கொள்ளத்தக்கது.

மேலும் சமணமதக் கோட்பாடுகளை அறிய வேண்டுமெனில் **சிலப்பதிகாரத்தையும் மேருமந்திர புராணத்தையும்**, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நாலடியாரேயன்றி **ஏலாதி**, **திரிகடுகம்** முதலிய நூல்களையும் காண்க.

6.1 இந்து மதத்தில் சமணத் தாக்கம்:

தொன்மைக் காலத்தில் இந்துமதக் கிளைகளாகிய **சைவ, வைணவச்** சமயங்களில் பலியிடலும் **இறைச்சியுணவுப் படையலும்** நிரம்ப இருந்தன. சமணர்களின் **கொல்லாமைக் கொள்கையின்**

---

1. மதுரை கும்பாபிஷேக மலர் (1963), பக். 265

தாக்கம் ஏற்பட்டமையால் இந்துமதத்தில் படிப்படியே அவை நீங்கவும், **பழமும் பாலும் தூய அன்னமும் பலகாரங்களும்** சிறப்பான படையற் பொருள்களாயின. சமணர்களின் **திகம்பரம் (நிர்வாணக் கோலம்)** இந்துமதத்திலும் தாக்கத்தையுண்டாக்கிற்று. பைரவர் போன்ற மூர்த்தங்கள் நிர்வாணத்துடன் படைக்கப்பட்டன. கோயிலமைப்பிலும் சிற்பக் கலையிலும் சமணத் தாக்கம் ஏற்பட்டுள்ளமை பற்றி விரிவாகப் பின்னர்க் காண்போம்.

6.2. மதத் தொடர்பில் பண்பாட்டுப் பிறழ்ச்சியும் அதனைக் காக்க முற்படலும்

ஆத்திக மதங்களுக்கும் நாத்திகக் கோட்பாடுகளுக்கும் பொதுவாக நல்லொழுக்கம் உயிரோட்டமாக அமையும், கடவுட் கொள்கையில் முரண்பாடுகள் தோன்றினாலும் உயிர்க் குறுகண் செய்யாமையிலும் எல்லோரிடத்தும் அன்பு காட்டுவதிலும் மதங்கள் பெரும்பாலும் ஒத்துப்போகும். எனினும், **நடை உடை பாவனை** முதலிய புறப் பண்பாட்டுக் கூறுகளில் ஒப்போ ஒருமைப் பாடோ ஒற்றுமையோ காணவியலாது. இவ்வாற்றான் சிலவற்றைக் காண்போம்.

ஆத்திக நாத்திக மதங்களுள், **சைவத்துக்கு முரணாகச் சமணம் காணப்படினும் சிற்பக் கலைக் கூறுகளில் சில ஒப்புமைக் கூறுகள் உண்டு; வைணவத்துக்கும் பௌத்தத்துக்கும் சில ஒப்புமைக் கூறுகள் உண்டு.** இதனைச் சிறிது விளக்கமாகச் சிற்பக்கலைப் பண்பாட்டில் வேறு இயலில் காணலாம். ஈண்டு ஆசாரக் கூறுகள் தொடர்பில் சில காண்போம்.

சைவ சமயச் சான்றோர்களுக்குச் சமணக் கொள்கையினர் 'கையினால் தலைமயிரைப் பறித்தல் (லோச்சனம்)' என்பதும், 'அவர்கள் உண்கலமின்றிக் கையில் உணவையேந்தி உண்ணுதல்' என்பதும், 'அவர்களுள் முதிர்ந்த துறவியர் ஆடையில்லாக் கோலத்தினராய்த் **திகம்பரராய்த்** திரிவது' என்பதும், 'அவர்கள் நின்றுகொண்டே உண்பது' என்பதுமாகிய பழக்க வழக்கங்கள் பிடித்தமில்லை; மானுட நாகரிகப் பரிணாமத்தில் இவை

யெல்லாம் வெறுக்கத் தக்கவையென்பது அவர்களின் ஆத்திகக் கோட்பாடு.

சமணர்களையும் பௌத்தர்களையுமே வெறுத்த நிலையில் **சுந்தரமூர்த்தி சுவாமிகள்,** திருநாகேச்சுரம் பதிகத்தில்,

> **''...... கூறையின்றித் திரியும்**
> **சமண் சாக்கியப் பேய்''**[1]

என்று கூறிக் காட்டுவார்.

சைவ அருட்செல்வர்கள் இவ்வாறு சமணர்களை இகழ்ந்த நிலையில், ''தம் சமய நாயகர் **பிட்சாண்டவத் திருக்கோலத்தில்** நிர்வாணத்துடன் திருக்கோயிலில் எழுந்தருளலாமா? வீதியுலாவில் இடங்கொள்ளலாமா?'' என்பதைப் பொதுவாகச் சிந்தித்துப் பார்ப்பதில்லை ஆனால், **அப்பரடிகளோ** இந்த நிர்வாணக் கோலத்தைத் தம் சிவபிரானிடம் பொருத்திப் பார்க்க மனமில்லை. தாமே சமணமதத்திலிருந்தபோது நிர்வாணக் கோலத்தின் தாக்கம் எத்தகையது என்பது அவரது அடிமனத்திலிருந்து உறுத்திக் கொண்டிருக்கிறது. தீரச்சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தவராய்த் தம் ஆன்ம நாயகனாகிய சிவபிரான் - பெருமான் - கோவணத்துடன் பிச்சைக்கு வருவதாகக் காட்டுகிறார். இதனைத் **திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில்.**

> ''துன்னத்தின் கோவணமொன் றுடையார் போலும்
> சுடர்மூன்றுஞ் சோதியுமாய்த் தூயார் போலும்''[2]

என வரும் திருப்பாசுரத்தால் உணரலாம். பிச்சையுகக்கும் பெருமானாகிய சிவபெருமானை வினவும் பாங்கில், 'மலைமகளைத் திருமணம் புரிய வந்த காலத்து அன்றுங்கூட இதே பிச்சைக் கோலத்தில் கோவணம் உடுத்திக் கொண்டுதான் மணமகனாய் வந்தீரோ? எனக் குறிப்பிடுவதைக்,

1. திருமுறை, 7, (திருநாகேசுவரப் பதிகம்), 10
2. திருமுறை, 6, 267 : 5

"கடும்பகல் நட்டமாடிக் கையிலோர் கபாலமேந்தி
இடும்பலிக் கில்லந்தோறும் இழிதரும் இறைவனீரே
நெடும்பொறை மலையர்பாவை நேரிழை நெறிமென்கூந்தல்
கொடுங்குழை புகுந்த அன்று கோவணம் அரையதேயோ"[1]

எனவரும் பாசுரத்தால் தெரிந்து கொள்ளலாம். **அப்பரடிகளின்** அடிமனத்தில் நிர்வாணக் கோலத்தை மாற்றியமைக்கும் திருக் கோவணக் கோலம் இருந்து செயற்படுவதை மேற்காணும் எடுத்துக்காட்டுக்களால் உணரலாம்.

7. சீக்கிய மதம் - தத்துவங்கள்:

சீக்கியம் எனும் சொல் **சீடநெறியை** உணர்த்தும். சீக்கிய **மதம்** கடவுளையே குருவாகக் கொண்டு, அன்பையும் உண்மை யையும் இருகண்ணெனப் போற்றும் நெறியாகும். இம்மதத்தை நிறுவியவரான **குருநானக்,** இரு குழந்தைகளுக்குத் தந்தையான நிலையில் இறையருளை நாடித் துறவியானார். காட்டில் தியானத்திலிருக்கையில் கடவுட் காட்சி இவருக்குக் கிடைத்தது. நாம செபம் செய்யவும், தருமம் புரியவும், வழிபாடு இயற்றவும், தியானத்தில் அழுந்தவும், எல்லோருக்கும் இறையருளைப் பரப்பவும் குருவாக விளங்குமாறு இறைவனே பணித்ததாக வளர்ந்தார். நெற்றியில் குங்குமம் அணிந்து, தலையில் ஒரு தலைப்பாகை தரித்துக் கொண்டு, இடுப்பில் எளிய ஆடை யுடுத்திய நிலையில் எங்கணும் சென்று **தம் கருத்துக்களைச் செய்யுள் வடிவத்திலேயே** பாடிப் பரப்பத் **தலைப்பட்டார். மர்த்தனர்** எனும் இசுலாமிய இசைவாணர், இவருக்கு மாணவராக அமைந்து இவருடைய இசைப்பாடல்களை இன்னிசைக் கருவியில் இசைத்துத் தொண்டாற்றினார்.

சாதி சமய வேறுபாடுகள் பொருளற்றவை என்பதையும், எல்லோருக்கும் இறைவன் ஒருவனே என்பதையும், அவ் விறைவனை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்து வழிபட்டு, அவனருள் பெற்று அவனையடைவதே மானுடப் பிறவியின் நோக்கமும் பயனுமாகும் என்பதையும் சீக்கிய மதக் கொள்கை

1. திருமுறை, 4, 77, 1

களாகப் பரப்பினார். ''பிரம்மம், பரப்பிரம்மம் ,பரமேசுவரன், நாராயணன், கோவிந்தன், அரி, அல்லா முதலிய பெயர்கள் யாவும் வேறுபாடின்றி, ஒரே கடவுளையே சுட்டுவனவாகும். வீடுபேறு அடையச் சடங்குகளும் யாகங்களும் செய்யத் தேவையில்லை. கடவுள் உருவம் அற்றவர்; அவரை அறிவதற்கு ஆசிரியர் (குரு), மிகவும் இன்றியமையாத துணை ஆவார். உலக வாழ்வு நிலையற்றது, பயனில்லாதது, வெறும் பொய்யாய்க் கனவாய்ப் போவது; தனக்கென ஓர் ஆற்றலும் துணையும் உடையவன் அல்லன் (கடவுள்). உயிர்களின் வாழ்வை உருவாக்கி இயக்கும் ஊழ் என்னும் இயற்கை நியதி ஒன்று உண்டு. **கடவுள் பாற் செய்யும் பக்தியினால் மட்டுமே** மனிதன் உய்தி பெற முடியும்''[1] என்று **குருநானக்** தம் தத்துவ உரைகளை உலகுக்கு வழங்கினார்.

சீக்கிய மதத்தின் பத்தாம் குருவும் இறுதிக் குருவுமாகிய **குரு கோவிந்த சிங்**, இம்மதத்தை **வீரம் செறிந்ததொரு** உயரிய மதமாக (Militant theocracy) விளங்கச் செய்தார். '**பஞ்சககாரங்கள்**' என்பவற்றைச் சீக்கியர்கள் பின்பற்றுமாறு விதித்தார். பஞ்சககாரங்களாக, ஒவ்வொருவரும், தூய்மையைக் குறிப்பதாகிய **கங்கம்** (சீப்பு), நேர்மையைச் சுட்டுகிற **கரம்** (கைவளையம்), புலனடக்கத்தையுணர்த்தும் **கச்சம்** (இடுப்புத்துணி), ஆன்மிக ஆற்றலை உணர்த்தும் **கிர்பான்** (கத்தி), தியாகவுணர்வைப் புலப்படுத்தும் **கேசம்** (நீண்ட தலைமுடி) என்னும் ஐந்தையும் தம் அணிகலன்களாகக் கொண்டு, சிங்கத்தினைப் போல அஞ்சா நெஞ்சத்துடன் கடவுளின் தொண்டராக வேண்டும் என்பதே அவர் வகுத்த தத்துவ நெறி.

சீக்கிய மதத்தின் சாரமான நடைமுறைத் தத்துவம் இறைவனின் திருப்பெயர்களை இடையறாது ஓதும் நாமசெபமே யாகும். இதுவே கலியுகத்தில் இறையருளையும் வீடுபேற்றையும் வழங்கவல்ல எளிய இனிய நெறி என்பது இம் மதத்தின் ஆழமான நம்பிக்கை. இசுலாமியக் கொள்கைகளுள் சாரமான வற்றையும் தேர்ந்தெடுத்துப் பிணைத்து வாழ்வியலில் சிறந்த

1. திருக்கோயில் (திங்களிதழ்), நவம்பர், 1968

திருப்பத்தையுண்டாக்கியது சீக்கிய மதம் என்றும், **'ராம், ரஹீம்'** என நவில்வதற்குத் துணைநின்றது அந்த மதம் என்றும் சுருங்கக் கூறலாம்

8. மதமும் சித்து விளையாட்டும்:

ஆத்திக மதத்திலும் நாத்திக மதத்திலும் தோன்றிய ஞானியர் தம் தேர்ந்த அருளனுபவத்தால், வியக்கத்தக்க சித்துக்கள் புரிதலில் வல்லவராகத் திகழ்ந்துள்ளனர். நடைமுறை வாழ்வியலில் சில அற்புதங்களை நிகழ்த்துகையில்; அவர்களை மக்கள் இனங் கண்டு கொண்டு **சித்த புருடர்கள்** எனக் கூறுவாராயினர்.

கடவுளைத்தக்க நெறியால் காணமுயல்பவர்களை அடியார்கள் அல்லது **பக்தர்கள்** என்றும், கண்டு தெளிந்த நிலையில் தம் சித்தியனுபவத்தினைப் புலப்படுத்துகையில் அவர்களைச் **சித்தர்கள்** என்றும் கூறுவர். அனுபூதி ஞானம் பெற்ற சித்தர்கள் உலகெங்கும் உண்டு. அவர்களை ஆங்கிலத்தில் 'Mystics' என அழைப்பர்.

மக்களேயன்றித் தெய்வமும் சித்து விளையாட்டினைப் புரிவதும் பல மத வரலாறுகளில் காணலாம். தெய்வநலச் சிறப்பால் சில தலங்களும் சித்து விளையாட்டுடன் தொடர்பு கொண்டவையாகப் போற்றப்படுகின்றன.

கிறித்துவ மதத்தில் தலச்சிறப்புடைய **வேளாங்கண்ணி மாதாகோயிலில் மரியன்னை** புரிந்துள்ள அற்புதங்களை, அந்த வட்டாரத்து மக்கள் மிகப் புகழ்ந்து பாராட்டி வருகின்றனர். தமிழ்நாட்டு மக்களும் பிறரும் மதவேறுபாடின்றி அங்குச்சென்று வழிபாடு நிகழ்த்துதலை இன்றுங் காணலாம்.

இசுலாமிய மதத்தில் ஞானியராகிய சித்தராலும் தலச் சிறப்பாலும் பல வியத்தகு நிகழ்ச்சிகள் பல இடங்களில் நடைபெற்றுள்ளன. **நாகூர் மீரான் சாயபு** எனும் நாகூர் ஆண்டவர் தம்வாழ்வில் பல சித்துக்களை நிகழ்த்தி மக்களுள்ளத்தில் மிகவும் வணங்குதற்குரிய இடம் பிடித்தவர். **குணங்குடி மஸ்தான் சாயபு** இளம் வயதிலேயே தவமியற்றிப் பல அற்புதங்களை நிகழ்த்தியவர் என்பதை அவரது வரலாற்றால் அறியலாம்.

இவ்வாறே பௌத்த மதத்திலும் சமண மதத்திலும் வியத்தகு நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டிய ஞானியர் உண்டு. எனினும், அவர்களைச் சித்தர்கள் என்று ஏனோ கூறுவதில்லை!

இந்து மதத்தில் சித்தர்களைப் பற்றிய வரலாறுகள் பல உண்டு. முதற்கண் சித்தினைப் பற்றியும், சித்தர்களைப் பற்றியும் தரப்படும் விளக்கங்களைக் கண்டு கொண்டு மேலே செல்வோம்.

தெய்வத் திருவருளால் தவ நலத்தில் சிறந்த ஆன்மாக்கள் **சீவன் முத்தர் நிலையில்** அடைகின்ற உயர்நிலையே **சித்தி**யாகும். சித்திகளாகக் கணக்கிட்டு எட்டு வகைச் சித்திகளை **அட்டமா சித்திகள்** என வழங்குவர். அவை, 1. **அணிமா** – அணுவிலும் சிறியதாய் நுணுகி விளங்குந் தன்மை. 2. **மகிமா** - மலைபோல் உயர்ந்த பெருநிலையில் விளங்குதல், 3. **இலகிமா** - மேருமலை பெரிதாயிருப்பினும் எடுத்தற்கு எளிதாக இருக்குமியல்பு. 4. **கரிமா**-அணுவைப்போல நுண்ணிதாயிருப்பினும் மேருவைப் போல் எடுத்தற்கரிய நிலையில் கனத்திருத்தல், 5. **பிராப்தி** - நினைத்த மாத்திரத்தில் எல்லாவுலகங்களிலும் எங்குஞ் சென்று உலவி வரக்கூடிய ஆற்றல். 6. **பிராகாமியம்** - கூடுவிட்டுக் கூடு பாய்தல், விரும்பியபடி இன்பம் நுகர்தல், முக்காலத்து நிகழ்ச்சி களையும் உணரும் ஆற்றல். 7. **ஈசத்துவம்** – இறைவனைப்போல் ஆக்கல் அளித்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்புரியும் வல்லமை, 8. **வசித்துவம்** - அமரர்கள் முதலிய யாவரையும் எல்லா உலகவுயிர்களையும் தமக்குள் அடக்கி வசப்படுத்தல்,

இத்தகைய சித்திகள் கைவரப் பெற்ற சித்தர்கள் தமிழ் நாட்டில் வாழையடிவாழையாகத் தோன்றி, மக்களிடையே உலவிவருகின்றனர். அவர்கள் சாத்திரக் குப்பையிலும் கோத்திரச் சந்தடிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாமல், மக்களை நன்னெறிப்படுத்த வேண்டும் என்ற நன்னோக்கத்திற்காக அரிய தத்துவக் கருத்துகளைத் தாம் நினைத்த போதெல்லாம் பாடல் களாகப் பாடியருளியுள்ளனர்.

சித்தர்கள் ஞானயோக சக்தியினால் தம்மை உயர்த்திக் கொள்பவர்கள்: இதனையுணர்ந்து **டாக்டர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்**, ''வாசி என்ற மூச்சினை அடக்கி ஆண்டு, யோக

சக்தியினால் உடலில் உள்ள **மூலாதாரம், கொப்பூழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலைமுடி** என்ற ஆறு இடங்களிலும் மனத்தை முறையாக நாட்டிக் **குண்டலினியை** எழுப்பிப் பலபல அனுபவமும் வெற்றியும் கண்டு, அப்பால் உள்ள எல்லாம் ஆன பொருளில் நிலைத்துச் சித்திபெறுபவரே சித்தர் என்ற வழக்கம் பரவியுள்ளது"[1] என்று தரும் குறிப்பு மிகவும் சிந்தித்துப் போற்று தற்குரியது.

சித்தர்களைக் கணக்கிடுகையில் **பதினெண்மர்** என்பர். அதன்படி 1. அகத்தியர், 2. போகர். 3. கோரக்கர், 4 கைலாச நாதர், 5. சட்டைமுனி, 6. திருமூலர், 7. நந்தி, 8 கூன்கண்ணர், 9. கொங்கணர், 10. மச்சமுனி, 11. வாசமுனி, 12. கூர்மமுனி, 13. கமலமுனி, 14. இடைக்காடர், 15. புண்ணாக்கீசர், 16, சுந்தரானந்தர். 17. உரோமரிஷி, 18. பிரமமுனி.

சித்தர்களை **ஒன்பதின்மர்** எனக் கணக்கிடுகையில் 1. சத்திய நாதர், 2 சதோகநாதர், 3 ஆதிநாதர், 4, அநாதிநாதர், 5, வெகுளிநாதர், 6. மதங்கநாதர், 7 மச்சேந்திரநாதர், 8. கடேந்திரநாதர், 9. கோரக்க நாதர் ஆகியோர் குறிக்கப் படுவர்.

மேற்காணும் இருதொகையினரிலும் அடங்காமல் சித்தர்கள் பலராகத் தமிழ்மக்களால் போற்றப்படுகின்றனர். அவர்களுள் **தன்வந்திரி, புலத்தியர், புசுண்டர், கருவூர்த்தேவர், இராமதேவர் தேரையர், கபிலர், பட்டினத்தார், சித்தர்சிவப்பிரகாசர், தாயுமானவர், இராமலிங்க அடிகள்** முதலியவர்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாரத நாட்டளவில் நோக்குகையில் **வடநாட்டில் சித்தர்கள் எண்பத்து நால்வர்** இருந்தாகக் கூறுவர். இவர்கள் பயின்ற யோகமார்க்கத்தை **நாதமார்க்கம்** என்பர். வடநாட்டில் இந்தச் சித்த புருடர்களைத் தெய்வங்களாகவே கருதி வணங்கி வரு கின்றனர்.

சங்க காலத்திலும் சித்தர்கள் சிலர் தமிழ்நாட்டில் வாழ்ந் திருந்தனர் என்பதற்குரிய குறிப்புகள் உள்ளன,

1. கலைக் களஞ்சியம், தொகுதி-4. பக். 643.

''சித்தர்கள் 'அறிவர்கள்'' என்று தமிழில் அந்தக் காலத்தில் அழைக்கப் பெற்றனர். இதற்கு ஒரு சான்று தொல்காப்பியத்திலேயே காண்கிறோம்,

''மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்''

என்ற தொல்காப்பியச் சூத்திரத்துக்கு உரை கூறுகிற இளம்பூரணர், அறிவனை வானியலோடு கலந்து வருங்காலம் உணர்ந்துகிற கணியன் என்று விளக்குகிறார்.

சித்தர்கள் மூன்று காலமும் உணர்ந்தவர் என்பதும், வானியல் என்பது இக்காலத்து வழங்குகிற வானசாஸ்திரம் மட்டுமல்லாது, சோதிடமும் அதையொட்டிய வேறுபல ஆன்மக்கணக்குகளையும் உள்ளடக்கியது என்பதும், இங்கே நினைவுகூர வேண்டும்'[1] என்று சிந்தனையாளர் **மீ.ப. சோமு** எழுதிச் செல்வது காண்க.

''நிலந் தொட்டுப் புகார், வானமேறார், விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்'' எனக் **குறுந்தொகை** (130) மூன்று சித்திகளைக் கூறுகின்றது. ''ஜைனருள்ளும் இச்சித்திகள் வல்ல **சாரணர்** எண்மர் இருந்தனர் என்ப. பௌத்தர்களும் இத்தகைய சித்திகளைப் பாராட்டுகின்றனர்''[2] எனப் **பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்** எழுதிச் செல்வதும் உளங்கொள்ளத்தக்கதாகும்.

9. மதங்களில் தொன்மத்தின் (myth) தாக்கம்:

அறத்தின் அடிப்படையில் நடுநிலை, இரக்கம், பொதுநலம், சத்தியம் முதலியவற்றை வலியுறுத்தும் மதங்கள், மக்களின் வாழ்வியலைச் செம்மைப் படுத்தி இன்பம் பயக்கவே உள்ளன. இவ்வுண்மையை மக்களுக்கு நேரடியாகப் போதித்தால் பயன் மிக விளைய வாய்ப்பில்லை. எனவே, பண்டைக் காலத்தில் வாழ்வியல் உண்மைகளை உணர்ந்து நடக்குமாறு தொன்மங்களைச் சுவைபடக் கையாண்டுள்ளனர். தொன்மம் என்பது உலகில் பல மதங்களில் பல்வேறு உத்திகளுடன் கையாளப் பட்டுள்ளன,

1. சித்தர் இலக்கியம் - ஆய்வுநூல், தொகுதி 2, பக். 87
2. கலைக்களஞ்சியம், தொகுதி 4, பக். 613

தொன்மம் பற்றி ஆராய்ந்த மேனாட்டு அறிஞர்கள், அதை ஒரு சமுதாயத்தின் **கூட்டு நினைவுகள்** (The collective conciousness of the Society) என்றும், அவை பல்வேறு சிந்தனைகளைப் புலப்படுத்தும் பொருள் வளம் உடையன என்றும் கருதுகின்றனர், இயற்கை நிகழ்வுகளை ஏதோ ஒரு வகையில் அவை விளக்கவே செய்கின்றன. கருத்தை விளக்கும் முறையில் அவை விஞ்ஞான பூர்வமான முறையை விளக்குவதில்லை. பகுத்தறிவு நெறியைப் போற்றுவதில்லை, காரண காரிய நெறியைப் பின்பற்றுவதும் இல்லை, எனினும் அவை **வாழ்வின் அர்த்தங்**களைப் புலப்படுத்துகின்றன என்பது அறிஞர் தம் கருத்து.[1] (A myth usually attempts to explain a phenomenon or strange occurrence without regard to scientific fact or so called Common sense -Harry shaw, Concise Dictionary of Literary terms, P 183, என வருங் குறிப்பு மனங் கொண்டு சிந்திக்கத்தக்கது.

மிகத் தொன்மையான காலத்திலேயே தொன்மம் கலவாத நாட்டுபுறவியற் கலையையோ பண்பாட்டையோ காண்பது அரிதாகும். **செவ்வியற் கலைகளும் (Classical arts) பண்பாடும்** நாட்டுப்புறவியலில் எவ்வாறோ ஒருவகையில் கால் ஊன்றி நின்றமையால் அவற்றிலும் தொன்மத்தின் தாக்கம் உளதாயிற்று. இதனை விளக்கும் வகையில் சில நுண் கூறுகளையும் எடுத்துக் காட்டுகளையும் காண்போம்.

நாட்டுபுறவியலில் வழங்கும் பழங்கதைகள் புராண நிகழ்ச்சிகள், செவிவழிக் கதைகள், தெய்வங்கள், தேவர்கள், அசுரர்கள், வீரர்கள் முதலியோரின் விந்தைக்குரிய செயல்களை விளக்கும் சமயத் தொடர்பான கதைகள் எல்லாம் தொன்மம் எனக் கருதத்தக்கவை. இவற்றுக்கு மக்களிடையே செல்வாக்கு இருந்தமையால் இவை செவ்வியற் கலைகளிலே தாக்கம் பெற்றுள்ளன.

இந்துமதக் கிளைச் சமயங்களில் தொன்மம் பற்றி ஆராயப் புகுந்தால் மிக விரிந்து செல்லும்; எடுத்துக்காட்டாகச் சில செய்திகளைக் காண்போம்.

---

1. இ. ப. க. த. மன்ற மாநாட்டுக் கருத்தரங்க இருபதாவது ஆய்வுக் கோவை (1988). தொகுதி I

வைணவத்தில் **திருமால்** எடுத்த அவதாரங்கள் அனைத்துமே தொன்மங்கள் என்று அறிஞர்கள் ஆராய்ந்து புலப்படுத்தியுள்ளனர். மக்களின் பொருளியல் வாழ்வின் பல்வேறு காலகட்டங்களுக்கு முதலாவதாக அமைந்தது **வேட்டையாடுதல்** (Hunting) என்பதைப் பலரும் அறிவர். வேட்டையாடுதலின் அடையாளமாக **இராமனுக்கும் இலக்குவனுக்கும்** வில்லையும் அம்பையும் பொருத்தி அவர்களைக் காணலாயினர். இதேவகைத் தொன்மத்தை **அருச்சுணனுக்கும்** அவனுடன் போர் புரியும் **சிவனுக்கும்** பொருத்திக் காணலாயினர். சிவகுமாரனாகிய **முருகனை** வில்லேந்திய வேடனாகக் கொண்டு அவனிடமும் இத்தொன்மத்தைப் பொருத்திக் காணலாயினர். வேடனாகிய முருகன் வேலேந்திய **வேலனாக** வருவதும் ஒருவகையில் தொன்மத்தின் புலப்பாடே. போர் புரியும் சக்தியாகிய **மீனாட்சியம்மை**யைக் கொண்டு அவளிடமும் வில்லையும் அம்பையும் பொருத்திப் பார்த்ததும், கிராம தேவதைகளிடம் வில்லையும் அம்பையும் பொருத்திக் காண்பதும் தொன்மத்தின் தாக்கமேயாகும்

இவ்வாறே தொன்மத்தின் கூறுகள் பின்னரும் தேவையான இடங்களில் ஓரளவு கூறப் பெற்றுள்ளன. இந்நூலின் பிற இயல்களில் கண்டு கொள்க.

10. பக்தர்கள் (அடியவர்கள்)- இயல்பும் பெருமையும்:

கடவுட் காதலுடைய பக்தரை, **அடியவர், சங்கமர், சரணர், பாதர், சாரணர், சான்றோர், அருளாளர், தொண்டர்** முதலிய பல சொற்களால் குறிக்கலாம். உலகில் குலம் குடும்பம் கல்வி செல்வம் பட்டம் பதவி புகழ் முதலியவற்றால் பலர் தம் பெருமையைப் புலப்படுத்துவர். அவர்கள் எல்லோரையும் விடக் கடவுளிடம் கொள்ளும் கைங்கரியம் எனும் திருத்தொண்டால் சிறக்கும் திருத்தொண்டரின் பெருமை மேலானதாகும்

அடியார்கள் இல்லறத்திலும் உண்டு; துறவறத்திலும் உண்டு துறவறத் தொண்டர்களின் பெருமையைத் **திருவள்ளுவர்.**

''துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று''[1]

எனக் கூறிச் செல்வதால் உணரலாம்.

இல்லறத்திலும் துறவறத்திலுமுள்ள அடியார்கள், உலகில் பல மதங்களிலும் உண்டு. எனினும், துறவறத்தாரே பலராகக் காணப்படுகின்றனர். அடியவர்கள் ஆத்திக மதங்களிலும் நாத்திக மதங்களிலும் உள்ளனர். பொதுவாக அடியர்வர்கள் பற்றிச் சிறிது காணபோம்.

கிறித்துவ மதத்தில் மதநிறுவனத் தலைவராகவும் தொண்டர்களாகவும் பல படிநிலைகளில் காணப்படுகின்றனர். **போப் ஆண்டவர், ஆர்ச் பிஷப், பிஷப், பாதிரிமார், ஆயர்** முதலியவர்கள் கிறித்துவ மதத்தொண்டர் நோக்கில் சிந்திக்கத் தக்கவர்கள்.

இசுலாமிய மதத்தில் மௌலானா, மௌல்வி, ஹஜரத், காஜியார், பக்கீர் முதலியவர்கள் இசுலாமிய மதத்தொண்டர் நோக்கில் எண்ணத்தக்கவர்கள்,

பௌத்தமதத்தில் பிக்குகள், பிக்குனிகள் முதலியவர்கள் பௌத்த மதத்தொண்டர்கள் நோக்கில் கருதத்தக்கவர்கள்.

சமண மததத்தில் பல்வகைத் **துறவியர், அறவோர், அறிவர், சாரணர்**, இல்லறத்துச் **சிரவணர்** (சாவக நோன்பிகள்) முதலியவர்கள் சமண மதத்தொண்டர் நோக்கில் மனங்கொள்ளத்தக்கவர்கள்.

சீக்கிய மதத்தில் குருமார்கள் முதலியோர் பலபடித்தரங்களிலே சீக்கிய மதத் தொண்டர் நோர்க்கில் சிந்திக்கத் தக்கவர்கள்.

இவ்வாறாகப் பல மதங்களிலும் அடியவர்கள் காணப்படினும், **இந்து மதத் தொண்டர்கள்** பற்றித் தமிழ்நாட்டளவில் பண்பாட்டு நோக்கில் ஓரளவு காண முயல்வோம்.

1. குறள். 32

10-1 வடநாட்டிலும், தமிழ் நாட்டிலும் வாழ்ந்த அடியார்கள் - ஒப்பியல் நோக்கு

இந்தியப் பெருநாட்டிலே பல பகுதிகளில் வாழ்ந்து வழி காட்டிய அடியவர்களிடையே எவ்வளவோ ஒற்றுமைக் கூறுகள் உள்ளன. சிறப்பாகத் தமிழ்நாட்டு அடியவர்கள் வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள், வட புலத்தே வாழ்ந்த அடியவர்கள் வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டு நோக்கினால் ஒற்றுமைக் கூறுகள் புலப்படும். சில எடுத்துக் காட்டுகளைக் காண்போம்.

1. தமிழ்நாட்டில் ஆழ்வார்களோடு சேர்த்து எண்ணுதற் குரிய பெருந்தகுதி படைத்தவள், மதுரபக்தியைப் புலப்படுத்திய **ஆண்டாள்** ஆவாள். அந்தப் பக்திப் பெண்மணியைச் **சூடிக் கொடுத்த சுடர்க்கொடி** என்று வைணவர்கள் தம் தலை மேல் வைத்துப் பாராட்டுவர். திருவரங்கத்து அழகிய மணவாளனையே தன் மணவாளனாக வரித்துக் கொண்ட பெரும்பேறு பெற்றவள்.

ஆண்டாளைப் போலவே இறைவனைக் - கிரிதர கோபாலனைத்- தன் மணவாளனாகப்- **பிரேமபக்தியால்** வரித்துக் கொண்ட பக்திப்பெருஞ்சிறப்பிற்குரியவள் **மீரா;** பக்த **மீரா** இராஸ்தானத்தைச் சேர்ந்த மங்கையர் திலகம் என்பது நினைவிற் கொள்ளவேண்டிய குறிப்பாகும்.

2. தமிழ்நாட்டில் திருவாதவூரில் அவதரித்த பெருமைக் குரியவர் மாணிக்கவாசகர்; தாம் பிறந்த ஊர்ப்பெயரால் **திருவாதவூரர்** என அழைக்கப்பட்டவர்; **அரிமர்த்தன பாண்டியனிடம்** அமைச்சராகப் பணியாற்றியவர்.

திருவாதவூரரிடம் நிறையப் பொருள் தந்து குதிரைகள் வாங்கி வருமாறு மன்னன் பணித்தான். அந்தப் பொருளைக் கொண்டு திருப்பெருந்துறையாகிய **ஆவுடையார் கோயிலை** ஏதோ தம் உள்ளுணர்வின் உந்துதலால் கட்டிவிட்டார், குதிரை களை வாங்காமல் கோயில் கட்டிய அந்த அடியவரை மன்னன் தண்டிக்க முனைந்தான். அடியார் படும் துன்பத்தைத் தாளாமல்

இறைவனே நரிகளைப் பரிகளாக்கிய நிலையில், ஒரு பரி மீது தானே குதிரைச் சேவகனாக அமர்ந்து கொண்டு மன்னனிடம் வந்து பரிகளை ஒப்படைத்துவிட்டு அடியாருக்காகவே திருவிளை யாடல் புரிந்தான்.

வடநாட்டிலே **பத்திராசலத்தில்** அரசாங்கப் பொருளைக் கொண்டு **இராமனுக்காக** ஆலயங் கட்டியவர் அடியவர் **இராமதாசர்.** இதனால் மன்னன் வெகுண்டு இராமதாசரைச் சிறையில் அடைத்துப் பல இன்னல்களுக்கு ஆட்படுத்தினான். தாம் அடியவர் படும் துயரைத் தாள முடியாத நிலையில் **இராமச்சந்திரமூர்த்தி** அடியவர்க்காகவே தம் தம்பி **இலக்குவனுடன்** முகம்மதிய மன்னர் முன் - **சுல்தான்** முன் - தோன்றி இராமதாசர் செலுத்த வேண்டிய பெரும் பொருளைச் செலுத்தி நின்றார் என்பது அப்பழுக்கற்ற வரலாறு.

10.2. அயல் மதத்தினர் இந்துமதத் தொடர்பான ஆர்வமும் திருப்பணிகளும்:

அயல் மதத்தினரும் அயல் நாட்டினரும் இந்துமதக் கோயிற் பண்பாட்டின் ஆக்கத்திற்கு ஊக்கந் தந்துள்ள நிகழ்ச்சிகளும் வரலாற்றில் குறிக்கத் தக்கன

1. காஞ்சிபுரம் **திரு ஏகாம்பரநாதர் கோயிலில் மதிலைக்** கட்டி முடிக்கக் காரணராக விளங்கியவர் **ஆட்சன்** (Hodgson);[1] இதனைக் காண்கையில், கிறித்துவ மதத்தைச் சார்ந்த அயல் நாட்டினராகிய அவரது உள்ளுணர்வையும், செயற்பாட்டினையும் தமிழர்கள் நன்றியுடன் நினைக்கக் கடமைப்பட்டவர்களாவர்.

2 மதுராந்தகம் **கோயில் திருப்பணியை** அவ்விறைவனது ஆற்றலையுணர்ந்த நிலையில் நடத்திப் பெருமை சேர்த்தவர் **லியோனார்ட் பிளேஸ்** (Leonard place).[2]

3. பவானி சங்கமேசுவரர் கோயிலில் **தேவநாயகியம்பாளுக்குத்** தந்தத்தால் செய்த **பள்ளியறை** ஊஞ்சலை நன்கொடையாக வழங்கி மகிழ்ந்தவர் **வில்லியம் கேரோ** (William Garrow)[3].

1. திருக்கோயில் - திங்களிதழ் மே, 1967
2. மேலது
3. மேலது

4. மதுரை மீனாட்சியம்மைக்குப் பொன்னும் மணியுங் கொண்டு உருவாக்கிய அங்க அடிகளைப் - **பாதுகைகளை** அன்பளிப்பாகத் தந்தவர் மதுரை மாவட்டத் தலைவராகிய **ரோசுபீட்டர் (Rouspeter)**[1]

5. முருகன் திருத்தலமாகிய **திருத்தணிகையில்** வரலாற்றுச் சிறப்புமிக்க செய்திகள் பலவாக உள்ளன. அவற்றுள் இக் கோயில் வாயிலின் தென்புறத்தில் காணலாகும் **'பிரசன்ன காதர் ஈசுவரர்'** சன்னிதி **இந்து முசுலீம் ஒற்றுமைச் சின்னமாக** விளங்குவதும் ஒன்றாகும். ''காதர் என்ற நவாபு அரசரொருவர், தம்மைத் துன்புறுத்தி வந்த ஒரு கொடிய நோயானது தாம் பிரார்த்தித்துக் கொண்டபடி தீர்ந்து, நலம் அடைந்ததனால், இங்கு ஓர் **இலிங்கத்தைப் பிரதிட்டை செய்து** வாத்திய மண்டபத்தையும் கட்டி வைத்ததாகப் பெரியோர்கள் கூறுகின்றனர். இந்து முசுலீம் ஒற்றுமைக்கு இக்கோயில் ஒரு நல்ல சான்றாகத் திகழ்கின்றது. பழநி, திருப்பரங்குன்றம், கதிர்காமம் முதலிய வேறு பிற தலங்களிலும், நம் முசுலீம் சகோதரர்கள் முருகனிடம் பக்தி பாராட்டி வருவது, இங்கு நாம் நினைந்து இன்புறத் தக்கது."[2]

11. மதப்பண்பாடு - தவம்:

உலகளாவிய பல மதங்களில் - ஆத்திக, நாத்திக மதங்களில் தவம் வற்புறுத்தப்படுதலைக் காணலாம். சிறந்த தவமென்பது **'ஆன்மாவில் வாழும் வாழ்க்கை'** என்றும், **'மனமும் அறிவும் கட்டுப்பாட்டுக்குள் பக்குவப்பட்ட நிலை'** என்றும், **'இடைவிடாது ஒருமுகமான ஆன்மநல முயற்சி'** என்றும் பலபட விளக்கிக் கொள்ளலாம்.

மானுடன் தன் ஆசைகளை யடக்கித் தனக்கு நேரிடும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு தவமியற்றி, அதன் விளைவாகப் பல பேறுகளைப் பெறுகிறான். தவத்தின் பெருமையை யுணர்ந்த **திருவள்ளுவர்,**

1. திருக்கோயில் (திங்களிதழ்), மே, 1967
2. திருக்கோயில் (திங்களிதழ்), ஆகஸ்டு, 1970

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"[1]

என்றும்,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்"[2]

என்றும்,

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு"[3]

என்றும் கூறியுள்ளமை நினைந்து போற்றற்குரியது. தவம்புரிதல் காரணமாக இறவாப் பெருநிலை எய்தலாம் என்பதைத் திருவள்ளுவர்,

"கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"[4]

எனக் கூறியுள்ளதும் மனங்கொள்ளத் தக்கதாகும்.

தவம் என்பது ஒருவர்தம் விருப்பமான தெய்வம் அல்லது குறிக்கோள் மீது சித்தத்தை வைத்து ஒருமுக நாட்டத்துடன் தம்உடல் தேவைகளைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதிருத்தலாகும். சித்தத்தை இறைவன் பால் வைத்த நிலையில் தெய்வத்தின் திருநாமத்தை அல்லது மந்திரத்தை எக்காலத்தும் செபித்துக் கொண்டிருத்தலாகும் என்பர் சிலர்.

வெறும் முரட்டு வைராக்கியத்தில் உடலை வருத்திக் கொண்டும், தழையையும், சருகையும், வேரையும், காய்கனிகளையும் உண்டு கொண்டு உலக நினைப்பு இல்லாமலும் நோன்பியற்றலே தவம் என்பர் சிலர்; இது பொருந்தாக் கூற்று என்பது பல மதங்களுடே காணலாகும் தவத்தவரை ஒப்பிட்டு நோக்கில் ஆராய்ந்தால் புரியலாகும்

1. குறள். 261
2. குறள். 265
3. குறள். 266
4. குறள். 269

புத்தர் பிரான் புரிந்த தவமும், **மகாவீரர்** புரிந்த தவமும் முறையே **பௌத்த** மதத்தையும் **சமண** மதத்தையும் தோற்றுவிக்க வாய்ப்பாயின; உலக மக்களுக்குப் பொதுநல நோக்கில் தொண்டுகள் பல புரிய வழிவகைகளை உண்டாக்கின. நாத்திக மதங்களேயெனினும், பௌத்தமும் சமணமும் அறக்கோட்பாடுகளைக் கைக்கொண்டு சத்தியத்தையும், கொல்லாமையையும் போதித்தன. அந்த மதத்தினர் புரிந்த தவத்தால் உலகில் உயிர்களுக்குச், சிறப்பாக அயலவர்க்குத் தீங்கில்லை. ஆனால், ஆத்திக மதமாகிய இந்து மதத்தில் தவம் புரிந்தோர் வரலாறுகளைக் காணின், நல்ல விளைவுகளும் உண்டு; தீய விளைவுகளும் உண்டு.

அரக்கர்களும், அசுரர்களும் புரிந்த தவங்களும், அவை காரணமாகக் கடவுளர்களிடம் அவர்கள் பெற்ற வரங்களும், முறையான பண்பாட்டுக் கூறுகளைச் சிதைக்கக் கூடியவையாகவும் உள்ளன. அது தொடர்பாகச் சிறிது காண்போம்.

இராவணன் புரிந்த கடுந்தவங்காரணமாக அவனுக்குத் திருவருளால் பல சிறப்புக்கள் கிட்டின. இதனை நினைவுகூரும் வகையில் **கம்பர்**, இராமாயணத்தில்,

"முக்கோடி வாணாளும் முயன்றுடைய
 பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படா
 யெனக் கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்துஞ் செருக்கடந்த
 புயவலியுந் தின்று மார்பிற்
புக்கோடி உயிர்பருகிப் புறம்போயிற்(று)
 இராகவன்றன் புனித வாளி"[1]

எனக் கூறிக்காட்டுகிறார். இதற்கு முன்னரே **சுந்தரகாண்டத்தில்** தவத்தால் அவன் பெற்ற இலங்கை வளத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனை,

1. இராமாயணம், யுத்தகாண்டம், இராவணன் வதைப்படலம், 195

'மரம் அடங்கலுங் கற்பகம் மனையெலாம் கனகம்
அரம டந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர்
உரம டங்கிவந் துழையரா யுழல்பவ ரொருவர்
தரம டங்குவ தன்றிது தவஞ்செய்த தவமால்' '[1]

என வருஞ் செய்யுளால் அறியலாம். பல வளங்களையும் பேறு களையும் தவத்தால் ஒருவன் பெற்றாலும் வாழ்க்கையில் தடம் புரண்ட வாழ்வினனாகச் செயற்பட்டால் அழிவு நேரிடும் என இயைபு படுத்தி அறியும்வண்ணம் இவ்விரு செய்யுட்களையும் கம்பர் பாடியுள்ளமை போற்றற்குரியது.

11-1 நோன்புகள்:

உலகமெங்கும் பல மதங்களிலே பல்வேறு நோக்கங்களுடன் **நோன்புகள்** நடைமுறையில் இருந்து வருகின்றன. எனினும், **இந்து** மதத்தினரும் **இசுலாமிய** மதத்தினரும் பின்பற்றி வரும் நோன்புகளே பலரின் நாட்டத்தைக் கவர்வனவாக உள்ளன.

தவத்திற்கு அடுத்தபடியாகக் கருதப்பெறும் **நோன்பு** அல்லது **விரதம்,** உடலை வருத்திக் கொண்டு, இறைச் சிந்தனையில் போக்குதலிலே நாட்டங்கொண்டுள்ளது. தவத்தினை விளக்க வந்த **திருவள்ளுவர்,**

'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு''

என எழுதிச் செல்கையில், **'உற்றநோய் நோன்றல்'** எனும் பகுதியின் விளக்கமே நோன்பாக மலர்தலை உணரலாம். நோன்பு காரணமாக மன அடக்கத்திற்கும் மொழித் தூய்மைக்கும் செயல் தூய்மைக்கும் வழி வகுக்கப்படும். ஆடவர்க்கெனவும் மகளிருக் கெனவும் இருபாலருக் கெனவும் நோன்புகள் பலவகைப்படும்.

பௌத்த மதத்தினரும் சமணமதத்தினரும் நோன்பு களியற்றிய செய்திகள் உண்டு. உண்ணா நோன்பிருந்து சமணர் கள் தம்மையே சிதைத்துக் கொண்ட செய்திகளும் வரலாற்றில் உள்ளன. அத்தகைய நடைமுறை நிகழ்ச்சிகளைத் தமிழகத்தில் இக்காலத்திலே காண இயலாது.

2. இராமாயணம், சுந்தரகாண்டம், ஊர்தேடுபடலம், 105

இசுலாமியர் நோன்பிற்கெனவே **ரம்சான்** (ரம்லான்) **மாதம்** முழுவதையும் ஒதுக்கி வைத்துள்ளனர். பகல் முழுவதுமே இறைச் சிந்தனையில் கழித்து, இரவின் முற்பகுதியில் **நோன்பு திறத்தல்** எனுங்கொள்கையுடன் மிகச் சிறிதளவே உணவு உட்கொள்ளு தலை நியதியாகக் கடைப்பிடிக்கின்றனர்; இந்த நோன்பினை இசுலாமியர் மிகச் சிறந்த சமயக் கடமையாகக் கருதிவரு கின்றனர். இந்த நோன்பு காரணமாக ஆண்டு முழுதுக்கும் வேண்டிய உடல்நலத்துக் குகந்த புத்துணர்ச்சியையும் வைராக்கியத்தையும் தெம்பையும் பெற்றுக் கொள்வதாக நம்புகின்றனர்.

இந்து மதத்தினர் **நைமித்திய கிரியைகள்** என்ற அடிப்படை யில் பல நோன்புகளைப் பின்பற்றி வருகின்றனர்.

மகளிர் சிறப்பாகக் கன்னியர் நோற்கும் **பாவை நோன்பு** என்பது சைவம் வைணவம் முதலிய சமயத்தினர்களுக்கும் சமணக் கோட்பாட்டினருக்கும் ஒரு மாத அளவில் கடைப்பிடிப் பதாக இருந்து வந்துள்ளது. இந்த நோன்பின் தொடர்பாகச் சைவத்தில் **திருவெம்பாவை**, வைணவத்தில் **திருப்பாவை**, சமணத் தில் **திருவெம்பாவை** ஆகிய நூல்கள் தோன்றியுள்ளன. இக் காலத்திலே சைவர்களும் வைணவர்களும் **மார்கழி** மாதத்தில் பாவைப் பாடல்களைப் பாடிய வண்ணம் இந்நோன்பினைச் சிலரேனும் முறையாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

மகளிர் தமக்கென ஆடி மாதத்தில் **பதினெட்டாம் பெருக்கு** நோன்பினையும், ஆடி அல்லது ஆவணியில் பௌர்ணமிக்கு முன் **வரலட்சுமி** நோன்பினையும், ஆவணியில் விநாயகர் சதுர்த்தசிக்கு முன் நாளில் **சுவர்ணகௌரி** நோன்பினையும் புரட்டாசியில் **நவராத்திரி** நோன்பினையும், ஐப்பசியில் **கேதாரி** நோன்பினையும், கார்த்திகை துவாதசியன்று **துளசி** பூசை, யையும், மார்கழியில் **திருவாதிரை** நோன்பினையும், தை மாதத்தில் **மகரசங்கராந்தி** நோன்பினையும், மாசியில் **காரடையான் நோன்பு** எனும் காமாட்சி பூசையையும், மாசியும் பங்குனியும் சேரும் தினத்தன்று **சம்பத் கௌரி** விரதத்தையும்

கொண்டாடி வருகின்றனர். இவையேயல்லாமல், ஒவ்வொரு **வெள்ளிக்கிழமையிலும்** நோன்பியற்றிச் சமயப் பண்பாட்டினை மகளிர் காப்பாற்றி வருகின்றனர். திருமணமான மகளிர் தம் கணவரின் இசைவினைப் பெற்றே நோன்பு நோற்க வேண்டுமென்பதும், அப்படிச் செய்யாவிடில் நோன்பின் பலன் கிட்டாது என்பதும் சமய நூல்கள் வலியுறுத்துங் குறிப்பாகும்.

ஆடவர்கள் தம் மனம் மொழி மெய்த் தூய்மையுடன் பிற உயிர்களுக்கு உறுகண் (துன்பம்) செய்யாமல், '**காப்பதே விரதம்**' எனுங்கொள்கையினராய் வாழ்தல் வேண்டும். அவர்கள், **கலைமகள் விழா** அல்லது ஆயுத **பூசை**யன்று நோன்பிருத்தல் வித்தைக்கும் தொழிலுக்கும் நல்லது என்பர். தந்தையை இழந்தவர் **அமாவாசை** விரதத்தையும், தாயை இழந்தவர் **பௌர்ணமி** விரதத்தையும் கடைப்பிடிப்பர்.

ஆடவர்க்கும் மகளிருக்கும் பொதுவாக **விநாயக சதுர்த்தி, கிருத்திகை, சஷ்டி, மாதப்பிறப்பு, பிரதோட காலம், கிரகணதீர்த் தோற்சவம், சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, கார்த்திகைச் சோமவாரம்** முதலிய **நோன்பு**களைக் கடைப்பிடிப்பர். இவையல்லாமல் சமய நோக்கில் தீமிதி முதலிய திருவிழாக்கள் தொடர்பாகப் பல நோன்புகள் உள்ளன. அண்மைக் காலத்தில் **சபரிமலை ஐயப்பன்** வழிபாட்டு நோக்கில் மாலை போட்டுக் கொண்டு ஒரு மண்டலமோ சில நாள்களோ முறையாக நோன்பிருப்பது சிலரின் வழக்கத்தில் இருந்து வருகிறது.

எவ்வாறோ இத்தகைய நோன்புகளெல்லாம் மக்களின் உடல் நலத்தையும் மன வளத்தையும் ஆன்மிக நலத்தையும் போற்றிப் பாதுகாக்கத் துணை நிற்கின்றன.

11-2 மதங்களில் வீடுபேறு அல்லது முத்தி நிலை:

உலகிலுள்ள பல மதங்களும் வீடுபேறு பற்றிப் பல கொள்கைகள் உடையனவாகக் **காணப்படுகின்றன**. கிறித்துவமதத்தில் பரமண்டலம்என்றும், **இசுலாமியத்தில் 'ஜன்னத்'** என்றும், பௌத்தத்தில் **பரிநிர்வாணம்** என்றும், சமணத்தில் **நிர்வாணம் அல்லது சிவகதி** என்றும், இந்து-வைணவ சமயத்தில் **வைகுண்டம்**

சொர்க்கம் அல்லது **பரமபதம்** என்றும், இந்து - சைவத்தில் துறக்கம் அல்லது **வீடுபேறு** என்றும் கூறப்படும் கடவுளருலகம் உயிர்கள் இறுதியில் அடைய வேண்டிய குறிக்கோளிடமாகும்.

இந்து மதத்திலுள்ள சில சமயங்கள் உணர்த்தும் வீடுபேற்று நிலைகளைச் சிறிது காண்போம்.

சைவசமயத்தில் அத்துவிதக் கொள்கை உயிர்நாடியாக விளங்குவதைப்பலரும் அறிவர். முத்திநிலையில் **சிவமும் சீவான்மாவும்**, **பழமும் சுவையும்** போலவும், **மலரும் மணமும்** போலவும், **யாழும் இசையும்** போலவும், ஒன்றாகாமல் - இரண்டாகாமல்- ஒன்றும் இரண்டும் இன்றாகாமல் - **அத்துவிதமாய்** இயைந்து நிற்கும் (சைவசித்தாந்தம் கூறும் அத்துவிதத்துக்கும், சங்கரரின் மாயாவாதம் கூறும் அத்துவிதத்துக்கும் உள்ள வேறுபாட்டினை ஈண்டு உணர்தல் நலலது). ''வியாபகமும் வியாப்பியமுமான இருபொருள் ஒரு தன்மையாஞ் ஒற்றுமைப்பட்டு நிற்கும் தாதான்மிய சம்பந்தமே **அத்துவிதம்** எனப்படும். சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடைய **உயிர்** பெத்த நிலையில் ஆணவத்தோடு இயைந்து அதன்வழி நின்றாற் போல, முத்திநிலையிற் சிவத்தோடு இயைந்து அதன் வழி நிற்கும். இதனை,

> ''ஆணவத்தோ டத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்
> தாணுவினோ டத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ?''[1]

எனத் **தாயுமானவர்** அருளிச் செய்திருத்தல் கொண்டுணரலாம். எனுங்குறிப்பு உளங் கொள்ளத்தக்கது.

முத்தியிலேயே இந்திராதி பதங்களைப் பெறும் **பதமுத்தி** ஓரளவே சிறப்புடையதெனவும், பரம் பொருளோடு ஒன்றி நிற்கும் வீடுபேறாகிய **பரமுத்தி** மிக உயர்ந்த சிறப்புடையதெனவும் கூறுவர்.

வைணவ சமயத்தில் சிறப்பான **விசிட்டாத்துவைதக் கொள்கை** உயிர் நாடியாக விளங்கும். அந்தச் சித்தாந்தப்படி ஈசுவரன் **கணக்கற்ற திவ்விய கலியாண குணங்களையுடையவன்** என்பதும்,

1. திருக்கோயில் (திங்களிதழ்), அக்டோபர், 1969

சடப் பொருள்களையும் ஆன்மாக்களையும் உடலாகக் கொள்ளும் உயரிய ஏக பரம்பொருளாவான் என்பதும், உயிர் களின் மீதுள்ள அருளால் அவற்றைக் கரையேற்றுவதிலே நாட்டங்கொண்டவன் என்பதும் அறியலாகும். ''சீவன் தன் உண்மையியல்பை யுணர்ந்து, மூவகைத் துயரங்களினின்றும் விடு பட்டு, ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமைசெய்து, பிரமானுபவத்தில் அந்தமில் பேரின்பத்து அழுந் துதலே முத்தியாகும்.''[1] எனக்கூறும் குறிப்பு மிகவும் மனங் கொள்ளத்தக்கதாகும். அந்த முத்தியை நாடுபவன் கொள்ளக் கூடிய இயல்புகளாக, 1. தூய உணவு உண்ணல் (விவேகம்), 2. ஆசையறுதல் (விமோகம்), 3. பிரமபாவனை (அப்பியாசம்) 4. ஐவகை வேள்விகளை இயற்றல் (கிரியை), 5. அறநெறி நிற்றல் (கல்யாணம்), 6. செயலற்று ஏங்காமை (அனவஸாதம்) 7. மகிழ்ச்சியில் மயங்காமை (அனுத்தர்சம்) என்பவற்றைப் பயின்று வருதல் வேண்டும். இதுவே முத்தியை யடைதற்குரிய பத்தி நெறியாகும்.

வைணவ சமயத்தில் துவைத சித்தாந்தக் கொள்கை மத்துவாசாரியாரால் போதிக்கப்பட்டது. குணமும் வடிவுமுடைய திருமாலே பர தெய்வம். அவர் உயிர்களின் மீது பேரன்புடைய ராய் அவரவர்களுக்கு வேண்டியவற்றை வினைகளுக்கும் குணங் களுக்கும் தக்கபடி அளித்து உயிர்களைப் பாதுகாத்து வருகிறார். ''சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களும் வெவ்வேறானவை. அவற்றிற்குப் பஞ்சபேதங்கள் உண்டு, ஈசனாகிய விஷ்ணு எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த சுதந்திர புருடர்; ஈடும் எடுப்பும் அற்றவர். ஆன்மாக்களும் உலகமும் அவர்க்கு வெளியேயுள்ளன; பரதந்திரமாயிருப்பன. அவர் தமது சங்கற்பத்தால் உலகைப் படைக்கிறார். சீவர்கட்குள் சத்துவ குணமுடையோர் வைகுண்டத்தும், தமோகுணமுடையோர் நரகத்திலும் எப்போதும் வாழ்வர். இரஜோகுணமுடையோரே முத்தியை நாடுவர். முத்தி விருப்புடையோர் ஈசற்கும் தமக்கும் உள்ள ஆண்டான் அடிமை சம்பந்தத்தை உணர்ந்து, ஈசனது,

1. கலைக்களஞ்சியம், தொகுதி -6 பக், 625

அளப்பரும் பெருமையைக் **கேட்டலிலும், சிந்தித்தலிலும்,** தெளிதலிலும் ஈடுபவர்,"[1] எனவருங் குறிப்பு முத்தியடிப்படையில் இந்து மனங்கொள்ளத்தக்க பத்திநெறியெனலாம். அது நிற்க மதத்தில் வேறொரு அணுகுமுறையும் உளது; அது வருமாறு

முத்தியடைவதிலே இருவகைகளை வேறு கோணத்திலும் கண்டு உரைப்பது உண்டு. அவ்வாற்றான், **முத்தியடைதல்** என்பது இறைவனுடன் ஒன்றிய நிலையில் பேதமற்று இருப்பது ஒரு வகையாகவும், **சாலோக்யம், சாரூப்பியம், சாமீபம், சாயுச்சியம்** என்ற நான்கினுள் ஏதாவது ஒன்றனைப் பெற்றாலும் போது மென்று கொள்வது மற்றொரு வகையாகவும் கருதப்படும் இத்தகைய எந்த முத்திப்பேறும் ஒருவனுக்கு மீண்டும் பிறவி யில்லாமற் செய்யக்கூடிய ஆற்றல் வாய்ந்தது என்று கூறுவர்.

இறைவனிருக்கும் இடத்தை அடையக்கூடிய பேற்றால் **சாலோக்யம்** சித்திக்கும். இறைவனது அருட்பண்பால் அவனுக்குப் பணிவிடை செய்யும் நிலையில் அவனோடு ஒன்றலால் **சாரூப்யம்** சித்திக்கும். இவ்வாறு இறைவனுக்கு அருகிலேயே இருந்து கொண்டு அவனது அருள்பெற்று மகிழ்கையில் **சாமீபம்** சித்திக்கும். இறைவனது புகழ்பாடி அவனை அனுபவித்து ஆனந்தப்படுவதால் அவனுடன் ஒன்றுவதால்- **சாயுச்சியம்** சித்திக்கும் என விளக்கங் காண்பர்; எனினும், சாயுச்சியமே சிறந்த முத்திப்பேறாகும்.

சங்கராச்சாரிய பகவத் பாதர் ஈசுவரனைக் குறித்துத் தோத்திரம் புரிகையில், "ஏ பரமேச்வரா! இந்த சாலோக்யம் சாரூப்பியம், சாமீபம், சாயுஜ்யம் என்பவைகளை யெல்லாம் நான் உன்னிடம் வந்து அனுபவிக்க வேண்டும் என்பதே இல்லை. அவைகளையெல்லாம் நான் இங்கேயே அனுபவித்துக் கொண்டு ஆனந்தமாக இருக்கிறேன். உன்னைத் தரிசிக்கிறேன், நீ வேறு நான் வேறு என்றில்லாமல் **என்னில் உன்னையும் உன்னில் என்னையும்** காண்கிறேன். எல்லாவற்றிலும் உன்னையே காண் கிறேன். ஆனந்த வெள்ளம் பொங்குகிறது. உன்னிடம் வந்த பிறகு, உனக்குக் கைங்கர்யம் செய்வது, தரிசிப்பது, துதிப்பது, உன்னோடு ஒன்றாகி விடுவது ஆகிய நான்குவித ஆனந்தத் தையும் நான் இங்கேயே அனுபவிக்கிறேன்" என்று அடிக்கடி

1. கலைக்களஞ்சியம். தொகுதி -6 பக் -625

வேண்டிக்கொள்வார் என்பது ஈண்டு இயைபுடன் சிந்திக்கத் தக்கது.

11.3. மதப்பண்பாடு: குருவருள்:

தன் வாழ்க்கையை ஒருவன் தன்னியல்பாக உலகியலில் கொண்டு செல்லலாம்; உயிருய்தியைக் கருதி அருளியலிலும் கொண்டு செல்லலாம். இஃது அவரவருடைய ஈடுபாட்டினைப் பொறுத்ததாகும். உலகியலில் இல்லற வாழ்வு நடத்துபவர், உயிருய்திக்குரிய அருளியலில் ஈடுபடுவதென்பது இயலாதது என்றும், எளிதன்று என்றும் பொதுவாகக் கூறுவர். மனத்தையும் ஐம்பொறிகளையும் கீழான ஆசைகளுக்கு ஆட்படுத்தும் உலகியலானது அருளியலுக்குத் தடையாக அமையுமாதலின், அதனை விட்டு விலகியிருப்பதே செந்நெறி என்றும் விளக்கந் தருவர். ஆனால், இல்லறமாகிய பொருளியலில் இருந்து கொண்டே துறவறமாகிய அருளியற் பயனையும் அடையலாம் என்பதும் உண்மையெனத் தெளிதல் நல்லது. இதனை வலியுறுத்தும் வகையில் பல்வேறு சமயங்களில் தோன்றிய அருட்செல்வர்கள் பலர் குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டும், இல்லற மாட்சியை வலியுறுத்தியும் வந்துள்ளனர்.

திருத்தொண்டர் புராணத்தில் நாயன்மார்களுள் சிலர் குடும்ப வாழ்விலிருந்து கொண்டே அருளியலாகிய சமயச் செந்நெறியில் ஊற்றங்கொண்டு வாழ்ந்தமையை ஈண்டு இயைபுடன் நினைவுகூரலாம். எடுத்துக்காட்டாக, **மங்கையர்க்கரசியார்** தம் கணவர் **நின்றசீர்நெடுமாறன்** எனும் கூன்பாண்டியனைச் சமணப்பிடியிலிருந்து மீட்டதோடன்றிச் சைவ அருளியலில் தோய்ந்திருக்கவும் செய்தார் என்பதை மனத்திற் கொள்ளலாம்.

இயல்பாகவே செந்நெறியாஞ் சமயநாட்டங் கொண்டு இல்லறத்தினரும், துறவறத்தினரும் வாழலாம் என்பது ஏற்புடையதே; எனினும் இல்லறத்தினருக்கும் துறவறத்தினருக்கும் நல்ல வழிகாட்டிகள் அமைவது மிகச் சிறந்ததாகும். தீயவழியில் செல்ல வொட்டாமல் நன்னெறியில் செலுத்தும் அறிவு' வேண்டற்பாலது; நல்லறிவு என்பதன் திரண்ட வுருவமே தெளிவுள்ள ஆசிரியர் எனலாம். உலகியலில் ஆசிரியர் என்பதையே உயர்த்தி அருளியலில் **குரு** அல்லது **ஆசாரியர்** என்பர்.

பொதுவாகச் சமய நெறிகாட்டும் ஆசாரியர் அல்லது குரு, ஆன்மநலஞ் சிறந்து, தெய்வநல ஆற்றலின் திருவடிவமாகவே போற்றப்படுகிறார். உலகத்திலுள்ள மதங்கள் பலவற்றிலும் குரு என்பவர்க்கென மிகச்சிறந்த இடம் உண்டு.

ஆத்திகமே யன்றி நாத்திகக் கோட்பாடுடையவர்களுக்கும் குரு என்ற ஒருபீட அமைப்பு உண்டு. இந்துமதத்திற்கு எதிரிடையாகத் தோன்றிய சீக்கிய பதத்திற்குக் **'குருமார்களே'** தெய்வத்திற்குச் சமமான இடத்தைப் பெறுகின்றனர். பௌத்த மதத்தில் **புத்தபிட்சுக்களும்**, சமணக் கொள்கையில் **தீர்த்தங்கரரும் ஆசாரியர்களும்** தெய்வங்களைப் போலவே மதிக்கப்படுகின்றனர்.

ஆத்திக மதங்களாகிய சைவத்திலும் வைணவத்திலும் கிறித்துவத்திலும் இசுலாமியத்திலும் குருமார்களுக்குரிய தோற்றத்தினையும் ஏற்றத்தினையும் சிறிது விளக்கமாகக் காண்போம்.

சைவ சமயத்தினர் தாம் சிறப்பாகக் கடைப்பிடிக்குஞ் சித்தாந்த நெறியில் **'குருவருளின்றித் திருவருள் இல்லை'** என்றே அழுத்தந் திருத்தமாக நம்பிக்கை கொண்டுள்ளனர். இறைவனே **குருவடிவிலே** மானுடச் சட்டையணிந்து வந்து, தாம் பிழை நெறியில் செல்லும் போது தடுத்தாட் கொண்டு நன்னெறி செலுத்துகிறார் என்பது அடியவர்களின் அழுத்தமான நம்பிக்கை. **திருவாதவூ ரடிகளிடம்** இறைவனே குருவாக எழுந்தருளிக் **குருந்த மரத்தின்** நிழலில் அவரை அருளியலில் வேதித்து ஆட்கொண்டருளினான் என்பதும், **தாயுமானவரிடம்** இறைவனே மௌன குருவாக எழுந்தருளி ஆட்கொண்டருளினான் என்பதும் வரலாற்று நிகழ்ச்சிகளாகும்.

வைணவ சமயத்தினர் தாம் கடைப்பிடிக்கும் **பாஞ்சராத்திர நெறியில் ஆசாரியர்களே தெய்வநலத் திருவுருவங்கள்**, என்ற அழுத்தமான கோட்பாடு உடையவர்கள். **இராமானுசர்** எனும் **உடையவரிடம்** பெருத்த ஈடுபாடு கொண்டவர்களாய், அவருக்கெனவே திருமால் கோயில்களில் தனிச் சன்னிதியமைத்து வழிபட்டு வருதலைக் காணலாம். தம்குருவிற்காக எந்தத் தியாகமும்

செய்யக் கூடியவர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டுக்கள் பலவாகக் காணலாம். தம் குருவாகிய இராமனுசர்நிமித்தம் **கூரத்தாழ்வான்** தம் இரு கண்களையும் பறிகொடுத்தார் என்பதை வைணவ வரலாற்றில் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

கௌமாரத்தில் சிறந்த அருளாளராகிய **அருணகிரிநாதர்** தம் இறைவன் குருவாக எழுந்தருளி ஆட்கொண்ட பாங்கினைப் பல இடங்களில் கூறிக் காட்டுகிறார்,

11.4. இயற்கை கடந்த ஆற்றல்கள்: (Super Natural Elements)

உலகளாவிய பல மதங்களையும், மார்க்கங்களையும் ஆராய்ந்தால், இயற்கை கடந்த ஆற்றல்கள் பல்வேறு உருவ வகைகளில் மத வரலாற்றிலே தாக்கங் கொண்டிருப்பதையும், அவற்றை மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பதையும் காணலாம். சில ஆற்றல்கள் வரலாற்றில் இயைபுடன் உயிரோட்டத் தொடர்புகளை யுண்டாக்குதலையும் புரிந்து கொள்ளலாம். சடப்பொருள்களிடம் காணலாகும் இயற்கைகடந்த ஆற்றல்கள் ஒருபுறமிருக்க, உயிருள்ள சித்துப்பொருள்கள் தொடர்பில் சிலவற்றைச் சிறிது சிந்திப்போம். கிறித்துவமதத்தில் **தேவதூதர்** (Gabriels, Angels), **வன தேவதைகள்** (Fairies), **வேதாளங்கள்** (Devils) முதலியவை இயற்கை கடந்த சில ஆற்றல்கள் என அறியலாம்.

இசுலாமிய மதத்தில் **மலக்குகள்** (வானவர்கள்), **ஜிப்ரேயல், மிகாயேல், அஸ்ராயேல், இஸ்ரபேல்** ஆகிய தேவதூதர்கள், **ஹிப்லிஸ்** எனும் சைத்தான் போன்றவர்கள் வியத்தகு முறையில் இடம் பெறுதலைக் காணலாம்.

பௌத்த மதத்தில் கௌதம புத்தரைப் பின்பற்றிப் பரி நிர்வாணமெய்தும் அருட் சான்றோர்களெல்லாம் வியத்தகு **புத்தர்**களாகவே போற்றப் பெறுகின்றனர். மணிமேகலைக் காப்பியம் வாயிலாக **மணிமேகலா தெய்வம், தீவதிலகை** போன்ற

வியத்தகு ஆற்றல்களுடையோரைக் காணலாம். சடமாகவும் சித்தாகவும் கருதத்தக்க **'கந்திற்பாவை'** மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் வியத்தகு ஆற்றலுடையதாகக் காப்பியப் போக்கில் அமைந்துள்ளது.

சமண மதத்தில் வானவீதியில் இயங்கும் **அந்தர சாரிகள், வன சாரிணிகள், சாரணர், இயக்கர்கள், விஞ்சையர்கள்** முதலியவர்கள் இயற்கை கடந்த ஆற்றல்களாகச் சமணக் கோட்பாடுகளுக்கு விளக்கம் தரப் பயன்படுகின்றனர்.

இந்து மதத்தில் வடநாட்டினரும், தென்னாட்டினரும் ஏற்றுக்கொண்டுள்ள இயற்கை கடந்த ஆற்றல்கள் பலவாகக் காணப்படுகின்றன. அவற்றுள் இலக்கியம் கலை ஆகியவற்றுடன் தொடர்பான சிலவற்றைச் சிறிது காண்போம். இதற்கியைபாக உலகப் பரிணாமத்தையும் அடிப்படையாகக் காண்பது பொருத்தமாகும்.

கடல் சூழ்ந்த இம் மண்ணுலகம், பிரிந்து பரந்துள்ள பிரபஞ்ச வெளியிலே- அண்ட சராசரத்திலே- ஒரு சிறு துளி என்ற உண்மையை உணர்ந்தால், எண்ணற்ற பல உலகங்கள் சாட்டையில்லாப் பம்பரம் போல் சுழன்று இயங்கிக் கொண்டிருப்பது வியப்புடன் தெரியவரும். மண்ணுலக மக்களைப் போல் பிற உலகங்களிலும் உயிராற்றலுடன் பல வகையினராய் உள்ளனர் என்று கருதுவது மதமரபுடன் ஒட்டிய அறிவியலாகும். இவ்வாறான ஜீவ வகைகளில் **யக்ஷர், கந்தர்வர், கின்னரர், கிம்புருஷர்** என்ற பல பிரிவுகள் உண்டு. இவர்கள் வானுலகில் வாழ்பவர்களாகக் கருதப்படுகின்றனர். கந்தர்வர்கள் ஆணும் பெண்ணும் அதிசயமான அழகு பெற்ற தேவர்கள். கின்னரர்கள் ஆடல் பாடல்களில் தேர்ச்சி பெற்றவர்கள் இந்திர சபையில் கந்தர்வப் பெண்களின் நடனமும், கின்னரர்கள் பாடலும் நடக்கும் என்று இதிகாச புராணங்களில் காணலாம். இதே போல் இயக்கர்களும் ஓர் இனத்தவர். இயக்கர்கள் மக்களிடம் நல்லியல்புடன் நடந்து கொள்வார்கள். இயக்கர்களே, எல்லாவுலகிலுமுள்ள எல்லாச் சொத்துக்கும் உரிமையாளர்கள். அந்நிலையில் இயக்கர் குலத் தலைவனே **குபேரன் ஆவான்** என்பது இலக்கியங்களால் அறியலாகும் செய்தியாகும்.

சமயக் கலைப் பண்பாட்டில் மேலே கண்ட இயற்கை கடந்த ஆற்றல்களேயல்லாமல் பல உண்டு. சமய இலக்கியங்களில் அவற்றின் பயன்பாட்டினையும், அதன் வாயிலாக அமைந்துள்ள பண்பாட்டினையும் விளக்கமாகப் புலவர்கள் கூறியுள்ளனர்.

11.4.1 இயக்கர்கள்;

''நான்முகன் படைப்பிலே உண்டானவர்களுள் நான் முகனைப் பட்சிக்க வேண்டுமென்றவர் **இராக்கதர்** எனவும், இரட்சிக்க வேண்டு மென்றவர் **இயக்கர்** எனவும் பெயர்.''1 எனக் **கருப்பக்கிளர் சு. அ. இராமசாமிப் புலவர்** விளக்கிச் செல்வது காண்க, யக்ஷர் எனும் வடசொல்லே இயக்கர் எனத் தமிழில் அமைந்துள்ளது.

வடமொழியில் யக்ஷன், யக்ஷி ஆகியோரே தமிழில் இயக்கன் இயக்கி என வழங்கப்படுகின்றனர். சமணக் காப்பியங்களின் போக்கிலே நிகழ்ச்சிகளை இணைக்க இயக்கன் இயக்கி ஆகியோர் பயன்படுத்தப் பட்டிருத்தலைக் காணலாம். எடுத்துக் காட்டாகக் சில காண்போம்.

பெருங்கதையில் ஓர் இயக்கன், உதயணனிடம் வந்து. பத்திராபதியென்னும் பெண்யானையாக வந்தவள் ஒரு தெய்வ மகள் என்றும். அவளை நினைந்தால் உடனே வந்து பொறியை எளிதில் இயற்றித் தருவாள் என்றும், அவளை நினைப்பாயாக என்றும் கூறுகிறான்; அவளை நினைத்தற்கு ஒரு மந்திரத்தையும் உபதேசித்து விட்டுச் செல்கிறான்; இதனைப் பெருங்கதை நரவாண காண்டம், **'இயக்கன் போனது'** எனும் இயலில் காணலாம்.

இயக்கி மயக்குமியல்பினள் என்பது சமணக்கோட்பாட்டின் நம்பிக்கை. இதனைப் பயன்படுத்திக் **கொங்குவேள்**, வயந்தகன் கூற்றாக,

''ஆடலும் நகையும் பாடலும் விரைஇ
மயக்கமில் தேவி வண்ணங் கொண்டோர்

1 சிறப்புப் பெயரகராதி, பக். 66

இயக்கி யுண்டீண் டுறைவதை யதற்கோர்
சாப்பமை மந்திரங் கற்றெனன் யானென''[1]
எனப் பாடிச் செல்வதைக் காணலாம்.

சிலப்பதிகாரக் காலத்தில் இயக்கி சமணமதத் தெய்வமாக விளங்கி மக்களின் வழிபாட்டை ஏற்றிருக்கிறாள். இதனை,

''அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்
பான்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோள்''[2]

எனவரும் அடிகளால் அறியலாம். ஈண்டு, ஆயர் முது மகளாகிய **மாதரி**, இயக்கிக்குப் பால்சோறு படைத்து வழிபட்ட செய்தி அறியக் கிடக்கிறது. கொல்லாமையை யுணர்த்தும் சமணமதக் கோட்பாட்டிற் கிணங்க இயக்கி, பால் சோற்றுப் படையலையே ஏற்கும் இயல்பினள் என்பதும், சில சிற்றூர்ப் புறத் தெய்வங்களைப் போல ஊன் சோறு ஏற்காதவள் என்பதும் அறியலாகும் குறிப்பாகும்.

வடமொழிக் காப்பியங்களில் கூறப்படும் இயக்கர்கள், தென்மொழிக் காப்பியங்களிலும் இடம் பெறலாயினர். பண்பாட்டுக் கலப்புக் காரணமாக நாட்டுப்புறவியல் வழி பாட்டிலும் தமிழ்நாட்டில் இயக்கர் வழிபாடு இடம் பெற லாயிற்று; எடுத்துக்காட்டாகக் **குமரி மாவட்டத்தில்** சில கிராமங்களில் **இயக்கி வழிபாடு** இருந்து வருதலைக் காணலாம். ''குமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளிலுள்ள சில கிராமங் களில் **இயக்கி**, யச்சி (யக்ஷி) என்னும் பெயர் பெற்றுள்ளமை ஈண்டு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். எனவே, பண்டைத் தமிழகத்தில் சமண சமயத்தவரால் வழிபடப்பட்டு வந்த இயக்கி ,இந்து சமயத்தவரால் தற்போது இயக்கி அல்லது **இசக்கி** என்ற பெயரால் வழிபடப்பட்டு வருகிறதென்பது தெளிவாகும்,''[3] என **டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன்** எழுதிச் செல்லுங் குறிப்பு மனங்கொள்ளத்தக்கதாகும்.

1. பெருங்கதை, வத்தவகாண்டம், வாசவதத்தை வந்தது, 114-117
2. சிலப்பதிகாரம், அடைக்கலக் காதை, 115-117
3. கோயிலும் இறைவழிபாடும், பக். 89

சித்து விளையாடுதலில் சைவ சமயத்திற்கு அடிப்படையில் நம்பிக்கையில்லை; எனினும் சமணர்களை எதிர்த்துப் போட்டியிடும் வகையில் **சித்து** விளையாட்டினைச் சைவ சமயத்தினர் பல்வேறு வகைகளிலே ஏற்க வேண்டியவர்களாயினர். இவ்வாற்றான் சித்து விளையாட்டில் **வல்ல இயக்கனாகவும்** சிவபிரான் தோன்றியருளினார் என்பதைக் காண்போம்.

"தேவர்கோ அறியாத தேவதேவன்"[1] எனத் தொடங்கும் திருவாசகப்பாசுரத்துக்கு விளக்கம் அளிக்கையில், **பேராசிரியர் கோ. சுப்பிரமணியப்பிள்ளை**, "இந்திரனாலும் அறியமுடியாத மகாதேவன் சிவபெருமான் என்றார். இது கேனோபநிடதத்தில் கூறப்படும் ஒரு நிகழ்ச்சியைக் குறித்ததாகும். இந்திரன் ஒரு காலத்தில் தானே தலைவன் என்று தலைதருக்கினான். அப்பொழுது பரமசிவன் **ஓர் இயக்கனாகத்** தோன்றி ஒரு துரும்பை நட்டு, "இதை அசைத்தவரே முதற்பொருளாவார்" என்று சாற்றினார், இந்திரனும் மற்றைத் தேவர்களும் அதை அசைக்க முடியாது தளர்வுற்றனர். சிவபெருமான் மறைந்துவிட்டார். பின்னர், உமாதேவியார் வானிலே தோன்றி, **'இவ்வியக்கனே பிரமம்'** என்று கூறிச் சிவபெருமானின் பரம்பொருள் தன்மையை வெளிப்படுத்தினார்"[2] என எழுதிச் செல்லுதல் காண்க.

இக்காலத்திலும் திருநெல்வேலி குமரி மாவட்டங்களில் **இசக்கி** என்றும் **இசக்கிமுத்து** என்றும் மக்கட்பெயர்கள் வழங்கி வருதலைக் காணலாம். இதனால், சமணமதத் தாக்கம் இன்றும் ஒரு வகையில் இருந்து வருதலை உணரலாம்.

இயக்கர்களைத் தமிழ்நாட்டுக் கோயிற் சிற்பங்களிலும் தக்கவாறு பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் ஈண்டு நினைவிற் கொள்ளலாம்.

11.4.2 கந்தருவர்:

வீணை மீட்டும் ஆற்றலுடைய இசைவாணர்களாகிய இவர்கள் தேவலோகப் பாடகர்களாவர். தங்கள் பாடல்களினால்

1. திருவாசகம், திருச்சதகம், 30
2. மாணிக்கவிருந்து (மணிவாசகர் பதிப்பகம்), பக். 23.

தேவர்களைப் பெருமைப்படுத்தும் இவர்கள், மண்ணுலக வாழ் வினருக்கு இசைக்கலையின்பத்தை நல்குவதில் முன்னோடிகளாய் விளங்குபவர்கள். இன்றும் இசையில் வல்லவர்களைக் '**கந்தர்வ கானம்**', '**கந்தர்வகீதம்**' போன்ற சிறப்பு அடைமொழிகளால் பெருமைப்படுத்துவர். இசை நூலுக்குக் '**கந்தருவ வேதம்**' என்ற பெயரும் உள்ளதை நினைவிற் கொள்ளலாம்.

பண்டைய எண்வகை மணங்களுள் **கந்தருவ மணம்** என்பதும் ஒன்றாகும். கந்தருவ மணம் எனின், தலைவனும் தலைவியுந் தாமே எதிர்பட்டுக் கூடுங்கூட்டம் என்பது பலரும் அறிந்ததே.

கந்தர்வர்கள் உறையும் நகரமாகிய **கந்தருவ நகரம்** வானத்தில் தோன்றி மறையும் நகரமாகவே கருதப்படுகிறது. இதனை,

"இவ்வுலகங் கந்தருவ நகரமும் புன்கனவும் போலாம்"[1] எனவரும் செய்யுட் பகுதியால் அறியலாம்.

11.4.3. கின்னரர்:

பிரமன் பிரதிபிம்பத்திற் பிறந்தவர்; மானுட உருவத்தையும் குதிரை முகத்தையும் பெற்ற தேவ வகுப்பினர் கின்னரர் என **அபிதான சிந்தாமணி** விளக்கும். **கிம்-நரர்** என்பது வேறுபட்ட மனித வடிவமுடையவர் என்னும் பொருளில் கின்னரர் என ஆயிற்று. இவர்கள் விகாரமுடைய மானுட உருவங் கொண்டிருத்தலின் **குச்சிதநரர்** எனவும் வழங்கப்படுவர். ஆண் பெண் இணைந்த கின்னரர், '**கின்னர மிதுனம்**' எனப்படுவர். பறவைகளிலும் கின்னர மிதுனப் பறவைகள் உண்டு.

கின்னரர் இயக்கர் கிம்புருடர்களுக்கு மன்னனாகக் குபேரனைக் கூறுவர். "கிம்புருடர் போலவே கின்னரர்களுக்கும் குதிரைத்தலையுடைய நிலை உண்டென்று சில புராணங்களும், இவர்கள் இருவேறு வடிவங்களையுடையவர் என்று சில புராணங் களும் கூறுகின்றன.

1. பிரபோத சந்திரோதயம், 43, 5.

சிற்ப நூல்கள் கின்னரருக்கும், கிம்புருடருக்கும் உள்ள உருவ வேறுபாடுகளை விளக்குகின்றன. மனித உடலும் குதிரை முகமும் இருந்தால் கிம்புருடர் எனவும், மனித முகமும் பறவையின் கால்களும் அமையப் பெற்றிருந்தால் கின்னரர் எனவும் கூறப்படும்''[1] என்று கருதுகின்றனர். **சு. சுவர்ண காளீசுவரனும் டாக்டர் இரா. கலைக்கோவனும்.** ஆனால், **வை. கணபதி ஸ்தபதியார்,** ''கின்னரர் **'மனிதரே!'** என்பது; இப்பெயரின் பொருள் தேவஇனத்தவர், கருட முகம், மனிதவுடல், விலங்கின் கால்கள், இரண்டு கைகள், கைகளில் இணைந்த இறக்கைகள், தாமரை மலர் இணைந்த மகுடம், தாமரை மலர்மேனி, கையில் வீணை - இவ்விலக்கணங்களைக் கொண்ட படிமமே கின்னரப் படிமமாகும்''[2] என்று கூறிச் செல்கிறார்.

11.4.4. கிம்புருடர்:

பதினெண் தேவ கணங்களில் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர், கிம்புருடர். பிரமனின் மானச புத்திரராகிய புலத்தியரின் குமாரர்களாகக் கிம்புருடர் கின்னரர் கருத்தமர் ஆகியோர் கருதப்படுகின்றனர். கிம்புருடர் மரபில் வந்தோரும் கிம்புருடராகவே எண்ணப்படுவர்.

''கிம்புருடர் வசிக்குமிடம் இமயமலை தாண்டி ஏமகூடத்திற்குச் செல்லும் வழியில் உள்ள கிம்புருட வருடம் ஆகும். மனிதவடிவமும், குதிரை முகமும் உடையவர்களாதலால் (கிம் + புருடர்) வேறுபட்ட மனிதவடிவினர் எனப்பொருள்படும் கிம்புருடர் என்னும் பெயர் பெற்றனர்''[3] எனவும், ''கிம்புருடர்கள் குதிரை முகமுடையவர்களாதலால் இவர்களில் ஆண்களுக்கு **அசுவமுகர்** என்றும், பெண்களுக்கு **அசுவமுகி** என்றும் பெயர்கள் புராணங்களில் வழங்கப் பெறுகின்றன.

சிற்ப நூல்களில் இவர்கள்தம் வடிவங்களின் இலக்கணம் கூறப்பெறுகின்றது. திருக்கோயில் தூண்களிலும் மேல் விதானங்களிலும் கிம்புருடர் வடிவங்களின் அமைப்புக்களைக் காணலாம்.

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஏழு, பக். 477
2. சிற்பச் செந்நூல், பக். 291
3. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஏழு பக். 321

பௌத்தக் கோயில்களிலும் இவர்கள் வடிவங்களின் அமைப்புக் களைக் காணலாம். தேவ கணங்களில் இசையையே தம் தொழிலாகக் கொள்பவர்களுள் கிம்புருடரும் ஒருவராவார்''[1] எனவும் சு. சுவர்ண காளீசுவரர் கூறுகிறார்.

11.4.5 பூத கணங்கள்:

சிவபெருமான் பூதகண நாயகன் என்பது புராண அடிப் படையிலும், தத்துவ நோக்கிலும் காணலாகும் உண்மையாகும்.

விண், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களாகிய உலகத்திற்கு நாயகன் என்ற நோக்கில் சிவபெருமானைப் **பூதநாயகன்** எனக்கூறி மகிழ்வர். ஒவ்வொரு பூதத்தூடேயும் கலந்து காட்சியளித்தலின் பூதநாயகன் எனவும் இயம்பிக் களிப்பர். இஃது ஒரு புறமிருக்கப் புராண அடிப்படையில் பூதங்களைப் பல்வகைகளாகப் பகுத்து, அவற்றிற்கெல்லாம் நாயகத்தன்மை கொண்டிருத்தலின் 'பூதநாயகன்' என்றும், '**பூதகண நாயகன்**' என்றும் அவனைக் கூறிக் கொண்டாடுவர் அவ்வாற்றான், பூதகணங்களைப் பற்றிய விவரங்களைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

பூதகணங்களை மந்திரச் சாத்திரத்தில் பலவகைப்படுத்துவர். அவையாவன: வனபூதம், தேவ பூதம், அசுர பூதம், காந்தருவ பூதம், இயக்க (யட்சி) பூதம், சர்ப்ப பூதம், இராட்சச பூதம், கூஷ்மாண்ட பூதம், காம பூதம் கிரகண பூதம், வேதாலிபூதம், பிரமராட்சச பூதம், யதாகாரிஷ பூதம், அர்த்தபிதா பூதம், பைசாச பூதம், குருபூதம், விருத்த பூதம், சித்த பூதம், முனி பூதம் முதலியனவ. இவற்றின் போக்குக்கு விட்டுவிட்டால் மக்களுக்குப் பல தீங்குகள் நேரிடும். தன்னை நம்பும் அடியவர் களை அலமந்து நொந்து போகாமல் காப்பதற்காக இந்தப் பூத கணங்களையெல்லாம் தன் கட்டுக்குள் அடக்கி அவற்றின் தலைவன் எனும் நிலையில் சிவபெருமான் பூதகணநாயகனாக விளங்குகிறான். மேலும், எட்டுத்திக்குகளையும் காவல்புரியும் பொறுப்பில் திக்குப் பாலர்களையும், திக்கு யானைகளையும்,

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஏழு, பக், 321.

திக்கு மலைகளையும் கூறுவது போல **எட்டுத்திக்குப் பூதங்கள்** என்றும் கூறுவது புராண மரபு. அவ்வகையிலும் இறைவன் 'பூதகண நாயகன்' என்று கருதப்படுவது உண்டு.

சிவபெருமானது அருள் காரணமாக, உயிர்களுக்குத் தீங்கு செய்யும் பூதங்களும் நல்வழிப்பட்டு நன்மை செய்கின்றன என்று அடியவர்கள் உள்ளத்தில் பதியும் வண்ணம் சில உத்திகள் கலைஞர்களால் மேற்கொள்ளப்பட்டன. இந்நோக்கில், பூதங்களுள் சில இசைக்கருவிகள் இயக்கவும் இசைபாடவும் நின்றன என்பது கவின்கலையுலகில் காணப்படும் விளக்கமாகும். இதற்கியையச் **சுந்தரமூர்த்தி சுவாமிகள்,**

''ஆளும் பூதங்கள் பாட நின்றாடும்
அங்கணன் தனை''[1]

எனப் பாடிச் செல்வதும், இவ்வாறாகப் பாடியுள்ள அருளாளர் பாசுரங்களையும் ஒரு வகையில் தியான மந்திரங்கள் போலக் கொண்டு சிற்பிகள் தம் கற்பனைத் திறத்தினைக் கோயிற் சிற்பங்களில் காட்டியுள்ளனர்.

கோயிற் கட்டட மண்டபச் சுவர்களின் மேற்பத்திகளில் கூரைக்குக் கீழாக **யாளி வரிசைகளைப்** போலவே பூதகண **வரிசைகளையும்** சிற்பங்களாக அமைத்துள்ளனர். பூத கணங்கள் இசைக் கருவிகளை இயக்குங் காட்சிகளையும் நேர்த்தியாகக் காட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாகச் சோழர்காலப் பணிகளாகவுள்ள திருவாண்டார் கோயிலிலும் சுவரின் மேற்புறத்தில், கூரைக்குக் கீழாகத் தொடர்ந்து பூதகண வரிசை காணப்படுதலைக் காண்க. அவற்றுள் பலவகை வியத்தகு உருவங்களுடன் பூதகணங்கள் இசைக் கருவிகளை இயக்கியும் அவற்றிற்கேற்ப அபிநயம் பிடித்துக் கொண்டும் இருப்பது சிற்பியரின் கற்பனை நேர்த்தியைப் புலப்படுத்திக் காட்டும்.

''பூத வடிவங்கள் சிற்பக்கலை படைத்தளித்த கற்பனை வடிவங்கள். குறுகிய கைகால்களையுடைய இம்மனித உருவம் உண்மையிலேயே ஓர் அற்புதப் படைப்பேயாகும். சிவனுடைய

1. திருமுறை, 7, 62, 8

கணங்களாக இவை சமயத்துறையில் பெரும்பங்கு பெற்றிருப்பினும் இவற்றைச் சிற்பிகள் நகைச்சுவையைத் தோற்றுவிக்கும் வடிவங்களாகவும், சிற்பக் கட்டடங்களை அலங்கரிக்கும் அணிகளாகவும் படைத்துள்ளனர். அது மட்டுமல்லாமல் இவற்றைக் கூத்தாடும் பாவனைகளிலும் இசை பாடும் பாவாணர் கோலத்திலும் மிகச் சுவையோடும் இயற்றியுள்ளனர்"[1] எனச் **சிற்பி வை. கணபதி ஸ்தபதியார்** எழுதுங் குறிப்பு மிகவும் சிந்தித்துப் போற்றற்குரியது.

இவ்வாறான பூதங்கள் பற்றிய குறிப்புக்களைக் கொண்டு பௌராணிக காலத்தில் புராண அடிப்படையில் அவை உருவாக்கப்பட்டவை என நினைக்கலாம். ஆனால், சங்கம் மருவிய காலத்திலேயே பூதங்களைப் பற்றிய செய்திகள் தமிழ்நாட்டில் பரவிவிட்டன என்பதே உண்மை.

சிலப்பதிகாரத்தில் **வருண பூதம்** பற்றிய குறிப்புக்களைக் **கடலாடு காதையிலும்** (35), **அழற்படு காதையிலும்** (16-36, 37-51, 51-61, 62-68, 69-102) சுவையான வருணனையுடன் காணலாம். **இந்திர விழவூரெடுத்த காதையில்** வரும் **சதுக்க பூதம்** இயற்கை கடந்த ஆற்றலுடன் சித்திரிக்கப்படுகிறது. அல்லவை கடிந்து நல்லறங்காக்கும் பொறுப்பினை அந்தப் பூதம் மேற்கொண்டுள்ளதைத்.

"தவமறைந் தொழுகுந் தன்மையி லாளர்
அவமறைந் தொழுகும் அலவற் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காத நான்கும் கடுங்குர லெடுப்பிப்
பூதம் புடைத்துணும் **பூத சதுக்கமும்**"[2]

எனவரும் அடிகளால் அறியலாம். எனவே, தமிழ்ப்பண்பாட்டு அடிப்படையில் சிந்திக்கும் போதும், பூதங்களைத் தமிழ்ப் புலவர்களும், கலைஞர்களும் ஏற்ற இடங்களில் பயன்படுத்தி மக்களுக்குச் சுவையூட்டியுள்ளனர்.

1. சிற்பச் செந்நூல், பக். 292
2. சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை, 128 - 134

11.4.6. வித்தியாதரர்:

தேவர்களுக்குக் கட்டியுங் கூறிப் பெருமைப்படுத்தும் பாவாணர்களை வித்தியாதரர் என்பர். "இவர்களது மேனி கருஞ்சிவப்பு அல்லது மஞ்சள் நிறம் ஆகும். இவர்களை நின்ற அல்லது அமர்ந்த கோலத்தில் (சிற்பத்தில்) இயற்றலாம். அமர்ந்த கோலத்தில் இவர்கள் மண்டியிட்டு, பாத தலங்களை ஒன்றோடொன்று பின்புறத்தில் இணைத்து, முன்புறத்தில் முழங் கால்களைக் கலப்பை போல் மடக்கியிருப்பர். அந்நிலையில் கைகளிரண்டும் முழங்கால்களின் மேல் ஊன்றப்பட்டுக் கைத் தலங்கள் ஒருசேரக் குவிந்திருக்கும். இவர்கள் எல்லா அணி களையும் பூண்டு, நிருத்தம், வைணவம், வைசாகம் ஆகிய ஏதேனும் ஒரு கோலத்தில் நிற்பர்"[1] என்று சிற்பக் கலை நோக்கில் **வை. கணபதி ஸ்தபதியார்** விளக்கிச் செல்வது மனங் கொள்ளத்தக்கது.

12. நாகர் தாக்கம்:

இந்தியப் பெருநாட்டிலும் இலங்கையிலும் நாகர்களின் தாக்கம் பண்டு தொட்டே சமயவாழ்வில் அமைந்துள்ளது. நாகர்களுக்கு ஏற்றந்தரும் வகையில் புராணப் பின்னணியும் அமையலாயிற்று. **ஆதிசேடனாகிய** நாகமே இப்பூவுலகினைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்பதை முதற்கண் நினைவிற்கொள் வோம். அடுத்ததாகக், **காசிபருக்கும் கத்துருவுக்கும்** பிறந்தவர் களாக **வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பத்மன், மகாபத்மன், சங்கபாலன்,** குளிகன் எனப் பெரிய நாகர்கள் கூறப்படுகின்றனர். இந்த ஏழுவரின் சந்ததிகளே **நாகங்கள்** என்பர், மகப்பேறு விரும்புவோர் அரசமரத்து அடியில் காணலாகும் **நாகச் சிலைகளை** வணங்கிவருவது பண்டு தொட்டு வரும் வழக்கம் என்பது பலரும் அறிந்த செய்தி

சிறுதெய்வ வழிபாட்டில் நாகர்சிலைகள் அடங்கும்; எனினும், நாகம் **திருமாலுக்கு** இருக்கையும், படுக்கையும், குடையுமாகப் பயன்பட்டு வருதலையும், **சிவபிரானுக்கும் விநாயகருக்கும் காளிக்கும் மாரியம்மனுக்கும்** அணிகள் முதலிய பல நோக்கில்

1 சிற்பச் செந்நூல், பக், 291

பயன்பட்டு வருவதையும் நாடு நன்கறியும். நாகாபரணனாகிய சிவபிரான் **ஆடல்வல்லானாகத்** தில்லையில் எழுந்தருளிய நிலையில், அவனது திருக்கூத்தைக் கண்டு வழிபட வந்த **பதஞ்சலி முனிவர்** பாம்புடல் கொண்டவர். அவர் **யோகநெறிக்கு** முன்னோடியாக விளங்கிய நிலையில் **யோகசூத்திரம்** அருளியவர். அவர் தில்லையில் தங்கி வழிபட்ட திருக்கோயில் **அனந்தீசுவரம்** என்று வழங்குகிறது. அவருடன் தொடர்பு படுத்திய நிலையில் **நாகச்சேரிக்குளம்** இன்றும் விளங்குகிறது.

மேலும், **திருநாகேச்சுவரம், நாகப்பட்டினம் நாகர்கோயில்** முதலிய பல திருத்தலங்கள் நாகர்தாக்கம் கொண்டவையாகும். தென் நாட்டில் நாகர்தாக்கம் இன்றும் இருந்து வருதலை, ஆந்திரரும் கன்னடியரும் தமிழரும் **நாகபஞ்சமி** (சிரவணமாதப் பஞ்சமி) **விரதம்** இருத்தலால் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறெல்லாம் **நாகர்களுக்கு** ஏற்றம் இருந்து வருதலால், பாடல் பெற்ற சைவ-வைணவப் பெருங்கோயில்களிலும் அவர்களுக்கெனத்தனியிடந்தந்தும் வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

நாகர்சிலைகள் பல **வகைகளாக** அமைந்துள்ளமை பற்றிச் சிற்பக்கலைப் பண்பாட்டு அடிப்படையில் பின்னர்க் காண்போம்.

13 மதம் - தலப்பயணமும் வழிபாடும்:

ஒவ்வொரு மதத்திலும் மதச் சிறப்பிற்குரிய திருத்தலங்களைக் காணவும் தம் மரியாதையை -வழிபாட்டைச் - செலுத்தவுமான கடமை வற்புத்தப் பெறும்.

கிறித்துவர்கள் ரோம நாட்டுக்குச் சென்று போப்பாண்டவர் ஆட்சி செலுத்தும் புனித இடத்தைக் காண்பதில் மகிழ்ச்சி கொள்கின்றனர். அதிலும் சிறப்பாகக் **கிறித்து**பிரான் அவதாரஞ் செய்த **ஜெருசலம் பெதல்கம்** (Bethelham) திருநகரத்துக்கும்' கிறித்துவமதத்தைப் பரப்புதற்காக வசித்த **நாசரந்து** திருநகரத்துக்கும் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர்,

இசுலாமியர்கள் அரேபிய நாட்டிலுள்ள **மெக்கா மெதினா** ஆகிய தூய தலங்களுக்குச் செல்வதை மதக் கடமையாகவே கொண்டுள்ளனர். அதிலும் **காபா** எனும் புனிதக் கட்டடத்தைக் காண்பதில் மிகப் பேரின்பங் கொள்கின்றனர். தமிழ்நாட்டு இசுலாமியர்கள் இசுலாமிய ஒலிமார்கள் ஹசரத்துக்கள் வாழ்ந்து அடக்கமான இடங்களுக்குச் சந்தனக்கூடு முதலிய விழாக்கள் நடைபெறுகையில் புனிதப் பயணம் மேற்கொள்கின்றனர்.

பௌத்தர்கள் புத்தர்பிரான் அவதரித்த **புத்தகயா** எனும் திருத்தலத்துக்கும், பௌத்தமதம் பரவுவதற்குக் காரணமான திருத்தலங்களாகிய **சாஞ்சி, நேபாளம்** முதலிய திருத்தலங்களுக்கும் சென்று வழிபாடு செய்து திரும்புவதைப் பெரும பேறாகப் போற்றி வருகின்றனர்.

சமணர்கள் மகாவீரர் அவதரித்த திருத்தலத்துக்கும், கன்னட நாட்டிலுள்ள **சிரவணபெலகொலா** எனும் புனிதத் தலத்துக்கும், தமிழகத்தில் மதுரைக் கருகேயுள் **சமணர்மலைக்கும்** தலப்பயணம் மேற்கொள்வதைப் பெறலரும் பேறாக மதிக்கின்றனர்.

சீக்கியர்கள் பஞ்சாபிலுள்ள அமிர்தசரஸ் எனுந் திருநகர்க் கண் அமைந்த பொற்கோயில் வளாகத்தைக் காணவும், அங்கு வழிபாடு செய்யவும் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

இந்து மதத்தினர் வடநாட்டிலுள்ள **காசியையும்**, தென் கோடியிலுள்ள **இராமேசுவரத்தையும், கன்னியாகுமாரியையும்,** பிணைக்கும் வண்ணம் பல திருத்தலங்களுக்குப் புனிதப்பயணம் மேற்கொண்டு ஆன்மநல இன்பமெய்துகின்றனர். இதனைச் சிறிது விளக்கமாகக் காண்கையில், வடநாட்டிலும் தமிழ் நாட்டிலும் ஒரே தலப்பெயர்கள் அமைந்திருப்பதும் நோக்கத் தக்கதாகின்றது.

13.1 வடக்கிலும் தெற்கிலும் ஒரே தலப்பெயர்கள்- நோக்கம்

பாரத நாட்டுமக்கள் இனம் குலம் மொழி வேறுபாடு களின்றி ஒருமையுணர்வுடையராய் ஆன்மிகத்திலும் உலகியலி

லும் வாழ்வு நடத்த வேண்டும் என்பது உயரிய கொள்கை. இந்தத் தேசிய ஒருமைப்பாட்டுக் கொள்கைக்கு உதவுவதே போல் '**திருக்கோயில்**' சார்பாகத் திருத்தலங்கள் பல, தலப் பயணநோக்கில் எழுந்துள்ளன; இத்தகைய கோயிற் பண் பாட்டினை மக்கள் உணர்ந்து செயற்பட்டால் நல்லது.

1. வடநாட்டில் உத்தரப்பிரதேசத்தில் **வாரணாசி** எனத் தொன்மையில் வழங்கிய **காசி**த் திருத்தலம், மீளவும் வாரணாசி என்றும் வழங்கப்படுகிறது. இந்த வடநாட்டுக் காசியைப் பெரும் புண்ணியத்தலமாகக் கொண்டு, அங்குத் தொடங்கிய புண்ணியப் பயணத்தைத் தென்னாட்டு **இராமேசுவரம்** என்னும் புண்ணியத் தலத்தில் நிறைவேற்றி வருதலைப் பலரும் அறிவர். அத்தகைய காசியைப்போல் தமிழ்நாட்டிலும் ஒரு காசித் தலம் உள்ளது; அது **தென்காசி** எனப்படும். காசியில் இறைவன் பெயர் **விசுவநாதர்**; தென்காசியிலும் இறைவன் பெயர் **விசுவநாதர்**.

2. பாண்டிய நாட்டில் **மதுரை**த்தலம் சிவன்கோயிலைக் கொண்டது; வடநாட்டில் **வடமதுரை** (மதுரா) எனுந்தலம் கிருஷ்ணன் கோயிலைக் கொண்டது.

3. ஆந்திர மாநிலத்தில் திருவேங்கட மலையில் **திருப்பதி** என்பது பெரும்புண்ணியத்தலமாக விளங்குகிறது; அதனை யொத்த சிறப்புடன் வேங்கடேசுவரன் எழுந்தருளியுள்ள **தென் திருப்பதி** எனும் தலத்தினைத் தமிழ்நாட்டில் காணலாம்.

4 ஒரு மாநிலத்திற்குள்ளேயே வடக்கிலும் தெற்கிலுமாக ஒரே தலப் பெயர்கள் விளங்குதலைக் காணலாம். ஆறுபடை வீடுகளில் ஒன்றான **பழநி**த் திருத்தலம் தண்டாயுத பாணியின் அருளாற்றலைப் புலப்படுத்தி விளங்குகிறது; அவ்வாறே சென்னையிலும் விளங்க வேண்டுமென்ற நோக்கில் **வடபழநித்** திருத்தலம் விளங்குகிறது.

5. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள **சுவாமிமலை**யாகிய திருமுருகன் படை வீட்டினைப் போலவே, பாரதநாட்டின் தலைநகராகிய **டில்லியிலும் உத்தர சுவாமிமலை** தமிழ்ப் பெரு மக்களின் பக்தியார்வத்தால் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

14 மதவாதங்கள்:

சமய நூல்கள் பலவற்றைப் பயின்று தேர்ந்து தெளிந்த மதவர்திகள், மதவாதங்களிலோ மதப்போராட்டங்களிலோ தம்மியல்பில் ஈடுபடத் தயங்குவர். வலிய வம்புக்கிழுக்குஞ் சூழலில் மதவாதிகள் முனைந்து நிற்கையில் சமய ஞானியர்கள் கூடத் தம் சமயங்களைப் புறத்தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் நோக்கிலேயே சமயவாதங்களில் ஈடுபடலாயினர். காலச்சூழல், சமய வளாகத்தில் இத்தகைய வேண்டத்தகாத நிகழ்ச்சிகளைக் விளைவித்ததை வரலாற்று ஏடுகள் பதிவு செய்து சுட்டிக்காட்டுகின்றன. இதற்கு அடிப்படைக்காரணம், மதங்களில் நுணுகிக் கூறப்பட்ட **தத்துவ ஆராய்ச்சியும்,** அது காரணமாக எழுந்த தம் மதத் தொடர்பான **உயர்வு மனப்பான்மையுமே** (superiority complex) எனலாம்.

மணிமேகலைக் காப்பியத்தில், மணிமேகலை வேதம், சைவம் வைணவம், ஆசீவகம், சமணம், சாங்கியம், வைசேடிகம் லோகாயதம் முதலிய மதவாதங்களைக் கேட்டறிந்து உணர்ந்து கொள்ளுமாறு பணிக்கப்படுதலைச் 'சமயக் கணக்கர் வழித்திறங் கேட்டகாதை'யால் உணரலாம்.

மதவாதங்கள் எவ்வாறு காலக்கோட்பட்டுத் தவிர்க்க இயலாதவை ஆயின என்பதை வரலாற்று நோக்கிலே சிறிது காண்போம்

பக்தியியக்கக் காலமாகிய பல்லவர் காலத்திற்கு முன்னர், களப்பிரர்கள் தமிழகத்தில் சமணம் தழைக்க ஊக்கமும் ஆக்கமும் தந்தனர் சமணர்களாகிய களப்பிரர்களின் ஆட்சியில் பாண்டிய சோழ மன்னர்கள் வலுவிழந்த நிலையில், அவர்கள் பின்பற்றிய ஆத்திக மதமாகிய சைவமும் நெருக்கடிக்கு உள்ளாயிற்று. சோழர் இருந்த இடத்தில் வடபால் பல்லவ மன்னர்கள் வந்து ஆதிக்கம் செலுத்தினர். பாண்டியர் ஆண்ட இடத்தில் களப்பிரரே ஆண்டனர்.

பல்லவர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் தம் பேரரசை நிலை நாட்டினர். **தொடக்கத்தில் அவர்கள் சமணராகவும்,** ஏழாம் நூற்றாண்

டிலிருந்து சைவசமய குரவர் **திருநாவுக்கரசரால்** சைவத்திற்கு வந்த **மகேந்திரவர்மன் காலந்தொட்டுச் சைவராகவும் வாழலாயினர்.**

பல்லவர் காலத்துப் **பாண்டியரும்** தமக்கு **முன்** ஆண்ட களப்பிரரைப் போலச் **சமணராகவே** விளங்கினர். பாண்டிய நாடே சமண் தழுவிய நிலையில், சைவசமயத்துக்கு ஆதரவு குன்றியது; **நின்றசீர் நெடுமாறன் காலத்தில் இதற்கு விடிவுக் காலம் ஏற்பட்டது.** பாண்டிய மாதேவி மங்கையர்க்கரசியார் முயற்சியால் திருஞானசம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளிச் சமணர்களுடன் அனல்வாதம் புனல்வாதம் புரிந்து வென்று சைவ சமயத்தை மீட்டருளினார். அவரே **திருத்தளிச்சேரியில்** பௌத்தர்களோடு வாதிட்டுச் சைவசமயத்தின் பெருமையை நிலை நாட்டினார்.

காலப்போக்கில் **மணிவாசகரும்** பௌத்தமதத்தை எதிர்த்து வாதாடி வென்றார்; **கல்லாடரும்** பௌத்த மதத்தை எதிர்த்து நின்றவரே என்பது ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தகும்.

மணிவாசகர் பௌத்த மதத்தினருடன் புரிந்த வாதத்திற்குச் சான்றாக வித்வான் **முகவை வேணுகோபால்பிள்ளை** தருங் குறிப்பு ஈண்டு கருதத்தக்கது. அவர் "உத்தரகோச மங்கைத் திருக்கோயிலின் வடபுறத்தில் அக்கினி தீர்த்தத்தின் மேல் கரையில் மணிவாசகர் பௌத்த மதத்தினருடன் சமயவாதிட்ட பட்டிமன்ற மேடையொன்று, சங்ககாலச் சிற்பவமைதியுடனும் பௌத்த சமயச் சிற்பவமைதியுடனும் கூடிய **பாண்டில் நாயகம்** என்னும் பெயருடைய ஒரு கல்தேர் வடிவில் காட்சியளிக்கின்றது. அசோக மன்னனால் தனது மதக்கொள்கைளைப் பரப்புவதற்கும் சமயவாதிகள் தங்களுடைய சமயவாதத்திற்கும் எடுக்கின்ற கொடியைக் கட்டுவதற்கும் வாய்ப்பமைந்த கற்றூணொன்று இன்றளவும் மிகப் பழமையுடையதாய்த் தன்மேல் பொறிக்கப்பட்ட எழுத்துக்களெல்லாம் அழிந்து ஓர் கற்றூணாகவே காட்சியளிக்கின்றது"[1] என எழுதிச் செல்வதை இயைபுடன் காண்க

வேதங்களில் குறிப்பிடப்படும் தெய்வங்களை வழிபடும் வேள்வியாளர்களாகிய இந்துக்கள், வேள்விகளை எதிர்க்கும்

1. திருக்கோயில் (திங்களிதழ்). பிப்ரவரி 1975 (திருவுத்தரகோசமங்கையும சங்ககால ஊர்களும்' எனும் கட்டுரை)

சமணர்களையும் பௌத்தர்களையும் மதவாதங்களாலும் பிற உத்திகளாலும் எதிர்க்கத் தொடங்கினர் களப்பிரர்கள் காலத்தில் செல்வாக்கினைப் பெற்ற சமணமும் பௌத்தமும் நாளடைவில் தம்முள் முரண்பாடு கொள்ளத் தொடங்கின. சமணவாதம் உட்கிடையாக அமைந்த **நீலகேசி** எனும் காப்பியமும், பௌத்த வாதம் உட்கிடையாக அமைந்த **குண்டலகேசி** எனும் காப்பியமும் தருக்க நோக்கில் எழுந்தவை என்பது ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தகும். பௌத்த மதத்தைவிடச் சமணமதம் தமிழ் நாட்டில் தொடர்ந்து ஓரளவு செல்வாக்கினைப் பெற்றிருந் தமையால் சமணநூலான நீலகேசி இக்காலத்தும் நமக்குக் கிடைக்கின்றது; ஆனால் பௌத்த வாதங்கூறும் குண்டலகேசி யோ கிடைக்காமல் தொலைந்து போயிற்று. எவ்வாறோ மணிமேகலையெனும் பௌத்தக் காப்பியம் இக்கட்டான சூழல் களிலும் தப்பிப் பிழைத்துத் தமிழரிடையே உலவுகிறது. இது தமிழ்நாடு செய்த தவப்பயனே எனலாம்

15. மதம் மாறிய - மாற்றிய - ஆலயங்கள்:

காலத்தின் கோலத்தாலும் சூழ்நிலையாலும் மக்கள் தம் மனநிறைவிற்காக மதம் மாறினர் என்பதில்லை; ஆலயங்களும் மக்களால் மதம் மாறின என்பது வரலாறாக உள்ளது.

சைவத்திலிருந்து சமணத்துக்கும், சமணத்திலிருந்து சைவத் துக்கும் மதம் மாறிய நிலையைச் சமயகுரவர் **திருநாவுக்கரசர்** வரலாற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பாண்டிமாதேவி **மங்கையர்க்கரசியால் பாண்டியன் நெடுமாறன்** (கூன்பாண்டியன்) சமணத்திலிருந்து சைவத்துக்கு மாறியதையும் பெரியபுராணத் தால் புரிந்துகொள்ளலாம். பௌத்த மதத்தினராய்ப் பிறப் புெடுத்த **சாக்கியர்** சைவத்தில் கொண்ட ஊற்றத்தால் சிவலிங்கத்தின்மீது கற்களையே மலராக எறிந்து, பிறகு **சாக்கிய நாயனார்** நிலைக்கு உயர்ந்துள்ள நிலையைப் பெரியபுராணத் தால் உணர்ந்து கொள்ளலாம்.

மக்களிடம் கண்ட மனமாற்றங் காரணமாக மத மாற்றம் ஏற்பட்டதுபோல ஆலயங்களிலும் மாறுபாடுகள் ஏற்பட்டன.

அப்பரடிகளைத் துன்புறுத்தக் காரணமாயிருந்த சமணத்தின் கொடிய போக்கினையுணர்ந்தான் பல்லவ மன்னன் மகேந்திர வர்மன்; தானும் சைவத்துக்கு மாறியதுடன் சமணப்பள்ளிகளை இடித்து அந்தக் கற்களைக் கொண்டு திருவதிகை வீரட்டானத்துக்கு அருகே **குணபரேச்சுரம்** எடுத்தான் என்பதை வரலாறு கூறும்.

பழையாறை எனும் சிவத்தலத்திலுள்ள தொன்மையான வடதளிச் சிவன்கோயிலைச் சமணர்கள் தம் கோயிலாக மாற்ற நினைத்து அங்குள்ள சிவலிங்கத்தை மறைத்துவிட்டனர். திருத்தலப்பயணம் புரிந்துகொண்டிருந்த **திருநாவுக்கரசர்** அதனை மீட்குங்குறிப்புடன் **உண்ணாநோன்பு** இருந்தார். சிவபிரான் மன்னனது கனவில் தோன்றி உபாயம் அருளியதை,

> ''அறிவில் அமணர் நமைமறைப்ப இருந்தோ மென்றங் கடையாளக்
> குறிகள் அறியச் செய்தருளி நம்மை அரசு கும்பிடுவான்
> நெறியில் அமணர் தமையழித்து நீக்கிப் போக்கென் றருள்புரிய''[1]

எனவருஞ் சேக்கிழார் வாக்கால் அறியலாம். 'இறைவனது திருவருட் செயல் இது' என்பதை மனத்துட் கொண்டு, அரசன் அவ்வாறே செயற்படலானான்.

சமணர் மாற்றிய கோயிலை முன்போல் சிவன் கோயிலாக்கினான் என்பது பெரியபுராணம் தருஞ் செய்தி அதே காலத்தில் திருஞானசம்பந்தர் புரிந்த சமயப்புரட்சியால் பாண்டியநாட்டிலே சமணர்களின் பள்ளியும் பாழியும் அழிக்கப்பட்டு அவ்விடங்களில் சைவ நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டன. மதவுணர்ச்சியால் சோழ நாட்டிலும் மாற்றங்கள் பல உண்டாயின. எடுத்துக் காட்டாகச் சில செய்திகளைக் காண்போம்.

செந்தலைக்கோயில் பற்றி ஆராய்ந்துள்ள **சி. கோவிந்தராசனார்**, ''திருப்பூந்துருத்தியில் நிலையாக மடம் அமைத்துச் சமயத்தொண்டு புரிந்த **அப்பரடிகள்**, அவ்வூரிற்கு மேற்கே நான்கு கல் தொலைவில் தென்கரை வழியிலுள்ள செந்தலைக்

1 பெரியபுராணம், திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், 297

கோயில் சிவன்கோயிலாக அன்று இருந்திருப்பின் அங்குச் சென்று வழிபட்டுப் பதிகம் பாடாதிருப்பாரா? எனவே, சைவ வைணவச் சமயத்தார்க்குப் புறம்பானதொரு சமயத்திற்குரிய கோயிலாகச் செந்தலைக்கோயில் அன்று இருந்திருக்கின்றது என்ற உண்மை இதனால் புலனாகும்''[1] என்றும், ''முத்தரையர்கள் களப்பிரரின் சார்புடையவர்களாதலின் பெரும்பான்மையும் சமணசமயத்தையே ஆதரித்து வந்துள்ளனர் என்பதை வரலாறுகள் திட்டவட்டமாகக் குறிக்கின்றன. அவர்கள் காலத்தில் செந்தலையில் சமணர்கட்குரியதாக இக்கோயில் சிறப்புடன் விளங்கியிருக்கின்றது. சமணர்கட்குரிய சிற்ப இலச்சினைகளுடன் கோயில் கட்டப்பட்டிருப்பதே இதற்குரிய சான்றாகும். எனவே தான், கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரும்' சம்பந்தரும் இக்கோயிலைப் பற்றிப் பதிகம் பாடினாரில்லை''[2] என்றும் எழுதிச் செல்வது மிகவும் சிந்தித்தற்குரியதாகும்.

இந்துமதத்தில் சைவர்களும், வைணவர்களும் தலைதூக்கிய பின் பல சமணர்கோயில்களும், பௌத்தர்கோயில்களும் இந்து மதக் கோயில்களாக மாற்றப்பட்டன. மலையாள நாட்டிலும் இத்தகைய மாற்றம் நிகழ்ந்துள்ளது என்பதைப்,'' பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டிலிருந்த பௌத்தக்கோயில்கள் பூஞ்சோலைகளின் நடுவில் அமைக்கப்பட்டிருந்ததாகப் பண்டை நூல்களினால் தெரிகின்றது. இவற்றிற்கு **'ஆராமம்'** (பூந்தோட்டம்) என்று பெயர் வழங்கிவந்தன. மலையாளநாட்டிலுள்ள சாத்தன்காவுகளும் பண்டைக் காலத்தில் பௌத்தக் கோயில்களாக இருந்து, இப்போது இந்துமதக் கோயில்களாக மாற்றப்பட்டவை என்பது ஆராய்ச்சி வல்லோர் கருத்து''[3] என்று **மயிலை சீனி. வேங்கடசாமி** எழுதிச் செல்வதால் அறியலாம்

புகார்நகரத்தில் **சாத்தன்** (சாஸ்தா) **கோயில் இருந்தமை பற்றிச் சிலப்பதிகாரத்தால் அறியலாம்.** புத்தர் பல சாத்திரங்களைக் கற்று வல்லவர் என்ற காரணத்தால் அவருக்குச் சாஸ்தா' அல்லது 'மகாசாஸ்தா' எனப் பெயர்களுண்டு. தமிழகத்தில்

1-2 ஆய்வுக்கோவை இ.ப.க.த,ம.

3 பௌத்தமும் தமிழும், பக், 147

அவருக்கெனத் தோன்றிய **சாத்தன் கோயில்கள் ஐயனார் கோயில்களாக மாற்றப்பட்டன.** 'சாஸ்தா' அல்லது சாத்தன் என்னும் வடசொல்லிற்கு நேரான தமிழ்ச்சொல் ஐயன் அல்லது ஐயனார் என்பது. 'ஐயன்' என்பதற்கு உயர்ந்தோன், குரு, ஆசான் என்பன பொருள். பௌத்தமதம் அழிந்த பின்னர், அம்மதக் கொள்கைகளையும் தெய்வங்களையும் இந்துமதம் ஏற்றுக்கொண்டபோது, வெவ்வேறு கதைகள் கற்பிக்கப்பட்டன"[1] எனுங் கூற்றைக் காண்கையில், சாத்தனார் கோயில் ஐயனார் கோயிலாக மாறியதில் வியப்பில்லை. சாத்தனாருக்கு 'ஐயப்பன்' என்னும் பெயரும் மலையாள நாட்டில் வழங்குவதைக் காண்கையில் ஐயப்பனும் ஐயனாரும் ஒன்றெனக் கொள்ளுதற்கும் இடம் உள்ளது **அப்பரடிகளும்** தம் தேவாரத்தில், சாத்தனாரைச் சிவபிரானுக்குப் பிள்ளையாகவே போற்றிக்கூறியுள்ளார்; இதனைப்,

"பார்த்தனுக் கருளும் வைத்தார் பாம்பரை யாடவைத்தார்
சாத்தனை மகனா வைத்தார் சாமுண்டி சாமவேதங்
கூத்தொடும் பாட வைத்தார் கோளரா மதிய நல்ல
தீர்த்தமுஞ் சடைமேல் வைத்தார் திருப்பயற் றூர னாரே"[2]

எனவரும் திருப்பாசுரத்தால் அறியலாம். பௌத்தமதத்தில் மிகவுயர்ந்த 'சாஸ்தாவான புத்தர், காலத்தின் கோலத்தால் ஐயப்பனாகவும், பிறகு சிற்றூர்ப்புறத் தெய்வம் (கிராமதேவதை) ஆகவும் ஆகிவிட்டார். "தமிழ்நாட்டிலுள்ள இப்போதைய தருமராஜா கோயில்கள் பண்டைக்காலத்தில் பௌத்தக் கோயில்களாயிருந்திருக்க வேண்டும் என்று கருதப்படும்"[3] என்ற குறிப்பும் இயைபுடன் மனங்கொள்ளத்தக்கதாகும். இவ்வாறான செய்திகளுக்கிடையே புத்தரை ஓர் அவதாரமாகவே வெளிப் படையாக ஒப்புக் கொள்ளும் வைணவம் ஒருவகையில் போற்றற் குரியது எனலாம்.

பல ஊர்களில் காணலாகும் அம்மன் கோயில்களைப் பற்றி ஆராய்கையில் அவை மதமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டமை

1. பௌத்தமும் தமிழும், பக். 147,
2. திருமுறை, 4.32.4
3. பௌத்தமும் தமிழும், பக், 151

புலனாகின்றது. "**தாரா தேவி, மங்கலாதேவி, சிந்தாதேவி** முதலான பௌத்த தெய்வங்களின் கோயில்களும், பிற்காலத்தில் இந்துக்களால் **பகவதி கோயில்களாகவும்,** கிராம தேவதைக் கோயில்களான **அம்மன் கோயில்களாகவும்** மாற்றப் பட்டனவாகத் தெரிகின்றன. தாராதேவிகோயில் திரௌபதையம்மன் **கோயிலெ**ன இப்பொழுது வழங்கப்படுகிறது,"[1] என **மயிலை சீனி. வேங்கடசாமி** ஆராய்ந்து தரும் செய்தி வரலாற்று நோக்கில் சிந்திக்கத்தகும்.

15.1 மத, சமய வெறி விளைவித்த தீங்குகள் - கலையுலகில் (சிறப்புப்பார்வை):

உலகமெல்லாம் ஒருமையுணர்வுடன் வாழ வழிவகுப்பதற்கே மதங்களும், சமயங்களும் தோன்றின. மக்களை நன்னெறியில் செலுத்தி மனப்பக்குவத்தைப் படிப்படியே உண்டாக்கி உயர்த்த வேண்டிய சமயங்களும் மதக்கோட்பாடுகளும் தடம் புரண்ட வரலாறு **தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில்** களங்கமான பகுதியாகும். மத, சமயக் காழ்ப்பால் நாட்டில் விளைந்த பூசல்களும், போர்களும், கலைப்படைப்புச் சிதைவுகளும் பற்றிய செய்திகள் தமிழ்நாட்டு வரலாற்றில் ஓரளவு இடம் பெற்றுள்ளன; அதனைச் சிறிது காண்போம்.

தமிழ்நாட்டு ஆலயங்களில் அழகிய பல சிற்பங்கள் மூளிகளாக இருத்தலைக் காணலாம். **திருவாரூரில் தியாகராசர் கோயில்,** கீழைக் கோபுரத்திலுள்ள நடனச் சிற்பங்கள் சில சிதைவுற்று இருத்தலை இன்றும் காணலாம். **வேலூர் ஜலகண்டேசுவரர் திருக்கோயிலில்** பல சிற்பங்கள் வேற்றுமதத்தவர்களால் மூளியாக்கப் பட்டிருத்தல் வரலாற்றில் இடம் பெற்ற செய்தியாகும். இவ்வாறே பல ஆலயங்களில் வேற்று மதத்தவர்களின் காழ்ப்புணர்ச்சியால் சிதைந்த கலைச்செல்வங்கள் பலவாக உள்ளன. இந்து மதத்தவர்களால் நலிவுற்ற பௌத்த மதமும், சமணமதமும் தத்தம் அரிய கலைப்படைப்புக்களையும் இழந்துள்ளன. பௌத்த சமணத் தீவிரவாதிகளாலும் இந்து மதக்கலைப்படைப்புக்களும் சிதைவுற்றுள்ளன. இஃது ஒரு புறமிருக்கப் பிறமதங்களைத் தாழ்த்தித் தம் மதத்தின் மேன்

1. பௌத்தமும் தமிழும், பக். 151.

மையை நிலைநாட்டவும் பல தீய உத்திகள் கையாளப் பட்டுள்ளன.

''பௌத்தர்கள் பொதுவாகப் பிற சமயங்களை மதித்து வந்திருந்த போதிலும் **பௌத்த பிக்குகளிலே தீவிரவாதிகள்** வைதிக சமயத்தவர்கள் மீது பகைமை பாராட்டியதற்கும் சான்று கிடைத்துள்ளது. இந்து சமயக் கடவுளரைப் பௌத்த சமயக் கடவுளர் தோற்கடிப்பதைக் காட்டும் சிலைகள் கிடைத்துள்ளன. **உலோகேசுவரர்** சிவபெருமானையும் பார்வதியையும் உதைக்கும் சிலையும், **திரைலோக்யவிசயர்** கதறும் கணபதியை நசிக்கும் சிலையும் **நாளந்தா நூதன சாலையிலே** காணப்படுகின்றன. இத் தகைய சிலைகள் பௌத்தர்கள் மேலே சைவர்களுக்குக் குரோத உணர்ச்சி ஏற்படவே உதவியிருக்கும்,''[1] என **டாக்டர் ஆ வேலுப் பிள்ளை** எழுதிச் செல்வதைக் காண்க.

இந்து மதக் கிளைச் சமயங்களிலும் ஒன்றுக்கொன்று சமய வெறியைக் காட்டியுள்ள செய்திகள் பலவாக உள்ளன. தெய்வப் படிமங்களை உருவாக்குகையிலும் தத்தம் சமய மேலாதிக்கத் தைப் புலப்படுத்தக் கலையுலகில் உத்திகள் வகுக்கப்பட்டன. எனினும், இதிகாசத்திலும் புராணத்திலும் அவற்றிற்கு அமைதி காண்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும் நினைவிற் கொள்ளுதல் நல்லது.

நாள்தோறும் சிவபூஜை செய்யும் இயல்பினனான **இராவணன்** பிறன்மனை நயத்தலாகிய பழி புரிந்தமையால் வைணவக் கடவுளாகிய **இராமனால்** அழிக்கப்பட வேண்டியவனானான்.

இரணியகசிபின் செருக்கையடக்குதற்காகத் திருமாலே **நரசிம்மாவதாரம்** எடுத்ததும், இரத்த வெறிகொண்டு பலரையும் அழிக்கத் துணிந்த நிலையில் நரசிம்மத்தைச் சிவபெருமான் **சரபமூர்த்தி**யாகத் தோன்றி அடக்கியதுமாகிய செய்திகள் சமய ஆதிக்கத்தின் புலப்பாடுகள் என அறிஞர்கள் கூறி வருவதும் சிந்திக்கத்தக்கதாகும்.

1. தமிழர் சமய வரலாறு, பக் 69

15.2. மத சமயவெறி விளைவித்த தீங்குகள்- இலக்கியத்துறையில் (சிறப்புப்பார்வை):

ஒரு மதத்திலிருந்து ஒருவர் மற்றொரு மதத்திற்குச் சென்றால் அவரை நீற்றறையிலிட்டும், யானையைவிட்டு இடரச் செய்தும், நஞ்சருந்தச் செய்தும் ஒறுக்கின்ற கொடுமை இருந்துள்ளது. இதனைச் சைவ சமயத்திற்கு மீண்ட **திருநாவுக்கரச வாழ்வால்** உணரலாம்; அஃதாவது அவரைச் சமணன் மகேந்திரவர்ம **பல்லவ மன்னன்** ஒறுத்தமையால் தெரிந்து கொள்ளலாம்.

மதங்கள் போட்டியிட்டுக் கொண்டு வாதம் புரிவதும், வாதத்தில் தோற்றால் கழுவேறுதலுமாகிய நிகழ்ச்சி சமய வரலாற்றில் ஏற்புடைய நிகழ்ச்சியா? எனச் சிந்தித்துப் பார்த்தலும் நல்லது. மதுரையை ஆண்ட **நின்றசீர்நெடுமாறனை** வெப்பு நோய் தாக்கிய நிலையில் **சமணர்களும் சைவநெறி நின்ற திருஞானசம்பந்தரும்** இகலிய வண்ணம் நோய் தீர்க்க முயலுகின்றனர். சமணர்கள் தோற்ற நிலையிலும் **அனல்வாதம், புனல்வாதம் நிகழ்த்தி அவற்றிலும் தோற்றதும் அவர்களே வலியக் கழுவேறினர்** என்பதும் சமய வரலாற்று நிகழ்ச்சியாக அமைந்துள்ளன.

அகச்சமயத்திற்கும், புறச்சமயத்திற்கும் நேர்ந்த மாறுபாடு இவ்வாறிருக்க, அகச்சமயங்களுக்குள்ளேயே எத்தனையோ மாறுபாடுகளும் கசப்பான நிகழ்ச்சிகளும் நிகழ்ந்துள்ளன.

கண்களாகிய மக்களுக்குப் பாதுகாப்பாக விளங்க வேண்டிய இமைகளாகிய சமயங்கள், கண்களுக்கே தீங்கு விளைவிக்கக்கூடிய நிலையில் காழ்ப்பை வளர்த்துக் கொண்டு இயங்குவது பண்பாட்டு வீழ்ச்சிக்கே காரணமாகியுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம், சமயங்களை வாழவைப்பதாக நினைத்துக் கொண்டு அவற்றைத் தாழவைக்கும் நிலையில் அடாத செயல் மேற்கொண்டுள்ள சமய வாதிகளின் பிற்போக்கேயெனலாம்.

இந்து மதத்திலே - சண் மதங்களிலே - சிறப்பான வைணவமும் சைவமும் அரசுச் சார்புடன் தம்முள் மாறுபாடும் வேறுபாடும் கொண்டு விளைவித்த தீங்குகள் பலப்பல; அவை சொல்லிலடங்கா. சைவப்பற்றுக் கொண்ட சோழன் **இரண்டாம்**

குலோத்துங்கன் காலத்தில் தில்லைக் கோவிந்தராசர் சிலை பெயர்த்தெடுக்கப் பெற்றுக் கிள்ளைக்கருகேயுள்ள கடலில் தள்ளப்பட்டது என்பது வரலாற்றிலும் இலக்கியத்திலும் இடங் கொண்டுள்ள செய்தியாகும். மாறாக **முத்துக்கிருஷ்ண நாயக்கர் காலத்தில்** வைணவத்தின் கை ஓங்கவே, தில்லை நடராசருக்கு முறையான பூசனைகள் நிறுத்தப்பட்டன; இதனால் மனம் நொந்த தில்லை வாழ் அந்தணர்களாகிய தீட்சதர்கள் பலர் கோயிற் கோபுரத்திலேறிக் கீழே வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டார்கள் என்பதும் வரலாற்றில் இடங் கொண்டது. இவையெல்லாம் ஒருபுறமிருக்க, நெறிபிறழ்ந்த சமயக் காழ்ப் பால் தமிழிலக்கிய உலகத்திலும் பல தீங்குகள் ஏற்பட்டன. அவை பற்றிச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் தோன்றிய இலக்கியங்கள் தமிழ் மக்களின் அரிய சிந்தனைச் செல்வங்கள் அத்தகைய கருத்துக் கருவூலங்களும் சமயக் காழ்ப்புடையவர் களால் புறக்கணிக்கப்பட்டன என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

தமிழ்க் கல்விப் புலமைக்கு அடிப்படையாக விளங்குபவை தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, சிலப்பதிகாரம் மணிமேகலை, பெருங்கதை, பதினெண்கீழ்க்கணக்கு, சீவக சிந்தாமணி, சூளாமணி முதலிய தொன்மையான நூல்கள், இடைக்காலத் தமிழ்ப்பிரபந்தங்கள், இக்காலத்தே அறிஞர்கள் படைத்த தரமான செய்யுள் நூல்கள் முதலியவையாகும். ஆனால், 18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் **'இலக்கணக் கொத்து'** இயற்றிய **சுவாமிநாத தேசிகர்**, **மாதவச்சிவஞான முனிவர்** போன்றோர் மிக அருமையான சங்க நூல்களையும் சங்கம் மருவிய நூல்களையும், சிறப்பாகச் சமண பௌத்த வைணவ நூல்களையும் படிக்கக் கூடாதென்றும், சைவ நூல்களை மட்டுந்தான் பயில வேண்டுமென்றும் வற்புறுத்தி எழுதியும் பேசியும் வந்தனர். எடுத்துக்காட்டாக **இலக்கணக் கொத்து** எனும் நூலின் பாயிரத்தில், 7ஆம் நூற்பாவின் விளக்கத்தில், ''மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே யென்பது திண்ணம். அன்றியும், அழகிய சிற்றம்பல முடையான் அவர் வாக்கிற் கலந்திருந்து அருமைத் திருக்கையாலெழுதினார். அப்பெருமையை

நோக்காது **சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப் பாட்டு, கொங்குவேள் மாக்கதை** முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோ டொன்றாக்குவர் ... ... அம்மட்டோ! இறையனார் அகப்பொருள் முதலான இலக்கணங்களையும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், பட்டினத்துப் பிள்ளையார் பாடல் முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணாது **நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்காரம்** முதலிய இலக்கணங்களையும், **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, இராமன்கதை, நளன் கதை, அரிச்சந்திரன் கதை** முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணி, வாணாள் வீணாள் கழிப்பர்; அவர் இவைகளிருக்கவே அவைகளை விரும்புதலென்னெனின், **பாற் கடலுட் பிறந்து அதனுள்ளே வாழும் மீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பலவற்றை விரும்புதல் போல அவரதியற்கை என்க**"[1] என எழுதிச் செல்வதை **மயிலை சீனி. வேங்கடசாமி** எடுத்துக் காட்டியுள்ளமை காண்க.

சிவஞான சுவாமிகளும் சைவ சமயத்தில் வைத்த அதிதீவிரப் பற்றினால் புறச்சமயத்தவர் எழுதிய அருமையான இலக்கியங் களைப் புறக்கணிக்குமாறு கூறியுள்ளார். அவர் இயற்றிய **சோமேசர் முதுமொழி வெண்பாவில்,**

> "சேக்கிழார் சிந்தா மணிப்பயிற்சி தீதெனவே
> தூக்கியுப தேசித்தார் சோமேசா - நோக்கில்
> பயனில்சொல் பாராட் டுவானை மகனெனல்
> மக்கட் பதடி யெனல்"

எனக் குறித்துள்ளமை கொண்டு சிந்தாமணிக் காப்பியத்தை மட்டும் படிக்கக்கூடாது என்பதன்று; புறச்சமயப் பிறநூல் களையும் தவிர்க்கவேண்டுமென்பதே கருத்து. "சிந்தாமணி என்றது உபலக்கனமாதலின், அதுபோலும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணிப் பயிற்சியும் சைவ வைணவ நன் மக்களுக்கு ஆகா" என்று விளக்கம் கூறப்பட்டதையும்[2]

1. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், பக், 77- 78
2. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், பக் 79

நினைவிற் கொள்ளுதல் வேண்டும். மேலும், ''சிவஞான சுவாமி களின் மாணவராகிய **திருத்தணிகை கச்சியப்பமுனிவர்.** தம் முடைய மாணவர்கள் சமண சமயக் காவியமாகிய சீவகசிந்தா• மணியின் இலக்கியச் சுவையைப் புகழ்ந்து பாராட்டிப் பேசிய படியால், அது பொறாமல் அதைவிடச் சிறந்த சுவையுள்ள நூலை இயற்ற எண்ணித் **தணிகைப் புராணம்** என்னும் நூலை இயற்றினார் என்னும் வரலாற்றையும் ஈண்டு நினைவு கூர்க''[1] என **மயிலை சீனி. வேங்கடசாமி** எழுதிச் செல்வதும் காண்க.

புறச்சமயத்தினர் இயற்றிய நூல்களைப் பயிலுதல் தம் ஆத்திக சமயத்திற்குத் தீங்கு என நினைத்த நச்சுக் கொள்கை யால் அருமையான தமிழ்நூல்கள் மக்களிடையே பயிலாமல் மறைந்து போனதற்கும் மறந்து போவதற்கும் இடமுண்டாயிற்று.

சமயக் காழ்ப்பினால் பின்பற்றப்பட்ட குறுகிய மனப் பான்மையினால் வைணவ நூல்களாகிய **பாரதம், கம்பராமாயணம்** முதலியவற்றை 19 ஆம் நூற்றாண்டில் ஏட்டுச் சுவடியிலிருந்து அச்சுப்புத்தகமாக அச்சிட்டவர் சிலர், சிவபிரானுக்கு ஏற்றந் தந்த செய்யுள்களை மாற்றியும் சிதைத்தும் புதுக்கியும் அச்சிட் டுள்ளனர் என்பர். ''சில நூல்களின் முதலில் அருகக் கடவுளுக்கு வாழ்த்துக் கூறிய செய்யுள்களைச் சிலர் எடுத்துப்போட்டு, அந்த இடத்தில் விநாயகர் வணக்கப்பாடல் அமைத்து அச்சிட்டனர். நிகண்டுகளில் அருகப் பெருமானுக்குக் கூறப்பட்ட செய்யுள் களை மாற்றிவிட்டனர். இவ்வாறு சமயப்பற்றுக் காரணமாகச் சிலர் அச்சுப் புத்தகங்களை அச்சிட்ட போது மாற்றினார்கள்''[2] என்பதையும் **மயிலை சீனி. வேங்கடசாமி** குறிப்பிட்டுச் செல்வது காண்க.

தமிழ்ப் புலவர்களிடம் பயில வந்த மாணவர்களும் சமயக் காழ்ப்பினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தம்மிடம் பயின்று முன்னேற வேண்டுமெனின் வேற்று மதத்து மாணவர்களின் பெயர்களை மாற்றிக் கொள்ளுமாறு புலவர்கள் வற்புறுத்தி யுள்ளனர். ''**வேங்கட ராமன்** என்னும் பெயர் கொண்டிருந்த

1. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம், பக். 79
2. மேலது, பக், 86

வரை மாணவராக ஏற்றுக் கொள்வதற்கு முன்பு **'சாமிநாதன்'** என்று புதுப்பெயர் சூட்டினார் **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள்.** அந்தப் பெயருடன் விளங்கியவர் தான் **டாக்டர் உ.வே. சாமிநாதையர்'**[1] எனும் செய்தியைக் கேட்டு வியக்காமலிருக்க இயலாது.

சைவ சமயத்தவர் போல வைணவ சமயத்தவரும் இத்தகைய குறுகிய மனப்பான்மையுடன் விளங்கியுள்ளனர்.

சென்னையில் வாழ்ந்த உரையாசிரியர் வித்துவான் **இராசகோபாலப்பிள்ளை** எனும் வைணவப் பெரியாரிடம் மகாவித்துவான் **திருமயிலை சண்முகம் பிள்ளை** பாடங் கேட்டவர். சண்முகம் பிள்ளை இளைஞராக இருந்த காலத்தில், கம்பராமாயணம் பாடங் கேட்கச் சென்ற போது, அவர் தம் நெற்றியில் திருநீறு பூசிக் கொண்டு **சண்முகம்** என்ற பெயருடன் இருந்தமையால் இராசகோபாலப் பிள்ளை அவருக்குப் பாடஞ் சொல்ல மறுத்துவிட்டார். பிறகு நெற்றியில் திருமண் தரித்துத் தம் **சண்முகம்'** எனும் பெயரை மாற்றி **இராமாநுசன்** என்று வைத்துக் கொண்டு பாடங் கேட்டார். இந்தச் செய்தியால் அக்காலத்தில் சமயக் காழ்ப்பு எந்த அளவிற்குத் தமிழ்நாட்டில் வேரூன்றியிருந்தது என அறிந்து கொவ்ளலாம்.

இறைவன் திருவருளால் எப்படியோ சமயக் காழ்ப்பானது படிப்படியே குறைந்து, சமயப் பண்பாட்டுணர்வு மலர்ந்த வண்ணம் சமயங்களிடையே நல்லெண்ணங்கள் நிலவுகின்றன. மறைந்துபோன - மறந்து போன - சில அரிய தமிழ் நூல்கள் மக்களிடையே மீண்டும் கிடைக்கவும் பயிலவும் நல்வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

16. மதங்களின் சீர்மைக்குப் புத்துணர்வு

உலகெங்கும் காணலாகும் மதங்கள், அவை தோன்றியதன் நோக்கங்களை நோக்கி மக்கள் நடையிடுகின்றனரா என்பதே இன்றைய கேள்வி. மதத்தலைவர்களும் தொண்டர்களும் அவர்கள் ஏற்படுத்திய நிறுவனங்களும் ஏதோ ஒருவகையில் தளர்ச்சி

1 பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்இலக்கியம், பக். 87

யடைந்து வருதலை உலகம் கண்டு வருகிறது. இந்நிலையை யுணர்ந்து மதங்களைத் தக்கவாறு கொண்டு செலுத்த நல்லுள்ளங் கொண்ட சிலர் முயன்று வருகின்றனர்.

மேல் நாடுகளில் மதவுணர்வு மிகவும் குன்றி நாட்டின் நிலைமை சீர் கெட்டிருப்பதைக் கண்ட சான்றோர், மக்களைத் தட்டியெழுப்பிச் சமயவுண்மைகளை அவர்களுக்கு விளக்க உத்திகள் சிலவற்றை மேற்கொண்டனர். தெய்வத்தின் எளிவந்த நிலையையும் மக்களின் சமயப் புறக்கணிப்பையும் உள்ளவாறு எடுத்துரைத்து மதங்களின் தூய ஆக்கத்திற்கு வழிவகைகள் கண்டனர். இது தொடர்பாகச் சிந்தித்த சமய அறிஞர் **பு. ர. சுவாமிநாதன்** குறிப்பிடுவது வருமாறு: Dr. Temple என்ற ஆர்ச் பிஷப், தாம் இறப்பதற்கு முன் கிருத்து சமயத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமெனப் புதிய இயக்கம் ஒன்றை ஏற்படுத்தினர். அதற்குப்பெயர் 'Conversion of England'. பல நூற்றாண்டுகளுக்கு முன் ஆங்கில மக்கள் கிருத்துவ மதத்தினராகியிருப்பினும் அவர்கள் உண்மைக் கிருத்துவர்களாக வாழவைக்க அவர்களுக்குக் கிருத்துவ தத்துவங்களைப் போதித்து நல்ல முறையில் பயிற்சியளிப்பதற்காக ஏற்பட்ட இயக்கமாகும் அதே நிலையில் நாமும் சைவர் என்ற பெயருடன் மட்டும் நில்லாமல் சைவ சமய உண்மைகளை நேர்முகமாக ஆராய்ந்து உண்மைச் சைவர்களாக, 'saivaites' ஆக மாறவேண்டும்''[1]

16.1 மதப்பண்பாடு - நாட்டுப் பாதுகாப்பு

இந்திய வரலாற்றில் மிகத் தொன்மையான காலத்திலேயே எத்தனையோ அரசியல் வேறுபாடுகளுக்கும் இன வேறுபாடு களுக்கும் மொழி வேறுபாடுகளுக்கும் எல்லை வேறுபாடுகளுக்கு மிடையே ஒரு குறிப்பிடத்தக்க மத வழிப்பண்பாட்டு ஒருமை யுணர்வு ஏற்பட்டிருந்தது.

பல்வேறு காலங்களிலே தோன்றியருளிய அருட்செல்வர்கள் நாட்டின் முழுமை நோக்கிலே, இந்து மதத்தினராயினும், இந்தியக் கிறித்துவ மதத்தினராயினும், இந்திய இசுலாமிய மதத்தினராயினும், பிற எம்மதத்தினராயினும் ஒருமையுணர்வை

1. சிதம்பரம் R. கனகசபை பிள்ளை மணிவிழா மலர், 1973, பக், 342-43

அறிவுறுத்தியுள்ளனர். **வேற்றுமையிலே ஒற்றுமை** (Unity in diversity) எவ்வாறோ போற்றப்பட்டு வந்துள்ளது; இனியும் போற்றப்பெறும் என்ற நம்பிக்கையொளி பசுமையாக உள்ளது.

ஒரொரு காலத்தில் இடையிடையே தோன்றி நிலவும் குறுகிய எல்லையுணர்ச்சிகளையும் மதவுணர்ச்சியையும் கடந்து, தம் சொல்லாலும் செயலாலும், பாரதம் என்பது வடக்கே இமயமலைக்கும் தெற்கேயும் தென்கிழக்கேயும் தென்மேற்கேயும் அமைந்த கடல்களுக்கும் இடைப்பட்ட வெறும் நிலப்பரப்பு என்று மக்கள் கருதவில்லை: தெய்வநல **பாரதத் தாயாக** மதித்துப் போற்றுகையில் பிளவும் காழ்ப்புணர்ச்சியும் தூண்டிவிடும் குறுகிய மனப்பான்மையர்களின் அழிப்பெண்ணங்களைக் கடந்து நிற்கின்றனர். பகைமைகளை எதிர்த்து நிற்கும் ஓர் ஆன்மிக வலிமைப் படையாகவும் தெய்வநல வாழ்க்கைக்குரிய ஞான பூமியாகவுமே அதனை மக்கள் கருதி வருகின்றனர்.

தமிழ் நாட்டளவிலே சிந்தித்தாலும் வடவேங்கடம் தென் குமரிக்கு இடையேயுள்ள நிலப்பரப்பைத் தமிழன்னை ஆட்சி செலுத்தும் பண்பாட்டு நிலப்பகுதியாகவே மக்கள் கருதி வருகின்றனர். இந்துக்களும் இசுலாமியர்களும் கிறித்துவர்களும் பிறரும் தத்தம் சமயநெறிகளைப் போற்றிவரும் அதே வேளையில் '**நாமெல்லாம் தமிழ்த் தாயின் மக்கள்**' என்ற உணர்வு அவர்களின் அடிமனத்தில் இருந்து வருகிறது. எனவே, வேற்றுப் புலத்திலிருந்து பல்வேறு காழ்ப்புணர்ச்சிகளால் சிற்சில வேளை களில் தமிழ்நாடு சோதனைகளுக்கு ஆட்படினும், சமயப் பொதுமையுணர்வால் அவற்றைக் கடந்து மீளும் சக்தி எப்போதும் நிலைகொண்டு காத்து வருகிறது. படைக்கருவி களை விட, மக்களின் மனப்பக்குவமே- ஆன்மநல அடிப் படையிலமைந்த தந் நம்பிக்கையே - அவர்களுக்குப் பாது காப்பாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டுச் சான்றோர்களால் வரையறுக்கவும் வழங்கவும் பெற்ற சமயமரபுகளும் தத்துவக் கொள்கைகளுமே, இன்றைய வுலகில் மக்கட்குலத்தினைச் சமயவழிப்பண்பாட்டுச் சிந்தனைகள் வாயிலாக மீட்டுப்பாதுகாப்பினையளித்து வருகின்றன. இதனை

உலகமே போற்றி வருகின்றது என்பது தமிழர்களுக்குத் தெம்பூட்டுஞ் செய்தியும் சக்தியுமாகும்.

ஆகவே, தேச அளவிலும் நாட்டளவிலும் அயல்நாட்டுக் கலகச்சக்திகளுக்கு இடந்தரும் போது தலையெடுக்கும் சச்சரவு - ஊர் இரண்டுபட்டால் **கூத்தாடிக்குக் கொண்டாட்டம்** எனும் நிலை -மக்களின் திரண்ட ஆன்மநல உணர்வாலும் செயற்பாட்டாலும் தவிர்க்கப்படுகிறது. அந்நிலையில் இந்தியத் துணைக் கண்டமும், அதனிலடங்கிய தமிழ்நாடும் பாதுகாப்புடன் இருந்து வருகின்றன. இந்தச் சூழலுக்கு ஆதரவாகத் தென்குமரியன்னையும் தவமிருந்து வருதலை **மகாகவி பாரதியார்,**

''நீலத் திரைக்கட லோரத்திலே -நின்று
''நித்தம் தவஞ்செய்யுங் குமரியெல்லை''[1]

என்று பாடிக்காட்டுகிறார்.

17. மத வழிபாட்டு முறைகள் — பொது நோக்கு:

உலகில் பல மதங்கள் உள்ளன. அந்தந்த மதத்திலுள்ள பெருமக்களும் தத்தம் மதங்களுக்குரிய தத்துவங்களையும் வழிபாட்டு முறைகளையும் தம் முன்னோர்கள் வகுத்தமுறையில் கடைப்பிடித்து வருகின்றனர். கடவுளர்களை ஏற்றுக் கொண்டு செல்லும் நெறிகளாகிய ஆத்திக மதங்களே (Orthodox Religions) உலகில் பலவாக நிரம்பப் பரவியுள்ளன. கடவுட் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாமல், வெறும் அறநெறிகளை மட்டும் வற்புறுத்தும் கோட்பாடுகளாகிய **நாத்திக மதங்கள்** (Hetrodox-Religions) அவ்வளவாகப் பரவவில்லை.

தெய்வ நம்பிக்கையுள்ள மதங்களில் வழிபாட்டுச் சடங்குகளும் கிரியைகளும் மிகுதியாகக் காணப்படும். பொதுநோக்கில் ஆராய்கையில், இந்துமதம் தவிர மற்ற மதங்களிலே, முக்கியமாகப் **பிரார்த்தனை** (Prayer) மட்டுமே நிரம்ப வலியுறுத்தப் படுகின்றது. பார்சி மதத்தில் மட்டும் அக்கினி **வழிபாடாகிய** வேள்வி (ஓமம்) செய்வது முதலியன உள்ளன. பௌத்த, சமண மதங்களில் சில பிரிவுகளிலே புத்தர் சிலைகளுக்கும், சமண

1. பாரதியார் கவிதைகள், செந்தமிழ் நாடு, 5

தீர்த்தங்கரர் சிலைகளுக்கும் பூசை ஆராதனை முதலியன நியமத்துடன் நடைபெறுகின்றன. அவற்றைத் தவிர மற்றக் கடவுள் வழிபாடுகளை அம்மதங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. நல்லொழுக்கத்துடனும் ஆசார சீலங்களுடனும் வாழ்ந்தாலே போதுமென்பது அவற்றின் கோட்பாடாக அம்மத நூல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது

''கிறித்துவ மதத்திலும் - இசுலாமிய மதத்திலும், கடவுள் தத்துவம் ஒப்புக்கொள்ளப்பட்ட போதிலும், உருவ வடிவத்தில் கடவுளை அவர்களை ஒத்துக் கொள்வதில்லை. ஆனாலும், பிரார்த்தனை செய்வதற்கென்று, தனியிடமும், அந்தந்த மதத்திற்கென்று தனியாகச் சில அடையாளச் சின்னங்களும் அங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. **கிராஸும்** (சிலுவையும்) ஏசுவின் பிம்பமும் கிறிஸ்துவ மதத்தின் பிரார்த்தனா ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வண்ணமே **நட்சத்திரமும் இளம்பிறைச் சந்திரனும்**, முகம்மதியர்களின் பகுதிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன,

சீக்கிய மதத்திலும் ஆண்டவனை ஏற்றுக்கொண்டாலும் உருவ வழிபாட்டில் ஆண்டவனை அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை ஆனால் **குருநானக் படமும்** அவர்கள் **மதபுஸ்தகமும்** (கிரந்தங்களும்), **கத்தி போன்ற புனிதமான வஸ்துக்களும்** குருத்துவாரத்தில் - பிரார்த்தனா ஸ்தலத்தில் - வைக்கப்பட்டிருக்கின்றன

உலகிலுள்ள எல்லா மதங்களையும் பார்க்கையில் ஆண்டவனை ஏற்றுக் கொண்ட முறையிலும் ஏற்றுக் கொள்ளாத முறையிலும், ஓர் உருவ வடிவத்தில் அடையாளச் சின்னத்தை வைத்துத்தான் பிரார்த்தனா ஸ்தலத்தில் பிரார்த்தனை செய்கிறார்கள். அதே நேரத்தில் சூன்யமான இடத்தில் யாரும் பிரார்த்தனை செய்வதில்லை''[1] என்று ஒப்பீட்டு நோக்கில் **ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜயந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்** எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்கதாகும்.

1. இந்து தர்மங்கள் (வானதி பதிப்பகம்), பக். 94-95

17.1. வழிபாடு - மதங்களுக்கிடையே வேறுபாடு:

இறைத் திருவருளைப் பெற வழிபாட்டினைப்-பூசனையைப் -புரிந்து கொண்டு நெஞ்சாரச் செய்தல் வேண்டுமென்பது பொது விதி. ஆனால், பௌத்தமதம் மலர் வழிபாட்டிலே பெரிதும் நம்பிக்கையுடையது என முன்னரே - மலர்ப் பண்பாட்டிலே - கண்டோம்.

மணிமேகலைக் காப்பியத்திலே தாமரை வடிவமுள்ள புத்த பீடிகையில் ஒரு தெய்வத்தை எண்ணி வேண்டியிடும் மலர்களே பயன் தருகின்றன என்பதும், ஏதோ நினைப்பில்- நெஞ்சம் பதியாமல்-இட்ட மலர்கள் அப்படியே கிடக்கின்றன என்பதும் கூறப்படுதலைப்,

''பளிக்கறை மண்டப முண்டத னுள்ளது
தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த
தாமரைப் பீடிகை தானுண் டாங்கிடின்
... ...
கடம்பூண் டோர்தெய்வங் கருத்திடை வைத்தோர்
ஆங்கவ ரடிக்கிடின் அவரடி தானுறும்
நீங்கா தியாங்கணும் நினைப்பில ராயிடின்''[1]

எனவரும் அடிகளால் காண்க.

இந்து மதம் மிகவும் நெகிழ்ச்சி வாய்ந்தது; எனவே, இறைத் திருவருளை உளமார வேண்டி மலர் வழிபாடு செய்தாலும் சரி, இறைச்சிந்தனையே யின்றி **நன்மலர்களையும் பத்ரங்களையும்** (தளிரிலைகளையும்) போடுதல் தற்செயலாகத் தெய்வச்சிலை மீது வீழ்ந்தாலும் சரி, பயனுண்டு என்பது கருதத்தக்கது.

பொதுவாகச் சிவராத்திரிநாள் சிவவழிபாட்டிற்கு மிகவும் உகந்த நாளாகும். அன்று சிவாலயங்களில் இரவிலும் பூசை வழிபாடு நடைபெறுதல் சமய மரபாகும். முன்பொரு காலத்தில் **திருவைகாவூர்த்** தலத்தில் வேடனொருவன் கொடிய வலிய புலிக்கு அஞ்சியவனாய் வில்வ மரத்தின்மீதேறி, உறக்கம் வந்து கீழே வீழ்ந்து விடாமலிருத்தற் பொருட்டு, வில்வ

1. மணிமேகலை, மலர்வனம் புக்க காதை, 64-72

இலைகளைப் பறித்துத் தன்னையறியாமலேயே கீழே எறிந்து கொண்டிருந்தான். அவைகள் மரத்தின் கீழே எழுந்தருளியுள்ள சிவலிங்கத் திருமேனியில் விழுந்து விடவே அவை பூசனைப் பொருள்களாக இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. **சிவராத்திரி**யன்று உறங்காமலிருந்து வில்வத்தால் சிவபிரானைப் பூசித்து வழிபடும் புண்ணியம் வேடனுக்குக் கிடைத்தது என்றும், வீடுபேறு கொள்ளுந் தகுதியையடைந்தான் என்றும் புராணம் கூறும். இது நிகழ்ந்த இடம் தஞ்சை மாவட்டத்துத் திருவைகாவூர் எனக் கொண்டு சிவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

இவ்வாறே புத்தி பூர்வமின்றிச் செய்யப்படும் சில செயல்கள் இறைப் பணிகளாகப் போற்றப்படுதலைப் பல நிகழ்ச்சிகளால் உணரலாம்.

இறைவன் திருக்கோயிலில் திருவிளக்கின் நெய்யை உண்ணும் பொருட்டு வந்த **எலி**யொன்று, தன்னையறியாமல் மூக்கினால் திரியைத் தூண்டிவிடவே, அது காரணமாக **மானுடப்பிறவி** பெற்றது என்றும் புராணம் கூறும்.

17.2 வழிபாடு-செபம் (பொதுநோக்கு)

கடவுளிடம் ஒன்றுதற்கு மானுடன் தன் ஆன்மாவை அடைக்கலப் படுத்தும் நோக்கில் காணலாகும் சமயநெறி உத்திகளுள் ஒன்று செபம். செபம் என்பது மந்திர ஆற்ற லுடைய இறைத் திருப்பெயரை மீண்டும் மீண்டும் நினைவிற் கொள்வதும் ஓதுவதுமாகும். உலகிலுள்ள பல மதங்களும் செபத்தில் நம்பிக்கை கொண்டுள்ளன. **'உரு ஏறஏறத் திரு ஏறும்'** என்பது செப அடிப்படையில் சிந்திக்க வேண்டிய வாய்மொழி.

கிறித்துவர்கள் செபிப்பதால் சாதனைகள் பலவற்றை நிகழ்த்த முடியும் என்ற நம்பிக்கையில், மாதா கோவில்களிலும் தனிப்பட்ட இடங்களிலும் செபம் புரிதலை நெஞ்சாரச் செய்து வருகின்றனர். தனிப்பட்டவர்களின் ஈடேற்றத்திற்கேயல்லாமல், பொதுநலங் குறித்தும் செபம் புரிந்து வருகின்றனர். பொது மருத்துவமனைகளுக்குத் தாமே விருப்பத்துடன் சென்று பிணி

யாளர்களின் நோய் தீருமாறு வேண்டிய வண்ணம் பாதிரி மார்கள் புரியும் செபம், மத நோக்கத்தை நிறைவு செய்யும் பாங்கினில் உள்ளது.

இசுலாமியர்களும் செபஞ்செய்வதில் நாட்டமுடையவர்கள், தமக்கேயன்றிப் பொதுமக்களுக்காகவும் செபம் புரிந்து, நோய் நீக்குவதிலும் கண்ணேறு கழிப்பதிலும் நாட்டமுடையவர்களாய் இசுலாமிய மதத் தொண்டர்கள் ஓதி வருகின்றனர்.

கிறித்துவர்களும் இசுலாமியர்களும் செபஞ்செய்து கணக்குடன் எண்ணிக்கை கொள்வதற்காக இந்துக்களைப் போலவே **செப மாலையைப்** பயன்படுத்தி வருகின்றனர். (கிறித்துவர்கள் பயன் படுத்தும் செபமாலையில் 99 மணிகள் இருக்கும் என்பதும் ஈண்டு இயைபுடன் நினைவிற் கொள்ளலாம்).

செபத்தின் சீரிய இயல்புகளை அலசி ஆராய்கையில் பலவற்றை நினைவிற் கொள்வது நல்லது; அந்த நோக்கத்தில் சிலவற்றைக் காண்போம்.

புகழ்ச்சி இகழ்ச்சிகளைச் சிறிதும் பொருட்படுத்தாத பண்பட்ட மனத்தினைப் பெறுதற்காகத் திருவருளுக்குப் பாத்திரராகும் வண்ணம் ஒருமையுணர்வுடன் இறைநலஞ் சிந்திப்பதே **தியானமாகும்.** இறைநலத்தையோ இறைத்திருப் பெயரையோ பன்முறை உருவேற்றுகையில் **செபமாகும்.**

தியானத்தாலும் செபத்தாலும் பற்றற்ற தெய்வநலஞ் சித்திக் கும். **செபத்தால் உருவேற்றப்படும் சொற்களுக்கு மந்திர ஆற்றல் உண்டு** என்பது சான்றோர்களின் அனுபவ உண்மையாகும். இத்தகைய மறைமொழியுண்மையைக் கால இட நிமித்த-மெல்லாம் கட்டுப்படுத்திட இயலாது. எக்காலத்தும் நின்றொளிரும் உண்மையை மனத்துள் நிலையாக -மந்திர ஆணையாகப் -பேணிக் காத்தல் ஒவ்வொருவருடைய பக்தி வைராக்கியத்தைப் பொறுத்ததாகும்.

இந்துமதத்துக் கிளைகளாகிய சமயங்களில் செபத்தின் சிறப்பும் செபமாலையின் தேவையும் இனிது புலப்படுத்தப்

பட்டுள்ளன. இறைவனே **செபம்** புரிந்த புராணக் குறிப்புக்களும் உண்டு. அல்லும் பகலும் நின்றாடும் சிவனது நடனத்துடன் **செபம்** உவமிக்கப்படுகிறது. ''திருவாரூரில் சிவன் ஆடிய நடனம் **அஜபா நடனம்.** சிறிதும் சலிக்காமல், **இடை வெளியில்லாமல் தியானம் செய்வதைத்தான் அஜபாஜபம்** என்பார்கள். திருவாரூரில் **திருமால்** அஜபாஜபம் செய்து கொண்டிருந்ததாகவும் அவர் மனதில் சிவன் நடனமாடிக் கொண்டிருந்ததாகவும் கூறுவார்கள்''[1] எனவருங் குறிப்பினைக் காண்க.

உலகியற் செயற்பாடுகளில் பயன்படும் மந்திரங்கள் ஒரு புறமிருக்க, அருளியல் நாட்டத்தில் பயன்படும் மந்திரங்களைத் தக்க **ஞானகுருவிடம்** உபதேச வாயிலாகப் பெற்றுச் செபித்தல் வேண்டும். அதனால், உலகமே நலம் பெறும்.

மேலான மந்திரங்களை உருப் போட்டுச் செபிப்பது மட்டு-மல்லாமல் அவற்றின் பொருளையும் அறிந்துகொள்ளவேண்டும். அவற்றைப் பிறகு தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும். இதுபற்றி **ஆச்சார்ய வினோபா பா்வே** விளக்குகையில், ''இத்தகைய மந்திரம் நம்மைக் கட்டிப் போடுவதில்லை அதை அளித்த குருநாதரும், பெற்றுக் கொண்ட சீடரும் சர்வசுதந்திரமாக இருக்கலாம். தாவரம் வேரைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறது. ஆனால் இலை, மலர், காய் என்று சுதந்திரமாக வளருகிறது. அதைப் போல ஒவ்வொரு சீடனுக்கும் ஏற்ற பிடிப்பு ஏற்படுவதற்குரிய மந்திரத்தைக் குருநாதர் உபதேசிப்பார். அதைப் பெற்றபின் சுதந்திரமாக அவன் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும்''[1] எனக் கூறிச் செல்வது மனங்கொள்ளத்தக்கது ஆகவே, செபத்திற்குரிய மந்திரத்தைத் தேர்ந்தெடுப்பது அவரவர் பக்குவத்தையும் ஆர்வத்தையும் பொறுத்தது எனலாம்.

17-3 இறைஞ்சி வேண்டல் (பிரார்த்தனை - Prayer)

''பிரார்த்தனை'' என்பது மக்களிடையே பயின்று வழக்கத்திலுள்ள சொல்லாகும். உலகத்திலுள்ள பல மதங்களை நடைமுறையில் கொண்டு வருவதற்குப் பல உத்திகள் - அமைப்பு முறைகள் - கையாளப்படுகின்றன. அவற்றுள் பிரார்த்தனை

1. அம்மன் தரிசனம் (திங்களிதழ்), ஜூன், 1992

அல்லது இறைஞ்சி வேண்டுதல் என்பது மிகமிகச் சிறப்புடைய தாகும். மதக் கோட்பாடுகளைச் சரியாக உருவாக்கிக் கொள்ளாத மதங்களிலும் பிரார்த்தனை தக்க இடம் பெற்றுள்ளது. மக்களின் இயல்புணர்விலேயே பிரார்த்தனை அமைந்திருக்கிறது என்பது மிகையன்று.

பிரார்த்தனைப் பொருண்மையை விளக்குதற்குச் **சுவாமி சித்பவானந்தர்**, "மனிதன் பழகிவரும் பிரார்த்தனை என்னும் சீரிய செயலை விளக்குதற்குப் பல சொற்கள் வழக்கத்தில் வந்துள்ளன. கடம்படல், போற்றுதல், ஏத்துதல், வணங்குதல், வழிபடுதல், வேண்டுதல், கோரிக் கொள்ளுதல், இன்னோரன்ன சொற்கள் அவை. மனிதன் செய்கின்ற ஆன்ம சாதனங்களுள் பிரார்த்தனை ஒன்றே வலிவுமிக வாய்க்கப் பெற்றது என்பது ஆன்றோர் துணிபு. அதை முறையாகச் செய்கின்றவனுக்கு நாடியவெல்லாம் கைகூடுகின்றன என்பர். அதன் அடிப்படைத் தத்துவத்தை உள்ளபடி அறிந்து கொள்பவரே அதை ஒழுங்காகச் செய்ய முடியும். மாந்தர் அனைவரும் முறையாக வோ முறைதவறியோ பிரார்த்தனை பண்ணி வருகின்றனர். உடல்வளர்ச்சிக்கு உணவு பயன்படுவது போன்று உள்ளத்தின் எழுச்சிக்கு இறைவணக்கம் உதவிவருகிறது."[1] என்றும், "மனிதன் தன்னிலும் மிக்கதொரு பொருளிடத்திலிருந்து உதவியைப்பரிந்து வேண்டுகிறான். தன்னுடைய தனி முயற்சியும் ஆற்றலும் தனக்குப் போதமாட்டாவென்று மனிதன் நன்கு உணர்கிறான். அறிவிலும் ஆற்றலிலும் தன்னிலும் மிக்கதொன்று இயற்கை யில் ஊடுருவியோ அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்டோ இருக்கிறது என்னும் நம்பிக்கை மனிதனிடத்து உறுதி பெற்றிருக் கிறது. அப்பெரிய பொருளோடு தொடர்பு பூணவும், அதன் உதவியைப் பெறவும் அவன் அவாவுறுகிறான். அங்ஙனம் மேலான ஒன்றன் துணையை நாடியிருப்பதற்குப் பிரார்த்தனை என்று பெயர்"[2] என்றும் எழுதிச் செல்வது மிகவும் மனங் கொள்ளத் தக்கதாகும்.

பிரார்த்தனை உலகியல் நோக்கிலும் அமைவது உண்டு; அருளியலாகிய ஆன்மிக நோக்கிலும் அமைவது உண்டு.

1, 2. சமயச் சொற்பொழிவுகளில் புலப்படுத்திய இக்கருத்துக்கள் தர்மசக்கரம் (திங்களிதழ்) போன்றவற்றிலும் காணலாம்.

மனிதன் தான் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் தோல்விகண்டு வேறு கதியற்ற நிலையில் இறைவனை நோக்கித் திரும்புகிறான். பொதுவாக எதிர்பார்ப்புக்களாலும், ஏமாற்றங்களாலும், இடையூறுகளாலும், இன்னல்களாலும், அலைக்கழிக்கப் பெற்றநிலையில் இறைவனை நினைந்து பிரார்த்தனையில் ஈடுபடுகிறான். இத்தகையவன் தன் உலகியல் ஆசைகளும் தேவைகளும் நிறைவேற்றுதற்காகப் பிரார்த்திப்பதால், இது உலகியல் சார்புடையது. தன் அளவிலும் தன் சுற்றத்தார் அளவிலும் கூட இவ்வாறான பிரார்த்தனை அமையலாம்.

அடுத்ததாக அருளியல் நோக்கில் அமையும் பிரார்த்தனையைச் சிறிது விளங்கக் காண்போம்.

தன் தேவைகளுக்கென அமையாது, உலக நலத்தின் பொருட்டு உயிர் நலங்காக்கும் அருளியல் நோக்கில் பிரார்த்தனை அமைவது உண்டு. அருளாளர்களிடம் இத்தகைய பிரார்த்தனையைக் காணலாம்.

அப்பூதியடிகளின் திருக்குமாரனான மூத்த திருநாவுக்கரசைப் பாம்பு தீண்டிய காரணத்தால் இறந்து விடுகிறான். திருத்தொண்டரின் தூய தொண்டுக்கு நேரிட்ட சோதனையைக் கண்ட **அப்பரடிகள்**, மனந்தளராமல் அருளியல் நோக்குடன் திங்களூர் இறைவனிடம் பிரார்த்தித்து "ஒன்றுகொலாம்" எனத் தொடங்கும் பதிகம்பாடி **உயிரை மீட்டருள்கின்றார்.**

திருஞானசம்பந்தர் திருமயிலையில் இறைவனைப் பிரார்த்தித்து, "மட்டிட்ட புன்னையங்கானல்" எனத் தொடங்கும் **பூம்பாவைப் பதிகம்** பாடி, எலும்புக் குடத்திலிருந்து **பூம்பாவையை உயிர்ப்பித் தருளுகின்றார்.**

சுந்தரமூர்த்தி நாயனார் அவிநாசியில் **முதலையுண்ட பாலகனை** மீட்பதற்காக இறைவனைப் பிரார்த்தித்துப் பதிகம் பாடித் தம் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கிறார்.

இவ்வாறு அருளாளர்கள் இறைவனிடம் நெஞ்சாரப் பிரார்த்தித்துக் கொண்டு, மக்களுக்குக் கருணையால் தொண்டு

புரிந்துள்ளனர். இவையெல்லாம் ஆன்மீக அடிப்படையில் அமைந்த பிரார்த்தனையால் நடந்தவை எனக் கொள்ளுதல் தகும்.

அருளியலடிப்படையில் அருட்செல்வர்கள் நோய்நீக்கியும் உயிரை மீட்டும் புரிந்த பிரார்த்தனைத் தொண்டுகள், எல்லா மதங்களிலும் காணக் கிடக்கின்றன; தத்தம் சமயப் பெருமையை நிலைநாட்டும் நோக்கத்திலே அறைகூவலுடன் பிரார்த்தனைகள் நடைபெற்ற நிகழ்ச்சிகளும் உண்டு.

பிரார்த்தனைகளை நான்கு வகைகளிலும் அடக்கிக் காண்பதும் உண்டு.

1. மக்கள் தாம் துன்பப்படுகையில், துன்பத்தினின்றும் மீள்வதற்காகத் தெய்வத்திடம் நெஞ்சார வேண்டிக் கொள்வர். தமக்கு ஏற்பட்ட துன்பத்தினின்றும் விடுபடத் தம் அளவில் முயன்று வெற்றி பெறாத நிலையில், தெய்வத்திடமே தமமை ஒப்படைக்கும் நிலையில் பிரார்த்தனை புரிகின்றனர். மேலும் நோய்வாய்ப்பட்ட நிலையில் தாம் மருத்துவச் சிகிச்சை செய்து கொண்டாலும், அந்த அளவில் மனம் நிறைவு கொள்ளாமல், தோன்றாத் துணையாய் விளங்குந் தெய்வத்திடம் பிரார்த்தனை செய்வதை மக்கள் விரும்புகின்றனர். தாம் நோய்களினின்றும் நீங்குவது ஒருபுறமிருக்கத் தம் பகைவர்கள் தம்மைக் கொடுமைப் படுத்தாமலிருக்கவும், பகைவர்களை ஒழித்திடவும் தெய்வத்திடம் மக்கள் பிரார்த்தனை செய்கின்றனர்.

இவ்வாறெல்லாம் பிரார்த்தனை செய்பவர்களை ஒரு வகையினராகத் தொகுத்துக் காணலாம்.

2. மக்கள் இயற்கைப் பொருள்களிலும் செயற்கைப் பொருள்களிலும் தம் வசதிகளுக்கேற்ற பொருள்களைப் பெற்று மகிழ்கின்றனர். இயற்கைப் பொருள்கள் செழிப்பதற்காகப் பருவமழை வேண்டிப் பிரார்த்திக்கின்றனர். தம்முயற்சி மேற் கொண்டு கல்வி செல்வம் பட்டம் பதவி முதலிய செயற்கைச் செல்வங்களை, ஆக்கங்களை மேலும் மேலும் பெற வேண்டித் தெய்வத்திடம், பிரார்த்தனை செய்கின்றனர். அதற்கு மேலும்

தமக்குத் திட்பமும், நீண்ட ஆயுளும் ஏற்படவும், உற்றாரும், உறவினரும் ஏற்புடைய நிலையிலிருக்கவும் தெய்வத்திடம் பிரார்த்தனை புரிந்து வருகின்றனர்.

இவ்வாறெல்லாம் பிரார்த்தனை செய்பவர்களை மற்றொரு வகையினராகத் தொகுத்துக் காணலாம்.

3. மக்கள் துன்பத்தை வெறுப்பதும் இன்பத்தை விரும்புவதும் தம்மியல்பாகக் கொண்டுள்ளனர். தங்களைப் பிணியினின்றும், துன்பத்தினின்றும், பகையினின்றும் தெய்வம் அகற்றிவைத்தால், கைம்மாறாகத் தெய்வத்துக்கு ஏதேனும் படையலோ கைங்கரியமோ செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றனர். இவ்வாறான வேண்டுதலை '**நேர்த்திக்கடன்**' என்பர்.

தாங்கள் விரும்புகின்ற பொருளையும் வித்தையையும் பதவியையும் போகத்தையும் தெய்வம் தங்களுக்கு நல்கியருளினால் நன்றி செலுத்துகின்ற பாங்கினில் பிரார்த்தனை செய்துகொள்கின்றனர். இத்தகைய **காமியப் பிரார்த்தனையையும் நேர்த்திக்கடன்** என்றே வழங்குவர். இவ்வாறான தொடர்பில் மெய்ப் பொருளாராய்ச்சியில் ஈடுபட்டுத் தத்துவ வித்தகர்களாக ஆவதற்கு, சமயஞான இன்பத்தில் திளைப்பதற்கு, வாய்ப்பாக **ஞானத்தையும் பக்தியையும்** நாடிப் பிரார்த்தனை செய்வர்.

இவ்வாறெல்லாம் பிரார்த்தனை செய்பவர்களைப் பிறிதொரு வகையினராகத் தொகுத்துக் காணலாம்.

4. மக்கள் மெய்ப்பொருள் நாட்டத்தினை உள்ளுணர்வு அடிப்படையில் கொண்டவர்களாய், அதனை அடைதற்கு அல்லும் பகலும் அதே நிலையில் தெய்வநலப் பிரார்த்தனையிலே ஈடுபடுவர். ஞான நிலையில் சுவானுபூதியிலே இறைநல இன்ப வேட்கையுடன், பிரார்த்தனையில் ஈடுபடும் இவர்கள் மேலாந் தரத்தினர். தங்களுக்காக என ஏதையுமே பிரார்த்தனை செய்யாமல், பரம்பொருளின் பெருமைகளை விளக்குதலையே பிரார்த்தனையின் மையக் கருத்தாகவும் பயனாகவும் அமைத்துக் கொள்வர். தெய்வநலச் சிந்தனையமுத்தங் காரணமாகத் தெய்வமயமாகவே அவர்கள் மாறிவிடுகின்றனர் எனலாம்.

சத்சங்கம் - அருளாளரிணக்கம் - என்பதை முதற்படியாகக் கொண்டு மனப் பக்குவத்துடன் பிரார்த்தனை புரிகையில் தெய்வமே அருள்புரியக் காத்துநிற்கும் எனலாம். இத்தகைய நெஞ்சார்ந்த **பிரார்த்தனையின் இடத்தையே, இக்காலத்தில் பூசை, தியானம், ஆன்மவிசாரம், சில கிரியைநெறிகள் ஆகியவை** பிடித்துக் கொண்டன என்பர். சமயப் பண்பாட்டுப் பரிணாம வளர்ச்சியில் இந்தக் கருத்தும் சிந்திக்க வேண்டியதாகின்றது.

17-4 வழிபாடு - தியானம்

ஆத்திக மதங்களிலும் நாத்திகக் கோட்பாடுகளிலும் பொதுவாகத் தியானம் வலியுறுத்தப் பெறும். **தியானம் என்பது மனத்தை ஒருமுகப்படுத்துதல்** எனச் சுருக்கமான முறையில் பொருண்மை காணலாம். மனம் ஒருமுகப் படுவதால் தியான சித்தியுண்டாகவே, நெற்றிக்கு நேரே ஞானஒளிகாண வாய்ப்பு உண்டாகும். அஃதாவது, ஆத்திக நோக்கில் **புருவமத்தி, ஆஞ்ஞாபீடம்,** மகாமேரு, **விந்துத் தானம்** என்றெல்லாம் வழங்கப்படும். **லலாட வொளி** முகிழ்க்கக் காணலாம். அந்நிலையில் ஆயிரம் இதழ்த்தாமரை நடுவே யமர்ந்துள்ள ஒளிமயமான இறைவனைக் காணவும், இறவாப் பெருநிலை பெறவும் வாய்ப்பு உண்டாகும். இதற்கான படிநிலைகளைக் காண்போம்.

உலகில் மக்கள் அன்றாடம் பல்வேறு எண்ணங்களால் அலைக்கழிக்கப்பட்டு அல்லலுறுவதைக் காணலாம். பல்வகைச் சிந்தனைகளால் மனம் சீர்குலையா வண்ணம் மக்களை நன்நெறிப் படுத்துதற்கு முதற் படியாக அமைந்து ஆறுதலளிப்பது தியானம் ஆகும்.

உலகத்தில் உறுதிப்பொருள்களாகிய அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கனுள் முதலாவதாகிய **அறமே** ஏனையவற்றிற்கு அடிப்படையாக அமைந்து, ஏனையவற்றினோடே இழையோடி, உயிரின் உய்திக்கு வழிகோலுவதாகும். அத்தகைய அறத்தின் சாரமே மனத்தூய்மையிலே தான் அடங்கியுள்ளது; இதனை வலியுறுத்தும் வகையில் **வள்ளுவப் பேராசான்,**

''மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறம்
ஆகுல நீர பிற''1

என மொழிந்துள்ளமை காண்க. மனத்தில் மாசு அணுசா வண்ணம் மனத் தூய்மையுடனிருக்கையில், அந்த மனமே இறைவன் உவந்து அமரும் ஆலயமாகும் என்பது அருளாளர்கள் பலரின் நம்பிக்கையாகும். இதனை மனத்துட் கொண்டு தியானத்துக்கு அடிப்படைக் கருவியான மனம் பற்றி அறிவியல் அணுகு முறையுடன் சிறிது காண்போம்.

பொதுவாக, மனம் இருவகைகளில் செயற்படுகின்றது. அவற்றை முறையே **புறமனம், அடிமனம்** அல்லது **ஆழ்மனம்** என உளவியலார் கூறிக் காட்டுவர். உலகியல் வாழ்க்கையில் - அன்றாடப் பணிகளில் நடவடிக்கைகளில் - மக்களை ஈடுபடுத்தி வருவது புறமனமேயாகும். எனினும், புற மனத்தை இயக்கிச் செயற்பட வைப்பதிலும், நன்னெறியில் செலுத்துவதிலும் அடிமனம் பங்கு கொள்கிறது. ஆக, மானுடனை நெறியான வாழ்வில் காலூன்றச் செய்வதில் அடிமனத்து இயக்கம் தவிர்க்க வியலாத சிறப்பினைக் கொண்டது என உணர்தல் வேண்டும். அவ்வாற்றான் அடிமனப் பயிற்சிக்கு ஒவ்வொருவரும் ஓரளவு நேரம் ஒதுக்குவது நல்லது.

அடி மனப் பயிற்சியைத் தெள்ளிதின் வகுப்பது **தியானம்** ஆகும். இதனை நன்கு புரிந்து கொள்ளும் வகையில் அருளியற் சிந்தனைகள் சிலவற்றைக் காண்போம்.

தியானம் செய்யும் போது படிப்படியே நாம் ஆழ் மனதை அடைகிறோம். அப்போது அங்கே தூய சிந்தனைகளைப் - புனிதமான சிந்தனைகளை - விதைக்கிறோம். இப்படி ஆழ்மனதில் நல்ல எண்ணங்களைப் பதியவைப்பதனால், செந்நெறிதலைப் படவழியேற்படும். ஆழ்மனதில் விதைக்கப்பட்ட விதைகள் தாம் நற் சிந்தனையாகவும் நற்சொல்லாகவும் நற்செயலாகவும் வெளிப்படுகின்றன. மேலும் குழப்பம் நீங்கவும் தேவையற்ற சிந்தனைகளைத் தவிர்க்கவும் தியானம் பெரிதும் உதவுகிறது.

1. குறள். 44

காலையில் ஒரு மணிநேரம் மேற்கொள்ளப்படும் தியானப் பயிற்சி, நாள் முழுவதும் நம் கடமைகளை முறையாகச் செய்வதற்கும், மனதை நடுநிலையில் வைத்திருப்பதற்கும், மனம் வரையறை மீறிச் செல்லாதிருப்பதற்கும் மிகவும் உகந்த வேளையாகும்.

உள்ளத்தில் தோன்றும் கோபம் பொறாமை பேராசை வெறுப்பு கொந்தளிப்பு கடுஞ்சொல் முதலியவற்றால் உடம்பு பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாகின்றது என்பது அறிவியலடிப் படையில் கண்டுணர்ந்த செய்தியாகும். உடல்நலம், சீர்கேடு அடையாமல் பாதுகாத்துக் கொள்ளுதற்கும் தியானம் தேவையாகின்றது. மனநலம் உடல்நலம் வாக்குத் தெளிவு ஆன்மநலம் ஆகிய அனைத்துக்கும் தியானம் வழிகோலும் என்பது ஆன்றோர்களின் அனுபவ வாய்மொழியாகும்.

"ஒரு வழிகாட்டி இருந்தால் மலை உள்ள இடத்தை. அருவி ஓடும் பகுதியை, கானகத்தின் காட்டுப் பாதையை அடையாளங் காட்டமுடியும். அதேபோல ஒரு **குருநாதர்** தான் உங்களுக்கு ஞான ஊற்று உள்ள இடத்தைக் காண்பிக்க முடியும், **மந்திரம் என்பது உங்கள் மனப்பூட்டைத் திறப்பதற்குரிய சாவியைப் போல.** அதில் விதையிலுள்ள வீரியம் போல் ஒரு சக்தி மறைந்துகிடக்கிறது. தக்க நிலத்தில் தக்க பருவத்தில் போடப்பட்ட விதை பலன் தருவதைப் போல அதுவும் நமக்குச் சரியான குருநாதர் மூலம் கிடைக்கும் போது பலன் தரமுடியும்"[1] என்று **சங்கர பகவத் பாதர்** போதிப்பது மனங்கொள்ளத்தக்கது. எனவே, தியானப் பயிற்சிக்குச் சற்குரு தேவையானவர் என்பது தெளிவு.

18. மதம் வழங்கும் மனநிறைவு:

அறிவியல் சாதனைகள் காரணமாக மக்கள் தம்மியல்பாகக் கொள்ள வேண்டிய பக்தியுணர்வைப் படிப்படியே புறக்கணித்து வந்துள்ளனர்; அஃது ஒரு புறமிருக்க, நேர்மையும் போதிய உழைப்பும் நாணயமுமின்றிப் பொருளை ஈட்ட நினைக்கின்றனர். அந்நிலையில், அவர்கள் தன்னலப்பற்று, அநியாய வட்டி, கலப்படம், கள்ளச்சந்தை, சுரண்டல், சூது, மது,

1 ஞானபூமி (திங்களிதழ்), ஜூன், 1992.

கொலை மிகுகாமம் முதலியவற்றில் தம்மை மறக்கின்றனர்; சமுதாய நலத்தைப் பற்றி அவர்கள் சிறிதும் கவலை கொள்வதில்லை.

தீய வழிகளில் ஈட்டிய பொருட்செல்வத்தால் படாடோப வாழ்க்கை வாழ முனைகின்றனர். தாம் செய்த தீவினைகளின் பின் விளைவுகளால் அல்லலுறும் போது மனங்கலங்கித் தவிக்கின்றனர். மனச்சான்றின் விழிப்பால் தாம் படும் துன்பங்களே தமக்கு ஒருவகையில் வாழ்வியல் போதனைகளையளிப்பதாகப் புரிந்து கொள்கின்றனர். அல்லலுறும் போதுதான் மக்களுக்கு வாழ்க்கையில் கொள்ளவேண்டிய சத்தியமும் புலனடக்கமும் சீலமும் பிற அறங்களும் நல்லவையெனப் படுகின்றன. மக்களுள் சிலர் தம் வாழ்வில் தம் தவறுகளைப் புரிந்துகொண்டு இடைக் காலத்தில் திருந்தி, இனியாகிலும் நேர்மையோடு வாழவேண்டுமென்று வைராக்கியங் கொள்கின்றனர்; நன்மையைக் கடைப் பிடித்துப் பொதுநலத்துடன் வாழ்ந்து உய்தி பெறுகின்றனர். ஆனால், சிலரோ எந்தச் சூழலிலும் யாராலும் திருத்த இயலாத தீயவர்களாகவே வாழ்வைக் கழிக்கின்றனர். சிலரின் கயமையை உலகம் புரிந்துகொள்ள இயலுவதில்லை. அவர்களின் கயமையை நினைந்து **வள்ளுவர்,**

> "மக்களே போல்வர் கயவர் அவரன்ன
> ஒப்பார் யாம்கண்ட தில்"[1]

என்று கூறும் வாய்மொழியையும் ஈண்டு இயைபுடன் சிந்தித்துப் பார்க்கலாம். சமுதாயத்தில் மதவுணர்வு அதன் உண்மையான நோக்கத்தில் புரிந்து கொள்ளப்படுமேயெனின், தீமையினின்றும் ஒருவி நன்றின்பால் உய்க்குஞ் செந்நெறி புலப்படும்; போலி நாடக வாழ்வினின்றும் மக்கள் தம்மை மீட்டுக் கொண்டு நன்னெறி தலைப்படும் உயர்வு நெறி கைகொடுக்கும். இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்

வாழ்க்கை என்ற நாணயத்தில் இன்பமும் துன்பமும் இரு பக்கங்களாகும். வாழ்வின் இவ்வுண்மையை உணர்த்தும் வகை

1. குறள். 1071

யில் உலகத்திலுள்ள எல்லா மதங்களும் **பொன்மீதும் பெண்மீதும் மண்மீதும்** ஆசை வைத்தால் ஆகாது எனப் போதிக்கின்றன. ஆனால், போதிக்கும் முறைகளில் சிற்சில வேறுபாடுகளும் படிநிலைகளும் காணப்படுகின்றன.

செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்பவற்றை ஆத்திக மதங்கள் குறிப்பிடாமலில்லை; ஆனால் அவற்றை மிக நயமாக மக்கள் மனத்தில் கொண்டு சேர்க்க இதிகாசங்களையும், காப்பியங்களையும் புராணங்களையும் உளவியல் போக்குடன் கடைப்பிடிக்கின்றன.

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்''[1] என்று கூறும் மதமே (சைவமே) ''வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்''[2] என்பதையும் எடுத்துக் கூறும். இவற்றை எந்தச் சூழல்களில் மக்களின் மனத்தில் பதியுமாறு செய்வது என உணர்ந்து கூறிச் செல்லும்.

நாத்திக மதங்களோ நிலையாமைத் தத்துவங்களையும், புலாலுண்ணாமையையும், ஆசையின் கொடுவிளைவுகளையும், புலனடக்கத்தையும், தவத்தையும், பிறக் கோட்பாடுகளையும், நேரே வலியுறுத்தும். அவற்றை ஏற்றுப்போற்றும் அறக் கோட்பாடுடையவர்களும் மக்கள்தொகையில் பலராகவே காணப்படுகின்றனர்.

மதங்களால் மனநிறைவு கொள்ள இயலும் என்ற உறுதியான நம்பிக்கையில் ஆத்திகச் சான்றோர்கள் எப்படியெல்லாம் பாடுபட்டுள்ளனர் என்பதைக் கடந்த கால வரலாற்றினை உன்னிப்பாகப் பயின்றால் தெளியலாம்.

1. திருமுறை, 3, 24, 1
2. திருமுறை, 7, 78, 1

2. சமயப் பண்பாடு

1. சமய உயிரோட்டம் - அடிப்படை

அறச்சார்பும் ஆன்மநலமும் ஏற்பதற்குரிய வாழ்வியல் முறையாக விளங்கும் சமயத்தைத் தத்துவமும், மறைகளும், புராணமும், தோத்திரங்களும், சமயநிறுவனமும், சடங்குகளும், மக்களின் ஒத்துழைப்பும் வளர்த்துப் போற்றி வருகின்றன; இஃது ஓரளவு உண்மையே. எனினும், சமயம் என்பது **கோயிலிலோ, மாதா கோயிலிலோ, மசூதியிலோ, பௌத்தப்பாழியிலோ, ஜினாலயத்திலோ, குருத்துவாராவிலோ** மட்டும் உயிரோட்டத்துடன் இருப்பதாகக் கருதக்கூடாது. சமயக் கொள்கையிலோ, நடைமுறைச் சடங்குகளிலோ, மதக்கோட்பாட்டிலோ கூட அஃது இல்லை; சமய விரிவுரைகளிலும் கூட அஃது இல்லை.

சமய போதகர்களும் சமயத்தின் உயிரோட்டத்தைப் பற்றியும் அதனை நெருங்கும் வழிமுறைகளைப் பற்றியும் மனமாரக் கூறிக் காட்டலாம். ஆனால், சமயஆற்றங்கொண்ட நன்மக்கள், தம் இடையறா முயற்சியினாலும், குருவருள் துணையினாலுமே திருவருள் உயிர்ப்பாகிய சமய உயிரோட்டத்தைப் பெரும்பாலும் உணரவியலும்; அஃது எவ்வாறு?

முதற்கண் இவ்வுலகத்தையும் பிறவற்றையும் ஆட்டிப் படைக்கும் - ஆட்டுவிக்கும் - ஒரு பரம்பொருள் உண்டென்று நம்பிக்கை பிறத்தல் வேண்டும்; ஐம்பூதங்களுடன் கலந்து நிற்கும் கடவுளே அவற்றைக் கடந்தும் நிற்கிறார் என்ற தெளிவு பிறக்க வேண்டும்; அத்தகைய கடவுள், மதங்கள் பலவற்றாலும் போற்றப்படும் நிலையிலே, நாடு, காலம், இனம், குலம், சாதி, மொழி, வண்ணம் முதலியவற்றைக் கடந்து நிற்பவர் என்ற நல்லுணர்வு பிறத்தல் வேண்டும் "யாதும் ஊரே யாவருங் கேளிர்"[1] என்ற பொதுமையுணர்வுடன், அனைத்து நாட்டு மக்களையும் உடன்பிறப்புக்களாகக் கருதும் மனப்பாங்கு உருவாதல் வேண்டும். இதற்கு அடுத்தபடியாக எல்லாவுயிர்களையும் தோழமையாகக் கொள்ளும் வகையில் ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்வு இயல்பாக நெஞ்சத்தில் ஊற்றெடுக்க வேண்டும்.

1. புறநானூறு, 192. 1

அந்த ஒருமைப்பாட்டுணர்வு இனிய வுரைகளிலும் இனியன புரிதலிலும் தவழவேண்டும்; எனவே,

''எவ்வுயிரும் பராபரன் சன்னிதி யாகும்
இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்''

என்ற ஆன்றோர் திருவாக்குப்படி ஒழுகும் சீலத்திலே - நடைமுறையிலே - தான் சமயத்தின் உயிரோட்டம் உள்ளது எனத் தேர்தலே சமய ஞானத் தெளிவாகும்.

1.1. சமயம் - சிறப்பு விளக்கம்

உலகிலே ஏனைய உயிரினங்களுக்கு இல்லாத சிறப்பின் தாய், ஆறறிவுடைய மக்களினத்துக்கு மட்டுமே உய்தி நோக்கில் உரிய நன்னெறியினதாய் அமையும் வாழ்வியல் முறையே சமயம் ஆகும். இதனை அறிஞர்கள் பலரும் பல வகைகளில் விளக்கம் தந்துள்ளனர்.

மக்களை நன்னெறியில் - ஆன்மீக நெறியில் - பக்குவப் படுத்துவது சமயம் என்றும், மக்களின் மனத்தகத்தில் மறைந்து கிடக்கும் மேன்மைகளை வகையுடன் வெளிப்படுத்துவது சமயம் என்றும், அழியும் உலகில் அலமந்து நிற்கும் மக்களை அழியாத் தன்மைக்குப் பாங்காக முறையுடன் நாடிச் செல்ல வழிவகுப் பது சமயம் என்றும், துன்பங்கலந்த வாழ்வைத் துன்பங் கலவாத இன்ப வாழ்வாக மாற்ற முயலுகையில் கைகொடுத்து மக்களை வெற்றிக்கு இட்டுச் செல்வது சமயம் என்றும், அறியாமை காரணமாக மக்கள் புரிந்திடும் தவறுகளினின்றும் மீட்டு நல்வினை நாட்டத்துக்கான நல்லறிவு புகட்டுவது சமயம் என்றும், இன்பப் பொருளாம் இறைவனை அடைவதற்கு உயிர்கள் ஊற்றமுடன் கடைப்பிடித்தொழுகும் ஓர் அறவழியே சமயமென்றும் மக்களைத் தன்னலம் எனும் குறுகிய சிறையில் அடைந்து கிடக்காமல் பரந்து விளக்கமுறும் சமுதாயத்தில் நடையிடவும் இன்பங் கொள்ளவும், மதிப்பினைப் பெறவும் வகுக்கப்பெற்ற ஆன்மநல வழி சமயம் என்றும், உடல் வளர்ச்சி போன்று உயிர் வளர்ச்சிக்கு உகப்பான தெய்வநல விழிப்பினையுண்டாக்குவது

சமயம் என்றும், பொறிபுலன்களை அவை படைக்கப்பட்டதன் நோக்கம் நோக்கி மேன்மையுறச் செய்யும் வகையில் தன்னடக்கத்திற்கு வழிவகுப்பது சமயம் என்றும் அருட்செலவர்கள் பலரும் பல்வகை விளக்கங்கள் தந்துள்ளனர்.

சுருங்கக் கூறின், **மக்களை எல்லா நிலைகளிலும் எல்லாவிதங்களிலும் பக்குவப்படுத்திச் சீர்படுத்துவதே சமயம்** எனலாம். இத்தகைய சமயங் காரணமாகப் பதிந்த சமயவுணர்வால், சோம்பலும் பொறாமையும், சபலமும், காழ்ப்பும், பிற தீமைகளும் தவிர்க்கப்படும்; ஊக்கமும், கடமையும், தூய்மையும், நோன்பும், தியானமும் நிலைகொள்ளும். மேலும், அதனால் ஒழுக்க வாழ்வியல் அமையும் என்றும் சமய நெறியாளர்கள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கைக்குகந்த நெறியில் - சமயப் பண்பாட்டில் - **மக்கள் மனம் மொழி செயல் தூய்மையுடன் இயங்கினால் உலகம் வாழும்.** இது தொடர்பான நுண்கூறுகளைப் பல கோணங்களில் ஓரளவு விளக்கமாகக் காண்போம்.

உலகத்தில் சமயங்கள் பலவாக விரிந்து சென்றாலும், எல்லாச் சமயங்களுமே வாழ்வியல் மேம்பாடு குறித்த நல்ல குறிக்கோளையே நாடிச் செல்லுமாறு மக்களை ஆற்றுப்படுத்தும்; இன்றைய நடைமுறையில் கடவுள் நம்பிக்கையுடைய ஆத்திகர்கள், நம்பிக்கையில்லாத நாத்திகர்கள் மீது வெறுப்பும் பகைமையும், ஆத்திகர்கள் மீது நாத்திகர்கள் வெறுப்பும், பகைமையும், கொண்டு மோதலுணர்வுடன் விளங்குதலைக் காணலாம்.

எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பரம்பொருளாகிய கடவுள், சமயங்களையும் கடந்த **சமயாதீதப் பொருளாய்** விளங்குகிறார். பிற சமயங்களின் மீது கொண்ட காழ்ப்புக் காரணமாகச் சிலர் சில சமயங்களைத் தோற்றுவித்தார்களேயாயினும், அவற்றைக்கூட இறைவன் பொறுத்துக் கொள்வான் என்றே அருளாளர்கள் நம்புகின்றனர். எடுத்துக்காட்டாக **அப்பர் பெருமான்,**

''விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினால் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்''[1]

என அருளிய திருப்பெருவேளூர்ப்பதிக வாக்கினைக் காண்க.

1. திருமுறை, 4, 60, 9.

1.2. சமயத்தின் தேவை:

புறவாழ்வின் இரக்கவுணர்வும் பொதுநல உணர்வும் கொண்டவர்களாவும், தனிப்பட்ட வாழ்வில் நன்மையும் ஒழுக்கமும் கொண்டவர்களாகவும், அறத்துடன் வாழ்ந்தால் போதாதா? அந்நிலையில் கடவுளும் சமயமும் எதற்கு? சமயச் சார்புடன் வாழ்தல் தவிர்க்கவியலாத தேவையா? - என்பன போன்ற வினாக்களை இக்காலத்தில் பகுத்தறிவியக்கத் தொடர்புடன் சிலர் தொடுப்பர்.

மக்களுக்கு இரக்கவுணர்வு தேவையென்பதில் ஐயமில்லை. சமயங்கள் பலவும் இரக்கவுணர்வை வலியுறுத்திக் கூறிவருகின்றன. அறத்தை வலியுறுத்தும் திருவள்ளுவர் போன்ற சான்றோர்களும் இரக்கவுணர்வின் சிறப்பைக் கூறித் தான் வந்துள்ளனர். எடுத்துக்காட்டாக,

> ''அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
> தன்நோய்போல் போற்றாக் கடை''[1]

எனவரும் வள்ளுவர் வாய்மொழி காண்க.

மக்கள் பலராக இருப்பதால் அவரவர்க்குள்ள மனப் போக்கிற்கேற்பச் சிந்தனைகள் இயல்பாகப் பல்வேறு நிலைகளில் அமையலாம். உயிரிரக்கம் சமுதாயத் தொண்டு முதலிய நல்லனவற்றை வளர்ப்பதற்கேற்ப மக்களிடையே ஒருமித்த உணர்வு மலர்தல் நல்லது; அப்போதுதான் செயல்திறம் சிறப்பாக அமையும். அஃதாவது, சமயம் என்ற நிறுவனக் கட்டுக் கோப்பால் மக்கள் ஒருமையுணர்வுடன் பிறருக்குச் சிறப்பாக நன்மை புரிய இயலும். எனவே. சமயம் என்பது சமுதாயக் கடமை நோக்கிலே தவிர்க்க முடியாத தேவையேயாகும்.

சிலர், கடவுளையும் சமயத்தையும் மக்களின் எல்லைக்குள் வாராத ஆற்றல்களாக - ஆற்றல்மிகு தொடர்புகளாகக் - கூறி வருகின்றனர். இதனால், கடவுள் பற்றிய சிந்தனையும், சமயம் பற்றிய சிந்தனையும் மிகுந்த கற்பனைக்குரியனவாகவே கருதிச் சிலர் புறக்கணிக்கவும் செய்கின்றனர். மேலும், கடவுள் தொடர்பாக நடைபெறும் **பெரிய யாகங்களையும், யோகங்களையும்,**

1. குறள், 315

சடங்குகளையும், கழுவாயாகிய **பிராயச்சித்தங்களையும்** கண்டு, மருண்ட நிலையில் இவற்றினின்றும் விடுபட்டு, மனத்திற்கு நேர்மையாக நல்லன புரிந்தால் போதும்; கடவுளோ சமய வாழ்வோ தேவையில்லை எனக்கருதுகின்றனர். இதற்குக் காரணம், சமயவுண்மைக் கூறுகளில் போதிய தெளிவு பெறாமையேயாகும்.

சிலர் வெறும் எந்திரகதியில் மேற்கொள்ளும் ஒழுக்க வாழ்வே - கடவுளுணர்வின்றி வாழும் வெறும் ஒழுக்க வாழ்வே - சமய வாழ்வுதான் எனக் கருதுகின்றனர்; அதுவும் பிழையான அணுகுமுறையேயாகும்.

ஒழுக்கம் சமயவாழ்விற்கு வேண்டப்படுவதேயாயினும், வெறும் புற ஒழுக்கம் மட்டுமே சமயவாழ்வு ஆகிவிட முடியாது. ஒழுக்கம் உயிரினும் மேலானது என்பதில் ஐயமில்லை, அத்தகைய **ஒழுக்கம் தரும் உயர்வினும், ஒழுக்கத்துடன் கூடிய சமயவாழ்வு தரும் உயர்வு** மிகமிகப் **பெருமையுடையது; இதுவே தமிழர்தம் சமயப் பண்பாட்டின் தெளிவு** எனலாம். உலக மக்களிடையேயும் இத்தகையவுணர்வே மேலோங்கியிருந்துள்ளது என்பதற்குச் சில சான்றுகள் காணலாம்

அறிஞர் சாமுவேல் எம். சூமேக்கர், "வெறும் கிரியையும் சடங்கும் மட்டுமே நிறைந்துள்ள சமயம் நமக்கு மனநிறைவை யளித்தல் இயலாது. அவ்வாறே வெறும் உயிரிரக்கமும் சமூகத் தொண்டும் ஆகியவை மட்டுமே வற்புறுத்துகின்ற சமயத்தினா லும் நாம் மனநிறைவு அடைதல் அரிது. இவற்றிற்கெல்லாம் மேலாக மனிதனின் ஆன்மதாகத்தைத் தணிக்க வல்லதாகத் திகழ்வதே உண்மைச் சமயமாகும்"[1] (Religion which is merely ritual and ceremonial can never satisfy. Neither can we be satisfied by a religion which is merelv humanitarian of serviceable mankind. Man's craving is for the spiritual - Samuel M. Shoemaker) என்ற தெளிவான கருத்துரை மனங் கொள்ளத்தக்கதாகும்.

1. திருக்கோயில் (திங்களிதழ்) ஜூலை, 1972

உலகியலில் பொன் வெள்ளி இரத்தினம் முதலியவற்றை யெல்லாம், பெறுவதற்கரிய சிறப்புப்பொருளாகக் கொண்டு மயங்கி வாழ்கின்றனர் மக்கள். ஆனால், விலை மதிப்புள்ள சிறந்த பொருள் சமயமே ஆகும் என **வில்லியம் கூப்பர்** (William Cowper) வலியுறுத்துக் கூறுகின்றார்.[1] அது வருமாறு;

''Religion ! What a treasure untold
Resides in that heavenly word !
More precious than silver and gold
on all that this world can afford''

(தமிழாக்கம்:

''இலகுறு சமயம் என்னும் எழிலியல் இறைமைச் சொல்லில்
நிலவுறு நிதிய வைப்பின் நிலையெலாம் - நிகழ்த் தற்காமே?
உலகினில் உளபொன் வெள்ளி மணிஎலாம் ஒருங்கே சேர்த்தும்
விலைமதித் திடற்கீ டாகா, மேன்மையின் மிளிரும் அன்றே''
—ந ரா. முருகவேள்)

1.3. சமயவுணர்வும் சமயப்புலப்பாடும்:

மக்களது வாழ்க்கை அருமையிலும் அருமையானது. ''அரிதரிது மானிட ராதலரிது'' என்பது ஔவைப் **பிராட்டியின்** அமுத வாக்கு. இத்தகைய மானுட வாழ்க்கையில் நிலையாமையைச் சிந்தித்துக் கொண்டே இருப்பதைவிடுத்து, முதலில் நம்மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவதற்குரிய பேறு கிட்டும் என்ற சமயவழிப் பிடிப்பு உண்டாதல் வேண்டும்.

மக்களை மற்ற உயிரினங்களிலிருந்து பிரித்துக் காட்டுதற்குக் கருவியாக இருப்பது பகுத்தறிவு; அந்தப் பகுத்தறிவால் மனத்தைத் தீயவற்றினின்றும் நீக்கி நன்றின்பால் செலுத்துகிறோம்.

1. திருக்கோயில் (திங்களிதழ்) ஜூலை, 1972

இந்நிலையில் நம் அறிவே **ஒரு வகையில் சமயவுணர்விற்குக்** காரணமாகும்.

மனிதன் விலங்குத்தன்மையிலிருந்து நீங்கி அன்பினைப் படிப்படியாக மலர்த்தி மனிதத் தன்மையை விடாப்பிடியாக முயன்று பெற்று, அதனினும் உயர்ந்த ஆன்மநலம் அல்லது சமயவுணர்வு பெறுவதே அவனுக்குகந்த நெறியாகும். இஃது ஒருவன் தன் உயர்வுக்காகத் தானே முயலும் அறிவும் உணர்வும் கலந்த ஒரு வகைப் பயிற்சி (ஆகும் நெறி) யெனவே கொள்ளலாம். அதனை விடுத்துப் பொறிபுலன்களுக்கு அடிமையாகிச் சிற்றின்ப வேட்கையிலேயே (ஆகாநெறியில்) வாழ்வைச் சிதைப்பது அறிவுடைமையாகாது என்ற உணர்வே சமயவுணர்வாகும்.

மக்களின் ஆக்கமான அறநெறிக்குச் சமயவுணர்வு அடிப்படைத் தேனவயாகும். **ஒருநாட்டு நாகரிகத்திற்குச் சிறந்த அடையாளம் அந்த நாட்டுப் பண்பாடு** என்பர். நம் தமிழ் நாட்டுப் பண்பாட்டிற்குச் சிறந்த அடையாளமாகச் சமயவுணர்வு இருந்து வருகிறது. இந்நிலையில், சமயவுணர்வு, இந்நாட்டின் நலத்துக்கும், வளர்ச்சிக்கும், வளத்துக்கும், பெருமைக்கும் எவ்வாறு துணைபுரிந்து வருகிறது என்று பல்வேறு நோக்கிலே ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டியது பெருங்கடமையாகும்.

சமயவுணர்வு பற்றி மேலும் விளக்கமாக அறிவதற்கு முன், **சமயப்புலப்பாட்டின் இயல்பையும், சூழலையும், ஏற்றத்தையும்** புரிந்து கொள்வது நல்லது.

சமயப் புலப்பாடு என்பது ஒருவனது நம்பிக்கையைப் பொறுத்தே அமைவதாகும். ஒருவன் தான் சமயவளாகத்திலே தோய்ந்து உணர்வதால்-தெளிவுபடுத்திக் கொள்ளும் நிலையிலே-அதன் பொருண்மை புலப்படுகின்றது. வைணவச் சமயப் பேரருளாளராகிய **நம்மாழ்வார்** தாம் கடவுளனுபவத்தில் தோய்ந்து கண்ட சமயத்தின் வாழ்முதலைத் தெற்றெனப் புலப்படுத்தியுள்ளார். இதனைத் **திருவாய்மொழியில்,**

'யானும் தானாய் ஒழிந்தானை
யாதும் எவர்க்கும் முன்னோனைத்

தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலைத்
தேனும் பாலும் கன்னலும்
அமுது மாகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை யுணர்ந்தேனே''[1]

எனப் பாடிச் செல்வதால் உணரலாம். இதனால் கடவுள் நாட்டத்துடன் கூடிய ஆன்மநல விழிப்பால் உணரப்படுவதே சமயம் – சமயப்புலப்பாடு - எனலாம். சமயத்தை விளக்கிக் கூறும் வகையில் அருளாளர்கள் பலரும் காலங் காலமாக ஈடுபட்டுள்ளனர்.

உயிர்வாழ்வை அகத்தும் புறத்தும் வளம்பெறச் செய்யச் சமய வாழ்க்கையே உகந்தது என்பதனைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் நன்கு எடுத்து இயம்பியுள்ளார் ''மானிடன் தன் புலன்களின் அழுக்கை அகற்றிப், பொறிகளில் தூய்மை காத்துத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்வதற்கு உதவுவது சமயநெறி' ஒன்றுக்கொன்று சுவை ஒவ்வாதனவாக உள்ள உணவுப்பொருள் கள் தனித்தனியே இருக்கும்வரை சுவைக்கத்தக்க சுவையும் பெறுவதில்லை; உண்ணவும் நுகரவும் இயல்வதில்லை; உடலுக்கு நலமும் தருவதில்லை. இங்ஙனம் சுவைவேறுபாடுள்ள பல்வேறு பொருள்களை ஒத்திசைந்த நிலையில் கூட்டிப் பக்குவப்படுத்தும் தொழிலுக்குச் **'சமையல்'** என்று பெயர். சமைத்தல் உணவைப் பக்குவப்படுத்தல்; சமைதல்-மகளிர் பருவநிலை எய்துதல். இந்தச் சொற்களின் அடிப்படையிலே சமயம் என்ற சொல் முகிழ்க்கிறது. புறக்கருவிகளாக இருக்கிற பொறிகளையும் அகக்கருவிகளாக இருக்கிற புலன்களையும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், இவற்றோடுள்ள தொடர்பிலிருந்து விலக்கி, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய வற்றோடு இயைபுபடுத்தி, உயிரை வளர்த்து உயர்த்துவதே சமயத்தின் குறிக்கோள்''[2] என்று எழுதிச்செல்வது ஊன்றி நோக்கத் தக்கதாகும்.

---

1. நம்மாழ்வார் திருவாய்மொழி, 8:4.
2. ஆலயங்கள் சமுதாய மையங்கள், பக். 7

அடிகளார் வாய்மொழியினின்றும் சமயமானது ஒருவனைச் சிலவுணர்வுகளால் உயர்த்த முந்தும் உந்து சக்தியென்பதை உணரலாம். இக்கருத்திற்கு ஆக்கந்தேடும் வகையில், மேலும் சில விளக்கங்களைக் காண்போம்.

சமயவுணர்வைப் பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்த அறிஞர்கள் சிலர், அங்கிங் கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்த அரும்பெரும் மெய்ப்பொருளை அடைதற்குரிய சீரிய நெறியே சமயம் என்று முடிவிற்கு வருகின்றனர். இஃது ஏனைய உயிர்களுக்குக் கிட்டாத, மக்களுக்கே கிட்டுதற்குரிய பெறலரும் பேறே சமயம் என்பதை முன்னரே கண்டோம்.

ஒருவனது மனத்தைத் தீயவற்றினின்றும் நீக்குகையில் அவனிடம் உள்ளுணர்வும், பொதுநல நாட்டமும் மலரச்சமயம் முன்வந்து துணை நிற்கும். அந்நிலையில் சமயம் மக்களை மேம்படுத்த அமைந்த நற்கருவியேயல்லாமல், தீயவழிகளில் கொண்டு செலுத்தும் கொடிய படையன்று என்பது புலப்படும். ஆனால், இன்றைய வாழ்வில் மக்கள் இதனைப் புரிந்து செயற்படுகின்றார்களா எனின், பெரும்பாலும் இல்லையென்றே கூற வேண்டிய நிலையுள்ளது.

மக்களிடையே மனவொருமைப் பாட்டையும், அமைதியையும், வளத்தையும், உய்தியையும் ஏற்படுத்துவதற்காகத் தோன்றியதே சமயநெறி; மக்களனைவரும் ஒரு குடும்பத்தவர் போன்று அன்புணர்வால் ஒற்றுமையாக வாழ்வதற்கும், உயிருக்குயிராய் எங்கும் நிறைந்துள்ள உயர் பரம்பொருளை வழிபட்டு, மக்கள் பேரின்ப வாழ்வில் திளைப்பதற்கும் அமைந்துள்ளதே சமயநெறி; ஆனால், அது பிறழ உணரப்பட்டு நாட்டில் அமைதியின்மையையும், வன்முறையையும் தோற்றுவித்துள்ளது. இந்த அடாத செயலுக்குக் காரணம் சமயமே என்பது சரியன்று. சமயத்தின் உண்மையை நன்கு புரிந்து கொள்ளாத மக்களின் பக்குவமின்மையைத் தான் குறைகூற வேண்டும்; அதற்கான விபரீதச் சூழ்நிலையைத்தான் நொந்து கொள்ள வேண்டும்.

அகச்சமயமாயினும், புறச்சமயமாயினும் அகப்புறச் சமயமாயினும், புறப்புறச் சமயமாயினும், எல்லாவற்றினூடேயும் ஊடுருவி

நின்று நிலவுவது **பரம்பொருளே;** இந்த உயரிய எண்ணம் மக்களிடையே உண்டாகிப் பரவ வேண்டும். ஒரே தின்பண்டம் வெவ்வேறு உருவில் வார்க்கப்படினும் அதன் சுவை ஒன்றே என்று உணர்வதுபோல **'அனைத்துச் சமயங்களாலும் வழிபடப் பெறுவது பரம்பொருளே'** என்ற உணர்வு மலர வேண்டும். இவ்வாறு **வேற்றுமையில் ஒற்றுமை** (unity in diversity) காண முனைவதும், அவ்வழியே செயற்படுவதுந் தான் சமயவுணர்வின் சாரமாகும்.

சமயவுணர்வால் முகிழ்த்து மலர்ந்து காயாகிக் கனியாகி நிற்பதே சமயப்பண்பாடாகும்; அந்தச் சமயப் பண்பாட்டால் அமைக்கப்பட்ட சமயநிலையங்களே **கோயில்களும்,** அவற்றைச் சார்ந்த **திருமடங்களும், அறச்சாலைகளும்** ஆகும். இந்துக்கள் கட்டிய **ஆலயங்களும்,** கிறித்தவர்கள் கட்டிய **மாதா கோயில்களும்,** இசுலாமியர்கள் கட்டிய **மசூதிகளும் பள்ளிவாசல்களும்,** பௌத்தர்கள் கட்டிய **விகாரங்களும், சைத்தியங்களும்,** சமணர்கள் கட்டிய **ஜினாலயங்களும் பள்ளிகளும்,** சீக்கியர்கள் கட்டிய **குருத்துவாராக்களும்** மக்களுய்திக்காக அமைந்த வழிபாட்டு நிறுவனங்களாகும். ஆழ்ந்துசிந்தித்தால், **சிவனும், திருமாலும் சூரியனும், விநாயகனும், திரு முருகனும், பரமண்டலப்பிதாவும், அல்லாவும்** ஒரே கடவுளின் பல்வேறு திருப்பெயர்களே; **புத்தர், மகாவீரர், இயேசுநாதர், நபிகள் நாயகம், கன்புசியசு, குருநானக்** முதலிய மத நாயகர்கள் அல்லது இறைத்தூதுவர்கள் அல்லது குருமார்களெல்லாம், மக்களுய்திக்காகவே உள்ளவர்கள் என்பது புரியலாகும், ஆகவே, சமயவுணர்வு என்பது பரம்பொருளை நினைவு கூர்வதற்கும், பரம்பொருளை நினைவூட்டும் களங்களாகிய கோயில்களை நினைவுகூர்வதற்கும், சமய வழிப்பண்பாட்டினைம் உருவாக்குவதற்கும் அமைந்துள்ள அடிப்படைக் கருவியாகும். இதனையுணர்ந்து செயல்படுவது உலகத்திற்கு நல்லது.

உலகத்தில் சமயங்களும் ஒழுக்கக் கோட்பாடுகளும் பலவாக அமைந்து எல்லாமே மக்களின் நல்லொழுக்கத்திற்கும் ஆன்ம நலத்திற்கும் வழிகாட்டிகளாக அமைந்துள்ளவையே என்பது தெளிவு. எனினும், சமயவுணர்வு எவ்வாறு தூண்டுகோலாக அமைந்து மக்களை நெறிப்படுத்தி வருகிறது என்பது ஈண்டு இயைபுடன் சிந்திக்க வேண்டியதாகும்.

சமயங்களை ஆக்க பூர்வமாக மக்களிடம் கொண்டு செலுத்துவதில் மக்களின் சமயவுணர்வும் நோக்கும் நம்பிக்கையும் பிடிப்பும் (கடைப்பிடியும்) அடிப்படையாக அமைதல் வேண்டும். சமயவுணர்வின் உந்துதலால் அமையும் ஈடுபாடு, சமய நெறியினர்க்கு வந்துவிடுமாயின் **சமயத்தொடர்பான கலைகளும் கிரியைகளும் சடங்குகளும் பூர்வாங்கத் தேவைகளேயன்றி, அவையே முற்றிலுமான குறிக்கோள்கள் அல்ல** என்பது பெறப்படும். இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

இறையுணர்வே நிரம்பிய ஞானியர் உலகத்தின் உய்தி குறித்துப் பொதுநலங் காரணமாகக் கலைகளிடத்தும் கிரியைகளிடத்தும் சடங்குகளிடத்தும் நாட்டங் கொண்டவர்களாய் உலகியல் போக்கில் இறைவழிபாடு புரிபவர்களாய்க் காணப்படுவர்; ஆனால், அவர்களின் உள்ளார்ந்த பக்குவ நிலைவேறு எனத் தெளிதல் நல்லது.

கோயிலில் காணலாகும் ஓவியத்திலோ சிற்பத்திலோ தெய்வத்திருவுருவத்தினை யாரும் பொதுவாக வழிபாட்டிற்குரியதாகக் காணலாம். ஆனால், தெய்வ வடிவத்தினையோ, தெய்வ உறுப்பினையோ, தெய்வத்தின் பாவனையையோ காணும்வழி, மக்களதுவடிவத்தையோ உறுப்பையோ பாவனையையோ காண்பது போன்று காணலாகாது. அவை ஒவ்வொன்றும் சமயநெறியைச் சார்ந்த மெய்ப் பொருளியலுண்மையை ஒரு வகையில் புலப்படுத்தும் சின்னம் என உணர்தல் வேண்டும். அத்தகைய ஆன்மநலச் சிந்தனையே சமயவுணர்வின் நோக்கமெனவுணர்ந்து, சமயக்குறிக்கோளை நோக்கி மக்கள் நடையிடுதல் நல்லது. இதன் தொடர்பான சிந்தனைகளைப் பண்பாட்டு அடிப்படையில் தொடர்ந்து காண்போம்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் அல்லது சமயமும் தத்தமக்குப் பொருந்திய தத்துவத்தைக் கருவியாகக் கொண்டு மக்களுக்குள்ள சமயத்தொடர்பினைக் கூறுகிறது. இவ்வகையில் சைவ சமயத்தவர்கள், மக்களுக்கும் சமயத்துக்குமுள்ள தொடர்பினை அத்துவிதமாகவே கருதுகின்றனர்; புலப்படுத்துகின்றனர். பதியாகிய கடவுள் உயிர்களுடன் பொருளால் வேறாகியும், கலப்பிலே ஒன்றாகியும், செலுத்துதலினால் உடனாகியும்

இருத்தலே **அத்துவிதம்** ஆகும் என்று சைவ சித்தாந்தம் விளக்கிச் செல்லும்; இந்தத் தொடர்பு அநாதியாயுள்ளது என்றும் கூறும். இந்தத் தத்துவமே மக்களுக்கும் சமயத்துக்குமுள்ள தொடர்பு என்பதை விளக்கும்வகையில், "உயிர்கள் ஒருகாலத்தில் முழு இருளிலும் முழுத்துன்பத்திலும் இருந்தன. உலக வாழ்வுக்கு வந்தபின் அவை இருளிலும் ஒளியிலும், துன்பத்திலும் இன்பத்திலும் உழல்கின்றன. இந்த உழற்சி நிலையிலிருந்து மக்கள் நீங்குதற்குக் கடவுளை எப்பொழுதும் நினைந்து உணர்தல் வேண்டும். **தனு** (உடல்), **கரணம்** (கருவிகள்), **புவனம்** (உலகம்), **போகம்** (துய்த்தல் அல்லது இன்பம்) ஆகியவற்றைக் கொடுத்தவர் கடவுள் என்றும், அவர் உதவியின்றி ஒரு கணமும் வாழ்தல் முடியாது என்றும் உணர்ந்து, மக்களாகிய நாம் அவரிடத்தில் அன்பு செய்து, அந்த அன்பு மேன்மேலும் வளர்ந்து வருதல் வேண்டும். இவ்வாறு மக்களுக்கும் கடவுளுக்கும் உண்டாகும் தொடர்பு உணர்ச்சியே சமயவுணர்ச்சியாகும்"[1] என்று அரிய கருத்தினையும் விளக்கத்தையும் தந்துள்ளார் **மா.வே. நெல்லையப்பபிள்ளை.** இவ்விளக்கம் மனங்கொள்ளத்தக்க சிறப்புக் குறிப்பாகும்.

மக்களுக்கும் அவர்களின் தாய்மொழிக்குமுள்ள தொடர்பினை வெண்ணிலாவும் வானும் போலவும், வீரனும் கூர்வாளும் போலவும் உணர்ந்து பாடிக்காட்டுவார் **பாவேந்தர் பாரதிதாசன்.** பிரிக்க இயலாத உயிர் நட்பினை விளக்கும்வகையில் 'நகமும் சதையும் போல', 'உயிரும் உடம்பும்போல', எனக் கூறுவர். இவ்வாறான உவமைகளெல்லாம் பொருந்துமாறு மக்களுக்கும் மதத்துக்குமுள்ள தொடர்பு இருந்து வருகிறது.

1.4 சமய ஆராய்ச்சி:

உலகில் கீழைத் தேசத்தவராகிய மக்களுக்கு மேலை நாட்டினரை விடத் தத்துவஞானமும் சமயவுணர்வும் மிகுதியாக உண்டு; இவற்றைப் பரம்பரைச் சொத்தாக முன்னோர்கள் தேடிவைத்துள்ளனர். சமயஆராய்ச்சி என்பது தத்துவஞானத்தின் ஒருபகுதியாகக் கூடக் கருதப்படுகிறது அன்றியும், வாழ்க்கை

1. செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு, 6, 562 - 563

யுடன் பின்னிப்பிணைந்து காணப்படும் சமயவுணர்வு ஒருவகையில் தத்துவ ஞானமாகவே அமைந்துள்ளது எனலாம். ''இந்தியத் தத்துவஞானம் சரியாகச் சிந்திப்பதற்கு மட்டுமன்றி, முறையாக வாழ்வதற்கும் வழிகாட்டுகின்றது. கொள்கையளவில் மட்டுமே நில்லாது வாழ்க்கையோடு ஒன்றாகக் கலந்து நிற்பதே இந்தியத் தத்துவ ஞானத்தின் முக்கியமான சிறப்பியல்பு''[1] எனக் கூறுவர் **பேராசிரியர் ஹரியண்ணா;** இது முற்றிலும் உண்மையென்பதைச்சமய ஆராய்ச்சி புரிபவர்கள் ஒப்புக்கொள்வார்கள்.

ஞானியரின் காட்சிக்குப் புலப்பட்ட பேருண்மைகளே வேதமாகவும் ஆகமமாகவும் உபநிடதமாகவும் வடிக்கப்பட்டுள்ளன. தத்துவ தரிசனங்களில் **நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம் மீமாம்சை, வேதாந்தம்**, ஆகியவை இந்தியப் பெருநாட்டில் மிகுதியாக ஆராயப்படுகின்றன. எனினும், தமிழ்நாட்டளவில் ஆதிசங்கரரின் வேதாந்தம் (அத்வைதம்), இராமானுச வேதாந்தம் (விசிட்டாத்வைதம்), மத்துவ வேதாந்தம் (துவைதம்), ஆகியவையும், சைவ சித்தாந்தமும் சமய நோக்கிலும் தத்துவ நோக்கிலும் நன்கு ஆராயப்படுகின்றன. சைவ சித்தாந்தம், வேதத்தைவிட ஆகமங்களையே சிறப்பாகக் கைக்கொள்வதால் ஏனையவற்றினின்றும் இதனைத் தனிப்பிரிவாகக் கொண்டும் ஆராய்கின்றனர்.

வேதங்களை ஒப்புக்கொள்வோரை **வைதிகர்** என்றும், ஒப்புக் கொள்ளாதோரை **நாத்திகர்** அல்லது **அவைதிகர்** என்றும் பாகுபடுத்துகின்றனர். ஆனால், எல்லாக் கொள்கைகளினூடும் இழையோடி நிற்பது வாழ்வியல் நல்லறம் ஆகும்; **நல்லறமே பரம் பொருளாகும்** எனக் கொண்டால் காழ்ப்புக்கு வழியிராது. ''**எல்லா மக்களும் உலகத் தாய் பெற்றெடுத்த நன்மக்களே**'' என்ற உணர்வு பரவினால் குழப்பத்திற்கு வழியிராது.

சமயங்களை அகச்சமயங்கள், புறச் சமயங்கள், அகப்புறச் சமயங்கள் என்றெல்லாம் பிரித்துக் கொண்டு, அவற்றில் பொதிந்து கிடக்கும் தத்துவக் கருத்துகளை- உண்மைகளை- உணர்ந்து கொள்வது தத்துவ அடிப்படையில் வேண்டற்பாலதே,

1 இந்திய தத்துவ ஞானம், பக். 3,4

எனினும், சமயங்களெல்லாவற்றினூடும். சமயங்களைக் கடந்து நிற்கும் **பரம்பொருட் காட்சியே** குறிக்கோளாக அமைதல் வேண்டும்; எல்லோருள்ளத்திலும் கடவுளின் இராச்சியம் உள்ளது (Kingdom of God is in everybody's mind) என்பதை உணர்ந்தால் இது கைகூடும்.

இனவேறுபாடோ குல வேறுபாடோ சாதிவேறுபாடோ மொழி வேறுபாடோ தலைகாட்டாத நிலையில் **'ஒன்றே குலம்'** என்றவுணர்வும், அனைத்து மக்களுக்கும் அமைந்த தெய்வங்களெல்லாம் ஒரே கடவுளின் பல்வகைப் பெயர்கள் என்ற தத்துவத்தெளிவும் அமைந்து விடுமேயானால், உலகில் நிலைபேறு உண்டாகும். இதனை உணர்த்தும் வகையில் **திருமூலர்.**

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே''[1]

எனக் கூறியுள்ளமை மிகவும் சிந்தித்துப் போற்றுதற்குரியதாகும்.

பல்வேறு மதங்கள் உணர்த்திடும் ஒரே பரம்பொருளுண்மை பற்றியும். அத்தப் பரம்பொருளின் திருவருள் பற்றியும் சமய ஞானியர் குறித்திடுஞ் சில சிறப்பான உண்மைகளைக் காண்போம்.

சமயங்களால் உணர்த்தப்பெறும் கடவுள், சமயங்களைக் கடந்தும் நிற்கும் பெற்றியது என்பதைச்,

''சைவமுத லாம்அளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீ யுன்னையான் அணுகவும்
தண்ணருள் வகுக்க இலையோ''[2]

என்றும்,

1. திருமந்திரம், 2014
2. தாயுமானவர் பாடல்கள், சின்மயானந்த குரு, 4.

''ஆறுசம யங்கடொறும் வேறுவே றாகிவிளை
யாடுமுனை யாரறிவார்?
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மான பரமே''[1]

என்றும் தாயுமானவர் பாடியருளுகின்றார். வடலூர் திருவருட் பிரகாச வள்ளலார் சமய ஒருமைப்பாட்டிற்கு உகந்த வண்ணம்,

''பொங்கு பலசமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே''[2]

என்று மொழிந்தருளுதல் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

1.5. சமயத் தெளிவு - படி நிலைகள்:

உலகில் காணலாகும் பல்வகைப் பிறப்புக்கள் உண்டாகிய வரலாறு எப்படி? எல்லாப் பிறப்புக்களிலும் சிறந்த பிறப்பு அல்லது பிறவி எது? — என்பதை அடிப்படையாகக் கொண்டு சமயத் தெளிவுக்கான சிந்தனையில் ஈடுபட முனைதல் வேண்டும்.

ஒருவன் தானே சமய அடிப்படையில் சில வினாக்கள் தொடுத்துத் தன் உண்மையான நிலையை உணர முற்படுகையில் சமய தத்துவஞானம் சித்திக்கும். அவ்வாறு அவன் தத்துவ விசாரணையிலே ஈடுபடுகையில் தன் நிலையை உணர்வது அடிப்படைத் தேவையாகும். நான் யார்?, என் உள்ளம் எத்தகையது?, இந்த உடம்பு நானா?, இந்த உயிர் நானா?, நான் என்பதும், எனது என்பதும் எங்ஙனம் மனிதனை ஆட்டிப் படைக்கின்றன?, இந்த உடம்பு தானே தன்னியல்பில் வந்ததா?, ஒருவன் தந்து வந்ததா?, தந்து வந்ததெனின் தந்தவன் யார்?, அவன் எங்கிருக்கிறான்?, அவன் எத்தகையவன்?, அவன் எவ்வாறு விளக்கங்கொள்கிறான்?, அவனைக் காண முடியுமெனின், ஏன் காண வேண்டும், அவனைக் கண்டவர் யார்?, அவனை உணர்ந்து கொண்டவர்கள் பிறரையும் உணருமாறு செய்ய

1. தாயுமானவர் பாடல்கள், ஆனந்தமான பரம், 3.
2. திருவருட்பா, 2118 (3, மகாதேவமாலை,48)

எத்தகைய உத்திகளைக் கையாண்டுள்ளனர்?, அவர்களை நம்பி ஒவ்வொருவரும் கடைத்தேற முயற்சி கொள்கின்றனரா?, நான் உய்யும் நெறியில் முயற்சியை உரிய காலத்தில் மேற்கொள்வது எப்படி? என்பன போன்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டு, தக்க விடைகாண வழிகோலுவது சமயவழிச் சிந்தனையாகும்; சமயத்தையுணரும் தெளிவிற்குப் படிநிலைகளாகும்.

இத்தகைய ஆன்மிக நெறியில் எவ்வாறெல்லாம் அருளாளர்கள் சிந்தித்துச் செயற்பட்டுள்ளனர் என்பதற்குப் பொதுவாகச் சில பாடல் தொடர்களைக் காண்போம்; சில விளக்கங்களையும் ஓரளவு காண்போம்.

அ) பிறப்பு வகை:

எண்பத்து நான்கு நூறாயிரம் பிறப்பு வேறுபாடுகள் உள்ளன; எனினும் சிறப்பாக **எழுவகைப் பிறப்புக்கள்** நூல்களில் கூறப்படும்.

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவரச் சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்''[1]

—மணிவாசகர்

ஆ) மானுடப் பிறவிச்சிறப்பு:

உயிரின் உய்திக்கு வழிகோலக் கூடிய சிறந்த பிறவியே மானுடப் பிறவியாகும். ''அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது'' என்பார் **ஔவையார்.** இவ்வாறே பலர் புலப்படுத்துங் கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன.

''இனித்த முடனே எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே''[2]

—அப்பர்

1. திருவாசகம், சிவபுராணம், 26-31
2. திருமுறை. 4, 81, 3.

இ) தத்துவ விசாரணை - தன் நிலையறிதல்:

''நானாரென் உள்ளமார் ஞானங்க ளாரென்னை
யாரறிவார்
வானோர் பிரான் என்னை யாண்டிலனேல்......''[1]
—மணிவாசகர்

ஈ) 'நான் என்பது' யாது?

நான் என்பது தசைத் தொகுதியாலான உடம்பு அன்று; உள்ளமும் அன்று, உயிரும் அன்று, 'ஆன்மா' என உணர்தலே ஞானத் தெளிவாகும்.

உ) அகப்பற்றும் புறப்பற்றும்

'' யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்''[2]

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே''[3]
—மணிவாசகர்.

ஊ) உடம்பு எப்படி வந்தது?

முற்பிறவியில் புரிந்த வினைகளுக்கேற்ப உயிர்களுக்கு இறைவனே **தனு** (உடம்பு), **கரணம்** (அகக்கருவிகளும் புறக் கருவிகளும்), **புவனம்** (வினைகளைத் துய்ப்பதற்கு வாய்ப்பான உலகம்), **போகம்** (உயிர் துய்ப்பது) ஆகியவற்றை வழங்கியருளு கின்றான் என்பது சைவசித்தாந்தம். எனவே, உடம்பு என்பது உயிர்கள் புரிந்த வினைகளுக்கேற்ப வந்தது; இறைவன் ஆட்டு விக்க ஆடும் இயல்பினதாகிய உயிர், பிறவிச்சக்கரத்திலே பல்வகை உடம்புகளை எடுத்து நிற்கும், அநித்தியமாகிய தூலவுடம்பு, நித்தியமாகிய உயிர் உறைவதற்கு அமைந்த தற்காலிக உறையுள்.

1. திருவாசகம், திருக்கோத்தும்பி, 2
2. குறள். 346
3. திருவாசகம், திருச்சதகம், 15

எ) இறைவன் எங்கிருக்கிறான்?

எங்கும் உறைபவன் இறைவன்; அவன் இயக்க இயங்கும் இவ்வுலகத்திலும் பல அண்டங்களிலும் நிலவுகிறான்.

''வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம்என்க — ஞானத்தான்
முன்னஞ்சத் தால்இருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தான்என்பன் யான்''[1]

— காரைக்காலம்மையார்

''மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணு ளானே''[2]

— அப்பர்.

ஏ) இறைவன் எத்தகையவன்?

சுட்டிக் காட்டவியலாத நிலையில் குணங்குறியற்ற பரம்பொருளே இறைவன்; அவன் இயக்க இயங்கும் இவ்வுலகமே அவனது பேராற்றலுக்கு ஒருவகை அறிகுறி.

''ஊர்இலான் குணம் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேர்இலான் ஒருமுன்இலான் பின்இலான் பிறிதோர்
சார்இலான் வரல்போக்கிலான் மேல்இலான் தனக்கு
நேர்இலான் உயிர்க்கடவுளாய் என்னுளே நின்றானே''[3]

— கச்சியப்ப சிவாச்சாரியார்.

1, காரைக்காலம்மையார் அற்புதத்திருவந்தாதி, 6
2. திருமுறை, 6,8,5
3. கந்தபுராணம்

''ஒப்புடையன் அல்லன்; ஒருவன் அல்லன்
ஓரூரன் அல்லன்; ஒருவம இல்லி;
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவ னென்று எழுதிக்காட் டொணாதே''[1]

— அப்பரடிகள்

''எல்லா உயிர்க்கும் உயிர் அருணேசர்; இவர் அசைவின்
அல்லாது அணுவும் அசையாதது என்பது அறிந்தனமே;
வில்லாடல் மாரன் இருக்கவும் யோகம் விளைத்த அந்நாட்
புல்லாது இருந்தன; எல்லா உயிரும்தம் போகத்தையே''[2]

— எல்லப்ப நாவலர்

ஐ) இறைவன் விளக்கங்கொள்ளும் நிலை எவ்வாறு?

பிறப்பித்தோரில்லாத இறைவன், உலக உய்திக்காகத் தன்னிச்சையாக எல்லாமாய்த் தோன்றுமியல்பினன் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் வருமாறு.

''தீயினுள் தெறல்நீ; பூவினுள் நாற்றம்நீ;
கல்லினுள் மணியும்நீ; சொல்லினுள் வாய்மைநீ;
அறத்தினுள் அன்பும்நீ; மறத்தினுள் மைந்தும்நீ,
வேதத்து மறைநீ; பூதத்து முதலுநீ;
வெஞ்சுடர் ஒளியுநீ; திங்களுள் அளியுநீ;
அனைத்துநீ; அனைத்தினுட் பொருளுநீ; ஆதலின்
உறைவும் உறைதலு மிலையே; உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமா ரனையை;
முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை; பிறப்பித் தோரிலையே''[3]

1. தேவாரம், 6,97,10
2. திருவருணைக் கலம்பகம், 3
3. பரிபாடல், 3(திருமால்) 63-72

"இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்எறியும் காற்றும் ஆகி
அருநிலைய திங்களாய் ஞாயிறு ஆகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி ஆகி
பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே"[1] —அப்பரடிகள்

"நிலம்நீர் நெருப்புயிர் நீள்விசும்பு
நிலாப்பக லோன்
புலனாய மைந்தனோடு எண் வகையாய்ப்
புணர்ந்து நின்றான்
உலகேழ்எனத் திசைபத்தெனத் தான்
ஒருவனுமே
பலவாகி நின்றவா தோள்நோக்கம்
ஆடாமோ"[2] (மைந்தன் - புருடன்)
—மணிவாசகர்

"பெரியதினும் பெரியதுமாய்ச் சிறியதினுஞ் சிறியதுமாய்
அரியதினும் அரியதுமாய் எளியதினும் எளியதுமாய்க்
கரியதுமாய்க் காண்பானும் காட்சியுமாய் அவைகடந்த
துரியமுமாய் நின்றாயென் சோதனைத்தோ நின்னியல்வே"[3]
— பரஞ்சோதிமுனிவர்

"திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவா யணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே"[4] -உமறுப்புலவர்

1. திருமுறை. 6 94 1
2. திருவாசகம். திருத்தோணோக்கம், 5
3. திருவிளையாடற் புரா. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம், 28
4. சீறாப் புராணம், விலாதத்துக் காண்டம், கடவுள் வாழ்த்து

ஓ) இறைவன் எவ்வாறு இயங்குகிறான்?

பொறிபுலன்களால் உணரக் கூடியநிலையிலும் உணர வியலாத நிலையிலும் புதிராக விளங்கும் இறைவனியல்பினை வரையறுத்துக் கூறமுடியாது. சமயவுணர்வால் ஓரளவு புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் அருட்செல்வர்கள் இறைவிளக்கத்தினைச் சில உத்திகளால் புலப்படுத்தியுள்ளனர்; அவை வருமாறு:

"தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடுமங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழையொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரை தண்கடல் ஆகுமே"[1]

—திருமூலர்

"ஊனாகி உயிராகி அதனுள் நின்ற
உணர்வாகிப் பிறஅனைத்தும் நீயாய் நின்றாய்
நான்ஏதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்"[2]

—அப்பர்

"வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாந் திருமாலே"[3]

— பொய்கையாழ்வார்

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"[4]

— மணிவாசகர்

1. திருமந்திரம், 1141
2. திருமுறை 6,62,2
3. முதல் திருவந்தாதி, 92
4. திருச்சதகம், 15

''உணர்கி யூஒு ளுயிராயுயிர் தோறு மாகி
வர்னாதி யான பொருளாய்மதி யாகி வெய்யோன்
தானாகி ஆண்பெண் ணுருவாகிச் சராச ரங்கள்
ஆனான் சிவன்மற் றவனீள்கழற் கன்பு செய்வாம்'[1]

— கச்சியப்பசிவாச்சாரியார்

''உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே''[2]

— அருணகிரிநாதர்.

ஓ) இறைவனைக் காணும் உத்தி (உபாயம்) எது?

வினைத் தொடர்ச்சி நீங்கும் பக்குவத்தில், இறைவனது திருவருளே கண்ணாகக்கொண்டு காண்பதே - உணர்வதே - சீரிய உத்தியாகும்.

''அண்டமெலாம் கண்ணாகக் கொளினும் காண்டற்
கணுத்துணையும் கூடாவென் றனந்த வேதம்
விண்டலறி ஓலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கும் ஒன்றே
கண்டவடி வாய்அகண்ட மயமாய் எங்கும்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவு ளேஎம்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டும்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே''[3]

— வள்ளற்பெருமான்

1. கந்தபுராணம், உற்பத்திபாண்டம், கடவுள் வாழ்த்து
2. கந்தரனுபூதி, கடைசிப்பாடல்.
3. திருவருட்பா, 2114 (மகாதேவமாலை 43)

1.6. சமயவழிப் பண்பாடு - பொதுப்பார்வை:

உலகத்திலே அவ்வக்காலங்களிலும் தோன்றியருளிய அருட் செல்வர்கள் தத்தம் வாழ்வையே பெரிதெனக் கொள்ளாமல், நாட்டு நலங்கருதித் தியாக வாழ்வு வாழ்ந்துள்ளனர். ஒவ்வொரு சான்றோர் அல்லது அருளாளர் வாழ்வியல் கூறுகளை யும் அலசி ஆராய்ந்தால், பொதுநலத்துக்காக அவர்கள் ஆன்ம நெறியில் புரிந்துள்ள **தியாகம்** தெற்றெனப் புலப்படும். எவ் வளவோ தியாகங்களுக்கிடையே அருட்செல்வர்கள், நாட்டின் முழுமை நோக்கிலே மக்களின் மேம்பாட்டுக்காக ஒருமை யுணர்வை அறிவுறுத்தி - வலியுறுத்தி - யாவரிடத்தும் வெறுப் பின்றிப் பொதுநலத்துக்காக வாழ்ந்து வந்துள்ளனர் என்பது புரியலாகும்.

ஒரொரு காலத்தில் நாட்டின் தவக்குறைவால் - **போகூழ்** காரணமாக - இடையிடையே தோன்றி, மக்களை அலைக்கழிக் கின்ற குறுகிய எல்லையுணர்ச்சிகளையும், சாதிமத வுணர்ச்சி களையும், மொழிவேறுபாடுகளையும் கடந்து தம் எண்ணங் களாலும், சொல்லாலும், செயலாலும் அருளாளர்கள் சமயவழிப் பண்பாட்டையும் போதித்து வந்துள்ளனர்; இந்தியத் துணைக் கண்டமாகிய பாரதத்தைப் - **பெற்றெடுத்த அன்னை**யாகவே- மதித்துப் போற்றச் செய்துள்ளனர்; **பாரதம்** என்பது வடக்கே இமயமலைக்கும் தெற்கே கன்னியாகுமரிக்குமிடையே அமைந் துள்ள **வெறும் நிலப்பரப்பு அன்று** என்றும், மக்களிடையே பிளவும் காழ்ப்புணர்ச்சியும் சிதைவும் விளைவிக்கும் அழிப் பாற்றல்களை எதிர்த்து நிற்கும் **ஆன்மிக வலுவும் தெய்வநல வாழ்க்கையுமே பாரதம்** என்றும் போதித்து வந்துள்ளனர். இதே கருத்தைச் சமய வழியில் எடுத்துரைக்க எண்ணிய அருட் செல் வர்கள், இமயமலையைப் **பர்வதராசன்** என்றும், இமயமலை (பர்வதராசன்) பெற்றெடுத்த சக்தியே **பார்வதி** என்றும், கன்னியாகுமரியைத் தெற்கெல்லையைக் காக்கும் **குமரி**யாகிய காவல் தெய்வம் என்றும் உருவகச் சுவைபடக் கூறியுள்ளனர்.

இயற்கைப் பொருள்களினூடே தெய்வநலங் கண்டு போற்றுஞ் சமயப்பண்பாட்டினை ஓரளவு விளக்கமாகக் காண் போம்.

1.7. சமயநெறிப்பண்பாடு - பொதுநலம் :

உலகில் பல்வேறு நாடுகளிலும் தோன்றிய அருளாளர்கள் தமக்கென மட்டும் வாழாமல் பொதுநலத்துக்காகத் – தாம் வாழும் சமுதாய ஈடேற்றத்துக்காகப் - பல்லாற்றானும் சிந்தித்துள்ளனர்; சமயச் சார்பில் சமுதாயத்தைச் சிந்திக்க வைத்துள்ளனர்.

சங்ககாலத்தில் தோன்றிய **கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி** உலகியல் நோக்கில் பாடிச் சென்றாலும், அச்செய்யுள் சமய அருளியலிலும் சிந்திக்கத்தகுவதாக உள்ளது. பொதுவியல் திணையில் **பொருண்மொழிக்காஞ்சித் துறையில்** அவன் பாடியுள்ள செய்யுள் வருமாறு:

''உண்டா லம்மவிவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே''[1]

இச்செய்யுள் வாயிலாகப், பிறர்க்கென முயலும் அருளாளர்கள் காரணமாகவே இந்த உலகம் உளதாகின்றது என்ற அரும் பெறலுண்மை உணர்த்தப் பெறுகின்றது.

அருளாளர்கள் உடல்நலத்துக்கும் மனநலத்துக்கும் பல்வேறு வழிகளைக் கூறியிருப்பினும், ஆன்மநலத்துக்காகப் பல்லாற்றானும் சமுதாயத்தினரைச் சிந்திக்க வைத்த ஆற்றலே மிகமிகப் போற்றுதற்குரியதாகும். இந்த அடிப்படையில் சில செய்திகளைக் காண்போம்.

உலகில் வாழும்போது பழியொடு படராமலும் உயிருக்கு உய்திதேடும் வகையிலும் வாழ்வது ஏற்புடையதாகும். அதற்கு ஒவ்வொருவரும் உகந்த முறையில் சிந்தித்துச் செயற்படுதல்

1. புறநானூறு, 182.

வேண்டும். எவ்வாறு சீரிய சிந்தனைகளை வளர்த்துக் கொண்டு நெறியுடன் வாழ்வது என வினவலாம். ஒவ்வொருவரும் வாழ்வியலில் சில சீரிய சிந்தனைகளைச், சில நல்ல வினாக்களைத் தொடுத்துக் கொண்டு பதில் கூறும் முயற்சியால் வளர்த்துக் கொள்ளலாம்.

சமயநெறியில் பொதுநலவுணர்வு கொள்ளுதற்கேற்ப, முதற்கண் வாழ்வியலில் முறையான திட்டம் தேவை; அது தொடர்பாகச் சில அடிப்படைப் படிநிலைகளைச் சிந்திப்போம்.

உலகத்தில் மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்தால் அவர்கள் வானுறையும் தெய்வங்கள் எனும் நிலையில் மேன்மையடைவர். அவ்வாறு வாழ்வாங்கு வாழவைக்கும் செந்நெறியே சமய நெறியெனக் கண்டு வருகிறோம். அத்தகைய சமய நெறியில் முதற்கண் சிந்திக்க வேண்டிய அடிப்படைக் கருத்து பொதுநலமாகும்.

பொதுநலவுணர்வு முகிழ்த்து மக்களிடையே செயல் வடிவம் பெற வேண்டுமெனின் தன்னலமறுப்பு வேண்டும். தன்னல மறுப்புக்கு வழியாதெனின், **'யான்'** எனும் அகங்காரமும் (அகப்பற்றும்) **'எனது'** எனும் மமகாரமும் (புறப்பற்றும்) நீங்குதல் வேண்டும். இதனை யுணர்ந்தே **திருவள்ளுவரும்,**

> ''யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
> குயர்ந்த உலகம் புகும்''[1]

எனக் கூறிச் சென்றுள்ளார். இக்கருத்தினை மனத்துட் கொண்ட அருளாளர்கள் பலரும் தத்தம் வாய்மொழிகளுக்கிடையே இதனை வலியுறுத்திச் சென்றுள்ளனர். மானுட வாழ்வியலில் ஒவ்வொருவரையும் வினைக்கேற்ப அகப்பற்று புறப்பற்றுக் களினூடே ஆட்டிப்படைக்கும் இறைவனது திறத்தினைத் **திருவாதவூரடிகள்,**

> ''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
> ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
> கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
> வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே''[2]

எனக் கூறிக் காட்டுதல் காண்க.

1 குறள், 346

2 திருவாசகம், திருச்சதகம், 15

உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களுள் ஆணவமே மிக வலிமை கொண்டது; அந்த ஆணவம் தீவிரமாகச் செயற் படுகையில் பொதுநலவுணர்வு தலையெடுக்க வழியிராது. இந்தப் பொதுநலவுணர்வைப் புரிந்து கொள்ளுஞ் சூழல் சமயவழிப் பண்பாட்டினால் தான் அமையும் எனலாம்.

மேலும், தாம்பெற்ற இன்பம் உலகமும் பெற்றுச் சிறக்க வேண்டுமென்பது சமயவழிச் சிந்தனையால் அமைகின்றது என்பதற்குச் சில எடுத்துக் காட்டுக்களைக் காண்போம்.

சைவத் திருமுறைகளுள் பத்தாந்திருமுறையாகிய **திருமந்திரம் அருளிய திருமூல நாயனார்,**

> ''நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
> வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
> ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரஞ்
> தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே''[1]

எனப் பாடிச் செல்கையில் சமயநெறியில் பொதுநலம் எத்தகைய ஊற்றம் பெற்றுள்ளது என்பதை உணரலாம்,

கிடைத்தற்கரிய மானுடப்பிறவி யெடுத்த நிலையில் சிவஞானப் பேறுபெற்ற அனுபூதிமான் **மணிவாசகர்,** பொதுநல நோக்குடன் இறைவனது திருவருளைப் பெற்று உய்ந்திட உலகியல் மக்களை ஆர்வமுடன் அழைக்கிறார். சமய நெறியில் பொதுநலம் பொதிந்துள்ள பாங்கினைக்,

> ''காலமுண் டாகவே காதல்செய் துய்ம்மின் கருதரிய
> ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
> ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
> மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே''[2]

எனவரும் பாசுரத்தால் கண்டு கொள்ளலாம். இதே பாங்கினில், சிவபோகப் பேற்றினைப் பலரும் துய்க்குமாறு கருதிய **தாயுமானவடிகள்,**

1 திருமந்திரம், 147
2. திருவாசகம், திருப்பாண்டிப்பதிகம், 5,

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்! அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப்
பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாருஞ் சகத்தீரே"[1]

எனப் பாடியருளுதலைக் காண்க. தம் வாழ்வில் **மணிவாசகராலும் தாயுமானவடிகளாலும்** ஆன்மநலவூற்றம் பெற்றவர் **வடலூர் இராமலிங்க அடிகளாவார்;** அவரும் இதே பொதுநலவுணர்வுடன் தாம் அரிதில் பெற்ற அருட்சோதியின்ப அனுபவத்தைத் தம்மைப் போல மன்பதையும் பெற்று உய்யுமாறு கருணையுள்ளத்துடன் அழைத்து நிற்கிறார்; இதனைத் **திருவருட்பாவில்.**

"பாதி யிரவில் எழுந்தருளிப் பாவி யேனை எழுப்பி அருட்
சோதி அளித்தென் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்கு
கின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப நிதிநான் பெற்ற நெடும் பேற்றை
ஓதி முடியா தென்போல்இவ் வுலகம் பெறுதல் வேண்டுவனே"[2]

எனவரும் பாசுரத்தால் உணர்ந்து கொள்ளலாம்.

இத்தகைய அருளாளர்களால் சமயப் பண்பாட்டு அடிப்படையில் பொதுநலம் தொடர்பாகச் சிந்தித்துத் தெளிய வேண்டிய செய்திகள் சிலவுள; அவை உலகத்திற்கு நன்மை பயக்கும். சாரமாகக் கூறுகையில், சமய வுணர்வுடையவர்கள் எந்த மனிதனையும் புறம்பாகக் கருதக் கூடாது; சமுதாயத்தில் பின்னணியில் உள்ள மக்களை மேலும் பின்னுக்குத் தள்ளக் கூடாது; அவர்களையும் தம்மைப் போன்றே முன்னணிக்குக் கொணர வேண்டும்; எந்த இடத்திற்குச் சென்றாலும் நாடு இனம், மொழி, நிறம், பழக்க வழக்கங்கள் காரணமாக வேற்றுமை பாராட்டாமல் மக்களெல்லாம் ஈடேற வேண்டுமென்று முயலவேண்டும்.

1. தாயுமானவடிகள் பாடல்கள், காடுங்கரையும்,3
2. திருவருட்பா, பிரிவாற்றாமை, 10

1.8. இறைத் தொடர்பு நிலைகள்:

சமயம் ஒவ்வொன்றும் இறைவனுக்கும் அடியவர்க்குமுள்ள தொடர்புகளைப் - பக்திப்படிநிலைகளை - ஒவ்வொரு வகையில் அணுகுமுறையாகக் கொண்டிருக்கும்.

சைவ சமயத்தில் பரமனை ஆண்டானாகக் கொண்டு அடியவர் தம்மைத் தாசராகக் கொள்வதைச் **சரியை** என்றும், **தாதமார்க்கம்** என்றும் சாத்திரம் கூறும்; பரமனைத் தந்தை யாகவும் தம்மைப் புத்திரராகவும் பாவித்துக் கொண்டு பக்தி செலுத்துவதைக் **கிரியை** என்றும் **சற்புத்திர மார்க்கம்** என்றும் கூறும்; பரமனைத் தோழனாகக் கொண்டு தோழமையன்பு செலுத்துவதை **யோகம்** என்றும் **சகமார்க்கம்** என்றும் **தோழமை மார்க்கம்** என்றும் கூறும்; பரமனை நாயகனாகக் கொண்டு **'நாயக-நாயகி பாவ'** (Bridal mysticism) உயர்ஞான இன்ப அன்பு கொண்டிலங்குவதை **ஞானம்** என்றும் கூறும்; இதனில் **குரு-சீட** அருளனுபவமும் புலப்படலாகும். எனினும், பொதுவாக, ஆன்ம நாயகனிடம் தம்மை அடைக்கலப் படுத்திக் கொள்வதை உயிரோட்டமாகக் கொண்டிருத்தல் புலப்படும்.

மேலும், மேற்கண்ட நான்கு நெறிகளையும் ஒன்றோ டொன்று உறழ்ந்து பார்த்துச் சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம்; கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம்; யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம்; ஞானத்தில் சரியை; ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்று பதினாறு படிநிலைகளையும் கூறுவர். ஞானத்தில் சரியைத் தொடர்பினைக் கொண்டு முத்தியடைந்தவர் **திருநாவுக்கரசு சுவாமிகள்** என்றும், ஞானத்தில் கிரியைத் தொடர்பினைக் கொண்டு முத்தியடைந்தவர் **திருஞானசம்பந்த சுவாமிகள்** என்றும், ஞானத்தில் யோகத் தொடர்பினைக் கொண்டு முத்தி யடைந்தவர் **சுந்தரமூர்த்தி** சுவாமிகள் என்றும், ஞானத்தில் ஞானம் என்ற மிகஉயரிய தொடர்பினைக் கொண்டு முத்தி யடைந்தவர் **மாணிக்கவாசக சுவாமிகள்** என்றும், சைவ சமயம்

கூறும். இவ்வகை இறைத் தொடர்பு நிலைகளைத் **திருமூலர்** முதலிய சமய ஞானியர் பலரும் தத்தம் ஈடுபாட்டுடன் போற்றியுள்ளனர். சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றால் கிட்டலாகும் முத்திப் பேறுகளை முறையே **சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியம்** என வகைப்படுத்திச் சமய அருளாளர் பலரும் பெருநம்பிக்கையுடன் போற்றி உணர்த்தியும் யுள்ளனர். இவற்றைச் **சோபான முறைகள்** அல்லது **படிநிலை அணுகு முறைகள்** என்ற கருத்திலும் புலப்படுத்தியுள்ளனர்.

பொதுவாகச் **சரியை கிரியை யோகம் ஞானம்** என்பவற்றை முறையே **அரும்பு, மலர், காய், கனி**யெனக் கொண்டு **தாயுமான அடிகள்,**

'விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே''[1]

என்று சாரமாகப் புலப்படுத்துவதை ஈண்டுச் சுருக்கமாக இயைபுடன் சிந்திக்கலாம். மேலும், இத்தகைய இறைத் தொடர்பு நிலையினை **அன்புநெறி** (பக்திநெறி), **அறிவுநெறி** (ஞானநெறி) எனும் இரு பிரிவுகளுள் அடக்கிக் காணவும் செய்வர். ''உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால், முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே''[2] என்ற அப்பர் தேவாரத் தொடரும் ஈண்டு இயையுடன் சிந்திக்கத்தகும்.

வைணவ சமயத்தில் இறைவனுக்கும் உயிர்களுக்குமுள்ள தொடர்பு - **சம்பந்தம்** - **ஒன்பது வகைப்படும்** என வைணவ மரபு நூல்கள் கூறிச் செல்லும்; அவை வருமாறு;

1. **பிதா - புத்திர சம்பந்தம்** — தந்தைக்கும் மகனுக்குமுள்ள தொடர்பு
2. **ரட்சக - ரட்சிய சம்பந்தம்** — காப்பாற்றுபவன் காப்பாற்றப்படுவது ஆகிய தொடர்பு
3. **சேஷ - சேஷி சம்பந்தம்** — அடிமை ஆண்டான் தொடர்பு

1. தாயுமான சுவாமிகள் பாடல்கள், பராபரக்கண்ணி, 157
2. திருமுறை, 5, 893

4. **பர்த்ரு - பார்யா சம்பந்தம்** — கணவன் மனைவி முறைத் தொடர்பு

5. **ஞேய - ஞாத்ரு சம்பந்தம்** — அறியப்படுவது அறிபவன் ஆகிய தொடர்பு

6 **சுவ - சுவாமி சம்பந்தம்** — உடைமை உடையவன் தொடர்பு

7. **ஆதார - ஆதேய சம்பந்தம்** — தாங்குவது தாங்கப்படுவது ஆகிய தொடர்பு

8. **சரீர - சரீரி சம்பந்தம்** — உடலும் உயிருமாகிய தொடர்பு

9. **போக்தா போக்ய சம்பந்தம்** — அனுபவிப்பவன் அனுபவிக்கப்படுவதாகிய தொடர்பு.

மேற் கூறியவற்றுள் **'பர்த்தரு – பார்யா சம்பந்தம்'** என்பது நாயக நாயகி பாவத் தொடர்பினை உள்ளுறையாகக் கொண்டது எனலாம். **நம்மாழ்வார் 'பராங்குச நாயகி'** எனத் தம்மை வரித்துக் கொண்டும், **திருமங்கையாழ்வார் 'பரகால நாயகி'** எனத் தம்மை வரித்துக் கொண்டும் பரந்தாமனை ஆன் மிகக் கலவியால் அனுபவித்தவர்கள். சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாகிய **ஆண்டாளோ** திருவரங்கப் பெருமானை - அழகிய மணவாளனை- நேரிடையாகவே நாயகனாக ஆக்கிக் கொண்டு **பள்ளமடையென** இன்ப வெள்ளப் பெருநிலைக்குச் சென்றவள்.

திருமாலடியவர்களாகிய ஆழ்வார்கள் பாசுரங்களில் **''பிதா புத்திர சம்பந்தம்'** முதலிய ஒன்பது தொடர்புகளையும் ஆங்காங்கே கண்டு போற்றி நிற்கலாம். எனினும், **ரட்சக ரட்சிய சம்பந்தம், சுவ சுவாமி சம்பந்தம், ஆதார ஆதேய சம்பந்தம்** ஆகியவற்றுள் இறைவனுக்கு அடியவர்கள் **பூரண சரணாகதி** (பிரபத்தி) ஆகவேண்டிய ஆன்மநலக் குறிப்பு நன்கு அமைந்துள்ளமை புலப்படும்.

2. திருமுறை 5,893 (விறகிற்றீயினன், எனத்தொடங்கும் பாடல்)

1.8.1 பக்திக் கூறுகள்

பக்தி என்பது ஒன்றனோடு ஒன்றைப் பிணைக்கும் அன்பு எனும் உணர்வு அல்லது ஆற்றல் ஆகும். இந்தப் பக்தி, தேச நலத்துடன் ஒன்றுகையில் **தேசபக்தி**யாகவும், அறிவைக் கற்பிக்கும் குரு அல்லது ஆசாரியர் தொடர்பில் அமைகையில் **குருபக்தி**யாகவும், பெற்றெடுத்த தாய்தந்தையரிடம் அமைகையில் **பெற்றோர்** பக்தியாகவும், வாழ்க்கைத் துணைவரிடம் ஒருத்தி ஒன்றுகையில் **பதிபக்தி**யாகவும், மன்னனிடம் மக்கள் ஒன்றுகையில் **அரசபக்தி**யாகவும், பரம்பொருளை யுணர்ந்து அடியவர் ஒன்றுகையில் கடவுட் காதலாம் **தெய்வ பக்தி**யாகவும், அடியவர்களை மதித்து அவர்களிடம் கொள்ளும் அன்பு **அடியார் பக்தி**யாகவும் பல்வேறு வகைப்படும். எனினும், பக்தி என்பது **தெய்வப்பக்தியையே** குறிப்பதாக மக்களிடையே வழக்கத்தில் உள்ளது.

பக்தி கடவுள் தொடர்பாக அமைகையில் ஆண்டான் அடிமை நிலையில் **தாசபக்தி** என்பர்; இதற்கு எடுத்துக்காட்டாக **அப்பரடிகளையும் தொண்டரடிப் பொடியாழ்வாரையும்** கூறலாம். கடவுளிடம் தோழமை பூண்டொழுகும் உறவினைச் **சக்யபக்தி** என்பர். இதற்கு எடுத்துக்காட்டாகச் **சுந்தரமூர்த்தி சுவாமிகளையும், குசேலரையும்** சுட்டலாம். கடவுளைப் பெற்றோராகக் கருதி அவரது அன்பு (வாத்சல்யம்) பெறுமாறு கொள்ளும் பாங்கினை **வாத்சல்யபக்தி** என்பர்; இதற்கு எடுத்துக்காட்டாகத் **திருஞான சம்பந்தரையும் பிரகலாதாழ்வாரையும்** குறிக்கலாம். கடவுளிடம் ஞானானுபவத்துடன் - **நாயக நாயகி பாவத்துடன்** - **அணுகும் அன்பினை மதுரபக்தி** எனலாம். இதற்கு எடுத்துக்காட்டாக **மாணிக்கவாசகரையும் ஆண்டாளையும் கோபியர்களையும்** சுட்டிக் கூறலாம். இத்தகைய **பிரேமபக்தியே பக்தியின் உச்சநிலையாகும்.**

இவ்வாறாக ஆன்மநல வளர்ச்சியான பக்திநிலையை விளக்குகையில், "அது, **சாந்தநிலை** (பிரமத் தியான நிலை) யிலிருந்து தொடங்கித் **தாசியம்** (அடிமை); **சக்கியம்** (தோழமை) **வாத்சல்யம்** (குழந்தையிடத்துள்ள உருக்கம்) என்னும் படிகள் வழியாக, **மதுரம்** என்னும் **நாயக உறவு** வரை வளர்தல்

வேண்டும்''[1] என்ற குறிப்பினைக் **கிருஷ்ண சைதன்னியரது** வாழ்வியலமைப்பினை யொட்டிக் கூறிச் செல்வர். அந்த நெறியினைத் தமிழ்நாட்டில் ஏற்புடைய பக்திநெறியோடு ஒப்பீடு செய்து ஆராய்கையில் வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இடையே யமைந்துள்ள பிணைப்புக் கூறுகள் -ஒருமைப்பாட்டுக் கூறுகள் - பல தென்படும்.

தெய்வபக்தியைப் பிறிதொரு கோணத்தில் கண்டு, தன்னலமில்லாத கடவுட் காதலைச் **சாத்துவிகபக்தி** என்றும், உலகியல் நல் விருப்பம் நிறைவேற்றிக் கொள்ளுதற்கான பக்தியை **இராசத பக்தி** என்றும், பகைவரைத் துன்புறுத்துதற்காகக் கூடிய தேவதைகளை வசப்படுத்தும் பக்தியைத் **தாமசபக்தி** என்றும் பாகுபாடு காண்பதும் உண்டு.

உலகில் பல நாடுகளில் பக்தியின் சிறப்பை உணர்ந்து மக்கள் போற்றிவருகின்றனர். எனினும், பாரதநாடு, அதிலும் சிறப்பாகத் தென்னாடாகிய **திராவிடநாடு** பக்தியின் பிறப்பிடமாகப் பண்டு தொட்டுத் திகழ்ந்து வருகிறது. **சிவபெருமான்** இமயமலை – திருக்கயிலைமலை – எனும் மலையுடன், **மலைமகளுடன் தொடர்பு கொண்டவரேயெனினும் தென்னாட்டில் தான் அவரது மிகுபுகழ் கொண்டாடப்படுகிறது**. இதனை மனத்துட் கொண்டே, ''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று பெருமக்கள் முழங்குவாராயினர்.

தெய்வங்கள் பலவும் வடநாட்டில் தோன்றியிருப்பினும். தெய்வத் தொடர்பான தத்துவங்களையும் பக்தி சித்தாந்தங்களையும் உலகினர்க்கு அறிமுகஞ் செய்யும் சமயத் தொண்டர்களும் ஞானாசாரியர்களும் பலராகத் தோன்றிய பகுதி தென்னாடாகிய புண்ணிய பூமி என்பது நினைந்து நினைந்து போற்றற்குரியதாகும்.

தமிழக பக்தியின் சிறப்பைக் காரணமாகப் புலப்படுத்து கையில் அருளாளார்கள் பலரும், இது வேதங்களிலே விதையாகி உபநிடதங்களிலே முளையாகி, இதிகாசங்களிலே செடியாகிப்

1 கலைக்களஞ்சியம், தொகுதி 6, பக், 626

புராணங்களிலே அரும்பி, ஆகமங்களிலே மலர்ந்து, ஆழ்வார்கள் நாயன்மார்கள் முதலிய மெய்யன்பர்களது காலத்தில் காய்த்து, ஆசாரியர்களது காலத்தில் கனிந்து, பேரின்பத்தை எங்கும் வழங்கலாயிற்று என்கின்றனர். நித்திய மங்களவடிவமும், திவ்விய கலியாண குணங்களும் வாய்ந்த இறைவனே மக்களால் வழிபடுவதற்குரியவனாகிறான்; அந்நிலையில் **சிவன், விஷ்ணு, சக்திதேவி, சூரியன், கணபதி, குமரன்** என்னும் ஆறு தெய்வங்களும் பக்திக்குரியனவாகக் கருதப்படலாயின. எனினும், முதல் மூன்று தெய்வங்களைப் பற்றிய **சைவம், வைணவம், சாக்தம்** என்னும் மூன்று சமயங்களும் நாளடைவில் ஏனைய மூன்றையும் தம்முள் அடக்கிக் கொண்டன எனலாம் இத்தெய்வங்களை வழிபடுவோர் பண்டு தொட்டே முறையான கோட்பாட்டுடன் சமய மரபுகளைப்பின் பற்றி வந்துள்ளனர். இவற்றுள் **சைவமும் வைணமும்** தென்னாட்டிலே தனிச்சிறப்புடன் ஓங்கி வளர்ந்துள்ளன என்பது போற்றுதற்குரியதாகும்.

1.9. சமயமும் வாழ்க்கை நலமும்:

மனிதன் தான் வாழ்கின்ற சமுதாயத்தில் மதிப்பினையும் மரியாதையையும், போற்றுதலையும் பெறுதற்குரிய நிலையில் வாழவேண்டுமென்று திட்டமிடுகிறான். தன் விருப்பம், முயற்சி, குறிக்கோள் ஆகியவை நல்வாழ்வினையடையும் பொருட்டே என்பதையும் உணர்ந்து, தன் ஆற்றல் முழுவதையும் செலவிடச் சித்தமாகிறான். அவனது செயற்போக்கில் பொருட்செல்வம் தேடிய நிலையிலே அவன் எதிர்பார்த்த மனநிறைவு கொள்கிறானா என்பது சிந்திக்க வேண்டியதாகின்றது.

தீவினைவிட்டு ஈட்டிய பொருட் செல்வத்தைப் பொதுநலத்துக்காகப் பெரிதும் செலவிடுகையில் கிட்டும் இன்பம், தன்னலத்துக்காகச் செலவிடுகையில் கிடைப்பதில்லை; இஃது ஒவ்வொருவருக்கும் அனுபவத்தால் கிடைக்கும் வாழ்வியற் பாடமாகும். ஆனால், மனிதன் தான் ஈட்டும் பொருளெல்லாம் ஐம்பொறிகளின் வாயிலாக வரும் இன்பத்திற்காக என நினைப்பதே உலகில் பெரும்பான்மையாக உள்ளது. இவ்வாறான சூழலில், அறவாணர்களும், அருளாளர்களும் மக்களின் நல்வாழ்விற்குப் போதனை புரிந்து வருகின்றனர்.

புலனடக்கத்துடன் சமய ஒழுக்கநெறி நிற்றலின் சிறப்பால் பல்லாண்டு வாழலாம் என்பதைப்,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"[1]

என **வள்ளுவர்** கூறிச் செல்லுதலால் உணரலாம்; இதனில் கடவுட் சார்பினைக் காண்க.

சமுதாயத்தில் வாழ்க்கை நலத்துக்கு உகந்த சிறந்த வழியாகச் சமயம் பலவழிகளில் வலியுறுத்தப்படுகிறது; உயிர்களை நடமாடுங் கோயில்களாகவே அது மதித்துப் போற்றச் செய்கிறது; இதனைத் **திருமூலர்**,

"படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடுங் கோயில் பகவற்க தாமே"[2]

எனப்பாடிச் செல்வதால் உணரலாம். இதனையே வேறொரு அணுகுமுறையில் ஓர் அருளாளர்,

"எவ்வுயிரும் பராபரன் சன்னிதி யாரும்
இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்"

எனக் கூறிச் செல்லுதல் காண்க.

இதனை விளக்கமாக மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் இதிகாசங்களும், காப்பியங்களும், புராணங்களும், தோத்திரங்களும், பொதுநோக்கிலே மதத்தின் அடிப்படையில் தோன்றியுள்ளன என்பதை யுணர்வது நல்லது.

பொருள் புகழ் பட்டம் பதவி ஆட்சி அதிகாரம் முதலியவற்றைப் பெறுவது தவறு அன்று. ஆனால், அவற்றைத் தனக்காகவே எனக்கொண்டு, **அகப்பற்றும் புறப்பற்றும்** தன்னை ஆட்டிப்படைக்கும்வகையில் வாழ்க்கையமைத்துக் கொண்டு, **போலியின்பம்** பெறுவதே தவறாகும். அந்தப் போலியின்பமே மிகப்பெரிய வரபலங்கொண்டவர்களையும் வீழ்த்தியுள்ளது என்பதையே சமய இலக்கியங்கள் கூறியுள்ளன.

1. குறள். கடவுள்வாழ்த்து, 6
2. திருமந்திரம், 1821

பேரிலக்கியங்களில், ஆணவ பலம் மிகவும் பெற்ற **இரணியன் வீழ்ச்சியையும், இராவணன் வீழ்ச்சியையும், சூரபன்மன் வீழ்ச்சியையும்**, தன்னலங்கொண்ட **துரியோதனன் வீழ்ச்சியையும்** அவரவர் வாழ்க்கையுடன் சார்த்திப் புலவர்கள் கூறியுள்ளனர்; இதனால் மனிதன் தன் வாழ்க்கையை எவ்வாறு திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி நிதானமாகச் சிந்திக்க வாய்ப்பினைப் பெறுகிறான். அரியதினும் அரியதாகிய மானுடப்பிறவியில், திட்டமிட்டுச் சிந்தித்த நிலையில் ஒருவன் சமய நன்னெறியிலே ஒழுகினால். இம்மையில் புகழும் மறுமையில் வீடுபேறும் கொள்ளும் வகையில் உத்தமனெனப் பேர் பெறுவான். இதற்கேற்ற வகையில் சமயம் பற்றிய தொடர்பான பல செய்திகளைத் தொடர்ந்து காண்போம்.

2. இயற்கையில் இறைமை காணும் மனப்பாங்கு:

மானுடப் புலன்களுக்கு ஓரளவு எட்டும் உலக இயற்கைக் காட்சிகளில் எத்தனையோ விந்தைகள் உள்ளன; அவை எத்தனையோ கால மாகத் தத்தம் நியதிக்கு உட்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன, சிந்தைக்கு எட்டாத பரவெளியிலும் இயற்கை நியதிக்கு உட்பட்டு எத்தனையோ இயற்கைக் கூறுகள் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. அனைத்து அண்டங்களும் நிலைகுலையாவண்ணம், சாட்டையிலாப் பம்பரம்போல், அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறது ஒருவகை ஆற்றல் என்று கருதும் போதுதான் **சமயம்** என்பது தலைகாட்டுகிறது.

அனைத்தையும் ஒருவகை நியதியில் செலுத்துவது **இயற்கையே** என்பர் சிலர்; இயற்கையையும் இயக்குவது **கடவுளே** என்பர் சிலர். இத்தகைய கருத்துவேறுபாடு பண்டுதொட்டே இருந்துதான் வருகிறது.

நாம் இயற்கையினூடே இறைமை காணும் நெறியில் சிலவற்றைச் சிந்திப்போம்.

நம் நாட்டு மெய்ஞ்ஞானிகள் இயற்கைக் கூறுகள் பலவற்றையும் நுணுகிக் கண்டு, தாம் கண்ட உண்மைகளைப் புலப்படுத்தியுள்ளனர். மண்ணகத்தும் வானகத்தும் அனைத்தையும் இயக்குகின்ற இறைமையைப்பற்றி உள்ளவாறே உணரும் மனப்பாங்கைக் கொண்டுவிடின், அதனால்பெறும் இன்பம் அளவிடற்

கரியது; அதனைச் சொல்லால் வடித்துக்காட்டிட இயலாது என்று அவர்கள் பல்வேறு உத்திகள் வாயிலாக இயம்பியுள்ளனர். ஈடும் இணையும் இறுதியுமில்லாத அந்த இயற்கையெழிலின்பம் பற்றி ஒவ்வொருவரும் ஓரளவேனும் புரிந்துகொண்டால், முன்னோர் காட்டிய சமயப் பண்பாட்டில் திளைக்க வழியேற் படும். இதனை அருளாளர்கள் சிலரின் வாய்மொழிகளால் தெளியலாம்.

சைவ சமயகுரவர்களும், வைணவ ஆழ்வார்களும், பிற அருளாளர்களும் தத்தம் பாசுரங்களில் இயற்கையினூடே இறைமையைக் கண்டு போற்றி வழிபட்டுள்ளனர். எடுத்துக் காட்டாகச் சில செய்திகளைக் காண்போம்.

சைவ சமயாசாரியர்களுள் **திருஞான சம்பந்தர்** இயற்கை யழகில் பெரிதும் ஈடுபட்டவர். இறைத்திருவருளின் வளப்பமும் விளக்கமுமே இயற்கையாகப் பரிணமித்துள்ளது என்பதை நன்கு உணர்ந்து, மக்களுக்கு உணர்த்தியவர்.

''சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய உருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலை யாமே''[1]

என்றும்,

''செறியிதழ்த் தாமரைத் தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக்குடைக் கீழ்ச் செய்யாா் செந்நெல்
வெறிகதிர்ச் சாமரை யிரட்ட இளவன்னம்
வீற்றிருக்கும் மிழலை யாமே''[2]

என்றும்,

''வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல நடமாட
வண்டுபாட
விரைசேர் பொன்னிதழிதர மென்காந்தள் கையேற்கும்
மிழலையாமே''[3]

1. திருமுறை, திருவீழிமிழலைப் பதிகம், (7) 1.132
2. மேலது, (2)
3 மேலது, (4)

என்றும், வருதல் கொண்டு, திருவீழிமிழலைத் தலத்தின் இயற்கையழகை எப்படியெல்லாம் சுவைத்துணர்ந்து, பதிகம் வாயிலாகத் திருஞானசம்பந்தர் சொற்சித்திரம் தீட்டியுள்ளார் என்பதையுணரலாம். இவ்வாறே ஒவ்வொரு தலத்திலும் இயற்கையழகினூடே தெய்வநல இறைமை நலங் காண்பதை விரிக்கிற் பெருகும். விண்ணில் பறக்கின்ற பல வண்ணப்பறவைகளும், பளிச்சிடும் விண்மீன் மண்டலங்களும், மண்ணில் கொப்பளிக்கும் நீரூற்றுக்களும், பூங்காவில் மலரும் வண்ண நறு மலர்களும், மலர்களில் தேனுண்ணப் பறந்துவரும் வண்ணத்துப் பூச்சிகளும், தும்பிகளும் வண்டுகளும், கழனிகளில் விளையும் பல்வகைப் பயிர்களும், தென்னந்தோப்புகளும், மலைகளில் தவழும் அருவிகளும், மேகங்களும், தோகைவிரித்தாடும் மயில்களும், கூவுங்குயில்களும் குலவிப் பேசுங்கிளிகளும் நாகணவாய்ப் பறவைகளும், துள்ளியோடும் புள்ளிமான்களும், அசைந்து நடையிடும் யானைகளும் இவை போல்வன பிறவும் இயற்கையளித்துள்ள இன்பப்பொருள்கள்; உயிர்கள் எல்லாமும் இன்பப்பொருள்களே; இறைவனின் கூறுகளே; இத்தகையவுணர்வுடன் அவற்றுடன் உறவுகொள்ளத் தலைப்பட்டுவிடின் எங்கும் இன்பம்; எப்போதும் இன்பம்; ஈறிலா இன்பம் என்பதைச் சமயஞானியர் உணர்ந்தனர்; பிறருக்கு உணர்த்த முற்பட்டனர். ஆனால், எளியமக்கள் புரிந்துகொள்ளவில்லை

அனைத்து அண்டங்களுடனும் அனைத்துயிர்களிடமும் அனைத்து இயற்கையெழிற் காட்சிகளிடமும் உறவு கொள்ளும் பயிற்சியில் ஈடுபட முனைந்து, மனமும், இதயமும் சுவைநலத்தையும், பரிவுணர்வையும் கொண்டுவிடின் உவட்டாத இன்பத்தைத் துய்க்கலாம்; இந்த இரகசியத்தினை யுணர்ந்த மகாகவி பாரதியார்.

பல்லவி

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா இறைவா இறைவா (ஓ-எத்தனை)

சரணம்

சித்தினை அசித்துடன் இணைத்தாய் - அங்குச்
சேரும்ஐம் பூதத்து வியனுல கமைத்தாய்"[1]

1. பாரதியார் பாடல்கள், தோத்திரப்பாடல்கள், இறைவனை வேண்டுதல்

என்றும்,

''யாதுமாகி நின்றாய் - காளி
எங்குநீ நிறைந்தாய்
தீதுநன்மை யெல்லாம் - காளி
தெய்வ லீலை யன்றோ
பூதமைந்து மானாய் - காளி
பொறிகளைந்து மானாய்
போதமாகி நின்றாய் - காளி
பொறியை விஞ்சி நின்றாய்''[1]

என்றும்,

''சுட்டும் விழிச்சுடர் தான் - கண்ணம்மா!
சூரிய சந்திரரோ ?
வட்டக் கரிய விழி - கண்ணம்மா!
வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கருநீலப் - புடவை
பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் - தெரியும்
நட்சத் திரங்க ளடி!''[2]

என்றும் விண்டுரைத்துக் களியாட்டம் ஆடுகிறார்.

இயற்கை யெழிற் கூறுகளினூடே வியத்தகு தெய்வநல் சக்தியை யுணர்ந்து கொண்ட அவரது உள்ளமே,

''மூலப் பழம்பொருளின் நாட்டம் - இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்;
காலப் பெருங்களத்தின் மீதே - எங்கள்
காளி நடமுலகக் கூட்டம்.
காலை இளவெயிலின் காட்சி - அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி;
நீல விசும்பினிடை யிரவிற் - சுடர்
தேமி யனைத்துமவ ளாட்சி''[3]

எனப்பாடிச் சென்றுள்ளது.

1. பாரதியார் பாடல்கள், காளிப்பாட்டு. 1
2. பாரதியார் பாடல்கள், கண்ணம்மா - என் காதலி, 1.
3. மேலது, சக்தி விளக்கம், 2 - 3.

இதனால், இயற்கையின் மலர்ச்சியினையும் வளர்ச்சியினை யும், ஏற்றத்தினையும், தோற்றத்தினையும், கண்டு கண்டு, களிப்புடன் எண்ணி எண்ணி, நம்மை ஈடுபடுத்திக் கொள்வதால் வியந்து வியந்து, இறைமையைப் போற்றிப் போற்றித் துதிக்கும் பயிற்சியினைப் பெறுதல் வேண்டும். அறிவியல் சாதனைகளால் மதிமயங்கிய உள்ளம், அருளியலை மறவாமல், அறிவியலையும் அருளியலையும் இணைத்துக் கொண்டு செல்லும் நன்னாளே மக்களின் துன்பங்களுக்கும், துயர்களுக்கும் முடிவேற்படும் விடிவு காலமாக அமையும் எனத் துணிந்து கூறலாம்.

3. சமய நோக்கில் இறைவனும் மன்னனும்:

இறைவனோடு சேர்த்து எண்ணத்தக்க வகையில் தமிழர்கள் பலரைப் போற்றியுள்ளனர். ஐம்பெருங்குரவர் எனும் பட்டி யலில் **மாதா, பிதா, குரு, தம்முன், தெய்வம்** ஆகிய ஐவரும் போற்றுதற்குரியவர்களாகின்றனர். அவர்களுள்ளும், "**அன்னை யும் பிதாவும் முன்னறி தெய்வம்**" என்னும் பழமொழிக்கிணங்கப் பெற்றோர்கள் தெய்வநிலையில் முதலிடம் பெறுகின்றனர். தனிப்பட்டவர் வாழ்வியலில் சிந்தனை இவ்வாறிருக்கப் பொது வாழ்வில் - சமுதாய வாழ்வியலில் - பண்டு தொட்டே மன்னர் களுக்கென ஒரு வகைத் தெய்வநலம் இருந்து வந்துள்ளது.

நாடாளும் மன்னன், தெய்வத்தின் பிரதிநிதியாகவும் தெய்வ மாகவும் கருதப்பெற்றுப் போற்றப்பட்டான். இறைத்தன்மை யுடன் கூடிய மன்னனை **இறைவன்** என்றும், அவனது மாட்சியை **'இறைமாட்சி'** என்றும், **திருவள்ளுவர்** குறித்திடுதலைத் திருக் குறளில் காணலாம். இறைவனாகவே மன்னனைக் கருதுகின்ற கோட்பாடு தமிழகத்தில் மட்டுமன்றி உலகில் பல இடங்களிலும் இருந்துள்ளது. **'எகிப்திய' 'கிரேக்க' 'சுமேரிய'** நாகரிகங்களில் அரசர்களும் கடவுளும் ஒன்றெனக் கருதப்பட்டு வந்துள்ளமை வரலாறு கூறும் உண்மையாகும். இதுபோன்று பண்டைத் தமிழ்மக்களும் மன்னனை இறைவனாகவோ அல்லது இறைப் பண்புடையவனாகவோ கருதி வந்துள்ளனர்"[1] என **டாக்டர்**

1 கோயிலும் இறைவழிபாடும், பக். 23

ஏ. ஏகாம்பரநாதன் எழுதிச் செல்வது இயைபுடன் மனங் கொள்ளத்தக்கதாகும்.

இறைவனது ஆலயத்தைக் **கோயில்** என்பதைப் போலவே 'கோ' ஆகிய 'மன்னன்' வாழும் அரண்மனையும் 'கோயில்' என வழங்கப்பட்டிருத்தலை இலக்கியங்களில் காணலாம்.

இறைவனுடன் மன்னனை ஒப்புமைப்படுத்திக் கூறும் மரபு தொல்காப்பியத்திலும் காணப்படுகிறது. தேவரோடு மன்னரை உவமிக்கும் இலக்கணத்தைப் '**பூவைநிலை**' என்பர்; இதனை

'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்''[1]

எனவரும் நூற்பாப் பகுதியால் தொல்காப்பியர் உணர்த்திச் செல்கிறார். இந்தப் பூவைநிலையை நன்கு விளக்குதற்காக நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் மேற்கோள் விளக்கமாக **மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்** பாடிய **புறநானூற்றுப்பாடலை** (56) எடுத்துக்காட்டுவர்.

காளைக் கொடியுடையவனும் செஞ்சடையும் மழுப்படையும் உடையவனுமாகிய **நீலகண்டனும்** (சிவனும்), வெண்சங்கு நிறமுடையவனும் கலப்பையையும் பனைக்கொடியையுமுடைய வனுமாகிய **பலதேவனும்**, நீலமேனியனும் கருடக் கொடியுடைய வெற்றியோனுமாகிய **திருமாலும்**, நீலமயிற் கொடியும் நீலமயிலூர்தியுமுடைய வெற்றிச்செல்வனாகிய **முருகனும்**, **பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனுடன்** ஒப்புமைப் படுத்தப்படுகின்றனர். பாண்டியனுடைய செயல் திறனை ஒப்பிடுகையில், சினத்தால் கூற்றுவனையும் வலிமை ஆற்றலால் பலதேவனையும், புகழால் பகைவரைக் கொல்லுந் திருமாலையும், கருதியது முடித்தலால் முருகனையும் நினைவு கூர்கிறார் புலவர். இதனை உட்கொண்டமைந்த செய்யுட் பகுதி வருமாறு:

''ஏற்றுவல னுயரிய எரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி **மணிமிடற் றோனும்**
கடல்வளர் புரிவளை புரையும் மேனி

1 தொல். பொருள்; புறத்திணையியல், 5

அடல்வெந் நாஞ்சிற் **பனைக்கொடி யோனும்**
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்ணுயர் **புட்கொடி விறல்வெய் யோனும்**
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி ஒண்செய் யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பின்
தோலா நல்லிசை நால்வருள்ளும்
கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்''[1]

இஃது ஒருபுறமிருக்கச் சோழனைத் **திருமாலாகவே** போற்றி நிற்பதைக்,

''குருந்த மொசித்த ஞான்றுண்டா லதனைக்
கரந்த படியெமக்குக் காட்டாய் - மரம்பெறாப்
போரிற் குருகுறங்கும் பூம்புனல் நீர்நாட
மார்பிற் கிடந்த மறு''[2]

என்று கூறிக் காட்டுதலானும், சேர மன்னனைச் **சிவனாகவே** போற்றி நிற்பதை,

''ஏற்றூர்தி யானும் இகல்வெம்போர் வானவனும்
ஆற்றலும் ஆள்வினையும் ஒத்தொன்றின் ஒவ்வாரே
கூற்றக் கணிச்சியோன் கண்மூன் றிரண்டேயாம்
ஆற்றல்சால் வானவன் கண்''[3]

என்று கூறிக்காட்டுதலாலும், சேர மன்னனைப் **பலதேவனாகப்** போற்றி நிற்பதை,

''இந்திர னென்னின் இரண்டேகண் ஏறூர்ந்த
அந்தரத்தா னென்னின் பிறையில்லை—அந்தரத்துக்

1. புறநானூறு, 56 : 1-14
2. தொல். பொருள், புறம், பூவை நிலைக்கு மேற்கோள் பாடல்
3. மேலது

கோழியா னென்னின் முகனொன்றே கோதையை
ஆழியா னென்றுணரற் பாற்று''[1]

என்று கூறிக் காட்டுதலாலும் காண்க.

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனைக் **காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்,** திருமால் போன்று போற்றுதலை,

''வல்லா ராயினும் வல்லுநரா யினும்
புகழ்தலுற் றோர்க்கு மாயோ னன்ன
உரைசால் சிறப்பிற் புகழ்சால் மாற''[2]

என விளிப்பதால் உணரலாம்.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் அன்பு நட்புரிமையால் ஒருங்கேயிருக்கக் கண்ட காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், வெள்ளைநிறப் பலராமனும் நீலநிறக் கண்ணனும் போல ஒற்றுமையுடன் இனிது வாழிய என வாழ்த்துகிறார்; இதனைப் புறநானூற்றில் 58ஆம் பாடலால் உணரலாம்.

சிலப்பதிகாரத்தில் வரும் ஆய்ச்சியர் குரவையின்கண், **கண்ண பிரானே, பாண்டியனாகவும், சோழனாகவும், சேரனாகவும்** உள்வரிக் கோலம் பூண்டு ஆட்சி புரிந்ததாகக் கற்பனை செய்கிறார் **இளங்கோவடிகள்.** எனவே, பொதியமலைச் சந்தனத்தையும் கடல் முத்தினையும் இந்திரனளித்த ஆரத்தையும் மார்பில் பூண்ட **பாண்டிய மன்னன்** சேரகுலத்தில் குருந்தமரம் அழித்த கண்ணனுக்கும் பொன்னிமய மலையுச்சியில், புலிச்சின்னம் பொறித்தவனும் புகார் நகரில் வாழ்வோனுமாகிய **சோழ மன்னன்,** சக்கரப் படையானாகிய திருமாலுக்கும், கடலினுள்ளே புகுந்து பகை மன்னரின் கடப்பமரத்தை வெட்டியெத **சேந்திர மன்னன்,** கடல் கடைந்த மாயவனுமாகிய திருமாலுக்கும் ஒப்புமை புலப்படுத்தி சிறப்பித்து நிற்கிறார்; இதனை **ஆய்ச்சியர் குரவையில்**

1. தொல், பொருள், புறம், பூவைநிலைக்கு மேற்கோள் பாடல்
2. மேலது

"கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்;

பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன்வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்;

முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவில்தோ ளோச்சிக் **கடல்கடைந்தா னென்பரால்;**[1]

எனவரும் பாடல்களால் இனிது உணரலாம்.

பக்தியியக்கக் காலத்திலும் மன்னரைத் தெய்வமாகவே போற்றி நிற்கும் மரபு போற்றப்பட்டுள்ளது. இதனை நம்மாழ்வார்,

"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே"[2] எனப்பாடிச் செல்வதால் தெளியலாம்.

கல்வெட்டுக்களிலும் இந்தமரபு பல இடங்களிலும் போற்றப் பட்டுள்ளதைக் காணலாம். பல்லவ மன்னர்கள் பலருடைய கல்வெட்டுக்கள், இறைவனோடு ஒப்பானவராக மன்னரைப் போற்றிக் கூறுகின்றன. "காஞ்சிக் கயிலாசநாதர் கோயில் கல்வெட்டொன்றில் திரிபுரம் எரித்த சிவனுக்குக் குமரன் பிறந்தாற் போன்று உக்கிரதண்டனுக்கு முதலாம் பரமேசுவரன் அத்யந்த காமன் (இராச சிம்மன்) பிறந்தான் என்று குறிப்பிடப்பட் டுள்ளது (தெ. இ. கல்வெட்டு முதல்பகுதி, பக். 12-14). இங்குப் பரமேசுவரவர்மனைச் **சிவனுக்கும்** இராசசிம்மனைக் **குமரக் கடவுளுக்கும்** ஒப்பிட்டுள்ளதைக் காணலாம் இது போன்று இக் கோயிலிலுள்ள மற்றொரு கல்வெட்டு பரமேசுவரவர்மனைக் **கால காலக்கடவுள்** என்றும், ரங்கபதாகை அரசி **மலைமகளுக்கு**

1. சிலப்பதிகாரம் 17. உள்வரி வாழ்த்து. 1-3
2. திருவாய்மொழி. 4, 4, 8

ஒப்பானவள் என்றும், நரசிம்மவர்மன் தன்னுடைய எதிரிகளை அழிப்பதில் **நரசிம்ம அவதாரத்தை** ஒத்தவன் என்றும் கூறுகிறது (தெ.இ.க. முதல்பகுதி, பக் 15-16)''[1] என்று **டாக்டர் ஏ. ஏகாம்பர நாதன்** எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்கதாகும்

கடவுளது கீர்த்தியுடன் இணைத்து மன்னரையும் போற்ற நினைத்த அக்காலச் சமுதாயத்தினர், மன்னரை வாழ்த்துகை யில் சிறப்பு மிகு பெருந் தெய்வம் போலவே வாழுமாறு வாழ்த் தியுள்ளனர்.

அதியமான் நெடுமான் அஞ்சியிடம் பெருநட்புக் கொண்ட வர் **ஔவைப் பிராட்டியார்**. தமக்குக் கிடைத்தற்கரிய நெல்லிக் கனியை வழங்கிய **நெடுமான் அஞ்சியை** நஞ்சமுண்டு கறுத்த கழுத்துடைய **சிவபிரானைப்** போல நிலைபெற்று வாழுமாறு வாழ்த்துவதை,

''ஆர்கலி நறவின் அதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா (து)
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே''[2]

என வருஞ் செய்யுட் பகுதியால் உணரலாம். இவ்வாறு மன்னர்களை வாழ்த்தியதன் தாக்கம், பிற்காலத்தில் மக்களுள் போற்றத்தக்க சிறப்புடையோரைத் தெய்வ நலச் சிறப்புடன் வாழுமாறு வாழ்த்தச் செய்தது எனலாம்.

மக்கட் சமுதாயம் மன்னர்களைத் தெய்வங்களாகப் போற் றியது ஒருபுறமிருக்க, மன்னர்களே தம்மையும், தம் முன்னோ ரையும் தெய்வ நலச் சார்புடன் வழிவழியே நினைந்து போற்று மாறு உத்திகள் செய்துள்ளனர். இந்த நோக்கில், இராசராசன்

1. கோயிலும் இறைவழிபாடும், பக். 25
2. புறநானூறு, 91, 311

பெயராலமைந்த தஞ்சை **இராசராசேச்சுரம்**, கங்கை கொண்ட சோழன் பெயராலமைந்த **கங்கை கொண்ட சோழேச்சுரம்**, இரண்டாம் ராசராசசோழன் பெயராலெழுந்த **இராசராசேச்சுரம்** (தாராசுரம்), திரிபுவன சக்கரவர்த்தி (மூன்றாம் குலோத்துங்கன்) பெயரால்லெழுந்த **திரிபுவனம்** போன்ற கோயில்களும், **பள்ளிப் படைக்கோயில்களாக** அமைந்துள்ள ஆற்றூர் **ஆதித்தேசுவரம்** (பராந்தகன் தன் தந்தை **ஆதித்தன்** நினைவிலெழுப்பியது), மேற்பாடி **அரிஞ்சிகையீசுவரம்** (இராசராசன் தன் தந்தை **அரிஞ்சயன்** நினைவில் எழுப்பியது) போன்ற கோயில்களும் இறைநலச் சார்பில் சிந்திக்கத்தக்கவையாகும்.

கோயில் வளாகங்களில் ஓவியம் சிற்பம் செப்புப்படிவம் முதலிய பல கலைப்படைப்புக்களில் மன்னர்களின் திருவுருவங்கள் இடம் பெறலாயின. எடுத்துக்காட்டாகத் **திருவிடை மருதூர்க் கோயிலில் குலோத்துங்க மன்னன்** படிமமும், **மல்லப்ப நாயக்கர்** அவர் தம் **தேவி** ஆகியோரின் படிமங்களும் **இருத்தலை** நினைவிற் கொள்ளலாம்.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"[1] **என்பது தமிழ்ப் பண்பாட்டு** மரபு மொழியாதலின் மன்னனையும் கடவுளையும் ஒரு படித்தரத்தில் மக்கள் **கண்டு** போற்றியமை பொருத்த முடையதேயாகும்.

4. சமய நூல்கள்:

சமயத்தலைவர்களும், ஞானியர்களும், முனிவர்களும், யோகியர்களும், சித்தர்களும் வாழையடிவாழையாகத் தோன்றித் தாம் கண்ட சமய அருளனுபவங்களை மக்களுக்காகக் கூறியும் எழுதியும் வந்துள்ளனர். தாம் கண்ட நலமும், இன்பமும், பிறரும் துய்க்க வேண்டுமென்ற உயர்ந்த பொது நோக்கத்தில் இவ்வாறு செய்துள்ளனர். அவர்கள் எழுதிய நூல்களைச் **சாத்திர** (தத்துவ) அடிப்படையிலும், **தோத்திர** அடிப்படையிலும் **சரித்திர** (புராண) அடிப்படையிலும் பாகுபடுத்திக் கொள்ள

2. புறநானூறு, 186, 2

லாம். இவ்வாறான சமய நூல்கள் நாட்டுக்குப் புரிந்துள்ள நன்மைகளையும், பிற விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு முன், பொதுவாகச் சமயநூல்கள் வலியுறுத்திப் பேசுஞ் சில அடிப்படைச் செய்திகளைக் காண்போம்.

'சாத்திரம்' என்றதும். சமயநெறியினைப் போற்றுஞ் சமயத்தினர்க்குத் தம் சமயத்தில் மட்டுமே தனித்த ஈடுபாடு கொள்ளச் செய்யும் ஒருவகைத் தூண்டுதல் - முரட்டுப்பிடிப்பு - அதனில் அமைந்திருக்கும் எனச் சிலர் கருதுவர். சில சாத்திரங்களில் அத்தகைய கூறுகள் ஓரளவு இல்லாமலுமில்லை. எனினும், பல சாத்திரங்களில் சமயநெறிக்குரிய நல்ல கருத்துக்களே விஞ்ஞான அணுகு முறையில் வலியுறுத்தப் பெறுகின்றன என்பதையும் மறந்துவிடுதல் கூடாது. எடுத்துக்காட்டாகச் சைவசித்தாந்தச் சாத்திரங்களுள் ஒன்றாகிய **சிவஞானசித்தியாரில்** வந்துள்ள ஒரு செய்யுளைக் காண்போம்.

நாடு மொழி இனம் முதலிய வேற்றுமையுணர்வுகளால் விளைந்திடும் பூசல்களுக்குச் சிறிதும் இடந்தாராமல், எந்நாட்டவர்க்கும் எத்திறத்தவர்க்கும் எக்காலத்திலும் பயன்தரத்தக்க நிலைத்த பேருண்மைகளை யுணர்த்தும் மேலான நூல்களே சமயநூல்களாகும். உண்மைச் சமயமும் மெய்ச் சமயநூல்களும் பற்றி **அருணந்தி சிவாசாரியார்,**

''ஓது சமயங்கள் பொருளுணரும் நூல்கள்
ஒன்றோடொன் றொவ்வாமல் உளபலவும் இவற்றுள்
யாது சமயம் பொருள்நூல் யாதுஇங்கு என்னில்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தன்றி
நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண
நின்றதுயா தொருசமயம் அதுசமயம் பொருள்நூல்
ஆதலினால் இவையெல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கிவிடும் அவையிரண்டும் அதனடிக்கீழ்''[1]

எனும் செய்யுளில் காண்க.

1 சிவஞான சித்தியார், சுபக்கம், 8 சூ 13

5. அகச் சமயங்களும் புறச் சமயங்களும்:

மக்களின் நலத்துக்காகவும் உய்திக்காகவும் தோன்றிய சமயங்கள் உலகளாவிய நோக்கில் பலப்பலவாகவுள்ளன. தமிழ் நாட்டில் வேரூன்றிக் கிளைத்த சைவசமய அடிப்படையில் சித்தாந்திகள் எண்ணுகின்ற அகச்சமயங்களையும் புறச்சமயங்களையும் பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ளாவிடினும், இன்னின்ன சமயங்கள் உள்ளன என்ற விவரத்தையாவது தெரிந்து கொள்ளுதல் நல்லது.

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் எழுதியுள்ள **'சிவப் பிரகாசம்'** எனும் நூலில் வைணவ சித்தாந்த உண்மைகளை விளக்கிக்காட்ட முனைந்துள்ளார். அந்நூலின் தொடக்கத்தில், அவ்வுண்மைகள் புறச் சமயத்தவர்களால் உணரப்படாதன என்றும், அகச்சமயத்தாரால் உணரப்படுவன என்றும் குறிப்பிடுகிறார். புறச்சமயத் தோரையும் அகச்சமயத்தோரையும் யார் யாரெனப் புரிந்துகொண்டால் சைவ சமயத்துக்கும் ஏனைய சமயங்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் தெளிவாகத் தெரியும்.

சைவ சித்தாந்திகள் வேதங்களிலும் சிவாகமங்களிலும் நம்பிக்கையுடையவர்கள். தம் அடிப்படைக் கொள்கைகளிலே தம்முடன் மிகுதியாக ஒற்றுமையுடையவர்கள் அகச்சமயத்தவர் என்று கருதப்படுகின்றனர். மிகுதியான வேற்றுமையுடையவர்கள் புறச்சமயத்தவர் என்று கருதப்படுகின்றனர், மேலும், புறச் சமயத்தை மூவகையாகப் பகுத்து, **அகப்புறச்சமயம், புறச்சமயம், புறப்புறச்சமயம்,** என்று சைவ சித்தாந்திகள் கூறுகின்றனர்.

5.1 புறப்புறச்சமயம்:

சைவ சித்தாந்தத்துக்கு மிகமிக வேறுபாடுள்ள சமயங்களைப் புறப்புறச் சமயங்கள் என்றும், அப்பிரிவில் **உலகாயதம்,** நால் வகைப் **பௌத்தம், சமணம்** ஆகிய ஆறும் அடங்கும் என்றும் கூறுவர். இந்த ஆறு புறப்புறச் சமயங்களும் வேதங்களையும் ஆகமங்களையும் புறக்கணிப்பவை. ''எந்த வேதாகமங்களைப் **பிரத்தியட்சம்** (காட்சி), **அநுமானம்** (கருதல்), ஆகிய இரண்டு பிரமாணங்களையும் விட அதிக வலியுடையவை எனச் சைவ

சித்தாந்திகள் கருதுகின்றனரோ, அந்த வேதாகமங்களைச் சிறிதும் ஏற்றுக் கொள்ளத்தக்கவை அல்ல என மேலே குறிப் பிட்ட அறுவரும் ஒதுக்கித் தள்ளி விட்டனர். இதனாலே தான் அந்த அறுவரும் சைவசித்தாந்தத்துக்கு வெகு தூரத்தவர்கள் ஆகிவிட்டனர்''[1] என **அறிஞர் கி. லட்சுமணன்** குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

புறப்புறச் சமயத்தவர்கள் வேதாகமங்களை மறுப்பதால், காட்சிக்கும் அனுமானத்துக்கும் எளிதில் நிரூபணமாகாத கடவுளுண்மையையும் ஏற்றுக்கொள்ள ஒருப்படுவதில்லை.

5.2 புறச்சமயம்:

புறச்சமயிகளைக் குறிப்பிடுகையில் இவர்களைப் புறச் சமயிகளா என்று பலருக்கும் வியப்பேற்படலாம். சைவசித்தாந் தத்துக்குப் புறச் சமயங்களாக **நியாயம், சாங்கியம், யோகம், மீமாம்சை, வேதாந்தம், பாஞ்சராத்திரம் எனப்படும் வைணவம்** ஆகிய ஆறும் கருதப்படுகின்றன. ''இந்த ஆறு சமயங்களும் வேதங்களை ஒப்புக் கொள்வன, வேதத்தை ஒப்புக்கொண்டு கூடப் புறச் சமயங்கள் எனக் கருதப்படுவது எங்ஙனமெனில், இவைகள் வேதங்களை ஒப்புக் கொள்வன; எனினும், சிவாகமங் களை ஒப்புக்கொள்வதில்லை. அதனாலேதான் இவைகள் சைவ சித்தாந்தத்துக்குப் புறத்தன ஆயின''[2] என வருங்குறிப்பு மிகவும் ஆய்ந்து சிந்திக்கத்தக்கது.

5.3. அகப்புறச் சமயம்:

தமிழ்நாட்டில் ஒரு காலத்தில் செல்வாக்குடன் விளங்கிய **பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம்,** ஆகிய ஆறும் அகப்புறச் சமயங்களாகக் கொள்ளப் படுவன. இவற்றுள் முதல் ஐந்தும் வேதங்களையும் ஆகமங் களையும் பிரமாணங்களாகக் கொண்டுள்ளன. எனினும், அவற்றுக்குப் பெரிதும் ஏற்றந்தாராமல் பொதுவாகவே கொள் கின்றன. அவற்றுக்கு வேறாகிய **பாசுபதம்** போன்ற நூல்களையே சிறப்புமிகு பிரமாணங்களாக ஏற்றுக் கொள்கின்றன. ஆதலின்

1. இந்திய தத்துவஞானம். பக். 412.
2. இந்திய தத்துவஞானம். பக். 414

இவை அகப்புறச் சமயங்களாயின. ஆறாவதாகிய ஐக்கியவாதச் சைவம், சைவசித்தாந்தத்தைப் போலவே வேதங்களையும் சிவாகமங்களையும் சிறப்புப் பிரமாணங்களாக ஏற்றுக்கொள்கின்றது. ஆயினும், சைவசித்தாந்த சாத்திரத்தில் மிகச் சிறப்பினதாகக் கூறப்படும் தத்துவங்களுள் ஒன்றாகிய ஆணவமலம் உண்டென்பதை ஐக்கியவாத சைவர் ஒப்புக்கொள்வதில்லை. இந்தக் காரணத்தால் இவர்களும் புறச்சமயத்தார் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்[1].

6. சைவ சமய உட்பிரிவுகளில் காணலாகும் சில கருங்கோட்பாடுகள்:

அன்பே சிவம், சிவமே அன்பு என்ற சைவசித்தாந்த நன்னெறிக் கோட்பாட்டுக்கு அறைகூவலாகச் சில உட்சமயங்கள் தோன்றிச் சமய மேம்பாட்டுக்கும், இந்துமதப் பெருமைக்கும் கேள்விக் குறிகளாயின.

மதவழிபாட்டு முறைகள் காலந்தோறும் பலவாகக் கிளைத்து வந்தன; அந்தக் கால கட்டத்தில் ஓரளவு பௌத்தமும், வச்சிரயானம் மற்றும் சகசயானக் கொள்கைகளும் பிரிவுகளும், சமணமும் அவற்றின் வாழ்வியல் பழக்கவழக்கங்களும் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவின. இந்நிலையில், தமிழ்நாட்டுக்கு வடக்கே நிலவிய தாந்திரிகச் சமயமும் தமிழ்நாட்டில் படிப்படியே செல்வாக்கினைப் பெறலாயிற்று. சுவையற்ற, வக்கிரமான, கடின நடைமுறைகளுடன் கூடிய தாந்திரிகக் கொள்கையினைப் பின்பற்றினால் மனித சக்திக்கு மேற்பட்ட அளவற்ற ஆற்றல் சாதகனுக்குக் கிடைக்கும் என்ற ஆவலாலும் நம்பிக்கையாலும் மக்களிடையே இதற்கு ஆதரவு இருந்தது. மனிதாபிமானத்தையும், கருணையையும் மையமிட்டுச் செல்லும் இந்துமதம், இத்தகைய காலத்தின் தேவைக்கு ஈடுகொடுக்கவியலாமல் ஒரு சோதனைக்கு உட்பட்டது என்றே கூறவேண்டும்.

சைவசமயத்தைச் சார்ந்தவையெனக் கருதப்படும் சில உட்பிரிவுச் சமயங்களில் காணப்பட்ட முரண்பாட்டுப் பழக்கவழக்கங்களெல்லாம் 'இறைவனுடைய சோதனை' என்னும் பெயரில்

1 இந்திய தத்துவஞானம், பக். 414

(தலைப்பில்) **அடக்கி** அமைதி காண வேண்டிய சூழல் தவிர்க்க வியலாததாயிற்று. இந்தத் தலைப்பில் பல செய்திகள் இருப்பினும் சிலவற்றைப் பற்றிக் குறிப்பாகக் காண்போம்.

அகச்சமயத்துச் **சங்கமராக** (அடியவராக)க் கருதப்படும் **பைரவர்** மேற்கொண்ட **பைரவவிரதம்** மிகக்கடுமையானது. இது பற்றிச் **சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார்,** "சிவாகமங்களில் (பைரவர்) விரதநாட்கள் **சித்திரைப்பரணி, ஐப்பசிப்பரணி** என இரண்டும் குறிக்கப்பெற்றுள்ளன. இவை ஆறுமாதத்துக் கொன்றாக அமைந்துள்ளதும், இப்புராணத்துள் (சிறுத்தொண்ட நாயனார் புராணத்துள்) வந்த **பயிரவர்** ஆறு திங்கட்கொரு முறை நாம் உண்போம் என்றதும்..."[1] என எழுதிச் செல்லுதல் காண்க. சிறுத்தொண்டரிடம் வந்த **பைரவர்,** தாம் **பிள்ளைக் கறி** சமைக்கச் சொன்னது, இறைவனது சோதனையில் அடக்கிக் காண்பர். இத்தகைய **பைரவவிரதம்** நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதா எனச் சிந்தித்துப் பார்க்க.

சைவ சமயம் பரவும் **பரம்பொருளாகிய சிவன்,** சுடுகாட்டில் மயானச் சாம்பலைப் பூசிக்கொண்டும், **கபாலமாலை** தரித்துக் கொண்டும் இருப்பவன்; அவ்வாறே தாமும் இருப்பதால் சிவன் வழியில் இயங்கிய பெருஞ்சிறப்புக்கு உரியவராவோம் என்று **காபாலிக மதத்தினர்** நம்பினர்; கபாலமாகிய மனித மண்டை யோட்டில் உண்பது, மது அருந்துவது, கபாலமாலை அணிவது, உடம்பை மயானச் சாம்பலினால் பூசிக்கொள்வது போன்ற வெறுக்கத்தக்க பழக்கங்களை மேற்கொண்டிருந்தனர். எப்பொழுதும் கதாயுதத்தினை அல்லது மாட்டுக்கொம்பைத் தாங்கிக் கொண்டு, திரியும் அவர்கள் **காளியையும்** இஷ்டதெய்வமாகப் பூசித்து வந்தனர். இவர்களைப் பற்றிச் சித்திரிக்கையில், "சில சமயங்களில் தம் இஷ்டதேவதைக்கு **நரபலி** கொடுத்தனர். இச் சமயத்தினர் பெண்களையும் தங்கள் சங்கத்தில் சேர்த்துக் கொண்டனர். **ஒய்சாளர்களின்** (Hoysalas) கீழ் (பிற்காலத்தே) இச்சமயக்காவலர்கள் **ராஜகுருக்களாகப்** பணியாற்றினர். இச்

1 திருத்தொண்டர்புராணம், சிறுத்தொண்டநாயனார் புராணம் இறுதி அடிக்குறிப்பு, பக்.666

சமயத்தவரின் பயங்கரப் பழக்கவழக்கங்களில் சில, பிற்காலத்தே தோன்றிய **தாந்திரிகச் சமயங்களின்** காட்டுமிராண்டித்தனத்தால் **பாலுணர்வை** அடிப்படையாகக் கொண்ட சடங்குகளுக்கு வழி வகுத்தன. அத்தகைய தாந்திரிகச் சமயத்தார் **மது, மாமிசம், மச்சம்** (மீன்), **முத்திரை** (நடனங்கள்), **மிதுனம்** (ஆண் பெண் கலவி) போன்றவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். இவர்கள் நடத்திய நடுஇரவில், சமயச்சடங்குகளின் உச்சகட்டமாக இருந்தது, எவ்வித வேறுபாடும் கருதாத இனச் சேர்க்கையாகும். இக்கலவியும் மதுவும் தங்களுக்கு அரிய சக்திகளை அளிப்பதாக அவர்கள் நம்பினர். **அகோரிகள்** எனப்பட்ட ஒருவகைத் தாந்திரிக வழிபாட்டினர் கல்லறையிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட சவத்தினை உண்டதாகக் கூறப்படுகிறது"[1] என வருங்குறிப்பினைக் காண்க.

மாவிரதம் என்பதும் சைவசமயத்தின் உட்பிரிவாகும் கடிய நோன்புடைய மாவிரதியர், மகளிர் கூந்தலைக் கொண்டு **பஞ்சவடி** திரித்து அதனைத் தரித்துக் கொள்ளும் இயல்பினர். இறைவனே மாவிரதியராகத் தோன்றி, **மானக கஞ்சாறரைச்** சோதித்த வரலாறு பெரிய புராணத்தால் அறியலாம். **மானக் கஞ்சாறரின் அழகுமகள், ஏயர் "கோன் கலிக் காமரைத் திருமணஞ் செய்துகொள்ளக் கூடிய நாளில், மாவிரதி யாக** வந்த இறைவன், "இவள்தன் கூந்தல் நமக்குப் பஞ்சவடிக்கு ஆகும்" என்று சொன்னார்; அது கேட்ட கஞ்சாறர் தம் மகளின் அழகுக் கூந்தலை உடைவாளால் அடியோடு அரிந்து அடியவர் கோலத்தில் வந்தவரிடம் கொடுத்துவிட்டார் என்பது புராணத்தின் போக்காகும். கன்னி மகளிருக்குச் சிறப்பான **அழகுக் கூந்தலே மங்கலவுறுப்பு** எனத் தெரிந்தும், அதனைக் கொய்விக்க வேண்டுமெனின் **மாவிரதமுனிவர் வடிவிலே** தோன்றினால்தான் சித்திக்கும் எனத் தேர்ந்த இறைவனது திருவிளையாடலின் உட்கிடை ஓர்க.

இயற்பகை நாயனாரிடம், திருவினும் பெரியாளாகிய அவருடைய மனைவியைத் தனக்குக் கொடையாக அளிக்குமாறு

1. தமிழர் வரலாறும் பண்பாடும் (இராஜா காளிதாஸ், இரா. இராசகோபாலன்), பக். 144

இறைவன் தோன்றுகையிலே, **வேதியர் கோலங்** கொண்டான் என்பது வரலாறு; அந்த வேதியருருவம் எளிய நிலையிலே அமைந்ததன்று. **தூயவெண்ணீறு பூசிய பொன்மேனியில் அணிந்த தூர்த்த வேடமே** அதுவாகும் என்பது சிந்திக்கத்தக்கது.

பிறர்பழிக்கும் நிலையில் **காபாலிகம், மாவிரதம் பாசுபதம்** முதலியவை இருந்தமை பற்றி மகேந்திரவர்ம பல்லவன் எழுதிய **மத்தவிலாசப் பிரகசனம்**[1] எனும் நூலில் கண்டு கொள்ளலாம்.

வரலாற்று நோக்கில், **பள்ளிப்படைக்கோயில்களில் மாவிரதிகளும் இலகுளீச பண்டிதர்களும்** மடங்கள் அமைத்துக்கொண்டு கோயிற் காரியங்களைக் கவனித்து வந்தனர் என்பர். "வாரணாசி (காசி), ராடதேசம் (ஒரிஸ்ஸா) ஆகிய இடங்களில் மடங்களை அமைத்துக் கொண்டு சைவ மதத்தைப் பரப்பி வந்தவர்கள் **பாசுபத, காளாமுக, காபாலிகப் பிரிவினர்.** பாசுபதர், காளாமுகர் ஆகியோருக்குக் **குரு லகுளீசர்.** இவர்கள் இரு பிரிவினரின் சித்தாந்தமும் லகுளீசர் வகுத்த சித்தாந்தமே"[2] என வருங்குறிப்பினைக் காண்க.

வடநாட்டிலிருந்து **மகாவிரதிகள்** தமிழ்நாட்டுக்கு வந்த பிறகே தமிழ்நாட்டில் '**திருமடங்கள்**' எனும் நிருவாக அமைப்பு உண்டாயிற்று என்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு. இந்த நோக்கில் இவர்களைப் போற்றி நிற்பது தகும்.

7. சமய நம்பிக்கைகள்:

மக்களின் நம்பிக்கை என்பதை அடிப்படையாகக் கொண்டு அதனையே மையமிட்டுக் கட்டப்படும் ஒருவகைத் தெய்வநல மாளிகையே சமயமாகும். சமயத்தினின்றும் நம்பிக்கையை நீக்கிவிட்டால் வெறும்பாழே (Zero) எனலாம்.

1. தெய்வநலத் தொடர்புடன் சமயம் உருவாகி, அது காலந்தோறும் வளர்ந்து வருகையில், மக்களின் பக்தியில்

1. இந்நூலின் தமிழ்மொழி பெயர்ப்பைச் 'செந்தமிழ்ச் செல்வி' வாயிலாகச் சை. சி. நூ. கழகம் வெளியிட் டுள்ளது.

2 Heritase of the Tamils-Tample arts, பக். 370

நம்பிக்கை வேரூன்றிக் காணப்படும். அதனை ஓர் எல்லைக்குட் படுத்தி வளர்த்து வந்தால் உலகத்திற்கே நல்லதுதான். ஆனால், சமயத்தைக் காக்க வந்ததாகக் கூறிக்கொண்ட சில தலைவர்கள் **தத்தம் சமயமே உண்மையான சமயம்** என்றும் **பிறவெல்லாம் போலிகள்** என்றும் துணிச்சலாகக்கூறி, மக்கள் மனத்திலே நச்சு விதைகளை ஊன்றலாயினர். யாருக்கும் நம் சமயத்தைப் போற்றிப் பாதுகாத்துக் கொள்ள உரிமையுண்டு. அதே வேளையில் பிற சமயங்களை இகழ்ந்து நகையாடியும் கண்டித்தும் நிற்றல் பெருந்தவறாகும். இத்தகைய செயலில் ஈடுபட்டவர்கள் தம் சமய மேன்மைக்கும், வளர்ச்சிக்கும், உலக நன்மைக்கும் தடைக்கற்களாயினர். அவர்களை நம்பிய மக்கள், சமய நோக்கத்தின் சீர்மையை அறியாமல் வறிதே கெட்டனர், பலியாயினர். எனவே, மக்களின் நம்பிக்கையை மூலதனமாகக் கொண்டு, சமயநெறியைத் தக்கமுறையில் வளர்க்க வேண்டுமேயன்றிச் சமயவெறியை வளர்க்கக்கூடாது.

2. சமயவுலகில் எதைச் சொன்னாலும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஒருவகை நம்பிக்கை மக்களிடையே பரப்பப் பட்டது. அந்நிலையில் நல்ல நோக்கத்துடன் ஞானியரும் சித்தர்களும் அருளாளர்களும் மக்களின் உய்திக்கெனவே சில ஆன்ம நலச் செய்திகளையும் தூய வாழ்வியல் முறைகளையும் இயம்பலாயினர். பொதுநல அடிப்படையில்,

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"[1]

என்று **திருமூலரும்**, சமயக்கிரியைகள் மனம் மொழி மெய்த் தூய்மையுடன் நிகழ்தல் வேண்டுமென்பதைத்,

"தூயோமாய் வந்து தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்"[2]

என **ஆண்டாளும்** திருவாய் மலர்ந்தருளியது போன்று அருளாளர் பலரும் மொழிந்த கருத்துக்களெல்லாம் போற்றற்குரியனவே

1 திருமந்திரம், 147

2 திருப்பாவை, 5(4-8)

யாகும். ஆனால், சமய தத்துவங்களை எடுத்து மொழிந்த தத்துவ வித்தகர்கள் -சமய தத்துவ வாதிகள் -தத்தம் சமயமே உயர்ந்ததெனக் கூறி, மக்களை நம்ப வைத்ததன் காரணமாக உலக நோக்கிலே சமயங்கள் தடம் புரண்ட நிகழ்ச்சிகளை வரலாறு காணலாயிற்று.

3. சமயம் என்பது வெறும் கொள்கையோ கோட்பாடோ அன்று. அஃது ஒரு வாழ்வியல் நெறி முறையாகும் என்பதனை முன்னரே கண்டோம். ஒரு காலத்தில், காலத்திற்கும் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் **ஒவ்வாத கோட்பாடுகளையும்**, ஐயப்பாட்டிற்குரிய **இயற்கையிறந்த (Supernatural) நிகழ்ச்சிகளையும் மூட நம்பிக்கைகளையும்** கண்மூடிக்கொண்டு நம்பினர். ஆனால், அறிவியல் அணுகு முறையுடன் கூடிய இக்காலத்தில் **சமய நம்பிக்கைகள் காரணகாரிய இயைபுடன் புலப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளன**. எனவே, மதிநுட்பத்துடன் அருளாளர்களின் திருவாக்குகளை மக்கள் மனங்கொள்ளுமாறு செய்யவேண்டிய கடமை சமய அறிஞர்களிடம் உள்ளது.

4 பேரூர்களை விடச் சிற்றூர்களே சமய நம்பிக்கைகள் தழைத்தோங்கும் இடங்களாக விளங்குகின்றன. தமிழ்நாட்டில் கிராம தேவதைகள் -சிற்றூர்ப் -புறத்தெய்வங்கள் -பலவாகக் காணப்படுகின்றன. அந்தத் தெய்வங்கள் குறித்து நடைபெறும் பூசைகளும் விழாக்களும் மிக அழுத்தமான சமய நம்பிக்கையுடையவை என்பது கண்கூடு.

சிற்றூர்ப்புறங்களில் **நோய், பஞ்சம், வெள்ளம்**. போன்ற துன்பச் சோதனைகள் தம்மை நலிவுறுத்தாமலிருக்கச் சிறு தெய்வங்களிடம் பய பக்தி கொண்டு படையலிடுவதை இன்னும் காணலாம். இந்த நம்பிக்கை வழிபாடு தமிழ்நாட்டில் பண்டு தொட்டே நடைபெற்றுவருகிறது என்பதை உணர்தல் வேண்டும்.

சமயச் சார்புடன் அமைந்த நம்பிக்கையின் சிறப்பினைக் **கீதாசாரியன் கண்ணன்**, "தெய்வத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர்களை எத்தகைய இன்னல்களும் அணுகமாட்டா" என்று மொழிந்து உணர்த்தியுள்ளான்.

இதனை முழுமையாக நம்பிப் பின்பற்றுகிறவர்கள் நகரமக்களை விடக் கிராம மக்களே எனலாம்.

5. மேல்நாட்டினர் மதநம்பிக்கையை இக்கால அறிவியலடிப் படையில் விளக்க முற்படுகின்றனர். இத்தகைய முயற்சிகொண்ட துறையைத் **தெய்வீக இயல்** (Theology) என்கின்றனர். அறிவியலணுகுமுறையால் ஒரு பொருளை ஒருவர் தொட்டோ, நுகர்ந்ததோ, கண்டோ, கேட்டோ, சுவைத்தோ தான் அறிந்து கொள்ள இயலும். ஆனால், தெய்விகவியலில் ஒருவர், தெய்வத்தை ஐம்புலன்களால் இனைத்தென வரையறுத்து அறிந்து கொள்ளவியலாது. இந்நிலையில் மதத்துடன் தொடர்பு கொண்ட தெய்விக இயலுக்கு மிக அடிப்படையாக உதவுவது நம்பிக்கையேயாகும். தெய்வ நலக்கற்பனைகள் பலவற்றை ஆன்மநல உறவு காரணமாக நம்பிக்கையுடன் அணுகும்முறையில் உண்மையான அனுபவ இன்பங் கிட்டுகிறது என இந்துமதத் தினர் எழுத்திலும், பேச்சிலும் உணர்த்தி வருகின்றனர். எடுத்துக் காட்டாக முதற்கண் **சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாளின்** கடவுட் காதலனுபவத்தைக் காண்போம்.

பெரியாழ்வாரால் வளர்க்கப்படும் கோதை பருவமுற்ற நிலையில் தான் அரங்கநாதனாகிய **அழகிய மணவாளனுக்கே** விருப்பமான நாயகியாகக்கலந்து உறவாட விரும்புகிறாள். அவளுடைய செயல்களெல்லாம் இறைவனைப் பொறுத்தவரையில் **நாயக நாயகி பாவத்துடனேயே** (Bridal mysticism) அமைகின்றன. இத்தகைய நம்பிக்கையினால் அவள் காணும் கனவிலும் இறைவனே கைத்தலம் பற்றுகிறான்; இதனை **நாச்சியார்திருமொழியில்,**

"மத்தலம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்"[1]

என வரும் திருப்பாசுரத்தில் காண்க.

அடுத்ததாக அருச்சுனனுக்குப் போர்க்களத்தில் நிகழ்த்திய **கண்ணனின் கீதாபதேசத்தைக்** காணலாம்.

1. நாச்சியார் திருமொழி, வாரணமாயிரம், 6

பாரதப் போரில் தான் எதிர்க்கவிருக்கும் போர்க்களப் பகைவர்களை நோக்குகையில், பலரும் உறவினர்களாகவும் ஆசாரியர்களாகவும் இருத்தலை அருச்சுனன் நினைத்துப் பார்க்கிறான்; மனம் சோர்கிறான்; தன் வில்லைக் கீழே போடத் துணிகிறான். இந்த இக்கட்டான நிலையில் **'போரறம்'** நம்பிக்கையூட்டும் வகையில் உணர்த்தப்பட வேண்டிய சூழல் உருவாகிறது. கண்ணனும் அதனைத் தேர்த்தட்டிலிருந்து உபதேசிக்கிறான். கீதையைக் கேட்டதும் அருச்சுனனுக்கு நம்பிக்கையேற்பட்டுச் செயற்பட முனைகிறான். இந்து மதத்தில் மத நம்பிக்கையானது இதிகாசம் வாயிலாக இவ்வாறு உணர்த்தப்படுகிறது என்பது சமய வரலாறு.

ஆன்மா பரம்பொருளுடன் இணைய விரும்பும் முயற்சியை உலகில் பல மதங்களும் நம்பிக்கையுடன் ஒப்புக்கொள்கின்றன. எனினும், இத்தகைய அனுபவத்தை **இந்துமதம், கிறித்துவமதம், இசுலாம் மதம்**, புத்த **மதம், பார்சி மதம்** முதலியவை வெவ்வேறு முறைகளில் விளக்குகின்றன. பல்வேறு மதங்களும் முனைப்பினால், தாம் புலப்படுத்தும் விளக்கங்களே ஏற்றுக்கொள்ளத் தக்கவை எனக் கூறமுற்படுகையிலே தருக்கங்களும் சச்சரவுகளும் தவிர்க்கவியலாதவை யாகின்றன.

7.1 சமய நம்பிக்கைகள்- சிறப்பு நோக்கு:

எல்லாம் இறைவனருளாலேயே நடைபெறுகின்றன என்ற சமய நம்பிக்கையால் இறைவனிடமே அனைத்துச் சுமையையும் ஏற்றிய நிலையில் வழிபாடு புரிவது இந்து மதத்தில் நிரம்பவுள்ளது. எடுத்துக்காட்டாகச் சில செய்திகளை முதற்கண் பார்ப்போம். பிறகு விரிவாக இயைபுடன் பல செய்திகளைக் காண்போம்.

சமய நிறுவனங்களாகிய கோயில்களில் மக்களின் நம்பிக்கைகள் பல பயன்களை விளைவித்து வருகின்றன.

திருமணஞ்சேரிக்குச் சென்று வழிபடுவதால் கைகூடிவராத திருமணங்கள் பல, விரைவில் கைகூடி வருவதை மக்கள் சமய நம்பிக்கையாகக் கொண்டுள்ளனர். **ஸ்ரீமுஷ்ணம்** சென்று

ஆல் அரசு சுற்றுவதால் மகப்பேறு வாய்க்கும் என்ற நம்பிக்கையில் இக்காலத்தும் மக்கள் சென்று வருகின்றனர்.

திருக்கருகாவூருக்குச் சென்று வழிபடுவதால் மகளிர் தம் மகப்பேற்றுக் காலத்தில் மிகத் துன்பமின்றி, எளிய இன்ப மகப்பேறு பெற்று வருகின்றனர். இதுவும் சமய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது.

வைத்தீசுவரன் கோயிலுக்குச் சென்று சித்தாமிர்தக்குளத்தில் நீராடி, இறைவழிபாடு புரிந்து மருந்துடன் கூடிய திருநீற்றை உட்கொண்டால் பிணிகள் பல தீரும் என்பது நம்பிக்கை.

திருக்கடவூருக்குச் சென்று **அறுபதாம் ஆண்டு நிறைவு விழா** முதலிய சாந்திகள் புரிவதால் மரணபயத்திலிருந்து மீண்டு, நெடிது நாள் வாழ இயலும் என்று மக்கள் நம்பிச் செயற்படுகின்றனர்.

திருச்செந்தூருக்குச் சென்று வழிபடுவதால், பகையையும் நோயும் தீரும் என்பது பலரின் நம்பிக்கை.

இதுபோலவே **பழநி** முதலிய பிற படைவீடுகளிலும் சமய நம்பிக்கைகள் மக்கள் பலரை இனிது இயக்கி வருகின்றன.

விருத்தாசலத்திற்கு அருகிலுள்ள அருள்மிகு **கொளஞ்சியப்பர் கோயிலுக்குச் சென்று** பிராது நோக்கில் **சீட்டு** எழுதிக் கட்டுவதால் பொய் வழக்குத் தொடுப்பவர்கள் தண்டிக்கப்படுவர் என்பது கண்கூடாகக் காணப்படும் சமய நம்பிக்கையாகும்.

இவ்வாறு மக்களின் சமய நம்பிக்கையைப் பெற்ற திருத்தலங்கள் பல உள்ளன.

7.2. சூரிய, சந்திர கிரகணங்கள்:

வானிலுள்ள சூரியனும் சந்திரனும் உலகத்திற்கு ஒளி தரும் கிரகங்களாக விளங்கும் அதே காலத்தில், உயிரினங்களும் தாவர இனங்களும் சில வளர்ச்சி மாறுதல்களுக்கும் எதிர் விளைவு

களுக்கும் உள்ளாகின்றன என்பது அறிவியலார் கண்ட உண்மையாகும்.

சூரிய கிரகணம் சந்திரகிரகணம் நடைபெறுங் காலங்களில் கடலிலோ ஆறு குளங்களிலோ நீராடிய நிலையில் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருப்பதால், மந்திரங்களுக்கு ஆற்றல் கூடுவதாக மக்கள் நம்பிச் செயல்படுகின்றனர். கிரகணம் முடிந்ததும் பெரும்பாலும் மக்கள் நீராடிக் கிரகணதோடம் அல்லது பீடையிலிருந்து விடுபடுவதாகக் கூறிக் கொள்ளுதலைக் காணலாம். கிரகண காலத்தில் உண்ணவோ உடுக்கவோ கூடாது என்பதும், கருப்பந்தரித்தவர்கள் எச்செயலிலும் ஈடுபடாமல் தெய்வ நம்பிக்கையுடன் அமைதியாக இருக்க வேண்டும் என்பதும் நடைமுறையில் பலரும் பின்பற்றுகின்ற வழக்கமாகும்.

சூரிய, சந்திர கிரகணங்கள் முறையே அமாவாசையிலும் நிறைநிலவிலும் நடைபெறும். அக்காலங்களில் அவற்றின் ஒளிகள் பூமிக்கு வருவதில் தடையேற்படும். இது பற்றிக் **காஞ்சி முனிவர் ஜெயேந்திரர்,** ''சூரிய-சந்திர தட்பவெப்பங்களை அனுசரித்துத் தான் நாம் உட்கொள்ளும் உணவு உடலில் ஜீரணமாகிறது. அந்தச் சமயத்தில் ஏற்படக் கூடிய கர்ப்பமோ பிரசவமோ கூடச் சூரிய - சந்திரனின் தாக்குதலுக்கு ஆளாகிறது. இது பழங்காலந் தொட்டு வரக்கூடிய தர்ம சாத்திர விஞ்ஞானமாகும்''[1] என்றும், ''எந்த நட்சத்திரத்தின் மேல் கிரகணம் பிடித்தாலும் அதை அனுசரித்து அதற்கு முன் பின் உள்ள நட்சத்திரங்களுக்கும் கிரகணத்தினால் விசேட பாதிப்பு ஏற்படுகிறது. பொதுவாக வெயில் அடிக்கும்போது எல்லோருக்கும் பாதிப்பு இருந்தாலும் பூமத்திய ரேகைக்கும் அதனருகே உள்ள பகுதிகளுக்கும் அதிக பாதிப்பு ஏற்படுவது போல், இந்தப் பாதிப்பைத் தவிர்த்துக் கொள்வதற்குப் பாதிக்கப்பட்ட நட்சத்திரத்தை உடையவர்கள் அதற்குப் பரிகாரமாக உள்ள சுலோகங்களையும், மந்திரங்களையும் பனையோலையில் எழுதி, நம்முடைய தலை எழுத்திற்குக் காரணமாக உள்ள நெற்றியின் மேல் கட்டிக்கொள்வது பழக்கமாக உள்ளது என அறநூல்களும்

1. ஓம்சக்தி (திங்களிதழ்), பிப்ரவரி, 1993.

கூறுகின்றன. மழையிலிருந்து 'மழைக்காப்பான் 'Rain coat', பாதுகாப்பு அளிப்பதுபோல் இது கிரகணப்பாதிப்பிலிருந்து பாதுகாப்பளிக்கிறது''[1] என்றும் எழுதிச் செல்வது மனங் கொள்ளத்தக்கது.

8. சமயவாழ்வில் மனவொருமைப்பாடு:

எப்பொருளை நோக்கினும் அதன் உண்மை நிலையைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். சில வேளைகளில் கலையுலகிலும், சமயவுலகிலும் பொருளை நோக்குங்கால் தேவைக் கேற்பக் கவிவதும் குவிவதுமான மன ஆற்றல் படிப்படியே கைவரப் பெறுதல் நல்லது. அஃதாவது, பெரிய பொருளைச் சிறுவடிவிலும், சிறிய பொருளைப் பெரிய வடிவிலும், தூலமான பொருளை நுண்மை வடிவிலும், நுண்ணிய பொருளைத் தூல வடிவிலும், சடப் பொருளைச் சித்துப் பொருளாகவும், சித்துப் பொருளைச் சடப் பொருளாகவும், கற்பனையொன்றிய உணர்வில் காண்கின்ற **மனப்பக்குவம்** அமைவது நல்லது எனலாம். சமயவுலகில் இத்தகைய மனப் பக்குவம் அமைகின்ற நிலையிலே ஆலயத்தில் இறைத் தன்மையைப் பரம்பொருளியல்பை உணர்ந்து அனுபவிக்க வாய்ப்பாகும்.

''ஆலயந் தொழுவது சாலவும் நன்று'' என்பதன் உண்மையை உள்ளவாறு உணர விரும்புவோர் **அருள்நெறி, அறிநெறி, மனவொருமைப்பாடு, அனுபவப்பயிற்சி** ஆகியவை செம்மையாகப் பெறுதற்கு முயலுதல் வேண்டும். இத்தகைய அருள்திறம் வாய்க்கப் பெற்ற சித்தர் **திருமூலர்** பல நூற்றாண்டு களுக்கு முன்பே,

''மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்''[2]

எனக் கூறியுள்ளமை காண்க. அஃதாவது, மரத்தினாலான யானைப் பொம்மையை யானை எனக் காணும் போது மரம் பற்றிய நினைவு எழுவதில்லை, எழவுங் கூடாது. அதனையே

1 ஓம்சக்தி (திங்களிதழ்) பிப்ரவரி, 1993.
2. திருமந்திரம், 2251

என்ன மரத்தால் இப்பொம்மை அமைக்கப்பட்டுள்ளது எனக் காண்கையில் யானையின் பாவனை மறைந்து போய்விடும்; இதனை அடியொற்றியே தமிழ் நாட்டிலே,

''கல்லைக் கண்டால் நாயைக் காணோம்
நாயைக் கண்டால் கல்லைக் காணோம்'' என்ற நாட்டுப் புறவியல் பழமொழி நம்மிடையே வழங்கி வருகிறது.

ஆலயத்தையோ, மசூதியையோ, மாதா கோயிலையோ சமயவுணர்வுடன் நோக்குகையில் அவையெல்லாம் அருட்சான்றோர்களின் **'எண்ணப் பிழம்பு'** என வுணர்வது நல்லது. அது சமய வளர்ச்சிக்கு உகந்ததாகும். அவ்வாறின்றிக் கல்லென்றும், மரமென்றும், மண்ணென்றும், சுண்ணமென்றும், வண்ணமென்றும், பிரித்துக் காண்கையில் **ஆலயமோ, மசூதியோ, மாதாகோயிலோ** சமயஞான எண்ணப் பிழம்பாகத் தோன்றுவதில்லை. அதே போலத் தெய்வச் சிலையைத் தெய்வத் திருவுருவப் பிழம்பாகக் காணவேண்டுமேயன்றி, அதனைக் கல்லென்றோ செம்பென்றோ கருதிப் பார்த்தால் உண்மையான பயன்பெறுமாறில்லை; அந்தத் தெய்வச்சிலைவடிக்கப் பெற்றதன் நோக்கமும் நிறைவேறுமாறில்லை.

ஒன்றிய – ஒருமுகப்பட்ட – நோக்கினால் கோயில் தோன்றியதன் நோக்கமும், தெய்வப்படிமம் தோன்றியதன் நோக்கமும் நிறைவேறிவிட்ட பேறுகிட்டும் என்பது அருளாளர் பலரின் வாழ்வில் கண்ட அனுபவ உண்மையாகும். அத்தகைய அருளாளர் பலராக வாழ்ந்த நாடே இந்தப் புண்ணிய பூமியாகும்.

உலகத்தில் ஆலயம் தேவையா? ஆலயத்துள் சிலை தேவையா? தெய்வச் சிலைக்கு வழிபாடு தேவையா? என்றெல்லாம் தேவையில்லா வினாக்களை இளைஞர்கள் தொடுக்கக் கூடிய விந்தையான காலம் இது!

தமிழ்நாட்டு அருளியல், அறிவியலனுகுமுறையில் உருவானது என்பதை ஊன்றி ஆராய்ந்து காண்பார்க்குத் தெளிவாகப் புலப்படும். போதிய மனப்பக்குவமும் அருளனுபவ

முதிர்ச்சியும் ஒருவருக்குச் சித்தியான நிலையில் அவருக்கு ஒரு வேளை கோயில் தேவையில்லாமற் போகலாம். தெய்வச்சிலையும் தேவையில்லாமற் போகலாம்! ஆகம அடிப்படையில் புரியும் வழிபாடும் தேவையில்லாமற் போகலாம்! அத்தகைய **சித்தரனுபவம்** எல்லோருக்கும் வாய்த்துவிடும் என எதிர்பார்ப்பது தவறு; எதிர்பார்க்கவும் கூடாது.

அருளனுபவ உச்சியில் நின்றவர்கள் கூடப் பொதுநலங் காரணமாக - உலக மக்களின் உய்திக்காகச் - சமயப் பண்பாட்டிற்கு ஆக்கம் அளித்துள்ளனர்: ஒருமையுணர்வுடன் தெய்வ வழிபாடு புரிதல் வேண்டுமென்று ஊக்கமும் அளித்துள்ளனர். தில்லைப் பொன்னம்பலத்தில் **சுந்தரமூர்த்தி சுவாமிகள்** ஆடல் வல்லானைக் கண்டனுபவித்த ஒருமுக வழிபாட்டினைச் **சேக்கிழார் பெருமான்** சித்திரித்துக் காட்டுகிறார். இதனை,

''ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வாரியில் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்''[1]

என வருஞ் செய்யுளால் உணரலாம்.

9. ஆன்ம நலத்தேவை - சிறப்பு நோக்கு:

உலகத்து உயிரினங்களுள் மானுடனே பகுத்தறி திறனுடன் செவ்வையான வாழ்வியலை அமைத்துக் கொள்கிறான். அடிப்படைத்தேவைகளாகிய உணவு, உடை, உறையுள் ஆகியவற்றுடன் நன்றாகச் சுவாசித்தலும், நீராடலும், மருந்தருந்தலும், உடல் வாழ்விற்குப் பல நன்மைகளை விளைவித்தலைக் காணலாம். அதுபோன்ற மானுட வாழ்விற்குச் **சமயவுணர்வும்** அதனடிப்படையில் அமையும் **கடவுட் சிந்தனையும்** வழிபாடும்

1. பெரிய புராணம், தடுத்தாட் கொண்ட புராணம், 106

பல நன்மைகளை விளைவிக்கும். தமிழ்ப் பெருமக்கள் இதனைப் பண்டைய காலத்திலேயே உணர்ந்து தம் சமய ஒழுகலாற்றினை அமைத்துக் கொண்டனர் என்பதற்குச் சான்றாகத் **தொல் காப்பியம்,**

"வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே"[1]

எனச் கூறிச் செல்வது காண்க. இறைவழிபாட்டின் சிறப்பை யுணர்ந்து வழிபடுவோரைத் தெய்வம் காத்தருளும் என்பதும், வழிபாட்டின் பயனாகப் பழிதீர் செல்வங்கள் பலவற்றை எய்த லாம் என்பதும், வழிபடுவோர் மட்டுமல்லாமல் அவர் தம் மரபிலே வரும் உற்றார் உறவினருங் கூட வழிபாட்டின் பயனாகச் சிறப்பெய்திப் பொலிவுறுவர் என்பதும் பெறப்படும்; நுண்ணிதின் எண்ணியுணரும் வகையில், இது முன்னோர் வாய் மொழியாக அமைந்துள்ளது.

சிவபாத இருதயர் செய்த தவநெறி சார்ந்த வழிபாட்டின் பயனாகத் திருஞான சம்பந்தர் தோன்றியருளியதும், **திலகவதி யார்** ஆன்மிகநயத்துடன் செய்த வழிபாட்டின் பயனாகப் புறச் சமயச் சார்புற்றிருந்த **திருநாவுக்கரசர்** மீண்டும் சைவத்திற்குத் திரும்பியதும், **மங்கையர்க்கரசியார்** சைவப்பாதுகாப்பிற்காகச் செய்த வழிபாட்டின் பயனாகச் சமணச் சார்வுற்றிருந்த அவர் தம் கணவர் **நின்ற சீர் நெடுமாறன்** (கூன் பாண்டியன்) மீண்டும் சைவத்திற்குத் திரும்பியதும், நினைவிற் கொண்டு சிந்தித்தால் வழிபாட்டின் பெருமை நன்கு புலனாகும்.

ஆன்மநல ஈடேற்றத்திற்காகப் பிறர் பொருட்டு வழிபாடு புரிதல் ஒரு புறமிருக்க, அடியவர்கள் இறைவனிடம் தம் உய்திக் காகவும் இறைஞ்சி நின்றுள்ளனர். இவ்வாற்றான்,

1. தொல்காப்பியம் பொருளதிகாரம், 415(செய்யுளியல், 105)

''இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
'பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க' என்றார்''[1]

என்னும் செய்யுளும்,

''புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்ததீ
வண்ணனே''[2]

என்னும் பாடலும்,

''வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை யாண்டாய்க்
குள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய்; அண்ணா
வெள்ளந்தான் பாயாதால்; நெஞ்சம் கல்லாம்;
கண்ணிணையும் மரமாம்;தீ வினையி னேற்கே''[3]

என்னும் பாடலும் காண்க.

10. யோக நெறிகள்

யோகம் என்னும் சொல் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் **யுக்** (YUG) எனும் வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததாக மொழியியல் வல்லுனர்கள் கருதுகின்றனர். 'யுக்' என்பது

1. பெரிய புராணம், காரைக்காலம்மையார் புராணம், 60
2. திருமுறை, 4, 94 8
3. திருவாசகம், திருச்சதகம், 21

இணைத்தல் எனும் பொருண்மை கொண்டது. யோகம் என்பது உள்மனத்துடனும் அடிமனத்துடனும் வெளிமனத்தை இணைக்கும் பொறுப்பேற்றுச் செயற்படும் ஒருவகைக் **கலை**யாகும். மேலும், சடப் பொருளையும் சடப் பொருளுக்கு அப்பாற்பட்ட பரம்பொருளையும் இணைக்க யோகம் முயற்சி மேற்கொள்கிறது. யோகக் கலையின் மிக முக்கிய நோக்கம், ஒருவன் தன்னைப் படிப்படியாக உணரவும் தன்னை முழுமையாக அறிந்து செயற்படவும் தூண்டுதலேயாகும். ஆனால், இக்காலத்தில் பெரும்பாலோர் **யோகக்கலை** என்பது உடல் நலத்துக்கும் வளத்துக்கும் மட்டும் உதவக்கூடியதாக ஏனோ எண்ணிக் கொண்டிருக்கின்றனர்; அது தவறு; உள்ளத்து மேம்பாட்டுக்கும் உயிர் நலத்துக்கும் ஆன்மநல ஆக்கத்துக்கும் யோகம் வழி வகுப்பதால் இதனைச் சமயப் பண்பாட்டுடன் சார்த்திக் காண்பதே மிகப் பொருத்தமாகும்.

யோகக்கலை பற்றி இன்று உலகெங்கும் ஆராய்ச்சி நடைபெறுகிறது. மேல்நாடுகள் பலவற்றிலும் **யோகாசிரமங்கள்** (யோகாப் பயிற்சிக் கூடங்கள்) தோன்றி மக்களை அறிவியலையும் அருளியலையும் இணைத்து நன்னெறியில் வாழ்வியலை அமைக்குமாறு தூண்டி வருகின்றன

சமயச்சார்புடன் யோகக் கலையைத் தோய்ந்து ஆராய்ந்த **V பிரகாஷ்** 'யோகக்கலையைச் சிவபெருமான் தோற்றுவித்ததாகப் புராணங்கள் சொல்கின்றன. எண்பத்து நாலு இலட்சம் பிறப்புக்களைக் குறிக்கும் வண்ணம் **84 இலட்சம் ஆசனங்களைச்** சிவபெருமான் தன் முதல் மாணவியாகிய **பார்வதிக்குச்** சொல்லிக் கொடுத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. இந்த ஆசனங்களை முறையாகச் செய்வதன் மூலம் **பிறத்தல், இறத்தல், பிறத்தல்** என்னும் ஓயாத சங்கிலித் தொடரிலிருந்து விரைவாக விடுபடலாம் என்று தத்துவஞானிகள் நம்பினர்...''[1] என்றும், ''உலக மதங்களைப் பற்றியும் உலக நாகரிகங்களைப் பற்றியும் ஆராய்ந்தவர்கள், யோகக்கலை உலகம் முழுவதிற்கும் சொந்தமானது.

2. உன்னையே நீ அறிவாய், பக், 125

அதன் பல்வேறு கூறுகள் உலக மதங்களில் விரவிக் கிடக்கின்றன என்று பல்வேறு ஆதாரங்களோடு கூறுகின்றன"[1] என்றும் எழுதிச் செல்வது கொண்டு, **யோகமானது சமயச் சார்புடன் உலகமெங்கும் உணரலுற்ற உயரிய பண்பாட்டுக் கருவி**யெனலாம்.

உடலையும் மனத்தையும் ஆன்மாவையும் ஒருங்கிணைத்து மக்களின் பரிணாம வளர்ச்சியைச் சிறந்த படிநிலைகள் வாயிலாக அடையச் செய்வது யோகமென அறியலானோம்; இந்த உன்னத யோகக் கலையை இந்நாட்டு யோகியர் எண்வகைப்படி நிலையாகப் பாகுபாடு செய்துள்ளனர்; **எண் வகைப்படி நிலைகள்** வருமாறு;

1. நித்திய சபதங்கள் சமூக ஒழுக்கங்கள் — **இயமம்**
2. தனிமனித ஒழுக்கங்கள் / கிரியைகள் — **நியமம்**
3. உடற்பயிற்சி நிலைகள் — **ஆசனங்கள்**
4. மூச்சுப் பயிற்சி / சீவசக்தியை ஒழுங்காக நடத்துதல் — **பிராணாயாமம்**
5. புலன்களிலிருந்து உள்ளிறங்குதல் / புறப்பொருள்களிடம் செல்லவொட்டாது மனத்தை நிறுத்துதல் —**பிரத்தியாகாரம்**
6. மனத்தை ஒரே நிலையில் நிற்கச் செய்தல் - தாரணை
7. ஒன்றையே சிந்தித்து ஒருமுகப்படுத்துதல் – தியானம்
8. நனவு நிலைக்கு அதீதமான நித்திரை - சமாதி

இந்த எட்டுப்படிநிலைகளும் அறிவியல் முறையில் நம்நாட்டு யோகியர் வரிசைப்படுத்தியுள்ளமை போற்றற்குரியது அட்டாங்கயோகம் வாயிலாக மனிதன் தன்நிலையிலிருந்து தன் உண்மையான தேவநிலையடையலாம். அட்டாங்கயோகமாகிய ஏணியில் தூலத்திலிருந்து மனிதன் சூக்குமத்திற்கு ஏறும்பொழுது **புருடனையும்** பிரகிருதியுடன் பிணித்துள்ள கட்டுக்கள் அனைத்தும் அற்றுவிடக் காணலாம். அவ்வேளையில் புருடன் வீடு பெற்றுக் **கைவல்யமோட்சம்** பெறுவன் என்பர். இதுவே இராசயோகத்தின் குறிக்கோளாகும்.

---

1. உன்னையே நீ அறிவாய். பக், 125

''**இயமமும் நியமமும்** செயல்களைத் தூயனவர்க்கி அதிக சாத்து விகமுடையனவாக ஆக்குகின்றன. பத்துவிதிகளை அனுஷ்டித்தால் சமுசாரத்தின் தூண்களாகிய தாமசமும் இராஜசமும் வீழ்ந்துவிடும். அகத்தூய்மை அதிகரிக்கும்; உள்ளத்து இயல்பு சாத்துவிகம் அடையும்.

ஆசனம் இராஜச எழுச்சிகளை அடக்குவதற்கு வேண்டிய ஆற்றலை அளிக்கும். அதே சமயத்தில் அது அந்தரங்க சாதனமாகிய அழகான மாளிகையின் அடிநிலையாகவும் அமைகின்றது.

பிராணாயாமம் என்பது சீவ தத்துவத்தை நேரில் தரிசிக்கச் செய்கின்றது. இந்தச் சீவ தத்துவத்தை அடக்கி ஆள்பவர் அதன் இயக்க சக்தியை அறிவர்; சீவசக்தியை ஆட்டுவிப்பது ஆசையே என்று தெரிந்து கொள்வர்....,

மனம் புருடனைப் பிரகிருதியுடன் இணைத்து வைக்கிறது. மனம் அல்லது சித்தம் பிரகிருதியின் தோற்றங்களுள் அதிநுட்பமானதாகும். மனத்தை அழிக்க விரும்புபவர் விருத்திகளை அழித்தாக வேண்டும். விருத்திகளை அழிக்க விரும்புவோர் ஆசைகளை வேரோடு பிடுங்கி எறியக்கடவர். அப்பொழுது யோகி, மனம் முழுவதையும் புறவிவகாரமாகிய **பிரத்தியாகாரத்தில்** ஈடுபடாது செய்துவிடுவர்..., மனத்தைப் புறவிவகாரங்களில் செலுத்தாதிருந்தால் ஆசையானது அதன் காரணமாகவே அழிந்துபோகும்.

தாரணை என்பது இவ் அகஒளியை மனவேரிடம் செலுத்தி மனத்தை ஆள்வதேயாகும்.

இவ்வாறு செய்யும்பொழுது இதுவரையில் புறவிவகாரங்களில் உழன்ற மனம் தன்னுடைய பிறப்பிடமான அகத்தேயுள்ள புருடனிடம் செல்கின்றது; அதுவே **தியானமாகும்.**

அப்பொழுது பிரகிருதியுடன் இணைந்துள்ள கட்டு அறுந்து போகும். புருடன் **நிர்விகற்ப சமாதி**யில் கைவல்லியம் என்னும் பரிபூரண விடுதலையைப் பெறுகிறான். அஞ்ஞானம் அழிந்து

போகின்றது''[1]. என்று **சுவாமி சிவானந்தர்** விளக்கிச் செல்வது மனங்கொள்ளத்தக்கது.

சுருங்கக் கூறின், யோகம் உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக்கி உள்ளொளிக் காட்சியைக் காண வழிவகுக்கும் எனலாம். சமயப் பண்பாட்டில் இது மிகச்சிறந்த இடத்தினைப் பெறுகின்றது.

10.1. அருளனுபவம்-நாததரிசனம்:

சமயச் சார்புடையவர்கள் சமயநூல்களைப் பயிலுவதிலும், முன்னோர் சென்ற செந்நெறியில் தாமும் தலைப்பட்டு ஆசாரத்துடன் ஒழுகுவதிலும் நாட்டம் வைப்பர். சமுதாய நோக்கில் அன்னமிடுதல், தண்ணீர்ப் பந்தல் வைத்தல், பூங்காக்களை அமைத்தல், திருவிழாக்கொண்டாடுதல், கலையரங்குகளை ஏற்பாடு செய்தல் முதலிய பல தொண்டுகளுக்கு அடியவர்கள் ஒத்துழைப்பினை நல்குவர்; தம் தனிப்பட்ட நிலையில் வழிபாடு புரிதல், நோன்பு நோற்றல், ஒருமையுணர்வுடன் தியானத்தில் ஈடுபடுதல் முதலியவற்றிலும் நாட்டம் வைப்பர்.

அருளாளர்களுடைய வரலாறுகளைப் பயின்று பார்த்தால் அவர்களுடைய வாழ்வியலில் கண்ட சமய அருளனுபவங்கள் பலவற்றைக் காணலாம். அவற்றுள் சிலவற்றை ஈண்டு நோக்குவோம்.

சமய ஒழுகலாற்றில் பல சமயங்களும் வற்புறுத்தும் தியான விளைவாகிய அருளனுபவம் பற்றி ஓரளவு அறிந்து கொள்வது சமயப் பண்பாட்டு அடிப்படையில் நல்லது. இவ்வாற்றான் **சேரமான் பெருமாள் நாயனார்** வாழ்வியலில் கொண்ட அருளனுபவத்தைக் காண்போம்.

முடியுடை மூவேந்தருள் ஒருவராக மதிக்கப்பெறும் **சேரமான், பெருமாள், சுந்தரமூர்த்திசுவாமிகளுடன்** தோழமைபூண்டு, அவருடன் திருக்கயிலை செல்லும் நற்பேறுபெற்றவர்; நாயன்மாருள் ஒருவர்

1. கலைக்களஞ்சியம், தொகுதி எட்டு, பக். 625

சேரமான் பெருமாள், சன்மார்க்க யோகநெறியில் (அஃதாவது சோபான முறைப்படி பதினைந்தாம் படியில்) நின்ற **சுந்தரருடன்** தோழமை பூண்பதற்கு முன்னரே, அதேபடியில் நிற்கத்தக்க தகுதியைப் பெறலானார். எனவே, யோகப் பயிற்சிக்குச் சாதகமான தியானத்தில் ஆழ்ந்து நின்று பூசனை புரிந்துவந்தார். நாள்தோறும் சிவபூசை முடிவில் சிவபிரான் **பாதச் சிலம்பொலி** கேட்ட பின்புதான் தம் பூசையை இறைவன் ஏற்றுக்கொண்டதாக எண்ணிக் களிப்புற்று மனநிறைவு கொள்ளலானார். ஒருநாள் இறைவனது திருவிளையாடலால் அவருக்குப் பூசை வேளையில் சிலம்பொலி கேட்கவில்லை. ஏதோ குறைபாடு ஏற்பட்டுவிட்டதாகக் கருதித் தம் உடைவாளை நட்டு அதன்மீது பாய்ந்து உயிரைப் போக்கிக் கொள்ள முற்படுகையில், அசரீரியாய் இறைவனது திருவுளக் குறிப்பு அவருக்குப் புலனாகியது. தில்லையில் எழுந்தருளி வழிபாடு செய்யுஞ் **சுந்தரரது** நெஞ்சார்ந்த திருப்பாட்டின் இனிமையில், தான் திளைத்தமையால் சிலம்பொலி வழங்கக் காலந் தாழ்ந்தது என்பது இறைவாக்காகவே கிட்டியது. அதன் பிறகே **சேரமான் பெருமாள்** தில்லையை ஆர்வந்தழைக்க நாடி வந்து சுந்தரரது தோழமையைப் பெற்றார் என்பது வரலாறு.

கூத்தப் பெருமானுடைய திருப்பாதச் சிலம்பொலி என்பது விந்து தத்துவத்தின் முடிவில் அனுபவிக்கக் கூடிய **நாத தத்துவமாகக்** கொள்ளுதல் வேண்டும். இஃது ஒன்றிய பயிற்சியால் படிப்படியே கிட்டக் கூடியது. திருப்பாதச் சிலம்பொலி என்பதனையே அனுபவ ஞானியர் '**நாத தரிசனம்**' எனக் கூறி மகிழ்வர். இது பற்றி ஆராய்ந்த மகாவித்துவான் **ச. தண்டபாணி தேசிகர்**, தாம் பயின்ற '**யோக சூடாமணி**' எனும் நூல் வாயிலாக இதன் தன்மையை விளக்கிக் கூறுகிறார். அது வருமாறு:

கோஷம்: ஒரு வகையான இரைச்சல். அது கேட்கப்படுமானால் சித்த சுத்தியுண்டாகும். நோய் அகலும்; எல்லாரையும் எல்லாவற்றையும் வசீகரிக்கும் ஆற்றல் விளையும்; ஆட்கொள்ளும் வன்மை பெருகும்.

வெண்கல நாதம்: வெண்கலப் பாத்திரத்தைத் தட்டும் ஒலி. இது கேட்டுச் சித்தியான யோகி, விடமிறக்குதல், கொடிய

விலங்கினங்களை யடக்கியாளுதல், கோள்களை வெல்லுதல் முதலிய ஆற்றலைப் பெறுவான்.

கொம்பு நாதம்: பகைவெல்ல அபிசார ஓம சித்தியிலும் சத்துருமாரண சித்தியிலும் கேட்கப்படுவதாகும்.

மணி ஒலி: இது கேட்கப்படுமானால் தேவர்கள் மக்கள் அனைவரும் இவன் ஆணைவழி நடப்பர். விரும்பிய பேறுகள் அனைத்தும் விளையும்.

வீணையொலி: இந்நாத சித்தியுடையவர்கள் இருந்த இடத்திலிருந்தே எல்லாவற்றையும் அறியும் ஆற்றலடைவர்.

புல்லாங்குழல் ஒலி; இதனால் சர்வஞ்ஞத்துவம் சித்திக்கிறது.

துந்துபிநாதம்: இதனால் பிறப்பு இறப்பு நீங்குகிறது.

சங்க நாதம்: நினைத்த வடிவங்கொள்ளும் ஆற்றல் சித்திக்கிறது.

மேகநாதம்: இதனால் ஆகாயத்தில் பறத்தல், எல்லாவற்றையும் அறிதல் முதலியன விளைகின்றன.

பிரணவ ஒலி: இதனை இடைவிடாது கேட்டனுபவிக்கும் யோகிக்குச் **சோதி தரிசனம்** உண்டாகிறது. அவனுக்கு அடைய இயலாத சித்திகளே இல்லை, எல்லாம் அவன் ஆணைவழி நிற்பனவே.

சிலம்பொலி: நடராசப் பெருமான் ஐந்தொழில் ஆனந்த நடனம் இயற்றும் போது உண்டாகின்ற ஒலி. இதனைக் கேட்டவர் இம்மையிலும் பேரரசராய் - பெருந்துறவியாய் - பெரிய ஞானியாய் விளங்கி மறுமையிலும் பேரின்பம் எய்துவர்''[1]

11. வினைக்குரிய விளைவு:

உலகத்தில் நல்வினை புரிந்தவர்கள் அதற்கான நற்பயனையும், தீவினை அல்லது பழி செய்தவர்கள், அதற்கான தீ

1. யோக சூடாமணியினின்றும் எடுத்து. ஞானசம்பந்தம் வெள்ளி விழா மலரின் (65) 'நாத தரிசனம்' எனும் கட்டுரையில் ஆளப் பெற்றுள்ளது.

வனைப்பயன் அல்லது தண்டனைப் பயனையும் அனுபவித்தே தீர வேண்டும் என்பது சமயவழிக் கோட்பாடும் பண்பாடும் ஆகும்.

மக்களேயன்றித் தெய்வங்களும் இந்தக் கோட்பாட்டுக்குக் கட்டுப்பட்டவைகளே என்பதனைக் காட்டும் வண்ணம் புராண நிகழ்ச்சிகள் பல உண்டு; அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

உலக நாயகியாகவும் அன்னையாகவும் போற்றப்பெறும் **உமையம்மையே** பல்வேறு சூழல்களில் பல்வேறு இடங்களில் **தோடம் - பழி** - போக்கிச் கொள்ளத் தவமிருந்து நலங்கொண்டிருக்கிறாள், **காஞ்சிபுரம், திருமயிலை, திருப்பாதிரிப் புலியூர்** முதலிய இடங்களில் இறைவி தவக்கோலம் கொண்டுபயன் பெற்றமையால் அந்த இடங்களெல்லாம் சிறந்த திருத்தலங்களாகிக் கோயில் வழிபாட்டிற்கும் கோயிற் பண்பாட்டிற்கும் வழி வகுத்துள்ளன.

எடுத்துக்காட்டாகத் **திருவண்ணாமலையில்** எழுந்தருளியுள்ள அருள்மிகு **துர்க்கையம்மன் கோயில்** தொடர்பான புராண ஐதிகச் செய்தியைக் காணலாம். எருமைத் தலையசுரனான **மகிடாசுரனிடம்** போரிட்டு அவனைக் கொன்ற நிலையில் மகிடாசுரமர்த்தனியானாள் **துர்க்கை**. அவனைக் கொன்றமையால் விளைந்த **பிரமகத்தி தோடத்தைப்** போக்கிக் கொள்ள அம்பிகை **கட்கம்** என்னும் அரிவாள் கொண்டு பூமியில் வெட்டித்தீர்த்தம் ஏற்படுத்தி, அந்தப் புனித நீரில் நீராடித் தோடம் நீங்கியதாக இங்கு ஐதிகம் உண்டு. அதன் சின்னமாக இங்கு அவ்வாறு வெட்டப்பட்ட பாவனையுடன் ஒரு தீர்த்தம் இருப்பதைக் காணலாம். அதற்குக் '**கட்க தீர்த்தம்**' என்பது பெயராகும்.

வினைக்குரிய பயனை, வினைகளெல்லாவற்றையும் கடந்து நிற்கும் பரம்பொருளும் தப்பமுடியாது என்று ஒரு வகைக் கலைக் கற்பனையுடன் சிந்தித்துள்ளனர். பரம்பொருளாகிய **திருமால்,** மானுடத்தின் வெற்றியைப் புலப்படுத்த **இராமனாக்** அவதரித்தார். இராவணனைக் கொன்று வென்று திரும்புகையில் பிரமஹத்தி தோடம் அணுகாவண்ணம், **சிவலிங்க வழிபாடு** செய்து கழுவாய் தேடினார் அத்தகைய சிறப்பிற்குரிய தலமாக

இராமேசுவரம் போற்றப்படுகிறது என்பதை ஈண்டு இயைபுடன் சிந்திக்கலாம்.

12. இயற்கை வழிபாடு - சூழற்காரணம்:

இயற்கையே இறைவனின் புறத்தோற்றம் என்றும், இறைவனின் உடல் என்றும், இறைமை என்றும் சமய ஞானியர் தத்தம் அருளனுபவத்திற்கேற்பக் கூறுவர். சமயவுணர்வு தோன்றிய காலந்தொட்டு இயற்கை என்பது மக்களது வாழ்வில் பிரிக்கவியலாத ஒரு வகைப் பிணைப்புடன் இருந்து வருகிறது, வழிபாட்டினையும் பெற்று வருகிறது; காரணம் என்ன?

உலகிலே மானுடன் தோன்றியதிலிருந்து தான் உயிர் வாழ்ந்திடத் தன்னைச் சுற்றிலும் இருக்கும் இயற்கைவளத்திலிருந்து தனக்கு எது எது தேவையென உணர்ந்து, தேவையானவற்றைப் படிப்படியே பக்குவமாகப் பயன்படுத்தி வரலானான். இயற்கை வழங்கியவற்றைக் கொண்டு அவன் மகிழ்ச்சியாக வாழ்ந்தபோது தன் வாழ்வியல் வசதிகளுக்குப் பலவற்றையும் அளித்த அந்த இயற்கையின் இயல்பையும் சீர்மையையும் உணரலானான்; அந்நிலையில் அவனது நன்றியுணர்வு பெருகியது. அந்த **நன்றியுணர்வின் பிரதிபலிப்பே தன்னியல்பாக இயற்கை** வழிபாடு ஆயிற்று.

இயற்கையில் கொடிகள் மரங்களைப் பற்றி வாழ்வதால் உயர்ந்து செழிப்பதைக் கண்டதும், தாமும் தக்கோரைப் பற்றி வாழ்வதால் உயர்வும் செழிப்புங் கொள்ளலாம் என்ற படிப்பினை அவனுக்கு உதவியது.

நாளும் இயற்கையினூடே தன் **அறிவைச்** செலுத்திச் சிந்திக்கத் தலைப்பட்டபோது மனிதன், இயற்கையிலமைந்த இடி, மின்னல், பெருமழை; புயற்காற்று, காட்டுத்தீ, பூகம்பம் முதலிய இயற்கைச் சீற்றங்களையும், அத்தகைய சீற்றங்களினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளும் உத்திகளையும், **அவ்வுத்திகளுள் தலையாயது இயற்கை வழிபாடு** என்பதையும் காலப்போக்கில் புரிந்து கொள்ளலானான்.

இயற்கையில் பொதிந்து கிடக்கும் **அன்பு** அவனுக்குப் புரியலாயிற்று. இயற்கையில் பறவைகளும் விலங்குகளும் பிறவும் கூடி வாழ்க்கையில் இன்பமுடன் இருப்பதையும், ஒன்றற்கு ஒன்று மாறுபாடும் வெறுப்புங் கொள்கையில் பகைமையால் துன்பத்துடன் இருப்பதையும் கண்டு, தானும் அன்பை வளர்க்க எண்ணமுண்டாயிற்று. அன்பின் வளர்ச்சி இறைமை வழிபாட்டில் கொண்டு செலுத்தியது. தன் விருப்பப்படி சிலவற்றைத் தன் முயற்சியாலும் அறிவாலும் ஆராய்ச்சியாலும் தன்னால் இயக்கிட முடியாத போது, காலந்தோறும் விந்தைகள் புரிந்திடும் இயற்கையினூடே விவரிக்கவியலாத ஒரு மாபெருஞ்சக்தி இந்தப் பூவுலகை ஆட்சி செலுத்துகிறது என்பதை உணரலானான். அந்நிலையில் மனத்தை ஒருமுகப்படுத்தி அந்த மாபெருஞ்சக்தியை வசப்படுத்தி மக்களின் நலனுக்காக அதனைப் பயன்படுத்துவோம் எனக் கருதலானான். இவ்வாற்றான் **தியானமும் வழிபாடும் கிரியைகளும்** முறையாக அவனுக்குக் கைகொடுத்து உதவலாயின.

12.1. ஐம்பெரும் பூதங்களை வழிபடுதல்:

இயற்கையே இறைவன் என்பதும், இயற்கையே இறைவனுக்கு உடலென்பதும் சமயவழிக் கொள்கையாகும்.

இயற்கையின் அமைப்பு ஐம்பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, வான் என்பவற்றைச் சார்ந்தது. இந்நிலையில் இயற்கையின் ஒரு கூறாகிய **நிலத்தை** நிலமகள் புவிமடந்தை- எனக் கொண்டு வழிபடலாயினர். திருமாலுக்கு அமைந்த தேவியருள் ஒருத்தியாகவும் **நிலமகள்** வழிபடப் பெறுகிறாள்.

நீர் என்பதும் இயற்கையின் ஒரு கூறாக அமைந்தது; கடலைச் சேரும் ஆறுகளெல்லாம் தெய்வங்களாகப் போற்றி வழிபடக்கூடிய நிலை தோன்றலாயிற்று. இவ்வாற்றான் **கங்கை, யமுனை, நர்மதை, பிரம்மபுத்திரா, சிந்து, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை** முதலிய ஆறுகளெல்லாம் தெய்வங்களாக மதிக்கப் பெற்று வழிபடப் பெறுகின்றன.

தீ என்பதும் இயற்கையின் ஒரு கூறாக அமைந்ததே; தீயினுள் அமைந்த ஒளி, தொன்மைக் காலத்தே மக்களின் அச்சம் அகற்றுதற்கும் காரணமாகியது; பகைமையைச் சாடி மாற்றுதற்கும் காரணமாகியது; அந்நிலையில் அது தெய்வநலப் போற்றுதலைப் பெற்றது. தீக்கடவுள் (அக்கினிதேவன்) தெய்வ வழிபாட்டினை மக்களிடையே பெற்ற தொன்மைக் காலத்தை வரையறுத்துக் கூற இயலாது. காலப்போக்கில், தீக்கடவுள் சிறு தெய்வமாகியது; தீயினுள் அமைந்த ஒளியே வாழ்முதலாகிய கடவுளுக்கே வடிவமாகியது. இறைவனை வழிபடுவதில் முதன்மைப்படுத்தப்பட்ட தீபவொளியை வணங்கும் **அருணகிரிநாதர்**, ''தீபமங்களஜோதி நமோ நம'', எனப் பாடிச் செல்வது ஈண்டு நினைவுகூரத்தக்கது.

காற்று என்பதும் இயற்கையின் ஒரு கூறாக அமைந்ததே; அண்டத்திலும் பிண்டத்திலும் காற்றே உயிரோட்டத்திற்குக் காரணமாக விளங்குவதால் அதனையும் தெய்வமாகக் கொண்டனர். காற்றுக் கடவுளை **வாயுபகவான்** என்று மதித்துப் போற்றுவதை மக்களிடையே காணலாம். காற்றினை வாரி வழங்கும் அலையெறி கடலுக்குந் தெய்வமாக வாயுபகவானே **வருணனா**கவும் வழங்கப்படுதலைக் கூறுவர்; இஃது இயைபுடன் இணைத்துச் சிந்திக்கத்தக்கது.

வான் (ஆகாயம்) என்பதும் இயற்கையின் ஒரு கூறாகவே போற்றப்படுகிறது. இடி முதலிய பல்வேறு ஓசைகளும், பறவை விலங்கு முதலியவற்றின் ஓசைகளும், மக்களின் குரலொலிகளும் வானத்தில் தம்மியல்பில் மோதிக் கொண்டு, பேரரவம் உண்டானால் உலகம் தாங்காது. அவ்வோசை ஒலிகளையெல்லாம் படிப்படியே தேய்த்துச் சீர்படுத்திக் காற்று வாயிலாகத் தேவைப்படுமளவிற்கு ஒலிகளைக் கொண்டு சேர்த்து, ஒழுங்குபடுத்தும் ஆற்றலுடையதாக **வான்** விளங்குகிறது. எனவே, வானும் இறைவனாக வழிபடப் பெறுகிறது.

மேற்கூறப்பட்ட கருத்துக்களைத் தமிழிலக்கியப் பரப்பில் பலவாகக் காணலாம்.

12.2. சூரிய வழிபாடு

உலகளாவிய நிலையில் மக்களின் வாழ்வியலில் சூரியனுக்கெனத் தனிச்சிறப்பு என்றுமே இருந்து வந்துள்ளது. தத்துவமென்றும் சமயமென்றும் தோன்றாத காலத்திலேயே இருளாகிய ஒருவகை அச்சத்திலிருந்து நீங்குதற்கு விடியலில் சூரியவொளி பயன்பட்டுள்ளது. பிறகு, அருணோதயம், புத்துணர்ச்சியையும் உடலியக்கத்திற்கான எழுச்சியையும் உயிர் நலத்தையும் ஊற்றெனப் பெருக்கித் தரும் இன்பக் காட்சியாகவும், நம்பிக்கையுடன் கூடிய மங்கலவுணர்வாகவும் போற்றப்பட்டுள்ளது. தொன்மையான **இருக்கு வேதமும்**, "அசையும் அசையாப் பொருள்களின் உள்உறை ஆத்மா சூரியன்" (சூர்ய ஆத்மா ஜகத; தஸ்து ஷஸ்ச) எனக் குறித்துக் காட்டும். மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாகப் போற்றப்பெறும் சூரியனையும் சூரிய வழிபாட்டினையும் இந்திய மக்கள் தம் இலக்கியங்களில் தக்க வண்ணம் ஆன்மநலத்துடன் புலப்படுத்தியுள்ளனர்.

தொல்காப்பியத்தில், "காலம் உலகம் உயிரே உடம்பே" எனவரும் நூற்பாவில், "**ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்**"[1] என்று கூறியிருப்பது கொண்டு, பண்டைக் காலத்திலேயே சூரிய வழிபாடு வழக்கத்திலிருந்தமை விளங்கும். சிலப்பதிகாரத்தை எழுத முற்படும் **இளங்கோவடிகள்**, நூலின் தொடக்கத்திலேயே,

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்"[2]

எனப்பாடிச் செல்வதால் எத்தகைய சிறப்பினைச் சூரிய வணக்கத்துக்குத் தந்துள்ளார் என்பது பெறப்படும்.

தெய்வநலச் சிறப்பினைச் சூரியனுக்கு வழங்கி வழிபடும் மாமன்னர்கள் சிலர்தம் மூதாதையாகச் சூரியனைக் கொண்டு, தம் வணக்கத்திற்குரிய பரம்பரையைச் சூரிய பரம்பரை அல்லது சூரிய வமிசம் எனக் கூறிக் கொண்டனர். பாரதத்தில் வடக்கே

1. தொல்காப்பியம், சொல்லதிகாரம், 58
2. சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், மங்கல வாழ்த்துப்பாடல், 4-6

தசரதன் மரபு சூரியவமிசம் என்பதும், தென்னகத்தே **சோழர்மரபு சூரிய வமிசம்** என்பதும் இலக்கியங்களால் புலப்படும்.

ஆதிசங்கரர் தோற்றுவித்த சண்மதங்களில், சூரியனையே பரம்பொருளாகப் போற்றி வழிபடும் **சௌரம்** என்பது முதலாவதாகக் குறிப்பிடப்படுகிறது; இதனை "ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணு கணநாதம் மகேசுவரம் கௌமாரம்" எனவரும் ஆதி சங்கரர் திருவாக்கால் காண்க. நாளும் அந்தணர் நடைமுறையில் கொண்டிருக்கும் **காயத்திரி மந்திரத்தில்** "சூரிய பகவானே! என் புத்தியைத் தெளிவாக்குக; பிரகாசத்தைக் கொடு" என்று வேண்டுகோள் புரிதலைக் காணலாம்.

சூரிய வழிபாடு மிகத் தொன்மையானது என்பதற்கு உலகெங்கும் பல சான்றுகளைக் கூறுவர். "சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்தே சூரிய வழிபாடு பிரபலமாக இருந்திருக்கிறது என்தற்குப் போதிய சான்றுகள் உள. **ஹரப்பா மொகஞ்சதரோ** ஆகிய இடத்து அகழ்வாய்வுகளில் கிடைத்த மண்பாண்டங்களில் சுவஸ்திகச் சின்னமும், சக்கரமும், கிரணங்கள் வீசும் வட்டங்களும் பொறிக்கப் பெற்றுள்ளன. இதிகாசங்களிலும் சூரிய வழிபாடு பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. **ஆதித்திய ஹிருதயம்** என்ற சூரியதுதியே இராமனுக்கு அகத்திய முனிவர் உபதேசித்தது தானே"[1] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது.

சூரிய வழிபாட்டுக்கு ஏற்பச் சூரியன் கோயில்கள் இந்திய நாட்டின் பல பாகங்களிலும் உள்ளன. ஒரிசா மாநிலத்திலே இயற்கையெழிற் சூழலில் அமைந்துள்ள **கோணார்க்** சூரியன் கோயிலும், தென்னகத்தே தமிழ்நாட்டுத் தஞ்சை மாவட்டத்திலுள்ள **சூரியனார்** கோயிலும் சிறப்பாகக் காணத்தக்கவை. மேலும், **கங்கைகொண்ட சோழபுரத்தில்** அமைக்கப்பெற்றுள்ள **கமலயந்திரம்** எனப் பெயரிய **சூரிய யந்திரம்** வழிபாட்டு நோக்கில் காணத் தக்க சிறந்த கலைப் படைப்பாகும். எட்டு கிரகங்கள் புறத்தே அமைந்திருக்க, விரிந்த தாமரையிதழ்களில் சூரியன் உலகத்தைக் காக்கும் நோக்கிலே உலா வருந் தோற்றத்தில் இஃது அமைந்துள்ளது. சோழர்களின் கலை வண்ணத்திற்கு இது நல்ல எடுத்துக்காட்டாகும்.

1. கலைமகள் தீபாவளி மலர், 1985

ஒவ்வோர் ஆண்டிலும் வரும் **தைத்திங்கள் முதல்நாள்,** ஆண்டுப் பிறப்பிற்குரிய சித்திரை முதல்நாள் போன்ற சிறப்பினையுடையதாகும். **தைமுதல் நாளைத்** தமிழ்ப் பெருமக்கள் **சூரிய வழிபாட்டுக்குரிய நாளாகத்** தேர்ந்து, **பொங்கல் பண்டிகை** யாகக் கொண்டாடி வருகின்றனர். இதனையே, தட்சணாயணம் முடிந்து உத்தராயணம் தொடங்கும் புண்ணிய நாளாகவும், மகர சங்கராந்தியாகவும் போற்றி வருகின்றனர். தமிழ்நாடு என்று வரையறை கொள்ளாமல், உலகெங்கும் வாழும் தமிழர்களெல்லாம் தாங்கள் இருக்குமிடங்களில் இறையுணர்வும் மகிழ்ச்சியும் பொங்கப் பொங்கல் கொண்டாடிச் சூரியவழிபாடு நிகழ்த்தி வருன்றனர்.

சூரியனே நவக்கிரகங்களுள் பேராற்றல் வாய்ந்த காரணத்தால் நவக்கிரக வழிபாட்டில் எல்லாக் கோள்களுக்கும் நடுவில் அதனை நிறுவிச் சிறப்பிடம் தருவது குறிப்பிடத்தக்கது.

12.2.1. சூரிய வழிபாடு - தத்துவ விளக்கம்:

சத்தியம் தவறாமை எனும் தத்துவத்தை விளக்குதற்குச் சூரியனை எடுத்துக் காட்டுவது மரபு. தானத்தின் சிறப்பை வலியுறுத்துகையில், சத்தியம் தவறாத சூரிய தேவனைப்போல் தானமே பிரதானமாக வாழ்வது என்பதைப் பொங்கல் பண்டிகையும் உணரச் செய்வதாக அறிஞர் பலரும் கூறுவர். தாமரை நாயகனாகச் சூரியனைக் குறிப்பிடுவதால் சூரிய வழிபாட்டில் **செந்தாமரை** மலரைப் பயன்படுத்துதல் மிகவும் ஏற்புடையதாகும்.

சூரிய மண்டலத்தின் நடுவே **சதாசிவமூர்த்தியின்** இருப்பைக் கண்டு வழிபடுவது சைவப் பெருமக்களின் வழிபாட்டுத் தத்துவம் என்பர். பூசை வழிபாட்டுக்கு உகந்த நேரம், சிறப்பாக ஞாயிற்றுக்கிழமை உதயகாலமாகும்.

12.3. சந்திர வழிபாடு:

இயற்கையில் இறைமை காணும் நோக்கத்தில் **சூரியனும் சந்திரனும் மாமழையும்** சிறப்பாக மதிக்கவும் போற்றவும் படுபவையாகும். இறைவனோடு ஒப்பிடத்தக்க மாமன்னர்கள் **சோழர்**

களும் பாண்டியர்களும் முறையே **சூரியனையும் சந்திரனையும்** குல முதல்வர்களாகக் கொண்டவர்கள்.

சிவபிரானுக்குக் கண்களெனப் போற்றப்படும் சூரியனும் சந்திரனும் வழிபாட்டுக்குரிய நிலையில் தமிழர் வாழ்விலே சிறப்பிடங் கொள்கின்றனர்; சூரிய வழிபாட்டினைப் பார்த்த நிலையில், சந்திர வழிபாடு பற்றியும் சிறிது காண்போம்,

நவ கோள்களுள் ஒன்றாகிய **சந்திரன்** சூரியனது ஒளியை வாங்கிக் கொண்டு ஒளிரக் கூடியது. நவக்கிரகவழிபாட்டிலேயே சந்திர வழிபாடு அடங்கியுள்ளது; எனினும், உயிர்களெல்லாம் பிழைத்திருக்க உதவும் பயிர்கள் தழைக்கச் சந்திரன் மிகவும் துணைநிற்கின்றது நன்றிக்கடன் உணர்வில் மக்கள் சந்திர வழிபாடு புரிதற்குக் கடமைப்பட்டவர்க ளாகின்றனர்.

வளர்ந்தும் தேய்ந்தும் வானத்தில் உலவுகின்ற **சந்திரன்.** அமாவாசைக்கு மூன்றாம் நாள் **பிறை**யாகத் தோற்றமளிக்கும். அந்த வளர்பிறையைக் கண்டு தொழும் பழக்கம், இள மகளிர்க்குக் - **கன்னிப்** பெண்களுக்கு - இருந்ததைப் பற்றி இலக்கியங்கள் கூறிச் செல்லும்.

'பிறைதொழுதல்' உலகளாவிய சிறப்பினையுடையது. **இசுலாமியர்கள்** பிறையை வைத்துக் கொண்டே மாதக்கணக்கையும் ரம்சான் முதலிய நோன்புகளையும் கடைப்பிடித்து வருகின்றனர் என்பதும் நினைவிற் கொள்ளத்தகும்,

12.4. வான்சிறப்பு - மழை நீரின் தேவை:

உலகெங்கும் பயிர்கள் தழைக்கவும் உயிரினங்கள் வாழவும் வான்சிறப்பாகிய **மழைப்பொழிவு** தவிர்க்கவியலாத சிறப்புத் தேவையாகக் கருதப்படுகிறது. பல்வேறு சமயங்களும், இறைவன் உயிர்களுக்குச் செய்துவரும் அருளுதவிகளுள் தலையானதாக மழை பெய்விப்பதைக் கருதுகின்றன; போற்றுகின்றன.

சமய அமைப்பை நிலைபெறச் செய்பவையாகிய **தானமும் தவமும்,** உலகத்தில் பெய்யும் மழையைப் பொறுத்தே அமையும் என்பது,

''தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்''[1] எனும் வள்ளுவர் வாய்மொழி

யில் தெளியலாம். மழையின் சிறப்பினைப் போற்றும் **பரிமேலழகர்,** ''கடவுளது ஆணையால் உலகமும், அதற்கு உறுதியாகிய அறம் பொருள் இன்பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழை''[2] எனவும், **மணக்குடவர்,** ''வான்சிறப்பு கடவுட் செய் கைத்து''[3] என்றும் உரை விளக்கம் புரிகின்றனர், மழைப்பெயலின் இன்றியமை யாமையைத் திருவருள் நலத்தால் பெறத்தக்கது என்பதை உணர்த்தத் திருவள்ளுவர்,

''நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு''[4]

எனும் வாய்மொழியால் புலப்படுத்தியுள்ளார். மேலும், சமயச் சார்பான கோயில்களில் நாள்பூசையும் சிறப்பான திருவிழாவும் நடைபெற வேண்டுமெனின் மழை தவிர்க்கவியலாத தேவை யென்பதைச்,

''சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு''[5]

எனும் குறள் வாயிலாகத் திருவள்ளுவர் புலப்படுத்தியுள்ளமை காண்க.

தமிழ் நாட்டுச் சமயங்கள் வாயிலாக மழைபொழிதலின் மேம்பாடு குறித்துச் சில கருத்துக்களைக் காண்போம்.

தமிழ்க் கடவுளாகிய **திருமுருகன்** தமிழ் நாட்டுக்கு அனைத்து நலங்களையும் வளங்களையும் வழங்குபவன் என்பது சமய நம்பிக்கை. பன்னிருகைப் பெருமாளாகிய அவனது அளப்பரிய ஆற்றலை மக்களுக்கு உணர்த்த முற்பட்ட **நக்கீரர் பெருமான்,**

''ஒருகை, நீனிற விசும்பின் மலிதுளி பொழிய''[6]

எனக் கூறிச் செல்லுதல் காண்க; முருகப் பெருமான் தன்

1. குறள், வான்சிறப்பு, 9
2. குறள், வான்சிறப்பு - பரிமேலழகர் உரை
3. மேலது - மணக்குடவர் உரை
4. குறள், வான்சிறப்பு, 10
5. குறள், வான்சிறப்பு, 8
6. திருமுருகாற்றுப்படை 116

பன்னிரண்டு கைகளால் பல்வேறு அருட்செயல்களைப் புரிகிறான். அவற்றுள், நாட்டுக்கு இன்றியமையாத தேவையான மழைவளத்தினை அவனது ஒரு கை வழங்கி நிற்கிறது என்பது மனத்துள் போற்றிவைத்துப் பாராட்ட வேண்டிய அருங்குறிப்பு எனலாம்.

மழைபெய்விப்பதைத் தெய்வநல ஆற்றலாகக் கொண்டதுடன், மழையினைச் **'சிவசக்தி'** என்றே வழிபடுவது சைவசமய மரபாகும். ''தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்'' என **மழைப்பொழிவு, சிவசக்தி, சிவம்**, ஆகிய மூன்றாகவும் உணர்ந்து கண்டுரைத்துள்ள பாங்கினைச் சிந்திக்கலாம். ''தையலுமாய் நிற்கும்'' என்பதனால் சிவமாயிருப்பது சத்தியாயும் வருமென்னும் உண்மையைத் தெளிவிக்குமெனக் கொள்க.

வைணவச் சமயத்திலும் மழையைத் **திருமாலுடன்** ஒப்புமை கூறிச் சிறப்பிப்பது உண்டு. சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய **ஆண்டாள்**, ஊழி முதல்வனாகிய திருமால்போல் **மழை மேகங்கள் கறுத்தும்,** பத்மநாபனாகிய அவன் திருக்கையிலுள்ள **சக்கரம் போல் மின்னியும்,** அவன் திருக்கையகத்தேயுள்ள வலம்புரிச் **சங்குபோல் இடியுடன் அதிர்ந்தும்,** அவன் திருக்கையிலுள்ள வில்லாகிய **சாரங்கத்தினின்றும் எய்யப்பெற்ற அம்புபோல் மழைத் தாரை கொண்டும்** உலகம் வாழ்வதற்காக மழை பெய்யட்டும் என வேண்டி நிற்கிறாள்; சமயப் பண்பாட்டுடன் பொருந்தி வரும் இத்தகைய பாங்கினை,

''ஆழி மழைக்கண்ணா! ஒன்றுநீ கை கரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்ற திர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்''[1]

எனவரும் திருப்பாசுரத்தால் கண்டு தெளியலாம்.

1. திருப்பாவை, 4

சைவ மெய்யன்பராகிய **மணிவாசகருக்கு** மழையானது அருட்சத்தியாகிய நம் பிராட்டியினை நன்கு நினைவுபடுத்தும் பாங்கினில் உள்ளது; உவமநலத்துடன் **திருவெம்பாவையுள்,**

'முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்''[1]

என வருணிக்கப் படுவதால் இதனை உணரலாம்.

மழைநீரே மண்ணுலகத்துக்கு நலமும் வளமும் கூட்டுவ தாகும். அந்த ஆற்றலால் பொதுவாக ஆற்றுநீர் முதலிய வற்றையும் ஈண்டு இயையுடன் சிந்திக்கலாம்.

மழைநீரானும் மலையில் தோன்றும் ஊற்று நீரானும் பெருக்கெடுத்து ஆறாக ஓடி, மக்களுக்குப் பயன்படுவதைச் சமயவழிப் பண்பாட்டுடன் மக்கள் உணர்ந்து போற்றியுள்ளனர். எடுத்துக்காட்டாகக் **கம்பர்,**

''கல்லிடைப் பிறந்து போந்து
    கடலிடைக் கலந்த நீத்தம்
தொல்லையில் ஒன்றே யாகித்
    துறைதொறும் பரந்த சூழ்ச்சி
எல்லையில் மறைக ளாலும்
    இயம்பரும் பொருளீ தென்னப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும்
    பொருளெனப் பரந்த தன்றே''[2]

எனப் பாடிச் செல்வதால் உணரலாம்.

1. திருவெம்பாவை, 16
2. கம்பராமாயணம், பாலகாண்டம், ஆற்றுப்படலம், 19

12.5. துளசிமாடம் - அமைப்பதற்கான பின்னணி:

தமிழ்நாட்டு மக்களில் பலர் துளசிச்செடி வளர்ப்பதில் ஆர்வங் காட்டுபவர்கள். எனினும், சில இல்லங்களில் **துளசி மாடம்** அமைத்து, அதனில் துளசிச் செடி வளர்ப்பதைக் காண்கிறோம். பொதுவாக, இந்துக்கள் இவ்வாறான துளசிமாடம் அமைக்கும் நோக்கங் கொண்டிருந்தாலும், வைணவப் பெருமக்கள் துளசிமாடம் அமைப்பதை ஒரு வகைச் **சமயக் கடமை**யாகவே கொண்டுள்ளனர். இத்தகைய துளசி மாடம் தென்னாட்டிலேயன்றி வடநாட்டிலும் மக்களால் அமைக்கப்படுவதைக் காண்கையில், சமயக் கலைப் பண்பாட்டில் ஒருவகை ஒருமைப்பாடு உள்ளதனை உணர்ந்து மகிழலாம்.

சிலர் குறுகிய மனப்பான்மையில் துளசியை வைணவச் சமயப் பொருள் எனவே கருதுகின்றனர். அதற்கேற்பப் புராணக் கூற்றுக்களையுங் காட்டுவது உண்டு. எடுத்துக்காட்டாக, இலங்கைக்கு அனுமன் சென்றபோது, விபீடணன் மாளிகையில் துளசிச்செடி வளர்ந்திருந்ததைக் கூறுவர். 'அநுமார் இலங்கையில் தேவியைத் தேடி அலைந்தபோது, ஒரு மாளிகையில் **துளசி மாடத்தையும்**, நிறையத் துளசிச் செடிகளையும் கண்டு இங்கு யாரோ ஒரு விஷ்ணு பக்தர் வசிக்கிறார் என்று ஊகித்தாராம்! அங்கு இறங்கி விசாரித்தபோது தெரிந்தது, அது விபீஷணரின் மாளிகை என்பது''[1] எனச் சௌரி என்பவர். பத்மபுராணத்தில் வரும் அருங்குறிப்பினைத் தமக்கு அரணாகக் கொண்டு கூறுதலைக் காணலாம்,

நச்சுத் தன்மையை மாற்றக் கூடிய மூலிகையெனக் கருதத்தகும் துளசிச்செடி வைணவர்க்கோ, சைவ சமயத்தவர்க்கோ மட்டுமன்றி எல்லாச் சமயத்தவர்க்கும் பயன்படும் மிகவுயர்ந்த நல்ல பொருளாகும். பிணிகளினின்றும் காக்க வல்ல துளசியிலையைத் திருமாலுக்கு உகந்த **மங்கலப் பிரசாதம்** என்பது மட்டுமன்று; **திருமாலுக்கு நிகரான சிறப்பிலனயுமுடையது** என்றும்

1. ஞானபூமி, நவம்பர்' 1987

கருதுகின்ற சமயப் பண்பாட்டு உணர்வு மக்களிடையே நிலவு கின்றது.

திருமால் வழிபாட்டிற்குரிய கருவியாகப் பயன்படுகின்ற துளசியே தெய்வமாகப் போற்றப்பட்டுப் பூசனை (வழிபாடு) பெற்று வருதலை மக்களிடையே காணலாம். இத்தகைய நோக்கத்தில்தான், வீட்டின் முன்புறத்திலும் அகத்தே முற்றத் திலும் துளசி மாடம் அமைக்க முற்பட்டனர்; முன்புறத்தில் இந்த மாடம் அமைக்கையில் ஆடுமாடுகள் சில வேளைகளில் துளசியை மேய்ந்து விடுதலைக் கண்டதும், அகத்தே முற்றத்தில் அமைப்பதைப் பெரும்பாலும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். துளசி மாடம், சுமார் ஒன்று அல்லது ஒன்றே கால் மீட்டர் உயரத்தில் சதுர வடிவில், மேலும் கீழுமான பகுதிகள் அகன்றிருக்கும் வண்ணம் அமைக்கின்றனர். பூசனைபெறும் விதத்தில், விளக்கேற்றுதற்கான அமைப்பில் முக்கோண வடிவங் கொண்ட சிறு மாடங்களையும் துளசி மாடத்தின் பக்கப்பகுதி களில் அமைத்துக் கொள்கின்றனர்.

12.5.1 துளசி வழிபாடு - சமயச் சிறப்புக் குறிப்புகள்

துளசிச்செடி வளர்ந்திருக்கின்ற பகுதியில் திருமால் நான் முகன் உருத்திரன் ஆகிய **மும்மூர்த்திகளுடன் பல தெய்வங்கள் வாசம் செய்வதாகக்** கருதுகின்ற வைணவர்கள் உண்டு. துளசிச் செடி பற்றிச் **சௌரி** என்பவர், ''பெண்கள் மூன்று தேவிகளின் (மலைமகள், அலைமகள், கலைமகள்) சொரூபமாகத் திகழும் துளசிச் செடியை வணங்கி வழிபடுகிறார்கள். குறிப்பாகக் கார்த்திகை மாதத்தில் **துளசி பூசை** விசேடமானது. துளசிக்கும் பாலமுகுந்தனுக்கும் சிறப்பாகக் கல்யாணத் திருவிழா -சாலிக் கிராம மூர்த்தத்தைத் துளசி மாடத்தில் வைத்துத் திருக் கல்யாண உற்சவம் - நடத்துவார்கள்''[1] என்றும், துளசி மாடம் வைத்துத் துளசி வளர்ப்பது பலவகைகளிலும் நன்மை தரும். வீட்டில் மங்களகரமான நிகழ்ச்சிகள் நிறைய ஏற்படும்; வியாதி கள் குறையும்; மனதும் உடலும் நலமாக இருக்கும்; துளசியைத் தினமும் பூசித்து வந்தால் புண்ணியப் பலன்கள் நிறைய ஏற்

1. ஞானபூமி, நவம்பர், 1987

படும்''[1] என்றும் எழுதிச் செல்வது சமயப் பண்பாட்டு அடிப்படையில் போற்றுதற்குரிய குறிப்பாகும். இதனை ஆராய்கையில், மக்களின் தொன்மையான **மர வழிபாட்டு** (Tree worship) அடிப்படையில் கிளைத்த ஒருவகைப் பண்பாட்டுக் குறிப்பெனவே கொள்ளுதல் தகும்.

துளசி வழிபாட்டுக்கு ஆக்கந்தரும் வகையில் புராணங்களும் காப்பியங்களும் பலவகைக் குறிப்புகளைத் தந்துள்ளன.

''சீதை துளசிக்குப் பூசை செய்ததன் பயனாக அவளுக்கு இராமபிரான் கணவனாகக் கிடைத்தார்''[2] என்று **துளசி இராமாயணம்** கூறுதலை நினைவுகூரலாம்.

இராமதாசர், புரந்தரதாசர், ஹரிதாசர் என்பன போன்ற அருளாளர்கள் தம் திருப்பெயர்களால், அவர்கள் கடவுள் மீது கொண்டிருந்த **தாஸ்ய பக்தி**யைப் புலப்படுத்தினர்; அவர்களைப் போன்றே அருளாளர் '**துளசி தாசர்**' (துளசி இராமாயணம் பாடியருளியவர்), துளசி மீது பக்தி கொண்டு அதில் கடவுள் தன்மை, கண்டு பிறரையும் காணுமாறு செய்தார் எனலாம்

15. சமயச் சடங்குகள்:

உலகிலுள்ள பல்வேறு மதங்கள் மக்களிடையே காணப்படுவதால், ஒவ்வொரு மதத்திற்குமுரிய சடங்கு முறைகள் மாறுபாடுகளையும் வேறுபாடுகளையும் கொண்டிருப்பதில் வியப்பில்லை. தனிப்பட்டோர் வாழ்க்கையில் மதப்பிணைப்பு அமைவதால், அவர்களின் பிறப்பிலிருந்து இறப்பு வரையில் மதச்சடங்குகள் அவர்களை ஒருவகைக் குறிக்கோளுடன் கொண்டு செலுத்துகின்றன. ஈண்டு இந்து மதத்தில் காணலாகும் சில மதச் சடங்குகளை மட்டும் சிறிது காண்போம்.

சைவ சமயத்தில் சமயாசாரியாருள் ஒருவராகிய **அருணந்தி சிவாச்சாரியார்**, ''கிரியை என மருவும் யாவையும் ஞானங் கிடைத்தற்கு வாயில்''[3] என்று நவில்வது சிந்திக்கத்தக்கதாகும். சடங்கு என்பது முறையான செயலேயெனினும், ஒரு பயனைக்

1. ஞானபூமி, நவம்பர் 1987
2. மேலது
3. சிவஞான சித்தியார்

குறிக்கோளாகக் கொண்டு செய்யப்படுவதாகும். சமயத் தொடர்புடன் சமுதாயத்தில் வேரூன்றிக் காணப்படும் சமயச் சடங்குகள் தெய்வத் தன்மையுடன் போற்றப்படுகின்றன. "உயிரினிடமாக உண்மையுணர்வை வளர்க்கும் செயல்களே, உயிரை என்றும் மாறா இன்பநிலையில் இலங்கச் செய்யும் செயல்களே, கிரியைகள். அவைகளே மேலானவை. மரபுவழிப் பெயராற் சொன்னால் பதிகன்மங்களையே **கிரியை** எனலாம்"[1] என **மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்** விளக்கிச் செல்வது மனங் கொள்ளத் தக்கதாகும்.

உடலுழைப்பும் மனஈடுபாடும் கொண்ட நிலையில் ஆலயப் பணிபுரிதல், பூசை முதலிய இறைபணி புரிதல், அடியார்க்குத் தொண்டுபுரிதல் முதலியவை புறத்தே அமையும் சமயச்சடங்குகள் எனலாம். உள்ளப்பழக்கமாகிற **பாவனை, தியானம், செபம்** முதலியவை அகத்தே நிகழும் சமயச் சடங்குகள் எனப் போற்றலாம். உயர்ந்த குறிக்கோள் கருதித்தொடங்கப் பெற்ற சடங்குகள் காலப்போக்கில் குறிக்கோளில்லாத பொருளற்ற முறையில் செய்யப் பெறுவதால் அவற்றைப் பிறர் **மூடப்பழக்க வழக்கங்கள்** என இகழ்ந்து பேசவும் முற்படுகின்றனர். ஆன்மநலத் தொடர்புடைய மதச்சடங்குகளை முறையாகப் பின்பற்று வதற்காக வேதங்களும் ஆகமங்களும், சமய நூல்களும் உள்ளன. அவற்றைப் பயின்று மரபுடன் பின்பற்றினால் சமயப்பண்பாடு போற்றப் பெறும். இவ்வாற்றான் ஆசாரியர்களின் அனுபவ அருளுரைகளையும் வேண்டிப் பெறலாம்.

தனிப்பட்டோர் வாழ்விலும் பிறப்பு முதல் இறப்பு முடிய ஏராளமான மதச்சடங்குகள் உள்ளன. உண்மையை உணர்ந்தோ உணராமலோ மக்கள் அவற்றைப் பின்பற்ற வேண்டிய சூழலில் உள்ளனர். குழந்தை பிறந்ததும் சில நாள்கள் கழித்துப் புண்ணிய வசனத்தால் தீட்டுக் கழித்துச் சமயவுணர்வுடன் படையலிடுகின்றனர். காதுகுத்தல் என்பதைக் கோயிலிலோ தாம் வாழும் இல்லத்திலோ பலரறியப் படைய விட்டோ, வேறுவகையில் வழிபாடு நிகழ்த்தியோ மகிழ்ச்சியுடன்

1. திருக்கோயில் (திங்களிதழ்), ஜனவரி, 1969

செய்கின்றனர். குழந்தைப் பருவத்தில் கல்விப் பயிற்சியும் சமயச் சடங்குடன்தான் தொடங்கப் பெறுகிறது. தமிழர் திருமணத்தில் பல்வகைச் சமயச்சடங்குகள் வட்டாரத்திற்கேற்ற மரபுடன் அமைகின்றன என்பது பலரறிந்த செய்தி, வளைகாப்பு அல்லது சீமந்தம் முதலிய சடங்குகளும் சமயச் சார்புடனே நிகழ்த்தப் பெறுகின்றன. இறப்புத் தொடர்பான சடங்குகளிலும் சமயச் சார்பு அமைந்துள்ளது. எனவே, வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் புறநோக்கில் சமயச்சடங்குகள் தவிர்க்க இயலாதவையாக அமைந்து, ஒருவகைப் பண்பாட்டினையே உருவாக்கத் துணைபுரிகின்றன,

உலகில் செந்நெறியில் வாழவும், வாழ்வாங்கு வாழ்தலால் தெய்வநலப்பேறு அடையவும், ஒவ்வொருவர் வாழ்விலும் அகநோக்கில் சில சடங்குகளைத் தம் குலமரபுப்படி மேற்கொள்கின்றனர்.

வெளியே தூய்மை பெற நீராடுதல் போல, உள்ளந் தூய்மை பெற வாய்மையைக் கடைப்பிடித்தல் தேவையாகிறது. வள்ளுவரும்,

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்"[1].

எனப்பாடிச் செல்லுதல் காண்க. நீராடுதலை எளிய சடங்காகக் கொண்ட மக்கள், மதச் சார்புடன் மார்கழி மாதத்தில் நீராடுதலை ஆன்மநலச் சடங்காகவே கொள்ளலாயினர். அந்நிலையில் வைணவ சமயத்தில் **திருப்பாவையும்**, சைவசமயத்தில் **திருவெம்பாவையும்**, சமணக் கொள்கையில் **திருவெம்பாவை** (அவிரோத நாதர் பாடியருளியது) எனும் நூலும் சமயச் சடங்கு நோக்கில் சிந்திக்கத் தக்கவையாகும். இவற்றிற்கெல்லாம் முன்னோடியாகச் சங்க காலத்தில் **'தைநீராடல்'** வழக்கத்திலிருந்ததை நினைவுகூரலாம்.

நீராடி இறைவனை வழிபடுவது **'சமயச்சடங்கு'** என்பதை இந்நூலின் சில இயல்களில் குறித்திருத்தலாக் கண்டு கொள்க.

1, குறள், 298

வெளியே அலைந்தோடும் மனத்தைத் தூய்மைப்படுத்தி உள்முக நோக்கிலே அதனை இறைச் சிந்தனைக்குப் பயிற்றுவிக்க இந்து மதத்தில் பல வழிகள் உள்ளன. குருவருள் பெற்றுத் திருவருள் வளாகத்தில் உலவிவர **மந்திரம், செபம், அட்டாங்க யோகம்** முதலியவை தேவைப்படும். இவையெல்லாம் சமயச் சடங்கின் பாற்பட்டவை என்பதையுணர்வது நல்லது. இவை தொடர்பான சில செய்திகளைப் பிறகு ஓரளவு விளக்கமாகக் காண்போம். முதற்கண் அடிப்படையான ஒரு குறிப்பினை ஈண்டுக் காண்போம்.

அட்டாங்க யோகத்துள் ஒன்றான **பிராணயாமம்,** இடைக்கிடையே ஆன்மசக்தியைத் தூய்மையுறுத்தும் மூச்சடக்கும் பயிற்சியாகும். சமயச் சார்புடன் கூடிய இச்சடங்கினைப் பற்றி **மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்,** "நூல் முறைப்படி ஆயுளை வளர்க்கும் சடங்காகும். ஞானநூல் முறைப்படி மனவொருமைப்பாட்டையும் நினைவாற்றலையும் வளர்ப்பதாகும்"[1] எனக் கூறிச் செல்வது மிகவும் சிந்தித்துப் போற்றற்குரியது.

பொதுவாகச் சமயச் சடங்குகள் உடல் நலத்துக்கும் உள்ளத்து நலத்துக்கும், உயிர் நலத்துக்கும் தேவையான படிநிலையெனலாம்.

13.1. வேள்வி (யாகம்) புரிதல்:

தமிழ் நாட்டில் வடமொழியினராகிய ஆரியர் தென்மொழித் திராவிடர்களுடன் பண்பாட்டமைப்பில் கலந்தினிது பழகி ஒருவகைச் சமயப் பண்பாட்டினை உருவாக்கினர் என்பது வரலாறு. அவ்வாறு உருவாக்கிய காலத்தை வரையறுத்துக் கூற இயலவில்லை. **தொல்காப்பியர்** தம் காலத்திலேயே இருந்த வடவர் தாக்கங் காரணமாகத் தொல்காப்பியம் புறத்திணையியலில், "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்"[2] எனக்கூறி, ஓதல், ஓதுவித்தல், **வேட்டல், வேட்பித்தல்,** ஈதல், ஏற்றல் என அறுவகைத் தொழிலும்

1. திருக்கோயில், ஜனவரி, 1969
2. தொல்காப்பியம், புறத்திணையியல், 20

அந்தணருக்குரியவென்பதைப் புலப்படுத்தினார். இதனை வலியுறுத்துங் குறிப்புக்கள், சங்க இலக்கியங்களில் பல உள்ளன. அரசர்களே வேள்வி அந்தணர்களைச் சார்த்திப் பெருமைப் படுத்தப்பட்டனர் என்பதைக் குறிக்கும் வகையில்,

''அறுதொழில் அந்தணர் அறம்புரிந் தெடுத்த
தீயொடு விளங்கும் நாடன்''[1]

என வருதல் காண்க. வேள்வி செய்யும் அந்தணர்கள் முறையாக மறை பயின்றும் நல்லறெ நாட்டங்கொண்டும் சடை வளர்த்தும் நியமமுடன் இருந்தனர் என்பது,

''கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்''[2]
''அறம்புரி கொள்கை நான்மறை அந்தணர்''[3]
''அவிர்சடை அந்தணர் அங்கி வேட்கும்
ஆவுதி நறும்புகை''[4]

என வருந்தொடர்களால் அறியலாம்.

திருமுருகாற்றுப் படையில் முருகனுடைய திருமுகங்களின் அருட் செயல்களை **நக்கீரர் கூ**றி வருகையில்,

''.........ஒருமுகம், மந்திர விதியின் மரபுளி வழா
அந்தணர் வேள்வி யோர்க்கும் மே''[5]

எனக் குறிப்பிட்டுச் செல்கிறார்; இதனால், தெய்வத்திருவருளும் விருப்பமும் வேள்வி புரிதலுக்கு ஆதரவாக இருப்பதை யுணரலாம். அதே நூலில், **நூறுபரி வேள்வி** (அசுவமேத யாகம்) புரிந்து, வானுலகம் ஆளும் **இந்திர பதவி** பெற்றுள்ள இந்திரனை நூலாசிரியர்,

1. புறநானூறு. 397
2. புறநானூறு, 361
3. புறநானூறு, 93
4. பட்டினப் பாலை, 54-55
5. திருமுருகாற்றுப்படை, 94-96

"நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண் டேந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்"[1]

எனவரும் அடிகளால் குறிப்பிட்டுச் செல்கிறார்.

தொண்டைமான் இளந்திரையன் பெருமையினைக் **கடியலூர் உருத்திரங்கண்ணனார்** பாடுகையில், அந்தணராகிய முனிவர்கள் இயற்றிய வேள்விச்சிறப்புடைய அவனது நாட்டையும் குறிப்பிடு கிறார்: இதனைச்,

"**செந்தீப்** பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும் ஒளிறிலங்
கருவிய மலைகிழ வோனே,"[2]

எனவரும் அடிகளால் அறியலாம். இதனால், மலைச்சாரலில் முனிவர் புரியும் வேள்விக்கு யானைகளும், சமிதைகளைக் கொணர்ந்து தந்த பாங்கினையுணரலாம். மாமன்னன் **தகடூ ரெறிந்த பெருஞ் சேரலிரும் பொறை**, அருமறைப் பொருளைக் கேட்டு முறையாக நோன்பிருந்து வேள்விகள் பல புரிந்தவன்; அவனை **அரிசில்கிழார்**,

"கேள்வி கேட்டுப் படிவ மொடியாது
வேள்வி வேட்டனை உயர்ந்தோ ருவப்ப"[3]

எனப்பாடிச் செல்வது காண்க.

தமிழர்தம் வாழ்வில் **பிறப்பு, திருமணம், பிறந்தநாள் விழா, இறப்பு** முதலிய பல கட்டங்களிலும் ஓமம் வளர்த்துக் கிரியை களைப் புரிவது மரபாயிற்று, **சிலப்பதிகாரத்தில்** அழகிய திரு மண மேடையிலே கண்ணகியைத் திருமணஞ் செய்து கொள்ளும் கோவலன் வைதிக முறையில் வேள்வித்தீயை வலம் வந்துள்ளான் என்பதை **இளங்கோவடிகள்,**

1. திருமுருகாற்றுப்படை, 155-159
2. பெரும்பாணாற்றுப்படை, 458-500
3. பதிற்றுப்பத்து, 44;1-2

''நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்கண் நோன்பென்னை''[1]

(சகடு - உரோகிணி; சாலியொருமீன் - அருந்ததி)
எனச் சித்திரித்துச் செல்வதால் அறியலாம்.

காப்பியங்களிலும் திருமுறைகளிலும் திவ்யப்பிரபந்தங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் வேள்வி பற்றி வருங்குறிப்புக்களைத் திரட்டினால் மிக விரிந்து செல்லும். எனினும், **வேள்வி**யின் தெய்வ நலத்தூய்மை தமிழ்ப் பெருமக்களால் தொன்று தொட்டு உணரப்பட்டு வந்துள்ளது என்பதை ஓரளவு காண்போம்.

அந்தணராகிய **திருஞானசம்பந்தருடன்** தலப்பயணம் புரியும் **திருநீலகண்ட யாழ்ப்பாணரும்,** பாடினி மதங்க **சூளாமணியாரும்** (மனைவி) திருச்சாத்தமங்கையெனும் திருத்தலத்திற்கு வருகின்றனர். சம்பந்தரது பாடலுக்குப் பண்ணமைத்து யாழிலிட்டுப் பெருமை சேர்க்குந் **திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவர் மனைவியாரையும்** அந்தணராகிய **திருநீல நக்கர் சாதி வேறுபாடு கருதாமல்,** மிகத் தூய்மையான **வேள்விக் குண்டத்தின் அருகே இரவில் இருக்கச் செய்தமையைப்** பெரியபுராணம் **குறிப்பிடும்.** இதனால், எத்தகைய உயரிய சமயப்பண்பாடு தமிழ்நாட்டில் நிலவியது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

13. 1.1. வேள்வி - இயல்பும் நோக்கமும்:

உலகில் சூரியன் சந்திரன் ஆகிய சுடர்களைப் போலத் 'தீ'யும் இருளகற்றுங் காரணத்தால் அதனைத் தெய்வமாகப் போற்றி வழிபடலாயினர். இத்தகைய சமயவுணர்வு தோன்

1. சிலப்பதிகாரம், புகார்க்காண்டம், மங்கலவாழ்த்துப்பாடல், 49-53

றுதற்கு முன்னரே உலகியலில் நெருப்பின் தேவை பலவகைகளிலும் உணரப்பட்டது.

உலகியல் வாழ்வில் மக்கள் நெருப்பின் சூட்டைக்கொண்டு பொருள்களைப் பக்குவப்படுத்தத் தெரிந்து கொண்டனர். உணவைச் சமைக்கவும், ஒளியுண்டாக்கி இருளைப் போக்கவும், கொல்லர் முதலியோர் தொழில்களுக்கு அதனைப்பயன்படுத்தவும் படிப்படியே அனல் பயன்பட்டது. வாழ்வியல் வசதிகளைக் காலப் போக்கில் முறையாகப் பெற்ற நிலையில், அனைத்து வசதிகளையும் அளித்த பேரருட் சக்தியாகிய தெய்வநினைப்பு ஏற்பட்டது; அதற்கு நன்றி செலுத்துங் கடமையில் சமயப்பண்பாடு உருவாயிற்று. அந்நிலையில் தெய்வத்துக்கும் உலகத்துக்கும் தமக்கும் உகந்ததாக வேள்வி புரியத் தலைப்பட்டனர், வேள்விகளும் பற்பல நோக்கில் அமையலாயின.

வேள்வித்தீயைப் பலரும் வளர்க்கத் தலைப் பட்டனர்; எனினும், **ஆகவனீயம், காருக பத்தியம், தட்சணாக்கினி** எனும் மூவகைத் தீயை முறையாக வளர்க்குஞ் சிறப்புடையவர்களாக அந்தணர்களே கருதப்பட்டனர்.

இந்து மதத்தின் கிளைச் சமயங்கள் பலவற்றிலும் வேள்விகளை நடத்தும் வழக்கமும் மரபும் பின்பற்றப்பட்டன. ஒரு காலத்தில் வேள்வியிலே பசுவைப் பலி கொடுக்கும் வழக்கமும் இருந்து வந்தது. இத்தகைய உயிர்க்கொலையினைக் கண்டிக்கும் நோக்கத்திலே பௌத்த மதம் தோன்றியதென்பதையும் வரலாறு கூறும். கொல்லாமையை ஆதரிக்கும் திருவள்ளுவர் ஆயிரம் வேள்வி புரிதலை விட ஒருயிரைக்கொன்று புசிக்காமை நல்லது என்ற கருத்துடன்,

''அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று''[1]

என்று கூறிச் செல்லுதல் காண்க.

வேள்விகளைப் பகைமை நோக்கில் செய்யாமல், முறைப்படி ஆன்மநலவுணர்வுடன் செய்தால் உடலுக்கு நல்லது, உயிருக்கும்

1. குறள். 259

நல்லது, உலகத்துக்கும் நல்லது என்பது அனுபவ பூர்வமான உண்மையெனக் கண்டனர். "முறைப்படி நடைபெறும ஓம குண்டத்திலிருந்து எழும்பும் புகையைச் சுவாசித்தும், ஓமச் சாம்பலை நியமத்துடன் அருந்தியும் வந்தால் நோய்கள் தீர் கின்றன என்பர். நோய் நிவாரணி போன்ற வேள்வி பற்றி ஜெர்மனி நாட்டில் ஆராய்ச்சி நடக்கிறது"[1] என்ற குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது.

வேள்வியின் இயல்புகளையும் நோக்கங்களையும் திருவல்லிக் கேணி **பரமஹம்ச ஸ்ரீபுவனேசுவரி சுவாமிகள்** விளக்குகையில், "யாகத்தில் அடிப்படையாக அமைந்துள்ளது தியாகம் தான். அக்கினியில் ஓமம் செய்வது மூலம் நம்முடைய பொருட்களை நாம் தியாகம் செய்கிறோம். செப தபங்களால் ஒருவன் தனிப் பட்ட முறையில் உயர்ந்து மோட்சத்தை அடையலாம். ஆனால் சமூகத்திற்கு நன்மை ஏற்படவேண்டுமென்றால் யக்ஞம் தான் சிறந்த சாதனம். யக்ஞம் என்பது தேவதைகளுக்கான அவிர் பாகத்தை அந்த அந்தத் தேவதைகளுக்குரிய மந்திரங்களைச் சொல்லி அக்கினியில் இடுவது. அக்கினி தேவன் அவற்றை அந்த அந்தத் தேவதைகளிடம் சேர்ப்பிக்கிறார். யக்ஞம் மூலம் தேவதைகள் திருப்தியடைந்து மழை முதலிய வசதிகளை அளிக் கிறார்கள்.

இப்படி மனிதர்கள் தேவர்களுக்கு உதவுவதும், தேவர்கள் மனிதர்களுக்கு உதவுவதும் சக்கரம் போலச்சுழன்று கொண்டே இருக்கவேண்டும் என்று **பகவான் கிருஷ்ண பரமாத்மா** கூறியிருக் கிறார்"[2] என எழுதிச் செல்வது மனங்கொண்டு போற்றத் தக்கதாகும்.

வேள்வியின் நிறைவாகச் செய்வது **பூரணாகுதி ஆகும்**; வேள்விக்குரிய பொருள்களை, வேள்வி செய்யுங் கரண்டிகளின் மேல் ஒரு தட்டில் வைத்துக்கொண்டு வேள்வித்தீயில் இடுவ தாகும். இதன் தத்துவத்தை விளக்குகையில், "பிராணன், புத்தி,

1. அமுத சுரபி தீபாவளி மலர், 1989
2. மேலது.

தேகம் முதலியவற்றால் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி அவத்தைகளில் மனதாலும், வாக்காலும், செயலாலும், கைகளாலும், கால்களாலும், வயிற்றினாலும், சனன இந்திரிய உறுப்புக்களாலும், நினைத்தது சொன்னது செய்தது ஆகிய எல்லாம் தேவிக்கே (தெய்வத்துக்கே) அர்ப்பணம் தான் 'பூரணாகுதியின் அர்த்தம், இந்தப் பூரணாகுதியின் போது ஏற்படும் இந்த உணர்ச்சி நூறு வருடம் தவம் செய்தாலும் வராது''[1] என்று குறிப்பிடுவது மிகவும் உணர்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

13.2 மந்திரத்தில் நம்பிக்கை

சமய அடிப்படையில் இயற்கையைக் கடந்த ஆற்றலில் நம்பிக்கை கொண்டு செயற்படுகையில் மந்திரங்களிலும் நம்பிக்கை கொள்ளலாயினர் மக்கள். பெருந்தெய்வங்களையும் கிராம தேவதைகளையும் அவற்றின் அளப்பருஞ் சிறப்புக்களையும் மக்களின் நினைப்பில் எழுப்பும் வகையில் அவற்றை வழிபடப் பயன்படுபவை மந்திரங்களாகும். மந்திரம் என்பது ஆற்றல் வாய்ந்ததாகத் தொன்மைக் காலத்திலேயே உணரப்பட்டது. அது சான்றோர் மெய்ம்மொழியாகிய வேதத்துடன் இணைத்துச் சிந்திக்கப்பட்டது என்பதை,

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப''[1]

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம்.

உலகளாவிய மதங்கள் பலவற்றிலும் மந்திரங்களைப் பற்றிச் சிந்தனையிருப்பினும் ஈண்டு இந்து மதத் தொடர்புடைய சில சமயங்கள் நோக்கில் அவை பற்றிச் சிறிது சிந்திப்போம்,

சமய நோக்கில் தியானத்திற்கும் செபத்திற்கும் மந்திரமாகிய அரும்பெறலெழுத்துக்கள் அடங்கிய சொற்றொடர்கள் தேவைப்படுதலையுணரலாம். சைவ சமயத்தைப் பொறுத்த வரையில் திருவைந்தெழுத்து மந்திரமாகப் போற்றப்படும். **நமசிவய** என்பதைத் தூல பஞ்சாக்கரமாகவும், **சிவயநம** என்பதைச் சூக்கும பஞ்சாக்கரமாகவும், **சிவயசிவ** என்பதைக்காரண

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், 490

பஞ்சாக்கரமாகவும் கொள்வர். இத்தகைய மந்திரத்தைத் தக்க குரு வாயிலாக உபதேசமாகப் பெறுகையில் அதற்கு ஆற்றல் மிகுதியுண்டு. இதனை **உபதேசம்** எனும் இயலில் கண்டு கொள்ளலாம்.

வைணவ சமயத்தைப் பொறுத்த வரையில் **ஓம் நமோ நாராயணாய** எனும் எட்டெழுத்தே மேலான மந்திரமாகும். கௌமார சமயத்தைப் பொறுத்தவரையில் **ஓம் சரவணபவ நமோ குமாராய** என்பவை மிகச் சிறப்பான மந்திரமாகும். சாக்த சமயத்தில் ஓம்**சக்தி, ஓம் பராசக்தி** என்பவை கண்கண்ட சிறப்புறு மந்திரமாகும். காணாபத்திய சமயத்தில் **ஓம் கணேசாய** என்பது மேலான மந்திரமாகும். இவை போன்றே கிராம தெய்வங்களுக்கும் உரிய மந்திர எழுத்துக்கள் உண்டு.

வேள்வியியற்றுகையில் மந்திரத்தை விதிமுறையுடன் பயன் படுத்த வேண்டும் என்பதை **நக்கீரர்,**

''மந்திர விதியின் மரபுளி வழாஅது
அந்தணர் வேள்வி யோர்க்கும்மே',[1]

எனக் கூறிச் செல்வதால் உணரலாம்.

திருமூல நாயனார் அருளியவை அனைத்தும் திருமந்திர நூலாக உருப்பெற்றன. அவற்றுள் சில தந்திரங்கள் நூலின் இயல்களாயின. அவையெல்லாம் அருளாணைகளாகிய **மறை** களாகவும், மந்திரங்களாகவும் போற்றப்பெற்ற நிலையில் சைவத் திருமுறையில் பத்தாம் திருமுறையாகத் தொகுக்கப் பெற்றுள் ளதை எல்லோரும் அறிவர்.

சேக்கிழார் காலத்திலும் மந்திரம் பற்றிய சிந்தனையிருந் தமையை,

''ஆதி மந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைய மந்திரவிதி வருமே''[2]

எனவருஞ் செய்யுட் பகுதியால் உணரலாம்.

1. திருமுருகாற்றுப்படை, 95-96
2. திருஞான சம்பந்தர் புராணம், 698

மந்திரங்கள் தம் அளவிலும் பிறர்மாட்டும் பயன்படும் என்பதை மக்கள் உணரலாயினர். எனவே, தம் நலத்துக்காகவும் செபம் முதலிய அடிப்படையில் மந்திரங்களை மனத்துள் உச்சரிக்கலாயினர். பிறகு, தம் நலமேயன்றிப் பிறர் நலத்துக் காகவும் மந்திரங்களை மக்கள் பயன்படுத்த முற்பட்டனர், காலப்போக்கில் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் விளையாட்டாகவும் மந்திரம் கருதப்பட்டது. இவ்வாற்றான், மந்திரவித்தை -**மாயவித்தை** (ஜாலவித்தை) -பயன்பட்டு வருகின்றது.

நற்செயல்களுக்கும் உலக நலத்துக்கும் பயன்படும் வகையில் மந்திரங்கள் **ஸ்ரீசக்கரம்** போன்ற சக்கரங்கள் வாயிலாகவும் மக்களிடையே அறிமுகமாயின. இஃது ஒருபுறமிருக்க, மக்களில் சிலர் கிராம தேவதைகளைத் தம் வசமாக்கித் தீய செயல் களுக்கும் பயன்படுத்தலாயினர், மானுட சக்திக்கு அப்பாற்பட்ட அத்தகைய செயல்களைப் புரிபவர்கள் **மந்திரவாதிகள்** எனப் பட்டனர், தாந்திரிகக் கோட்பாடுடையவர்கள் சிலரும் இத் தகைய செயல்களுக்கு ஒத்துழைப்பு நல்கியதால், தமிழ்ப்பண் பாடாகிய **பொதுநலம்** சோதனைக்குள்ளாயிற்று.

வில்லிபுத்தூராழ்வார் காலத்தில் (கி.பி. 15ஆம் நூற்றாண்டு) **சம்பந்தாண்டான்** என்பவன் தேவி உபாசகனாகவும் தாந்திரிகச் சார்பில் மந்திரங்களில் வல்லவனாகவும் விளங்கினான். அவன் திருப்புகழ் அருளிய **அருணகிரிநாதருடன்** பகைமை கொண்டு, பல வகையில் இடர் விளைவித்தான் என்பதையும், பொறாமை யுருக்கொண்ட அவன் காளியால் கொலையுண்டான் என்பதை யும் அருணகிரிநாதர் வரலாற்றால் அறியலாம்.

சமய நம்பிக்கையுடையவர்கள் பலரும் மந்திரங்களில் நிரம்ப நம்பிக்கை கொண்டுள்ளனர், எனவே விடக்கடி தீர்க்கவும் பேயோட்டவும் மந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர்; உடல் நோய் தீர்க்கவும் நீரை மந்திரித்துக் கொடுத்து வருகின்றனர். இவ்வாறெல்லாம் மக்களுக்கு மந்திரத்தால் தொண்டு செய்பவர் களை **மந்திரசித்தி** கொண்டவர்களாக உலகம் போற்றி வருகிறது.

வேத மந்திர சொரூபனாகவே அருணகிரிநாதர் போன்ற அருட்செல்வர்கள் போற்றுவது ஒருபுறமிருக்க, மந்திரத்தையே பரம்பொருளெனக் கொள்ளும் சமயம் **'மந்திரவாதம்'** எனப் பெயர் கொண்டது; இதனை **யாழ்ப்பாணம் அகராதி** குறிப்பிட்டுக் காட்டுகிறது.

ஆகவே, மந்திரங்கள் பல்வேறு நோக்கில் மக்களின் வாழ்க்கையிலே ஒரு வகைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை மனங்கொள்ளுதல் தகும்.

13. 2. 1. மந்திரம் -பிரணவம்:

'ஓம்' எனும் பிரணவம் இந்து மதத்தில் எல்லாச் சமயங்களோடும் தொடர்பு கொண்டு, தாரகமாய்ப் போற்றப்பெறும் மூலமந்திரமாகும். ஒவ்வொரு சமய தெய்வத்தைக் குறிக்கும் **'வித்து (பீஜ) அட்சரம்'** அல்லது உயிர்நிலையெழுத்துக்கும் முன்னொட்டு (Prefix) ஆக, மக்கள் சமயவுலகில் போற்றி வருகின்றனர். அஃதாவது, **காணா பத்தியத்தில்** 'ஓம் கணேசாயநம' என்றும், **சௌரத்தில்,** 'ஓம் சூரிய மூர்த்தியாய நம' என்றும், **சைவத்தில்** 'ஓம் சிவயநம' என்றும், **வைணவத்தில்** 'ஓம் நமோ நாராயணாய' என்றும், **சாக்தத்தில்** 'ஓம் சக்தியேநம' என்றும் **கௌமாரத்தில்** 'ஓம் குமாராயநம' என்றும், நவின்று மனநிறைவு கொள்கின்றனர்.

'ஓம்' என்பதில் - அகர, உகர, மகரங்கள் (அ-உ-ம்) - அட்சரங்கள் உள்ளன. இந்தப் பிரணவத்திற்குப் பொருள், அடியார்களின் மனப்பக்குவத்திற்கேற்பக் கண்டு விண்டுரைக்கின்றனர். பிரணவப் பொருளாகவேயுள்ள **சிவபெருமான்,** மற்றொரு பிரணவப் பொருளாகவே தோன்றிய முருக**வேளிடம் பிரணவத்தின் பொருளை உபதேசிக்குமாறு வேண்டியதும், உபதேசம் பெற்றதுமாகிய நிகழ்ச்சிகள் திருவேரகமாகிய சுவாமிமலையில்** நிகழ்ந்தன என்பது பலரும் அறிந்ததே; இதனாலேயே, முருகவேள் **'சாமிநாதன்'** என அழைக்கப்படுவதும் தெரிந்ததே. இந்த நிகழ்ச்சி காரணமாகப் பிரணவத்தின் மாபெருஞ் சிறப்பினை எல்லோரும் உணரலாம் என்பதை முன்னரே கண்டோம்.

பிரணவத்திலுள்ள அகர உகர மகர எழுத்துக்கள் வரிசை மாறி உ-ம்-அ என்று வருகையில் 'உம' 'உமா' என ஆவதால் அதனைத் **'தேவிப்பிரணவம்'** என்றும், **'சக்திப்பிரணவம்'** என்றும் உத்தம சித்த விருத்திக்கு அறிகுறியாக 'உமா' என்பது விளங்குகிறது என்றும் கூறுவதால், பிரணவத்தின் சிறப்பு மேலும் மிகுவதை உணர்ந்து போற்றலாம்.

மேலும், பிரணவத் தொடர்பாக அனல அலையான சமயச் சிந்தனைகள் உண்டு. எடுத்துக் காட்டாகச் சைவ சமயத்தில், மேற்காணும் 'உம' எனும் தேவிப் பிரணவத்திலே உச்சரிப்பு நோக்கில் சிந்தித்து, 'உ' என்பது திர்வகித்தல் (காத்தல்) எனும் தொழிலையும், 'ம்' என்பது அழித்தல் எனும் தொழிலையும், 'அ' என்பது படைத்தல் தொழிலையும் குறிக்கும் என்பர்; **காத்தலைத்** தொடர்ந்து வரும் **அழித்தலினின்றும்**, உலகினைப் படைப்பவள் 'உம' (உ-ம்-அ) என்றும் விளக்கிச் சக்திப் பிரணவத்தின் பெருமையை உணர்த்துவர்.

13.2.2. சமயப் பண்பாடு - உபதேசம்:

சமய வாழ்வியலில் உபதேசம் என்பது ஞானியர் அருகே இருந்து மந்திர வாக்கினைப் பெறுவதாகும். உபதேசம் என்றால் அருகான இடத்திலிருத்துவது, அல்லது, இருப்பது எனச் சொற்பொருள் காண்பர். நல்ல ஞானாசாரியர் அல்லது குருமார், பக்குவப்படுதற்குரிய மக்களைத் தேர்ந்தெடுத்துச் சீடர்களாகப் பாவித்து (மனங் கொண்டு) அருளுரைகளை வழங்குவர். அவ்வாறு வழங்கப்படும் அருளுரை உபதேச மொழியாகப் போற்றப்படும்.

மதக் கோட்பாடுகளைச்சீடர்களுக்குத் தக்கவாறு உணர்ந்தும் ஞான உபதேச உத்தியினை **'உபதேசகலை'**[1] என உரைப்பர். மந்திர உபதேச மாட்சியினைப் புலப்படுத்தும் வண்ணம் ஞான நூல்களும் தோத்திரங்களும் புராண நிகழ்ச்சிகளுமாகப் பல உள்ளன.

ஞான நூல் நோக்கில், தட்சணாமூர்த்தி தேசிகர் இயற்றிய ஒரு பண்டார சாத்திரமாகிய 'உபதேசப்பஃறொடை', அம்பல

1. சிவஞானசித்தியார், அளவை 13, சிவாக்கிரயோகிகள் உரை

வாண தேசிகர் இயற்றிய ஒரு பண்டார சாத்திரமாகிய, **'உபதேச வெண்பா'** ஆகியவை சைவ சமயத்தில் குறிப்பிடத் தக்கவை. **மணவாள மாமுனிகள்** இயற்றிய ஒரு வைணவ மரபு நூலாகிய **'உபதேச ரத்தினமாலை'** வைணவ சமயத்திலும் பெரிதும் போற்றப்படுகின்ற நூலாகும்.

மந்திரோபதேசம் செய்கின்ற பெருஞ்சிறப்பினை - **உபதேச சித்தியை** - உணரும் வகையில் திருவிளையாடற் புராணத்திலே[1] **பரஞ்சோதி முனிவர்** நன்கு புலப்படுத்தியுள்ளார்.

உபதேசம் பெறுவதற்கென இடம், பருவம், சூழல் ஆகிய தொடர்பில் பக்குவம் தேவை. இத்தகைய உபதேசப் பெருமையை உலகினர்க்கு உணர்த்துவதற்காகவே **சிவபெருமான்** தன் அல்புத் திருமகன் **கந்தப் பெருமானிடம் ஒரு சீடன் போலப்** பணிவுடன் பிரணவத்தின் பொருளான மந்திர உபதேசம் பெற்றருளினான், என்பது நினைந்து போற்றற்குரியது. இந் நிகழ்ச்சி ஒருவகையில் **பாவனையேயெனினும்** உலகினர் பெரிதும் சிந்தித்தற்குரிய அருங்குறிப்பாகும்.

மகாபாரதத்தில் சூத்திரதாரியான **கண்ணன்**, போர்க்கள மத்தியில் தடுமாறியவுணர்வுடன் தத்தளிக்கும் **அருச்சுனனுக்குத்** தத்துவப்பிழிவாகக் **'கீதோபதேசம்'** புரிந்ததை நினைவிற் கொள்ளலாம். தானே அனைத்தும் என்று உபதேசித்ததுடன் **விசுவரூபம்** எடுத்துக் காட்சிச்சான்றாகவும் உணர்த்தியருளினான்.

திருவாதவூரரை ஆட்கொள்ளும் **சிவபிரான்** குருவடிவாகக் **குருந்த மரத்தின் கீழ்** எழுந்தருளிப் பிரணவ மந்திரம் உபதேசித் தருளினார்; அதனைப் பக்திப்பாங்குடன் ஏற்றுக்கொண்டு உய்ந்த திறத்தினை மணிவாசகர்,

> "நானேயோ தவஞ்செய்தேன் **'சிவாயநம'** எனப்பெற்றேன்
> தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
> தானேவந் தெனதுள்ளம் புகுந்(து) அடியேற் கருள்செய்தான்
> ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"[2]

எனப் பாடிச் செல்வதால் உணரலாம்.

1. அட்டமாசித்தி படலம், 129
2. திருவாசகம், திருவேசறவு, 10

மணிவாசகர் அருளனுபவ நிலையைச் சீர் தூக்கிப் பார்த்தால் ஞானகுரு ஆன்மிகவுலகில் இன்றியமையாதவர் என்பது இனிது புலப்படும்.

தாம் ஞானோபதேசம் பெற்ற பெரும் பேற்றினை நன்றி யுணர்வுடன் மணிவாசகர் நினைவுகூர்கையில்,

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறவினை அறியா நிழலது போல
முன்பின் னாகி முனியாது அத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்க
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதஎன் றரற்றி"[1]

எனப்பாடிச் செல்லுதலைச் சிந்தித்தல் நல்லது.

எவ்வளவோ ஊற்றமான அரிய கருத்துக்களைத் தம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்தும் பாங்கினில் உலகிற்குணர்த்துவதைப் **பட்டினத்து அடிகள்,**

''ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வ மெல்லாம்
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்காம லேநமக் கிட்டபடி
என்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே''[2]

எனப் பாடியருளியமையால் அறியலாம்.

திருப்புகழ் அருளிய **அருணகிரிநாதர்,** திருவண்ணாமலையில் திருமுருகனால் ஆட்கொள்ளப் பெற்றவர். '**சும்மா இரு**' என்ற உபதேசமந்திரமொழி இறைவனால் அருளப்பெற்றதும் அவர் பெற்ற அருளனுபவம் சொல்லால் வடிக்கத்தக்க எளிதன்று; இதனைக் **கந்தரனுபூதி**யில் (12).

---

1. திருவாசகம், போற்றித்திருவகவல், 75-81.
2. பட்டினத்துப்பிள்ளையார் திருப்பாடல்கள், பொது. 20

"செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
'சும்மா இருசொல்லற' என்றலுமே
அம்மா ! பொருளொன்றும் அறிந்திலனே"

எனவரும் பாடலால் உணரலாம். அதுமட்டுமன்று; மேலும், ஒரு தெய்வநலச் சூழலில் இறைவன் அருணகிரிநாதரிடம் உபதேச மொழியைப் புலப்படுத்தியுள்ளான்; இத்தொடர்பில்,

"நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல்விண் ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே"[1]

எனவரும் பாடல் காண்க.

வைணவ வுலகில் ஆசாரிய நிலையில் முடிபணியாகக் கருதப் பெறும் **ஸ்ரீ இராமானுசர்** தம் உய்திக்கெனச் சிறந்த நாராயண மந்திரமாகிய **'துவயம்'** என்பதை உபதேச வாயிலாகப் பெற எண்ணினார். **திருக்கோட்டியூர் நம்பிகளை** நாடி விண்ணப்பிக்கிறார். ஆனால், அந்த மகானோ **பதினெட்டுமுறை** அவரை அலையச் செய்து, பலவிதச் சோதனைகளுக்குப்பிறகு, அவருடைய உயிரே போய்விடும் நிலையில் **மந்திரோபதேசம்** புரிந்தருளினார். இதனால், பக்தி வைராக்கியம் சீடனுக்கு இருப்பதைப் பொறுத்தே உபதேசம் புரிதல் வேண்டுமென்ற கோட்பாடு சிலரிடம் இருந்தமையைத் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அரும்பாடுபட்டுப் பெற்ற **பரம ரகசிய மகா மந்திரத்தைக்** குருவின் ஆணையை மீறிய நிலையில், இராமனுசர் திருக்கோட்டியூர் கோபுரத்தின் உச்சி மீதேறி நின்ற வண்ணம் ஊரெல்லாம் கேட்க உரத்த குரலில் திசையெங்கும் கேட்குமாறு உபதேசம் செய்தார். இதனையறிந்து கடுஞ்சினங் கொண்ட திருக்கோட்டியூர் நம்பிகள் இராமானுசரை வரவழைத்து, "இதன் விளைவு என்ன தெரியுமா?" என்று கேட்கலானார்.

1. கந்தரனுபூதி, 36

உடனே பணிவுடன். "தெரியும் சுவாமி! தங்கள் ஆணையை மீறியதால் நான் நரகம் போக நேரிடும்; அதற்குக் கவலைப் படவில்லை. இந்த மந்திரத்தைக்கேட்ட எண்ணற்ற மக்கள் பிறவிப்பிணி திரும்நிலையில் நான் ஒருவன் நரகம் போவதால் எனக்குப் பரமதிருப்தியே" எனப் பதில் கூறினார். இராமானுசரின் பரோபகாரச் சிந்தையை உணர்ந்ததும் நம்பிகள் தம் கண்களில் நீர்மல்க ஆர்வத்துடன் அவரைத் தழுவிக்கொண்டு, "அனைவரின் மீட்சிக்காகப் பாடுபடும் நீர்தாம் உண்மை வைணவர்" என்று வானளாவப் புகழ்ந்தார் என்பது வரலாறு.

தாயுமான அடிகளுக்கு உபதேசம் செய்தருளியவர் மௌன குரு; திருமூலநாயனாரது மரபில் வந்தவர் மௌன குரு என்பதை மௌன குரு வணக்கத்தில் தாயுமானவர்,

"மந்த்ர குருவே யோக தந்த்ர குருவே மூலன்
மரபில் வரு மௌன குருவே"

எனக் குறித்திடுதலால் உணரலாம். மௌன குருவாய்த் தாயுமானவர் காண எழுந்தருளிய ஞானாசாரியார் வாயால் உபதேசம் நவிலாமல் சைகையால் (gesture) உபதேசம் வழங்கியருளினார். வேதாகமத் துணிவு ஒன்றே எனச் சுட்டியதுடன் சிவஞான சித்தி நெறியை மௌனத்தின் வாயிலாகக் காட்டியருளினார். மோன சிவனான ஆல்மர்செல்வன் கல்லால மரத்தின் கீழ் நால்வர்க்கு அருளிய திறத்தையும் தாயுமானவர் நினைவுகூர்ந்து உய்யுமாறு மௌனகுரு குறிப்பால் உணர்த்தியருளினார். நல்லாற்றுப்படுத்தப் பட்ட தாயுமானவர், இறைவனையே குருவாக வரித்த நிலையில்,

"மணியே யென் கண்ணேமா மருந்தே நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோன ஞானம்
அமைத்த சின் முத்திரைக் கடலே"[1]

என்று பாடிச் செல்வதைக் காண்க. இதனால் வாயாலன்றியும் சைகையாலும் உபதேசம் புரியலாமென்பது தெளிவாகும்.

பொதுவாக உபதேசம் என்பதை ஞானாசிரியர் வாயிலாகச் சீடர்கள் பெறுவதாகும். உபதேசத்தை ஒருவர் மற்றொருவருக்கு

1. தாயுமான சுவாமிகள் பாடல்கள், பன்மாலை, 8

வழங்குவேதயன்றி, ஒருவர் தம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்தும் வகையிலே அறிவுரை அல்லது அருளுரைப் போக்கில் வழங்குவதும் உண்டு. இத்தகைய சிந்தனைக்கு ஊற்றுக்களம் சங்க காலத்தில் இருந்துள்ளது. 'நெஞ்சறிவுறூஉ' எனும் புறத்துறை யமைப்பினை ஈண்டு இயைபுடன் சிந்திக்கலாம். படிப்படியே அது வளர்ந்து ஆன்மீக வளாகத்தில் **சமயாசாரியர்கள், சந்தானாசாரியர்கள், ஆழ்வார்கள்** முதலிய அருளாளர்கள் தம் நெஞ்சத்தை விளித்து உபதேசிக்கும் அருளுரைகளாக மலர்ந்துள்ளதை நினைவிற் கொள்க. பட்டினத்து அடிகள் உலக நோக்கில் நெஞ்சிற்கு உபதேசித்ததை முன்னரே கண்டோம்.

14. மத, சமயப்பண்பாடு : பிரசாதம் (சேடம்)

உலகிலுள்ள பல மதங்களிலும் தத்தம் வழிபாட்டு இடங்களாகிய கோயில்கள் மடங்கள் முதலியவற்றிலே மரபுப்படி மக்களுக்குப் படையற் பொருளாகிய பிரசாதங்களை வழங்குவர். எளிய பொருள்களாகிய உணவுப் பண்டங்கள், மலர்கள், திருநீறு, குங்குமம், சந்தனம், தீர்த்தம் முதலியவை ஆலயங்களில் இறைவன் திருமுன் படையலிட்ட நிலையில் பிரசாதங்களாகக் கருதப்படும்; அவற்றுக்குத் தெய்வநல ஆற்றல் இருப்பதாக நம்புவது மத நம்பிக்கை மரபாகும்.

இந்து மதத்தில் பிரசாதத்தைச் சேடம் என வழங்குவர். பல்வகைச் சமயக் கோயில்களில், ஆங்காங்குள்ள சுவாமிசன்னிதிகளில் வழங்கப் பெறும் பிரசாதங்கள் பலவகையினவாகும்.

ஆலயங்களில் வழிபடுவோர்க்குப் பிரசாதம் வழங்குவதென்பது தொன்று தொட்டு வரும் சமய மரபேயாகும். சங்கம் மருவிய காலத்துக் காப்பியமாகிய **சிலப்பதிகாரத்தில்** வடபுலம் நோக்கிச் செல்ல விருக்கும் சேரன் செங்குட்டுவனைப் பற்றிக் கூறுகையில் இளங்**கோவடிகள்,**

''நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
உலகுபொதி உருவத் துயர்ந்தோன் சேவடி
மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு
....
ஆடக மாடத் தறிதுயில் அமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்

தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கின னாகித் தகைமையிற் செல்வுழி''[1]

என விவரித்துச் செல்லுதல் காண்க.

தலையில் சூட்டிக் கொள்ளும் பூவைக் **'குஞ்சிப்பூ'** என்று குறிப்பர். **அப்பூதியடிகளுக்கு** இறைவன் திருவடி குஞ்சிப்பூவாய்ச் சிறந்தலை **அப்பரடிகள்,**

''பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே''[2]

எனக் குறித்தலால் அறியலாம்.

முற்காலத்தில் கோயிலிலே வழங்கிய **சேடமாகிய மலரைத்** தலையிலும் காதிலும் அணிந்து கொண்டு மகிழ்வுற்றனர். அதே பண்பாட்டு மரபு இக்காலத்திலும் சில ஊர்களிலே நடைமுறையில் இருக்கின்றது.

படையலுக்கான உணவுப் பொருள்களைப் - பலிப்பொருள்களைப்- பற்றிக் கோயிற் பண்பாட்டில் வழிபாடு எனும் வேறொரு தலைப்பில் விவரமாகக் காணலாம்; அது தவிர்த்துப் பிரசாதங்கள் என்பது பற்றிப் பொது நோக்காகச் சிலவற்றைக் காண்போம்.

இந்துமதக் கிளைச்சமயங்களாகிய சைவ சமயத்தில் **சிவன் கோயிலில்** திருநீறும், **அம்மன் கோயிலில்** குங்குமமும், **வைணவக் கோயில்களில்** தீர்த்தமும் துளசியும் பிரசாதங்களாக வழங்குவர். சைவக் கோயில்களில் திருநீற்றை நேரடியாகக் கையில் வழங்குவதும், இலையில் வைத்து இலை விபூதியாக வழங்குவதும் உண்டு. இவ்வாறான நடைமுறைகளைப் பார்த்த பிற மதத்தினரும் தம் சமய நிறுவனங்களில் முறையாகப் பிரசாதம் வழங்கத் தலைப்பட்டுள்ளனர், எடுத்துக்காட்டாக, இசுலாமிய

1. கால்கோட் காதை, 54-67
2. திருமுறை. 4. 12 10

மத நிறுவனங்களாகிய **தர்கா** (நாகூர் மீரான் சாயுபு தர்கா) போன்ற இடங்களில் **மல்லிகைப்பூவும்**, **ஊது** ஆகிய (சாம் பிராணித் தட்டின் அடியில் சேரும் துகள்) **நீறும்**, சமாதியின் தலைமாட்டில் வைத்தெடுத்த **தீர்த்தமும் நெய்யும் சந்தனமும்** வழங்கி வருகின்றனர்.

பொதுவாகத் திருக்கோயில் பிரசாதத்தில் தெய்வத் திரு வருட் பதிவு ஏற்படுவதாக மக்கள் நம்பிவருகின்றனர் மக்களின் நம்பிக்கைக்கேற்பப் பயன்களும் கிட்டுகின்றன.

கோயில் பிரசாதத்தில் **அருட்காந்தம்** பதிந்து, சக்தியுடைய தாக அது போற்றப்படுவதை அருட்செல்வர்கள் பன்னெடுங் காலமாகக் கூறி வருகின்றனர். திருநீற்றின் பெருமையைத் **திருஞான சம்பந்தர்** அருளிய **'திரு நீற்றுப்பதிகம்'** வாயிலாக உணரலாம். இத்தகைய பிரசாதங்களைப் பற்றி வெளிநாட்ட வர்களும் சமயநோக்கிலும் அறிவியலடிப்படையிலும் ஆராய்ந்து முடிவுகள் கூறிவருகின்றனர். இவ்வாற்றான் **சார்லஸ் டபிள்யூ லெட்பீட்டர்** தம் கருத்தினைப் புலப்படுத்துகையில், 'இந்தியா வின் கோயில்களில் அளிக்கப்படும் பிரசாதங்களும், அவற்றின் தன்மையும் நாம் சாதாரணமாக வெளியே காண்பவற்றைக் காட்டிலும் அபாரமான சக்திவாய்ந்தவை என்று மற்றவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்' எனக் கூறியுள்ளார்.

ஆலயப் பிரசாத நோக்கில், அருள்மிகு பழநி தண்டாயுத பாணி கோயில் பஞ்சாமிர்தமும் திருநீறும், ஸ்ரீமுஷ்ணம் அருள் மிகு பூவராகசாமி கோயில் கோரைக்கிழங்காலான பிரசாதமும், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசாமி ஆலயத் திணைமாவுப் பிரசாதமும், வைத்திசுவரன் கோயில் அருள்மிகு வைத்தியநாதர் சித்தாமிர்தக் குளத்து மண்ணில் தயாரிக்கப்படும் மாத்திரைப் பிரசாதமும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. ஆந்திரநாட்டு அருள்மிகு திருப்பதி வேங்கடவன் கோயில் லட்டும் அபிடேக தீர்த்தமும் இவ்வாற்றான் குறிப்பிடத்தக்கவை.

14.1 வழிபாட்டுப் பொருள்களும் (பிரசாதமும்) தத்துவமும் - சிறப்பு நோக்கு:

முன்னோர்கள் இறைவழிபாட்டிற்கும், நோய் தீர்க்கும் நோக்கில் அமைந்த மந்திர உச்சாடனத்துக்கும் சில பொருள்

களைப் பயன்படுத்துகின்றனர். அறிவியலணுகு முறையில் ஆராய்ந்த நிலையில் சோதனை முடிவுகளாக **மின்சாரம் பாயும் சக்தி** (Electrical conductivity) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'Hinduism - A Scientific -Approach' (குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி வெளியீடு) வாயிலாகக் கீழ்க்கண்ட செய்திகள் காணக்கிடைக்கின்றன.

பொருள்கள்	இரு மின்மூனைகளுக்கு (Electrodes) இடையிலுள்ள தூரம்	மின்சாரம்பாயுந்திறன்
வெற்றிலை	3 செ.மீ.	.012
வேப்பிலை	3 செ.மீ.	.400
மாவிலை	3 செ.மீ.	.333
துளசி	3 செ.மீ.	.200
சாதாரண இலை/புல்	3 செ.மீ.	.002
சுண்ணாம்பு	3 செ.மீ.	.003
எலுமிச்சம்பழம்	2 செ.மீ.	.1475
மாம்பழம்	2 செ.மீ.	.300
வாழைப்பழம்	2 செ.மீ.	.050

இதிலிருந்து வேப்பிலைக்கு உள்ள மின்சாரம் பாயுந்திறன் மற்றவற்றைவிட மிக அதிகமாக இருப்பதைக் காணலாம். நமது கோயில்களில் பூசாரிகள் மந்திரிக்கும் போதும், பிரார்த்தனைக்காக மாரியம்மன் கோயிலுக்குப் பக்தர்கள் வரும்போதும் வேப்பிலையை உபயோகிப்பதன் காரணம் இதுதான். அதே போல மாவிலைக்கும், மாம்பழத்துக்கும் இந்தச்சக்தி அதிகமாக இருக்கிறது. பண்டிகைக் காலங்களில் இவற்றைப் பயன்படுத்துவதற்கும் இதுதான் காரணம். வாழைப்பழத்தைக் காட்டிலும் எலுமிச்சம்பழத்துக்கு இத்திறன் மூன்று மடங்கு அதிகமாக இருப்பதையும் பட்டியலில் காணலாம்''[1] எனவருங் குறிப்பு மிகவும் சிந்தித்து மனங்கொள்ளத்தக்கது.

இவ்வாறு அறிவியலடிப்படையில் சமயச் சிந்தனைகளுக்கு வலிமையூட்ட நிரம்ப வாய்ப்பு உள்ளது. இதனால் நம் முன்

1. ஞானபூமி - திங்களிதழ், நவம்பர்,84, பக். 41-42.

னோர்கள் எதனையும் காரணம் கருதியே செய்துள்ளனர் என்பது பெறப்படும் நாட்டிற்கேயுரிய தத்துவ அணுகுமுறையும் சமயச் செந்நெறிக்கு அரணாகும். இவ்வாற்றான் வழிபாட்டுப் பொருள்கள் சிலவற்றுக்குத் தத்துவ விளக்கங் காண முயல்வோம்.

மலர்கள்: போதிய மணமில்லாத இலைகளுடன் கூடிய செடி கொடி மரங்களில் கூட, (அரும்புப் பருவத்திலும் மண மில்லாதிருந்த) மலர்கள் மலர்ந்ததும் நறுமணம் வீசக் காண லாம். அதுபோலவே, சரியான மனப்பக்குவம் அடையும் வரை யிலும் எந்திரம்போல் இயங்கிய மனிதன், சமயவுணர்வு முகிழ்த் ததும் தெய்வ வழிபாட்டிற்குச் சித்தமாகிறான் என்பதனை உய்த்துணர வேண்டும். ''நம் உடம்பே ஓர் இலைதான். இலைக்கு ஒரு வாசனையும் தனியான மருத்துவக் குணமும் இருப்பதைப் போல, நமது உடம்பிலும் மூன்று விதமான குணங்கள் இருக் கின்றன. நாம் புஷ்பம் என்று சொல்வது நம்முடைய இதயத் தைத்தான்; அதில் பக்தி மலர்ந்து மணஞ்செய்ய வேண்டும்'' என்று ஸ்ரீ சத்திய சாயிபாபா பன்முறை கூறிக் காட்டுவார். ஈண்டு இதயம் என்பது மனித உறுப்பு மட்டுமன்று; உயிர் களிடத்து இரக்கங் கொள்கின்ற - அன்பு பாராட்டுகின்ற - பக்குவ மலர்ச்சி என உணர்தல் வேண்டும். அத்தகைய இதயத்தைத் தாமரை மலரெனப் போற்றி இறைவனுக்கு அருச்சிக்க வேண்டு மென்பது திரண்ட கருத்து.

பழம்: பழம் என்பது மனித மனம் அளிக்கும் எண்ணங்கள். பிஞ்சாகவும், காயாகவுமிருக்கையில் கசப்புடனும், துவர்ப்புடனும் விளங்கலாம்; அவை முதிர்ந்து பக்குவப்பட்ட நிலையில் இனிப் பாகத் தோன்றும்; இனிய பழங்களைப்போல நல்லெண்ணங்கள் கொண்ட இனிய தூய உள்ளத்தை இறைவனுக்கு வழிபாடாகப் படைத்தல் வேண்டும் என்பது தத்துவம்.

நீர்: அபிடேகத்திற்கும், பூசைக்கும் பயன்படுத்தும் நீர், புனிதமான நீர்நிலைகளிலிருந்து கொண்டு வரப்படவேண்டும். இக்காலத்தில் பயன்படும் நீர்க்குழாயில் பிடித்த நீரைக்

கொணர்ந்து பூசை வழிபாட்டிற்குப் பயன்படுத்துதல் தகாது. நீரின் தத்துவம் கடவுளை நினைந்து நினைந்து கசிந்துருகிக் கண்ணீர் மல்குதலில் உள்ளது என்பதை உணர்வது நல்லது வழிபாட்டு நீர், ஈரமுள்ள நெஞ்சத்தில் அன்பின் புலப்பாட்டைக் குறிக்கும் என்பர்.

தேங்காய்: தேங்காயை மட்டை நீக்கியும், நாரை நீக்கியும் வழிபாட்டிற்குப் பயன்படுத்துகிறோம். மாயைகன்ம மலங்களை முறையே மட்டையும் நாரும் உணர்த்தும். தேங்காயை உடைப்பது வெளிஓடாகிய ஆணவத்தை உடைப்பதாகக் கருதுதல் வேண்டும். உடைத்து உள்ளே இருக்கும் நீரை, வழிபடுபவனது தெளிந்த மனத்தைக் குறிப்பதாகக் கொண்டு அதனையும் தெய்வத்துக்கு வழங்கிவிடுதல் மரபாகும். சுருங்கக் காணின், மனத்தில் உள்ள ஆசாபாசங்களை நீக்கிவிட்டு, மனத்தூய்மையுடன் காதலாகிக் கசிந்து இறைவன் முன் கண்ணீர்விட்டு வழிபடுதலை இது குறிக்கும். மட்டையுடன் முதிர்ந்து தேங்காயின் உள்ளே நீர் இருக்கும் வரையில் அது மீண்டும் மீண்டும் தென்னையாக வளரக்கூடியதாகவே இருக்கும். தேங்காய் நீரின்றி முற்றிவிட்டால், அது அப்புறம் முளைவிட்டு மரமாக ஆகுஞ் சக்தியை இழந்துவிடும். அதைப் போலவே அன்பின் புலப்பாடாகிய கண்ணீரை இறைவன் திருவடியில் கொட்டிவிட்டால் மறுபிறவி வாய்க்காது என்றுங் கூறுவர்.

15. திருத்தலப்பெயர்கள் - மாற்றங்களும் விளைவுகளும்:

உலகத்தில், இட்டு வழங்குதற்காக மக்களுக்குப் பல்வேறு காரணங்களால் பெயர்கள் அமைகின்றன; இதைப்போலவே ஊர்களுக்கும் பல்வேறு காரணங்களால் பெயர்கள் அமைந்துள்ளன. அவை காலப்போக்கில் மாற்றங்களைப் பெறுதலும் உண்டு. சொல்லின் செல்வர் **ரா. பி. சேதுப்பிள்ளை** எழுதிய **'ஊரும் பேரும்'** எனும் சிறந்த ஆராய்ச்சி நூலைப் பயின்றால் இந்த உண்மை தெளிவாகப் புலப்படும்.

ஊர்ப் பெயர்களில், சிறப்பாகத் திருத்தலப் பெயர்களில் மாற்றம் ஏற்படின் விளைவுகள் சங்கடமாகின்றன. சைவத் திரு

முறைகளையோ வைணவப்பிரபந்தத்தையோ தலபுராணங் களையோ படித்தவர்கள், திருத்தலப்பயணம் மேற்கொள்கை யில், மாற்றத்துடன் கூடிய நடைமுறைப் பெயர்களை முன் கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டும். இல்லையெனின் தடு மாற்றமும் சங்கடமும் ஏற்படும்; அதுவே தலப்பயணத்தின் சிறப்பான, நோக்கத்தையும் ஆர்வத்தையும் குறைத்துவிடக் காரணமாகி விடலாம்.

ஊர்ப் பெயர் மாற்றங்கள் பல்வகைகளில் ஏற்படுகின்றன. அவற்றைச் சிறிது ஆராய்ச்சி நோக்கில் அணுகுவோம்.

சமயச் சார்புடன் அமைந்த திருத்தலங்களின் பெயர்களை ஆராய்ந்தால் அவை புராணப் பின்னணியையும் வரலாற்றுப் பின்னணியையும் கொண்டிலங்குதலைக் காணலாம். அவற் றையெல்லாம் விளக்கமாக எழுதமுற்படின் அதுவே தனியொரு நூலாக விரியலாம். எனவே, ஈண்டுச் சில திருத்தலப் பெயர் களைப் பற்றி மட்டும் சுருங்கிய அளவில் பண்பாட்டு நோக்கத் துடன் காண்போம்.

15.1. மரூஉ நிலை மாற்றங்கள்:

சைவத்தலங்களுள் **திருவாவடுதுறை** என்பதைத் **திருவாடு துறை** எனவும், **'திருக்கோளிலி'** என்பதைத் **திருக்குவளை** எனவும் (திரு) **நெல்வெண்ணெய்** என்பதை **'நெய்வெணை'** எனவும், **திரு அரிசிற்கரைப்புத்தூர்** என்பதை **'அழகாபுத்தூர்'** எனவும், (திருப்) **பந்தணை நல்லூர்** என்பதைப் **'பந்த நல்லூர்'** எனவும், **திருப்பாதிரிப்புலியூர்** என்பதைத் **'திருப்பாப்புலியூர்'** எனவும், **திருவல்லம்** என்பதைத் **'திருவலம்'** எனவும், **திருவாளொளி புற்றூர்** என்பதைத் **'திருவாளபுத்தூர்'** எனவும் வழங்கி வரு கின்றனர்.

வைணவ திவ்விய தேசங்களுள் **திருப்புட்குழி** (சடாயுத்தலம்) என்பதைத் **திருப்புக்குழி** எனவும், **திருநின்றவூர்** என்பதைத் **தின்னனூர்** எனவும், **திருவிடவெந்தை** என்பதைத் **திருவடந்தை** எனவும், **திருவிந்தளூர்** என்பதைத் **திருவிழந்தூர்** எனவும், **திருவயிந்திரபுரம்** என்பதைத் **திருவிந்திரபுரம்** என்றும், **திருவந்தி புரம்** என்றும். **திருத்தண்கா** என்பதைக் **விளக்கொளி கோயில்**

என்றும், **அட்டபுயகரம்** என்பதை **அட்ட புஜம்** என்றும், **திருச் செங்குன்றூர்** என்பதைத் **திருச்சிற்றாறு** என்றும், **திருவல்லவாழ்** என்பதைத் **திருவெள்ளா** என்றும் மக்கள் வழங்கி வருகின்றனர்.

இவ்வாறே பல திருத்தலங்கள் பல்வேறு பெயர்களால் அழைக்கப் படுதலைச் சமயப்பண்பாட்டு அடிப்படையில் கண்டு, ஆராய்வதும் வேண்டற்பாலதே.

15.1. பதமாற்றங்கள்:

திருத்தலங்கள் சிலவற்றை மொழிபெயர்த்து வழங்கியமை யாலும், வரலாற்றுக் காரணங்களாலும், பிற காரணங்களாலும் பெயர்ப்பதங்களே மாற்றங் கொண்டுள்ளன.

சைவத் திருத்தலங்களுள் **'விருத்தகாசி'** எனப்படும் **விருத்த கிரி** என்பதை **விருத்தாசலம்** என வழங்குகின்றனர். முன்பு **பழமலை திருமுதுகுன்றம்** என்ற தமிழ்ப் பெயர்களால் வழங் கியுள்ளனர். வடமொழியில் மொழிமாற்றம் செய்தமையால் இக்காலத்தில் விருத்தாசலம் எனப் பொதுமக்களும், **விருத்தாலம்** எனக் கிராம மக்களும் வழங்கி வருகின்றனர். இதுபோன்று சில ஊர்கள் மொழி மாற்றங் கொண்டுள்ளன. அடுத்ததாகப் பதமாற்றங் கொண்டுள்ள தலங்களைக் காண்போம்.

சைவத் தலங்களுள் **திருப்பாச்சிலாச்சிராமம்** என்பதைத் **திருவாசி** எனவும், **திருநெய்த்தானம்** என்பதைத் **தில்லைஸ்தானம்** எனவும், **வன்பார்த்தான் பனங்காட்டூர்** என்பதைத் **திருப்பனங் காடு** எனவும், **திருப்பறியலூர்** என்பதைப் **பரசலூர்** எனவும், **திருப்புள்ளமங்கை** என்பதைப் **பசுபதிகோயில்** எனவும், **திருச் செம்பொன்பள்ளி** என்பதைச் **செம்பொன்னார்கோயில்** எனவும், **திருநனிபள்ளியைப் புஞ்சை** எனவும், **திருப்பயற்றூர்** என்பதைத் **திருப்பயற்றங்குடி** எனவும், **திருச்சிற்றேமம்** என்பதைச் **சிற்றாம் பூர்** என்றும், **சிற்றாய்மூர்** எனவும், **திருஎருக்கத்தம் புலியூர்** என்பதை **இராசேந்திரப்பட்டினம்** எனவும், **திருச்சாய்க்காடு** என்பதைச் **சாயாவனம்** எனவும், **புள்ளிருக்குவேளூர்** என்பதை **வைத்தீசுவரன் கோயில்** எனவும், **திருத்தவத்துறை** என்பதை **லால்குடி** எனவும், **திருநெல்வாயில்** என்றும் **திருவுச்சி** என்றும்

வழங்கிய திருத்தலத்தைச் **சிவபுரி** எனவும், **திருத்தூங்கானை மாடம்** என்பதைப் **பெண்ணாகடம்** எனவும், **திருநணா** என்பதைப் **பவானி** என்றும் வழங்கிவருகின்றனர். **திருநல்லம்** என்பதைக் **கோனேரிராசபுரம்** எனவும், **திருவலம்புரம்** என்பதைப் **பெரும் பள்ளம்** எனவும், **திருவலிதாயம்** என்பதைப் **பாடி** எனவும், **திருவிற் கோலம்** என்பதைக் **கூவம்** எனவும் வழங்கி வருகின்றனர்.

பண்டைக்காலத்தில் **மயிலாடுதுறை** என வழங்கப்பட்ட தலம், இடைக்காலத்தில் **மாயூரம்** என்றும் **மாயவரம்** என்றும் வழங்கப்பட்டது. அரசினர் முயற்சியால் மீண்டும் இவ்வூர் தன் தொன்மைப் பெயராகிய மயிலாடுதுறை என்பதைப் பெற் றுள்ளது. எனினும், ஊர்மக்கள் மனத்தில் பதிந்துள்ள மாயவரம் எனும் பெயர் இன்னும் பேச்சுவழக்கில் மாறவில்லை; காலப் போக்கில் மாறலாம்.

வைணவ திவ்வியதேசங்களில் **வாகுண மங்கை** என்பதை **நத்தம்** எனவும், **திருச்சுகனூர்** என்பதைத் **திருச்சானூர்** எனவும், **திருப்பருப்பதம்** என்பதை **ஸ்ரீசைலம்** எனவும் வழங்கப்படுதலைக் காணலாம்.

16. சமயநெறிகளுக்கான கலைக்கற்பனை - சிறப்புக் குறிப்பு:

உலகில் மக்களை நன்னெறிப்படுத்தத் தோன்றிய சமய நெறிகள் பலவும் ஓரே பரம்பொருளை நோக்கி இயங்கி வரு கின்றன. சமயங்களனைத்தையும் ஆறுகளெனக் கொண்டால், அவை நெறியுடன் இயங்கிச் சேர்கின்ற **'பரம்பொருளே'** கட லெனத் தோன்றும். கலைக்கற்பனையுடன் உணரலாகும் இப் பேருண்மையினைக் **கம்ப நாட்டாழ்வார்**, இராமாயணத்தில்,

> ''கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
> தொல்லையில் ஒன்றே யாகித் துறைதோறும் பரந்த சூழ்ச்சி
> எல்லையில் மறைக ளாலும் இயம்பரும் பொருளீ தென்னப்
> பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போல் பரந்த
> தன்றே''[1]

எனப்பாடிச் செல்வதால் உணர்ந்து போற்றலாம்.

1. பாலகாண்டம், ஆற்றுப்படலம், 19.

தெய்வ நம்பிக்கையை மக்களிடையே உருவாக்கி வளர்க்கச் சமயங்களெல்லாம் பாடுபடுகின்றன. அவற்றைப் போலவே, **ஆலயங்கள் திருமடங்கள்** முதலிய சமயநிறுவனங்கள் தொடர்பாக வளர்க்கப்பெறும் **ஒவியம், சிற்பம், கட்டடம், இசை, நடனம், நாடகம்** முதலிய கலைகளெல்லாம் சமயநெறியை வளர்க்கவே பாடுபட்டு வருகின்றன என்பதை உணர்தல் வேண்டும். உலகியல் நெறியில் வளர்க்கப்பெறுங் கவின்கலைகள் சிற்றின்ப அளவில் நின்றுவிடும்; ஆனால், அருளியல் நோக்கில் - சமயநெறிச் சார்பில் வளர்க்கப் பெறுங் கவின்கலைகள் நிலையான - உயிருக்கு ஆக்கந் தேடக்கூடிய - பேரின்பத்துக்கு வழி கோலும் என்பது சான்றோர் நம்பிக்கை.

இவ்வாற்றான் கலைக் கற்பனையின் அடிப்படையில் மலர்ந்த சமயச் சார்பான கலைகள் தமிழ்ப்பண்பாட்டின் சீர்மையை என்றும் போற்றி வருகின்றன. இந்த நோக்கிலே கலைகளைத் தெள்ளிதின் ஆராய்ந்து, தத்துவ நுண்கூறுகளை உணரத்தலைப் படுவது ஒவ்வொருவரின் கடமையாகும். மக்கள் இதை உணர்ந்து செயற்பட்டால் மதங்களுக்கிடையே - சமயங்களுக்கிடையே - வேறுபாடோ காழ்ப்புணர்ச்சியோ தலைகாட்டாது என்பது உறுதி.

இனிமேல் தொடர்ந்து வரும் இயல்களுக்கு அரணாகும் வகையில், இந்த இயலில் புலப்படுத்தப்பட்ட செய்திகளை மனங்கொண்டு போற்றினால் நாட்டுக்கு நல்லது.

17. சமய ஒருமைப்பாடு:

மதங்கள் காரணமாக **மனம் வாக்கு செயல்** ஆகியவற்றில் தூய்மையுடன் மக்களிடையே ஒற்றுமையுணர்வும், சகோதர வுணர்வும் ஆன்மநேயமும், அவை வாயிலாக நல்லிணக்கமும் ஏற்படும் என்று மதத்தைத் தோற்றுவித்தவர்களும், மதத் தலைவர்களும் ஒரு காலத்தில் நம்பினர். ஆனால், காலப் போக்கில், மதங்களின்- சமயங்களின் - உயரிய நோக்கங்களை மறந்து மக்கள் தடம் புரண்டுள்ளனர். சமயங்களைக் காழ்ப் புணர்ச்சியில் சிக்க வைத்து உலக அமைதிக்கே தீங்கு விளை வித்துக் கொண்டு வருகின்றனர் சில சமயவாதிகள். அஃது

ஒருபுறமிருக்க, ஒரே மதத்தின், ஒரே சமயத்தின் உட்பிரிவினர்களுக்கிடையேயும் பூசல்கள் தோற்றுவித்து மக்களைத் தம் செந்நெறியிலிருந்து தடம் புரளச் செய்துள்ளனர் சில சமயவாதிகள். எடுத்துக்காட்டாகச் சைவ - வைணவ சமயத் தொடர்பான சில செய்திகளைக் காண்போம்.

17.1. சைவ - வைணவ சமயவொருமைக் கூறுகள்

இரண்டாம் குலோத்துங்கச் சோழன் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவன்; எனினும், வைணவ சமயக் காழ்ப்புடையவன். எனவே, தில்லை நடராசர் கோயிலில், தெற்கு நோக்கிய நடராசர் சன்னிதிக்கு அருகே கிழக்குநோக்கிய தில்லை கோவிந்தராசர் சன்னிதியிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. திவ்ய தேசங்களுள் ஒன்றான அந்தத் **திருச்சித்ர கூடத்தில்** சயனக் கோலத்திலிருக்கும் **பள்ளிகொண்ட பெருமாள் கற்சிலையைப் பெயர்த்தெடுக்கச் செய்து, வடகிழக்கேயுள்ள கிள்ளைக் கடலில் போடுமாறு செய்தான்;** தன் காழ்ப்பை இங்ஙனம் புலப்படுத்தினான். அது மட்டுமல்லாமல், வைணவ சமயாசாரியராகிய **இராமாநுசர்,** தமிழ்நாட்டை விட்டுச் சேர நாட்டுக்கு ஓடுமாறு செய்தான்; எம்பெருமானாராகிய அவருக்குச் சீடரான **கூரத்தாழ்வானின்** கண்களைப் பிடுங்குமாறு செய்துள்ளான். இவ்வாறெல்லாம் வரலாற்று ஏடுகளில் களங்கமுண்டாக்கிய அவனைக் **கிருமி கண்ட சோழன்** என்றே அழைக்கத் தலைப்பட்டனர்.

நாயக்க மன்னர்களாட்சியில் வைணவப் பெரும் பற்றும் சைவசமயக் காழ்ப்புமுடைய **முத்து கிருஷ்ண நாயக்கர்** காலத்தில் தில்லைக் கோவிந்தராசருக்கு மிக மிக ஏற்றந் தரப்பட்டது. அதே காலத்தில் நடராசப் பெருமானுக்கு வழிபாட்டு முறைகள் நிறுத்தப்பட்டுச் சன்னிதியும் மூடப்பட்டது. அந்நிலையில் நடராசர் சன்னிதியில் முறையான பூசனைகள் புரிய இயலவில்லையே என்ற பெருங் கவலையால் மிகவும் நொந்து, தில்லை வாழந்தணர்களாகிய **தீட்சதர்கள்** சிலர் தற்கொலை செய்து கொண்டனர். சிலர் கிழக்குக் கோபுரத்தின் மீதேறிக் கீழே வீழ்ந்து உயிரைப் போக்கிக் கொண்டனர் என்பர். இவ்வாறு

கசப்பான நிகழ்ச்சிகளும் சமயத்தின் பேரால் நிகழ்ந்துள்ளன என்பது வரலாறாகும்.

வைணவர்களுக்குள்ளேயே நடைபெற்ற **வடகலை-தென்கலைப் பூசல்களும் அவற்றின் விளைவுகளும்** சமய வரலாற்றில் களங்கமான ஏடுகளென்றே கூற வேண்டும்.

சென்ற நூற்றாண்டை விட இந்த இருபதாம் நூற்றாண்டில் மக்களிடையே சமயநெறிகளில் சில தெளிவுகள் தோன்றியுள்ளன. எனவே, சமயக்காழ்ப்புணர்ச்சி படிப்படியே மாறி வருகின்றது. இந்துக்களிடையே ஒற்றுமையுணர்வும், இந்து-முசுலீம்களிடையே ஒற்றுமையுணர்வும், இந்து -கிறித்துவர்களிடையே ஒற்றுமையுணர்வும், தோன்றித் தழைக்கச் சமுதாயத்தில் ஒருவகை விழிப்புணர்வு மலர்ந்து வருகிறது.

17.2 சமயவொருமை புலப்படும் திருத்தலங்கள்:

தமிழ்நாட்டில் மக்கள், சமயங்கள் தோன்றிய நோக்கங்களையுணர்ந்து, ஒருமைப்பாட்டுணர்வுடனும் அமைதியுடனும் வாழ வேண்டுமென்று முன்னோர்கள் கருதியிருக்கின்றனர். எனவே, ஒரே ஊரெல்லையில் சிவாலயத்தையும், வைணவப் பெருங்கோயிலையும் எழுப்பியுள்ளனர். **ஒரே கோயிலில் சிவ பெருமான் சன்னிதியையும் திருமால் சன்னிதியையும் அமைக்க முற்பட்டனர்.** ஒரே திருவுருவத்தில் சிவனையும் திருமாலையும் இணைத்துச் **'சங்கர நாராயணன்'** என அழைத்து மகிழலாயினர்.

கீழ்க்கண்ட சில ஊர்களிலே, திருமால் சன்னிதிகள் அமைந்துள்ள பாடல்பெற்ற சிவத்தலங்களைச் - சிவாலயங்களைக் காணலாம்.

1. சிதம்பரம்.
2. கச்சி ஏகம்பம்
3. காஞ்சிக் காம கோட்டம் (காமாட்சியம்மன் கோயில்)
4. திருவண்ணாமலை
5. இராமேசுவரம்
6. திருஉத்தரகோசமங்கை
7. திருநெல்வேலி

8. திருச்செந்தூர்
9. திருக்குற்றாலம்.
10. சுசீந்திரம்
11. திருவொற்றியூர்
12. திருநாவலூர்
13. திருப்பாண்டிக் கொடுமுடி
14. திருவக்கரை
15. கொடிமாடச் செங் குன்றூர்
16. திருநணா (பவானி)
17. திருப்பழனம்
18. சிக்கல்

இவ்வாறே பின்வரும் வைணவத்தலத் திருக்கோயில்களில் சிவன் சந்நிதியும் உள்ளன.

1. உத்தமர் கோயில்
2. திருக்குறுங்குடி
3 திருக்கோட்டியூர்
4. திருவித்துவக்கோடு.

இவற்றையெல்லாம் மக்கள் புரிந்துகொண்டு, சமயவுலகில் செயற்படுகின்றனரா? என்பதே இன்றைய கேள்வியாகும்.

ஈசான்யத்தில் **சிவாலயமும்** பஸ்சிமத்தில் (மேற்கில்) **விஷ்ணு கிரகமும்** ஒரு ஊரின் நேத்திரங்கள் (கண்கள்)''1 என்று நம் முன்னோர்கள் கருதிப் போற்றிவந்தனர். இதற்கேற்ப **உத்தர கங்கை கொண்ட சோழேச்சுரம்** (காஞ்சி-வந்தவாசி சாலையில் உள்ளது) எனும் தலத்தில் மிகச் சிறந்த சிற்ப வேலைப்பாடு களுடன் கூடிய சிவாலயமும் பெருமாள் கோயிலும் நேர்த்தியாக அமைக்கப்பட்டன. ஆனால், சோழமன்னர்கள் கட்டிய சிவாலயம் இன்றும் காணும் நிலையில் இருக்க, விட்டுணு ஆலயம் மக்களால் பாதுகாக்கப் படவில்லை. ' இங்கு மேற்கில் ஒரு பெருமாள் கோயில் இருக்கிறது; இல்லை, இருந்தது! அதன் சிதிலமான நிலை நம்மை வெட்கித் தலைகுனியச் செய்கிறது. ஓரே முட்புதர், மண்டபம் இடிந்து விட்டது. வானமே விமான மாகிப், புதர்களே புறச்சுவர்களாய், மண்மேடே பீடமாய், விஷ்ணு தம் தேவிகளுடன் நிற்கிறார். **'மகோன்னத சௌந்தரிய முகாரவிந்தம்'** என்று கவிஞர்கள் வருணிக்கிறார்களே, அதை நம் முன் நிறுத்தச் சிற்பியின் உளியும் ஒத்துழைத்துள்ளது. அணிகளில் எவ்வளவு நுணுக்கம், வளைவு, தேவியின் முகத்தில்

1. தமிழக அற்புத ஆலயங்கள், பக் 127.

அரும்பும் நாணமும் கல்லில் இழைந்தோடுகிறது இவ்வளவு லாவண்யம் கொண்ட இப்பிம்பங்கள் கோயிலின்றி, வழிபாடற்று இருக்க விடுவதுதான் நாம் கலைக்கும் பக்திக்கும் செய்யும் சேவை போலும்!"[1] என்று நொந்து எழுதிச் செல்வது சமயவொருமைப் பாட்டில் மக்களுக்குள்ள தளர்ச்சியைக் காட்டும்.

17.3. சமயவிழாத் தொடர்பிலமைந்த ஒருமைப் பாட்டுக் கூறுகள்:

தமிழ்நாட்டிலே தொன்று தொட்டுக் கொண்டாடப்பட்டு வரும் சிறப்பான விழா **இந்திரவிழாவாகும்.** இதுபற்றி வட மொழி இலக்கியங்களிலும், தமிழிலக்கியங்களிலும் குறிப்புக்கள் உள்ளன. **வான்மீகியும்**, **காளிதாசரும்** தத்தம் காவியங்களில் இந்திரவிழா பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். சித்திரைத் திங்கள் நிறை நிலவு (பௌர்ணமி) இறுதியாகவுள்ள இருபத்தெட்டு நாள்களில் இந்திரவிழா நடைபெற்றமை குறித்துச் **சிலப்பதி காரமும்**, வைகாசி விசாகம் இறுதியாகவுள்ள இருபத்தெட்டு நாள்களும் இந்திரவிழாக் காலம் என்று **மணிமேகலையும்** கூறுகின்றன.

தைப்பொங்கலிடுவது என்பது சைவர்களுக்கும் வைணவர் களுக்கும் ஏற்புடைய விழாவே; தைப்பொங்கலுக்கு முதல்நாள் நடைபெறும் **போகிப்பண்டிகை** இந்திரனை நன்றியுடன் நினைவு கூரும் வகையில் கொண்டாடப்படுவதே என்பர்; **போகி** என்பது இந்திரனைக் குறிக்கும் என்றும் தம் கருத்துக்கு அரணாக எடுத்து மொழிவர். சித்திரையிலும், வைகாசியிலும் கோலாகலமாக கொண்டாடப்பெற்ற இந்திரவிழா, இருபத்தெட்டு நாள்கள் என்ற எல்லையிலிருந்து சுருங்கி, மார்கழி இறுதியில் ஒரே நாளில் கொண்டாடப்படும் பண்டிகையாக அமைந்துவிட்டதெனப் பலரும் கருதுகின்றனர்.

மழை வளத்துக்கு அதிபதியாகிய இந்திரனைக் குறித்து நன்றியுணர்வுடன் கொண்டாடப்பெறும் **இந்திரவிழா தென் னாட்டில்** சித்திரைத் திங்களில் நடைபெற்றது என்பதைச் சிலப்பதிகாரம் வாயிலாக அறிந்தோம். அதனையொத்து நினைவிற்கொள்ளும் வகையில் **வடநாட்டில்** பங்குனித் திங்களிலே **காமன் பண்டிகை** கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. வட

1. தமிழக அற்புத ஆலயங்கள், பக். 127.

வித்தியாதரனொருவன், **தன் மனைவியுடன்** காமக் கடவுள் விழா நடைபெறும் பங்குனித் திங்களில் **பூம்புகாருக்கு** வருகிறான்; தங்கியிருந்து இந்திரவிழாவினை மனைவியுடன் கண்டு களிக்கிறான் என்பதைச் **சிலப்பதிகாரம்** (பு.கா. 6, 1-17) கூறும்.

18. சமயத்தாக்கம் - பெயரிடல்: சிறப்புக் குறிப்பு

தமிழ்நாட்டில் சயனத் திருமால் திருப்பதிகள் பல உள்ளன. இவை தவிர்த்து ஒரு திருப்பதி- சிறப்பான சயனத் திருப்பதி - கேரள நாட்டிலுள்ள **திருவனந்தபுரம்** ஆகும். திருவனந்தபுரத் திருக்கோயிலில் மூன்று வாசலுடன் அனந்த பத்மநாபனாகச் சயனித்துக் கொண்டிருக்கிறார். அவரின் இக்கிடந்த கோலத்தினை **'அனந்த சயனம்'** என அழைப்பர்.

திருமாலுக்குரிய தனிச்சிறப்புக்களைக் கூறி வருகையில், திருமாலுக்குத் திருமகளுடன் கூடியிருப்பது தனிச்சிறப்பு; கருட சேவையுடன் காட்சியளிப்பதும் தனிச்சிறப்பு, **அனந்த** சயனங் கொண்டிருப்பதும் தனிச்சிறப்பு...... எனப் பல சிறப்புகளை வரிசையாகக் கூறிச் செல்வது மரபு; அந்நிலையில் **அனந்த சயனத்தின்** உயர் சிறப்பினையுணர்ந்து இன்புறலாம்.

மக்கள் தம் சமய நம்பிக்கையாலும் பக்தியார்வத்தாலும் தெய்வங்களின் பெயர்களை **அனந்தன், அரங்கன்** போன்ற பெயரைத் தம் குழந்தைகளுக்குச் சூட்டி மகிழ்வர். திருமாலடியார்கள் தம் கடவுள் ஏந்தியுள்ள திவ்ய ஆயுதங்களாகிய **சாரங்கம்** (வில்), **சுதர்சனம்**(சக்கரம்) முதலிய பெயர்களையும் தம் குழந்தைகளுக்கு இடுவது வழக்கத்தில் உள்ளது; மேலும், சயன நினைவாகப் பள்ளிகொண்ட பெருமாள், **அனந்த சயனம்** முதலிய பெயர்களையும் இட்டு வழங்குவது சமயப் பண்பாட்டின் தாக்கமாகவுள்ளது எனலாம். இவ்வாறே பிற சமயங்களிலும் சிந்திக்க இடம் உண்டு.

19. தேவகணங்கள் - சிறப்பு நோக்கு:

உலகிலுள்ள ஆத்திக மதங்கள் தெய்வ நம்பிக்கையை மையமாக வைத்து இயங்குகையில், எத்தனையோ வகையான இயற்கையைக் கடந்த ஆற்றல்களையும் மக்களிடையே நம்பவைத்துள்ளன. ஒவ்வொரு மதத்திற்கும் அவ்வகையான ஆற்றல்கள்

கூறப்பெறும். அவை தொடர்பாக முன்னரே ஒரளவு கண்டோம். இனிமேல் சிறப்பு நோக்கிலே இந்து மதத்தில் **தேவகணங்கள்** பதினெண் வகையாகச் சிறப்புறக் கூறப்படும்; சிலசெய்திகளை இங்குத் தொடர்பாகக் காண்போம்.

சங்க காலத்திலும் பிற்காலத்திலும் பதினெண் வகை தேவகணங்களைப் பற்றிய செய்திகள் மக்களிடையே வழக்கில் இருந்தன; எடுத்துக்காட்டாக,

''ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்''[1]

என்று வருதலைக் காண்க,

வானியலடிப்படையில் சோதிடங் கணிக்கும் வல்லவர்கள், மக்களின் பிறப்பை முன்வைத்துத் **தேவகணம், இராட்சச கணம்** (அசுரகணம்), **மனுஷ கணம்** (நரர்கணம்) என நட்சத்திர நோக்கில் பாகுபடுத்துவர். அந்தப் பாகுபாட்டினும் வேறுபட்ட தேவ கணங்களே இங்குச் சிந்திக்கப்படும் என்பதை நினைவிற் கொள்க.

தேவகணங்கள் இன்னின்ன என்பதை ஆன்றோர்கள் வகைப் படுத்துகையில், 1. தேவர், 2. அசுரர், 3. தைத்தியர், 4. கருடர், 5. கின்னரர், 6 கிம்புருடர், 7. இயக்கர், 8. விஞ்சையர், 9. கிராக்கதர், 10. கந்தருவர், 11. சித்தர், 12. சாரணர், 13. பூதர், 14. பைசாசர், 15. நாகர், 16. ஆகாய வாசிகள், 17. போக பூமியினர், 18. தாராக் கணங்கள் எனக்கூறி உள்ளனர். இந்தப் பட்டியலில் உள்ள சில கணங்கள் பிற மதங்களிலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளமை பற்றிப் பிறமத இலக்கியங்களில் கொள்ளலாகும் ஆராய்ச்சியால் அறியலாம்.

தமிழ்க் காப்பியங்கள், புராணங்கள் முதலியவற்றில், ஒவ்வொரு நூலின் கதைத்தேவைக்கும் இயக்கத்துக்கும் ஏற்பப் பதினெண் கணங்களுள் சிலவற்றை நூலாசிரியர்கள் பயன் படுத்திக் கொண்டுள்ளனர்; தோத்திரங்களிலும் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

1. திருமுருகாற்றுப்படை. 168

தேவகணங்கள் என்று விவரமாகக் கூறி அசுரர், பூதர், பைசாசர் முதலியோரை அப்பட்டியலில் சேர்த்தது சரிதானா என்பது தொடர்ந்து ஆராய்ந்திட வேண்டிய செய்தியாகும். மேற்கண்ட பதினெண் கணப் பட்டியலில் மிகச்சிறப்பாகச் சிந்திக்க வேண்டியவர்கள் **சித்தர்கள்** என உணர்வது நல்லது.

தேவகணங்களுள் **சித்தர்கணமும்** அடங்கும். சித்தர்களைப் பற்றிய சில சிறப்பான செய்திகளை முன்னரே கண்டோம். எனினும், அவற்றுக்கு அரண்செய்யும் வகையில், மேலும் சில செய்திகளைக் காண்பது இங்கு நல்லது. அது சமயப்பண்பாட்டுக்கு உகந்ததாகும்.

சித்தர்களை ஏதோ பித்தர்களென்று மக்கள் நினைக்கிறார்களேயொழிய, அவர்களால் இந்த நாடு மேம்பாடு அடைந்துள்ளது என்பதைப் பெரும்பாலும் நினைப்பதில்லை; சித்தர்களின் அனுபவங்களை ஈண்டு விரிக்கிற் பெருகும். அவர்களை வகைப்படுத்துகையில் கல்பாக்கம் **அருள்முருக சௌந்தரதாசன்,** ''சித்தர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. முதல் பிரிவினர் தம் முன்னே கிடைக்கும் தெய்வக் குறிப்பை உணர்ந்து அதன்படி நடந்து மற்றவர்களின் பார்வைக்குப் பைத்தியக்காரர்களைப் போலக் காட்சியளிப்பார்கள்,

2. இரண்டாவது பிரிவினர் உலகிலுள்ள அனைத்து உயிர்களும் முன்னேற வேண்டித் தங்களுக்குக் கிடைத்த ஆன்மிக அனுபவங்களை உலகுக்கு வெளியிட்டு மறைந்து விடுவார்கள்.

3. மூன்றாவது வகையினர் தங்களுக்குக் கிடைத்த அனுபவங்களை மற்றவர்களுக்கு வெளியிடாது தாங்களே மற்றவர்களின் குறைகளைத் தங்களது ஆத்மசத்தியால் நீக்கி விடுவார்கள். தட்சணை, அன்பளிப்பு முதலியவற்றைக் கூட ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இவர்களுக்கு அப்பால் 4 ஆவது வகையினராகப் பொருளுக்கும் புகழுக்கும் அடிமையாகித் தமக்குக் கிடைத்த சக்தியைத்

தவறாகப் பயன்படுத்துவோரும் **உண்டு''**[1] என்று எழுதிச் செல்வது காண்க.

எப்படியோ ஆன்மநல உள்ளுணர்வால் - உள்ளொளியால்- அரிய சாதனைகளைப் புரிந்துள்ள **திருமூலர்** போன்ற சித்தர்களால் நெறிப்படுத்தப்பட்டதே **'சித்தாந்தம்'** ஆகும். சைவ சித்தாந்தத் தெளிவிற்கு இவர்கள் புரிந்துள்ள தொண்டு அளப்பரிதாகும்.

20. பக்தி வளாகத்தில் நாயக-நாயகி பாவம்:

கடவுளையே தம் வாழ்முதலாகக் கொண்டு, கடவுளை அடைதற்குரிய நெறிகளாக ஒவ்வொரு சமயத்திற்கேற்பச் சில வற்றை அமைத்துக் கொண்டனர். **சரியை, கிரியை, யோகம் ஞானம்** எனச் சைவர்கள் கூறினரெனின், **பக்திநெறி,** கர்மநெறி **ஞானநெறி, பிரபத்திநெறி** என வைணவர்கள் வகுத்துக் கொண்டனர். எல்லாவற்றையுமே **பக்திநெறி, ஞானநெறி** என இரண்டில் அடக்கிக் கூறுவோரும் உண்டு. அனைத்து நெறிகளிலும் **அடைக்கலநெறி** அல்லது **சரணாகதிநெறி** (பிரபத்திநெறி) என்பது ஊடுருவி நிற்றலையுணரலாம்.

உலகில் எத்தனை ஆன்மிகநெறிகள் தோன்றியிருப்பினும் அவையெல்லாம் இறைவனை யடைதற்குரிய நெறிகளாகவே விளங்குகின்றன. எனினும், அவற்றுள், **படிநிலைகள்** அல்லது சோபான அணுகுமுறைகள் உள்ளன.

சைவ சமயத்தில் ஞானத்தில் ஞானமார்க்கமாகிய **சன் மார்க்கம்** உயர்ந்த நெறியாகப் போற்றப்படும். அந்த மார்க்கத்தில் சென்ற **மணிவாசகரின்** பக்திநிலையை ஊன்றி நோக்கினால், அது நாயக-நாயகி பாவத்தை மையமிட்டுச் செல்லுதலைக் காணலாம். அவர் அருளிய **திருச்சிற்றம்பலக் கோவையார்** எனும் அகத்துறைநூல் சிற்றின்பம் தலைக்கீடாகக் கொண்ட பேரின்பத் துறையை உள்ளுறையாகக் கொண்டதென்பது தெளிவாகும். **மணிவாசகரே; திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர்** முதலியோரும்

1. திருக்கோயில் (திங்களிதழ்) ஜீன், 1990

சிற்சில இடங்களில் நாயகநாயகி பாவ வுணர்வைப் புலப்படுத்தியுள்ளனர். இதனை அவர்களின் பாசுரங்களை ஆராய்ந்தால் காணலாம்.

வைணவ சமயத்தில் ஆழ்வார்கள் பலரும் பிரபத்திநெறியாகிய அடைக்கல மார்க்கத்தைப் பின்பற்றியவர்களே; எனினும் **ஆண்டாள்** மதுரபக்தி வாயிலாக நாயக-நாயகி பாவத்தில் பரந்தாமனையடைந்த பெரும்பேறு பெற்ற ஸ்ரீ வைணவ முடிமணியாவாள். ஆழ்வார்களுள் மிகச்சிறந்த நாயகராகிய **நம்மாழ்வார்** பரந்தாமனிடம் கொண்ட தம் ஆன்மிக அனுபவத்தை நாயக நாயகி பாவத்தில் இழையோடவிட்ட பேரருட் செல்வராவார்; இவ்வாற்றான் புருடோத்தமனாகிய திருமாலுக்குத் தாம் நாயகியாக இருந்தமையை வலியுறுத்தப் **'பராங்குச நாயகி'** என அழைத்துக் கொண்டார். **திருமங்கையாழ்வாரும்** தம்மை நாயகியாகப் பாவித்துக் கொண்டு, **'பரகால நாயகி'** என அழைத்துக் கொண்டார்.

இந்து மதமேயன்றி மேல்நாட்டுக் **கிறித்துவ மதத்திலுங்** கூட **நாயக நாயகி பாவம்** எனும் **'Bridal mysticism'** பற்றி எண்ணிப் போற்றுபவர்கள் உள்ளனர்.

ஈண்டு நாயக நாயகி பாவம் பற்றிய சிறப்புக்கூறுகள் சில வற்றைக் காண்போம்

சமயத்துறையில் நாயக நாயகி பாவம் மிகச்சிறந்த நெறியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதேயெனினும், அதனைத்தம் வாழ்க்கையில் உயிரெனப் பின்பற்றக்கூடிய தகுதியர்ன அருளாளர்கள் சிலரே எனலாம்; காரணம் என்ன?

தேகாத்மபுத்தி எனப்படும் உடலுணர்வைக் கடப்பதென்பது எல்லோருக்கும் இயலக் கூடியதன்று மிகவுயர்ந்த தூய நிலையில் மனப்பக்குவமுடையோரே, வியக்கத்தக்க நாயக நாயகி பாவத்துக்குத் தகுதி படைத்தவர்கள். இவர்கள் இவ்வுலகில் விதிவிலக்குக்கு இலக்கியமானவர்களே தவிர எளிய விதிக்கு இலக்கியமானவர்கள் அல்லர்.

நாயக நாயகி பாவம் நிறைந்த இலக்கியக் கலைப்படைப்புக் களை மிக நுணுகி ஆராய்ந்து பார்க்கின், அவற்றில் ஆன்மநல வேட்கையுடன் கூடிய ஒருவகைக் **கலைக்கற்பனை** (aesthetic imagination), பேரின்பக் குறிக்கோளை நாடி இயக்கங் கொண்டிருத்தலை உணரலாம்.

இந்திய நாட்டளவில் இஃது அமையாமல், நாயக நாயகி பாவம் பல நாடுகளிலே பக்திவளாகத்தில் அமைந்துள்ளது என் பதை ஆராய்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர். எடுத்துக்காட் டாகச் சென்னை உயர்நீதிமன்ற நடுவராக விளங்கிய தமிழ்த் திறனாய்வாளர் **எஸ். மகராசன்** அவர்கள் எழுதியுள்ள சில கட்டுரைகளில் 'நாயக நாயகி பாவம்' அமைந்திருத்தலைக் காணலாம்.

21. திருத்தொண்டர் மாட்சி:

சைவசமய நோக்கில் திருத்தொண்டர்கள் இறைவனுடைய திருவடிகளையே தமக்குப் புகலிடமாகச் சிக்கெனப் பற்றிக் கொள்வர். தம் உய்திக்கெனவே மக்களுக்குப் புரியுந் தொண் டினை மகேசனுக்குப் புரியுந் தொண்டென வாழ்ந்து வருவர். சால்பு எனும் நிறைகுணத்தால் தமக்கெனவே கொண்ட மனத் திண்மையுடன் மன்னர்களின் ஆதிக்கத்தையும் பொருட் படுத்தாத நிலையிலே, ''நாமார்க்குங் குடியல்லோம்'' என்ற கோட்பாடுடையவர். தம்மையொத்த திருத்தொண்டர்களிடம் அன்பு பாராட்டிப் பணிவாகப் பணிபுரிந்திட முந்துவர். இவ் வாறான திருத்தொண்டர்களின் அளப்பரும் பெருமைகளைப் பெரிய புராணத்தில், சிறப்பாகத் திருக்கூட்டச்சிறப்பு முதலி ய வற்றில் கண்டு போற்றலாம். எடுத்துக்காட்டாகப் **பெரிய புராணத்தில்** இறைவன் திருவாக்காக அமைந்துள்ள ஒரு செய்யுளைக் காண்போம்.

இறைவன் கூற்றாகவே - திருவாரூர்த் தியாகராசப் பெருமான் கூற்றாகவே - **சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம்,**

"பெருமையால் தம்மை ஒப்பார்;
பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்;
ஊனமேல் ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார்;
அன்பினால் இன்பம் ஆர்வார்;
இருமையும் கடந்து நின்றார்
இவரைநீ அடைவாய் என்று"[1]

எனப் புலப்படுத்துதலைச் **சேக்கிழார்** பாடிச் செல்வது காண்க.

"அடியார்களின் பெருமையினை அருளாளர்கள் சிலரின் கூற்றுக்களாகவும் உணர்ந்து போற்றலாம். முதற்கண் **ஔவையார்** வாக்காக ஒரு பாடலைக் காண்போம். திருமுருகனிடம் அடியார் களின் பெருமையை விரித்துரைக்கும் பாங்கினில் குழந்தைகளும் புரிந்து கொள்ளும் வண்ணம்,

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையி லடக்கம்
குறுமுனி யோகல சத்தில் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ அரவினுக் கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர்தம் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"[2]

எனப்பாடிச் செல்வது காண்க.

21.1. அடியாரிணக்கப் பெருநிலை:

பெரும்பாலும் மதங்கள் பலவும் முத்திப் பேற்றினையே உயிர்களின் முடிந்த குறிக்கோளாகக் கொண்டிருக்கும். ஆனால்,

1. பெரியபுராணம், தடுத்தாட்கொண்ட புராணம், 196.
2. தனிப்பாடல்திரட்டு, ஔவையார் பாடல்கள்.

பக்தி வளாகத்தில் முத்தி நெறியினையும் முத்திப் பேற்றினையுங் கூட அடியார்களின் அன்புறவுக்கும் கடவுட் கைங்கரியத்துக்கும் அடுத்த நிலைச் சிறப்பினவாகக் கொண்டு நிற்பர்.

நல்ல அடியவர்களின் இணக்கம் அல்லது சத்சங்கத்தின் கூட்டுறவு மிக உயர்ந்தது என்பதைச் **சேக்கிழார் பெருமான்,**

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"[1]

எனக்கூறிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கதாகும். நல்லுள்ளங் கொண்ட அடியவர்கள் ஒன்று சேரும்போது தெய்வநலச் சிந்தனைகளாலும் கூட்டு வழிபாட்டாலும் பொதுநலங்காரணமாகப் புரியும் தொண்டுகளாலும் அவர்களின் வாழ்வியல் ஆன்ம நெறியின் பாற்படும். அருட் சான்றோர்களுடன் **திருத்தலப் பயணம் புரிகையில்,** எவ்வாறு அடியவர்கள் தம் நேரத்தைப் பயன்கொள்ளுமாறு திட்டமிட்டுச் செயற்படுத்தினர் என்பதைச் **சேக்கிழார்,**

"திருப்பதிகச் செழுந்தமிழின் திறம்போற்றி மகிழ்வுற்றுப்
பொருப்பரையன் மடப்பாவை இடப்பாகர் பொற்றாளில்
விருப்புடைய திருத்தொண்டர் பெருமையினை விரித்
துரைத்தங்
கொருப்படு சிந்தையினார்கள் உடனுறைவின் பயன்
பெற்றார்"[2]

எனப்பாடிச் சொல்வதால் உணரலாம்.

அடியார்களின் நடுவே இருப்பதைச் சமய வாழ்வியற் பெரும் பேறாகவும் தெய்வநல இருப்பில் உறைவதாகவும் மதித்துப் போற்றியுள்ளனர். சிவபிரான் நடுவில் உமையம்மையும், உமையம்மையின் நடுவில் சிவபிரானும் இருப்பதாகக் கொள்வர்; தம்மிடம் அவ்விருவரும் இருக்க விரும்பினால் அடியார் நடுவுள்

1. பெரியபுராணம், திருக்கூட்டச்சிறப்பு, 8
2. பெரியபுராணம், திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், 244.

தம்மை இருக்குமாறு செய்தருள வேண்டுமெனப் பரவிநிற்கிறார் மணிவாசகர்; இதனை,

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேனுள்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே''[1]

எனவரும் திருப்பாசுரத்தால் உணரலாம். இதனால், அடியாரிணக்கம் எத்தகைய பெருஞ் சிறப்புடையதென்பது தெளிவாகும்.

21. 2. தெய்வத்துக்கும் அடியார்க்குமிடையேயுள்ள 'பேரம்' அல்லது பரிமாற்றம்:

சமயவளாகத்தில் தன் முயற்சிக்கென ஒரு சிறப்பிடம் உண்டு. பட்டினத்து அடிகளும்,

''உழப்பின் வாரா உறுதிகள் உளவோ?
கழப்பின் வாராக் கையற வுளவோ''[2]

எனச் சமயவுலகில் கொள்ள வேண்டிய உழைப்பினைப் பற்றிக் குறிப்பாகச் சுட்டிக் காட்டுவார்.

இறைவனது திருவருள் உயிர்களைச் செந்நெறியில் வழி நடத்திச் செல்கிறது. என்பது உண்மைதான். இதனை மணிவாசகரும் ''அவனரு ளாலே அவன்தாள் வணங்கி''[3] என்று நயமாகக் கூறிக் காட்டுவார். அதற்காக ஒருவன், இறைவனது திருவருள்தானே வந்து ஆட்கொண்டு அனைத்தும் செய்துவிடு மென்ற நினைப்பில் சோம்பியிருத்தல் கூடாது. தெய்வத்தை

1. திருவாசகம், கோயில் மூத்த திருப்பதிகம், 1
2. திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, 10, 1-2
3. சிவபுராணம், 18

நோக்கி உயிர்கள் ஓரடியாவது எடுத்து வைத்தால்தான் தெய்வமும் அவனைக் காப்பாற்ற ஒன்பதடி எடுத்துவைத்து உய்திக்கு வழிகாட்டும்; இதுவே அருளியலார் கண்ட அனுபவமொழி. எனவே, அனைத்தையும் படைத்து இயக்கும் கடவுள், உயிர்களிடமிருந்து எதனை எதிர்பார்க்கும் என்பது பற்றிச் சுவையாகச் சிந்தித்திருக்கின்றனர் அருளாளர்கள்.

உலகியலில் யாரேனுமொருவர் ஏதேனும் ஒருபொருளை விரும்பினால் அவருக்கு அதனைக் கொடுத்து, அதற்கீடாகத்தாம் விரும்பும் பொருளைப் பெறுவர். அங்ஙனம் ஒருவகைப்பண்டமாற்றிலே, உயர்ந்த பொருளுக்கு மாறாகத் தாழ்ந்த பொருளையும், தாழ்ந்த பொருளுக்கு மாறாக உயர்ந்த பொருளையும் பெறவேண்டிய சூழல் அமைவது உண்டு. தெய்வத்தைப் பொறுத்த வரையில் உயிர்களிடம் தான் வழங்கும் உயர்ந்த பொருளைவிடத் தாழ்ந்த பொருளையே அவற்றிடம் அது எதிர்பார்க்கும். பிச்சையுகக்கும் பெருமானாகப்-பிட்சாண்டவராக-இறைவன் எழுந்தருளி வருவதன் நோக்கம், உயிர்களின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய அழுக்குகளைப் -பாதகங்களை- வாங்கிக்கொண்டு திருவருளையும் உய்தியையும் வழங்குதற்காகவே என்பது கருதத்தக்கது. 'பாதகமே சோறு' என்பதிலுள்ள இந்தத் தத்துவத்தை ஈண்டு இயைபுடன் சிந்தித்தல் தகும்.

அடியார்கள் எவ்வெவ்வாறு கடவுளிடம் கொடுத்தும் கொண்டும் 'பேரம் புரிந்துள்ளனர் என்பதனைச் சிறிது காண்போம்.

ஔவையார் விநாயகப் பெருமானிடம் பாலும், தேனும், பாகும், பருப்பும் ஆகிய அழியும் பருப்பொருள்களைத் தந்துவிட்டு, அவனிடம் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய அழியா முத்தமிழைத் தருமாறு வேண்டி நிற்கிறார். இதனைப்,

''பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா''[1]

1. நல்வழி, கடவுள் வாழ்த்து

என அவர் பாடிச் செல்வதால் உணரலாம். இப்பாடலை ஆழ்ந்து நோக்கினால் முல்லை நிலத்துச் சிறந்த பொருளாகிய பசும்பாலும், குறிஞ்சி நிலத்துச் சிறந்த பொருளாகிய வடித்த தேனும், மருதநிலத்துச் சிறந்த பொருளாகிய வெல்லப் பாகும், நெய்தல் நிலத்துச் சிறந்த பொருளாகிய தேங்காய்க் கொப்பரையும் தந்துவிட்டு, விநாயகரிடமிருந்து மலவிளக்க மாகிய இயற்றமிழும் மொழி விளக்கமாகிய இசைத்தமிழும் மெய்விளக்கமாகிய நாடகத்தமிழும் ஆகிய முத்தமிழை எதிர் பார்த்தலைப் புரிந்து கொள்ளலாம். **மணிவாசகர்** தற்சிறுமை யுணர்வுடன் ஒன்றுக்கும் பற்றாத தம்மை இறைவன் பொருட் படுத்தி ஆட்கொண்டதாக அத்திறத்தினைப்பாடிக் காட்டுகிறார். அடியார்களுக்குத் தன்னையே வழங்கிடும் இறைவன் தம்மிடமும் அத்தகைய கருணை காட்டித் தமக்கும் தன்னையே வழங்கி விடுகிறானாம்! ஆனால், அதற்குப் பதிலாகத் தம் உடல் பொருள், ஆவி அனைத்தையும் தன்னுடையனவாகவே ஏற்றுக் கொண்டுள்ளானாம்! இத்தகைய பண்டமாற்றிலே திறம் படைத் தவர் - சதுரப்பாடுடையவர் -யார் என வினவுகிறார்; இதனைத் **திருவாசகத்தில்,**

> "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
> சங்கரா ஆர்கொலோ சதுரர்!
> அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
> யாது நீ பெற்றதொன் றென்பால்?
> சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
> திருப்பெருந் துறையுறை சிவனே!
> எந்தையே! ஈசா! உடலிடங் கொண்டாய்
> யான்இதற் கிலன்ஓர் கைம்மாறே"[1]

எனவரும் திருப்பாசுரத்தால் உணரலாம்.

மணிவாசகர் நெறியை அடியொற்றிய அருளாளர் **அதி வீரராம பாண்டியரோ** எளியவற்றை இறைவனிடம் கொடுத்து விட்டு உயர்ந்தவற்றைத் தாம்பெற்றுச் சிறந்துள்ளாராம்! இதனைத் தாம் பாடியருளிய **திருக்கருவைப் பதிற்றுப்பத்தந் தாதியில்,**

1. கோயில்திருப்பதிகம் (அனுபோக இலக்கணம்), 10

''சிந்தனை உனக்குத் தந்தேன் **திருவருள்** எனக்குத் தந்தாய்
வந்தனை உனக்குத் தந்தேன் **மலரடி** எனக்குத் தந்தாய்
பைந்துணர் உனக்குத் தந்தேன் **பரகதி** எனக்குத் தந்தாய்
கந்தனைப் பயந்த நாதா! கருவையி லிருக்குந் தேவே''[1]

எனவரும் பாசுரத்தால் உணர்த்தியருளுகிறார். இத்தகைய சிறப்பிற்குரிய இந்த அந்தாதியை மக்கள் **'குட்டித்திருவாசகம்'** என்று அழைக்கலாயினர்.

22. அருட் சான்றோர்களை நினைவுகூரும் உத்திகள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த காரணத்தினால் வானுறையும் தெய்வங்களாக வைத்துப் போற்றப்பெறும் அருளாளர்களைச் - சமயச் சான்றோர்களை - மக்கள் நாளும் நினைவிற்கொண்டு போற்றி வந்துள்ளனர். சமயப் பண்பாட்டு அடிப்படையில் அருட்செல்வர்கள் என்றும் நினைவுகூரத் தக்கவர்களே என்பதைச் சில சான்றுகளுடன் காண்போம்.

அருட்சான்றோர்களின் திருப்பெயர்களைக் குடும்பத்தில் குழந்தைகளுக்குப் பெயரிட்டு நினைவுகூர்ந்து வருவது பண்டு தொட்டே இருந்துவரும் மரபாகும். அது நிற்க, வேறு சில கோணங்களில் அருளாளர்களை நினைவுகூர்தல் பற்றிக் காண்போம், திருத்தொண்டர் புராணத்தை எழுதியருளிய **சேக்கிழார் பெருமான்** அந்த அன்புக் காப்பியத்தின் தலைவராந் தன்மையைச் **சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு** நன்கு வழங்கியுள்ளார்; எனவே, அவரைத் **தடுத்தாட்கொண்ட புராணம்** தொடங்கிச் **சேரமான் பெருமாள் நாயனார் புராணம்** முடிய வாய்ப்பு நேர்ந்த சில புராணங்களிலெல்லாம் அறிமுகமாக்கிப் பெருமைப்படுத்தியுள்ளார்.

அத்தகைய **சுந்தரரைத்** தமிழ் நாட்டவர்கள் நினைவுகூரும் வண்ணம் அவரின் பல்வேறு திருப்பெயர்களை **விளாகம், குகை, மடம்** முதலியவற்றிற்கு இட்டு அழைத்துள்ளனர்.

1. திருக்கருவைப்பதிற்றுப் பத்தந்தாதி, 63.

ஆலால சுந்தரர் என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருக்கயிலையிலிருந்தபோது வழங்கிய திருப்பெயராகும். "இது திருவொற்றியூர்க் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில் ஒரு விளாகத்துக்குப் பெயராய் **(ஆலால சுந்தர விளாகம்)** அமைந்திருந்தது"[1] என வருங்குறிப்பினைக் காண்க,

"திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணாடு கொண்டு முடி கொண்ட சோழபுரத்தில் வீராபிஷேகம் செய்தருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவரின் 17ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1233 இல்) திருநெல்வேலியில் **ஆலால சுந்தரர் திருமடம்** என்று ஒரு மடம் குறிக்கப் பெற்றுள்ளது. எனவே ஆலால சுந்தரர் என்ற பெயர் போற்றப் பெற்றமை தெளிவு"[2] எனக் கல்வெட்டறிஞர் **கே. எம். வேங்கடராமையா** எழுதிச்செல்வது மனங்கொள்ளத் தக்கது.

திருத்தொண்டத் தொகை பாடியருளிய சுந்தரரை நினைவிற் கொள்ளும் வகையில் **திருவிடைவாயிலில் திருத்தொண்டத் தொகையரும் குகை** என்று ஒரு குகை இருந்ததென மூன்றாம் இராசேந்திரனுடைய 4ஆம் ஆண்டு (கி.பி. 1250) க்குரிய கல்லெழுத்தினால்[3] அறியலாம். இக்குகையில் திருமுறைகள் வைக்கப்பட்டுப் பாதுகாப்பாக இருந்தன,

"திருச்சி மாவட்டம் கோவந்த புத்தூரில் மூன்றாம் இராசேந்திர சோழனது 2ஆம் ஆண்டு (கி.பி. 1248) க்குரிய கல்லெழுத்து, **திருத்தொண்டத் தொகையான் திருமடம்** என்று ஒரு மடத்தைக் குறித்துச் சில செய்திகளைச் சொல்லுகிறது"[4] என வருங்குறிப்பும் சிந்தித்துப் போற்றத்தக்கது.

சிதம்பரம் நடராசப்பெருமான் ஆலயத்தில் பல்லவ மன்னன் கோப்பெருஞ் சிங்க தேவனது கல்வெட்டு ஒன்றில் (கி,பி. 1278)

1. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், பாகம் 1, சாசனம், 523; 203 of 1912
2. சை. சி. கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழாமலர், 1961, பக், 29
3. தெ. இ. க, 10 of 1918
4. சை. சி. கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழாமலர், 1961 பக். 31

"அம்பலநாயகம் என்னும் **பெயருடைய** பெருந்தெருவில திருநாவுக்கரசர் தேவர் திருமடத்தில், நாயனார் அழகிய திருவையாறுடையார் என்பவர் குலோத்துங்க சோழப் பிள்ளை யாரைத் திருவீதிகளில் வலம் கொண்டு வந்தபோது பூசை களுக்காக அரைவேலி நிலம் கொடையாக அளித்துள்ள செய்தி குறிக்கப் பெற்றுள்ளது"[1] என்பது கொண்டு சிதம்பரத்தில் திருநாவுக்கரசர் மடம் அமைந்து, அவரை நினைவுகூரும் வகையில் விளங்கியதை அறியலாம்.

தேவாரச் செல்வன் திருமடம் என்ற பெயரிலும் மடம் கட்டப்பட்டுத் தேவாரப் பதிகங்கள் ஓதப்பெற்றன. "தஞ்சாவூர் மாவட்டம் அவளிவநல்லூர் என்னும் ஊரிலுள்ள இராசராச சோழனின் இருபத்தெட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1013) பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டில் **திருமுறை தேவாரச் செல்வன் திருமடம்** ஒன்று இருந்ததையும், தேவாரத் திருமுறைகள் திருமடங்களில் ஓதப்பெற்றன என்பதையும் அறிகிறோம்"[2] என டாக்டர் **அ. கிருட்டினன்** எழுதிச்செல்லுங் குறிப்பினைக் காண்க.

இராமாயணத்தில் இராமனைத் துணை வேண்டாப்பெரு வீரனாக (அசகாய சூரனாக)ச் சித்திரித்துக் காட்டிச் செல்வார் **கம்பர்**, சைவவுலகில் இளமையிலேயே தன்னேரிலாச் சமயப்பணி புரிந்த வித்தகராகத் **திருஞானசம்பந்தர்** போற்றப்பெறுகிறார்; மதுரையிலே தம்மோடு சமணர்கள் பலராக இருந்து அனல் வாதம் புனல்வாதம் புரிந்த நிலையிலும் அவர்தம் நெஞ்சுறுதி யாலும் ஆண்டவன் திருவருளாலும் தனியே நின்று வென்றார். இதனைச் சமயச் சான்றோர்கள் பலரும் போற்றிக் கொண் டாடியுள்ளனர். இவ்வாற்றான், "திருவெண்காட்டில் '**தனி நின்று வென்றான் மடம்**' என்று ஒரு மடம் விக்கிரம சோழனுடைய கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. இது ஞான சம்பந்தர் மதுரை யில் எண்ணாயிரம் சமணர்களைத் தனியே நின்று எதிர்த்து வென்ற நிகழ்ச்சியைக் குறிக்கும்"[3] என்று கல்வெட்டறிஞர் **கே. எம். வேங்கடராமையா** எழுதிச் செல்வது சிந்திக்கத் தக்கதாகும்.

1. கல்வெட்டில் வாழ்வியல், பக். 195
2. மேலது பக். 196.
3. கல்வெட்டில் தேவாரமூவர்,

இலக்கிய நோக்கில், அருளாளர்களை நினைவுகூரும் சில சான்றுகளைக் காண்போம்.

இசைத்தமிழுக்கு மிகுந்த ஆக்கந்தேடியவர் திருஞான சம்பந்தர் என்பது தமிழ்நாடு நன்கறிந்த செய்தி. அவர் நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கத் திருக்கோலக்கா இறைவன் பொற்றாளம் வழங்கி அருளாதரவு தந்துள்ளான்; இந்த இனிய செய்தியை உலகத்துள்ளோர் நினைவுகூரும் வகையில் சுந்தர மூர்த்தி சுவாமிகள்,

> ''நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பும்
> ஞான சம்பந்தனுக்குல கவர் முன்
> தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
> தன்மை யாளனை என் மனக் கருத்தை
> ஆளும் பூதங்கள் பாட நின் றாடும்
> அங்க ணன்றனை என்கணம் இறைஞ்சும்
> கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
> கோலக் காவினிற் கண்டுகொண் டேனே''1

எனப் பாடி யருளுதல் காண்க. நற்றமிழுக்கு ஆக்கந்தேடிய சம்பந்தரையும், அப்பரடிகளையும் நினைவுகூரும் வண்ணம் அதே சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

> ''நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக்கரையனும் பாடிய
> நற்றமிழ் மாலை
> சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை''2

எனப் பாடியருளுதலையும் காண்க.

திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் எவ்வாறு ஒருவருக்கொருவர் நேயம் வைத்து மிகுந்த பணிவன்புடன் பழகியுள்ளனர், என்பதைத் திருவீழிமிழலை திருமறைக்காடு போன்ற தலங்களில் பாடியருளிய அருட்பாசுரங்களால் அறியலாம். இவற்றை மக்கள் நினைவுகூரும் வண்ணம் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் பாடிச் சென்றுள்ளதைக் காண்க.

1. திருமுறை. 7, 62, 8,
2. திருமுறை. 7, 67, 5,

தேவார மூவர்தமிழுக்கு என்றுமே தமிழ்நாட்டில் இசையடிப் படையில் ஒரு வகை ஏற்றம் இருந்து வந்துள்ளது. எனவே, பிற்காலச் சான்றோர்களும் மூவர் தமிழைப் பாராட்டுமுகத்தான் **சம்பந்தரையும் அப்பரடிகளையும் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும்** நினைவுகூர்ந்து நன்கு போற்றியுள்ளனர். எடுத்துக்காட்டாகத் தாயுமானவ சுவாமிகள்,

"தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கண்
செங்கரும்பே! மொழிக்குமொழி தித்திப்பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கே
மூடனேன் புலம்பிய சொல் முற்று மோதான்"[1]

எனப் பாடிச் செல்லுதலை நோக்குக.

சைவ சமயாசாரியருள் தேவார மூவரேயன்றி **மணிவாசகரும்** தம் திருவாசகத்தாலும் திருக்கோவையாராலும் மக்களிடையே என்றும் போற்றி வணங்குதற்குரிய பேரருளாளராக விளங்கி வருகிறார். **'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்'** என்பது தமிழ் நாட்டினரிடையே பழகியுள்ள முது மொழி. இத்தகைய சிறப்பிற்குரிய நாயகரான மணிவாசகர்,

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி"[2]

எனப் பாடிச் செல்வதால் அன்பின் திருவுருவாம் கண்ணப்பரை எவ்வாறு நினைவுகூர்கிறார் என்பதை உணரலாம். **நக்கிர தேவ நாயனர்** கண்ணப்பர் மீது கொண்ட பக்திப் புலப்பாட்டினைத் **திருக்கண்ணப்பத் தேவர் திருமறம்** என அருளிச் செய்தமையால் உணர்ந்து போற்றலாம்,

கண்ணப்ப நாயனாரைப் போன்றே பல அருட்செல்வர் களையும் பின் வந்த அருளாளர்கள் நினைவுகூர்ந்து போற்றிப் பாடியுள்ளனர். அவர்களைப் பற்றிய வரலாறுகள் மக்களிடையே பரவவேண்டுமென்ற நோக்கில் **சேக்கிழார் பெருமான்** தம் திருத் தொண்டர் புராணத்தில் பாடியருளியுள்ளார். இறைவனொடு

1. தாயுமான சுவாமிகள் பாடல்கள், கல்லாலின், 14
2. திருவாசகம், திருக்கோதும்பி, 4

சார்த்தி எண்ணத்தக்கவர்கள் இவர்கள் என்பது தமிழ் மக்களின் எண்ணம். மேலும், **மணிவாசகர்** போன்ற பெருமக்களையும் இறைவனுடன் சார்த்தி, மக்கள் நினைவிற் கொண்டு போற்றுமாறு **பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணம்**, இயைபுடன் பாடியுள்ளமை நினைந்து போற்றற்குரியது.

சைவசமயகுரவர்கள் மீதும் திருத்தொண்டர்கள் மீதும் பெருமதிப்பும், பக்தியும் கொண்டவர் திருநாரையூர் **நம்பியாண்டார் நம்பிகள்** சுந்தரர் அருளிய **திருத்தொண்டத் தொகையை** அடியொற்றித் **திருத்தொண்டர் திருவந்தாதியும்,** திருஞானசம்பந்தர் மீதுகொண்ட பக்தியினால் **ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை** ஆகியவையும், திருநாவுக்கரசர் மீதுகொண்ட பக்தியினால் **திருநாவுக்கரசுதேவர் திருவேகாதச மாலையும்** பாடியருளியுள்ளமை காண்க.

சிறப்பாகச் சமயகுரவர் நால்வரைப் பற்றிய பெருமைகளைத் **துறைமங்கலம் சிவப்பிரகாசர்** எழுதியருளிய **நால்வர் நான்மணி மாலையாலும்,** அருட்பிரகாச வள்ளலார் அருளிய **ஆளுடைய பிள்ளையார் மாலையாலும், ஆளுடைய அரசு மாலையாலும், ஆளுடைய நம்பிகள் மாலையாலும், ஆளுடையடிகள் மாலையாலும்** நன்கு உணரலாம்.

இஃது ஒருபுறமிருக்கத், திருத்தொண்டர்களைப் **பெரிய புராணம்** வாயிலாகப்பரவிய **சேக்கிழார்** பெருமானைச் சைவ மெய்யன்பர்கள் நாளும் போற்றி வரலாயினர்; அவர்கள் மனத்திற்கு உவகைதரும் வண்ணம் **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை 'சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத்தமிழ்'** பாடியருளியமை ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தக்க அருங்குறிப்பாகும்.

23. சமயத்தொடர்புடன் கூடிய மகளிரின் சில பழக்க வழக்கங்கள்:

சமயநெறிகளைக் காப்பதில் ஆடவர்களைப் போலவே மகளிரும் நம்பிக்கையும், வைராக்கியமும் கொண்டு காத்து

வந்துள்ளனர். முற்காலத்தில் **மகளிருக்குச்** சமயநெறிகளைப் பொறுத்தவரையில் அவற்றைப் பின்பற்றுவதில் குடும்பத்தினரின் ஆதரவு இருந்துள்ளது. **பாண்டியன் நெடுமாறன்** (கூன் பாண்டியன்) சமணனாக இருந்தும் அவனுடைய கோப்பெருந் தேவி **மங்கையர்க்கரசியார்** சைவநெறியில் ஒழுகினார்; அவர்தம் முயற்சியாலும் அமைச்சர் **குலச்சிறையார்** முயற்சியாலும் **திருஞானசம்பந்தர்** மதுரைக்கு வரவழைக்கப்பட்டு, அவர் வாயிலாக மன்னனது வெப்புநோய் தீர்ந்த வரலாறு பலரும் அறிந்ததே.

தம் தம்பி **திருநாவுக்கரசருக்காகவே** உயிர் தரித்திருந்தார் **திலகவதியார்**; தம்பி சமணமதத்திற்கு மாறிய நிலையிலும் தம் சைவ நெறிப்பணிகளில் தவறாமல் இருந்துவந்தார். தம் உயிர்ப் பொறுப்பாகத் தம்பியைச் சைவசமயத்திற்கு மீட்பதற்கு இறை வனிடம்இறைஞ்சி நின்றார்; திருவருளால் தம் நல்ல எண்ணம் நிறைவேறக் கண்டார்.

புனிதவதியாராகிய **காரைக்காலம்மையார்** தம் சைவநெறி யூற்றத்தைக் கடைசி வரையில் புலப்படுத்திய மாட்சி உலகம் அறிந்ததே. இவற்றையெல்லாம் **பெரிய புராணம்** விளக்கிச் செல்லும்.

வைணவ சமயத்தில் விட்டுணுசித்தராகிய **பெரியாழ்வார்** வளர்த்த திருமகள் - சூடிக்கொடுத்த கோதையாகிய **ஆண்டாள்** - உலகியலுக்கு மாறாகத் திருவரங்கத்து **அழகிய மணவாளனையே** மனத்தில் வரித்தாள்! அவன் நினைப்பாகவே தன் சமய வாழ் வியல் பழக்கவழக்கங்களை வகுத்துக் கொண்டாள். அவள் கண்டு கொண்ட அருளனுபவங்களைத் '**திருப்பாவை**'யிலும் '**நாச்சியார் திருமொழி**'யிலும் விளங்கக் காணலாம். சிறப்பாகத் திருப்பாவை வாயிலாக மகளிரின் பாவை நோன்பு தொடர்பான சமயப்பழக்க வழக்கங்களை நன்குணரலாம்.

சைவ சமயாசாரியருள் ஒருவராகிய **மணிவாசகர்** அருளியவை **திருவாசகமும் திருக்கோவையாரும்.** இவை வாயிலாக அக்காலச் சமய மகளிரின் நெஞ்சப்பாங்கினை இனிது உணரலாம். சிறப் பாகத் திருவாசகத்தில் மகளிரின் விளையாட்டல்களான **திருக் கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பொற்சுண்ணம், திருச்**

சாழல், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் முதலியவற்றால் (பழக்கமான விளையாட்டிலும்) சமயப் பண்பாட்டை மறவாத மனப்பாங்கினைக் காணலாம்.

மகளிர் தம் வாழ்வியல் நலங்கருதியும் குடும்ப நலங்கருதியும் நாட்டு நலங்கருதியும் இறையுணர்வு கொண்டிருந்தனர்; அந்த உந்துதல் காரணமாகப் பல்வகை நோன்புகளைப் பழக்கப்படுத்திக் கொண்டனர். பெரியோர்கள் கடைப்பிடித்த சில பழக்க வழக்கங்களைத் தாமும் பின்பற்றி வாழ்வில் மகிழ்ச்சியுற்றனர்.

கன்னியர் விரைவில் நல்ல கணவரையடையவும், நாடு மழை வளங் கொள்ளவும் பாவைநோன்பு நோற்றனர். அவர்கள் விரைவில் கணவரையடையும் பொருட்டுப் 'பிறை தொழுதல்' என்பதையும் கைக்கொண்டனர். தொன்மைக் காலப் பழக்கமாகிய பிறை தொழுதலை இன்றும், 'இராவாண்டை' என்ற பெயரில் கன்னியர் விருப்பமுடன் செய்கின்றனர். மாசி மாத அமாவாசை முடிந்தபின் பிறை தெரியும் நாளிலிருந்து நிறைநிலா (பௌர்ணமி) வரையுள்ள நாள்களில் இரவு மணி பத்து முதல் பொழுது விடியும் வரையில் வழிபாடு செய்கின்றனர். இதனை ''மாசிப்பிறை கண்டவுடன் மணுக்களெல்லாம் சம்மதிச்சு''[1] எனவரும் நாட்டுப் பாடற் குறிப்பால் தெரிந்து கொள்ளலாம்.

மகப்பேறு வேண்டி மகளிர் வேப்ப மரத்தையும், அரச மரத்தையும், நாகக் கற்களையும் சில குறிப்பிட்ட நாள்களில் பலமுறை வலம் வரும் பழக்கம் தமிழ்நாட்டில் பல இடங்களில் காணலாம்.

''அமாவாசை நாள் திங்கட்கிழமையில் வந்தால் அப்போது அரசமரத்தையும் அதனருகே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நாகக் கற்களையும் 108 தடவை அல்லது 216, 324, 432 என்று எண்ணிக்கையில் வலம் வந்து அந்த மரத்தை வழிபட்டு மகப்பேறு பெறப் பிரார்த்திக்கும் வழக்கம் பெண்களிடம் உண்டு''[2] என்றும், ''அரசமரம் நாகக்கற்கள் என்ற நிலையில் இல்லாமல் அரசமரத்தோடு வேம்பு மரம் அல்லது நெல்லி மரம் இணைந்

1. பிறைதொழும் பெண்கள்-இராம. பெரிய கருப்பன், பக். 6
2. தமிழ்நாட்டு மக்கள் மரபும் பண்பாடும், பக். 54

இருந்தால் அதனை முறையோடு வலம் வந்து வழிபட மகப்பேறு கிட்டும் என்ற நம்பிக்கையும் உண்டு''[1] என்றும் 'சோமலெ' எழுதிச் செல்வது மனங்கொள்ளத் தக்கது.

பொதுவாக, வேப்ப மரமும் அரச மரமும் இணைந்திருக்கும் சூழலில் அதனடியில் ஒரு பிள்ளையார் உருவச் சிலையை அமர்த்தி வழிபடத் தொடங்கி விடும் வழக்கம் தமிழ்நாட்டில் காணலாம். வேம்பையும் அரசையும் சுற்றிப் பிள்ளையாரை வணங்கினால் மகளிருக்கு மகப்பேறு வாய்க்கும் என்பது நம்பிக்கை. எனினும், இத்தகைய 'வேம்பரசு சுற்றுதல்' மகளிரின் தாயார் முயற்சியாலேயே பெரும்பாலும் நடைபெறும். ஈண்டுத் ''தாயருகே நின்று தவத்தைந் நீராடல்''[2] என்ற பண்டைய பழக்கம் இயைபுடன் நினைவிற்கு வரும். வேம்பரசு சுற்றுதல் நாட்டு மக்களிடம் நன்கு அறிமுகமானது என்பதை,

''வேம்பரசு சுத்தி விநாயகரைத் தெண்டனிட்டு'' எனவரும் நாட்டுப்பாடற் பகுதியால் புரிந்து கொள்ளலாம்.

இவ்வாற்றான் சிற்றூர்ப் புறங்களில் கள ஆய்வு (field work) மேற்கொண்டால், சமயப் பண்பாட்டு அடிப்படையில் மகளிர் மேற்கொண்ட பல பழக்க வழக்கங்கள் பலருக்குத் தெரியவரும்.

24. தெய்வங்களின் பெயரிடுவதால் கிட்டும் பயன்கள்.

சமய ஒழுகலாற்றில் இறைவன் திருப்பெயர்களைச் சிந்திப்பதும் உச்சரிப்பதும் வற்புறுத்தப்பெறும். தெய்வப்பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டுவதால், குழந்தைகளைக் கூப்பிடும் போதும், அவற்றைப்பற்றி விசாரிக்கும் போதும், கடிதம் வாயிலாக எழுதும் போதும் தெய்வத் தொடர்புடன் இருப்பது போன்ற சூழல் அமையும், அறிந்தோ அறியாமலோ இறைவன் திருநாமத்தைக் கூறுகையிலும் பலன் உண்டு என்பதை வற்புறுத்த **அஜாமிளன்** புராணக் கதையைக் கூறுவர்; அக் கதையின் சாரம் வருமாறு.

1. தமிழ்நாட்டு மக்கள் மரபும், பண்பாடும், பக். 54
2. 19ஆவது ஆய்வுக்கோவை, இ.ப.த மன்றம், 1987, பக், 72

அஜாமீளன் உலகியலுடன் வாழ்ந்து கொண்டிருக்கையில், தன் கடைசி மகனுக்கு **'நாராயணன்'** எனப் பெயர் வைத்து வளர்த்து வருகிறான். அஜாமீளனுக்கு இறுதிக் காலம் நெருங்கிக் கொண்டிருக்கும்போது தன் கடைசி மகனை 'நாராயணா' என்று கூப்பிடுகிறான். இதைக் கேட்டதும் **திருமால் தூதர்கள்** அங்குஓடி வருகின்றனர். அதே வேளையில் அஜாமீளனை **எம தூதர்கள்** பாசக்கயிற்றினால் பிணைத்து இழுத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கும் திருமால் தூதர்களுக்கும் இடையே ஒரு வாக்கு வாதம் நிகழ்கிறது.

அஜாமீளன், பகவானைக் கூப்பிடாமல் தன் மகனைக் கூப்பிட்ட நிலையில் அது எப்படிப் பகவானைக் கூப்பிட்டதாகும் என எமதூதர்கள் வினவுகின்றனர்; அதற்குத் திருமால் தூதர்கள், ''ஒருவன் தெரியாமல் மருந்தைச் சாப்பிட்டாலும் அதுதன் குணத்தைக் காண்பிக்கத்தானே செய்யும்! விறகும் தீயும் தெரியாமல் ஒன்று சேர்ந்தாலும் விறகு தீப்பிடித்துச் சாம்பலாகத் தான் போகும். ஒருவன் தெரியாமல் நஞ்சு என்று எண்ணிக் கொண்டு அமிருதத்தைச் சாப்பிட்டாலும் அது தன் பண்பைக் காட்டவே செய்யும்'' எனப் பதில் கூறுகின்றனர். அஜாமீளன் காப்பாற்றப்படுகிறான் என்பது கதையின் முடிவு.

இதனால், இறைவனைத் தெரியாமல் - நினையாமல் - கூப்பிட்டாலும் நல்லதுதான் என்பது பெறப்படும்; இந்த நோக்கில், குழந்தைகளுக்குத் தெய்வத்தின் பெயர்களை வைத்து அழைப்பதும் ஒரு வகையில் நல்லதே என்பது உணரப்பட வேண்டிய ஆக்கக்குறிப்பாகும், பண்பாட்டு அடிப்படையில் குழந்தைகளுக்குத் தெய்வத்தின் பெயர்களை இட்டு அழைப்பது ஏற்புடையதேயெனலாம்.

சிற்றூர்ப்புறமக்கள் கிராம தேவதைகளான **கண்ணாத்தாள், மாரியம்மன், காளியம்மன், வெள்ளையம்மாள்** முதலிய பெயர்களைப் பெண்குழந்தைகளுக்கும், **கறுப்பண்ணன், சுடலைமாடன், வீரன்** முதலிய பெயர்களை ஆண் குழந்தைகளுக்கும் வைத்துச் சமய அடிப்படையில் நன்றிக்கடன் செலுத்தி வருகின்றனர்.

தமக்குப் பிறக்கப்போகும் குழந்தைகள் ஆண்களாகவே இருப்பின் தமக்கு ஆண்டவன் பெருங்கருணை புரிந்துள்ளதாக நினைத்துக் கொண்டு நேர்த்திக் கடன் புரிபவர்கள் ஏனோ பலராகக் காணப்படுகின்றனர்; தாம் வணங்கும் கடவுளர்க்கும் அவர்களுடைய சக்தியர்களே துணைநிற்கின்றனர் என்பதைப் பலர் நினைப்பதே இல்லை. சில குடும்பங்களில் பெண் குழந்தைகள் பிறந்து, அவை வளர்ச்சியிலும் வாழ்விலும் படும்பாடு கூறத் தரமன்று, சமயவுணர்வினராயிருந்தும் **பெண்மையில் பொதிந்துள்ள தெய்வநலத்தைப்** புரிந்து கொள்ளாத காரணத்தால் பெண் தெய்வங்களின் பெயர்களைத் தம் பெண் குழந்தைகளுக்கு இட்டும் போதிய பயனில்லை. சமுதாயவுணர்வோ சமயப் பண்பாடோ மக்களின் மனத்தில் ஆழப்பதியாததால் இத்தகைய அவல நிலையுள்ளது.

குழந்தைகளுக்குத் தெய்வப் பெயர்களிடும் போதும், குறுகிய சமயவுணர்வு காணப்படுவதும் உண்டு.

சமுதாயத்திலே பொதுநோக்கத்துடனும், நன்றியுணர்வுடனும் பிறமதங்களில் வழக்கத்திலுள்ள மேரி, **ஸ்டாலின், சித்தார்த்தன், கௌதமன்** முதலிய பெயர்களை இந்துமதத்தினரும்தம் குழந்தைகளுக்குச் சூட்டி மகிழ்கின்றனர். ஆனால், இந்து மதத்தில் கிளைச் சமயங்களிலே உள்ள தெய்வத் திருப் பெயர்களைக் கூட வைக்க நினைப்பதில்லை.

சைவ சமயக் குடும்பங்களில் பலர்தம் குழந்தைகளுக்குத் தம் சமயத் தெய்வப் பெயர்களேயன்றி, வைணவத் தெய்வப் பெயர்களையும் வேறுபாட்டுணர்வின்றி வைத்து மகிழ்கின்றனர். ஆனால், வைணவக் குடும்பங்களில், சிறப்பாக அய்யங்கார் குடும்பங்களில் சைவ சமயத்தெய்வங்களின் திருப் பெயர்களை வைப்பதில்லை, அஃதாவது, பரமேசுவரன், நடராசன், பார்வதி, உமையாள், கந்தன், வள்ளி, தெய்வயானை, விநாயகர் முதலிய பெயர்களைத் தம் குழந்தைகளுக்கு வைப்பதில்லை என்பதை மரபாகக் கொண்டுள்ளனர். இஃது ஒருவகைக் கட்டுப்பாடு என்பர்

24.1. சமயத்தாக்கம் - குழந்தைகளுக்குப் பெயரிடுகையில் பின்பற்றும் மரபுகள்:

தமிழ்நாட்டில் சமயத் தொடர்புடைய மக்கள், தாம் பெற்ற குழந்தைகள் சமயச் சார்புடன் வளர்ந்து வாழ வேண்டும்

என்ற நம்பிக்கையுடையவர்கள். எனவே, ஆண் குழந்தைகளுக்கு ஆண் தெய்வப் பெயர்களையும் பெண் குழந்தைகளுக்குப் பெண் தெய்வப் பெயர்களையும் சூட்டி மகிழலாயினர்.

பொதுவாகப் பெயர் சூட்டுகையில், மக்கள் சில மரபுகளைப் பின்பற்றி வருதலைக் காணலாம்.

1) குலமரபினைப் போற்றும் வகையில் பாட்டன் பெயரைப் பேரனுக்கு வைக்கும் மரபு பெரும்பாலும் இருந்து வருகிறது; தன் தந்தைக்குத் தந்தை - பாட்டன் - பெயரை ஆண் குழந்தை சூடுவதால் 'பெயரன்' (பேரன்) என்ற சொந்தமும், உரிமையும் கொள்வதையும், தன் தந்தைக்குத் தாய் - பாட்டி - பெயரைப் பெண் குழந்தை சூடுவதால் 'பெயர்த்தி' (பேர்த்தி) என்ற சொந்தமும், உரிமையும் கொள்வதையும் காணலாம்.

2) குழந்தைக்குப் பெயர் சூட்டுகையில், பஞ்சாங்கம் பார்த்து அது பிறந்த நட்சத்திரத்திற்கேற்பப் பெயரைத் தேர்ந்தெடுக்கின்றனர். அத்தகைய பெயரும் சமய அடிப்படையிலேயே பெரும்பாலும் அமைதலைக் காணலாம்.

3) சைவ சமயத்தவர் தம் குழந்தைக்குப் பெயர் சூட்டுகையில் சமய ஆசாரியர்கள் பெயர்களையும், வித்தைக்கு வழி வகுத்த ஆசிரியர் பெயர்களையும் மனத்துட் கொண்டு, பெயரைத் தேர்ந்தெடுத்து வைப்பதில் நாட்டங் கொள்கின்றனர். சமயாசாரியர் திருநாவுக்கரசரது திருப்பெயரை அப்பூதியடிகள் தம் ஆண்மக்களுக்கு இட்டு வழங்கியதை நினைவிற்கொள்ளலாம். வைணவ சமயத்தின் சமயாசாரியர்கள் பெயர்களை இயல்பாக மக்களுக்குச் சூட்டி மகிழ்வர்; ஆசிரியர் பெயர்கள் வைணவப் பெயர்களாயிருப்பின் அவற்றைச் சூட்ட முற்படுவர்.

மேலும், சமய ஆசாரியர்களுக்குத் தாசர்களாக (கட்டளையை ஏற்றுப் பணிபுரிபவர்களாக) மனத்தில் கொண்டு, ஆசாரியரின் இயற்பெயரையொட்டித் 'தாசர்' என்பதை இணைத்துக் கொள்ளும் பக்தி ஏற்படலாயிற்று. இவ்வாற்றான், இராமாநுச தாசர், அழகிய மணவாளதாசர் முதலிய திருப்பெயர்களைக் காணலாம்.

4) தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையில் தமக்கு **ஆதரவு** காட்டிய பெருமக்களை நினைத்து, நன்றியடிப்படையில் பெயரைத் தேர்ந்தெடுத்துத் தம் குழந்தைகளுக்குச் சூட்டுவதில் மகிழ்ச்சி கொள்கின்றனர்.

5) பிறந்த குழந்தைகள் தங்காமற் போன நிலையில், பிறக்கும் குழந்தை நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டுமென்ற நோக்கில் பெயரிடும் வழக்கம் உண்டு. அந்நிலையில், ஆண் குழந்தையாயிருப்பின் **குப்புசாமி** முதலிய பெயர்களையும், பெண் குழந்தையாயிருப்பின் **குப்பம்மாள்** முதலிய பெயர்களையும் சூட்டி இறைவனை வேண்டி நிற்கின்றனர்.

6) ஒருவருக்குப் பெண்பிள்ளைகளாகவே பிறந்து வருகையில் ஆண்பிள்ளை பிறக்க வேண்டுமென்ற விருப்பத்தில் கடைசிப் பெண்பிள்ளைக்கு **வேம்பு, சம்பூரணம், பரிபூரணம்** என்றெல்லாம் பெயர் வைத்தலைச் சைவக் குடும்ப மரபில் காணலாம்.

25. மத, சமயச் சின்னங்கள் - பொதுநோக்கு:

உலகத்திலுள்ள பல்வேறு மதத்தினரும் - சமயத்தினரும் - கொள்கையினரும் தத்தமக்கெனச் சில சின்னங்களை - அடையாளங்களை - அமைத்துக் கொள்வதில் நாட்டங்காட்டியுள்ளனர்.

உலகந்தழுவிய **கிறித்துவ** மதத்தில் **மாதா கோயில், சிலுவை, முடி, செங்கோல்** முதலியவற்றையும், கரியநிறம், வெள்ளை நிறம், சிவப்புநிறம் ஆகிய நிறத்தில் **ஆடைகளை** எவ்வெவ்வாறு மரபுடன் தைத்துச் சமயஞானியர் ஒவ்வொருவரும் உடுத்துக் கொள்கின்றனர் என்பதையும், வழிபாட்டில் மரபுடன் அவர்கள் பின்பற்றும் முறைகள் பலவற்றையும் காண்கையில் அவர்களுக்கென்று, அவர்களை இனங்கண்டு கொள்ளும் வகைகளில் சில அடையாளங்கள் - அறிகுறிகள் - உண்டென்பது புலனாகும்.

இசுலாம் மதத்தினரும், **பௌத்தக்** கொள்கையினரும், **சமணக்** கொள்கையினரும், **சீக்கிய** சமயத்தினரும் தத்தமக்

கெனப் புனிதச் சின்னங்களை - அறிகுறிகளை - அமைத்துக் கொள்ளத்தான் செய்கின்றனர். அவ்வாறே **இந்து** மதத்தினரும் தத்தம் உட்பிரிவுகளுக்கேற்பச் சமய அடையாளங்களை மரபாகப் பின்பற்றி வருகின்றனர். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

சமய அடையாளங்கள் தனிப்பட்டோர் நிலையிலும் நிறுவன நிலையிலும் பலவாக அமைகின்றன.

தமிழ்நாட்டில் இந்து மதத்திலே சைவசமயம் வைணவ சமயம் என இரு பெரும் பிரிவுகள் உண்டு. முதலில் சமய நிறுவன நிலையில் பின்பற்றப்படும் சில மரபுவழி அடையாளங்களை முதற்கண் காண்போம்.

பொதுவாக இந்து ஆலயங்களை வெளிப்புறத்திலிருந்தே அடையாளம் கொள்ளும் வகையில், கோயில் மதிற்சுவரின் அடிமட்டத்திலிருந்து ஒரு பகுதியை வெள்ளையடித்துக் காவிப் பட்டைகளை வரிசையாகவும், செங்குத்தாகவும் தீட்டுவதைப் பெரும்பாலும் மரபாகக் கொண்டுள்ளனர்.

வைணவச் சமயம்: நிறுவன அடையாளம்:

வைணவ ஆலயங்களின் முகப்பிலோ, மதில்மேலோ, திருநாமங்களையோ, கருட வுருவங்களையோ சுதை வேலைப்பாட்டுடன் அமைப்பது உண்டு.

சுவாமி சன்னிதிக்கு எதிரில் பெரும்பாலும் **கருட சன்னிதி** அமைந்திருக்கும்.

25.1. தெய்வத் தொடர்பில் அடையாளங்கள் (சின்னங்கள்) - தத்துவம்:

சமயஞானம் வாய்க்கப் பெற்ற நம் முன்னோர்கள் தெய்வச் சார்பினவாகிய பல சின்னங்களைச் சமய மெய்ப்பொருளியற் கூறுகளை உணர்த்துவதற்காக அமைத்துள்ளனர். இவற்றை ஊன்றி நோக்குகையில் சமய மாட்சியினை இனிது உணர்ந்து போற்றலாம்.

சிவன் அணிந்துள்ளதும், ஞானியர் அமரப் பயன்படுத்துவதுமான புலித்தோல், விரிந்தமையும் வியத்தகு ஆசைகளை உணர்த்தும் என்பர். "வெள்ளையும் கறுப்புமான புள்ளிகளையுடைய மான்தோல், சுக்ல கிருஷ்ண யஜீர்வேத யாகத்தைக் காட்டும்.

குடை புகழையும், புத்தகம் அல்லது ஏடு அனைத்து அற நூல்களையும், அட்சமாலை (உருத்திராக்க மாலை) காலத்தையும், கமண்டலம் அனைத்து நூல்களின் சாரத்தையும் குறிக்கும்.

கலப்பை காலத்தையும் உலக்கை மரணத்தையும் குறிக்கும். பிரமனின் சடைகள் மூலிகைகளையும், சரசுவதியின் கைகள் வேதங்களையும் குறிக்கும்"[1] எனச் சிற்ப வல்லுநர் வை. கணபதி ஸ்தபதியார் கூறுவது சிந்தித்துப் போற்றுதற்குரியதாகும்.

பிரமனின் நான்கு முகங்கள் முறையே இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் எனும் நான்கு மறைகளையும், சதாசிவ மூர்த்தத்தின் ஐந்து முகங்களாகிய அகோரம் வாமதேவம் தத்புருடம் ஈசானம் சத்தியோஜாதம் என்பன சிவனுடைய ஐந்தொழில்களையும் உணர்த்தும் என ஞானியர் பகர்வர். மேலும், "சத்யோஜாதம் பூமியையும், வாமதேவம் நீரையும், அகோரம் நெருப்பையும், தத்புருடம் காற்றையும், ஈசானம் வானத்தையும் குறிக்கும் என்று கூறுவர் ஒரு சாரார்"[2] என்பது சிந்திக்கத் தகுவதாகும்.

சிவனது ஊர்தியாகிய இடபம் அறக்கடவுளைக் குறிக்கும் என்பர்; திருமாலே ஒரு காலத்தில் இடபமாகத் தோன்றிச் சிவனைத் தாங்கினான் என்றும் புராண அடிப்படையில் கூறுவர். அந்நிலையில், இடபத்தின் நான்கு கால்கள் சமம், விசாரம், சந்தோசம், சாதுரங்கம் என்ற நான்கு கணங்களைக் குறிக்கும் என்றும், இறைவன் இதன்மீது எழுந்தருளிவருவது அக்குணங்களைக் கொண்ட உயிரிடத்தே மட்டும் எழுந்தருளி அருள் செய்கின்றார் என்றும் கூறுவர்.[3]

1. சிற்ப நூல், பக், 135
2. மேலது
3. மேலது

சமயத் தொடர்பில் **சிம்மம்** வீரத்தின் அறிகுறியாகக் கருதப் படும். சூரியனுக்கென **ஏழுகுதிரைகளைக்** கூறுகையில் அவை ஏழு வண்ணக் கதிர்களைக் குறிக்கும்; குதிரைகள் திசைகளையும் புலன்களையும் குறிக்கும் என்பர்.[1]

சித்திரங்களையும் சிற்பங்களையும் அமைக்கையில் **திருமால் திருக்கைகளில்** கொடுத்து அமைக்கும் **சங்கு** வானத்தையும், **சக்கரம்** காற்றையும், **கதை** அனலையும், **பதுமம்** நீரையும் குறிக்கும் என வைணவச் சான்றோர்கள் கூறி மகிழ்வர்.

"**புருஷன்** மணி ஆரமாக (கௌஸ்துபமாக), **மூலப்பிரகிருதி** மருவாக (ஸ்ரீவத்சம்), **மஹத்** கதையாக, **ஞானம் அஞ்ஞானம்** கத்தியும் உறையுமாக, **சாத்துவிக தாமச அகங்காரங்கள்** சாரங்கம் சங்காக, **மனம்** சக்கரமாக, **ஞானேந்திரிய - கர்மேந்திரியங்கள்** அம்புகளாக, **பஞ்ச தன்மாத்திரைகள் பஞ்சபூதங்கள்** வனமாலையாக, **கருடன்** மறையாகக் கொள்ளப்பட்டிருப்பதாக வைணவ சமயாசாரியர் மிக அழகாக விளக்குவர்"[2] எனக்கூறிச் செல்வது போற்றத்தக்கது.

தெய்வப் படிமங்களுக்கு அமையப்பெறும் கண்களையும் தத்துவ நோக்கிலேயே கண்டு தெளிதல்வேண்டும். **இருகண்கள்** அமைகையில் அவை சூரியன் சந்திரன் என உணர்தலும், **முக்கண்கள்** அமைகையில் சூரியன் சந்திரன் அக்கினி என உணர்தலும் கலை நூல்களின் தெளிவாகும். தெய்வநலச் சார்புடன் அமைந்துள்ள காமதேனுவும் கற்பகத் தருவும் சங்க நிதியும் பதுமநிதியும் அன்பர்கள் விரும்பியவற்றையெல்லாம் தரும் ஒருவகைச் சமயச் சின்னங்களாகவே கொள்ளுதல் வேண்டும். **அரசமரம்** ஞானத்தையும், விழுதுகளோடு கூடிய **ஆலமரம்** சூக்குமத்திலிருந்து தூலமாக ஓங்கி விரிந்திருக்கும் பிரபஞ்சத்தையும் உணர்த்தும் என்பது சமயவுலகில் கூறப்படும் உண்மையாகும்.

வண்ணங்களில் **வெள்ளை** சாத்துவிக குணத்தையும், **சிவப்பு** இராஜச குணத்தையும், **கருப்பு** தாமச குணத்தையும் உணர்த்தும். **மஞ்சள்** செல்வத்தையும் மங்களத்தையும், **நீலம்**

1. சிற்பச் செந்நூல், பக். 135.
2. மேலது

வானமும் கடலும் போன்ற இறைவனின் பரந்த தன்மையையும், பச்சை வளம் அல்லது செழிப்பையும் குறிப்பிடும். எங்கும் எப்பொழுதும் நீக்கமற நிறைந்த பொருளாகிய விஷ்ணுவின் நீல மேனியை நீலவானிற்கும், அவரது பொன்வண்ண வில்லினை வானில் தோன்றும் மின்னல் கீற்றுக்கும் ஒப்பிட்டுக் கவிஞர் மகிழ்வர். இத்தகை குறிப்பு, இயற்கையினூடே பொருள் நலங்காண விரிந்துள்ள கற்பனைத் திறத்தைச் சுட்டும் எனலாம்.

இவ்வாறே சமயவுலகில் அரிய பெரிய தத்துவங்களை உணர்த்தும் குறியீடுகளாகப் பல உள்ளன. அவற்றுள் சில இயைபான இடங்களில் கூறப்படும். மேலும், பலவற்றைக் கலை நூல்கள் வாயிலாகவும் சமயநூல் வல்லார் வாயிலாகவும் அறிந்து போற்றுவது நல்லது.

25.2. சைவ சமயம் - நிறுவன அடையாளம்:

சைவ சமய ஆலயங்களுள் சிவன் கோயிலெனின், உள்ளே இறைவன் திருமுன் நந்தியின் அமர்ந்த கோலத்தைக் காணலாம். வெளிமதிற் சுவரின் முகப்பிலும் மேற்புறத்தும் கல்லாலோ சுதையாலோ அமைந்த நந்தியின் அமர்ந்த தோற்றச் சிலைகளைக் காணலாம். திருமுருகன் கோயிலெனின் உள்ளே சுவாமி திரு. முன்னரும், வெளி மதிற்சுவர் முகப்பிலும் மேற்புறத்தும் தோகை மயிற்சிலைகளைக் காணலாம். காளி கோயிலெனின் பெரும்பாலும் உள்ளேயும் மதில் மேற்புறத்தும் பிடரிமயிருடன் கூடிய சிங்கச் சிலைகளைக் காணலாம். ஆனால், விநாயகர் கோயிலில் சுவாமியின் திரு முன்னரே பெருச்சாளி அமர்ந்த நிலையில் சிலை வடிவாக இருத்தலைக் காணலாம்; பெருச்சாளிக்குப் பதிலாக நந்திகளையும் அமைப்பது உண்டு. கருப்பண்ணசாமி கோயிலின் மதிள்மேல் புலியின் வடிவச் சிலைகளைக் காணலாம்.

மேலும், பல கோயில்களின் மேற்புற மூலையில் தனித்த தோற்றத்துடனோ சங்கூதும் தோற்றத்துடனோ, ஆண் அல்லது பெண் பூதத்தை அமர்த்துவது உண்டு. பொதுவாகச் சிற்பியின் கற்பனைக்கும், ஆகமக் குறிப்புக்கும் ஏற்பப் பல்வேறு அமைப்புக்களைக் கோயிலின் மேற்கட்டுமான மூலைப் பகுதிகளில் காணலாம்.

25.2.1 சைவசமயம்: தனிப்பட்டோர் அடையாளம்

துறவியரெனின் கல்லாடை-காவியாடை-அணிந்து வெண்பல் தவத்தவராகவும், உருத்திராக்கம் அணிந்தவராகவும் காணப் படுவர். செபத்தாலும். தவத்தாலும் சத்தியத்தை அகத்தில் கொண்டு தூயவராக விளங்கும் சிவனடியார்கள், புறத்திலும் தம் தூய்மை காட்டும் வண்ணம் திருவெண்ணீறு பூசிய மேனியராக விளங்குவர். இதனைச் **சேக்கிழார் சுவாமிகள்**.

"மாசி லாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"[1]

எனக் கூறிச் செல்கிறார். தன் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு அணிந்துள்ள சிவபிரானின் **திருக்கயிலை மலையும்**, திருவெண்ணீறு தரித்ததே போன்று காணப்படுகிறதாம்! இதனையும் **சேக்கிழார் சுவாமிகள்**, தற்குறிப்பேற்ற அணியில்,

"பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யானென்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை"[2]

எனத் தெய்வநலக் கற்பனையுடன் கூறிச் செல்கிறார்.

விபூதியாகிய திருவெண்ணீற்றின் சிறப்பினைத் திருஞான சம்பந்தர் மதுரைக் கண்ணருளிய திருநீற்றுப் பதிகத்தில் காண்க.

காஞ்சி பரமாசாரிய சுவாமிகள் திருவெண்ணீற்றைப் பற்றிக் குறிப்பிடுகையில், "கடைசியில் எல்லாம் மண்தான். காரியங்களுடைய காரணத்தைத் தேடிக் கொண்டு போனால் கடைசியில் மெய்யான ஒருபொருள் வந்துவிடும். **ஞானாக்கினி** உலகுக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் பஸ்மமாகப் பண்ணிவிடும். மிஞ்சுவது ஒருபொருள் நீறே. அதுவே திருநீற்றின் தத்துவம். நீறில்லா நெற்றிபாழ்" எனப் பலமுறை தத்துவ விளக்கம் தந்து வருதல் நெஞ்சாரப் போற்றுதற்குரியதாகும்.

1. பெரியபுராணம், திருக்கூட்டச் சிறப்பு, 6
2. பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, 1

இஃது ஒரு புறமிருக்க, அடியவர்கள் அகத்தே இறைபணி கருதி நித்தியம் நோக்கியும், புறத்தே ஆலயப்பணி குறித்தும் இயங்குவர்; இது பற்றிய சிறப்பு விளக்கம் வருமாறு:

இறைவனிடம் அடைக்கலமாகிக் கசிந்துருகி வாழாத நெஞ்சமாகத் தம் நெஞ்சம் இருப்பதாகக் கொண்டு **மணிவாசகர்**, அதற்கு நன்னெறி பகர்கின்றார்; இதனைத் **திருவாசகத்தில்,**

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்(டு)
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே"[1]

என்றும்,

மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையைஎம்
மதியிலி மடநெஞ்சே!
தேறு கின்றிலம் இனியுனைச் சிக்கெனச்
சிவனவன் திரள்தோள்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினும்
நெக்கிலை; இக்காயம்
கீறு கின்றிலை; கெடுவதுன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே"[2]

என்றும் பாடிச் செல்லுதல் காண்க.

நிலைபேற்றுக்கு வழிவகுக்கும் **அப்பரடிகள்**, தம் நெஞ்சுக்கு உபதேசம் செய்யும்வகையில் ஆலயத்தில் இறைவனுக்குப் புரிந்திடும் நித்தியத்தொண்டுகளைக் கூறிச்செல்கிறார்; இதனை,

'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன்னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா செயபோற்றி போற்றி யென்றும்

1. திருச்சதகம், 20
2. மேலது, 33

அலைபுனல்சேர் செஞ்சடை யெம்ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலரா நில்லே''[1]

எனும் பாட்டால் உணரலாம். இவையும் சைவர் அடையாளமே.

25.3 வைணவ சமயம் - தனிப்பட்டோர் அடையாளம்:

வைணவர் இல்லங்களில் வழிபாட்டிற்கெனப் பூசை அறை உண்டு. சாளக் கிராமத்தைத் திருமாலுருவ அடையாளமாகவே கொண்டு வழிபடுவர் பலராகக் காணலாம்,

வைணவ சமயத்தில் தனிப்பட்டோர் அடையாளங்களாகச் சில உள. துறவியர் கல்லாடை உடுத்துகின்றனர்; துளசிமணி மாலை அணிகின்றனர், திருமண் நெற்றியில் தரிக்கின்றனர். அதிலும் வடகலை வைணவரெனின் பாதம் வைக்காத நாமமும் (ய), தென்கலை வைணவரெனின் பாதம் வைத்த நாமமும் (ஙு) தரிக்கின்றனர். வைணவ மகளிர் திருமண் மட்டுமே (நாமக் கட்டியால் தரிக்கும் வெள்ளைக் கோடு இல்லாமல்) தரித்துக் கொள்கின்றனர்; ஆலயப்பணியிலும் நன்கு ஈடுபாடு கொள்வர்,

25.3.1. திருமண் அணிவதன் தத்துவம்:

காஞ்சிக் காமகோடி பீட பரமாசாரிய சுவாமிகள் ஆன்மநலம் பற்றி உரையாற்றுகையில் பல சமய தத்துவங்களைக் குறிப்பிட்டுச் செல்வார். அவ்வாறு உரையாற்றுகையில் சொன்னதாவது: ''குழந்தையாயிருக்கையில் மண் பொம்மைகளைப் பார்க்கும் போது உண்மை புரிவதில்லை. பன்னிரண்டு வயதாகும் போது பொம்மைகளெல்லாம் மண் என்பது புரிந்து கொள்ளுதலைக் காண்கிறோம். வாழைக்காய், கத்தரிக்காய், ஆடு, மாடு, மனிதன் இப்படி எத்தனையோ உயிர்ப்பொருட்களையும் ஜடப் பொருட்களையும் பெரியவர்கள் ஞானத்தினால் கண்டு 'எல்லாம் மண்' என்று எரித்து எறிந்துவிட்டார்கள் எல்லாம் மண்ணாகி விடுகிறது என்ற உண்மையை விளக்கத் திருமண் தரித்துக் கொண்டனர்''

இதனால், உலகிலுள்ள நிலையாமைத் தத்துவத்தையுணர்த்தி மக்கள் ஆன்மநலம் வாயிலாக நிலைபேற்றிற்கு வழிவகுக்க வேண்டுமென்று வைணவச் சான்றோர் அறிவுறுத்திய பாங்கினைக் கண்டு கொள்ளலாம்.

1. திருமுறை, 6, 31, 3

பட்டினத்து அடிகள் தம் நெஞ்சிற்கு அறிவுரை கூறுவதே போன்று உலக மக்களுக்கு வழங்கிய அருளுரை நினைந்து போற்றுதற்குரியதாகும்; அது வருமாறு:

''ஒன்றென் றிரு! தெய்வம் உண்டு
என்றிரு! உயர்செல்வம் எல்லாம்
அன்றென் றிரு! பசித் தோர்முகம்
பார்! நல் அறமும் நட்பும்
நன்றென் றிரு! நடு நீங்காம
லேநமக்கு இட்டபடி
என்றென்றிரு! மனமே! உனக்கே
உபதேசம் இதே''[1]

இப்பாடலின் வாயிலாக மக்கள் நல்வாழ்விற்குரிய தெய்வ வுண்மை, செல்வம் நிலையாமை, ஈதல், நட்பு, நடுநிலைமை, ஊழில் நம்பிக்கை முதலிவற்றை உணருமாறு செய்தல் காண்க.

''நித்தன் பரமகுரு நேசத்தால் - சுத்தநிலை
பெற்றோமே நெஞ்சே! பெரும்பிறவி சாராமல்
கற்றோமே மோனக் கரு''[2]

எனத் தாயுமானவர் தம் நெஞ்சத்திற்கு உபதேசித்தல் காண்க.

26. வழிபாடும் வழிபாட்டுக் கூறுகளும் - திரண்ட கருத்து:

இந்தியப் பெருநாட்டிலே யன்றி, உலகில் பல பகுதிகளிலும் இந்துமதத்தினர் தம் பண்பாட்டுடனும் நாகரிகத்துடனும் ஒன்றிய சமய வழிபாட்டினைத் தம்மாலியன்ற வகையில் செய்துவருகின்றனர்; இதனைப் பல கோணங்களில் கண்டு வருகிறோம். வழிபாடு தொடர்பான மேலும் சில விளக்கங்களைத் தெளிவு கருதி இங்கே காண்போம்.

பொதுவாக, வழிபாடு என்பது ஆன்மநல ஈடேற்றத்துக்காகத் தெய்வத்தை நினைந்து பக்தியுடன் புரிந்திடும் வணக்கமாகும். அழுக்குத் துணிகளைச் சவர்க்காரத்தால் (washing

1. பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள், பொது, 20
2. தாயுமான சுவாமிகள் பாடல்கள், உடல். 81

soap) வெள்ளையாக்குவதுபோல, ஆணவம் முதலிய அழுக்குகள் படிந்த மனத்தைக் கடவுள் வழிபாட்டால் தூய்மையாக்குகிறோம் என உணர்தல் வேண்டும்.

மக்கள் தெய்வத்தைத் தூய மனத்துடன் நினைந்து வாழ்த்துவதாகிய வழிபாடு, தெய்வத்தின் நிறைநலன்களில் அல்லது கல்யாண குணங்களில் தோய்ந்து, தெய்வத்துடன் கூடி இன்புறுதலுக்கேயாகும். அன்பு, வாய்மை, தூய்மை, பொறுமை, தியாகம், தொண்டு, கலையனுபவம் முதலிய நற்பண்புகளின் வளர்ச்சியினூடே மிகவுயர்ந்த வழிபாடு அமையும் என்பது தெளிவு. **மனம் மொழி மெய் ஆகிய மூன்றிலும் தூய்மையுடன் கூடிய வழிபாடு** அமைவதற்கு, மக்கள் தம் வரையறையைச் - சிறுமையைப் -பல்லாற்றானும் உணரவேண்டுவது அடிப்படைத் தேவையாகும். அந்நிலையில் தான், தெய்வத்தின் பேரறிவையும் பேராற்றலையும் பேரருளையும் உணர்ந்து சிந்திக்கவும் அருளனுபவம் பெறவும் வாய்ப்பு ஏற்படும்; இதனால், தனிப்பட்ட நிலையிலே ஒருமுகப்பட்ட தியானம் சித்திக்கும். மண்ணகத்திலுள்ளோர் உய்திக்காகவே அமைந்துள்ள வழிபாடு குறித்து அருளாளர்கள் புலப்படுத்திய சில மெய்யுரைகளைக் காண்போம்.

இறைவனிடம் முழுமையான அடைக்கலமாகும் வகையில் வழிபாடு அமைதல் வேண்டுமென்பதை **இராமகிருஷ்ணபரமஹம்சர்** தம் சீடர்களுக்கு உணர்த்துகையில், "தாயே, ஆனந்தமயீ! உன் சொரூபத்தை எனக்குக் காட்டியருள்வாயாக. நீ காட்சி கொடுத்தேயாக வேண்டும். தீன தயாபரியே! அகிலாண்ட நாயகியே, நான் உன் படைப்புக்குப் புறம்பானவன் அல்லன்; எனக்கு ஞானமில்லை. நெறியான வாழ்வை நான் அறிந்திலேன்; என்னிடத்துப் பக்தி இல்லை. எனக்கு ஒன்றும் தெரியாது. கிருபை கூர்ந்து தாயே, எனக்கு நீ காட்சியளித்தருள்வாயாக"[1] எனக் கூறியருளியதை மனத்துட் கொள்க. இதனால், இறைவனைச் சிந்தனையில் கொண்டு, காதலாகிக் கண்ணீர் சிந்திக் கடைத்தேறக் கசிந்துருக வேண்டுமென்பது பெறப்படும்

1. ஸ்ரீராமகிருஷ்ண உபதேச மஞ்சரி (1963), 677

இத்தகைய வழிபாடு, கல்லாதவர்களினும் கற்றவர்க்கு நன்றியுணர்வுடன் மிகத்தேவை யென்பதைத் **திருவள்ளுவர்,**

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"[1]

என்று கூறிக் காட்டியுள்ளார்; எனினும், கற்றவரைக் காட்டிலும கல்லாதோரே இறைவழிபாட்டில் பக்தியுறைப்புடன் நடந்து கொள்கின்றனர் என்பதையுணர்தல் வேண்டும். "வழிபாடு என்பது உயிர் குறைகள் நீங்கி நிறைநலம் பெற்று, ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த அன்பினில் விளைந்த இன்ப ஆர முதை நுகர்ந்து, இன்புறுதலையே நோக்கமாகக் கொண்டது. ஓர் எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு நம்மை அழைத்துக் சென்று சேர்க்கும் பாதையினை உலகியலில் வழி என்றே கூறு கிறோம். அதுபோலக் **கருக்குழி எல்லையிலிருந்து ஆரா இன்ப அமுத எல்லைக்கு அழைத்துச் செல்வது வழிபாடு;** இருளடர்ந்த சூழலிலிருந்து மீட்டு நம்மை ஒளியும், தெருளும் (தெளிவும்) நிறைந்த எல்லைக்கு அழைத்துச் செல்வது வழிபாடு.

அறியாமையிலிருந்து, மேலாம் ஞான எல்லைக்கு அழைத்துச் செல்வது வழிபாடு. பயணம் செய்பவர்கள் பாதத்தைப் பாதையில் ஊன்றிச் சேரவேண்டிய எல்லையை நோக்கி அடி அடியாக முன்னேற வேண்டும். கடந்த தூரம் பெருகிக் கடக்க வேண்டிய தூரம் குறுகிக் கடைசியில் எல்லையினை அடைதல் களிப்பூட்டும். அதுபோல அறியாமை தேய்ந்து அல்லல் நீங்கி அழியா இன்பம் பெருக நம்முடைய பேரின்ப வைப்பாக இருக்கிற இறைவனின் இணையடிகளைச் சார்ந்து இன்புறுவது வழிபாடு"[2] என்று வழிபாட்டின் இயல்பினைத் **தவத்திரு குன்றக்குடியடிகளார்** விளக்கிச் செல்வது மனங்கொள்ளத்தக்க தாகும்.

"கடவுளை மறக்காமல் நேர்மையான நெறியில் ஒழுகி வருபவர்களுக்கு வாழ்க்கையில் தோல்வியோ, ஏமாற்றமோ ஏற்படாது. அவர்களுக்கு இரத்தக்கொதிப்பு வராது; நரம்புத் தளர்ச்சி உண்டாகாது. அவர்களுடைய அறிவு எப்போதும்

1. திருக்குறள், கடவுள் வாழ்த்து, 2
2. திருக்கோயில் (திங்களிதழ்), அக்டோபர், 1969

தெளிவாகவே இருக்குமாதலால் அவர்களுக்கு மூளைக் கோளாறு ஏற்படாது...''[1] என்று கூறிய தமிழ்வாணன், ''கடவுளை நினைத்துப் பழக்கம் இல்லாதவர்கள் நிம்மதியாக வாழமுடியாது என்பது மட்டுமல்ல, அவர்களால் நிம்மதியாகச் சாகவும் முடியாது!

கடவுளை நாம் மறக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் நம் முன்னோர்கள் ஊருக்கு ஊர் கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அந்தக்கோயில்களில் பணியாற்றுபவர்கள் நம்மைப்போன்ற மனிதர்கள், அவர்களிடம் ஆயிரம் குறைபாடு கள் இருக்கலாம். ஆனால், அவற்றை ஒரு காரணமாகக் காட்டி, நாம் கோயிலுக்குப் போகாமல் இருந்துவிடக்கூடாது. அப்படிப்போகவிட்டால் இழப்பு நமக்குத்தான், கோயிலில் பணியாற்றுகிறவர்களுக்கல்ல''[2] என்று வழிபாட்டிலுள்ள நடை முறைச் சிக்கலைத் தவிர்க்கவும் வலிகோலியுள்ளார். மேலும், வழிபாட்டுக்கு எளியநிலை 'ஆலய வழிபாடு' என்பதையும் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

வழிபாடுகள் பல நிலைகளில் அமைந்திருப்பினும், ஒளிவழி பாடு அல்லது சோதி வழிபாடே, அனைத்திலும் சிறந்தது, குறிக் கோளாக அமைய வேண்டுவது, என்பதை மனத்துட் கொள்வது சான்றோர் காட்டிய நெறியாகும். மரபான பல வழிபாடுகள் பற்றி நாம் சிந்தித்து நடைமுறைப்படுத்தினாலும், கடவுள் நினைப்பில் பொதுநலங்குறித்துச் செய்யப்படும் எந்தச் சிந்தனை யும், சொல்லும், செயற்பாடுமே வழிபாட்டில் அடங்கும் என்ப தனையும் மனத்துட் கொள்வது நல்லது. இதற்கு அரணாகும் வகையில் தொடர்ந்து பல செய்திகளைக் காண்போம்.

1, 2. அருள்மிகு ஸ்ரீ ராமலிங்கேஸ்வரர் ஆலயம் சிறப்புமலர், (கோலாலம்பூர்), 1986,

3. ஊரமைப்பு - பண்பாட்டுக் கூறுகள்

1. ஊரமைப்பு - முன்னுரை:

உலகத்தில் மக்கள், காட்டுமிராண்டிகளாகத் திரிந்த நிலையில் வேட்டையாடியும் மீன் பிடித்தும், கனிகளைக் கொய்தும் தம் பசிப்பிணி தீர்த்துக் கொண்டனர்; வேட்டையாடிய விலங்கின் தோல்களையும், மரப்பட்டைகளையும், தழையாடைகளையும் உடுத்திக் கொண்டு ஒருவகையில் மானங்காக்கத் தலைப்பட்டனர். வளர்ச்சிப் படிநிலையில், குகைகளிலும், மரப்பரண்களிலும் வாழ்ந்தவர்கள், தமக்கெனக் குச்சிவீடுகள் கட்டிக் கொள்ள முனைந்தனர். சமுதாயவுணர்வு படிப்படியே எழத் தொடங்கிய நிலையில் பலராகச் சேர்ந்து வாழத் தலைப்பட்டனர். அதனால், இயற்கையின் அச்சுறுத்தல்களிலிருந்தும், கொடிய விலங்குகளின் அச்சுறுத்தல்களிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்ளும் வழியைக் கண்டு கொண்டனர். இவ்வாற்றான் **உறையுள்** என்ற அடிப்படைத் தேவையையுணர்ந்ததும், அதனை வசதிக்கெனவும் அழகுக்கெனவும் அமைக்குங் காலத்துக் **'கட்டடக்கலை'** மக்களின் வாழ்வியலில் சிறப்பிடங் கொள்ளலாயிற்று. இதனை விளக்கமாகக் **'கட்டடக்கலைப்பண்பாடு'** எனும் இயலில் காண்போம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சங்க காலத்திலேயே மக்கள் சிறந்த பண்பாட்டுப் பக்குவங் கொண்டு, நாகரிகத்துக்கு நல்ல எடுத்துக் காட்டாக விளங்கியுள்ளனர். அந்தக் கால கட்டத்தில், உலகின் பல பகுதிகளில் மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்துள்ளனர் என்பது வரலாற்றால் அறியப்படுஞ் செய்தியாகும்.

இலக்கியங்கள் வாயிலாக நமக்குக் கிடைக்குஞ் செய்திகளை வைத்துக்கொண்டு நோக்குகையில், தமிழ்நாடு **முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல்** எனும் ஐந்திணைப் பாகுபாடுகளைக் கொண்டிருந்ததை அறியலாம். இந்த அடிப்படையில், பல உறைவிடங்களாகிய இல்லங்களையும், பல இல்லங்களால் உருவான ஊர்களையும் **பண்பாட்டு** நோக்கில் காண்போம்.

பொதுவாக, மக்களை அறிமுகப்படுத்த 'ஊர்' என்பது முதற்கண் தேவைப்படுகிறது. ஊரும் பேருந் தெரிந்துகொண்டே நட்பு வைத்துக் கொள்வதை உலகியலில் காண்கிறோம். **திருவாசகத்திலே மாணிக்கவாசகர்,**

"**ஏதவனூர்** ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்"[1]

எனப்பாடிச் செல்வதை ஈண்டு இயைபுடன் சிந்திக்கலாம். எனவே, **'ஊரமைப்பு'** என்பதை முதற்கண் கொண்டு, **'உறையுளமைப்பு'** என்பதை அதனொடு சார்த்திச் சிந்திப்போம்.

பல்லாண்டுகளில் கண்ட பரிணாம வளர்ச்சியின் பயனாகக் **கோயிலும் ஊரமைப்பும்** எனும் நோக்கில், பண்டைக்காலத்தில் சாத்திர அடிப்படையும் இருந்துள்ளது என்பதைச் சிறப்புக் குறிப்பாகக் கொள்ளலாம்.

கோயிலுக்கென உற்சவப்படிமம் செய்விப்போனின் பிறந்த நட்சத்திரம் அல்லது நாமநட்சத்திரம் கூட மனத்துள் கொள்ளப்படும் அதேபோல் அத்திருமேனியை வைக்கப் போகும் **ஊர் நட்சத்திர**மும் (வாஸ்து நட்சத்திரமும்) மனங் கொள்ளப்படும். **சுவாமிமலை எஸ். தேவசேனாபதி ஸ்தபதி** இது தொடர்பாக எழுதுகையில், பண்டைக்காலத்தில் ஒவ்வொரு **கிராமமும் நகரமும் பட்டணமும்** ஒரு குறிப்பிட்ட காலத்தில் **குறிப்பிட்ட நட்சத்திரத்தில்** தோற்றுவிக்கப்பட்டது. அந்த நட்சத்திரத்திற்கேற்ப அவ்விடத்திற்குப் பெயர் சூட்டுவது மரபு. இங்ஙனம் முறைப்படி கிடைக்காவிடில், அவ்வூர்ப் பெயரின் முதலெழுத்துக்குரிய **நாம** நட்சத்திரத்தையே எடுத்துக்கொள்ளலாம். மூன்றாவதாக ஒவ்வொரு மூர்த்திக்கும், சிற்ப ஆகமநூற்படி நட்சத்திரங்கள் உண்டு. உதாரணமாக **ஸ்ரீகணபதிக்குச் சதயமும், ஸ்ரீ சுப்பிரமணியருக்குக் கார்த்திகையும், சிவனுக்கு திருவாதிரையும், பார்வதிக்குப் பூரமும் சரசுவதிக்குச் சுவாதி நட்சத்திரமும் மூர்த்தி நட்சத்திரம்** ஆகும். இப்படியாகக் **கர்த்தாவின் நட்சத்திரம், வாஸ்து நட்சத்திரம், மூர்த்தி நட்சத்திரம்** ஆகிய மூன்று நட்சத்திரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும்"[2] என்று குறிப்பிட்டுச் செல்லுதல் காண்க.

1. திருவெம்பாவை, 10
2. மகாமகம் (குழுவினர்) மலர், 1992, பக். இல்லை

11. ஐந்திணை மக்கட்கும் அமைந்த ஊரமைப்பும் உறையுளமைப்பும் - வளர்நிலைகள்:

குறிஞ்சி நிலத்தில் - மலைப்பாங்கான பகுதியில் - வேட்டையாடிப் பழகிய மனிதன் மலைக் குகையில் வாழ்கையில் குகை வாழ்விலங்குகளால் இடையூறு ஏற்படுவதை உணரலானான். இதனைத் தவிர்ப்பதற்காக மரக்கிளைகளுக்கிடையே வலுவாகவும், வசதியாகவும் **பரண்** போல் அமைத்துக் கொண்டு வாழத் தலைப்பட்டான். பலருடன் சேர்ந்து வாழும் சமுதாய உணர்வு தோன்றியது. பிறகு, **நான்கு கால்கள் ஊன்றிப் பரண் வீடுகள்** கட்டிக் கொண்டு வாழலானான். வேட்டையால் கிடைத்த விலங்குணவும், செடி கொடி மரங்களில் கிடைத்த கனியுணவும் சலித்த நிலையில், மலைப்பக்கங்களிலே **தினை, வரகு** முதலிய தானியங்களைப் பயிரிடத் தொடங்கினான். இவ்வகையில் விளையும் தானியங்களைப் பாதுகாக்க அந்த **விளை புனத்தே பரண்களையும்,** பிறகு சேமித்து வைக்கக் **குதிர்களையும்** அமைக்க வேண்டிய சூழலைப் பெற்றான்.

முல்லையாகிய காட்டு நிலத்தில் ஆடுமாடுகளை வளர்த்துப் **பாலால் பயன்** கொள்ள நினைத்த ஆயர்கள் தாம் வாழ்வதற் கேற்பக் **குடிசைகளைக்** கட்டிக் கொண்டனர்; தம் கால்நடைகளுக்கும் **தொழுவங்கள்** அமைக்கலாயினர்.

மருத நிலமாகிய வயல்நிலத்தில் **நெல், கரும்பு** வாழை முதலிய வற்றை விளைப்பதில் நாட்டங்கொண்டு உழவு மேற்கொண்டனர்: உழவர்களான நிலையில் தாங்கள் வாழ்வதற் கேற்ற **மனைகளையும்,** உழவு மாடுகளைக் கட்டிப் பாதுகாத்தற்குரிய **கொட்டகைகளையும** அமைக்கலாயினர். விளைந்த தானியங்களையும் பிற பொருள்களையும் சேமித்து வைப்பதற் கேற்ற **கூடுகளையும் அறைகளையும்**கட்டிக் கொள்ளும் வழி வகைகளைக் கண்டனர்.

நெய்தல் நிலமாகிய கடற்கரை யொட்டிய பகுதிகளில் மீனவர்கள்- பரதவர்கள்- மீன்பிடித்து விற்பனை செய்வதிலும் மீனுணங்கல் (கருவாடு) தயாரித்து விற்பனை செய்வதிலும் ஈடுபட்டனர். நெய்தல் நில மக்கள் சிலர் உப்பினை விளைவிக்க உப்பளங்களை அமைத்தனர் கடற்கரை யொட்டிய நிலத்தின்

உட்பகுதியில் குடிசைகளைக் கட்டி வாழலாயினர். நெய்தல் வாழ் மக்கள் தம் வசதிகளுக்கேற்ப உணவுகளைப் பாதுகாக்கவும், உப்பு மூடைகளைச் சேமிக்கவும் குடிசைகளைச், சிறப்பாகப் பனையோலைக் குடிசைகளைக் கட்டிவாழத் தொடங்கினர்.

பாலை நிலமாகிய வெப்பமிகு இடத்தில் எயினர் (வேடுவர்) வழிப்பறி முதலிய கொடுந் தொழிலில் ஈடுபட்டனர். அவர்களும் ஈச்ச ஓலைகள் வேய்ந்த குடிசைகள் கட்டி வாழலாயினர்.

ஐந்திணை மக்களும் தத்தம் வாழும் பகுதிகளில் பலராகச் சேர்ந்து வாழத்தலைப்பட்ட நிலையில் சேரி தோன்றலாயிற்று.

1.1.1. குறிஞ்சி ஊர்கள்:

குறிஞ்சி நில மக்கள் மலையிலும் மலை சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்தமையால் அவர்களின் ஊர்கள், மலை, கல், கோடு, குன்று ,பாறை, அறை, கிரி, அசலம், அத்திரி, குறிச்சி முதலிய வற்றை ஈற்றில் கொண்டவையாக அழைக்கப் பெற்றன. விளக்கத்திற்காக இயன்ற அளவு எடுத்துக் காட்டுகள் தரப் பெற்றுள்ளன.

மலை — ஆனைமலை, சிறுமலை, பசுமலை, திருவண்ணா மலை, திருத்தணிகைமலை, பழனிமலை.

கல் — திண்டுக்கல், நாமக்கல் (ஆரைக்கல் என்பது பழம் பெயர்)

கோடு — திருச்செங்கோடு, திருவித்துவக்கோடு.

குன்று, குன்றம் — வெண்குன்று (சுவாமிமலை), திருக்கழுக்குன்றம், திருப்பரங்குன்றம், திருப்பகுத்திக் குன்றம், நெற்குன்றம், நெடுங்குன்றம், (நெடுங்குணம்) பூங்குன்றம் (பூங்குணம்)

பாறை — பூம்பாறை, சிப்பிப்பாறை, தட்டைப்பாறை, குட்டைப்பாறை, மணப்பாறை.

அறை — திருவெள்ளறை.

கிரி — சிவகிரி, கிருஷ்ணகிரி, நீலகிரி.

அசலம் — தணிகாசலம், வேதாசலம், விருத்தாசலம்.

அத்திரி — கோத்தாத்திரி (வானமாமலை எனும் நான்கு னேரிக்கு வடமொழிப்பெயர்)

குறிச்சி — கள்ளக்குறிச்சி, கல்லிடைக்குறிச்சி. ஆழ்வார் குறிச்சி, பிராமணக்குறிச்சி (இராமநாதபுரத்தருகில் உள்ளது.

1.1.2. முல்லை - ஊர்கள்:

முல்லை நில மக்கள் காடும் காடு சார்ந்ததுமான பகுதிகளுள் வாழ்ந்தமையால் அவர்களின் ஊர்கள், வனம், காடு, காவு, கா, பொழில், தண்டலை, சோலை, தோப்பு, சுரம், ஆரணியம், பாடி, பட்டி, மந்தை முதலியவற்றை ஈற்றில் கொண்டவையாக அழைக்கப்பெற்றன. எடுத்துக் காட்டுகள் வருமாறு:

வனம், ஆரண்யம் — கடம்பவனம் (மதுரை), புன்னைவனம், திண்டிவனம், வேதாரண்யம்.

காடு — திருவாலங்காடு, திருவேற்காடு, களக்காடு, ஆர்க்காடு, பழவேற்காடு, ஏர்க்காடு, (ஏரிக்காடு என்பதன் மரூஉ), தலைச்செங்காடு, குடிகாடு, பனங்காடு, திருவெண்காடு.

காவு, கா — ஆரியங்காவு, திருத்தண்கா, திருக்கோடிக்கா, திருவானைக்கா. திருக்கோலக்கா.

பொழில் — ஆலம்பொழில், பைம்பொழில் (பம்புளி-மரூஉ)

தண்டலை — குழித்தண்டலை (குழித்தலை -மரூஉ)

தண்டலம் — பூந்தண்டலம், பழந்தண்டலம், பெருந்தண்டலம்,

சோலை — பழமுதிர் சோலை, தலைச் சோலை, திருவளர் சோலை.

தோப்பு — மந்தித்தோப்பு, மான்தோப்பு, நெல்லித்தோப்பு, வௌவால் தோப்பு.

சுரம் — திருச்சுரம் (திரிசூலம்), திருவிடைச்சுரம் (திருவடிசூலம்).

பல்வகை மரப்பெயர்களும் ஊர்ப்பெயர்களுடன் தொடர்பு கொண்டுள்ளன. அவை வருமாறு:

பைஞ்ஞீலி (பசுமையான வாழை) — திருப்பைஞ்ஞீலி

நாவல் — திருநாவலூர்

பாதிரி — திருப்பாதிரிப்புலியூர்

எருக்கு — திருவெருக்கத்தம் புலியூர் (இராசேந்திரபட்டணம்)

கருங்காலி, காஞ்சிரம் — கருங்காலி, காஞ்சிரம் (சிவகங்கை வட்டத்திலுள்ள ஊர்ப் பெயர்கள்)

பாடி — திரு ஆப்பாடி, வேலப்பாடி, பாடி (திருவலிதாயம்)

பட்டி — கோயிற்பட்டி, சின்னாளப் பட்டி (ஆயிரக்கணக்கான பட்டிகள் தமிழகத்தில் உள்ளன)

மந்தை, மந்து — வெண்மந்தை, புஞ்சை மந்தை, ஒத்தகமந்து (ஒட்கமண்டு - மரூஉ)

1.1.3. மருதம் - ஊர்கள்:

மருத நில மக்கள் நீர்வளமும் நிலவளமும் அவற்றாலாய பயிர்த்தொழிலும் சிறப்புறக் கொண்டவர்கள். அவர்களின் ஊர்கள், ஆறு, துறை, அரங்கம், துருத்தி. கூடல், அணை, கால், ஓடை, மடை, ஏரி, கோட்டகம், குளம், சமுத்திரம், ஏந்தல், தாங்கல், ஆவி, வாவி, மடு, இலஞ்சி, பொய்கை, ஊருணி, சேறு, ஊற்று, கேணி, கிணறு, நிலம், புலம், பற்று. பண்ணை, பழனம், கழனி, வயல், விளை. செய், தோட்டம், ஊர், புலியூர், நல்லூர், புத்தூர் முதலிய தொடர்புப் பெயர்கள் கொண்டுள்ளன. எடுத்துக் காட்டுகள் வருமாறு:

ஆறு — திருவையாறு, சேயாறு. அடையாறு. சுயத்தாறு,

துறை — கடம்பந்துறை, திருமாந்துறை, சிந்துபூந்துறை குறுக்குத்துறை, திருத்தவத்துறை (கோயிலுக்கும் துறை எனப் பெயருண்டு என்பதையும் நினைவிற் கொள்க)

அரங்கம் — திருவரங்கம், வடரங்கம்.

துருத்தி — திருத்துருத்தி

கூடல் — திருமுக்கூடல், கூடலூர்.

அணை — கரடியணை (தென்னார்க்காட்டில் உள்ளது), வெள்ளியணை (திருச்சியிலுள்ளது)

கால் — வெள்ளக்கால், மாங்கால்

ஓடை — மயிலோடை, பாலோடை, செம்போடை.

மடை — பத்தல்மடை (பத்தமடை -மரூஉ), பாலாமடை, பேலமடை.

ஏரி, பேரேரி— மாறனேரி, தென்னேரி, திரையனேரி, ஏரி (வீர பாண்டியப் பேரேரி), பத்னாபன் ஏரி (பதுமனேரி-மரூஉ), மதுராந்தகப் பேரேரி, சீவலப்பப்பேரேரி, கன்னடியப் பேரேரி, அலங்காரப் பேரேரி.

கோட்டகம் — மானங்காத்தான் கோட்டகம், புதுக்கோட்டகம்

குளம் — கருங்குளம், செங்குளம், பெருங்குளம் பூங்குளம், புதுக்குளம்.

சமுத்திரம் — அம்பாள் சமுத்திரம் (அம்பாசமுத்திரம் - மரூஉ)

ஏந்தல், தாங்கல் — இளவரசனேந்தல், செம்பியனேந்தல், ஆலந்தாங்கல், வளவன் தாங்கல்

ஆவி, வாவி — நீராவி, கல்லாவி, கோடல்வாவி.

மடு — கல்மடு, முதலைமடு, ஆனைமடு, செம்மடு

இலஞ்சி — இலஞ்சி (ஏரியைக் குறிக்கும் இவ்வூர் தென்காசிக்கு அருகேயுள்ளது)

பொய்கை — பொய்கை (குளத்தைக்குறிக்கும் இவ்வூர் வடஆர்க்காட்டில் உள்ளது)

ஊருணி — பேரூரணி, மயிலூரணி, புரரூரணி.

செரு — ராயலுசெருவு (சித்தூர் மாவட்டத்தில் உள்ளது ராயர் செரு - மரூஉ)

ஊற்று — தாழையூற்று, கண்ணூற்று, மாலூற்று.

கேணி, கிணறு — திருவல்லிக்கேணி, நாரைக்கிணறு

நிலம் — நன்னிலம்

புலம் — தாமரைப்புலம், கருவப்புலம், செட்டிப்புலம்

பற்று — செங்கழுநீர்ப்பற்று (செங்கல்பட்டு-மரூஉ), பூத்தலைப்பற்று (பூதலப்பட்டு-மரூஉ), தெள்ளாற்றுப் பற்று (தெள்ளாரப்பட்டு-மரூஉ)

பண்ணை — செந்திலான் பண்ணை, ஏழாயிரம் பண்ணை

பழனம் — திருப்பழனம் (திருப்பயணம்-மரூஉ)

கழனி — தென்கழனி, புதுக்கழனி, காக்கழனி

வயல், விளை — புதுவயல், நெடுவயல், வாகைவிளை, திசையன்விளை, உலகுவிளை

செய் — புன்செய் (புஞ்சை-மரூஉ; திருநனிப்பள்ளி என்பது இக்காலத்தில் இவ்வாறு வழங்கப்படுகிறது)

தோட்டம், கொல்லை, கிளார் — பூந்தோட்டம், இஞ்சிக் கொல்லை, மஞ்சள் கொல்லை, கருப்புக்கிளார் (கருப்பக்கிளர்-மரூஉ)

ஊர் (சிறப்பாக மருத நிலத்திற்குரியது) — மருதூர், தெங்கூர், பனையூர், பாகூர், கடம்பூர், குருகூர், திருநாரையூர், கோழியூர், வரகூர், பெருமாத்தூர்.

நல்லூர் — வீரபாண்டிய நல்லூர், அரிகேசரி நல்லூர், மாறைபரண நல்லூர், சேய்நல்லூர் (சேனூர்-மரூஉ)

புத்தூர் — அரிசிற்கரைப் புத்தூர் (அளகாபுத்தூர்-மரூஉ) கடுவாய்க்கரைப் புத்தூர்; ஸ்ரீ வில்லிப்புத்தூர், கோவன்புத்தூர் (கோயம்புத்தூர்-மரூஉ)

1.1.4. நெய்தல்-ஊர்கள்:

நெய்தல் நில மக்கள் கடற்கரையைச் சார்ந்த ஊர்களில் மீன் முதலிய கடல்படுபொருள்களால் சிறப்பாக வாழ்ந்தவர்கள்; ஏற்றுமதி வாயிலாகப் பண்டங்களைத் தொகுத்து வணிகத்தில் ஈடுபட்டவர்கள், அவர்களின் ஊர்கள், கரை, துறை, பட்டினம், பாக்கம்,களர், அளம், குப்பம் முதலியவற்றை ஈற்றில் கொண்டவையாக விளங்கின; எடுத்துக்காட்டுகள் சில வருமாறு:

கரை — கோடிக்கரை, கீழக்கரை

துறை — குமரித்துறை, கொற்கைத்துறை, காயல்துறை

பட்டினம் — காவிரிப்பூம்பட்டினம், திருமலைராயன் பட்டினம், நாகப்பட்டினம், காயல்பட்டினம், குலசேகரன் பட்டினம், சதுரங்கப் பட்டினம்

பாக்கம் — பட்டினப்பாக்கம், கோடம்பாக்கம், மீனம்பாக்கம், சேப்பாக்கம், நுங்கம்பாக்கம், புரசபாக்கம்.

களர், அளம் - திருக்களர், பேரளம்

குப்பம் — காட்டுக் குப்பம், நெல்லிக்குப்பம், கருங்குடிக் குப்பம், நொச்சிக்குப்பம், சோலைக்குப்பம்.

1.1.5 பாலை-ஊர்கள்:

பாலைநில மக்கள், முல்லையும், குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, வறண்டு கறுகிப் பாலையான வெம்மைநிலத்தில் வாழ்பவர்கள்; கொடுந்தொழிலாகிய கொள்ளையடித்தலில் முன்னொரு காலத்தில் ஈடுபட்டவர்கள். காலச் சுழற்சியில் வாழ்வியலிலே தம் உழைப்பை நல்லாற்றுப்படுத்தி முன்னேற்றங் கண்டுள்ளனர். அவர்களின் ஊர்கள், பாலை, பாலைவனம், நத்தம் முதலிய தொடர்புப் பெயர்கள் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டுகள் வருமாறு:

பாலை — பெரும்பாலை (சேலம் மாவட்டத்தில் உள்ளது), திருக்கழிப்பாலை, பாலையூர் ('பாலை' என ஈற்றில் அமையாமல் தொடக்கத்தில் கொண்டது; இதன் மரூஉப் பெயர்-பாலூர்)

பாலைவனம் — திருப்பாலைவனம் (செங்கற்பட்டு வட்டம்)

நத்தம் — பாலைவன நத்தம் (பாலவனத்தம்)

தேரி (சிவந்த மணற்பாங்கான இடம்) — இடையன் குடித்தேரி, குதிரை மொழிந்தேரி, சாத்தான்குளத்தேரி

திணைப்பாகுபாட்டு அடிப்படையில் மக்கள் தம்மியல்பாக வாழ்வியல் நடத்திய ஊர்கள் பற்றிய செய்திகளை ஊன்றிப் பார்த்தால்' சமுதாயக் கட்டுக்கோப்பில் இழையோடிய பண்பாட்டுக்

கூறுகளைப் புரிந்து கொள்ளலாம். ஊர்கள் பற்றிய பல செய்திகள் **டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளை** எழுதியுள்ள **'ஊரும் பேரும்'** எனும் நூலில் காணலாம்; அந்நூலிலிருந்து சில தேர்ந்த குறிப்புக்களே இங்குக் கூறப்பட்டவை; இவை தொடர்பான போதிய விளக்கங்களை அந்நூலில் கண்டுகொள்க. (திணை நோக்கிலுள்ள சில ஊர்ப்பெயர்கள் காலப்போக்கில் திணை மயக்கமும் பெற்றுள்ளன).

ஊர்ப்பெயர்களைத் தொடர்ந்து, முற்காலத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்து பயன்கொண்ட தமிழ்நாடும், பாகுபாடும் பற்றிச் சிறிது விளக்கமுறக் காண்போம்.

1.2 ஊரமைப்பு - சிறப்புக்குறிப்பு:

நகரமைப்பு என்ற தலைப்பில், நகரத்தோற்றம் பற்றியும் ஆகம அடிப்படையில் அமைந்த ஊர்ப்பாகுபாடுகளைப் பற்றியும் ஓரளவு கண்டோம். இனி. ஊரமைப்புத் தொடர்பாகக் கல்வெட்டுக்கள் வாயிலாகக் கிடைக்குஞ் சில செய்திகளைக் காண்போம். தொழில்நோக்கிலும் வணிகநோக்கிலும் மக்கள் சிலரால் அமைக்கப்பட்ட குழுக்களும், சில இடங்களில் தங்கி நிறுவனங்களாகச் செயற்பட்டுள்ளன. இவை பற்றிய சில விளக்கங்களைப் **பேராசிரியர் கே. கே. பிள்ளை** எழுதுகையில், ''உழுதுண்டு வாழ்த்துவந்த வேளாண் மக்கள் குடி பொருந்திய இடத்துக்கு **'ஊர்'** என்று பெயர். அவ்வூராட்சியினை நடத்தி வந்த குழுவுக்கு **'ஊர்'** என்றும், **'ஊரவர்'** என்றும் பெயர். பிராமணரின் குடியிருப்புகள் **அகரம், பிரமதேயம், சதுர்வேதி மங்கலம் என்று** அழைக்கப்பட்டன. அக்குடியிருப்புகளுக்கும் **'கிராமங்கள்'** என்று பெயர். கிராமங்களின் ஆட்சியை நடத்தி வந்த குழுக்களுக்குச் சபை என்று பெயர். வணிகர் நிறைந்திருந்த இடத்துக்கு **நகரம்** என்ற சபை, ஊராட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருந்தது. ஒரே இடத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சபைகளும் செயல்பட்டு வந்தாகக் கல் வெட்டுகளின் மூலம் அறிகின்றோம். இச்சபைகள் அல்லாமல் உழவுத் தொழில் மேற்கொண்டிருந்த வேளாண் குடிகளுடைய குழுக்கள் **'சித்திரமேழி'** என்ற பெயரில் நடைபெற்று வந்தன. அக்குழு உறுப்பினர்கள் **சித்திர மேழிப் பெரிய நாட்டினர்** என்று அழைக்கப்பெற்றனர். இதைப்போலவே குலம் சமயம் பொருளாதாரம் ஆகியவற்றைப் பற்றிய ஒழுகலாறுகளைப் போற்றிப்பாதுகாத்துவந்த வேறு சில

குழுக்களும் ஊராருடன் ஒன்றுபட்டுப் பணியாற்றிவந்தன மற்றும், பல தேசத்து வணிகர்கள் தமக்குள் அமைத்துக்கொண்ட 'நானாதேசி' என்றும், 'திசையாயிரத்துஐந்நூற்றுவர்', தச்சர், கம்மாளர் ஆகியவர்களைப் போன்ற கைவன்கம்மியர் தமக்குள் அமைத்துக் கொண்ட 'இரதகாரர்' ஆகிய நிறுவனங்கள் குல நலம் வாணிகநலம் ஆகியவற்றுக்குத் தொண்டு புரிந்து வந்தன''[1] எனக்குறிப்பிடுவது மனங்கொளத் தக்கது,

'நகரம்' என்பது முற்காலத்தில் வணிகர் நிறைந்திருந்த பேருருக்கும் ஊராட்சிப் பொறுப்பினை மேற்கொண்ட நிறுவனத் துக்கும் பெயராயிருந்தது எனக்கண்டோம். இந்தத் தொடர் புடன் சிந்திக்கையில், தமிழகத்தில் சிறப்புற்றிருந்த வணிகர்குலத் தவரை 'நகரத்தார்' என்று அழைத்து வருவதையும் நினைவிற் கொள்ளலாம்,

2. நகரமைப்பு:

பண்டைக் காலத்திலேயே நகர்களை அமைப்பதில் மக்கள் தம் அழகனுபவத்தையும் சமயவுணர்வையும் புலப்படுத்தும் வகையில் தாம் உருவாக்குந் திட்டத்தினூடே பிணைத்துத் தம் தனித்தன்மையைப் புலப்படுத்தியுள்ளனர்.

மதுரையெனும் பெரும்பதி தாமரை மலர் போன்று உள்ளது: அம்மலரின் இதழ்களைப் போன்று தெருக்கள் உள்ளன: திரு விழாச்சிறப்பு மிகு திருக்கோயில் தாமரைப் பொகுட்டமைப்பில் நன்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது; இச்சிறப்பினைப் பரிபாடல்,

''மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவம்; இதழகத்
தரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்''[2]

எனவரும் அடிகள் சித்திரித்தல் காண்க. இக்காலத்தில் பாண்டியன் அரண்மனைக்குப் பதிலாகத் திருமலை நாயக்கர் மகாலைத் தான்

1. தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், பக் 293.
2. பரிபாடல் திரட்டு, 7, 1-4

காணவியலும். **'அண்ணல் கோயில்'** என்பதற்குப் பதிலாகச் **சோமசுந்தரக் கடவுள் கோயிலை** வைத்துக் கொண்டால் மதுரையின் நகர அமைப்பு ஓரளவு விளங்கலாகும்.

காஞ்சிபுரம் பாரத நாட்டு நகரங்களுள் சிறந்ததாகப் போற்றிய நிலையில் **'நகரேசு காஞ்சி'** என வடமொழியாளர் கூறுவாராயினர். காஞ்சியில் **ஏகாம்பரநாதர்** **கோயிலுக்கு** காமாட்சியம்மன் **கோயிலுக்கும் நடுவே** மேல ராஜவீதியில் திருமுருகனுக்குரிய **குமரக்கோட்டம்** அமைந்துள்ளது. இந்த அமைப்பானது சிவனுக்கும் **உமைக்கும்** நடுவே கந்தன் அமைந்துள்ள **'சோமாஸ் கந்தர்'** திருவுருவத்தை நினைவூட்டுவதாக உள்ளது. பொதுவாகக் காஞ்சிமா நகரம் **ஸ்ரீ சக்கர வடிவ அமைப்பில் உள்ளது என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது.** இவ்வாறான சிந்தனைகளுக்கு முன்னோடியாகத் **தண்டியலங்கார மேற்கோள் செய்யுள்,** காஞ்சியை **ஒரு மயிலாகவும் இயைபுருவகம்** செய்து காட்டுகிறது; செய்யுள் வருமாறு;

> "ஏரி யிரண்டுஞ் சிறகா எயில்வயிறாக்
> காருடைய பீலி கடிகாவா -நீர் வண்ணன்
> பொற்றேரான் கச்சிப் பொலிவு"[1]

திருக்குற்றாலம் அங்குள்ள மலையருவியால் பெருஞ் சிறப்பினைக் கொண்டது. வெள்ளிய நீரருவி அருட் செல்வர்களுக்கு வெண் சங்கினை நினைப் பூட்டிய காரணத்தாலோ என்னவோ குற்றால நாதரின் **திருக்கோயில் வடிவம் சங்கு போல அமைக்கப் பட்டுள்ளது.** தேவாரப்பாடலும் திருக்குற்றாலக் குறவஞ்சியும் திருக்குற்றாலத் தல புராணமும் இன்னும் பல இலக்கியங்களுங் கொண்ட குற்றாலநாதர் கோயில், சங்கு போன்ற அமைப்பில் உள்ளது. அதனைச் சுற்றியுள்ள தெருக்கள் சங்கின் பற்பல புரிகள்- முறுக்குகள் (spirals)- போல வளைந்து வளைந்து அழகுற விளங்குகின்றன. இத்தகைய சிறப்பினைப் புகழ்ந்து போற்றுதலைத் திருக்குற்றாலத்தலபுராணத்திற் கண்டு கொள்க.

சிலப்பதிகாரம் வாயிலாகப் **பூம்புகார்** நகரம் **மருவூர்ப்பாக்கம்** என்றும், **பட்டினப்பாக்கம்** என்றும் பாகுபடுத்தப்பட்டுள்ளதை

1. தண்டியலங்காரம். 39 ஆம் நூற்பாவில் இயைபு உருவகத்துக்கான மேற்கோள்.

அறியலாம். பட்டினப்பாக்கத்தில் எவ்வாறெல்லாம் பல்வகைத் தெருக்களும் சதுக்கங்களும் மண்டபங்களும் அமைந்திருந்தன என்பது பற்றியும் மருவூர்ப்பாக்கத்தின் அமைப்புப் பற்றியும் அதே காப்பியத்தில் **இந்திர விழவூரெடுத்த காதையில்** சிறப்புறக் காணலாம்.

2.1. நகரமைப்பு - வகைகள்

பொதுவாக நகர அமைப்புக்கள் ஒருபுறமிருக்க, ஆகமநூல் அடிப்படையில் பேரூர்களும் சிற்றூர்களும் எவ்வாறு வகைப்பட அமைந்துள்ளன என்பது பற்றிச் சிறிது காண்போம். ஊர்களைப் பாகுபடுத்துங்கால் நகரம், பட்டணம், துர்கம் அல்லது சேனா முகம், ராஜதானி, கேடம், கர்வடம், சிபிரம், புரம், குடிகம், கிராமம் என்று அவை பத்து வகைகளாகக் காணப்படுகின்றன. **திருவாடானை எம். ஐயாமணிசிவம்** இவை தொடர்பாகத் தரும் விளக்கங்களைக் கீழே காண்போம்.

1. **கிராமம்:** இவைகள் சுமார் 15 பகுப்புகளாக மண்டனக் கிராமம், சதுர்முகக் கிராமம். மங்கள கிராமம், விசுவேசக் கிராமம். நித்திய மங்கள கிராமம், கரவட கிராமம், வசந்த கிராமம் முதலிய பெயர்களில் காணப்படுகின்றன.

2. **நகரம்;** பல்வேறு தொழிற்சாலைகளும் அரசாங்க நிருவாக மாவட்டத் தலைமை அலுவலகங்களும் கலைச் செல்வங்களும் காவல் நிலையங்களும் கூடிய மாவட்டத் தலைநகரமாகும்.

3. **பட்டணம்;** நதிகள், கடல்துறைமுகங்கள், வியாபாரத் தலைமை நிலையங்கள், கருவூலங்கள். ஆபரணத் தொழிற் கூடங்கள், நெசவுத்தறிகள், அயல்நாட்டு வர்த்தகர் தங்குமிடங்கள் மாவட்டத் தலைமையதிகாரிகள் சுங்க அதிகாரிகள் முதலியோர் தங்குமிடங்களுடன் கூடிய நகரைக் குறிக்கும்.

4. **கர்வடம்:** சுமார் 500 விவசாயத் தொழில் செய்யும் குடும்பங்களும், ஆறு காடு மலை இவற்றின் அருகிலுள்ளதுமான இடமாகும்.

5. **புரம்:** இது சாமானியமாகவுள்ள சுமார் 200க்கு மேற்படாத கூலி வேலை செய்யும் தொழிலாளர் வசிக்குமிடமாகும்.

6. **கேடம்:** ஆற்றங்கரைகள் மலையுச்சிகள் ஆகியவற்றில் பிரிந்து பிரிந்து குடிசை கட்டி வாழும் மக்களின் உறைவிடமாகும்.

7. **குடிகம்:** தாழ்ந்த குடிமக்கள் என ஒரு காலத்தில் கருதப்பட்டு வந்த ஆதித்திராவிடர்கள் வசிக்கும் சேரிகளமைந்த இடம்.

8. **சிபிரம்:** நாட்டுப் பாதுகாப்பிற்காகப் போர்வீரர்களைச் சேர்த்துச் சித்தப்படுத்திய நிலையில் சேனாமுகத்தின் சுற்றுப் புறங்களில் வைக்கப்பட்டிருக்கும் இடம் இதுவாகும்.

9 **இராசதானி;** அரசருடைய மாளிகையுடன் அமைச்சர். பிரதானிகள், சேனாவீரர்கள், பாதுகாப்புள்ள கோட்டை கொத்தளங்களும் கூடிய இடமாகும். இதில் சுமார் இரண்டு இலட்சம் மக்கள்தொகைக்கு மேற்பட்ட நால்வகைச் சாதியினரும் வசித்து வந்தனர்.

10. **சேனாமுகம் அல்லது துர்க்கம்:** நாட்டின் பாதுகாப்பிற்காகவுள்ள நாலாப் பக்கங்களிலும் கோட்டைகள் பொறியியல் யந்திரங்கள், போர்த்தளவாட உற்பத்திச் சாலைகள், போர் வீரர்கள் பயிற்சி பெறுமிடங்கள் முதலியவற்றையுடைய இராஜ தானியையடுத்துள்ள இடமாகும்''[1]. இவ்வாறான ஊரின் பாகுபாட்டையும் அமைப்பையுங் காணுங்கால், நம் நாடு பண்டு தொட்டே மிகச் சிறந்த பண்பாட்டுடன் கூடிய நாகரிகத்தைப் படைத்துச் சிறந்துள்ளதென்பதை அறியலாம்.

மேலும், ஊரமைப்பில் மேற்கண்ட பாகுபாடுகளேயன்றித் தற்காலிக நிலையில் சில கட்டட அமைப்புக்களும் தேவைப் பட்டன; இதனை நாட்டு வரலாற்று வாயிலாக அறியலாம்.

நாட்டின் நல்லாட்சியில் நிலையான பாதுகாப்பினைக் குறித்து, இக்காலத்தைப் போன்றே பண்டைக் காலத்திலும் சிந்தித்துச் செயற்பட்டு வந்துள்ளனர். **சேனாமுகம்** அல்லது **துர்க்கம்** போன்ற பாதுகாப்பு வளாகங்கள் இருப்பினும்,

1. புள்ளிருக்கு வேளூர் (வைத்தீசுவரன்கோயில்) திருக்குடமுழுக்கு விழா மலர் (1970), பக். 24, 25

அவற்றைச் சுற்றிச் **சிபிரங்கள்** என்பவையும் அமைந்திருந்தன. நாட்டுப் பாதுகாப்பிற்காகப் போர் மறவர்களைத் திரட்டிச் சித்தப்படுத்துங் களமாகச் சிபிரம் விளங்கியதை முன்னரே கண்டோம். இவ்வாறெல்லாம் மன்னர்கள் தம் நாட்டு எல்லையோரங்களிலே நிலையான பாசறைக் கட்டடங்களை அமைத்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன.

பொதுவாகப் பாசறையென்பது பகைப் புலத்தின் எல்லையில் தற்காலிகமாகக் கட்டிக் கொள்ளும் ஒருவகைக் கட்டட அமைப்பாகும். அவ்வகைப் பாசறைகளைத் தம்நாட்டு எல்லையோரங்களில் மன்னர்கள் தம் போர்வீரர்களுக்காக அமைத்துத் தந்தனர். **களத்தூர், முதுகளத்தூர்** (முதுகுளத்தூர்) போன்ற ஊர்கள் படைவீரர்கள் தற்காலிகமாகத் தங்கிய பாடிவீடுகள் அல்லது பாசறைகள் ஆகும்; காலப்போக்கில் படைவீரர்களின் தேவையை நிறைவு செய்ய அங்காடிகள், கூலச்சந்தைகள், ஆடையங்காடிகள், உணவுச்சாலைகள் முதலியவை ஏற்பட்டுப் **படையூர்**களாகவே மாறியுள்ளன எனலாம்.

கிடாரம் என்று இக்காலத்தில் மருவி வழங்கப்படும் ஊர். **கூடகாரம்** ஆகும். ''கூடகாரம் என்பது போர்ப்படைகள் தங்கியிருக்கும் கூடாரம் ஆகும். ஆங்கிலத்தில் 'டெண்ட்' (Tent) என்பர். காரம்-கட்டிடம், பின்னர் நிலையான பாசறைக் கட்டிடங்களாக மாறிய இடம். இவை நாட்டெல்லையோரங்களில் நிலையாக அமைக்கப்பட்டுள்ள பாசறைகள் அல்லது படையிருப்புக்களாகும்''[1] என்று **வித்துவான் மு.க.ல வ உ. வேணுகோபால் பிள்ளை** கூறிச் செல்வது சிந்திக்கத்தக்கதாகும்.

மேற்கூறியவையேயல்லாமல் **கிராமம், நகரம், பட்டணம்** முதலியவற்றின் வீதிகளையும், இல்லங்களையும், ஆலயங்களையும் அமைக்கின்ற விதிமுறைகளும் காரணாகமம் முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. சிறப்புமிகு ஆலயத்தைச் சுற்றி அமையும் வீதிகள், தேரோட்டத்திற்கு வசதியாக அகலமாகவும், நேராகவும் இருந்தன. ''கிழக்கு மேற்காகச் செல்லும் வீதிக்கு **ராஜவீதி** என்றும், தெற்கு வடக்காகச் செல்லும் வீதிக்கு

1. திருக்கோயில் (திங்களிதழ்), பிப்பிரவரி, 1975

வாமன்வீதி என்றும் பெயர்''[1] என்ற குறிப்பும் உள்ளது. ஆனால் இக்காலத்தே இந்த மரபு கைவிடப்பட்டு, எல்லா வீதிகளுமே ரத/ ராஜவீதிகளாகிவிட்டன. எடுத்துக்காட்டாகக் **காஞ்சி, தில்லை** முதலிய தலங்களிலுள்ள ராஜவீதிகளைக் காணலாம்.

3. நாடும் பாகுபாடும்:

தமிழ்நாடு என்பது முற்காலத்தில் வடக்கே **வேங்கடமலையையும்**, தெற்கே **கன்னியாகுமரியையும்**, மேற்கே **அரபிக்கடலையும்**, கிழக்கே **வங்களாவிரிகுடாவையும்** (கடலையும்) எல்லையாகக் கொண்டிருந்தது. குறுநிலமன்னர்களும், வள்ளல்களும் பலராக ஆட்சி புரிந்து வந்தாலும், சிறப்பாக முடியுடைய பெருவேந்தர்களாகச் **சேரர், சோழர், பாணடியர்** ஆண்டு வந்தனர், அவர்கள் ஆண்டுவந்த பகுதிகள் முறையே **சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம்** என்று அழைக்கப்பட்டன.

நாட்டில் வாழும் குடிமக்களின் உரிமையையும், நலத்தையும் செவ்வையாகக் காக்கும் பொருட்டு, ஒவ்வொரு மண்டலமும் பல சிறுசிறு பகுதிகளாக **நாடு** எனும் பெயரில் பிரிக்கப்பட்டு நிருவாகம் மேற்கொள்ளப்பட்டது. நாட்டாட்சி புரியும் மன்னனை உயிரெனவும், தெய்வமெனவும் மக்கள் போற்றி வந்தனர்.

நாடு என்றும், **கூற்றம்** என்றும் பிரிக்கப்பட்ட செய்திகளை இலக்கியம் கல்வெட்டு முதலியவற்றால் அறியலாம். எடுத்துக்காட்டாகப் **பாண்டிய மண்டலம்** எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது என்பதைக் காண்போம். ''பாண்டிய மண்டலம், பண்டைக் காலத்தில் பல சிறுசிறு பகுதிகளாக **நாடு** என்னும் பெயரில் பிரிக்கப்பட்டிருந்தது. பூங்குடி நாடு, துறையூர் நாடு, மேல்வேய் நாடு, தென்வாரிநாடு, வடவாரி நாடு, திருவழுதி நாடு, மூரப் பூர் நாடு, தென்களவழி நாடு, வானவன் நாடு, குடநாடு தாழையூர் நாடு, முத்தூர்க் கூற்றம், கீழ்ச் செம்பிநாடு, செம்பி நாடு, வடதலைச் செம்பிநாடு, வெண்புலநாடு, பருத்திக்குடிநாடு, புறமலை நாடு, கருமாநாடு, மிழலைக் கூற்றம், இடைஅளநாடு,

1. புள்ளிருக்கு வேளூர்-கும்பாபிஷேக மலர், 1970, பக், 29

கோட்டூர் நாடு, அரும்பைக் கூற்றம் முதலியவைகளாகப் பாண்டிய மண்டலத்தைச் சேர்ந்த பல நாடுகளின் பெயர்கள் கல்வெட்டுக்களிலும், நூல்களிலும் ஆங்காங்கே குறிக்கப் பட்டிருக்கக் காண்கிறோம்''[1] என்று முகவை உ. வேணுகோபால் பிள்ளை கூறிக்காட்டுதல் காண்க. இதனால், 'நாடு' எனுஞ்சொல் இக்காலத்திய பெரும் நிலப்பகுதி எனும் பொருண்மையைக் குறிக்காமல், மண்டலத்திற்குட்பட்ட பகுதியையும் குறிக்கும் வகையில் குறுகிய பொருண்மைச் சொல் (narrow term) ஆகவும் பயன்பட்டுள்ளமையை அறியலாம்.

இக்காலத்தில் தமிழ்நாடு பரப்பெல்லையில் சுருங்கியுள்ளது. மேற்கே சேரநாடு, கேரளநாடு எனும் பெயரில் பிரிந்துள்ளது; வடக்கே வேங்கடமலை, ஆந்திர மாநிலத்தில் சேர்ந்துவிட்டது; மேலும், கருநாடகநாடும் தனியே பிரிந்துள்ளது. எனினும், தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் முந்தைய தமிழக நோக்கில் சிற்சில செய்திகள் அவற்றின் தொடர்பாகவும் அமையும்.

வளர்படி நிலைகளிலே இனி நகரமைப்பினைப் பற்றி ஓரளவு கட்டடக்கலை நோக்கில் காண்போம்.

1. திருக்கோயில் (திங்களிதழ்), பிப்பிரவரி, 1975

4. கட்டடக் கலை - பண்பாட்டுக் கூறுகள்

1. கட்டடக் கலை - பரிணாமப் படிநிலைகள்:

மக்களின் அடிப்படைத் தேவைகளாக உணவு உடை உறையுள் ஆகிய மூன்றும் அமைந்துள்ளன. மனிதன் தான் வாழும் சுற்றுச் சூழலுக்கு இயைபாக அமைத்துக் கொள்ளும் உறையுளைப் பாதுகாப்பாகவும் வசதியாகவும் அமைக்க வேண்டுமென்று, என்று திட்டமிட்டானோ அன்றே கட்டடக் கலையின் வளர்ச்சிக்கு உகந்த வழியுண்டாயிற்று எனலாம். இவ்வாற்றான் அவனது உறையுளின் மாற்றமும் வளர்ச்சியும் இடத்துக்கும் காலத்துக்குமேற்ப அமையலாயின.

உறையுளை முதற்கட்டமாகக் கொண்ட கட்டடக்கலை, அவ்வக்கால மக்களின் எண்ணத்துக்கும் சமுதாயச் சூழலுக்கும் ஏற்ப அழகுணர்வுடன் பல்கி விரிவு கொள்ளலாயிற்று. தனி மனிதத் தேவையில் தொடங்கிய உறையுள், குடும்பத்தேவையாக வளர்ந்து, பிறகு சமுதாயத் தேவையில் நிறைவு கொண்டது.

மக்கள் உடல்நலத்துடன் வாழ்வதற்கேற்ற வகையில் தாம் வசிக்கும் வீடு முதற்கொண்டு, பணிபுரியும் பணிக்களம் வரையில் அனைத்துவகைக் கட்டடங்களும் சுகாதார வசதியுடனும் வலிவுடனும் பொலிவுடனும் அமைதல் வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர்; இது பன்னெடுங்காலமாக மக்களின் மனவியல்பாக இருந்து வருகிறது.

கலையுணர்வுடன் கட்டடங்களைக் கட்டுகையில், அந்தஅந்த வட்டாரங்களில் கிடைக்குங் கட்டுமானப் பொருள்கள் (Building Materials) பற்றிச் சிந்திக்கின்றனர். கட்டடக் கற்கள், மரம், இரும்பு, சுண்ணாம்பு, மணல் முதலியவற்றைத் தேடி வைத்துக் கொண்டு, எவ்வாறு திட்டமிட்டுக் கட்டடத்தை அமைக்கலாம் என்று அத்துறையில் வல்லுநர்களுடன் கலந்துரையாடி முடிவிற்கு வருகின்றனர். குடியிருப்பு மனைகளையோ கோயில்களையோ அமைப்பதெனின், முன்கூட்டியே வாஸ்து சாந்தி செய்தல் வேண்டுமென்பது வடவர் பண்பாடு தென்னகத்தே வந்து கலந்த

நிலையில் தேவையாயிற்று. (வாஸ்து சாந்தி என்பது, **வாஸ்து** **புருடன்** எனும் அரக்கன் பூமியில் படுத்திருப்பதால், தரை குற்றமுடையதாகிய நிலையிலே செய்யும் பரிகாரம்).

கட்டப்படும் கட்டடங்கள் பல நோக்கில் பலவகைப்பட்டன. **சமய நோக்கில்** கோயில், மடம், படிகளுடன் கூடிய திருக்குளம், தெப்பக்குளம் முதலியவாகவும், **சமுதாய நோக்கில்** அணைக்கட்டு பாலம், கலங்கரைவிளக்கம், அன்னச்சத்திரம், கல்விநிலையம், தொழிற்சாலை, மருத்துவமனை, கலைக்கூடம், வணிகக்கூடம், கல்லறை, நினைவு மண்டபம், நினைவு வளைவு முதலியவாகவும் கட்டடங்கள் அமைந்தன. ஊராட்சி, நகராட்சி, நாட்டாட்சி ஆகியவற்றின் நிருவாக வசதிக்காகப் பலப்பல துறைகள் (Departments) தோன்றவே, கட்டடங்களும் அவற்றிற்கேற்ப வருவாய்த்துறை அலுவலகம், நீதிமன்றங்கள், ஆவணக்களரி (பத்திரப் பதிவகம்) முதலிய பெயரினவாய்ப் பல்வேறு வசதிகளுடன் அமைந்தன. காலந்தோறும் மக்களின் வாழ்வியலில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதால் கட்டுமானப் பொருள்களிலும் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தும் முறை வழக்கத்தில் வந்தது. சுண்ணாம்புக்குப் பதிலாகச் சிமெண்டு (Cement) பயன்படுத்தவும் ஆலயத்துக்குச் செங்கற்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாகச் சிரமப் பட்டேனும் **கருங்கற்களைப்** பயன்படுத்தவும் மக்கள் முனைந்தனர். கருங்கற்களை மிகுதியாகக் காணவியலாத **தஞ்சாவூர் மாவட்டத்தில்** கருங்கற்களாலேயே மிகப்பெரும் ஆலயங்களையெல்லாம் அமைத்துள்ளமையை ஈண்டு நினைவிற் கொள்ளலாம்.

கட்டட அமைப்பிலும் பல்வேறு கலைமுறை அல்லது பாணி (Style)யைக் காண்பதற்கேற்ற சூழல் காலப்போக்கில் உருவாயிற்று. தனிப்பட்டோர் நிலையிலும் சமுதாய அமைப்பிலும் தேவைப்படும் **அழகுணர்வு** (Aesthetic sense), பயன்பாடு (utility) முதலிய நற்கூறுகளை நிறைவு செய்யும் போக்கிலே நாளும் நடையிடும் மக்கள், அந்த அந்தக் காலத்திலும் கட்டடக்கலை வளர்ச்சிக்குத் தாம் அறிந்தோ அறியாமலோ துணைநிற்கின்றனர் முழுவதும் பயன்பாட்டு நோக்கில் 'பண்டகச்சாலைகள்' சிறப்புறக்கட்டப்படுதலை நினைவிற் கொள்ளலாம்.

எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு, இக்காலத்தில் மக்கள் பல நாடுகளுக்குச் சென்று திரும்புகின்றனர். **சுற்றுலாத்துறை** (Tourism), உலகில் பலநாடுகளிலும் வளர்ச்சியுற்று வருவதால், அந்தந்தப் பகுதிகளிலும் பயணிகளைக் கவரும் வண்ணம் பிரம் மாண்டமான கட்டடங்கள் பலவசதிகளுடன் கட்டப்படுகின்றன. உலகெங்கிலும் காணப்படும் கட்டடக்கலைக்கூறுகள் பற்றிய வரலாற்று விவரங்கள் சுற்றுலாத் துறையினரால் ஆர்வமுடன் திரட்டப்படுகின்றன.

திருமணக் கூடங்கள், அவற்றை யொட்டிய உணவு பரி மாறுங் கூடங்கள், திரையரங்குகள், குளுகுளு வசதியுடன் கூடிய நட்சத்திர ஓட்டல்கள் முதலிய பல கட்டடங்கள் தரை மட்டத்திற்கு மேலே அடுக்கடுக்காகக் கட்டுவது ஒருபுறமிருக்கத் தரைமட்டத்திற்குக் கீழேயும் கட்டப்படுகின்றன,

சூறாவளியடிக்குங் காலத்தில் கடலோரத்திலுள்ள குடிசை வாழ்மக்கள் பாதுகாப்புடனிருக்கும் நோக்கத்தில், அவர்களுக் கான **'புயற்பாதுகாப்பு இல்லங்கள்'** முதலியவை, வெளிநாட்டுப் பொறியியல் திறமையுடன் கட்டப்படுகின்றன. இவ்வாறாகப் பலநோக்குப் பயன்களுடன் தமிழ்நாட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களெல்லாம் கட்டடக்கலையின் பரிணாமப்படிகளெனக் கொள்ளலாம்.

உலகத்திலுள்ள பலபகுதிகளும் ஒன்றோடொன்று கலை, தொழில், பண்பாட்டு உறவு கொண்டுள்ளன. எனவே கட்டடக் கலை வல்லுநர்கள், அறிவியலுலகத்தில் பலவசதிகளைப் பெற் றுள்ளனர். அரசாங்கவுதவியுடன் உலகிலுள்ள பல்வேறு பொறி யியல் நுணுக்கத்துடன் கூடிய கட்டட அமைப்புக்களையும் வரலாறுகளையும் பற்றிய தகவல்களை எளிதாக அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பினையடைந்துள்ளனர். எனவே, ஒப்பீட்டு நோக்கில் நேர்ந்தெடுத்து வலுவான, அழகான கட்டடங்களைக் கட்ட முனைவதும், கட்டி வருவதும் இயல்பே. ஆயினும், கட்டடக்கலை வல்லுநர்களை விடச் சமுதாயமே அவ்வக்காலக் **கட்டடக்கலை முறையை** அல்லது **பாணியைத்** (style) தோற்றுவித்து வருகிறது எனலாம். வெளிநாடுகளுக்குச் சென்று பொருளீட்டித் தம் தாய்நாடு திரும்பும் பலர். வெளிநாட்டு

மனையமைப்புக்களாகப் பின்பற்றி அழகுவளமனைகளை இங்கு அமைக்கின்றனர். இவ்வாற்றான், **'சின்ன சிங்கப்பூர்'** என்று மக்களால் வியப்புடன் போற்றப்பெறும் கூத்தாநல்லூர் என்பதை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

1-1 கவின் கலைகளுள் கட்டடக்கலைக்குரிய இடம்

அழகுக் கலைகள் அல்லது கவின்கலைகள் எனும் நோக்கிலே ஓவியம். சிற்பம், நடனம், இசை, நாடகம் ஆகியவை சிறப்பாகக் கருதப்பெறுகின்றன. **பயன்பாடு** (utility) அடிப்படையில் இவற்றுக்கும் கட்டடக் கலைக்கு முள்ள தகுதிகளைச் சீர் தூக்கிப் பார்த்து, **உலகியற் பயன்பாடு கட்டடக் கலைக்கு நிரம்ப இருத்தலால்** கலை நோக்கிலே அதனை ஏனையவற்றுக்குத் தாழ்ந்த தாகவே கருதுகின்றனர்,

காட்சிக்கலை (Visual Art) யாகிய கட்டடக்கலை, கவின் கலைகளுக்குரிய **மென்மை** அல்லது **லளிதம்** கொண்டிராவிடினும் அதனிடத்தும் ஒருவகை **அழகுணர்வுத்** (aesthetic sense) தூண்டுதல் உள்ளது; எனினும், ஏனைய **கவின்**கலைகளுக்குள்ள சிறப்பு இதனிடம் இல்லையென்பர். **எனினும்** மக்களின் பண்பாடு - நாகரிக வரலாற்றில் **கட்டடக்கலை** சிறப்பிடம் பெறுகிறது. **காலத்தின்** கருத்துக்களையும் **ஆற்றல்**களையும் நிழலிட்டுக் காட்டும் பாங்கினால் **'கட்டடக்கலை நாகரிகத்தின் பிறப்பிடம் அல்லது கருப்பை'** (Architecture is the matrix of civilisation) என மேனாட்டார் கருதி வருவது மிகவும் பொருத்தமுடையதே யாகும்.

வளமார் மனைகளிலும் **கோயில்**களிலும் மடங்களிலும் ஓவியத்துக்கும் சிற்பத்துக்கும் போதிய இடந்தருகின்ற காரணத்தால், கட்டடக்கலை பிற **கவின்கலை**களைப் பிணைத்துச் செல்கின்றது எனலாம். கோயிற் பண்பாடாகத் தமிழ் நாட்டுப் பண்பாடு செழித்தோங்கி வருகின்ற காரணத்தால், கட்டடக் கலையினின்றும் ஓவியக் கலையையோ சிற்பக் கலையையோ பிரித்தறிய வியலாத நிலை (சூழல்) உருவாகியுள்ளது. அதிலும் சிற்பத்துடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கட்டடக்கலை கொண்டிலங்குவதால் **'கட்டடச்சிற்பம்'** (Achitectural Sculpture) என்று சொல்லுமளவிற்குக் கலைப் பிணைப்பு ஏற்பட்டுள்ளது

எனலாம். **பொறியியல் (Engineering)** அடிப்படையில் தொன்மை யான கட்டடங்களை ஆராய்ந்து கட்டுரை வரைபவர்களும் இதே அணுகுமுறையைப் பின்பற்றி வருகின்றனர். எடுத்துக் காட்டாகத் தமிழ் வளர்ச்சிக்கழகம் வெளியிட்டுள்ள **தமிழ்க் கலைக் களஞ்சியத்தினையும்,** தஞ்சாவூரிலுள்ள தமிழ்ப்பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள **வாழ்வியல் கலைக்களஞ்சியத்தினையும்** காண்க.

1.2 உறையுள் -கட்டட அமைப்புச் சிந்தனைகள்:

உலகவுயிர்கள் எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு வகையில் உறையுள் தேவையாகின்றது. **தேனீக்கள்** மலர்களினின்றும் தேனையும் மகரந்தத்தையும் கொணர்ந்து **தேனடையைத்** தமக்கு உறையுளாகுமென்று தம்மியல்பில் கட்டுகின்றன. **எறும்பு கரையான்** போன்றவை தமக்கெனப் **புற்றுக்களைக்** கட்டுகின்றன. தனக்கென உறையுள் கட்டாத நாகப்பாம்பு, கரையான் கட்டிய புற்றில் குடிபுகுந்து தங்குகின்றது. **பட்டுப்புழுக்கள்** தமக்குப் பாதுகாப்பான உறையுளாக **மெல்லிழைக் கூடுகளை** உருவாக்கு கின்றன (எனினும், அந்தக்கூடுகளே அவற்றின் வாழ்வை முடிக்குங் கருவிகளாகி விடுகின்றன) **குளவிகள்.** மண்ணால் கூடுகள் கட்டி வாழ்கின்றன. பறவைகள் குச்சிகளால் கூடுகட்டித் தங்குகின்றன. **சிங்கம் புலி** போன்ற கொடிய விலங்குகள் தாமே தமக்குரிய உறையுளைக் கட்டிக் கொள்ளா விடினும், **மலைக் குகை** போன்றவற்றைத் தம் உறைவிடங்களாக அமைத்துக் கொள்கின்றன. ஆக, எல்லா உயிர்களுக்குந் தாம் தங்குதற்குரிய இடங்கள் தேவையாகின்றன என்பது இயற்கைச்சூழலின் நியதியாகின்றது. இந்நிலையில் இந்தப்பின்னணியில் மனிதனுக் குரிய உறையுளின் பரிணாம வளர்ச்சியை வரலாற்று அடிப் படையில் காண்போம்

வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிமனிதன் காட்டு மிராண்டி யாகத் திரிந்த காலத்தில், வலிபவிலங்குகளுடன் போட்டியிட்டுக் கொண்டு மரக்கிளைகளிலும் மலைக் குகைகளிலும் தங்கித் தன் அயர்ச்சியைப் போக்கிக் கொண்டான். வீடுகட்டி வாழ வேண்டு மென்ற எண்ணமே தோன்றாத காலத்திலும் அவன் மலைக் குகையிலும் மரநிழலிலும் மரக்கிளைகளிலும் மனம் போன

போக்கிலே வாழ்ந்துகொண்டு **இனப் பெருக்கம்** செய்து கொண்டு தானிருந்தான். வேட்டையாடியும் மீன்பிடித்தும் தன் வாழ்க்கையை மேற்கொண்ட போது, சில தேவைகளையுணர்ந்து நிறைவு செய்ய முயற்சி மேற்கொண்டான். அந்நிலையில் விலங்குகளின் தோல்களை ஆடையாகக் கட்டிக் கொண்டும், பறவைகளின் இறகுகளைத் தலைக்கலங்காரமாகச் சூடிக் கொண்டும், விலங்குகளின் இறைச்சியைத் தீயில் பக்குவப்படுத்தி உணவாக்கிக் கொண்டும் வாழலானான். அத்தகைய வாழ்வின் படிநிலைகளில் அவன் தனக்கென இயல்பாக **'உறையுள்'** அமைத்துக்கொண்டு வாழ முயன்றுள்ளான்.

இடம் காலம் சூழல் ஆகியவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த மனிதன், அடுத்த கட்டமாகத் தன் உறையுளைப் பாது காப்பாகவும் ஓரளவு கண்ணுக்கு அழகாகவும் அமைக்க முற்பட்டான், எவ்வாறு கற்கால மனிதன் படிப்படியே உலோக காலத்தில் வாழ முற்படுகையில், தான் பயன்படுத்திய கருவிகளில் அழகுக்கும் இடந்தர முற்பட்டானோ, அவ்வாறே (பரிணாம உலகத்திலே) மனிதன் தான் அமைக்கும் உறையுளிலும் அழகுக்கும் இடந்தரத் தொடங்கினான். எளிய முறையில் கட்டத் தொடங்கிய **பரண் வீட்டிலும், குச்சி வீட்டிலும்** படிப்படியே காற்றோட்டத்திற்குரிய **பலகணி வாயிற்படி** முதலியவற்றை அமைக்கலானான்.

குச்சி வீடு (கூரை வீடு) படிப்படியே **ஓட்டு வீடு, தள வீடு** என வளர்ந்து, **பல மாடிக்கட்டடமாக** உயர்ந்துள்ளது. தன் உறையுளைக் காலத்திற்கும் இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பவும் பிறர்கண்டு பாராட்டுதற்கேற்பவும் அமைத்துக்கொண்டு, தன் முயற்சியால் கிட்டிய பயனை அனுபவிக்கத் தொடங்கிவிட்டான். இந்தப் படிநிலையில் சீர் தூக்கிப் பார்க்கவேண்டுவது ஒன்று உண்டு.

ஒப்பியல் நோக்கில் சிந்திக்கையில் ஏனைய உயிர்களுக்கும் மனிதனுக்கும் நிரம்ப வேற்றுமையுண்டு. எல்லா உயிர்களையும் விட மனிதனுக்கு ஓர் உயர்ந்த அறிவு - **பகுத்தறிவு** - நாளுஞ் சிறந்து வருவதால் அவன் தன் சூழ்நிலைக்கும் காலத்திற்கும் இடத்திற்கும் தேவைக்கும் வசதிக்கும் நோக்கத்திற்குமேற்பத்

தன் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றங்கள் கண்டு வருகிறான். அந்நிலையில் தன் இருப்பிடத்தைப் பாங்குடன் அமைத்துக் கொள்வதில் வியப்பில்லை தான்! இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

ஏனைய உயிர்கள் தமக்கெனப் புற்றுக்களோ கூடுகளோ கட்டுகையில் காலச்சுழற்சியால் அவை வேறுபாட்டையோ மாறு பாட்டையோ கொள்வதில்லை. தொன்மைக் காலத்தில் காணப் பட்ட கரையான் புற்றுக்களுக்கும் இக்காலத்துக் கரையான் புற்றுக்களுக்கும் வேறுபாடு இல்லை. அவ்வாறே குளவிக் கூடு களுக்கிடையேயும், தேனடைகளுக்கிடையேயும், பட்டுப்புழுக்கூடு களுக்கிடையேயும் வேறுபாடு இல்லை. ஓரினப் பறவைக் கூ களுக்கிடையேயும் சிறிதும் மாறுபாடு இருப்பதில்லை. அஃதாவது, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்று வரையில் பறவைகள் தம் கூடுகளை ஒரே விதமாகத் தான் கட்டி வரு கின்றன. அறிவியல் முன்னேற்றத்திலே கொடிகட்டிப் பறக்கும் மேலை நாடுகளிலும் பறவைகள் குச்சிகளுக்குப் பதிலாக இரும்புக் கம்பித் துண்டுகளால் கூடுகள் கட்டுகின்றனவா என்றால், இல்லை. உலகின் பல பகுதிகளிலும் தூக்கணாங் குருவிக் கூட்டமைப்பு ஒரே மாதிரியாக உள்ளது என்பதையும் ஈண்டு இயைபுடன் நினைவிற் கொண்டு சிந்திக்கலாம். ஆக, இவற்றை யெல்லாம் ஆராய்ந்து மனத்துட் கொண்டால், மனிதன் தன் சிந்தனைத் திறத்தால் -கற்பனை வளத்தால் - எவ்வாறெல்லாம் உறையுளமைப்பிலே முன்னேற்றங்கண்டு வருகிறான் என்பது தெள்ளிதின் புலனாகும்,

1.2.1 பண்டைக்கால வாழ் மனைகள் -வளர்ச்சிக் கூறுகள்:

இக்கால மாட மாளிகைகளையும் பல வசதிகளுடன் கூடிய வளமனைகளையும் காண்கையில், மக்கள் எவ்வாறெல்லாம் மனையமைப்பில் திட்டமிட்டுச் சிந்தித்து, அழகுணர்வுடனும் வசதியுணர்வுடனும் படிப்படியே செயற்பட்டுள்ளனர் என்பது தெரியலாகும்,

என்னதான் நாகரிக வளர்ச்சியில் மக்கள் முன்னேறிக் கொண்டேவரினும், ஏழைகளென்றும் பொருட் செல்வர்களென்றும் அமைந்துள்ள பாகுபாடு இருந்துகொண்டே தான் இருக்கும்! அந்நிலையில், பொருளாதார நோக்கில் மக்களிடையே குடிசை வாழ் மக்களும், மாளிகை வாழ்மக்களும் எக்காலத்திலும் இருந்து கொண்டுதான் இருப்பர். எனினும், விகிதாசார நோக்கில் முற்காலத்தில் குடிசை வாழ் மக்கள் மிகுதியாகவும், கலையமைப்புடன் கூடிய வீட்டு வசதியுடையவர்கள் குறைவாகவும் இருந்திருப்பர். ஆனால், இக்காலத்தில் அரசின் முயற்சியால் வீட்டு வசதி வாரியம் செயற்படுகின்ற காரணத்தால் (தொகுப்பு வீடுகள் பலவாகக் கட்டி வருவதால்) குடிசை வாழ்மக்கள் குறைவாகவும், வீட்டுவசதியுடையவர்கள் மிகுதியாகவும் இருத்தலைக் காணலாம். இத்தகைய வாழ்மனைகளின் முன்னேற்றத்திற்கு, மக்கள் கடந்து வந்த வளர்ச்சிப் படிநிலைகளைக் காண்பது நல்லது.

சங்க காலத்து எளிய உறையுளமைப்பினைப் பல்வகை இடச்சூழல்களுடன் முதலிற் காண்போம். பொதுவாக, மனைகள் பற்றிய பரிணாம வளர்ச்சியைச் சிந்திக்கையில், குடிசைகளே முதற்கண் மனத்தில் தென்படும். தமிழிலுள்ள இலக்கியச் சான்றுகள் பல்வகைக் குடிசையமைப்புக்களைப் புரிந்துகொள்ளத் துணைநிற்கும்.

மலை வாழ் மக்கள், தாம் வாழ்வதற்காக மலைப்பக்கங்களிலே எளிதாகக் கிடைக்கும் கூவையை (மஞ்சளைப் போன்ற ஒருவகைப் புதல் இலை) வேய்ந்து சிறிய குடிசை கட்டியுள்ளனர். இதனைக்,

''கூவை துற்ற நாற்கால் பந்தர்ச்
சிறுமனை வாழ்க்கை''[1]

என வருதலால் அறிக. இதனால் நாற்கால் பந்தரே மனையமைப்பிற்கு முன்னோடியாக அமைந்துள்ளது என்பது தெளிவு.

1 புறநானூறு. 29 : 19-20

அணிலும் எலியும் புகுந்து தொல்லை தாராத வண்ணம் குடிசையமைப்பு இருந்துள்ளது. ஈச்ச இலை வேய்ந்த எயினர் குரம்பை முள்ளம் பன்றியின் முதுகு போலும் புறத்தைப் பெற்றிருந்தது. இதனைப் பெரும்பாணாற்றுப்படையில்,

''வரிப்புற அணிலொடு கருப்பை யாடாது
யாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தகர்
ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை'' (85-88)

என வருதலால் அறியலாம் (கருப்பை-எலி; வெரிந்-முதுகு; குரம்பை-குடில்).

''தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பை''[1] என அதே நூலில் வருதலும் இயைபுடன் சிந்திக்கத் தக்கதாகும்.

மருத நில மக்களின் குடில்கள் தோப்புக்குடில்களாகத் தனித் தனியாக அமைந்திருந்தன; தென்னை மடல் வேயப் பெற்றிருந்தன. இத்தகைய மனைகளின் காட்சியைக்,

''குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
தண்டலை யுழவர் தனிமனை''[2]

எனவரும் செய்யுட் பகுதியால் அறியலாம். தென்னங் கீற்றால் வேயுங் குடிசைகளை இன்றுங் காணலாம். இதற்கு முன்னோடியாகத் தென்னம் வாடு மடலை (உலர்ந்திய தென்னம் மட்டையை) வேய்ந்து குடிலமைத்துள்ளனர் என்பது அறியக் கிடக்கிறது.

உழவர்களே வைக்கோல் வேய்ந்த கவிந்த குடிசை கட்டிக் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பது,

''புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்''[3]

(புதுவை - புதிய வைக்கோல்)

1 பெரும்பாணாற்றுப்படை, 263-265
2. பெரும்பாணாற்றுப்படை, 352-355
3. மேலது, 225

எனவரும் அடியால் அறியலாம்; தாம் கட்டிய குடிசைக்கு முன்புறத்தே முற்றம் போன்ற அமைப்பு இருந்தமை 'முன்றில்' எனும் சொல்லாட்சியால் அறியலாம்.

உழுதுண்ணும் முல்லை நில மக்கள் அங்கே கிடைக்கும் கரியவரகு வைக்கோலால் வேய்ந்து அழகிய குடிசையமைத்திருந்தனர் என்பது,

''பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்''[1]

எனவரும் அடிகளால் அறியலாம். முல்லை நிலத்தில் இயல்பாக மழைபெய்வது மிகுதியெனலாம். இடியோடு கூடிய மழை பெய்கையில் இடி வீழாமற்காக்கவும் ஒருவகை உத்தியாக வரகுவைக் கோலால் குடிசை வேய்ந்தனரோ என நினைக்கத் தோன்றும். **(இக்காலத்திலும் கலசத்தில் வரகை நிரப்பும் உத்தியால் இடியினின்றும் கோபுரத்தைக் காக்கலாம் என்ற நம்பிக்கை மக்களிடையே இருந்து வருதலை ஈண்டு இயைபுடன் சிந்திக்க)**

வைக்கோலைப் போன்று ஒருவகைப் புல்லையும் குடிசை வேயப் பயன்படுத்தியுள்ளனர் என்பது,

''**புல்வேய் குரம்பைக்** குடிதோறும் பகர்ந்து''[2]

எனவரும் அடியால் காணலாம்.

ஆகக் குடில் கட்டி வாழும் முதற் கட்டத்தில் மக்கள் மூங்கிற் கழிகளையோ, பிற மரக்கிளைகளையோ ஊன்றி, மண் சுவர் எழுப்பியோ, தட்டிகளை வைத்தோ ஒருவகை அடைப்பு ஏற்படுத்திக் கொண்டு கூரைவேய்ந்து குடியிருப்பு அமைத்துள்ளனர்; பிறகு, படிப்படியே தேவைகளுக்கேற்ப மனைகளை விரிவுபடுத்திக் கொண்டே வந்துள்ளனர் என்பது தெரிகிறது.

பொதுவாக, மக்கள் தொடக்கக் காலத்தில் குடிசையமைத்து வாழ்ந்தனரெனினும், எயினர் குடியிருப்பு மட்டும் ஒருவகைத் தனியமைப்பைக் கொண்டிருந்ததோ என நினைக்கத் தோன்றும்.

1. பெரும்பாணாற்றுப்படை, 190-191
2. புறநானூறு, 120:13

எடுத்துக் காட்டாகப் பெரும்பாணாற்றுப் படையில் காண லாகும் எயினர் குடியிருப்பைச் சிறிது விளக்கமாகச் சுட்டலாம்.

பொருந்தாத பகைவர் அஞ்சும் வகையில் பருந்துகள் படியக் குத்தி முனை மழுங்கிய - புலால் நாறும் வாயுடைய - வேல் களும் மணிகட்டின கேடயங்களும் வரிசையாக வைக்கப்பட்டி ருக்கும். நன்றாக முடிந்த நாணுடைய வில்லும், அம்புகளும் அக்குறும்புகளில் இருக்கும். வேலிகள் ஊகம் புல்லினால் வேயப் பட்டு உயர்ந்து தோன்றுகின்றன. அம்பறாத் தூணிகள் தூங்கும் தூண்களையுடைய பந்தரும் அவ்வெயினர் வாழும் இடங்களில் உள்ளன. சங்கிலிகளாலே நாய்கள் கட்டப்பட்டுக் கிட்ட முடியாத காவலையுடையவை வீடுகள் என்று சித்திரிக்கப்படும் காட்சியைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார்,

''அருஞ்சுரம் இறந்த வம்பர்ப் பருந்துபட
வொன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவா ய்எஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனகர்
ஊகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்
தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகந் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்
கொடுவில் எயினக் குறும்பு''[1]

எனவரும் அடிகளால் புலப்படுத்திக் காட்டுகிறார்.

பல பகுதிகளோடு பெருமனைகள் பல அமைக்கும் திட்டம் மக்களுக்கு ஏற்பட்ட நிலையில், அவற்றைப் பல்வகை வசதி களுடன் கட்ட முனைந்தனர். வீட்டின் பல பக்கங்களிலும் வளைவான திண்ணைகள் படிகளுடன் கூடிய நிலையிலே உயர் பார்வையில் கட்டப்பட்டன. பட்டினப்பாலையில்,

1. பெரும்பாணாற்றுப்படை, 117 - 129.

''குறுந்தொடை நெடும் படிக்கால்
கொடுந் திண்ணைப் பஃறகைப்பிற்
புழைவாயிற் போகிடைகழி
மழைதோயு முயர்மாடத்து'' (141-145)

எனவரும் அடிகளால், அக்காலத்தில் திண்ணைகளுக்குப் படிகள் அமைத்து வீட்டை உயரமாகக் கட்டுவதால் வெள்ளத்தால் கேடுறா வண்ணம் பாதுகாக்கக் கூடிய உத்தி மக்களிடையே இருந்தமை புலப்படும்.

சிலப்பதிகாரத்தில் ''நீணெடு வாயில்''[1] என வருவது கொண்டு அக்காலத்தில் இல்லங்களின் வாயில்கள் உயரமாக அமைக்கப்பட்டமை புலனாகும்.

அனுபவப் படிப்பினையால் மக்கள் மண்ணால் சுவர்கட்டித் தம் குடிசைக்கு மடலாலோ வைக்கோலாலோ புல்லாலோ கூரை வேய்ந்து தம் இருப்பிட அமைப்பை வளர்த்துக் கொண்டனர்; படிப்படியே சுட்ட செங்கற்களைக் கொண்டு சுவர் எழுப்பவும், சுட்டமண் ஓடுகளால் கூரை வேயவும் மரங் களைப் பயன்படுத்தி, விட்டங்களையும், வாரைகளையும், தூண் களையும், வாயில்களையும், பலகணிகளையும் அமைக்கக் கற்றுக் கொண்டனர். அந்நிலையில் தான் கட்டடம் அமைப்பது கவின் கலைகளுள் ஒன்றாகச் சிறப்புடன் கருதப்பட்டது. சங்க காலத் திலேயே மக்கள் தம்மியல்பாகக் கட்டடக்கலையில் படிப்படியே அனுபவம் பெற்றுக் கொண்டே வரலாயினர்.

1.3 மனைகள் - கலைவளர்ச்சி நோக்கில்:

மக்கள் தாம் வாழுமிடங்களில் வசதிக்கேற்பவும் பாது காப்பிற்கேற்பவும் அழகுணர்விற்கேற்பவும் பல உத்திகள் கண்டனர். அவ்வாற்றான் ஓவியக் கலையும் சிற்பக்கலையும் கட்டடக்கலைக்கு உதவிகளாக அமைந்தன. கட்டடக்கலைக்கு உகந்த வகையில் சிற்பநூல் தோன்றியது. மனையடிசாத்திரப்படி கட்டடம் கட்டினால் தனிப்பட்டவர்க்கும் மன்னர்க்கும் நாட்டுக்கும் நலம்பயக்கும் என்பது உணரப்பட்டது.

1. சிலப்பதிகாரம், நாடுகாண் காதை, 8

திருமிகு அரசரின் மாளிகைகளையும் மண்டபங்களையும் மனைநூல்வல்லுநர் நாள் குறித்து, நாழிகை பார்த்து, நேரறி கயிறிட்டுத் திசைகளையும், திசைகளுக்குரிய தெய்வங்களையும் நோக்கி வகுக்கும் நெறி கையாளப்பட்டது. இதனை நக்கீரர்,

"இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கோ
டொருதிறஞ் சாரா வரைநா ளமயத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"1

என வரும் அடிகளால் புலப்படுத்திச் செல்கிறார்.

பண்டைக்கால மாடமாளிகைகளையும் கோயில்களையும் செங்கற்களினால் அமைத்து உலோகத் தகட்டினாலும் சுட்ட ஓடுகளினாலும் சாந்தினாலும் வேய்ந்து சிறப்பாக அமைத்தனர்; மேலும், உயர்ந்த மாடங்களில் அடுக்கு வீடுகளையும் நிலா முற்றங்களையும், பலகணிகளையும் அமைத்து வாழ்வியற் பயன் காண முனைந்தனர். ஓவியக்கலை மாட்சியும் சிற்பக்கலை மாட்சியும் பின்னிப் பிணைந்த பாங்கினில் கட்டடங்கள் அமைந்தமைக்குத் தமிழிலக்கியங்களில் சில சான்றுகள் காண்போம்.

மேற்கூறிய சில செய்யுட் சான்றுகளால் சங்க காலத்திலேயே செங்கல்லையும் சுதையையும் பயன்படுத்தித் தூண்கள், விட்டங்கள், சுவர்கள். திண்ணைகள் முதலியவற்றை அமைக்கவும், வசதிக்கேற்ப வளமனைகளைக் கட்டவும் பயின்றிருந்தனர் என அறியலாம். கட்டட அமைப்பின் பல்வேறு கூறுகளைப் பின்னர் முறைப்படுத்திக் காண்போம். அதற்கு முன்னர்க் **'கட்டடக்கலை'** யின் தன்மைகளையும் கூறுகளையும் மேலும் சிறிது நோக்குவோம்.

உறையுள் என்பதேயன்றிப் பல்வேறு நோக்கங்களில் மக்களுக்காகக் கட்டடங்கள் கட்டப் படவேண்டிய தேவையேற் பட்டது. அந்நிலையில் நாடாளும் அரசர்க்காயினும், ஆன்ம

1. நெடுநல் வாடை, 74-78

நலம் பேணும் தெய்வங்களுக்காயினும், அன்றாட வாழ்வியலை மையமிட்டுச் செல்லும் எளிய மக்களுக்காயினும் தகுதிக்கும் தேவைக்கு மேற்பக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. அஃதாவது, அரண்மனை, கோயில், மடம், அறச்சாலை, மன்றம், இல்லம் ஆகியவை அமைப்பதற்கு மிகவும் சிந்தித்துக் கட்டடக்கலை முறையை மக்கள் மேற்கொள்ளலாயினர். படிப்படியே பரிணாம வளர்ச்சியில் எத்தனையோ கட்டட அமைப்புக்களையும் கூறு களையும் தம் இயல்பாக அழகனுபவ அடிப்படையிலும் பயன் நோக்கிலும் தோற்றுவித்துக் கொண்டே வந்துள்ளனர். இவை யெல்லாம் ஒரு புறமிருக்க, வாழ்வியலில் ஞான நாட்டத்துடன் நோன்பும் தவமுமியற்றுந் துறவியர்களின் தனிமைக் கேற்பவும் கட்டடங்கள் அமையலாயின. அவர்கள் உயிர் நீத்த இடங்களும் மக்களால் கல்லறையமைப்பில் நினைவுச் சின்னங்களாகப் போற்றப்பட்டன. மன்னர்கள் உயிர்நீத்த நிலையில் அவர்களின மரபினர் போற்றி, உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களுக்கு மேல் கட்டடங்களை யெழுப்பிக் கோயில்களாகவும் ஆக்கியுள்ளனர்; அவை பள்ளிப்படைக் கோயில்களாக வரலாற்று ஏடுகளில் கண்டு கொள்ளலாம்.

எகிப்து நாட்டில் பண்டைக் காலத்தில் நாடாண்ட மன்னர் களைப் புதைத்த இடங்களில் பெரிய கல்லறைகள் 'பிரமிடு' (Pyramid) எனும் பெயரில் அமைக்கப்பட்டுள்ளமை உலகம் அறியும். அந்தப் பிரமிடுகளை ஆராய்ந்த அறிவியல் வல்லுனர் கள், அவற்றில் ஒரு வியத்தகு ஆன்மநலசக்தி இருப்பதாகக் கண்டு பிடித்துக்கூறி வருகின்றனர். பிரமிடுகளோடு நம் பள்ளிப் படைக் கோயில்களையும், சித்தர்கள் ஞானியர்கள் அடங்கியுள்ள சமாதிகளையும் இணைத்து ஆராய இடமுள்ளது. இதனை ஆய்வு நோக்கில் நினைவிற் கொள்ளும் குறிப்பாகக் கொள்ளலாம்.

2. தமிழகக் கட்டடக்கலை - ஒரு சிறப்புக் குறிப்பு:

எந்தக் கவின்கலையின் தொன்மைக்கும் அடிப்படையாக நாட்டுப்புறவியற் கூறுகள் ஆராயத்தக்கவையென அறிஞர்கள் கருதுகின்றனர். மேலும், தொன்மைச் சிறப்பினையறிதற்குப்

பழங்குடி மக்களின் வாழ்வியற் கூறுகளையும் ஆராய்வது தேவையானதே என்பர்.

தென்னாட்டுக் கட்டடக்கலை பற்றிச் சிந்தித்த **டாக்டர் மா. இராசமாணிக்கனார்** கருத்து வருமாறு: ''நீலகிரி மலையிலுள்ள **தொதவர்(Todas) கோவில்** பார்க்கத்தக்கது. வட்டமான கற்சுவர் எல்லையை வகுப்பதாகும். இத்துடன் திருநெல்வேலியில் உள்ள **பேய்க் கோவில்கள்** ஒருமைப்படுகின்றன. இக்கோவில்களே பண்டைய திராவிடர் கட்டடட அமைப்பைக் காட்டுவன. தொதவரிடமுள்ள இருவகைக் கோர்வில்களில் **கோபுரம் போல அமைத்துள்ள கோவில்களே பழமை வாய்ந்தவை;** தொலைவிலிருந்து பார்ப்பவர் அதனைக் **கிறித்தவர் கோவிற் கோபுரம்** எனக் கருதுவர். இம்மாதிரியே வடஇந்தியாவில் உள்ள கோவில்கள் அமைந்துள்ளன. இதனால், இந்தியாவில் புகுந்தவுடன் ஆரியர் இவ்வமைப்பைத் திராவிடரிடமிருந்து கடன் பெற்றனர் எனக் கூறலாம்.

தென்னாட்டுக் கட்டடக்கலை (Architecture) தமிழகத்துக்கே உரியது. இன்றுள்ள வானளாவிய கோபுரங்கள், விமானங்கள் இவற்றில் காணப்படும் வேலைப்பாடுகள் அனைத்தும் இந்நாட்டுப் பழைய வேலைப் பாடுகளிலிருந்து வளர்ச்சியுற்றவையே ஆகும். இந்த வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக உண்டானவை. மனிதக் குரங்கின் மண்டைஓட்டிலிருந்து இன்றைய மனிதனது மண்டை ஓடு வளர்ச்சியுற்றாற் போலவே தமிழகக் கட்டடக் கலையும் இயல்பாகவும், அமைதியாகவும், செம்மையாகவும் வளர்ச்சி பெற்று வந்ததாகும். இதன் உண்மையை மாமல்லபுரத்துத் தேர்களைக் கொண்டும், திருப்பாதிரிப் புலியூரில் உள்ள சிவபிரான் கோவில் வேலைப் பாட்டைக் கொண்டும் நன்கறியலாம். ''அவர் 'திருக்கோயில்' இதழில் இதனை எழுதிச்செல்வது மிகவும் சிந்திக்கத் தக்கதாகும். இந்த அடிப்படையில் **கள ஆய்வு** நடத்தினால் கட்டடக்கலைத் தொடர்பில் அரும்பெறற் செய்திகள் நிரம்பக் கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

2.1 மாடங்கள்:

மாடம் என்பது பலபொருளொரு சொல். மாடம் எனின் **உபரிகையுள்ள வீடு** எனப் பொருள் படுவதை,

''மாட மாளிகை கோபுரங் கூடங்கள்''[1]

என வருதலால் உணரலாம்; வீடு எனப் பொருள்படுவதை

''மஞ்சு தோய் மாடமணி உத்தரகோச மங்கை''[2]

என வருதலால் அறியலாம். **மாடக் கோயில்** எனப் பொருள் படுவதை,

'எண்டோளீசற் கெழின்மாட மெழுபதுசெய்து''[3]
என வருதலால் புரிந்து கொள்ளலாம்.

மாடகூடம் என்றாலும் **உபரிகையுள்ள வீடு** எனப் பொருள் படும். இதனை,

''இம் மாட கூடம் .... அளகையினுமிலது''[4]
என வருதலால் தெளியலாம். இனி இலக்கியத்தின் தொன்மை நிலையிலும் வரலாற்று அடிப்படையிலும் மாடம் பற்றி ஒரு சிறிது காண்போம்.

விண்ணகத்தே திரியுந் தேவருலகிற்கு முட்டுக் காலாக ஊன்றி வைத்த ஒரு பற்றுக் கோடு போல **வானுயர் மாடம்** உள்ளது. அது தன்னிடத்துச் சார்த்திய ஏணியால் ஏறுதற்கரிய உச்சியை உடையதாகவும் சாந்தினால் வேயப்பட்டதாகவும் அமைந்துள்ளது; இதனைக் **கடியலூர் உருத்திரங்கண்ணனார்**,

''வான மூன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த **வேயா மாடத்து**''[5]

1. திருமுறை (தேவாரம், 797, 7)
2. திருவாசகம், 16.4
3. திவ்வியப் பிரபந்தம், பெரியதிருமொழி, 6,6,8
4. வில்லி பாரதம், இராச சூயம், 12
5. பெரும்பாணாற்றுப்படை, 346-348

எனப் பாடிச் செல்வதால் அறியலாம். சுண்ணச் சாந்தால் பெரிய மாடங்கள் கட்டப்பட்டிருந்தன என்பதை,

''நற்றார்க் கள்ளின் சோழன் கோயிற்
புதுப்பிறை யன்ன சுதைசெய் மாடத்துப்
பனிக்கயத் தன்ன நீணகர்.........''[1]

என வருஞ் செய்யுட் பகுதியால் காணலாம். சுண்ணாம்புக் காரை அல்லது சுண்ணாம்பு விழுதினைப் பயன்படுத்தத் தொடங்கிய நிலையில் மாடமும் தெற்றி (திண்ணை)யும் இன்ன பிறவும் அமைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக,

''முதிர்வா ரிப்பி முத்த வார்மணற்
கதிர்விடு மணியிற் கண்பொரு மாடத்
திலங்கு வளை மகளிர் தெற்றி யாடும்
விளங்கு சீர் விளங்கில்..........''[2]

என வருஞ் செய்யுட் பகுதி காண்க. இவ்வாறாக மாடங்கள் அமைக்கப் படுதற்கு முன்னோடி எது என ஆராய்ந்த அறிஞர்கள் கூற்றும் ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தக்கது. இந்தத் தொடர்பில் ஒரு குறிப்பினைக் காண்போம்.

''முல்லை நில வாழ்க்கையில் மக்கள் விலங்கினின்றும் தங்களைக் காத்துக் கொள்ள மரத்தின் மீது 'பரண்' அமைத்து வாழ்ந்தனர். இதுவே விளைபுலங்களைக் காத்தற்கமைந்த பரண்களாகத் திகழ்ந்து பின்னர்ப் பல நிலை மாடங்களாக வளர்ந்திருக்கவேண்டும்''[3] என வரும் ஆராய்ச்சிக் குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கதாகும்,

மாடங்கள் அகம் புறம் எனும் அடிப்படையில் பல் வேறு நோக்கங்களுடனும் அமைப்புக்களுடனும் நாட்டில் கட்டப் பட்டிருந்தன. மாடங்களுக்கு ஓவியங்கள் பொலிவூட்டுபவை; எனவே, பவணந்தி முனிவர் ''மாடக்குச்சித்திரம்''[4] எனக் கூறுவாராயினர்.

1. புறநானூறு. 378, 5-7
2. புறநானூறு, 53, 1-4
3. உலகத் தமிழ் மாநாடு விழாமலர், சென்னை, 1968, பக். 18
4. நன்னூல், 55

பூஞ்சோலையின் நடுவே அமைந்த ஓவியங்களெழுதப்பட்ட **சித்திர மண்டபம்** மன்மதன் கோயிலாகவே கருதப்பட்டது; அதனை **'எழுது வினை மாடம்'** என்று **கொங்கு வேளிர்** குறித்திடுதலை,

"........ பூந்தண் கானத்துள்
எழுதுவினை மாடத்து முழுமுத லிழிந்து
தாமகத் திருக்கு மாமணிப் பேரறை
வாயில் சேர்வுற வையம் வைக்கென"[1]

எனவரும் பகுதியால் அறியலாம்.

மாடங்கள் மலை போன்று பெரிய அளவினவாக அமைந்த குறிப்புக்கள் இலக்கியங்கள் பலவற்றில் காணலாம். பொங்கொளிக் கதிரவனது தேர் போல் காணப்படும் அரண்மனை மாடத்தின் சிறப்பினைக் **கொங்கு வேளிர்,**

"சுடுகதி ரணிந்த சூழ்கதிர்ச் செல்வன்
விடுசுடர்ப் பேரொளி விமானம் போலச்
சேணொளி திகழும் மாண்வினை மாடம்"[2]

எனச் சித்திரித்துக் காட்டுதல் காண்க.

பாதுகாப்புப் பொறுப்பேற்ற வீரர்கள் கோட்டையிலே மிக விழிப்பாக யாமந் தோறுங் காவலிருந்து பிறகு துயில் கொள்ளும் மாடமும், பகைவர் பணிந்து திறை கொடுக்க அது கொட்டிக் கிடக்கும் மாடமும், மகளிர் தம் அணிகலன்களை இட்டு வைக்கும் மாடமும், பற்றிப் பட்டியலிட்டுக்காட்டும் **திருத்தக்க தேவர்,**

"கவ்வையங் கருவி சூழ்ந்து கண்படுக்கும் மாடமும்
தெவ்வர் தந்த நீள்நிதி சேர்ந்த செம்பொன் மாடமும்
மவ்வலங் குழலினார் மணிக்கலம்பெய் மாடமும்"[3]

எனக் கூறிச் செல்லுதல் காண்க.

---

1. பெருங்கதை, மகத காண்டம், கோயில் ஒடுங்கியது, 13-16
2. பெருங்கதை. மகத காண்டம், இராசகிரியம் புக்கது. 98-100
3. சிந்தாமணி, நாமகளிலம்பகம், 124

மாசற்ற பொன் மாடங்களின் உச்சியிலே நீல மணிக்குடங்கள் (தூபிகள்) வரிசையாகக் காணப்படுகின்றன; இக்காட்சி, பூத்த வேங்கை மரத்தின் மீது நீலமயில்கள் அமர்ந்திருப்பது போன்று தோன்றுகிறதாம்!

இந்த அழகு அனுபவத்தைச் சீவக சிந்தாமணியில்,

"பாத்தரும் பசும்பொனின் மாடத் துச்சிமேல்
தூத்திரள் மணிக்குடம் நிரைத்துத் தோன்றுவ
பூத்தன வேங்கைமேற் பொலிந்து கார்நினைந்
தேத்தரு மயிற்குழா மிருந்த போன்றவே"[1]

என வருணித்துச் செல்வதால் உணரலாம்.

பொன்னொளி பரப்பீடும் அழகுமணிமாடத்திடையே ஒரு மண்டபத்தை நெருங்கி அழகு மகளிர் பல்லாண்டு பாடுதலை வருணிக்கும் கம்பர் இராமாயணத்தில்,

"ஆடகப்பொற் சுடரிமைக்கு மணிமாடத்
திடையொருமண் டபத்தையண்மிப்
பாடகச்செம் பதுமமலர்ப் பாவையர்பல்
லாண்டிசைப்பப் பைம்பொற்பீடத்(து)"[2]

எனப்பாடிச் செல்லுதலைக் காண்க.

(சிறப்புக்குறிப்பு: கலைஞனர்நிலைகளில் 'மாடமாளிகை கூட கோபுரங்கள்' எனுஞ் சொல்வழக்கிற்கேற்பக் கட்டடக் கூறுகளைக் காணவேண்டுமெனின், தஞ்சையில் மராட்டிய மன்னர்கள் கட்டியுள்ள அரண்மனைக் கட்டடங்களைக் காண்க. இவ்வாற்றான், தமிழரின் கட்டடக்கலை வளர்ச்சிக் கூறுகள் பற்றியும் சிந்திக்க.)

22. கோட்டை, கொத்தளங்கள்:

பொதுவாகச் சிற்றூர்ப்புற மக்களுக்கும், நகர மக்களுக்கும் தம்மையும், தம் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளத் தம் மனைகளிலே வலுவான சுவர்களும், வாசற்கதவுகளும்,

1. சிந்தாமணி, நாமகளிலம்பகம், 58
2. பாலகாண்டம், திருவவதாரப் படலம், 61

தாழ்ப்பாள்களும் இயல்பாகத் தேவைப்படுகின்றன; எனின், சிறப்பாக நிலப்பகுதிகளை ஆளும் மாமன்னர்களுக்கும் குறுநில மன்னர்களுக்கும், அரண்மனைகளும், கோட்டை கொத்தளங்களும் எந்த அளவுக்கு வலிமையுடையனவாகத் தேவைப்படும் என்பது கூறாமலே விளங்கும். மேலும், பாதுகாப்புக்கான படைக்கருவிகளும், அக்கருவிகளைத் தக்க வண்ணம் தொகுத்து வைக்கும் படைக்கலக் கொட்டிலும் தேவையென்பதும் புரியக் கூடியதே.

பண்டைக் காலந்தொட்டே உலகளாவிய நிலையில் மன்னர்கள் அரணமைப்பில் கோட்டை கொத்தளங்கள் கட்டியுள்ளனர்: அவை பகைவர்களிடமிருந்து தம்மையும், தம்மவர்களையும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளும் தற்காப்பு இடங்களாகப் பயன்பட்டன. தரைமீதும், மலைமீதும் கட்டப்பட்ட கோட்டைகள் மன்னர்களுக்கு அரண்மனைகள் போலவே வசிக்குமிடங்களாகவும் பயன்பட்டு வந்துள்ளன.

தமிழ்நாட்டில் அமைந்துள்ள கோட்டைகள் பற்றி ஈண்டுச் சிறிது காண்போம்.

திருக்குறளில் பகைமன்னர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மன்னர்கள், நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என இயற்கையும் செயற்கையுமாய அரண்கள் கொண்டிருந்தமை பற்றிக் காணலாம். நிலத்தில் கோட்டைகளை அரண்களாகக் கொள்ளுகையில் மதில்களின் உயரம், அகலம், திண்மை, அருமை ஆகியவற்றில் நாட்டம் செலுத்த வேண்டிய குறிப்பு உள்ளது. இதனை,

"உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்"[1]

என வள்ளுவர் கூறிச் செல்வதால் உணரலாம். கோட்டையைச் சுற்றி ஆழமான அகழி அமைப்பதால் அதுவே ஒருவகையில் நீரரணாகப் பயன்பட்டு வந்துள்ளது. வலுவான கோட்டையில், பகை மன்னர்களை வீழ்த்தும் ஆயுதங்களும் படையுத்திகளும் பல கையாளப்படும்.

1. குறள். 742.

போர் தொடங்கின அளவிலே பகைவர்களின் ஆற்றல் கெடுப்பவண்ணம், கோட்டையிலுள்ளோர் தம் போர் வீரர் செயல்களால் வீறுபெறும் வகையில் தந்திர உத்திகள் கொண்டிருப்பர்; அத்தகைய மாட்சியுடைய அரணைப் பற்றி வள்ளுவர்,

'முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்''[1]

எனக் கூறிக் காட்டுகிறார். ஈண்டு, வினைமுகமாகிய வினை வேறுபாடுகளைப் பரிமேலழகர் விளக்குகையில், ''பகைவர் தொடங்கிய போரினையறிந்து எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதலென்றிவை முதலாய வினைகளுள் அதனைச் சாய்ப்பன செய்தல்'' என்று மொழிந்து, ''மற்றும் வேண்டு மாட்சியென்றது புறத்தோர் அறியாமற் புகுதல் போதல் செய்தற்குக் கண்ட சுருங்கைவழி முதலாயின உடைமை'' எனக் கூறிச் செல்லுதல் மிகவும் சிந்தித்தற்குரிய அரியகுறிப்பாகும். இதனால் கோட்டையிலிருந்து கொண்டே பகைவர் தம்மைக் காணா வகையில் போரியற்றுதற்குரிய ஆயுதங்களும், உத்திகளும் கோட்டையில் அமைக்கப்பட்டிருந்ததையுணரலாம். சுரங்க வழியும் கோட்டையுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததையும் அறிந்து கொள்ளலாம்.

பண்டைய தமிழ் மன்னர்கள் கட்டிய கோட்டைகள் பலவாக இருந்தன. முறையாகக் கடுங் களப்போர்த் தொடக்கமே பகைவர் நாட்டுக் கோட்டையை முற்றுகையிடுதலும் (உழிஞை), அகத்திலுள்ளோர் கோட்டையைக் காத்தலும் (நொச்சி) எனும் அமைப்பில் இருந்தமையைத் தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பா மாலை முதலிய நூல்கள் கூறும். அக்காலத்தில் கட்டிய கோட்டைகள் அழிந்து பட்டமையால், அவை பற்றிக் கூறும் இலக்கியங்கள் வாயிலாகவே சில செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

கானப் பேரெயில் பற்றி ஐயூர் மூலங்கிழார் வருணிக்கையில், நில எல்லையைக் கடந்து பாதலத்தேயுற்ற ஆழ்ந்த இடத்தையுடைய அகழியையும் உயரத்தால் வானளாவிய மதிலையும் அந்த வானிடத்து நட்சத்திரங்கள் மலர்ந்தாற் போன்ற வடிவு

1. குறள். 749.

டைய ஞாயில்கள் எனும் மதிற்சூட்டுறுப்புக்களையும், வெயிற் கதிர் நுழைதற்கு இயலாத மரஞ்செறிந்த காவற் காட்டினையும். உடையது எனக்குறிப்பிடுகிறார்; இதனை,

''நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
வான்தோய் வன்ன புரிசை விசும்பின்
மீன்பூத் தன்ன வுருவ ஞாயிற்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை''[1]

எனவரும் செய்யுட் பகுதியால் அறியலாம். இக்கோட்டைக்கு அண்மையில் ஏழெயில் எனப் (பெயரிய) பெரிய ஒரு கோட்டையும் இருந்தது. **நல்லியக் கோடனது** நாட்டிலே பெரிய மதில் சூழ்ந்த அரண் இருந்தது. இதனால் அப்பட்டணம் எயிற்பட்டணம் எனப்பெயர் பெற்றது''[2] என்று சு. **வித்தியானந்தன்** எழுதிச் செல்லுங் குறிப்பும் மனங் கொள்ளத்தக்கது.

கோட்டை மதிலைக் குறிப்பதற்குச் சங்க இலக்கியங்களில் **எயில், இஞ்சி, புரிசை** முதலிய சொற்கள் கையாளப்பட்டுள்ளன. இவ்வாற்றான், ''திருநிலை இய பெருமன்னெயில்,''[3] ''வரைபுரை நிவப்பின் வான்தோய் இஞ்சி,''[4] ''விண்ணுற வோங்கிய பல்படைப் புரிசை''[5] முதலிய பாடல் அடிகளைக் காண்க. **நொச்சி** எனும் சொல்லும் கோட்டை மதிலைக் குறித்ததாகக் கூறுவர்.

கோட்டையுறுப்புக்கள் பல இருப்பினும், **ஞாயில்** என்பதே மிகச் சிறந்த உறுப்பாகும். இது படையெடுத்து வரும் எதிரிகள் மீது வீரர்கள் மறைந்து நின்று அம்பு எய்வதற்கு வாய்ப்பாக மிகத் தந்திரமாகக் கட்டப்பட்ட **அறையாகும்**. இதுவே பிற்காலத்தில் **ஏவறை, சூட்டு, குருவித்தலை** எனப் பல பெயர்களால் வழங்கப்பட்டது.

சேரனுக்குப் பகைவர்கள் மிகத்திறமையுடன் கோட்டைக்கண் குறுகிய படிகளையுடைய ஞாயில்களருகே பதுங்கியுள்ளன

1. புறநானூறு, 21, 2-5
2. தமிழர் சால்பு (இரண்டாம் பதிப்பு), பக். 94-95
3. பட்டினப் பாலை, 291
4. மலைபடு கடாம், 92
5. மதுரைக்காஞ்சி, 352

ராம்! அந்த ஞாயிலையும் கடத்தற்கரிய மதிற்காவலையும் **உடைத்தெறிந்து** வெற்றிகொள்கிறானாம் **தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை**! இதனை **அரிசில்கிழார்** எனும் பெரும்புலவர் **'குறுந்தாண் ஞாயில்'** எனும் செய்யுள் தலைப்பில்,

'போர்சுடு கமழ்புகை மாதிர மறைப்ப
மதில்வாய்த் தோன்ற லீயாது தம்பழி யூக்குநர்
குண்டுக ணகழிய குறுந்தாண் ஞாயில்
ஆரெயில் தோட்டி வெளவினை........!'[1]

எனப் பாடிச் செல்லுதல் காண்க.

வானுற உயர்ந்த கோட்டைகளும் வலுவான மதில்களும் மன்னர்களுக்குப் பாதுகாப்பாக அமைந்தன. எனினும், பகைவர்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள எப்பொழுதுமே விழிப்பாக இருந்து வந்துள்ளனர். அவ்வாற்றான் தன் நாட்டை நோக்கிப் பகைவர்கள் படையெடுத்து வருகின்றனரா என்று அறியும் பொருட்டு மிக உயரமான இடங்களில் இருக்கையமைத்துக் **காவற் பார்வையாளரை** நியமித்திருந்தனர். அத்தகைய சிறப்பிற்குரிய உயர்ந்த இருக்கையைப் **பார்வல் இருக்கை** என்றனர். மிக உயர்ந்து பறக்கும் பருந்துகளும் பறந்தடைய முடியாத அத்தகைய இருக்கையை **மாங்குடி மருதனார்**,

''பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறை''[2]

எனக்கூறிக் காட்டுகிறார். பார்வல் இருக்கை பற்றி **இரும்பிடர்த்தலையார்**,

''ஊரில்ல உயவரிய
நீரில்ல நீளிடைய
பார்வ லிருக்கைக் கவிகண் ணோக்கிற்
செந்தொடை பிழையா வன்க ணாடவர்''[3]

எனக் கூறிச் செல்கிறார். இவ்வாறான செய்திகளைக் காண்கையில், பண்டைக் காலத்திலேயே கோட்டைகளையும்

1. பதிற்றுப் பத்து, 71, 10-13
2. மதுரைக் காஞ்சி, 231
3. புறநானூறு, 3, 17-12

பிற கட்டட உறுப்புக்களையும் மிகச் சிந்தித்து வலிய அரண் களாகக் கட்டியிருந்தனர் என்பதை அறியலாம். கட்டடக்கலை எந்த அளவிற்கு வளர்ச்சியுற்றிருந்தது என்பதையும் ஊகித்து அறியலாம்.

மூவேந்தர் நாடாண்ட காலத்தில் அமைத்த கோட்டை கொத்தளங்கள் இக்காலத்தில் அழிந்துபட்டிருப்பினும், **வள்ளல் களும், நாயக்க மன்னர்களும், மகாராட்டிர மன்னர்களும, சேதுபதி களும், புதுக்கோட்டை மன்னர்களும், பாளையக்காரர்களும்** பிறரும் கட்டிய அரண்மனைகள் கோட்டைகள் போன்றவை சில காணக் கிடைக்கின்றன. அவற்றைப் பார்த்தும் தமிழர்களின் **கட்டடக் கலைத்திறனை** ஓரளவு புரிந்து கொள்ளலாம். இந்த நோக்கிலே **அதமன் கோட்டை** (அதியமான் கோட்டை -மரூஉ), **புதுக் கோட்டை, இராமநாதபுரம், தஞ்சாவூர், திருச்சி, செஞ்சி: வேலூர் பாஞ்சாலங்குறிச்சி, திருமெய்யம்** முதலிய இடங்களுக்குச் சென்று பழைய கட்டட அமைப்புக்களைக் காண்க. இடிபாடு களுக்கிடையே சில ஊர்களில் காண்லாகும். கோட்டைக்களையும் கண்டு ஆராய்வது பயன் நல்குவதாகும். எனினும், **புராண நோக்கிலும் வரலாற்று அடிப்படையிலும்** கோட்டை பற்றிக் காணலாகும் சில கருத்துக்களையும் விளக்கங்குறித்துச் சிறிது காண்பது நல்லது. அதன் வாயிலாகக் 'கோட்டை' பற்றிய **காலத்தின் தேவைகளை** ஓரளவு புரிந்து கொள்வோம்.

தாம் புரிந்த கடுந்தவப் பயனாகத் **தாரகாட்சன், வித்யுன் மாலி, கமலாட்சன்** ஆகிய அசுரர்கள் முறையே **பொன், வெள்ளி, இரும்பு** எனும் உலோகங்களாலான மூன்று கோட்டைகளைக் கட்டிக்கொண்டு ஆதிக்கஞ் செலுத்தி வருகின்றனர். அந்தப் பறக்கும் கோட்டைகளிலிருந்து கொண்டு, தேவர்களுக்கும் மக்களுக்கும் இன்னலிழைத்து வருகின்றனர். இவர்களின் கொடு மைகளுக்கு முடிவுகட்டும் வகையில் சிவபெருமான் **திரிபுராந்தக மூர்த்தியாக** எழுந்தருளினார் என்பதைப் புராணச் செய்தியாகக் காணலாம். கோட்டையே ஊர் போன்று பெருமளவில் அமைந் திருந்தமையால் **புரம்** என்றும் கூறினார். இவ்வாற்றான் **திரிபுரம்** என்றுங் குறிப்பிடுவது சமய வழக்காயிற்று.

இஃது ஒரு புறமிருக்க, இக்காலத்திலும் காணக் கிடைக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சில கோட்டைகள் உண்டு.

தமிழ்ப் பெருமக்கள் நேரில் கண்டு வியக்கத்தக்க கோட்டைகளுள் **திண்டுக்கல் கோட்டை** மிகச் சிறப்புடையதாகும்.

செட்டிநாட்டுப் பகுதியில் **கோட்டைமேடு** எனும் ஊர் உள்ளது. அங்கு ஒரு காலத்தில் சிறந்த கோட்டை இருந்திருக்க வேண்டும் என்பர்; காரணம், இடிந்த மதிற்சுவர்களும் உயர்ந்த மேடுகளும் அங்கே சிதைந்து காணப்படுகின்றன. இது பற்றி ஆராய்ந்த தொல்லியலறிஞர் **மா. சந்திரமூர்த்தி,** "கோட்டை மேடு எனும் **பகுதி** சங்ககாலம் தொடங்கி வரலாற்றுச் சிறப்புடையதாக இருந்து வந்துள்ளது. இப்பகுதியில் **நேமராசன், கண்டன் உதயஞ் செய்தான்** ஆகியோரது கோட்டை இருந்ததாகச் செவிவழிச் செய்தி கூறுகிறது. **நேமன்** என்பவன் **பொன்னமராவதியை** ஆண்ட பொன்னன், அயரனுடன் பிறந்தவன் என்றும், 'நேமன் **கோட்டையே** ஏமன் **கோட்டையோ?'** என்று நாட்டார் வியக்கும் வண்ணம் கோட்டை கட்டி ஆண்டான் என்றும், முடிவில் இவன் தன் சகோதரர்களுடனேயே **சௌந்தர பாண்டியனால்** கொல்லப்பட்டான் என்றும் செவிவழிச் செய்தியால் அறிகிறோம்"[1] என்று கூறிச் செல்வதால் நேமன் கோட்டை பற்றி ஓரளவு விளக்கம் கிடைக்கிறது. தர்மபுரி மாவட்டத்துக் கிருஷ்ணகிரிமலை மீதுள்ள **கிருஷ்ணகிரிக் கோட்டை** (18ஆம் நூ.) மைசூர்ப் போர்களில் பெரும்பங்கு வகித்ததை வரலாற்றால் தெரியலாம்.

கோட்டைகள் கோயில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடியனவாக விளங்கியுள்ளன என்பது வரலாற்றால் உணரப்படுஞ் செய்தி. ஆனால், அயலவர்-அயல் நாட்டார்-கட்டிய கோட்டையால் கோயிலுக்குப் பாதகமும் ஏற்பட்டுள்ளது. "முன்னொரு காலத்தில் கி.பி. ஏழு எட்டு நூற்றாண்டுகளில் மிகப்புகழ் பெற்ற தலமாய் விளங்கியது **திருமயிலை கபாலீச்சுவரமாகும். அக்காலத்தில் செயின்ட்தோம் மாதாக் கோயிலுக்கும் பக்கத்திலிருந்து**

1. நேமம் கோயில், பக். 5-6

போர்த்துக்கீசியர் கோட்டை கட்டும்போது இக்கோயிலும் அழிந்து விட்டது. இப்போதுள்ள ஆலயம் சுமார் முன்னூறு ஆண்டுகட்கு முன்பு கட்டப்பட்டது என்கிறார்கள்''[1] என்று எம். ராதாகிருஷ்ணப் பிள்ளை எழுதிச் செல்வது மனங்கொண்டு சிந்திக்கத் தந்கதாகும்.

23. மாளிகைகளிலும், மனைகளிலும் சாளரங்கள்

மக்கள் வசிக்கும் பெருமனைகளாயினும், சிறுமனைகளாயினும் காற்றோட்ட வாய்ப்பினை நன்கு கொண்டிருத்தல் வேண்டும். கட்டடங்களை அமைக்கும் போதே சாளரங்களைத் (Windows) தம் தேவைக்கேற்ப அமைத்து வந்தனர் என்பது இலக்கியக் குறிப்புக்களால் அறியலாம் (சாளரம் என்பதை ஜன்னல் என இக்காலத்தில் அழைப்பர். 'ஜனேலா' எனும் போர்ச்சுகீசியச் சொல்லின் 'மரூஉ', ஜன்னல் என்பது நினைவிற் கொள்ளத்தகும்.)

சிலப்பதிகாரத்தில் வருங்குறிப்பினால் புகார் நகரத்தே சாளரங்கள் அமைக்கப் பெற்றமை குறித்து அறியலாம்.

''மான்கண் காலதர் மாளிகை இடங்களும்''[2]

எனவருவது கொண்டு மானின் கண்ணைப் போன்று வட்டமான பலகணிகள் இருந்தமையைத் தெரிந்து கொள்ளலாம். இதனைக் பெருங்கதையில் 'அரிச்சாலேகம்'[3] எனக் குறிப்பிடுவார் கொங்கு வேளிர்,

இரும்புக் கம்பிகளாலாகிய இக்காலச் சாளரங்கள் போலப் பண்டைக் காலத்திலேயே இருந்தமை பற்றிய குறிப்பினைக் ''கதிர்ச்சாலேகம்''[4] எனப் பெருங்கதை கூறும். முத்துக்கோத்த பொற்கொடிகளாலாகிய சாளரத்தை 'ஆரவள்ளி'[5] எனக் குறித்தலை அதே நூலில் காணலாம்.

கம்பன் தன் காப்பியத்தில் குறித்திடும் சில கருத்துக்கள் அக்காலத் தமிழ்நாட்டின் ஒருவகைப் பிரதிபலிப்பாகவும் அமைந்

1. தென்னாட்டுக் கோயில்கள் (முதல் பாகம்), பக். 48
2. சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை, 8
3. பெருங்கதை, உஞ்சைக் காண்டம், உவந்தவைகாட்டல், 9
4. மேலது, 10
5. மேலது, 9

துள்ளன எனலாம். இவ்வாற்றான், எடுத்துக்காட்டாக, மிதிலையிலுள்ள நிலா முற்றங்களிலிருந்தும் சாளரங்கள் வாயிலாகவும் மகளிர் வெளிப்புறத்தைக் காண்கின்றவர் என வரும் பாடல்களைக் காணலாம்.

"வாளரம் பொருத வேலும் மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடு கிடந்த நீலச் சுருளும் செங்கிடையும் கொண்டு
நீரிருங் களங்கம் நீக்கி நீரைமணி மாடநெற்றிச்
சாளரந் தோறும் தோன்றும் சந்திர உதயங் கண்டார்"[1]
(சந்திர உதயம் - மகளிரின் முகத்தோற்றப் பொலிவு)

மனைகளிலேயே மகளிர் இற்செறிப்பால் முடங்கிக் கிடத்தலின் வெளியுலகைக் காணும் ஆவலில் சாளரம் வாயிலாகவும், வெளியுலகைக் காண்பதென்பது இயல்பேயாகும்.

இக்காலப் படைப்பிலக்கியங்களாகிய கவிதை, சிறுகதை, புதினம் போன்றவற்றுள் மகளிர் சாளரம் (ஜன்னல்) வழியாக வெளியே செல்பவரைப் பார்ப்பதானது, இலக்கிய வோட்டத்திற்குச் சுவை பயப்பதாக அமைந்து விடுதலைக் காணலாம்.

எனவே, சாளரம் அகவொழுகலாற்றில், நெருக்கடியான வேளைகளிலே மன இறுக்கத்தை மாற்றுதற்கு ஒருவகையில் காதலர்க்கு உதவி புரிவதாகவும் உள்ளது எனலாம்.

2. 4. அறைகள்

மக்களின் பல்வேறு நோக்கங்களையும் வசதிகளையும் நிறைவு செய்யும் வகையில் கட்டடங்களில் பல்வகை அளவுகளில் அறைகள் அமைக்கப்பட்டன. இக்காலக் கோயில் கருப்பக்கிருகம் போலவே முற்காலத்தில் மன்னர்களுடைய அரண்மனைகளின் நடுவே கருவில் (கருப்பக்கிருகம்) இடம் பெற்றது, கலை மாட்சியுடன் அஃது அமைந்திருந்ததை நெடுநல்வாடையில் நக்கீரர் வருணித்துச் செல்கிறார்; காண்க.

கோயிலில் மடைப்பள்ளி அமைந்திருத்தல் போல அரண்மனைகளிலும் அறச்சாலைகளிலும் சமையற் கூடங்கள் அமைந்திருந்தன.

1. இராமாயணம், பால. மிதிலைக்காட்சிப்படலம், 13

மன்னர்களுக்கேற்பக் **குளியலறைகளும்** (குளிக்கும் மாடங்களும்) அரண்மனை வளாகத்தில் அமைந்திருந்தன. சோழ மன்னர்கள் தாம் குளிக்கும் நேரத்தில் குளியலறைகளில் இருந்து கொண்டும் தானஞ் செய்துள்ளனர் என்பது கல்வெட்டுக்களால் தெரிய வருகிறது. கங்கை கொண்ட சோழபுரத்து வீட்டினுள்ளால் குளிக்கும் மாடத்திலிருந்து கொண்டு சோழ மன்னன் தானஞ் செய்தருளிய செய்திக் குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

2.5. மன்றங்களும் மண்டபங்களும்:

மானுட வாழ்வின் பரிணாம வளர்ச்சிக்கேற்ப வாழ்வியல் தேவைகளும் மிகுந்து கொண்டே வந்தன. தனிப்பட்டோர் மனைகளில், சிறப்பாக மன்னர்கள் வள்ளல்கள் முதலியோரின் அரண்மனைகளில், பலர் அமர்ந்திருந்து ஆலோசனை புரிதற்கும் சுயம்வரம் நடத்துதற்கும் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் விசாலமான மண்டபங்கள் தேவைப்பட்டன என அறிகிறோம். குறிஞ்சி நில மக்கள் தாம் வாழ்ந்திருந்த **குகை** போன்ற அமைப்பிலே மண்டபங்கள் பலவாக அமையலாயின. அறிஞர்கள் கூடிக் கருத்துக்களை விவாதிக்கும் வகைகளில் **பட்டி மண்டபம்** அமைக்கப்பட்டது. மணிமேகலைக் காப்பியம் வாயிலாகப் **பளிக்கறை மண்டபம்** இருந்தமை பற்றித் தெரிகிறது. பொழுது போக்கிற்காக அமைந்திருந்த விளையாட்டரங்கங்கள், நடனம் நாடகம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதற்கேற்ற கலையரங்குகள் அல்லது கூத்தாட்டவைகள் முற்காலத்தில் மக்களுக்குப் பயன்பட்டன. **நாடக அரங்கு** எவ்வாறு அமைந்திருந்தது என்பது பற்றிச் சிலப்பதிகாரம் **அரங்கேற்று காதை** வாயிலாக அறியலாம். ஆனால், இவற்றிற்கெல்லாம் முன்னோடிகளாகப் பல்வகை **மன்றங்கள்** தமிழ்நாட்டில் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

திணை வாழ்வியலை ஆராய்கையில் குறிஞ்சி நில வாழ்வின் அடுத்த கட்டமாக முல்லை நில வாழ்வு அமைந்திருந்தது என்பர். ஒரு காலத்தில் மக்கள் தம் கருத்துப் பரிமாற்றங்களுக்கும் வழக்குகள் தொடர்பான நீதிக்கும் தமக்குள்ளேயே நடத்துதற்கு வாயிலாக மன்றங்களைக் கண்டனர். தொடக்கக் காலத்தில் மரங்களின் கொழு நிழலிலே அமர்ந்து விவாதித்துள்ளனர்.

அதற்கும் முதற்கட்டமாக மரநிழல்களே அவர்கள் தம் உறையுள்களாகவும் **பயன்பட்டிருக்கும்** எனக் கருதலாம். மரநிழலே அவர்கள் இல்லமாகப் **பயன்பட்டிருக்க** வேண்டும். **வாகை மன்றம், வெள்ளில் மன்றம்** போன்ற மன்றங்கள் இக் கருத்தினை வலியுறுத்துகின்றன. **வெள்ளிடை மன்றம்** விருந்து அயரும் இடமாக இருந்தது; இதனை **மணிமேகலை,** "விருந்தாட்டயரும் வெள்ளிடை மன்றமும்"[1] என்று குறிக்கின்றது. கள்வர்களுக்கு அச்சந்தரும் மன்றமாக இவ் வெள்ளிடை மன்றம் இருந்ததெனச் சிலப்பதிகாரம், "கட்போருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக், கொட்பினல்லது கொடுத்தலீயாது உள்ளுநர்ப் பனிக்கும் **வெள்ளிடை மன்றமும்**"[2] எனக் கூறுகின்றது. மற்றும் இலஞ்சி மன்றம், நெடுங்கல் **மன்றம்,** பாவைமன்றம் இருந்தன. பாவை மன்றம் தோற்பாவைகளைக் கொண்டு நிகழ்த்தும் **கூத்துமன்றமாகவும்** இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. "சிலம்பில், இப் **பாவை மன்றம்** குற்றமிழைப் போரைக் கண்டால் அழுகின்ற பாவை நிறுத்தப்பட்டுள்ள மனறம் எனக் குறிக்கப் படுகின்றது. பிற்காலத்தில் மன்றங்கள் அடிச்சுவட்டில், பொது அவைகள் தோன்றின. கோயில்களும் எழுந்தன"[3] என வரும் ஆராய்ச்சிக் குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கதாகும்.

காவிரிப் பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சோழர்கள் அங்கு அவர்களின் தகுதிக்கேற்ப மாட மாளிகைகளுடன் கூடிய அரண்மனையைக் கட்டியிருந்தனர். அந்த அரண்மனைத் தோட்டத்தில் **வியத்தகு, வேலைப்பாடமைந்த** ஒரு மண்டபம் காட்சியளித்தது. அது **மகதநாட்டு** மணிவேலைகாரர்களாலும், **மகாராட்டிரத்தைச்** சேர்ந்த வினைமாட்சி மிகு பொற்கொல்லர்களாலும், **அவந்தி நாட்டு** வலிய கொல்லராலும், **யவனநாட்டு** மரத்தச்சராலும், **தமிழ்நாட்டுக்** கட்டடக்கலை வல்லுநர்களாலும் திட்டமிடப்பட்டு அவர்கள் தம் கூட்டு ஒத்துழைப்பின் விளைவால் உருவாக்கப்பட்டது. அந்த மண்டபத்தில் திரட்சியான **தூண்கள்** செம்பவளத்தால் இயன்றவை

1. மணிமேகலை சக்கரவாளக்கோட்டம் வரைத்தகாதை. 91
2. இந்திரவிழவூரெடுத்த காதை 115-117
3. உலகத் தமிழ் மாநாடு விழா மலர், சென்னை-1968 பக். 17-18

அவற்றின் போதிகைக் கட்டைகளில் பலவகை இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருந்தன, மண்டபத்தின் ஒவ்வொரு மூலையிலும் (கோணத்திலும்) முத்துமாலைகள் தொங்க விடப்பட்டிருந்தன; மண்டப மேற் கூரை பொன்னால் வேயப் பெற்ற சிறப்பினைக் கொண்டது எனச் **சீத்தலைச்சாத்தனார்** வருணித்துச்செல்கிறார்; இதனை மணிமேகலையில்,

''மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்காற் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமந் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பிற்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து''[1]

எனவரும் அடிகளால் அறியலாம். இந்திரனையொத்த பெரும் பொருட் செல்வமுடைய **மாமன்னனது மண்டபம்** என்பதற்காகப் புலவர், உயர்வு நவிற்சியணியிலும் இவ்வாறு மண்டபச் சிறப்பைப் புகழ்வாராயினார். எனினும், மிகவுயர்ந்த கலைப்படைப்பினை உருவாக்குகையில், ஒவ்வொரு துறையிலும் கைதேர்ந்த கலைவல்லுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் விரிந்த மனப்பான்மை முற்காலத்திலேயே இருந்து வந்துள்ளமை மனங் கொள்ளத்தக்கதாகும்.

இவ்வாறே மணிமேகலைக் காப்பியத்தில் காணலாகும் **பளிக்கறை மண்டபம்** பூம்புகாரில் உவவனத்தில் இருந்தமை பற்றி அறிகிறோம். பளிங்குசெய் மண்டபத்தை வருணிக்கையில்,

''பவழத் தூணத்துப் பசும்பொற் செஞ்சுவர்த்
திகழொளி நித்திலச் சித்திர விதானத்து
விளங்கொளி பரந்த **பளிங்குசெய் மண்டபத்து**''[2]

1. சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக்கியகாதை. 107-115
2. உதயகுமரன் அம்பலம்புக், காதை, 45-47

எனப் புலவர் பாடிச் செல்லும் சிறப்பினையும் அறியலாம். இத்தகைய செய்திகளைக் கொண்டு சோழநாட்டு வளத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமேயொழிய முழுவதும் கற்பனையென ஒதுக்கிவிடுதல் தகாது.

2.5.1. அபிடேக மண்டபம் - சிறப்புக் குறிப்பு:

மாமன்னர்களின் அரண்மனைகளில் குளியலறைகளை அமைப்பது இயல்பாகவே இருந்து வந்தது. அஃது ஒருபுறமிருக்க, அவர்களின் வீரத்தையும், வெற்றியையும் உலகத்தார்க்குப் புலப் படுத்த **வீராபிடேகமும், விசயாபிடேகமும்** செய்துகொள்வதற்குச் சிறப்பான **அபிடேக மண்டபங்கள்** அமைக்கப்பட்டன.

எடுத்துக்காட்டாகச், சுந்தரபாண்டியன் செய்துகொண்ட இந்த அபிடேகங்களைப் பற்றி **வே. மகாதேவன்** எழுதுகையில், "கி பி. 1219 இல் முதல் சோணாட்டுப் படை எடுப்பில் வென்ற சுந்தரபாண்டியன் பழையாறை ஆயிரத்தளி அரண்மனையில் இருந்த **சோழவளவன்** என்னும் மண்டபத்தில் வீராபிடேகம் செய்து கொண்டான்.

'பாடரும் சிறப்பின் பருதி வான்தோய்
ஆடகப் புரிசை ஆயிரத் தளியில்
சோழ வளவன் அபிஷேக மண்டபத்து
வீராபி ஷேகம் செய்து'

என்பது மெய்க்கீர்த்தி.

கி.பி. 1231-இல் இரண்டாவது சோணாட்டுப்படை எடுப்பிலும் வென்று, சுந்தரபாண்டியன் சோழ மாதேவியர் அட்ட மங்கலங்கள் ஏந்தப் பழையாறை அரண்மனையில் **விசயாபிஷேக**ம் செய்துகொண்டான்; எட்டுத் திசைகளிலும் வெற்றித் தூண் களை நாட்டினான்.

'........... வளவன் முதல்தேவி என்று
பேர்பெற்ற வஞ்சி முதலாய பெய்வளையார்
பொங்குபுனற் கும்பம் முதலாகப் புலவர்புகழ்
மங்கலங்கள் எட்டும் மணிக்கை தலத்தேந்திக்

கொடிகொண்ட நெற்றி நிறைகோ புரஞ்சூழ்
முடிகொண்ட சோழபுர மண்டபத்துப் புக்குத்
திசைதொறும் செம்பொன் செயத்தம்பம் நாட்டி
விஜயாபி ஷேகம் பண்ணி அருள்செய்து'

என்பது மெய்க்கீர்த்தி''[1] என்று குறிப்பிட்டுச் செல்வது காண்க. பாண்டியனைப் போன்றே சோழர் முதலியோர் செய்து கொண்ட சிறப்பு அபிடேகங்களுக்குச் சிறப்பான மண்டபங்களும் அக் காலத்தில் இருந்துள்ளன என்பது வரலாற்றால் அறியலாகும்.

2.5.2. மண்டபப் படிக்கட்டுகள் (சோபானங்கள்):

அரண்மனையோ, வளமனையோ, மண்டபமோ அமைக்குங் காலத்துப் படிக்கட்டுகள், அவற்றின் அழகுக்கும் தேவைக்கு மேற்பக் கட்டப்படுவது இயல்பேயாகும். எனினும், இதுபற்றிய குறிப்பும் கல்வெட்டுக்களில் உள்ளது.

பழையாறை வடதளியில் காணலாகும் இரு கல்வெட்டுக் களுள், ''ஒன்று, சகம் 1375 (கி.பி. 1453-இல்) ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதம் பொருவனூரினைச் சேர்ந்த, வாணாதராயன் நரசிங்கதேவன் என்பவன் பழையாறை வடதளி மஹாமண்டபத் தையும் சோபானங்களை (படிக்கட்டுக்களையும்) கட்டியதாகக் கூறும்''[2] என்று குறிப்பிட்டுக் காட்டுகிறார் வே. மகாதேவன்; இதன் வாயிலாகச் சோபானங்கள் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளமை அறியலாகும்.

2.6. அங்கணமும் இடைகழியும்:

அங்கணம் என்பது வீட்டின் நடுவிடம் அல்லது முற்றம் எனப் பொருள்படும். சேறு எனவும் சலதாரை (சாக்கடை) எனவும் பொருள்படும். இவ்வாறு பலவகைகளிலும் பொருள் கொள்ளு மாறு திருவள்ளுவர்,

1. வரலாற்றுப்போக்கில் பழையாறை மாநகர், அன்னபூர்ணா பதிப்பகம் திருப்பனந்தாள், பக். 23, 24.
2. மேலது, பக். 44

"அங்கணத் துளுக்க அமிழ்தற்றால் தங்கணத்த
ரல்லார்முன் கோட்டி கொளல்"[1]

எனப்பாடிச் சென்றுள்ளார். **முற்றம்** என்னும் பொருளைப் **பரிமேலழகரும்**, **சேறு** என்னும் பொருளைப் **பரிதியும்**, **சலதாரை** (சாக்கடை) என்னும் பொருளைக் **காலிங்கரும்** கொண்டுள்ளமை அவரவர் உரையால் காணலாம்.

"ஊரங்கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்"[2] என்று வரும் **நாலடியார்ச்** செய்யுட் பகுதியைக் காண்கையில் சலதாரை யெனவே பொருள் கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறோ வீட்டின்கண் **அங்கணம்** என ஓர் இடப்பகுதி கட்டடக்கலை நோக்கில் சிந்திக்கும் வண்ணம் அமைந்திருந்தது என்பது தெளிவு.

இடைகழி என்பது வீட்டு வாயிலைச் சேர்ந்த உள் நடை அல்லது இரேழி எனப்பொருள்படும். **இடைக்கட்டு** (அற்றவாயில்) எனும் பொருளில் **புறநானூறு**[3], **பட்டினப் பாலை**[4] ஆகிய நூல் களில் வந்துள்ளமை காண்க,

பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் ஆகிய முதலாழ்வார்கள் தெய்வநல இன்கவி பாடும் அருளாளர்கள்; அவர்கள், திருக்கோவலூரில் **மிருகண்டு முனிவரது ஆசிரமத்தின் இடைகழியில்**, மழை நேரத்திலே ஒருவர் பின் ஒருவராக உள்ளே வந்து ஒதுங்கினர். ஒருவர் படுக்கவும், இருவர் அமரவும். மூவர் நிற்கவும் கூடிய நிலையில் மிகவும் நெருக்கங்கொண்ட சின்ன இடம் அது. அங்கே யாரோ நான்காமவராக ஒருவர் உள்ளே நுழைந்திருப்பதாக அவர்கள் தெரிந்துகொண்டனர். பிறகு, **நான்காமவர் இறைவனே** என்பதைப் புரிந்துகொண்டதும் பக்திப் பெருக்கால் மூவரும் திருவந்தாதி பாடியருளினர் என்பது வரலாறு. **பொய்கையாழ்வார்,**

"நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
பாயும் **பனிமறுத்த பண்பாளா** - வாசல்
கடைகழியா வுள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி இனி"[5]

1. குறள், 720
2. நாலடியார், நல்லினஞ்சேர்தல், 5
3. புறநானூறு, 175, 6-10
4. பட்டினப்பாலை, 144
5. முதல் திருவந்தாதி, 86

எனப் பாடிச்செல்கையில் '**இடைகழி**' எனவருதல் காண்க. இந்த இடைகழிச் சிறப்பினை நன்குணர்ந்த **வேதாந்த தேசிகரும்,**

''பாட்டுக்குரிய பழையவர்
மூவரைப் பண்டொருகால்
மாட்டுக் கருள் தரு மாயன்
மலிந்து வருத்துதலால்
நாட்டுக் கிருள்செக நான்மறை
அந்தி நடைவிளங்க
வீட்டுக் **கிடைகழிக்** கேவெளி
காட்டுமிம் மெய்விளக்கே''

எனப் போற்றிச்செல்கையிலும் இடைகழியைக் குறித்திடுதல் காண்க. '**இடைகழி**' என்றால் வீட்டுக்கட்டடத்தின் ஒருபகுதி யாக விளங்கியுள்ளது; '**இடைக்கழி**' என ஒற்று மிகுந்திருந்தால், **ஒரு நாட்டையோ ஓர் ஊரையோ அது** குறிக்கும். சங்ககாலப் புலவரொருவர், **இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் (சிறுபாணாற்றுப்படை ஆசிரியர்)** எனவருதலையும். திருக் கடலூர் அருகே **திருஇடைக்கழி** எனும் திருத்தலம் அமைந் துள்ளதையும் எடுத்துக்காட்டாகக் காண்க.

2. 7. சைத்தியமும் விகாரையும் நிசீதிகையும்:

பௌத்த மதத்தவர் வழிபடுதற்கு வாய்ப்பாகக் கட்டிய குடைவரை அமைப்பான கட்டடத்தைச் **சைத்தியம்** என்பர். பௌத்தத் துறவிகள் - பிட்சுக்கள் - தங்கி வசித்தற்கு வாய்ப் பாக அமைந்த கட்டடம் **விகாரை**யாகும்; மேலும், இஃது ஒரு குன்றில் குடையப்பட்ட தனியறையாகவோ மண்டபத்துள் வெட்டப்பட்ட பல தனியறைகளாகவோ இருக்கும். தொடக்கக் காலத்தில் மரக்கட்டடங்களைப் போல விகாரங்கள் அமைக் கப்பட்டன. இக்காலத்தில் இந்துக்கள் தாம் வழிபடுதற்கெனக் கோயிலையும், துறவி தங்குவதற்கென மடத்தையும் அமைத்துக் கொள்வது போல, **அருகருகே** பௌத்தர்கள் **சைத்தியத்தையும் விகாரையையும்** அமைத்துக் கொண்டிருந்தனர். பொது மக்களும் வந்து வழிபடும் நோக்கத்தில் சைத்தியங்களை ஓரளவு விரிவாகக் கட்டலாயினர். சைத்தியங்கள் பெரும்பாலும் மலைப்பாங்கான

இடங்களில் குகைக் கோயில்களாகக் கட்டமுற்பட்டதே தொடக்கக் கால முயற்சியாகும். பிறகு, படிநிலை வளர்ச்சிகளைக் கண்டு, சைத்தியங்கள் நீண்ட மண்டபங்களையும் மண்டபக் கடைசியில் தூபியையும் இணைத்துக் கொண்டன.

சைத்தியங்களின் அமைப்பிற்குப் பின்புலக் காரணங்களும் உண்டு. "பண்டைக் காலத்தில் அரசர் அல்லது அறவோர் இறந்தபின் அவருடைய அஸ்திகளின் மீது மண்ணைக் குவிப்பது வழக்கம். அந்தக் குவியல் வடமொழியில் சைத்தியம் எனப்படும். பின்னர் இவ்வழக்கம் பௌத்தர்களிடமும் ஜைனர் (சமணர்) களிடமும் மிகுதியாக வழங்கிவந்தது. மண்குவியலுக்குப் பதிலாகக் கல்லால் அல்லது செங்கல்லால் கும்மட்டம் போன்ற கட்டடம் எழுப்பப்பட்டது. சைத்தியம் என்பது ஒரு மண்டபத்தினுள் புனிதப் பொருள் மீதுள்ள கட்டடத்தையும், ஸ்தூபம் என்பது திறந்த வெளியிலுள்ள கோபுரத்தையும் குறிக்கலாயின. சைத்தியத்தினுள் தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருளால் செய்த பேழையில் இறந்தவர்களின் அஸ்தி, பல், நகம், போன்றவற்றை வைப்பர். பிற்காலத்தில் இப்பேழையில்லாமலும் சைத்தியங்கள் கட்டப்பட்டன"[1] என வருங் குறிப்பால் சைத்தியங்கள் அமைந்ததன் நோக்கம் புலனாகும்.

புத்தரையே கடவுள் நிலைக்கு உயர்த்திக் கொண்டதால் பௌத்தர்கள் கடவுள் என்ற தனிப்பட்ட தத்துவத்தையோ தெய்வத் தொடர்பான வேள்வி முதலிய கிரியைகளையோ நம்பவுமில்லை, ஏற்றுக்கொள்ளவுமில்லை. எனினும், புத்தரின் மானுட உருவையும், அவரது பரிநிர்வாணச் சின்னமான தூபியையும் மிக மேம்பட்டவையாகக் கருதிப் பௌத்தர்கள் வழிபடலாயினர். கால வளர்ச்சியில் புனிதச் சின்னங்களை முறையாகப் பாதுகாக்கும் நோக்கத்தில் அவற்றின் மேல் மரங்களாலும் ஓலைகளாலும் கூரை வேய்ந்தும், பிறகு கூரைக் கட்டடம் அமைத்தும் சைத்தியம் என ஒரு வகைக் கட்டட அமைப்பினை உருவாக்கினர். இவ்வாறான வளர்ச்சியிலே சைத்தியத்தில் இருபிரிவுகள்

1. கலைக் களஞ்சியம், தொகுதி ஐந்து. பக். 229

அமைந்தன. அவை; 1. நீண்ட சதுர முன் மண்டபம், 2. அரைவட்டவடிவப் பிற்பகுதி.

முன் மண்டபத்தில் நீளவாட்டில் இரண்டு வரிசைத் தூண்கள் இருக்கும். இவை மண்டபத்தை மூன்று பிரிவுகளாகக் காட்டும். இவற்றுள் வழிபாடு நடத்தும் நடுப்பகுதி மிகச் சிறப்புடையது. திருச்சுற்றாக இரு பக்கத்திலும் அமைத்த பகுதிகள் (aisles) அரைவட்டப் பிற்பகுதியின் நடுவே கல்லில் செதுக்கப்பட்ட தூபி இருக்கும்.

இத்தகைய அமைப்பினால் மக்களுள் ஒரு சாரார் நடுப் பகுதியில் அமர்ந்து முறையாக வழிபடவும், பிறர் திருச்சுற்றில், தூண்களின் வெளிப்புறத்தில் (தூபிக்கும் சுவருக்குமிடையேயான பகுதியில்) வலம் வந்து வழிபடவும் வாய்ப்பாக இருக்கும். சைத்தியங்களின் உட்புறத்தே பௌத்தர்கள் அமைதியாகத் தியானிக்கக் கூடிய சூழல் அமைந்திருக்கும்.

''சைத்தியங்களின் உட்புறத்தைப் போலவே, இவற்றின் முகப்பும் (facade) கலையழகு மிக்கவை: மண்டபத்து மூன்று நீட்டு வசப்பகுதிகளுக்கும் தனித் தனியாக மூன்று நுழைவாயில் களும், இவற்றின் மேற்பகுதிகளில் அழகான வளைவுகளும் அமைக்கப்படும். இவ்வளைவுகளைச் சைத்தியச் சாளரம் (Chaitya window) என்பர். இதன் வழியே நீண்ட வரைக்கு வெளிச்சம் வருகிறது. இச்சைத்தியச் சாளரம் இந்தியக் கட்டடக்கலையில் ஓர் அலங்கார அமைப்பாகத் தமிழகக் கோயில் கபோதங்களில் (Cornice) கூடு என்ற அமைப்பினைக் காண்க''[1] எனத்தரும் விளக்கம் கலை நோக்கில் சிந்திப்பதாகும்.

பிற்காலத்தில் **சைத்திய முகப்பானது** ஒரு கலையழகுச் சாதனமாக மாறித் தென்னிந்தியக் கோயில் கபோதத்தில் **கூடு** என்ற அமைப்பாகப் பெயர்கொண்டது என்பர்; கட்டடக்கலை நோக்கில் **இந்துமதக் கோயிலில் பௌத்தக்கட்டடக்கலையின் தாக்கம்** எனலாம். சமண முனிவர்கள் மிகக் கடுந்தவம் மேற் கொள்ளும் இயல்பினர். அவர்களுள் சிலர் உண்ணா நோன்பிருந்து

1 கலைக் களஞ்சியம், தொகுதி ஐந்து

உயிர் துறப்பர். அவ்வாறு, உயிர் நீத்த இடத்தில் மக்கள் நினைவுச் சின்னம் எழுப்பிப் பெருமைப் படுத்தியதை வரலாற்று ஏடுகளில் காணலாம். திருநாதர் குன்றில் காணலாகும் கல்வெட்டு ஒன்றில், ''ஐம்பத்தேழு சைனந் நோற்ற சந்திரசந்தி ஆசிரிகர் நிசீதிகை''[1] என்று வாசகம் உள்ளது. இதனால், நிசீதிகை என்பது சமண முனிவர் உயிர் துறந்த இடத்தில் எழுப்பப்படும் நினைவுச் சின்ன மென அறியலாம்.

சமணர்க்காக அமைந்த பலவகைக் கட்டட அமைப்புக்களை மதுரை மாவட்டத்தில் பல இடங்களில் காணலாம்; கழுகுமலை யிலுள்ள சமணர் கோயில் புகழ்வாய்ந்ததாகும்.

சென்னை நகரிலும் சென்னையையடுத்த புழல் முதலிய ஊர் களிலும் சமணக் கோயில்கள் உள்ளன. சிறப்பாகத் திருவல்லிக் கேணி, பி.வி. நாயக்கர் தெருவிலுள்ள சமணர் கோயில், சமணக் கோட்பாட்டின் முதல் தீர்த்தங்கரரான ஆதிநாதருக்காக அமைந்த, மிகவும் கண்டு போற்றத்தக்க ஆலயமாகும்.

தர்மபுரி பண்டைக் காலத்தில் சமண மத மையமாக விளங் கியுள்ளது. இங்கு மல்லிகார்ச்சுனன் ஆலயம் சிறப்பு மிகு கோயி லாகும். அதமன் கோட்டை (அதிகமான் கோட்டை) எனும் ஊரில் இரு சமணக் கோயில்கள் உள்ளன.

2.8. நிலவறை (சுரங்க) அமைப்பு:

அரசியல் காரணத்திற்காக, மன்னர்கள் தம் ஆட்சியெல்லை யில் சுரங்கப்பாதை அமைப்பது உண்டு பல்லாண்டுகளாகவே இந்த உத்தியை மன்னர்கள் கையாண்டு வந்ததற்குச் சான்றுகள் பல உள்ளன. எடுத்துக்காட்டாகத் தஞ்சாவூர் அரண்மனையில் நிலவறையமைப்பைக் காண்க.

நிலவறையின் சிறப்பை மக்கள் உணர்ந்திடும் வகையில், மனோன்மணியம் நாடகத்தில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை கூறிச் செல்வதைக் காணலாம். இவ்வாறு நிலவறை அல்லது சுருங்கைவழி அமைப்பு தற்காப்பு அரசியலுக்கு மிகவும்

1 திருநாதர் குன்றுக் கல்வெட்டு (கி.பி 3-ஆம் நூற்றாண்டு)

தேவைப்பட்டது. இதனைப் பரிமேலழகர் எழுதும் (குறள். 749) உரை விளக்கத்தால் காண்க. அரசியலே மட்டுமின்றி, அருள் விளக்கமாகிய ஆலயத்திற்கும் காப்பு நோக்கில் சுரங்க அமைப்பு மிகவும் தேவைப்பட்டது. இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

''நகரத்தார் கோயிலான **மாத்தூர்க் கோயிலில்** அர்த்த மண்டபத்தின் கீழ்ப்பகுதியில் **நிலவறை அமைப்பு** காணப்படுகிறது. போர்க்காலங்களிலும் பகைவர்கள் ஆலயத்தை நோக்கிப்படை யெடுத்து வருங்காலங்களிலும் ஆலயத்திலுள்ள உற்சவ விக்கிரகங் கள், மற்றும் விலையுயர்ந்த ஆபரணங்களைப் பாதுகாப்பதற்கு ஏற்றவாறு திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது''[1] என்று தொல் லியல் அறிஞர் **மா. சந்திரமூர்த்தி** கூறிச் சென்றுள்ளமை காண்க.

பல்லவ மன்னன் **இராசசிம்மன்** கட்டிய **காஞ்சிக் கயிலாச நாதர் கோயில்** சிறப்புமிக்கது. ''காஞ்சிக் கைலாசநாதர் கோயில் கருவறையில் சூழும் **நிலவறை** (சுரங்கப்பாதை) ஒன்று உள்ளது. குறுகிய வாயிலில் புகுந்து சுற்றிக் குறுகிய வாயிலில் வெளிவரலாம். இது முக்திவாசலாகும்''[2] என வருங்குறிப்பினைக் காண்க.

2.9. பண்டகச் சாலைகள்:

உள்நாட்டு வாணிபமாயினும் வெளிநாட்டு வாணிபமா யினும் பண்டங்களைத் தொகுத்துக் கெடாதவாறு சேமிப்பதற் குத் தகுந்த கட்டடங்கள் தேவையே. அத்தகைய கட்டடங் களே பண்டகச் சாலைகளாக வழக்கில் இருந்தன. அவற் றுள்ளும் **கடற்கரைப் பட்டினங்களில் பண்டகச் சாலைகள் இருந் தமை** பற்றி இலக்கியக் குறிப்புக்கள் உள்ளன. இறக்குமதியான பண்டங்கள் மலைபோல் குவிந்திருந்தமை பற்றியும், அவற்றுக்குச் சுங்கத்தீர்வை செலுத்தியதன் அடையாளமாகப் **புலி முத்திரை** இடப்பட்டமை பற்றியும் **பட்டினப்பாலை, சிலப்பதிகாரம்** ஆகிய இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். எடுத்துக்காட்டாக,

1. மாத்தூர்க் கோயில், பக். 29
2. காஞ்சி காமாட்சி, பக். 72.

"நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர் பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலி பொறித்துப் புறம் போக்கி
மதி நிறைந்த மலிமண்டபம்"[1]

எனவருங் குறிப்பினைக் காண்க. பண்டங்களின் பெருக்கத்தை மனத்துட் கொண்டு எவ்வாறான அமைப்பில் பண்டகச்சாலைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டன என்பது புரியவில்லை. எனினும், மக்களின் சேமிப்புணர்வுப் பண்பாடு இதனால் அறியலாகும்.

2,10. கலங்கரை விளக்கம்:

கடற்கரையொட்டிய பகுதியில் கடலில் செல்லும் மரக் கலங்களை இரவிலே ஒளிகாட்டி **கரைவதே** (அழைப்பதே) போல் அமைந்த உயரமான கட்டட அமைப்பினைக் **கலங்கரை விளக்கம்** என்றனர். சங்க காலத்திலேயே இத்தகையவொரு கட்டட அமைப்பு இருந்ததைக் கொண்டு, தமிழ்நாடு எத்தகைய முறையில் சிந்தனை வளப்பமும் கட்டடக்கலை உத்தியும் கொண்டு விளங்கியது என்பது புலனாகும்.

தமிழ்நாடு நெடிய கடற்கரையை இயற்கையன்னையின் நன்கொடையாகப் பெற்றுள்ள நாடாகும். கடற்கரை வசதி நன்கு அமைந்திருந்தமையால் பண்டுதொட்டே தமிழ்ப் பெரு மக்கள் கடல் வாணிபம் செய்து வந்துள்ளனர். பாய்மரப் பெருங்கலங்களும் அயல்நாடுகளுக்குச் சென்று ஏற்றுமதி இறக்கு மதியில் ஈடுபட்டிருந்தன. அயல்நாட்டினரும் தமிழ்நாட்டுக்கு மரங்கலங்களில் வாணிடத்தின் பொருட்டு வந்து திரும்பினர். எனவே, நடுக்கடலில் செல்லும் மரக்கலங்களுக்கு உதவியாகக் கரையில் கலங்கரைவிளக்கம் மிக உயரமான இடத்திலிருந்து வெளிச்சங் காட்டப் பயன்பட்டுள்ளது.

1. பட்டினப் பாலை, 129-136.

(உலகியலில் கலங்கரை விளக்கம் பயன்படுகிறதெனினும், ஆன்மநல நோக்கிலும் இஃது உவமநலத்துடன் கூறப் பயன் படுகிறது. ஞானாசாரியாரைக் **'கலங்கரை விளக்கம்'** என அடியவர்கள் மதித்துப் போற்றுதலை நடைமுறை வழக்கில் காணலாம்.)

இனி, இந்தக் கலங்கரை விளக்கத்தின் வளர்ச்சி நிலைகளைச் சிறிது காண்போம்.

இரவில் ஆழமான கடலிற் செல்லுங் கப்பல்களுக்குத் துணை யாக அமைந்த இத்தகைய கலங்கரை விளக்கங்களைக் குறிப்பிடு கையில்,

''இரவின் மாட்டிய விலங்குசுடர் நெகிழி
உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையும்
துறைபிறக் கொழியப் போகி''[1]

என்று **கடியலூர் உருத்திரங் கண்ணனார்** எழுதிச் செல்வது காண்க. பண்டைக் காலத்துக் கலங்கரை விளக்கம் இக்காலத்தில் கிட்டாவிடினும், எவ்வாறோ உயரமாகக் கட்டப்பட்ட ஒரு வகைக் கோபுரம் போன்ற அமைப்புடன் அக்காலத்தில் அஃது அமையப் பெற்றிருக்கலாம்.

மாமல்லபுரத்தில் ஒரு மேடான பாறைப் பகுதியில் கட்டப் பட்ட கலங்கரை விளக்கம் இக்காலத்தது; எனினும், இது போன்ற அமைப்பில் முற்காலத்தில் உயரமான வெளிச்சத் தம்பமாகக் கலங்கரை விளக்கம் இருந்திருக்கலாம். இத்தகைய கட்டட அமைப்பினை முன்னோடியாகக் கொண்டே **சென்னை, பாண்டிச்சேரி, தூத்துக்குடி** போன்ற கடற்கரைச் சிறப்புடைய வணிகத் தலங்களில் கலங்கரைவிளக்கங்கள் அமைக்கப்பட்டிருக்கக் கூடும். முன்பு எண்ணெயால் திரியிட்டு ஏற்றப்பட்ட விளக் கொளிக்குப் பதிலாக, இக்காலத்தில் மின் விளக்கொளி பயன் பட்டு வருகிறது.

5. கட்டடக்கலைக் கூறுகள் - கற்பனைக்கிடையே காண வேண்டியவை:

வரலாறு என்பது உண்மைப் பொருள்களையும், நடந்த நிகழ்ச்சிகளையும் ஒரு சிறிதும் கற்பனை கலவாமல், கால

1. பெரும்பாணாற்றுப்படை, 349-351

அடிப்படையில் வரிசைப்படுத்தும் ஒழுங்கு முயற்சி ஆகும். இலக்கியங்களிலும், கல்வெட்டு மெய்க்கீர்த்திகளிலும், செப்புப் பட்டயங்களிலும், மரபான செவிவழிச் செய்திகளிலும், கற்பனை ஓரளவு கலந்து விடுவதால், வரலாறு எழுதுவதில் சிற்சில சிக்கல்கள் ஏற்படலாயின; எனினும், அவற்றைப் பெரிதும் ஆராய்ந்து, சீர் தூக்கி உண்மை காணும் முயற்சியில் நம் வரலாற்று அறிஞர்கள் ஈடுபட்டு, வெற்றி கண்டு வருகின்றனர். கட்டடக்கலைக் கூறுகளில் தென்படுஞ் சில சிக்கல்களையும் அவற்றைத் தீர்க்குஞ் சில உத்திகளையும் காண்போம்.

சுந்தரசோழன் காஞ்சிபுரத்திலுள்ள **பொன்மாளிகையில்** தங்கியிருந்தபோது உயிர்நீத்தான் என்பது வரலாறு. இதனால் அவன் சோழர் வரலாற்றிலே **"பொன்மாளிகை துஞ்சிய தேவர்"**. என அழைக்கப்படுவானாயினான். **பொன்மாளிகை** என இவ்வாறு வருவது கொண்டு **பொன்னாலான மாளிகை** எனக் கொள்ளுதல் வரலாற்றுக்கு உகந்ததாகுமா எனச் சிந்தித்தல் வேண்டும்.

பொன்மாளிகைகள் என்பவை, வேலைப்பாடு மிக்க கருங்கல் மேடையின்மேல் மரக்கட்டிடங்களை எழுப்பிப் **பொன்தகடு** களால் வேயப்பட்ட அரச **மாளிகை**களாக இருக்கலாம் என்று இயைபாகக் கூறும் கட்டடக்கலை வல்லுநர்களின்[1] கருத்தை ஈண்டு ஆராய்ச்சி நோக்கில் சிந்திக்கலாம். அன்றியும், **பொன் மூலாம் பூசப்புட்ட** சில ஓடுகளை அரச மாளிகை மேல் வேய்ந்த காரணத்தினால் **பொன்மாளிகை** எனக் குறிப்பிட்டிருக்கலாம். இந்தக் கருத்துக்கு ஏற்புடைய வகையில் **பொன்னம்பலத்துக்கு** (தில்லை நடராசர் கனகசபைக்கு)ப் பொன் வேய்ந்த **முதற் பராந்தகன்** முதலிய சோழர்களின் திருப்பணியை நினைவு கூரலாம். அஃதாவது பொன்மூலாம் பூசிய செப்பேடுகளையே பொன்னோடு களாக வேய்ந்து பொன்னம்பலமாக்கிய திருப்பணியை நினைவிற் கொள்ளலாம்.

காப்பியங்களிலும், **பிள்ளைத்தமிழ்** போன்ற சிற்றிலக்கியங் களிலும் கற்பனை நயத்திற்காகக் கட்டடக்கலைக் கூறுகள் உயர்வு நவிற்சியுடன் புனைந்துரைக்கப்பட்டிருத்தலைக் காண

1. ஹெர்மன் கோட்ஸ் முதலியோர்

லாம். அவற்றையெல்லாம் கற்குங்கால் சுவைபடத் தோன்றும்; எனினும், உண்மைப் புலப்பாடன்று எனத் தெளிதல் நல்லது.

4. அயலவர் ஆட்சியும் தமிழகக் கட்டடக்கலையும்:

சங்கம் மருவிய காலத்தில் ஆரியக் கலாசாரமும் தமிழ்ப்பண்பாடும் பின்னிப் பிணைந்த நிலையில், எல்லாக் கவின் கலைகளிலும் ஒருவகைக் கலப்புப் பண்பாடு உருவாகியது; சமயப் பண்பாட்டில் தோய்ந்த உளத்தினராய்த் தமிழ்ப்பெருமக்களும் புதிய கலப்புப் பண்பாட்டினை ஏற்றுக் கொண்டனர்; இது காலத்தின் கட்டாயம் என்பர்.

கட்டடக் கலையைப் பொறுத்தவரையில் பல்வகைத்திறமையினரும் ஒத்துழைப்பினை நல்கினர். சிலப்பதிகாரக் காலத்தில் கண்ணகிக்குப் பத்தினிக்கோட்டம் அமைக்கையில் பலரும் பங்கு கொண்டதைப்,

''பொன்னணி புதுநிழல் பொருந்திய நங்கையை
அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று
மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்''[1]

எனவரும் அடிகளால் தெரிந்து கொள்ளலாம்.

மணிமேகலைக் காலத்தில் பூம்புகார் நகரிலே சோழமன்னர்க்கென அரண்மனை இருந்துள்ளது. அந்த அரண்மனைத் தோட்டத்தில் வியத்தகு வேலைப்பாடமைந்த மண்டபம் பலரின் நாட்டத்தைக் கவர்ந்துள்ளது. அது கைதேர்ந்த கலைவல்லுநர்களால் திறமையுடன் அமைக்கப்பட்டிருந்தது என்பதை முன்னரே கண்டோம்.

இவ்வாறான கட்டட அமைப்பைக் காண்கையில், அக்காலத்து மன்னரும் மக்களும், தம் நாட்டிலேயன்றிப் பிற நாடுகளிலும் தொடர்பு கொண்டவர்களாய்ச் சிறந்த கலைவல்லுநர்களைத் தம் கலைப்படைப்பில் துணைகொண்டனர் என்பது

தெரியவரும். சிறப்புடைய தொழில் திறமையுடையவர்களைத் தம் கலையமைப்பிற்குப் பயன்படுத்திக் கொள்ளும் விரிந்த மனப்பான்மை ஒரு புறமிருப்பினும், தமிழர்கள் தமக்கெனத் தேர்ந்த தனித்தன்மையைக் கலையுலகில் படிப்படியே இழந்து வரலாயினர்; இது வரலாற்றில் காணலாகும் உண்மையாகும்.

தமிழ்நாடு, பல்லவர், இசுலாமியர், விசயநகர மாமன்னர், நாயக்கமன்னர், மராட்டியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோர் ஆட்சியில் கலையுலகில் பல மாற்றங்களைப் பெற்றது. இயற்கையின் நியதியிலே, பரிணாம அடிப்படையிலே எந்தத் துறையிலும் தவிர்க்க முடியாத சூழலில் மாற்றங்கள் ஏற்படத் தான் செய்யும்! நடைபெறும் மாற்றங்கள் நாட்டு மக்களின் பண்பாட்டு மேன்மைக்கு ஊறுதேடாமலிருப்பின் நல்லது; அது வரவேற்கக் கூடியதுமாகும்.

ஆலய அமைப்பில் அயலவராகிய பல்லவராட்சியிலும், விசயநகர மன்னராட்சியிலும், நாயக்க மன்னராட்சியிலும் பெற்ற கட்டடக்கலை, சிற்பக்கலை முன்னேற்றங்கள் தமிழ் நாட்டுக்குப் பெரும் புகழைத் தேடித்தந்துள்ளன; எனவே வரவேற்பதில் தீங்கில்லை. ஆனால், அயல்நாட்டவராகிய ஆங்கிலேயராட்சியிலும் பிரெஞ்சுக்காரராட்சியிலும் கண்ட கட்டடக்கலை, சிற்பக் கலை மாற்றங்களுள் சில வரவேற்கக் கூடியனவாக இல்லை. ஈண்டுக் கட்டடக்கலை கொண்டுள்ள பின்னடைவுகள் குறித்துச் சிறிது காண்போம்.

கோயில்களைப் பொறுத்தவரையில் ஆகமவிதிகள் தமிழ்ப் பண்பாட்டினைச் சீர்குலைக்காதவாறு பெரும்பாலும் காத்து வருகின்றன. எனினும், சிலர் கோயில்களையும் சமயத்திருமடங்களையும் மேலைநாட்டுப் பாணியில் அமைக்க முயன்று வருகின்றனர்; இது தவிர்க்க வேண்டியதாகும்.

மக்கள் வாழ்கின்ற வளமனைகளைப் பார்த்தால் படிப்படியே தமிழ்க் கட்டக்கலைக் கூறுகள் மறைந்து வருவதையும், பாரசீக, ஐரோப்பிய, அமெரிக்கக்கட்டடக்கலைக் கூறுகள் ஆதிக்கம் செலுத்திவருவதையும் காணலாம். பிறநாட்டுச்

கட்டடக்கலைக் கூறுகளில் காணலாகும் நல்லனவற்றைப் புறக்கணிக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் தமிழ்க்கட்டடக் கலையிலே பண்பாட்டுடனும். கலைவண்ணத்துடனும் கூடிய சில அழகுக்கூறுகளை விட்டுவிடக் கூடாது என்பதுதான் சிந்திக்க வேண்டியதாகும். இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

முற்காலக் கட்டடங்களை நோக்கினால் உட்கூட்டின் நெடிய தோற்றப் பொலிவு தெரியும். அவற்றுள் பலகணிகள் (சன்னல்கள்) பலவாக அமைந்து, வசதியான காற்றோட்டம் இருக்கும். இக் காலத்தில் மின்விசிறிகளும் குளிர்சாதன வசதிகளும் வந்து விட்ட நிலையில், பலகணிகள் குறைந்த எண்ணிக்கையில் பயன் படுகின்றன. காரைக்குடியில் அமைந்துள்ள **ஆயிரம் சன்னல் வீடு** போல இனிமேல் தமிழ்நாட்டில் எங்கும் காண இயலாது.

செட்டிநாட்டுப் பகுதியில் **முகப்புநிலையும்** (அருகாலும்) **வாசற்கதவுகளும்** சிற்றுளி வேலைப்பாட்டுடன் கூடிய வியத்தகு கலைப்படைப்பாக இருக்கும். **பூனே** (பூனா) முதலிய பெரு நகரங்களிலுள்ள கண் (பொருட்) காட்சிச்சாலைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பழைய வேலைப்பாடுள்ள தமிழ் நாட்டு அருகாலையும் கதவுகளையும் பார்க்கிறவேளையில், தமிழ்ப் பண்பாட்டுப் படைப்புக்கள் இனிமேல் இவ்வாறு தோன்ற வழி யில்லை என்ற முடிவுக்கு வர நேரலாம்.

வீட்டு அருகாலின் அழகை மேம்படுத்தும் வகையில் அருகாலின் இருபக்கங்களிலும் விளக்கு வைக்கும் அழகிய மாடங்கள் ஒவ்வொரு வீட்டிலும் முன்காலத்தில் அமைப்பது உண்டு; திருமகளின் அருளை முன்னிறுத்தும் வகையில் அருகாலின் மேற் பகுதியில் கஜலட்சுமியின் உருவம் மரச்சிற்ப மாகவோ சுதைச் சிற்பமாகவோ அமைப்பது உண்டு. மேலை நாட்டு நாகரிகத்தில் மயங்கியுள்ள மக்கள் படிப்படியே நம் பண்பாட்டுச் சின்னங்களைப் புறக்கணித்து வந்துள்ளனர்.

முற்காலத்துச் சத்திரங்களிலும் இல்லங்களிலும் திண்ணைகள் வாயிலின் இருபுறத்திலும் இடம்பெற்றிருக்கும். 'தெற்றி' எனுந் திண்ணையை இக்காலத்தில் கட்டும் வீடுகளில் காண்பது

அரிதாகி விட்டது. தூரத்து விருந்தினரோ அயலவரோ வந்தால் அவர்களை அமரச் செய்ய அது பயன்பட்டது. திண்ணை என்பது கடந்தகால வரலாற்றுக் குறிப்பாகி விடுமோ என்ற ஐயப்பாடு உளது.

பழங்காலத்து மாளிகைபோன்ற வளமனைகளைப் பார்த்தால், அழகிய சிற்ப வேலைப்பாட்டுடன் கூடிய அடி பீடமும் போதிகையும் பொருந்திய வழவழப்பான தூண்களைக் காணலாம். இக்காலத்தில் கட்டப்பெறும் சில கட்டடங்களைக் காணின் தூண்கள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டே செல்கின்றன; தூண்களேயில்லாமல் சுவர்த்தாங்குதலுடன் கூடிய கட்டடங்களும் அமைக்கப்படுகின்றன என்பது தெரியவரும்.

அழகிய நிலா முற்றங்களும், சுதை வேலைப்பாடுள்ள கொடிக்கறுக்கு வேலைகளும் வனப்புக்கூறுகளும் காலந்தோறும் விடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

புதுக்கோட்டை மன்னர் மாளிகை, இராமநாத சேதுபதி மாளிகை, இராஜா அண்ணாமலைபுரத்துச் செட்டிநாட்டு மாளிகை முதலியவற்றைப் பார்த்தால்தான் நம் கட்டடக்கலைப் பண்பாட்டின் மேன்மை தெரிய வரும்.

பொதுவாக, அயலவர் ஆட்சியின் தாக்கம் நம் நாட்டுக் கட்டடங்களில் முற்றிலும் தவிர்க்க இயலாதது என்பது உண்மையே. எடுத்துக்காட்டாக வேலைப்பாடுமிக்க நினைவு வளைவுகள் (Memorial arches), மணிக்கூண்டுகள் (Clock towers) பார்வையாளர் கூடங்கள் (Auditoriums) போன்ற கட்டடங்கள் இக்காலச் சமுதாயத்திற்குத் தேவையே. எனினும் அவற்றிலும் தமிழ்நாட்டுக் கட்டடக்கலைக் கூறுகளைத் தொடர்புபடுத்துவது மக்களின் முயற்சியில்தான் உள்ளது.

அனைத்திலும் சிறப்பாக நினைவு மண்டபங்கள் பல ஊர்களிலும் அருளாளர்கள் நினைவாகவும், தியாகிகள் நினைவாகவும், நாட்டுத்தலைவர்கள் நினைவாகவும், கலைஞர்கள் நினைவாகவும் கட்டப்பட்டன; இக்காலத்திலும் சில இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாற்றான் கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் பாறை மண்டபம், எட்டையபுரத்திலுள்ள பாரதியார் நினைவு மண்டபம், சென்னையிலுள்ள

இராசாசி மண்டபம், காமராசர் நினைவாலயம் முதலியவற்றைக் காணலாம். இவ்வாறான மண்டபங்கள் எழும்புதற்கு ஆட்சியிலிருந்த அயலவர் பெயர்களால் அமைந்த மண்டபங்களும் காரணமாகும். இதற்கெடுத்துக்காட்டாக **ரிப்பன் பிரபு கட்டடத்தை** நினைவிற் கொள்ளலாம்.

இஃது ஒருபுறமிருக்க, நாட்டு மக்கள் நினைவுகூரும் வகையில் அமைந்த சில கல்லறைகள் அழகுபடுத்தப்பட்டுச் சதுக்கம்போன்ற பெயர்களைப் பெற்றுள்ளன. இந்த நோக்கில் **அண்ணா சதுக்கம், எம் ஜி. ஆர், நினைவிடம்** சென்னைக் கடற்கரையில் அமைந்துள்ளதனைக் காண்க.

5. கோயிற் கட்டடக்கலை - வளர்ச்சி நிலைகள்

1. கோயிற் கட்டட அமைப்புக்கு முன்னோடிக் கூறுகள்:

கோயில் எனப் பலரும் போற்றத்தக்க வடிவமைப்பினை ஆகம அடிப்படையில் கொள்ளுதற்குமுன், தமிழ்நாட்டில் பல ஊர்களிலும் ஏதோ தம் மனப்போக்கிற்கேற்பச் சிறுசிறு கோயில்களை அமைக்க முயன்றுள்ளனர். அவ்வாறமைந்த கோயில்களில் வழிபடப்பட்ட சிற்றூர்ப் புறத்தெய்வங்கள் அல்லது தேவதைகள், **திருமால் சிவன் சக்தி முருகன் கணபதி** முதலிய பெருந்தெய்வங்களுக்கு முன்னோடிகள் என்பது பலரும் அறிந்ததே.

சிற்றூர்ப்புறத் தெய்வ வடிவங்கள் மிகச்சிறந்த கலைப் படைப்புக்கள் எனக் கூற இயலாவிடினும், மக்களின் அசைக்க வியலாத நம்பிக்கையால் மிகுந்த ஆற்றல் வாய்ந்தவையாகக் கொள்ளப்பட்டன. பண்டைய தமிழர்கள் சிற்றூர்களில் நடப் பட்ட **கற்களையும், சூலங்களையும், வேல்களையும்** தெய்வங் களாகக் கொண்டாடினர். **ஐயனார்** போன்ற தெய்வங்கள் தம் முன் அமைக்கப்பட்ட யானைச் சிலைகளையும் குதிரைச் சிலை களையும் வாகனங்களாகக் கொண்டு, மக்களைத் தீய சக்தி களினின்றும் பாதுகாப்பதற்காக நள்ளிரவில் **உலா** (ஐயனார் வேட்டை) வருவதாக நம்பினர். அந்நிலையில், தெய்வச் சூழலுக்கேற்பக் கோயிலமைப்புக்கள் படிப்படியே வளர்ச்சி யுறலாயின. எனினும், மரங்களின் நீழலில்தான் சிறு கோயிலமைப்பில் முதன்மைத் தெய்வங்கள் அமைந்திருந்தன. கோயில் வளர்ச்சிநிலைபற்றிச் சிந்தித்த **எஸ். ஆர். பாலசுப்பிர மணியம்,** "கிராம எல்லைக்கற்களும், மலையும், மரனும், காடும், பாம்பும், கருவிகளும் தெய்வங்களாகக் கொண்டாடப்பட்டன. தொழில்களிலும் நுண்கலைகளிலும் பண்டைத் தமிழர் தெய்வத் தன்மையைக் கண்டனர்.

பண்டைய கிராம தெய்வங்களின் கோயில்கள் மரங்களின் அடிகளில் செங்கற்களால் கட்டப்பட்டுத் தென்னங்கீற்றால் கூரை வேயப்பட்டனவாதலின் அவை குறிப்பிடத்தக்க கட்டிடக் கலை நுணுக்கம் உடையன என்று கொள்ள முடியாது. பல்லவர்

காலம் தொடங்கியே தமிழகத்தில் மேதக்க சீரிய கோயில்கள் எடுப்பிக்கப்பட்டன. அவைகளே தமிழகத்தின் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவுவனவாகும்''1 எனக் கூறுவது சிந்திக்கத்தக்கதாகும்.

எனவே, மரவழிபாடு (Tree worship) தொடங்கிக் கோயிற் கட்டட அமைப்புக்களை - வளர்ச்சி நிலைகளைத் – தல அமைப் பினை ஓரளவு சார்த்திய வண்ணம் காண்போம்.

1.1. மரவழிபாடும் தலமரமும்:

பரம்பொருளாகிய கடவுளுக்கு இயற்கையே ஒருவகை உட லாகும். இயற்கையிலமைந்து காணப்பெறும் பல்வேறு பொருள் களை மக்கள் தாம் வழிபடுதற்கமைந்த தெய்வநலக் கூறு களாகவே கண்டு போற்றினர்.

வரையறுத்துக் காணவும், கருதவும், கூறவும், குறிக்கவும் இயலாத ஒரு மாபெருந் தெய்வநல ஆற்றல், காணுதற்கும் கருதுதற்கும், கூறுதற்கும் குறித்தற்குமுரிய அழிதன் மாலைய பொருள்களிடமும் இருப்பதாகக் கண்டனர். இத்தகைய உணர் வினால், பழங்காலத்திலேயே மரங்களையும் தெய்வநலப் புனித முடையவையாகக் கருதிப் போற்றியுள்ளனர் மக்கள். பின்னர் அவற்றின் கீழ்ச் சில தெய்வப் படிமங்களை வைத்து, அவர்கள் வழிபடத் தொடங்கலாயினர்.

தமிழ்நாட்டில் கோயில் வழிபாட்டுக்குத் தொடக்கம் சில மரங்களின் கீழேயே தொடங்கியது எனலாம். பிறகு, கோயிற் கட்டடங்கள் அமைந்தாலும், தெய்வப்படிமங்கள் வைத்து ஒரு காலத்தில் வழிபடப் பெறக் காரணமாயிருந்த மரங்களும் புனித நிலையில் **தலமரங்கள்** ஆயின. சில தலங்களில் அமைந்துள்ள தலமரங்கள் அந்தந்த வட்டாரத்தில் மிகுதியாகக் காணப்படு கின்றன. இந்த நோக்கில் **கடம்பர் கோயில்** (கடம்பமரத்தொகுதி) **திருவேற்காடு** (வேலமரத் தொகுதி) **மாங்காடு** (மாமரத்தொகுதி), முதலியவற்றைச் சிந்திக்கலாம்.

சில தல மரங்கள் மிக வியத்தகு சக்திகளையும் பீற கூறு களையும் கொண்டு விளங்குகின்றன. அறிவியலுக்கும் பகுத் தறிவுக்கும் எட்டாத சிறப்புக்களை அவை கொண்டுள்ளமை ஆன்மநல அடிப்படையில் சிந்திக்கத்தக்கது.

1. சோழர் கலைப்பாணி, பக், 11

காஞ்சி **ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில்** தலமரம் **மாமரம்** ஆகும்; நான்கு மறைகளையும் நான்கு கிளைகளாகக் கொண்டுள்ளது எனக் கூறுவது சமய மரபாகும். அது நிற்க, அந்த மாமரத்து நான்கு கிளைகளிலும் முறையே **இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு** ஆகிய நான்கு வகைக் கனிகளும் காய்க்கும் தனித் தன்மை, வியத்தகு சிறப்பிற்கு இன்றும் சான்றாக விளங்கு கிறது. அறிவியலாராய்ச்சிக்கு அப்பாற்பட்ட நிலையில் இம்மரம் பல்லாண்டுகளாக இருந்து வருவது சமயப்பெருமைக்கு ஒரு வகை அறிகுறியாகவும் விளங்குகிறது.

பல்வேறு காரணங்களால் தலமரங்கள் தோன்றிச் சமயப் பண்பாட்டுக்கும் மக்களின் நம்பிக்கைக்கும் நலத்துக்கும் துணை புரிந்துவருகின்றன. இந்நிலையில், ஞான சித்தர்கள் காரணமாகப் பல இடங்களில் தலமரங்கள் தோன்றலாயின என்ற கருத்தும் ஆராய்தற்குரியதாகும். சித்தர்கள் மக்கள் நலனுக்காகப் பல இடங்களில் பூதவுடலுடன் தோன்றி ஆங்காங்கு இருக்கும் மக்களுக்கு **மணி மந்திரம் மருந்து** முதலியவைகளைத் தந்து, உடற்பிணிகளையும், மனப்பிணிகளையும் போக்கி வந்தனர். "ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து கொள்வர்; அம் மரத்தின்வேர் பட்டை, பூ, காய், பழம், இலை, கொழுந்து முதலியவைகளைப் பிணிக்குகந்தவாறும், வயதிற்குகந்தவாறும் மக்களுக்குக் கொடுத்து மருத்துவம் செய்து வந்தனர். நாளடைவில் அப் பெரியோர்கள் அவ்விடத்திலேயே, சமாதியடையப் பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்வர். ஒரு குழியிலே உட்கார்ந்து மக்களைக் கொண்டு மண்மூடச் செய்வர். ஆனால், அவர்கள் அக்குழியில் மட்டும் உடம்பை விடுவதில்லை. ஒரே காலத்தில் பல இடங் களில் ஒரே உருவத்துடன் சமாதியடையும் வல்லமையையும் பெறுவர். அவ்வுடல், பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் அழியாமலிருக்கும் என்பது தெரிய வருகிறது. அதையே பெரியோர்கள் **சீவ சமாதி** யென்பர். சமாதியடைந்த இடத்தில் வைத்து வளர்த்த அம் மரத்தைத் **தலவிருட்சம்** என்று மக்கள் கூறலாயினர்"[1].

மேற்கண்டவாறு சீவசமாதியடைந்த நிலையில், அவர்களை நினைவிற் கொள்ளும் வகையில் காணலாகும் தலமரங்கள்

1. திருக்கோயில் (திங்களிதழ்), அக்டோபர், 1966

தமிழ் நாட்டில் பலவாக உள்ளன. அந்தச் சமாதிகளின் மீது பக்திமிகு அடியார்களும் ஊர்ப்பெருமக்களும் கோயில்களைக் கட்டி, அவை எளிய சமாதிகள் என்று மக்கள் பொதுவாக நினையாவண்ணம் பற்பல சிலைவடிவங்களை யமைத்து வழி பாட்டுக் கிரியைகளுக்கு வழிவகுத்தனர். அவை **சித்தர் சமாதிகள் என்று கூட நினையாவண்ணம் ஆலயங்களாயின;** அவ்வாற்றான் தலமரங்களும் ஆலய உறுப்புக்களாகி மக்களின் பக்தி நம்பிக்கைக்கு உறைவிடங்களாயின

இறைவன் குறிப்பிற்கிணங்கவும் தலமரங்கள் சில கோயில் களில் உண்டாயின எனவும் கூறுவர். எடுத்துக்காட்டாகத் **திருமறைக் காட்டில்** அமைந்துள்ள தலமரம் - வெள்வேல்மரம் - பற்றிக் காண்போம்.

சிவபெருமான் தான் மேற்கொள்ளும் திருவடிவங்களுக் கேற்பவே வேதங்களும் செயற்படும் என்பது புராணம். வேதங் களுக்கு இறைவன் கட்டளையிட்டபடி, திரிபுரமழித்த காலத்திலே அவை நான்கு **குதிரைகளாகவும்**, அருச்சுனனின் தவநிலையில் அவனைக் கண்டு அருள்புரிவதற்குத் தான் வேட வடிவமேற்ற நிலையில் அவை **நாய்கள்** ஆகவும், தில்லைச் சிற்றம்பலத்தில் **ஆனந்த நடனம்** - தாண்டவம் - ஆடியபோது அவை **காற்சிலம்பு களாகவும்**, பிச்சையுகக்கும் பெருமானாக (பிட்சாடனராகத்) திருவடிவமேற்ற - நிலையில் அவை **திருக்கோவணமாகவும்** விளங்கியுள்ளன. அதே வேதங்கள் திருமறைக்காட்டில் **தலவிருட்ச** மாகிய **வெள்வேல்** மரமாக விளங்கி வருகின்றன எனவும், இக்காரணம் பற்றியே திருமறைக் காட்டிற்கு **வேதவனம் வேதாரண்யம்** எனப்பெயர்கள் உண்டாயின எனவும் தலபுராணம் கூறும்.

சில கோயில்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட தலமரங்கள் அமைந்துள்ளன. இவை வரலாற்று அடிப்படையிலும் தலபுராண அடிப்படையிலும் ஆராயத்தக்கவை. அவ்வாறான அமைப் புடைய சில தலங்களையும் தலமரங்களையும் காண்கையில் சில வற்றுக்குப் போதிய காரணம் கிடைக்கவில்லை.

ஆய்க்குடி: கடையெழு வள்ளல்களுள் ஒருவனான **ஆய்** என்பவன் வாழ்ந்த ஊர். இக்காலத்தில் **ஆய்க்குடி** (ஆயர்குடி என்பதன் மரூஉ) எனும் பெயரில் சித்தர் பூமியான பொதிகை

மலைச் சாரலில் திருநெல்வேலி மாவட்டத்தில் காணலாம். **அருணகிரி நாதரால்** திருப்புகழ்ப்பாடல் பெற்ற புண்ணியத் தலமாகிய ஆய்க்குடி **பாலசுப்பிரமணிய சுவாமி** எழுந்தருளியுள்ள திருக்கோயிலைக் காணலாம். இத்தலத்தின் சிறப்பான தலமரம் **அரசமரம்** ஆகும். இந்த அரசமரத்துடன் **வேப்பமரம், கருவேப்பிலைமரம், மாதுளை மரம், மாவிலங்குமரம்** ஆகிய ஐந்தும் தல மரங்களாக இக்கோயிலின் மூலவர் சந்நிதிக்குப் பின்னால் விமானத்தின் கீழ் மேற்குப் பிராகாரத்தில் ஓங்கி வளர்ந்துள்ளன.[1]

சங்ககாலத்தில் **பறம்பு மலை**யென்றும், பிற்காலத்தில் **பிரான்மலை** யென்றும் வழங்கப்படுஞ் சிறப்பினையுடையது. திருக்கொடுங்குன்றம் ஆகும்; பாண்டி நாட்டுப் பாடல் பெற்ற இத்தலத்திற்கு இரு தலமரங்கள் உள்ளன. 'ஒன்று **பேரில்லாமரம்** மங்கைநாதர் கோயிலுக்கு மேல் மலைப் பாறையில் இருக்கிறது. அது இன்ன மரம் என்று தெரியவில்லை (இனம் புரியவில்லை), மற்றொரு தலவிருட்சம் **மங்காப்புளி**; அது கீழ்க் கோயிலுக்குள் இருக்கும் திருக்குளக்கரையில் இருக்கிறது''[2] என **ந.ரா. முருகவேள்** எழுதிச்செல்வது காண்க.

இறைவன், புராணத் தொடர்பான சில நிகழ்ச்சிகளும் அடியார் தொடர்பான சில நிகழ்ச்சிகளும் மரத்தின் கீழே நிகழ்ந்துள்ளன. அவை காரணமாகவும் சில மரங்கள் தல மரங்களாகக் கோயிலமைப்பில் இடம் பெற்றுள்ளன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொடர்பாகத் **திருவொற்றியூரில்** இறைவன் திருவிளையாடல் புரிந்ததைச் சைவ அன்பர்கள் நன்கறிவர். **சங்கிலிநாச்சியாரைத்** திருமணம் புரிந்து கொள்வது தொடர்பாக இறைவன் நாச்சியாரின் கனவில் தோன்றிச் சுந்தரரை **மகிழ மரத்தடியில்**, ''இவ்வூரைவிட்டுப் பிரியேன்'' என்று சத்தியஞ்செய்து கொடுக்குமாறு தூண்டியதும், அலமந்த சுந்தரர் அந்த மரத்தடியில் சத்தியம் செய்து கொடுத்துவிட்டு மீறியமையால் தம் இருகண்களை இழந்து தவித்ததும் முதலிய செய்திகளை ஈண்டு நினைவுகூரலாம்.

1. ஞானபூமி, நவம்பர், 1990
2. திருக்கோயில் (திங்களிதழ்), பிப்ரவரி, 1969

திருப்பெருந்துறையில் அந்தணர் வடிவில் வந்து **திருவாதவூரரைக் குருந்த மரத்து அடியில்** கடவுள் திருவடி தீக்கை தந்தும் உபதேசித்தும் ஆட்கொண்ட செய்தி பலரும் அறிந்ததே. இந் நிகழ்ச்சித் தொடர்பாகக் குருந்தமரம் அங்கே தலமரமாயிற்று எனலாம்.

குமரிமாவட்டத்தில் **வடுகன்பற்று** என்னும் ஊரில் (பண்டைய அகஸ்தீசுவரம்) அகத்தீசுவரர் கோயில் உண்டு. இத்தலத்தில் சிவனுக்கும், திருமாலுக்கும் கோயில்களைக் காணலாம். சிவன் கோயிலின் வடபால் **அத்திமரம் ஒன்று** உள்ளது. **இம்மரத்தின் கீழ் அகத்திய முனிவர் தென்னாடு வந்தபோது தவஞ் செய்தார்** என்ற செவிவழிச் செய்தி அவ்வட்டாரத்தில் நிலவுகிறது. இம் மரம் மிகப் புனிதமாகத் - தலமரமாகக் - கருதப்பட்ட நிலையில் அதனைச் சுற்றிலும் கருங்கல்லால் அமைக்கப்பட்ட பீடத்தில் விநாயகர், நாகதேவதைகள், நந்தி முதலிய சிறு சிற்பங்கள் இடங் கொண்டுள்ளன.

நூற்றுக் கணக்கான திருத்தலங்களில் புராண அடிப்படையில் பல காணப் படினும், நம் **பண்டைய** சமயமாட்சியைப் புரிந்து கொள்ளும் வகையில் சில **சிறப்பான** தலங்களில் காணலாகும் தலமரங்கள் பட்டியலிட்டுக் காட்டப்படும்; அவை வருமாறு:

திருத்தலம்		**தலமரம்**
காஞ்சிபுரம்	—	மாமரம்
கோட்டூர், திருமுதுகுன்றம் திருப்புறம்பயம்	—	வன்னிமரம்
சிவபுரம்	—	சண்பகமரம்
சூரியனார் கோயில்	—	வெள்ளெருக்கு
திருக்கழுக்குன்றம்	—	வாழைமரம்
திருக்குற்றாலம்	—	குறும்பலாமரம்
திருக்குறுக்கை	—	கடுக்காய்மரம்
திருச்செங்காட்டங்குடி	—	ஆத்திமரம்
திருநாரையூர்	—	புன்னாகமரம்
திருநீடூர், திருவண்ணாமலை, திருவொற்றியூர்	—	மகிழமரம்

அம்பர், திருப்புனவாயில், திருமயிலை	—	புன்னைமரம்
திருப்பனந்தாள், புறவார் பனங் காட்டூர் (பனையபுரம்)	—	பனைமரம்
திருஆலம் பொழில், திருப்பழுவூர்	—	ஆலமரம்
திருப்பராய்த்துறை, திருப்பாதிரிப்புலியூர், அவிநாசி	—	பாதிரிமரம்
அச்சிறுபாக்கம், திருவதிகை, திருப்புத்தூர்	—	கொன்றைமரம்
திருவாலங்காடு, திருப்பூவணம்	—	பலாமரம்
திருவாவடுதுறை	—	படரரசு மரம்
திருவிடைக்கழி	—	குராமரம்
திருவெண்பாக்கம்	—	இலந்தைமரம்
திருவேட்களம்	—	மூங்கில்
திருவைகாவூர்	—	வில்வமரம்
மதுரை	—	கடம்ப மரம்

இப்பட்டியலில் திருவண்ணாமலைக்கு மகிழமரம் தல மரமாகக் கூறப்படினும், சிலர் அண்ணா (நெருங்கவியலாத) மலைக்கு - நெருப்புமலைக்குத் - தலமரமே கிடையாது எனவும் கூறுவர்.

2 திருக்கோயில்கள் - பாகுபாடு:

சைவ சமய நோக்கில் பாடல்பெற்ற தலங்களைப்பலவகைப் பாகுபாடுகளில் காண்பர். சோழநாட்டுத் தலங்கள், பாண்டி நாட்டுத் தலங்கள், தொண்டை நாட்டுத் தலங்கள், கொங்கு நாட்டுத் தலங்கள் என்ற பாகுபாட்டிலும், காவிரியாற்றங் கரைக்கு வடபால் தலங்கள், தென்பால் தலங்கள் என்ற பாகு பாட்டிலும் பல தலங்கள் உள்ளன. திருத்தலங்களைப் பஞ்ச பூதத்தலங்கள், பஞ்சசபைத் தலங்கள், பஞ்ச குரோசத் தலங்கள், அட்டவீரட்டத் தலங்கள், ஏழூர்த்தலங்கள் (சப்தத் தானங்கள்), திருக்கயிலைத் தலங்கள், சப்தவிடங்கத் தலங்கள், காயா ரோகணத்தலங்கள், மயானத் தலங்கள், பஞ்சாரணியத் தலங்கள்,

தாண்டவ விசேடத்தலங்கள், முத்தித்தலங்கள், புலியூர்த்தலங்கள் எனப் பல வகைகளில் பல நோக்கங்களுடன் வகைப்படுத்தி யுள்ளனர்.

வைணவச் சமய நோக்கில் **பஞ்ச கிருஷ்ணக்ஷேத்திரங்கள், பஞ்ச அரங்கத் தலங்கள், சுவயம் வயக்த க்ஷேத்திரங்கள்** (பூலோக வைகுண்டத் தலங்கள்), **பரமபதத் தலங்கள்** (முத்தித்தலங்கள்) எனப் பல வகைகளில் பல சிறப்புக்களுடன் வகைப்படுத்தி யுள்ளனர். பொதுவாக, வைணவ ஆழ்வார்களால் **மங்களா சாசனம்** (திருமால் பெயரில் திருப்பாசுரம்) பெற்ற வைணவத் திருப்பதிகளைத் **திவ்ய தேசங்கள்** என்பர்; அவை எண்ணிக் கையில் 108 ஆகும். இவ்வாறான திவ்ய தேசங்களில் விமான வகைகளாலும், பெருமாளின் **நின்ற** கோலம், **அமர்ந்த** கோலம் **கிடந்த** கோலம் என்ற அமைப்பாலும் பாகுபாடு செய்தல் வைணவச்சமய மரபினையொட்டியதாகும்.

சக்தி எழுந்தருளியுள்ள சிறப்புமிகு திருத்தலங்களைச் **சக்தி பீடங்களாகக்** கருதுவர்.

திருமுருகன் எழுந்தருளியுள்ள கௌமாரத்தலங்கள் பல வாக இருப்பினும், அவற்றுள் சிறப்புமிகு திருத்தலங்களை **ஆறு படை வீடுகள்** என்ற அடிப்படையில் காண்பர்.

இவையேயல்லாமல் தெய்வங்களையும், மக்களையும் ஒரு வகையில் ஆட்டிப் படைக்கும் **நவக்கிரகங்களுக்கு** ஆற்றல் நிறைந்த **நவக்கிரகத் தலங்கள்** உள்ளன. இறைவனையும் இறைவியையும் நோக்குகையில் நவக்கிரகங்கள் பரிவாரத் தெய்வங்களே; எனினும், அவற்றுக்கும் தலப்பாகுபாடும் பெருமையும் உண்டு.

ஒவ்வொரு திருத்தலமும் கோயிலமைப்பாலும் கலை நுணுக்கங்களாலும் புராணச் சிறப்பாலும் அடியவர்களின் தொண்டுச் சிறப்பாலும், ஏற்றமும் எழில்தோற்றமும் பெற்று விளங்கும்.

கோயிலமைப்பில், கட்டடக்கலை நோக்கில் **நாகரம், வேசரம் திராவிடம்** என்ற பாகுபாட்டிலும், கோயில் வகைகளில் மாடக்

கோயில், கொகுடிக்கோயில், ஞாழற்கோயில், இளங்கோயில், கரக்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என்ற பாகுபாட்டிலும் பலவகைக் கோயில்கள் தமிழ்நாட்டுக் கட்டடக்கலைப் பண்பாட்டினை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளன. ஈண்டுக் கோயில்வகைகள் பற்றிச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

கி பி. ஏழாம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டில் அமைந்திருந்த கோயில் வகைகளைச் குறிப்பிட்டுச் செல்லும் **அப்பரடிகள்,**

''பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் **ஞாழற்கோயில்**
கருப்பறியல் பொருப்பனைய **கொகுடிக்கோயில்**
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே''[1]

என அருளிய பாடல் காண்க.

பெருங்கோயில் என்று ஈண்டுக் குறிக்கப் பெறுவது **மாடக் கோயில்** என்பதும், செய்குன்றின்மேல் எடுக்கப்பெறுவதால் இதனை **மலைக்கோயில்** எனக் கொள்ளலாம் என்பதும் **கல்வெட்டறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார்** கருத்தாகும். இவ்வாற்றான் நன்னிலத்துப் பெருங்கோயில், குடவாயில் பெருங்கோயில், வைகல் மாடக்கோயில், தண்டலைச் சேரி மாடக் கோயில் முதலியன காண்க என்பர். மாடக் கோயிலுக்கு விளக்கந்தருகையில், ''மாடக்கோயில் என்பது யானை ஏறாத வண்ணம் பூமிமட்டத்துக்குமேல் மிகவும் உயரமாகப் படிக்கட்டுகள் அமைத்துக் கட்டப் பெற்றதாகும். இத்தகையவை **கோச்செங்கணான்** எடுப்பித்தவையாகும். இம்மாடக் கோயிலின் விமானம் யானை தூங்கும் நிலையில் கட்டப்பெற்றிருக்குமாயின் அதனைத் **தூங்கானை மாடக்கோயில்** என்பர். உதாரணமாகப் பெண்ணாகடம் திருக்கோயில், திருப்பனந்தாள் சடையப்பர்,

1. திருமுறை 6, அடைவுத்திருத்தாண்டகம், 5

திருத்தணி, இன்னம்பர் கோயில்களையும். காண்க.''[1] என வருங் குறிப்பினைக் காண்க.

தமிழ்ப் பொழிலில் (XVI. பக். 223) கல்வெட்டறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார் எழுதியுள்ள கோயில் விளக்கக் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு மேலுஞ்சில விளக்கங்கள் காண்போம்.

கரக்கோயில் என்பது தேர் போன்ற அமைப்பில் சக்கரங் **களுடன்** அமைக்கப் பெற்ற ஒருவகைக் கோயிலாகும். இக்கோயி லின் கருவறை தேர் போன்று காட்சியளிக்கும். **திருநாவுக்கரசு சுவாமிகள், மேலைக் கடம்பூர்க் கோயிலைப்** பற்றிப் பாடுங்கால்,

''நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்''

எனக் குறித்திடுதல் கொண்டு தெளிவு **காண்க. (இக்கோயிலைப்** போலச் சில கரக்கோயில்கள் கேரள நாட்டில் இருப்பதாகக் கூறுவர்.) மேலைக் கடம்பூர்க் கோயில் மூன்று சுவர்**களிலும்** இரண்டு வரிசைகளாக நாயன்மார் அறுபத்து மூவரின் **வாழ்க்கை** வரலாற்று நிகழ்ச்சிகள் சிற்பங்களாக அமைத்திருப்பது இக்கோயிலின் பெருமையை மிகுவிக்கும். கரக்கோயில் பற்றி அறிஞர்கள் சிலர் வேறு விளக்கங்களும் கூறுவர். சிவலிங்கத்திற் கான **'கரப்பிரதிஷ்டை'** காரணமாகக் கரக்கோயில்கள்' அமைந் தன எனக் கூறிக் கேரள நாட்டில் **எற்றுமானூர், திருப்பாலூர்** முதலிய ஏழு கோயில்கள் இவ் வகையின[2] என்பர் **சுப்பிரமணியன் மலையாண்டி.** சர்ச்சைக்குரிய கரக்கோயில் பற்றி மேலும் ஆராய்ச்சி தேவை,

ஞாழற்கோயில் என்பது ஞாழல் எனும் மரத்தினடியில் எழுந்தருளப் பெற்ற இறைவன் தொடர்பாக எழுப்பப்பட்ட கோயில் என்பர். ''பாதிரிப் புலியூர்த் திருக்கடை ஞாழற் பெருமானடிகளுக்கு'' **எனவரும் கல்வெட்டின்** (3.1.1. VII, 744) துணை கொண்டு, திருப்பாதிரிப் புலியூரிலுள்ள கோயில் முற்

1. சோழர் கோயிற்பணிகள், அடிக்குறிப்பு, பக் - 5
2. Art and Architecture, Heritage of the Tamils, I I T S, 1983, P. 372

காலத்தில் ஞாழற்கோயில் என்று வழங்கப் பெற்றிருத்தல் கூடும்.''[1] இது சிந்திக்கத் தக்கது.

கொகுடிக்கோயில் என்பது ஒருவகை முல்லைக் கொடி மிகுதியாகவுள்ள இடத்திலமைந்த பெருங்கோயிலாகக் கொள்ளலாம். தலைஞாயிறு என வழங்கும் திருக்கருப்பறியலூரில் அமைந்துள்ள கோயில் கொகுடிக் கோயில் என்பதைத் தேவாரம் வாயிலாக அறியலாம்.

இளங்கோயில் என்பது பழைய கோயிலைப் புதுப்பிங்குங்கால் அதற்கருகில் சுவாமியை எழுந்தருளுவித்து வழிபாடு புரிதற் கேற்ப அமைந்த கோயிலாகும். இக்காலத்திலும் பொதுவாகப் **'பாலாலயம்'** (இளங்கோயில்) செய்தல் என்பது வழக்கத்தில் உள்ளது. எனினும், சிறப்பாக **இளங்கோயில்** என்றே பேரளத் திற்கருகே திருமீயச்சூரிலும், கீழைக்கடம்பூரிலும் உள்ளதைக் காணலாம். **பூதத்தாழ்வார்**, ''வெள்ளத் திளங்கோயில் கைவிடே லென்று''[2] எனப் பாடிச்செல்வதும் ஆராய்ச்சிக்குரியது.

மணிக்கோயில் என்பது ஆழ்வார்களின் திருவாக்கால் திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே'' என்று வருதல்கொண்டு சிந்திக்கலாம். **நம்பியாண்டார் நம்பிகள்** தம் **திருப்பண்ணியர் விருத்தத்தில்** (67),'' தில்லை தன்னுள் — செற்றரு மாமணிக் கோயில்'' என வருந்தொடர் கொண்டும் சிந்திக்கலாம். நாச்சியார் கோயில் என வழங்கும் திருநறையூர்க் கோயிலும், சிதம்பரத்திலுள்ள கோயிலும் மணிக்கோயில்கள் எனக்குறித்த காரணம் பற்றியும், மணிக் கோயிலமைப்பினைக் குறித்தும் தொடர்ந்து ஆராய்தல் தேவை.

ஆலக் கோயில் என்பது சிவபெருமான் எழுந்தருளிய ஆல மரத் தொடர்பில் அமையப் பெற்ற ஆலயம் எனலாம். சிறப்பாக, இது சிங்கப்பெருமாள்கோயிலுக்கு அண்மையிலுள்ள **திருக்கச்சூர்** எனுஞ் திருத்தலத்தைக் குறிக்கும் என்பது அறிஞர் பண்டாரத்தார் கருத்தாகும்.

1. சோழர் கோயிற் பணிகள், அடிக்குறிப்பு, பக் - 7
2. இயற்பா, இரண்டாந்திருவந்தாதி, 54.

2.1. தேர்க் கோயில்கள் - பல்வகை நுண்கூறுகள்:

கோயிற் கட்டட அமைப்பில் முன்னோடிகளாகப் ஒருவகைப் புதுமையைப் புகுத்திப் புகழினைக் கொண்டவர்கள் **பல்லவ மன்னர்கள்** எனலாம் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் **மாமல்லபுரத்திலே** தனிப்பெரும் கற்பாறைகளைக் குடைந்தும் செதுக்கியும் ஒற்றைக் கற்கோயில்களாக்கியும் பல்லவர்கள் உருவாக்கியது. தமிழக வரலாற்றில் கட்டட, சிற்பக் கலையைப் பொறுத்த வரையில் சிறப்பான செய்தியாகும். ஒற்றைக் கற்கோயில்களைப் பஞ்சபாண்டவர் பெயர்களுடன் தொடர்புபடுத்தி மக்கள் வழங்கலாயினர்.

தருமராசர்தேர் எனப்படும் கோயில் மூன்று அடுக்குகள் கொண்ட விமானத்தையுடையது; இரண்டாம் அடுக்கின் நடுவிலே மாடப்புரை போல உள்ளிடம் வெட்டப்பட்டுள்ளது. அதனடியில் சோமாஸ்கந்தர் சிற்பம் செதுக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

பீமசேனன்தேர் எனப்படும் கோயில் நீள்சதுர அமைப்பில் உள்ளது. அதன் விமானத்தைச் சுற்றி வழிவிடப்பட்டிருத்தலைக் காணலாம். 45 அடி நீளம் 25 அடி அகலம் 26 அடி உயரங் கொண்ட இத்தேர்க்கோயிலிலே தூண்களின் அடிப்பாகம் அமர்ந்த சிங்க உருவத்துடன் உள்ளது. நரசிம்மவர்மனின் கலைப் பாணியைப் புலப்படுத்த இவ்வுத்தி கையாளப்பட்டுள்ளது என்பர்.

அருச்சுனன்தேர் எனப்படும் கோயில் நான்கு நிலைகளை உடைய விமானம் கொண்டது; 11 சதுர அடி அமைப்புடையது.

திரௌபதிதேர் எனப்படும் கோயில், தமிழ்நாட்டில் ஊர்த் தேவதைகளுக்கு அமைந்திருக்கும் சிறுகோயில் போல உள்ளது. இதன் அடித்தளம் 11 சதுர அடி, உயரம் 10 அடி. பல்லவர் காலத்துச் சிற்பத் திறனையும் கலைக் கற்பனையையும் புலப் படுத்தும் வகையில் இத்தேரிலுள்ள துர்க்கையின் சிலை உள்ளது என்பர்.

சகாதேவன்தேர் எனப்படும் கோயில், தன் பின்புறத்தில் யானையின் முதுகைப் போன்ற அமைப்பினைக் கொண்டது. பண்டைக் காலத்துப் பௌத்தர்களின் சயித்தியத்தைப் போன்றது எனலாம். ஒவ்வொரு பாறைக்கல்லிலும் அமைந்த இந்தத் தேர்க் கோயில்களைப் பொதுவாகப் '**பஞ்சபாண்டவர் ரதங்கள்**' எனத் தமிழ்ப் பெருமக்கள் வழங்கி வருகின்றனர்; எனினும், இதற்கான ஏற்புடைய காரணம் சரியாகப் புலப்படவில்லை. எனினும், பிற்காலத்திலே தேர்வடிவில் கோயிலமைக்க இவை முன்னோடியாக இருந்தமை நினைவிற்கொள்ளத் தக்கதாகும். இதனைச் சற்று விளக்கமாகக் காண்போம்.

வண்டிகள், சப்பரங்கள் முதலிய பலவகை ஊர்திகளுள் தேர்கள் (இரதங்கள்) சிறந்தவையாகும். தேர்களைப் பெரும்பாலும் மாவிரர்களும் மன்னர்களும் வள்ளல்களுமே பயன்படுத்தி வந்துள்ளனர். நாளடைவில் தேரமைப்பில் பருமன், வேலைப்பாடு ஆகிய இலக்கணமும் பெருகிக் கலையமைப்பும் பயன்பாடும் மக்களால் போற்றப்பட்டன. ''இத்தனைச் சக்கரங்கள் கொண்ட தேர் இத்தகைய வேலைக்கு இன்னவரால் செலுத்தப் படவேண்டும் என்ற வரையறைகளும் வகுக்கப்பட்டன **மானசாரம்** என்ற சிற்பநூலில் தேரிலக்கணம் என்ற பகுதியுள்ளது.''1

சைவசமயச் சார்பிலும் வைணவ சமயச்சார்பிலும் நடைபெறும் கோயிற் பெருவிழாக்களில் **தேர்த்திருவிழா** மிகச் சிறப்பிடம் பெறுவது அனைவரும் அறிந்ததே. சமுதாயத்திலுள்ள அனைத்துப் பகுதி மக்களும் இறைவழிபாடு புரிதற்கேற்ற அமைப்பில் தேர் அமைந்திருப்பதால், அதே வடிவமைப்பில் திருக்கோயில்களை அமைப்பதும் மிகப் பொருத்தமானதே என்ற உள்ளுணர்வும் உந்துதலும் சில மெய்யன்பர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். அதனை நடைமுறைப் படுத்துதற்கேற்பச் சில புராணக் கூறுகளும், நிகழ்ச்சிகளும் துணை நின்றிருக்கலாம். எவ்வாறோ இவ்வாறான சிந்தனைகளுக்கு இடந்தரும் வகையிலே **தமிழ்நாட்டில் சில கோயில்களும் மண்டபங்களும் தேரமைப்**

1. கலைக் களஞ்சியம் தொகுதி. ஆறு. பக். 168

யிலேயே உள்ளன என்பது நினைவிற் கொள்ளத்தகும்; இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

கடவுளின் கோயிலை நினைவிற் கொள்ளும் வகையில் தேர் அமைக்கப்பட்டது என்றும், வீதியுலாக் காரணமாக இறைவன் எழுந்தருளி மக்களுக்கு அருள்செய்யத் துணைநிற்கும் தேர் போன்றே சில இடங்களில் தேர்க்கோயில் அமைக்கப் பட்டது என்றும் கருதுவர்.

"கடவுளின் கோயிலைப் போன்றே அமைக்கப்பட்ட தேரின் அடிப்பாகத்தில் **பூலோக வாழ்க்கை, ஆகாயவாழ்க்கை, சுவர்க்க வாழ்க்கை** என்னும் இவற்றைச் சித்திரிக்கும் அழகிய பல உருவங் களைக் காணலாம். பூலோக வாழ்க்கையில் அரசன் கொலு விருத்தல் போன்ற காட்சிகளும், நடனம் செய்வது போன்ற பலதுறைகளைச் சித்திரிக்கும் உருவங்களும் உண்டு. காமத்துப் பாலைச் சித்திரிக்கும் ஒரு சில பொம்மைகளும் இங்கு மூலை முடுக்குகளில் பொதிந்திருப்பது உண்டு. வான வாழ்க்கையைச் சித்திரிக்கும் பொம்மைகளில் கின்னரர் போன்றவை சேர்ந்தவை. சுவர்க்க வாழ்க்கையைச் சித்திரிக்குமாறு நடராசர், விஷ்ணு, ஆறுமுகன், கணநாதன் முதலியவர்களின் உருவங்கள் இருக் கின்றன சைவர்களின் கோயில் தேர்களில் வைணவக் கதை களைச் சித்திரிக்கும் உருவங்களும் காணப்படும்"[1] எனவரும் குறிப்பினால் **தேரும் கோயிலும் ஒப்பீட்டுப் பார்வையில் சிந்திக்கத்தக்கவை** என்பது புலப்படும்.

கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியிலும், மரத்தேர்ச்சிற்ப வளர்ச்சியிலும் தமிழர்கள் கண்ட ஒப்புநோக்கின் பயனாகத் தேர்க்கோயில்கள் பல தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டன என லாம். வரலாற்று அடிப்படையில் சில செய்திகள் குறிக்கத் தக்கனவாகும்.

"சுமார் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டுக் கோயில்களில் கருப்பக் கிருகத்துக்கு முன்புறம் ஒரு மண்டபம் உண்டு. இது சாதாரணமான மண்டபமாகவே இருந்தது.

1. கலைக் களஞ்சியம், தொகுதி ஆறு, பக். 171

ஆனால், அதே நூற்றாண்டிலிருந்து அம்மண்டபம், கல்லாலான சக்கரங்களைக் கொண்டும், குதிரைகள், யானைகள் முதலியவற்றால் இழுக்கப்படுவது போன்ற அமைப்பினைக் கொண்டும் தேர்போன்றதாக உருப்பெற்றது. இவ்வகை மண்டபங்களில் மிகப்பழையதும் அழகுமிக்கதுமானது **தாராசுரத்தில்** 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட மண்டபமாகும். **தில்லையில் சிற்றம்பலத்துக்கு எதிரில் உள்ள மண்டபமும்** (சித்திரசபை 12-ஆம் நூ.) இவ்வகையைச் சேர்ந்ததாகும்''[1] என வருங்குறிப்பும் இயையுடன் சிந்திக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் சில பெரிய கோயில்களும் கோயில் மண்டபங்களும் தேரமைப்பில் உள்ளன. எடுத்துக்காட்டாகச் சிலவற்றைக் காண்போம்.

தென்கடம்பூர்த் **திருக்கரக் கோயிலில்** கருப்பக்கிருகத்தையொட்டித் தேரமைப்பைக் காணலாம். கும்பகோணம் **நாகேசுவரர்கோயில்**, கும்பகோணம் **சாரங்கபாணிசுவாமி கோயில்**, தில்லைப் **பாண்டியநாயகம் கோயில், சூரியனார் கோயில், தாராசுரம்** (இராசராசேச்சுரம்) **ஐராவதேசுவரர் கோயில்** முதலிய கோயில் மண்டபங்கள் வேலைப்பாடு மிகு சக்கரங்களுடன் கூடிய தேரமைப்பில் உள்ளன. குடந்தை சாரங்கபாணி சுவாமி கோயில் தேர்ச் சக்கரங்கள் தத்துவ அமைப்புச் சிற்பங்களைக் கொண்டவையாகும். பொதுவாகத் தேரமைப்புள்ள கோயிற் கட்டடங்களைக் காண்கையில், மக்களுக்குத் தெய்வநலவுணர்வு உண்டாகும் என்பது இக்கட்டடங்களைக் கட்டியவர்களின் நோக்கமாகும். அஃதாவது, பரம்பொருளாகிய கடவுளே தன் விண்ணகவுறையுளாகிய திருக்கயிலையிலிருந்து/பரமபதத்திலிருந்து தேராகிய ஊர்தியிலேயே எழுந்தருளியதான உணர்வு மக்களுக்கு ஏற்படுமென்று கொண்ட நம்பிக்கையாகும் எனலாம்.

கல்லால் தேர்போன்று அமைக்கும் கலைப்படைப்பு வழக்கம் தமிழ்ப்பெருமக்களிடையே மலர்ந்த சீரிய கலைக்கற்பனையே எனினும், பாரத நாட்டில் சில இடங்களில் இது தாக்கம் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, ஒரிசா மாநிலத்துக் கடற்கரையோரத்திலுள்ள **கொனாரக்** எனுமூரில் அமைந்திருக்கும்

1. கலைக் களஞ்சியம் தொகுதி ஆறு, பக். 171.

சூரியன் கோயிலாகும். ''இக்கோயில் 14ஆம் நூற்றாண்டில் தஞ்சைச் சோழ மரபினருக்கு உறவினனான ஒரு கலிங்க அரசனால் கட்டப்பட்டதாகும்; இங்கே வழக்கத்திலிருந்த கலையின் சிறப்பால் கவரப்பட்ட அரசன் தமிழ்நாட்டின் தொடர்பு மூலம், இவ்வித அரும்பெருஞ் சாதனையைச் செய்தான் எனச் சொல்ல இடமுண்டு''[1] என்பது தொல்பொருள் அறிஞர் பி. ஆர். ஸ்ரீநிவாசன் கருத்தாகும்.

பொதுவாகக் கட்டடத் தேர்ச்சியுடன் அழகிய சிற்பங்களைச் சோழர்காலக் கோயில்களிலே காண்கையில், ''சோழர் கோயில் களில் காணப்படும் வேலைப்பாடுகள் அருமை வாய்ந்தவை. அக்கோயிற் கட்டிடங்கள் நுண்மையான சிற்ப வேலைப்பாடு களுடன் விளங்குவன. விடாமுயற்சியுடன் மெய்வருத்தம் பாராது செய்யப்பட்ட அச்சிற்ப வேலைப்பாடுகள் கண்டார் வியத்தற்குரியவை. **'சோழக் கலைஞர் அரக்கர்களைப் போலச் செயல் தொடங்கி நுண்வினைப் பொற்கொல்லர் போல் செய்து முடிக்கும் திறம் வாய்ந்தவர்' எனப் பெர்குசன்** கூறுவது முற்றிலும் பொருத்தமாகும்''[2] என்ற குறிப்பு மனங்கொள்ளத் தக்கது; அதிலும், தேர்க்கோயில்களில் மிகவும் பொருத்தமாகும் எனலாம்.

2.2. கோயிலும் செய்யுளமைப்பும்:

மானுடன் தன்னையும் தன் ஆன்ம நாயகனையும் தான் வாழும் இடம் காலம் சுற்றுச்சூழல் முதலிய பலவற்றையும் நன்குணர்ந்து தன்னையே நன்றியுணர்வுடன் இறைவனிடம் அடைக்கலப்படுத்திக் கொள்கிறான்; அவ்வாறு, அடைக்கலமாகிய நிலையில், இறைவனாகிய அரும்பெரும் தெய்வ நல ஆற்றலைக் கலைவடிவமாகப் படைப்பதன் பெருவிளக்கமே கோயிலாகும். அத்தகைய கோயில்பற்றி ஆன்மநல உணர்வின் உந்துதலால் உவந்து உவந்து பாடிய அருளாளர்கள் பலர் உண்டு. பாடல் பெற்ற **திருக்கோயில்** என்றாலே சமய மெய்யன்பர்களிடம் ஒரு தனித்த சமய ஈடுபாடு இருந்து வருதலைக் காணலாம்.

1 கலைக் களஞ்சியம், தொகுதி ஆறு, பக். 172

2 கழகப் பொன்விழா மலர், சை. சி. கழகம், 1970, பக். 169.

கோயில் தொடர்பாக **எழுந்த** சிற்றிலக்கியங்களும், தனிப் பாசுரங்களும், புராணங்களும் எண்ணிலவாகத் தமிழ்ப் பரப்பில் உள்ளன. அருளாளர்களும் பெரிய ஞானியரும், சித்த புருடர் களும் தம் ஆன்மநல யோகப் பயிற்சியால் தமக்குள்ளே ஆன்ம நாயகனை எழுந்தருளப் பண்ணினர்; தாம் அனுபவித்த அருள் அனுபவங்களைப் பாடல்கள் வாயிலாகப் புலப்படுத்தியவற்றை எளிதில் திறனாய்வு செய்ய இயலாது. அவையெல்லாம் இறைவனுக்காக, அவர்கள் படைத்து வழங்கிய **'சொற்கோயில் கள்'** என்றே இங்கு ஒருவகை மனநிறைவு கொள்ளலாம். அவை பற்றிய ஓரளவு விளக்கங்களைத் தனியே பின்னர்க் காண்போம்.

ஈண்டுத் **திருக்கோயிலும்** ஒழுங்குறச் செய்த **செய்யுளும்** எவ்வாறு ஒப்புமை கொண்டுள்ளன எனச் சிறிது காண்போம்.

கோயிலமைப்போர் இடைவெளி சிறிதும் ஏற்படாதவாறு கற்களைச் சாந்துடன் இணைத்துச் சந்தி பொருத்துவர்; சீர் கெடாமல் அடுக்கி ஒழுங்குபடுத்துவர்; வியத்தகு அழகுடைய சிற்ப நுணுக்க வேலைப்பாடுகளை அமைப்பர். அவ்வாறே செய்யுளியற்றும் கவிஞர்களும் சொற்களைச் சந்தி பிழையாது இயைபாகப் - பொருத்தமுற - அமைப்பதில் நாட்டங்கொள்வர்; செய்யுளியலுக்கேற்பச் சொற்களைச் சீர்கள் கெடாது அடுக்குவதில் தம் திறமையைக் காட்டுவர். அச்செய்யுட்களில் தம் கற்பனைத் திறத்தால் பிற புலவர்கள் வியந்து புகழ்ந்து போற்றும் வகையில் உவமை முதலிய அணிகள் பலவற்றைப் பொருத்தமுற அமைத்து மகிழ்வர். இத்தகைய ஒப்புமைத் தன்மைகள் பலவற்றை மனத்துட் கொண்ட **துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,**

''—மல்லலுறச்
சந்தி பொருத்தித் தருஞ்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழ்அற் புதஅணித்தாய் - **முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயில்** உள்ளிருந்தெம்
மையுள் போக்கிற்கும் பரஞ்சோதி—''[1]

எனச் சொற்சித்திரம் தீட்டுவதைக் காண்க.

1 திருவெங்கையுலா, 66-70

இதனால், தமிழ் நன்மக்களுக்குச் **'செஞ்சொற்கவியின்பம்'** எத்தகையதோ அத்தகைய ஆன்மநல இன்பம் தருதற்கமைந்த கலைப்படைப்பே **திருக்கோயில்** என உணர்தல் வேண்டும்.

2.3. கோயிற் கட்டடம் - தெய்வநலப்பிழம்பு:

தொடக்கக் காலத்தில் சிறு அளவில் அமைந்த கோயிலமைப்பு மக்களின் மனப்போக்கிற்கும் ஈடுபாட்டிற்குமேற்பப் படிப்படியே வளர்ந்து பெரிய கோயிலமைப்பைக் கொண்டுள்ளது. கோயிலை மனம் போன போக்கில் அமைப்பது கூடாது என்ற உணர்வு தோன்றியதும், கோயிலமைப்பிற்குரிய விதிகள் வகுக்கப்பட்டன. அத்தகைய விதிகள் **ஆகமத்துள்** ஒன்றாகிய **சிற்ப சாத்திரம்** எனும் எல்லைக்குள் அமைந்தன.

ஆலயங்களைக் கட்டுதற்கு 32 சிற்ப சாத்திரங்கள் ஆதியில் **விசுவகர்மாவால்** கூறப்பட்டமை பற்றி 28 ஆகமங்கள் குறிப்பிடும் என்பர்.[1] தெய்வநலம் பதிந்த பக்தி மனமே இவ்வாறான கோயிலமைப்பிற்கு வழி கோலியது எனக் குறிப்பாகச் சுட்டலாம்.

கோயிற் கட்டடத்தைக் கண்டதும் ஒருவன் அதனைச் **சடப்பொருள்** என நினைக்கலாம். **கல், மண், மரம், சுண்ணாம்பு, உலோகம்** முதலிய சடப்பொருள்களால் கோயில் கட்டப்படினும் அதனை வெறும் சடப் பொருளாகக் காணாமல், உயிர்ப்பான தெய்வ வடிவமாகவே கண்டு வழிபட்டுள்ளனர் நம் மக்கள். அருட்சான்றோர்களின் எண்ணங்கள்-ஒரு முகப்பட்ட சிந்தனைகள் - திருக்கோயில்களாக வடிவம் பெற்றுள்ளமையால் அங்கே **'உயிர்ப்புள்ள தெய்வ நலம்'** கோலோச்சி நிற்றலை உணரலாம்.

திருக்கோயில் என்பது அருட்செல்வர்களின் சிந்தனைகளாலும் பாசுரங்களாலும் அருள்வல்லபம் - மூர்த்தி கரம் - ஏற்றப்பட்ட தெய்வநலப் பிழம்பாகும். இவற்றின் ஏற்றம் பற்றி அறிஞர்கள் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாகத் **திரு. வி. கல்யாண சுந்தரனார்** தம் கருத்தினைக் காண்போம்.

1. ஞானவழி, (திங்களிதழ்), ஜூன், 1988

திருப்பதிகளிலுள்ள கோயில்களும் கோயில்களிலுள்ள வடிவங்களும், அருளாளர்களின் உறுதியில் ஒன்றித் திளைத்து நிற்போர்க்குக் கல் மண் செம்பாகத் தோன்றா என்றும், அவை அவர்க்குத் தெய்வநல அழகாகவே - முருகாகவே - தோன்றும் என்றும், தம் கருத்தினை வலியுறுத்தி அழகிய கட்டுரைகள் வரைந்துள்ளார்.

''திருகோயில் உள்ளிருக்கும் முருகப்பெருமான் திருவுருவம், மணம் இளமை கடவுட்டன்மை அழகு என்னும் இவைகட்கு அறிகுறி என்னும் உணர்வோடு (முருகனை) வழிபாடு செய்தல் வேண்டும். இவ்வுணர்வோடு செய்யப்படாதது கல்செம்பு வழிபாடாகவே முடியும். இதனால் அறியாமை நீங்காது; அழகின்ப அன்பும் தோன்றாது.

'திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே'

என வரூஉம் அருணந்தி சிவத்தின் திருவாக்கை ஓர்க''[1] எனும் திரு. வி. கலியாணசுந்தரனார் கருத்து மிகவும் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

கவின்மிகு கட்டடக்கலை, காலப்போக்கில் தமிழ்நாட்டிலே கலைச் சிந்தனையாலும், செல்வ வளத்தாலும், பல்வகைச் சிறப்புடன் வளரலாயிற்று. பல்லவர்பாணி, சோழர்பாணி, பாண்டியர்பாணி, விசயநகர - நாயக்கர்பாணி, மராட்டியர் பாணி, மேல்நாட்டார்பாணி என்றெல்லாம் வகைப்படுத்தப் பட்டதே போல, ஆலயங்களும் பல்வகைப் பாணிகளுடன் கட்டப்படலாயின. இவ்வரிசையில் தமிழகக் கட்டடக் கலை வளாகத்தில், தம் பெரிய மனையமைப்பிலும் ஆலய அமைப்பிலும் நகரத்தார்பெருமக்கள் பெரும் ஈடுபாட்டுடன் தம் குலமரபுடன் கூடிய தனி முத்திரைகள் பதித்துள்ளனர். இவற்றையெல்லாம் மிக விளக்கமாகக் கூறலாம்; எனினும் சுருக்கமாக ஏற்புடைய சில செய்திகளை மட்டும் பண்பாட்டு அடிப்படையில் பின்னர்க் காண்போம்.

1. முருகு அல்லது அழகு, பக். 54-55

2.4. கோயில் அமைத்தல்:

சிற்றூர்களிலும், பேரூர்களிலும் மக்களின் வசதிக்கும் வாய்ப்புக்கும், சிறப்புக்கும் உகந்த வகையில், சிறு தெய்வங்களுக்காகவும், பெருந்தெய்வங்களுக்காகவும், சிறு கோயில்களாகவும், பெருங்கோயில்களாகவும் கட்ட முற்பட்டனர். அவ்வாறு கட்டிய கோயில்கள் தமிழ்நாட்டில் எண்ணிலவாகக் காணப்படுகின்றன. முதற்கண் பெருங்கோயில்களைப்பற்றி ஆராய்வோம்; பிறகு, சிறு கோயில்களைப்பற்றி நாட்டுப்புறவியற் பார்வையில் விரிவாகக் காண்போம்.

சிற்பநூல் விதிகளை ஆகம அடிப்படையில் பின்பற்றி ஆலயங்களை அமைத்தமையால் நாடு நலமும் வளமும் பெற்றது என்பர்; இது சமய நம்பிக்கையாகும்.

சைவ ஆகமங்களில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் பாதங்கள் உண்டு. அவற்றுள் **கிரியை** என்ற பகுதியில் **கர்ஷணம்** (பெறுதல்), **பிரதிட்டை** (நிறுத்துதல்), **உற்சவம்** (கண்டல்). **பிராயச்சித்தம்** (கழுவாய்) என்ற நால்வகை முறைகள் கூறப்பெறும் அவற்றில் **காமிகாகமத்தில்**, **கர்ஷணம்** என்ற தலைப்பின் கீழ், **கிராம, நகர ஆலய அமைப்புக்கள்** மிக விளக்கமாகக் காணப்பெறுகின்றன. **காரணாகமம்**, சுப்ரபேதாகமம், **கிரணாகமம்** முதலிய சைவ ஆகமங்களிலும் ஓரளவு கூறப்பட்டுள்ளன என ஆகமநூல் வல்லவர்கள் கூறுவர்.

இந்த முறைகள் சைவ **ஆகமங்கள்** தவிர, வேதத்தின் அங்கமாகிய **கல்ப சூத்திரங்களிலும்**, சிற்ப நூல்களாகிய **பானு சாரம், மயமதம், மகாவிசுவகர்மீயம், வாஸ்துவித்யை, காசிபம்** முதலியவற்றிலும், **கௌடில்ய அர்த்தசாத்திரம், சுக்கிரநீதி** ஆகியவற்றிலும், **புராணங்களிலும்** ஆங்காங்குக் கூறப்படுகின்றன என்று சிற்பியர் கூறுவர். சிவாகம முறைப்படி, திருக்கோயில் கட்டுதற்கு முதற்கண் **காலநிர்ணயம்** செய்தல் வேண்டும். **காலத்தை** யொட்டியே **இடஅமைப்பு**, சிறப்பிடம் பெறும். இவையெல்லாம், ஆலயத்தில் எழுந்தருளச் செய்யும் **திருமேனி** (மூர்த்தம்) எத்தகையது என்பதைப் பொறுத்தே அமையும் என்று சிற்பிகள் கூறுவர்.

2.5. கோயிற் கட்டடம் - திட்டம்:

புறச்சமய ஆலயங்களாயினும், அகச் சமய ஆலயங்களாயினும் கட்டடம் தொடங்குதற்கு முன், ஆலயம் அமைத்தற்குரிய நோக்கத்தை முன் வைத்து அதற்கேற்பத் திட்டவரைவினை மிக விழிப்புடன் தீட்டிக் கொள்வர் அது பெரும்பாலும் ஆகம நூல் விதிப்படியே அமையுமென்று கூறலாம்.

இந்துமதக் கோயில்களாகிய சிவன் கோயில், திருமால் கோயில், அம்மன் அல்லது சக்திகோயில், கணபதி கோயில், குமரன் கோயில், சூரியன் கோயில், மற்றும் கிராம தேவதைகளுக்கான கோயில்கள் ஆகியவை **வாஸ்து** சாத்திரமாகிய கட்டடக் கலைநூலைப் பின்பற்றியே அமைக்கப்படுவது மரபாகும். **சிற்பநூல், மயமதம், விசுவகர்மீயம்** முதலிய சாத்திரங்களில் கூறப்பட்ட விதிகளைபொட்டியே ஒவ்வொரு கட்டடக் கலைச் சிற்பியும் வடிவமைத்துத் தன் பொறுப்பினை நிறைவேற்ற முனைவான். ஏனோ சிற்பநூல்கள் பலவும் வடமொழியிலேயே உள்ளன!

கோயில் வகைகளாகிய **கொகுடிக் கோயில், ஞாழற்கோயில், கரக்கோயில், இளங்கோயில், பெருங்கோயில், மாடக்கோயில், மணிக் கோயில்** முதலியவற்றுள் திருத்தலத்திற்கேற்ப எவ்வகையினைப் பொருத்தமாக அமைக்கலாம் என்று சிற்பி திட்டமிட்டுக் கொள்வான். தேர்ந்தெடுத்த கோயில் வகையினை எந்த இடத்தில் அமைக்கலாமென்றும் சோதித்து இடத்தைக் கோலிக் கொள்வான்; பிறகு, கோயிலைக் கட்டும் காலம், எவ்வகைப் பொருள்களைக் கொண்டு கட்டஇயலுமென்ற திட்டம், கட்டடவுறுப்புக்களின் அளவுகள் (பரிமாணங்கள்), தளவரிசை, விமானம், மண்டப அமைப்பு, நுழைவாயிலமைப்பு, கலசபீடங்கள் உள்ளிட்ட பலவற்றின் கட்டுமானம் பற்றிய வரையறை, கோயிலின் பல்வேறு உறுப்புக்களில் எங்கெங்கு எத்தகைய சிற்பங்களை ஏற்பது என்ற சிந்தனை, குடமுழுக்குக்கேற்ற **வேள்விச்சாலை (யாக சாலை)** முதலிய பல கூறுகள் பற்றியும் திட்ட வட்டமான கொள்கைகள் பூர்வாங்கமாக வகுக்கப் பெறுதல் வேண்டும். உண்மையிலேயே தொடக்கமாகிய அடிப்படை - அத்திவாரம் - போடுவதிலிருந்து திருக்குடமுழுக்கு

முடியும் வரையிலும் ஒவ்வொரு கட்டத்திலும் பிழையேற் படாமல் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு சிறு செய்தியிலும் ஆழ்ந்து சிந்தித்த செயற்பாடு அமையப்பெறுதல் வேண்டும். மருந்து சார்த்துவது திருக்குட முழுக்கினையொட்டி, ஒவ்வொரு கற்சிலையையும் பீடத்தில் பொருத்துவது எனப் பொதுவாக நினைக்கலாம்; ஆனால், அதிலும் கூடச் சிலவேளை களில் தடையேற்பட்டு விடலாம். எடுத்துக்காட்டாகத் தஞ்சைப் பெரிய கோயிலில் ஆவுடையாரைப் பொருத்த முனைந்தபோது மருந்து இளகிய நிலையில் பொருந்தாமற் போகவே கருவூர்த் தேவர் தம் சித்து வலிமையால் ஆவுடையாரைப் பொருத்திச் சிறப்பித்த வரலாற்றினை ஈண்டு நினைவுகூரலாம்.

கோயில் அமைத்தற்கு நல்வாய்ப்பாக உத்தராயண காலத்தைத் தேர்ந்தெடுப்பர். "உத்தராயணத்தில் மார்கழி, மாசி எனும் இரு மாதங்கள் நீங்கலாகச் சுக்கில பட்சத்தில் பிரதமை, சஷ்டி, அட்டமி, நவமி, சதுர்த்தசி திதிகள் நீங்கலாக ஏனைய சுபதிதிகளில், அனுஷம், புனர்வசு, மகம், அசுவதி, ரோகிணி, சுவாதி, மிருகசீரிடம், திருவாதிரை, அஸ்தம், உத்திரத் திரயங்கள் (உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி), ரேவதி திருவோணம் முதலிய புண்ணிய நட்சத்திரங்களில், புதன், வெள்ளி, வியாழக் கிழமைகளில் சுப லக்கினத்துடன் ஜீவ திருஷ்டிகளுடன் கூடிய சுப வேளையில் அரசன் அல்லது எசமானர் கிராமம் முதலியவைகளில் ஜன்ம நட்சத்திரங்களுக்கு அனுகூலமான தினங்களில் தொடங்கப் பெறுதல் வேண்டும்"[1] என்று குறிப்பிடுதல் காண்க.

காலத்தைத் தேர்ந்து கொள்வது போல் கோயில் அமைப்ப தற்கு ஊரில் நல்ல இடமாகவும் நீர்வசதியுடன் கூடியதாகவும் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பொதுவாக ஊரின் நடுவே சில கோயில்களை அமைப்பதும், காவல் தெய்வங்களுக்குரிய கோயில் களை ஊரெல்லையிலே அமைப்பதும் மரபாகும். ஆலயங்களை யும் வளமனைகளையும் நல்ல இடங்களிலே தேர்ந்தெடுத்து அமைப்பதென்பது தமிழர்தம் சமயவழி நம்பிக்கையாகும்.

1. திருக்கோயில் (திங்களிதழ்), சனவரி, 1977.

அவ்வாறு அமைக்கையில், **பூமிப் பரீட்சை, நீர்ப் பரீட்சை, தானியப் பரீட்சை** ஆகியவற்றை ஆகம விதிகளின்படி செய்வதில் நாட்டம் செலுத்தினர். அவ்வாறான தேர்வுகளைப் பற்றிச் சற்று விளக்கமாகக் காண்போம்.

2.6. பூமிப் பரீட்சையும் தானியப் பரீட்சையும்:

வாழ்வியலுக்கு ஒத்த கட்டடம் அமைப்பதற்குத் தேர்ந்தெடுக்கும் பூமியைச் சோதித்து அறிதல் வேண்டும். மயானமோ செங்கற் சூளையோ மிக அருகில் இல்லாதவாறு பூமி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சிந்தித்துத் தேர்ந்த "குறிப்பிட்ட நல்ல பூமியை முழங்கால் அளவு தோண்டி அதே மண்ணைக் கொண்டு அந்தப் பள்ளத்தை நிரப்ப, மண் மிகுதியானால் **உத்தமம்**, சரியானால் **மத்திமம்**, குறைந்தால் **அதமம்; அதமம் கூடாது**" என்றும், "மேலே சொன்னபடி முழங்காலளவு பள்ளம வெட்டிக் குடங்களில் புஷ்பம் போட்ட நீரை, அந்தப் பள்ளத்திலிட்டு நிரப்பும்போது, புஷ்பங்கள் மேல்நோக்கி மிதந்தும் வலமாகவும் சுழன்றால் **உத்தமம்;** கீழ்நோக்கிக் கவிழ்ந்தும் இடமாகவும் சுழன்றால் கூடாது என்று **காமிகாகமம்** கூறுகிறது"[1] என்றும் **திருவாடானை எம். ஐயாமணிசிவம்** எழுதிச் செல்வது மனங்கொள்ளத் தக்கது.

பொதுவாகக் கோயில்களை **மலைகள், குன்றுகள், ஆற்றங்கரைகள், கடற்கரைகள், மரங்களடர்ந்த சோலைகள்** போன்ற இயற்கையெழில் கொஞ்சும் இடங்களிலே அமைத்தால் மிக நல்லது; காரணம், இயற்கைச்சூழல் மக்கள் மனத்திற்குத் தேவையான அமைதியைத் தரும். இவ்வாறில்லாமல் ஊருக்கு நடுவேயோ, புறத்தேயோ அமைக்க வேண்டுமெனில் சிறப்பான விதிகள் உண்டு; அவ்விதிகளைப் பின்பற்றுகையில் மிகுந்த நாட்டஞ் செலுத்த வேண்டியிருக்கும். இவ்வாற்றான், "நல்ல மரங்கள் நிறைந்ததும், நன்னீர் நிரம்பியதும், வடக்கு அல்லது கிழக்குப் பகுதி தாழ்ந்ததுமான நிலம் கோயில் கட்டச்சிறந்ததாகும்; அதன் மண் சிறந்த மணமுடையதாயும், சகல விதமான நற்செடிகொடிகள் வளரத் தக்கதாயும் இருக்க வேண்டும்"[2] என வருங்குறிப்பினைக் காண்க.

1. திருக்கோயில் (திங்களிதழ்) சனவரி, 1977.
2. தர்மச்சுடர் (திங்களிதழ்), ஏப்ரல், 1988

நீர்ப்பரீட்சை தொடர்பிலும் பின்பற்ற வேண்டிய நல்ல சில குறிப்புக்கள் உண்டு. வளமனைக் கட்டடம் கட்டுதற்கு முன்கூட்டியே நீர்ப்பரீட்சை செய்கையில் தூய்மையுடன் இருத்தல் வேண்டும். "நன்னாளில் நன்முகூர்த்தத்தில் மங்கல வாத்தியம் (நாகசுரம்) முழங்க, அந்நிலத்தில் மஞ்சள் கலந்த அரிசியும் வெண்மலர்களும் தூவிப் பின் நிலத்தின் நடுவே ஒரு கனமுழ அளவிற்குக் குழி தோண்டுவர். மாலையில் அக்குழியைச் சந்தனம் பூக்களால் பூசித்து வணங்கிப் பின் அதில் நீரிட்டு நிரப்புவர். பின் எசமானனோ, ஸ்தபதியோ (சிற்பியோ) அகப் புறத் தூய்மையோடு நிலத்தாயே! உன் வளமை பெருக! எனக்கு நிறை செல்வங்களை அளிப்பாயாக! எனக் கூறிக் குழியினருகே தருப்பைப்புல் பரப்பில் கிழக்கில் தலைவைத்துப் படுத்திருப்பர். மறுநாட்காலையில் அக்குழியில் நீர் எவ்வளவுக்கெவ்வளவு மீதமிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அந்நிலம் மங்களத்தையும் செல்வத்தையும் அளிக்க வல்லது என்பது நம்பிக்கை. நீர் முழுதும் வற்றி ஈரப்பசை மட்டுமிருப்பின் அழிவுதரும்; அது ஆகாது"[1] எனக்குறிப்பிட்டுக் காட்டுதல் காண்க.

வளமனைகள் கட்டுதற்குமுன், சில குறிப்பிட்ட தானியங்களை விதைத்து முளைப்பது கொண்டு அந்தப் பூமிக்குத் தோட பரிகாரம் காண்பர். இதனைத் தானியப்பரீட்சை என்பர்; இதையொட்டி மேலும் சில தேர்வு முறைகள் உண்டு; அம் முறையை ஆலய நிலஏற்பிலே (பூபரிக்ரகம்) பின்பற்றுவர். (உத்தம) நிலம் அமையப்பெறின் அங்குக் கட்டப்படும் கோயில் காமதேனுவைப் போன்று செல்வத்தையும், நன்மையையும் அவ்வட்டார மக்களுக்கு வழங்கும் என்பது நம்பிக்கை.)

தெய்வ ஆலயங்கள் இயற்கையான சில மலைகளின் மேல் அமையும்போது, மேற்கண்டவாறு நிலத்தொடர்பான சோதனைகளைச் செய்ய இயலாது. மணற்பாங்கான இடங்களில் ஆலயங்களை அமைக்கையில் பூமிப்பரீட்சைகளாகச் சிலவற்றைச் செய்த பின்னரே தெரிவு செய்தல் நல்லது.

நம் முன்னோர்கள், கோயில்களுக்கென நிலத்தைத் தேர்ந்தெடுப்பதிலேயே மரபுகளையும், விதிமுறைகளையும் பின் பற்றி

1. திருக்கோயில் (திங்களிதழ்) ஜனவரி, 1977.

யுள்ளனர். அவற்றுள் சிறப்பாகக் காண வேண்டுவது **'நிலத்தின் கீழ் அமைந்துள்ள நீரோட்டம்'** எனக் கூறுவர்.

''பூமிக்கு அடியில் நீரோட்டங்களின் புனிதத் தன்மையை மாற்றக்கூடிய கறுப்புநீர் இருக்கிறது. ஜீவ சக்தியுள்ள புனித நீரோட்டத்தைத் தீய சக்தியுள்ள கறுப்புத் தண்ணீரானது அதனுடன் கலந்து அதைப் பேய்த் தண்ணீராக மாற்றி விடுகிறது. பூமிக்கு அடியில் ஏற்படும் கெட்ட வாயுவின் நாற்றம் வேறு புனித நீரோட்டத்தில் கலந்து அதன் ஆற்றலைக் கெடுத்து விடுகிறது என்பதையும் கண்டுபிடித்தார்கள்.

தெய்வ ஆலயங்கள் கட்டுவதற்கான இடத்தை நிர்ணயிக்கும் போது அந்த இடத்தில் **பூமிக்கடியில் ஜீவ சக்தியுள்ள புனிதமான நீரோட்டப் பாதை இருக்கிறதா** என்பதை நிர்ணயித்துக் கொண்ட பிறகுதான் கட்டவேண்டும் என்று அந்தப் புவியியல் விஞ்ஞானிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

புனிதத்தலங்களின் மேன்மைக்கும் மனிதர்களுடைய உடல் நலக்கேட்டிற்கும் நிலத்தடியில் இருக்கும் நீரோட்டப் பாதைகளே காரணம் என்பது ஆச்சரியமான உண்மையாகும்''[1] எனக் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கதாகும்.

ஆகமக் கோட்பாட்டின்படி, ''தாண்டகம், சர்வதோபத்ரம் முதலிய கிராமங்களின் நடுப்பாகமாகிய பிரம்மபதத்தில் ஆலயங்கள் அமைத்தல் வேண்டும். இந்தஆலயங்கள் இரண்டு முதல் ஐந்து வரை சுற்றுப் பிராகாரங்களுடனும் நான்கு கோபுர வாயில்களுடனும் நடுவில் விமானங்களுடனும் அமைத்தல் வேண்டும்''[2] என்பதும், ''பூ பரீட்சை —— கர்ஷணம் (உழவு) செய்தல், சங்கு ஸ்தாபித்தல், வாஸ்துபதம் செய்து பூசித்தல் முதலிய சோதனைகளைச் செய்த பின்னர் ஆலயம் கட்டுதல் வேண்டும்''[3] என்பதும் சிந்தித்து மனங்கொள்ளத் தக்கவையாகும்.

1. ஓம்சக்தி (திங்களிதழ்) ஏப்ரல், 1990. பக். 25.
2. புள்ளிருக்கு வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி திருக்கோயில், கும்பாபிஷேக மலர், பக், 31.
3. மேலது,

இவ்வாறான முறையேயன்றி உயர் சிறப்பினைக் கொண்ட பெரியவர்களும் நாட்டு நலத்திற்குப் பாடுபட்டவர்களும் அடக்க மான இடத்திலே கோயிலை முறைப்படி எழுப்பிய நிலையில் நிகழ் வழிபாடுவதும் உண்டு. அதனைச் சிறிது கண்டு கொண்டு மேலே செல்வோம்.

2,7. பள்ளிப்படைகள் — கோயில்கள்

தொன்மைக் காலத்தில் போர்க்களத்திலே வீரம் விளைவித்து மாண்ட வீரர்களை அடக்கஞ் செய்த இடத்தில் அவர்களின் பீடும் பெயரும் எழுதி வீரக்கல் நாட்டினர். இதுவே சிலை வழிபாட்டிற்கு வழிவகுத்தது என்பர். வழிபாடு மிகுந்த நிலையில் அந்த இடமே கோயில் வளாகமாக மாறலாயிற்று. அது நிற்க, உயிர்நீத்த வேந்தர்கள் குறுநில மன்னர்கள் ஆகியோரை அடக்கஞ்செய்த புதைகுழிகளின் மீது, அவர்களின் நினைவுச் சின்னங்களாகக் கட்டடங்கள் கட்டப்பட்டன; அத்தகைய கட்டடங்கள் பிற்காலத்தில் ஆலயங்களாக மக்களால் போற்றப்பட்டன. அவற்றைப் **பள்ளிப்படைகள்** என வழங்கி வரலாயினர். தமிழ்நாட்டில் **சோழர்காலத்திலே** இத்தகைய பள்ளிப்படைகள் - கோயில்கள் - எழுப்பப்பட்டன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ''**ஆற்றூர்** என்னும் ஊரில் உள்ள **ஆதித்தேசுவரம்** என்னும் பள்ளிப்படைக் கோயிலைப் **பராந்தகன்** தன் தந்தை (**ஆதித்தன்**) இறந்தபின் நினைவுச்சின்னமாகக் கட்டியுள்ளான். இதுபோன்று மேற்பாடியில் **அரிஞ்சயன்** இறந்த பின்னர் அவனது உடலை அடக்கம் செய்த இடத்தில் **இராசராசன்** தனது 29-ஆவது ஆட்சியாண்டில் **அரிஞ்சிகையீசுவரம்** என்னும் பள்ளிப்படையினைத் தோற்றுவித்தான். இக்கோயில்களில் மன்னர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பினும் அவை வழிபாட்டிற்குரியனவாகவே கருதப்பட்டிருக்கின்றன''[1] என்று **ஏ. ஏகாம்பரநாதன்** எழுதிச்செல்வது பள்ளிப்படைக் கோயில்கள் தொடர்பாகச் சிந்திக்கத் தக்கவை.

நாகர்கோவில், **திருவனந்தபுரம்** நெடுஞ்சாலையில் தக்கலை எனும் ஊரையடுத்துக் **கேரளபுரம்** உள்ளது. அங்குள்ள சிவாலயம்

1. கோயிலும் இறைவழிபாடும், பக். 28

கேரளக்கட்டடக் கலையமைப்பிலும் திராவிடச்சிறப்பக் கலையமைப்பிலும் இருக்கிறது. அக்கோயிலில் மூலவர் சிவலிங்க வடிவில் **மசானமூர்த்தி** அல்லது **மசானருத்திரர்** என அழைக்கப் படுகிறார். அப்பகுதியை அரசாண்ட கேரளவர்மனை அடக்கஞ் செய்து பள்ளிப்படைக்கோயிலாக, அரசாண்ட மன்னர்கள் ஆக்கியுள்ளனர். மாலையில் தீபாராதனை புரிகையில் சுமார் ½ கி.மீ. தொலைவிலிருந்தே தரிசிக்கலாம் என்று கூறுவர். அத்தகைய சிறப்புடன் கூடியதாக அந்தப் பள்ளிப்படைக் கோயில் விளங்கி வருகிறது. தமிழகத்தில் பள்ளிப்படைக் கோயில்கள் பலஉண்டு; அவை பற்றி விரிக்கிற் பெருகும். எனினும், முன்னையோரை நினைவுகூரும்வகையில் நன்றியுணர்வுப் பண்பாட்டுடன் எழுந்தவையே பள்ளிப்படைக் கோயில்கள் ஆகும். அது நிற்க. ஆய்வு நோக்கில் சில குறிப்புக்களைக் காண்போம்.

''அரசர் முதலியோர்க்கு ஈமக்கடன் செய்தல் எனும் பொருளில் பள்ளிப்படை என்பது கையாளப்பட்டுள்ளது. இதற்கியைய, ''எந்தாய் வெறுநிலத்துய்ச் சேர்தியோவென் (று) இனைந்திரங்கிப் பள்ளிபடுத்தார்களே''[1] என வருதல் காண்க. இதன் தொடர்ச்சியாகப் **'பள்ளிப்படைப் படலம்'** என்றே ஒரு படலம் **கம்பராமாயணத்தில்** வருதலை இயைபுடன் சிந்திக்கலாம். பள்ளிப்படை என்பது இறந்த அரசர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்ட கோயில் என்னும் பொருண்மையில் **தென்னிந்தியக் கல்வெட்டுகள்** (iii, 24) போன்றவற்றிலும் காணலாம்.

2.8. ஆலயம் - தத்துவமும் விளக்கமும்

தமிழ் நாட்டில் இந்துக்களும் இசுலாமியர்களும் கிறித்துவர்களும் பல்வகை ஆலயங்களையும் தொழுகையிடங்களையும் அமைத்துத் தத்தம் கடவுளரை வழிபட்டு வருகின்றனர். எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும் சமணர்களும் பௌத்தர்களும் தத்தமக்குரிய வழிபாட்டிற்குரிய இடங்களையமைத்து வழிபட்டு வருகின்றனர். ஆலய அமைப்பில் ஒவ்வொரு மதத்த

1. சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், 293

வருக்கும் தத்துவ நோக்கில் சில விதிமுறைகள் உண்டு. ஈண்டு, இந்துமதத் தொடர்புடன் சைவ ஆலயங்களின் தத்துவம் பற்றிச் சிறிது நோக்குவோம்.

முற்பிறவிகளிலே புரிந்த தவங் காரணமாக அருமையாகப் பெற்ற மானுடப் பிறவியின் மேன்மையை யுணரும் மக்கள், **சரியை, கிரியை, யோகம்,** ஞானம் ஆகிய நெறிகளிலே சென்று சிவ புண்ணியங்களை ஈட்ட முனைவர்; அவ்வாற்றான் மெய் யன்புடன் சிவபரம்பொருளை வழிபட்டுப் பரம புருடார்த்த மாகிய **நித்தியானந்த** முக்தியை அடைவர் என்பது நம்பிக்கை. இதனைக் கொண்டுசெலுத்தும் உத்தியைக் காண்போம்.

சிவபெருமான் எங்கும் வியாபகமாய் விளங்குகிறானெனினும் **சிவலிங்கம்** முதலிய திருமேனிகளையும், குருவையும், **மெய்யடியார்** திருவேடத்தையும் ஆதாரமாகக் கொண்டுள்ளான். அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்று அருள்புரிந்து வருகின்றான். இத்தகைய இடங்களிலெல்லாம் **தயிரில் வெண்ணெய்** போல் அவன் விளங்கி நிற்கிறான் என்பதும், ஏனைய இடங்களிலெல் லாம் பாலில் வெண்ணெய் போல் வெளிப்படாமல் நின்றருள் கிறான் என்பதும் உணரத் தக்க செய்திகளாகும். ஆதலினாலே, அன்பர்களெல்லாம் தம் பரமபதியாகிய சிவபெருமானைக் **குரு, இலிங்கம், சங்கமம்** ஆகிய இடங்களிலே சமய மரபின்படி ஆர்வத்துடன் வழிபாடு புரிதல் நல்லது என்பது ஆன்றோர்கள் காட்டியருளிய சமய நெறியாகும்.

இறைவனே குருவாகவும், இலிங்கமாகவும், சங்கமமாகவும் திருவேடங் கொண்டு ஆலயங்களின் தொடர்புடன் அடியவர் களுக்கு அருள்புரிந்து வருகின்றான். இச் சிறப்பினை அருளாளர் கள் பலரும் உணர்ந்து போற்றியுள்ளனர். பரமஞானியாகிய **தாயுமான அடிகள்,**

"குருலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி
யருள்மயமென் றன்புற் றருள்பெறுவ தெந்நாளோ"[1]

எனப் பாடிச் செல்வது **காண்க.** இது தொடர்பான அருந்

1. தாயுமான சுவாமிகள் பாடல்கள், எந்நாட் கண்ணி, 16

குறிப்புக்களை விவரமாகப் பின்னர்க் காண்போம். ஒரே இடத்தில் இம் மூவகைச் சிறப்புடன் அருள்புரிதல் பற்றிய ஒரு சிறு குறிப்பினை ஈண்டு நோக்குவோம்.

சைவப் பெருமக்களுக்கு அரும்பெரும் நிதியமாக வுள்ளவை **பன்னிரு திருமுறைகள்.** இத்திருமுறைச் செல்வமே ஒரு வகையில் **சிவத்திருவுருவமாகும்.** முதல் திருமுறையில் முதல் பதிகம் - திருமுறையின் தொடக்கம் - கொண்ட திருத்தலம் **சீர்காழியாகும்.** அந்தத் திருத்தலத்திற்குரிய தனிச் சிறப்பாக, அவ்வாலயத்தில் சிவபிரான் **குருலிங்க சங்கமப்** பெருமையை யுணர்த்தும் வகையில் **(குரு - தோணியப்பர், லிங்கம்** - பிரமபுரீசுவரர், **சங்கமம்** - சட்டையப்பர்) திருவேடங் கொண்டெழுந்தருளியுள்ள மாட்சி நினைந்து நினைந்து போற்றத் தக்கதாகும்.

கடவுட் சிறப்புடன் கூடிய ஆலயப் பெருமையை மற்றொரு நோக்கிலே அன்பர்கள் உணர்ந்து உய்யுமாறு, **மூர்த்தி, தலம், தீர்த்தம்** என மூவகை வடிவாய்ச் சிவபெருமான் விளங்கியருளுகின்றான். ஆன்மாக்களை முத்தியாகிய கரையில் சேர்ப்பிக்கத் **திருவருளும் குருவருளும்** அமைதல் வேண்டும் என்பர். மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றையும் முறையாக வழிபடுவோர், பரமாசாரியரால் - சற்குருவால் – உண்மை **ஞானம்** பெறவும், அதுவாயிலாக **முத்திப்பேறு** கொள்ளவும் வாய்ப்பாகும். இது சமய நம்பிக்கையை மக்கட்கு உணர்த்த எண்ணிய **தாயுமான அடிகள்,** தம் **'பராபரக் கண்ணி'**யில்,

> ''மூர்த்தி தலந்தீர்த்த முறையாற் றொடங்கி னர்க்கோர்
> வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''
>
> (156)

என இயம்பிச் செல்வது காண்க.

மூர்த்தி பற்றியும், தலம் பற்றியும், தீர்த்தம் பற்றியும் சிந்திக்கையில் ஆலய **தத்துவம்** ஓரளவு புரிந்து கொள்வதற்கு வாயில் தென்படும்.

மூர்த்தியாகிய சிவன் திருவடிகளை நினையவொட்டாமல் அயர்ப்பிக்கும் **ஆணவம் கன்மம்** மாயை எனும் மும்மல அழுக்கை

ஞானநீரால் கழுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். அவ்வாற்றான் நல்லடியாரொடு கலந்து பழகி அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவமெனவே கண்டு வழிபட்டு வாழப் பழகுதல் வேண்டும். இந்நிலையில் சிவாலயத்தின் இன்றியமையாத் தேவை புலப்படும்.

ஆலய வழிபாட்டில் மூர்த்தியின் பெருமையை ஆன்மாக் களுக்கு உணர்த்தும் வண்ணம், **பிரமன்**, கஞ்சனூர், காஞ்சி, சீகாழி ஆகிய தலங்களிலும், **உமாதேவியார்**, காஞ்சிபுரம், திருமயிலை முதலிய தலங்களிலும், **இராமன்**, இராமேசுவரம், இராமனதீச்சுரம் ஆகிய தலங்களிலும், **விநாயக மூர்த்தி**, திருசெங்காட்டங்குடியிலும், **திருமுருகன்**, திருவிடைக்கழி, கீழ் வேளூர், திருமுருகன் பூண்டி முதலிய தலங்களிலும், **வைரவர்** வடுகூரிலும் ஆலயச் சூழலில் இலிங்கத்தை - மூர்த்தியைப் - பூசித்து வழிகாட்டியுள்ளனர் எனலாம்.

திருக்கோயிலில் நடைபெறும் **நித்தியபூசை, பிரதிட்டை, சிறப்பு விழா, பிராயச்சித்தம்** முதலிய கிரியைகள், கடவுள் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த ஆகம விதிப்படியே நடைபெறத் தக்கவை என உணர்ந்து கொள்வது நல்லது.

திருக்கோயிலும் அங்கே நிகழும் பூசை முதலியனவும் ஆகம வழிபாட்டின் உண்மையைப் புலப்படுத்தி ஆன்மஞானம் உண்டாக்குதற்குச் சிறந்த கருவிகளாகும். அவற்றைச் செம்மை யாக நிகழ்த்துதற்கேற்பவே கோயில்களில் **மண்டபங்களும், தூபி களும், பிராகாரங்களும், கோபுரங்களும்** பிறவும் அமைக்கப் பட்டுள்ளன.

மானுடவுடலில் **மூலாதாரம், மணிபூரகம், சுவாதிட்டானம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை** ஆகிய ஆறாதாரங்கள் அமைந் திருப்பது போலவே, புறத்தே காணப்படும் திருக்கோயிலும் கருப்பகிரகம் முதலிய மண்டபங்கள் ஆறாதாரச்சொரூபமாய் விளங்குகின்றன.

உலகிலும், உடலிலும் உள்ள தத்துவங்களை மக்கள் உணர் வதற்கும், உணர்ந்தொழுகுவதற்கும், உய்வதற்குமான புலப்

பாட்டமைப்பு ஆலய வடிவமைப்பில் ஆன்றோர்கள் கண்டுள்ளனர் என்பதற்கு மேலும் சில சான்றுகளைக் காண்போம்.

ஆலய அமைப்பிலே ஒழுங்கும் கட்டுப்பாடும் ஆன்றோர் அங்கீகாரமும் இருந்தல் வேண்டும். இதுவே சமய வழிக் கோட்பாடும் மரபும் ஆகும். எங்ஙனமெனில், உலகத்தில் கண்டங்களும், நாடுகளும் பலவாக இருப்பினும் உலகப் படத்தையோ தேசப்படத்தையோ வரைகையில் கணக்கு முதலிய விஞ்ஞான அணுகுமுறைகளைக் கையாண்டு உலகமே ஒப்புக் கொள்ளும் வகையில் அறிஞர்கள் சிந்தித்தே ஒருவகை முடிவிற்கு வந்திருக்க வேண்டும்; அங்ஙனமே ஆலய அமைப்பிலும் உலகம் ஒப்புக் கொள்ளக்கூடிய ஆகம விதிகளையும் மெய்ப் பொருளியலுண்மைகளையும் ஏற்றுச் செயற்பட்டிருக்க வேண்டும்.

எல்லாம் வல்ல பேரருளாளனாகிய சிவபிரான் குரு லிங்க சங்கமம் எனும் மூவகை வடிவங்களில் - திருக்கோயில் (சீர்காழி) தொடர்புடன் உயிர்களையெல்லாம் ஆட்கொண்டு காத்தருள்கிறான் என்பதை முன்னரே கண்டோம். அதனைத் தத்துவ விளக்கத்துடன் சண்டுச்சிறிது காண்போம்.

இலிங்கம், குரு, சங்கமம் எனும் மூவகைத் திருவடிவங்களும் இறைவனுக்கு முறையே மனம் வாக்கு காயம் எனும் முக்கரணங்களாகத் திகழ்வதை உணர்ந்துள்ளனர் சமயஞானியர். தன் மனமாகிய சிவலிங்கம் உயிர்களின் ஆணவத்தைப் போக்குதற்காகவும், தன் வாக்காகிய குருவடிவம் மாயாமலத்தைப் போக்குதற்காகவும், தன் உடம்பாகிய சங்கம வடிவம் நல்வினை தீவினையாகிய கன்ம மலத்தை நீக்குதற்காகவும் தானே படைத்துக் கொண்டுள்ளான் இறைவன் என்பது சிந்திக்கத் தக்கதாகும். இத்தகைய உபாயத்தாலன்றி வேறுவகைகளில் உயிர்களைப் பற்றியுள்ள மும்மலங்கள் அழியமாட்டா என்பதும் மனங் கொள்ளத்தக்கதாகும். இதனை,

"சத்தரிய லிங்க குரு சங்க மத்தான்
ஏகபரன் மனம் வாக்குக் காயம் ஆகும்
வாய்த்த மனம் சிவலிங்கம் ஆகும்; மூல
மலமகற்றும்; குருவகும் சேர் வாக்கு, மாயை

தீர்த்தருளும்; சங்கமமாம் மேனி தன்னால்
திராத இருவினையாம் கன்மம் நீங்கும்
ஆர்த்த மலம் மூன்றகற்றும் குறியீதாகும்
அல்லதுமற் றொன்றாலும் அகன்றி டாதே''

எனும் ஆன்றோர் திருவாக்கால் தெளிவாக வுணரலாம்.

2.9. மானுட உடலுறுப்புக்களும் ஆலய உறுப்புக்களும்:

இறைவன் இயற்றிய படைப்புக்களுள் மிக மேலான படைப்பாக மானுடப் படைப்பு அமைந்துள்ளது என்பர். காரணம் மானுடன் ஒருவன் தான் தன் சிந்தனைத் திறத்தால் தன்னையும் தன் ஆன்ம நாயகனையும் தன்னைச் சுற்றியுள்ள உலகப் பொருள்களையும் காரண காரியத் தொடர்புடன் அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிறான். மேலும், பிறப்பின் நோக்கமறிந்து அதற்கேற்ற நெறியில் செல்வதற்குச் சிந்தனைத் தெளிவை நன்கு பயன்படுத்தும் நிலையில் உள்ளான்.

அருந்தவ முனிவர்களின் அருட்காந்தச் சூழலும் மக்களின் நல்வாய்ப்புமே ஆலயம் எழும்பக் காரணமாயின. அத்தகைய ஆலயம் மானுட உடலின் அமைப்பை ஒப்புமை கொள்ளலாயிற்று. தேவ ஆலயம் என்பது உடலென்னும் ஆலயத்தின் புறச் சின்னமாகவே கொள்ளத் தக்க நிலை ஏற்பட்டதால் அதனை மக்கள் தமக்குத் தோன்றியவாறெல்லாம் அமைத்துவிடலாகாது என ஆன்றோர்கள் கருதினர். கோயிலின் வடிவ அமைப்பு உடலின் மூல அமைப்பாகிய தத்துவங்களுக்கு ஒத்திருக்க வேண்டும் என்ற நியதி தோன்றியது. அதற்கேற்ப அருளாளர்கள் மானுட உடம் புறுப்புக்களையும் ஆலய உறுப்புக்களையும் ஒருங்கே நினைவு கூரும் வகையில் கூறியும் எழுதியும் வரலாயினர். எடுத்துக் காட்டாகத் **திருமூலர்**,

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே''[1]

---

1. திருமந்திரம், 1792.

எனக் குறிப்பிட்டுச் செல்வது காண்க.

சிற்ப நூலை மையமாக வைத்துக் காண்கையில் உடலுறுப்புக்களும் ஆலய உறுப்புக்களும் ஒப்புமையாவது வருமாறு:

1. சிரம் (தலை) — கருப்பக்கிரகம்
2. கழுத்து — அர்த்த மண்டபம்
3. மார்பு — மகா மண்டபம்
4. கைகள் — பிராகாரங்கள்
5. துடை — நிருத்த மண்டபம்
6. முழங்கால் — ஆத்தான மண்டபம்
7. பாதங்கள் — மகா கோபுரம்

இம்முறையே யன்றி இதனில் சிறிது வேறுபாடு கொண்டு, கோயிலுறுப்புக்களை உடலுறுப்புக்களோடு உவமைப் படுத்துவது உண்டு. அது வருமாறு:

கருப்பக் கிரகத்தைச் **சிரசு** எனவும், அர்த்த மண்டபத்தை **முகம்** எனவும், அந்தராள மண்டபத்தைக் **கழுத்து** எனவும், மகா மண்டபத்தை **மார்பு** எனவும், மணிமண்டபத்தை **வயிறு** எனவும், உட்பிராகாரத்தைத் **தோள்கள்** எனவும், இரு பிராகார இடைவெளியை **விலாப்புறங்களுக்கும் கைகளுக்கும் உள்ள இடைவெளி** எனவும், பிராகாரப் பலகணிகளை **நாசிகள்** எனவும், விக்கிரகத்தை (கருப்பக் கிரகச் சிலையை) **ஆன்மா** எனவும், கருப்பக் கிரக நிலைத் தூண்களைக் **கண்கள்** எனவும், அந்த நிலையிலுள்ள கல்லை **நாசி** எனவும், சுவர்க்கற்களை **எலும்புகள்** எனவும், தூண்களை **நரம்புகள்** எனவும், ஏழு மதில்களை **இரத்தம், எலும்பு, சுக்கிலம், தசை, மச்சை, தோல், மூளை** ஆகிய **சப்த தாதுக்கள்** எனவும் விளக்கமாகக் கூறுவர் சான்றோர்.[1] கோயில்களில் **ஐந்து** மதில்கள் அமைகின்ற போது அவை அன்ன மயம் முதலிய பஞ்ச கோசங்களாகவும், **மூன்று** மதில்கள் அமைகின்ற போது அவை **தூலம், சூக்குமம். காரணம்** ஆகிய மூவகைச் சரீரங்களாகவும் கருதத் தகும் என்பர்.[2]

1. இராமகிருஷ்ண விஜயம் [திங்களிதழ்], மார்ச்சு 1990
2. மேலது

தமிழ்நாட்டுக் கோயில்கள் **அடி, கால், கூரை, கழுத்து, தலை,** சூடம் ஆகிய உறுப்புக்களைக் கொண்டு விளங்கும். கோயிலின் அடிப்பகுதியை **அதிட்டானம்** என்பர். அஃது **உபானம், சகதி, குமுதம், பத்மம், பட்டிகை** முதலிய பல பகுதிகளைக் கொண்டு விளங்கும். அவற்றைச் சிற்பியின் கற்பனைக்கேற்ப மாற்றி மாற்றி அமைப்பதால் அடிப்பகுதிகள் அழகுடன் தோற்ற மளிக்கும். கட்டடத்தின் உயரத்தினைப் பொலிவுற உணர்த்து வதற்கும் அழகுபடுத்துவதற்கும் உபபீடத்தை அமைப்பது உண்டு. இவ்வாறான கட்டட உத்தியினைத் **தஞ்சைப் பெரு வுடையார் கோயிலிலும் கங்கை கொண்ட சோழிச்சுரத்திலும்** கண்டு களிக்கலாம். பொதுவாகப் பல ஆலயங்களிலும் உபபீட மின்றி அடிப்பகுதி மட்டும் அமைந்திருக்கும். அதிட்டானமே, மேலுள்ள ஆலயக் கட்டடத்தைத் தாங்கி நிற்றலால் அதனை வலிவுடனும், அழகுடனும் அமைப்பதில் சிற்பிகள் நாட்டஞ் செலுத்துவர்.

அடிப்பகுதியின் மேலுள்ள பகுதி **கால்** அல்லது **சுவர்** எனப்படும். சுவர்களைக் கருங்கல்லாலும், செங்கல்லாலும் அமைப்பர்; இக்காலத்தில் சலவைக் கல்லாலும் அமைத்து விடு கின்றனர். கருங்கற் சுவரெடுக்கையில் வெளிப்பகுதியை வனப் பூட்டும் வகையில் அறைத்தூண்களையும், மாடக்குழிகளையும் மகர தோரணங்களையும் அமைக்கின்றனர்.

சுவரின் மேலே அமையும் பகுதி **பிரசுதரம் - கூரை -** ஆகும். அறையை மூடும் உறுப்பாகிய கூரையின் விளிம்பில் **பூதவரி, யாளி வரி, கொடுங்கை** எனும் உறுப்புக்களை அமைப்பர். கூரைக்கு மேல் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட **தளங்கள்** அமைக்கப் படும். சிற்றூர்ப் புறங்களில் சிறு கோயில்கள் ஒரே தளத்துடன் அமைப்பதே பெரும்பான்மையாகும்.

மேலே அமைக்கப்படும் சிகரத்தின் அமைப்பையொட்டிச் **சதுரமாகவோ வட்டமாகவோ எண்பட்டையாகவோ** அமைக்கப் படும் **கிரீவப்** பகுதியே தமிழில் கழுத்து என வழங்கப்படுகிறது. இப்பகுதியின் நாற்புறத் திக்குகளிலும் **நான்முகன், திருமால், சிவன்** அல்லது **இந்திரன்** ஆகியோரின் திருவுருவங்கள் அமைத்துப் பாதுகாவல் பெறுகின்றனர் என்பது சமய நம்பிக்கை.

கிரீவத்துச்கு மேல் கட்டப்படும் பகுதியைச் **சிகரம்** அல்லது **தலை** என்பர். இது எண்பட்டையாகவோ, சதுரமாகவோ, வட்டமாகவோ அமைக்கப்படும். கட்டடக்கலை நோக்கிலே தலைப்பகுதியின் அமைப்புக் கொண்டு கோயிலைப் பலவகை யாகப் பிரிக்கலாம். தலைப்பகுதி எண்பட்டை வடிவிலிருந்தால் **'திராவிடசிகரம்'** என்றும், சதுரமாக இருந்தால் **'நாகரசிகரம்'** என்றும், வட்டமாக இருந்தால், **'வேசரசிகரம்'** என்றும் கூறலாம். இவ்வமைப்புகள் அனைத்தும் தமிழகத்தில் காணப்படுகின்றன என்பது மனங்கொள்ளத்தக்கது. எனினும், தமிழ்நாட்டில் வேசர சிகர அமைப்புடைய கோயில்களே மிகுதி என்பதும் கருதத்தக்கது.

2.9.1. ஆலயம் - மெய்ஞ்ஞான விளக்கம்:

ஆன்மநல முன்னேற்றத்துக்கு வழிகோலும் ஆலயத்தைப் பல்வகை ஆன்ம சொரூபமாகவும் காணும் தத்துவ நோக்கும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. ஒரே ஆன்மாவே அதன் அறிவு நிலையைப் பொறுத்தும், **அது** சார்ந்து நிற்கும் பொருளைப் பொறுத்தும் **பூதான்மா, அந்தராத்மா, தத்துவான்மா, சீவான்மா, மந்திரான்மா, பரமான்மா எனப்படுவது** ஆகமக் கருத்து. ஆன்மா வின் இந்த ஆறு நிலைகளையும் அறிகுறியாக உணர்த்துவதே சிவாலயங்களிலுள்ள

1.	முன்கோபுரம்	ஸ்தூலலிங்கம்	பூதான்மா
2.	மகாபலிபீடம்	பத்திரலிங்கம்	அந்தரான்மா
3.	கொடிமரம்	துவஜலிங்கம்	தத்துவான்மா
4.	மூலவர்	சதாசிவலிங்கம்	சீவான்மா
5.	ஆசாரியார்	ஆன்மலிங்கம்	மந்திரான்மா
6.	பரவெளி	அகண்டலிங்கம்	பரமான்மா

என்பனவாம். தைத்திரீய உபநிஷத்திலும் அதையொட்டிய வேதாந்த பாஷ்யங்களிலும் இவ்வாறையும், **அன்னமய ஆத்மா, பிராணமய** ஆத்மா, **மனோமயஆத்மா, விஞ்ஞானமய ஆத்மா, ஆனந்தமய** ஆத்மா, **பிரத்தயக் ஆத்மா** என்றும் சமய ஆன்றோர்கள் விளக்கங்காண்பது மிகவும் சிந்தித்தற்குரியது.

மானுடன் தன்னை உடம்பென்றும், குணங்களென்றும், அறிவென்றும், காற்றென்றும் நினைப்பது சரியன்று; இவற்றிற் கெல்லாம் அப்பாற்பட்ட **'ஆன்மாவே அவன்'** என்று உணர வைக்கும் **மெய்ஞ்ஞானத்தை விளக்குவதே ஆலயம்** என்பது தெளிவு.

3. திருக்கோயிலமைப்பும் சூரிய வழிபாடும் - கலை நுட்பக் குறிப்பு:

புராணக் கூற்றிற்கிணங்கச் சூரியன் வழிபட்ட தலங்களாகச் சில கூறப்படும். அது நிற்க, ஆண்டு தோறும் குறிப்பிட்ட சில நாள்களிலே சில நாழிகைகளில் சூரியக் கிரணங்கள் கோபுர வாயில் வழியே கருவறையிலுள்ள தெய்வத் திருமேனியில் படுமாறு கட்டடச் சிற்பியர் வான நூற்புலமையும் பொறியியல் தேர்ச்சியுங்கொண்டு, கோயில்களைத் திட்டமிட்டு, அமைத்துள்ளனர். அவர்களின் கட்டடக்கலைத் திறமை கோயிற்கலைத் தொடர்பில் மிகவும் போற்றற்குரியதாகும்.

1. ஆதிசேடனும், சூரியனும் **பூசித்த** தலமெனப் போற்றப் பெறுவது **கும்பகோணத்திலுள்ள நாகேசுவர சுவாமி கோயிலாகும்.** ஊர் மத்தியில் அமைந்துள்ள இக்கோயிலில் ஆண்டுதோறும் **சித்திரை மாதம் 11, 12, 13** ஆகிய தேதிகளில் காலையில் சூரியக்கதிர்கள் நாகேசுவர சுவாமி திருமேனி (இலிங்கம்) மீது படுவதைக்காணலாம்.

2. தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரத்திற்கு 5½கல் தொலைவிலுள்ள **புறவார் பனங்காட்டூர்** (பனையபுரம்) **பனங்காட்டீசுரர்** திருக்கோயிலில், ஆண்டுதோறும் **சித்திரை மாதம் முதல்தேதி முதல் ஏழாந்தேதி வரையில்** ஒவ்வொருநாள் காலையிலும் சூரியன் உதிக்கையில் கிரணங்கள் முதலில் சுவாமி மேலும், பின்பு தேவியார் (அம்பிகை) மேலும் விழுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

3. வேதங்கள் பூசித்த திருத்தலமாகிய **திருவேதிகுடி** (தஞ்சைமாவட்டம்) வேதபுரீசுவரர் கோயிலில் ஆண்டுதோறும் **பங்குனி 13 - 15 தேதிகளில்** உதயத்தில் சூரிய பூசை நடைபெறுதலைக் காணலாம்.

மேலும், புள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்), காஞ்சிக்கயிலாசநாதர் கோயில் போன்ற சில கோயில்களிலும் இவ்வாறான சூரிய பூசை நடைபெறுகிறது.

காலைக் கதிரவனொளி இறைத் திருமேனியிலே விழும் வகையில் மேற்கண்ட தலங்கள் அமைந்திருக்க, மாலைக் கதிரவனொளி இறைத்திருமேனியில் விழும் வகையில் அமைந்துள்ள சில தலங்கள் உள்ளன; அவை வருமாறு:

1. அட்ட வீரட்டானங்களுள் ஒன்றான **திருக்கண்டியூர்** வீரட்டேசர் திருக்கோயில் மேற்குப் பார்த்த சன்னிதியை யுடையது. இங்கே மாலைக் கதிரவனின் ஒளிக்கதிர்கள் சுவாமி மேல் விழுவதை ஆண்டுதோறும் **மாசி மாதம்** 13 — 15 தேதி களில் கண்டு களிக்கலாம்.

2. காரைக்காலுக்கு அருகே அமைந்துள்ள **திருத்தெளிச்சேரி** (காரைக்கோயிற் பத்து) **பார்வதீசுரர் ஆலயம்** மேற்குப் பார்த்த சன்னிதியையுடையது. இங்கே ஆண்டுதோறும் **பங்குனி 13 ஆம் தேதியிலிருந்து 10 நாட்களுக்குச்** சூரிய கிரணங்கள் சுவாமிமேல் விழுவதைக் கண்டு போற்றி வழிபடலாம்.

3. திருவாரூருக்குத் தெற்கே 8 கல் தொலைவிலுள்ள **திருநெல்லிக்கா நெல்லிவனநாதேசுரர்** ஆலயம் மேற்குப் பார்த்த சன்னிதியினையுடையது. ஆண்டுதோறும் **ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சம் சதுர்த்தசி முதல் ஏழுநாட்களும், மாசிமாதம் முதல் ஏழு நாட்களும்**, மாலைக் கதிரவனின் செந்நிறக் கதிர்கள் சுவாமி மேல் விழுவதைக் கண்டு வியந்து போற்றி நிற்கலாம்.

திருக்கோயில் வழிபாட்டிற்கு இயற்கைத் தெய்வங்களுள் சிறப்பிடம் பெறுவது சூரியன். **சூரியனே** இவ்வாறு நாட்டங் கொண்டிருக்கையில் மக்கட் பிறப்பெய்தி வீடுபேறு எனும் உய்தி நாட வேண்டியவர்கள் எங்ஙனம் வழிபாடியற்ற முந்தி நாட வேண்டுமென்பதே இத்தகைய கோயில்களால் அறிய வேண்டிய சமயப் பண்பாட்டுச் செய்தியாகும். சிற்பியர் அக்காலத்திலே கொண்டிருந்த கட்டடக் கலைத் திறத்தையும், சமய நோக்கினையும் நல்லாற்றுப் படுத்தும் பாங்கினையும் நினைந்து நினைந்து, மகிழ்ந்து மகிழ்ந்து போற்றலாம்.

(இக் கட்டுரைக்கான செய்திக் குறிப்புகள் வ. த. சுப்பிரமணிய பிள்ளை எழுதிய 'சிவஸ்தல மஞ்சரி' யிலிருந்து திரட்டப் பெற்றவை)

மேற்கூறிய செய்திகள் ஒரு புறமிருக்கப், பாடல்பெறாத சில திருக்கோயில்களிலும் சூரியக்கதிர் மூலவர் சிலையில் படுமாறு கட்டடக் கலைத்திறன் கையாளப்பட்டுள்ளது என்பதும் சிந்திக்கத் தக்கது.

எடுத்துக்காட்டாக வணங்காமுடி மரபினர் எடுப்பித்த தார மங்கலத்தைக் காணலாம்.

தாரமங்கலம் கயிலாசநாதர் கோயில் வாசலில் கொடிமரத்து அடியிலே ஒரு சின்ன நந்தியைக் காணலாம். கோயில் மேற்குப் பார்த்து அமைக்கப் பட்டுள்ளதால், மேற்கால் சூரியன் மறையும் போது அந்திக் கதிர் நந்திமீது படும். அப்போது நந்தியின் கொம்பு களில் படும் ஒளிநிழல், உள்ளே கருவறையிலிருக்கிற மூலவர் மீதுசந்திரப்பிரபை மாதிரி விழுவது வியக்கத்தக்க காட்சியாகும்.

3.1. திருக்கோயில் அமைப்பும் சந்திர வழிபாடும் - கலைநுட்பக் குறிப்பு:

சில திருக்கோயில்களில் நிலை (தாபிதம்) கொள்ளச் செய்த மூலவிக்கிரகம் கோயில்வாசலுக்கு நேரே அமைந்திருக்கும். கிழக்கு நோக்கிய கோயிலில் கருப்பக் கிரகத்திலுள்ள கடவுட் சிலை மீது காலையில் சூரியக்கதிர்கள் படுமாறும், மேற்கு நோக்கிய கோயிலில் கடவுட்சிலை மீது மாலையில் சூரியக்கதிர்கள் படுமாறும் திட்டமிட்டுக் கட்டிய கோயில்கள் தொடர்பாகச் சில செய்திகளைக் கண்டோம். சூரியக் கதிர்களைப் போலச் சந்திரக் கதிர்கள் கடவுட்சிலை மீது படுமாறு திட்டமிட்டுக் கட்டப் பட்ட கோயிலும் தமிழ்நாட்டிலே உண்டு.

திருநாகேச்சுரம் சுவாமி கருப்பக் கிரகத்தின் பக்கத்தில் அம்பாள் சன்னிதியைக் காணலாம். அந்த அம்பிகை மீது ஒவ்வொரு ஆண்டு கார்த்திகை முழுநிலவன்றும் (மேகமூட்ட மில்லாதிருப்பின்) சந்திரவொளிக் கற்றைகள் பட்டு விளக்கந் தருதலைக் காணலாம். சந்திரவொளித் தொடர்பு கொண்ட

அந்த அம்மையைப் '**பிறையணி வாணுதலாள்**' என அழைத்து மகிழ்கின்றனர்.

4. கருவறை (கருப்பக்கிரகம்):

கருப்பக்கிரகம் எனும் வடமொழிச் சொல்லைத் தமிழில் **கருவில்** அல்லது **கருவறை** என்பர். திருக்கோயிலில் தெய்வத்தின் நாயகச்சிலை அல்லது **மூலவிக்கிரகம்** நிலையாக இருத்தப்பெற்ற - பிரதிட்டை செய்யப்பெற்ற - அறையே கருப்பக் கிருகமாகும்.

பல்லவ மன்னனாகிய இராசசிம்மன் எனும் **இரண்டாம் நரசிம்மவர்மன்** காலத்திலும், இரண்டாம் **நந்திவர்மன்** காலத்திலுமே கருவறை உட்சுவரில் சிற்ப வேலைப்பாட்டுக்கு இடங் கொடுக்கப்பட்டதே தவிரப் பொதுவாகக் கருவறை உட்சுவரில் சிற்ப வேலைப் பாட்டுக்கு இடங் கொடுப்பது இல்லை. ஆனால் **கருவறைப் புறச்சுவரில் சிலை** வைக்கக் கூடிய **மாடக்குழிகள்** அல்லது சுவர் மாடங்கள் அமைக்கப்பட்டன.

கோயிற் கட்டட உறுப்புக்களான **அந்தராளம்** (இடைநாழி), **மகாமண்டபம், பிராகாரம், தூண்கள், கூரை, பரிவாரக்கோயில்** அல்லது அங்க ஆலயம், **மதிற்சுற்றுச்சுவர், திருச்சுற்று மாளிகை, விமானம், கோபுரம், திருக்குளம், நீராழிமண்டபம், கொடிபீடம், பலிபீடம்** முதலிய அனைத்துக்கும் அடிப்படையான **முதன்மைச்** சிறப்பினையுடையது கருவறையாகும்.

வெளிப்புற மதிலையொட்டிப் பெரிய **வாயிற்புறமாக** அமைவது **கோபுரம்** ஆகும். ஆனால், கருவறைக்கு மேலே கட்டப் பெறும் **விமானமே** கோபுரம் எனக் கருதப்படும் வகையில் மேற்கட்டட அமைப்புக்கள் அமையலாம். அத்தகைய அமைப்புக்கள் **தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், திரிபுவனம் கோயில், தாராசுரம் கோயில்** போன்ற சில இடங்களில் அமைந்துள்ளன; என்றாலும், அவை விமானக் கூறுகளேயன்றிக் கோபுரக்கூறுகள் எனக் கொள்ளுதல் பொருந்தாது.

பொதுவாகக் கோயில் கருப்பக்கிருகத்திற்குத் தனிப் பெயர் இட்டு வழங்கும் வழக்கமில்லை. ஆனால், **அழகர் கோயில்**

கருப்பக்கிருகத்துக்கு, **'நங்கள் குன்றம்'** எனப் பெயர் உண்டு. அஃது இன்றும் வழக்கத்திலும் உள்ளது.

காலத்திற்கேற்பக் கருவறையும் அதன்மேல் கட்டப்படும் அமைப்பான விமானமும் கலைநோக்கில் சிறப்பினைப் பெறுவது உண்டு; அந்த இடத்தைக் கோபுரம் பெறுவதும் உண்டு. கி.பி. 11ஆம் நூற்றாண்டு வரையில், பொதுவாகக் கருவறை விமான அமைப்பில் மிக நாட்டம் செலுத்தி வந்தனர். இது தொடர் பாகச் சிந்திக்கையில், "பாண்டியர் காலத்தில் 12-ஆம் நூற்றாண்டிலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரை, கருவறையின் மேலெழுப்பப்பட்ட **விமானத்தின் முக்கியத்துவம் குறைந்து கோபுர வாயிலின் வளர்ச்சி** தொடங்கலாயிற்று. இக்கோபுரங்கள் பல தளங்களைக் கொண்டுள்ளன,"[1] என்று டாக்டர் **சி. கிருஷ்ண மூர்த்தி** எழுதும் குறிப்பு சிந்திக்கத்தக்கது. கோபுர அமைப்பு விமான அமைப்பினும் ஓங்கி நிற்கலாம்; எனினும், விமானத்தின் கீழ்ப்பகுதியிலுள்ள கருவறைக்குள்ள சமயத் தனிச்சிறப்பு மக்களிடையே ஓரே படித்தரமாக இருந்து வரும்.

4.1. கருவறை - சிறப்புப் பார்வை:

ஆலய வகைகளைக் கண்டு தெளியத் துணை நிற்பவை **கருவறையும் (உண்ணாழியும்) விமானமுமாகும்.** பெரும்பாலும் தமிழ்நாட்டில் கருவறை சதுர அமைப்பில் இருத்தலைக் காண லாம். சில இடங்களில் எண்பட்டை வடிவமாகவும், வட்ட மாகவும் அமைவது உண்டு என முன்னரே கண்டோம்.

பிற்காலச் சோழமன்னர்களின் குலமுதலோனாகிய **விசயா லயன்** சில கற்றளிகள் எடுத்துள்ளான். அவற்றுள், விசயாலய சோழீச்சுரமும் ஒன்றாகும். இது புதுக்கோட்டை வட்டாரத் தில் எட்டுச் சிறு குன்றுகளால் சூழப்பட்ட **நார்த்தாமலை** என்ற சிற்றூரில் **மேலைமலை** என்ற தென்மேற்குக் குன்றின் கீழ்ச் சரிவின் மேலுள்ளது. இக்கோவிலின் நடுவில் முக்கியக் கோயிலும், சுற்றிலும் பரிவாரதேவதைகளுக்கான அறைகளும் (ஏழு சுற்றுக் கோயில்களும்), நந்திக்குத் தனிஅறையும், இவற்றைச் சூழ்ந்துள்ள

1. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் - குடமுழுக்குமலர், 73, பக், 69

கல் மதில்களும் உள்ளன. ''இவையாவும் அஸ்திவாரம் முதல் ஸ்தூபி வரை முழுதும் கருங்கல்லாலானவை; சுண்ணாம்பின் உதவியின்றி நேர்த்தியாக இணைக்கப்பட்டுள்ளன''[1] எனும் குறிப்பு சிந்திக்கத்தக்கது. மேற்குப் பார்த்த விசயாலய சோழீச்சுரத்தில் மேற்கேயும், வடகிழக்கேயும் இரு வாயில்கள் உள்ளன. இங்குள்ள **கருவறை ஓங்கார வடிவமுடையது**. குறுக்கில் 9 அடியும், உயரத்தில் 8 அடியுமுள்ள இதன் வட்டச்சுவர் 5 அடி கனமுள்ளது; நான்கு மூலையிலும் சதுர வடிவு உடையது. இது முழுவதும் 29 அடி சதுரமுள்ள மண்டபத்தில் இருக்கிறது. கருப்பக்கிருகத்திற்கு மேல் அதே மாதிரி இரண்டு தளங்கள் இருக்கின்றன. சிகரம் வரவரக் குறுகிக் கடைசியில் கல் ஸ்தூபியுடையதாய் வட்டமாய் முடிகிறது. இது பல்லவச் சிற்பமான மாமல்லபுரத்திலுள்ள **தருமராச இரதத்தின்** சிகரத்தை ஒத்திருக்கிறது. நாள்கு பக்கங்களிலும் நான்கு **சிம்மலாடங்கள்** இருக்கின்றன அவற்றுக்கு இடையில் கீழ்வரிசையில் நான்கு திக்குகளிலும் நான்கு **நந்திகள்** விளங்குகின்றன. நான்கு புரைகளில் கற்சிலைகள் உள்ளன. மேற்கில் சிவனும், பார்வதியும், தெற்கில் வீணாதர தட்சணாமூர்த்தியும் காணப்படுகின்றனர். கருப்பக்கிருகத்திற்கு முன் ஓர் அர்த்த மண்டபம் உள்ளதையும் காணலாம்.

இந்த அமைப்பினைக் காண்கையில் கோயிற் கட்டட வளர்ச்சியில் கருவறை கொண்டிருந்த தெய்வ நலச் சிறப்பினையும் தத்துவச் சிறப்பினையும் உணரலாம். அஃதாவது, ஓங்கார வடிவினனான சிவபரம்பொருளுக்குக் கருவறை ஓங்கார வடிவமைப்பில் இருந்தமையும், கருவறைச் சிகரம் வரவரக் குறுகித் தூபியுடன் வட்டமாய் முடிவதும், யோகத்தில் ஒருமுகமாய்க் குவித்துப் பெறலாகும் சாதனை உச்சியையும் நினைவுபடுத்தும் கலைக் குறிப்புக்களாகும். ஓங்கார வடிவமுள்ள கருவறையை வட்டவடிவக் கருவறையாகக் கொண்டு, ''அழகர் கோயில், காஞ்சிக் கரபுரீசுவரர் கோயில், நார்த்தாமலை விசயாலயச் சோழீச்சரம் ஆகிய மூன்றுமே வட்டவடிவில் கருவறை

1. இந்தியக் கோவில் கட்டிடக்கலை வரலாறு (டாக்டர் ஆர். வெங்கட்ராமன்). பக். 93

உடையன''[1] என டாக்டர். தொ. பரமசிவன் கூறுவதும் சிந்தித் தற்குரியது.

ஒவ்வொரு பெருங்கோயிலைப் பற்றி ஆராய்ந்தால் முதற் கண் கருவறை தோற்றுவிக்கப்பட்டும், அதனைச் சார்ந்த சில மண்டபங்கள் உடனடியாகவும் / காலப்போக்கிலும் அமைக்கப் பெற்றும் கோயிற் கட்டுமான வரலாறு அமைந்திருக்கும். ஒரே மன்னரால் கட்டப்பெற்ற கோயில்களும் உண்டு; மன்னர்கள் பலர் பல்வேறு கால கட்டங்களில் கோயில் கட்டுமானங்களை விரிவுபடுத்திக் கொண்டே சென்ற வரலாறும் உண்டு.

இந்திய நாட்டில் பெருஞ்சிறப்பினைக் கொண்ட **இராமேசுவரம்** அருள்மிகு இராமநாதசுவாமி கோயில், பாண்டிய மன்னர்கள், இராமநாதபுரம் சேதுபதிகள் முதலியோரின் திருப் பணிகளைக் கொண்டது. எனினும், 'இக்கோயில் கருப்பக் கிருகத்தை இலங்கையிலுள்ள கண்டி மன்னன் **பராக்கிரமபாகுவும்** கட்டினான்''[2] என்பது வரலாறாக அறிகையில் வியப்பேற் படுகின்றதன்றோ!

இலங்கையை ஆண்ட இராவணனைக் கொன்றழித்தவன் இராமன். இதனால் தன்னைப் **பிரமஹத்தி** தோடம் பிடிக்கு மென்பதை யுணர்ந்து, அதனின்று விடுபடுவதற்காக இராமன், சிவபிரானை இலிங்க வடிவில் வைத்துப் பூசித்து வழிபடலானான். இந்த நிகழ்ச்சியால் சிறப்படைந்த திருத்தலமே **இராமேசுவரம்.** இந்தத் தெய்வநலச் சிறப்பிற்குரிய திருத்தலத்தின் மேம்பாட்டுக்குத் தன்னாலான தொண்டினைப் புரிய வேண்டுமென்று சிங்களவனாகிய கண்டி மன்னன், இங்குக் **கோயில் கருப்பக் கிருகத்தை** அமைக்கலானான். இதனால் முன்னொரு காலத்தில் வேற்றுமை பாராட்டாத ஒருவகைப் பண்பாட்டு ஒருமையுணர்வு இருந்தமையை உணரலாம்.

இலங்கை மன்னர்கள் இந்தியப் பண்பாட்டுக்குச் சில வேளை களில் தம் போற்றுதலைப் புலப்படுத்தியுள்ளனர். எடுத்துக்

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஒன்று, பக். 882
2. சிந்துபாடும் சேதுநாடு - வானொலிச் சித்திரத்திலிருந்து தினமணிக் கதிர், 18.11.1984

காட்டாகக் கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டு, இமயத்தில் கல்லெடுத்து வந்து சிலையமைத்துக் **கண்ணகிக் கோட்டம்** அமைத்த சேரன் செங்குட்டுவனது செயலைப் போற்றி நின்றான் இலங்கைவேந்தன் **கயவாகு**; அதன் அடையாளமாகப் பத்தினி வழிபாட்டின் போது நேரே வந்து வழிபட்டு ஆக்கந் தேடினான் என்பது வரலாறு. இதனைக் காண்கையில், இராமேசுவரம் கோயில் கருவறையைக் கண்டி மன்னன் கட்டினான் என்பதும் ஒப்புக் கொள்ளத்தக்க செய்தியாகும்.

பிராகாரங்களின் அளவைப் பொறுத்தும் குறிப்புக்கள் உண்டு. "அதிஷ்டானத்தைச் சுற்றியுள்ளது **அந்தர் ஹாரம்**. அதற்கு வெளியில் உள்ளது **மத்திய ஹாரம்**. அதற்கு வெளியே **மர்யாதி**, அதன் வெளியில் **மகாமர்யாதி** என்று பெயர். அந்தர் ஹாரம் ஒரு தண்ட அளவும், மத்யாதி ஹாரமாகிய இரண்டாம் பிராகாரம் இரண்டு தண்ட அளவும், மர்யாதி என்ற மூன்றாம் பிராகாரம் நான்கு தண்ட அளவும், மகாமர்யாதி ஏழு தண்ட அளவுள்ளதாகவுமிருத்தல் வேண்டும்" என்றும், "**மகாமர் யாதிக்கு வெளியில் நான்கு கோபுர வாயில்கள் இருத்தல் வேண்டும்**. இரண்டாவது பிராகாரத்தில் அக்கினி மூலையில் **பாகசாலையும்**, ஈசானத்தில் **யாகசாலையும்**, கிழக்கு ஈசான மத்தியில் **கிணறும்**, கிழக்கு தென்கிழக்கு மத்தியில் **வாத்திய சாலையும்**, மற்றும் சுற்றுப் புறங்களில் ஆயுத மண்டபம், புஷ்ப மண்டபம் முதலியவும், குபேர திசையில் சயனஸ்தானமும் **இருத்தல் வேண்டும்**"[1] என்று **திருவாடானை** எம். ஐயாமணி சிவம் **விளக்கங் கூறிச்** செல்வது இயைபுடன் சிந்திக்கத் தக்கதாகும்.

5. விமானம் - பெருமையும் வகைகளும்:

கோயிலுறுப்புகளுள் **விமானம்** அல்லது **ஸ்ரீகோயில்** மிகச் சிறந்ததாகும். கோயிலின் மூலத்தானம் அல்லது **கருவறை** மீது எழுப்பப்படும் கட்டட அமைப்பே விமானமாகும் இதனைத் **தூலலிங்கம்** என்றும், உள்ளிருக்கும் தெய்வம் **சூக்குமலிங்கம்** என்றும், பலிபீடம் **பத்ரலிங்கம்** என்றும் கருதப் பெற்று வழி படப் பெறும்.

---

1. திருக்கோயில், சனவரி, 1977

"தூய விமானமுந் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமம்
ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே"[1]

என வருந் **திருமூலர்** திருவாக்கும் இயைபுடன் சிந்திக்கத்தகும்.

கோயிலில் உயரமான கட்டட அமைப்புகளாகக் கோபுரமும் விமானமும் அமையும். கோயிலில் புகுவதற்கு வாய்ப்பாக அகன்றுயர்ந்த வாயிலின் மேற்கட்டப்பெறும் கட்டட அமைப்பினைக் **கோபுரம்** என்றும், கருவறையின் மேல் எழுப்பப்பெறும் அமைப்பினை **விமானம்** என்றும் தெளிதல் வேண்டும்.

தஞ்சைப் பெரிய கோயிலைக் காண்பவர்களுள் சிலர் தவறுதலாகத் தஞ்சை விமானத்தைப் பார்த்துக் கோபுரமெனக் கூறி வருகின்றனர். திராவிடச் சிற்பியரின் தனிச் சிறப்புமிகு கலைப் படைப்பாகிய **தஞ்சை விமானம், இந்தியக் கட்டடக் கலை மேம்பாட்டிற்கு ஓர் உரை கல்லாகும்.** இதனைப் புலப்படுத்தும் **பேராசிரியர் பெர்சி பிரௌன்** (Prof. Percy Brown), சிறப்பாக எழுதுகையில், "Unquestionably, the Finest single creation of Dravidian Graftsman, the **Tanjore Vimanam** is the touch - stone of Indian Architecture as a whole" எனக் குறிப்பிடுவது இயைபுடன் சிந்திக்கத் தக்கதாகும்.

கோயிலமைப்பில் **தூங்கானை மாடம்** (கஜப்பிருஷ்டம்) விமானச் சார்பிலே மிகவும் சிந்திக்கத்தக்க சிறப்பான கட்டட அமைப்பாகும்.

வைணவத் திருத்தலங்களாகிய **திவ்யதேசங்களின்** சிறப்பிற்கும் விளக்கத்திற்கும் அறிகுறியாகவும் **விமானம்** இருந்து வருகிறது. எத்தகைய விமானங்களுடன் திவ்ய தேசங்கள் அமைந்துள்ளன என்பதை அழகனுபவத்துடன் கட்டடக்கலை நோக்கில் காண்கையில் வைணவர்களின் சமய ஈடுபாட்டினைப் புரிந்து கொள்ளலாம். இவ்வாற்றான், சில விமானங்கள் பற்றிச் சிறிது காண்போம்.

1. திருமந்திரம் 1718

வைணவர்கள் விமானங்களுக்குப் பெயரிடுகையில், ககநாக்ருதி விமானம், புண்ணியகோடி விமானம், ஹேமகூட விமானம், புஷ்கல விமானம். உச்சச்ருங்க விமானம், ஆனந்த விமானம், கருட விமானம், தாரக விமானம், பிரணவ விமானம், அஷ்டாட்சர விமானம், கலியாண விமானம், வேதசக்கர விமானம், சாரஸ்ரீகர விமானம், விசயகோடி விமானம், மங்கள விமானம், உத்பல விமானம், உத்தியோக விமானம், வாமன விமானம், வைதிக விமானம், அட்டாங்க விமானம், சௌந்தரிய விமானம் முதலிய பெயர்களை இட்டு வழங்கி வருகின்றனர். ஈண்டு அவற்றை விரிக்கிற் பெருகும். எனவே, சில விமானங்களைப் பற்றி மிகச் சுருங்கிய அளவில் சமய அணுகு முறையுடன் காண்போம்.

பிரணவாகார விமானம் (பிரணவம்-ஓங்காரம்; ஆகரம்-உறைவிடம்) என்பதைப் **பிரண வாக்ருதி விமானம்** என்றும் அழைப்பர். இஃது ஓங்கார வடிவிலிருக்கும் சிறப்புடையது. **இ**வ்விமானத்தைக் கண்டு வழிபாட்டுணர்வுடன் போற்றி நிற்பதால் பிரணவத் திருவடிவினனான **நாராயணமூர்த்தியைக்** கண்டு வழிபடுஞ் சமயவுணர்வும் மனநிறைவும் இன்பமும் கிட்டும். ''பிரணவம் தன் பொருளாகிய இறைவனைக் கேட்போருக்கு அறிவுறுத்துகிறது. பிரணவ விமானமோ கேட்ட அப்பொருளை, நம்மெல்லோருக்கும் கண்ணெதிரே காட்டுகிறது. காட்டவே, பிரணவத்தினும், விமானம் சீரிய செல்வமாகும்''[1] என வருங்குறிப்பு மிகவும் மனங்கொண்டு போற்றத்தக்கது. இத்தகைய சிறப்பிற்குரிய விமானத்தை, வைணவர்களால் **கோயில்** எனப் போற்றப்பெறும் **திருவரங்கத்தில்** கண்டு மகிழலாம்.

புண்ணியகோடி விமானம் என்பது, தன்னைக் கண்ணுறும் அடியவர்களுக்கு நல்வினைப் பயனாகிய புண்ணியம் பெருமளவில் கோடியாகக் கூட்டுவிக்குந் தன்மையது. எழுத்தாலும் பேச்சாலும் வரையறுக்கவியலாத, வேதபரமான பல திருவிளையாடல்களுக்கு ஆன்மநாயகனான காஞ்சி **திருஅத்தியூர் வரதராசப் பெருமாள் திருமகளுடன்** எழுந்தருளியிருக்கும் விமானத்தைப்

1. திருக்கோயில் (திங்களிதழ்), ஜூன், 1969

புண்ணியகோடி விமானம் எனப் போற்றி மகிழ்வர். இதே சிறப்புமிகு புண்ணியகோடி விமானத்தைத் **திருக்கடித்தானத்திலும்** கண்டு களிகொள்ளலாம்.

சாத்துவிக விமானம் என்பது, தன்னைக் கண்ணுறும் அடியவர்களுக்கு உயரிய சாத்துவிகப் பக்தியையும் பண்பையும் வாழ்வியற் செயற்பாட்டையும் வழங்கும் ஆற்றலுடைய ஆலயச் சிகர அமைப்பாகும். இதனைத் திருச்சித்திரகூடமென வழங்கப் பெறும் **தில்லைக்கோவிந்தராசப் பெருமாளின் கருவறையின் மேல் காணலாம்.**

இஃது ஒருபுறமிருக்கச் சைவவுலகில் சில விமானங்கள் தொடர்பாகச் சில செய்திகளைக் காண்போம்.

விண்ணகத்தை மண்ணகத்தோடு இணைக்கும் ஒரு வகை உத்தியாகவும் பண்டைக்காலத்தில் விமானத்தைக்கருதியுள்ளனர். எனவே, திருஞானசம்பந்தர் வாழ்க்கை வரலாற்றுடன் இதனை மக்களுக்கு உணர்த்தக் கூடிய இனிய வாய்ப்பு தெய்வநலச் **சேக்கிழாருக்கு** ஏற்பட்டது. **திருவிழிமிழலையிலுள்ள** ஆலய விமானம் வேதத்தை நினைவுறுத்தும் **விண்ணிழி விமானம்** ஆகும். இறைவன் வீற்றிருந்தருளும் இவ்விமானத்தைத் **திருமால்** கொணர்ந்தார் என்பது புராணக்குறிப்பாகும். **இதனைத் திருஞான சம்பந்தர்** தம் திருக்கடைக்காப்பில்,

"தன்தவம் பெரிய சலந்தரனுடலந்
தடிந்தசக் கரமெனக் கருளென்(று)
அன்று **அரி வழிபட் டிழிச்சிய விமான**த
திறையவன் பிறையணி சடையன்[1]"

எனவரும் பாசுரப்பகுதியால் அறியலாம். இந்த **விண்ணிழி** விமானமுள்ள திருவீழிமிழலையைக் காணத் தேவர்களும் ஆர்வங் கொண்டு விமானமேறி வருகின்றனர். அஃதாவது, திருவீழி மிழலையில் இல்லந்தோறும் மகளிர் தம் இன்பக் குழந்தைச் செல்வங்களை அன்புடன் தாலாட்டுகின்றனர். அவ்வாறு பாடிய தாலாட்டின் இன்னோசையைக் கேட்டு அமரர்களும் வியப்

1. திருமுறை, 3, 377, 7

பெய்தித் தம் விமானங்களோடும் வந்து இறங்குகின்றனராம்! இத்தகைய வியத்தகு கற்பனையைப்,

"பண்ணமரும் மென்மொழியார் பாலகரைப்
பாராட்டும் ஓசை கேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத் தொடும்
இழியும் மிழலை யாமே"[1]

எனவரும் **சம்பந்தர்** திருவாக்கால் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறெல்லாம் சிறப்புமிகு திருவீழிமிழலையில் சம்பந்தர் தங்கியிருக்குங் காலத்தே அடியார்கள் பலரும் அங்கு வந்து, சீர்காழிக்கு எழுந்தருளுமாறு வேண்டுகின்றனர். விண்ணிழி விமானத்து இறைவன் சீர்காழித் தோணியப்பராக, அம்மையப் பராகக், கனவினில் காட்சி கொடுத்தருள்கின்றான். இதனைச் சம்பந்தர் காணுமாறு இறைவன் உணர்த்திய நற்பேற்றினைச் **சேக்கிழார்,**

"**தோணியில் நாம்அங் கிருந்த வண்ணந்**
தூமறை வீழி மிழலைதன்னுள்
சேணுயர் **விண்ணின் றிழிந்த இந்தச்**
சீர்கொள் விமானத்துக் காட்டுகின்றோம்
பேணும் படியா லறிதி யென்று
பெயர்ந்தருள் செய்யப் பெருந்தவங்கள்
வேணு புரத்தவர் செய்யவந்தார்
விரவும் புளகத் தொடுமுணர்ந்தார்"[2]

எனக் கூறிச் செல்வதால் புரிந்து கொள்ளலாம். இந்த வியத்தகு தெய்வநலக் காட்சியைச் சம்பந்தர் தம் திருப்பதிகத்துள் குறித்துப் போற்றி நிற்றலை,

"விண்ணிழி கோயில் விரும்பி மேவும்
வித்தகம் என்கொல்இது என்று சொல்லிப்
புண்ணிய னைப்புக லிந்நிலாவு
பூங்கொடியோ டிருந்தானைப் போற்றி"[3]

1. திருமுறை, 1, 132, 10
2. பெரியபுரா. திருஞானசம்பந்தர் புராணம், 555
3. திருமுறை 1, 4, 11

எனவரும் பாசுரப்பகுதியால் அறியலாம். இதனால் திருவீழிமிழலைக் கோயிலுக்கு 'விண்ணிழி கோயில்' எனும் சிறப்பு பெயர் உண்டாயிற்று என்பர்.

காஞ்சியிலுள்ள **கயிலாசநாசர் கோயில்** முதன் முதலில் பெரிதாகக் கட்டப்பட்ட விமானம் என்பர். ஆனால், விமான அமைப்பிற்கு முன்னோடியாக மாமல்லபுரத்து ரதக்கோயில் விமானங்கள் அமைந்துள்ளன என்பதை வரலாற்று அறிஞர்கள் சுட்டிக் கூறுவர்; அதனையும் இயைபாக மனத்துள் கொள்ளுதல் வேண்டும்.

காஞ்சிக் கயிலாசநாதர் கோயில் **இராசசிம்மபல்லவனது** பெருமுயற்சியால் அமைக்கப்பட்டதாகும். திருக்கயிலைக்கு நேரில் சென்று வழிபட்ட **விபுலானந்த அடிகளார்,** கயிலாசநாதர் கோயில் விமானத்தைக் கண்ட நிலையில் வியப்பெய்தி, இக்கோயிலின் பெயர் மட்டுமேயன்றி அமைப்பிலும் தோற்றத்திலும் கயிலையையே ஒத்துள்ளது என்று தம் கருத்தைப் புலப்படுத்தியுள்ளார். இதனால், இக்கோயில் விமானத்தின் சிறப்பினை இனிது உணரலாம்.

இந்தக் கயிலாசநாதர் கோயில் விமானத்தைக் கண்ட சோழன் **முதலாம் இராசராசன்** தஞ்சாவூரில் இராசராசேச்சுரம் எனும் பெரியகோயிலை எடுப்பித்தான். இக் கோயிலின் கருவறைக்கு உள்ள அழகிய விமான அடிநிலை அதிட்டானம்) முதல் தூபி வரையாவும் கருங்கற்களாலேயே இயன்றதாகும். விமானம் சதுர வடிவத்துடன் 13 நிலைகளைக் கொண்டது. உச்சியில் **பிரமரந்திரத்**தளக்கல்லும் அதன் மேல் பொற்றகடு போர்த்திய கலசமும் தூபியும் நிறுவப் பெற்றுள்ளதைக் காணலாம். 216 அடி உயரமுள்ள தஞ்சைப் பெரிய கோயில் கண்ட **பேராசிரியர் பெர்சி பிரௌன் (Prof. Percy Brown),** திராவிடச் சிற்பியரின் தனிச்சிறப்பான கலைப்படைப்பாகிய தஞ்சை விமானம் இது எனப் பாராட்டியதைப் பின்பற்றிக் கலைஞர்கள் பலரும் **'தமிழர்தம் கட்டடக்கலைக்கு இது முத்திரைச் சான்று'** என்று கூறியுள்ளனர். இது தமிழ்க் கட்டடக் கலைக்குக் கிடைத்த பெரும் வரமாகும்.

தஞ்சைப் பெருங்கோயில் விமானத்தை அடியொற்றி **முதலாம் இராசேந்திரன்** கங்கை கொண்ட சோழபுரத்தை 160 அடி உயரத்தில் எட்டுத்தளத்துடன் அமைத்துள்ளான். விமானக் கட்டுக் கோப்பு நிலைபெற்றிருக்குமாறு தஞ்சை விமானத்தில் இருப்பது போன்று உச்சியில் பெரும் வட்டக்கல் (பிரமரந்திரக்கல்) இங்கும் அமைத்திருப்பது விமானத்தின் கம்பீரத்தையும் காணத் துணை நிற்கும்.

தஞ்சைப் பெரிய கோயிலையும் கங்கை கொண்ட சோழேச்சுரத்தையும் பின் பற்றித் **தாராசுரம்** (இராசராசேச்சுரம்) **இரண்டாம் இராசராசனால்** எடுப்பிக்கப் பெற்றது. இங்குள்ள விமானம் ஐந்து தளம்கொண்ட **வேசர** சிகரமுடையதாகும். 83 அடிஉயரங் கொண்ட விமானத்தில் கிரீவத்தின் கீழே இருக்கும் கடைசி தளத்தில் நான்கு மூலைகளிலும் கர்ணகூடுகள் அமைந்துள்ளன. ஒப்பியல் நோக்கில், தஞ்சை விமானத்தின் உச்சியில் வட்டமான கல்லும் அதைச் சுற்றி நந்திகளும் (மூலைகளில்) இருக்கும். ஆனால், **தாராசுரம்** விமானத்து மூலையில் நந்திகளுக்குப் பதிலாகக் கர்ணகூடுகளும் பிறகு, நந்திகளும் அமைந்துள்ளன. தாராசுரத்தில் **அம்பாள் விமானம்** புதிய வகையில் உள்ளது. இது கூம்பு மாதிரியோ உயரமாகவோ செல்லாமல், வாயில் கோபுரம் போல அமைந்துள்ளது. நான்கு முகங்கொண்டு நான்கு திசையையும் பார்க்கும் அமைப்புடன் நடுவே ஒன்றுமாகத் திசைக்கு இரண்டு இரண்டாக ஒரு சதுர அமைப்பில் கோபுரம் போல் இவ்விமானம் அமைந்துள்ளது. இஃது ஒரு புதுமையான அமைப்பென அறிஞர் பலரும் கூறுவர்.

மேற்கண்ட தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழேச்சுரம், தாராசுரம் ஆகிய மூன்று விமானங்களை யொட்டியே **திருபுவனம்** விமானம் எடுப்பிக்கப்பட்டது. எனினும் கலைமாட்சி நிரம்பக் கொண்டதாக இதனைக் கருத இயலாது.

பொது நிலையில் ஒப்பிடுகையில் தஞ்சைப்பெரிய கோயில் விமானத்தை விடக் கங்கை கொண்ட சோழேச்சுரம் விமானம் உயரத்தில் சிறிது குறைந்தது. அதைவிடத் தாராசுரம் விமானம் மேலும் ஓரளவு குறைந்தது. ஆனால், இதைவிடப் பிற்காலத்தில்

திரிபுவனம் விமானம் அமைந்ததெனினும் உயரத்தில் சிறிது கூடியுள்ளதாக விளங்குகிறது. இவ்வாறான விமானங்கள் ஒரு புறமிருக்க, வியத்தகு அமைப்புடன் கூடிய வேறுவகை விமானங்கள் சிலவற்றைக் காண்போம்.

மதுரைப் பெருங் கோயில் கருவறையில் அருள்மிகு சொக்கலிங்கப்பெருமான் - மீனாட்சி சுந்தரேசுவரர் எழுந்தருளியிருக்கும் இடம் இந்திரன் தன் நன்றிக்கடனாக அமைத்த விமானம் ஆகும். எட்டு வெள்ளை யானைகளால், அஃதாவது, ஆறு யானைகள் தாங்கி நிற்கவும் இரு யானைகள் பக்கத்தில் இருக்கவுமான அமைப்புடன் கூடிய **இந்திர விமானம்** ஆகும். இது சமய நோக்கிலும் தத்துவக் கலைமரபிலும் அமைக்கப்பட்ட நேர்த்தியான கலைப்படைப்பாகும்.

5.1. நகரத்தார் திருப்பணியில் கோயில் விமானம்:

மாமன்னர்களும் கொடை வள்ளல்களும் புரிந்துவந்த ஆலயத் திருப்பணிகளை **நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்கள்** ஆர்வமுடன் தம் உயிர்ப்பொறுப்பாக ஏற்றுச்செவ்வனே செயலாற்றி வந்துள்ளனர். பாடல் பெற்ற திருத்தலங்கள் பலவற்றைச் செப்பனிட்டும் கோயில்வளாகத்திலே சில கட்டடக் கூறுகளைப் புதியனவாக அமைத்தும் அவர்கள் புரிந்துள்ள தெய்வநலப் பணிகள் பலவாகும். அவற்றுள் விமானச்சிறப்பிற்கு அவர்கள் புரிந்த சாதனைகள் கலையின் கலைநோக்கில் சிந்திக்கத்தக்கவை. இவ்வாற்றான் நகரத்தார்க்கே சொந்தமான ஆலயங்களில் காணலாகும் விமானங்கள் தொடர்பான சில செய்திகளைக் காண்போம்.

நகரத்தார்கள் ஆற்றியுள்ள பணிகளில் **'கோயில் விமானம்'** பற்றிச் சிந்திக்கையில் சிலகலை மரபுகள் (Art traditions) புலனாகும் எடுத்துக்காட்டாக **இலுப்பைக்குடிக்கோயில் விமானம்** பற்றிச் சிறிது காண்போம்.

பொதுவாக, ஆலய விமானம் என்பது **அதிட்டானம்** முதல் **தூபி** வரையில் அமைந்துள்ள கட்டடப் பகுதியாகும். இலுப்பைக்குடிக்கோயில் விமானம், அதிட்டானம் (பீடம்), சுவர் (கால்), பிரஸ்தரம் (கூரை), கிரீவம் (கழுத்து), சிகரம் (தலை), தூபி (குடம்) ஆகிய ஆறு உறுப்புக்களைக் கலை நேர்த்தியுடன் கொண்டதாக இலங்குகிறது.

எட்டுத்திக்கு யானைகள் இந்த மாபெரும் நிலவுலகத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதாகக் கொள்வதும், நம்புவதும் புராண மரபாகும்; இதனை இலுப்பைக் குடிக்கோயில் விமானத்தில் பொருத்திக் கோயிலின் சிறப்பை மிகுதிப்படுத்தச் சிற்பியர் கருதியுள்ளனர். எனவே, கோயிலுக்கு மூலவிக்கிரகம் நிலை கொண்டுள்ள கருவறையைச் சுற்றியுள்ள புறச்சுவரில் எட்டுத் திக்கு யானைகளைக் கொணர்ந்து நிறுத்தி, ஆலயக்கருவறையைச் சுமந்து நிற்குமாறு செய்துள்ளனர் கலைஞர்கள். அந்த யானைகள் எவ்வாறெல்லாம் அமைக்கப் பெற்றுள்ளன என்பதைத் தொல்லியலறிஞர் மா. சந்திரமூர்த்தி சித்திரித்துக் காட்டுவதை ஓரளவு காண்போம்.

''யானைகள் ஒவ்வொன்றும் நிற்கும்நிலையிலும் நிமிர்ந்த நடையிலும், அசைவிலும், அழகிலும் வேறுபட்ட நிலையில் மாறுபட்ட சிற்பமாக மிகவும் கவனத்துடன் படைக்கப்பெற்றுள்ளன. தென்திசையிலுள்ள யானை ஒன்று முறத்தையொத்த புடைத்த காதுகளைப் பக்கங்களில் விரித்துக்கொண்டு தன் வலுவான கால்களைத் தரையில் ஊன்றி நீண்ட துதிக்கையால் முறுக்கேறிய தறியை அறுக்கும் நிலையில் வீறுகொண்டு எழுகின்றது. அதன் சிறிய கண்களும் பருத்த மத்தகமும் வலுவான இரட்டைத் தந்தங்களும் மிகவும் கவனமாகப் படைக்கப் பெற்றுள்ளன.

இவ் யானையின் இடப்புறத்திலுள்ள குமுதப்படையில் சிறிய பல்லியொன்று தன் கால்களால் தரையைப் பற்றிக்கொண்டு, தன் எதிரிலுள்ள பூச்சியைக் கவனமாகப் பிடிக்கச் செல்லும் நிலையிலுள்ள சிறிய சிற்பம், அக்காலச் சிற்பியின் நுட்பமான கைத்திறனுக்குச் சீரிய எடுத்துக்காட்டாக விளங்குகிறது. பல்லியின் சிறிய கண்களும் கூரிய நகமும் வாலுங்கூட மிகக் கவனத்துடன் சித்திரிக்கப்பட்டுள்ளன'', எனக் கூறுவதுடன், ஏனைய யானைகளின் சிற்பப் பொலிவையும் நன்கு விளக்கியுள்ளார்; அவர் எழுதியுள்ள 'இலுப்பைக் குடிக்கோயில்' எனும் நூலில் அனைத்து விளக்கங்களையும் கண்டு கொள்க. ஒப்பியல் நோக்கில், ''ஆலவாய்ச் சொக்கர் சன்னிதியிலுள்ள இந்திரவிமானத்தைத் தாங்கும்

வெள்ளையானைகளைவிட உருவில் சிறுத்தும் நுட்ப வேலைப் பாட்டில் தனித்தும் விளங்குவது இங்குள்ள சிற்பங்களின் தனிச் சிறப்பாகும்'' என அவர் தரும் குறிப்பு அழகுக்கலை நோக்கில் உள்ளங் கொள்ளத்தக்கதாகும்.

ஏனைய நகரத்தார் கோயில்களில் காணலாகும் விமானச் சிறப்புக்கூறுகளை ஈண்டு விரிக்கிற்பெருகும்.

தாமரைமலரை யொத்த அடித்தளத்தில் அமைந்துள்ள **ஆத்தங்குடிக் கோயில்** செல்வச் செழிப்புக்கு வழிவகுக்கும் பான்மையது. அக்கோயிலிலுள்ள **சுவாமி கோயில் விமானமும், அம்பிகை கோயில் விமானமும்** தெய்வநலக்கூறுகள் பொருந்திய நிலையில் நேர்த்தியுடன் அமைக்கப்பட்டுள்ளன; அவை ஒரே வகை விமான அமைப்புடையவையாகும்.

5.2. கோபுரங்களும், விமானங்களும்:

திருக்கோயிலின் பெருஞ்சிறப்பினைப் புறத்தே மக்களுக்குப் புலப்படுத்தும் வண்ணம் கோபுரங்களும், விமானங்களும் ஆகம அடிப்படையில் அமைக்கப்படுகின்றன என்பதைக் கண்டு வரு கிறோம். கோயிலின் கோபுரங்களும், விமானங்களும் அமைக்கப் படும் விதங்களும் எண்ணிக்கையும் அவ்வக் கோயிலின் சிறப்பும் மக்களின், அல்லது கோயிலமைப்போரின் விருப்பத்தையும், வசதியையும் பொறுத்து அமையும். இவ்வாற்றான் சில கோயில் களில் ஒரே கோபுரமும், ஒரே விமானமும் அமைவது உண்டு. சில கோயில்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கோபுரங்களும், பரிவார தெய்வங்களைப் பொறுத்து விமானங்களும், பலவாக அமைவதும் உண்டு. எடுத்துக்காட்டாகத் திருவண்ணாமலைத் திருத்தலத் தில் - அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் - **பத்துக் கோபுரங்களும், பத்து விமானங்களும்** அமைந்திருப்பதைக் காண லாம். அவையாவன:

கோபுரங்கள்: 1) இராச கோபுரம், 2) வல்லாள மகாராசன் கோபுரம் 3) கிளிக் கோபுரம், 4) திருமஞ்சனக் கோபுரம், 5) கட்டைக்கோபுரம் (தெற்கு), 6) கட்டைக் கோபுரம்

7) மேற்குக் கோபுரம் (பேக் கோபுரம்), 8) அம்மணி அம்மாள் கோபுரம், 9) கட்டைக் கோபுரம் (வடக்கு), 10) ரிஷி கோபுரம்.

விமானங்கள்:

1) சுவாமி கருவறை விமானம், 2) அம்மன் கருவறை விமானம், 3) பள்ளி அறை விமானம், 4) சம்பந்த விநாயகர் விமானம், 5) பழனி ஆண்டவர் விமானம், 6) நடராசர் விமானம், 7) சோமாஸ்கந்தர் விமானம், 8) வேணு கோபாலர் விமானம், 9) ஆறுமுக சுவாமி விமானம், 10) வைரவர் விமானம்.

இவ்வாறு அமைக்கப்பட்ட கோபுரங்களைப் பற்றியும் விமானங்களைப் பற்றியும் அவற்றின் கலைக்கூறுகளைப் பற்றி யும் வரலாற்று அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால் பண் பாட்டுக்கு ஆக்கந்தேடும் பல செய்திகள் கிடைக்கின்றன இதே போன்று ஒவ்வொரு திருத்தலத்திலும் அமைந்துள்ள கோபுரங்களையும், விமானங்களையும் பற்றி ஆராய்வதும், தமிழ்ச் சமயப் பண்பாட்டுக்கும், கலைப்பண்பாட்டுக்கும் உகந்ததே. இது பெருந்திட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய முயற்சியாகும்; விரிக்கிற் பெருகும் இம்முயற்சியின் எல்லையை யுணர்ந்து இம்மட்டோடு மன நிறைவு கொள்வோம்.

5.3. கோயில் - பிரமரந்திரக்கல் (சிறப்புக்குறிப்பு):

கோயிற் கட்டடக் கூறுகளுள் கோபுரமும், விமானமும் மக்களை ஆன்மநலநிலையில் ஈர்க்கும் சிறப்புடைய கூறுகளாகும். விமானச் சிறப்பைப் பல்வேறு கோணங்களில் கண்டோம். விமானத்தின் மேற்பகுதியாகக் - கலசம் வைக்கும் பகுதியாக- அமைந்திருப்பது பிரமரந்திரக்கல் ஆகும்.

தஞ்சை இராசராசேச்சுரமுடையார் கோயிலில் விமானத்தின் மேலே அமைந்துள்ள பிரமரந்திரக்கல் வரலாற்றுச் சிறப்புடைய தாகும். இந்தக் கல்லை விமானத்தில் ஏற்றுதற்கு வெகு நீள மான சாரம் அமைத்தது பற்றியும், பொறியியல் திறமையுடன்

கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலேயே இதனைக் கட்டடக்கலை வல்லுநர்கள் மனங்கொண்டு இது தொடர்பாகச் சிந்தித்துச் செயற்பட்டுள்ளனர் என்பது பற்றியும் நூல்கள் வெளிவந்துள்ளன.

அகத் தவத்தின் அடிப்படையில் எய்தலாகும் பிரமரந்திர யோகம் பற்றி ஓரளவு உணர முற்படின், பிரமரந்திரக் கல்லின் பெருமை புரியலாகும். தவத்திரு ஜி.வி. வேதாத்திரி சுவாமிகள்; மனிதன் சிந்தனை ஆற்றல் பெருகித் தேர்ந்த குருவின் மூலம் உயிரில் அறிவைச் செலுத்தி லயம் பெறும் அகத்தவம் பயின்று, அகத்தவத்தில் சிறப்பு நிலையான உச்சியில், உயிர்மையம் கொண்டு ஆற்றும் துரிய நிலைத்தவம் அல்லது 'பிரமரந்திர யோகம் என்ற நிலையை அடைவானேயானால் அவனறிவு பூரண நிலை அடைகிறது. மெய்ப்பொருளோடு கலந்து நிற்கும் தகுதி உண்டாகின்றது. தன்னையும், தலைவனையும் ஒருசேர அறிந்து கொள்ளுகிறான். இந்தப் பேரறிவின் நிலையிலே தன் முனைப்பு அற்று இறைவனே தானாகவும் இருப்பதை உணர்ந்து கொள்ளுகிறான். இந்த அறிவின் முழு விரிவுபெற்ற பூரண நிலையிலே களங்கமிலாத் தூய்மை பெறுகிறான் எனப் பல மேடைகளில் கூறியும், கட்டுரையாக எழுதியும் சென்றுள்ளார்; இது மிகவும் இயைபுடன் ஒப்பிட்டு நோக்கில் சிந்திக்கத்தகுவதாகும்.

தஞ்சைப் பெரியகோயில் விமானத்தின் மேலே பிரமரந்திரக் கல்லைக் கட்டடத்தொழில் உத்தியுடன் ஏற்றுதற்கு வெகு நீளமான சாரம் அமைக்கப்பட்டது; பெரிய உருளைகளும், கயிறுகளும், சங்கிலிகளும் பயன்பட்ட நிலையில், வலுவுடன் இழுத்துச் செல்லும் அடிப்பகுதி (தஞ்சைக்கு அருகேயுள்ள) ஒரு சிற்றூரில் தொடங்கியது; அந்த ஊரைச் 'சாரப்பள்ளம்' என வழங்குகின்றனர்.

6. கோயிற் கோபுரம்

திருக்கோயிலுக்குக் கோபுரமாவது, புறத்தேயிருந்து மக்கள் அகத்தே புகுதற்கு வாயிலாகப் பயன்படுவதாகும். கோயிலின் அமைப்பிற்கேற்பப் பல்வேறு நிலைகள் (மாடங்கள்—tiers) கூடியதாகக் கோபுரத்தை அமைப்பர்.

—சில திருக்கோயில்களில் விமானமே கோபுரம் போலத் தோற்றமளிக்கும். ஆனால், விமானம் வேறு, கோபுரம் வேறு என்பதை முன்னரே கண்டோம். ஒரு கோயிலின் முகப்பில் காணப்படும், வாயிலுடன் கூடிய கட்டட அமைப்பே கோபுரம் எனப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஓரளவு தொலைவிலுள்ளவர்கள்கூடக் கண்டு தெய்வ நலச் சிந்தனை கொள்ளுமாறு உயரமாகக் கோபுரம் அமைக்கப்பட்டது. இது கொண்டு மக்களின் சமயவழி ஊற்றம் புலப்படும். கோபுரத்திலுள்ள ஒவ்வொரு பகுதியும் இறைவனது தூய திரு மேனியின் ஒவ்வொரு உறுப்பைக் குறிப்பதெனக் கொள்ளுதல் வேண்டும். கோபுரச் சிற்பங்களை ஊன்றி நோக்கினால் அஃது அமைக்கப்பட்டதன் சமயநோக்கம் புரியலாகும்.

கோபுரத்தில் இறைவனுடைய பேராற்றலின் அறிகுறிகளான திருவிளையாடற் சிறப்புக்களும் - லீலாவினோதங்களும் காணப் படும்; இறைவனது அதிகாரம் பெற்ற பிரம விட்டுணுவாதிய தேவர்கள் அட்டதிக்குப்பாலகர்கள் சூரிய சந்திரர் முதலியோர் களின் உருவங்களும் அமைக்கப்பட்டிருக்கும். அதனால் பரமனது பெருமையை நினைத்து அவனிடம் பத்தி செய்ய வேண்டிய ஆர்வமும் ஈடுபாடும் தழைக்கும் எனலாம். சிவன்கோயில் சிவனது பராக்கிரமத்திற்கு முதலிடமும் பிற தெய்வங்களுக்கு அடுத்த இடமும் தரப்படும்; அது போலவே வைணவக் கோயிலில் விட்டுணுவின் பராக்கிரமத்திற்கு முதலிடமும் பிற தெய்வங்களுக்கு அடுத்த இடமும் தரப்படும் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

ஐம்பூத விரிவான இயற்கையின் பல்வேறு கூறுகளும் கோபுரத் தில் இடம் பெறுவது இறைவன் ஐம்பூத வடிவினனாக எங்கும் நிறைந்துள்ளான் என்பதையுணர்வதற்காகவே என்பர். சில கோயிற் கோபுரங்களில் பாலுணர்ச்சியைத் (Sexual instincts) தூண்டி விடும் சுதைச் சிற்பங்களைக் காணலாம். அவையும் இறைவனது வளாகத்திற்கு உட்பட்டனவே என அறிதல் வேண்டும். ஆனால், இத்தகைய சிற்பங்கள் விமானம் எவ்வளவு பெரிதாக அமைத்தாலும் அதில் இடம் பெறுவதில்லை என்பது சிறப்புக் குறிப்பாகும்.

மகாகோபுரம் என்பது கோயிலுக்குப் **பாதம்** (கால்) போன்று கருதப்படும்,

தத்துவநோக்கில், விமான தரிசனமும் கோபுர தரிசனமும் தூலலிங்க வழிபாடாகவே சமயச் சான்றோர்களால் போற்றப் படும்.

6.1. கோபுர, கோயில் வாசல்கள்:

கோயிலும், கோயிலுக்கு அணி செய்து பெருமை சேர்க்குங் **கோபுரமும்** தமிழர்களின் வாழ்வியலில் சிறப்பிடம் பெற்றுள்ளதைக் கண்டு வருகிறோம். அவற்றை நன்கு பராமரித்துப் பாதுகாக்கும் பொறுப்பில் சில உத்திகள் கையாளப் பெற்றன.

பொதுவாகக் கோயிலுக்குத் தெய்வ நலக்காவற் பொறுப் பினைப் **பைரவர்** போன்றவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பினும், கட்டட அமைப்பில் கோயிலுக்குப்புறக் காவலாக உயர்ந்த மதில் களும் கோபுரவாசற் கதவுகளும் திண்ணியவையாக அமைக்கப் பட்டன. மக்களின் வாழ்க்கையில் **வாய்மை** (சத்தியம்) சிறந்ததே போன்று கோயிலுக்குக் கோபுரவாசல் சிறப்பினதாகப் பயன் பட்டுள்ளது; இதனை நன்குணர்ந்த **திருமூலர்,**

> "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
> வள்ளற் பிரானார்க்கு **வாய்கோ புரவாசல்**"[1]

எனப்பாடிச் சென்றுள்ளமை மிகவும் சிந்திக்கத்தக்கது. மன்னனது அரண்மனைக் கோட்டைக்கு வாசற் கதவினை எவ்வளவு திண்ணி தாக அமைத்தனரோ அவ்வளவு திண்ணிதாகக் கோயில் கோபுர வாசற்கதவையும் அமைத்துள்ளனர். இதனையுணர்ந்து இக் காலத்தவரும் அவ்வாறே அமைத்து வருகின்றனர்.

பெரும்பாலும் பல கோயில்களில் உட்புறக் கோயிற் கதவு ளிலே ஒலிக்கும் மணிகள் பொருத்தப்பட்டிருக்கும். அத்தகைய **கதவுகளைத் திறக்குங்கால் மணியோசை கேட்கும்.** இதனால் **கோயி லுக்கென அமைந்த பாதுகாப்புத் தேவதைகள் தம் கடைமைகளில்**

1. திருமந்திரம், 1792

ஈடுபடும் என்பது சமய நம்பிக்கை. எனவே, கோயில்வழிபாட்டுக்காகக் கோயிற் கதவுகளைத் திறப்பதற்குமுன், அதற்குரிய மந்திரங்களை ஓதிக்கொண்டு கைத்தட்டியபின் திறவுகோலால் திறப்பதை மரபாகச் சிலர்கொண்டுள்ளனர். அவ்வாறு திறக்கும்போது கேட்கும் மணியோசையால் அடியார்கள் ஆர்வத்துடன் இறைக்காட்சிக்கெனத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதைக் காணலாம்.

முற்காலந்தொட்டே தெய்வநலத் தொடர்புடைய வாசற் கதவுகளில் மணிகள்பொருத்தியிருந்தமையால் அவை **மணிக்கதவம்** எனப்பட்டன. மணிக்கதவம்எனின் அழகான கதவம் என்றும், மணிகள் பொருத்தப்பெற்ற கதவம் என்றும் பொருள்பட அமைந்த சிறப்பினைக் காணலாம்.

கோகுலத்தில் இடைப்பெண்கள் நீராடச் செல்லுங்கால் ஒருவரையொருவர் எழுப்பிக் கொண்டு செல்கின்றனர்; அந்நிலையில் உயர்ந்த மாளிகையில் கண்வளரும் கோபிகையை எழுப்புகையில்,

> " தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
> தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
> மாமான் மகளே மணிக்கதவம்'தாள் திறவாய்''[1]

என மற்றொருத்தி பாடுவதாக **ஆண்டாள்** பாடியருள்வதை இயைபுடன் காண்க.

மணிக்கதவம் திறப்பதால் ஏற்படும் மணியோசை நாத இன்பந் தரும் பான்மையது. கோயிலில் நாதத்தின் வாயிலாகவே நாதமயமான இறைனைச் சேவிக்க ஆர்வந்தழைக்கும் வகையிலே மணிக்கதவமும் துணை நிற்பதை நினைவிற் கொள்ளலாம்.

6.2 கோயில் வாசல் - சிறப்புக்குறிப்பு:

கோயில் வாசல் கோபுரவாசல் ஆகியவற்றின் சிறப்பினைக் கண்டு வருகிறோம். கட்டக்கலை நோக்கில் சில மண்டபங்களின் வாசல்களும் சிந்திக்கத்தக்கவையாக அமைத்துள்ளன.

---

2. திருப்பாவை, 9, 1-3.

1. கும்பகோணம் **சாரங்கபாணிக் கோயிலில்** கருப்பக்கிருகமும் மூன் மண்டபங்களும் அழகிய தேரினை நினைவூட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. ''மண்டபத்தின் நான்கு புறங்களில் நான்கு சக்கரங்கள் இருக்கின்றன. கற் குதிரைகளும் யானை களும் தேரை வலித்துக் கொண்டு செல்வதுபோல் அமைக்கப் பட்டிருக்கின்றன. உயர்ந்த மண்டபத்திற்கு, படிக்கட்டுகள் மீது ஏறிச்சென் றால் **தட்சிணாயண வாயில் உத்தராயண வாயில்** என்று இரண்டு வாயில்கள் உள்ளன. ஒவ்வொரு **வாயிலும் ஆறுமாதம்** திறந்திருக்கும்''1 என **எம், ராதாகிருஷ்ண பிள்ளை** எழுதிச் செல்லுங்குறிப்பினைக் காண்க.

பூவுலகை இயக்கும் **சூரியநாராயணன்** ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் உலா வருகையில் தன் வழியைத் **தட்சிணாயணம் உத்தராயணம்** என்று பாகுபடுத்திக்கொள்கிறான். அந்த அமைப் பினைச் சிந்திக்கும் வகையில் சாரங்கபாணியாகிய **நாராயணனும்** தன் திருக்கோயிலில் இவ்வகைப் பாகுபாட்டினை ஏற்படுத்திக் கொண்டுள்ளான் எனலாம். சமயப் பண்பாட்டுடன் சிந்திக்க வேண்டிய குறிப்பு இதுவாகும்.

2. பொதுவாகக் கோயில் வாசல்கள் ஏதேனும் ஒரு திக்கினை நோக்கி அமைக்கப்பெறலாம். எனினும், கிழக்கு நோக்கிய வாயிற் புறமே பெரும்பான்மையாக இருக்கும். நடராசர் சன்னிதி யெனின் அது தெற்கு நோக்கி அமைந்திருக்கும். வேறு எந்தத் திக்கிலும் நடராசர் சன்னிதியை அமைப்பது மரபில்லை.

சிவனுடைய வீரட்டத்தலங்கள் பொதுவாக மேற்நோக்கி அமைக்கப்பட்டிருக்கும்; எனினும் இந்த மரபிற்கு மாறாகத் **திருவழுவூர் வீரட்டானத்தில்** மட்டும் கோயில்வாசல் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதற்குத்தக்க காரணம் புரியவில்லை.

6.3. கோபுரவாசலின் தத்துவம்:

திருக்கோயிற் கோபுர வாசலிலிருந்து தெய்வம் வீற்றிருக்கும் கருவறை வரையில் நோக்கினால் கோபுர வாசல் பெரிய அளவில் அகன்றும் உயர்ந்தும் இருப்பதையும், வர வர ஒவ்வொரு வாசலி லும் அளவுகள் குறைந்து கொண்டே சென்று கருவறை வாயில்

குறுகிய அளவினதாக அமைந்திருப்பதையும் கண்டுகொள்ளலாம். 'ஆ' எனும் உயிர் ஒருமுகமாக **இலயப்படும்** இடமாதலின் **ஆலயம்** என ஆயிற்று என்று அன்பர்கள் விளக்கங்காண்பார்கள். அவர்கள் கருத்துப்படி, திருக்கோயில் வாயில்கள் கோபுரத்திலிருந்து படிப்படியே குவிவதை இலயப்படுவதைப் புறக்காட்சியில் உணர்த்தி நிற்கின்றன என்று ஒரு வகையில் அமைதி காணலாம்.

கோயிற் கோபுர வாசலில் நுழையும்தத்துவம் பற்றிச் **சுவாமி சித்பவானந்தர்** விளக்கந்தருகையில் "புறக்கரணங்களும் அகக்கரணங்களும் நம்மிடம் இருப்பினும் கடவுள் நாட்டங் கொள்ளும் போது மனம் மட்டுமே நமக்குப் பெரிதும் பயன்படுகிறது. ஏனைய கரணங்களையெல்லாம் இருக்கிறபடி வைத்து விட்டு **மனம் இறைவனை நாடி உள்முகமாகப் போக வேண்டுமென்பது** கோட்பாடு. பஞ்சேந்திரியங்களைக் கொண்டும், மனம் புத்தி முதலியவைகளைக் கொண்டும் புறவுலகை அறிகின்றோம். புறவுலகை அறிகிற செயலை வெளியே அப்படியே நிறுத்தி வைத்து விட்டு, மனத்தைத் துணையாகக் கொண்டு பரம்பொருளை நாடி உள்முகமாகப் பயணம் செய்யவேண்டும் என்ற கோட்பாட்டையே **இராசகோபுரம்** வாசலின் வழியாக ஆலயத்தில் நுழைவது விளக்கிக் காட்டுகிறது"[1] எனக்குறிப்பிட்டுச் செல்வது சிந்தித்துப் போற்றுதற்குரியதாகும்.

கோயில் பிராகாரம் அமைக்கையில் அதற்கேற்ப - அடியார்களின் வசதிக்கேற்பக் - கோபுர வாயில்கள் ஒன்றோ பலவோ ஆகமவிதிப்படி அமைப்பர். கோயிலின் உள்ளே புகுந்ததும் முதற்கணுள்ள பெரிய பிராகாரத்திற்கேற்பக் கோயிலின் சிறப்பினை மனத்துட் கொண்டு கோபுர வாசல் ஒன்றோ பலவோ அமைக்கப்படும். அஃதாவது, திக்குக்கு ஒன்றென நான்கு வாசல்கள் வரை அமைக்கப்படும். எனினும், சுவாமி சன்னிதிக்கு எதிர்ப்புறமாக அமையும் கோபுர வாசலே மிகச்சிறப்புடையதென்பர். அந்தக் கோபுர வாசல் மீது எழுப்பப்படும் இராச கோபுரமே ஏனைய கோபுரங்களினும் உயரமும் சிறப்புங் கொண்டு விளங்கும். இந்தக் கோபுரமே '**வாய்மை**' எனுந் தத்துவத்தைக் கொண்டதென்பது.

1. திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலர், 1976.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்''[1]

எனும் **திருமூலர்** வாக்கால் தெளியலாம்.

6.4. இராசகோபுரம் - பெயர்க்காரணமும் பிற விளக்கங்களும்.-

பெரிய திருக்கோயிலில் அமையும் உறுப்புக்களுள் கோபுரம் அகன்றும், நீண்டும், உயர்ந்தும் பல நிலைகளுடன் (Tiers) காணப்படுவதாகும். நிலைகளைச் சில வேலைகளில் **மாடங்கள்** என்றும் குறிப்பிடுவர். அவ்வாறான நிலைகள் **மூன்றிலிருந்து பதின்முன்று** வரையில் திருக்கோயிலின் பெருமைக்கேற்ப அமைத்து வந்துள்ளனர்.

திருக்கோயிற் கலைகளுக்குப் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் தந்து தமிழ் நாட்டில் கோயிற் பண்பாட்டிற்கு ஒரு வகை மலர்ச்சியையும் எழுச்சியையும் ஈடுபாட்டையும் தந்தவர்கள் **விசய நகர மன்னர்களும்**, தொடக்கத்தில் அவர்களின் ஆதரவைப் பெற்ற **மதுரை நாயக்க மன்னர்களும்** ஆவர். கோயிற் கட்டடங்களை விரிவுபடுத்தியதுடன் வானளாவிய பெரிய கோபுரங்களைக் கட்டி வழிகாட்டியவர் விசய நகர மாமன்னர் **கிருஷ்ண தேவராயர்** ஆவார். ராயர் கட்டிய கோபுரங்கள் தமிழ்நாட்டில் திருவண்ணாமலை, சிதம்பரம், திருவானைக்கா, காஞ்சிபுரம் முதலிய பல தலங்களில் காணலாம். ராயர் கட்டிய கோபுரமாதலின் **ராயர் கோபுரம்** என்று முதலில் வழங்கிப், பிறகு **ராச கோபுரம்** என வழங்கலாயிற்று என்பர். இஃது ஒருபுறமிருக்க ஆலயத்தில் மிகப் பெரிய அளவினவாகக் கட்டப்படும் கோபுரங்களும் இராச கோபுரங்கள் என அழைக்கப்படுபவை ஆயின.

பல்லாண்டுக் காலமாக **மொட்டைக் கோபுரமென** வழங்கப் பெற்ற திருவரங்கத்துப் பெரிய வாசற்கோபுரம், இந்த நூற்றாண்டில் **அகோபில மடம் தவத்திரு ஜீயர் சுவாமிகளால்** பதின்மூன்று மாடங்களுடன் இராசகோபுரமாகக் கட்டப்

1. திருமந்திரம், 1792.

பட்டுள்ளது. ஆசியா கண்டத்திலேயே மிக உயரமான கோபுர மாக இது கருதப்படுகிறது; இது பாரதத்துக்கே பெருமையாகும்.

இராச கோபுரம் பற்றிச் சிந்திக்கும் அருளாளர்கள் தத்தம் சிந்தனைக்கேற்பக் கருத்துக்களைப் புலப்படுத்தியுள்ளனர். எடுத்துக்காட்டாகச் **சுவாமி சித்பவானந்தர்** கருத்தினைக் கீழே காண்போம்.

''ராஜ கோபுரத்தின் அருகில் வந்து அதன் அமைப்பைக் கவனித்துப் பார்த்தால் சில அதிசயங்கள் தோன்றும். கணக்கற்ற வடிவங்கள் அதன்கண் அமைக்கப் பெற்றிருக்கின்றன. அவை களுள் மானுட வடிவங்களை ஏராளமாகக் காணலாம். அவர் களுடைய விதவிதமான வாழ்க்கை முறைகளும் ஆங்கு வடிவங் களில் விளக்கப் பெற்றிருக்கும். தேவர்களும் வேண்டியவாறு அதில் இடம் பெறுகின்றனர். தேவர்களின் செயல்களும் ராஜ கோபுரத்தில் விளக்கப் பெற்றிருக்கின்றன. விலங்குகளும், பறவைகளும் ஏனைய சிற்றுயிர்களும் அதில் இடம் பெறு கின்றன. பிரபஞ்ச அமைப்பில் இவை யாவுக்கும் இடமுண்டு என்பது கோட்பாடு. சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கு இனம், மக்கள் இனம், தேவர் கூட்டம் ஆகிய எல்லோரும் பிரபஞ்சத்தில் இருக்கிறார்கள். அண்டத்தினுள் இன்னதுதான் இருக்கிறது, இன்னது இல்லை என்று பாகுபடுத்த முடியாது. எல்லாப்படித் தரங்களிலும் உள்ள அனைத்தும் ஆங்கு இடம் பெற்றிருக் கின்றன. இக்கோட்பாட்டை ராஜகோபுரம் உருவகப்படுத்தி யுள்ளது''[1] என்பது அடிகளார் கருத்து.

6.5. கோயில் கோபுரக் கலசங்களும் விமானக் கலசங்களும்:

கோயிலில் அமையும் கோபுரத்தின் உச்சியிலும் விமானத்தின் உச்சியிலும் கலசங்கள் வைக்கப்படும். கோயிலின் கட்டட அமைப்பிற்கும், சிற்ப-சித்திர அமைப்பிற்கும் முடிநிலைச் சிறப்பாகக் கலசங்கள் இடம்பெற்றுப் பொலிவையும் தெய்வநல

1. திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலர், 1976

ஆற்றலையும் வழங்கி வருவதாக மக்கள் நம்புகின்றனர். எனவே, கோயிலைக்கட்டி முடித்த நிலையிலும், செப்பனிட்டுப் புதுப்பித்த நிலையிலும் கோபுர-விமானக் கலசங்களுக்குப் புனித நீராட்டுதலாகிய **திருக்குடமுழுக்கு** அல்லது **கும்பாபிடேகம்**, அல்லது **சம்புரோட்சனம்** (புனிதநீர் தெளித்தல்) நடத்தி மன நிறைவு கொள்கின்றனர்.

கோபுரத்திற்கோ விமானத்திற்கோ வைக்கும் கலசங்களைப் பற்றிச் சிறிது காண்போம்.

கோபுரத்தைப் பொறுத்தவரையில், மாடங்கள் அல்லது தட்டுக்கள் எண்ணிக்கையை மனத்துட்கொண்டு ஆகமவிதிப்படி கலசங்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கின்றனர். பெரும் பாலும் பார்வைக்குத் தென்படும்படி கோபுரக் கலசங்களை யெல்லாம் வரிசையாக அமைக்கின்றனர். ஆனால், விமானக் கலசங்களை விமான வகைகளுக்கேற்பப் பல்வேறு முறைகளில் அமைத்து வருகின்றனர். விமானத்தில் ஒரே கலசமோ, ஒற்றை யெண்ணிக்கையில் மூன்றோ ஐந்தோ ஏழோ ஒன்பதோ பதினொன்றோ அமைக்கின்றனர்; புறனடையாக நான்கு கலசங்களும் அமைப்பது உண்டு. இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அமைப்பதும் உண்டு.

பெரும்பாலாகக் கோபுரக் கலசங்கள் உலோகத்தால் (செம்பால்) அமைக்கப்படும்; சில, சுதையாலும் அமைக்கப்படும். சுதையால் அமைக்கப்படும் கலசங்கள் அன்னாசிப்பழ வடிவத் திலும் அமைந்திருக்கக் காணலாம்.

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில் பல கோபுரங்கள் உள்ளன; நான்காம் பிராகாரத்தில் பிரம்மதீர்த்தத் துக்கு அருகில் **கிளிக்கோபுரம்** வரலாற்றுச் சிறப்புமிக்கது. இக் கோபுரக்கலசங்களின் தெற்கு முனைகளில் **கிளியின் உருவங்கள்** அமைந்துள்ளன. **அருணகிரிநாதர்** கிளியுருவமெடுத்துக் **'கந்தரனுபூதி'** பாடினார் என்பது வரலாறு. அவரது பெருமையை உணர்த்தும் வகையில் கிளிக்கோபுரத்தில் கிளியுருவங்களை அமைத்துள்ள சிற்பியின் கலைத்திறம் போற்றற்குரியது.

விமானங்களின் மீது பெரும்பாலும் செப்புக்கலசங்களையும், மிகப் புகழ்பெற்ற ஆலய விமானங்களின் மீது பொன்முலாம் பூசிய செப்புக்கலசங்களையும் அமைப்பர். தொன்மையான, ஆனால், மிகச் சிறுபான்மையான ஆலய விமானங்களின் மீது சுதைக் கலசங்களையும் வைக்கின்றனர். கோபுரக் கலசங்களைப் பொறுத்தவரையில் பொன்முலாம் பூசிய செப்புக் கலசங்களை வைப்பது மரபில்லை.

பொதுவாகக் கோபுர, விமானக் கலசங்கள் உலோகத்தால் அமைகையில் கோபுரத்துக்குப் பாதுகாப்பாக இருக்கும்வண்ணம் அக்கலசங்களில் வரகுதானியத்தை இட்டு நிரப்பவேண்டும் என்பது சிற்பியர் நடைமுறை உத்தியாகும்; இதனால், இடிவிழாமல் கோபுரமும் விமானமும் காக்கப்படுவதாகக் கூறுவர். செப்புக் கலசங்கள் காரணமாகச் சுற்றியுள்ள இடங்களுக்குக் காற்று மண்டலத்தில் ஒருவகையான காந்தப் பாதுகாப்பு அமைகின்றது என்பர்; இது தொடர்ந்து ஆராய்தற்குரியது.

7. கூரையில்லாக் கோயில்கள்;

பண்டைய தமிழ்நாட்டில் மரத்து அடியில் தெய்வங்களை வைத்து வழிபட்டு வந்தனர். வெயிலிலும் மழையிலும் தெய்வச் சிலைகள் அவ்வாறு இருத்தலைப் பார்த்த அடியவர்கள், புறப் பாதுகாப்பிற்காகக் கோயில் கட்டத் தொடங்கினர். அத்தகைய கோயிலில், கருவறைக்கு மேலுள்ள கூரையே, விமானமே மிகவும் தவிர்க்கவியலாத கோயிலுறுப்பாக அமைந்தது; இதற்கு ஆகமங் களும் துணைநின்றன. எனினும், நாட்டில் சில கோயில்களிலே கூரையைக் காணமுடியாது. இவ்வாற்றான் இருகோயில்களைக் காண்போம்.

திருச்சி உறையூர் **வெக்காளியம்மன் கோயில்** மிகவும் சக்தி வாய்ந்ததாகும். அடியவர்களின் இடையூறுகளை நீக்கி வளமார் வாழ்வுக்கு வழிகோலும் அந்தக் காளியம்மன், ஒரு வாயிலுடன் கூடிய கைப்பிடிச்சுவர்களால் அமைந்த கருவறையிலே மேற் கூரையின்றிக் காணப்படுகிறாள். அடியார்களின் காணிக்கையால் வருமானம் பெரிய அளவில் வந்தும், **அந்தச் சக்தி மாகாளிக்கு விமானம் அமைத்தல் கூடாதென்பது அங்குப் பின்பற்றப்படும்**

கோயில் மரபாகும். எனவே, வெயிலில் காய்வதையும் மழையில் நனைவதையும் பொருட்படுத்தாமல் அந்தத் தெய்வம் அருளாட்சி செய்து வருதலை இன்றும் காணலாம்.

வடஆர்க்காடு சம்புவராயர் மாவட்டத்தில் வேலூருக்கு இருகல் தொலைவிலுள்ள **சேண்பாக்கத்தில்** சுயம்புவாகத் தோன்றிய **விநாயகர் கோயில்** உள்ளது. சக்திமிகு அந்த விநாயகருக்குக் கோயில் இருப்பினும் மண்டபத்தின் மேல்பகுதி திறந்தே இருத்தலைக் காணலாம். இது தொடர்பாக ஒரு வரலாற்றுக் குறிப்பினைக் காண்போம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் **துகோஜிராவ்** எனப் **பெயரிய** மராத்திய அமைச்சர் ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்தார். சேண்பாக்கக் கிராம மக்கள் முன்தோன்றி அந்தணச் சிறுவர் வடிவில் வந்த விநாயகர், "வேலூர் கோட்டையைச் செப்பனிடும் பொருட்டுக் கற்களை ஏற்றிச் சென்ற ஒரு மாட்டு வண்டி தன் முதுகில் ஏறிக் காயப்படுத்தி விட்டது" எனக் கூறினாராம்! "இது இறைவனின் திருவிளையாடலே என்பதையுணர்ந்த துகோஜிராவ் விநாயகர் தமது கனவில் காட்டிய இடத்தில் ஒரு சிறு ஆலயத்தை எழுப்பினார். இதுவே இக்கோயில் தோன்றிய வரலாறு. விநாயகரின் சந்நிதி அவரது விருப்பப்படியே திறந்த வெளியாக விடப்பட்டது- தேவர்களும் தவசிகளும் விண்ணி லிருந்தவாறு விநாயகரை வழிபடுவதால் மண்டபத்தின் மேல் பகுதி திறந்தே விடப்பட்டுள்ளதாம்"[1] என்று **எம். இராஜ கோபாலன்** எழுதிச் செல்வது சிந்திக்கத்தக்கது.

சிற்றூர்ப் புறங்களிலே சில கிராம தெய்வங்கள் மரத்து அடியில் இன்றும் காணப்படுகின்றன. குல தெய்வங்களாக அவற்றைப் பெற்றுள்ள பெரும் பொருட்செல்வர்கள் தம் திருப்பணியாக அவற்றுக்கு ஆலயங்கள் கட்ட முயன்றுள்ளனர் என்பதும், ஆலயங்களைக் கட்டவிடாத சூழ்நிலைகள் தோன்றவே ஊர்ப் பெருமக்கள் முன்வந்து ஆலயங் கட்டும் முயற்சியை விட்டுவிடுமாறு செல்வர்களை வேண்டிக் கொண்டனர் என்பதும் கள ஆய்வால் தெரியவருஞ் செய்திகளாகும்.

1. திருக்கோயில் (திங்களிதழ்), செப்டம்பர், 1991

கோயிற்கட்டடக்கலை - வளர்ச்சி நிலைகள்

(தொடர்ச்சி-I)

(கோயிற்கட்டடக் கலையின் விரிவிற்கு அடிப்படையான கருவறை, விமானம் முதலியவை பற்றிய செய்திகளை முன்னரமைந்த இயலில் கண்டமையால், அவற்றின் தொடர்ச்சிச் செய்திகள் வகைப்படுத்தப்பட்டு இந்த இயலிலும் அடுத்த இயலிலும் ஓரளவு விளக்கமாகக் காணலாம்.)

1. மண்டபங்கள்:

திருக்கோயிலின் தேவை மக்களால் நன்கு உணரப்பட்ட நிலையில், கோயிற் கட்டடக் கலையில் மக்களின் வசதிக்கேற்பப் பல வகைக் கட்டடக் கூறுகள் தோன்றலாயின. சமயங்களின் நடைமுறைக்கேற்பவும் கட்டடக் கூறுகள் அமையலாயின.

கோயில்களில் கருவறை மிக இன்றியமையாத முதற்கூறு என முன்பே கண்டோம். கருவறையைச் சார்ந்து **அந்தராளமும், அர்த்த மண்டபமும்**, **மகாமண்டபமும்** சிறப்புக் கூறுகளாக அமைந்தன. பிறகு, கோயில்களின் ஆன்மிகத் தொண்டினை உணர்த்தும் வகையில், **படன மண்டபம், நடன மண்டபம், நாடக மண்டபம், தருக்க மண்டபம், வியாகரண தான வியாக்கியான மண்டபம், எழுத்து மண்டபம், திருவந்திக் காப்பு மண்டபம்** முதலியவை அமையலாயின. கட்டடக்கலைத் திறமை நோக்கில் **'வௌவானெற்றி மண்டபம்'** எனும் ஒருவகை மண்டபமும் அமையலாயிற்று. திருவீழிமிழலையில் அமைந்துள்ள இம்மண்டபம் கலையுலகில் மிகச்சிறப்புடையது என்பர். சிறப்பாக ஆய்வு நோக்கில் கருதுகையில், "தமிழரின் குறிஞ்சி நில வாழ்வில் பயன்பட்ட குகை போன்ற அமைப்பினை ஏனைய நில வாழ்க்கையிலும், செயற்கையாகக் கருங்கற்களைக் கொண்டு அவர்கள் அமைத்துக் கொண்டனர். அவையே பிற்காலத்தில் கோயில் மண்டபங்களுக்கு அடிப்படையாக அமைந்தன"[1] எனலாம்.

1.1. அந்தராளம்:

கோயிலின் கருப்பக் கிருகத்தை அடுத்த மண்டபம் அந்தராளம் எனப்பட்டது. பல ஆலயங்களில் கருப்பக் கிருகத்தை

1. உலகத்தமிழ் மாநாடு விழா மலர், சென்னை-1968, பக்.18

யொட்டியே **அர்த்த மண்டபம்** அமைந்திருக்கும். சில ஆலயங்களில் (திருவையாறு-பஞ்சநதீசுவரர் கோயில், கீழையூர் அவனி கந்தர்ப்ப ஈச்சுரம் ஆகியவற்றில்) கருப்பக் கிருகத்தினின்றும் தனித்தே அர்த்த மண்டபம் அமைந்திருந்த நிலையில், அவற்றை இணைக்க, **அந்தராளம்** அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோயிலைப் பின்பற்றி இவ்வாறு அந்தராள அமைப்பு ஏற்பட்டிருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

1.2. அர்த்த மண்டபம்:

கருவறையையும், மகாமண்டபத்தையும் இணைக்கும் வகையில் அர்த்த மண்டபம் கட்டப்பட்டது. அர்த்த மண்டபம், கருவறைக்கு முன் பகுதியில் அமைந்திருக்கும். கோனேரி ராசபுரத்திலுள்ள **கண்டராதித்தியம்** எனும் திருக்கோயிற் கல்வெட்டால்[1] இது **திருவிடைக்கட்டு** என வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

1.3. மகா மண்டபம்.

கோயிலின் அர்தத மணடபத்தையடுத்துப் பெரிய அளவில் அமைக்கப் பெற்ற மண்டபம் இதுவாகும். கோயிற் சிறப்பாகிய விழாக் காலங்களில் உலா வருவதற்குரிய **உற்சவமூர்த்திகள்** இங்கே அமர்த்தப் பெற்று, அபிடேக அலங்காரம் செய்யப் பெறும். அந்நிலையில் பக்தர்களால் அது போற்றப்பட்டு வழிபடுதற்குரிய இடமாகும்.

மகா மண்டபத்தில் தூண்கள் எண்ணிக்கையிலும், பல்வகைக் கலை நேர்த்தியிலும் சிறப்பாக அமையும்; ஆலயத்தின் பெருமையை உணரச் செய்வதற்கு இது பெரிதும் பயன்படும்.

1.4. படன மண்டபம்:

வேதங்களை **அத்தியயனம்** (ஓதிப்பயிலுதல்) பண்ணுபவர்களும் சாத்திரங்களை ஓதுபவர்களும் தங்கி மனப்பாடஞ் செய்வதற்குரிய வசதிக்கென அமைந்த இடம் படன மண்டபமாகும். இங்குப் புராண ஆய்வு - விரிவுரையும் நடைபெற்றது என்பர்.

1. தெ.இ. கல்வெட்டு எண் 202: 1928-29

1.5. நடன மண்டபம்:

சோழர் காலத்திலிருந்து நடனக்கலை, கோயிற் சிறப்பு வழிபாடுகளுள் உவப்பான ஒன்றாகவே கருதப்பட்டது. திருவிழாக் காலங்களில் சமய மேன்மையையும், புராணச் சிறப்பையும் மக்கள் உணரும்வகையில் நடனக் கலைஞர்கள் பலவகை நடனங்களை அரங்குகளில் ஏறி ஆடிக்காட்டினர். இத்தகைய நோக்கத்துடன் நடன மேடையுடன் கூடிய அழகு மண்டபமே நடன மண்டபமாக அமைக்கப்பட்டது.

1.6. நாடக மண்டபம்:

சமயச் சார்பான இதிகாச, புராணக்கதைகளை நாடகங் களாக்கிக் கோயில் திருவிழாக்களில் நாடகக் கலைஞர்கள் தம் கலைத்திறமையைப் புலப்படச் செய்தனர்.

தஞ்சைப் பெரிய கோயிலில் **'இராசராச நாடகம்'** நடித்துக் காட்டப்பட்டமை பற்றிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

திருப்பாதிரிப்புலியூரில் **'புலியூர் நாடகம்'** நடத்தப்பட்டமை பற்றியும் வரலாற்றுக் கல்வெட்டுக்களும், குறிப்புக்களும் உள்ளன. விழாக்காலத் தேவைக்கும் வசதிக்குமேற்ப நடன மண்டபமே நாடக மண்டபமாகவும் பயன்படுவது உண்டு.

1.7. புராண மண்டபம்:

மக்கள் புராணங்கள் பற்றிய அறிவும் தெளிவுங் கொள்ளும் வகையில், புராணங்களில் வல்ல ஆசிரியர்களால் சொற்பொழிவு கள் நடத்துதற்கு வாய்ப்பாக இந்த மண்டபம் அமைந்திருந்தது. திருவாரூர்த் தியாகேசர் கோயிலில் புராண மண்டபத்தைக் காணலாம். எனினும், இது பிற்காலத் திருப்பணியைச் சேர்ந்தது என்பர்.

1.8. தருக்க மண்டபம்:

தமிழ்ப் புலவர்கள் தம் புலமை வித்தகத்தைப் புலப்படுத்து தற்கு வாய்ப்பாகக் கோயில்களில் தருக்க மண்டபங்கள் அமைக் கப்பட்டன. சொற்போர் நிகழ்த்துதற்கு வாய்ப்பான மண்டபம் பட்டி மண்டபம் என்று அழைக்கப் பெற்றது. 'பட்டி மண்டபம் பாங்கறிந்து ஏறிய' குறிப்புக்கள் இலக்கியவுலகில் நிரம்பக் காணப்படுகின்றன.

பௌத்தர்களுடன் **மணிவாசகர்** சொற்போர் (வாதப் போர்) நிகழ்த்திய நிகழ்ச்சி தில்லையம்பலத்தில் நடராசப் பெருமான் முன்னுள்ள பெரும் மண்டபத்தில் நிகழ்ந்தது என்பர். அதனைத் தருக்க மண்டபமாகக் கொள்ளலாம்.

1.9. வியாகரணதாரண வியாக்கியான மண்டபம்:

வடமொழிப்புலவர்கள் பல இலக்கணங்களைக் கற்ற நிலையில், கேட்க விரும்புவோருக்குப் பாடமாகப் போதித்துள்ளனர். முற்காலத்தில் தமிழ்நாட்டுக் கோயில்களில் வடமொழியாளர்கள் வேத ஆகம அடிப்படையில் பூசனை புரிய வேண்டும். விதி வகுத்துக் கொண்டு, சமற்கிருதமாகிய வடமொழிப் பயிற்சிக்கு, மாமன்னர்களாலும் ஊக்கந் தரப்பட்டது. அவ்வாற்றான், அந்தணச் சிறுவர்கள் சமற்கிருத இலக்கிய இலக்கணங்களை அமர்ந்து பயில்வதற்காக அமைக்கப்பட்ட இடம் வியாகரண தாரண வியாக்கியான மண்டபம். வடமொழிப் பயிற்சியாளர்கள் பிறர் கேட்டுப் பயன் பெறும்வகையில் சமற்கிருத வியாக்கியானம் - சமற்கிருத நூல் விளக்கம் - விரிவுரையமைப்பிலும் இத்தகைய மண்டபத்தில் அமர்ந்து அளித்தனர்.

இஃது ஒரு புறமிருக்கக், ''கோயிலில் காணப்படும் கருவறை' அர்த்த மண்டபம், மகா மண்டபம், நீராடு மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்னும் ஆறு மண்டபங்களாலும், **மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை** என்னும் ஆறு ஆதாரங்களாலும் அறியப் படுகின்றன''[1] என்று **கோ. மு. முத்துசாமி பிள்ளை** தரும் குறிப்பும் இயைபுடன் சிந்திக்கத் தக்கதாகும்.

1.10. எழுத்து மண்டபம்:

திருவண்ணாமலையில் அண்ணாமலையார் திருக்கோயில் வளாகத்தில் எழுத்து மண்டபம் அமைந்திருத்தல் காண்க. இதன் நோக்கம் சரியாகப் புலப்படவில்லை. பரிபாடலில் குறிக் கப்பெறும் **'எழுத்துநிலை (ஓவிய) மண்டபம்'**, பிற்காலத்தில் எழுத்து மண்டபம் ஆயிற்றா என்பதும் புரியவில்லை.

1. கோயிற் களஞ்சியம் - அறிமுகம், பக் 12

1.11. ஊஞ்சல் மண்டபம்;

பெருந்திருவிழாக் காலத்தில் மக்களைச் சமய நோக்கில் ஈடு படச் செய்யும்வகையில் சில மண்டபங்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் **ஊஞ்சல் மண்டபமும்** ஒன்றாகும். திருவாரூர், திரு நல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்) முதலிய பல இடங்களில் ஊஞ்சல் மண்டபங்களைக் காணலாம்.

1.12. திருவந்திக் காப்பு மண்டபம்:

வைணவ மரபுப்படி திருவந்திக் காப்பு மண்டபம் சிறப்பாக அமைப்பது உண்டு. திருவரங்கத்தைப் பொறுத்த வரையில் ஐந்தாம் திருச்சுற்றிலுள்ள திருவந்திக் காப்பு மண்டபம் சமயச் சிறப்புடன் அமைந்து உள்ளது.

1 13. திருப்பள்ளித் தாம மண்டபம்:

சுவாமிக்கு வேண்டிய பள்ளியறை மாலைகள் கட்டுதற்குரிய மண்டபமாகும். திருவாரூரில் திருப்பள்ளித்தாம மண்டபம் எனத்தனியே உள்ளது.

1.14. முத்தி மண்டபம்:

மண்டபங்களுள் மிகச்சிறப்பினதாகக் கருதப்படுவது **முத்தி மண்டபம்**, "காசி, கயிலை, நாகை (திருநாகைக் காரோணம்) - இந்த மூன்று இடங்களில் மட்டுமே **முத்தி மண்டபம்** அமைந் துள்ளது என்பர்."[1] என வருங்குறிப்பினைக் காண்க.

1.15. நித்த மண்டபம்:

இலக்கியங்களாலும், **கல்**வெட்டுக்களாலும் அறியப் பெறும் கோயில் மண்டபங்களுள் நித்த மண்டபமும் ஒன்று. "கோவில் களில் புதிய மண்டபங்களைக் கட்டுவித்த போது மனமுவந்து உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. ஆளுடைய நாயனார் கோவிலில் **'நித்த மண்டபம்'** (தெ.க. எண். 12-178) அமைத்தபோது தேவரடியார் **பொற்றாழ்வியின்** தம்பி **ஆட் கொண்டான்** என்பவன் தன் தலையை அரிந்து கொண்டமைக் காக, அவன் தம்பி அண்ணாமலைக்கு இறையிலியாக நிலத்தை

1. தினமணிச் சுடர், 17.3. 1974.

உரிமையாக்கியுள்ளனர்''[1] என டாக்டர் அ. கிருட்டினன் குறிப்பிட்டுச் செல்வது காண்க. இதனால், கோயில்களில் புதிய மண்டபங்கள் போன்ற கட்டுமானங்கள் அமைக்கும்போது உயிர்ப்பலி தரும்வழக்கம் இருந்துள்ளமையை அறியலாம்.

கோயில் வளாகத்தில் திருவிழா நோக்கிலும் மக்களின் சமய ஈடுபாட்டு நோக்கிலும் இன்னும் பலவகை மண்டபங்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் வசந்த மண்டபம், தட்டஞ் சுற்றி மண்டபம், பக்தக் காட்சி மண்டபம், நவராத்திரி மண்டபம், கார்த்திகை மண்டபம், கொடிக் கம்ப மண்டபம், வாத்திய மண்டபம், மலைக் கோயிற் படிகளுக்கிடையே காணலாகும் இளைப்பாறும் மண்டபம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. எனினும், இவ்வாறான மண்டபங்களெல்லாம் காலத்தையொட்டிய தேவைகளாகவும் பிற்காலத் திருப்பணிகளாகவும் அமைந்தன.

2. நீர் நிலை மண்டபங்கள்;

கோயில் திருக்குளங்களில் நீராழி மண்டபங்கள் அமைப்பதும், நீராழி மண்டபத்தைச் சுற்றி, அலங்கரித்த தெப்பத்தினை (சுவாமியை அமரச் செய்து ஒளி வெள்ளத்துடனும் மேளதாளத்துடனும்) வலம் வரச் செய்யும் தெப்பத் திருவிழா நடத்துவதும் சில திருத்தலங்களில் காணலாம்.

கோயில் திருக்குளத்தில் தெய்வ நல ஆற்றலை மிகுவிக்கும் நோக்கத்துடன், படிக்கரைக்கு மேலே சின்னஞ் சிறு கோயில்களை அமைத்துப் பரிவார தெய்வங்களைப் பிரதிட்டை செய்வது உண்டு. அத்தகைய சிறு கோயில்களையொட்டியே மண்டபங்கள் அமைப்பதும் உண்டு. இத்தகைய மண்டபங்களைத் திருவாரூர்க் கமலாலயம், குடந்தை மகாமகக் குளம், மதுரை வண்டியூர்த்தெப்பக்குளம் முதலிய சில திருத்தலங்களில் காணலாம். ஈண்டு மகாமகக்குள மண்டபங்களைப் பற்றிச் சிறிது காண்போம்.

அச்சுதப்ப நாயக்கனும் (கி.பி. 1572-1600), அவன் மகன் இரகுநாத நாயக்கனும் தஞ்சை நாயக்கர்களாக ஆண்ட காலத்தில்,

1. கல்வெட்டில் வாழ்வியல், பக்.81.

அவ்விருவருக்கும் அமைச்சராக விளங்கியவர் **கோவிந்த தீட்சதர்.** இவர் சமய நலத்தையும், சமுதாய நலத்தையும் இரு கண்களாகக் கொண்டமையால், காவிரியாற்றங்கரையில் மண்டபங்கள் பல கட்டினார். அதனால், குடந்தை வளர்கத்தினர் மிகப் பெரிதும் பயன் கொள்கின்றனர். அவரது முயற்சியால் **மகாமகக் குளம்** செப்பனிடப்பட்டுத் திருக்குளத்தைச் சுற்றி 16 மண்டபங்களும், படித்துறைகளும் கட்டப்பட்டன. புண்ணியத் தீர்த்தக் கரையில் பதினாறு விதமான தானங்கள் செய்ய வேண்டும்; இத்தானங்க்ள் முறையே பொன், பூமி, கன்னிகை, ஆடை, பசு, குதிரை, காளைமாடு, அன்னம், தென்னை, குப்ததானம், சந்தனம், முத்து, நவரத்தினம், தேன், உப்பு, பழங்கள் ஆகியனவாகும். ''இத்தானங்களை எப்படிச் செய்வது என்பதை 16 **மண்டபங்களின் மேல் தளத்தில் சிற்பங்களாகக்** காணலாம். துலாபாரஞ் செய்வது அரசர்களுக்கு விசேடமாகும். மகாமகக் குளத்தின் வடமேற்குக் கரையிலுள்ள பெரிய மண்டபம் **துலாபார மண்டபம்** என்று அழைக்கப்படுகிறது. தராசின் ஒரு தட்டில் மன்னர் வீற்றிருப்பர்; மற்றொரு தட்டில் எடைக்கு எடை பொன் நிறுத்து அப்பொன்னை வாசுதேவன் சாட்சியாக ஓமம் வளர்த்து, அரசியர் மந்திரி பிரதானிகள் முன்னிலையில் மன்னர் தானமாக வழங்குவார். இதனை இத்துலாபார மண்டபத்து மேல் தளத்தில் சிறபங்களாகக் காணலாம்.''[1] என்று விளக்கமாக எழுதிச் செல்கிறார் **குடந்தை என். சேதுராமன்.** இதனால், அந்தக் காலத்தில் கோயிற் பண்பாட்டினை மையமிட்டுச் செல்லும் சமயப் பண்பாடு, சமுதாய நன்மையையொட்டி வளர்க்கப்பட்டது என்பது விளக்கமாகும்.

3. தூண்களைப் பொறுத்து மண்டபப் பெயர்கள்:

கோயில் மண்டபம் என்பது மண்டபத்தில் அமைக்கப்படுகின்ற தூண்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் பெயர் பெறும் எனலாம். பொதுவாக மண்டபமானது **அடித்தளம், தூண், சுவர், கூரை** அல்லது **மேல்தளம்** ஆகியவற்றைப் பொறுத்து அமையும். ஆகம அடிப்படையில் எவ்வெவ்வகையான

1. மகா மகம் (விழாக்குழுவினர்) சிறப்பு மலர், 1992

மண்டபம் ஆலயத் தொடர்பாக எங்கெங்கு அமைக்கப்பட வேண்டும் என்ற விதியுள்ளது.

கருவறைக்கு முன் அர்த்த மண்டபம் போல மேல்தளம் அமைத்து ஒரே தூண் நிறுத்தி மண்டபம் நிறுவுவது உண்டு; அதற்கு **ஒற்றைக்கால்** மண்டபம் என்று பெயர். இதற்கு எடுத்துக் காட்டாகத் தில்லைச் சிவகங்கைக் குளத்துக்கு மேற்கே **இருபத்து நான்குகால் மண்டபத்துக்கும் மேற்பாலுள்ள விநாயகர் கோயில், ஒற்றைக்கால் மண்டபம்** கொண்டுள்ளதைக் காணலாம்.

படிப்படியாகத் தேவைக்கேற்ப விசாலமாக அமைகின்ற **பதினாறுகால் மண்டபம், இருபத்து நான்குகால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம்** முதலியவையும், திருக்கோயில்களில் உள்ளன. திருக்கோயிலின் பெருமைக்குத் தக்கவாறு இவ்வாறான மண்டபங்கள் அடியவர்களின் வசதி, ஆலயத் தொண்டு, விழா முதலிய பல நோக்கங்களில் அமைக் கப்படுகின்றன.

மக்கள் பலரும் காணும் வண்ணம் விழாக்காலங்களில் தெய் வங்களுக்கு அபிடேகம் அலங்காரம் செய்வதற்கும், சமய நூல் அரங்கேற்றத்திற்கும், சமய விரிவுரைகள் நிகழ்த்துவதற்கும் நல் வாய்ப்பாக **ஆயிரங்கால் மண்டபம்** அமைக்கப்பட்டது. தமிழ் நாட்டில் **திருநெல்வேலி, மதுரை, திருவாரூர், மன்னார்குடி, திருவரங்கம், திருவானைக்கா, சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம்** முதலிய சில திருத்தலங்களில் ஆயிரங்கால் மண்டபங் களைக் காணலாம். சற்றேறக் குறைய ஆயிரம் தூண்கள் எனக் கூறலாமேயன்றி எண்ணிக்கையில் சரியாக ஆயிரம் தூண்கள் உள்ளன எனக் கூறுதற்கில்லை.

கோயில்களால் புலப்படுத்தப்பட வேண்டிய சமயப் பண் பாட்டினையும், பெருமையினையும் ஆயிரங்கால் மண்டபங்கள் உணர்த்துகின்றன எனலாம். கோயிற் காரியங்களுக்கேயன்றி மக்களுக்கு உதவும் வகையில் **கலைக் கருவூலக் கண்காட்சி** நோக்கி லும் இவை பயன்பட்டுவருதல் காலத்தின் நல்ல அடையாள மாகும். இவ்வாற்றான் மதுரை ஆயிரங்கால் மண்டபம் காண் பதற்கரிய சிலைகளையும், ஓவியங்களையும் கொண்ட கலைக் கண்காட்சியை மக்களுக்கு வழங்கி வருதலைக் கூறலாம்.

கோயில்களில் பெருந்திருவிழாக்கள் நடைபெறுகையில், பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரண்டு வந்து கண்டு களிப்புறுவர். அவர்கள் வசதியாகத் தங்கி இளைப்பாறவும், இறைத் திருக் கோலங்களைப் பல்வேறு அலங்காரங்களில் கண்டு போற்றவும் விசாலமான மண்டபங்கள் தேவை. இத்தகைய தேவையை நிறைவு செய்ய ஆயிரக்கால் மண்டபங்கள் பெரிதும் உதவியாக அமையும்.

எடுத்துக் காட்டாகத் தில்லை ஆயிரக்கால் மண்டபத்தில் நடராசப் பெருமானை எழுந்தருளப் பண்ணி, அங்கே அபிடேக வழிபாடுகள் நிகழ்த்திய பின், தேருக்கு எழுந்தருளச் செய்வதும் தேர்த் திருவிழா (தேரோட்டம்) நிறைவுற்ற நிலையில் மீண்டும் ஆயிரக்கால் மண்டபத்திற்கு இறைவனை எழுந்தருளச் செய்து, வழிபாடு நிகழ்த்திய பின் தெரிசன விழா நடத்துவதும் மரபாக வுள்ளதை நினைவில் கொள்ளலாம். இவ்வாறே திருவாரூர் முதலிய திருத்தலங்களில் நடைபெறும் பெருந்திருவிழாக்கள் (பிரமோற்சவங்கள்) ஆங்காங்குள்ள ஆயிரக்கால் மண்டபங்களைப் பயன்படுத்திக் கொண்டு வருதலையும் பலரும் அறியலாம்.

நூற்றுக்கால் மண்டபங்கள் திருவாரூர் திருவண்ணாமலை சிதம்பரம், காஞ்சி முதலிய பல தலங்களில் உள்ளன.

சிதம்பரத்தில் சிவகாமியம்மன் திருக்கோயிலுக்குத் தென் புறத்தில் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. விக்கிரமசோழன் **காலிங்கராயனால்** கட்டப்பட்ட இம்மண்டபத்தை **விக்கிரமசோழ மண்டபம்** என்று வழங்குவர். இந்த இடத்தில் சோழ மன்னர்க்கு முடிசூட்டு விழா நடந்தது என்று வரலாறு கூறும்.

பதினாறு கால் மண்டபங்கள் பல திருத்தலங்களில் காண லாம். பெரும்பாலும் ஆலயங்களில் உள்ளேயும், சில இடங்களில் வெளியேயும் பதினாறுகால் மண்டபங்கள் அமைந்திருக்கும்.

ஆலயத்தின் உள்ளே பதினாறுகால் மண்டபம் அமைந்திருக் கையில் அதற்கென ஒருவகைத் தத்துவத்தையும் இயைபுடன் கூறி வருகின்றனர். மானுட உடல் தத்துவங்களாகிய 1) காலம் 2) நியதி 3) கலை 4) வித்தை 5) அராகம் 6) புருஷன் 7) மாயை

8) வித்தியாதத்துவம் 9) மண் 10) நீர் 11) தீ 12) காற்று 13) வெளி 14) மனம் 15) புத்தி 16) அகங்காரம் ஆகியவற்றைப் பதினாறு கால் மண்டபத் தூண்கள் விளக்கி நிற்கின்றன என்பர்.[1] இவ்வகை மண்டபங்கள் திருவாரூர், திருவலஞ்சுழி முதலிய திருத்தலங்களில் காணலாம்.

ஆலயத்தின் வெளியேயும் பதினாறுகால் மண்டபத்தை அமைப்பது உண்டு எடுத்துக்காட்டாகத் தில்லைத் திருத்தலத்தில் நடராசர் கீழ வீதியின் வடபால் (ஈசானிய மூலையில்) பதினாறு கால் மண்டபம் அமைந்திருத்தலையும், அம்மண்டபத்தையடுத்துக் கிழக்குப்புறமாகவுள்ள தெருவினைப் **பதினாறு கால் மண்டபத்தெரு** என மக்கள் அழைத்தலையும் காணலாம்.

4. கோயில் வளாகத்தில் மண்டபங்கள்:

தமிழ்நாட்டுக் கோயில்கள் பல்வேறு நோக்கங்களில் பலவகை மண்டபங்களைக் கொண்டு விளங்குகின்றன எனக் கண்டு வருகிறோம். தமிழகத்தில் ஆகம அடிப்படையிலும் வசதிகள் அடிப்படையிலும் கோயிலில் அமைந்துள்ள மண்டபங்கள் எண்ணிலவாகக் காணப்படுகின்றன; எனவே, அவற்றை அறுதியிட்டுக் கூற வியலாது.

சில கோயில்களில் அமைந்துள்ள மண்டபப் பெயர்களை அறிகையில் மக்களின் சமயவூற்றம் புலனாகின்றது. எடுத்துக் காட்டாகத் **திருவண்ணாமலை** அருணாசலேசுவரர் **திருக்கோயிலில்** ''ஞானப்பால் மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், திருவருள் விலாச மண்டபம், மாதப் பிறப்பு மண்டபம், உருத்திராக்க மண்டபம், நந்தி மண்டபம், அமாவாசை மண்டபம், பன்னீர் மண்டபம், காட்சி மண்டபம் என எத்தனையோ மண்டபம் உள்ளன''[2] என்பது சிந்திக்கத்தக்கது. அக்கோயிலில் நகரத்தார் திருப்பணியாக அமைந்துள்ள **அஷ்டலட்சுமி மண்டபமும்** மேற்கூறிய பட்டியலோடு சேர்த்துப் போற்றுதற்குரியதாகும்.

1. ஞானபூமி (திங்களிதழ்), செப்டம்பர். 1991.
2. திருவண்ணாமலை, அண்ணாமலையார் கோயில் கும்பாபிடேக மலர், 1976.

''ஒவ்வொரு பெரி ' கோயிலிலும் உள்ள விசாலமான மண்டபங்களிலே திருமுறைகளும், ஏனைய அறிவு நூல்களும், பயன் தரும் கலைகளும் பயிலப்பெற்று வந்தன. ஒருபால் வேதமும், திருமுறைகளும், மற்றொரு பால் பாரதம், தரும சாத்திரம், புராண இதிகாசங்கள், வியாகரணம், யாப்பு, தர்க்கம், சோதிடம், வானநூல், மருத்துவம் என்பனவும், மற்றும் பல கலைகளும் ஆலய மண்டபங்களில் கற்கும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வந்தன. **செந்தலைக் கல்வெட்டு** ஒன்றால் அவ்வூர்ச் **சுந்தரேசுவராது கோயிலில் 'பாரதம்'** வாசிக்கப் பெற்றதென்றும், 10-ஆவது நூற்றாண்டுக் கல்வெட்டொன்றால் **குடந்தை நாகேசுவராது கோயிலில் 'பிரபாகரம்'** விளக்கப் பெற்றதென்றும் அறிகிறோம். **திருவொற்றியூர்க் கோயிலில் வியாகரண தான வியாக்கியான மண்டபம்** ஒன்று அமைக்கப்பெற்றதென்றும், அதில் வியாகரணம், சோம சித்தாந்தம், பாணினீயம் ஆகிய இவை கற்பிக்கப்பட்டன என்றும், அதற்காக 60 வேலி நிலமுள்ள **'குலோத்துங்கன் சாவனூர்'** என்ற சிற்றூரைக் குலோத்துங்கன் இறையிலியாக்கினான் என்றும், அக்கோயில் கல்வெட்டு [தெ.இ. கல்வெட்டு 601 (1931)] தெரிவிக்கிறது.''[1] **என்று ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை** எழுதிச் செல்வது மனங்கொள்ளத் தக்கதாகும்.

தென்னார்க்காடு மாவட்டம் **எண்ணாயிரம் இராசராச விண்ணகரில்** காணலாகும் கல்வெட்டுகள்[2] **வாயிலாகக்** கி.பி. 1036 ஆம் ஆண்டில் - முதலாம் இராசேந்திரனின் 25-ஆவது ஆட்சியாண்டில் - **மறைநூல் கல்லூரி (வேத வித்தியாலயம்)** ஒன்றும், அதனில் மாணவர்கள் முந்நூறு **பேரும்**, கற்பிக்கும் ஆசிரியர் பதின்மரும், கோயிலை ஒட்டித் **தங்குவதற்கான** விடுதி ஒன்றும் கட்டித் தானஞ் செய்தமை அறியலாம். மேலும் வீர இராசேந்திர சோழனது (கி.பி. 1063—1070) கட்டளைப்படி **திருமுக்கூடல் மகாவிஷ்ணு கோயிலில், மாதவன் எனப்** பெயரிய வைசியன், **ஜனநாத மண்டபம்** என்றதொரு பெரிய மண்டபமும் மற்றும் அதைச் சூழ்ந்த மண்டபங்களையும் நிறுவினான் என்பது வரலாறு. ''அங்கு மறைகள், மற்றக் கலைகள், ரூபாவதாரம்

1. சோழர் கோயிற் பணிகள், பக். 131-132
2. தெ.இ. கல்வெட்டுகள், 335, 343 (1917)

முதலிய நூல்கள் கற்பிக்கக் கலா சாலையும், மாணவர்கள் (சாத்திரர்) தங்க விடுதியும், ஏற்படுத்தினான் என்பது அத்திரு முக்கூடல் கல்வெட்டால் தெரிகிறது. மாணவர்களுக்குத் தங்க விடுதியேயன்றி, உணவும், சனி தோறும் நீராட எண்ணெய்யும், விளக்கெரிக்க விளக்கெண்ணெய்யும் கொடுக்கப்பட்டன. இவை களைச் சேர்ந்த வேலைகளுக்காகப் பரம்பரை வழியாக வந்த ஒரு வைத்தியனும், ஒரு சல்லியக் கிரியை பண்ணுவானும் (இரண வைத்தியன் - surgeon), மருந்து மூலிகைகள் கொணரு வதற்கு இரு ஆட்களும், நோயாளிகளைக் கவனிக்க இரு பெண் களும் (Nurses), வியாகரணம், சிவாகமம், சித்தாந்தம் கற்பிக்க ஆசிரியரும், மற்றும் பொது வேலைக்கு என ஒரு ஆளும்(விசன்) நியமிக்கப்பட்டிருந்தனர்''[1] என எழுதிச் செல்லும் விளக்கக் குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

5. மண்டபம் - 'மகால்' என வழங்குதல்:

வடநாட்டில் தென்னாட்டுக் கலைத்தாக்கமும், தென்னாட் டில் வடநாட்டுக் கலைத்தாக்கமும் தவிர்க்கவியலாத காலத்தின் தேவைகளாயின. மொகலாயப் பேரரசன் (ஷாஜகான்) தன் மனைவி முர் தாஜ் மகால் இறந்ததும், அவள் நினைவாக ஒரு வியத்தகு கல்லறை ஆலயம் எழுப்பினான்; முழுமையும் சலவைக் கல்லால் அமைந்த அந்த ஆலயத்திற்குத் 'தாஜ்மகால்' எனப் பெயரிட்டு மனநிறைவு கொண்டான். இப்படி 'மகால்' எனத் தோன்றிய நினைவாலயம் - கட்டடம் - மக்களின் மனத்தில் கவின்கலையுணர்வை எழச்செய்தது, உலகப்புகழ் வாய்ந்த இந்த மண்டபம் - மகால் - இந்தியாவில் பல மண்டபங்களை 'மகால்' எனும் பெயரில் தோன்றும்படி செய்துவிட்டது.

தமிழ்க்கலைப்பண்பாடு என்பது ஒரு மாபெருங்கடல்; ஆதலின், அக்கடலில் இந்த 'மகால்' எனும் ஆறும் சங்கமிக்க இடந்தந்துள்ளது. எத்தனையோ பிறநாட்டுக் கலைக்கூறுகளுக்கு இடந்தந்தும் தன் தனித்தன்மையால் புகழ்பெற்று விளங்குவது தமிழ்க் கலைப்பண்பாடு; இவ்வாறு பொலிவுறுவது பலருக்குப் புதிராகவே தோன்றும். இவ்வாற்றான் உலகியலில் 'மகால்' பற்றிச் சிறிது காண்போம்.

1. சோழர் கோயிற்பணிகள், பக். 133-134

தென்னாட்டில் பலரும் புகழும்வண்ணம் அமைந்த **மதுரைத் திருமலை நாயக்கர் மகால்** தமிழ்க்கட்டடக்கலை வல்லுனர்களின் சிறந்த கலைப்படைப்பாகும். இந்த மகாலில் அமைந்த வேலைப் பாடுடைய தூண்கள் தமிழ்ப்பெருமக்களின் பெருமிதத் தோற்றத் தின் அடையாளம் போல உள்ளன. மகாலின் முழு அமைப் பினையும் நேரிற் கண்டபிறகே எவரும் திருமலை மன்னரின் கலையார்வத்தை உணரமுடியும். இந்த மகால் திருமலை நாயக் கரின் அரண்மனையின் ஒரு பகுதியே என்பதும், ஏனைய பகுதி கள் காலத்தின் கோலத்தால் சிதைவுற்றுப் போயின என்பதும் அறிஞர் சிலர் கருத்தாகும்; இது மிகவும் சிந்திக்கத்தக்கது.

தஞ்சையில் நாயக்க மன்னர்களுக்குப் பிறகு மராட்டிய மன்னர்கள் கலைப்புரவலர்களாக ஆட்சி புரிந்தனர் என்பது வரலாறு. நாயக்க மன்னர்களுள் **ரகுநாத நாயக்கர் சங்கீத மகாலையும்**, மராட்டிய மன்னர்களுள் **சரபோஜி மன்னர்** கட்டிய **சரசுவதி மகாலையும்** தஞ்சை அரண்மனை வளாகத்தில் கண்டு வியப்புற்றுக் களிக்கலாம்.

செஞ்சியில் நாயக்கர் கட்டிய **கலியாண்மகாலும்** கட்டடக் கலை நோக்கில் கண்டு போற்றத்தக்கது.

மகால் என்பது பெரிய மண்டபம் என்ற உணர்வில், தமிழ்ப் பெருமக்கள் அண்மைக் காலத்தே **கலையரங்குகளையும் திருமண மண்டபங்களையும் 'மகால்'** என்னும் பெயரிட்டு அழைத்து வரு கின்றனர். எடுத்துக்காட்டாகச் சென்னையிலுள்ள **வாணி மகாலையும்**, திருச்சியிலுள்ள **மங்கல் மகாலையும்**, குடந்தை யிலுள் **கற்பகம் கலியாண மகாலையும்** மனத்துட்கொண்டு சிந்திக் கலாம்.

6. இறைவன் திருமுன்னரமைந்த படி - தெய்வநலச் சிறப்பு:

நன்செய் வளங்கொழிக்குந் தஞ்சைப் பகுதியில் அமைந் துள்ள திருவீழிமிழலையில் வற்கடம் தலைகாட்டிய நிலையில், மக்களின் பசிப்பிணி போக்குதற்காக **அப்பரடிகளும் திருஞான சம்பந்தரும்** இறைவனை இறைஞ்சி நின்றனர். அருளாளர்களின் பொதுத் தொண்டுணர்வினைக் கண்டு கொண்ட **திருவீழிமிழலை**

இறைவன் தன் சன்னிதிப் படிக்கட்டில் இருவர்க்கும் படிக்காசு நித்தமும் தந்தருளினன் என்பது பெரியபுராணத்தால் அறியப் படுஞ் செய்தியாகும். படிக்காசு என்பது தெய்வநலச் சிறப் பினைப் பெற்றமையின் புலவர் சிலரின் வாழ்க்கையில் இஃது இடம் பெறலாயிற்று. சிறப்பாகத் தில்லைத் திருக்களிற்றுப் படியில், ஆடல்வல்லான் திருவருளால் புலவர் ஒருவருக்கு அவருடைய அன்றாடச் செலவுக்குப் படிக்காசு வைக்கப்பட்ட தாகவும், அத்தகைய திருவருளுக்குப் பாத்திரரான புலவரே பிற் காலத்தில் படிக்காசுப் புலவர் என அழைக்கப்பட்டார் எனவும் கூறுவர். இந்தப் பெயர் மக்களிடையே பெரிதும் போற்றப் பட்டமையால் அவரது இயற்பெயர்கூடத் தெரியாமற் போயிற்று என்பர்.

எல்லாச் சிவன் கோயில்களுக்கும் நாயகத்தன்மை வாய்ந்த சிதம்பரம் நடராசர் திருக்கோயிலில் இறைவன் முன்னரமைந்த படிகளைப் பஞ்சாட்சரப்படி என்பர். கனகசபையில் யானை யுருவமைந்த இந்தப் படியைத் திருக்களிற்றுப்படி என்றும் வழங்குவர். சுந்தரமூர்த்தி நாயனார் நெஞ்சம் நெக்குருகி ஆடல் வல்லானை இறைஞ்சுவதைத் - திருக்களிற்றுப்படியை நெருங்கி வணங்குவதைச்—சேக்கிழார்,

"வையகம் பொலிய மறைச்சிலம் பார்ப்ப
மன்றுளே மாலயன் தேட
ஐயர்தாம் வெளியே ஆடுகின் றாரை
அஞ்சலி மலர்த்திமுன் போற்றுங்
கைகளோ திளைத்த கண்களோ அந்தக்
கரணமோ கலந்தஅன் புந்தச்
செய்தவம் பெரியோன் சென்றுதாழ்ந் தெழுந்தான்
திருக்களிற் றுப்படி மருங்கு"[1]

எனப் பாடிச் செல்வதைக் காண்க. களிற்றுயானை ஓங்கார மாகிய பிரணவத்தின் அடையாளம் என்பதும் தத்துவ இயைபுடன் சிந்திக்கத்தகும்.

திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் சித்தாந்த நூலொன்றை எழுதிமுடித்து, ஆடல்வல்லான் திருக்களிற்றுப்

1. பெரியபுராணம், தடுந்தாட்கொண்ட புராணம், 105

படியில் வைக்க ஏற்பாடு செய்தார். அவ்வாறு **படியில் வைக்கப் பெற்ற நூல் விந்தைக்குரிய வகையில் அக்களிற்றினால் எடுத்துக் கொடுக்கப்பட்ட சிறப்பினைக் கொண்டது.** இத்தகு வியப்பிற் குரிய மேன்மையான நூல் **திருக்களிற்றுப் படியார்** எனும் பெயருடன் மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் ஒன்றாகப் போற்றப் பெறுகின்றது.

தத்துவ நோக்குடன் **சபரிமலை ஐயப்பனுக்குப் பதினெட்டுப் படிகள்** அமைக்கப்பட்டுள்ளன. **கள்ளழகர் கோயிலில்,** பதி னெட்டுப்படிச் சிறப்பினால் **கறுப்பர்** சாமி. **பதினெட்டாம் படிக் கறுப்பர்** என்றே போற்றி வழிபடப் பெறுகிறார்.

ஆண்டவனிடம் அடிமை பூண்பதைச் சைவ அருளாளர்களும் வைணவ அருளாளர்களும் பெரும்பேறாகக் கருதுவர். வைணவர் களிடம் காணப்பெறும் **தாசிய பக்தியும்** சைவர்களிடம் காணப் பெறும் **தாதமார்க்கமும்** ஒப்பீட்டு அடிப்டையில் சிந்தித்துப் போற்றத் தக்கவையாகும்.

திருமாலடியவராகிய **குலசேகரப் பெருமாள்** 'திருவேங்கடப் மலைத் தொடர்பு வேண்டல்' எனும் நிலையில், ''வேங்கடத்துக் கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே.''[1] ''திருவேங்கடச் சுனையில், மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே.''[2] என்றெல்லாம் பாடிச் செல்பவர்,

> ''செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
> நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்
> அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்
> **படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.**''[3]

எனப் பாடியருள்வது மிகவும் சிந்திக்கத் தகும்.

6.1. கோயில் — படிகள்:

தனிப்பட்டோர் மனைகளிலும் பொது நிறுவனக் கட்டடங் களிலும் தோற்றப்பொலிவைக் கூட்டும்வகையில் படிகள் அமைப்பதிலே மக்கள் நாட்டஞ் செலுத்தி வருகின்றனர்.

1. திவ்யப்பிரபந்தம், பெருமாள் திருமொழி, 4, 1
2. மேலது, 4, 2
3. மேலது, 4, 9

பொதுவாக, எந்த அளவுக்குக் கட்டடங்கள் உயரமாக அமை கின்றனவோ அந்த அளவுக்குச் சுற்றுப்புறச் சூழல் நன்கமைய வாய்ப்பு உண்டு; அதனால், உடல் நலத்திற்கு நல்லது என்பர். உயரமான கட்டடங்களுக்கேற்பவும், வாயில்களுக்கேற்பவும் படிகளும் வசதியுடன் அமைக்கப்படுகின்றன. இதே முறையை ஆகம முறைப்படி கோயில் அமைப்புக்களிலும் பின்பற்றுகின்றனர்.

சில கோயில்களில் கோபுர வாயிலைக் கடந்து, இறைவன் சன்னிதியை நேரே படிகள் வாயிலாக அடையலாம்; தூங்கானை மாடம் உள்ளிட்ட **மாடக் கோயில்களில்** உள்ளே நுழைவது பிராகாரத்தில் பக்கவாட்டிலுள்ள படிகள் வாயிலாகவே சாத்தியமாகும். இவ்வாறாகப் படிகள் அமைப்பதிலும், சுவாமி புறப்பாட்டுக்கேற்பக் கீழே இறங்கவும் ஏறவும் சுவாமி (பாதம்) தாங்கிகளுக்கு வசதியாகப் படிகளை அகலமாகவும் உயரமில்லா மலுமிருக்கும்படி பார்த்துக் கொள்வர்.

மலைக் கோயில்களுக்குப் படிகள் அமைக்கும்போது செங்குத் தாகவே பாதையை அமைக்காமல், பக்கவாட்டாகவும், நேரா கவும் மாற்றியமைப்பர். சில படிகள் ஏறியதும் சம தளத்தையும் மண்டபங்களையும் அமைத்து, மலையிலேறுபவர்களுக்கு அலுப் பேற்படினும் இளைப்பாற வசதி செய்து தருவர். பழநித் திருத் தலத்தில் மலையுச்சிக்குச் செல்ல அடியவர்களுக்காகப் **படிகள் பாதையும்,** யானை செல்வதற்காக **யானைப் பாதையும்** அமைந் துள்ளதை நினைவிற் கொள்ளலாம். முதியவர்களால் படியேற இயலாமல் துன்பப்படுவதைக் கண்ட தேவத்தான அறங்காவலர் கள், மலையுச்சிக்குச் செல்ல வசதியாக **இழுவை ரயில்** (Winch) வசதி செய்து தந்துள்ளனர். இவ்வாறெல்லாம் ஆன்ம நலப் பண்பாட்டைக் காக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது வரவேற்கத் தக்கதே.

சில திருக்கோயில்களில் படிகளை அமைக்கும்போது மக்களது வாழ்வுடன் ஒட்டிய சிலவற்றை நினைவிற் கொள்ளுமாறு செய்து விடுகின்றனர். தமிழ் நாட்டில் வழக்கத்திலுள்ள **அறுபது (60) ஆண்டுகளையும்** நினைவுபடுத்தும் வகையில் **சுவாமிமலைக் கோயிலிலுள்ள** அறுபது படிகளையும், ஆண்டிலமையும் **முந்நூற்று அறுபத்தைந்து (365) நாள்களை** நினைவுபடுத்தும் வகையில்

திருத்தணி மலையிலுள்ள முந்நூற்று அறுபத்தைந்து படிகளையும் மனத்துட் கொண்டு சிந்திக்கலாம்.

தத்துவ அடிப்படையிலும் சோபான முறை (ஏணிப்படி முறை) கூறப்பெறும். சபரிமலை **ஐயப்பன் திருக்கோயிலில் பதினெட்டுப் படிகள்** அமைந்துள்ளதைக் காணலாம். மேலும், சென்னை **ராஜா அண்ணாமலைபுரத்தில்** அமைந்துள்ள **வடசபரி** என வழங்கும் ஐயப்பன் ஆலயத்திலுள்ள **பதினெட்டுப் படியமைப்பினைக்** காண்க.

அழகர் கோயில் கோபுர வாசல் திறக்கப்படுவது இல்லை. அது நிரந்தரமாக அடைக்கப்பட்ட நிலையில் அதன் மேல் **பதினெட்டாம் படிக் கருப்பசாமி** என்னும் சிறு தெய்வத்தின் கோயில் அமைக்கப்பட்டிருத்தலைக் காணலாம்; இதற்குக் காரணம் உண்டு. "கோயில் இறைவனின் பொருட்களை திருடவந்த **பதினெட்டுப் பேரை** இக்கோயில் கோபுர வாயிலில் வெட்டிப் புதைத்திருப்பதால் கோபுர வாசல் அடைக்கப்பட்டதாகக் கூறுவர். இதற்கு வடக்கே உள்ளே மற்றொரு வாசலே இப்போது பயன்படுத்தப்படுகிறது"[1] என வருங்குறிப்பு ஈண்டு இயைபுடன் சிந்திக்கத் தகும்.

மந்திர நோக்கிலும் கோயிலில் படிகள் அமைப்பது உண்டு. "சென்னைக்கு அருகிலுள்ள **நங்கநல்லூரில் ஸ்ரீசக்கர** பிரதிட்டை **சோடேச (16)** மந்திரங்களை உணர்த்த 16 படிகள் இந்த ஆலயத்திற்கு அமைந்துள்ளவை சிறப்பாகும்"[1] என வருங் குறிப்பினைக் காண்க.

படிகளுக்குப் பக்கத்திலமையும் கைப்பிடிச் சுவர்களில் சிறப்ப வேலைப்பாடுகளை அமைப்பது உண்டு. **யானையின்** துதிக்கை போலவும், யாளியின் வாயிலிருந்து பட்டைத் தண்டுகள் புறப் படுவது போலவும் அமைந்துள்ள ஆலயப் படிகள் பல தலங்களில் காணலாம்.

6.2. தள வரிசையிலும் படியிலும் கலைச்சிறப்பு:

அதிட்டானம், கருவறை, விமானம், கோட்டம், மண்டபம்,

1. அமுதசுரபி தீபாவளி மலர், 1973

தூண் முதலிய பலவற்றினும் சிற்பச் செல்வங்களை வாரி வழங்கிய சிற்பியர்கள் ஆலயத்துத் தளவரிசையையும் படியையும் கூட விட்டு வைக்கவில்லை. மகளிர் தம் இல்லத்தின் அகத்தேயும் முற்றத்தேயும் கோலமிட்டு அழகுபடுத்துவதே போல, ஆலயங்களில் இறைவன் சன்னிதிக்கு முன் தளவரிசைகளில் சதுரமாகவும் வட்டமாகவும் இடங்கோலிக் கொண்டு அழகிய பூ வேலைப்பாடுகளை அலங்கார நோக்கில் செதுக்கியமைத்துள்ளனர். இவ்வாறான அமைப்புக்கள் பல ஆலயங்களில் காணலாம். எடுத்துக்காட்டாகச் சிதம்பரம் பெரிய கோயில் வளாகத்தில் **பாண்டிய நாயகம் கோயில்** ஆறுமுகன் திருமுன்னர் மண்டபத் தளவரிசை காண்க.

திருப்பதி வேங்கடேசப் பெருமாளை அல்லும் பகலும் சேவிக்கும் நோக்கத்தில் **குலசேகரப் பெருமாள்**, ''படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே'' என நவின்று பூரித்துப் போன அனுபவத்தை முன்னரே கண்டோம். இறைவன் திருமுன்னரமைந்துள்ள படிகளுக்கு அத்தகைய பெருஞ்சிறப்பு இருத்தலைக் கண்ட அருளாளர்கள், படிகளில் குப்புறப்படுத்து வணங்குந் தோற்றத்தில் தம்மைச் சிற்பத்தில் காட்டுமாறு செய்துள்ளனர். இத்தகைய அமைப்பினைத் **திருவரங்கத்தில்** அரங்கநாதர் சன்னிதிக்கு முன்னுள்ள படியில் கண்டுகளிக்கலாம். **மன்னார்குடி** இராசகோபாலசாமி சன்னிதி முன்னரும் கண்டு போற்றலாம்.

செட்டி நாட்டுப் பகுதியில் **கோவிலூர்** திருநெல்லையம்மன் கோயில் உளது; அதைக் கற்கோயிலாக்கியவர் **கோவிலூர் ஆதீன ஆதிகர்த்தர் ஆண்டவர் முத்துராமலிங்க ஞான தேசிகர்** அவர்கள். ''அவர்கள் தரையில் விழுந்து கரம் கூப்பிய முறையில் (சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து) இறைவியை வழிபடுங் காட்சி கொடிமரத்துக்கு அருகே சிலாவடிவில் அமைக்கப் பெற்றிருக்கின்றது இதுவேறு எந்தக் கோயிலிலும் இல்லாத தனிச்சிறப்பு எனலாம்''[1] என வருங் குறிப்பினைக் காண்க.

கோயிலில், வழிபடும் அடியவர்கள் மனம்போன போக்கிலே கண்ட இடத்திலும் **எட்டங்க** (சாஷ்டாங்க) **வழிபாடு** செய்தல்

1. கோவிலூர் திருக்குட நீராட்டு மலர், 1978, பக். 79

முறையன்று என்பதும், கொடிமரத்தின் புறத்தே வழிபடுவது முறையென்பதும் உணர்ந்த ஆதினகர்த்தர் இவ்வாறு தம் ஆழ்ந்த பக்தியைப் புலப்படுத்தும் வகையில் சிற்ப அமைப்பினைச் செய்திருப்பது கோயிற் பண்பாட்டை இனிது புலப்படுத்தும்.

7. பலிபீடம்:

கோயிலுக்கென அமையும் கட்டட உறுப்புக்களுள் பலிபீடமும் ஒன்றாகும். சைவம், வைணவம் முதலிய அனைத்துச் சமயக் கோயில்களிலும் கொடிக்கம்பத்தையடுத்து இஃது இடம் பெற்றிருக்கும்.

தெய்வத்துக்குப் படையிலிடும் நோக்கில் **பலி** என்பது உண்டாயிற்று. படையல், உயிர்ப்பலியாகவும் உணவுப் பண்டப் பொருளாகவும் பல வகைகளில் அமைந்தது. உணவு எனும் பொருளில் 'பலி' என வருதலைக் '**காக்கையது பலி**' எனும் சொல்லாட்சியிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

பண்டைக் காலத்தில் **ஆடு, மாடு, கோழி** முதலியவற்றை நேர்த்திக்கடன் நோக்கில் மக்கள் பலியிட்டு வந்தனர். சிறப்பாகக் காளி, துர்க்கை, அங்காளம்மன், திரௌபதியம்மன், காட்டேறி, முனியாண்டி, சுடலைமாடன், கறுப்பண்ணசாமி, வைரவன் முதலிய பல தெய்வங்கள் உயிர்ப்பலி ஏற்கும் தெய்வங்களாகக் கருதப்படுகின்றன. நாட்டுப்புறவியல் (Folklore) சார்பில் பலிகொடுத்தலையே விழாவாகக் கொண்டாடுதலையும் சில சிற்றூர்ப்புறங்களில் காணலாம். எடுத்துக்காட்டாக **அம்பகரத்தூர்** (காரைக்காலுக்கு அருகிலுள்ள சிற்றூர்) எனுந் தலத்தில் எழுந்தருளியுள்ள **காளியம்மனுக்கு** ஆண்டுதோறும் எருமைக்கடாவை வெட்டிப் பலிகொடுத்து வருதலையும், அந்த விழாவைக் '**கடாவெட்டு**' என்று மக்கள் அழைத்தலையும் காணலாம். முற்காலத்தில் இவ்வாறாகப் பலி கொடுக்கப்பட்ட இடமே **பலிபீடமாக** இருந்துவந்தது. பிறகு, உயிர்ப்பலி கொடுக்காத ஆலயங்களிலும் ஊன் கலவாத உணவுப் பண்டங்களைப் பலியெனக் கொடுக்கும் மரபில் பலிபீடம் அமையலாயிற்று.

மிகச்சிறு அளவில் ஆலயங்கள் அமைக்கப்பட்ட காலத்தில் கருவறையில் மட்டுமே பலிபீடம் இருந்திருக்க வேண்டும். பிற்

காலத்தில் பெருந்திட்டத்திலே பல கட்டமைப்புக்களுடன் கட்டட உறுப்புக்கள் அமைந்த நிலையில் பலிபீடம் சுவாமி சன்னிதிக்கு வெளியே அமைந்தது. கோயிலை மனிதனின் உடலமைப்பைப்போலவே கருதும் கலைமரபு தோன்றியதும், பலி பீடத்தைத் '**தொப்புள்**' எனவே கொள்வர்; இதுவும் சிந்திக்கத் தக்கது.

ஆலயங்களில் அமைந்துள்ள பலிபீடத்தில் **இக்காலத்திலே** மலர்களிட்டு வழிபாடு செய்து வருகின்றனர். '**பூப்பலியிடுதல்**' என்ற பண்டைய மரபின்படி இஃது ஏற்கத்தக்கதேயாகும்.

ஆகம விதிக்கிணங்கக் கோயிற் பலிபீடங்கள் பல வகையில் அமைக்கப்படுகின்றன. பெருங்கோயில்களில் மூலவருக்கும் பரிவார தேவதைகளுக்கும், திக்குப்பாலகர்களுக்குமாகத் தேவைக் கேற்பப் பலிபீடங்கள் பலவாக அமைக்கப்படுகின்றன. பெரும்பாலான பலிபீடங்கள் கருங்கற்களால் பதுமம் போன்ற சில உறுப்புக்களுடன் சிறப்பபடைப்பாக அமைந்திருத்தலைக் காணலாம்.

ஆலயத்தில் வலம் வருபவர்கள் தம் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய தீய குணங்களைப் பலிபீடத்தில் பலியிட்ட நிலையில் பலிபீடத்தின் புறத்தே தெய்வத்துக்கு அட்டாங்க வணக்கமோ, பஞ்சாங்க வணக்கமோ புரிதல் வேண்டும் என்பர்.

ஆலயங்களைப் பொறுத்த வரையில் **மாமல்லபுரம் தலச் சயனப் பெருமாள் கோயில்** மிகப் பழங்காலத்தது ஆகும். அக் கோயிலில் **கருடாழ்வாருக்குப்** பலிபீடம் முற்பகுதியில் அமைந்துள்ளது. மேலும், அதன் முன்னர் **ஐந்து பலிபீடங்களைப்** பஞ்சாக்கினி எனும் பெயரில் பொருத்தியுள்ளனர். **வைகானச** பூசைமுறையுள்ள இந்தத் திவ்ய தேசத்தில் கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றைச்சுற்றி ஏழு இடங்களிலும், முகப்பின் உள்ளே இரு இடங்களிலுமாக ஒன்பது இடங்களில் பலிபீடங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

8. கோயில் சுற்றாலை (பிராகாரம்);

பெருங்கோயில்களில் திருச்சுற்றுக்களாகிய பிராகாரங்கள் விசாலமாகவும், சுற்றுச்சுவர்கள் உயரமாகவும் இருத்தல்

இயல்பே. கருங்கற்களால் தளவரிசையும் சுவர்களும் அமைந்து காணப்படுவதும் இயல்பேயாகும். அவ்வாறான சுற்றுச்சுவர்கள் வரலாற்று விவரங்களைத் தம்மகத்தே கல்வெட்டுக்களாகப் பெற்றுத் திகழ்ந்தன. அஃதாவது, மன்னர்களும் வள்ளல்களும் அரசாங்க அலுவலர்களும் பிறரும் கோயிலெடுப்பித்தமை பற்றியும் கொடை வழங்கியமை பற்றியும் நிருவகித்தமை பற்றியும் அறிந்து கொள்ளக் கூடிய வரலாற்றுக் கல்வெட்டுக்களைக் கோயிற் சுவர்கள் தாங்கி நின்றன.

சுவர்களில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டுக்களை ஊன்றி நோக்குகையில், அக்கால மக்களின் சமயப் பண்பாட்டுக் கூறுகளும், சமுதாயப் பொருளியல் பண்பாட்டுக் கூறுகளும் பற்றித் தெரிந்து கொள்ள அவை பயன்படுதலை யுணரலாம்

ஆகமங்களில் திருச்சுற்றாலைகளை **ஆவரணங்கள்** எனக் குறிப்பர். அவற்றைப் பெருவழக்காகப் பிராகாரங்கள் என மக்கள் வழங்கி வருகின்றனர்.

கோயிலில் ஐந்து சுற்றாலைகள் இருப்பின் அவற்றைக் **கோசங்கள்** எனத் தத்துவ நோக்கில் கொள்வர். "திருக்கோயிலிலுள்ள ஐந்தாம் ஆவரணத்தால் **அன்னமய கோசமும்,** நான்காம் ஆவரணத்தால் **பிராணமய கோசமும்,** மூன்றாம் ஆவரணத்தால் **மனோமய கோசமும்**, இரண்டாம் ஆவரணத்தால் **விஞ்ஞானமய கோசமும்.** முதலாம் ஆவரணத்தால் ஆனந்தமய கோசமும் அறியப்படும்"[2] என **அச்சுவேலி குமாரசாமி குருக்கள்** எழுதிச் செல்வது காண்க.

கோயிலில் மூன்று பிராகாரங்கள் இருப்பின் அவற்றைத் **தூலம், சூக்குமம், காரணம்** என்றும், இரண்டு பிராகாரங்கள் இருப்பின் **தூலம், சூக்குமம்** என்றும் கூறுவர்.[2] பொதுவாகத் திருத்தலப் பெருமைக்கும் வசதிக்குமேற்பப் பிராகாரங்களின் எண்ணிக்கை அமைந்தது எனலாம்.

சக்கரவர்த்தித் திருமகன் இராமனே சிவலிங்கப் பிரதிட்டை செய்து வழிபாடியற்றிய தலமாகக் கருதப்படும் இராமேசுவரத்

1, 2. புள்ளிருக்கு வேளூர் மகாகும்பாபிடேக மலர், 1970, பக். 16

தில் அழகாகவும் ஒழுங்காகவுமுள்ள **பிராகாரங்கள்** உள்ளன. கோயிலில் வடக்குப் பிராகாரத்தில் அமைந்துள்ள **கோடிதீர்த்தம்** சிறப்புடையது. மேற்குப் பிராகாரத்தில் **லவன்லிங்கமும்** வடக்குப் பிராகாரத்தில் **விபீடண லிங்கமும்** சிறப்பாகக் காணத் தக்கவை. இதனால், பிராகாரங்களே ஒருவகையில். மக்களுக்குச் சமயத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத் துணைநிற்கின்றன எனலாம்.

கோயிற் கட்டடக் கலையில் சில திருத்தலங்களுக்குச் சில உறுப்புக்கள் மிகச் சிறப்பினையும் பெருமையினையும் நல்குவனவாக அமையும். இத்தகைய நோக்கில், **இராமேசுவரம் மூன்றாம் பிராகாரம்** தன் நெடிய விசாலமான அமைப்பினால் உலகப்புகழ் பெற்று விளங்கி வருகிறது. இராமேசுவரம் தீவில் அமைககப் பெற்ற கோயிற் கட்டடங்களுக்குக் கருங்கற்கள் வடபுலத் தமிழ்நாட்டிலிருந்து கொண்டு போகப்பட்டன; இதனால், கோயிற் கட்டடக்கலைப் பண்பாட்டிற்குத் தமிழ்ப் பெருமக்கள் கொண்டிருந்த நெஞ்சார்ந்த ஈடுபாடு தெரியவரும்.

இஃது ஒரு புறமிருக்க, ஆலயப் பிராகாரங்கள் தொடர்பாகச் சில சிறப்புச் செய்திகளைக் காண்போம்.

கோயிற் பிராகாரங்களில் **பரிவார தெய்வங்களின் சன்னிதி** தனித்தனியாக அமைந்திருப்பது உண்டு. பல கோயில்களில் இத்தகைய சிறப்பினைக் காணலாம்.

எடுத்துக் காட்டாகப் **புள்ளிருக்குவேளூரில் - வைத்தீசுவரன் கோயிலில்** - செல்வ முத்துக் குமாரசுவாமி சன்னிதியும் திரு முருகன் சன்னிதியும் தனித்தனியே பிராகாரங்களில் அமைந் துள்ளமை காணத்தக்கது. **திருநெல்வேலி** கோயிற் பிராகாரத்தில் ஆறுமுகநாதர் (நயினார்) சன்னிதியும் அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. சூரியனார் கோயிலில் பிராகாரத்தில் சூரியனைத் தவிர்த்துச் **சந்திரன்** முதலிய எட்டுக் கிரகங்களுக்கும் தனித்தனியே சன்னிதியுடன் கூடிய கோயிலமைப்பைக் காணலாம்.

இவ்வாறே பரிவார தெய்வங்களான பலவும் பிராகாரங்களில் அமைந்துள்ளன; விளக்கமாக அவை பற்றிப் பின்னர்க் காண்போம்.

பிராகாரங்களிலே அமைந்துள்ள தூண்கள் சிற்ப நேர்த்தி கொண்டவையாகப் பல இடங்களில் காணப்படுகின்றன. புராணத் தொடர்புடைய ஓவியங்களும் சிற்பங்களும் பிராகாரச் சுவர்களிலும் தூண்களிலும் மண்டபங்களிலும் இடம் பெறு தலையும் திருக்கோயில்கள் பலவற்றுள் காணலாம். எடுத்துக் காட்டாகத் திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் **இராவணன் திருக்கயிலையைப் பெயர்த்தெடுப்பது போன்ற கலை வேலைப்பாடமைந்த விமான மண்டபம்** பிராகாரத்தில் உள்ளதைக் காண்க.

பிராகாரங்களில் தீர்த்தம் அமைவது பற்றி, இராமேசுவரம் திருக்கோயில் தொடர்பாக, ஒரு குறிப்பினைக் கண்டோம். பெரிய திருக்கோயில்கள் சிலவற்றிலே தீர்த்தச் சிறப்புடன் பயன்கொள்ளும் வகையில் திருக்குளங்களும் கிணறுகளும் பிராகாரத்தில் அமைந்திருப்பதைக் காணலாம். எடுத்துக்காட் டாகத் திருவெண்காடு சிதம்பரம் முதலிய கோயிற் பிராகாரங் களைக் குறிப்பிடலாம்.

பிராகாரங்களில் **தல மரங்களேயன்றி மக்களுக்குக் குளிர்ந்த நிழல் தரும் மரங்களையும் வளர்ப்பது உண்டு.** திருக்கோயில்கள் பலவற்றில் இத்தகைய காட்சியைக் காணலாம்.

9. கோயில் மதில்கள்:

கோயிற் கட்டடங்களுள் மதில்களுக்கும் ஒரு வகைச் சிறப்பிடம் உண்டு. கோயிலிலுள்ள கலைச் செல்வங்களையும் உடைமைகளையும் மக்களே காக்கக் கடமைப்பட்டுள்ளனர். எனினும், உயரமாக எடுக்கப்படும் சுற்றுமதில்களும் பாது காப்புப் பொறுப்பைத் தாம் வலிமையான நிலையில் இருந்த இடத்திலிருந்து கொண்டே மேற்கொண்டுள்ளன (எடுத்துக் காட்டாகத் திருவரங்கத்திலுள்ள வெளிவீதிச் சுற்றுமதில்லைக் கூறலாம்; இது 3072 அடிநீளமும் 2521 அடி அகலமும் கொண்டது. இந்தவெளிமதிலின் உயரம் 20அடி 8அங்குலம் ஆகும். சுவரின் பருமன் மேலே ஆறுஅடி உள்ளது[1])

1. தென்னாட்டுக்கோயில்கள், மூன்றாம்பாகம், எம். ராதாகிருஷ்ண பிள்ளை, 1989, பக். 203.

காலப்போக்கிலே கோயிலின் வசதிக்கேற்ப மதில்கள் களி மண்ணாலும் கருங்கற்களாலும், செங்கற்களாலும், அமைக்கப் பட்டுள்ளன.

காஞ்சிபுரம், திருவரங்கம், திருவானைக்கா, தில்லை, சீர்காழி, திருவாரூர், திருக்குடந்தை முதலிய பெரிய திருத்தலங்களில் அமைந்துள்ள கோயில் மதில்கள் அகலமாகவும், உயரமாகவும், திட்பமாகவும் உள்ளன. சில கோயில் மதில்களுக்குப் பெயர் களும் வைக்கப்பட்டிருத்தலைக் காணலாம். சிதம்பரம் நடராசர் கோயிலில் சபையைச் சுற்றியுள்ள மதிலைக் **'காலிங்கராயன் மதில்'** என்பர். **திருவானைக்காவில், 'திருநீற்று மதில்'** என்றே அழைக் கப்படும் வரலாற்றுச் சிறப்புடைய மதிலைப் பலரும் அறிவர்.

''சிவாஞ்ஞையால் சிலம்பி **சுபதேவன்** என்னும் சோழன் மனைவியாகிய **கமலவதி** வயிற்றில் **கோச்செங்கண்ணன்** என உதித்துப் பூர்வ கன்ம முணர்ந்து திருவானைக்காவில் திருமதிலின் திருப்பணி செய்கையில், ஒரு மதில் ஒழிய மற்றவை செய்க என ஆகாய வாணி கூறக்கேட்டு, அரசனிருக்கச் **சிவமூர்த்தி** ஒருநாள் சித்தர் உருக்கொண்டு தோன்றி விபூதி கூலியாகக் கொடுத்துத் திருமதிலை முடிப்பித்து அம்மதிலின் மீதேறி மதிலைப் பூமியில் அழுத்தித் **திருநீற்று மதில்** எனப்பெயரிட்டுச் சென்றனர்''[1] என்பது **அபிமான சிந்தாமணியாலும்** அறியலாகும் செய்தியாகும். இதனால், கோயில் மதிலைக் கட்டுவதில் சிவபெருமானுக்கே தனித்த ஈடுபாடு உண்டென்பதை உணர்ந்து போற்றலாம்.

பெரும்பாலும் கோயில் மதில்களின் மேற்புறத்தில் கோயிலை இனங்கண்டு கொள்ளும் முறையில் **நந்திகள், கருடாழ்வார், பூதங் கள், மயில்கள், சிங்கங்கள், பெருச்சாளிகள், புலிகள், திருநாமங் கள்** முதலியவற்றை அமைப்பது உண்டு என்பதனை முன்னரே கண்டோம்.

மதில்கள் சில, எதிரொலி கேட்கும் அமைப்பில் கட்டப் படுவது உண்டு. இதனை ஒருவகையில் கட்டடக் கலை உத்தி யெனலாம். எடுத்துக்காட்டாக ஒரு சிறப்பான குறிப்பைக் காண்போம்.

1. அபிதான சிந்தாமணி, பக். 515

கீழைத் திருக்காட்டுப் பள்ளியில், மேற்கே பார்த்த சன்னிதியுடன் அமைந்துள்ள **ஆரணியேசுரர்** திருக்கோயில் உள்ளது. சிறிய அக்கோயிலில் தட்சணாமூர்த்தி சன்னிதிக்கு மேற்கில் **கடலொலி** போன்ற ஒலி மதிற்சுவரிலிருந்து கேட்கப்படுகின்றது. இனி, கட்டடக்கலையில் காணலாகும் சிறப்பான சில வினைத்திற உத்திகளைக் காண்போம்.

10. கொடுங்கைகள்:

திருப்பெருந்துறைக் கொடுங்கையும் பிறகோயிற் கொடுங்கைகளும், கோயிற்கட்டடக்கலையில் வினைத்திறம் காட்டும்; கோயிலில் சிறந்த உறுப்புக்களுள் ஒன்றாகக் **கொடுங்கை** கருதப் படுகிறது.

சிற்பக்கலைச் செல்வங்கள் நிறைந்த திருக்கோயில்களுள் ஒன்றான திருப்பெருந்துறை அல்லது **ஆவுடையார் கோயில்,** இன்றும் சிற்பக் கலைஞர்கள் வியந்து போற்றத்தக்கதாய் உள்ளது.

பொதுவாகக் கோயில் கட்டுதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடிய கட்டட, சிற்பக் கலைஞர்கள் **திருவலஞ்சுழிக்** கோயிலிலுள்ள பல கணிகள், **திருவீழிமிழலை** வௌவானத்தி மண்டபம், **ஆவுடையார் கோயில்** கொடுங்கை போன்று தம்மால் அமைக்க வியலாது என்பதைக் குறிப்பிடுவார்கள் என்ற கருத்தினை **டாக்டர் உ. வே. சாமிநாதையர்** தம் கட்டுரையில் குறிப்பாக எடுத்துக் காட்டுவது சிந்திக்கத்தகுவதாகும். அத்தகைய சிறப் பிற்குரிய கொடுங்கை பற்றிச் சிறிது காண்போம்.

இக்காலத்தில் தேர்ந்த சிற்பக்கலைஞராக விளங்கும் **வை. கணபதி ஸ்தபதியார்** மிக வியந்து போற்றிச் சிறப்பிக்கும் நிலையில் ஆவுடையார்கோயில் கொடுங்கை அமைந்துள்ளது. இந்தத் தொடர்புடன் **சக்திசுகன்** "இக்கோயிலின் மண்டப முகப்புகளில் சிற்ப வேலைப்பாடு நிறைந்த, கல்லையே வளைத்துத் தகடுகளாக்கிப் போட்டிருக்கும் கற்களுக்குத்தான் **கொடுங்கை** என்று வழங்குகிறார்கள். கொடுங்கையைப் பார்க்கும்போது சற்று நிமிர்ந்து பார்த்தால் நடுவில் ஒரு குரங்கு ஓடி வருவது போன்றும், உடும்பு ஒன்று உள்நோக்கிப் பற்றிச் செல்

வது போன்றும் உள்ள சிற்பத்தைக் கண்டு திகைக்கிறோம். சிற்பி அவ்விரு உருவத்தையும் தத்துவப் பொருளாக அமைத்திருக்கிறார்,''[1] என்றும், ''மேற்படி கொடுங்கையின் அடியில் வந்து அதனைக் கீழிருந்து உற்று நோக்கினால் மேற்படி ஒவ்வொரு கொடுங்கைக் கல்லும் 15 அடி நீளம் 4 அடி கனமுள்ள கல்லைச் சிற்பி வளைத்து, அந்த ஒரே கல்லில் உருட்டுக் கம்பி, நாற்கோணப்பட்டை, அறுகோணப்பட்டை, முறுக்கு முக்கோணப்பட்டை, சதுரம் ஆகிய ஆறு பட்டைகளால் இணைத்தது போலவும், முன் வளைவு கீழ்த் தகட்டில் எண்ணற்ற அளவுகளும் (தற்போது நாம் கலைடிடாஸ்கோப்பில் ஏற்படுத்தும் உருவப் பூக்கள் போல்) பல டிசைன்களில் போடப்பட்டுள்ளன''[2] என்றும் கொடுங்கையமைப்பினை மிக நுணுக்கமாக ஆராய்ந்து புலப்படுத்தியிருப்பது மனங்கொண்டு போற்றத் தக்கதாகும். திருப்பெருந்துறைக் கோயிலின் கொடுங்கையுடன் ஒப்பிட்டுக் காணக் கூடிய வேலைப்பாடுடைய கொடுங்கையினைத் திருப்பூவணத் தலத்திலும் கண்டு மகிழலாம்.

திருப்பெருந்துறையில் கொடுங்கையுடன் தொடர்பு கொண்டுள்ளவையாகச் சிற்ப வடிவில் தோன்றும் உடும்பும் குரங்கும் பற்றி ஓரளவு தத்துவ உள்ளுறையைக் காண்போம்.

இறைவனைத் தன் உய்திக்காக அடியவன் பற்றிக் கொள்கையில் 'உடும்பென'ப் பற்றிக் கொள்ளுதல் வேண்டுமெனக் கூறுவது மரபாகும். திருக்காளத்தி மலையில் எழுந்தருளியுள்ள இறைவனாகிய குடுமித் தேவரைக் கண்ணப்பனாகிய திண்ணன் பற்றிக் கொண்டதைச் சேக்கிழார்.

''அங்கிவன் மலையில் தேவர் தம்மைக் கண்டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கான்''[3]

எனக் குறிப்பிட்டுச் செல்வதைக் காண்க. திருக்கடவூரில் இயமன் தலைனைப் பற்ற வருகையில் சிவலிங்கத்தை மார்க்

1. திருக்கோயில் (திங்கள் இதழ்), மார்ச்சு 1991
2. மேலது
3. பெரிய புராணம் கண்ணப்ப நாயனார் புராணம். 116

கண்டேயன் பற்றிக் கொண்டதையும் உடும்புப் பிடியுடன் இணைத்துச் சிந்திக்கலாம்,

இறைவனாகிய பற்றற்றானை நன்கு பற்றிக் கொண்டு உய்ய வேண்டுமெனில், மானுடன் தன்னிடமுள்ள ஆசாபாசங் களையும், ஆணவம் கன்மம் மாயா மலங்களையும் விட்டொழிக்கக் கூடிய சூழலை யுருவாக்கிக் கொள்ள வேண்டும். **அப்பர் பெருமான்**, ''பற்றி நின்ற பாவங்கள் பாற்ற வேண்டில் பரகதிக்குச் செல்வதொரு பரிவு வேண்டில்''[1] என்று குறிப் பிட்ட சூழலை ஈண்டு இயைபுடன் சிந்தித்துப் பார்த்தால் தெளிவு உண்டாகும். அஃதாவது, ஆன்மா தன் உய்திக்காக இறைவனை உடும்பெனப் பற்றிக் கொள்ளக் கூடிய செவ்வி, குரங்கு போன்ற சபல எண்ணங்களினின்றும் தன்னை விடுவித்துக் கொண்டால் தான் இயலுமென்பதே தத்துவக் குறிப்பாகக் கொள்ளலாம்.

ஆவுடையார் கோயில் கொடுங்கைகள் தொடர்பான பல் வகைக் கோணங்களும் பூவேலைப் பாடுகளும் இன்றைய நெசவுத் தொழிலில் ஒருவகைக் கலையுணர்வுத் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளன என்பர். **சக்தி சுகன்** இதன் தொடர்பாக எழுதுகையில், ''இதனைத் தற்போது காஞ்சிபுரம், திரிபுவனம், ஜலகண்டாபுரம் போன்ற பகுதிகளில் உள்ள நெசவாளர்கள் புடவைகளில் கரைகளை அமைக்க அனுமதி பெற்று **'பிளாக்'** (Block) எடுத்துச் செல்கின்றனர். அதிலிருந்தே அதன் கலை நுணுக்க மும் அழகுற அமைக்கப்பட்ட தன்மையும் பார்க்காதவர், களுக்கும் விளங்கும். இக்கோயிலுள் நுழைந்தால் ஒரே கலை மயம்''[2] எனக் குறிப்பிடுவது போற்றத் தகுஞ் செய்தியாகும்.

தஞ்சாவூர் பெரியகோயில் முன்மண்டபக் கொடுங்கையும் ஆவுடையார் கோயிற் கொடுங்கைக்கு அடுத்தநிலையில் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

1. திருக்கோயில் (திங்களிதழ்), மார்ச்சு 1991
2. திருக்கோயில் (திங்களிதழ்), மார்ச்சு, 1991.

11. திருக்கோயில் வளாகமும் கட்டடச் சிற்பச் செல்வங்களும்:

இந்தியநாட்டுக் கோயிற்கட்டடங்கள், காலத்திற்கேற்ற முறையில் அரிய சிற்பச்செல்வங்களைக் கொண்டு விளங்குவன என்பர். காசியிலிருந்து கன்னியாகுமரிவரையிலுமுள்ள பல ஆலயங்களைக் காணும்போது இந்த உண்மை தெற்றென விளங்கும்.

கோயிற்கட்டடக்கலை, காலந்தோறும் பல்வேறு உறுப்புக் களுடன் விரிவடைந்து வருதலைக் கண்டு வருகிறோம். கோயிலைப் பொறுத்தவரையில், மக்களை ஈர்க்கும் வண்ணம் ஆலயப் பெருந்தச்சர்கள் (சிற்பியர்கள்) கட்டடக்கலையுடன் பின்னிப் பிணைந்து விளங்கும் வகையில் பல சிற்பச் செல்வங் களை அமைத்துள்ளனர். எனவே, கோயில் வளாகத்தில் **'கட்டடச்சிற்பச் செல்வங்கள்'** எனும் நோக்கில் சில செய்திகளை ஈண்டுக் கண்டுவருகிறோம். இஃது உடம்புடன் கூடிய உயிர் போலவும், தமிழுடன் கூடிய இனிமை போலவும் அமைவதாகும்.

கோயிற்கட்டடக் கலைச் சார்புடனமைந்த சில சிற்பச் செய்திகள் இங்குக் கூறப்படினும், சிற்பக்கலையைப் பண்பாட்டு நோக்கிலே மிகவும் ஏற்புடைய முறையில் விளக்கமாகத் தனி இயலில் காண்போம்.

கட்டடச் சிற்ப நுண்கூறுகளிடையே இது சிங்கநோக்கமாக அமைந்துள்ளது என்பதை மனத்துட் கொள்க.

12. சுவர்ச்சிற்பங்கள்:

மாமல்லபுரச் சிற்பங்கள், பல்வகைச் சிற்பங்களைத் தமிழ் நாட்டில் அமைக்க வழிகோலின. 'சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுத வேண்டும்' என்ற உணர்வு மக்களிடையே நன்கு அறிமுகமான நிலையில், தமிழ்மக்கள் தொன்றுதொட்டே சுவர் களில் **சித்திரமும்,** அதன் வளர்நிலையிலே **சிற்பமும்** அமைத்து வரலாயினர். **சுவர்களில் அலமைத்த சிற்பங்களுக்கு (Ba' relief) முன்னோடியாகப் பல்லவர்கள் செதுக்கிய பாறைச் சிற்பங்கள்** அமைந்தன என முன்னரே கண்டோம். பிறகு, குகைக் கோயில்

களில் சுவர்களிலே செதுக்கப்பட்ட **மகிஷாசுரமர்த்தினி, ஆனந்த சயனம், வராகவதாரம்** போன்ற சிற்பங்கள் சிறந்த வடிவமைப்புக் கொண்டு இன்றும் காட்சியளிக்கின்றன. அடுத்த கட்ட நிலையில், கருப்பக் கிருகத்திற்குள் இலிங்கத்தையோ, மூர்த்தியையோ வைத்துச் சிறப்பு வழிபாடு புரியும் வழக்க மேற்பட்டதும் கருப்பக் கிருகத்தின் வெளிச்சுவர்களிலும் சிற்ப வேலைப்பாடுகள் அமைந்தன; **கோட்டங்களில் பல்வகை மூர்த்திகளின் வடிவங்களையும்** அமைத்துப் பொருத்தினார்கள். மேலும் அந்தச் சுவர்களின் மேல் பாகத்தில் **பஞ்சரம்**, கூடு முதலிய கட்டடச் சிற்ப உறுப்புக்களையும், அடிப்பாகத்தில் வரிசை வரிசையாகப் பல் பூங்கொடி, யானை முதலிய உருவ வேலைப்பாடுகள் அமைந்த கட்டடச் சிற்ப உறுப்புகளையும் அழகு நோக்கில் சேர்த்துக் கொண்டனர்.

சோழ மன்னர் காலத்துச் சிவன் கோயில் கருவறை வெளிச் சுவர்களில் **ஆலமர்செல்வன், லிங்கோத்பவர், துர்க்கை** போன்ற திருவுருவங்களைக் காணலாம். காலப்போக்கில் தமிழ் நாட்டுக் கோயில்களில் படிப்படியே கோட்டங்களில் **விநாயகர், பல்வகைச் சிவமூர்த்தங்கள், துர்க்கை, அகத்தியர்** முதலிய பல திருவுருவங்கள் அமையலாயின. வைணவ ஆலயக் கோட்டங்களில் திருமாலின் அவதாரச் சிற்பங்கள் முதலியவை இடங்கொண்டன.

காலத்துடன் கலைக்கற்பனை விரித்து கொண்டே சென்றது. இந்நிலையில் மாமன்னர்கள் இறைவன் எழுந்தருளும் கருவறைச் சுவர்களில் பல்வகை உத்திகளுடன் கூடிய சிற்ப வேலைப்பாடுகளைக் கைதேர்ந்த சிற்பியர்களைக் கொண்டு அமைக்கலாயினர். இவ்வாறு **ஆலயத்திலுள்ள புற அழகில் ஈடுபட்டாவது தெய்வ வழிபாட்டுக்குப் பற்பலராக வருவார்களென்பதே ஆலயம் அமைத்தவர்களின் ஆர்வ எதிர்பார்ப்பாகும்.**

கருவறைக்குப் பெரும்பாலும் **சாளரங்கள்** அமைப்பது வழக்கமில்லை. ஆனால், அதற்கடுத்த மண்டபங்களில், அர்த்த மண்டபம், மகா மண்டபம் முதலியவற்றில், வெளிச்சமும் காற்றும் செல்வதற்கேற்ற வண்ணம் அழகிய சிறு சாளரங்களை அமைப்பது உண்டு. அத்தகைய **சாளரங்களில் கூடச் சிற்பியர்**

தம் கற்பனைத் திறனைப் புலப்படுத்தியுள்ளனர். கூடிய வரையில் எங்கெங்கெல்லாம் சிற்பங்களை அமைக்க முடியுமோ அங்கங்கெல்லாம் அமைத்துக் கோயிலைச் சிற்பக் களஞ்சியமாக ஆக்க முனைந்துள்ளனர். இந்நிலையில் ஒப்பீட்டு நோக்கில் சுவர்ச் சிற்பங்கள் பற்றிச் சிறிது காண்போம்.

பாரத நாட்டில் தென்னகமே சிற்ப எழிலுக்குப் பேர் போனது என்பது உண்மையே. தமிழர்கள் கோயிற் கட்டடத்திற்கும் சிற்பக் கலைக்கும் தம் தனித்தன்மையை (Individuality) வெகுவாகப் புலப்படுத்தியுள்ளனர் என்பதும் உண்மையே; எனினும், இவர்களை விஞ்சிய சிற்பக் கலைத்திறனை **ஹோய்சள மன்னர்கள் தாம்** கருநாடக மாநிலத்தில் கட்டிய **பேலூர், ஹளபீடு, சோமநாத்** முதலிய ஆலயங்களில் கருவறைச் சுவர்களிலும் அதிட்டானங்களிலும் புலப்படுத்தியுள்ளனர். வரிசை வரிசையாக **யானைகள் குதிரைகள் போர்வீரர்உருவங்கள் மலர்வேலைபபாடுகள்** போன்றவற்றை மிக நுணுக்கமான சிற்ப வேலைப்பாட்டுடன் செதுக்கியுள்ளனர். இந்தச் சிற்ப அணிகளுக்கு - வரிசைகளுக்கு - மேலே **நடன நங்கையரும் தெய்வங்களும்** சிற்ப நேர்த்தியுடன் அமைக்கப்பட்டிருப்பது கண் கொள்ளாக் காட்சியாகும்

தமிழ் நாட்டிலும், கோயில்களில் அதிட்டானம் தொடங்கிக் கட்டட மேற்பகுதிகள் வரையில் சிற்பங்களைக் **கலை** நேர்த்தியுடன் செய்துள்ளனர். சுவர்ச் சிற்பங்களைப் பொறுத்த வரையில் கீழ்க்காணும் சில இடங்கள் நினைவிற் கொள்ளத்தக்கவையாகும்.

அ) **நாமக்கல் அரங்கநாதன் மலைக் கோயிலில்** சுவர்ச் சிற்பங்கள் திருமால் அவதாரக் கதைகளை மையமிட்டுப் புலப்படுத்துதலைக் காணலாம். இங்குள்ள அழகொழுகும் சிலைகள் பற்றி P.T. **சீனிவாச அய்யஙகாரும் டாக்டர் மா, இராச மாணிக்கனாரும்** சிறப்பாகக் குறித்துள்ளனர்[1]

ஆ) **திருச்சி** முதலிய குடைவரைக் கோயில்களில் காணலாகும் சுவர்ச் சிற்பங்கள்

1. Pallavas, Part II, PP. 8, 10 & பல்லவர் வரலாறு, பக். 103

இ) **காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயிலின்** உட்சுவர்களில் காணலாகும் மன்னர்களின் வரலாற்றுச் சிற்பங்கள்

ஈ) **தாராசுரம் ஐராவதேசுவரம் கோயிலின்** உட்சுவரில் காணலாகும் சைவ நாயன்மார் சிற்பங்கள்

உ) **தில்லைப் பொன்னம்பலவன்** கோயிலின் கனக சபையைச் சுற்றியுள்ள திருமாளிகை மண்டப அதிட்டானத்தின் மேல், திருவிளையாடற் புராண நிகழ்ச்சிகள் சிலவற்றைச் சித்திரிக்கும் அதிட்டானச் சுவர்ச் சிற்பங்கள்

ஊ) **திருப்பனந்தாள்** சடையப்பர் கோயில் உட்சுவரில் காணலாகும் நாயன்மார் வாழ்க்கை நிகழ்ச்சிச் சிற்பங்கள்.

எ) தஞ்சைப் பெரிய கோயிலில் சுவர்ச் சிற்பங்கள் சில இடங்களிலே காணப்படுகின்றன. அவற்றுள் ஓரிடத்தில் சுவரிலே அமைந்துள்ள சிற்பத் தொடர் மிகவும் நினைக்கத் தக்கது. பெரிய கோயில் தெற்கு வாசற்படி **துவாரபாலகர் படிகளுக்குப் பக்க வாட்டில் வரலாற்றுப் பின்னணி கொண்ட சிற்பத்தைப் ப, தங்கம்,** "தற்போது தஞ்சைப் பெரிய கோயில் இருந்த இடம் முன்பு ஒரு **புத்த பிட்சு** இருந்த இடமாம். தாம் சிவாலயம் எழுப்ப இருப்பதாகவும், அந்த இடத்தைத் தமக்கு வழங்க வேண்டுமென்றும், மாமன்னர் **இராசராசர் சோழன், புத்த** பிட்சுவிடம் வேண்டுகிறாராம். மாமன்னரின் வேண்டுகோளின்படி புத்த பிட்சுவும், மன்னன் அமைத்துத் தந்த வேறு இடத்திற்குச் சென்று விடுகிறாராம்.

பிட்சுவுக்கு நன்றி சொல்ல மாமன்னர் இராசராசன் தம் பரிவாரங்களுடன் அவரை நாடிச் சென்று மண்டியிட்டு அவரை வணங்கி நன்றி சொல்லி விட்டுப் பிறகு பெரிய கோயிலை எழுப்புகிறாராம்"[1] என்று விளக்கத்துடன் அறிமுகப் படுத்துவது மிகவும் போற்றத் தக்கது.

இதனால், மாமன்னர்கள் எங்ஙனம் சிறந்த பண்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக விளங்கியுள்ளனர் என்பது தெரியலாகும்.

1. தினமலர் - தீபாவளிமலர், 1990, பக். 62

13. மண்டப விதானச் சிற்பங்கள்:

மண்டபச் சுவர்களில் வெளிப்புறத்திலும் உட்புறத்திலும் சாணலாகும் புடைப்புச் சிற்பங்கள் முதலியவை ஒரு புறமிருக்க, மண்டப விதானத்திலும் வியத்தகு சிற்பக் கலைப்படைப்புக்கள் உள்ளன. எடுத்துக் காட்டாகச் சிலவற்றைக் காண்போம்.

1. **கும்பகோணம்** கும்பேசுவரர் **கோயிலில்** நவராத்திரி மண்டபம் ஆதியில் **திருப்பணிச் சோழனால்** கட்டப்பட்டது எனவும், காஞ்சி காமகோடி பீடம் **சங்கராச்சாரியாரால்** பல திருப்பணிகள் செய்யப்பட்டன எனவும் கூறுவர். நவராத்திரி மண்டபத்தில் **மேல்பாவுக் கல்லில் விதானத்தில் இருப்பத்தேழு நட்சத்திரங்களுடன் பன்னிரண்டு இராசிகளையும் இயைத்து ஒரே கல்லில் செதுக்கியிருக்கும் கலைப்படைப்பைக் காணலாம்.**

2. **தில்லை** நடராசர் திருக்கோயிலின் உள்ளே கீழ்ப் பெரிய பிராகார மத்தியில் பலவிதழ்த் தாமரைகளின் மூன்றடுக்குடன், அதனைச்சுற்றி நீண்டசதுர அமைப்பில் பன்னிரண்டு ராசிகளும் சிற்ப வடிவத்தில் காணலாம். தில்லை கோவிந்தராசர் சன்னிதியும் நடராசர் சன்னிதியும் கூடும் மண்டபவிதானத்தில் நீண்ட சதுர அமைப்பில் நடுவே தாமரை யடுக்குடன் இவ்வாறே பன்னிரு இராசிகள் சிற்பவடிவிற் காணலாம்.

3. **திருவரங்கம்** அரங்க நாதர் கோயிலில் சேஷராயர் மண்டபத்தின் விதானத்தில் **கஜலட்சுமியின்** திருவுருவமும் புராண நிகழ்ச்சிகளும் சிற்பவடிவில் அமைக்கப் பட்டுள்ளதைக் காணலாம்

4. **ஆவுடையார் கோவிலில்** மண்டபவிதானங்களில் பலவற்றிலும் தத்துவநோக்கில் சிற்பங்கள் நிறைந்திருக்கக் காணலாம். சிறப்பாகப் பஞ்சகலைகள் பதினொரு மந்திரங்கள் (யந்திரங்கள்) எண்பத்தொரு பதாத்துவாக்கள் ஐம்பத்தொரு வர்ணாத்துவாக்கள், இருநூற்றுப் பதினான்கு புவனாத்துவாக்கள், முப்பத்தாறு தத்துவாத்துவாக்கள் குறிப்பிடத்தக்கவை. ஆறு வகை அத்துவாக்கள் அமைந்துள்ள இம் மண்டபத்தைப் பஞ்சாட்சர மண்டபம் என்றும் கனகசபை என்றும் வழங்குவர். ஆவுடையார் கோயிலில் பெரிய கோபுரவாயிலின் உட்புறமேல்

...பேராசிரிய... ஆய்வக ந...

விதானத்தில் நடராசரும் அவரை வணங்கும் மணிவாசகரும், நடராசருக்குக் கீழே காளையும், அதனெதிரே புலியுருவமும் அழகுறச்சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளன. மணிவாசகருக்கு மேலே பிட்சாடனதிருவுருவமும் நடராசருக்கு இடப்பக்கம் சிவகாமி திருவுருவமும் நன்கு செதுக்கப்பட்டுள்ளன.

5. கும்பகோணம் **சாரங்கபாணி கோயில் அச்சுத, பூபால மண்டபம்** என்னும் **நவராத்திரி மணிமண்டபம் ஊஞ்சல், மண்டபமெனவும்** அழைக்கப்படுகின்றது. இம் மண்டபத்து மேல் விதானச் சிற்பங்கள் புராணச் சிறப்புடையவை; மேற்பட்டிகையில் தெற்கு நோக்கிய வண்ணம் **கஜலட்சுமியும்** அதன் இரு பக்கங்களிலும் பல அடியார்களுமாகச் சிற்பவுருவங்கள் உள்ளன. ஏனைய மூன்று பக்கங்களிலும் **பாசுவதம் இராகாயணச் சிற்பங்களும் தசாவதாரச் சிற்பங்களும்** இடம் பெற்றுள்ளன.

இக்கோயிலின் துவாரபாலக மண்டபத்தின் விதானத்தில் பன்னிரு இராசிகளைக் கொண்ட இராசிச் சக்கரங்களும் அவற்றின் அதி தேவதைகளுமான அற்புதக் காட்சியைச் சிற்பமாக வடித்துள்ளனர்.

கும்பகோணம் மகாமகக்குளக்கரையில் அமைந்துள்ள மண்டபங்களில் விதானச் சிற்பங்கள் வரலாற்றுச் சிறப்பையும் தானச் சிறப்பையும் உணர்த்துவன. **தானச்சிற்பம்** பற்றித் தனியே கூறப்பட்டுள்ளது; காண்க. **பொதுவாகப் பல கோயில்**களிலும் விதானத்தில் பூவேலைப் பாடுகளும் **புராணத்** தொடர்புடைய நிகழ்ச்சிச் சித்திரிப்புக்களுமாகவும் **சிற்பங்களில்** இடங் கொண்டுள்ளன.

13.1. மண்டப - கோபுர - உத்திரச் சிற்பங்கள்:

ஆலயத்தின் கலைச்சிறப்பை மிகுதிப்படுத்த மண்டப முகப்பிலும் விதானத்திலும், தூணிலும், கருவறை அதிட்டானத்திலும், மாடக்குழிகளிலும், மற்றும் பிற இடங்களிலும் **வேலைப்பாடுள்ள** சிற்பங்களால் நிறைத்துள்ளனர். மண்டபச்சிற்பம் எனும் நோக்கில் மண்டபத்தூண்களின் மேல் அமைந்துள்ள அகன்ற **நெடியஉத்திரம்** முழுவதையும் சிற்பங்களால் அலங்கரித்துக் காட்டியுள்ளனர்.

பொதுவாகப் பல ஆலயங்களில் உத்திரங்களின் நடுவே பூவேலைப்பாட்டுடன் சிற்பியர் ஏனோ மனநிறைவு அடைந்

துள்ளனர். சில ஆலயங்களில் தம் திறமையனைத்தையும் புலப் படுத்தியுள்ளனர். **திருவாரூர்க்கோயில் கமலாம்பாள் மண்டபத் தூண்களின் மேல் அமைந்துள்ள உத்திரம்** முழுவதும் சிற்பங் களஞ்சியமாக விளங்குதலைக் காணலாம். ''இவற்றில் வினாய கர், கஜலட்சுமி. ரிஷபவாகனர், மயில் மேலமர்ந்த முருகன், வள்ளி, தெய்வயானை, நாரதர், தும்புரு, நான்முகன், ஊர்த் துவதாண்டவமூர்த்தி, காளி, கஜசம்மாரமூர்த்தி, கிடந்த நிலை லுள்ள திருமாலின் குடை, சாமரம் ஏந்தும் பெண்கள், மத்தளம் வாசிப்போர்கள், பலிபீடம், ரிஷபம், மகரமீன்கள் போன்ற வைகள் வடிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தும் பிற்கால விஜய நகரக் கலையின் சிறப்புக் கூறுகளாகப் பரிமளிப்பவையாகும்''[1] என்று **குடவாயில் பாலசுப்பிரமணியன்** எழுதிச் செல்வது காண்க.

ஆவுடையார் கோயிலில் பல இடங்களிலும் உத்திரச் சிற்பங் கள் அலங்கார நோக்கிலும் சமய - தத்துவ நோக்கிலும் அமைந் துள்ளன. வைணவக் கோயில்கள் பலவற்றிலும் உத்திரச் சிற்பங் கள் அலங்காரம், சமய - தத்துவம் ஆகிய நோக்கங்களில் சிறப் புற அமைந்துள்ளன; எடுத்துக்காட்டாகத் திருவரங்கம் அரங்க நாத சுவாமி கோயில் (சேஷராயர் மண்டபம்), கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயில் ஆகியவற்றிலமைந்த உத்திரச் சிற்பங்களைக் காண்க.

14. கட்டடத்திற்குத் தூண்களின் தேவையும் கந்திற் பாவையும் பிறவும்:

கட்டடத்தினைத் தாங்கும் **அடிப்படை** அல்லது **அத்திவாரம்** போன்று, கட்டடத்தின் மேற்பகுதியைத் தாங்கும் வலிமை யுடையது தூண் ஆகும். தூணின் பெருஞ் சிறப்பையுணர்த்து வற்காகத் தமிழ்மக்கள், குடும்பத்தைத் தாங்கும் குழந்தைச் செல்வர்களைத் தொலைநோக்குடன் **மதலைகள்** (தூண்கள்) என அழைத்துவந்துள்ளனர். மேலும், மக்களின் வாழ்வியலில் **'சான்றாண்மை'** எனும் பெருமைக்குரிய கட்டடத்தைத் தாங்கும் தூண்களாகவே சிறந்த பண்புகளைக் கூறிக் காட்டுகிறார் **வள்ளுவப் பேராசான்;** இதனை,

'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண்''[1]

என வருங் குறட்பாவால் உணரலாம்.

கட்டடத்தின் மேற்கட்டுமானத்தைத் தாங்குதற்கு வலிய தூண்கள் தேவையே; எனினும், அந்த நோக்கத்தில் மட்டுமல்லாமல், கலை நோக்கத்துடனும் தமிழ்ப் பெருமக்கள் அழகிய தூண்களைச் - சிற்பச்சிறப்புடன் கூடிய தூண்களை - அமைத்து வந்துள்ளனர். காப்பியங்களிலும், புராணங்களிலும் கூறப்படுந் தூண்களை, இன்று காண்பதற்கு வாய்ப்பில்லையெனினும் அவை பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக **மணிமேகலைக்** காப்பியத்தில் வரும் **கந்திற்பாவை** பற்றிச் சிறிது காண்போம்.

பூம்புகார் நகரில் **சக்கரவாளக் கோட்டத்திலே, சம்பாபதி கோயிலின்** கீழ்ப்பாலுள்ள தூணின் சிறப்பினைச் **சீத்தலைச் சாத்தனார்** அழகுறச் சித்திரித்துள்ளார். அந்தத் தூணிலே **மயனால்** அமைக்கப்பட்ட பதுமை, **துவதிகன்** என்னும் ஒரு தெய்வத்தின் வடிவமாக விளங்கியது. இந்தத் தூண்பாவையே **கந்திற்பாவை** என அழைக்கப்பட்டது. இந்தப் பாவையைத் - தெய்வத்தை - வழிபடுவோர்க்குக் கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய முக்காலச் செய்திகளையும் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். நாவால் உரைக்கும் ஆற்றலுடைய அந்தக் சந்திற்பாவையை 'நாவுடைப்பாவை' என்றும் வழங்கினர்.

புராண நோக்கில் தூண்களில் இறைத்திருவுருவங்களைக் காணவும், தூண்களையே இறைத் திருவுருவங்களாகக் காணவும் முன்னோடி போன்று, தெய்வநலக் கந்திற்பாவை விளங்கிற்று எனக் கூறலாம். இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

திருமழபாடியிலுள்ள வச்சிரதம்பேசுவரர் எனும் **வைரத்தூண் நாதர் சிலை**, பிரமலோகத்தில் பிரமனால் பூசிக்கப்பட்ட சிறப்பினையுடையது. இது பற்றித் **தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்,''** பிரம்ம லோகத்திலிருந்து சிவலிங்கத்தைப் **புருஷா**

1. குறள். 983.

மிருகம் எடுத்து வந்து, கொள்ளிடக் கரையில் பிரதிட்டைசெய்து விடுகிறது. பிரம்மாவோ தாம் பூசித்த லிங்கத்தைத் தேடி அங்கு அதைப் பெயர்த்து மீண்டும் தம் உலகத்திற்கு எடுத்துப் போக விரும்பியிருக்கிறார் இறைவனோ அசையாது ஆடாது **வைரத்தூணாக - வச்சிரத்தம்மாக** - நின்றிருக்கிறார். பிரமன் அவரை அப்படியே விட்டு விட்டே திரும்பியிருக்கிறார். இலிங்க வடிவில் பிரம லோகத்திலிருந்து வந்தவர் எப்படி வைரத் தூணாக மாறினார்? கற்பக்கோடி காலங்களாகப் பக்தர்கள் அன்பென்னும் பூமியில் அல்லவா புதைந்திருக்கிறார்? தேவர் ஒரு புறமும் மக்கள் ஒரு புறமும் இருந்து அழுத்த அழுத்த அவர் வைரமாக - வைரத்தூணாக - மாறியதில் வியப்பில்லைதானே! இந்த வச்சிரதம்பேசுவரர் கோயில் கொண்டிருக்கும் தலம்தான் திருமழபாடி என **'வேங்கடம் முதல்குமரிவரை'** எனும் நூலில் மிகச் சுவைபட எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்கதாகும்.

இவ்வாறெல்லாம் தெய்வ இருப்பினைப் பண்டைத் தமிழ்ப் பெருமக்கள் தூண்களில் காண நினைத்தமையால், கோயில் மண்டபத்தில் நிறுவும் தூண்களிலே தெய்வச் சிலைகளைச் சிற்பியர் வடிக்க முற்பட்டனர் எனலாம்.

14.1. சிற்பத் தூண்கள் - வளர்ச்சிப் படிநிலைகள்:

வரலாற்றுக் கண்கொண்டு நோக்குகையில், பல்லவர் காலக் குடைவரை கோயில்களிலும், கட்டுமானக் கோயில்களிலும் அமைந்துள்ள தூண்கள் முதற்கால கட்டத்தைச் சார்ந்தவை எனலாம். அவற்றுள்ளும், வழிவழி வந்த மன்னர்களின் கலைச் கேற்பப் படிப்படியே சிற்ப நுணுக்கங்கள் மலரலாயின.

மகேந்திரவர்ம பல்லவன் காலத்துக் குடைவரைக் கோயில் களில் செதுக்கப்பட்ட தூண்கள், மேலும் கீழும் சதுரப்பட்டை அமைப்புடனும், எண்கோண அமைப்புடனும் இருந்தன. மேலும், அவற்றின் இடைச்சதுரத்தில் தாமரை மலர் வடிவமைப்புச் செதுக்கப்பட்டிருந்தன. இத்தூண்களின் மேலுள்ள முகப்பானது அறல் போன்ற வளைவுடையதாய் இடையிடையே மனித முகத்தை நடுவிற்கொண்ட கூடுகளையுடையதாய் இருந்தது.

நரசிம்மவர்ம பல்லவன் காலத்தில், குடைவரை கோயில் களிலும் ஒற்றைக் கற்கோயில்களிலுமுள்ள தூண்க்ள், சதுரப் பட்டையமைப்பும், இரண்டு சதுரமுழத்தில் பிளந்த வாயுடன் கூடிய **சிங்கம்** கீழே அமர்ந்து தூண்களைத் தலையால் தாங்கி யிருப்பதைப் போன்ற அமைப்பும் கொண்டிலங்கின; போதிகை கள் உருண்டு காடிகள் வெட்டபபட்டிருந்தன. மாமல்லபுரத்தில் பீமன்ரதத்துச் சிங்கத்தூண்களை எடுத்துக்காட்டாகக் கூறுவர்; பிற்காலத்திய கோயில் மண்டபங்களில் காணலாகும் **யாளித் தூண்களுக்கு** முன்னோடிகளாக இவை அமைந்தன என்பர். மேலும், ஒவ்வொரு தூணின் தலைப்பகுதியும், திரட்சியுடைய தாயும், அந்தத்திரட்சிக்குமேல் தட்டையான ஒரு கற்பலகை யுடையதாயும் இருக்கும். மாமல்லபுரத்தில் ஒற்றைக் கல்லால் செதுக்கப்பட்ட கோயில்கள் அனைத்தும் **மாமல்ல சிற்பமுறை** என்பதனுள் அடங்கும்.

இராசசிம்மன் காலத்திலிருந்து தூண்கள் சிங்கத் தோற்றத் தைச் சிறப்புடன் எடுத்துக் காட்டுபவையாகவும், தோரணங் களுடனும் பிற சிற்பக் கூறுகளுடனும் வனப்புடையவையாகவும் அமைக்கப்பட்டன.

பிறகு, **சோழர் மன்னர்கள்** காலத்திலும் - **விசய நகர - நாயக்க மன்னர்கள்** காலத்திலும் சிற்பத் தூண்களின் வனப்புக் கூறுகள் படிப்படியே பல்வேறு அமைப்புக்களுடன் மிகுந்து கொண்டே வந்தன. தூண்களிலே தெய்வத் திருவுருவங்களை யும் அரசர் திருவுருவங்களையும் அருளாளர் திருவுருவங்களையும் ஆலயத் திருப்பணி புரிந்தோர் திருவுருவங்களையும் புடைப்புச் சிற்பங்களாக அமைத்து, ஒவ்வொரு தூணையும் சிற்பக் கருவூல மாக அமைத்துக் காணும் கலையார்வம் தழைத்துக் கொண்டே வந்தது எனலாம்.

வளர்ச்சி நிலையில் தூண்களிலும் சமயப் பார்வையும் தத்துவப்பார்வையும் அமையலாயின. காப்புக் கடவுளாகிய **திருமால்** பதினான்கு உலகங்களை அடக்கியுள்ள **பிரமாண்டத்தைத் தாங்கும் பொறுப்பிலுள்ளவர்** என்ற சமய நோக்கில், அவரைத் தூணாக உருவகிக்கும் தத்துவக் கற்பனை தோன்றியது.

சதுரத் தூண்கள் **நான்முகனுக்கும்**, எண் கோணத்தூண்கள் **திருமாலுக்கும்**, வட்டமாகத் திரண்ட தூண்கள் அல்லது பதினாறு பட்டைத் தூண்கள் **உருத்திர சிவனுக்கும்** தொடர்பு படுத்தப் பட்ட நிலையில் மக்களிடையே விளக்கம் கொண்டுள்ளன.[1]

14.2. ஆலயத் தூண்கள்—கலைநுட்பமும் தத்துவமும்:

பொதுவாகத் தூணைக் **கால்**, **தம்பம்**, **கம்பம்**, **கந்து**, **மதலை** எனவும் வழங்குவர். ஆலயங்களிலும் சமயச் சார்பான திருமடங்களிலும் தூண்களை அமைக்கையில் **கட்டட**, **சிற்ப**, **ஆகம**, **வாஸ்து** சாத்திர விதிகளுக்கிணங்க அவற்றைப் பாகு பாடு செய்துள்ளனர். வரலாற்று நோக்கில் தூண்களைப் பாகு பாடு செய்யும் முயற்சிக்கும் அவை இன்று பெரும்பாலும் துணைநிற்கின்றன.

தூண்களைச் சிற்ப நோக்கில் **திரணை** (bulbous), **கழுத்து** (neck), **குடம்** (cavity), **பலகை** (abacus), **பட்டி** (band), **இதழ்** (petal) ஆகிய உறுப்புக்களுடன் அமைப்பர். சிற்பியின் தேவை களுக்கேற்பத் தூண்களில் இவ்வுறுப்புக்கள் இடம் பெறும்.

மேலும், கட்டடச் சிற்ப மரபுப்படி ஆலயத்தூண்கள் அடியிலிருந்து மேற்பகுதி வரையில் **வரி**, **கால்**, **பதுமபந்தம்**, **கலசம்**, **தாடி**, **கும்பம்**, **இதல்**, **பலகை**, **போதிகை**, **உத்திரம்**, **கபோதம்** ஆகிய உறுப்புக்கள் கொண்டு விளங்கின என்பதும் மனங்கொள்ளத்தக்கது.

ஆலயங்களை அமைக்கையில் சிற்பியர், தம் முன்னோர் வகுத்த கலைமரபுகளையும் (Art traditions), வடநாட்டு நடைமுறைகளையும் ஓரளவு பின்பற்றி வந்துள்ளனர். பொது வாகத் தூண்களைக் கீழ்க் காணும் வகைகளில் பாகுபடுத்திக் கொண்டுள்ளனர்.

1. சதுரமும் உருளையமைப்பு முடைய தூண் — Square and oubique pillar
2. ஒருவகை அலங்காரத்தூண் — Chemferred ,,

1. The Anciand Madievat Architecture of India (E B. Havell), *1972*, P.*58*

3. பலபட்டையமைப்புடைய (பன்முகத்) தூண்	— Polygonal pillar	
4. (போரையால்) செதுக்கப்பட்ட தூண்	— Engraved	,,
5. பத்தித்தூண் (நெருக்காக வரிகள் கொண்டது)	— Fluted	,,
6. வழவழப்பாக்கப்பட்ட தூண்	— Rubbed	,,
7. கோட்டத்துத்தூண் (மாடக்குழித் தூண்)	— Niched	,,
8. வேலைப்பாட்டுடன் வனப்பாக்கிய தூண்	— Embellished	,,
9. சுவர்த்தூண் (அரைத் தூண்)	— Pilastered	,,
10. சிற்பத்தூண்	— Sculptured	,,
11. சுற்றுப்பட்டை வடிவத்தூண்	— Banded	,,
12. எண்பட்டை வடிவத்தூண்	— Octogonal	,,
13. இசைக்கூறுடைய தூண்	— Musical	,,
14. யாளித்தூண்	— Yali	,,
15. கோபுர அமைப்புடைய தூண் (கீழே அகன்றும் மேலே குவிந்துமுள்ளது)	— Gopura	,,
16. உருவங்களைக் கொண்ட தூண்	— Portrait	,,

தமிழ்நாட்டுக் கோயில்களைக் கால அடிப்படையில், **பல்லவர் காலம்** (கி.பி. 600—850), **சோழர் காலம்** (கி.பி. 900-1150), **பாண்டியர் காலம்** (கி.பி. 1180 - 1350), **விசயநகர காலம்** (கி.பி. 1336—1565), **மதுரை நாயக்கர் காலம்** (கி.பி 1600-1700) எனப் பாகுபடுத்தி ஒவ்வொன்றன் சிறப்பையும் கலைக்

கூறுகளுடன் காண்பதற்கு ஆலயத் தூண்களும் துணைபுரிகின்றன எனலாம், அவற்றையெல்லாம் விவரமாக ஆலயங்களுக்குச் சென்று காண்பதும், சிற்பத்திறன் கண்டு போற்றுவதும் பண்பாட்டு இன்பம் நல்க வல்லது; எனினும், கலையழகுக் கூறுகளுடன் சில ஆலயங்களில் காணலாகும் சிற்பத்தூண்களை மட்டும் சிந்திப்போம்.

பொதுவாக, ஆலயச் சிற்பத்தூண்களைப் பொறுத்தவரையில் எல்லா வகைத் தூண்களையும் **திரிபுவனம் கம்பகரேசுவரர் கோயிலில்** கண்டு மகிழலாம் என்று அறிஞர்கள் கூறுவர்.[1] **திருவையாறு பஞ்சநதேசுவரர் கோயிலிலும்** பெரும்பாலும் பல்வகைச் சிற்பத் தூண்களைக் கண்டுகளிக்கலாம்.

கோயிலில் காணலாகும் சிற்பத்தூண்கள் வாயிலாகப் புலப்படுத்தப்பெறும் **சமய, தத்துவ நுண்கூறுகளும்** உண்டு; அவை பற்றி முதற்கண் சிறிது காண்போம்.

ஈரேழு (பதினான்கு) உலகங்களையும் கொண்டிலங்கும் **பிரமாண்டத்தைத்** தாங்கும் பொறுப்பில் **திருமால்** இருப்பதால் அவரையே ஒரு தூணாகக் கருதுவர். தூண்களுடன் **அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்** என்ற நால்வகை வருணத்தாரையும் தொடர்பு படுத்திக் காண்பர்.[2]

நான்கு பட்டையுடன் கூடிய **சதுரத்தூண்** பிரமனையும், **எண்கோணத்தூண்** திருமாலையும், **திரண்ட** (வட்டமான) **தூண்** அல்லது **பதினாறு பட்டைத்தூண்** உருத்திர சிவனையும் வழிபாட்டு நோக்கில் இயைபுபடுத்துவர்.[3] இஃது ஒருபுறமிருக்கத் தமிழ்நாட்டு ஆலயங்கள் சிலவற்றில் காணலாகும் கலை மாட்சிமிகு தூண்கள் பற்றிக் காண்போம்.

கோயில் மண்டபங்களிலும் பிராகாரங்களிலும் உள்ள தூண்களிலே முதலில் **சிம்மவுருவங்களை** யமைத்தனர்; பிறகு, **யாளியுருவங்களை** யமைக்கலாயினர் இவ்வாறு சிம்மவுருவங்களையும் யாளியுருவங்களையும் தூண்களில் அமைப்

1. Art and Architecture, P. 433.
2 Ibid, P. 429
3. Art and Architecture, P. 429

பதால் மன்னர்கள் தெய்வநலப் பேராற்றலையும், கொற்றத்தையும் பெறவியலும் என்று நம்பினர். இத்தகைய நம்பிக்கையின் விளைவாகத் தமிழ்நாட்டு ஆலயத்தூண்கள் பலவற்றில் சிம்மவுருவங்களும் யாளியுருவங்களும் இடம் பெற்றன. எனினும், யாளித்தூண்கள் கொண்ட கோயில்களுக்கு முன்னோடியாக அமைந்தது **காஞ்சிக்கைலாசநாதர் கோயிலாகும்**.

யாளிகளையும் வரிக்கோலங்களையும் மிகச் சிறப்பாகத் தூண்களில் பயன்படுத்தியவர்கள் **நாயக்க மன்னர்கள்;** யாளியின் தலைமேல் தூண் கபோதத்தையமைத்து, அந்தக் கபோதத்தின் மேல் கொடுங்கையமைத்து ஒருவகையான புதுக்கலையமைப்பைத் தூணில் கண்டவர்கள் அவர்களே. இவ்வாறான அமைப்புடைய அழகுத் தூண்களைத் **திருநாகேசுவரம் கோயிலில்** கண்டு மகிழலாம்.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலிலே ஊஞ்சல் மண்டபத்திலுள்ள 24 யாளித்தூண்கள் மிகுந்த சிற்ப வேலைப்பாடு கொண்டவையாகும்.

ஸ்ரீ பெரும்புதூர் ஆதிகேசவப்பெருமான் கோயிலில் ஆண்டாள் சன்னிதியிலுள்ள பன்னிரண்டு சிற்பத் தூண்களிலும் யாளியின் மீது வீரர்கள் ஏறியிருக்குங் காட்சி அழகுறக் காட்டப்பட்டுள்ளது. "உற்சவ மண்டபத்திலுள்ள இருபது தூண்களிலே பதினாறு தூண்களில் குதிரை மீதுள்ள வீரர்களின் சிற்பங்களும், நான்கில் யாளியின் சிற்பங்களும் உள்ளன. இவை வேலைப்பாடு மிக்கவை"[1] என **V. கந்தசாமி** எழுதிச் செல்வது காண்க. மேலும், அவரே, "அதே கோயில் பெருமாள் சன்னிதியும் இராமானுசரின் சன்னிதியும் கல்லினாலானவை; சிற்ப வேலைப்பாடு மிக்கவை. இராமானுசர் சன்னிதிக்கு எதிரிலுள்ள மண்டபத்தில் ஒரே கல்லாலான தூணில் 4 யாளிகளையும், வீரர்களையும் கொண்ட நான்கு தூண்கள் உள்ளன. இவை சிறந்த கலைப்படைப்புக்களாகும்"[2] எனத்தரும் கலைக் குறிப்பும் மனங்கொண்டு போற்றத்தக்க

1. தமிழ்நாட்டின் தலவரலாறுகளும், பண்பாட்டுச் சின்னங்களும், பக் 47-48
2. மேலது.

தாகும். மேலும், பெருமாள் சன்னிதியின் எதிரில் **சதுஸ்தம்ப மண்டபத்தில்** உள்ள நான்கு பிரம்மாண்டமான தூண்கள் ஐந்து முகங் கொண்ட வேலைப்பாடு கொண்டவை; **அந்தத் தூண்களின கீழே யாளி உருவங்களும், மேலே பதுங்கி நிற்கும் சிங்கச் சிலைகளும் அமைந்துள்ளன.** இந்தத் தூண்களெல்லாம் பூதகணங்களால் படைக்கப்பட்டன எனும் கூற்று உண்மையென நம்பும்படியே சிறந்த வேலைப்பாடு உள்ளது.

கும்பகோணம் இராமசாமி கோயிலிலும், சாரங்கபாணி சுவாமி கோயிலிலும் காணலாகும் யாளிச் சிற்பத்தூண்கள் தமிழ்நாட்டுச் சிற்பியரின் கைவண்ணத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக் களாகும். இராமசாமி கோயிலில் உள்ள யாளிச் சிற்பத்தூண் களை ஆய்வுணர்வுடன் நன்கு நோக்கினால், யாளியின் பிடியில் யானை சிக்கி அஞ்சி நிற்பதைக் காணலாம். **பெரிய மத் யானையை விடப் பன்மடங்கு ஆற்றலுடையது யாளி** என்பதைப் புலப்படுத்தச் சிற்பி கையாண்ட உத்திக்கு யாளித்தூண்கள் பயன்பட்டுள்ளன. விலங்கினங்களின் வலிமையைப் புரிந்து கொண்டு, சிற்பியின் கலைக் கற்பனையைச் சிந்திக்கையில் யாரும் வியப்புணர்ச்சிக்கு ஆட்படாமல் இருத்தல் இயலாது. தஞ்சைப் பெரியகோயில் மகாமண்டபத்துக்கு முன்னதாக அமைந்துள்ள **மண்டபத்தில்** யானையின் துதிக்கையைத் தன் துதிக்கையோடு பிணைத்துக் கொண்டு நிற்கும் **யாளி** யமைப் புடைய தூண்கள் சிலவற்றைக் காணலாம்; நந்தி மண்டபத்திலும் யாளித்தூண்கள் சில உள்ளன.

திருவரங்கம் பெரிய கோயிலிலுள்ள சேசராயர் மண்டபத்தின் வடபாலிருக்கும் **சிற்பத்தூண்கள்** பலவற்றுள் **குதிரைவீரர் தூண்கள்** சிற்பஎழில் கொண்ட அரிய கலைச் செல்வங்கள். இங்குள்ள குதிரைவீரர் சிற்பத்தூண்களையும், **கிருஷ்ணாபுரம் குதிரை வீரர் சிற்பத்தூண்களை**யும் வேலூர் ஜலகண்டேசுவரர் கோயில் குதிரைவீரர் சிற்பத்தூண்களையும் ஒப்பிட்டு அணுகு முறையில் காணின் அரிய பல கலைநுட்பங்கள் புலனாகும். குதிரைவீரர் தூண்களின் சிறப்பினாலே இம்மண்டபம் **குதிரை மண்டபம்** என்றும் அழைக்கப்பெறுகிறது.

ஸ்ரீமுஷ்ணம் பூவராகப்பெருமாள் கோயிலில் சிறப்பாக இரு மண்டபங்கள் உள்ளன; ஒன்று நூற்றுக் கால் மண்டபம்,

இரண்டாவது மண்டபம் 40 அடி சதுரங்கொண்ட சிற்ப எழிற் கூடம்; இதனில் நான்கு வரிசைகளும், ஒவ்வொரு வரிசையிலும் நான்கு தூண்களுமான அமைப்பினைக் காணலாம். நடுவே ஒரு தூணும் அதைச் சுற்றி மூன்று சின்ன தூண்களுமாம் அமைப்புடன் ஒரே கல்லில் செய்யப்பட்ட கலைவண்ணத்தில் நான்கு தூண்கள் நான்கு மூலைகளிலும் அணிசெய்கின்றன. ஏனைய தூண்களில் **யாளிவீரர்கள்** முதலிய சிற்பங்கள் வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளன. மத்தியிலுள்ள **தூண்களில் அச்சுதப்பநாயக்கரும் அவர் குடும்பத்தினரும்** சிலைவடிவில் காணப்படுகின்றனர். தூண்சிற்பங்கள் அனைத்தும் வியத்தகு வேலைப்பாடு கொண்டவை.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் காணலாகும் **புது மண்டபம்** முதலிய பல மண்டபங்களிலும் சிற்பியர் தம் கலைத் திறமை முழுவதையும் காட்டி அழகிய தூண்களை வடித்துள்ளனர். தூண்களில் சிவமூர்த்தங்கள் பலவற்றையும் காணலாம். ஒரு தூணில் **திருமலை நாயக்கரும் அவர் மனைவியரும்** சிற்பவுருவில் இடங்கொண்டிருத்தலைக் காணலாம். மன்னர் திருவுருவங்கள் தூணில் இடங்கொள்ள வழிவகுத்தவர்கள் பாண்டிய மன்னர்கள் என்பது ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை போன்ற ஆராய்ச்சியறிஞர்கள் கருத்து

திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயம் பாண்டியர் சிற்ப முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கோயில் திருச்சுற்றில் மண்டபத்தூண்களின் கீழ்ப்பாகத்தில் **பாண்டிய மன்னர்கள் பலரின் திருவுருவங்கள்** உயிர்த்தோற்றத்துடன் காட்சியளித்தலைக் காணலாம்.

கொங்கு நாட்டிலுள்ள **பேரூர் திருக்கோயில்** முன் மண்டபத் தூண்களில் வரிசையாகச் **சிவ மூர்த்தங்கள்** இடம் பெற்றுள்ளன. அவை சிற்பநோக்கில் தனித்தன்மை வாய்ந்த நேர்த்தியான பெருஞ் சிற்பங்களாகும்.

ஆவுடையார்கோயிலிலே மண்டபத் தூண்களில் காணலாகும் சிற்பங்கள் தமிழகச் சிற்பியரின் திறமைக்கு எடுத்துக்காட்டுகளாகும். தூண்களிலேயே திருக்காளத்தி, நவக்கிரகங்கள்

(தனித்தனியே), லிங்கோத்பவர், சூல சம்மாரர் முதலிய சிவ மூர்த்தங்கள் சிலவற்றைக் காணலாம். நவக்கிரகங்களுள் ஒன்றாகிய சூரியன் உஷாதேவியுடன் சிற்ப வடிவில் காட்சி யளிப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். தூண்சிற்பங்களில் புராணச் சார்பிலும் நடைமுறை வரலாற்றுச் சார்பிலும் கலைநோக்கில் காணத்தக்கவை பல உள்ளன.

14.3. தீபத்தூண்கள்:

கோயிலில் தெய்வச் சன்னிதிகளில் வெண்கலம் முதலிய வற்றாலான விளக்குகள் ஒரு புறமிருப்பினும், நிலைத்த ஏற் பாடாகச் சிற்பியர் தீபத்தூண்களைச் செதுக்கி அமைக்கலாயினர். கோயிற் கட்டடத்தைத் தாங்கி நிற்பதாலும் சிற்ப வேலைப் பாட்டாலும் மண்டபத் தூண்கள் கட்டடக் கலை நோக்கில் சிறப்பிடம் கொள்கின்றன. அதே நிலைச் சிறப்பினைக் கோயிலைத் தாங்காத தூண்களும் பெற்றுத் திகழுமாறு பண்டையோர் தீபத்தூண்களைச் செய்தமைத்தனர்.

முதற்காலத்தில் கோயிலுக்கு வந்து வழிபடுபவர்களுக்கு வசதிபுரியும் வகையில் மிக நேர்த்தியான சிற்பங்களுடன் கூடிய பெரிய தீபத்தூண்கள் நிறுவப்பட்டுள்ளன; இறைவன் சன்னிதிக்கு இருமருங்கிலும் அவை அலங்காரமாக அமைந் துள்ளன. இவ்வகைத் தூண்களை இன்றும் **ஆவுடையார் கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில், திருச்சி மலைக் கோட்டைக் கோயில்,** வடஆர்க்காடு மாவட்டம் **மருதநாடு புரந்தர புரீசுவரர் கோயில்** முதலிய பல கோயில்களில் கண்டு மகிழலாம். ஆனால், அவை அலங்காரத்திற்காக நிற்கின்றனவே யொழிய, அவற்றில் நெய் திரியிட்டு விளக்கேற்றி மகிழ் வாரில்லை. காரணம், மின்சார வசதியால் கிட்டும் ஒளிவிளக்கு களும் உலோகத்தாலான குத்துவிளக்குகளுமேயாகும்.

கலையழகு நோக்கில், திருச்சி மலைக்கோட்டைக் கோயிலில் காணப்படும் தீபத்தூண்களை எடுத்துக் காட்டாகக் காண்போம். தீபத்தூண்களின் அடிப்பாகத்தில் சிம்மம் பொறுமையாக அமைந்திருப்பது போலச் சிற்பத்திறம் புலப்படுத்தப்பட்டுள்ளது.

முரட்டுச் சிம்மம் கூட இறைவனுக்குத் தொண்டுபுரிதற்காகத் தன் தலையில் ஒளித்தம்பத்தை ஏந்தி நிற்பதாகக் காட்டிய சிற்பியின் கற்பனையை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும் நரசிம்ம பல்லவன் காலத்திய கோயில் மண்டபத்தூண்களின் அடிப்பகுதியில் அமர்ந்த சிம்மம் அமைந்துள்ள கலைப்பாணியின் தாக்கத்தையும் ஈண்டு நினைவிற்கொள்ளலாம். பாரதப் பெரு நாட்டில் சிறந்த வெற்றி கொண்ட அசோகன் நாட்டிய தூண் களின் மேற்பகுதியில் அமைக்கப்பட்ட அமர்ந்த சிம்மங்களின் ஒரு வகைத் தாக்கத்தையும் இயைபுடன் ஈண்டு நினைவிற் கொள்ளலாம். பண்பாட்டுக் கூறுகளைப் பல நோக்கில் ஆராயும் போது இவ்வாறெல்லாம் சிந்திக்க இடமுண்டு எனலாம்.

14.4. இசைத் தூண்கள்:

ஆகமங்களைக் கற்றுணர்ந்து தம் மதிநலத்தாலும், கற்பனை காலும் கைவண்ணத்தைக் காட்டிய தமிழ்நாட்டுச் சிற்பியர் உலகப்புகழ் பெற்றவர்கள்; இதனையுணரச் செய்யச் சில ஆலயங்களில் அமைந்துள்ள இசைத்தூண்கள் துணைநிற்கின்றன.

கவின்கலைகளுள் தாய்க்கலையாகிய ஓவியத்துடன் மிகத் தொடர்புகொண்டது சிற்பக்கலை; தமிழ்நாட்டில் சிற்பக்கலை கட்டடக் கலையுடன் பிணைந்துள்ள சிறப்பினையுடையது. ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டடக்கலை ஆகியவற்றுடன் இசைக்கலையையும் இயைத்துக் காட்டச் சிற்பியர் முயன்ற அரும்பெரும் முயற்சியின் விளைவே இசைத் தூணாக வடி வெடுத்தது. கற்பனைகளுள் ஒன்றாகிய **இயைபுக்கற்பனை** (Associative imagination) அவர்களுக்குக் கைகொடுத்து நின்றது.

'உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்' எனப் போற்றப் படும் மதுரைத்தீந்தமிழைத் தலைமையாகக் கொண்ட பாண்டி மண்டலத் தமிழ்வளாகத்துள் - மதுரை. திருநெல்வேலி, ஆழ் வார் திருநகரி, கிருஷ்ணாபுரம், செண்பகராமநல்லூர், திருப் பெருந்துறை, தென்காசி, திருக்குற்றாலம், சுசீந்திரம் முதலிய திருத்தலங்களில் - இசைத்தூண்கள் மிகச்சிறப்பாக அமைந் துள்ளன. இவையல்லாமல் திருவானைக்கா, தாடிக்கொம்பு

தாராசுரம் முதலிய இடங்களிலும் இசைத்தூண்கள் உள்ளன; எனினும், குறிப்பிட்ட பாண்டிமண்டல இசைத்தூண்களுக்கு இவை ஈடாகமாட்டா எனக் கலைத்திறனாய்வாளர்கள் கூறுவர் இசைத் தூண் தொடர்பாக அரும்பெறச் செய்திகளை அறிந்து கொள்ள வேண்டுமெனின், **பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி, பேராசிரியர் கே.கே பிள்ளை,** சாத்தன்குளம் **அ. இராகவன், வி. கந்தசாமி** முதலியோர் எழுதியுள்ள கட்டுரைகளைக் காண்க. அவர்கள் வழிநின்று ஈண்டுச் சில செய்திகளைக் காண்போம்.

பல்வேறு அழகமைப்புடன் பற்பல வடிவங்களில் பல வரிகளையும் உருட்டுத்திரணைகளையும் உடையனவாய் இசைத் தூண்கள் காணப்படுகின்றன; எனினும், இவை ஒரே கல்லில் இவற்றுக்கெனவே தேர்ந்தெடுத்த கருங்கல்லில் - செதுக்கப்பட்டுள்ளன. எனினும், இவையெல்லாம் தரமான இசைக் கூறுகளை ஒன்றுபோலவே ஒலிக்கும் தன்மையுடையவையல்ல. "ஒரு சில தூண்களின் ஒலி மந்தமானதாக இருக்கின்றது. ஒரு சில தூண்கள் மூன்று அல்லது நான்கு சுரங்கள் மட்டிலும் ஒலிக்கக் கூடியனவாக உள்ளன. இத்தூண்கள்தாம் சிறந்த ஒலியெழுப்பும் தன்மையுடையனவாக இருக்கின்றன.

இந்தக் கல்லிசைத் தூண்களின் நிறம் கருப்பாகவோ, வெள்ளையாகவோ, சாம்பல் நிறமாகவோ இருக்கின்றன. இவை அனைத்தும் வடிவில் சதுரமாகவும், புரிகள் உள்ளனவாகவும்-வட்டமானவையாகவும், அறுகோணம், எண்கோணம் போன்றனவாகவும் காணப்படுகின்றன. பொதுவாகத் தூண்கள் மூன்று அடிக்கு மேல், ஆறுஅடிவரை உள்ளனவாய் இருக்கின்றன"[1] என வருங்குறிப்பு மனங்கொள்ளத்தக்கது. சில தூண்கள் ஒன்பதடி உயரமுள்ளவை. அவை மண்டபத்தின் தேவைக்கேற்ப அமைக்கப்பட்டன என்பதையும் நினைவிற் கொள்ளலாம்.

மதுரை **மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்** மொட்டைக் கோபுரத்திற்கு அருகில் உள்ள ஐந்து அருமையான இசைத் தூண்களும் கலைநுட்பம் வாய்ந்தவை. இவற்றிலெழும் சுரத்தின் கிளைச்சுரங்கள் பக்கத்திலுள்ள இசைத் தூண்களிலிருந்தும்

1. மதுரை கும்பாபிடேக மலர் (1963), பக். 124.

அதிர்வுகளால் (vibrations) தாமாகவே ஒலித்தலைக் காணலாம். மேனாட்டு இசைவிற்பன்னர்கள் இவற்றைக் கண்டு **'பியானோ கம்பங்கள்'** என்று போற்றுகின்றனர். வடநாட்டு இசை மேதைகள் இவற்றை **'ஜலதரங்கத் தம்பங்கள்'** எனப்போற்று கின்றனர்! தமிழிசைவல்லுநர்கள் **'வில்லோயாழோ'** என வியந்து நிற்கின்றனர்.

திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் காணலாகும் இசைத்தூண்கள் மாபெரும் மண்டபத்திற்கும் ஆலயத்திற்கும் அணிசெய்து மக்களைக் கவர்பவையாய் உள்ளன. "இந்த இசைத்தூண்கள் ஒவ்வொன்றும் ஒரே பெருங்கல்லால் செய்யப் பட்டதாகும். நடுவில் **பெரிதாக ஒரு தூணும்**, அதைச் சுற்றிலும் உருவிலும் திருவிலும் உயரத்திலும் வித்தியாசமான **48 சின்னஞ் சிறு** தூண்களான உருட்டுக்கம்பிகளும் இணைக்கப்பட்டாற் போன்று செதுக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் முன்பக்கம் இவ்விதமான பண்ணிசைக்கும் இருதூண்கள் பாரிய மண்ட பத்தைத்தாங்கி நிற்கின்றன. இந்த அற்புதமான அழகிய இசைத்தூண்களில் காணப்படும் ஒவ்வொரு சிறிய உருட்டிலும் ஒரு சிறிய குச்சியைக் கொண்டு தட்டினால் ஒவ்வொரு சுரம் எழுமாறு இத்தூண்களை அமைத்திருப்பது வியப்பையும் மகிழ்ச்சியையும் எழுப்புகிறது. இம் மண்டபத்தை அமைத்தவன் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் செங்கோ லோச்சிய **கூன்பாண்டியன்** என்று இவ்வூர்த் தலபுராணம் கூறுகிறது"[1] என்று **சாத்தன்குளம் அ. இராகவன்** விளக்கிச் செல்வது சிந்திக்கத்தக்கது.

நெல்லையப்பர்கோயில் மணிமண்டபத்தில் இரண்டும், **அம்பாள்** சன்னிதியில் இரண்டுமாக **நான்கு இசைத்தூண்கள்** வியத்தகு நாதத்தை விளைவிக்க வல்லவை. "தூணில் **உள்ள** சிறு உருட்டுக் கம்பிகளில் வெவ்வேறு சுரம் எழுவதற்கு நமது சிற்பிகள் இங்குக் கையாண்டிருக்கும் முறை எவரும் காண முடியாத ஓர் அலாதியான அரிய முறையாகும். **உருட்டுக் கம்பிகள் ஒவ்வொன்றிலும் ஒரு சிறிய அணில்** ஏறிப்பாய்வது போல் செதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தூணில் இருக்கும் அணிலை

1. மதுரை கும்பாபிடேக மலர் (1963), பக். 127

அடுத்த தூணில் இருக்கும் அணில் எட்டிப்பிடிக்க முயல்வது போல் இருக்கும். இது சுரங்களின் தொடர்பைக் காட்டச் சிற்பிகள் கையாண்டிருக்கும் அருப்பெரும் குழூஉக் குறியாகும்''[1] என்று சிந்திக்க வைக்கும் குறிப்பு நம் கலைப்பண்பாட்டைத் தெள்ளிதின் புலப்படுத்துவதாகும். அணிலைச் சிற்பியர் கையாண்டிருப்பது கொண்டு, 'இராமாயணத்தில் கடலிலே சேது அணை கட்ட அணில் பயன்பட்டது போலே இசைக் கடலில் சுரங்களால் இராக(பண்) அணை கட்ட அணில் பயன் பட்டுமே' என்பது போன்ற கற்பனைக்கும் வழிவகுக்கலாம்.

மேலும், இங்குள்ள இந்த இசைத்தூண்கள் அலங்காரச் சிற்பக் கலைமாட்சிக்கும் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. 'தூண்களின் உச்சியில் காணப்படும் பதும பந்தம், கலசம், தாடி, குடம், இதழ்முனை, பலகை, கண்டம், போதிகை, அதிலுள்ள மதளை, பூமுனை, நாணுதல் போன்ற உறுப்புகளும், உச்சி அலங் காரங்களும், பல்வேறு பூக்களும், யாளிகளும் பிறவும் சிறப்புச் சிறப்பை மேலும் உயர்த்துகின்றன,''[2] என்று வருங் கலைக்குறிப் பினைக் காண்க. இவ்வாறாகப் பல கலைநுணுக்கக் கூறுகளை யுடைய இசைத்தூண்களைக் காணவேண்டின் திருக்குற்றாலம், சுசீந்திரம் முதலிய தலங்களுக்குச் சென்று பொறுமையாக நோக்குதல் வேண்டும். இஃது ஒரு புறமிருக்க, இசைக் குழலு டைய தூண்களைக் – கருவி இசைத்தூண்களை – நம்நாட்டில் காண வேண்டின் செண்பகராம நல்லூருக்கும் ஆழ்வார்திரு நகரிக்கும் செல்லுதல் வேண்டும். அவை பற்றிச் சிறிது காண் போம்.

திருநெல்வேலி மாவட்டம் நான்குனேரிவட்டம் செண்பகராம நல்லூரில் உள்ள சிறிய பெருமாள் கோயிலில், கருங்கல் தூணிலே ஓர் இசைக்குழலைக் காணுமாறு செய்துள்ளனர் சிற்பியர். "இத் தூண்குழல் கோயில் திருவறையின் தென்மேற்கு மூலையில் இருக்கிறது. இத்தூணில் குடைந்திருக்கும் துவாரம், அடி பெருத்தும், நுனி சிறுத்தும், நடுப்பாகத்தில் குவிந்த வண்ணமு மாகக் காணப்படுகிறது. இதனால் இக்குழலை நின்றுகொண்டு எளிதில் ஊதமுடிகிறது.

1, 2. மதுரை கும்பாபிடேக மலர் (1963), பக். 127

ஆழ்வார் திருநகரியில் உள்ள தூணில் குடையப்பட்டிருக்கும் குழல் துவாரம் அடியில் இருப்பதால் எவரும் அதை, நின்று கொண்டு ஊதமுடியாது. தரையில் படுத்துக் கொண்டுதான் ஊதமுடியும். அதோடு அக்குழலின் உட்பாகத்தை உற்றுப் பார்க்கவும் முடியாது. ஆனால், செண்பகராமநல்லூர்க் குழலின் உட்பாகத்தை மின்விளக்கின் ஒளியைப் பாய்ச்சி நன்றாகப் பார்க்க முடிகிறது. இத்தூண் குழல்துவாரம் கீழிருந்து மேல் நோக்கும் வண்ணம் சற்றுச் சாய்வாகக் குடையப்பட்டிருக்கிறது. குழலின் உட்பக்கம் மென்மையாகவும், பளபளப்பாகவும் சுத்த மாகவும் இருக்கிறது. ஒருபக்கத்தில் இந்த வட்டவடிவமான துவாரத்தின் குறுக்களவும் இருக்கிறது.

குழலின் இருநுனிகளும் வட்டவடிவமாக இருக்கின்றன. இத் தூணில் ஒரு பக்கம் ஊதினால் **சங்கொலியும், மற்றொரு பக்கம் ஊதினால் எக்காள** ஒலியும் பொங்கி எழுகிறது.''[1] **என்று சாத்தான்குளம் இராகவன்** எழுதிச் செல்வது காண்க.

15. கோபுரந்தாங்கிகளும் சுமைதாங்காத் தூண்களும்:

இந்துமதக் கோயில் விமானங்களிலும், கோபுரங்களிலும் **கோபுரந்தாங்கிகள்'** எனும பெயரில் வலுவான **வீரர் பொம்மை களைக்** காணலாம். சில கோயில்களில் **வீரப் பெண்மணிகள் பொம்மைகளையும்,** மற்றும் சில கோயில்களில் **வீரர்கள் - வீரப் பெண்மணிகள் பொம்மைகளையும்** கோபுரந் தாங்கிகளாகத் - தோள் கொடுத்துத் தாங்குபவர்களாகக் - காட்டப்பட்டிருத் தலைக் காணலாம். அவை உண்மையிலேயே விமானத்தையோ, கோபுரத்தையோ சிறிதளவு கூடத்தாங்காவிட்டாலும், அவை பெருமுயற்சியுடன் தாங்குவது போலக் கவின்கலையமைப்பில் சிற்பியர் காட்டியிருப்பர். இந்தப் பொம்மைகள் காரணமாகவே தமிழ்நாட்டில் **'கோபுரத்தைப் பொம்மை தாங்குவது போல'** என ஒரு பழமொழி வழக்கில் இருந்து வருகிறது.

'கோபுரந்தாங்கிகள்' எனுஞ் சிற்ப அமைப்பு, காண் போருக்கு ஒருவகை எழுச்சியையும், அழகுணர்வையும் உண்டாக் கும்; அதே வேளையில், கலசத்துடன் கூடிய கோபுர மாடத்து

1. மதுரை கும்பாபிடேக மலர் (1963), பக். 127

மேற்பகுதியை அல்லது விமான மேற்பகுதியைத் தோளில் சுமப்பது போன்று, இறைநலத்துடன் கூடிய அருங்கலைப் படைப்புக்களை மக்கள் தம் முயற்சியில் பாதுகாக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதை இங்குச் சிற்பியின் குறிப்பாகக் கொள்ளலாம். அன்றியும், சமுதாயத்தில் சிலர்தாமே முன்னின்று சமூகக் கடமைகள் சிலவற்றைப் புரிவதே போன்று தோற்றமளிப்பர்; ஆனால், அவர்கள் கோபுரந்தாங்கிகளைப் போலவே பாவனை புரிவதும் உண்டு. எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளில் மெய்ப்பொருள் காணும் மதிநலம் வேண்டுமென்பது இதனால் கற்க வேண்டிய படிப்பினையாகும்.

கோபுரந்தாங்கிகளைப் போலவே கோயிற்கட்டடக் கலையில் காணவேண்டுவது ஒன்று உண்டு. கோயிற் கட்டட அமைப்பிலே சுவரையொட்டியும் கருவறைப் புறச் சுவர்க்கோட்டங்களை யொட்டியும் அரைத்தூண்களும் முக்கால் தூண்களும் பதுமம் முதலிய போதிகைகளுடன் அமைந்திருத்தலைக் காணலாம். பார்வைக்கு அழகாகத் தோற்றமளிப்பதற்காகவே இத்தகைய தூண்கள் அமைக்கப்படுகின்றன. மேலும், எந்தக் கட்டடத்திலும் முன்பகுதியிலோ, மண்டபத்திலோ, பிறபகுதியிலோ ஒற்றைப்படையாகத் தூண்களை அமைப்பதில்லை. அவ்வாறே அரைத் தூண்களையும் ஒற்றைப்படையாக அமைப்பதில்லை. பிற நாட்டுக் கட்டடக்கலைப் பொறியியல் தமிழ்நாட்டில் கையாளப்படுகின்ற நிலையில், தூண்களேயில்லாமல் கட்டடங்களைக் கட்டுதலையும் காண்கிறோம். வீட்டில் திண்ணையில்லாமல் கட்டும் பண்பாடு வளர்ந்ததைப்போல இதுவும் ஒருவகையில் மரபு பிறழ்ந்த வளர்ச்சியாகும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே' என்று கொள்ளுதலே இன்றைய கட்டடக்கலைக்கும் பொருந்துமெனச் சிலர் கூறுவர்.

16. கோயிற் கட்டடச் சிற்பம்: கிருஷ்ணாபுரம் சிற்பங்கள்.

தமிழ்நாட்டில் திருவரங்கம் அரங்கநாதர் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், சுசீந்திரம் தாணுமாலயப் பெருமான் கோயில், ஸ்ரீ முஷ்ணம் பூவராக சுவாமி கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், தாடிக்கொம்பு சௌந்தரராஜப் பெருமாள் கோயில முதலிய இடங்களில் தமிழ்நாட்டுச் சிற்பியரின்

கலைக் கற்பனைகள் வியத்தகு படைப்புக்களை உருவாக்கி யுள்ளன. இவற்றில் பற்பல சிற்பக் கூறுகள் தமிழர் தம் கட்டடச் சிற்பக்கலைப் பண்பாட்டை அறிந்து போற்றி நிற்கத் துணை புரிவன. ஈண்டு, எடுத்துக்காட்டான வகையில், சிற்பக்களஞ்சி யங்களாக விளங்கும் **கிருஷ்ணாபுரம் சிற்பங்களைப்** பற்றிச் சற்று விளக்கமாகக் காண்போம். இயைபான இடங்களில் பிற ஆலயச் சிற்பங்கள் குறித்தும் விளக்கப்படும்.

கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி திருக்கோயிலில் **வீரப்ப நாயக்கர் மண்டபமும்**, **அரங்கமண்டபமும்** வியத்தகு கற்சிற்பங் களைத் தம்மகத்தே கொண்டுள்ள கலைக் கருவூலங்களாகும். வீரப்ப நாயக்கர் மண்டபத்தின் முன்புறத்திலேயே சிற்பத் தூண்கள் ஆறு உள்ளன.

முதல் தூணில் ஓலையணிந்த காதுடன் தெய்வநலப் **பெண்ணொருத்தி நாட்டியமாடுங் கோலத்தில்** நிற்பதைக் காண லாம்.

இரண்டாவது தூணில் தெற்கு **நோக்கியவாறு** முதன்மை யாக இருப்பது **குறத்தியொருத்தியின் சிற்பம்**; அரசகுமரனொரு வனை அவள் தோளில் சுமந்து கொண்டு ஓட நினைக்கும் பாவனையுள்ளது. அந்தத்தூணின் **கீழ்ப்புறம் அன்னத்தின் மீதமர்ந்த அரசி** கிலுகிலுப்பையைக் காட்டி அரசகுமரன் கவனத்தை இழுக்க முயல்கிறாள்; முடியவில்லை. குறத்தி குமாரனுடன் ஓடிப் போகவே, அரசி குறி கேட்கிறாள். ''உன் மகன் வரமாட்டான்'' என்று கட்டுவிச்சி குறி சொல்வது போல வும் சிலைகள் அமைந்துள்ளன. தூணின் மேல்புறம் அரசன் குதிரையின் மேலேறிக்கொண்டு தன் மகனைத் தேடிவருகையில், இடையே வழிமறித்த வீரனொருவன் மீது குதிரை தன் முன்னங் கால்களால் நசுக்குவதுபோலவும், வீரன் தன் இரு கைகளையும் தரை மேலூன்றிய வண்ணம் மூச்சடக்கித் தாங்கிநிற்பது போலவும் வியத்தகுமுறையில் சிற்பம் அமைந்துள்ளது.

மூன்றாவது தூணில் முதன்மையான சிற்பம், **பாசுபத அத்தி ரத்தினை அருச்சுனன்** பெறுதற்காகத் தவமிருக்குங்கோலத்

தினைச் சித்திரிக்கிறது; மேலும், அதன் தொடர்பான பாரத நிகழ்ச்சிகள் சிலவற்றையும் புலப்படுத்துகிறது.

நான்காவது தூணில் முதன்மையானது கர்ணனைச் சித்திரிப்பதாகும். மணிமண்டபத்தில் நுழைகையில் வலப்புறம் பாசுபதம் ஏந்திய அருச்சுனனும் இடப்புறம் நாகக்கணை தாங்கிய கர்ணனும் போர்க்கோலக் காட்சியில் தோற்றமளிப்பது மகாபாரதத்தின் திருப்புமையம் போல் அமைந்துள்ளது. "இத்தூணில் குரங்காட்டி, தோளில் குரங்குடன் விளையாடுகிறான். குரங்காட்டி போன்ற தாய் தந்தை தெரியாத கர்ணன் விளையாட்டுப் புத்தியுடையவன்; துரியோதனனுடைய மனைவியுடன் தாயம் ஆடியவன் என்பதைச் சொல்லாமல் சொல்கிறது"[1] என்று நயமாக விளக்கந்தரும் வகையில் சிற்பம் அமைந்துள்ளது.

ஐந்தாவது தூணில் ஒரு குறவனது கோலம் சித்திரிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது தூணில் அரசகுமரனைக் குறத்தி தூக்கிக்கொண்டு ஓடுவதுபோல அமைத்த சிற்பி, இத்தூணில் குறவன் ஓர் அரசகுமரியைத் தூக்கிக்கொண்டு ஓடுவதுபோலக் காட்டியுள்ளான். குறவன் தன் வலக்கையில் வாள் இருக்கும் நிலையில், தலையிலே ஒரு பெண்ணைச் சுமந்துகொண்டு, கழுத்தின் நரம்புகள் தெரியுமாறு வீரத்துடன் காட்சியளிக்கிறான். அவனுடைய இடப்புறம் விலாவிலே குத்து விழுந்ததால் வலி காரணமாக விலா எலும்புகள் தெரியுமாறு நெளிகிறான்; காயத்திலிருந்து இரத்தம் பீறிட்டுத் தொப்புள் வரை ஒழுகுகின்றது. உடம்பின் பிற பகுதிகளெல்லாம் கருங்கல்லாகவும், காயப்பட்டு இரத்தம் வடியுமிடத்தில் மட்டும் செந்நிறம் தெரியும் இரேகையுள்ள கல்லாகவும் தேர்ந்தெடுத்த சிற்பியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அரங்க மண்டபத்திலும் சிற்பத்திறம் கோலோச்சி நிற்கிறது. எதிர் எதிரான தூண்களில் வீரபத்திரர், ஏவலர், மன்மதன் இரதி, தருகன், புருஷாமிருகம் (இடுப்புக்குமேல் மனிதவுருவமும் இடுப்புக்குக்கீழ் வாலுடன்கூடிய குரங்கு உருவமும் கொண்டது) முதலிய பல திருவுருவங்களைச் சிற்பச்சிறப்புடன் காணலாம். அரங்க

1. அம்மன் தரிசனம் (திங்களிதழ்), டிசம்பர், 1991

மண்டபம் என்பதற்கேற்ப, மேற்கட்டு முழுவதும் பாம்பணையில் துயிலும் **பரந்தாமனும்**, பக்கத்தே நாச்சியாருடன் நின்றிலங்கும் **திருமாலும்** அணிசெய்தல் சமயச் சிற்பத்திற்கு எழிலூட்டும் வண்ணம் உள்ளது.

பொதுவாகக் கிருஷ்ணாபுரச் சிற்பங்களிலே கலைநுணுக்கத்தைக் குறிப்பிடுகையில், "குறத்தியின் **பாசிமணி மாலைகளும், வடிக்காதும்** மிக இயல்பாக அமைந்துள்ளன. அதை விடவும் நயம் அவள் காதில் அணிந்துள்ள **கொன்னம்பூந்தட்டு.** மேல் காதில் துளையிட்டுத் திருகாணியோடு கூடிய அணி அமைக்கப் பட்டுள்ளது. அரசகுமாரி மேலாடையைத் தலைக்குமேல் விரித்துச் செல்கிறாள். அது காற்றில் பறக்கிறது; **காற்றில் படபடக்கும் மெல்லிய ஆடையைக் கல்லில் வடித்திருக்கும் அற்புதம்** என் சொல்லில் அடங்காது. உழைப்பால் கரடு தட்டிப் போன வீரனின் முழங்கால்மூட்டு, அவன் அணிந்திருக்கும் **சித்தாசனி** என்ற கருஞ்சட்டை எல்லாமே கலைவண்ணம்தான்"[1] என்றும், "ரதியின் மூக்கில் உள்ள மூக்குத்தித் துவாரம், சிங்கள அரச குமாரியின் தலையலங்காரம், இந்தப்பெண்களின் விரல்களின் மென்மை, புறங்கையில் பச்சைநரம்பு ஓடுதல், கைகால் நகங்கள், புடவைகளில் மெல்லிய இழைகள், தோழி கைக்கெண்டியின் மூக்குத்துவாரம், யாளியின் வாயினுள் உருளும் பந்து, என்றெல்லாம் மிகமிக நுணுக்கமான கலைநயங்களைப் பற்றியெல்லாம் எத்தனையோ அறிஞர்கள் - சுவைஞர்கள் - பக்கம் பக்கமாக எழுதியிருக்கிறார்கள்"[2] என்றும் **டாக்டர் பா. சௌந்தரா** கூறுவது மனங்கொள்ளத்தக்கது.

அரங்க மண்டபத்தில் தென்புறம் மேற்குக் கடைசித்தூணின் உச்சியில் மேல்புறம் வடக்கிலிருந்து பார்க்கையில் **கொம்புடன் கூடிய ஆனையாகவும்**, தெற்கிலிருந்து பார்க்கையில் **கோயிற் காளையாகவும்** ஒரே சிற்பத்தில் தோன்றுமாறு சிற்பி தன் திறமையைக் காட்டியுள்ளான். இந்தச்சிற்பத்தில் ஆனையின் கண்ணே காளையின் கொம்பு, ஆனையின் மத்தகமே காளையின் வாய், ஆனையின் உதடுதான் காளையின் காது, துதிக்கை

1. Heritage of the Tamils, Art & Architecture, *பக். 399, 400*
2. *மேலது, பக். 401*

நுனியே திமில் எனக் காணும் வண்ணம் வேடிக்கையும், கற்பனையும் போட்டியிடுதலைக் காணலாம். விலங்குகளிடையேயும் ஒரு வகை ஒருமைப்பாட்டையுணர்த்தியுள்ளமை போற்றற்குரியது.

17. மயன்—கட்டடச் சிற்பக் கலை வல்லுனன்:

கலைப்படைப்பைக் காண்கையில் கலையைத் திறம்பட உருவாக்கிய கலைஞர்களைப் பெரும்பாலும் பலர் எண்ணுவதில்லை. பாரதப்பெரு நாட்டிலே **கருநாடகம்** (பேலூர், ஹளபீடு) ஹோய்சல மன்னர்களையும். அவர்கள் நியமித்த சிற்பியர்களையும் ஆலயங்களில் நினைவுகூருமாறு அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தஞ்சாவூர் போன்ற சில ஆலயங்களில் **பெருந்தச்சர்களின் பெயர்கள்** பொறிக்கப் பெற்றிருத்தலைக் காணலாம்.

ஊரையும், அரண்மனையையும், ஆலயத்தையும் திட்டமிட்டு நிருமாணிக்க முறையான விதிகளை வகுத்த பெருமை **மயன்** போன்ற சில சிற்பியர்களைச் சாரும். அதிலும், மயன் இதிகாச புராணங்களில் குறிக்கப்படுவதால் அவனுடைய மிகு புகழ் பாரதமெங்கும் பரவிக் காணப்படுகிறது. மயனைத் தேவதச்சன் என்றும், அசுரர்குலத்தச்சன் என்றும் சொல்லும் வகையில் நூல்களில் கூற்றுக்கள் உள்ளன.

அனுமனால் எரியுண்ட இலங்கையை மீண்டும் வனப்புடன் அமைத்துத் தந்தவன் **மயன்** என்பது கம்பராமாயணத்தாலும் அறியலாம்.

மகாபாரதம் வாயிலாகக் காண்டவ வனம் பற்றியெரிந்த நிலையில், உயிர்தப்பியவர்களாகத் **தக்கன்** மகன் **அசுவசேனனும்**, அசுரர் குலத்தச்சன் **மயனும்** கூறப்படுதலைக் காணலாம். **கிருஷ்ண—அருச்சுனர்களின்** அருளால் உயிர்பிழைத்த **மயன்**, தன் நன்றிக்கடனாகப் பாண்டவர்களுக்குச் **சபாமண்டபம்** கட்டித்தர எண்ணினான்; இந்திரப்பிரத்தம் சென்று தன் கருத்தைத் தெரிவித்ததும் அவர்களும் இசைவு தந்தனர். பதினான்கு திங்களில் அழகிய மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. **நவமணிகள் அடுக்கிய** செங்கல்லும், **பசும்பொன்னாலாகிய** சுவரும், **மரகதத்தாலான** தூண்களும், **பவளத்தால்**

ஆன உத்திரங்களும் சபாமண்டபத்திற்குப் பொலிவூட்டின. சிவபெருமானுக்கும் கிட்டுதற்கரிய அழகுமண்டபமாம் அது! இந்திரனது சபாமண்டபமாகிய **சுதர்மையும்** இதற்கு ஈடாகாது என்பதைப் பாரதத்தில்,

''மீதடுக்கிப் பசும்பொன்னால் சுவர்செய்து
மரகதத் தூண்வீதி போக்கி
ஓதிடத்தில் சுருங்காமல் செழுந்துகிர்உத்
திரம்பரப்பி உலகுளர் ஏழும்
மாதுகிடத்தான் வைகுதற்கு வாய்க்குமதோ!
இதுஎன்ன வரம்பில் கேள்விச்
சோதிடத்தோர் நாள்உரைப்பச் சுதர்மையிலும்
முதன்மை பெறஇயற்றினான்''

என **வில்லிபுத்தூராழ்வார்** பாடிச்செல்வதால் அறியலாம். உயர்வு நவிற்சியணியில் இது கூறப்பெறினும் மயன் என்பவன் மிகச்சிறந்த வினைத்திறம் வாய்ந்தவன் என்பது, அவன் இயற்றிய **மயமதம்** எனும் சிற்பநூலால் அறியலாம்.

உலகியல் இயக்கத்திற்கு அடிப்படைக்காரணர்களாகக் கருதப்படுபவர்கள் **மனு** (கொல்லர்), **மய** (தச்சர்), **துவஷ்ட** (கன்னார்), **சிற்பி** (கல்தச்சர்), **விசுவக்ஞ** (பொற்கொல்லர்) எனும் ஐவகைத் தொழிலாளர்கள். இவர்களுள் மயன் வழி வந்தவர்களாகத் தச்சர்கள் தம்மைக் கூறிக் கொள்கின்றனர்; இது சிந்தித்தற்குரியது.

வாஸ்து சாத்திரம் தொடர்பாகப் பல நூல்கள் தோன்றின. அவற்றுள், மயன் இயற்றிய **'மயமதம்'** தென்னாட்டில், சிறப்பாகத் தமிழ்நாட்டில், போற்றப்பட்டது. **விசுவகர்மா** இயற்றிய **'விசுவகர்மீயம்'** இந்தியாவின் வடபகுதியில் சிறப்புற்றது என்பது **இரா. நாகசாமி, மா. சந்திரமூர்த்தி** ஆகியோரது கருத்தாகும்.[1]

18. திருக்குட முழுக்கு (கும்பாபிடேகம்)—நோக்கம்:

உலகத்திலே வளமனைகளைக் கட்டிமுடித்தபின், கண்ணேறு படாமலிருக்கவும், தீய ஆவிகள் (சக்திகள்) தொடராம

1. தமிழகக்கோயிற் கலைகள் (தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு), 1973, பக். 31

லிருக்கவும் **'சாந்தி'** பல முறைகளில் செய்யப்படும், மதுரை. திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில், மனைகளைக் கட்டும் பொறுப்பேற்ற மரத்தச்சர்கள், புதுமனை புகுவிழாவிற்கு முதல் நாள் நள்ளிரவில் படையலிட்டுக் கோழியின் ஒரு கால் விரலை வெட்டிய நிலையில் சிந்தும் இரத்தத்துளிகளை வீட்டின் சில பகுதிகளில் தெளிப்பர்; இதனைத் **தச்சுக்கழித்தல்** என்பர். (இதன் விளக்கத்தைப் பிறகு 'நம்பிக்கைகள்' எனும் தலைப்பில் காண்க.)

வீட்டுக்குத் **தச்சுக்கழித்தல்** எனுஞ் சாந்தியைச் செய்வது போலக் கோயில்களுக்கு ஆகமநெறியில் செய்திடும் **பெருஞ் சாந்தியே** கும்பாபிடேகம் ஆகும். அனைத்துத் தீங்குகளையும் களைந்திடும் தெய்வங்களின் உறைவிடங்களாகிய ஆலயங் களுக்குமா சாந்தி (குறைபாடு நிவர்த்தி) செய்ய வேண்டும்? எல்லா வல்லமையுமுடைய தெய்வங்களுக்கு இஃது உடன்பாடா என்பன போன்ற கேள்விகளைச் சிலர் கேட்கலாம்.

அன்பின் பிழம்பான **கண்ணப்பர்,** கடவுளுக்கு ஏற்பட்ட துயரினைத் தம் துயராகவே கொண்டு செயற்பட்ட திறத்தை ஈண்டு இயைபு படுத்திச் சிந்திக்கலாம். மக்கள் தாம் வழிபடும் தெய்வங்களின் ஆலயங்களில் தம் உணர்வுகளை ஒன்ற வைத்து அவற்றுக்கு ஊறு நேரிடா வண்ணம் சிந்தித்தன் விளைவே பெருஞ்சாந்தியாக அமைந்ததெனக் கொள்ளலாம், இனி ஆலயக்குடமுழுக்குத் தொடர்பான மக்களின் மன நிலைகளைக் காண்போம்.

கோயிலில் நடைபெறும் திருக்குடமுழுக்கினைக் கண்டு வழிபடுவது ஆன்மநலம் விளைவிக்குமாதலால், தமிழ்நாட்டில் எந்தப் புண்ணியத் தலங்களில் குடமுழுக்கு நடைபெறினும் காண்பதை வைராக்கியமாகக் கொண்ட சில அடியவர்களும் உளர். மூன்று குடமுழுக்கினைக் கண்டு வழிபட்டால் ஒரு வனுக்குப் பெருமளவில் பாவங்கள் நசித்து விடும் என்பது ஆகமம் கூறும் நம்பிக்கையாக இருந்து வருகிறது.

சிவாலயத்தைப் பொறுத்த வரையில், சோதிவடிவினனாகிய இறைவனது ஆற்றலைச் சிவாக்கினியில் - வேள்விக்குண்டத்தில் விளையுமாறு செய்து அதனைப் புனித நீர் நிரப்பிய கும்பகத்தில் சேர்த்து அந்தக் கும்பகத்திலிருந்து தெய்வ பிம்பமாகிய இறைத் திருமேனிக்குக் கொண்டு சேர்ப்பது ஒருவகைச் சமயச்சடங்கே- கிரியையே—எனலாம். குடமுழுக்கிற்கு முன்பு, மிக எளிய— சாந்நித்திய மில்லாத—கற்சிலையும் செப்புத்திருமேனியும் குடமுழுக்கிற்குப் பின் மூர்த்திகரம் பெறும் என்பர். எல்லாம் குடமுழுக்கினை நடத்துகின்ற, நடத்துவிக்கின்ற மக்களின் நெஞ்சத் தூய்மையைப் பொறுத்தது எனலாம். 'யான் எனது' என்ற அகச்செருக்கும் புறச்செருக்குமற்ற நிலையில் குடமுழுக்குத் தொடர்பான செயல்களைப் புரிதல் வேண்டும்

கோலாகலமாகத் தான் கட்டிய காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்ய நினைத்த பல்லவமன்னன் இராசசிம்மன் நிலையையும், அகத்திலேயே அனைத்துக் குடமுழுக்கு ஏற்பாடுகளையும் புரிந்த பூசலார் நாயனார் நிலையையும் பெரிய புராணத்துள் காணலாம். பூசலார் நாயனார் எடுத்த அகக்கோயில் குடமுழுக்கிற்கே திருவருள் இசைவு கிடைத்ததையும் ஈண்டு இயைபுடன் நினைவிற் கொள்ளலாம். இதனால், புறக்கோயிற் குடமுழுக்கு வேண்டுவதில்லையெனப் பொருளாகாது. கோயில் தொடர்பான செயல்களில் தூய்மை யிருத்தல் வேண்டுமென்பதே உய்த்துணர வேண்டிய செய்தி யாகும்.

ஆய்வு நோக்கிலே ஒரு சிறப்புக் குறிப்பு உண்டு. உலகமும் அதிலுள்ள எல்லா ஆன்மாக்களும், தாவர சங்கமப் பொருள்களும் நீரிலிருந்து உண்டாகின்றன. இவ்வாறு தோன்றிய எல்லாமும் ஊழிக் காலத்தில் நீரிலேயே அடங்கும் என்பது சமய நம்பிக்கை. ஆதிகர்த்தாவாகிய கடவுளை நீரின்மூலம் உருவ வழிபாட்டிற்குக் கொணரவே வேள்விச் சாலையில் புனித நீர்க் கலசங்களை வைப்பதாகும் என்பதை உணர்தல் நல்லது.

''நாடோறும் செய்துவரும் வழிபாட்டில் புத்திபூர்வம் அபுத்திபூர்வமாய் ஏற்படும் பிழைகளை மகோற்சவ தரிசனத்

தால் நீக்கலாம். இனி உற்சவ தரிசனத்தில் **இங்ஙனமான பிழைகள் ஏற்பட்டால் அவை கும்பாபிஷேகத்தால் தீரும்.** ஆகவே வேறு எவ்வகையாலும் தீர்க்கமுடியாத **சிவாபராதம்** தீர்க்கப்படுகின்றமையால்தான் கும்பாபிஷேகத்தைப் **பெருஞ்சாந்தி** என்று சைவ நூல் உணர்ந்த பெரியோர் கூறுகிறார்கள்"[1] என்ற குறிப்பால் கும்பாபிடேகச்சிறப்பு இனிது புலனாகும்.

18.1. திருக்குடமுழுக்கு - அமைப்பு முறை:

திருக்கோயிலிலுள்ள கோபுரத்திலும், விமானத்திலும் அமைந்துள்ள குடங்களாகிய கலசங்களுக்கு நல்வேளையில் முறையான தூய கலச நீரால் முழுக்காட்டுவதைத் **திருக்குடமுழுக்கு** அல்லது **கும்பாபிடேகம்** என்பர்.

கோயிலைப் புதிதாகக் கட்டித் திருக்குடமுழுக்கினைச் செய்கையில் **அஷ்டபந்தன சொர்ணபந்தன மகா கும்பாபிடேகம்** என்றும், கோயிலைப் புனருத்தாரணம் எனும் நோக்கில் நன்கு செப்பனிட்டுச் சீர்செய்து திருக்குட முழுக்கினைச் செய்கையில் அதனை **ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிடேகம்** என்றும் மரபாகக் கூறுவர். ஆலயங்களைப் புதுப்பித்தற்கு அங்குள்ள **பிம்பம், தம்பம்** ஆகியவற்றில் விளங்கும் மூர்த்திகளைக் கும்பத்தில் முறையான வேள்வி, மந்திரம் வாயிலாக ஆவாகனம் செய்து, கோயிலைப் புதுப்பித்த பின் அங்குள்ள திருவுருவங்களில் அபிடேகத்தின் மூலம் மீண்டும் அம்மூர்த்திகளைச் சேர்ப்பித்தலைத் திருக்குடமுழுக்கு **அல்லது** பெருஞ்சாந்தி என்று கூறிவருகின்றனர். இதனால், ஆலய வழிபாடுகளில் மனம் வாக்குக் காயங்களினால் அறியாமல் செய்திட்ட குற்றங்கள் நீங்கும் என்பது நம்பிக்கை.

பொதுவாகச் சிவாலயங்களில் முறைப்படி **யாகசாலை** அமைத்து, மந்திரசக்தியால் யாகசாலையிலமைக்கப் பெற்ற கலசநீரில் ஆற்றலுண்டாக்கி, அந்தக் கலச தீர்த்தத்தைக் கோபுரம் விமானம் ஆகியவற்றிலுள்ள கலசங்களில் வார்த்துத் தெய்வநல சக்தியை ஏற்றுதலே கும்பாபிடேகம் ஆகும்.

1. புள்ளிருக்கு வேளூர்கும்பாபிஷேக மலர், 1970, பக். 37

வைணவ ஆலயங்களில் நடைபெறும் **சம்புரோட்சண** (குடமுழுக்கு) நிகழ்ச்சியும் பெரும்பாலும் சிவாலயக்குடமுழுக்குக் கிரியைகளை ஒத்தே அமையும்; சிறிது விளக்கமாகக் காண்போம்.

சம்புரோட்சணம் எனின், **'நன்றாகத் தெளித்தல்'** (சம் - நன்றாக; புரோட்சணம் - தெளித்தல்) எனப் பொருள்படும். சம்புரோட்சணத்திற்குச் சில நாள்களுக்கு முன்பாக வேள்விச் சாலையை முறையாக அமைத்து, உரிய மேடையில் கலசங்களை நிறுத்தி, அவற்றுக்கு மந்திரங்களால் உருவேற்றித் தெய்வநல ஆற்றலை அக்கலசங்களில் வார்க்கப்பட்ட தீர்த்தத்தில் ஆவாகனஞ் செய்து, பின்னர் அந்தத் தீர்த்தத்தினை நல்வேளையில் கோபுர - விமானக் கலசங்களின் மீது நன்றாகத் தெளித்தலைச்- சம்புரோட்சணத்தைச் - செய்வர்.

பொதுவாக, ஒவ்வொரு கோயில் விமானக்கலசத்தையும் செப்பனிட்டு அமைப்பதற்குத் தொடங்கும் முன்பாகக் கோபுரக் கலசத்திலுள்ள தெய்வநல ஆற்றலைக் கலசத்தில் ஆவாகனம் செய்யும் பூர்வாங்கப் பணி நடைபெறும்; அதற்குப் **'பாலாலயம் செய்தல்'** என்பர்.

கோயிலுக்கு நடைபெறும் ஆகம முறைப்படியான குடமுழுக்கைப் பொறுத்தே கோயிற்பகுதிகள் முழுவதிலும் தெய்வ நலச் சூழல் தன்னியல்பாகவே நிலவும்; அந்தக் கோயிலைச் சுற்றியுள்ள ஊர்களில் வளமும் நலமும் உண்டாகும். இதற்கேற்பக் கோயிலில் அபிடேக ஆராதனைகளும், மந்திரச் சிறப்புடன் கூடிய அருச்சனை வழிபாடுகளும், பல சித்தபுருடர்களின் நல்லெண்ணப் பதிவுகளும் அமையுமாறு இனிய சூழலை உருவாக்கிக் கொண்டிருக்க வேண்டியது ஊர் மக்களின் கடமையாகும்.

கும்பாபிடேகத்தால் ஆலயத்துக்கு அறிவியலாற்றலும் அருளியலாற்றும் ஏற்படும் என்பது சான்றோர்களின் நம்பிக்கை. அத்தகைய ஆற்றலை ஆலயத்தில் ஒருமுறை நிறுவியதோடு நிறுத்திக்கொள்ளாமல், மரபாகப் புதுப்பித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் **பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை** ஆலயக் கும்பாபிடேகத்தை நடத்துகின்றனர்.

ஆலய அமைப்பையும் கும்பாபிடேகத்தையும் மெய்ஞ்ஞானத்துடன் விஞ்ஞானத்தையும் இணைத்துச் சிந்திக்கும் **மயிலை மாமுனிவர் குருஜி சுந்தரசுவாமிகள்,** ''பிரபஞ்சத்தில் வானவெளியில் நிறைந்திருக்கும் 'cosmetic energy'ஐ-சக்தியை—நாம் வழிபடும் விக்கிரகங்களோடு தொடர்புபடுத்தவே கோபுரக் கலசங்கள் (பஞ்சலோகங்களால், குறிப்பாகச் செம்பால்) அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த உலோகக் கலசங்கள் மூலம் சக்தி கருப்பக் கிரகத்துக்குள் ஊடுருவுகின்றன. அங்கிருக்கும் மூல விக்கிரகமோ இயந்திரப் பிரதிட்டையாலும், நவரத்தினப் பிரதிட்டையாலும் அபூர்வசக்தி பெற்றிருக்கின்றன. இயந்திரங்களால் சக்தி உண்டா என்று சந்தேகம் வளரலாம். மின்சாரம் ஒரு செப்புக்கம்பி வழியாகப் பாய்வதைப் போல, நாம் பேசும் ஒலி டெலிபோன் கம்பி வழியே செல்வது போல, **மின்சாரத்தை விடச் சக்திவாய்ந்த மந்திர ஒலிகளும் இயந்திரத் தகடுகளில் பதிந்து அதன் வழியே பாயும்;** நவரத்தினங்களுக்கு இந்தச் சக்தி உண்டு. பாதரசத்துக்குக் கெட்டிப்படுத்தும் சக்தி உண்டு. இவற்றைக் கொண்டு **மூலவர்** பிரதிட்டை நடைபெறுகிறது. இது முழுக்க முழுக்க **விஞ்ஞானபூர்வமான** செயல். சக்தியை **'பவர் ஹவுஸில்'** சேமிப்பது போல மூலத்தானத்தில் வேதமந்திர **சக்தியைச்** சேமிக்கிறோம்''[1] என்று குறிப்பிடுகிறார்; மேலும், சேமிக்கப்பட்ட மின்கலத்திலிருந்து மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொண்டேயிருப்பவர் மின்சக்தியை மின்கலத்தில் உரிய காலத்தில் புதுப்பிப்பது போலக் கும்பாபிடேகத்தால் அருளாற்றலை ஆலயத்தில் புதுப்பித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற கருத்தில், ''மூலத்தானத்தை வணங்கும் போது நம் விரல்களிலுள்ள காந்த சக்தி மூலம் அந்தச் சக்தியை ஈர்த்துக் கொள்கிறோம், பவர் ஹவுசிலிருந்து சக்தியை நாம் கம்பிகள் மூலம் நம் வீட்டுக்கு எடுத்துக் கொள்வது போல்; அதனால் தான் தினந்தோறும் நம்மை ஆலயத்திற்குச் சென்று வழிபடச் சொல்கிறார்கள்.

இப்படி வழிபட வழிபட, பாட்டரி சார்ஜ் (Battery charge) இறங்குவது போல் மூல இயந்திர சக்தியும் இறங்கும். அதை

1. ஞானபூமி (திங்களிதழ்). ஆகஸ்டு, 1982

மீண்டும் சக்தி பெறச் செய்யவே புது இயந்திரப் பிரதிட்டை புது ஆலயப் புனருத்தாரணம்--புதுக்கலசத்தில் மந்திர தீர்த்த அபிடேகம் எல்லாம்......''[1] என்றும் விளக்கிச் செல்வது மனங்கொள்ளத்தக்கதாகும்.

18.2. திருக்குடமுழுக்கு (கும்பாபிடேகம்) - சிறப்புச் செய்திகள் :

ஆகம அடிப்படையில் திருக்கோயிலை அமைத்தாலும். அதற்கு முறையான திருக்குடமுழுக்கு நடத்தினால்தான், கோயிலில் பிரதிட்டை செய்யப்பெற்ற மூர்த்திக்குத் தெய்வநல ஆற்றல் பொருந்தி நிற்கும்.

கோயில் கட்டி முதன்முதலாகக் குடமுழுக்கு நடத்தியபின் பன்னீராண்டுகளுக்கு ஒருமுறை கோயிலைச் செப்பனிட்டு அட்ட பந்தனக் குடமுழுக்கினைச் செய்து கொண்டிருக்க வேண்டும் என முன்னரே கண்டோம்.

நாள்தோறும் ஆலயங்களிலுள்ள தெய்வத்திடமிருந்து வெளிப்பட்டுச் செல்லும் திருவருட் சக்திக்கு ஈடு கொடுப்பதற்காகவே நித்திய பூசையும் விழா வழிபாடும் நடைபெறுகின்றன என்பதும், ஆராதனை, பூசைகள் முதலிய ஆகமவழிக் கிரியைகள் சரிவர நடைபெறாவிடின் திருவருட்சக்தி குறைந்துவிடும் என்பதும் சமய மெய்யன்பர்கள் மனத்திற் கொண்டு, தக்க வண்ணம் செயற்பட்டால் நாட்டுக்கு நல்லது. பன்னீராண்டுக்கு ஒருமுறை குடமுழுக்கு நடத்தி வருவதால், கோயில்களிலுள்ள தெய்வங்களுக்குப் புதுப்பொலிவும் ஆற்றலும் ஏற்படும் என்பது சமய நம்பிக்கையாகும்.

திருக்கோயிலில் **கடவுண் மங்கலம்** (பிரதிட்டை) செய்யப் பெறும் கல்லால் வடிவமைக்கப்பட்ட தெய்வப்படிமம் ஆடாம லிருப்பதற்காக, அதன் பகுதி, அதன் பீடம் (நிலை கொள் இடம்) ஆகிய இரண்டையும் கவனமாகப் பொருத்திப் படியச் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்வதற்குப் பிடிப்பான ஒருவகைக் கூட்டுப் பொருள் தேவைப்படும். அந்தக் கூட்டுப் பொருளுக்கு **அட்டபந்தனம்** என்பர்.

1. ஞானபூமி (திங்களிதழ்), ஆகஸ்டு, 1982.

எட்டுப் பொருள்களாகக் **கொம்பரக்கு, சுக்கான்தூள், குங்கிலியம், கற்காலி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமை வெண்ணெய்** ஆகியவற்றைத் தூய்மையுடையனவாக எடுத்துக் கொண்டு முறைப்படி கலந்து உருவாக்கும் அட்டபந்தனப் பொருளை இருவகையில் தயாரிக்கலாம். ஒன்று **இடிமுறை;** மற்றது **காய்ச்சுமுறை.** காய்ச்சு முறைப்படி கூட்டுப் பொருள்களைக் காய்ச்சி விரைவில் தயார் செய்துவிடலாம். ஆனால் காய்ச்சு முறை மருந்து சார்த்தியதை, மறுகும்பாபிடேகம் செய்தற்காகச் சிலையினடியிலிருந்து அகற்ற வேண்டிய நிலையேற்படலாம். திண்ணிதாகப் பிடிப்புள்ள அந்த மருந்தினை அகற்றுகையில் சிலவேளைகளில் சிலையுருவிற்குச் சேதம ஏற்படலாம். எனவே, பலரும் பெரும்பாலும் இடிமுறை மருந்தினையே மேற்கொள்கின்றனர்.

இவ்வாறான கூட்டு மருந்துக்கான சரக்குகளைச் சோதித்து வாங்குதல் நல்லது. பின்னர்த் தூசும் மாசுமின்றித் தூய்மை செய்து, அளவுப்படி கலந்து கால அளவுடன் இடிக்க வேண்டும்.

'கும்பாபிடேகம் செய்தால் கோடி புண்ணியம்' என்ற கொள்கையில் அடியவர்கள் பலரும் ஈடுபடுகையில், அவர்களுக்கு உதவும் வகையில் நன்மக்கள் மருந்து சார்த்துவதில் ஒத்துழைப்பினை நல்குவர். சைவ ஆலயக் கும்பாபிடேகத்தின் நடைமுறைகளை—உள்ளுறை மெய்ப் பொருளியற் கூறுகளை—மற்றுமோர் அணுகுமுறையால் காண்போம்.

ஆலயப்பிரதிட்டையை 1. **ஆவர்த்தம்,** 2. **அநாவர்த்தம்,** 3 **புனராவர்த்தம்** 4. **அந்தரிதம்** என நான்கு வகையில் அமைப்பர்.

ஒரு திருக்கோயிலைப் புதிதாகக் கட்டியமைத்துப் பாலாலய மூர்த்தியைக் கும்பத்தில் ஆவாகனம் (எழுந்தருளல்) செய்து பூசித்து மூலத்தானத்தில் அந்த மூர்த்தியை எழுந்தருளச் செய்து அபிடேகம் புரிதலை **ஆவர்த்தம்** என்பர்.

கருப்பக் கிருகம், விமானம், சுற்றாலை, கோபுரம், பலிபீடம் முதலியவற்றில் பழுது ஏற்படினும், அட்டபந்தனத்தில் பழுதேற்படினும், விமானச் சிலைகளில் பழுது ஏற்படினும், பூசிய

வண்ணம் சிதைந்திருப்பினும் சுவாமியைப் பாலாலயஞ் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மூலத்தானத்தில் மீண்டும் சுவாமியைப் பிரதிட்டை செய்து கும்பாபிடேகம் புரிதலைப் **புனராவர்த்தம்** என்பர். இதனையே **ஜீரணோத்தாரண அட்ட பந்தன மகா கும்பாபிடேகம** எனவும் கூறுவர்

ஆலயத்தில் களவு நிகழ்ந்தாலோ, துன்மார்க்கச் சண்டாளன், நாய் முதலிய சீவன்கள் நுழைந்தாலோ, சுவாமியின் **பிரத்தியங்கம் உபாங்கம்** போன்றவற்றுள் பழுது நேர்ந்தாலோ உடனே செப்பனிட்டு மகா கும்பாபிடேகம் புரிதலை **அந்தரிதம்** என்பர். இஃது உடனடித் தேவையுணர்வில் செய்ய வேண்டியிருப்பதால் நாள் நட்சத்திரம் முதலியவை பார்க்க வேண்டியதில்லை என்பதும் சமய நம்பிக்கை.

கும்பாபிடேகத்திற்கு அங்கமாகச் செய்யப்படும் கிரியைகளை, அறுபத்து நான்கெனவும், ஐம்பத்தைந்தெனவும் ஆகமங்கள் கூறும். ''அவற்றுள், அனுக்ஞை, கும்பஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகசாலை, பிம்பசுத்தி, ஸ்பர்சாகுதி முதலியன இன்றியமையாதன.''[1] எனக் கூறிப் **போதிய தத்துவ விளக்கங்**களும் வரைந்துள்ளார். **வி. சா. குருசாமி தேசிகர்; காண்க**

யாகசாலை கும்பாபிடேகம் ஆகியவை தொடர்பான **சில** அரும்பெறற் செய்திகளை மட்டும் ஈண்டுச் சிறிது **காண்போம்.**

யாகசாலையில் அமைக்கப்பெறும் கும்பங்களை அந்தந்த மூர்த்திகளின் திருவுருவங்களாகவே காணவேண்டுவது மரபாகும். ''யாகசாலை 36 தத்துவ சொரூபமாகவும், சிவபெருமானது அட்டமூர்த்த வடிவமாகவும், ஆறு அத்துவாக்களின வடிவமாகவும் கூறப்படும் - யாகமண்டபம் - சாந்தியதீதக்கலை. பந்தல் கால்கள் - பதம், மண்டபநடு - வர்ணம், கும்பம் - மந்திரம், ஓமப்பொருள் - தத்துவம், யாகசாலை அமைந்துள்ள இடம்—புவனம். நான்கு ஆதார சக்தியுடன் கூடியதாக அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என்ற ஐந்து ஆசனங்களை உடையது''[2] என வருங் குறிப்பும், ''யாகசாலையில்

1, 2. திருவாரூர் (தியாகராசசுவாமி திருக்கோயில்) திருக்குடமுழுக்குப் பெருவிழாமலர், 1988.

ஒன்பது குண்டங்களில் அக்கினி வளர்க்கப்படும்: அவை நாற் கோணம், முக்கோணம், அர்த்த சந்திரம் முதலிய வடிவங்களில் காணப்படும். குண்டங்களைச் சுற்றிப் பசுந் தர்ப்பைகளைப் பரப்பி ஆல் அரசு முதலிய சமித்துக்களைக் குண்டத்தில் இட்டுக் கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்கினிகொண்டு, அதற்குரிய மந்திரங்களைச்சொல்லி அதிதெய்வங்களை மனத்தில் தியானித்துச் சுருக்கு சுருவம் என்னும் கருவிகளைக் கொண்டு நெய்சொரிந்து அவி வளர்க்கப்படும். மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு நிகழும். ஓம குண்டத்தில் எழும் புகையும், வேதம், சிவாகமம், திருமுறை ஒலிகளும், அன்பர்களின் நல்லெண்ணங்களும் எங்கும் வியாபித்திருக்கின்ற இறைவனது அரூபசக்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும்; அப்போது கும்பம் முழுமையான தெய்வீக சக்தியோடு திகழும். இவ்வாறு யாகசாலையில் நடைபெறும் கிரியைகள் முற்றுப் பெற்றவுடன் அச்சக்தி ஆலயத்திலுள்ள மூர்த்திகளுக்குத் தருப்பைக்கயிறு, பொன் வெள்ளிக் கம்பிகளால் சேர்ப்பிக்கப்படும். அதன்பின் கும்பத்திலுள்ள நீர், சிகரங்களுக்கும், பிம்பங்களுக்கும் அபிடேகம் செய்யப்பெறும்: விமானக் கலசம் மூலமூர்த்தியின் சக்தியை உலகெங்கும் பரவச் செய்து நன்மைகளை உலகிற்கு உண்டு பண்ணும்''[1] எனவரும் விளக்கக் குறிப்பும் மனங்கொண்டு சிந்திக்கத் தக்கவை.

கோபுர-விமானக் கலசங்களுக்கு முறையாகக் கும்பாபிடேகம் முடித்த பின், சுவாமி ஆவாகனங் கொண்டுள்ள மூர்த்திகளுக்குச் சிறப்பான அபிடேக ஆராதனைகள் செய்வர்; இதனை மகாபிடேகம் என்பர். திருக்குடமுழுக்கு நாளிலிருந்து தொடர்ந்து 45 நாள்களுக்கு மூர்த்திகளுக்குச் சிறப்பு அபிடேகஞ் செய்து நிறைவு செய்வதை மண்டலாபிடேகம் என்பர்.

திருக்குடமுழுக்கின் பெருமையை மக்கள் நன்கு உணர்ந்து செயற்படவேண்டும் என்ற அருள்நோக்கினால் திருஞானசம்பந்தர் தம் பூம்பாவைப்பதிகத்தில்,

''கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரத்தான்றன்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்''

1. திருவாரூர் (தியாகராஜசுவாமி திருக்கோயில்) திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர், 1988.

எனக் குறிப்பிட்டருளியுள்ளார். "ஒரு சில நல்வினை தீவினைகளினாலும் ஏனையதெய்வ வழிபாட்டாலும் போக மோட்சம் கிட்டினாலும் அவைகள் சில காலத்துக்குள் அழிந்துவிடும். மகா கும்பாபிடேகத்தால் ஏற்படும் போகம் **சிவயோகம்** ஆம்; மோட்சமும் நித்தியானந்த மோட்சமாகும். யார் யார் எதை விரும்பினார்களோ அவரவர் அதை அதை அடைவார்கள் என்பது நிச்சயம்"[1] என்று **இலங்கை ஐ. கைலாசநாதக் குருக்கள்** எழுதிச் செல்வதும் மனங்கொள்ளத்தக்கது.

[கிறித்துவர், இசுலாமியர் போன்ற பிற மதத்தினரும், முறையே வழிபாட்டு இடமாகிய மாதாகோயில் மசூதி போன்ற கட்டடங்களைக் கட்டிமுடித்தபின் (இந்து ஆலயப் பெருஞ் சாந்தி போன்றில்லாமல்), மதத்தலைவர்களை அழைத்துச் சிறப்புவழிபாடு செய்தும், அன்னதானம் புரிந்தும் ஒருவகையில் **'சாந்தி'** செய்கின்றனர். தத்துவ நோக்கில் உயிருய்திக்கு இது வழிகோலும் என்பது மத நம்பிக்கை.]



1. புள்ளிருக்கு வேளூர் கும்பாபிடேக மலர், 1970, பக். 57.

கோயிற்கட்டடக்கலை - வளர்ச்சி நிலைகள்

(தொடர்ச்சி - II)

தலச்சிறப்பும் கட்டடக்கலைக் கூறுகளும்

1. தலச் சிறப்பும் ஆலய அருளியல் முறைகளும்;

உலகியலில் மக்கள் சத்தான உணவு உட்கொள்வதால் உடல் நலமும் வலிவுங் கொண்டு இன்பமுறப் [பல்லாற்றானும் வாழ எண்ணுகின்றனர். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' எனும் உலக வாழ்வியல் முறையினின்றும் படிப்படியே, விடுபட்டு வாழ்வின் நோக்கத்தை நன்கு உணரமுனைகின்றனர். இந் நிலையில் மக்களுக்கு **அருளியல்** துணைநிற்கவேண்டும். இவ் வாற்றான் மக்களிடையே ஆன்மநல நல்லுணர்வு படரவும் தழைக்கவுமே ஆலயங்கள் தோன்றியுள்ளன. ஆலயத்தால் திருத்தலமும், திருத்தலத்தால் ஆலயமும் பெருமைபெறும். இதனால், சமயமும் சமுதாயமும் ஒன்றற்கொன்று, ஆதரவாகச் சிறப்பினைக் கொள்ளும்.

கோயிற் பண்பாடு என்பதை மரபுவழிச் செல்வமாகப் பெற்ற தமிழ்ப்பெருமக்கள், தலச்சிறப்பை மேம்படுத்திக்கொள்ள ஆலய அருளியல்முறைகளைத் தம்மியல்பாக வகுத்துக் கொண்டனர். மக்களின் ஞான அனுபவத்துக்கும், முன்னையோர் சமய மரபுக்கும், சமய விருப்பத்துக்கும் செயற்பாட்டுக்கும் ஏற்ப மூவகை முறைகள் பின்பற்றுப்படுகின்றன. அவை **ஆலய அமைப்பு முறை, ஆராதனை முறை, தரிசன முறை** எனச் சான்றோரால் கூறப்பெறும்.

1. ஆலயக்கட்டடங்கள், அதன் பல அங்கங்கள், மண்டபங்கள், பிராகாரங்கள் முதலியனவும், அங்குள்ள விக்கிரகங்கள், அவற்றிற்கேற்பட்ட இடங்கள், யந்திரங்கள், பிரதிட்டைகள் முதலியனவும் அமைக்கப்பட்டிருக்கும் விதம் **ஆலய அமைப்பு முறையாகும்.**

2 அர்ச்சகர், பட்டர், குருக்கள் முதலியோர் அங்குப் பூசை இயற்றும் முறை **ஆராதனை முறையாம்.**

3. அடியார் சென்று வழிபடும் முறையெல்லாம் தரிசன முறை யெனப்படும்.

இந்த மூன்று முறைகளும், தனித்தனியே, அறிகுறிப்பொருள், அருள்நெறிப்பொருள், அனுபவப்பொருள் என மூவகைப் பொருள் களைக் கொடுக்கும்; அறிகுறிப் பாருள் - அடியாருடைய அறிவைப் பெருக்குவது; அருள்நெறிப்பொருள் - அடியாருடைய இச்சையைப் பண்படுத்துவது; அனுபவப்பொருள் - அடியாருக்கு மனவமைதியையும், சாந்தியையும் ஆன்ம முன்னேற்றத்தையும் அளிப்பது''[1] என வருங்குறிப்பு ஆலயநோக்கில் மனத்தின் அடித்தளத்தில் வைத்துப் போற்றத்தக்கதாகும்.

இக்குறிப்பின் புலப்பாடாக முதற்கண் மிகச்சிறப்பான சில திருத்தலங்களைச் சமயப் பண்பாட்டு நோக்கில் காண்போம். அவற்றைக் காண்கையில் நம் முன்னோர்கள் எவ்வாறெல்லாம் முயன்று மக்களைச் சமயநெறியில் உய்த்து ஈடுபாடு கொள்ள வைத்துள்ளனர் என்பது புரியலாகும்; இதற்குத் தத்துவம் அல்லது மெய்ப்பொருளியல் கூறுகள் பெரிதும் கைகொடுத்து உதவும். மெய்ப்பொருளியலைச் சரிவரப் புரிந்து கொண்டு, கவின்கலை களையோ, கிரியைகளையோ (சடங்குகளையோ) சீர்தூக்கிப் பார்க்கும்போது அருளியலின்பம் ஊற்றெடுக்கும்.

தலச்சிறப்பால் அருளியல் ஊற்றெடுக்கும் திருக்கோயிலை ஈசான சிவகுருதேவ பத்ததி, ''திருக்கோயிலானது சிவன், சக்தி, நாதம், பிந்து முதலாகக் கலாதி தத்துவங்களின் புறத் தோற்ற மாதலின் அதைச் சிவத்தோடு தொடர்புடைய மூர்த்தியாகப் பாவித்து வழிபடவேண்டும்''[2] என்று கூறுவது கொண்டு ஆலயத் தத்துவம் இனிது புலப்படும். மேலும், ஆலயத்துக்குத் தேவ கிருகம், தேவாகாரம், தேவாயதனம், தேவாலயம், தேவகுலம், மந்திரம், பவனம், பிராசாதம், ஸ்தானம், நகர் முதலிய பல சொற் கள் இருப்பதுகொண்டு அதன் மாட்சி நன்கு புலனாகும்.

ஆலய அருளியற் சிந்தனைகளை ஆன்றோர்களின் அணுகு முறையுடன் ஓரளவேனும் உணர்ந்துகொண்டால்தான் ஆலயச்

1. ஆலயங்களின் உட்பொருள் விளக்கம், பக். 21
2. திருவையாறு கும்பாபிஷேக மலர், 1971, பக். 39

சிறப்பும், திருத்தலச்சிறப்பும் மக்களுக்கு நன்கு மரபாகப் புரிந்து கொள்ள வாய்ப்பாகும். இவ்வாற்றான் சில நுண்குறிப்புக் களைப் பூர்வாங்கமாகத் தெரிந்து கொள்வது நல்லது.

'பரம் பொருள் ஒன்றே' என்பதை அடிப்படையுணர்வாகக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே, **திருமூலர்,** **"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"** எனப்புலப்படுத்தினார். ஆக்கும் போது **அயனாகவும்,** காக்கும்போது **அரியாகவும், நீக்கும்போது அரனாகவும்** விளங்கும் மும்மூர்த்திகளிடை**யேயும் ஒருமைக்காட்சி** காண வழிவகுக்கும் **திருமூலர்,**

> "ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
> ஆதிக் கமலத் தலர்மிசை யானும்
> சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
> சோதித் துலகம் பிணங்கு கின்றாரே"[1]

எனப்பாடிச் செல்வதன் நோக்கம் உணர்க. இதே **'ஒருமுக - ஒருமைக்காட்சி'** அறுவகைச் சமயங்களிடையேயும் காணும் அருளியற் சிந்தனைக்கு ஆன்றோர் வழிகோலியுள்ளனர்; பல நற்பண்புகளினூடே தெய்வநலக் கோலத்தை **உணர்ந்து** கொள்ளும்வகையில் **சமயம், தெய்வம்,** பண்பு எனும் **நோக்கிலே** குறிப்பாகக் காட்டியுள்ளனர்; அது வருமாறு:

சமயம்	**தெய்வம்**	**பண்பு**
சைவம்	சிவன்	மங்கலம், **அன்பு**
வைணவம்	விட்டுணு	நிறைவு, அழகு
கௌமாரம்	குமரன்	இளமை, அழகு, மணம்
காணபத்யம்	கணபதி	இடர்களைதல், **சித்தி**
சாக்தம்	சக்தி	ஆற்றல், திரு, **கல்வி**
சௌரம்	சூரியன்	ஒளி, உயிரோம்பல்

இவ்வாறான உயரிய சிந்தனைகளுடன் பக்தி வைராக்கியத் துடன் ஆலயங்களை அணுகவேண்டும். 'இப்படியன் இந்நிறத்தன் இவன் இறைவன்' என்று எழுதிக்காட்டொணாத இறைக் காட்சியை மக்கள் தத்தம் அறிவறிவகையால் திருவருள் கொண்டு

1. திருமந்திரம், 104

காண்கின்றனர். **"பேணுங்காற் பேணும் உருவாகும்"** என்ற நியதியிலே **நம்மாழ்வார்,**

"அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி யடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே"[1]

என்று கூறி, அருளியற் சிந்தனையை வளர்த்துள்ளார். இத் தகைய பல படியான சிந்தனைகளுக்கு - ஒருமைநோக்கி நடையிடும் பாங்கிற்குச் - சங்ககாலத்திலேயே அருளியல் ஊற்றுக்களம் அமைந்துள்ளதை ஈண்டு இயைபுடன் சிந்திக்கலாம்.

சங்க காலத்தில் சில தெய்வங்களைப் பற்றிய சிந்தனை நிலவியது; எனினும், **அரனும் மாலும்** அன்பர்களின் அன்பில் நிலவும் கடவுட்பெயர்களாய் இருந்தன. இதனைத் **தொல்காப்பியம்,**

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (புறத். 33)

எனக்குறிப்பாக உணர்த்தும். **கொடிநிலை** - இடை, பிங்கலை, சுழுமுனை ஆகிய மூன்று நாடிகளிலும் கூடும் நிலையிலுள்ள **'சிவம்'** என்றும், **'கதிரவன்'** என்றும் அறிஞர்கள் நுண்ணிதின் ஆராய்ந்து கூறுகின்றனர். அவர்களே **'கந்தழி'** என்பதை ஆணவத் தளை யறுக்கும் அரணாகக் காண்பர்; மேலும், **'வள்ளி'** என்பதைச் **சந்திரன்** என்றும், **சக்தி** என்றும் விளக்கம் புரிகின்றனர். இவற்றையெல்லாம் சமயஞான நெறியில் சிந்தித்துப் பல அரிய செய்திகளைக் கொள்ள இடம் உண்டு.

சிவனுடைய மூர்த்திபேதங்களையும், திருமாலுடைய அவதார பேதங்களையும், சக்தியின் பல்வேறு கோலங்களையும், கணபதியின் பல்வேறு திருவுருவங்களையும், குமரனின் பல் வகைத் திருவடிவங்களையும், சூரியன் சந்திரன் முதலிய கிரகங் களின் பல்வேறு கோலங்களையும், பல கிராம தேவதைகளையும் வழிபாட்டு நோக்க மெனும் விளக்கத்தில் மக்கள் கொணர்ந்

1. திருவாய்மொழி, முதற்பத்து, 5,

தனர். அந்த நிலையில் பலவகையான திருக்கோயில்கள் தேவைப் பட்டன, அமைக்கப்பட்டன. அவ்வாறு அமைக்குஞ் சூழலில் ஒவ்வொரு **தெய்வத்தின் சக்தியையும்**, மக்கள் முந்தையோர் கண்ட முறைமையில் - சமயநம்பிக்கையுடன் கூடிய புராண அணுகுமுறையில் - உணர்ந்து, அந்த அந்தச் சக்தியை நன் முறையில் போற்றிப் புகழ்ந்து வழிபடும்வண்ணம் நிலை கொள்ளச் செய்தனர். இவ்வகையில் விரிந்து பரந்து செல்லும் ஆலய அருளியற் சிந்தனைகளை ஓர் எல்லைக்கு உட்படுத்த இயலாது. எனினும், மிகச் சிறந்த ஒரு குறிப்பினை மட்டும் (சக்தியைப்பற்றி) தத்துவ அடிப்படையில் மனங்கொள்வோம்.

நிர்க்குணமான பிரமம் - பரம்பொருள் - சின்மயமாகி (அஃதாவது, சிற்பரவியோமமாகி) எந்தத்துணையும் இன்றித் தனியாக நிற்கிறது. அது சிற்சக்தியால் **சற்குணமாக** மாறுகிறது. (நிர்க் குணம் சற்குணமாகத் தோற்றங் கொள்கிறது. இதனால், நாமரூபங்கள் தோன்றுகின்றன. ஆகவே, சிவத்திடையே (பொருளில்லாப் பொருளின் விளைவில்லா விளைவு எனப் போற்றும் வண்ணம்) **மகாசக்தி** தோன்றி உலகை இயக்கு கின்றது.

அந்த மாபெரும் மகாசக்தியிடம் நிறைவான **தாய்மை**, தன்னலமின்மை, நிறைநிலைப் பொறுமை, **குற்றங்களை** மன்னித்து நன்னெறிப்படுத்தல், நிறைவான தியாகம், பூரண மனநிறைவு, அன்பு, அருள் ஆகியவை குடிகொண்டிருத்தலை உணரலாம். இத்தகைய **சக்தி தத்துவமே**, ஆலய **அருளியல்** சிந்தனைகளின் ஊற்றுக்களமாய் விளங்கும்; **ஆலயமூர்த்தி** கரத்துக்கு அதுவே ஒருவகையில் திருவருள் துணையாகும்.

இனி, ஆலய(தல)ப் பெருமைகள் சிலவற்றை ஓரளவு உணர்ந்து கொள்ளும் நோக்கத்தில், **கட்டடக் கலைக்கூறுகள்** சிலவற்றை இயைபுடன் காணமுயல்வோம்.

2. திருத்தில்லை: பெருமைக் கூறுகள்:

பஞ்சபூதத்தலங்களில் ஆகாயத்தலமாகிய **தில்லை**, சிதம்பரம் என்ற பெருவழக்கினையுடைது; சைவசமயத்தின் தலைசிறந்த பெருந்தலமாகும். தமிழ்நாட்டில் எத்தனையோ பாடல் பெற்ற

சிவன் கோயில்களிருப்பினும், 'கோயில்' என்றால் அது சிதம்பரத்தை மட்டுமே குறிக்கும். தலம் என்றாலே **சிதம்பரம்**, தெய்வத் திருமேனி நடராசப் பெருமானின் திருவடிவம், தீர்த்தம் என்றாலே அது சிதம்பரத்திலுள்ள **சிவகங்கை** எனக்கொள்ளும் வகையில் **குமரகுருபர அடிகள்**,

> "தீர்த்தம் என்பது சிவகங்கையே
> ஏத்தரும் தலம்எழிற் புலியூரே
> மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே"[1]

என வியந்து போற்றியுள்ளமை போற்றத்தக்கது.

தில்லைக்குச் சிதம்பரம், பெரும்பற்றப் புலியூர், பொது, மகத், குகை, புண்டரிகபுரம், பரமவியோமம், பரமாலயம், தில்லைவனம், வீவியக்தம், அற்புதம், ஞானானந்தம், சித், சபா, சிதாகாசம், சிற்றம்பலம் முதலிய பெயர்கள் பல உள. **பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாத முனிவரும்** வழிபட்டு அருள்பெற்ற புனிதத் தலமாகிய இதனைத் **திருகயிலை** (பூலோகக்கயிலாயம்) ஆகவே போற்றி வருகின்றனர்.

நடராசப் பெருமானுக்குரியவை ஐந்து சபைகள்; திருவாலங்காடு **'இரத்தினசபை'**, மதுரை **'இரசிதசபை'** (வெள்ளியம்பலம்), திருநெல்வேலி **'தாமிரசபை'**, திருக்குற்றாலம் **'சித்திரசபை'**, சிதம்பரம் **'கனகசபை** (பொன்னம்பலம்) என அவை சைவப் பெருமக்களால் போற்றப்படும்.

தில்லைப் பொன்னம்பலத்தில் உலகத்தின் **சுழுமுனைநாடி** ஓடுவதாக ஞானயோக அணுகுமுறையில் கூறுவர். பலவகைப் பெருமை பெற்ற தலமாகிய சிதம்பர ஆலயத்திலே ஒரே இடத்தில் இருந்து கொண்டு தில்லை நடராசப் பெருமானையும் தில்லை கோவிந்தராசப் பெருமானையும் ஒரு சேர வழிப்பட்டு அருள் பெறலாம். அவ்வாறான அமைப்பில் இரு திருக்கோயில் சன்னிதிகளும் அமைந்துள்ளமை கட்டடக்கலை நோக்கிலும் சமய வொருமைப் பாட்டுக்கு நல்ல அடையாளம் எனலாம்.

தில்லைக்கோயிலில் சிற்பரவியோமமாகிய பரவெளியைத் **தில்லை இரகசியம்** எனவும், உருவத்திருமேனியாக **நடராசப்பெரு**

1. சிதம்பரச் செய்யுட் கோவை. 45.

மானையும், அருவுருவத்திருமேனியாகத் திருமூலட்டான **இலிங்கத்தையும்** சைவமெய்யன்பர்கள் போற்றிக் கொண்டாடுவர்.

2.1. தில்லை - கட்டடக் கலைக் கூறுகள்:

பொதுவாகக் கோயில்கள், **கிழக்கு - மேற்கில்** நீளமாக அமைக்கப்பட்டிருக்கும். ஆனால், சிதம்பரம் நடராசர் கோயிலோ **தெற்கு - வடக்கில்** நீளமாக அமைந்திருக்கும். இது கட்டடக்கலையில் அமைந்திருக்கும் தனிச் சிறப்பு என்பர். கோயில் வளாகம் 51 ஏக்கர் பரப்பளவினது.

சிவகங்கைத் தீர்த்தத்திற்குத் தென்புறம் நடராசப் பெருமான் சன்னிதியும், மேற்புறம் சிவகாமியம்மன் சன்னிதியும் கோயிற் கட்டடக் கலைச் சிறப்புகளுடன் அமைந்துள்ளன.

சிதம்பரம் கோயிலிலேயே நடராசருக்கு ஐந்துசபை மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. அவை முறையே சிற்சபை, இராசசபை, கனகசபை, நிருத்தசபை, தேவசபை என வழங்கப் படும். ஆடல்வல்லான் எழுந்தருளியுள்ள இடம் **சிற்சபை;** ஆயிரக்கால் மண்டபம் **இராச சபை;** சிற்சபைக்கு முன்னால் காணப்படுவது **கனகசபை;** கொடிமரத்திற்கருகில் வியத்தகு சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்திருப்பது **நிருத்தசபை;** (இங்கு ஊர்த்துவ தாண்டவமூர்த்தியையும் காணலாம்). பேரம்பலம் என்பது **தேவசபை;** இவையெல்லாம் கோயிற் கட்டடக் கலையின் சிறப்பான எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன. இங்குள்ள இராச சபை, தேவசபை, நிருத்தசபை, கனகசபை, சிற்சபை என்னும் ஐந்து சபைகளும், தூலவுடல், சூக்குமவுடல், குணவுடல், கஞ்சுகவுடல், காரணவுடல் ஆகியவற்றைக் குறிக்கும். அஃதாவது, முறையே **அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம்** என்பவற்றைக் குறிக்கின்றன என்னுங் கருத்து''[1] தத்துவ நோக்கில் சிந்திக்கத் தக்கது.

தில்லைப் பெருங்கோயிலிலுள்ள பேரம்பலம், சிற்றம்பலம், திருவணுக்கன் திருவாயில், திருக்கோயிற் கோபுரங்கள் முதலிய

1. திருக்கோயில் (திங்களிதழ்), நவம்பர், 1975

வற்றைக் குறிப்பிட்டுத் திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பாடியுள்ளார்.

சிதம்பரத்திலுள்ள கோவிந்தராசப் பெருமான் சன்னிதியினைத் **'திருச்சித்ர கூடம்'** என வைணவர்கள் வழங்குவர். **தாயார் சந்நிதி,** நடராசப்பெருமானின் நிருத்தசபைக்கு மேற்பால் அமைந்துள்ளது.

சிதம்பரம் கோயிற் கோபுர தரிசனம் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பது சைவப் பெருமக்கள் நம்பிக்கை. பொதுவாகக் "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. சிதம்பரம் கோயிலை நான்கு அழகிய கோபுரங்கள் சமயக் கலைநலத்துடன் அழகு செய்கின்றன. "சிதம்பரம் கோயிலுக்குள் கிழக்குக் கோபுர வாயில் வழியாக **மணிவாசகரும்,** தெற்குக் கோபுர வாயில் வழியாக **ஞான சம்பந்தரும்,** மேற்குக் கோபுர வாயில் வழியாக **அப்பர் சுவாமிகளும்,** வடக்குக் கோபுர வாயில் வழியாகச் **சுந்தரமூர்த்தி சுவாமிகளும்** வந்து வழிபட்டனர் என நூல்கள் கூறுகின்றன,"[1] எனக் குறிப்பிட்டுள்ளமை நினைவிற் கொள்ளத் தக்கது. சமய குரவர் நால்வர் புகழையும் கோபுரங்கள் வாயிலாகவும் குறிப்பிட எண்ணிய சேக்கிழார் முதலியோரின் கைவண்ணம் நினைந்து இன்புறத் தக்கது. இக்கூற்றினை ஒருவாற்றான் உறுதிசெய்யும் வகையில் கிழக்குக் கோபுர வாயிலினுள், தில்லைவாழ்ந்தணர்கள் மாணிக்க வாசகரைப் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்குங் காட்சி சுதைச்சிற்பக் கலை வடிவில் (அண்மைக்காலத்தே) காட்டியுள்ளனர். வடக்குக் கோபுரத்தில் சுந்தரரை வரவேற்றாலும் அந்தக் காட்சி கலையமைப்பில் முன்பு இடம் பெறவில்லை. அண்மைக்காலத்தில் அஃது இடம் பெற்றுள்ளது. மேற்கு, தெற்குக் கோபுர வாயில்களில் முறையே அப்பரையும் சம்பந்தரையும் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்குங்காட்சி சுதைச் சிற்பக் கலைவடிவில் காட்டியுள்ளனர். கோபுரத் திருப்பணி நோக்கில், கோபுரம் ஒவ்வொன்றும் எக்காலத்தில் யாரால் கட்டப்பட்டது என்பதைக் காண்போம்.

1. சிதம்பரம் திருக்கோயிலில் **கீழைக் கோபுரம்,** கி.பி. 1118 முதல் 1132 வரை நாடாண்ட மாமன்னனாகிய **விக்கிரம**

1. திருக்கோயில் (திங்களிதழ்). நவம்பர் 1975

சோழனால் கட்டப்பட்டது. இதனைக் கி.பி. 17 5—இல் காஞ்சி பச்சையப்ப முதலியாரின் தமக்கையார் சுப்பம்மாள் புதுப்பித்துத் திருப்பணி செய்தார்.

2. **மேலைக் கோபுரம்,** கி.பி. 1251 முதல் 1263 வரையில் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டது.

3. **தெற்குக் கோபுரம்,** கி.பி. 1243 முதல் 1280 வரையில் அரசாண்ட **கோப்பெருஞ்சிங்கன்** என்னும் பல்லவர்குலத் தலைவனால் கட்டப்பட்டது. கோப்பெருஞ்சிங்கன், சம்புகுலக்காடவராயர் என்னும் பல்லவர்குலத் தலைவன்,[1] என்னும் குறிப்பு நினைவிற் கொள்ளத்தக்கது.

4. **வடக்குக் கோபுரம்,** விசயநகர மாமன்னரும் கி.பி. 1509 முதல் 1530 வரை அரசாட்சி புரிந்தவரும் ஆகிய **கிருஷ்ண தேவராயரால்**, தம் ஒரிசா வெற்றியின் நினைவாகக் கட்டினார் என்பர். கிருஷ்ண தேவராயர் இக்கோபுரத்தைச் சில மாறுதல்களுடன் புதுப்பித்தவரேயொழிய, இதனைக் கட்டியவரல்லர் என்பது வரலாற்று அறிஞர்கள் (எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் முதலிய சிலர்) கருத்தாகும்.

கோபுரங்களைச் சமய அடிப்படையில் 'தூலலிங்கம்' என்றே கருதுவர் எனக் கண்டோம். தில்லைக் கோபுரங்கள் அனைத்துமே இறைவனது ஒருவகைத் திருவுருவப் புலப்பாடே எனும் வகையில் சிற்பக்கலை நேர்த்தியைக் கொண்டுள்ளன. அவற்றுள் கீழை, மேலைக் கோபுரங்களில் நாட்டியக் கலைக்கு உதவும் வகையில் 108 நாட்டிய பேதங்களையும் புலப்படுத்தும் சிற்பங்கள் அழகிய முறையில் அமைந்துள்ளன.

இங்குள்ள நூற்றுக்கால் மண்டபம், விக்கிரம சோழனால் கட்டப்பட்டது என்றும், தொண்டை நாட்டு மணவிற் கூத்தனாகிய காலிங்கராயனால் கட்டப்பட்டது என்றும் கூறுவர். முன்னவர் கட்டிப் பின்னவர் புதுப்பித்துத் திருப்பணி புரிந்திருக்கலாம்; இஃது ஆராயத்தக்கது.

1. கலைக் களஞ்சியம் [சென்னை], தொகுதி நான்கு, பக். 659

உருவக அமைப்பில் சிதம்பரத்தை ஆராய்ந்து உணர்ந்தவர்கள் தரும் தத்துவ விளக்கம் மிக வியப்பாகத் தோன்றும்.

"நான்கு வேதங்கள், 4 கோபுரங்கள்; 1000 கால் மண்டபம், சகஸ்ராரம் என்னும் 1000 இதழ்த்தாமரை; சிவகங்கைத் தீர்த்தம் சகஸ்ராரத்தை அடுத்துள்ள அமிழ்தப் பொய்கை; நான்கு தம்பங்கள், நான்மறையில் அதி தெய்வங்கள்; அடுத்துள்ள 28 நெடும் தூண்கள், 28 ஆகமங்கள்; 96 பலகணிகள் 96 தத்துவங்கள்; விமானத்தின் 9 கலசங்கள் நவசக்திகளின் அடையாளம்; விமானத்தின் 64 சுழிகள், 64 கலைகள்; கனகசபையில் வேயப்பெற்றுள்ள பொன் ஓடுகள் 21,600 சுவாசங்களின் எண்ணிக்கையை உணர்த்துகின்றன. அப்பொன் ஓடுகளில் அடித்துள்ள ஆணிகள் 72,000 நாடிகளைக் குறிக்கும்"[1] என விளக்கிச் செல்வது **சமயவழிப் பண்பாடு** எங்ஙனம் தத்துவ நுண்கூறுகளை உயிர்நாடியாகக் கொண்டு சிறந்துள்ளது என்பதையுணர்த்தும்.

இதுவரையில் **வியாக்கிரபுரி, வியாக்கிர அக்கிரகாரம், பெரும்பற்றப் புலியூர்** என்றெல்லாம் புகழப் பெறும் பெருங்கோயிலாகிய ஆடல்வல்லான் திருக்கோயில் பற்றியே ஓரளவு கண்டோம். இக்கோயிலின் வளாகத்திலேயே சிவகங்கைத் திருக்குளத்துக்கு மேற்பால் **சிவகாமியம்மன் கோயிலும்** சிற்பக்கலை, கட்டடக்கலை, ஓவியக்கலை ஆகிய கலை நேர்த்தியுடன் அமைந்துள்ளமை நோக்கத்தக்கதாகும். இந்தச் சிவகாமியம்மன் கோயிலுக்கு இடப்பக்கமாக (வடபால்) **பாண்டிய நாயகம்** அல்லது **பாண்டில் நாயகம்** என்ற திருப்பெயருடன் முருகன் திருக்கோயில் அமைந்துள்ளது தேர் போன்ற வடிவமைப்பில் இந்தக் கோயிற்கட்டடம் அமைந்துள்ளமை கட்டடக்கலை நோக்கில் கண்டு போற்றத் தக்கதாகும். சுப்பிரமணிய சுவாமிக்கு முன்னதாக அமைந்துள்ள மகாமண்டபம் வெளவானத்தி மண்டபம் போன்ற உள்விதானத்தைக் கொண்டது. இக்கால **ஓவியக் கலையின்** திறத்தைப் புலப்படுத்தும் வண்ணம் **கந்தபுராண ஓவியங்களும்** பிறவும் நுண்கலையடிப்படையில் அமைந்துள்ள கலைக்கருவூலங்கள் எனலாம்.

---

1. திருக்கோயில் (திங்களிதழ்), நவம்பர், 1975

இதே நடராசர் கோயில் வளாகத்தில் அமைந்துள்ள **முக்குறுணி விநாயகர் கோயிலும், கற்பகவிநாயகர் கோயிலும்,** பிறவும் கட்டடக்கலை நோக்கிலும் சமயப் பண்பாட்டு நோக்கிலும் காணத்தக்கவையெனலாம்.

2.2. தில்லை நடராசர் கோயில் - இரணியவர்மனும் சோழர்களும்:

தில்லையெனப்படும் சிதம்பரம் ஒரு காலத்தில் தில்லைக் காடாக இருந்துள்ளது. அங்குத் தொடக்கத்தில் ஒரு மர நிழலில் இலிங்கம் ஒன்று இருந்தது. முன்பு எளியதோற்றத்துடன் சிவகங்கைக் கரையிலுள்ள அந்த இலிங்கத் திருமேனியைத் **திருமூலத்தானத்தார்** என்று பிற்காலத்தில் வழங்கலாயினர். **திருமூலர்** எனும் சித்தர் அடங்கியுள்ள திருவிடமே பிற்காலத்தில் **திருமூலத்தானத்தார்** என்றும் **திருமூலட்டானம்** என்றும் வழங்கக் கூடிய கோயிலமைப்பைக் கொண்டது என்ற செவிவழிச் செய்தியும் உள்ளது. (திருமூலர் அடங்கிய தலம் **திருவாவடுதுறை** என்ற செய்தியும் உள்ளது)

திருக்கோயில் பற்றிய ஆராய்ச்சியில் வல்லுநராகிய **எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்** அவர்கள், "திராவிடக் கலைப் பாணிக் கோயில்களில் இது (நடராசர் கோயில்) மிக மேம்பட்டனவற்றுள் ஒன்றாகும் திராவிடச் கலாசாரமும் ஆரியக் கலாசாரமும் இங்கு ஒன்றிக் காணப்படுகின்றன. இஃது அத்வைத சித்தாந்தம், சைவ சித்தாந்தம் என்பனவற்றின் இருப்பிடமாகவும், தத்துவம் சமயம் கலை இவற்றின் இணைப்பான நடராச தத்துவத்தின் அடிப்படை இருப்பிடமாகவும் திகழ்கிறது"[1] என்றும், "கங்கைக்கும், யமுனைக்கும் இடைப்பட்ட பகுதியிலிருந்த **அந்தர்வேதி** என்ற பகுதியை யாண்ட வடநாட்டு வேந்தனான **இரணியவர்மன்** என்பான் தொழு(குஷ்ட) நோயால் பீடிக்கப்படவே, தன் நாட்டை விட்டுத் தல யாத்திரை செய்து கொண்டு தமிழகத்தை நோக்கி வரவும், தில்லையிலிருந்த **வியாக்கிரபாத முனிவர்**, திருக்குளமான சிவகங்கையில் முழுகி நடராசப் பெருமானை வழிபடுமாறு அவனிடம் கூறவே, அவன்

1. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், பக். 50

அவ்வாறு செய்து நோய் நீங்கப் பெற்றான்"[1] என்றும், ஆராய்ச்சி அடிப்படையிலும், புராண அடிப்படையிலும் எழுதிச் செல்வது சிந்திக்கத்தக்கதாகும்.

அத்தகைய சிறப்பிற்குரிய இரணியவர்மன் தன் ஆன்மநல நன்றிக் கடனாக ஆடல்வல்லானுக்குக் கோயிலெடுத்துச் சிறப்பித்துள்ளான். அவன் கட்டிய கோயில், பிற்காலத்தில் கட்டடக் கலை நோக்கில் எவ்வளவோ பெரும் மாறுதல்களைக் கொள்வதாயிற்று. பாண்டிய மன்னர்களும், விசயநகர - நாயக்க மன்னர்களும், பச்சையப்ப முதலியாரும், நகரத்தார் பெருமக்களும், இக்கோயிலுக்குச் செய்துள்ள திருப்பணிகள் பலவாகும். எனினும், பிற்காலச் சோழ மன்னர்கள் ஆடல்வல்லானிடம் கொண்டிருந்த ஈடுபாடும், அவர்கள் புரிந்துள்ள திருத்தொண்டுகளும் தனிச் சிறப்புக் கொண்டவை எனலாம். சோழமன்னர்கள் தமக்குரிய புலியிலச்சினையும், சிறப்பான முடிசூட்டுவிழாவும் கொள்வதற்குரிய சூழல் - ஊற்றம் - இரணியவர்மன் காரணமாக உருவாயிற்று என்பர்; இதற்கு அரண் செய்வது போன்று இரணியவர்மன் நடராசப் பெருமானுக்குக் கோயில் எடுப்பித்தான் அவன் சோழமரபினன் என்று தன்னைக் கூறிக்கொண்டு புலிப்பொறியைச் சூடிக் கொண்டான். அப்புலி முத்திரை விசயாலயன் வழியினராலும் விரும்பிக் கொள்ளப் படுவதாயிற்று"[2] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கதாகும்.

பிற்காலச் சோழர்களும் பிறரும் கோயில் வளாகத்தில் பல மண்டபங்களையும் பிற கட்டுமானங்களையும் உருவாக்கக் காரணமாயிருந்தனர்; எனினும், பொன்னம்பலத்தைச் சுற்றியுள்ள முதற்பிராகாரச்சுவரில் மேற்கு நோக்கிய வண்ணம்-நடராசமூர்த்தியையும் சிவகாமியம்மை வீற்றிருக்கும் சபையையும் அருகிருந்து காணும் வண்ணம் - இரணியவர்மன் சிலையைப் புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ளமை பிற்காலத்தவரின் நன்றிப் புலப்பாட்டினை உணர்த்துவது எனலாம்.

1, 2. முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், பக். 51

2.3. தில்லையில் பிற கோயில்கள்;

நடராசர் கோயிலாகிய **வியாக்கிரபுரி** ஒரு புறமிருக்கப், **பதஞ்சலி முனிவர்** வழிபட்ட **அனந்தீசுவரம்** என்ற திருக்கோயில் தில்லையின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. கட்டடக்கலை நோக்கிலும், சிற்பக் கலை நோக்கிலும் அனந்திசுவரமும் காணத் தக்க சிறப்பினையுடையது. சோழ மன்னர்கள் - விசயாலயன் முதற்பராந்தகன் - காலத்தனவாகவுமுள்ள பழைய கல்வெட்டுகள் அக்கோயில் சுவர்களில் உள்ளன என்பதும் வரலாற்று நோக்கில் கருதத்தகும்.

மேலும், **திருநீலகண்ட நாயனார் கணம்புல்ல நாயனார்** ஆகியோர் வாழ்வுடன் தொடர்பு கொண்ட **இளமையாக்கினார் கோயிலும்,** நடராசர் கோயிலுக்கு வடபால் அமைந்துள்ள **தில்லை மாகாளியம்மன் கோயிலும்** கலை நோக்குடன் கண்டு வழிபடத்தக்க சிறப்புடையவை. நாட்டுப்புறவியல் நோக்கில் தில்லைக்குக் காவல் தெய்வங்களாக மேற்குத் திக்கில் **பிரமராயர் கோயிலும்,** கீழ்த்திசையில் **கீழமாரியம்மன் கோயிலும்** மிகச்சக்தி வாய்ந்தவையாக மக்களால் போற்றப்படுகின்றன. சைவ சந்தான ஆசாரியருடன் தொடர்புள்ள திருத்தலங்களும் உள்ளன; தில்லையின் வடமேற்கேயுள்ள **திருக்களாச்சேரி, மறை ஞான சம்பந்தருடனும்,** கிழக்கேயுள்ள **கொற்றவன்குடி, உமாபதி சிவாச்சாரியாருடனும்** சமய வரலாற்றால் பெருமை கொண் டவை; அவையும் கலைநோக்கில் சிந்திக்கத்தக்கவை.

அறுபான்மும்மை நாயனாருள் ஒருவரான **திருநாளைப் போவார்** எனும் **நந்தனாரை** நினைவுகூரும் வகையில், தில்லையின் தென்மேற்கேயுள்ள ஓமக்குளத்தருகே அமைந்துள்ள சிவன் கோயிலும் இக்காலக் கட்டடக்கலை, சிற்பக்கலை நோக்கில் காணத்தக்கதாகும்.

3. திருவண்ணாமலை - பெருமைக் கூறுகள்:

ஐம்பூதத் தலங்களுள் நெருப்புத்தலமாகவும், முத்தித் தலங்களுள் ஒன்றாகவும் விளங்கும் சிறப்பிற்குரியது திருவண்ணா மலை. நினைத்ததும் முத்தி நல்குந் தலமாகக் கருதப்படுவதால்,

ஆன்ம நலம் நாடும் ஞானியர் பலர் இங்கு வந்து தலப் பெருமையை உயர்த்தியுள்ளனர் எனலாம்.

தேவாரம் திருவாசகம் திருப்புகழ் முதலிய அருளனுபவ நூல்களால் பரவப் பெற்ற திருவண்ணாமலையின் பெருமையைக்,

"கண்டம் கரியமலை கண்மூன் றுடையமலை
அண்டரெலாம் போற்றுதற் கரியமலை - தொண்டருக்குத்
தோற்றுமலை நாளும் தொழுவோர் எழுபிறப்பை
மாற்றுமலை அண்ணா மலை"[1]

எனக் குருநமசிவாயர் பாடிச் செல்வது காண்க.

அருணாசலம் என்றால் நெருப்புமலை எனப்பொருள்படும். அதற்கேற்ப, இன்றும் காலையில் சூரியவுதயத்தில் இங்குள்ள அருணமலை நெருப்பொளியாகச் செந்நிறங் கொண்டு காட்சியளித்தலைக் காணலாம். திருமகளால் செல்வச் செருக்குடைய திருமாலாலும், கலைமகளால் கல்விச் செருக்குடைய நான்முகனாலும் முறையே சிவபெருமானின் அடியையும், முடியையும் காணவியலவில்லை. அவர்களது செருக்கினையடக்க நெருப்புருவமெடுத்த ஈசனின் திருத்தலமே இதுவாகும். அகந்தை கொண்ட நெஞ்சத்தால் அகண்டாகாரமான பரம்பொருளை அறியவியலாது என்ற தத்துவத்தைப் புலப்படுத்துவதே இப்புராண நிகழ்ச்சியின் உட்கிடையாகும்.

சிவதத்துவமே மலையுருவாய்ச் சுற்றிலும் அமைந்திருக்க, வானளாவிய கோபுரங்களுடனும், ஆயிரங்கால் மண்டபமுள்ளிட்ட பல மண்டபங்களுடனும் அமைந்த இத்திருக்கோயில் பல்லாற்றானும் ஆன்மநலக் கலைக்கருவூலமாகும்.

அண்ணாமலையினைச் சுற்றி எட்டுத்திக்குகளிலும் எட்டு இலிங்கங்களும், ஒவ்வோர் இலிங்கத்தின் அருகேயும் ஒவ்வொரு திருக்குளமும் என்ற அமைப்பில் இத்தலம் சிறப்புற விளங்குகின்றது.

1. அண்ணாமலை வெண்பா

3.1 திருவண்ணாமலை - கட்டடக்கலைக் கூறுகள்:

சிற்ப அமைப்புப் பொலிவும் கட்டடக்கலை எழில்நலமும் ஆகம அடிப்படையில் அமைந்துள்ள அண்ணாமலையார் திருக் கோயில் புகழ்பெற்ற மற்றச் சிவன் கோயில்களைப் போலவே கருவறை, அந்தரா்ளம், முகமண்டபம், முன்மண்டபம் ஆகிய பழைய அமைப்புகளையும், பல திருச்சுற்றுக்கள், பல மதில்கள், புதிய பரிவார ஆலயங்கள், ஆயிரக்கால் மண்டபம், நூற்றுக் கால் மண்டபம், தீர்த்தக் குளங்கள், கோபுரங்கள் ஆகிய அமைப்புக்களையும் கொண்டிலங்குதலைக் காணலாம்.

இக்கோயில் பழங்காலத்தில் கற்றளியாகவே இருந்திருக்க வேண்டுமென்பதை அங்குக் கிடைக்கும் கல்வெட்டுகளால் உணர்ந்து கொள்ளலாம். ''கொடுங்கை யாளிவரி கல்லமைப் பாலும், விமானம் சுதையமைப்பாலும் கட்டப் பெற்றுள்ளது. பல்வேறு காலங்களில் புதுப்பித்துத் திருப்பணிகள் செய்யப் பெற்றமையால் கோயிலின் பழைய அமைப்புமுறை படிப்படியாக மாறியுள்ளது. எனினும், கருவறை பழைய அமைப்புடன் தான் இன்று விளங்குகிறது. அதுபோல் முதல் பிராகாரமும், இரண் டாம் பிராகாரமும் அவற்றை யொட்டிய மதிலும் பழங்காலத் தனவாகும். மூன்றாம் பிராகாரம் குலோத்துங்கன் காலத்தில் கட்டப்பட்டது. அடுத்துள்ள நான்காம் பிராகாரமும் அதனை யொட்டிய மதிலும் ஐந்தாம் பிராகாரமும், ஆயிரக்கால் மண்டபம், பெரியநந்தி, சிவகங்கைத் தீர்த்தம் இவையும், இவற்றோடு ஒட்டிய வெளிமதிற்சுவரும், வெளிவாயில் கோபுரங் களும் 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகும்''[1] எனத் **த. கோ. பரமசிவம்** எழுதிச்செல்வது நன்கு மனங்கொள்ளத் தக்கது.

3 2. நகரத்தார் திருப்பணி:

தெய்வநலத் திருப்பணியில் நாட்டமுற்ற நகரத்தார் பெருமக்கள் தமிழ்நாட்டிலும், ஆந்திரா (திருக்காளத்தி)

1. அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் (1976), பக். 13

முதலிய பிற மாநிலங்களிலும் கோயில்கள் பலவற்றைப் புதுப்பித்தும் சில மண்டபக் கட்டுமானங்களைச் சேர்த்தும் திருப்பணி புரிந்துள்ளார்கள். அவற்றை விரிக்கிற் பெருகும். கோயில் திருப்பணிகள் தொடர்பில் சில சிறப்புக்குறிப்பினைக் காண்போம்.

திருவண்ணாமலையில் 19-ஆம் நூற்றாண்டில் அண்ணாமலையார் திருக்கோயிலை விட உண்ணாமுலையம்மன் திருக்கோயில் தாழ்ந்த தளத்தில் இருந்தது; அருள்மிகு அம்பிகையை வலம்வந்து வழிபாடு புரியவும் இயலாத நிலையில் இருந்தது. நகரத்தார் பெருமக்கள் இத்தலத்தை உயர்த்தி, உண்ணாமுலையம்மனை வலஞ்செய்து வழிபடுதற் கேற்றவாறு பிராகாரம் நேர்த்தியாக அமைத்துள்ளனர். வெளிச்சமும் காற்றும் வரும்வகையில் நல்லசுகாதார வசதியுடன் மகாமண்டபத்தை உயரமாகக் கட்டி, அழகுமிகு சிற்பங்களுடன் கூடிய தூண்களை நிலைநாட்டினர்.

திருவண்ணாமலையில் திருக்கோயிலுக்குத் திருப்பணி புரிந்ததோடல்லாமல், அடியார்கள் வந்து தங்கி இறைவனைச் சேவிக்கும் பொருட்டு வசதியாகச் சில அன்ன சத்திரங்கள் கட்டடக்கலை நேர்த்தியுடன் கட்டியுள்ளனர். அவற்றுள், 'ஓயா மடம்' எனும் பெரிய அன்னசத்திரம், நாள்தோறும் வரும் அருளாளர்களுக்கும் பிறர்க்கும் ஓயாமல் உணவு வழங்கும் பெருஞ்சிறப்பிற் குரியதாக மக்களால் போற்றப்படுகிறது.

4. திருவானைக்கா - பெருமைக் கூறுகள்:

பஞ்சபூதத் தலங்களுள் அப்புத் தலம் (நீர்த்தலம்) திருவானைக்கா ஆகும். இக் கோயிலின் கருவறையில் எழுந்தருளியுள்ள சிவலிங்கத் திருமேனியைச் சுற்றி, எப்பொழுதும் நீர் ஊறிச் சுரந்து கொண்டே இருப்பதை இன்றுங் காணலாம். இங்குள்ள இறைவனைச் **செழுநீர்த்திரள்நாதர், அமுதீசர், அப்புலிங்கம், சம்புகேசுவரர்** ஆகிய பெயர்களால் அழைப்பர். மேலும் ஆனைக்கா அண்ணல், ஆனைக்கா ஆதி, ஆனைக்கன்று, ஆரம் அணிந்தார் என்றெல்லாம் திருமுறையாசிரியர்கள் தம் பாடல்களில் போற்றி மகிழ்ந்துள்ளனர்.

சைவ - வைணவ ஒற்றுமை தழைக்க வேண்டுமென்ற நினைப்பில் கீழ்ப்பால் திருவானைக்காவும், மேற்பால் திருவரங்கமும் திருவருளால் அமைந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

யானை பூசித்தமையால் கஜாரண்யத்தலம் அல்லது ஆனைக்கா எனப்பெயர் ஏற்பட்டது; சம்பு முனிவர் வழிபட்டமையால் சம்புகேசுவரம் எனப்பெயர் உண்டாயிற்று; அகிலாண்டேசுவரி ஆகிய அம்பிகை வழிபட்ட காரணத்தால் ஞான க்ஷேத்திரம் என்றும் வழங்குவர்.

4.1. திருவானைக்கா - புராணப் பின்னணி:

திருக்கயிலையில் வாழ்ந்த மாலியவான் புட்பதந்தர் ஆகிய கணநாதர் இருவரும் பூசலிட்டுக் கொண்டு, ஒருவரையொருவர் சபித்துக் கொண்டதன் பயனாக, மாலியவான் சிலந்தியாகவும், புட்பதந்தன் யானையாகவும் இப்பூவுலகில் தோன்றினர். தம் சாப நீக்கத்திற்காக இந்தத் தலத்தினையடைந்து, வெண்ணாவல் மரத்தடியில் எழுந்தருளியுள்ள சம்புகேசுவரரை வழிபட்டு வந்தனர். சிலந்தி, தன்வாய் எச்சிலினால் வலை பின்னிப் பந்தர் அமைத்துப் பிரானுக்கு நிழல் உண்டாக்கியது யானை தன் துதிக்கையினால் காவிரி நீரைக்கொண்டு வந்து இறைவனை அன்பு நீராட்டி வழிபாடு புரிந்து வந்தது. இந்நிலையில், தன் பூசைக்கு இடையூறாகச் சிலந்தி பின்னிய வலையை நாள்தோறும் யானை அறுத்தெறிந்து வந்தது. அதனால், வருந்திய சிலந்தி தன் இறைபணிக்கு இடையூறாக வந்த யானையை, ஒரு நாள் அதன் துதிக்கைக்குள் புகுந்து மேலேறிச் சென்று கடித்தது. உடனே யானை தன் துதிக்கையைத் தரையில் ஓங்கி அடித்துத் துடித்து வீழ்ந்து மாண்டது. துதிக்கைக்குள் சிக்கிய சிலந்தியும் இறந்து போயிற்று. அந்நிலையில் சிவபெருமான் அவற்றிற்குக் காட்சியருளியதுடன், யானையைச் சிவகண நாதராக்கியும், சிலந்தியைச் சோழர் குலத்தில் மாமன்னனாகத் தோன்றும்படியும் பணித்தருள் செய்தார் என்பது புராண வரலாறு.

சிவனருட் குறிப்பிற் கேற்பச் சிலந்தி, கோச்செங்கட் சோழனாகத் தோன்றும் பேறுபெற்றது. கோச்செங்கட் சோழன் சிறந்த சிவபக்தியுடன் நாடாள்கையில், திருக்கோயில்கள் பல எடுப்பித்தான். முன்னைப் பிறவியில் யானையினால் தனக்கேற்

பட்ட இடர்ப்பாட்டினையெண்ணி, யானை புகாத வாயில்களுடைய மாடக் கோயில்கள் எடுப்பித்த பெரும்புகழுக்கு உரியவனானான். இவன் பெருமையை வியந்து போற்றித் திருமங்கையாழ்வார் சமயவொருமையுணர்வுடன்,

> "செம்பியன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
> திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"[1]

என்று பாடியுள்ளமை காணலாம். திருமுறையாசிரியர்களும் கோச்செங்கட் சோழனது திருத்தொண்டு வரலாற்றைக் குறித்துச் சென்றுள்ளனர்.

4.2. திருவானைக்கா - கட்டடக்கலைக் கூறுகள்:

வளமான தென்னந் தோப்புகளுக்கிடையே அமைந்துள்ள திருவானைக்காக் கோயிலுக்கு ஐந்து பிராகாரங்கள் உள்ளன, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்கையில் முதல் இரண்டு பிராகாரங்களிலும் உள்ள கோபுர வாயிலைக் கடந்தே உள்புக வேண்டும். அந்தப் பிராகாரங்களில் மக்கள் குடியிருப்பதற்கேற்ற வசதியுடன் கோயிலமைப்பு உள்ளது. மூன்றாம் பிராகாரத்திலிருந்து தான் கோயில்மண்டபங்கள் அமைந்துள்ளதைக் காணலாம். எனினும், நான்காம் பிராகாரத்து மதில்தான் பெரிய மதிலாகும். இந்த மதிலைத் **'திருநீறிட்டான் திருமதில்'** என்றும், **'திருநீற்றுமதில்'** என்றும் அழைக்கின்றனர். இது பற்றி வினவினால், இம்மதில் கட்ட அரசன் முனைந்த போது. **சித்தர்** ஒருவர் தோன்றிப் பணியில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் திருநீற்றையே கூலியாகக் கொடுத்தார் என்றும், அத்திருநீறே ஒவ்வொருவர் கையிலும் பொன்னாக மாறியதென்றும் அங்குள்ள பெரியவர்கள் கூறுகின்றனர். இம்மதிலைக் கடந்து வந்தால் வடபால் **ஆயிரக்கால் மண்டபத்தைக்** காணலாம். அதற்கு எதிரேயுள்ள ஒரு பெரிய மண்டபத்தை அடுத்துத் **திரிமூர்த்திகள் கோயில்** உள்ளது. "அங்குச் சென்று படியேறினால் ஓர் அதிசயம் காத்து நிற்கும். ஆம்! **பிரும்மா, விஷ்ணு, சிவன்** எல்லோருமே **லிங்கத் திருவுருவிலே** தனித்தனிக் கோயிலில் இருப்பார்கள். இந்த மூவரும் சேர்ந்த திருவுருவம் ஒன்றும்

1. திவ்யப்பிரபந்தம், பெரியதிருமொழி,6.6,1

அங்குள்ள தூணில் இருக்கும். அதனையே **ஏகபாத மூர்த்தி** என்று கூறுவார்கள், இத்திரிமூர்த்திகளையும் வணங்கியபின் துவஜஸ்தம்பம் (கொடிக்கம்ப) மண்டபத்துக்கு வருவோம். அந்த மண்டபம் பிரும்மாண்டமான மண்டபம். அம்மண்டபத்தை நான்கு பெரிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. ஒவ்வொரு தூணுக்கும் மேல் எட்டுச் சிங்கங்கள் மண்டபத்தையே தாங்கி நிற்கும். மேலும், இத் தூண்களில் எல்லாம் தல வரலாறுகளைத் தெரிவிக்கின்ற சிற்ப வடிவங்கள் உண்டு''[1] எனத் **தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்** வருணித்துச் செல்கிறார்.

இதனால், சித்தராக வந்தருளிய சிவபிரானே கோயிற் பண்பாட்டை இந்நாட்டில் நன்கு வளர்க்கத்துணை நின்றான் எனலாம்; இவ்வாறறான் **திருநீறிட்டான் திருமதில்** அமைக்க ஒத்துழைத் தருளியதை முணர்ந்து மகிழலாம்.

சிவபிரானாலும் கோச்செங்கட் சோழ நாயனாராலும் சுந்தர பாண்டியன் முதலிய அருட்செல்வர்கள் பலராலும் திருப்பணி செய்யப்பெற்ற திருவானைக்காக் கோயிலுக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் புரிந்துள்ள திருப்பணிகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவையாகும்; இந்நிலையில் நகரத்தார் குலச் சைவப் பெரியவர் **சா. ராம. சித. சிதம்பரம் செட்டியார்** அவர்களின் சீரிய முயற்சியால், இக்கோயில் மூலத்தானங்கள் உட்பிராகாரங்கள் முதலியவை பெரும்பொருட் செலவில் நன்கு புதுப்பிக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இருபதாண்டுகளுக்கு முன், சைவப் பெரியார் **தி.மு. நாராயணசாமிப் பிள்ளை** அவர்கள் தலைமையில் அமைந்த திருப்பணிக் குழுவினரால் இராசகோபுரம், மல்லப்ப கோபுரம், கார்த்திகைக் கோபுரம், அரவிட்டான் கோபுரம், மணிமண்டபக் கோபுரம், சங்கரேசுவரர் கோபுரம், ஆயிரக்கால் மண்டபம், விபூதிப் பிராகாரம், சூரிய தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், இந்திர தீர்த்தம் ஆகியவை மிகச் சிறப்புறத் திருப்பணி செய்யப் பெற்றன.

1. வேங்கடம் முதல் குமரிவரை (காவிரிக்கரையில்) பக். 206

இதனால், தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையில் முன்னோர்கள் அமைத்துள்ள கோயிற்கலைக் கருவூலங்களைக் கண்ணெனப் போற்றும் தமிழ்ச் சமயப் பெருமக்கள் வாழையடி வாழை யெனத் தோன்றித் தம் கடமைகளைச் செய்து கொண்டு தான் வருகின்றனர் என்பது பெறப்படும்.

இத்தகைய பல சிறப்புக்களைப் பெற்றிருக்கும் இந்த ஆலயத்தின் மூலக்கருவறையில், நீர்த்தலம் எனும் பெயருக் கேற்ப 'என்றும் நீர் சுரந்து கொண்டிருப்பது பெரும் வியப்பிற் குரியது. கோயிலை நிர்மாணிக்கும் பெருந்தச்சர்கள், 'ஈசுவரனை நீர்ச்சூழலில்' அமையுமாறு பொறியியல் திறமையுடன் நீரோட்ட முணர்ந்து பொருத்தியிருப்பது மிகவும் போற்றற்குரியதாகும்.

5. திருவாரூர் — பெருமைக் கூறுகள்:

பஞ்ச பூதத் தலங்களுள் பிருதுவி (மண்) தலம் எனவும், சப்த விடங்கத் தலங்களுள் முதலாவதெனவும் பெயர் பெற்ற திருவாரூர், விராட்புருடனுடைய மூலதாரம்[1] என்று சமய ஞானிய ரால் கருதப்படுகிறது. பூமிதேவியின் இதய கமலமாகவும் கருதப்படும் இத்தலத்தில், தேவர்கள் கறையான் வடிவு கொண்டியற்றிய புற்றை இடமாகக் கொண்டு இறைவன் வன்மீக நாதனாக எழுந்தருளியுள்ளான். முத்தித் தலங்களுள் ஒன்றாகிய திருவாரூர் தன்பாற் பிறந்தவர்களுக்கு முத்திகொடுக்கும் ஆற்றலு டையது என்பர். தன்னிடமுள்ள உயிர்களெல்லாம் சிவகணங் களாதலின் ஸ்பரிச தோஷம் முதலியன இல்லாததெனவும், நன்றிகொன்ற பாவத்தையும் தீர்க்கும் பெருமை வாய்ந்த தெனவும், ஸ்ரீ காசிக்கும் தில்லைக்கும் மேலானதெனவும்........ அம்பிகை தவம் செய்தமையின் பராசக்தித் தலமெனவும், திரு மகள் வழிபட்டுப் பேறுபெற்றமையால் கமலாலயம் ஸ்ரீபுரம் எனவும், வீதிவிடங்கனாகிய தியாகேசர் எழுந்தருளியிருத்தலின் வீதிவிடங்கம் எனவும் இத்தலம் கூறப்படும்'[2] என டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் தரும் குறிப்பால் திருவாரூர்ப்பெருமை இனிது விளங்கும்.

1. தியாகராஜசுவாமி திருக்கோயில் (திருவாரூர்) திருக்குடமுழுக்கு விழாமலர், 1988, பக். 2
2. மேலது

அருள்மிகு வன்மீகநாதர் எழுந்தருளியுள்ள கருப்பக்கிருகம் **திருமூலட்டானம்** என்றும், **பூங்கோயில்** என்றும் வழங்கப்படும், தியாகராச சுவாமிகளின் புராணப் பெருமை சைவ அடியார்களால் மிகப் போற்றப் பெறும் புராணச் சிறப்பு வருமாறு: தியாகராசர் முதன் முதலில் திருப்பாற்கடலில் திருமாலால் வழிபடப் பெற்றுப், பின்பு அவரால் இந்திரனுக்கும், பின்பு அவனால் முசுகுந்த சக்கரவர்த்திக்கும் அளிக்கப்பெற்ற கீர்த்தி கொண்டவர். சோழமரபுடையவர் எனக் கருதப்பெறும் முசுகுந்தரால் இத்தலத்திற்கு எழுந்தருளியவர். "இவர் அராக் கச்சையும், ஆடரவக் கிண்கிணிக் காலையும், தியாக விநோதம் என்னும் பரிவட்டத்தையும், உடைவாளையும், உதரபந்தனத்தையும், வீரகண்டயம் என்னும் வாளையும், தலைச் சீராவையும் உடையவர். மேற்கூறிய பரிவட்டம் ஐந்து கோடுகளையுடைய தாய்த் தியாகவன்னம் எனவும் இக்காலத்தில் வழங்கும்"[1] என்று **டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர்** எழுதிச் செல்வது மனங் கொள்ளத் தக்கதாகும்.

தியாகப்பெருமானை அசைந்தாடிய பெருமான், அடிக் கோயில் பொன்னளிப்பவர், அந்தியும் சந்தியும் ஆடுவார், அருமைப்பெருமாள், இரத்தின சிங்காதனாதிபதி, இருந்தாடழகர், கமபிக்காதழகர், கருணாகரத் தொண்டைமான் சனகத் தியாகேசர், கிண்கிணிக் காலழகர், செங்கழுநீர்தாமர், செம்பொற் சிங்காதனாதிபதி, தியாக சிந்தாமணி, திருவந்திக் காப்பழகர், மணித்தண்டிலசைந்தாடிய பெருமான், முன்னினும் பின்னழகர், வீதி விடங்கப்பெருமான் எனப் பரியாயப் பெயர்களிட்டு அழைப்பது, இப்பெருமானிடத்து அடியவர்கள் கொண்ட பக்தியையும் தெய்வநல ஈடுபாட்டினையும் குறிக்கும்.

திருவாரூர்த் தலத்திலுள்ள உருத்திரகோடி, கயை, சங்க தீர்த்தம், சர்வதீர்த்தம், சூரியபுட்கரிணி, தேவ தீர்த்தம், வாயு தீர்த்தம், விசுவாமித்திர தீர்த்தம் முதலியவற்றுள், **தேவதீர்த்தம்** என்பது **கமலாலயத் திருக்குளத்தைக்** குறிக்கும். இக்குளத்தின் நாற்புறத்தும் சிறு கோயில்களும், நடுவே நீராழி மண்டபத்

1. தியாகராஜசுவாமி திருக்கோயில் (திருவாரூர்) திருக்குடமுழுக்கு விழா மலர் 1988 பக்.3

திருக்கோயிலும் அமைந்துள்ளன. "பண்டைக்காலத்தில் (கமலாலயமாகிய) இதில் ஒரு யாகம் நடந்த பொழுது நடுவநாயனார் என்னும் சிவலிங்கப் பெருமான் பரிவாரங்களுடன் இதன் இடையே பிரதிஷ்டிக்கப் பெற்றாரென்று திருவாரூர் மாலையால் தெரிகின்றது"[1] என வருங் குறிப்பால் இதன் பெருமை உணரலாம்.

தியாகேசர் வழிபாட்டிற்கென மலர்கள் கிடைச்கும் **வண்ணம் செங்கழு நீரோடை** ஒன்று உள்ளது. திருவாரூர்ப் பெருமான் **கோயில், கமலாலயத் திருக்குளம், செங்கழு நீரோடை** ஆகியவை ஒவ்வொன்றும் **ஐயைந்துவேலிப்** பரப்புடைமை கொண்டு இத் தலத்தின் மாட்சியைப் புரிந்து கொள்ளலாம்.

தியாகேசருக்குப் புரிந்திடும் ஆராதனைகளில் **திருவந்திக் காப்பு** நடைபெறுங் காலம் மிகச்சிறப்புடையது என்பர்.

5.1. திருவாரூர் - கட்டடக் கலைக் கூறுகள்:

தியாகேசனின் பொற்கோயில் தொன்மைச் சிறப்பாலும் கலை மாட்சியாலும் மிகுபுகழ் கொண்டது. பெரும்பரப்புடைய இந்திருக்கோயில் **சுந்தரமூர்த்தி நாயனார் — பரவை நாச்சியார்** வரலாற்றுடன் தொடர்பு கொண்டது. தேவாரமூவர், சேரமான் பெருமாள் நாயனார், கழற்சிங்கநாயனார், செருத்துணை நாயனார். தண்டியடிகள் நாயனார். திருநீலகண்ட யாழ்ப் பாணர், விறல்மிண்ட நாயனார் முதலியோர் இந்தத் தியாகப் பெருமானை வழிபட்டு அருள் பெற்றுள்ளனர். இதனால், இக் கோயிலின் சிறப்பினை நன்கு உணரலாம். திருத்தில்லைக்கும் தொன்மையதாகக் கருதப்பெறும் திருவாரூரின் திருக்கோயில் வளாகத்தில் நடுநாயகமாக விளங்குவது **வன்மீகநாதரின் பூங் கோயிலாகும்;** அக் கோயிலையொட்டித், **தென்புறமாகவுள்ள கற்றளியே தியாகப்பெருமான் திருக்கோயிலாகும்.** இவை பற்றிக் **குடவாயில் பாலசுப்பிரமணியன்,** "இவ்விரண்டு திருக்கோயில்களின் மகாமண்டபப் பகுதிகள் இணைக்கப்பட்டு ஒரே கோயிலாகக் காட்சி நல்குகிறது. பூங்கோயிலாம் கற்றளி தொன்மையான

1. தியாகராஜசுவாமி திருக்கோயில் (திருவாரூர்) திருக்குடமுழுக்கு விழாமலர், பக். 3.

ஒன்றாகும். தியாகராஜர் கற்றளி, முதலாம் இராஜேந்திர னால், பரவை என்ற நங்கையின் வேண்டுகோளுக் கிணங்க, கி.பி. 1029—31 இல் எடுக்கப்பட்டது என்பதை இக்கோயிலில் உள்ள கல்வெட்டொன்று (080 of 1919-தி.க. எண்.72 கூறுகிறது. முன்பு செங்கற்கோயிலாக இருந்ததைக் கற்கோயிலாக எடுத்தது மட்டுமின்றி, பரவை என்ற அந்நங்கைநல்லாரின் விருப்பத் திற்காக ஸ்ரீ விமானத்திற்கும் கருவறையின் சுவர்களுக்கும் இரா சேந்திர சோழன் பொன் வேய்ந்தான். 26643 கழஞ்சு நிறை யுள்ள பொற்றகடுகள் விமானத்தையும் சுற்றுச் சுவர்களையும் அலங்கரித்தன. இதனை இக்கற்றளியில் உள்ள கல்வெட்டொன்று,

> 'உடையார் வீதிவிடங்க தேவர் குடத்திலும் வாய்
> மாடையிலும் நாலு நாசியிலும் உள் குடத்திலும்''

என்று கூறுகிறது.

கருவறையின் கதவுகளுக்கும் மண்டபத் தூண்களுக்கும் 42000 பலம் எடையுள்ள செம்பினால் தகடு சாத்தப்பட்டதாகவும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது: கங்கை முதல் கடாரம் வரை வென்ற ஒரு சோழப் பெருமன்னன் தன் அருமைக் காதலி பரவை நங்கை என்ற பெண்ணரசியின் வேண்டுகோளுக்காக இத்தனையும் செய்த ஓர் திருக்கோயிலே இன்று நாம் காணும் இவ்வெழிலுறு கற்கோயில்''[1] என்று எழுதிச் செல்வது பண் பாட்டு அடிப்படையில் குறிக்கத்தக்க செய்தியாகும்.

சமயவளர்ச்சியில், சிறப்பாகக் கோயிற் பண்பாட்டு வளர்ச்சி யில் மாமன்னர்களும் மக்களிரும் எவ்வாறெல்லாம் தொண்டு புரிந்துள்ளனர் என்பதை இவ்வாறான கல்வெட்டுச் செய்திகளால் அறிந்து இன்புறலாம்.

கட்டடக்கலைச் சிறப்புக் கூறுகள் என்ற அடிப்படையில் காண்கையில், இத்திருக் கோயிலிலுள்ள முதற் பிராகாரத்தின் தளம் தாழ்ந்திருந்து பிற்காலத்தில் உயர்த்தப்பட்டது என்பதும் கருவறையின் உபபீடப்பகுதி தளத்தில் புதைந்துள்ளது என்பதும் அறியலாகும். ''தற்போது பத்ம பீடத்தின் இதழ்கள் அழகுற மேல்நோக்கி வளைந்து உள்ளன. பத்மத்திற்கு மேல் குமுதவரி

1. திருவாரூர்த் திருக்கோயில் (1988), பக். 67-68.

வளைவுபடத் திகழ்கிறது; அதன்மேல் யாளிவரிமானம் பெரிய அளவில் தொடர்கிறது. இவற்றின் ஒவ்வொரு மூலையிலும் வீரர்களின் சிற்பங்கள் உள்ளன. யாளிவரிமானத்திற்கு மேல் வேதிகையும், கால், போதிகை, உத்திரம் எழுதகம் போன்றவையும் அமைந்துள்ளன. கபோதம் யாளம் அடங்கிய பிரஸ்தரமாகத் தொடர்கிறது. மூன்று கோஷ்டங்கள் உள்ளன. அதில் முறையே தென்புறம் ஆலமர் செல்வரும், மேல்புறம் ஆழியும் சங்கும் ஏந்திய திருமாலும், வடபுறம் நான்முகனும் இடம் பெற்றுள்ளனர். கோஷ்ட தோரணங்கள் இருபுறமும் வளைவுகளுடன் காணப்படுகின்றன.

சிகரம் வட்ட வடிவ அமைப்பிலும் நான்கு மூலையிலும் நந்திகள் பெற்றும் திகழ்கிறது, தளத்தில் யாளி வரிமானம் ஒன்றும் உள்ளது. கிரீடமும் சிகரமும் அழகிய சுதைவேலைப்பாடுகளுடன் உள்ளன. மகாநாசிக் கூட்டுக்குக் கீழ் தேவதையர்களின் சிற்பங்கள் உள்ளன.

கருவறையுடன் இணைந்த அந்தராளம் ஆறு தூண்களுடன் அழகுமிக்க தேவசபையாக மிளிர்கிறது. இதன் தென்புறமும் வடபுறமும் பலகணிகள் உள்ளன. இதற்கு முன்பு உள்ள மகா மண்டபம் பிற்காலத் திருப்பணிகளுக்கு உட்பட்டாலும் மூலத்தானத்தின் மகா மண்டபத்துடன் இணைந்தே உள்ளது. வாயிற்படிகள் தென்புறத் திருச்சுற்றில் உள்ளன''[1] என்று விளக்கஞ் செய்வது கலைநோக்கில் கருதத் தக்கது.

ஆயிரக்கால் மண்டபங்கள் தமிழ்நாட்டில் தில்லை முதலிய எட்டுத் திருப்பதிகளில் உள்ளன. அவற்றுள் திருவாரூரில் உள்ள ஆயிரக்கால் மண்டபம் உள்ள பகுதியில், ஒரு காலத்திலே தேவாசிரியன் அல்லது தேவாசிரயம் எனும் மண்டபம் இருந்துள்ளது. இறைவழிபாட்டிற்கென ஆர்வமுடன் வரும் தேவர்கள் முதலியோர் தக்க சமயம் (செவ்வி) நோக்கிக் காத்திருந்து - தங்கியிருக்க - இந்த மண்டபம் பயன்பட்டுள்ளது என்பர்.

நூற்றெட்டுச் சிவலிங்கங்கள், சிறப்புமிகு விநாயகர்கள், முப்பத்து மூவர், நவதுர்க்கைகள், ஒரே வரிசையில் நவக்கிரங்கள்

1. திருவாரூர்த் திருக்கோயில், பக். 68-69

முதலிய சிற்பக் கலைநலத்துடன் கூடிய தெய்வநலச் சிறப்பை நோக்குகையில் ஒன்பது கோபுரங்களும் அறுபது விமானங்களும் கட்டடக்கலை நோக்கில் அமைந்திருப்பது திருவருட் பொருத்தமே என்று சைவ மெய்யன்பர்கள் கூறிக் களிகொள்வர்.

இங்குள்ள அனைத்துக் கலைநலச் சிறப்புக்களுடன் கூடிய திருவாரூர் திருக்கோயிலைச் சிந்திக்கையில்,

> "ஆருரான் சந்நிதிபோல் ஆருரான் ஆலயம்போல்
> ஆருரான் பாதத் தழகுபோல் - ஆரூர்
> மருவெடுத்த கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே
> ஒருவிடத்தில் உண்டோ உரை"[1]

எனும் அருமையான வெண்பா நினைவிற்கு வருவது இயல்பே.

6. காஞ்சிபுரம் - பெருமைக் கூறுகள்:

ஐம்பூதத் தலங்கள் **என்ற** பார்வையில் காஞ்சியும், திருவாரூரும் பிருதுவித் தலங்களாகப் போற்றப்படும். திருவாரூர் தில்லைத் தலத்துக்கும் தொன்மையதாக விளங்கிய தலம் என்பர்; காஞ்சி, சமயத் தலங்களுள்ளும், நகரங்களுள்ளும் மிகச் சிறந்தது என்பர். ஈண்டுக் காஞ்சித் தலத்தின் பெருஞ்சிறப்பினைச் சிறிது காண்போம்.

சைவ சமயநோக்கில் காஞ்சி **அருள்மிகு** காமாட்சியம்மையின் **திருக்கோயிலையும்**, காஞ்சி **அருள்மிகு** ஏகாம்பரநாதர் **கோயிலையும்** பற்றி முதற்கண் சிந்திப்போம்.

பாரதத்திலுள்ள ஐம்பத்தொரு சக்தி பீடங்களில் மிகச் சிறப்பினதாகிய **காமாட்சியம்மன் கோயில்**, **காமராச பீடம்** என்றும், **காமகோடி பீடம்** என்றும் வழங்கப்படுகிறது. ஸ்ரீ வித்யா மந்திரங்களினால் உபாசிக்கப்பெறும். **ஸ்ரீ லலிதா திரிபுர சுந்தரியின் பூர்ணபிம்ப சுவரூபிணியாகத் திகழ்வது ஸ்ரீ காஞ்சி காமாட்சியம்மையின் மூலவிக்ரகம் ஒன்றே** என்பது தெளிவு. அடியவர்களின் காமங்களை (விருப்பங்களை)ப் பூர்த்தி செய்கின்ற **'அக்ஷி'** - கண்களையுடையவள் என்ற பொருள்படக் **'காமாக்ஷி'** என்று

---

2. தஞ்சை-சரசுவதி மகால் கையெழுத்துப் பிரதியிலுள்ள ஒரு பழம்பாடல்

போற்றப்படும் இந்த அருட்சக்தியே பராசக்தியின் உண்மையான திருவுருவம் என்பது நினைவிற் கொள்ளத் தகும்.

உலக அன்னையாகிய காமாட்சி, தன் வலக் கண்ணால் நான்முகனையும், இடக் கண்ணால் திருமாலையும் அருளுகின்ற வகையில், நான்முகனுக்குக் **'கா'** எனும் கலைமகளையும், திருமாலுக்கு **'மா'** எனும் திருமகளையும், தன் கண்கள் வாயிலாகக் கிடைக்கும்படி செய்தருளியமையால் **காமாட்சி** எனப் பெயர் பூண்டிருக்ககிறாள் எனப் புராணங்கள் கூறும். சிலர், **கா** எனும் கலைமகளையும் **மா** எனும் திருமகளையும் தன் இரு கண்களாகவே கொண்டு இவ்வுலகத்தைப் பரிபாலிக்கிறாள் என்றும் கூறுவர். காமாட்சியின் பெருஞ்சீர்த்தியுணர்ந்த **ஆதி சங்கரர்** இங்கு ஸ்ரீ சக்கரத்தை அந்த அன்னையின் திருமுன்னர் நிறுவினர்; எனினும் தொன்மைக் காலத்திலே காஞ்சி மாநகரம் ஸ்ரீ சக்கர அமைப்பில் நகரமைப்பினைக் கொண்டது என்பர்.

காமாட்சியம்மன் கோயில் தமிழ்நாட்டில் பல ஊர்களில் அமைந்திருந்தாலும், சமயவுலகில் பலர் நினைவிலும் நிற்பது காஞ்சி காமாட்சியம்மன் திருக்கோயிலாகும்.

காஞ்சிபுரத்தில் **சக்திச் சிறப்புக்குக்** காமாட்சியம்மன் கோயிலும், **சிவன் சிறப்புக்கு** ஏகாம்பரநாதர் கோயிலும், **திருமால் சிறப்புக்கு** வரதராசப் பெருமாள் கோயிலும், **குமரவேள் சிறப்புக்குக்** குமர கோட்டமும் முதன்மை நிலையில் குறிப்பிடத் தக்கவை. பற்பல கோயில்கள் நிறைந்து சமயமாட்சி கொண்டதாய் விளங்கும் **காஞ்சிபுரம்** சமய வரலாற்றிலும் கலைப் பண்பாட்டு வரலாற்றிலும் ஈடிணையற்ற பெருமை கொண்டுள்ளது என்பதை உலகம் அறியும்.

6.1. காஞ்சி அத்திகிரிப் பெருமாள் (வரதராசப் பெருமாள்) கோயில் - கட்டடக்கலைக் கூறுகள்.

முன்னொரு காலத்தில் காஞ்சியில் திக்கு யானை (அத்தி) கள் வந்து பெருமாளை வழிபாடு செய்தமையால், அது காரணமாக அந்தப் புனித இடம் **அத்திகிரி** என வழங்கலாயிற்று என்பர். இந்திரனது ஐராவதம் இங்கு வந்து, தானே மலை வடிவங்கொண்டு பெருமாளுக்குக் கைங்கரியம் செய்தமையால் இப்பெயர் ஏற்பட்டது என்றுங் கூறுவர்.

இந்தக் கோயிலின் அமைப்பு, விமானம், மண்டபம், திருச் சுற்று, திருக்குளம் முதலிய அனைத்துமே ஆகம முறைப்படியும் தத்துவநோக்கத்திலும் உள்ளமையைப் புகழ்ந்து போற்றுவர்.

இந்தக் கோயிலில் கீழ்ப்பிராகாரத்திலிருந்து சில படிகள் ஏறி ஒரு சிறு மண்டபத்தை யடையுமாறும், இந்தச் சிறு மண்டபத்தி லிருந்து 24 படிகளை ஏறிக்கடந்து அத்திகிரியைக் காணுமாறும் கோயிலமைப்பு இருத்தலைக் காணலாம். இந்தப் படிகளில் ஏறிச் செல்லுங்கால் தத்துவப் பொருளாகவும் தத்துவங்கடந்த பொருளாகவுமுள்ள எம்பெருமான் இவ்வுலகைப்படைக்கக் காரணமாகவுள்ள 24 தத்துவங்கள் நினைவிற்கு வரும்.

(இருபத்து நான்கு தத்துவங்கள்: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகிய தன்மாத்திரைகள் 5, வாய் கண் மெய் செவி மூக்கு ஆகிய பொறிகள் 5, வாக்கு பாணி பாயு பாதம் உபத்தம் ஆகிய கருமேந்திரியங்கள் 5, நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய பூதங்கள் 5. இவை இருபதுடன் பிரகிருதி, மகான், அகங்காரம், மனசு, ஆக 24 தத்துவங்கள் பொதுவாகக் கணக் கிடப்பெறும். வைணவ தத்துவ அடிப்படையில், இவை இரு பத்து நான்கினூடே கலந்து விளங்கும் புருடன் (சீவான்மா) 24 படிகள் கடந்து, மகா புருடன் (பரமான்மா) காட்சி கண்டு பேரின்பந்துய்க்க வேண்டும் என்பது கருத்து. ஆகவே தத்துவங் கள் 26 என ஆகும்).

காஞ்சியில் பலநோக்கில் காணத்தக்க ஆலயங்கள் (சிறந்த கட்டடக்கலைக் கூறுகள் நிறைந்தவை; பல உள்ளன; விரிக்கிற் பெருகும்.

7. திருக்காளத்தி - சிறுகுறிப்பு:

ஐம்பூதத்தலங்களுள் பிருதுவி(மண்) தலங்களாகத் திருவாரூரையும், காஞ்சிபுரத்தையும் பற்றிச் சிந்தித்தோம். முன்னரே வான் தலமாகிய திருத்தில்லையையும், அனல் தலமாகிய திருவண்ணாமலையையும், நீர்த்தலமாகிய திருவானைக்காவையும் பற்றியும் ஓரளவு விளக்கமாகக் கண்டோம். எனினும், காற்றுத் தலமாகிய திருக்காளத்தியின் பெருமையை நினைவிற்கொண்டு

சிந்திக்கவேண்டியது பொருத்தமேயாகும். அன்பின் பிழம்பாக விளங்கிய கண்ணப்பநாயனாருடன் பெருமை பெற்றுள்ள திருக்காளத்தி,முன்பு தமிழ்நாட்டைச்சேர்ந்ததேயெனினும் இக்காலத்தில் ஆந்திர நாட்டில் உள்ளது; கலைநோக்கில் காணத்தக்கதே.

கட்டடக் கலைநோக்கில் தமிழ்நாட்டுப் பெருங்கோயிலுக்குரிய கருவறை, கோபுரம், பெரிய திருச்சுற்றாலை, மண்டபங்கள், பரிவாரக் கோயில்கள் அடங்கிய திருக்காளத்தியப்பா கோயில் சமயச்சிறப்புடன் காணத்தக்கது. இந்தக்கோயிலில் காணலாகும் நகரத்தார் திருப்பணி மிகவும் போற்றற்குரியதாகும்.

இக்கோயிலின் கருவறையில், இது வாயுத்தலம் என்பதை உணர்த்தும் வகையில் திருவிளக்கின் சுடர் (காற்றால் அசையும் வண்ணம்) அமைந்திருப்பது வியத்தற்குரிய சமய மேன்மையைப் புலப்படுத்தும்; சமயக் கட்டடக்கலைச் சிறப்பையும் உணரச் செய்யும்.

8 திருவிடைமருதூர்க்கோயில் - பெருமைக் கூறுகள்

பொதுவாகப் பழைய சிவாலயங்களிலே கருப்பகிரகத்தில் சிவலிங்கத் திருமேனி அமைந்திருக்கும். அவ்வாறான இலிங்கங்கள் கும்பலிங்கம், அமிர்தலிங்கம், குற்றாலலிங்கம் முதலிய பல பெயர்களில் அமைந்திருக்கும். ஆனால், திருவிடைமருதூரில் எழுந்தருளியுள்ள இலிங்கம், அனைத்து இலிங்கங்களுக்கும் சிறந்த பெருமையுடையதாக 'மகாலிங்கம்' என்றே அழைக்கப் படுகிறது.

வரலாறு, புராணம், கலை, சமயம், பண்பாடு ஆகிய பல வகையிலும் சிறப்பினைப் பெற்றுள்ளது திருவிடைமருதூர்க் கோயிலாகும். பொதுவாகச் சிவாலயத்தில் சதாசிவம் எனும் சிவலிங்கத் திருமேனியின் பெருமைக்கு ஏற்றம் தரும்வகையில், பரிவார மூர்த்திகளாக விநாயகர், முருகர், சண்டேசுவரர், சோமாஸ்கந்தர், தட்சணாமூர்த்தி, நந்திகேசுவரர், வைரவர், நவக்கிரகங்கள், கோயில் வளாகத்திலே தனித்தனிச் சிறு கோயில்களில் அமைந்திருத்தலைக் காணலாம். அத்தகைய தனிச்சிறு கோயில்களைப் பரிவாரச் சுற்றாலயங்கள் என்றும் துணைக் கோயில்கள் என்றும் வழங்குவர். இதனை மனத்துட்கொண்டு, திருவிடைமருதூர்க்கோயிலை நோக்குகையில் இக்கோயிலின் பல்வேறு

கட்டட அமைப்பும், சூழலும் மாட்சியும் இனிது புலப்படும். மிகச்சிறந்த கோயிலைத் தொன்மைச் சிறப்புடன் காண இத் தலம் நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

திருவருட் செல்வர்களால் பாடல் பெற்றவையும், பெரும் புகழ் பெற்றவையுமான சிறந்த பல கோயில்களைத் தனக்குப் பரிவாரச் சுற்றாலயங்களாகவே கொண்டு, அவற்றிற்கெல்லாம் நடுநாயகமாக வீற்றிருந்து, கருவறை போற் சிறந்து விளங்கும் பொலிவினையுடையது திருவிடை மருதூர்த் திருக்கோயிலாகும்.

''திருவிடை மருதூர்க் கோயிலைத் தமிழகம் அல்லது சோழ நாடு என்னும் ஒரு பெருஞ்கோயிற் பரப்பின் கருவறையாகக் கொண்டால் திருவலஞ்சுழி விநாயகர்க்கும், சுவாமிமலை முருகர்க்கும், திருச்சேய்ஞலூர் ஆப்பாடி சண்டேசுரர்க்கும், தில்லைச் சிதம்பரம் நடராசர்க்கும், திருவாரூர்ப் பூங்கோயில் சோமாஸ் கந்தர்க்கும், திரு ஆலங்குடி தட்சணாமூர்த்திக்கும், திருவாவடு துறை நந்தி தேவர்க்கும், சீர்காழி பைரவர்க்கும் (சட்டையப் பருக்கும்), மாந்துறை சூரியனுக்கும் முறையேயுரிய பரிவாரச் சுற்றாலைக் கோயில்களாக அமைந்திருந்தலை யாவரும் அறிந்து கண்டு இன்புறலாம்''[1] என வருங்குறிப்பு, கோயிற் பண்பாட்டு அடிப்படையில் சிந்திக்கத் தக்கதாகும்.

இத்தகைய பெருமாட்சியினை நன்குணர்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தாம் இயற்றியுள்ள திருவிடைமருதூர் உலாவில்

''ஒப்பேதும்
இல்லா வலஞ்சுழியே ஏரம்பன் வைப்பாக
மல்ஏரகம் முருகன் வைப்பாக — நல்லார்சேர்
தண்மாட ஆப்பாடி தண்டீசன் வைப்பாக
வண்மாந் துறைஇரவி வைப்பாக — எண்மாறா
நன்காமர் தில்லை நடராசன் வைப்பாக
வன்காழியே வடுகன் வைப்பாக — முன்காணும்
தென் ஆவடுதுறையூர் சே அமர் வைப்பா ஆரூர்
மன்னு சோமாக் கந்தர் வைப்பாக — உன்னில்

1. திருக்கோயில் (திங்களிதழ்) ஜூன், 1970.

தடைதவிர் **ஆலங்குடி** ஆசாரியன் வைப்பாக்
இடைமருதில் வீற்றிருக்கும் ஏற்றமிகும் ஈசன்

எனவரும் கண்ணிகளால் உணர்த்தியுள்ளார். இவ்வாறாகச் சிறப்புறும் திருவிடைமருதூர்க் கோயிலைக் **'கோயில்களின் கோயில்'** என்று ஆன்றோர் குறிப்பிடுவர்.

கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகரும் இத்தகைய கோயில் மாட்சியைப் புலப்படுத்தும் வகையில்,

''அணிமருவும் இடைமருதீ சருக்கு நந்தி
ஆவடுதண்துறை; சோமாக் கந்தர் **ஆரூர்**
திணிபுகழ் **ஆலங்குடியிற்** குருமூர்த்தி; ஆனைத்
திருமுகத்தோன் வலஞ்சுழி; **ஏரகத்தில்** செவ்வேள்
கணிதரும் **ஆப்பாடியிற்** சண்டீசன்; **தில்லைக்**
கதிர்ப்பொதுவில் நடக்கடவுள்; வடுகன் **காழி!**
பணைமருவும் **மாந்துறையில்** இரவி ஆகும்!
பரமனெழிற் பதயலருக்கு அன்பு செய்வாம்''[2]

எனப்பாடிச் செல்வதைக் காணலாம். **'கோயில்'** என்றாலே சைவப் பெருமக்களுக்குத் தில்லை தான் நினைவிற்கு வரும்; அத்தகைய விண் தலமே, மகாலிங்கப் பெருமானது திருவிடைமருதூருக்குப் பரிவாரச் சுற்றாலைக் கோயில்களுள் ஒன்றாக ஆகிவிடுவது மிகவும் சிந்திக்கத் தக்கதாகும்.

9. ஆறுமுகனின் படைவீடுகளும் தத்துவமும்:

'படைவீடு' என்னின் சேனைகள் - படைகள் - தங்கும் இடமாகும். பகைமேற் சென்றோர் தங்கும் பாசறையையும் மன்னனது தலைநகரையும், படைக்கலங்கள் இருக்குமிடத்தையும் இது குறிக்கும். வீரம் விளைவிக்கும் குறிஞ்சிக் கடவுளாகிய திருமுருகன் குன்றுதோறும் ஆடுகின்ற பெருமையினன்; எனினும், உகந்த படை வீடுகளாகத் **திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய்** (திருச்செந்தூர்), **திருவாவினன்குடி** (பழநி). **திருவேரகம்** (சுவாமி மலை), **குன்று தோறாடல்** (திருத்தணி), **பழமுதிர்சோலை** ஆகிய

1. திருக்கோயில் ஜீன், 1870
2. திருவிடைமருதூர்த் தல புராணம்.

ஆறு தலங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. **திருமுருகாற்றுப்படை** எனும் தொன்மையான தமிழ்நூலில் முதன்முதலாக இந்த **ஆறுபடை வீடுகள் போற்றிக் கூறப்படுகின்றன.**

அருணகிரிநாதரின் திருப்புகழிலும், **குமரகுருபரரின்** கந்தர் கலி வெண்பாவிலும் **ஆறுபடை வீடுகளின்** சிறப்பு இனிதாகக் கூறப்படுகிறது. கந்தர்கலிவெண்பாவில் **''ஆறு திருப்பதி''** என்றே ஆறுபடை வீடுகள் குறிக்கப்படுதல் காண்க. தேவாலயத்துக்கு ஒப்பான மானுடவுடலில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்கள் உள்ளன. அவை உடம்பின் கீழ்ப்பகுதியிலிருந்து நெற்றி வரையில் அமைந்துள்ளன. ''மூலாதாரத்தில் குண்டலினி சக்தி உருப்பெற்று எழுந்து ஒவ்வொரு ஆதாரத்துக்கும் வரும்போது ஒரு புதிய ஞானபூமி காட்சிக்கு எட்டுகிறது. புதிய முகங் கொண்டு காண்பதற்கு அஃது ஒப்பாகிறது. ஏழாவது சக்கரம் அல்லது ஆதாரத்துக்கு **சஹஸ்ராரம்** என்று பெயர். ஜீவன் அங்குச் செல்லும் போது அவனுக்கு **ஜீவபோதம் கிடையாது. சுத்த சிவத்தில் இரண்டற அவன் கலந்து விடுகிறான்.** பிறகு **சிவகுமாரன்** என்று அழைப்பதற்கு ஒன்றும் மிச்சமில்லை. அதற்குக் கீழே **ஆறு ஆதாரங்களிலும்** அவன் வேறு வேறு சொரூபங்கள் எடுத்து விளையாடலாம். **ஆறு ஆதாரங்களை ஆறுபடை வீடுகள்** என்றும் பகர்வது உண்டு. சரீரத்தில் இருக்கின்ற ஆறுபடை வீடுகளுக்கு ஒப்ப மண்ணுலகிலும் அவனுக்கு ஆறுபடை வீடுகள் கற்பனையாக அளிக்கப்பட்டிருக்கின்றன''[1] என்பர் **சுவாமி சித்பவானந்தர்.**

10. திருப்பரங்குன்றம் — பெருமைக் கூறுகள்:

மதுரை மாநகரின் தென்மேற்கில் 8 கி.மீ. தொலைவிலே அமைந்துள்ள திருப்பரங்குன்றம் ஆறுபடைவீடுகளுள் முதலாவதாகும். சூரபன்மனுடன் போர்புரிந்து வெற்றிகொண்ட நிலையில் கந்தப்பெருமான் தேவயானையைத் திருமணம் புரிந்து கொண்ட திருத்தலம் இது.

1. கடவுளின் வடிவங்கள், பக். 95

திருப்பரங்குன்றக் கோயில் வட்டவடிவப் பாறைக் குன்றில் அமைந்துள்ளது. மூலத்தானம் ஒரு பண்டைய குடைவரைக் கோயிலுள் காணலாம். பாண்டியரின் சிற்பச்சிறப்பினைக் கொண்ட இத்திருக்கோயிலில் திருமுருகனின் திருவுருவம் பாறையிலேயே குடைந்து வடிக்கப்பட்டுள்ளமை காணத்தக்கது. அத்திருவுருவம் ஒருமுகத்துடனும் நான்கு கரங்களுடனும் பொருந்தி வடக்கு நோக்கி அயர்ந்த கோலத்தில் உள்ளது. இத்திருக் கோலத்தினைச் சூரியன், சந்திரன், சித்தர், விஷ்ணுவித்யாதரர், பிரமன், இந்திரன், கலைமகள், நாரதர் முதலானோர் பக்தியுடன் கண்டு போற்றி வழிபடுவதைக் காணலாம். இவை யாவும் மலையில் செதுக்கப்பட்ட சிற்பக் களஞ்சியமாகும். மூலவருக்குக் கீழே ஆடு சேவல் யானை மயில் நான்கும் இந்தக் கந்தப்பெருமானின் ஊர்திகளாக வடிக்கப்பட்டுள்ளன.

சங்க காலத்திலேயே திருப்பரங்குன்றம் மிகச்சிறப்புடைய வழிபாட்டுத் தலமாக விளங்கியதைப் பரிபாடல் அகநானூறு திருமுருகாற்றுப்படை முதலிய இலக்கியங்களால் உணரலாம்.

வரலாற்றுக் காலங்களில் திருப்பரங்குன்றக் கோயில் வளாகம் படிப்படியே கலைநோக்கில் சிறப்பினைப் பெற்று வந்துள்ளது.

10.1. திருப்பரங்குன்றம் - கட்டடக் கலைக் கூறுகள்.

பாண்டிய மன்னர்களின் தலைநகராகிய மதுரை அருகில் திருப்பரங்குன்றம் அமைந்திருந்தமையின், அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டு அக்கோயிலின் எழிலை மிகுதிப்படுத்திக் கொண்டே வந்துள்ளனர். "முற்காலப் பாண்டியர் காலத்துக் குடைவரையாகத் தோற்றம் பெற்று, இடையில் பிற்காலப் பாண்டிய மன்னர்களால் பல்வேறு காலங்களில் சிறப்புப் பெற்று, நாயக்கர் காலத்துக் கவின்மிகு மண்டபங்களையும், எழில் வாய்ந்த எழுநிலை மாடங்களையுடைய கோபுரத்தையும் ஏற்றமுடன் பெற்று மிளிர்கின்றது.

குடைவரைக் கோயில்கள் இங்கு இரண்டு உள்ளன. மலைக்குத் தென்புறமொன்றும், வடபுறமொன்றுமாக இவை அமைந்துள்ளன: தென்புறமுள்ள குடைவரைக்குச் சற்றுத்

தள்ளிச் சமணர்களின் குகைத் தளமும் அமைந்து கிடக்கிறது'[1] என்றும், "வடபுறம் இன்று வழிபாட்டிலிருக்கும் கோயில் ஆத்தான மண்டபம், திருக்கல்யாண மண்டபம். கம்பத்தடி மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம் எனப் பல்வேறு மண்டபங்களையும் பெற்றிருக்கிறது. மலையின் வடபகுதி பெரும் பான்மை கோயிலைச் சார்ந்த வண்ணம் உள்ளது.

முற்காலப் பாண்டியர்களின் சிற்பக் கலைக்கும் குடைவரை அமைப்புக் கலைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இது திகழ்ந்து வருகிறது"[2] என்றும் **செ. போசு** எழுதிச் செல்வது கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியில் சிந்திக்க தக்கதாகும்.

11. திருச்செந்தூர் - பெருமைக் கூறுகள்:

திருமுருகனின் ஆறுபடைவீடுகளுள் ஒன்றான திருச்செந்தூர். **திருமுருகாற்றுப் படையில் 'திருச்சீரலைவாய்'** எனப் போற்றப்படுகிறது, புராணப் பின்னணியை நோக்குகையில், தேவர்களைச் சிறை வைத்துப் பலருக்கும் கொடுமை புரிந்த சூரபதுமனிடம், வீரவாகுத் தேவரைத் தூதுவராக அனுப்பித் தேவர்களை விடுவிக்கும்படி வேண்டுகோள் விடுத்தும் கேளாமையால், கந்தப்பெருமான் போர்புரிந்து அவனை அழித்துத் திருச்செந்தூர் வந்து வெற்றிவிழாக் கொண்டாடினான் என்ற செய்தி புலப்படும்.

கந்தப் பெருமான் **விசயாபிடேகம்** செய்து கொண்ட தலமாதலின் திருச்செந்தூர் **'ஜயந்தி'** என வழங்கப்பெற்று, அதுவே **செந்தி. செந்தில், செந்தூர்** என மருஉப் பெயர்கள் கொண்டது என்பர்.

திருச்செந்தூரில் முருகப்பெருமான் தனியாக நிற்கும் கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் காணப்படுகிறார். மேலிரு திருக் கரங்களிலே ஒன்றில் உருத்திராக்க மாலையும், மற்றொன்றில் மலரும் உள்ளன; ஏனைய இரு திருக்கரங்களுள் ஒன்றில் அபய முத்திரையும் மற்றொன்றில் வரத முத்திரையும் அமைந்திருத்தலைக் காணலாம்.

1. திருப்பரங்குன்றம் (மணிவாசகர் நூலக வெளியீடு), பக். 57
2. மேலது, பக். 57-58

கந்தப்பெருமான் இங்கே சிவபெருமானை வழிபட்டுச் சிறப்பினைக் கொண்டதாக ஒரு வரலாறு உண்டு. சிவனாக விளங்கிய **பஞ்சலிங்கங்கள்** மூலத்தானத்திற்குப் பின்னே இரகசிய அறையில்-பாம்பறையில் - உள்ளன என்பர்.

செந்தில்நாயகனாம் மூலவரைக் கண்டு வழிபாடாற்றிய நிலையில் ஆறுமுகப் பெருமான் சந்நிதியை அடைந்தால், அங்கே இறைவன் ஆறுமுகங்களுடன் காண்டல் அரிது. சந்தனத்தால் மற்றத் திருமுகங்களை மறைத்த நிலையில், நேரே காணலாகும் ஒரு முகத்தை மட்டும் தரிசிக்கும்படி அமைப்பு உள்ளது. இந்த விக்கிரகம் பற்றிய வியத்தகு வரலாறும் உண்டு.

பதினேழாம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து கொண்டு திருமலைநாயக்கர் ஆண்டு வருகையில், திருநெல்வேலி வட்டாரப் பொறுப்பை மேற்கொண்டவர் **வடமலையப்பப் பிள்ளையன்** ஆவார். அவர் தமிழ்ப்புலமை கொண்ட பெரும் முருக பக்தர்.

அக்காலத்தில், ''டச்சு நாட்டுக் கடற்கொள்ளையர் திருச்செந்தூர் வந்தனர். ஆலயத்தில் இருந்த ஆறுமுகப் பெருமானின் திருவுருவம் தங்கத்தினால் ஆனது என எண்ணித் திருடிச்சென்றனர். கப்பலில் ஏற்றிச் சிறிதுதூரம் சென்றதும், பெரும் புயலும், காற்றும், மழையும் தோன்றிக் கடல் கொந்தளித்தது. அஞ்சிய கொள்ளைக்காரர்கள் விக்கிரகத்தை நடுக்கடலில் தூக்கி எறிந்துவிட்டனர். ஆலயத்தில் விக்கிரகம் காணாது போன செய்தியறிந்த வடமலையப்பன் துடித்தார். எங்குத் தேடியும் கிடைக்காது போகவே, புதிதாக ஒரு விக்கிரகத்தை உருவாக்க ஆணையிட்டார். ஐந்து ஆண்டுகள் சுழன்ற நிலையில் ஒருநாள் இரவு, அவரது கனவில் முருகன் தோன்றினான்; ''நான் கடலில் இருக்கிறேன். என்னை அடையாளங் காட்ட அந்த இடத்தில் எலுமிச்சம்பழம் ஒன்று மிதக்கும். அங்கே தேடினால் காணலாம்'' எனத் திருவாய் மலர்ந்தருளினான்.

அதுபோலவே செய்த நிலையில் ஆறுமுகப் பெருமான் கிடைக்கவே ஆலயத்தினுள் அவனை மீண்டும் நிறுவினர்.

'இந்நிகழ்ச்சி கி.பி. 1653 ஆம் ஆண்டு நிகழ்ந்ததைக் கல்வெட்டும் கூறுகிறது' எனவரும் செய்தி ஆறுமுகப் பெருமானின் ஒருவகைத் திருவிளையாடற் பெருமையேயாகும்.

அலையாடும் செந்திற் கடலோரம் அருளாடும் பெருமானிடம் பக்திகொண்ட வடமலையப்பப் பிள்ளையன் தம் பெயரால் கட்டிய மண்டபம் செந்திற்பதியில் காணலாம். அவரது பக்தியைப் போற்றும் வகையில் ஆவணித்திருவிழாவின்போது அம் மண்டபத்தில் திருச்செந்தில் வேலவன் எழுந்தருள்வது, சமயம் போற்றும் தமிழ்ப் பண்பாட்டு நோக்கில் போற்றத்தகுவதாகும்.

11.1. திருச்செந்தூர் - கட்டடக்கலைக் கூறுகள்:

செந்தில் திருக்கோயிலின் இராசகோபுரம் ஒன்பது நிலைகள் கொண்டதாய், நீண்ட தொலைவிலிருந்து வரும் அடியவர்களுக்குக் கலங்கரை விளக்கம்போல் அமைந்துள்ளது. நகரிலிருந்து இத்திருக்கோயிலுக்குப் போகும் வழியில் 48 தூண்களாலான முதலியார் மண்டபமும், 16 தூண்களாலான ரெட்டியார் மண்டபமும், அகத்தியர் கோயிலும் காணலாம் தூண்டுகை விநாயகர் கோயிலிலிருந்து இத்திருக்கோயிலுக்கு வரும் வழி முழுவதும் நிரந்தரமாகக் கூரை வேயப்பட்டிருப்பது அடியவர்களுக்கு ஆலயத்தில் வசதியாகவுள்ளது.

திருக்கோயிலின் முதல் மண்டபம் 124 தூண்களால் அமைக்கப்பட்டுச் சண்முக விலாசம் எனும் பெயரில் பெருமையுடன் விளங்குகிறது. ஆவணி, மாசி - திருவிழாக் காலங்களில் ஏழாம் எட்டாம் திருநாட்களில் உற்சவர் சண்முகர் இங்கு எழுந்தருளுதலைக் காணலாம். தெற்கு நோக்கிய இம்மண்டபத்திலிருந்து வடக்கு நோக்கிக் காணின் சண்முகர் சன்னிதியுள்ளது; நுழையும் போதே சண்முகப் பெருமானைக் கண்குளிரக் கண்டு கொண்டே செல்லலாம்.

திருக்கோயிலின் முதற் பிராகாரம் சுருளி மண்டபம் ஆகும். இப்பிராகாரத்தின் வழியே சென்றால் ஆலமர் செல்வன் சன்னிதியும், மயில் மீதமர்ந்துள்ள போர்க்கோல முருகனின் பெரிய

திருவுருவமும், அருணகிரிநாதர் சிலையும் அமைந்திருக்கக் காண லாம். வடக்குப் பிராகாரத்தில் நின்ற திருக்கோலத்தில் வேங் கடப்பெருமானும், இருந்த கோலத்தில் கஜலட்சுமியும், கிடந்த கோலத்தில் தேவியர் மூவருடன் அரங்கநாதரும் காட்சியளிக்க வழிபடலாம்.

12. திருவாவினன்குடி (பழநி)- பெருமைக் கூறுகள்:

தெய்வநலஞ் சான்ற ஆறுபடைவீடுகளுள் ஒன்றான திரு வாவினன்குடி - பழநி - தமிழ்நாட்டுத் தலைமைக்கோயில்களுள் ஒன்றாகக் கருதப்படத்தக்கது.

தொன்மைத் தமிழகத்தில் ஐவகை நிலங்களுள் குறிஞ்சிநிலக் கடவுளாய் விளங்கிய முருகன் ஆண்டிக்கோலத்தில் பழநித் திரு மலையில் அருட்செங்கோல் செலுத்தி வருகிறான். திருமுரு காற்றுப் படையில் நக்கீரப்பெருமான் திருவாவினன் குடிச் சிறப் பினைத் திருமுருகன் சிறப்புடன் இணைத்து இனிதே பாடிச் சென்றுள்ளார்.

ஆதிகாலத்தில் பழநிப்பதி, கொங்கு நாட்டின் உள்நாடு களாக விளங்கிய இருபத்து நான்கனுள் ஒன்றான வையாவிபுரி நாடு (வையாபுரிநாடு) என்பதனுள் அடங்கியிருந்தது. பழநிக்குப் பொதினி என்ற பெயர் இருந்ததாகவும் கூறுவர். பழநி, சிவமலை, சிவவெற்பு, ஞானமலை முதலிய பெயர்களாலும் அழைக்கப்படுகிறது

புராணப்பின்னணியைப் பார்க்கையில், சிவபிரான் கையி லிருந்த வியத்தகு மாம்பழத்தைப் பெற விநாயகப் பெருமானும் செவ்வேளும் விரும்பினர் என்றும், யார் உலகினை விரைவில் முதலாவதாக வலம் வருகிறாரோ அவருக்கே பழம் என்றும் இறைவன் கூறவே, விநாயகர் தம் தாய்தந்தையரையே உலக மாகக்கருதி வலம்வந்து பழத்தைப் பெற்றார் என்றும், செவ்வேள் மயில்மீதேறி உலகைச்சுற்றித் திரும்புகையில் பழம் தமக்குக் கிடைக்காமற் போகவே சினங்கொண்டு நிற்கலானார்; அவரைச் சமாதானப் படுத்தி இக்குன்றிலே இருத்திப் ''பழம்நீ'' எனப் பெற்றோர் ஆசி கூறிய நிலையில், பழநி (பழம்—நீ) எனப்பெயர் வந்தது என்றும் சில நிகழ்ச்சிச் செய்திகள் அறியலாகும். புராண

நிகழ்ச்சியினூடே தத்துவநுட்பங் காண்கையில், பெற்றோர் களிடமே உலகத்தைக் காணும் சூக்கும முறையும், உலகத்துப் பருப்பொருள்களினூடே உலகத்தைக்காணும் தூலமுறை (பருப் பொருளணுகு முறை)யும் முறையே விநாயகராலும் செவ் வேளாலும் புலப்பட்டமை உணரலாம்.

துறவுக் கோலத்திலே செவ்வேள் மொட்டையாண்டியாகத் தண்டாயுத மேந்திய நிலையில் காணலாகும் சிலை, நவபாடாணங் களால் போக முனிவராகிய சித்தரால் அமைக்கப்பட்டதாகும். கலியுகவரதனாகக் காட்சியளிக்கும் தண்டாயுதபாணி காரண மாகப் பழநித்தலம், மலையின் கீழ்வளாகத்திலும் மேல் வளாகத் திலும் ஓவியச் சிறப்பும் சிற்பநேர்த்தியுங் கொண்ட கோயி லமைப்புகளையும் மண்டபங்கள் பலவற்றையும், சுதைச் சிற்பங்கள் பலவற்றையும், செப்புத் திருமேனிகள் பலவற்றையும் கொண்டு தெய்வநலப் பொலிவுடன் விளங்குகின்றது; தீர்த்தச் சிறப்பையுங் கொண்டு இலங்குகின்றது.

பழநித் திருக்கோயில் தொடர்பாகவுள்ள இலக்கியங்கள் பலவாகும். பழநிமலை அருகேயுள்ள இடும்பன் மலை காரண மாகப் புராணப் பின்னணியேற்பட்டுக் காவடி அடியவர்களால் எடுக்கப் படுகின்றது. ஆறுபடை வீடுகளிலும் காவடியாட்டம் உண்டெனினும், காவடியாட்டத்திற்குக் கால்கோள் உண்டாக் கியது பழநித்தலமேயாகும். நாட்டுப்புற ஆடற்கலையடிப் படையில் இப்பண்பாட்டுக் குறிப்பினை மனத்துட் கொள்ளலாம்.

இயற்கையெழில் கொஞ்சும் பழநித்தலம், உடல் நோய் நீக்கி உடல்நலந் தரும் ஆற்றல் வாய்ந்த மூலிகைச் சூழலில் அமைந் துள்ளமையால், அடியார்கள் தலப்பயணம் மேற்கொண்டு ஆர்வ முடன் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி அங்குத் தங்கி ஆன்ம மனநிறைவு கொள்கின்றனர். பழநி தண்டாயுதபாணி மொட்டையாண்டியாக விளங்குவதால், தமிழ்ப்பெருமக்களும் மலையாள நாட்டவரும் பலராக இங்கு வந்து தமக்கும் குழந்தை களுக்கும் மொட்டையடித்துக்கொண்டு இறைவனுக்குக் காவடியெ டுத்தும், அருச்சனை செய்தும் பரவிநிற்கின்றனர். இங்குள்ள இறை வனுக்குப் பாலபிடேகம் தேனபிடேகம் முதலிய பல அபிடே

கங்கள் செய்தாலும், **பஞ்சாமிர்த அபிடேகம்** மிகச்சிறப்பு வாய்ந்தது; இவ்விறைவனை 'அபிடேகப்பிரியன்' என்பர்.

தண்டாயுதபாணிக்குப் பஞ்சாமிர்த அபிடேகம் பல காலம் புரிந்தமையால், நவபாடாணத்தாலான மதிப்பரிய இந்தச் சிலை மெலிந்து போயுள்ளது என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

12.1. பழநி—கட்டடக்கலைக் கூறுகள் :

'மழை தவழ் பொதினி' எனச்சிறப்பிக்கப்படும் **பழநிமலைத் திருக்கோயில்** தொன்மையான தமிழக மலைக்கோயிற் கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். திருவேங்கடவனுக்குத் **திருமலையிலும்**, கீழே **திருப்பதியிலும்** கோயிற்கட்டடக் கலைக் கூறுகள் அமைந்து பெருமை சேர்ப்பதுபோலத் திருமுருகனுக்குப் **பழநிமலையிலும்**, கீழே **திருவாவினன்குடியிலும்** கோயிற் கட்டடக் கலைக் கூறுகள் அமைந்து பெருமை சேர்த்து வருகின்றன.

மலைக்கோயிலில் கருவறையும், மண்டபங்களும், சுற்றுக் களும், பரிவாரக் கோயில்களும் தமிழர்களின் கட்டடக்கலைத் திறனைப் புலப்படுத்தும். **தங்கரதம்** உலா வரும் திருச்சுற்று, மலைக்கோயிலிலே அமைந்துள்ளமை போற்றற் குரியதாகும். அடியவர்கள் சிரமமின்றி மலைக்கோயிலுக்குச் செல்வதற்கு வாய்ப்பாகப் படிக்கட்டுக்களைப் பல இடங்களில் திசைதிருப்பி அமைத்திருப்பதால்—செங்குத்தாகக் கொண்டு செல்லா திருப்ப தால்—கட்டடக் கலைஞர்களின் சீரிய சிந்தனை புலப்படும். அடியவர்களின் இப்பாதையேன்றி **யானை செல்லும் பாதை** யொன்றும் அமைந்துள்ளது. அடியவர்களின் படிக்கட்டு வழியில் இடையிடையே, இளைப்பாறுதற்கு வாய்ப்பாகச் சிற்சில அழகிய மண்டபங்களும் இந்த நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளன. இத்தலத்தில் திருவாவினன்குடிக் கோயில், பெரியாவுடையார் கோயில், இடும்பன் கோயில், சரவணப் பொய்கை முதலிய பல இடங்களிலும் கட்டடக்கலைக் கூறுகள் நிரம்பியுள்ளதைக் காணலாம்; விரிக்கிற்பெருகும்.

13. திருவேரகம் (சுவாமிமலை) - பெருமைக் கூறுகள்:

திருமுருகன் மிகவுவந்து வீற்றிருக்கும் ஆறுபடைவீடுகளுள் திருவேரகமும் ஒன்றாகும். முருகப் பெருமான் இத்தலத்தில்

மிகவும் ஈடுபாடு கொண்டவர் என்பதைத் **திருமுருகாற்றுப் படை**யில்,

"பெரிதுவந்து, ஏரகத்து உறைதலும் உரியன்" (188-189)

என **நக்கீரர்** கூறிச் செல்வதால் உணரலாம்.

சுவாமிமலை என்பது திருப்பரங்குன்றம், பழநிமலை முதலிய மலைகளைப் போன்று இயல்பாக அமைந்த மலையன்று. காவிரிக் கரையில் திருவலஞ்சுழியை யடுத்துள்ள வெண்மணற் குன்றில் அமைந்த **கட்டுமலை**யாகும். இம்மலையில், திருமுருகனே தன் தந்தை சிவபெருமானுக்குக் குருவடிவாய் எழுந்தருளிப் பிரணவத்தின் உட்பொருளை உள்ளவாறு உபதேசித்தார் என்பது புராணம். இதனால், சுவாமிக்கே நாதனாகச் - சுவாமிநாதனாக- ஞானபண்டிதனாகிய திருமுருகன் இங்கு விளங்குகிறான்.

பிரணவத்தின் பொருளுணர்த்திய முருகப்பெருமானைச் சுவாமிமலையாகிய இத்திருத்தலத்தில் இருக்கச்செய்து சிவபிரான் திருக்கயிலைக்கு ஏகினார்; இச்செய்தியினைக் **குமரகுருபரர்**,

"பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம் மொழிந் தோனே"[1]

எனத் திருவாய் மலர்ந்தமையால் அறியலாம்.

சுவாமிமலையின் ஞானவளாகத்தைத் தொன்மைக் காலத்திலேயே மக்கள் உணர்ந்து போற்றி வந்துள்ளனர். **திருமுருகாற்றுப் படை**யில் நான்காம் படை வீடாகக் குறிக்கப்பெறும் சுவாமிமலையைப் பற்றிக் கூறுகையில், சாத்திரப்பயிற்சி, பிரமசரிய நெறி, இல்லற தருமம், முத்தீ வளர்த்தல் முதலிய நியமங்களுடன் கூடிய அந்தணர்களை **நக்கீரர்** குறிப்பிடுகிறார்; அத்தகைய வேதியர் ஆறெழுத்துப் பெருமையைத் தன்னுள் அடக்கிய பிரணவத்தின் வேத மந்திரங்களை நாதக்கட்டுடன் ஓதி, நறுமணமலர் கொண்டு அருச்சித்து வழிபடுகின்றனர் அந்த வைதிக வழிபாட்டுக்கு மிகவும் மகிழ்ந்து திருவேரகத்தில் குருமூர்த்தமாய் முருகன் எழுந்தருளியுள்ளான் என்பது நக்கீரர் காட்டும் சொற்சித்திரம்.

1. கந்தர் கலி வெண்பா, 93

சுவாமிமலையில் சுவாமிநாதக் கடவுள் தம் வலக்கையில் தண்டாயுதம் கொண்டு, இடக்கையை இடுப்பில் அமர்த்தியும் அழகிய திருக்கோலத்துடன் காட்சியளிக்கிறார்.

13.1. சுவாமிமலை - கலைப்பெருமைக் கூறுகள்:

சுவாமிமலையின் மேல் ஏறுவதற்கு **அறுபதுபடிகள்** உண்டு. பிரபவ, விபவ, சுக்கில என வரும் அறுபது ஆண்டுகளையும் அவை குறித்து நிற்கின்றன. அறுபது ஆண்டுத் தேவதைகளும் சுவாமிக்குப் படிகளாக அமைந்துள்ளன எனப் புராணங்கள் கூறுகின்றன. வருஷ தேவர்கள் படிகளாக அமைந்துள்ளனர் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டு, "வழிபாட்டிற்கு வரும் மெய்யன்பர்கள் முதற்படியில் தேங்காய் உடைத்துத் தீபபராதனை செய்து, அவர்களின் அனுமதி பெற்றுக் கொண்டே மேலேறிக் குருநாதனை வணங்குகிறார்கள் என்ற செய்தி **திருவிடை மருதூர்ப் புராணத்தில்** காணப்படுகிறது"[1]

அருள்மிகு சுவாமிநாதன் எழுந்தருளியுள்ள **பீடம் சிவலிங்கத்தின் ஆவுடையார்** போன்றும். **சுவாமிநாதன் இலிங்கத்தின் பாணரூபமாகவும்** அமைந்திருப்பது சிந்திக்கத்தக்கது. முருகனே சிவபெருமான், சிவபெருமானே முருகன் என்ற சமய மெய்ப் பொருளியலுண்மையை விளக்குவதாய் இஃது அமைந்துள்ளது என்பர். சுவாமிநாதக் கடவுள் கிழக்கு நோக்கியிருப்பினும் கோயில் வாசல் தெற்கு நோக்கியிருக்கும் வகையில் இந்த கட்டுமலை அமைந்துள்ளது.

அரிகேசன் என்னும் கொடிய அரக்கனால் **வலிமையிழந்த இந்திரன்** அத்தலத்தில் இறைவனை வழிபட்டு, **மீண்டும் வலிமை** பெற்றான். அதன் நினைவாக இந்திரன் தன் **ஊர்தியாகிய** ஐராவதம் எனும் வெள்ளை யானையைச் **சுவாமிநாதன்** திருமுன்னர் நிறுத்திச் சென்றுள்ளான் என்பர்; அந்த வெள்ளை யானையே ஒரு கலைப்படைப்பாக அருள்மிகு சுவாமிநாதக் கடவுள் திருமுன்பு இன்றும் இருக்கக் காணலாம். சிறப்ப மாட்சியுடன் இயைந்த கட்டடக்கலை நேர்த்தியைச் சுவாமிமலையில்

1. பழநி தண்டாயுதபாணி சுவாமிதிருக்கோயில் - திருக்குடமுழுக்குச் சிறப்பு மலர் 1974, பக். 206

கண்டு வியந்து போற்றுவர்; அவ்வாற்றான் சிலவற்றைக் காண்போம்.

13.2. சுவாமிமலை — கட்டடக் கலைக் கூறுகள் - (சிறப்புநோக்கு):

கட்டுமலையாக அமைந்துள்ள சுவாமிமலைக்கும் கிழக்கு, தெற்கு, மேற்கு வாயில்கள் உள்ளன. எனினும், தென் வாயிலில் தான் ஐந்து நிலைகளைக் கொண்ட **இராசகோபுரம்** உள்ளது. பெரும்பாலும் தென்கோபுர வாயிலே அடியவர் பலருக்கும் பயன்பட்டு வருகின்றது. தென்பிராகாரத்தில் வாயிலின் இருபுறமும் இடவசதியிருந்தமையால் அகன்ற அழகான **திருமண** மண்டபங்கள் புதியனவாகக் கட்டப் பட்டுள்ளன; அவை பல திருமணங்களைப் பலரும் ஆர்வமுடன் நடத்திக் கொள்ள வாய்ப்பளிக்கின்றன.

கீழ்க்கோயில் என்று அழைக்கப்படும் **மீனாட்சிசுந்தரேசுவரர்** விளங்கும் சிவாலயப் பகுதி, கலைமாட்சியுடன் அமைந்துள்ளது. சுவாமிநாதப் பெம்மானது **தங்க ரத மண்டபம்** கீழ்க் கோயிலின் மேற்குப் பிராகாரத்தில் அமைந்துள்ளது. கிழக்குப் பிராகாரத்தில் கிழக்கு வாயிலுக்கு நேரே சக்திமிகு **வல்லப விநாயகர்** கோயில் உள்ளது. படியேறி மேலே சென்றால் கிழக்குப் பிராகாரத்தில் சிவனுக்கு **முருகன்** பிரணவப் **பொருளை உபதேசிக்கும் காட்சியைக்** காணலாம்.

கீழே **பத்தி** மண்டபத்தில் படிக்கட்டளை அறைகளும், மான் மண்டபமும், மயில் மண்டபமும், திருமடைப் பள்ளியும் உள்ளன. அருகே தல மரமாகிய **நெல்லிமரம்** உள்ளது.

வடகிழக்குப் பக்கத்தில் **வசந்த** (உற்சவ) **மண்டபம்** அழகுற அமைந்துள்ளது.

சுவாமி மலையின் மேலேயுள்ள சுவாமிநாதன் சன்னிதி கட்டடக்கலைச் சிறப்புடனும் கொடிக்கம்பத்துடனும் கூடியது. அதைச் சுற்றியுள்ள பிராகாரங்களும் கலைநோக்கில் கண்டு போற்றத் தக்கவை.

14. திருத்தணிகை - பெருமைக்கூறுகள்:

அழகிய மலைகளாலும் பள்ளத்தாக்குகளாலும் இயற்கை யழகு சூழ்ந்த வளாகத்தில் திருத்தணிகைத்தலம் அமைந்துள்ளது. கந்தப்பெருமான் திருச்செந்தூரில் சூரனை வதை புரிந்தபின், அவன் கொள்ளையடித்து வைத்திருத்த **சங்கநிதி பதுமநிதி** முதலிய நிதியங்களைத் திருத்தணிகைக்கு அனுப்பி வைக்கிறார்; பிறகு, படைகளுடன் **திருப்பரங்குன்றஞ்** சென்று, தேவேந்திரன் மகள் **தேவயானையை மணந்து கொண்டு** தேவருலகு சென்று அங்கு யாவற்றையும் ஒழுங்கு படுத்தி விட்டுத் **தணிகைத்தலம்** அடைந்து சினம் தணிந்து வீற்றிருக்கிறார். எனவே, **'சீற்றந் தணிந்த இடம் தணிகை'** எனப் பெயர் பெறலாயிற்று என்பது புராண நோக்கில் கூறப்படும் செய்தியாகும். இது கொண்டு, குன்றுதோறாடல்' அடிப்படையில் முருகனுக்குகந்த சிறப்புத் தலமாகத் திருத்தணிகையைக் கருதலாம்.

இகத்துக்கும் பரத்துக்குமான கதிகளைக் கணத்தில் வழங்கும் பெருமானாகத் திருமுருகன் வீற்றிருந்து அருள்வதால் இம் மலையைக் **கணிகாசலம்** எனவும் அழைப்பர். முருகக் கடவுளுக் குரிய சிறந்த தலங்கள் அறுபத்து நான்கினுள் மிகச்சிறந்ததாகக் கருதப்படும் விதத்தில் புராணக் கூற்றுக்கள் பலவாகவுள்ளன.

தாமும் நந்திதேவரும் கந்தவேளிடம் ஞானோபதேசம் பெற்றதாகக்கூறி **அகத்திய முனிவரைத்** தணிகைக்குச் சிவபெரு மான் அனுப்பி வைக்கிறார்; அக்குறிப்பினை ஏற்று அவரும் தவமிருந்து கந்த வேளிடம் தமிழ் முழுவதும் அறியலானார் என்பர்; இதனால் இம்மலைக்குக் **குருகிரி** என்றும் பெயர் உண்டு.

இளம்பூரணனாக இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய செல்வங்களை அடியார்க்குப் பூரணமாக அளிப்பதனால் தணிகை முருகன் அமர்ந்தருளும் மலையைப் **பூரணகிரி** என்றும் **ஸ்ரீ பரிபூரண கிரி** என்றும் வழங்கிவருகின்றனர்.

தணிகை மலையில் **நீலோற்பலச் சுனை** இருப்பதால், **உற்பல கிரி** என்றும், கல்லாரகிரி என்றும் வழங்குவர். இத்தலத்திற்கு

அருகில் **வள்ளிமலை** இருக்கிறது; அங்கு முருகன் வள்ளியை மணந்தார் என்பது புராணக் குறிப்பாகும்.

திருத்தணிகை மலைமேல் காணப்பெறும் பல தீர்த்தங்கள் தெய்வங்களால் உண்டாக்கப்பட்டவையென்பர். இத்தலத்தில் பாதியை மடங்களும், சத்திரங்களும் அடைத்துக் கொண்டிருப்பதால் இப்பகுதியை '**மடம் கிராமம்**' என்று ஊரார் கூறி மகிழ்வர்.

14.1. திருத்தணிகை - கட்டடக்கலைக் கூறுகள்:

திருத்தணிகை மலையுச்சியிலுள்ள திருக்கோயிலின் சுற்றளவு சுமார் ஆயிரம் அடி இருக்கும். இங்கு **வீரமூர்த்தி**யாகவும் **ஞான மூர்த்தி**யாகவும் **ஆசாரிய மூர்த்தி**யாகவும் விளங்குகின்ற திருத்தணிகைப் பெருமானை மலையில் கண்டு வழிபடுதற்கு வாய்ப்பாக 365 **நல்ல படிகள்** அமைக்கப்பட்டிருக்கின்றன. **படித் திருவிழா** மிகச்சிறப்பாகக் கொண்டாடுவதற்கு வாய்ப்பான நல்ல திருத்தலம் இது.

திருத்தணிகை மலையுச்சியை அடைந்ததும், தேர்வீதியாகிய **நான்காம் பிராகாரம்** காணப்படும். கிழக்குவெளிப் பிராகாரம் எனப்படும் இந்தப் பிராகாரத் தொடக்கத்தில் **கருப்பூரக் கொப்பரையும், நவாப் வாத்திய மண்டபமும்** உள்ளன; இவை சுவாமி திருச்சன்னிதிக்கு நேராக அமைந்துள்ளன.

கோபுரமும் கோயிற் பிராகாரங்களும் தெய்வநலப் பொலிவிற்கு அணி சேர்க்கின்றன. கோயிலின் தென்மேற்கு மூலையில் **வாகன மண்டபம்** அமைந்துள்ளது. இந்த மண்டபத்தில் முருகப்பெருமான் திருவிழாக்காலங்களில் எழுந்தருளிக் காட்சியளிப்பார்.

யானையாக வந்து தம்பி முருகனுக்கு உதவியாக இருந்து வள்ளியம்மையைத் திருமணம் புரிந்து கொள்ள அருளியவர் விநாயகர்; எனவே, '**ஆபத் சகாய விநாயகர்**' என்ற பெயரோடு. முருகன் சன்னிதிக்கு வடக்கே எழுந்தருளியுள்ளார். இவரைத் தரிசித்தபிறகே முருகனை வழிபடும் வழக்கம் மக்களிடையே இருந்து வருகிறது.

திருத்தணிகைக் கோயிற்குளத்தின் அமைப்பு, நல்ல கோயிற் கட்டடக்கலைச் சார்பில் போற்றத்தக்கதாக விளங்குகிறது.

இந்தச் **சரவணப்பொய்கையில்** ஆடிக்கிருத்திகையின்போது தெப்பத் திருவிழா மூன்று நாட்கள் நடைபெறும்.

15. பழமுதிர்சோலை:

திருமுருகனது ஆறாம் படைவீடாகிய பழமுதிர்சோலையைத் **திருமாலிருஞ்சோலை** எனவும், **அழகர்மலை** எனவும் வழங்குவர். பழங்காலத்தில் முருகனுக்கெனத் தனித்கோயிலும் வழிபாட்டுச் சிறப்பும் இருந்தமையால் **நக்கீரர்,** திருமுருகாற்றுப் படையில் இந்தத் தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளார். "இங்கே **சரவணப்பொய்கை** என்ற பெயரோடு ஒரு குளம் இருந்ததாகவும், அதைப் **புண்ணியசரவணம்** என்று வழங்கினர் என்றும் தெரிய வருகிறது. திருமுருகாற்றுப்படை, இங்கே விழும் அருவியின் அழகை வருணிக்கிறது. இப்போது அழகர்மலைமேல் ஓரிடத்தில் முருகனுடைய திருக்கோயிலை எழுப்பியிருக்கின்றனர்"[1] என்று **கி. வா. ஜகந்நாதன்** எழுதிச்செல்வது சிந்திக்கத்தக்கது.

அழகர்மலை என 'இந்த ஆறுபடை' இக்காலத்தில் வழங்குவதற்கேற்ப, முருகன் எனும் 'அழகனுக்கு'ப் பதிலாகச் **சௌந்தரராசப் பெருமாளே** கள்ளழகராகவும் விற்றிருந்து அருள்பாலிக்கிறார். கட்டடக்கலைச்சிறப்பும் சிற்பக்கலைச் சிறப்பும் ஓவியக் கலைச்சிறப்புங் கொண்டுள்ள அழகர்மலை வைணவ திவ்ய தேசங்களுள் ஒன்றாகப் போற்றப்பெறுகின்றது. நாயக்கர் காலத் திருப்பணியால் இத்திருத்தலம் சிறப்புற்று விளங்குகிறது.

16. வைப்புத்தலங்கள்:

தமிழ்நாட்டில் சைவ சமய குரவர்களாலும், ஆழ்வார்களாலும் பாடல் பெற்ற சைவத்திருத்தலங்களும் வைணவ திவ்ய தேசங்களும் வழிவழியே தமிழ்ப்பெருமக்களால் போற்றி வழிபடப்பெறும் சிறப்புடையவை ஆகும். இவையேயல்லாமல், சைவ சமயப் பெரியோர்களாகிய திருஞான சம்பந்தர், அப்பரடிகள், சுந்தரர்பெருமான் ஆகியோர் பாடியருளிய பதிகங்களில் இறையுறை **தலப்பெயர் மட்டும்** குறிக்கப்பெற்ற திருக்கோயில்களை **வைப்புத்தலங்கள்** என வழங்கலாயினர். இவையே

1. புள்ளிருக்கு வேளூர் கும்பாபிஷேக மலர், 1970, பக். 160

யன்றித் தலபுராணங்களைக் கொண்ட கோயில்களும், பிற அருட் புலவர்களால் தனிப்பாடல்களில் போற்றப்பட்ட கோயில்களும். அரசர்கள் அடக்கமாகிப் புகழ்பெறுமாறு பின்னர்த்தோன்றிய பெருமக்களால் கட்டப்பெற்ற பள்ளிப்படைக் கோயில்களுமாகப் பல தலங்கள் தமிழகத்தை அணிசெய்து வருகின்றன. இவற்றுள் வைப்புத்தலங்கள் பற்றிச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

பொதுவாகத் தேவார மூவர்களாலும் பிற அருட்சான்றோர்களாலும் பதிகங்களில் தலப்பெயர் மட்டும் குறிக்கப்பெறும் **வைப்புத்திருத்தலங்கள்** 249 எனும் எண்ணிக்கையில் உள்ளன. சைவத்திரு **இரா. ப. தங்கவேலனார்** (ஈரோடு) கருத்துப்படி தேவாரவைப்புத் தலங்கள் 135 (சோழநாட்டில் 79, பாண்டிய நாட்டில் 19, கொங்கு நாட்டில் 11, சேரநாட்டில் 14, தொண்டை நாட்டில் 14, நடுநாட்டில் 3, வடநாட்டில் 6) ஆகும்.

சில வைப்புத்தலங்கள் பதிகப்பாடல் பெற்ற தலங்களை விட மிகச்சிறப்புடன் - மக்களின் போற்றுதலோடு கண்கவர் காட்சியோடு - பொலிவெய்தியுள்ளன. அவற்றுள் எடுத்துக் காட்டாகத் **தவத்துறையைக்** கூறலாம்.

காவிரி பாயும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள **திருத்தவத்துறை** (லால்குடி) வைப்புத் தலமாகும். **திருநாவுக்கரசர்**

"பயில்வாய பராய்த்துறை தென்பாலைத்துறை
பண்டெழுவர் **தவத்துறை** வெண்டுறை பைம்பொழில்"[1]

எனக்குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

தேவாரப்பதிகங்கள் பல கிடைக்காத நிலையில் இன்று திருத்தவத்துறை பற்றித் தெளிவாக விவரித்துச் சொல்ல இயலவில்லை. எனினும், ஆலயக்கட்டட அமைப்பு அந்தத் தலத்துப் பெருமையை உணர்த்தும் வகையில் உள்ளது.

தேவாரத்தில் பாடப்பெற்ற தெய்வநலப் பெருஞ் சிறப்பினைக் கொண்டு விளங்கிய **திருத்தவத்துறை,** சேக்கிழார்

1 திருமுறை, 6, 71, 11

காலத்தில், அதற்குப் பதிகம் கிடைக்கப் பெறாத நிலையில் வைப்புத்தலமாகக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது எனக் கருதுவோரும் உளர். தவமுனிவர் எழுவர் தவஞ் செய்த காரணத்தாலும் அறத்துறையாகச் செழிப்புடனிருந்தமையாலும் **சப்தரிஷீசுவரர் கோயில்** என்றும், **தவத்துறை**யென்றும் மிகச்சிறப்பெய்திக் கோயிற்கட்டடக்கலை மாட்சியுடன் விளங்குகிறது.

17. வைணவத்திருத்தலங்கள் - பொதுப்பார்வை:

சைவ சமயத்தை யொத்த வைணவ சமயத்திற்கும் ஆலயக் கட்டடக்கலைப் பெருமை நிரம்ப உண்டு. ஆழ்வார்களால் பாடப்பட்ட (மங்களாசாசனம் பெற்ற) திவ்யதேசங்கள் நூற்றெட்டு: இவை தமிழ் நாட்டிலே மட்டுமன்றி ஆந்திரா முதலிய மாநிலங்களிலும் உள்ளன. கட்டடக் கலைநோக்கில் அவற்றை விரிக்கிற் பெருகும்.

தில்லைச் சிதம்பரம் சைவர்களுக்குச் சிறப்பாகக் '**கோயில்**' என வழங்கப் படுவது போலத் **திருவரங்கம்** வைணவர்களுக்குச் சிறப்பாகக் '**கோயில்**' எனப் போற்றப்படும். சக்கரவர்த்தித் திருமகன் இராமனால் வழிபடப்பட்ட சிறப்பு, திருவரங்கப் பெருமாளுக்கு உண்டு என்பர், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் காரணமாகவும் திருவரங்கத்திற்குப் பெருஞ்சிறப்பு உண்டு.

தொன்மைச் சிறப்புமிகு திருவரங்கம், மன்னர்கள் பலரின் ஆட்சியில் பல்வகைக் கட்டடக் கூறுகளும் பெற்று மாபெருங் கோயிலாகத் திகழ்கின்றது; எனினும், **விசயநகர - நாயக்க மன்னர்கள்** காலத்தில் சிற்பக் கலைமாட்சியுடன் பல மண்டபங்களைப் பெற்றமை கலைவரலாற்று நோக்கில் சிந்திக்கத்தக்கது. தங்க விமானச் சிறப்பும் கோபுரச் சிறப்பும் சொர்க்கவாசல் சிறப்பும் திருவரங்கம் கோயிலுக்கு என்றும் நிலைத்த பெருமையைத் தரும். திருவரங்கத்துக்குத் தனிச் சிறப்பாக **ஏழு பெரும் பிராகாரங்கள்** உள்ளன. இவ்வாறான கட்டடக் கலைச் சிறப்புக்கள், ஏற்புடைய இடங்களில் விளக்கமாகக் கூறப்பெற்றுள்ளன.

திவ்யதேசங்கள் ஒரு புறமிருக்க, வைணவர்கள் திருவரங்கத்தை உளப்படுத்திப் **பஞ்சரங்க க்ஷேத்திரங்கள்** என்று குறிப்பிடுகையில், ஸ்ரீரங்கப்பட்டணம், கோயிலடி, கும்பகோணம், திருஇந்தளூர் (திருவிழந்தூர் — மயிலாடுதுறை) ஆகியவற்றைப் போற்றி வழிபடுவர்.

ஆழ்வார்கள் அவதரித்த திருத்தலங்களும், வைணவ ஆசாரியர்கள் அவதரித்த திருத்தலங்களும் கட்டடக்கலை நோக்கில் சிந்திக்க நிரம்ப வாய்ப்பு உண்டு.

ஆழ்வார் திருநகரி, ஸ்ரீ வில்லிபுத்தூர், மன்னார்குடி, காட்டுமன்னார் கோயில், திருநாங்கூர், நாச்சியார் கோயில், திருக்கண்ணபுரம், குடந்தை, காஞ்சிபுரம் முதலிய பல திருத்தலங்களில் காணலாகும் கட்டடக்கலைச் சிறப்புக் கூறுகளை மிக விரிவாகக் கூறவியலாவிடினும், ஓரளவு ஏற்புடைய வகையில் இந்நூலில் பிற இடங்களில் கூறப்படும்.

மேலும், கட்டடச் சிற்பக்களஞ்சியங்களாகத் தனித்தன்மையுடன், விளங்கும் சில வைணவ ஆலயங்கள் தமிழ்நாட்டின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் வண்ணம் உள்ளன. அவற்றுள் **கிருஷ்ணாபுரம், நாடிக்கொம்பு** ஆகியவற்றை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

18. ஆஞ்சநேயர் கோயில்:

இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்களில் பாராட்டப் பெறும் சில பாத்திரங்களை நன்கு நினைவிற் கொள்ளும்வகையில் மக்கள் திருக்கோயில்கள் கட்டி மகிழ்ந்துள்ளனர். இராமாயணத்தைப் பொறுத்த வரையில், சிறந்த உத்தம புருடர்களுள் இராமனுக்கு அடுத்த படியாக மக்களின் உள்ளங்களையெல்லாம் கவர்ந்து போற்றத்தக்க பெருமை கொண்டவராக ஆஞ்சநேயர் எனும் அனுமார் விளங்குகிறார்.

வானரனாகிய **கேசரிக்கு** அஞ்சனையிடத்துத் **தோன்றிய காரணத்தால் இவர் ஆஞ்சநேயர்** என அழைக்கப் பெறுகிறார், இராமன் இவரை யாரென வினவுகையில் தாம் வாயு

தேவனுக்கு அஞ்சனையின் வயிற்றில் உதித்த மைந்தன் என்று கூறித் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்வதைக் **கம்பராமாயணம், கிட்கிந்தா காண்டம்,** அனுமப் படலத்தில் காணலாம். இதனைக்,

''கஞ்சமொத் தலர்ந்த செய்ய
கண்ணயான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன்!
நாமமும் அனுமன் என்பேன்'' (15)

எனவுள்ள பாடற் பகுதி காண்க மாருதம் என வழங்கும் காற்றுக்குரிய வாயுதேவனின் மைந்தர் என்பதை வலியுறுத்தும் வண்ணம் இவருக்கு **'மாருதி'** என்ற பெயரும் வழங்குதல் காண்க.

இவர் பிறந்த போதே வானத்தில் உதித்துக் கொண்டிருந்த சூரியனைக் கனியென நினைத்துப் பிடித்து உண்ணப் பாய்ந்த தாகவும், அப்போது இந்திரன் தன் கைக்குலிசத்தால் இவரது கவுளில் அடிக்கவே மூர்ச்சையுற்று மயங்கிக் கிடந்ததாகவும், தேவர்களின் அருளால் இவர் கண்விழித்துப் பிரமனை நோக்கித் தொழுதார் எனவும், தேவர்கள் காரணமாகப் பல வரங்கள் பெற்றுப் பேராற்றல் கொண்டார் எனவும் கூறுவர். தேவர்களுள் இந்திரன், தன் வச்சிராயுதத்தால் அடித்து இவன் **அனு** (கவுள்) முறிந்தபடியால், அன்றுமுதல் இவனுக்கு **அனுமன்** என்ற பெயர் வழங்கலாயிற்று என்றும் கூறுவர்.

இராமாயணக் காப்பியப் போக்கில் பெருஞ்சிறப்பு மிகு பங்கினைக் கொள்வதாலும், இராமனுக்குத் தொழும்படிமைத் திறத்தில் எடுத்துக்காட்டாக விளங்குவதாலும் இராமாயணத்தில் காண்டங்களுள் ஒன்று (**'சுந்தரன்'** ஆகிய இவனைச் சிறப்பிக்கு முகத்தான்) சுந்தரகாண்டம் என்றே அமைந்துள்ளது என்பர். சொல்லின் செல்வனாகிய அனுமன் **நைட்டிகப் பிரமசாரி; பஞ்ச பூதங்களாலும்** பிரமாத்திரத்தாலும், **தேவாத்திரத்தாலும் இறவா வரம்** பெற்ற இவன், இராமனிடம் **சிரஞ்சீவிப்பட்டம் பெற்றுள் ளான்.** இத்தகைய பெருமைக்குரியவனாக அனுமன் விளங்கிய யமையால் திருமாலடியவர்கள் இராம பக்திக்கு எடுத்துக்காட் டாகக் கட்டக்கலைச் சிறப்புடன் தனி ஆலயம் அமைத்து வழி படலாயினர்.

ஆஞ்சநேயனின் பேராற்றலையுணர்ந்த மக்கள், படைக் கலப் பயிற்சி உடற்பயிற்சி முதலிய **கலைப்பயிற்சி** பெற விரும்பு கையில், தமக்குரிய தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வரு கின்றனர். சிறந்த ஞானியாகிய இவனை **அறிவும் துணிவும்** விரும்புவோரும் வழிபட்டு வருகின்றனர்.

19. ஔவையார் திருக்கோயில்:

உலகில் வியத்தகு ஆற்றல்களைப் பல்வகைத் தெய்வ வடிவங்களாகக் கொண்டு, அவற்றுக்கு ஆலயங்களை மக்கள் அமைத்து வழிபடத் தொடங்கினர்; ஆனால், அதே வேளையில் மக்களோடு மக்களாகச் சமுதாயத்தில் வாழ்ந்து, நல்லுரை புகட்டி மேம்பாட்டுவாழ்விற்கு வழிகோலிய நல்லிசைப் புலவர் பெருமக்களுக்குக் கோயில்கட்டி அவர்களைக் குப்பிட்டு நன்றிக்கடன் செலுத்தினார்களா என யாரும் வினவலாம்.

சமய ஞானியாகவும் ஞானப்பனுவல்கள் பாடியவராகவும் உள்ள பெருமக்களுக்குக் கோயில் கட்டியுள்ளனர். எடுத்துக் காட்டாகக் **காரைக்காலம்மையாருக்குக்** காரைக்காலிலும், **திருமூலருக்குத்** திருவாவடுதுறையிலும், **அப்பரடிகளுக்குத்** திருவா மூரிலும் அமைந்துள்ள கோயில்களைக் காணலாம். சித்தராகவும் புலவராகவும் வாழ்ந்த பெருமக்களுக்குக் கோயில் கட்டியுள் ளனர். எடுத்துக்காட்டாகக் **கருவூர்த்தேவருக்குத்** தஞ்சைப் பெரிய கோயில் வளாகத்திலும், **பட்டினத்தாருக்குத்** திருவொற்றி யூரிலும் கோயில்களைக் காணலாம். இதே முறையில் **ஔவை யார், கம்பர், ஒட்டக்கூத்தர்** முதலிய சிறப்பு மிகு புலவர்பெரு மக்களுக்கும் கோயில் கட்டி வழிபட்டுள்ளனர்; இது நன்றிப் பண்பாட்டு அடிப்படையில் போற்றத்தகும்.

ஔவை என்பது **அம்மை** (தாய்) எனும் பொருளிலும், அதனுடன் **'ஆர்'** எனும் விகுதி உயர்வுச் சிறப்புக் குறித்தும் அமைந்து **ஔவையார்** என வழங்குதலைப் பலரும் அறிவர். சங்க காலத்திலும், இடைக்காலத்திலும், போர்ச்சுகீசியர் வருகையை (யாட்டிய பிற்காலத்திலும் ஔவையார் எனும் பெயரில் சிலர் சிறப்புடன் இருந்துள்ளனர் என்பது ஆராய்ச்சி யாளர்கள் கருத்து.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் எனின், அவரது புலமைத்திறமும் உலகியலறங்களின் தெளிவும் பல்லாண்டு வாழ வேண்டுமென்ற நோக்கில், தனக்கு அரிதாகக் கிடைத்த **நெல்லிக் கனியை அதியமான் நெடுமான் அஞ்சி** ஆர்வத்துடன் வழங்கியதை நினைவிற்கொள்ளலாம்.

இடைக்காலத்து ஔவையார் எனின், கம்பர் காலத்தவராக வாழ்ந்தவர். அவர், பட்டுப்போன கூழைப்பலாமரம் தளிர்க்க வைத்தல் முதலிய சில வியத்தகு செயல்கள் புரிந்ததையும், கூழுக்கும் கவிபாடியருளிய எளிவந்த நிலையையும் நினைவிற் கொள்ளலாம். பிற்கால ஔவையார் எனின், ஆத்தி சூடி நல்வழி முதலியவற்றைப் பாடியருளியதையும் ஞான நாட்டப் போக்கினையும் நினைவிற் கொள்ளலாம். பொதுவாக ஔவையாரைச் சிந்திக்கையில், **விநாயகரால்** திருக் கயிலை அடைந்ததையும், **திருமுருகனால்** நாவல்மரத் தொடர்பில் 'சுட்டபழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா' எனக் கேள்வி கேட்கப்பெற்று அவர் ஆட்கொள்ளப்பட்ட பாங்கினையும் நினைவிற் கொள்ளலாம். எப்படியோ ஔவையாரைத் தக்காங்கு வழிபட நினைத்துக் கோயில் கட்டியுள்ளனர்; அது போற்றத்தக்கது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை வட்டத்திலே பலையடிவாரத்தையொட்டித் தாழக்குடி எனும் சிற்றூரிலே ஔவைப்பெருமூதாட்டிக்குச் சிறு கோயில் உள்ளது. "கோவிலின் முகப்பில் நாவல் மரத்தடியின் கீழ் விநாயகருக்குச் சிறிய கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கோவிலின் இரு வாசல் நடைகளையும் தாண்டி உள்நுழைந்தால் கர்ப்பக்கிரகம்; அதில் ஔவையம்மன் மூதாட்டிகோலத்தில் வடிந்து வீழ்ந்த காதுகளுடனும் ஒரு கையில் கோலும், ஒரு கையில் உருத்திராட்சமாலையும் தாங்கி அன்பர்க்கு அருளுகிற தோற்றம் கண்டோரை மெய்சிலிர்க்கச் செய்யும்; கோயிலில் வேறு தெய்வத்திற்கு உருவங்கள் இல்லை. ஒரு காலத்தில் பெண்கள் மட்டுமே வந்து வழிபடுகிற இத்திருக்கோயிலில் இன்று ஆடவரும் குடும்பத்தோடு வந்து வழிபட்டு வருகின்றனர்"[1] எனச் செந்தில்நாதன் எழுதிச்செல்

1. அம்மன் தரிசனம் (திங்களிதழ்), பிப்ரவரி, 1992.

வதை மனத்துள் கொள்ளலாம். இங்கு ஔவையார், ஔவை யம்மனாகவே மாறிவிட்டதைப் பண்பாட்டு நோக்கில் சிந்திக்க இடம் உள்ளது.

20. துணைக் கோயில்கள் (பரிவாரக் கோயில்கள்):

பல்லவர்காலத்தில் ஒற்றைக்கல் கோயிலாகவும், கருவறையும், அந்தராளமும் ஆகிய உறுப்புக்களுடைய கோயிலாகவும் தொடங்கிய கோயிற்கட்டடக்கலை, காலப்போக்கில் பல்வகை மண்டபங்கள், பிராகாரங்கள், கோபுரங்கள் முதலிய பலகட்டு மானங்களாக வளர்ச்சியுறலாயிற்று. எனினும், எல்லாக் கட்டடக் கலையுறுப்புக்களுக்கும் முதன்மையானது **கருவறையே**யாகும். அந்தக் கருவறையில் வீற்றிருந்தருளுங் கடவுளுக்குப் பரிவார தெய்வங்கள் பல காலப்போக்கில் அமையலாயின. அவற்றுக்கும் துணைக்கோயில்களும் சன்னிதிகளும் அமைக்கப்பட வேண்டிய சூழல் உண்டாயிற்று

காஞ்சியில் **இராசசிம்ம பல்லவன்** சமயநோக்கிலும் பெருங் கலையார்வத்துடனும் அமைத்த **கயிலாசநாதர் கோயில்** கட்டு மானக் கோயில்; வரலாற்றில் மிகுந்த சிறப்பினைக் கொண்டதைக் கலையுலகம் நன்கறியும். அந்தக்கோயிலில் பல சிறுகோயில்கள் அமைந்துள்ளன; இவ்வாறு சிறுகோயில்களைத் தன்னுள் அடக்கிய ஒரு பெருங்கோயிலாக அஃது அமைந்ததும், அதனை முன்னோடி யாகக் கொண்டு, **சைவம் வைணவம்** முதலிய சமயக் கோயில் களில் துணைக்கோயில்கள் கட்டப்பட்டன. சைவக் கோயிலைப் பொறுத்தவரையில் முற்காலத்தில் பெரும்பாலும் **சிவலிங்கமே** மூலவராகக் கருதப்பட்டது. அந்தக் கடவுளுக்கு எந்த எந்தத் தெய்வங்களைப் பரிவார மூர்த்திகளாகக் கருதித் துணைக் கோயில்கள் கட்டலாம் என்று ஆகம விதிகள் இருந்தன.

"கோபுரத்தின் தெற்கே **சூரியனும்**, அதற்குத் தெற்கே **பாகசாலையும்**, தெற்குத் திக்கில் **உமையவளும்**, சிறிது நிருதியை ஒட்டி மேற்கே **சோமாஸ் கந்தரும்**, அதற்குத் தெற்கே **விநாயகரும்**, மேற்குத்திக்கில் **ஸ்கந்தரும்**, வாயுத்திக்கில் **லட்சுமியும்**, அதற்குக் கிழக்கே **சண்டிகையும்**, வடக்கே **மகிஷ மர்த்தனியும்**, ஈசான உத்தர திக்கு மத்தியில் **நடராசப் பெருமானும்**, அதற்கு மேற்கே **சந்திர சேகர** மூர்த்தியும், வடக்கே கௌரி **ஆலயமும்**, நடேசரின்

ஈசானத்தில் **சயனாலயமும்** (பள்ளியறையும்), கோபுரத்தின் வடக்கே **க்ஷேத்திர பாலரும்,** அதற்கு வடக்கே **யாகஸ்தானமும்** (யாகசாலையும்), இறைவன் திருமுன்னே இடபதேவரும், அதற்கு வெளியில் **பலிபீடமும்** அமைக்க வேண்டும் என்று **காரணாகமம** கூறுகிறது. மேலும், விமானங்களில் உள்ள **தேவர்களின்** விபரமும் 2,3, பிராகாரங்களில் உள்ள தேவதைகளின் ஸ்தானநிர்ணயங் களும் கூறப்படுகின்றன''[1] என வருங்குறிப்பு மனங்கொண்டு சிந்திக்கத் தக்கதாகும். இஃது ஒரு புறமிருக்க, ஆலயவளாகத்தில் மட்டுமன்றிச் சுற்றுக்கோயிலாகப் புராணத் தொடர்பில் ஊரெல்லையில் அமைப்பதும் உண்டு; அட்ட **வீரட்டானங்கள்** தொடர்பாகவுள்ள **மயானேசுவரர் ஆலயங்களைக்** காண்க.

பல்லவர் காலத்திலேயே ஆலய அமைப்பிற்கு ஆகம விதிகள் நடைமுறையில் வந்து விட்டன; அவர்கள் ஆகம விதிகளுக்கு உட்பட்டே தம் கோயிற் கட்டடக் கலையில் விரிவுண்டாக்கினர் என்பர். தொடர்ந்து வந்த பிற மன்னர்கள் ஆட்சியிலும் ஆகமவிதிகளுக்கு மதிப்பளித்துக் கொண்டே தம் கோயிற்கலைப் படைப்புக்களில் அரும் பெருஞ்சாதனைகளைப் புரியலாயினர்.

21, சமண, பௌத்தக் கொள்கையினரின் வழிபாட்டு இடங்கள் :

கடவுளது இருப்பினை நம்பிப் போற்றி வழிபடப் பெறு மிடத்தை **நகர்** என்றும், **ஆலயம்** என்றும், **கோட்டம்** என்றும், **கோயில்** என்றும் பல பெயர்களிட்டு வழங்குவதைக் கண்டோம். பெரும்பாலும் இதே முறையில் **சமணர்களும் பௌத்தர்களும்** முறையே தீர்த்தங்கரரையும் புத்தரையும் வழிபடுமிடங்களைப் பொதுவாகக் **கோயில்** அல்லது **ஆலயம்** என்பர். சமணர், ஜினாலயம் என்று வழங்கியுள்ளனர். புத்தர் கோயிலைப் பௌத்த விகாரம் என்றுங் கூறுவர்.

சமணக் காப்பியங்களிலும் பௌத்தக் காப்பியங்களிலும் சமண பௌத்தர்கள் தொடர்பான கட்டடங்கள், வழிபாட்டு இடங்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இருப்பினும், காலத்தின் வேகச் சுழற்சியாலும் மதக்காழ்ப்பினாலும் பல கட்டடங்கள் சிதைவுக்

1. புள்ளிருக்கு வேளூர் - கும்பாபிடேக மலர், 1969, பக். 33.

குள்ளாயின. சமணர்களும் பௌத்தர்களும் வாழ்ந்து நல்லறங் களைப் பரப்பியும், கல்வியறிவைப்புகட்டியும் தொண்டாற்றிய இடங்களைத் தேர்ந்து அகழ்வாராய்ச்சி புரிகையில் அரிய தடயங்கள் கிடைக்கின்றன. அவை ஒரு புறமிருக்க, இக்காலத்தில் காணலாகும் சிலவற்றை ஓரளவு சுருங்கக் காண்போம்.

பல்லவமன்னர்களுள் சிலர் சமணக் கொள்கையை ஆதரித் தவர்களாக வரலாற்றில் கூறப்படுகின்றனர். சமணர்கள் தம் கொள்கைகளை மக்களிடையே பரப்பும் நோக்கத்தில் அக்கால மன்னர்களின் ஆதரவினைப் பெற்றுத் தமக்குச் செல்வாக்கினைப் பெறலாயினர். இந்நிலையில் சமணச்சார்புடைய **கோயில்களை** யும் துறவிகளுக்கெனப் **பாழிகளையும்** மன்னர்களே உண்டாக்கி ஆதரவு காட்டியுள்ளனர். இவ்வாற்றான் **மகேந்திரவர்மன்** புரிந்த கட்டடக்கலைப்பணிகள் குறிக்கத் தக்கன. தென்னார்க் காடு, செங்கற்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்களில் சமணப் பாழிகள் சிலவற்றைக் காணலாம்.

திருநாவுக்கரசர் சமணக்கொள்கைப் பிடிப்பினின்றும் மீண்டு சைவஞ்சார்ந்ததும், திருவதிகையிலுள்ள சமண்பாழிகள் சிவன் கோயில்களாயின என்பது வரலாறு. சமணர் பாழி ஒன்று மாற்றப் பெற்றுக் **குணபரேச்சுரம்** எனும் சிவன் கோயிலாயிற்று என்பது வரலாற்று உண்மை.

பாண்டிய மன்னர்கள் காலத்திலும் சமணக் கொள்கைக்கு ஆதரவு இருந்து வந்துள்ளது. சிறப்பாகச் சைவநாயன்மாராகக் கருதப்பெறும் **மங்கையர்க்கரசியின்** கணவரான **நின்றசீர்நெடு மாறன்** (கூன் பாண்டியன்) காலத்தில் பாண்டி நாட்டிலே சமணச் செல்வாக்கு மிகவும் கொடிகட்டிப்பறந்தது எனலாம். **சித்தன்னவாசல்** முதலிய பல இடங்களில் சமண மண்டபங்கள் அமையலாயின. துறவியர்க்கும் பல தவச் சிறப்புடைய **பாழி களும் பள்ளிகளும்** தோன்றின.

"சமணத்துறவியர் உறைந்த இடங்கள் **பள்ளி, பாழி, அதிட்டானம்** எனப்பெற்றன. உயிர் நீத்த இடம் **நிசீதிகை** எனப்பெற்றது. இத்தகைய உறைந்த இடங்களும் கல்வெட்டுக் களும் கட்டபொம்மன் மாவட்டக் **கழுகுமலையிலும்** மதுரை மாவட்ட **ஆனைமலையிலும் திருப்பரங்குன்றத்திலும் மாங்குளத்**

திலும் விக்கிரமங்கலத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் புகளூர்க்குன்றிலும் புதுக்கோட்டை மாவட்டச் சித்தன்ன வாசலிலும் காணப் பெறுகின்றன[1] என்று டாக்டர். அ. கிருட்டிணன் எழுதிச்செல்லும் குறிப்பு ஈண்டு நினைவிற் கொள்ளத்தக்கது.

மதுரை மாநகரிலும் சமணர்கள் வழிபாடு புரிதற்குரிய இரு சிறுகோயில்கள் அமைந்துள்ளன. மீனாட்சியம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள ஜடாமுனி கோயில் தெருவில் 23-ஆவது தீர்த்தங்கரர் பார்சுவநாதர் கோயிலிலும், மீனாட்சி கோயில்தெருவில் 5-ஆவது தீர்த்தங்கரர் சுமதி நாதர் கோயிலும் இருத்தலை இன்னுங் காணலாம்.

மதக்காழ்ப்புணர்ச்சியால் சில சமணர்குகைக் கோயில்கள், இந்து சமயக் கோயில்களாக மாறிவிட்டன என்பது மயிலை சீனி. வேங்கடசாமி, தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் போன்ற அறிஞர்கள் கருத்தாகும் என்பதை முன்னரே கண்டோம்.

சமணவழிபாட்டு இடங்களாகிய சைத்தியங்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளில் சிதைவுற்றுக் காணப்படுகின்றன.

திருக்கோவிலூருக்கு அருகே அறையணிநல்லூர் (அரகண்ட நல்லூர்) உள்ளது. அங்கு அறையணி நாதஈசுவரர் ஆலயம் கலைச் சிறப்பும் சமயச் சிறப்பும் உடையது. அந்த ஆலயத்தின் கிழக்கிலும் தெற்கிலும் பாறையிலேயே பெரிய அற்புதங் காணலாம். "அக்குளக்கரையிலே பஞ்சபாண்டவர் குகை ஒன்றும் உண்டு. அதில் ஐந்து அறைகளும், திரௌபதைக்கு ஒரு சிற்றறையும், ஒரு சுனையும் இருக்கின்றன. ஏதோ ஜைனமுனிவர்கள் தங்க அமைத்த குடைவரைச் சைத்தியமாக இருக்க வேண்டும். ஐந்தும் ஒன்றும் சேர்ந்து ஆறு அறைகள் இருப்பதனால் பஞ்சபாண்டவர்களின் தொடர்பு ஏற்படுத்திப் பேசுகிறார்கள்"[2] எனத் தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் ஆராய்ந்து எழுதிச் செல்வது சிந்திக்கத் தக்கது.

22. பூம்புகாரில் அமைந்திருந்த இந்திரவிகாரம்:

முன்னொரு காலத்தில் சமணர்களும் பௌத்தர்களும் தமிழ் நாட்டில் செல்வாக்குடன் வாழ்ந்திருந்தனர். அவர்கள் கட்டிய

1. கல்வெட்டியல், பக், 5
2. வேங்கடம் முதல் குமரிவரை [பொன்னியின் மடியிலே], பக். 34.

கட்டடங்கள் பல, காலக் கோட்பட்டுச் சிதைந்து அழிந்துள்ளன. பூம்புகார் நகரம் ஒரு காலத்தில் பல மதத்தினருக்கும் இடங் கொடுத்து, மக்கள் பலரும் திரண்டு இனிது வாழ வழிவகுத்ததை வரலாறு கூறிக் காட்டுகிறது. அத்தகைய பூம்புகாரில் **'இந்திர விகாரம்'** என்ற பௌத்தக் கட்டடம் மிகச் சிறப்புடன் இருந்துள்ளது **சிலப்பதிகாரத்தில் 'இந்திரவிகாரம் ஏழ்'** என வருங் குறிப்பு உள்ளமை காண்க. இதற்கு **அடியார்க்கு நல்லார்** வரைந்த உரையால், இது **புத்த சைத்தியம்** என்பதும், **இந்திரனால்** நிருமிக்கப்பட்டது என்பதும், ஏழு அரங்குகளையுடையதாய் இருந்தது என்பதும் புரியலாகும். புராணத்தில் வரும் இந்திரன் எனக் கருதுவதைக் காட்டிலும், அரசகுலத்தவனான **இந்திரன் அல்லது மகேந்திரன்** எனக்கொண்டு, அவன் கட்டிய **விகாரம்** எனக் கொள்வதற்குத் தக்க காரணமுள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இவ்வாற்றான், "அசோகச் சக்கரவர்த்தியால், பௌத்த மதப் பிரச்சாரம் செய்வதற்கு அனுப்பப்பட்ட அவன் இளவலும் பிட்சுவுமான **மகேந்திரன்** என்பான், தமிழ்நாடு என்ற **சோணாட்டில்** ஒரு பெரிய விகாரங் கட்டிக்கொண்டு அதனில் சில காலம் வசிக்கலாயினன் என்றும், அவ்விகாரத்தில் இடிந்தபகுதி சில, **ஏழாம் நூற்றாண்டில்** இங்கு வந்து சென்ற **'யுவான் சுவாங்'** என்ற சீனயாத்திரிகர் காலத்தும் இருந்தன என்றும் கூறப்படுகின்றன. சோணாட்டில் கட்டப் பட்டதாக இங்குச் சொல்லப்படுவது, காவிரிப்பூம்பட்டினத்தில் விளங்கிய விகாரமாகவே கொள்ளல் பொருத்தமாகும் என்பார் **பேராசிரியர்** மு. **இராகவையங்கார்** காவிரிப்பூம்பட்டினத்தில் நிகழ்ந்த **அகழாய்வில்**, 'புத்த சைத்தியம் **சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட** ஏழு **அறைகளையுடையதாய்** இருக்கிறது. இதில் பௌத்த சமயத்துறவிகள் தங்கினர்' என்பர். இந்தச் சைத்தியத் திற்கும் சிலப்பதிகாரத்தில் கூறப்பெற்றுள்ள இந்திரவிகாரத் திற்கும் உள்ள ஒற்றுமையை நோக்கும்போது, இரண்டும் ஒன்றே என்ற முடிவு செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்"[1] என்று **பொ. அழகு கிருஷ்ணன்** எழுதிச் செல்வது சிந்தித்துப் போற்று தற்குரியதாகும். மேலும், ஆராய்ச்சியால் தெளிவு காணும்

1. அனைத்திந்தியத் தமிழிலக்கியக்கழகம் - ஆய்வுக்கோவை (தஞ்சாவூர்) 1990, பக். 762

வரையில், புத்த சைத்தியத்திலுள்ள **'ஏழுஅறைகளையே இந்திர விகாரம் ஏழ்'** எனக் கொள்வதே ஏற்புடையதாகும்.

பூம்புகாரில் இந்திரவிகாரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட **சுட்ட செங்கற்கள்** அளவில் சிறியனவாக இருந்துள்ளன.

''காவிரிப்பூம்பட்டினத்தில் கண்டுபிடிக்கப் பெற்றுள்ள **கப்பல்துறைத்தளம் (wharf)** சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. இந்தச் செங்கற்கள் ஒவ்வொன்றும் 24 அங்குலம் நீளமும், 16 அங்குலம் அகலமும் உடையனவாய் இருக்கின்றன. இதைக்கொண்டு, அக்காலத்தில் கட்டடங்களுக்குச் சுட்ட செங்கற்களைப் பயன்படுத்தி வந்தனர் என்றும், அவை பெரிய அளவுள்ள செங்கற்களாக (24'' × 16'') இருந்தன என்று கூறலாம்''[1] எனுங்குறிப்பு, இந்திரவிகாரத்தைப் பொறுத்த அளவில் பொருந்துமாறு தெரியவில்லை.

23. திருச்சாரணப் பல்கலைக்கழகம்;

சமணப் பெரியவர்கள் வாழ்வியல் அறநெறிகளைப் போதித்ததேயல்லாமல் கல்வித்தொண்டுகள் பலவற்றைப் புரிந்தவர்கள் என்பது அவர்கள் தமிழுக்குத் தந்த அறநூல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், இலக்கணங்கள் வாயிலாக அறிய இயலும். பௌத்தர்களும் சமணர்களும் கல்விச் சாலைகளை நிறுவுவதில் முன்னோடிகளாகவும் விளங்கியுள்ளனர். இன்று **'பள்ளிக்கூடம்'** **'பள்ளி'** என்றெல்லாம் வழங்குவதற்கு அடிகோலியவர்கள் அவர்களே. பள்ளிகளேயன்றிப் **பல்கலைக்கழகம்** போன்ற ஒருவகைக் கல்வியமைப்புக் கட்டடங்களைக் கட்டியும் தொண்டு புரிந்துள்ளனர் என்பதற்குத் தடயங்கள் கிடைத்துவருகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்துக் குழித்துறையிலிருந்து சுமார் 6 கி.மீ. தொலைவிலுள்ள **திருச்சாரணத்து மலை**யின் உச்சியில் இயற்கையாக அமைந்த தொங்கு பாறையின் அடியில் **மண்டபம், தாழ்வாரம், பலிபீடம், மடப்பள்ளி**ஆகிறவற்றைக் கொண்ட **மகாவீரர்** கோயில் உள்ளது. கோயிலின் வடக்கே அமைந்துள்ள பாறையில் **சமணதீர்த்தங்கரர்களின் திருவுருவச் சிலைகள் பல**

1. அனைத்திந்தியத் தமிழிலக்கியக் கழகம் - ஆய்வுக் கோவை (தஞ்சாவூர்), 1990, பக். 762.

வுள்ளன. இத்தகைய சமணமதச் சூழலில், **சமணர்களின் பல்கலைக்கழகம்** அறிவுப்பயிற்சியும் சமணப்பிரச்சாரமும் நடத்தி வந்துள்ளது. ''திருச்சாரணத்து மலையில் சமணர்களின் பல் கலைக்கழகம் ஒன்று சிறப்புடன் செயல்பட்டதற்கான தடயங் கள் பல கிடைத்துள்ளன. **பெண் சமணத்துறவிகள்** இங்கு வந்து மக்களுக்கு அறிவூட்டினர் என்றும், அவர்களும் அவர்களது மாணாக்கர்களும் வெவ்வேறு குழுக்களாக நாலாத்திசைகளிலும் சென்று அறநெறிக் கருத்துக்களை மக்களிடையே பரவச் செய் தனர் என்பதற்கான சான்றுகள் நெல்லை மாவட்டம் கழுகு மலையில் கிடைத்த கல்வெட்டுக்களில் இருந்து தெரிகிறது''[1] என்று **கா. மோகன்** எழுதிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கது.

காணக்கிடைக்கும் மலைக்கோயிலைக் கொண்டும், தொல் பொருளியலார் கண்டுபிடித்துள்ள தடயங்களைக் கொண்டும் பல்கலைக் கழகக் கட்டடப்பகுதியை ஓரளவு தெரிந்துகொள்ள லாம்.

24 கிறித்துவக் கட்டடக்கலை

உலகெங்கும் பரவியுள்ள கிறித்துவ மதத்தினர் தம் மதக் கோட்பாடுகளை நிலைக்கச் செய்யும் வண்ணம் மதச்சார்பான கட்டடங்களை ஆங்காங்கே கட்டியுள்ளனர். அவ்வாற்றான் தமிழ்நாட்டிலமைந்த **மாதா கோயில்** அல்லது **தேவாலயம்** (Church), **பாதிரிமார் (துறவியர்) இல்லம்** (Monastery), பிஷப்புக் கள் தங்கும் தேவாலயப்பகுதி (Chapel), **கிறித்துவக்கன்னியர் மடம்** (Nunnery), மலைப்பாறைப் பின்னணியில் இயேசுபிரான் காட்சியருளும் அமைப்பு (கெபி) முதலியவற்றில் ரோமானியக் **கட்டடக்கலையின்** தாக்கம் அமைந்துள்ளது; எனினும், தமிழ் நாட்டுக் கலைப்பண்பாடும் சிறிதளவு இடங் கொண்டுள்ளது.

சில மாதாகோயில்கள் வெகு உயரமான கூம்பிய கட்டட அமைப்பினையும், அரைக்கோள அமைப்பினையும், சதுரமாக உயர்ந்த கட்டட அமைப்பினையும் கொண்டு, உச்சியில் சிலுவை யுடன் விளங்கும். அவற்றுள் சில, இந்துக்களின் கோயிற் கோபுரங்களையும் இசுலாமியர்களின் மனோராக்களையும் ஒரு

1. தினமலர் தீபாவளி மலர், 1992.

வகையில் நினைவுபடுத்தும் நிலையில் அமைந்திருக்கின்றன. ஓரளவு தொலைவிலுள்ளவர்களும் மாதாகோயிலைக் கண்டு சிலுவை வணக்கம் செய்யுமாறு அமைந்துள்ளமை போற்றத் தக்கது. இத்தகைய அமைப்பும் இந்துக் கோயிற் கோபுரத்தையும், விமானத்தையும் தொலைவிலிருந்து தூலலிங்க வழிபாடு புரியும் அமைப்பும் ஒப்பியல் நோக்கில் சிந்திக்கத்தக்கவை.

ஒவ்வொரு தேவாலயத்திலும் கிறித்துவர்கள் பொதுவாக ஞாயிற்றுக் கிழமைகளிலும் சிறப்பாகக் கிறித்துமஸ் (Christmas), உயிர்ப்பித்த திருநாள் (Easter), புனித வெள்ளி (Good Friday) முதலிய சிறப்பு நாள்களிலும் கூட்டுவழிபாடு நிகழ்த்துதற்கு ஏற்ற வகையில் விசாலமான மண்டபத்லதைப் பெற்று விளங்கும். இங்குக் கூட்டுவழிபாடும் திருமணச்சடங்கும் ஞானஸ்நானமும் புது நன்மையும் தவிர வேறுநிகழ்ச்சிகளுக்கு இடந்தருவதில்லை.. தேவாலயங்கள் பலவற்றில் விசாலமான மண்டபத்திற்கு முன் பகுதியில் பெரிய முற்றமும், பக்கங்களில் தாழ்வாரங்களும், நல்ல காற்றோட்டத்திற்கு வசதியான வாசல்களும் பலகணிகளும் கொண்டு கட்டடப் பகுதிகள் காணப்படும். எனினும், தூண்களைப் பொறுத்த வரையில், இந்துக்கோயில்களில் காணலாகும் மிகப்பலவான தூண்களையோ இசுலாமியர் வழிபாட்டு இடங்களில் காணலாகும் சிலவான தூண்களையோ கிறித்துவ தேவாலயங்களில் காணவியலாது; மிகக் குறைந்த அளவிலேயே தூண்கள் அமைந்திருக்கும்.

கிறித்துவர்களுள் கத்தோலிக்கர்களின் தேவாலயங்களி மரியன்னையையும் குழந்தை இயேசுவையும், சிலுவையையும் முன் முகப்பிலும், உள் மேடையிலும் வழிபடுதற்கேற்ப அமைந்திருக்கக் காணலாம். புரோட்டஸ்டெண்டுகளின் தேவாலயங்களில் அழகான சிலுவைகளே எங்கும் சிறப்பிடங்கொண்டு விளங்கும்.

இந்துக் கோயில்களின் அருகே கல்லறைகளுக்கு இடந்தருவதில்லை. ஆனால், இசுலாமியர் மசூதிகளுக்கு அருகே கல்லறைகளுக்கு இடந்தருவர்; அவர்களைப் போலக் கிறித்துவர்களும் மாதா கோயில்களுக்கு அருகே கல்லறைகளுக்கு இடந்தருகின்றனர். கல்லறையமைப்பிலும் பலவகைகள உண்டு.

பொதுவாகக் கிறித்துவர்கள் தம் மதச்சார்பான கட்டடங்களில் **கொடிக்கருக்கு** வேலைப்பாடுகளுக்கு அலங்கார நிமித்தம் இடந்தந்து வருகின்றனர்.

25. இசுலாமியர் கட்டடங்கள்:

இந்தியப் பெருநாடு பண்டுதொட்டே பல வெளிநாடுகளுடன் வணிகங் காரணமாகத் தொடர்பு கொண்டிருந்தது என்பது வரலாற்று உண்மை. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ரோம் கிரேக்கநாடுகளுடனும் அரேபிய நாட்டுடனும் சீனநாட்டுடனும் பண்பாட்டு அடிப்படையில் பல்வகை நோக்கங்களில் தமிழ்ப் பெருமக்கள் தொடர்பு கொண்டிருந்தனர். அரேபியநாட்டிலிருந்து தரமான குதிரைகளை இறக்குமதி செய்வதில் ஆர்வங்காட்டியுள்ளனர்.

மரக்கலங்களின் வாயிலாகவும் வடபுலத்துத் தரை வாயிலாகவும் அராபிய இசுலாமியர்கள் இந்தியாவுக்கு வந்து, வடக்கேயும் தெற்கேயுமுள்ள மக்கள் பலரைத் தம் மதத்தைத் தழுவும்படி செய்துள்ளனர். இசுலாமியர் படிப்படியே அரசியலிலும் செல்வாக்கினைப் பெற்று மோகலாய ஆட்சியை நிறுவிச் சில நூற்றாண்டுகள் இந்தியாவின் பலபகுதிகளை ஆண்டுள்ளனர். அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் அரேபியாவுக்கும் இந்தியாவுக்கு மிடையே கலைகள் வாயிலாகவும் பழக்க வழக்கங்கள் காரணமாகவும் ஒருவகை உறவு ஏற்படலாயிற்று; அதன் காரணமாக இந்தியாவில் இசுலாமியப் பண்பாட்டுத் தாக்கம் தவிர்க்க இயலாததான நிலையில் ஆதிக்கம் பெறலாயிற்று.

கட்டடக் கலையைப் பொறுத்த வரையில், மொகலாயர் ஆட்சியில் அமைந்த பல்வகைக் கட்டடங்கள் இசுலாமியரின் கட்டடக் கலைப்பண்பாட்டை உணர்த்தும். வடநாட்டிலே ஆட்சிசெலுத்திய மொகலாய மாமன்னர்கள் படிப்படியே நாட்டு ஆட்சியை விரிவாக்கும் நோக்கத்தில் தென்னாட்டில் பல பகுதிகளைப் படையெடுப்பால் கவர்ந்தனர்; சில இடங்களில் தங்கள் ஆட்சியாதிக்கத்தையும் நிலைநாட்டினர். இத்தகைய காலச் சூழலில் அவர்களது ' கட்டடக்கலைக் கூறுகள் தென்னாட்டில், சிறப்பாகத் தமிழ் நாட்டில் இசுலாமிய மதத்தவர்களால் ஏற்கப்பட்டன.

இசுலாமியர்கள் தங்கி வாழ்ந்த அரண்மனை போன்ற கட்டடங்கள் ஒரு புறமிருக்க, அவர்களின் மதக் கோட்பாடுகளை வளர்க்கக் காரணங்களாக அமைந்த **பள்ளிவாசல், தர்கா, மசூதி, மனோரா** (கோபுரம்) முதலியவை கட்டடக் கலைப் பண்பாட்டு நோக்கில் மிகவும் சிந்திக்கத்தக்கவையாகும். இசுலாமியர் கட்டடங்களில் அராபிய - பாரசீகக் கலையின் தாக்கம் இருப்பினும் தமிழகப்பண்பாட்டுக் கூறுகளும் சில இடங்களில் பிணைந்திருக்கக் காணலாம்.

பள்ளிவாசல் என்பது இசுலாமியர்களின் தொழுகையிடமாகும். இசுலாமியர்களின் வாழ்வியல் கடமைகளில் **தொழுகை** மிகச் சிறந்ததாகும். ஒவ்வொரு நாளும் ஐந்துமுறை — ஐந்து வேளை (பஸர், லுஹர், அஸர் மஃறீப், இஷா) –'அல்லாஹ்' (கடவுள்) நினைப்புடன் தொழுகை வழிபாட்டினை நியமமாகச் கொள்வர். இவ்வாற்றான் பொது வழிபாட்டுத் தலமாக அமையப் பெற்றதே பள்ளிவாசலாகும். பள்ளிவாசலுக்கு முறைப்படி போக இயலாத இசுலாமியர்கள் தத்தம் இல்லங்களிலே வேளை தவறாமல் தூய இடமாகப் பார்த்துத் தொழுகை நடத்தி மனநிறைவு கொள்வர். இதனால், தொழுகையின் இன்றியமையாச் சிறப்பு நன்கு விளங்கும்.

இசுலாமியர் வாழுஞ் சிற்றூர்களிலும் பள்ளிவாசல் தவிர்க்க ்யலாத் தேவையான கட்டட அமைப்பாகும். பேரூர்களில் மக்கள் தொகைக் கேற்பப் பள்ளிவாசற் கட்டடங்கள் பலவாக அமைந்திருக்கும். ஒவ்வொரு பள்ளி வாசலிலும் கைகால் முகம் கழுவித்தூய்மைப்படுத்திக் கொள்ளக் குளமோ வேறு நீர் நிலையோ தொட்டியோ அமைந்திருக்கும்

தர்கா என்பது இசுலாமியச் சித்தரோ பெரியவரோ நல்லடக்கமாகிய இடமாகும். **மசூதி** என்பது பெரிய அளவில் அமைந்த பள்ளிவாசலாகும். சுருக்கமாக, இவை அனைத்துமே இசுலாமியருக்குத் தொழுகை நடத்துவதற்கு வாய்ப்பான இடங்களேயாகும்.

தர்காக் கடடடங்களைப் பொறுத்தவரையில் **நாகூர்மீரான் சாயபு தர்கா** மிகப்புகழ் வாய்ந்த கட்டடக் கலையமைப்பைக்

கொண்டது. அதனருகே நெடிய மினோராக்களைக் காணலாம். சிறந்த வல்லபம் விளங்கும் தர்காக்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன. அவற்றுள் சில வருமாறு:

திருச்சி தப்ரே ஆலம் பாதுஷா தர்கா

ஏர்வாடி இப்ராகிம் ஒலியுல்லா தர்கா

மதுரை மஹ்பூப் சுபஹானி தர்கா

6. சிற்பக்கலை - பண்பாட்டுக் கூறுகள்

சிற்பக்கலை - வளர்ச்சி நிலைகள்

1. சிற்பக்கலை:

சிற்பம் என்பதில் **'சில்'** என்பது வேர்ச்சொல்லாகும். **'சில்'** என்பதன் அடியாகச் **'சிலை'** என்னுஞ் சொல் அமைந்து கல்லைக் குறிப்பதாயிற்று. இதன் பரிணாம வளர்ச்சியில் **சிற்பக்கலை** மிக மேம்பாடுடையதாக, அழகுக்கலைகளுள் ஒன்றாயிற்று.

உலகின் பல பகுதிகளிலும் சிற்பத் தொடர்பான செய்திகளால் சிற்ப வளர்ச்சிக் கூறுகளை அறிந்து கொள்ளவியலும்; எனினும், இந்தியப் பெருநாட்டுச் சிற்ப வரலாறு, அதிலும் சிறப்பாகத் தென்னாட்டிலேசீர்மைமிகு தமிழ்நாட்டுச் சிற்ப வரலாறு, பண்பாட்டு நோக்கிலும் நாகரிக நோக்கிலும் அறிந்து கொள்ளத் தக்க சிறப்பினையுடையது. இதற்கு அடிப்படைக்காரணம், தமிழ் நாட்டுச் சிற்ப வரலாறு பெரும்பாலும் திருக்கோயில்களுடன் தொடர்பு கொண்டுள்ளமையேயாகும்.

தமிழ்ச் சமுதாயத்தின் உயர்ந்த குறிக்கோளாகிய ஆன்மிக வாழ்வைக் கவின்கலைகளுடனும் பண்பாட்டுச் சிறப்புடனும் இயைத்துக் கொண்டுள்ளமை வெள்ளிடைமலை.

திருக்கோயில்களில் காணலாகும் எண்ணற்ற சிற்பக் கருவூலங்களால் தமிழ்நாடு சிற்பக் கலைவளங் கொழிக்கும் நாடாக உலக அரங்கிலே மதித்துப் போற்றப்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம், தமிழர்களின் உயிரனைய சமயப்பண்பாடும், அப்பண்பாட்டைக் கண்ணெனப் போற்றி வளர்க்கும் சூழலை அமைத்துத்தந்த பேரரசர்களும் பெருங்கொடை வள்ளல்களுமே யெனலாம். இத்தகைய சூழ்நிலை நன்கு பாங்காக அமைந்த வேளையில், சிற்பக் கலைஞர்களின் தெய்வநலக் கற்பனையும் படைப்பாக்கமும் பொதுநலஊற்றமும் அரிய சிற்பக்கலைப் படைப்புக்களை உருவாக்கி உலகிற்கு வழங்கிடத் துணை நிற்கின்றன.

1.1. சிற்பம் - விளக்கம்:

அழகுக் கலைகளுள் கட்டடக்கலைக்கு அடுத்தபடியாக உள்ளது சிற்பக்கலையாகும். கட்டடக்கலை உலகியல் பயன்

மிகக் கொண்டுள்ள அதே வேளையில், சிற்பக்கலை **அழகுணர்வு (Aesthetic sense) ஆன்மநலம்** முதலியவற்றுக்கு ஆக்கந்தரும் இயல்பினதாகும்.

மானுடன், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, மரம், செடி, கொடி, மலை, கடல் முதலிய இயற்கைக் கூறுகளையும், இயற்கை கடந்த ஆற்றல்களையும் (Super natural Powers) முறையே நேரிலும் கற்பனையனுபவத்திலும் கண்டும், உணர்ந்தும் உருவங்களாகக் கல் முதலியவற்றில் அழகுற வடிப்பதே சிற்பமாகும். காப்பியத்திற்கு உயிரோட்டமளிக்கும் புலவரின் வளமான கற்பனை போலச் சிறந்த **சிற்பத்திற்கு உயிரோட்டமளிப்பது சிற்பியின் கற்பனைச் செழுமையே**யாகும். ஆகவே கலையுலகில் சிறந்த கலைப்படைப்பானது, தேர்ந்த சிற்பக்கலைஞனின் வளமான கற்பனையிலே உள்ளதெனலாம்

1.2. சிற்பியர் திறம்:

கருங்கல், மரம், தந்தம் முதலிய பொருள்களால் சொக்கும் எழில்நலத்தையும், உணர்ச்சியையும், கலைக் கற்பனையையும் புலப்படுத்திக் காட்டும் சிற்பிகள், தம் கலைவழிப்பட்ட தனித் தன்மையால் சமுதாயத்தில் போற்றுதற்குரியவர்கள். அவர்கள் தம் உள்ளத்தில் எழும் உள்ளொளியால் புலப்படும் கருத்துக் களைப் பருப்பொருளுருவில் அமைக்கும் அரிய திறனுடையவர்கள் அவர்கள் அனுபவிக்கும் **அழகனுபவம் (Aesthetic experience) அழகுணர்வுடன்** வெளிப்பட்டுக் கலைப்படைப்பாகப் பரிணமிக் கிறது. அவர்கள் தம் செய்வினை நேர்த்தியால் படைத்துத்தரும் கலைப்பொருள்கள் மக்களுக்கு மிகவும் பயன்பட வேண்டு மெனின், அவற்றில் பொருந்திய வடிவமும் ஒத்தளவும் கலை மரபுடன் இயைபுடையனவாக இருத்தல் வேண்டும். அந்நிலை யில் கலைப்படைப்பில் இறைமை குடிகொள்ளும். இதனால், **ஆன்மாவின் அழகே** சிற்பத்தின் வாயிலாகப் புலப்படுத்தப்படு கிறது எனலாம்.

கலைப்படைப்பில் காணலாகும் இயல்பான வனப்பில் ஆன்மா இரண்டறக் கலக்கும் என்பதும், அத்தகைய படைப்பில்

இறைமை - தெய்வநலம் - ஒன்றிக் கலந்து உலகுக்கு நன்மை தரும் என்பதும் சிற்பியரும் தமிழ்நாட்டு மக்களும் உணர்ந்து போற்றும் செய்திகளாகும். சிற்ப நோக்கத்தின் இரகசியமே இவ்வாறு அமைந்துள்ளது எனலாம்.

சிற்பக் கலைஞர்கள் சிறந்த இலட்சியங்களை மனத்துட் கொண்டு, தாம் ஒன்றியவுணர்வுடன் நம்பிக்கையும் கலைக் கற்பனையும் உடையவர்களாய் நேர்த்தியான தெய்வநலச் சிற்பத் திருவுருவங்களைப் படைப்பர்; அவ்வாறு அமைக்குங் காலத்தில், தம் உணவு உடை உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளைக் கூடப் பொருட்படுத்துவதில்லை. 'செய்யுந்தொழிலே **தெய்வம்**' என்ற கோட்பாட்டில் தம்மைக்கலைப்படைப்பிலே இயைத்துக் கொள்வதால், சிலையுருவைச்செதுக்குகையில் அவர்கள் இவ்வுலக நினைவு பெரும்பாலும் கொள்வதில்லை; அவர்களுக்கென அமைந்த ஒருவகைக் கலையின்பவுலகில் தம்மையே மறந்து நிற்பர் எனவும் கூறலாம். இவ்வாற்றான் சிறந்த சிற்பியர்களை ஒருவகை **யோகியர்** என்றும் போற்றிக் கூறலாம். அத்தகைய சிற்பயோகியரே ஒரு காலத்தில் உலக நன்மைக்கெனத் தம் கலையனுபவத்தை ஆகமங்களாகச் - சாத்திரங்களாக - வடித்துத் தரலாயினர். சிற்பியரேயன்றிச் சிற்ப நுணுக்கங்களை உள்ளுணர் வால் ஆகமங்களாக்கிய ஞானியரும் உண்டு என்பர். அவ்வாறு தரப்பெற்ற கலை நூல்களே வாழையடி வாழையென வரும் இளங்கலைஞர்களுக்கு வழிகாட்டிகளாயின; **கலை மரபுகள்** (Art-traditions) என்று பிற்காலத்தில் போற்றிப்பு கழுமளவிற்குக் கலையுலகிற்கு ஊற்றந்தந்து சிறப்பிடங் கொண்டுள்ளன.

சிற்பநூல்களில் காணலாகும் **தியான மந்திரங்கள்** கலைமரபு களைக் காப்பதற்காகவே எழுந்த வழிகாட்டிகளாகும். தியான மந்திரங்களைப் பின்பற்றி நியதியுடன் படைக்கப் பெறும் சிற்பக்கலைப் படைப்புக்கள் சக்திமிகு **இறைமை** (மூர்த்திகரம்) பெற்று விளங்கப் பெருவாய்ப்பினைப் பெற்றன. அவ்வாறான கலைப் படைப்புக்களை உருவாக்கிய சிற்பியர்கள், இந்நாட்டு மன்னர்களாலும் வள்ளல்களாலும் **'கலாவிநோதர்கள்'** எனப் பாராட்டப் பெற்றனர். ஆக, நேர்த்தியான கலைப்படைப்பின் உயிர்நாடி கற்பனையென்பது மிக இன்றியமையாத் தேவை

யாகும். கற்பனையும் கலைப்படைப்பிற்குரிய பயிற்சியும் திறமைக் கூறுகளும் தக்கவாறு அமையினும் சிற்பத்தை உருவாக்குவதற்குப் பூர்வாங்கத் தேவைகளாகச் சில அமைதல் வேண்டும்.

சிற்பியர் உருவாக்கும் பிம்பங்களை அமைத்தற்குரிய மூலப் பொருள்களைத் தேர்ந்தெடுப்பதிலும் திறமை தேவைப்படும். வடமொழியாளர் அடிப்படை அணுகுமுறைகளை முதலில் கண்டு கொண்டு, தமிழ் மக்களின் சில அணுகுமுறைகளைத் தொடர்ந்து காண்போம்.

சுக்கிரநீதி எனும் நூலில், "பிம்பங்கள் மண்ணாலும் பசையினாலும், சீனாக்களிமண்ணாலும், புவிப் பொருள்களாலும், கற்களாலும், மரங்களாலும், உலோகங்களாலும் ஆனவை. அவைகள் தயாரிக்கப்பட்ட காலம் அந்தந்தப் பொருள்களின் தரங்களையும் நிர்ணயிக்கும் தன்மையையும் பொறுத்துள்ளது. பிம்பங்கள் தங்கத்தாலும், வெள்ளியாலும், பித்தளையாலும், தாமிரத்தாலும் - **சத்ய, திரேதா, துவாபரா, கலியுகம்** ஆகிய சுக்கிர நீதி வரிசையில் - இயற்றப்பட்டு உள்ளன. பயன்படுத்தப் பட்ட பொருள் கல்லாயிருந்தால் கலைஞன் வெள்ளை மஞ்சள் சிகப்பு மற்றும் கருப்புக் கற்களாலான பிம்பங்களை அந்தந்தக் காலங்களுக்கு ஏற்ப அமைக்கலாம்; ஆனாலும், சிற்பி தன் சொந்த விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம் பல்வேறு வகைப் பட்ட பொருள்களை ஈங்குக் குறிப்பிட்டிருப்பதன் நோக்கம் சில புனிதமான செயல்களின் பண்புகளைக் காட்டவேயாகும்"[1] எனக் குறிப்பிட்டிருப்பது சிந்திக்கத்தக்கது

சிற்பியர் தாம் தேர்ந்தெடுக்கும் சிற்ப வகைமைக்கேற்பத் தம் சிற்பமுறைகளை அமைத்துக் கொள்கின்றனர். சுவரிலோ, தரையிலோ, தூணிலோ, விதானத்திலோ சிற்பவேலைப்பாடு களை மக்கள் கண்டு போற்றிப் பாராட்டும்வண்ணம், சிற்ப அலங்காரங்களைக் கற்பனையின் உந்துதலால் அமைக்கின்றனர். அத்தகைய வேலைப்பாடுகளில் **நடப்பியல்** அல்லது **உண்மையியல்** (Realism) இருக்கவேண்டுமென்று கூட எதிர்பார்ப்பதில்லை; சிற்பியின் கற்பனைவளமே ஆதிக்கஞ்செலுத்தும்.

1. கலைக் களஞ்சியம், தொகுதி, 4.

நாம் காணும் **வாத்து** எனும் பறவை **அன்னம்** எனும் புது உருக்கொண்டு, அதன் வால் அல்லது தோகைப்பகுதி முழுவதும் பூவேலைப்பாடுகளைப் பெற்றுவிடும்; அதேமுறையில் **மயில்** முதலிய பறவைகளும் பெற்றுவிடும்;விலங்குகளிலே **சிங்கம், யாளி**யெனப் புதுவகைத் தோற்றம் பெற்றுவிடும்.

சிற்ப அலங்கார வேலைப்பாடுகளில் பல்வகைப் **பூமரங்கள், பூஞ்செடிகள, பூங்கொடிகள்காய்கள், கனிகள்** முதலியவற்றைக் காண்கையில் இவை உண்மையா என்ற நினைப்பே எழுவதில்லை. அந்த அளவுக்குச் சிற்பவேலைப்பாடுகள், காண்பவரின் அழகனுபவத்தைச் சுண்டியிழுத்து அவற்றில் ஒன்றச் செய்துவிடும். இதுபற்றிச் **சிற்பி கணபதிஸ்தபதி** "இயற்கையில் காணப்படும் செடி கொடிகளைக் கூட உள்ளதை உள்ளபடியே நம் மரபில் காட்டுவதில்லை. அதற்கு மாறாகச் செடி கொடிகளின் **நெளிவு, சுளிவு, மடிப்பு, விரிப்பு, கோவை,** அடுக்கு, மினுமினுப்பு, மென்மை, இயல்பான தன்மை, அதன் **இயக்கங்கள்** இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்து உணர்ந்து அவற்றை மனங்கவர் பாவனைகளில் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்துறையில் சிற்பியின் கற்பனை எவ்வளவு வளமாக இருந்தது என்பதை இவ்வடிவங்களை நேரில் பார்த்தே சுவைக்க முடியும். இவ்வடிவங்களைக் **'கருக்குகள்'** என்றும், **'பாளை'** என்றும் தமிழகச் சிற்பிகள் குறிப்பிடுவார்கள். தமிழகச் சிற்ப மரபின் போற்றுதற்குரிய சிறப்பியல்புகளில் இதுவும் ஒன்றாகும். இதுமட்டுமன்று! இயற்கையில் காணும் பறவை இனங்களில் சிற்பவடிவங்கள், சிற்பியின் கரங்களிலே தனித்தன்மை வாய்ந்தனவாக வடிவெடுக்கின்றன"[1] என்று தம் கலையனுபவத்துடன் புலப்படுத்துவது மனங்கொள்ளத்தக்கதாகும்.

1.3. சிற்பியரின் தியானம்:

பாரதச் சிற்பக்கலை மிகவும் தொன்மையானது. மேலை நாட்டுச்சிற்பியர், உள்ளதை உள்ளவாறே படம் எடுத்தாற் போலச் சிற்பங்களைப் படைக்க முயல்வர்; ஆனால், பாரதச் சிற்பியரோ **உள்ளதை உள்ளவாறே** படைப்பதைக் காட்டிலும் **உள்ளதைத் தம் கற்பனையில் உணர்ந்தவாறே** படைப்பதில் சிறப்பு

1. திருக்கோயில் (திங்களிதழ்), ஜூன், 1972

உள்ளதெனத் தேர்ந்தனர். எனவே, சமயக் கற்பனைக்கு இடந் தரும்வகையில், தாம் உருவாக்கக் கருதுகின்ற கலைப்படைப்புக் களைப் பற்றி நிரம்பச் சிந்தித்துள்ளனர்; மேலான நிலையில் தியானித்துள்ளனர். அவ்வாறு, தியானத்தின் பயனாக விளைந்த படைப்பு உலகப்புகழ் பெறலாயிற்று. கலைத்திறனாய் வாளர்களும், மரத்திலேனும் கல்லிலேனும் உலோகத்திலேனும் தந்தத்திலேனும் உருவாக்கப்படும் இந்திய நாட்டுச் சிற்பங்கள் வெகு நுண்ணிய வேலைப்பாடு கொண்டவையாக விளங்கின. **'இந்தியச் சிற்பியை மற்றெந்த நாட்டுச் சிற்பியும் கலைநுட்பத்தில் வெல்லுதல் அரிது'** என்ற தம் எண்ணத்தை வெளியிட்டனர்.

''நாட்டுச் சிற்பக்கலை தேவர் தேவியரின் உடலுறுப்புக் களின் இலக்கணங்களைச் சிலையில் படைப்பதையே பெரும் பேறாகக் கருதுவது. சிற்பியொருவன் முருகக்கடவுளின் திருவுரு வைச் சிலையில் செதுக்குமுன் அக்கடவுளின் உடலுறுப்பிலக் கணங்களை வருணிக்கின்ற பாடல்களை (தியானச்சுலோகங் களை)ச் சில ஆண்டுகளாகத் தியானம் செய்வான். கண், புருவம், புருவத்தின் மயிர், இமை, இமையின் மயிர், நெற்றி, கன்னம், நாசி, இதழ் என்றிவ்வாறே முருகக் கடவுளின் உடலுறுப்புகளைத் தனித்தனியாகவும், அவையாவும் ஒன்றாய் இசைந்த திருக்கோல மாகவும் தியானிப்பான். அச்சிற்பி அம்முருகக்கடவுளாகவே தான் மாறுமளவும் அத்தியானத்திலே இருப்பான். அவனுடைய உள்ளம் முருகனது திருஅழகிலே இரண்டறக் கலக்கும். இங் ஙனம் தியானத்தில் மூழ்கிய சிற்பி உளியைக் கையில் எடுப்பான்; அவனறியாமலே உளி செதுக்கிச் செல்லும்; வெகுவிரைவில் சிலையிலே முருகன் திருமேனி உருவாகிவிடும்''[1] என்று **ஆர். எஸ். உருக்குமணி எழுதுவது** சிந்திக்கத்தக்க அரிய குறிப் பாகும்.

1.4. சிற்பத்தில் சில சிறப்பு நுண்கூறுகள்:

கல்லில் வடிக்கும் சிற்பமெனின், வடிவநேர்த்திக்கேற்பக் கல் லிலே வேண்டாத பகுதிகளைச் சிற்பி தன் உளிகளால் செதுக்கிக் கழித்துக்கொண்டே வருதல் வேண்டும். கல்லைப் பார்க்கும் அறிக

1. இந்தியச் சிற்பங்கள், பக். 28.

போதே அதனூடே தான் உருவாக்க நினைக்கும் சிற்பவடிவத்தைக் கலைக் கற்பனையுடன் நோக்குஞ்சக்தியைச் சிற்பி பெற்றிருத்தல் வேண்டும்; இதற்கு ஒருவகை யோகப்பயிற்சியே தேவைப்படும்.

உலோகத்தால் உருவாக்கப்படும் சிற்பமெனின், சிற்பவடிவத்தை வார்த்த பிறகு, வழவழப்பாக அழகு படுத்துகையில் வேண்டாத பகுதிகளை உளியால் செதுக்கி நீக்க வேண்டும். போதிய அளவு வார்ப்பில் உலோகம் பாயவில்லையெனின் பின்னப்பகுதிகளை, உருக்கிய உலோகங் கொண்டு உடுத்தும்படி நேரிடலாம். ஆனால், இவ்வாறு 'உடுத்தும்உத்தி' கற்சிற்பத்திற்குப் பொருந்தி வாராது.

சிற்பத்தின் மாட்சியை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் இதனை இசைக் கலையுடன் தொடர்புபடுத்தி ஒப்பீட்டு விளக்கம் தருவது உண்டு. மனம் போன போககிலே இசைக் கலையைக் கையாளுதல் கூடாது என்பது தமிழக இசைமரபாகும். சிறந்த சாத்திரிய - செவ்வியல் (Classical) - இசையை முறையான மரபுகளையொட்டியே இசைக்க வேண்டும்; தரத்தை நன்குபோற்றிக் காக்கவேண்டும். அதைப்போலவே சிற்பமும் கலைமரபுக்கும் நியதிக்கும் உட்பட்டே அமைதல் வேண்டும்; அதுவே நாட்டுக்கு நலமும் வளமும் பயக்கும் என்பது ஆன்றோர் நம்பிக்கை.

இசைக்கலைக்கெனப் படிப்படியே வளர்ந்து சிறந்த மரபுகள் இருப்பதைப் போலவே சிற்பக்கலைக்கெனவும் வளர்ந்து சிறந்த கலைமரபுகள் உண்டு. தெய்வநலத்தொடர்பு இசைக்கலைக்கு அமைந்ததே போன்று, சிற்பக்கலைக்கும் அமைந்துள்ளது.

சிற்ப நூல்களைப் பல்லாண்டுகளாகத் தமிழர்கள் தெரிந்து வைத்திருந்தனர் என்பது உண்மையே; எனினும், கடந்த 600 ஆண்டுகளுக்கு முன்பு (சுமார் கி.பி. 14 ஆம் நூற்றாண்டளவில்) சிற்பக்கலையை நன்கு ஆராய்ந்து போதிய விளக்கத்துடன் சிற்ப நூல் எழுதமுற்பட்டனர். அதனால், இன்ன சிற்பத்துக்கு இன்ன கல்லைத் தேர்ந்தெடுத்தல், சிற்பத்திற்கேற்ப உளிவகைகளைப் பயன்படுத்தல், சிற்பத்துக்கு உகந்த அகலம், உயரம், அமைப்பு, நிர்ணயித்தல், சிற்பத்தையமைத்தபிறகு புரியவேண்டிய கிரியைகள்

முதலிய பல நுண்கூறுகளும், செய்திகளும் சிற்பியர்க்குத் துணை நின்றன. இவை தொடர்பாகப் பல செய்திகளைத் தெரிந்து கொள்ளச் **சிற்பி வை. கணபதி ஸ்தபதி** எழுதியுள்ள **'சிற்பச் செந்நூல்'** காண்க.

1.5. சிற்பப் பொருள்கள் - பொது:

கல்லே சிற்பத்திற்கு அடிப்படைத்தேவையான முதற் பொருள் என்பதை முன்னரே கண்டோம். பிறகு, சிற்பப்படிமப் பொருள்களாகச் செய்திடக் களிமண், சுடுமண் (செங்கல்), மாக் கல், சுதை, கண்டசருக்கரை (ஒருவகைச் சுக்கான் அல்லது கலவைப்பொருள்), மரம், உலோகம், தந்தம், மாட்டுக்கொம்பு, வண்ணம், படிகம், இரத்தினம், மெழுகு, கடல்நுரை முதலிய பல அமைந்தன. இவ்வாறு பற்பல பொருள்களைக் கொண்டு சிற்பம் அமைப்பதைப் பார்த்தநிலையில், சிற்பம் அமைப்பதற் கான பெரும்பாலான பொருள்களைப் பட்டியலிட்டுக்காண முயன்றனர். இவ்வாற்றான்,

> "கல்லும் உலோகமும், செங்கல்லும் மரமும்
> மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
> கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
> பத்தே சிற்பத் தொழிற்குறுப் பாவன"[1]

எனச் சமணப்புலவர் **திவாகர** முனிவர் கூறியுள்ளமை காண்க. இந்த அறிவியலுலகத்தில் இயற்பியலிலும், வேதியியலிலும் ஆராய்ச்சியடிப்படையில் புதுப்புதுப் பொருள்களைக் கண்டு பிடித்த காரணத்தினால் சிற்பப் பொருள்கள் பலவாக மல்கி விட்டன. காலப்போக்கில் **அரக்கு, கண்ணாடி, பீங்கான், பிளாஸ்டிக், பிளாஸ்டர் ஆப் பாரிஸ், தக்கை** முதலிய பலவற்றையும் சிற்பப்பொருள்களாகக் கொண்டுள்ளனர். மேலும், **அரிசி** முதலிய தானியங்களிலும் தம் நுட்பச்சிற்பத்திறமையைக் காட்டும் சிற்பியர் தோன்றியுள்ளமையால் தானியங்களும் சிற்பப் பொருள்களாகிவிட்டன.

கற்சிற்பம் என்றாலே கருங்கல்லாலான சிற்பத்தைத்தான் குறிக்கும். ஆலயங்களில் பெரும்பாலும் இடம்பெறுவது கற்

1. திவாகர நிகண்டு, 12ஆவது பக்கப்பொருள் தொகுதி.

சிற்பமேயாகும். ஏனைய சிற்பங்களை ஓரளவு கண்டுகொண்டு, கற்சிற்பம் பற்றிப் பின்னர் விளக்கமாகக் காண்போம்

2. சிற்பப்பொருள் தொடர்பிலும் பயன்நோக்கிலும் சிற்ப வகைகள்:

சிற்பங்கள் பல்வேறு நோக்கில் காணப்படினும், அவற்றை மூலப்பொருள்கள் அடிப்படையில் பாகுபடுத்திக் கொள்வது சிற்பங்களைப்பற்றி வகைவகையாக அறிந்து கொள்ள முதற்கண் துணைநிற்கும். சிற்பம் அமைப்பதற்குரிய நோக்கங்களின் அடிப்படையிலும் சிற்பங்களைப் பாகுபடுத்திக் காண்பதும் உண்டு.

கண்ணாற் காணும் உருவங்களையோ கற்பனையால் காணும் உருவங்களையோ சிற்பமாக வடிவாக்கும் கலைஞன், எவ்வாறெல்லாம் சிற்ப வகைமைகளை வளர்த்துவந்துள்ளான் என்பதையும் சிறிது காண்போம். சிற்பங்கள் குறித்து ஆராய்ந்த **டாக்டர் மா. இராசமாணிக்கனார்,** "(1) உருவம் முழுமையையும் **தனியாகக் காட்டும் சிற்பம்** ஒருவகை தனிப்பட்ட உருவங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. தனிப்பட்ட தெய்வ உருவங்கள், மனித உருவங்கள், பிற உயிர்களின் உருவங்கள் முதலியன இவ் வகையில் அடங்கும். (2) உருவத்தின் ஒரு பக்கத் தோற்றத்தை மட்டும் காட்டும் சிற்பம் **புடைப்புச் சிற்பம்** எனப்படும். இது மற்றொரு வகைச் சிற்பம். இவ்வகைச் சிற்பத்தில் உருவம் பின்னணியுடன் சேர்ந்திருக்கும். புடைப்புச் சிற்பங்கள் உயர்ந்தும் இருக்கும்; தாழ்ந்தும் இருக்கும். உயர்ந்து இருப்பது **உயர் புடைப்புச்சிற்பம்** எனவும், தாழ்ந்து இருப்பது **தாழ்புடைப்புச் சிற்பம்** எனவும் பெயர்பெறும் புடைப்புச்சிற்பத்தின் உருவம் மேற்பரப்பினும் உயரமாக வெளிப்பட்டு நிற்கும். (3) மேற் பரப்பைக் குடைந்து அம்மேற் பரப்பினும் தாழ்ந்து இருக்கும்படி உருவத்தை அமைப்பது **குடைவுச் சிற்பம்** எனப்படும். நாணயங்கள், இலச்சினைகள், மணிகள் போன்றவை குடைவுச் சிற்பங்களாக அமைந்துள்ளதைக் காணலாம்,"[1] என்று எழுதிச் சென்று உள்ளார்.

1. திருக்கோயில் (திங்களிதழ்), மார்ச்சு, 1967, பக். 291

அமைப்பு நோக்கில் வகைமை கண்ட அவரே, வேறுகோணத்தில் சிற்பத்தின் பயன்களை மனத்துட்கொண்டும் பலவகைகளாகப் பிரிக்கலாம் என்று கருதுகின்றார்; அது வருமாறு: "(1) ஒரு கட்டடத்தை அழகுசெய்ய அதன் பகுதியாக அமைக்கப்படுவதை **அலங்காரச் சிற்பம்** எனலாம். கோவில் தூண்களிலும் அரண்மனைத் தூண்களிலும், சுவர்களிலும் அமைக்கப் பெறும் புடைப்புச் சிற்பங்கள் இவ்வகையைச் சேர்ந்தவை. (2) தனித்து நிற்கக்கூடிய சிற்பம் மற்றொருவகை. வீரர் பொருட்டு நடப்படும் வீரக்கற்கள், மன்னர் புலவர் கலைஞர் அரசியல்உயர்அலுவலர் போன்றவர் நினைவாக நாட்டப்படும் சிலைகள், வெற்றித் தூண்கள் போன்றவை **நினைவுச் சின்னச் சிற்பங்கள்** என்னலாம். (3) ஒருவரது உருவத்தை உள்ளவாறு காட்டுவது உருவச்சிற்பம் எனப்பெயர் பெறும்"[1].

இவை தொடர்பான மேலுஞ் சில செய்திகள் ஏற்புடைய இடங்களில் பின்னர் விளக்கமாகக் கூறப்பெறும். இனி அழகுச் சிற்பம் அமைப்பதற்குரிய மூலப்பொருள்களின் அடிப்படையில் ஒவ்வொன்றன் இயல்பையும் தனித்தன்மையையும் ஓரளவு புரிந்து கொள்ள முயல்வோம்.

2.1. சுதைச் சிற்பம்:

கருங்கல்லாலும், சலவைக்கல்லாலும், உலோகத்தாலும், தந்தத்தாலும், மண்ணாலும், மரத்தாலும், நவ பாஷாணத்தாலும், கடுசர்க்கரையோகத்தாலும், பிற ஊடுபொருள்களாலும் அமைக்கின்ற சிற்பவடிவங்களுக்கிடையே சுதையால் - சுண்ணாம்பால் - உருவாக்கப்பட்ட சுதைச்சிற்பத்திருவடிவங்களுக்குத் தமிழ்நாட்டில் நெடுங்கால வரலாறு உண்டு. சங்க காலச் சுதைச்சிற்பங்கள் இன்று நாம் காணக்கூடிய நிலையில் அகப்படாவிடினும், அக்கால இலக்கியங்கள் வாயிலாக அவை பற்றிய செய்திகள் சில கிடைக்கின்றன.

மாடமதுரைநகரப் பெருந்தெரு ஒன்றிலே சில நிலைகளையுடைய அழகிய மாடம் ஒன்று இருந்தது. அந்த மாடத்தில் பல சுதையுருவங்கள் அமைக்கப்பட்டிருந்தன அவற்றுள் **வேங்கைப் புலியுருவம்** மிகச் சிறந்த அழகிய சுதை வேலைப்பாட்டுடன்

1. திருக்கோயில் (திங்களிதழ்), மார்ச்சு, 1967, பக். 291

அமைந்திருந்தமையால், அஃது உயிருள்ள வேங்கையுருவம் போலவே பொலிவுடன் தோன்றியது. அவ்வழியே சென்ற ஒரு பெண் யானை அந்தச் சுதையுருவத்தை மெய்யான வேங்கையெனக்கொண்டு, அச்சமுற்ற நிலையில் பாகனுக்கு அடங்காமல் அலையத் தொடங்கியதாம்! இதனை,

"...................... மடப்பிடி
அன்ன மனையாரோ டாயா நடைக்கரிமேற்
சென்மன மாலுறுப்பச் சென்றெழின் மாடத்துக்
கைபுனை கிளர்வேங்கை காணிய வெருவுற்று
மைபுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புறச்
செய்தொழில் கொள்ளாது மதிசெத்துச் சிதைதர"[1]

எனவரும் அடிகளால் அறியலாம்.

பூம்புகார் நகரத்தெருக்களில் செங்கற்களால் கட்டப்பட்டு உயர்ந்த மாடங்கள் பொலிவுற்று விளங்கின. அம்மாடங்களில் தேவர் முதலாகப் பல உயிர்களைச் சிற்பாசிரியர் சுதை வேலைப் பாட்டுடன் அமைத்திருந்தனர். அந்தச்சுதையுருவங்கள் சிற்ப நேர்த்தியுடன் காண்பவர் கண்களைக் கவர்ந்திழுத்தன. பூம்புகாரைக் காணவந்த புதிய மக்கள் அச்சுதைச் சிற்பங்களைக் கண்டு வியந்து நின்று, களிப்புற்றனர். இதனை **மணிமேகலைக்** காப்பியம்,

"வம்ப மாக்கள் கம்பலை மூதூர்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு பருவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி
வெண்சுதை வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியங் கண்டு நிற்குநர்"[2]

எனச் சித்திரித்துக் காட்டுதல் காண்க.

சங்க கால மக்கள் மண்ணிலும், கல்லிலும், மரத்திலும் சுவரிலும் தாம் கருதிய தெய்வங்களை அமைத்து மகிழ்ந்தனர்;

1. பரிபாடல், 10, 43 - 48
2. மணிமேகலை, 3, 126 - 131

அத்தெய்வங்கள் அந்த இடங்களை விட்டு நீங்காதிருந்தன என்பதை,

''மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க''[1]

எனவரும் அடிகளால் உணரலாம். ஈண்டுக் குறிப்பிடப்படுவது; **சுவர்ச்சிற்பம்**; இதுவே சுதைச்சிற்பமாகும்.

சுதைச்சிற்பம் அமைப்பதற்கு முன்காலத்திலே, அரைத்த சுண்ணாம்பையும் மரக் குச்சிகளையும் வண்ணத்தையும் நாடினர். இக்காலத்தில் சுண்ணாம்பிற்குப் பதிலாகச் **சிமெண்ட்** (Cement) எனும் வேதியியற் பொருளை நாடுகின்றனர் மரக்குச்சிகளுக்குப் பதிலாக இரும்புக் கம்பிகளைப் பயன்படுத்துகின்றனர் எனினும் முற்காலச் சுதைச்சிற்பம் போல இக்காலத்தியது போதிய அளவு அழுத்தம் பெறுவதில்லை; அதனால் நீடித்து நிற்பதும் இல்லை; காரணம், சிலவகை மரக்குச்சிகளைப்போல இரும்புக் கம்பிகள் சிமெண்டுக் கலவையினை அழுத்தமாகப் பிடித்துக் கொள்வதில்லை; மேலும், இரும்பில் துரு ஏறுவதால் சுதையுருவத்திற்குச் சில ஆண்டுகளில் விரிசல் உண்டாகி அது சிதைகிறது எனலாம்.

பெரும்பாலும் திருக்கோயிற் **கோபுரங்களில்** நுழைவாயில் மாடத்தைத் தவிரவுள்ள மேற்கட்டமைப்புகள் சுதையினாலேயே அமைக்கப்பெறும். கருவறைக்கு மேலேயுள்ள **விமானங்களும்** சுதையினாலேயே அமைகின்றன. எனினும், புறனடைபோன்று **சோழமன்னர்கள்** காலத்திய **தஞ்சைப் பெரிய கோயில் போன்ற மிகச்சில இடங்களில் விமானங்கள் கருங்கல்லால்** அமைக்கப் பட்டுள்ளன.

கோபுரங்களும் விமானங்களும் அடியவர்களால் **தூல லிங்கமாகப்** பாவிக்கப்பெற்று வழிபடப் பெறுவதால், அவற்றில் அமைக்கப் பெறுஞ்சிற்பங்கள் **புராண - இதிகாச நிகழ்ச்சிகளைப் புலப்படுத்தும் வகையில்** அமைந்து, அவை மக்களிடையே அறிமுகமாயின. மேலும், சமயச் சார்புடனும் உலகியலறச் சார்புடனும் சில சுதைச் சிற்பங்கள் அமைக்கப் பெறுவதால் அவற்றைக்

1. மணிமேகலை, 21, 125 - 126

கண்டு, மக்கள் வாழ்வியல் பாடங்களை உணரவும் வாய்ப்பு உண்டாகிறது. இவற்றையெல்லாம் வரிசைப்படுத்தி விளக்கியுரைப் பதென்பது எளிதன்று; பல தலங்களுக்கும் நேரில் சென்று தமிழர்களின் சுதைச்சிற்பத்திறனைக் கலைப்படைப்புக்கள் வாயிலாக உணர்ந்து போற்றுக. எனினும், தொன்மையான 'கோயிற்கோபுர - விமானச்சுதைச் சிற்பங்கள்' எனும் நோக்கில், பல்லவர் காலத்திய **திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலும்,** சோழர்முதலிய மன்னர் பலரின் திருப்பணிகளைக் கொண்டு விளங்கும் கும்பகோணம் **சாரங்கபாணி சுவாமிகோயிலும் கும்பேசுவரர் கோயிலும்** காணத்தக்கவை.

திருக்கோயில் கருவறைகளிலும் சுவர்களிலும் மண்டப முகப்புகளிலும் சுதையாலான சிற்பங்கள் அமைந்து, மக்களின் பக்திக்கும் வழிபாட்டிற்கும் அவை துணை நிற்கின்றன. அவற்றுள் சிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம். அதற்குமுன், சுதைச் சிற்பப் பாதுகாப்புத் தொடர்பாக ஒரு குறிப்பினை மனத்துட் கொள்வது நல்லது.

பொதுவாக, நீர் காற்று வெயில் போன்றவை சுதைச் சிற்பங்களுக்கு ஆகா. எனினும், வண்ணம் படிப்படியே வெளிறிக் கலைந்தும், கோபுரச் சிற்பங்கள் ஓரளவு காலவேகத்தில் எதிர் நீச்சலடித்துக் கொண்டு தாக்குப் பிடித்துக் கொண்டிருக்கும். கோபுரச் சிற்பங்கள் (தெய்வச்சிலைகள்) நித்திய வழிபாட்டிற்கு ஏற்புடையவையாகக் கொள்வதில்லை, எனவே, அவற்றில் விரிசலோ மூளியோ ஏற்படினும் சமய நோக்கில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்துவதிலை. ஆனால், வழிபாட்டிற்கென அமைந்த சுதைச்சிற்பங்களின் நிலை, வேறுபட்டதாகும்.

வழிபாட்டிற்கெனக் கொள்ளப்பெறும் சுதைச் சிற்பத்தைப் பாதுகாக்கப் பண்டைக் காலத்திலிருந்தே சில உத்திகளை மேற் கொண்டனர். **அபிடேகம்** என்ற காரணத்தைக் கொண்டு சுதைச் சிற்பங்களின் மீது நீரோ பாலோ ஊற்றுவதில்லை. அதற்குப் பதிலாக, அவ்வப்போது மறவாமல் **சாம்பிராணித் தைலத்தையோ புனுகையோ** சிலைமீது பூசிவைப்பார்கள். இதற்கு முறையே **தைலக்காப்பு** என்றும், **புனுகுச்சட்டம்** என்றும் கூறுவர். இதனால்

சிற்பக்கலைச் செல்வம் காலம் காலமாகக் காப்பாற்றப்பட்டு வருதலை நடைமுறையில் காணலாம்.

2.1.1 சுதைச் சிற்ப நோக்கில் சில அரிய படைப்புக்கள்:

திருவிடைமருதூரில் மகாலிங்கேசுவரர் ஆலயத்தின் உட்புறத்தில் புராண நிகழ்ச்சிகள் சில, சுதைச் சிற்பவடிவங்களில் அமைந்துள்ளன.

மதுரையில் மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்து மண்டபங்கள் பலவற்றிலும், நிமிர்ந்து நோக்கி (நெடுநேரம் நுணுகிநோக்கி) ஆராய்ந்து கலைத்திறன் அனுபவிக்கும் வகையில் **சுவர்களிலே சுதை வேலைப்பாடுகள்** அமைந்துள்ளன. இவை நாயக்கர் காலத்தவையாக இருக்கலாம்.

தொடர்ந்து சில திருத்தலங்களில் காணலாகும் பெறலரும் சுதைச் சிற்பவுருவங்கள் சிலவற்றை சிறப்பாகக் காண்போம்.

அ) திருவரங்கத்திலுள்ள அரங்கநாதர் சிலை:

தென்னாட்டு வைணவர்கள் '**கோயில்**' என்று அழைத்துப் பெருமை பாராட்டுகின்ற திருவரங்கத்திலே கருவறையில் பள்ளி கொண்ட **அரங்க நாதர் திருவுருவம்** சுதையாலானது, அந்தச் சிலை கல்லால் வடிக்கப்பட்டு, மேற்புறம் சுதையைப் போன்று தோற்றமளிக்கும் நிலையிலே ஒரு வகைக் கலவைப்பொருளால் பூசப்பட்டது என்பர் சிலர். இது தொடர்ந்து ஆராய்தற்குரிய அருங்குறிப்பாகும்.

ஆ) சமயபுரத்திலுள்ள மாரியம்மன் சிலை:

தென்னாட்டில் சிற்றூர்ப்புறங்களிலே **மாரியம்மன் வழிபாடு** மிகவும் பரவலாக இருந்து வருகிறது. பிள்ளையார் வழிபாடும் காளிவழிபாடும் மாரியம்மன் வழிபாடும் சிற்றூர்ப்புற மக்களிடையே தனியீடுபாடு கொண்டிருத்தலை யாரும் அறிவர். மாரியம்மன் சில தலங்களில் சிறப்புறப் போற்றி வழிபடப் பெறும்' அவற்றுள் சமயபுர மாரியம்மனும் ஒன்றாகும்.

சமயபுரத்திலுள்ள மாரியம்மன் திருவுருவம் மிக அழகுறச் சுதைச்சிற்பமாக அமைந்துள்ளது.

இ) சீர்காழியிலுள்ள தோணியப்பர் சிலை:

திருமுறை பிறந்த சீர்காழியில் இறைவன் திருக்கோலங்கள் **குரு, லிங்கம், சங்கமம்** ஆகிய அடிப்படையில் அமைந்துள்ளன. திருக்கோயிலில் அடித்தளத்தில் பிரமபுரீசுவரர் **லிங்க** அமைப்பு உடையவர்; முதல் தளத்தில் தோணியப்பர் **குரு** அமைப்பு உடையவர்; இரண்டாம் தளத்தில் சட்டையப்பர் **சங்கம** அமைப்பு உடையவர். தோணியப்பர் சுதையுருவமாகும். **சட்டையப்பர்** மூங்கில் பட்டையும் கலவையும் கூடிய வேலைப்பாடு கொண்டது; எனவே, அவருக்கு அபிடேகம் கிடையாது; புனுகுச் சட்டம் சார்த்துவதே மரபாக இருந்து வருகிறது.

ஈ) காஞ்சியில் பாண்டவர் தூதப் பெருமாள் கோயில் மூலவர் சிலை:

காஞ்சிபுரம் சங்கராச்சாரியார் மடத்துக் கருகில் **பாண்டவ தூதப் பெருமாள் கோயில்** அமைந்துள்ளதைப் பலரும் அறிவர். அக் கோயிற் கருவறையிலே மூலவராக அமைந்துள்ள **கண்ணபிரானது விசுவரூபத் திருக்காட்சி**யினைக் காணலாம். அந்த மூலவரது உயரம் 26அடி; அகலம் 14அடி. அமர்ந்த நிலையில் விசுவரூபதரிசனம் தருகின்ற இந்தத் திருவுருவம் பாரதப் பெருங்காப்பியத்தின் திருப்புமையமான உட்கிடை கொண்டது. அஃதாவது, தம்மை இகழ்ந்து அவமானப்படுத்த எண்ணிய துரியோதனனுக்கு விசுவரூபம் எடுத்துக் காண்பித்து வல்லமையைப் புலப்படுத்திய கண்ணபிரானது திருவுருவமே இந்த மூலவர் என்பது நினைவிற் கொள்ளத்தகும்.

இந்தச் சுதைச் சிற்பத்தில், மேலும் சில சிறப்புக் கூறுகள் உண்டு. அபய முத்திரை தரும் திருக்கை மட்டும் 14அடி அளவிலும், சங்கு பதித்த முடி 6அடி உயர அளவிலும் அமைந்துள்ளமை இத்திருவுருவ ஆற்றலை மக்களுக்குப் புலப்படுத்தச் சிற்பியர் கையாண்ட கலையுத்தி எனலாம். பெருமாள் உடுத்தியிருக்கும் பஞ்சகச்சத்தின் ஒவ்வொரு பகுதியிலும் கலைத்திறமையுடன் கூடிய அணிநலம் பாங்குற அமைந்துள்ளது.

இந்தச் சுதைச்சிற்பக் கலைவடிவத்தினை அமைத்த கலை யுத்தியைக் கருதுகையில், கெட்டியான மூங்கில் குச்சிகளை ஒன்றோடொன்று பிணைத்து, உருவத்தின் உட்கூட்டமைப்பினை உருவாக்கியபின் அரைத்த சுண்ணாம்பு விழுதைத் தேன் மற்றும் பல மூலிகைச் சாறுகளுடன் பிசைந்து, கூழாக்கி அதை மூங்கில் மீது அப்பி உடுத்தி உருவாக்கியிருக்கலாம் என்பது புலனாகும்.

இந்தச் சுதை வடிவத்தின் காலத்தினை வரையறுத்துக் கூற இயலவில்லை. பாண்டவர் தூதப் பெருமானை ஆழ்வார்கள் பாடியிருப்பினும், காஞ்சிபுரத்திலுள்ள பிற வைணவக் கோயில் களைப் போல இக்கோயில் மன்னர்களாலும் பொருட் செல்வர் களாலும் தொடர்ந்து ஆதரவு பெற்றதாகக் கொள்வதற்கில்லை. சோழன் முதற்குலோத்துங்கன் இக்கோயிலைப் புதுப்பித் துள்ளான் எனும் கல்வெட்டுச் செய்தி தவிரப் போதிய விவரங் கள் கிடைக்கவில்லை. இக்காலத்தில் இக்கோயிலின் நாள் பூசைக்குக்கூடப் போதிய வருமானம் இருப்பதாகத் தெரிய வில்லை. இந்நிலையில், முறையாகத் தைலக் காப்பினை இச் சிலைக்குச் செய்வது சிரமமே. காரணம், இந்தப்பெருமாளுக்கு ஒரு தடவை தைலக் காப்பு நடத்த 20கிலோ சாம்பிராணித் தைலம் தேவைப்படும் என்கின்றனர்,

உ) இராமேசுவரம் நந்தி:

தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றில் சுதையாலான நந்திகள், சிறியனவாகவும் பெரியனவாகவும் பல உள்ளன. எனினும், **இராமேசுவரத்தில்** தொன்மைச் சிறப்புடன் கூடிய நல்ல **பெரிய நந்தி**, நீளம் பன்னிரண்டு அடியும் உயரம் ஒன்பது அடியுமான அளவுடன் சுதைப்படைப்பாக உள்ளது; காண்போர் போற்றுங் கலைநேர்த்தி கொண்டது.

ஊ) திருப்பாற் கடல் கடைதலும் அதன் தத்துவமும்:

சில கோபுரச் சுதைச் சிற்பங்களுள் **'திருப்பாற்கடலைக் கடையும் காட்சி** (அமைப்பு)' நல்ல சமயக்குறிக்கோளுடன் அமைக்கப் பட்டிருத்தலைக் காணலாம். அது பற்றி ஈண்டுச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

உலகம் தோன்றிய காலம் முதல், ஊழி தோறும் நன்மைக்கும் தீமைக்கும் போட்டி இருந்து கொண்டே வருகிறது. நல்லவர்களான தேவர்களும், அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் அசுரர்களும் முரண்பட்ட நிலையிலேயே இருந்து வந்தனர். தேவ-அசுரர் போர் நடந்தமை பற்றிப் புராணங்களும் இலக்கியங்களும் கூறும்.

என்றும் இகலோடு - பகைமையோடு - வாழ்ந்த தேவர்களும் அசுரர்களும் மனமொத்த நிலையில் கூடித் திருப்பாற் கடலைக் கடையத் திட்டமிட்டனர்; மேருமலையையே மத்தாகவும், வாசுகியையே நாணாகவும், திருமாலையே (மத்தைத்தாங்கும்) ஆதிகமடமாகவும் கொண்டு கடைந்தனர். அந்நிலையில் அக்கடலிலிருந்து காமதேனு, கற்பகத்தரு, கௌத்துவமணி, சந்திரன், திருமகள், உச்சை சிரவமாகிய குதிரை, சேட்டை (மூதேவி) முதலிய பலபொருட்கள் தோன்றின. அமுதமும் தோன்றியது. அந்த அமுதத்தையுண்டால் அசுரர்களின் கொடுமை மேலும் மிகுந்து விடுமென நினைத்துத் திருமால் மோகினியவதாரம் எடுத்தார்; அசுரர்களுக்கு அமுதம் கிட்டாதவாறு மயக்கித் தேவர்களுக்கு அமிருதம் வழங்கினார். அதனையுண்ட தேவர்கள் அமரர்களாயினர் என்பது புராணம்.

அமிருதம் பெறவிருக்கும் நேரத்தில் மோகினியின் அழகுமையலிற் சிக்கியமையால் அசுரர்கள் அமிருதம் பெறவியலாதவராயினர்.

நல்லவர்கள் எந்தச் சூழலிலும் நன்மையடைவர் என்பதும், தீயவர்கள் என்ன முயன்றாலும் தீமையின் விளைவைத் தவிர்க்க இயலாது என்பதும் இதனால் புரிய வேண்டிய படிப்பினையாகும்.

பொது நோக்கில், பாற்கடல் கடைந்த தத்துவத்தைச் சிந்திக்கையில், ''மாறுபட்ட இரு சாரார் காழ்ப்பையும் பகைமையையும் மறந்து மனமொத்த நிலையில் முயன்று செயற்படின் உலகுக்கு அமிருதம் - நன்மை-கிட்டும்'' என்பது உணரலாகும் உட்கிடையெனலாம். மேலும், அமிருதம் தோன்றிய அதே பாற்கடலில், வாசுகி கக்கிய நஞ்சும் தோன்றியது; அதனைக்

கண்டதும் பலரும் ஓட்டமெடுத்தனர் உற்றவேளையில் உயிர்களைக் காத்தருளும் சிவபெருமான் நஞ்சினையெடுத்து உண்டு, மிடற்றில் அடக்கி, **நீலகண்டர்** எனும் சிறப்பிற்குரியவரானார்.

உலகத்தில் நன்மையும் தீமையும், பகலும் இரவும் போலவும் பாற்கடலில் தோன்றிய அமிருதமும் ஆலகால நஞ்சமும் தவிர்க்கவியலாதவை என்பதும் உணரவேண்டிய வாழ்வியல் தத்துவக் குறிப்பாகும். இவ்வாறான தத்துவக் காட்சிச் சிற்பங்களும் ஆலய வளாகத்தில் சில உண்டு; காண்க.

எ) நாட்டுப்புறவியற் சிற்பங்கள்:

கிராம தேவதைகள் (சிறப்புக் குறிப்பு)

சிற்றூர்ப்புறங்களில் மக்களால் பக்தியார்வத்துடன் வழிபடப்பெறும் கிராமப்புறத் தெய்வங்கள் பல, சுதைச்சிற்பங்களாக உள்ளன.

[ஒரு நாட்டின் பண்பாட்டுக் கூறுகளை முறையாக வரலாற்றுப் பார்வையில் ஆராய்ந்து புலப்படுத்த இக்கால ஆராய்ச்சியாளர்கள் - அறிஞர்கள் - முற்பட்டுள்ளனர்; இம்முயற்சி சிற்றூர்ப்புறங்களிலே **களஆய்வு** (field work) புரிவதன் வாயிலாகப் பெரும்பயனைக் காணுமாறு செய்துள்ளது.

தமிழகத்தில் பல மாவட்டங்களிலும் புரிந்த நாட்டுப்புறக் களஆய்வுகளின் விவரங்கள் நூல்களாகவும் வெளி வந்துள்ளன. அவற்றைக் காண்கையில், நாட்டுப்புறச் சிற்பங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும், அவற்றின் பெருமையை உணர்ந்து கொள்ளவும் எளிதாகும்.]

சிற்றூர்ப்புறங்களிலே **ஐயனார், மதுரைவீரன், சுடலைமாடன், காளியம்மன், அங்காளம்மன், மாரியம்மன், எல்லையம்மன்** முதலிய தெய்வங்களின் கோயில்களிலே கற்சிலைகளேயன்றிச் சுதைச் சிற்பங்களும் வழிபடப்படுகினறன. கருவறைகளில் அமைந்தருளும் சுதைச்சிற்பங்களேயன்றித் திறந்தவெளிகளிலும் பல சுதைச்சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றில் ஆடை அணியலங்காரத்துக்காகக் கண்ணாடிச் சில்லுகளைப் பதித்து நேர்த்தியாக அமைத்துள்ளனர்.

சில அங்காளம்மன் கோயில்களில் காட்டேறியும் சுதைச் சிற்ப வடிவில் வழிபடப்படுகிறது; சிறப்பாகத் தஞ்சைமாவட்டம் பனங்காடு எனும் ஊரில் காண்க.

சில தெய்வச்சிலையுருவங்களை அளவால் பெரியனவாக்கிப் பேராற்றலுடையனவாக அவற்றைப் போற்றுமாறு செய்துள்ளனர். எடுத்துக்காட்டாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள மதுரைவீரன், ஐயனார் - சுதைச்சிற்பங்களைக் காணலாம்.

சில கோயில்களில் தெய்வங்களுக்கான ஆனை, குதிரை முதலிய வாகனங்களும் சுதைச்சிற்ப வடிவில் பலவாக அமைந்துள்ளன. அவற்றுள் சில, வியப்புடன் நோக்கும்வண்ணம் மிகப் பெரிய வடிவிலும் காணப்படுகின்றன.

3. சுடுமண் சிற்பம்:

சிற்பங்களை அமைக்கப் பல வகைப் பொருள்கள் பயன்படுகின்றன. அவற்றுள் களிமண் (clay) மிகத் தொன்மையான காலந்தொட்டுப் பாண்டங்கள் செய்யவும் சிற்பங்கள் உருவாக்கவும் பயன்பட்டு வருகிறது. களிமண்ணால் உருவங்களை அமைப்பது எளிது. செய்யப்பட்ட பொருள்களை மிகப்பக்குவமாக உலர வைத்துச் சூளை போன்ற முறையில் சுட்டெடுத்தால் அவை திடப்பட்டு விடும். அவ்வாறு சுட்ட மண் சிற்பம்-சுடுமண் சிற்பம் - எளிதில் தேயாது; துரு ஏறாது; பல்வகை வண்ணங்களை, வேண்டுமெனின் தீட்டிக் கொள்ளலாம்.

தமிழகத்தில் தொல்பொருளியல் துறையினரால் அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் பொருள்கள் பலவாக உள்ளன. மனித உருவங்கள், விலங்குருவங்கள், விளையாட்டுப் பொருள்கள், பொம்மைகள், இலிங்கங்கள், காதணிகள், நூற்புக் கருவிகள், வளையங்கள் சமையற் பாண்டங்கள், சமையற் கருவிகள், உருளைகள் முதலிய பலவகைப் பொருள்களிடையேயும் கலைக்கூறுகள் ஓரளவு தென்படுகின்றன; இப்பொருள் களெல்லாம் கைத்திறனால் செய்யப் பட்டிருக்க வேண்டும். திருக்காம்புலியூரில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சிலையை நோக்குகையில், காந்தாரக்கலையில் காணலாகும் சுருள்முடியை நினைவு படுத்தும் வகையில் தலையமைப்பு உள்ளது.

நாட்டுப்புற வியலடிப்படையில், பக்குவமாகச் செய்யப்பட்ட **சுடுமண் சிற்பங்கள்** பலவாகத் தமிழ் நாட்டிலே காணக்கிடைக்கின்றன. அவைபற்றிச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

பொதுவாக, **ஐயனார், மதுரைவீரன், சுடலைமாடன்** முதலிய ஆண்தெய்வக்கோயில்களிலும், **காளி, மாரியம்மன், அங்காளம்மன், பச்சையம்மன்** முதலிய பெண்தெய்வக் கோயில்களிலும் சுதையாலான சிற்பங்களும் சுடுமண் சிற்பங்களும் இருக்கக் காணலாம்.

வரலாற்றுச் சிறப்புடைய **காவிரிப்பூம்பட்டினத்தில்** சப்பாபதி அம்மன் கோயில் இருந்ததைச் **சிலப்பதிகாரத்தால்** அறியலாம். ' இன்றும் ஒரு சிறுகோயில் அங்கு உள்ளது; **சுட்டமண் சிலை** ஒன்று அங்கு அம்மனாக வழிபடப்படுகிறது. இத்தகைய சுட்ட மண் சிற்பங்கள் சங்ககாலக் கோவில்கள் சிலவற்றிலேனும் இருந்திருக்கலாம்''[1] என்று **டாக்டர் மா இராசமாணிக்கனார்** குறிப்பிட்டுச் செல்வது மனங்கொண்டு சிந்திக்கத்தக்கது. இஃது ஒரு புறமிருக்க, இக்காலத்தில் சுடுமண் சிற்பங்களும் நேர்த்திக்கடன் நோக்கில், கோயில் வளாகத்தை நிரம்ப அணிசெய்திருத்தல் நாம் காண வேண்டிய சிறப்பிற்குரியதாகும்.

சிறப்பாக **ஐயனார் கோயில்களில்** பெரும்பாலும் **யானையுருவங்கள்** சுதையாலேயே செய்யப்பட்டிருக்கும்; ஆனால், **குதிரையுருவங்கள்** சுதையாகச் சிலவும், சுடுமண் சிற்பமாகப் பலவும் காணப்படும். தம் நேர்த்திக்கடன் செலுத்தும் வகையில் சுடுமண் குதிரையுருவங்களைப் பலரும் செய்து கோயில் வளாகத்தில் வைத்துக்கொண்டே செல்வதால், சில கோயில்களில் நூற்றுக்கணக்கான சுடுமண் குதிரையுருவங்கள் தொகுப்பாக அமைந்துவிடுகின்றன. தெய்வ நம்பிக்கை மக்களை இவ்வாறெல்லாம் செய்ய வைத்துள்ளது!

4. மரச் சிற்பம்.

தமிழ்நாட்டில் பண்டைக் காலந்தொட்டே மரச்சிற்பக்கலை வழக்கத்தில் இருந்து வந்துள்ளது ஒரு நாளில் எட்டுத்தேர் செய்யும் ஆற்றல் படைத்த ஒரு **தச்சுத்தொழிலாளி**, ஒரு மாதம் முயன்று ஒரு தேரின் ஒரு சக்கரம் மட்டுமே சிற்பவேலைப்பாட்டுடன் செய்கையில் **சிற்பக்கலைஞனாகி** விடுகிறான்; இதனை **ஔவையார்,**

''வைகல் எண்தேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன்னோனே''1

எனவரும் அடிகளால் புலப்படுத்துகின்றார். உலகத்தில் தொழிலாளர்கள் பலரிருப்பினும், சிலரேனும் சிறந்த கலைஞர்களாக உருவாக வேண்டும்; அந்தச் சூழலை அமைத்துத்தரும் பொறுப்பு மக்களிடையே உண்டு என்னும் உண்மை, இதனால் உய்த்துணரலாம்; இஃது ஒருவகையில் பண்பாட்டுக்குறிப்பாகும்.

சிற்றூர்ப் புறங்களில் வழிபடப்பெறும் உற்சவச் சிலைகள் பெரும்பாலும் மரத்தால் ஆனவையே; வீதியுலா வருவதற்கேற்ற வாகனங்களும் பெரும்பாலும் மரத்தால் ஆனவையே.

மரத்தில் நேர்த்தியான திருவுருவங்களை அமைக்கலாம் எனக் கண்டு கொண்ட மக்கள், ஆலயங்களில் அவற்றைச் செய்து வைத்து மகிழ்ந்துள்ளனர். கற்சிற்பக் களஞ்சியமாக விளங்கும் **கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி திருக்கோயிலில்** காணலாகும் இராசகோபுரமும் சிற்பச் சிறப்புக் கொண்டது. கோபுரத்தின் வெளிப்புறம் **புராண இதிகாசத்** தொடர்புடைய சுதைச் சிற்பங்களைக் காணலாம். ''கோபுரத்தின் முதல்தட்டின் உள்புறம் ஒரு மண்டபம் போல் அமைந்துள்ளது. மண்டபத்தைத் தாங்கி நிற்பவை வெறும் தூண்கள் அல்ல; வீரன் நடனமாது ஆகிய உருவங்களே அமைக்கப்பட்டுள்ளன. எல்லாம் மரத்தால் ஆனவை. சுமார் மூன்றடி உயரம் இருக்கலாம். மிகமிக அழகான வடிவம். மண்டபத்தின் நாற்புறமும் மேலே வரிசை வரிசையாக மரச்சிற்பங்கள். இவை சுமார் அரைஅடி அல்லது முக்கால் அடி உயரமே. ஆனாலும் மிக அற்புதமான கலைநுணுக்கம் உடையவை''2 என **டாக்டர் பா. சௌந்தரா** எழுதிச் செல்லுங் குறிப்பினைக் காண்க. **சங்கரநயினார் கோயில்** புலித்தேவர் அறையிலுள்ள மரச்சிற்பங்களும், **திருநெல்வேலி தாமிர சபையில்** காணலாகும் மரச்சிற்பங்களும் மிகுந்த கலைநேர்த்தி கொண்டவை. உலகியலிலும் மரச் சிற்பங்கள் பலவாகப் படைக்கப்பட்டுள்ளன; சிலவற்றைக் காண்போம்.

1. புறநானூறு, 87, 2 - 4
2. Heritage of the Tamils, Art & Achitecture, பக். 398

முற்காலத்தில் மன்னர்களும், இக்காலத்தில் ஆட்சிப்பொறுப் பேற்கும் தலைவர்களும் அமரக்கூடிய **அரியாசனம்** மரத்தாலான சிற்பப்படைப்பாகும்.

மரத்தாலான **கஜலட்சுமி** திருவுருவம், கோயிலிலும் வளமனை களிலும் வாயில் மேல்முகப்பில் அமைப்பது பண்டு தொட்டே வழக்கத்தில் இருந்து வருகிறது. வளமனைகளில் **அருகால்-நிலை** (வாயில்) மிகச்சிறப்ப வேலைப்பாட்டுடன் அமைப்பது, தமிழ் நாட்டில் பல பகுதிகளில், சிறப்பாகச் **செட்டிநாட்டுப்** பகுதிகளில் இருந்து வருகிறது.

குழந்தைகள் விளையாடப் பயன்படுத்தும் **பல்வகைப்** பொம்மைகள் **மரச்**சிற்ப அமைப்பினைக்கொண்டவையாகச் சில இல்லங்களில் இக்காலத்திலும் **காண**லாம்.

தேக்கு, நூக்கமரம், செம்மரம், ஆச்சாமரம் போன்றவை மரச்சிற்பத்துக்குப் பயன்படுகின்றன; எனினும், **சந்தனமரத்தா லானவையே** மிகச்சிறப்பும், மதிப்பும் பெற்றவையாகும்.

4.1. தேர்ச் சிற்பக்கலை:

தமிழ்நாட்டில் **தாராசுரம், மேலைக் கடம்பூர்** முதலிய தலங் களில் அமைந்துள்ள சிவாலயங்கள் தேரமைப்பில் உள்ளமை பற்றி முன்னரே கண்டோம். அவை ஒரு புறமிருக்க, மரத்தால் சிற்ப வேலைப் பாடுகளுடன் கூடிய தேர்கள் மக்களைக் கவரும் வண்ணம் அமைத்தல் காலத்தின் தேவையாயிற்று. ஆலயங்களில் நடைபெறும் **பெருந்திருவிழாக்களிலே தேர்த்திருவிழா** வென்பது ஆர்வமுடன் கொண்டாடப் படுவதாகும்.

தமிழ்நாட்டிலே தெய்வநலச் சிறப்பு மிகுதிகொண்ட திருவா ரூர், சிதம்பரம், மதுரை, இராமேசுவரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவரங்கம், ஸ்ரீ வில்லிபுத்தூர், கும்பகோணம்' திருநெல்வேலி முதலிய திருத்தலங்களில் கோயில்விழாத் தொடர் புடன் தேரோட்டம் நடைபெற்று வருகிறது. எனினும், '**திரு வாரூர்த் தேரழகு' என்ற** முதுமொழியிலிருந்து திருவாரூரிலுள்ள **ஆழித்தேர்** பிறவூர்த் தேர்களைவிடச் சிற்பவேலைப்பாட்டுடன் கூடிய பெரிய தேராகும். தென்னாட்டில் நடைபெறும் தேர்த்

திருவிழாவைப் போல வடநாட்டு **ஒரிசா** மாநிலத்தைச் சேர்ந்த **பூரி** நகரிலுள்ள **ஜகந்நாத சுவாமி** கோயிலின் தேர்த் திருவிழாவும் மிகச்சிறப்புடையதாகும். தமிழ்நாட்டுத் தேர்களைப் போலச் சிற்ப வேலைப்பாடு மிகுதியாகக் கொண்டிராவிட்டாலும், பூரி ஜகந்நாதர் தேர் தெய்வநலச் சிறப்புடன் உலகப்புகழ் வாய்ந்ததாகும்.

தொன்மைக் காலத்திலிருந்தே மக்களின் ஆர்வத்திற்கும் தெய்வநல ஈடுபாட்டிற்கும் வசதிக்குமேற்பக் கோயில் தேர்கள் பல்வேறு இலக்கண அமைப்புக்களுடன் செய்யப்பட்டன. இரண்டு முதல் ஒன்பது சக்கரங்கள் வரை கொண்ட பல்வகைத் தேர்கள் காலத்தின் தேவைக்கேற்ப அமைந்தன. "சக்கரங்கள் அதிகமாக ஆக அத்தேரின் பருமன், வேலைப்பாடு முதலியவைகளும் வளர்ந்தன. இத்தனை சக்கரங்கள் கொண்டதேர் இவ்வித வேலைக்கு இன்னவரால் செலுத்தப்பட வேண்டும் என்ற வரையறைகளும் வகுக்கப்பட்டன. **மானசாரம்** என்ற சிற்பநூலில் **தேரிலக்கணம்** என்ற பகுதியுள்ளது."[1] என்ற குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

வீரர்கள், அரசர்கள் முதலிய பலருக்கும் **இரதம்** எனும் பாண்டில் அல்லது தேர் முதற்கண் பயன்பட்டது; பிறகு இறைவன் எனும் மன்னனுக்குரிய சிறப்புடையதாகியது; அலங்காரத் தேர், காலப்போக்கிலே, அருளியல் மன்னனாகிய இறைவனுக்கும் அமைப்பது என்ற சமயவுணர்வு தலையெடுத்தது. அவ்வாற்றான் தேரும் மிகக் கலைநேர்த்தியுடன் அமைக்கப்பட்டது என்பதே பொதுவாக உணரவேண்டிய செய்தியாகும். பிற்காலச் சோழர்கள் காலத்தில் கி.பி. 10-11 ஆம் நூற்றாண்டில், மரத்தால் அமைக்கப்பட்ட தேர்கள் ஓரளவே சிற்பத்திறன் கொண்டு விளங்கியிருக்க வேண்டும். **விசயநகர மன்னர்கள்** ஆட்சியிலும் **நாயக்க மன்னர்கள்** ஆட்சியிலும் தேர்த்திருவிழாவிற்கு மிகுந்த ஆதரவு கிடைத்தது; எனவே, தேர்கள் மிகுந்த சிற்பவேலைப் பாட்டுடன் அமைந்திருக்கக்கூடும். இவற்றைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளவோ, தெளிவு பெறவோ அக்கால மரத்தேர்கள் இக்காலத்தில் கிடைக்க வழியில்லை. என்றாலும், இக்

1. கலைக்களஞ்சியம், தொகுதி ஆறு, பக். 468.

காலத்தில் நாம் காணலாகும் பெரிய தேர்களைப் போலல்லாமல் அவை சிறிய கோயில்களைப் போன்று, அவற்றை நினைவூட்டும் வகையில் அமைந்திருக்கக் கூடும்.

தேரின் பெரிய சக்கரங்களுக்கேற்ப வயிரம் பாய்ந்த வலுவான மரத்தில் இருசு அமைந்து இருக்கும். இருசின் மேல்பாகம் ஒன்றன் மேலொன்றாகப் பல தட்டுக்கள் பொருத்தப்பெறும். ''ஒவ்வொரு தட்டும் சாதாரணமாக 8 முதல் 10 கோணங்கள் உள்ளதாகும். வட்டமான தட்டுள்ள தேர்கள் ஒரு சில ஊர்களில் தான் உண்டு (உ-ம்: தென்கன்ன மாவட்டத்தைச் சேர்ந்த பரகூர், சேலம் மாவட்டம் **காரைமடை** என்ற ஊர்). சக்கரங்களின் பருமன், எண்ணிக்கை இவைகளைப் பொறுத்துத் தேரின் அளவை முழுத்தேர், முக்கால்தேர், அரைத்தேர் என்று தேர் செய்பவர்கள் வகுக்கிறார்கள்''[1] என வருங்குறிப்பு மிகச் சிந்திக்கத்தக்கது. சிற்பநூல் வல்ல தச்சர்கள் மிக நேர்த்தியாகத் தேர்களை அமைக்கையில், கூடியவரையில் ஆகமவழிப்பட்ட இலக்கண விதிகளுடன் முழுத்தேர் செய்வதில்லை என்றும், அவ்வாறு முழுத் தேர் செய்துவிட்டால் அது பறந்துவிடும் அல்லது தீப்பற்றி எரிந்துவிடும் என்ற ஒருவகை நம்பிக்கை இருந்து வருகிறது. முழுத்தேர் செய்து முடித்த நிலையில் தேர் தீப்பற்றியெரிந்து விட்டதாகத் தம் முன்னோர்கள் செவிவழிச் செய்தியாகக் கூறியுள்ளதையும் சிற்பாச்சாரிகள் நம்பி வருகின்றனர்; இது மேலும் ஆராய்தற்குரியது.

தேர்த்தட்டுக்களாலான கனமான பீடப்பரப்பின் மேல் கால்கள் நிறுத்தி, அவற்றின் மேல் கோயிலின் விமானத்தைப் போன்று சித்திரத் தையல் வேலைப் பாட்டுடன் கூடிய துணிக் கோப்பினைக் கட்டுகின்றனர். அடிப்பீடத்தின் கோணங்களையோ, வட்டத்தையோ பொறுத்தே விமானம் போன்ற திரைக்கோப்பும் அமைந்திருக்கும்; இதன் உச்சியில் கலசமும் கொடியும் பொருந்தியிருக்கும்.

தேரைப் பொறுத்தவரையில் அதன் தட்டுகளோடு கூடிய கீழ்ப்பாகமே சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்த பகுதியாகும். ''கடவுளின் கோயிலைப் போன்றே அமைக்கப்பட்ட தேரின்

1. கலைக் களஞ்சியம், தொகுதி ஆறு, பக். 171

அடிப்பாகத்தில் **பூலோக வாழ்க்கை, ஆகாய வாழ்க்கை, சுவர்க்க வாழ்க்கை** என்னும் இவற்றைச் சித்திரிக்கும் அழகிய பல உருவங்களைக் காணலாம். பூலோக வாழ்க்கையில் அரசன் கொலு விருத்தல் போன்ற காட்சிகளும், நடனம் செய்வது போன்ற பல துறைகளைச் சித்திரிக்கும் உருவங்களும் உண்டு. காமத்துப் பாலைச் சித்திரிக்கும் ஒரு சில பொம்மைகளும் இங்கு மூலை முடுக்குகளில் பொதிந்திருப்பது உண்டு. வான வாழ்க்கையைச் சித்திரிக்கும் பொம்மைகளில் கின்னரர் போன்றவை சேர்ந்தவை. சுவர்க்க வாழ்க்கையைச் சித்திரிக்குமாறு நடராசர், விஷ்ணு, ஆறுமுகன், கணநாதன் முதலியவர்களின் உருவங்கள் இருக்கின்றன. சைவர்களின் கோயில் தேர்களில் வைணவக் கதைகளைச் சித்திரிக்கும் உருவங்கள் காணப்படும். இவ்வாறு நுண்கலைக்கு இருப்பிடம் போன்ற வேலைப்பாடுகள் உள்ள தேர்வேலையில் சமயப் பூசல்களின் அறிகுறிகள் இல்லாதிருப்பது கருதத்தக்கது''[1] என்று **பி. ஆர். ஸ்ரீநிவாசன்** எழுதிச்செல்வது சிற்பப் பண்பாட்டு அடிப்படையில் போற்றத்தக்கதாகும்.

விசுவகர்மாக்கள் எனும் கம்மாளரினத்தில் **தேர்ச் சிற்பாசாரிகள்** என்றே ஒரு பிரிவினர் உண்டு. தேர்ச் சிற்ப வேலையில் தேர்ந்தவர்கள் போதிய வாழ்வியல் வாய்ப்பில்லாமையால் வளமனைகளுக்குச் சிற்ப வேலைப் பாட்டுடன் கூடிய அழகு நிலைகளை - அருகால்களை - அமைத்துத் தந்து தம் வருமானத்திற்கு வழிதேடிக் கொண்டிருந்தனர். காலப்போக்கில், மேல் நாட்டுப் பாணியைப் பின்பற்றி வீட்டு அருகால்களையோ கதவுகளையோ சிற்ப வேலைப்பாட்டுடன் அமைக்க வளமான பல செல்வர்களும் முன்வருவதில்லை; சூழலுக்கேற்பச் **சிற்பாசாரிகளும்** சாதாரண தச்சுத்தொழிலே போதுமென்ற நிலைக்கு வந்துள்ளனர். எனினும், மரச்சிற்பத்தை ஊக்குவிக்கும் வகையில் **தமிழ்நாடு அரசு,** ஓரளவு நிதியொதுக்கி ஆதரவளித்து வருவது போற்றுதற்குரியதாகும்.

5. நவபாஷாணக் கலவைச் சிற்பம்:

வீரம், பூரம், பாதரசம், ரசகற்பூரம், லிங்கம், மனோசிலை, கந்தகம், கார்முகில், தாழகம் ஆகியவற்றை ஆகமவிதிப்படி

1. கலைக்களஞ்சியம், தொகுதி ஆறு, பக். 171.

சிற்பியர் விகிதக் கணக்கில் கலந்துகொண்டு, நவபாஷாணக் கலவையைச் சித்தமாக்கிக் கொள்வர். பிறகு, தம் ஒன்றிய உணர்வுடன் அத்தகைய கலவை கொண்டு அவர்களால் உருவாக்கப் பெறும் சிலைகள் மருந்தாற்றலும் ஆன்மநல ஆற்றலுங் கொண்டவையாக விளங்கும். எனவே, அந்தச் சிலைகள் மீது அபிடேகம் புரிந்த திருநீறு, பால், சந்தனக் குழம்பு, பஞ்சாமிருதம் போன்றவை மக்களால் போற்றி ஏற்கப்படுகின்றன.

நவபாஷாணக் கலவை செய்வதென்பது அரிய செயலாகும். பழநியில் **போகர்** எனப்பெயரிய சித்தரே நவபாஷாணக் கலவை கொண்டு **தண்டாயுதபாணிசுவாமிசிலையை** நன்கு உருவாக்கினார் **என்பது** நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

திருச்செங்கோட்டில் பாங்குடன் எழுந்தருளியுள்ள அம்மையும் **அப்பனும்** ஒரே உருவில் இருக்கும் அருள்மிகு **அர்த்த நாரீசுவரர் திருவுருவமும்** சித்தர்களால் செய்வித்த நவபாஷாணக் கலவைச் **சிலையாகும்**[1].

6. கடுசர்க்கரை யோகச் சிற்பம்:

சிற்பங்கள் உருவாக்குதற்குரிய பொருள்களுள் கடுசர்க்கரை **யும் கண்ட** சர்க்கரையும் ஒன்றெனமுன்னரே கண்டோம். நவ **பாஷாணக்** கலவையை அடுத்து, கடுசர்க்கரை யோகக் கலவையும் **மருத்துவப்** பயன் நல்க வல்லது. கடுசர்க்கரையோகம் பற்றி ஒரு சுலோகம் உள்ளது; அது வருமாறு:

> "பூமி ஏகமானம் திருவல்லா திரிபாகம்
> பாசாண ஜாலம் தெச பாகம் ஏவா செஞ்சல்ப
> சூர்னேனா சமம் பக்கோம் தைலேன யுத்தம்
> கடுசர்க்கரா கிம்"

இதனை விளக்குகையில், **"காவிமண்** (செம்மண்) ஒரு பாகம், **கடுக்காய், நெல்லி, தாணிக்காய்** ஆகியவை தலா ஒரு பாகம், **கோழிப்பரல்** (ஆற்று மணலில் கிடைக்கும் ஒரு பொருள்; இது கேரள மாநிலம் ஆலவாய், புளா, பாரத புளா பகுதிகளில்

1. செய்தி தந்தவர்கள்: தி.சு. தங்கவேலு, எஸ். லட்சுமி காந்தன், டி.சி. மணி (திருச்செங்கோடு) - ஞானபூமி, ஆகஸ்டு, 1982.

மட்டுமே உண்டு) பத்து பாகம்; இவை எல்லாம் சேர்ந்து எவ்வளவு எடை உள்ளதோ அதே அளவு **செஞ்சல்யம்** (சிவப்பு நிறப்பொருள்) இவற்றை எடுத்து நன்றாகப் பொடிசெய்ய வேண்டும். இந்தப்பொடியில் தேவையான அளவு நல்லெண்ணெய்யைச் சேர்த்துச் சூடாக்கினால் கிடைக்கும் கலவையே **கடுசர்க்கரை** எனப்படும்,''1 என்று **ஜி. செல்லப்பா** கூறுதல் **காண்க.**

மிகக்கடுமையான பயிற்சியிருந்தாலொழியக் **கடுசர்க்கரை யோகத்தைக்** கொண்டு, கலை நேர்த்தியுடன் **சிலையை** உருவாக்கமுடியாது. பொதுவாகச் செப்புச் **சிலையையோ,** சருங்கற்சிலையையோ இடம் மாற்றுவது போலக் **கடுசர்க்கரை** யோகச் சிலையை இடம் மாற்ற இயலாது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள **திருவட்டார்** எனும் வைணவ திவ்யதேசத்தில் கடுசர்க்கரை யோகத்தால் **ஆதிகேசவப் பெருமாள் சிலை** செய்யப்பட்டுள்ளது. இந்தப் பெருமாள் சிலை **22** அடி உயரமுடையது. புராணக்குறிப்பின்படி **சந்திரனும் பரசுராமனும்** வணங்கிய பெருமை கொண்டது. **சன்னிதியில்** காணலாகும் மூன்று வாசல்களையும் திறக்கும் **வேளையில்** பெருமானின் முழுஉருவத்தையும் **கண்டு** வழிபடலாம். இதற்கு அடுத்த நிலையில், ''சுசிந்திரத்திலுள்ள **திருவேங்கட விண்ணவர் எம்பெருமான்** (மகாவிஷ்ணு) **சிலையும்** கடுசர்க்கரையோ**கத்தால்** செய்யப்பட்டது. திருவட்டாரில் சயனநிலையிலும் **சுசீந்திரத்தில்** நின்ற நிலையிலும் சிலைகள் உருவாக்கப்பட்டுள்ளன''2 என வருங்குறிப்பு நோக்கத்தக்கது; அமர்ந்த நிலையில் திருமால் சிற்பம் **திருவண்பரிசாரத்திலே** உருவாக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இது பற்றி **எஸ். பத்மநாபன்** விளக்குகையில், ''மூலவரான **திருவாழ்மார்பர்** நான்கு கைகளுடன், சங்கு சக்கர மேந்தி அபயஹஸ்தத்துடன் பிரசன்ன மூர்த்தியாக **இருந்த கோலத்திலே** நமக்குக் காட்சி தருகிறார். நின்ற கோலத்திலே **திருப்பதியும்,** கிடந்த கோலத்திலே **திருவரங்கமும்,** இருந்த கோலத்திலே திருவண்பரிசாரமும் சிறப்புப் பெற்று விளங்கு

1. தினமலர் - தீபாவளி மலர், 1992, பக். 446.
2. மேலது.

கின்றன. ஒன்பது அடி உயரமான **இவ்விக்கிரகம் 'கடுசர்க்கரை யோகம்'** என்ற கூட்டினால் சமைக்கப்பட்டது. கல்லும் சுண்ணாம்பும் சேர்ந்து செய்யப்பட்ட உருவத்தின் மேல் கடுகும் சர்க்கரையும் சேர்ந்த ஒரு பசையினால் பூசப்படும் முறைக்குக் கடுசர்க்கரையோகம் என்பர். அதனால் மூலவருக்கு அபிஷேகம் கிடையாது''[1] என்று கூறிச் செல்கிறார்.

முன்னர், **தி. செல்லப்பா** கூறிய கடுசர்க்கரை யோகக் கலவைக்கும், பின்னர் **எஸ். பத்மநாபன்** கூறிய கடுசர்க்கரை யோகக்கலவைக்கும் வேறுபாடு தெரிகிறது. **தி. செல்லப்பாவின்** கூற்று மிகப்பொருத்தமாகத் தோன்றுகிறது. இது தொடர்பாக மேலும் ஆராய்ச்சி தேவை. இது நிற்கத், திருமாலைத் தவிரச் சைவ சமயத் தெய்வங்களையோ பிறசமயத் தெய்வங்களையோ கடுசர்க்கரையோகத்தால் உருவாக்கியுள்ளனரா என்பது தெரியவில்லை. அரிதின் முயன்று களஆய்வு புரிந்தால் மேலும் பல செய்திகள் கிடைக்கலாம். அன்றியும் ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் கடுசர்க்கரை பற்றிக் கலை நுட்பப்பயிற்சி வழக்கத்திலிருந்து, அஃது இக்காலத்திய அண்டை நாடாகிய கேரளத்திற்குச் சென்றுள்ளதா என்பது பற்றியும் ஆராய்தல் நல்லது. பண்பாட்டு நோக்கில் இத்தகைய முயற்சிகள் வரவேற்கத் தக்கனவே எனலாம்.

7. மாக்கல் சிற்பம்:

சிற்பங்களை வடிக்கப்பயன்படும் பொருள்களுள் மாக்கல்லையும் ஒன்றாகப் பொருட்படுத்திக் குறிப்பிடவில்லை. எனினும், மாக்கல்லும் நுட்பமான சிற்பங்களை அமைக்கப் பயன்பட்டு வருகிறது.

மாக்கல் திட்பமும் செறிவும் இல்லாத காரணத்தால் அதனால் உருவாகும் சிற்பம் நீண்ட நாள் உறுதியாகப் பொலிவுடன் இருப்பதில்லை. எனவே, கோயிற்சிலை வடிக்க அதனைப் பலரும் தேர்ந்தெடுப்பதில்லை. இதனால் சிற்பியர் மாக்கல் சிற்பம் அமைப்பதையே முற்றிலும் கைவிட்டுவிட்டனர் என்றும் கொள்ளுதற்கில்லை.

1. குமரி மாவட்டக் கோவில்கள், பக் 81.

வேலூர் ஜலகண்டேசுவரர் கோயிலில் கருப்பக்கிருகத்தின் வெளியிலே துவாரபாலகர் சிலைகளைக் காணலாம். அவற்றின் சிற்பநுட்பத்தை விளக்கிச்செல்லும் எம். ராதாகிருஷ்ணப்பிள்ளை, ''வேலூர்க் கோயில் கர்ப்பக்கிரகத்தின் வெளியிலே அதியற்புத மான இரண்டு துவாரபாலக விக்கிரகங்கள் வாயிலின் இரண்டு புறமும் இருக்கின்றன. அவை மாக்கல்லால் ஆனவை. மிக நுட்ப மாக வேலைசெய்யப்பட்டுள்ளன. சிலைகள் சுமார் எட்டரை அடி உயரம் கொண்டவை. காவற்கோலம் கைகளில் சூல பாசங் களோடு அமைந்திருக்கிறது. ஒரு கையில் கதை ஏந்தி, காலை அதன் மேல் தூக்கி வைத்துக் கொண்டிருக்கின்றனர். பற்கள் கோரப்பற்கள்''[1] என வருணித்தலைக் காணலாம். இவ்வாறே தமிழ்நாட்டு ஆலயங்களை ஆராய்ந்து பார்த்தால் சில இடங் களில் மாக்கற் சிலைகள் கிடைக்கலாம். ஆனால், அவை அபூர்வ மானவை.

குழந்தைகளின் விளையாட்டு உலகத்தில் மாக்கல் பொம்மை கள் விளையாட்டுப் பொருள்களாகப் (Toys) பயன்பட்டு வரு கின்றன; அந்த நோக்கத்தில் அவை பலவாகத் தயாராகின்றன

சிலை செதுக்குவதில் நுட்பமான பயிற்சிபெற விரும்பும் இளஞ்சிற்பிகள் மாக்கல்லைச் சிற்பப் பொருளாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

மாமல்லபுரத்துச் சிற்பக்கல்லூரியில் பயிற்சி பெற்ற இளஞ் சிற்பியொருவர் மாக்கல்லினால் வியத்தகு தெய்வச்சிலைகளைச் செய்து தேசிய அளவில் 'இராஷ்டிரபதிப் பரிசு' குடியரசுத்தலை வரால் வழங்கப்பட்டமை கொண்டு, தமிழகச் சிற்பியின் திறம் நன்கு புலனாகும். 'வல்லவனுக்குப் புல்லாயுதம்' எனும் நாட்டு வழக்கினை ஈண்டு இயைத்துச் சிந்திக்கலாம்.

8. மதிப்பரிய மணி (இரத்தின)ச் சிற்பம்:

உலகில் மதிப்புமிகு நவமணிகளுள் மரகதம் (பச்சை), மாணிக்கம் (கெம்பு அல்லது சிகப்பு) ஆகியவற்றிலும் சிற்பங் களை உருவாக்கியுள்ளனர். விடங்கத்தலங்களுக்கு முசுகுந்த

1. தென்னாட்டுக் கோயில்கள் (முதல்பாகம்), பக். 104

மாமன்னரே விண்ணுலகத்திலிருந்து மதிப்பரிய இலிங்கங்களைக் கொண்டு வந்தார் என்பது புராணச்செய்தி எடுத்துக்காட்டாகத் **திருநள்ளாற்றிலும்** திருவாரூரிலும் காணலாகும் **பச்சைக்கல் லிங்கம்** காண்க. அவை மிகச் சிறப்பானவை; பூசனை வழிபாடு அவற்றிற்கு நாளும் நடைபெறுகிறது. திருஉத்தரகோச மங்கையில் **மரகத நடராசர்சிலை** உள்ளது; காண்க

விலையுயர்ந்த **மாணிக்கத்தாலான சிற்பவுருவங்களும்** அரியனவாகச் சில தலங்களில் உள்ளன. எடுத்துக்காட்டாகத் **திருவாரூரிலும் தில்லையிலும்** மாணிக்கலிங்கம் காண்க.

9. சலவைக்கல் சிற்பமும் பளிங்குச் சிற்பமும்:

வடநாட்டில் ஒருவகை வெள்ளை நிறச் சலவைக்கல் நிறையக் கிடைப்பதால், அங்குள்ள ஆலயங்களில் சலவைக்கல்லால் இறைத் திருவுருவங்களையும், பிற உருவங்களையும், கட்டடக்கலையுறுப்புக்களையும் செய்தமைத்துள்ளனர். தென்னாட்டில் பிறமாநிலங்களிலிருந்து சலவைக் கற்களை வரவழைத்து மாளிகை முதலிய கட்டடங்களுக்குப் பயன்படுத்துகின்றனர்; சலவைக் கற்சிற்பங்களை உருவாக்குவதில் பெரிதும் நாட்டஞ் செலுத்துவதில்லை. எனினும், தமிழ்நாட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறைந்த எண்ணிக்கையில் சலவைக் கற்சிற்பங்கள் காணப்படுகின்றன.

காஞ்சிபுரத்தருகே **திருப்பருத்திக் குன்றத்தில்** சமணர் ஆலயம் உள்ளது. மலையனார் கோயில் எனப்படும் **சந்திரப் பிரபா ஆலயம்** பல்லவர்களால் உருவாக்கப் பட்டிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இவ்வாலயத்தில் சமண சமயத்தின் 17ஆவது தீர்த்தங்கரர் **குந்துநாதரின்** சலவைக் கற்சிலை உள்ளது. இது தமிழகத்தில் காணலாகும் பழமையான சலவைக் கற்சிலை எனலாம்.

"சென்னை **புனித ஜார்ஜ் கோட்டை** (Fort. St. George) யின் தென்பகுதியில் புனிதமேரி ஆலயம் உள்ளது. இது கி.பி. 1680 ஆம் ஆண்டில் **கிழக்கிந்தியக் கம்பெனியாரால்** எழுப்பப் பெற்றதாகும். இக்கிறித்துவ ஆலயம் இந்தியாவிலுள்ள மிகப் பழமையான ஆங்கிலக் கிறித்துவ ஆலயம் ஆகும். இறந்த பல ஆங்கிலேயரின் நினைவாகப் பல **பதிப்புக் கற்பலகைகள் (Tablets)** இவ்வாலயத்தில் உள்ளன. இவை அரிய கலைப்படைப்புக்கள்

ஆகும்,''[1] என்று V. கந்தசாமி எழுதிச்செல்வது காண்க. அயல் நாட்டாரின் தொடர்பு காரணமாகத் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த இத்தகைய அரிய கலைச்செல்வங்கள் சில கிறித்துவ மாதா கோயில்களில் காணலாம்.

''எழும்பூர் இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள புனித ஆண்ட்ரூ (St. Andrews) ஆலயம் மேஜர் ஹேவிலாண்ட் என்ற ஆங்கிலப் பொறியியல் வல்லுநரின் மேற்பார்வையில் கட்டப் பட்டதாகும். இவ்வாலயத்திலுள்ள நீண்ட பெரிய தூண்கள் கட்டடத்தின் உட்பகுதியிலுள்ள அரைக்கோள வடிவத்தைக் கொண்ட வழிபாட்டு அறை, குறுகிய கோபுர அமைப்பு, சில ஆங்கிலேயரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள பளிங்குச் சிற்பங் கள் ஆகிய யாவும் கலைச்சிறப்பு மிக்கவை''[2], என்று வரும் குறிப் பும் மனங்கொள்ளத்தகும். இவ்வாறே அண்ணாசாலையில் ஜெமினி மேம்பாலத்தருகே காணலாகும் புனித ஜார்ஜ் பேராலய மும் கலை வண்ணம் கொண்டுள்ளது; ''இது கிறித்துவக் கட்டடக் கலைக்கும் பளிங்குச் சிற்பங்களுக்கும் சிறந்த களஞ்சியமாக உள்ளது''[3] என்ற குறிப்பும் சிந்திக்கத்தக்கது.

பளிங்குச் சிற்பங்கள் என மேலே கூறப்படுபவை சிறந்த பளிங்கினால் ஆனவை எனக் கருதமுடியாது. உயர்ந்த பளிங் கால் ஆன சிற்பங்களைக் காண வேண்டுமெனின் தமிழ் நாட்டுக் கோயில்களுக்குத் தான் வந்தாக வேண்டும். அன்றாடப் பூசைக் குப் பயன்படும் பளிங்கு லிங்கங்களைச் சிதம்பரம், திருவாரூர், நாகை முதலிய திருத்தலங்களில் காணலாம்; அவை உயர்தரமான பளிங்குக் கற்களால் உருவாக்கப்பட்டவை.

தொன்மையான காலத்திலேயே தமிழ்நாட்டில் பளிங்கு அறிமுகமாகியிருந்ததென்பதற்குத் திருவள்ளுவர் வாய்மொழியும் துணை நிற்கும்; இதனை,

---

1. தமிழ்நாட்டின் தலவரலாறுகளும், பண்பாட்டுச் சின்னங்களும், ப 51,
2. தமிழ்நாட்டின் தலவரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும் ப, 52
3. மேலது, பக், 52.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"[1]

என வருதலால் காண்க. மேலும், பூம்புகாரில் பளிங்கினாலான **பளிக்கறை மண்டபம்** இருந்தமை பற்றி **'மணிமேகலை'**யில் கூறப் படுதலையும் காண்க.

10. தந்தச் சிற்பம்

யானைத் தந்தங்கள் சிற்ப வேலைப்பாட்டிற்கு உகந்தவை யாகக் கருதப்பட்டமையின் அவற்றிற்குத் தனி மதிப்பு இருந்து வந்துள்ளது. எனவே, விலைமதிப்பை மனத்துட் கொண்டு, "ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" என்னும் பழமொழி தமிழ்நாட்டில் வழங்குவதாயிற்று.

யானைத் தந்தத்தின் பயன்களைச் சங்க காலத்திலே மக்கள் உணர்ந்திருந்தனர் என்பதற்கு இலக்கியங்களில் சான்றுகள் நிரப்ப உள்ளன.

நெடுநல் வாடையில் வரும் பாண்டியன் **தலையாலங்கானத்துச்** செருவென்ற நெடுஞ்செழியன் பயன்படுத்திய கட்டில் பற்றி **நக்கீரர்** வருணித்துள்ளார். நாற்பது ஆண்டுகள் வாழ்ந்து போரில் இறந்த யானையின், தாமாக விழுந்த கொம்புகளைக் கொண்டு செய்யப்பட்டது பாண்டியனது கட்டில்; அது வட்ட வடிவத்தில் அமைந்து கலைமாட்சி கொண்டது. சிங்கம் முதலிய விலங்குகளை வேட்டையாடுதல் போன்ற காட்சிகள் பொறிக்கப் பெற்ற தகடுகள் அக்கட்டிலில் பொருத்தப்பெற்றன. கட்டிலின் ஒவ்வொரு காலின் அடிப்பகுதியும் குடம் போன்ற அமைப்பில் நன்கு செதுக்கப்பட்டு, அதற்கும் கட்டிலுக்கும் நடுவிலிருந்த இடம் மெல்லியதாய்த் திரண்டிருந்தது எனக் கட்டில் வருணிக்கப்பட் டுள்ளது. இவ்வருணனைச்சிறப்பை **நெடுநல்வாடையில்** (115-135) காண்க.

வேட்டைக் காட்சி செதுக்கப்பெற்ற தகடுகள் அந்தத் தந்தக் கட்டிலில் பொருத்தப்பட்டுள்ளதைச் சிந்திக்கையில், உலோகத் தகடுகளில் பல காட்சிகளைச் செதுக்கும் நுண்ணிய சிற்பத்திறத் திலும் (Engraving talents) சங்ககாலக் கலைஞர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது புரியலாகும்.

1. குறள். 706

படுத்துறங்கும் பள்ளியறைக் கட்டில் அகவொழுக்கத்திற் குரியது என்பது தெளிவு. இருப்பினும், வீரவுணர்வு மிகு பாண்டியன் உறங்கும் கட்டில் அதுவாதலின், அதிலும் வீரம் விளைத்தற்குரிய வேட்டைக் காட்சியைப் பொறித்துள்ளமை சிந்திக்கத் தக்கதாகும். கோட்டையைச் சிதைக்கும் போர்யானை யின் தந்தத்தால் கட்டிலுக்குக் காலமைத்தமை கொண்டு, 'மன்னன் தன்னைத் தாங்குவது வீரவுணர்ச்சி' என்பதாக உணர்ந் திருந்தான். எனவே, தந்தக்கட்டிலானது அகத்திணைக்கும் புறத் திணைக்கும் பாலமாக அமைந்திருந்தது என்பது பொருந்தும்.

வீரமன்னர்களின் அரசுக்கட்டிலாகிய சிங்காதனமும் தந்தத் தாலும், மணியாலும், பொன்னாலும் அமைக்கப்பட்டது. பகை மன்னர்களின் அரசுவா எனும் பட்டத்து யானையின் கொம்பு களைக் கதறக் கதற அறுத்து அவற்றைக் கொண்டு அரசுக்கட்டில் அமைத்துள்ளான் சேரன் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை. அந்தக் கட்டில் அணங்குடை மரபிற் கட்டில்[1] என்று பதிற்றுப்பத்து போற்றிக் கூறுகிறது.

சில ஆலயங்களில் தந்தச் சிற்பங்கள், சிலை வடிவங்களில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலிலும் திருவரங்கம் அரங்கநாதர் கோயிலிலும் உள்ள, வியத்தகு அருங்காட்சியகங்களில் தந்தச் சிலைகளைக் காண்க. அவை பற்றிய விவரங்களை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

நாடாண்ட சில மன்னர்களின் அரண்மனைகளிலே தந்தத் தாலான - வேலைப்பாடுடைய - பெட்டிகள் முதலிய பல பொருள்களைக் காணலாம்.

11. உலோகச் சிற்பம் - பஞ்சலோகக் கலவை:

தெய்வப் படிமங்களைச் செய்வதற்கு வெண்கலத்தைவிடச் சிறப்பானதாகப் பஞ்சலோகக் கலவை கருதப்படுகிறது. ஐம்பூதக் கலப்பாலாகிய இவ்வுலகத்தில் ஒவ்வொர் அணுவிலும் ஊடுருவி நிற்கும் பரம்பொருளை ஐந்து உலோகங்களாகிய இரும்பு, ஈயம், செம்பு, வெள்ளி, தங்கம் இவற்றின் கலவையால் உருவாக்கினால் மிக நல்லது எனக் கருதியிருக்கின்றனர்.

1, பதிற்றுப் பத்து, 79, 14

மேலும், ஐந்து உலோகங்களுள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் குறைபாடுள்ளதாக இருக்கிறது. அஃதாவது, **இரும்பிலே** துரு பிடிக்கும்; **ஈயத்திலே** ஒடிப்பும், வளைப்பும் ஏற்படும்; **அலுமினியத்திலே** வலுவில்லாமையால் விரைவில் ஒடிந்துவிடும்; **செம்பிலே** களிம்பு ஏறும்; **வெள்ளியிலே** கருநிறப்புள்ளிகள் அமையும்; **தங்கத்திலே** செம்புக் கலப்பில்லாமல் வேலைசெய்தால் தொய்வு தரும் என்பது தொழில்நுட்பம் புரிந்தவர்கள் காணும் அனுபவமாகும். ஆனால், பஞ்சலோகக் கலவையோ இத்தனை குறைபாடுகளையும் தவிர்க்க வாய்ப்பாகும். படியங்களை நேர்த்தியாக வடிவமைக்க வசதியாகும். பஞ்சலோகக் கலவையில் எந்த அளவிற்குத் தங்கம் சேர்க்கப்படுகிறதோ அந்த அளவிற்குக் கலைப்படைப்பு மிக்க ஒளியுடனும், பொலிவுடனும் விளங்கும். தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றில் **பஞ்சலோகக் கலவையால்** அமைக்கப்பட்ட படிமங்களே மிக மூர்த்திகரமாகக் காணப்படுகின்றன.

11 1. படிமங்கள் - உருவாக்கும் முறை:

படிமங்களை அமைக்கையில் சிற்பியர், பரிமாணங்களை (**அளவு** விகிதங்களை) மிகச் சிறப்பாகக் கவனித்துக் கொள்வர். **உலகியல்** நிலையில் பண்ணப்பெறும் படிமங்களுக்கும் வழிபாட்டினை ஏற்கும் படியங்களுக்கும் வேற்றுமையுண்டு. **படிமமானம்** பற்றிச் சிற்பநூல்களில் ஆராய்ந்து தெளிவுபடுத்தும் **சிற்பி கணபதி ஸ்தபதி**, ''வழிபடு படிமங்களுக்கு உயரம் கொள்ளும் முறையைப் பலவேறாகச் சிற்ப நூல்கள் கூறுகின்றன. ஒரு படிமத்தின் உயரத்தைப் பதினோரு விதமாகக் கொள்ளலாம், எவ்வெவற்றாலெனின், **லிங்க மானத்தால், கர்ப்பக் கிருக மானத்தால், துவார மானத்தால், அதிட்டான மானத்தால், பாத மானத்தால், ஹஸ்த மானத்தால், தாள மானத்தால், கர்த்தாவின் உயர மானத்தால், பேராங்குல மானத்தால், மானாங்குல மானத்தால், மாத்ராங்குல மானத்தால்**, படிம மானம் பதினோரு வகையாகும். இதில் ஏதாவதொரு மானத்தைச் சிற்பியானவன் கைக்கொண்டு அவ்வளவு செய்விப்போனுக்குப் பொருத்தமுடையதா என்று **ஆயாதிக் கணக்கின்** மூலமாக ஆராய்ந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்''1, என்று கூறி, ஆறு ஆயாதி (ஷடாயாதி)யை

1, சிற்பச் செந்நூல், பக். 26.

விளக்கிச் செல்கிறார். அவற்றின் பெயர்கள் வருமாறு: 1. **ஆயம்** [வரவு(அல்)பயன்], 2. **வியயம்** [செலவு(அ)இழப்பு] 3. **யோனி** [திசைகள்], 4. **தினம்** [நட்சத்திரங்கள்] 5. **வாரம்** [கிழமைகள்], 6. **அம்சம்** [கூறு(அ)தன்மை]

இவ்வாறான சிற்ப நுணுக்கச் செய்திகளை விளக்கமாகத் தெரிந்து கொள்ளாவிடினும், குறிப்பாகவேனும் சிலவற்றைத் தெரிந்து கொள்வதால் தமிழ்நாட்டுச் சிற்பக்கலை எத்தகைய அரும்பெருஞ்செல்வம் எனப்புரிந்து கொள்ளலாம். எனவே, **படிமங்களின் பங்க இலக்கணம்** பற்றி மிகச் சுருங்கிய அளவில் சில செய்திகளைக் காண்போம்.

தமிழ்நாட்டுப் படிமங்கள் இயற்கையைப் பிரதிசெய்யும் முயற்சியில் அமைந்தவையல்ல. எனவே, சிலை வடிவங்கள் **நின்றாலும், அமர்ந்தாலும், கிடந்தாலும், எக்கருத்தை உணர்த்துவதானாலும்** அவை ஆடற்கலைப் (போக்கு) பாணியிலேயே அமைக்கப்படுதலைக் காணலாம். ''உள்ளத்திலே தோன்றும் இயல்பான உணர்ச்சிகளை மிகத்தெளிவாகவும், சுவையோடும் நெஞ்சிலே நிலைத்து நிற்கும் வகையிலும் உணர்த்த வல்லது ஒப்பற்ற கலை (ஆடற்கலை). முகபாவத்தாலும் உடல்ஒடிவு, வளைவு, குழைவு முதலிய அமைதிகளாலும் முத்திரை முதலான அவிநயங்களாலும் ஆடற்கலை எத்தனையோ உணர்ச்சிகளை உணர்த்துகிறது. ஆடற்கலை வாயிலாகக் கருத்துக்கள் சுவையோடும், முறையோடும் உணர்த்தப்படுவதை உற்றுநோக்கி இதனைப் படிமக் கலையில் புகுத்தினர் பண்டைக்காலச் சிற்பக் கலைஞர்கள்''[1] என்பதும், ஆடற்கலை இலக்கணங்களை நேரடியாகக் கையாளாமல். படிமத்திற்கும் கைக்கொண்ட பொருளின் தன்மைக்கேற்றவாறும் தேவையான கட்டுப்பாட்டுடனும், பாத்திரத்திற்குப் பொருந்துமாறும், இவ்விலக்கணங்களைச் சிற்பிகள் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலோகச் சிற்பங்களில் கை கால் நீட்சிகளும், ஒடிவு, வளைவுகளும் எளிதாகக் காட்டமுடியும். ஆனால், கல்லில் வடிக்கும்போது அங்ஙனம் காட்டுதல் எளிதன்று. எனவே, நீட்சிகளையும்,

1. சிற்பச் செந்நூல், பக் - 46

ஒடிவு வளைவுகளையும், மிதமாகவும் பிற அங்கங்களோடு நெருங்கியதாகவும் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆடற்கலை இலக்கணங்கள் சிற்பியின் கண்ணோட்டத்தில் சிறிது மாற்றங்கொள்கின்றன. அவற்றில் முக்கியமானவை. **ஆசனங்களும், உடல்பங்கங்களும், கைமுத்திரைகளும்** ஆகும்''[1] என்பதும் மிகப் போற்றத்தக்க குறிப்புக்களாகும்.

11.2. படிமக்கலை; உலோகத்திருமேனிகள்:

மண்ணாலும், மரத்தாலும், கல்லாலும் சிற்பநோக்கில் உருவங்களைப் படைத்து வந்த மக்கள் உருவ அமைப்புக்களுக்கு உச்சநிலைச் சாதனையாக உலோகங்களால் உருவங்களைப் படைத்தனர். இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிறப்புற்றிருந்ததாகக் கருதப்பெறும் **சிந்துவெளி நாகரிகத்தில்** (ஹாரப்பா நாகரிகக் காலத்தில்) உலோகத்தில் உருவங்களை வார்த்தெடுக்குங் கலைக்கும் இடமிருந்தது; செம்பினால் அமைக்கப்பட்ட **'நடனமாது'** சிலையைக் காண்பவர்கள், படிப்படியாக வளர்ந்துவந்த வார்ப்படக் கலைத்திறனுக்கு இதனை முன்னோடி எடுத்துக் காட்டாகக் கூறி மகிழ்கின்றனர். இவ்வாறு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் இந்தியப் பெருமண்ணில் தோன்றிய படிமக்கலை, உலகத்தில் ஏனைய நாடுகளிலே காணலாகும் வேறுபட்ட சிறந்த பண்பாடுகளுக்கிடையே நமக்கெனச் சிறந்த உரிமை கொண்டாடவும், கலைநலத்தால் தலைநிமிரவும் செய்துள்ளது.

உலோகப் படிமங்களைப் பொறுத்த வரையில் **இந்துக்களுக்கு** முன்னரே **பௌத்தர்கள்** இக்கலையில் முன்னோடிகள் என்பர். எனினும், **'உற்சவத் திருமேனிகள்'** என்ற நோக்கில் இந்து மதத்தவர்களே பலருக்கும் முந்திக் கொண்டு கலைப் படைப்புக்களை உருவாக்கியுள்ளனர்.

பாரத நாட்டிலே, சிறப்பாகத் தமிழ்நாட்டிலே படிமக்கலைக்கென ஒருவகைத் தனித்தன்மையுண்டு. கோயில் நாகரிகத்தைச் சிறப்பாகக் கொண்டுள்ள தமிழ்நாட்டில் ஆலயங்களுக்கெனத்

1. சிற்பச் செந்நூல், பக் - 46

திருவுருவங்கள் மிகுதியாகத் தேவைப்பட்டன. அந்த அந்தக்காலத்திலும் நாடாண்ட மன்னர்கள், திருவுருவங்கள் அமைக்கும் படிமக் கலைக்கு ஆதரவளித்துக் கொண்டே வந்துள்ளனர் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

திருக்கோயில்களில் காணலாகும் உலோகப் படிமங்களின் தரங்களை உணர முற்படின், அவ்வக்காலத்தில் வாழ்ந்த சிற்பியர்கள் - ஸ்தபதிகள் - எவ்வாறாக உலோகக் கலவை முறையில் கலையனுபவங் கொண்டிருந்தனர் என்பதையும் காண்பது நல்லது. கலைத் தேர்ச்சி கொண்ட மரபினரின் பயிற்சியையும் உலோகக் கலவையையும் தெய்வநல ஈடுபாட்டையும் பொறுத்துத் தெய்வத் திருமேனிகள் மிகுந்த அழகுக் கூறுகளுடனும் மூர்த்திகரத்துடனும் அமையலாயின.

உலோகக் கலவையைப் பொறுத்த வரையில், செம்பு, பித்தளை, ஈயம், வெள்ளி, தங்கம் ஆகிய ஐந்தும் சேர்ந்த பஞ்ச லோகக் கலவையே மிகச்சிறந்ததாகக் கருதப்பட்டது. "இறைவன் பஞ்சபூத சுவரூபமாக உள்ளான் என்றும், எனவே பஞ்சலோகங்கள் பஞ்ச பூதங்களை உணர்த்துவன என்றும் இதற்குத்தத்துவ விளக்கம் சொல்லப்படுகிறது"[1] என வருங்குறிப்பு மிகவும் மூர்த்திகர நோக்கில் போற்றத்தக்கது.

11.3. சிலை வார்க்கும் செய்முறை - சிறப்புக்குறிப்பு:

உலோகத்தில் படிமங்களை வார்ப்பதற்கு முன், தேவையான உருவத்தை மெழுகில் தேர்ந்த அளவுகளுடன் அமைத்துக் கொள்ள வேண்டும் முதற்கண் மெழுகில் உருவஞ் செய்து கொள்வது சிற்பியர்க்கு மிக எளிதாகும். பிறகு, மெழுகுருவத்தின் மீது புற்று மண் கொண்டு மெத்திக் கொண்டே மூடிக் குறிப்பிட்ட துவாரம் அமைத்து நிழலில் உலர்த்துவர். கீறலோ வெடிப்போ ஏற்படா வண்ணம் நிழலில் உலர்த்துவதிலும் பொறுமை வேண்டும். நன்கு பக்குவமாக உலர்ந்த பின்னர், அதனைத் தீயிலிட்டால் துவாரம் வாயிலாக, மெழுகு உருகி வெளிவந்துவிடும். புற்றுமண்ணால் கருக்கட்டிய அச்சு அமைத்து விடுவதால், அந்த அச்சில் தெளிய உருக்கிய உலோகக் கலவையை

1. சிற்பச் செந்நூல், பக். 173.

நல்ல நாளில் வார்த்து, நன்கு அது குளிர்ந்த பிறகு அச்சை உடைத்து எடுத்தால் உருவம் கிடைக்கும்; எனினும், ஓரளவு சொர சொரப்பாக இருக்கும்; சில வேளைகளில் உலோகக்கலவை சிற்சில பகுதிகளில் நன்கு பாயாமல் பள்ளங் கொண்டிருக்கும். வழித்தண்டுகளை வெட்டியெடுத்தும், பள்ளங்களில் உலோகக் கலவையைப் பக்குவமாகச் செலுத்தி மெத்தியும், முனைப்புக் களையும் சொரசொரப்பான பகுதிகளையும் அரத்தால் அராவி யும், நுணுகிய சிற்றுளியால் செதுச்கியும், உருவத்தை நேர்த்தி யாக்குவர். தெய்வச்சிலை வார்ப்பிலே சிற்பியரின் உள்ளம் கருவைத் தாங்கிய நிலையில் நல்லபிள்ளை பெற்றெடுக்க அல்லும் பகலும் அதில் நினைவாய் அவாவி நிற்கும் நற்றாயர் உளத்தை ஒத்திருக்கும் எனலாம்.

சைவக்கோயிலுக்கெனத் தெய்வத்திருமேனிகளை வார்த் தெடுக்கையில் பல வேளைகளில் மூன்று பாகங்களாகச் செய்து கொள்கின்றனர். அவையாவன; 1. பீடம், 2. உருவத்திரு மேனி, 3. திருவாசி. இந்த மூன்று பாகங்களையும் கலைநுட் பத்துடன் வனப்புற இணைத்துப் பொலிவூட்டுவதிலும் கலைத் தேர்ச்சியைக் காணலாம்.

பஞ்சலோகச் சிலை அமைக்கும்போது, ஒவ்வொரு உலோகத் தையும் மரபான விகிதம் அறிந்தும் முறையறிந்தும் கலக்க வேண்டும். எனினும். பொன் மிகுதியாகக் கலக்கப் பெற்றால், உலோகத்தாலான திருமேனி களிம்பேறாமல் கண்கவர் பொலி வுடன் இருக்கும்; அதற்கு மதிப்பும் மிகுதி.

உலோகக் கலவையை அச்சில் வார்க்கும்போதும். வார்க்கப் பட்ட சிலையை உளியால் செதுக்கியும், அரத்தால் அராவியும், நயப்படுத்தும்போதும் சிற்பியரின் கைத்திறம் மிகத் தேவைப் படும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தஞ்சை மாவட்டத் திலே சுவாமிமலை மிகச் சிறந்த வார்ப்படச் சிற்பக்கலை வல்லு நர்களுக்கு உறைவிடமாகத் திகழ்கிறது. தனிப்பட்டோரும் கூட்டுறவு நிறுவனமும் செப்புத் திருமேனிகளை அமைத்துத் தருவதில் நாட்டஞ் செலுத்தி வருதலைப் பலரும் அறிவர்.

சிற்பக்கலையிலே மிகவும் தெய்வநலத்துடன் போற்றுதற் குரியது தெய்வச் சிலைகளை வார்த்தெடுக்கும் சிற்பியர் திறம் எனக் கண்டு வருகிறோம். கற்சிற்பம் வடிக்கும் பயிற்சியுடன் இத்தகைய உயரிய கலைக்கும் ஆக்கந்தரும் வகையில், **மகாபலி புரத்தில்** 'சிற்பப் பயிற்சிக்கூடம்' நிறுவிக் கலைப்பண்பாட்டைத் **தமிழ்நாடு அரசு** போற்றி வருகின்றது; இதற்குத் தமிழ்மக்கள், அரசுக்கு நன்றி பாராட்டுதல் கடமையேயாகும்.

11.4. செப்புச் சிலைகள் - சிறப்புநோக்கு:

பெருந்திட்டத்தில் இக்காலத்திலே காணப்பெறும் கோயில் களுக்கு முன்னோடியாக மரத்தின் கீழே பீடம் அமைத்து அங்குத் தெய்வச்சிலைகளை மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். அஃதாவது, மரத்தின் அடிப்பாகத்தில் அமைந்த பீடமே பிற்காலத்தில் ஆலயம் அமைக்க வழிவகுத்தது எனக் கண்டு வருகிறோம்.

சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப் பெற்ற **நடனமாதுச் சிலை** செம்பாலானது, தொன்மையானது என்பது உண்மையே. ஆனால், தெய்வச்சிலைகள் முதன்முதலாக மரத் தாலோ செங்கல் சுதையாலோ அமைக்கப்பெற்றன என்பது ஆய்வாளர்கள் கருத்து. வடநாட்டிலும், தென்னாட்டிலும் இதே நிலைதான் இருந்திருக்க வேண்டும். வடநாட்டிலுள்ள பூரியில் உள்ள **செகந்நாதர் ஆலயத்தில் மூலவர் சிலை மரத்தாலானது** என்பதையும், தென்னாட்டில் பண்டு தொட்டு வரும் பல **சிற்றூர்ப்புறத் தெய்வங்கள் மரத்தாலானவை** என்பதையும் அறிஞர் கள் எடுத்துக்காட்டிக் கூறுவது மனங்கொள்ளத்தக்கது.

மரத்தாலோ சுதையாலோ உருவாக்கப்பட்ட தெய்வ வடி வங்கள் தட்பவெப்பச் சூழல்களால் காலப்போக்கில் விரைவிலே சிதைந்துவிடுதலைக் கண்ட மக்கள், கருங்கல்லால் சிலைவடிக்கத் தொடங்கினர். எனினும், இவையெல்லாம் மூலவர் நிலையில் நிறுவப்பட்ட இடத்திலிருந்து மக்களுக்கு அருள்பாலித்து வந்தன. கோயிற்புறத்தேயுள்ள மக்களுக்கும் பயன்படும் விதத்திலும், திரு விழாக் காரணமாக வீதியுலா வருவதற்கு வாய்ப்பான வகை யிலும் மரத்தாலான சிலைகளைவிடச் செம்பாலான வார்ப்புச் சிலைகள் நிரம்ப அழகுத் திருவுருவங்களாகக் கருதப்பட்டன;

ஆர்வமுடன் போற்றப்பட்டன. இந்நிலையில் செப்புச்சிலைகளை உருவாக்குங் கலை தென்னாட்டில் செழித்து வளரலாயிற்று; பல்லவர்களும், பாண்டியர்களும் இக்கலைக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்துள்ளனரெனினும், **பிற்காலச் சோழர்காலமே** இதற்கென அமைந்த **பொற்காலம்** எனலாம். தென்னகத்தில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் வார்ப்புக்கலை பெற்ற பெருமை இந்தியத் துணைக் கண்டத்தில் வேறெங்குமே காண இயலாது. "உலகிலேயே வார்ப்புக் கலையில் மிக உன்னத நிலை வகிப்பது தென்னாடு. இங்குள்ள செப்புச் சிலையில் மிக உன்னத நிலை வகுப்பது தென்னாடு. இங்குள்ள செப்புச் சிலைகளின் அழகு கண்டு உலகமே வியக்கிறது. கிறித்துவாப்தத்தின் தொடக்கத்திலேயே வார்ப்புக்கலை பற்றிய மிக உயர்ந்த நூல்கள் தென்னகத்தே தோன்றியுள்ளன. இன்றளவும் வார்ப்புக்கலையைத் தொழிலாகக் கொண்ட '**ஸ்தபதி**' வகுப்பினர் இவ்வாகமங்களைக் கொண்டே சிலைகளைச் செய்கின்றனர். அன்று தொட்டு இன்று வரை தொடர்ந்து வரும் இக்கலையின் வழிகள் மிகப்பண்பு வாய்ந்தவை. ஒவ்வொரு சிலையின் அமைப்பும் செய்யுள்வடிவிலே அமைக்கப்பட்டுள்ளது. இதை ஸ்தபதி மனத்திலே இருத்தி, அவ்வமைப்பிலே தன்னை மறந்து, மனத்திலே உள்ளதைச் சிலை வடிவிலே தோற்றுவிக்க, உயர்ந்த கலைப்படைப்பு தோன்றுகிறது"[1] என வருங் குறிப்பு மிகமிகச் சிந்தித்தற்குரியதாகும். இதனால், **தவயோகியை ஒத்தநிலையிலே சிறந்த சிற்பி,** தன் தெய்வநலக் கற்பனையால் சிலையை உலகுக்கு வழங்குகிறான் என்பது தெளிவாகும்.

11.5. சிற்பம் - கை அவிநயங்கள்:

நாட்டிய நூலுக்கிணங்க ஆடற்கலையில் பின்பற்றப்படும் அவிநயங்களுக்கும் சிற்பத்திருவுருவங்களில் காணலாகும் அவிநயங்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. பரதக்கலையை முன்நிறுத்தியே சிற்பங்களில் அவிநய முறைகள் பின்பற்றப்பட்டன என்றும், சிற்பங்களில் அமைந்துள்ள அவிநயங்களைப் பின்பற்றியே பரதக்கலையில் அவிநயங்கள் காப்பாற்றப்படுகின்றன என்றும் கூறுவர். எவ்வாறோ இரு கலைகளும் ஒன்றற்கொன்று துணைநின்று வருவது போற்றற்குரியது.

1. கலைச் செல்வங்கள், பக். 45 - 46.

சிற்பத் திருவுருவங்களில் காணப்படும் கைஅவியங்களுள் சிறப்பான சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

1. **வரத அத்தம்:** இது, சிலைகளில் சமபங்க உருவங்களின் இடக்கரத்து விரல்கள் காட்டும் கலைக்குறிப்பாகும். இம் முத்திரை அனுக்கிரக பாவனையைக் காட்டுகின்றது. இதில் விரல்கள் கீழ்நோக்கிய விதமாகச் சிறிது குழைவுடன் அமைக்கப் பெறுவனவாம். அஃதாவது, பெருவிரலைத் தவிர்த்து ஏனைய விரல்களைக் கைத்தலத்துக்குச் சம மட்டத்தில் கீழ்நோக்கி அமைப்பதாகும். இதில் உள்ளங்கை வெளிப்புறம் இருக்கும்.

2. **அபய அத்தம்:** சமபங்க உருவங்களின் வலக்கர விரல்கள் நிற்கும் முறையாகும். இம்முத்திரை சரணம் வழங்கல் அல்லது அபயமளித்தலாகிய செயலைக் குறிக்கும். இதில் விரல்கள் மேல்நோக்கிக் காணப்படும்; நாட்டிய வழக்கில் **பதாகம்** (கொடி) என்று சொல்லப்படும் இந்த முத்திரை, 'அஞ்சற்க' என்று அடியவர்களுக்குத் தெம்பூட்டுங் குறிப்பினையுடையது.

3. **கடக அத்தம்:** ''கைத்தலத்திலிருந்து பெருவிரலை நீட்டி உள்முகமாகச் சிறிது வளைத்து, நடுவிரலையும், அணிவிரலையும் ஒன்றோடொன்று இணைய முன்னோக்கி வளைத்து, சுட்டுவிரலையும், சிறுவிரலையும், தனது இடங்களில் நிறுத்தி, மேற் கணுக்களைச் சிறிது வளைத்துப்பிடிக்கும் கை **கடகஹஸ்தம்** எனப்படும்''[1] என்று **சிற்பி கணபதி ஸ்தபதி** கூறுவது மனங்கொள்ளத்தக்கது. ''வலக்கை விரல்களைச் சிறுக மடித்தும், விரித்தும் வைத்திருத்தலாம். இம்முத்திரை, பெரும்பாலும், தேவியின் உருவங்களிலும், அடியார் திருவுருவங்களிலும் காணப்படும். சுகமாகச் சரிந்து நிற்கும் உருவங்களுக்கு இம்முத்திரையை அமைப்பது வழக்கு''[2] என்று **க. நவரத்தினம்** தரும் குறிப்பும் இயைபுடன் சிந்திக்கத்தகும்.

4. **லோல அத்தம்:** மரத்தினின்றும் ஒடிந்து தொங்குங் கிளையைப் போலத் தோளிலிருந்து நீண்டு தொங்கியமையும்

1. சிற்பச் செந்நூல், பக், 34-35
2 தென் இந்தியச் சிற்பவடிவங்கள், பக். 87

கையமைதியை **லோல அத்தம் அல்லது டோல அத்தம்** என்பர்; லோலகரம், லம்பகரம் என்றும் அழைப்பர். விரல்கள் பல்லவ முத்திரையுடன் அமையும் இம்முத்திரை, பெரும்பாலும் தேவியின் உருவங்களிலும், அடியார் திருவுருவங்களிலும் காணலாம். சுக மாகச் சரிந்து நிற்கும் உருவங்களுக்கு இம் முத்திரையை அமைப் பது வழக்கு''[1] எனவருங் குறிப்பினையும் காண்க.

5 **கய அத்தம் :** எழிற்கைகளுள் ஒன்றாகக் கருதப்பெறும் இதனை எளிதாகப் புரிந்து கொள்ள, ஆடல்வல்லானின் திருவுரு வத்தின் கீழ் இடக்கரமும் அதன் விரல்களும் செய்யும் அவிநயத் தைக் காணலாம். ''கையை நேராக நீட்டி, மணிக்கட்டில் கைத் தலத்தைக் கீழ்நோக்கிச் சரித்துத் தளிர்க்கை போல் விரல்களை அமைத்து, கம்பீரமாகப் பிடிக்கும் கையானது **கஜஹஸ்தம்** (தும்பிக்கை) எனப்படும். இதனைக், **'கரி ஹஸ்தம்'** என்றும் சொல்வதுண்டு''[2] என வருங்குறிப்பும் இயையுடன் சிந்திக்கத் தகும்.

6. **அர்த்த சந்திர அத்தம்:** ஆடல் வல்லான் திருவுருவத்தில் அனலைத் தாங்கும் இடக்கரமும் அதன் விரல்களும் புரியும் அவி நயமே இது எனலாம். இடப்புறக் கட்டை விரலைப் பிரித்து, ஏனைய நான்கு விரல்களையும் ஒன்றோடொன்று ஒட்டியமைத்துக் கையினைச் சமமட்டத்தில் செங்குத்தாகப் பிடிக்காமல் வானத்தை நோக்கிச் சிறிது சாய்த்துப் பிடிப்பதால் அமையும் அவிநயமே அரைமதித் தோற்றமாகும்; அதுவே **அர்த்த சந்திர அத்தம்** எனும் பெயர் பெறும்.

7. **தமருக அத்தம்: 'டமரு அஸ்தம்'** என வடமொழியில் கூறப்பெறும் இந்த முத்திரையை ஆடல் வல்லானின் உடுக்கை பிடித்துள்ள பாவனையால் உணரலாம். 'விரல்களையும் கைத்தலத்தையும் விரித்து, நடுவிரலையும் அணிவிரலையும் ஒன்றோடொன்று நெருக்கியமைத்துக் கைத்தலத்தை நோக்கிப் பிகுவாக வளைத்துக், கட்டைவிரலை டமருகத்தை நோக்கி வளைத்துச் சுட்டுவிரலையும், சிறுவிரலையும் செங்குத்தாக்கிச்

1. தென்இந்தியச் சிற்ப வடிவங்கள், பக். 87
2. சிற்பச் செந்நூல், பக். 44

சிறிதே முன்புறம் வளைத்து, அமைத்த பிடி டமரு ஹஸ்தம் எனப்படும்''[1] எனச் சிற்பி கணபதி ஸ்தபதி தரும் விளக்கங் காண்க.

8. **சிங்ககர்ண அத்தம்**: சிற்பத் திருவுருவங்களில் தாமரை அல்லது நீலோற்பலம் முதலிய மலர்களை ஏந்தி நிற்கும் கரத்தின் அமைப்பைச் **சிங்க கர்ண அத்தம்** என்பர். கடக முத்திரையிலுள்ளவாறு விரல்கள் வளைந்திருக்க, நடுவிரலானது அணிவிரலுடன் உள்ளங்கை வரையிலும் நன்கு வளைந்து காணப்படும். இம் முத்திரை பெண்தெய்வ வடிவங்களிலே காணலாம்.

9. **திரிபதாகா அத்தம்** : வலக்கையிலுள்ள இரண்டு நீட்டிய விரல்களால் படைக் கருவிகளைப் பிடிக்கும் அமைப்பிலமைந்த முத்திரை இதுவாகும். இம்முத்திரை சந்திர சேகர மூர்த்தத்திலும் சுப்பிரமணிய மூர்த்தத்திலும் காணப்படும்.

10. **கட்ய வலம்பித அத்தம்** : இது கையை இடுப்பில் வசதியுடன் பார்வைக்கு அழகு தவழ வைத்திருப்பதாகும்.

11. **அஞ்சலி அத்தம்** : கைகளினால் வணங்கி வழிபடும் பாங்கினில் அமையும் முத்திரை இதுவாகும். இம் முத்திரையில் வல, இடக்கைகளை மார்புக்கு முன்புறமாக இணைத்துப் பிடித்த அமைப்புடன் இரட்டைக்கை அவிநயம் புலப்படும். கைகளுக்கிடையே பூ, பூமாலை, உருத்திராக்க மாலை போன்ற ஒன்றைக் காட்டலும் உண்டு என்பர்[2]

12. **சூசி அத்தம்** : கடக அத்தத்தைப் போல் விரல்களை முடக்கிச் சுட்டு விரலை நிமிர வைத்திருக்கும் பாங்குடையது இம்முத்திரை. சூசி என்பது ஊசி அல்லது சுட்டுக்கையைக் குறிக்கும் என்பதை நினைவிற் கொண்டு இம்முத்திரையமைப்பைப் புரிந்து கொள்ளலாம். ''இஃது ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுதலை உணர்த்தும். இவ்வமைதியில் நடுவிரலும் பெருவிரலும் நெருங்கியிருப்பின் இது பிகுவான தோற்றத்தைப் பெறும். செப்புப் படிமங்களில் இங்ஙனம் அமைத்தலைக் காணலாம்''[3] என்பர் சிற்பி கணபதி ஸ்தபதி.

1. சிற்பச் செந்நூல், பக். 44
2. மேலது, பக். 42
3. மேலது, பக், 37

13. நித்திரா அத்தம் : சுகாசன மூர்த்தியின் அருகில் அமைக்கப்படும் அம்மையின் இடக்கரம் ஊன்றிக் காணப்படுவதாகும். "அபய முத்திரையோடு கூடிய கையை ஆசனத்தில் படுக்கையாக வைத்த நிலையில் இம்முத்திரை அமையும். சுட்டு விரலும் சிறுவிரலும் ஆசனத்தைத் தொடாமல் சற்று மேல் நோக்கிக் கிளம்பிச் சிறிது வளைந்து அமைந்து இப்பிடிக்கு மென்மையும் அழகும் ஊட்டும். இது உறக்க நிலையை உணர்த்துவதால் **நித்திரா அத்தம்** எனப்படும். இதனை '**நித்ராதா முத்திரை** என்றும் சொல்வதுண்டு,"[1] என வரும் குறிப்பு உளங்கொள்ளத் தக்கது.

14 அர்த்தபதாக அத்தம் : தத்துவமுணர்த்தப் பயன்படக் கூடிய முத்திரையாகும். "சுட்டு விரலையும் நடுவிரலையும் விரித்து நீட்டி மற்ற விரல்கள் முன்னோக்கி மடக்கிக் கைத்தலத்தையும் விரலையும் செங்குத்தாகப் பிடித்து அமைந்த கை '**அர்த்த பதாக ஹஸ்தம்**' எனப்படும்.

சீவாத்மா, பரமாத்மா இவ்விரண்டும் வெவ்வேறானவை என்று உணர்த்தும் துவைதக் கொள்கையினை இது உணர்த்தும். இம் முத்திரையை **மாத்துவாச்சாரியாரின்** கையில் காணலாம்"[2] எனும் குறிப்பினைக் காண்கையில் இது **ஞான அவிநயம்** எனலாம்.

15. பல்லவ அத்தம் : தளிர்க்கை என்றும் வழங்கப்பெறும் இம்முத்திரையை இடபாந்திக **மூர்த்தத்திலும் இராச கோபாலன் படிமத்திலும்** காணலாம் என்பர். "ஐந்து விரல்களை விரித்து நீட்டி உள்ளங்கை உள்முகமாகவும், புறங்கை வெளிமுகமாகவும் அமைய மணிக்கட்டிலிருந்து இலைபோல் கீழ்நோக்கி மடிந்து தொங்கும் கையமைதி '**பல்லவ ஹஸ்தம்**' என்று சொல்லப்படும்"[3] என**ச் சிற்பி கணபதி ஸதபதி** விளக்கந்தருவது சிந்திக்கத்தக்கதாகும்.

---

1. சிற்பச் செந்நூல், பக். 39
2. மேலது, பக். 39
3. மேலது, பக். 38

16. **வியாக்கியான அத்தம்** : ஞான ஆசிரியர் அருளுள்ளப் புலப்பாடாகச் சமய ஞான தத்துவத்தினைச் சின்முத்திரையால் சீடர்களுக்கு உணர்த்துவர். அவ்வாற்றான் பயன்படும் அவிநயமே இதுவாகும்.

"பெருவிரல் கைத் தலத்தை விட்டுப் பிரிந்து முன்னோக்கி நீண்டு நிற்க, சுட்டுவிரலானது வணங்கிப் பெருவிரலின் நுனியைத் தொட்டு வளையம் போன்று அமையும். நடுவிரல், அணிவிரல், சிறுவிரல் ஆகியன அவ்விரு விரல்களை விட்டுப் பிரிந்து மேல் நோக்கினவாய்ப் பின்னணியில் அடுக்கடுக்காய் நிற்கும்,"[1] என விளக்கிச் செல்லும் குறிப்பு உளங்கொள்ளத் தக்கதாகும்.

கற்படிமங்களில் பெருவிரலையும் சுட்டு விரலையும் முன்னோக்கி வளையம் அமையுமாறு செய்வது சிரமம். அவ்வாறு செய்யினும். சிலநாட்களில் பின்னமாகி விடலாம். எனவே, அவை கைத்தலத்தையொட்டியே அமைந்திருக்கும். ஏனைய விரல்கள் ஒன்றோடொன்று முறைப்படி நெருங்கி நேராக நிற்கும்.

மேற்கூறிய கைஅவிநயங்களாகிய முத்திரைகள் தவிர, தர்ஜனீ அத்தம். கர்த்தரீமுக அத்தம், அலபத்ம அத்தம், விசுமய அத்தம், திரிசூல அத்தம், முட்டி அத்தம், சிகர அத்தம், பூஸ்பரிஷ அத்தம், கடிஅத்தம், ஊருஅத்தம். ஆலிங்கன அத்தம், தனுர் அத்தம், தாடன அத்தம், தியான அத்தம், புஷ்பபுடஅத்தம், தர்மசக்கர அத்தம், பிரசாரித அத்தம் ஆகிய அத்தங்களும் சிற்பங்களில் பயன்படுவனவாகும். உலகியல் தொடர்புடன் மட்டுமல்லாமல் தெய்வத் திருமேனிகளில் ஆன்மநலம் தவழுமாறு ஞானமுத்திரை களையும் யோகமுத்திரைகளையும் இவ்வாறெல்லாம் உள்ளுணர் வால் சிற்பியர் புலப்படுத்தியுள்ளனர். அண்மைக் காலத்தில் தமிழ்நாட்டுச் சிற்பக் கலைமாட்சியை அனைத்துலக மக்களும் மதித்துப் போற்றி வரவேற்கின்றனர்; திருவருள் வழங்கிய தெய்வநலப் பண்பாட்டுக் கொடையெனவே இதனைக் கொள்ளுதல் தகும்.

1 சிற்பச் செந்நூல், பக். 35

12. வார்ப்படக் கலை: விளக்குகள்:

உலோகத் திருமேனிகளைத் **தியான சுலோக** **வுணர்வுடன்** ஆகம அடிப்படையில் வார்த்தெடுக்கும் சிற்பக்கலைஞர்கள், சிற்ப நேர்த்தியுடன் கூடிய **இலட்சுமி விளக்கு, பாவை விளக்கு,** **புருஷாமிருக விளக்கு, கிளைகளுடன் கூடிய குத்துவிளக்கு, சர விளக்கு** முதலிய பல விளக்குகளையும் உருவாக்கி வருகின்றனர். தஞ்சை மாவட்டத்தில் **சுவாமிமலை, பாபநாசம், கும்பகோணம்** முதலிய ஊர்களில் இத்தகைய கலைப்படைப்புக்களைத் தேவைக் கேற்பச் செய்து தருகின்றனர். உலோக விளக்குத் தொடர்பான வரலாற்றுச் செய்திகள் சிலவற்றைக் காண்போம்.

வெண்கலம் அல்லது வேறு உலோகத்தைக் கொண்டு **யவன ரால்** பாவைவிளக்குகள் செய்யப்பட்டன. நிற்கும் நிலையில் அலங்காரப் பெண்ணொருத்தியின் இரு கைகளும் இணைந்து அழகிய அகல்விளக்கை ஏந்தியிருப்பதாக வடிவமைக்கும் விளக் கினை இக்காலத்தில் **பாவை விளக்கு** என்பர். ஆலயங்களில் தெய்வச்சன்னிதிக்கு முன்னர்க்காணலாகும் இவ்வாறான விளக்கு கள் சங்க காலத்திலேயே மக்களிடையே அறிமுகமாகியிருந்ததா என்பது ஆராய்தற்குரியது; எனினும், **'பாவை விளக்கு'** எனும் சொல் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் வந்துள்ளது என்பது சிந்திக்கத்தக்கது. அயல்நாடுகளுடன் கொண்ட பண்பாட்டுத் தொடர்பினால் உருவான பாவை விளக்குகளை, இன்றும் திருக்கோயில்களில் காணலாகும் பாவை விளக்குகளுடன் ஒப்பு நோக்கில் ஆராய்ந்து உண்மை காணலாம்.

அன்ன விளக்கு என்பது, அன்னப் பறவையை நினை வுறுத்தும் வகையில் சிற்ப வேலைப் பாட்டுடன் கூடிய விளக் காகும்; இவ்விளக்கில் **அன்னத்தின் உருவம்** மேல்பகுதியை அலங் கரித்து நிற்கும்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள **திருமறைக்காடு** (வேதாரண்யம்) எனுந்திருத்தலத்தில் கோயில் வாயில் முகப்புக்களில் அலங்கார விளக்குகளை அடுக்கடுக்காக ஏற்றுவதற்கேற்ற அமைப்பினைப்

பல்லாண்டுகளுக்குப் பின்பே உண்டாக்கியுள்ளனர். விளக்குகள் அனைத்தையும் ஏற்றி ஒருசேரக் காண்கையில் அது கண் கொள்ளா வனப்புடன் ஒளி வெள்ளமாகத் தோற்றமளிக்கும். இதனை அழகனுபவமும் பக்தியும் மனத்துட் கொண்ட அடியவர்கள் **'வேதாரண்யம் விளக்கழகு'** எனச் சிறப்பித்துக் கூறுவாராயினர்.

தமிழ்நாட்டில் **சமயபுரம் மாரியம்மன் கோவில்** போன்ற சில இடங்களில் வார்ப்படக் கலையால் உருவாக்கப் பெற்ற **கொடி (கிளை) விளக்குகளைக்** காணலாம். அவை நேர்த்தியான அழகு வேலைப்பாடு உடையவை; அவை தமிழ்நாட்டுக் கலைச் சிறப்பிற்கு நல்ல விளக்கங்களாகத் திகழ்கின்றன.

13. சிற்பம் — அமைப்பு வகைகள்:

சிற்பத்தின் வடிவமைக்கும் நிலையைப் பொறுத்துப் பல வகைகளாகப் பிரிக்கலாம். முன்பக்கம், பின்பக்கம், இடப்பக்கம்' வலப்பக்கம் ஆகியவற்றுடன் கனபரிமாணத்தின் அடிப்படையில் வடிவம் முழுவதையும் சிற்பத்தில் அமைக்கையில் அது **முழுவடிவச் சிற்பம்** எனப்படும். ஆலயங்களில் காணலாகும் முதன்மைத் திருமேனிகளும் உற்சவத் திருமேனிகளும் முழுவடிவச் சிற்பங்களாகும். ஆன்மிகத் தலைவர்கள் சமுதாயச் சீற்பிகள் அரசியல் தலைவர்கள் முதலியவர்களையும் அவ்வாறு முழுவடிவத்துடன் அமைக்கையில் அவையும் முழுவடிவச் சிற்பங்களாகும்.

ஆலயங்களில் தேவகோட்டங்களிலும் கோயிற்சுவர்களிலும் விதானங்களிலும் உத்தரங்களிலும் தூண்களிலும் அமைக்கப்படும் பெரும்பான்மையான சிற்பங்கள் **புடைப்புச்சிற்பம்** எனும் வகையுள் அடங்கும். மாமல்லபுரத்துப் **பகீரதன் தவம்**, திருச்சி மலைக் கோட்டைக் குடைவரையிலுள்ள **கங்காதரர் சிற்பம்**, காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயிலுள் உட்சுவர்களில் காணலாகும் **அரசுவரலாற்றுச் சிற்பவரிசை**, பல கோயில் சன்னிதி (வாயில்) நிலைக்கு மேலே காணப்படும் **கஜலட்சுமி சிற்பம்** போன்றவை புடைப்புச் சிற்பங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

"புடைப்புச் சிற்பங்களை வடிவங்களின் பரிமாணம் கருதி **உயர்புடைப்புச் சிற்பங்கள், தாழ்புடைப்புச் சிற்பங்கள்** எனப் பிரிக்கலாம். தேவகோட்டச் சிற்பங்களை உயர்புடைப்புச் சிற்பங்களாவும், **திருவையாறு தென்கைலாசம் கோயில்** தூண்களிலுள்ள மெல்லிய சிற்பங்களைத் தாழ்புடைப்புச் சிற்பங்களாகவும் கருதலாம்.

புடைப்புச் சிற்பத்தின் வடிவம், செதுக்கப்படுகையில் பொருளின் மேற்பரப்பினும் உயரமாகப் பிதுங்கி நிற்கும். **மேற்பரப்பைக் குடைந்து, வடிவம் அதனினும் தாழ்ந்து இருக்கும்படியாக அமைக்கப்படும் சிற்பம் குடைவுச் சிற்பம்** (Intaglio) எனப்படும். இது புடைப்புச் சிற்பத்திற்கு நேர்மாறானது. **புள்ளமங்கை, திருஆலந்துறை மகாதேவர்கோயில்** ஆகியவற்றில் சிற்றுருவச் சிற்பத் தொகுதிகள் குடைவுச் சிற்பங்களுக்குச் சரியான எடுத்துக்காட்டுகளாகும்.

சிற்பங்களை அளவுமுறையால் மூன்றுவகைப்படுத்துவர். ஏழு தாள அளவு உயரமுள்ள உருவம் **வாமனம்**, எட்டுத்தாள அளவு உயரமுள்ள சிற்பம் **மானுடம்**, ஒன்பது தாள அளவு உயரமுள்ள வடிவம் **தெய்விகம்**"[1] என எழுதிச் செல்லும் அரிய குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.

புராண நோக்கில் முழுஉருவச் சிற்பங்களையும், கழுத்துடன் கூடிய மகுடத் தலைமட்டும் அமைந்த சிற்பங்களையும், இரு திருவடிகள் மட்டும் அமைந்த சிற்பங்களையும், இன்னபிற சிற்பங்களையும் படைத்து மக்கள் பயன்படுத்துவதைக் காணலாம்.

முழுவுருவச் சிற்பங்கள் ஆலயங்களில் பலவாகப் பயன்படுவது கண்கூடு கழுத்துடன் கூடிய மகுடத்தலை அமைந்த சிற்பங்களை **'ரேணுகாதேவி', 'கருமாரியம்மன்'** முதலிய தெய்வங்களைப் படைத்தலில் காணலாம். ஆனால், அவை பெரும்பாலும் மரத்தாலும் சுதையாலும் அமைந்து வழிப்படப் பெறும். இதே **'அரவான்தலை'**யும் துரௌபதியம்மன் கோயிலில் அமைந்து, விழாக்காலத்தில் வழிபடப்பெறும். இரு திருவடிகள் மட்டும்

1. வாழ்வியல் கலைக்களஞ்சியம், தொகுதி ஒன்பது. பக். 82.

அமைந்த சிற்பங்கள், தொடக்கக்காலத்தில் **புத்தமதத்தில்** புத்த பீடிகையாக வழிபடப் பெற்றன. பிறகு, வைணவ ஆலயங்களில் **சடாரி** சார்த்துதல் நோக்கத்தில் உலோகத்தாலான **முடிமீது அமைந்த திருவடிகள்'**, (நகாசு) சிற்பவடிவங் கொண்டு அடியவர்களால் போற்றப்பட்டு வருகின்றன.

14. தெய்வச் சிலைகள் — பண்பாட்டுப் பின்னணி:

பலபொருள் ஒரு சொல்லாகிய **'சிலை'** என்பதற்குக் **'கல்'** என்ற சிறப்புப் பொருள் உண்டு. ஆத்திக மதங்களிலே தெய்வச் சிலைகளை வடிப்பதற்கு அருட் செல்வர்களாகிய யோகியரும் ஞானியரும் சிற்பியரும் தம் உள்ளுணர்வாலும், சமயவுணர்வைப் புலப்படுத்திய கலைக் கற்பனையாலும், நேர்த்தியான — அருளாற்றல் செறிந்த — தெய்வச் சிலைகளை உருவாக்க முனைந்துள்ளனர். சிலை வடிக்கக் கல் தேவையே; எனினும், சிற்பியரின் பக்திக்கும் திறனுக்கும் ஏற்பவே உகந்த கல் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதனை நன்குணர்ந்த **மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**,

''ஆங்கொரு கல்லை **வாயிலிற் படி**யென்
றமைத்தனன் சிற்பி மற்றொன்றை
ஓங்கிய சிலையென் றுயர்த்தினன்''[1]

எனப் பாடிச் செல்வதால் உணரலாம்.

ஆத்திக மதங்களுள் இந்துமதம், சிலைவழிபாட்டில் மிகுந்த நம்பிக்கையுள்ளது. சிலர் தவறுதலாக இந்துமதமும் தெய்வச் சிலை வழிபாடும் தமிழர்களுக்கு வடவர்கள் போதித்ததால் உண்டாகியவை என்பர்; அது தவறு. இது குறித்துத் தத்துவ வித்தகர் **டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன்**, ''இந்துமதம் ஆரியர்களுக்குத் தான் உரியது என்ற எண்ணம் தவறானது. வேத காலப் பண்புகள் கிரேக்கர் கால மதப்பண்புகளுக்கு ஒப்பானவை. **இன்றைய** வழிபாட்டுப் **பண்புகளுக்கு** ஏற்ப **அமைத்துக் கொடுத்தது திராவிடர்கள்** தாம். வானத்தைத் தேவர்களுக்கு உரிய இடமாக வைத்து, பலிகளின் மூலமும்

1. பாரதியார் கவிதைகள், பாஞ்சாலி சபதம், கடவுள் வாழ்த்து

ஓமங்களின் மூலமும் பிரார்த்தனை செய்தது ஆரியர்கள். நாளாவட்டத்தில் 'ஓமம் — பலி' இவற்றுக்குப் பதிலாகப் 'பூசையும் — நைவேத்தியமும்' உருவெடுத்தன. இந்த மாற்றத் துக்குக் காரணமாக அமைந்தவர்கள் திராவிடர்கள். **விக்கிரக வழிபாட்டைக் கொண்டு வந்ததும் திராவிடர்கள் தாம்.** இதை ஆரியர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பலி கொடுத்து மாமிசத் தைப் பிரசாதமாக ஏற்ற ஆரியர்களைக் கனியும் தானியங்களும் கொண்டு பிரசாதம் அளித்துச் சைவர்களாக மாற்றியதும் திராவிடர்கள் தாம். இன்று நாம் கடைப்பிடிக்கும் இந்து மதம் ஆரியப் பண்புகளும் கலந்து உருவான ஒன்றேயாகும்''[1] எனக் கூறிச் செல்வது மிகவும் சிந்தித்துப் போற்றுவதற்கு உரியதாகும்.

15. தெய்வச் சிலைகள் அமைப்பும் காப்பு முறையும்:-

உலகியல் நிலையிலே மக்கள், விலங்கு, பறவை முதலியவற் றின் சிலைகளாயினும் கண்ணுக்கும், கருத்துக்கும் உகந்த வகை யில் கலைநூல் விதிப்படியே அவற்றை அமைக்க எண்ணுவர். அவை சில வேளைகளில் விரிசல்கள் ஏற்பட்டு மூளியாகலாம். அவற்றையும் வரலாற்று நோக்கங் கொண்டவர்கள் பேணிப் பாதுகாத்து வரலாம். ஆனால், தெய்வவுருவச் சிலைகள் அவ் வாறல்ல; அவை மிகத் தூய்மையுடனும் பக்தியுடனும் பாது காப்பைப் பெறுவனவாகப் போற்றப்பெறும்.

''கோயிலில் கருவறையில் நிலையாக நிறுவப்படும் படிமங்களை, மூலப்படிமம், மூலவிக்கிரகம், மூலபிம்பம், மூலபேரம், துருவபேரம் என்றெல்லாம் பெயரிட்டழைப்பர். உற்சவத்திருமேனிகளை அமைக்கையில் மூல விக்கிரகத்திற்கு இயைபாக அமைப்பது நல் லது! அதுதான் வழக்கம். சில வேளைகளில் சமயக் கருத்து களுக்கேற்பச் சிறப்பு அளவுகளிலும் அமைப்பது உண்டு எனக் கூறுவர்''[2]

1. Quotation from, 'Hindc View of Life' ஞானபூமி (திங்களிதழ்), நவம்பர், 1982.
2. மகாமகம் (விழாக்குழுவினர்) மலர், 1992 (சுவாமிமலை எஸ். தேவ சேனாபதி ஸ்தபதி கருத்து)

பொதுவாகக் கலைநூல் விதிப்படி கற்சிலைகளோ, செப்புப் படிமங்களோ நின்ற நிலையில் அமைய வேண்டும் என்பது நியதி. மார்பளவுச்சிலைகளுக்கோ புடைப்புச் சிற்பங்களுக்கோ மூர்த்திகரம் குறைவு என்பது நம்பிக்கை. விக்கிரகங்கள் எனப் போற்றப் படும் தகுதியைப் பெற்றதும், அவை பூசை வழிபாடுகளுக்கு உகந்தவையாக ஆகின்றன. அந்நிலையில் இருந்துவரும் விக்கிர கங்களில் விரிசல் ஏற்பட்டாலோ, பகைவர்களால் மூளியாக்கப் பட்டாலோ அவற்றைப் பூசைக்குக் கொள்ளுதல் கூடாது. கலைத் திறத்தின் எச்சமாக இருக்கட்டுமே என நினைப்பவர்கள் பொருட் காட்சியிலோ (museum), தனிப்பட்டவர்கள் இல்லங்களிலோ அலங்காரப் பொருள்களாக வேண்டுமெனின் வைத்துக் கொள்ள லாம்; அது மிகக் கடுமையான தவறாகாது.

பொதுவாக மக்களிடையே விக்கிரகம் பற்றி நிலவும் எண் ணங்கள் வருமாறு: விக்கிரகம் என்று கருதும்போதே அது குறைகளுக்கு அப்பாற் பட்டதாக அமைய வேண்டும். மக்களின் சமயப் போக்கிற்கேற்ப, விக்கிரகத்தை மிக உயரிய தெய்வநிலை யில் உயர்த்திக் காணவேண்டும். தெய்வச் சிலைகளுக்குப் புரியும் அலங்காரங்களில் வேண்டுமெனின் மாற்றங்கள் தேவைக்கேற்பச் செய்து கொள்ளலாம்; அதனால் மக்களுக்குப் பாதகம் இல்லை. பூசைக்குரிய விக்கிரகங்களையே புதுப்பிப்பதாகச் சொல்லிக் கொண்டு அவற்றில் மிகச்சிறு மாற்றமும் செய்தல் கூடாது. பூசைக்கும் வழிபாட்டிற்குமென விக்கிரகங்களை அமைத்துக் கொண்ட நிலையில், அவற்றை வெறுமனே சிற்பவுருவங்களாகக் கொள்ளுதல் தவறாகும். தெய்வாதீனமாக அவை கீழே விழுந்து உடைந்தோ, சிதைந்தோ போகுமானால் அவற்றைக் கோயில் களினின்றும் அகற்றிவிடுவது நல்லது.

சுருங்கக் கூற வேண்டுமெனின், பரிபூரணமான தெய்வத் திற்கென அமைக்கும் சிலைகள் முழுமையான சிற்ப இலக்கணங் களுடன் இருத்தலே பொருத்தமும் மூர்த்திகரமும் உடையதாகும். எனவே, தெய்வச் சிலைகளில் எவ்விதக் குறையும் இருத்தலா காது; சிறு குறையையும் சமுதாயம் ஏற்காது. வழிபாட்டிலிருந்து வரும் சிலைகள், ஏதேனும் இயற்கைப் பாதிப்பினால் பின்னப் படுமேயானால் அவற்றை அப்புறப்படுத்தி விட்டுப் புதிய சிலை

களை உருவாக்கி வழிபடுவதே நல்லது என்பர். மேலும், வழிபாட்டிற்குரிய சிற்பங்களை அமைக்கும்போது கூடிய வரையில் முழுவுருவத் தெய்வச் சிலைகளைக் கொள்வது நல்லது என்பர். "முழுவுருவங்களை வழிபடுவதால் உத்தமப்பலனையும், புடைப்பு உருவங்களை வழிபடுவதால் மத்திமப்பலனையும், சித்திராபாசம் என்ற படஓவியங்களை வழிபடுவதால் குறைந்த பலனையும் வழிபடுவோர் பெறுவர் என்று சிற்பநூல்கள் இயம்புகின்றன"[1] என்று **சிற்பி வை. கணபதிஸ்தபதி** கூறுவது மனங் கொள்ளத் தக்கது.

16. கற்சிலைகள் நீடித்திருக்கக் கையாளப்படும் உத்திகள்:

கருவறையில் மூலவரை (மூல பிம்பத்தை) அமைப்பது - நிறுவுவது - தொடர்பாக **வைகானச ஆகமம்** ஏனைய ஆகமங்களைக் காட்டிலும் மிக விரிவாகக் கூறியுள்ளது.

ஆலயங்களில் சிலை செய்யக் கற்களைத் தேர்ந்தெடுக்கையில் கருப்பமுள்ள கல் தோடமுடையது என்றும், ஆண் சிலையைச் செய்ய **ஆண்வகைக் கல்லையும்**, பெண்சிலையைச் செய்யப் **பெண்வகைக் கல்லையும்**. தூண், மண்டபம், தளவரிசை முதலியவற்றுக்கு **அலிவகைக் கல்லையும்** சிற்பியர் பயன்படுத்துவர். அவ்வாறு தேர்ந்தெடுக்கையில், கல்லைத் தட்டிப்பார்த்து **மணியோசை போன்ற நாதம்** வந்தால் அந்தக் கல்லை ஆண் தெய்வச் சிலையையும், **தாளம் போன்ற** ஓசையிருந்தால் பெண் தெய்வச் சிலையையும் செய்வார்கள் என்ற குறிப்பும்[2] மனங்கொள்ளத் தக்கது.

தேர்ந்தெடுத்த தூய கருங்கல்லால் அளவு விகிதப்படி சிற்பியரின் தியான வுணர்வுடன் செதுக்கப்படும் சிலையின் அங்கங்களில் **அணிகள், ஆடைகள், படைக்கலன்கள்** முதலியவற்றுக்கு வண்ணம் தீட்டிப் பூசிப்பது **உத்தமம்** என்பர். இதில் சுதை பூசுவது கூடாது; வண்ணம் மட்டுமே பயன்படுத்தப்படும்

1 சிற்பச்செந்நூல், பக். 8

2 தகவல் (விளக்கம்) வழங்கியவர் - சிற்பி காமராசபுரம் எம்.ஜி.ஆர். ரவி (அம்மன் தரிசனம் - திங்களிதழ், பிப்ரவரி, 1992)

அடுத்த நிலையில் இது தொடர்பாக **லெ. சு. அலங்கார பட்டாச்சாரியார்** எழுதுகையில், "சிலா பிம்பத்தில் ¼ அங்குலம் குறையாக அங்கங்களைச் செதுக்கி அதன்மேல் சிப்பிச் சுண்ணாம்பு போன்ற மிருதுவாயும் வெண்மையாயுமுள்ள சுண்ணாம்பை அந்த ¼ அங்குலக் குறைபாட்டிற்குப் பூசிப் பூர்த்தி செய்து அந்தந்த அங்கங்களில் வர்ணம் பூசிப் பூசிப்பது சிலைபிம்பத்தில் **இரண்டாவது** வகையாகும். இதில் துணி சுற்றுதல் கிடையாது.

...சிலா பிம்பத்தின் அவயவங்களைத் தூலமாகச் செதுக்கி அதன் மேல் அந்த அவயவங்களில் **மிருதுவான துணிகளைச்** சுற்றி அதன் மேல் சுக்காங்கல்லைப் பலவிதமான மருந்துச் சரக்கு கல்கம் முதலிய சேர்த்துக் குறைவுபட்ட அங்கங்களைப் பூர்த்தி செய்து **நகாசு வேலையை** அழகாகச் செய்து அந்தந்த இடங்களில் தகுதியான வர்ணங்களைப் பூசிப் பூசிப்பது **மூன்றாவது வகை**யாகும். இதில் துணிபூசுதல் முக்கியமாகும்.[1] என்று குறிப்பிட்டுச் செல்கிறார். இவ்வாறு அமைக்குஞ் சிலை பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் நிலைத்து நிற்குமாகையால் இதனை வைகானச ஆகமம் **'துருவபேரம்'** (நிலைத்து நிற்பது) என்று போற்றிக் கூறும். அடுத்த வகையான **'தாருபிம்பம்'** எனும் **மரச்சிற்பம்** பற்றியும் மூலிகைகளாலான **மண் பிம்பம்** பற்றியும் ஓரளவு விளக்கமாக, அதனதன் தொடர்பான இயலில் காண்போம்.

17. 'தெய்வச் சிலை' விளைவித்த தாக்கம்:

உலகில் பல்வேறு இடங்களிலே மலைப்பாறைகள் காணப்படினும், எல்லாப் பாறைக் கற்களுமே சிறந்த சிலைகள் வடிக்கப் பயன்படும் எனக் கூறவியலாது. 'சிலை' எனும் சொல்லுக்கு **'வில்'** எனப் பொருளுண்டெனினும், சிறப்பாகக் **'கல்'** என்பதே பொருள் எனக் கண்டோம்; ஆயினும், கல்லில், சிறப்பாகக் கருங்கல்லில் வடிக்கப்படுவதற்கே சிலை என்பது பெரிதும் பொருத்தமாகும். **பளிங்கு, சலவைக்கல்** முதலியவையும் சிலை வடிக்கப் பயன்படுமேயானாலும், அவையெல்லாம் கருங்கல்லில் வடிக்கப்படுஞ் சிலைக்கு அடுத்த சிறப்பினையே பெறும்.

1 திருப்பாதிரிப்புலியூர் பாடலேசுவரர் குடமுழுக்கு விழாமலர், 1973, பக். 236

தொன்மைக் காலத்தில் தெய்வநலச்சிறப்புடன் எடுக்கப்பெற்ற நடுகல் என்பதையும் 'தெய்வச்சிலல' எனும் சொல் குறித்துள்ளதையும் நினைவுகூர்க.

கருங்கற்சிலைக்கு அடுத்த கட்டமாகச் **செப்புச்சிலை** முதலிய உலோகச் சிலைகள் சமயவழிபாட்டு நோக்கத்தில் வார்க்கப்பட்டன. கருங்கற்சிலையாயினும், பளிங்குச் சிலையாயினும், செப்புச் சிலையாயினும், மரச்சிலையாயினும், தந்தச் சிலையாயினும், கடுசர்க்கரைச் சிலையாயினும், நவபாஷாணச் சிலையாயினும் தெய்வத் திருவுருவைத் தாங்கி நிற்குமாறு அமைக்கப்படின் அது **தெய்வச்சிலை**யாகும்.

ஆத்திக மதங்களுள், தெய்வச்சிலையாகிய மூர்த்தத்திற்கு மிகப்பெரும் மதிப்பளித்துக் கடவுளாகவே கொண்டாடிப் பக்தியின் உச்சநிலையினை எட்டிப் பிடித்தது **வைணவ மத**மேயாகும். தெய்வச்சிலையைக் கடவுளின் ஒருவகை அவதாரமாகவே கொண்டு '**அர்ச்சாவதாரம்**' எனக் கூறுவது வைணவ மரபாகும்.

திருமாலடியவர்கள் தெய்வச் சிலை மீதுகொண்ட பக்தியார்வங் காரணமாகத் திருமாலையே '**தெய்வச்சிலையார்**' எனவும் வழங்கத் தலைப்பட்டனர். **திருப்புல்லாணி, கிருஷ்ணாபுரம்** முதலிய சில வைணவத் தலங்களில் எழுந்தருளியுள்ள திருமாலுக்குத் **தெய்வச்சிலையார்** என்ற திருநாமம் உண்டு. எடுத்துக்காட்டாக,

"வவ்வித் துழாயதன்மேல் சென்ற தனிநெஞ்சம்
செவ்வி அறியாது நிற்குங்கொல் நித்திலங்கள்
பவ்வத் திரையுலவு **புல்லாணி** கைதொழுதேன்
தெய்வச் சிலையார்க்கென் சிந்தைநோய் செப்புமினே"[1]

எனவரும் ஆழ்வார்அருளிச் செயல் காண்க. தெய்வச் சிலையார் என்பதற்கு **அழகிய தனுசு** (வில்) **உடையவர்** என்று உரைகாரர் உரைவிளக்கங் காண்பதும் இயைபுடன் சிந்திக்கத்தகும்; எனினும் **அர்ச்சை நோக்கிலும் சிந்திக்க இடைந்தரும் வகையில் பாசுரப் போக்கு உள்ளது**

1. பெரியதிருமொழி, 9,4,3

தெய்வச்சிலையாம் அர்ச்சையாக அவதரிப்பவர் என்றோ தெய்வச் சிலையாகிய சாரங்கத்தையுடையவர் என்றோ பொருள்கொள்ளுமாறு அமைந்த திருமாலின் பெயரை மக்களுக்கு வைத்து வழங்கியுள்ளனர் என்பதற்கு இலக்கியங்களில், சிறப்பாகக் கல்வெட்டுக்களில் சான்றுகள் உள்ளன.

சடையவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1203) காலத்துக் கீழ் வேம்பநாட்டுத் திருநெல்வேலிக் கல்வெட்டில் '**கொட்டையூர் தெய்வச் சிலையான் சங்கரநாராயணன்**' குறிக்கப்படுதலையும், சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 1254) காலத்துப் பாண்டிமண்டலத்துக் காலூர்க் கூற்றத்து வளமர் ஆன வேம்ப நல்லூர்க் கல்வெட்டில் '**அரையன்தெய்வச் சிலையான் ஆன எடுத்தகை அழகியான்**' குறிக்கப்படுதலையும், முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி.பி. 1276) காலத்துக் கீழ்வேம்பநாட்டுத் திருநெல்வேலியான குலசேகரச் சதுர்வேதி மங்கலத்துக் கல்வெட்டில், '**கொட்டையூர் ஆளவந்தான் தெய்வச்சிலைப்பட்டான்**' குறிக்கப்படுதலையும், சடையவர்மன் வீரபாண்டியன் (கி.பி.1326) காலத்துப் பாண்டி மண்டலத்து மன்னார்கோவில் கல்வெட்டில் '**இளையாழ்வார் விக்கிரமபாண்டியன் காலிங்கராயரான தெய்வச் சிலைப்பெருமாள்**' குறிக்கப்படுதலையும், கிருஷ்ணதேவராயர் (கி.பி. 16 நூ.) காலத்துப் பாண்டி நாட்டுக் கிருஷ்ணாபுரத்துக் கல்வெட்டில், '**தெய்வச் சிலை முதலியார்**' குறிக்கப்படுதலையும் எடுத்துக்காட்டித் தொல்காப்பியச் சொல்லதிகார உரைகாரராகிய **தெய்வச் சிலையார்** 'கொட்டையூர் ஆளவந்தான் தெய்வச்சிலைப்பட்டன் என்பவரே' என ஆராய்ச்சி முடிவு காண்கிறார் **புலவர் செ. இராசு**[1]. இக் கருத்து மிகவும் சிந்திக்கத் தக்கதாகும். மேலும். ''தெய்வச்சிலையார் என்ற பெயர் பொறித்த கல்வெட்டுகள் அனைத்தும் பாண்டிய நாட்டுப் பகுதியிலே கிடைத்தமையால் இப்பெயர் வழக்கு பாண்டிய நாட்டில் இருந்தமை பெறப்படும்'' என்று கூறும் அவரது கூற்றும் தொடர்ந்து ஆராயத்தக்கதாகும்.

1. தெய்வச்சிலையார் - சிலகுறிப்புகள், இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் ஏழாவது கருத்தரங்கில் படித்த எழுத்துரை, பக். 2,3.

இத்தகைய சிந்தனைகளால் தெய்வச்சிலை எனும் பெயரே மக்களுக்கு இட்டு வழங்கும் வழக்கம் பண்டைக் காலத்திலேயே இருந்துள்ளது; இதனைத் தமிழ்ப் பண்பாட்டுக் குறிப்பாகக் கொள்ளலாம்.

13. தெய்வச் சிலைகளைக் கல்லாலும், செம்பாலும் அமைப்பதன் நோக்கம்:

"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"[1]

எனத் திருவாசகத்தில் ஐம்பூத வடிவாய்ப் போற்றப்பெறும் இறைவனைக் கல்லிலேயும், உலோகத்திலேயும் செய்து வழிபடுவது பொருத்தமுடையதா என வினவலாம்.

சிலைகளைக் கருங்கல்லாலும் செம்பாலும் செய்தால் அவை பல்லாண்டுகள் கெட்டுப் போகாமல் இருக்கலாம் என்பது ஒரு வகையில் பொருத்தமே. ஆனால், அவற்றை நம் மூதாதையர்கள் அறிவியல் முறையில் அமைத்துள்ளனர் என்பது யாவரும் உணரத் தக்க செய்தியாகும். பொன்னும், வெள்ளியும், செம்பைவிடக் கெட்டுப்போகாத உலோகங்களாக இருக்கவும், அவற்றைக் கொண்டு கோயிற்சிலைகளைச் செம்பாலும் ஐம்பொன்னாலும் அமைப்பதற்குப் பல காரணங்கள் உள்ளனவென ஆராய்ச்சி யாளர்கள் கருதுகின்றனர். பொதுவாக மின்சார ஆற்றலைத் தாங்கிச் செல்வதற்காக அறிவியலார் செப்புக் கம்பிகளைப் பயன் படுத்துவது போலப் பிற உலோகங்களைப் பயன்படுத்துவதில்லை என்பதை இயைபுடன் சிந்தித்துப் பார்க்கலாம்.

நம் மெய்ஞ்ஞானியர் பல நூற்றாண்டுகளாகவே திருவரு ளாகும் மின்சார ஆற்றலையுணர்ந்து பயன்கொள்ளும் வகையில், செம்பினால் சிலைவார்த்துத் திருக்கோயில்களில் மூர்த்தியாக மூர்த்திகரமேற்படச் செய்துள்ளனர் என்பது நினைக்கத்தக்கது.

1 போற்றித் திருவகவல், 137 - 141

கருங்கல்லினது சக்தி, செம்பினது சக்தியைவிடப் பன்மடங்கு மிகுதியாகும் என்பதைச் சமயஞானியர் கண்டுள்ளனர். **தவத்திரு மதுரை ஆதினகர்த்தர்** அவர்கள் செம்பிலும் கருங்கல்லிலுமுள்ள ஆற்றல்களை ஒப்பீடுசெய்து ஆராய்ந்து வியத்தகு உண்மைகளை விண்டுரைத்துள்ளார். அவை வருமாறு;

''கல்லில் பஞ்ச பூதங்களின் தன்மையும் விசேடமாக அடங்கி யிருந்து வெளிப்படுவது போல் மற்ற உலோகங்களில் இல்லை...

1. வெளியில் உள்ள சப்தத்தைத் தன்னகத்தே இருந்து ஒடுக்கிப் பின்னர் வெளிவிடும் ஆற்றல் ஆகாயத்திற்கு உண்டு. அதே தன்மை கல்லுக்கும் உண்டு. கல் மண்டபங்களிலும் மலைப் பிரதேசங்களிலும் சப்தங்கள் எதிரொலி ஆவது போல வேறு எந்த இடங்களிலும் கிடையாது என்பதை உணர்ந்து கொள்ள லாம்.

2. கல்லிலே காற்று உண்டு என்பதைக் ''கல்லினுள் தேரைக் கும்'' என்ற தொடரினை ஆய்வதிலிருந்து தெரியலாம். காற்று இல்லாத இடத்தில் எந்தச் சீவராசியும் உயிர்வாழ முடியாது; கல்லுள் தேரை வசிக்க வேண்டுமானால் கல்லிலே காற்று இருக்க வேண்டுமல்லவா?...... காற்றும் உள்ளது.

3. கல்லிலே நெருப்புத் தங்கியிருப்பது போல் வேறு எந்தப் பொருளிலும் இல்லை. அதனால்தான் பழங்காலத்தில் நெருப்பு உண்டாக்க வேண்டுமானால் இரு கற்களை ஒன்றொடொன்றாய் உராயச் செய்து நெருப்பினை உண்டாக்கி உபயோகித்தார்கள். மரக்கட்டைகளைக் கடைந்தாலும் நெருப்புவரும்; இருந்தாலும், கல்லில்தான் நெருப்பின் சக்தி மிகுதியாக இருக்கிறது. அதிலும் சிக்கிமுக்கிக் கற்கள் என்பவை அந்த வகையில் மிகுந்த ஆற்றல் உடையவை...... ஆகவே கல்லில் நாம் மூன்றாவதாகச் சொல்லிய நெருப்பும் உண்டு.

4. மேற்கூறிய மூன்று ஆற்றல்களை உடையதாக இருந் தாலும், கல்லானது தனி இயல்பான குளிர்ந்த நிலையிலிருந்து மாறாமல் இருக்கும். இரு கற்களை ஒன்றோடொன்று உராயச் செய்தால் நெருப்பு உண்டான போதிலும் சாதாரணமாகக் கல்

லைத் தொட்டால் அது தண்ணீர் போன்று தண்ணென்று இருப்பதை எல்லோரும் அனுபவத்தில் உணரலாம்.

5. இனி ஐந்தாவதாகக் கல்லில் நிலம் என்ற கடைசிபூதம் இருக்குமா? என்பதைக் கேட்கவே வேண்டாம். கல்லே நிலத்தைச் சேர்ந்ததுதான் அல்லவா? கல்லிலே ஐம்பூதங்கள் இருப்பதற்கும் ஆண்டவனுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று சிலர் கேட்கலாம். ஆண்டவனே ஐம்பூதங்களில் கலந்துதான் இருக்கிறார்...''[1]

மேற்கண்ட ஆராய்ச்சிக் கருத்துகளால் தமிழகத்துச் சமய ஞானியர் பன்னெடுங் காலமாகவே தம் உள்ளொளியாற்றலால் கருங்கல்லிடத்தும், செம்பிடத்தும் தெய்வநல மின்னாற்றல் தொழிற்படுவதையுணர்ந்து, அவற்றைக் கொண்டு விக்கிரகங்களைச் செய்து, மந்திரபூர்வமாகவும் தெய்வநல ஆற்றலை அவற்றில் ஏற்றியிருக்கிறார்கள் என்பது தெளிவாகும்.

இவ்வாறு தெய்வநல ஆற்றல் தொழிற்படுதற்கேற்பச் சிற்பியர் கருங்கற்களைக் குறிப்பான சில இடங்களிலேயே மிகவும் பொறுப்புடன் தேர்ந்தெடுக்கின்றனர். ''விக்கிரகம் வடிப்பதற்குச் சிவனாக இருக்கக்கூடிய கல் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பட்டுமலைக்குப்பத்தில் தான் இருக்கிறது. இதை நாங்கள் 'உயிர்க்கல்' என்று குறிப்பிடுவோம்''[2] என்று சிற்பி கணபதி ஸ்தபதியார் குறிப்பிட்டுச் செல்லுதல் காண்க.

19. இயற்கையன்னை வடித்திடுஞ் சிற்பங்கள்;

இயற்கையில் கிடைக்கும் கல், மரம், தந்தம், உலோகம் முதலியவற்றைக் கொண்டு சிற்பங்களை வடித்து இன்புறுகிறோம். பொதுவாக மானுட முயற்சியால் சிற்பங்கள் உருவாகக் காண்கிறோம். ஆனால், இயற்கையன்னையே உருவாக்கும் சிற்பங்கள் ஆங்காங்கே காணக் கிடைத்தலும் உண்டு. இத்தகைய நோக்கில் சிலவற்றைக் காண்போம்.

1. பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா - சிறப்பு மலர், 1973, பக், 74 - 75
2, அம்மன் தரிசனம் - திங்களிதழ், ஜனவரி, 1992

பதினேழு நாள்கள் மட்டுமே சூரியவெளிச்சம் காணத்தக்க நிலையில், **கமாண்டர் ஐலண்ட்** (Commander island) எனப் பெயரிய தீவு உள்ளது. இந்தத் தீவு ஒரு வகையில் காரணப் பெயர் கொண்டது. ''இங்குள்ள **மலைப்பாறை ஒரு போர்வீரர்** (சிறப்பாகத் தலை) **போலக் காட்சி தருவதால் இந்தத் தீவு காமண் டர்** தீவு என்ற பெயரைச் சேர்த்துக் கொண்டது. இந்த உரு வத்தைச் செதுக்கிய சிற்பி வேறு யாருமல்ல; காலம் காலமாக வீசிய காற்றும் பெய்த மழையும்தான்''[1] என இந்தத் தீவு பற்றிக் கூறப்படும் விளக்கம் உலக நோக்கில் மனங் கொள்ளத் தக்கதாகும்.

தெய்வ வழிபாடு நடைபெறும் **திருவையாறு, மயிலாடுதுறை, கும்பகோணம்** (கும்பேசுவரர்), **திருக்கன்றாப்பூர்** முதலிய பல திருத்தலங்களில் காணப்பெறும் கருவறைமூர்த்திகள், சிவலிங்கங் கள் - இயற்கையாகவே **தான் தோன்றிகளாக** - மதிக்கப்பெறு கின்றன; அவை சமயமரபுடன் அருள்விளக்கங் கொண்டுள்ளன. **சுயம்பு** எனும் 'தான்தோன்றி' நிலை காரணமாகத் **'தான் தோன்றீச்சுவரர்'** எனத் திருப்பெயரிட்டழைப்பதும் கடவுளுக்குப் பொருத்தமாகவே உள்ளது. கல்லே சிவலிங்கமாகத் தோற்ற மளிப்பது ஒரு புறமிருக்கப் **பனிப்பாறையே சிவலிங்கமாக** உரு வெடுத்துப் பலகோடி மக்களை ஆர்வமுடன் வழிபடச்செய் கின்ற சிறப்பினை வடநாட்டு இமயமலையில் **'அமர்நாத்'** எனும் திருத்தலத்தில் கண்டு மகிழலாம்.

இயற்கையாகத் தோன்றும் **மரங்களின் பருத்த அடிப்பகுதி களுள்** சில, மக்களின் நாட்டத்தைக் கவரும் வண்ணம் **பிள்ளை யார் போன்ற சில தெய்வங்களை நினைவுபடுத்தும் வகையில் உருவத் தோற்றங் கொண்டுள்ளன.** அவை மக்களால் வழிபடப் பெறுஞ் சிறப்பினைப் பல இடங்களில், சிறப்பாகச் சிற்றூர்ப் புறங்களில் காணலாம். இயற்கையன்னையே சிற்பியாக அமைந்து, மக்களைச் சமயநோக்கில் சிந்திக்குமாறு செய்கிறாளோ என்னவோ? எது எவ்வாறாயினும் பண்டு தொட்டே தமிழ் மக்கள் மரங்களின் அடியில் தெய்வங்களை வைத்து வழிபட்ட பழக்கம், மரத்தின் அடிப்பகுதியில் இயற்கையாக அமைந்த சில

1 கல்கண்டு (இதழ்), 27-9-1984

தோற்றங்களையும் தெய்வ வடிவங்களாகவே நினைக்க வைத்துள்ளது. மக்களின் சமயவுணர்வின் அடிப்படையில் மலர்ந்த தெய்வநலக் கற்பனையை இக்கால அறிவியல் கண்கொண்டு அளப்பதால் பயனில்லை. சமயப் பண்பாட்டு அடிப்படையில் உணரலாகும் ஒருவகை மனப்பக்குவமே இதற்குத் தேவையெனலாம்

20. வரலாற்று நோக்கில் சிற்பங்களும் படிமங்களும்:

தமிழ்நாட்டு வரலாற்றினை நன்கு புரிந்துகொள்வதற்குத் திருக்கோயில்கள் நிரம்பப் பயன்படுகின்றன என்பது வெள்ளிடைமலை. திருக்கோயில்களிலே காணப்படும் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்கள், அரசர்கள் பொறித்து வழங்கிய செப்பேடுகள், திருக்கோயில்களில் காணலாகும் கட்டட அமைப்புமுறை ஆகியவற்றைச் சிற்ப அமைதி (அமைப்பு), படிமப்பாங்கு போன்றவற்றுடன் ஒப்பிட்டு நோக்கி ஆராய்வதும் வரலாற்றுக்கு மிகத் துணைபுரிந்து வருகிறது.

தொல்பொருளியல் வல்லுநர்கள் ஒரு சிலையை அல்லது ஒரு செப்புப் படிமத்தைப் பார்த்ததுமே இஃது இக்காலத்தது எனக் கூறி அதற்குரிய அடிப்படையான காரணங்களையும் கூறுதலைக் காணலாம்.

பல்லவ மன்னர்கள் காலத்தில் கற்சிற்பங்களும் செப்புத்திருமேனிகளும் ஆலய நோக்கில் தேவைக்கேற்பக் குறைந்த எண்ணிக்கையில் அமைக்கப்பட்டன. பிற்காலச் சோழர்கள் காலம் சிற்பக் **கலைக்குச் சிறப்பாக** வார்ப்படச் சிற்பக்கலைக்குப் பொற்காலமாக அமைந்தமையால் **தெய்வக் கற்சிலைகளும்,** ஏராளமான செப்புத் **திருமேனிகளும், அருளாளர்கள் அரசகுடும்பத்தினர்** படிமங்களும் (பிரதிமங்களும்) அமைக்கப்பட்டன. **பிற்காலப் பாண்டியர் காலத்தில்** ஓரளவு கற்சிலைகளும் செப்புத்திருமேனிகளும் செய்யப்பட்டன. **விசயநகர - நாயக்க மன்னர்கள் காலத்தில்** ஏராளமான செப்புத்திருமேனிகளும், அருளாளர்கள் அரச குடும்பத்தினர் படிமங்களும் அமைக்கப்பட்டன; பலவற்றிற்குக் கல்வெட்டுச் சான்றுகளும் உள்ளமை வரலாற்று நோக்கில் சிந்திக்கத்தக்கது.

நாயக்கர் காலச் சிலைகளில் காணப்படும் **வடிவழகு** மிகவும் கவர்ச்சியுடையது; எனினும், சோழர்காலச் **சிலைகளில்தான் தெய்வ நலஅழகு** மிகுதியும் உள்ளது என அறிஞர்கள் கருதுகின்றனர். எப்படியோ தெய்வநல உள்ளுணர்வுத் தூண்டுதலால் பலரும் சிலைகளை உருவாக்கிக் கொண்டே வந்தனர். தமிழ் நாட்டிலுள்ள கோயில்களைச் சிற்பக்களஞ்சியங்களாக ஆக்கிய பல்லவர்களுக்கும், சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும், முத்தரையர்களுக்கும். விசயநகர மன்னர்களுக்கும், நாயக்க மன்னர்களுக்கும், சேதுபதிகள் போன்ற குறுநில மன்னர்களுக்கும் தமிழ்ப் பெருமக்கள் பண்பாட்டு அடிப்படையில் என்றும் நெஞ்சார்ந்த நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

20.1. சிற்பங்களும் இலக்கிய மலர்ச்சியும்:

சிற்பநூல்களை உருவாக்குதற்கு முன்னரே தம் இயல்பாகச் சிற்பியர் பல சிற்பங்களை அமைத்தனர் என்பர்; அஃதாவது, சிற்பியர் தம் **உள்ளுணர்வால் - கற்பனைத் திறத்தால்** - அமைத்த சிற்பங்களை (சிலைகளை)க் கண்டு, சிற்ப இலக்கணங்களை முறைப்படுத்திச் சிற்ப ஞானமுடையவர்கள் சிற்பநூல்களைச் செய்ய முற்பட்டனர் என்பர். இஃது ஒருபுறமிருக்கச், சிற்பங்களே காப்பியம் முதலிய இலக்கியங்களைப் படைக்கவும் துணைநின்றன என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கல், மரம், தந்தம் முதலியவற்றாலான சிலைகள் அழகுற உருவாக்கப்பட்டன; அல்லாமலும், பிற்காலச் சோழர்களின் பொற்காலத்தில் ஒவ்வொரு சோழமாமன்னன் காலத்திலும் கோயில்களின் விரிவாக்கம் நடைபெற்று வந்தது; கோயில் தொடர்பான விழாக்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் ஏற்பட்டன. அந்நிலையில், **'சுவாமி புறப்பாடு'** எனும் **நோக்கத்தில் அழகுச் செப்புத்திருமேனிகள் பல செய்யப்பட்டன.**

சோழர் காலத்தில் வாழ்ந்த சமயப்பெரும்புலவர்களான கம்பரும், **சேக்கிழாரும்** பல திருத்தலங்களைக் காணும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்றிருந்தனர்.

ஆழ்வார்களால் **மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்யதேசங்களில்** மக்களின் நெஞ்சங்களைக் கவர்ந்தவை செப்புத் திருமேனி

கள்; அவற்றைக் **கம்பநாட்டாழ்வார்** கண்டு அனுபவித்துத் தம் சமய அழகனுபவங்களை **இராமாயணக்** காப்பியத்தில் சொற் சித்திரங்களாகத் தீட்டி மகிழ்ந்தார். நாயன்மார்களால் - சிறப் பாகத் தேவாரம் பாடிய மூவர் பெருமக்களால் - **பாடல் பெற்ற திருத்தலங்களில்** காணப்பட்டன செப்புத்திருமேனிகள். அவற் றின் கொள்ளையழகில் **சேக்கிழார்** ஈடுபட்டுத் தம் அழகனுபவங் களைத் **திருத்தொண்டர் புராணத்தில்** சொற்சித்திரமமகத் தீட்டி மனநிறைவு கொண்டார். ஆகவே, கம்பரும் சேக்கிழாரும் அவரவர் காலத்துச் செப்புத்திருமேனிகளில் ஈடுபாடு கொண்டி ருந்தனர் என்பது பொருத்த முடையதேயாகும்.

கம்பர் பற்றிச் சில ஆராய்ச்சிக் குறிப்புகளை இந்தக் கோணத்தில் காண்போம். **'கம்பனின் பார்வையில் செப்புத் திருமேனிகள்'** என்ற கட்டுரைத் தலைப்பில் **திரு.சீ. வசந்தி** (சென்னை) எழுதியுள்ள சுவையான சில செய்திகள் சிந்திக்கத் தக்கவை.

''கி.பி 10-ஆம் நூற்றாண்டில், இராமர், சீதை, இலக்கு மனர், அனுமன் ஆகியோரின் அழகிய செப்புத் திருமேனிகள் வடக்குப் பனையூர், பருத்தியூர், திருவதிகை, திருச்சேறை, கப்பலூர் மற்றும் இராமேசுவரம் ஆகிய இடங்களில் காணப்படு கின்றன. இவை குறித்துக் கலைவரலாற்று ஆசிரியர்கள் பல ஆராய்ச்சிகளைச் செய்துள்ளனர். ஆனால், இச்செப்புத்திரு மேனிகளின் அழகில் சொக்கித்தான் **கம்பர்** தமது இராமாவ தாரத்தில் இராமர், சீதை, இலக்குவன், மற்றும் அனுமனின் வடிவை அழகிய சொற்களால் கவிதையாக வடித்தாரா என் பதற்குச் சில மயக்கந்தரும் இராமாயண வரிகளைத் தூவல் களாகப் படிக்கும் போதே ஏற்படுகிறது''[1] என்று கூறி, இராமனது எழில்தோற்றத்தைப் புலப்படுத்தும் வகையில் ''இந்திர நீலமொத்து இருண்ட குஞ்சியும், சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்''[2] எனவருஞ் செய்யுளையும், ''தோள் கண்டார் தோளே கண்டார்''[3] எனவருஞ் செய்யுளையும்

1. ஸப்தகிரி (திங்களிதழ்). ஏப்ரல், 1995
2. கம்பராமா. பால. மிதிலைக் காட்சிப்படலம், 56
3. கம்பராமா. பால. உலாவியற்படலம், 18

எடுத்துக் காட்டுகின்றார்; எடுத்துச் சீதையின் அழகையும், இலக்கு வன் எழில் தோற்றத்தையும், அனுமன் பணிவார்ந்த தோற்றத்தை யும், இராமாயணத்திலிருந்து எடுத்துக்காட்டிச் செல்கிறார்; ஆராய்ச்சி நோக்கில் சில கருத்துகளையும் புலப்படுத்துகின்றார். மேலும், இது தொடர்பாகச் சிந்திக்கும் வகையில் முடிவுரையில், "இவ்வாறு கம்பரின் இராமகாதையில் நீந்தித் திளைத்ததால், சிற்பி, இச்செப்புத்திருமேனிகளை வடித்தாரா அல்லது சிற்பிகளின் கைவண்ணத்தினைக் கண்டு மயங்கியே தமது இராமாயணத்தில் இராமர், சீதையின் அழகினைப் புகழ்ந்து பாடியுள்ளாரா என்று மனத்தில் ஐயம் ஏற்படுவது இயற்கையே. பொதுவாகக் கம்பர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படுவ தால், கி.பி 10-ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட செப்புத்திரு மேனிகளைக் கண்டதாலேயே, கவிதை ஊற்றுப் பெருக் கெடுத்துத் தமது பாடல்களில் இராமர், சீதை, இலக்குவனார் மற்றும் அனுமாரின் அழகைப் போற்றியுள்ளார் எனக் கொள் வதில் தவறேதுமில்லை"[1] எனக் குறிப்பிடுவது மேலும் ஆராய்ச் சியைத் தூண்டும் வகையில் உள்ளது.

இவ்வாறே சில செப்புத் திருமேனிகள், புலவர்களின் நெஞ்சத்தைக் கவர்ந்து இலக்கிய மலர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்துள்ளன. எடுத்துக் காட்டாகப் பொன்னனையாள் தான் முன்னின்று அமைத்த திருப்பூவணநாதர் சிலையில் - செப்புத்திரு மேனியில் - கொண்ட அழகனுபவத்தையும், அந்த அழகனுபவத் தூண்டுதலால் புலவர் திருப்பூவணநாதருலாவில் இந்தக்குறிப்பினை வைத்துப் பாடுதலையும் காணலாம்.

21. தெய்வப்படிமங்கள் - திருக்கோலங்கள்:

ஆடற்கலையமைப்புக்களும், யோகாசனக் கோலங்களும், இயற்கையாகவே மானுடத் தோற்றங்களிலே காணலாகும் நிலை இயக்க அமைதிகளும், கலைதேர் மக்களின் அழகனுபவத்துடன் ஒன்றியுள்ளன. அவற்றின் வாயிலாகச் சமயவுண்மைகளை உணர்த்தும் நோக்கத்தில் தெய்வப் படிமங்களை நேர்த்தியாக அமைக்கத் தொடங்கினர் சிற்பியர்.

1. ஸப்தகிரி (திங்களிதழ்), ஏப்ரல், 1995.

தெய்வப்படிமங்களைப் பொதுவாக **நின்ற** கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும், கிடந்த கோலத்திலும் அமைப்பர். திருமால் தன் அவதாரக் கோலத்திலும் அர்ச்சை நிலையிலும் இம் மூவகைக் கோலத்திலிருப்பதைக் காணலாம். ஆனால், சிவன் பெரும்பாலும் **நின்ற** கோலத்திலும் **அமர்ந்த** கோலத்திலும் இருத்தலே மரபாகும். இதனை நன்கு ஆராய்ந்த அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி, புத்தர் சிலைகள் **நின்ற** கோலத்திலும், கிடந்த கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும் அமைக்கப் பெறுதலைக் கண்டு, அவை திருமால் திருமேனிகளுடன் ஒப்பு நோக்கத் தக்கவை என்பதையும், சமணர் சிலைகள் **நின்ற** கோலத்திலும் அமர்ந்த கோலத்திலுமே காணப்பெறுதலைக் கண்டு, அவை சிவன் திருமேனிகளுடன் ஒப்பு நோக்கத்தக்கவை என ஒப்பீட்டு நோக்கில் கூறியுள்ளமை[1] மனங்கொள்ளத்தக்கதாகும்.

படிமங்களின் திருக்கோலங்களாகிய ஆசனங்களை ஆராய்ந்துள்ள **சிற்பி கணபதி ஸ்தபதி**, "தெய்வப் படிமங்களின் திருக்கோலங்கள் ஆசனங்கள் எனப்படும். அத்தகைய ஆசனங்கள் ஐந்து வகைப்படும். அவை முறையே 1. ஸ்தானகம் (நின்ற கோலம்) 2. **ஆசனம்** (அமர்ந்த கோலம்) 3. **சயனம்** (கிடந்த கோலம்) 4. ஸ்தானாசனம் (நின்ற கோலச் சார்புடைய பிற அமைதிகள்) 5. **சயனாசனம்** (கிடந்த கோலச் சார்புடைய பிற அமைதிகள்) என்பன ஆகும். இவை ஒரு மூர்த்தி, கலைப்பாங்குடன் தோன்றும் நிலையாகும்.

இவற்றை ஐந்தொழிலென்றும், பஞ்ச கிருத்தியம் என்றும் சிற்பநூல் (விசுவகர்மீயம்) கூறும்"[2] என விளக்கிச் செல்வது சிந்தித்துப் போற்றுதற்குரியதாகும். ஒவ்வொரு கோலத்திலும் பல வகைகள் உண்டு. ஸ்தானகம் என்பதில் **வைதஸ்திக ஸ்தானகம்**, அர்த்த வைதஸ்திக ஸ்தானகம், ஆகிய உட்பிரிவுகள் கொண்ட சமபாதஸ்தானகம் உண்டு. **ஆசனம்** என்பதில், சுகாசனம், பத்மாசனம், லளிதாசனம், மகாராஜ லீலாசனம், **வீராசனம்**, உத்குடி காசனம், **யோகாசனம்**, சுவஸ்திகாசனம், **கருடாசனம்**,

1. கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழா மலர், பக் 101.
2. சிற்பச் செந்நூல், பக், 57

ஆகிய வகைகள் உண்டு. **சயனாசனம்** என்பதில் **சமசயனம், அர்த்தசயனம்** ஆகிய வகைகள் உண்டு.

இவற்றின் விளக்கங்களைச் **'சிற்பச் 'செந்நூல்'** எனும் நூலில் கண்டு தெளியலாம்; மேலும், எந்த எந்தக் கோலங்கள் எந்த எந்த மூர்த்தத்துக்கு ஏற்புடையன என்பதையும் புரிந்து கொள்ளலாம். இவற்றையெல்லாம் காண்கையில், தமிழகத்தே சிற்பியர் எவ்வாறெல்லாம் சிற்பக்கலைப் பண்பாட்டை வினைத் திறத்துடனும் சாத்திர மரபுடனும் வளர்த்து வந்துள்ளனர் என்பது அறியலாகும்.

21.1. நடனச் சிற்பங்கள்:

தமிழ்நாட்டின் தொன்மையான கலைப்பண்பாட்டினைப் புலப்படுத்துங்கருவிகளுள் நாட்டியச்சிற்பமும் ஒன்றாகும். நாட்டிய நூலில் குறிக்கப்பெற்றுள்ள 108 நாட்டியக் கரணங்களை நேரிற்கண்டு தெளியுமாறு துணைநிற்பவை கோயில்களில் காணலாகும் நாட்டியச் சிற்பங்களாகும். கல்லெல்லாம் காவியம் பாடும் வண்ணம், இத்தகைய சிற்பங்களை உருவாக்கத் தமிழ் நாட்டுச் சிற்பியர் அரும்பாடுபட்டுள்ளனர். தொன்மையான சங்க காலத்திலே மக்களிடையே ஆடற்கலை அறிமுகமாயிருந்தும், அதன் கூறுகளை - நாட்டியக் கரணங்களைச் - சிற்பமாக்கும் உத்தியோ, சூழலோ அக்காலத்தில் கொண்டிருந்தனர் என்பதற்கான சான்று கிடைக்கவில்லை.

தமிழ்நாட்டுப் பண்டைய மாமன்னர்கள் ஆடற்கலைக்கு ஆதரவு தந்து கொண்டிருந்தாலும், பல்லவ மாமன்னர்கள் தாம் சிற்பங்களிலும் ஆடற்கலைக் கூறுகளைப் புலப்படுத்த முற்பட்டவர்கள். **இராசசிம்ம பல்லவன்** எடுப்பித்த **காஞ்சிக் கயிலாசநாதர் கோயில்** கருவறையின் வெளியே இருபுறங்களிலும் சிவதாண்டவச் சிற்பங்கள் பழுதுபடாமல் இன்றளவும் நல்ல நிலையில் காணப் படுகின்றன.

தஞ்சைப் பெரிய கோயில் விமானத்து முதல் தளத்தில் உட்பக்கத்தே 108 நாட்டியக் கரணங்களைச் சிற்பத்தில் கொணர முயற்சி மேற்கொண்டான் **முதலாம் இராசராசன்**; ஆனால், அவை முற்றுப் பெறவில்லை: 81 நாட்டியக் கரணங்களே காணப்படு

கின்றன; ஏனைய கற்பலகைகள் வெறுமனே (கரணச் சிற்பமின்றி) அன்றிலிருந்து இன்று வரையில் உள்ளன.

ஆடல்வல்லானின் அற்புதத் திருக்கூத்து அல்லும், பகலும் நடைபெறுகின்ற **தில்லைச் சிற்றம்பலவன்** கோயிலில், பாண்டிய மன்னரும், சோழமன்னரும் பிறரும் போட்டி போட்டுக்கொண்டு நடனச் சிற்பங்களை வடித்துள்ளனர். எல்லாக் கோபுரவாசலின் உட்பக்கங்களிலும், பாண்டிய நாயகம் கோயில் தூண்களிலும் பொதிகைகளிலும் சிறப்பாக அமைந்துள்ள நடனச் சிற்பங்களைக் காணலாம்.

விருத்தாசலம் பழமலைநாதர் கோயிலிலும் 108 நாட்டியக் கரணங்களைக் கண்டு மகிழலாம்.

கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயிற்கோபுர அடித்தளச் சுவரைச் சுற்றியும் நாட்டியக் கரணங்கள் காணப்படுகின்றன; உள்ளே மண்டபத்தூண்கள் சிலவற்றிலும் நாட்டியச் சிற்பங்கள் உள்ளன.

திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் சேசராயர் மண்டபம் (குதிரை மண்டபம்) முதலிய சில மண்டபங்களிலும் நடனச் சிற்பங்கள் காணப்படுகின்றன. மேலும், தமிழகக் கோயில்கள் சிலவற்றிலும் இத்தகைய நடனச் சிற்பங்கள் உள்ளன.

நாட்டிய மரபுகளைப் போற்றி நிற்கும் நாட்டிய ஆசான்களுக்குத் தெளிவு தரும் வகையிலே இந்த நாட்டியச் சிற்பங்களெல்லாம் இக்காலத்திலும் இருந்து வருகின்றன; இவை தமிழ் நாட்டின் நற்பேறேயாகும்.

21.2. சிற்பத்தில் ஆடுபவரும் பெண், ஆட்டுவைப்பவரும் பெண்

பொதுவாக மகளிர் நாட்டிய மாடுகையில், நட்டுவனாரும் இசைக் கருவிகளை இயக்குபவர்களும் ஆடவர்களாகவே இருப்பர். சிலப்பதிகாரத்தில் **மாதவி** அரங்கேறுகையில், யாழாசிரியன், குழலாசிரியன், தண்ணுமையாசிரியன் ஆகியோர் ஆடவர்களாகவே இருத்தலை **இளங்கோ வடிகள்** சித்திரிப்பதால் தெரிந்துகொள்ளலாம்

ஆடவரே யல்லாமல் மகளிரும் தாளமிட்டு நட்டுவாங்கம் செய்யவும், தோலிசைக் கருவி இயக்கவுமான ஒருவகை நடைமுறையும் இருந்தமை பற்றி, நார்த்தாமலை விஜயாலய சோழீச்சரத்தில் காணப்படும் நடனச் சிற்பங்களால் அறிந்து கொள்ளலாம். கலைத்திறனாய்வாளர் டாக்டர் இரா. கலைக்கோவன், ''விஜயாலய சோழீச்சரத்தில் காணப்படும் சிற்றுருவக் கரணத் தொகுதிகள் இரண்டிலுமே, ஆடல்மகள் சுவஸ்திகக் காலமைப்புடன் திகழ்கிறார். வடப்புறச் சிற்பத்திலுள்ள நாட்டிய நங்கை தன் வலக்கையைக் கடக முத்திரையிலும், இடக்கையை அர்த்த ரேசிதத்திலும் அமைத்துக் கால்களைச் சுவஸ்திகமாக்கி, சுவஸ்திகக்கால்களில் இடப்பாதத்தைச் சூசியிலும், வலப்பாதத்தை அக்ரதல சஞ்சாரத்திலும் நிறுத்தி அழகு பொலிய ஆடுகிறார். செவிகளில் பனையோலைக் குண்டலங்கள், உடல் நேர்நிலையில் இருக்க, முகம் வலப்புறமாய்த் திரும்பி, மெய்ப்பாடுகளின் வெளிப்பாட்டில், முழுவதுமாய் மலர்ந்துள்ளது. ஆடலுக்கேற்ற ஆடையமைப்பு; கழுத்தணிகளும் கையணிகளும் ஆடலின் வேகத்தில் சற்றே நிலை குலைந்தாற் போல் காட்டப்பட்டுள்ளன. இந்த ஆடலரசியின் நாட்டிய வேகத்திற்குத் தாளமும் மேளமும் தவறாமல் உதவுமல்லவா? வலப்புறம் தாளத்தோடு ஒரு பெண், ஆடலரசியைப் பார்த்தபடியே இரண்டு கைகளையும் மார்பருகே குவித்துத் தாளங்களைத் தட்டி, இனிய நாதத்தினை இதமாய் எழுப்புகிறார். சிற்பத்தைப் பார்த்தால் அவரும் ஆடியவண்ணமே தாளமிசைப்பது போல் தோன்றுகிறது. இடப்புறம் மேளமிசைப்பதும் பெண்தான். இடுப்பிலணைத்த இந்தத் தோல் கருவியை வலக்கை முழக்குகிறது; இடக்கையோ பிடித்துள்ளது. இவரும் ஆடலரசியைப் பார்த்தபடியே இசையெழுப்புகிறார். பெண்களே தாளமும் மேளமும் இசைத்து, ஆடல் நிகழ்ச்சி நடத்தி வந்தனர் என்பதற்கு இந்தச் சிற்பம் இனிய தொரு சான்றாகும்''[1] என்று கலையனுபவச் சுவையுடன் எழுதிச் செல்வது காண்க.

பல ஆலயங்களுக்குச் சென்று நடனச் சிற்பங்களை ஊன்றி நோக்கி ஆராய்ந்தால் இத்தகைய அரும்பெறற் செய்திகள் பலவாகக் கிடைக்கும் என்பது உறுதி.

1. அமுதசுரபி தீபாவளிமலர், 1989, பக். 266-267

22. சிற்பக்கலைச் சார்பில் 'நகாசு' வேலை:

சிற்பக்கலையில் சிலைவடிக்கக் கல்லைச் செதுக்குவதோ, உலோகத்தை வார்த்தெடுத்துச் செதுக்குவதோ மிக நுட்பத்துடன் செய்ய வேண்டுவதாகும். ஆனால், **நகாசுவேலை** என்பது, உலோகத் தகட்டில் கனபரிமானம் உண்டாக்கிய வண்ணம், காண்போருக்கு வார்த்தெடுத்த சிற்பம் போலச் செய்யும் மிகமிக நுண்ணிய வேலைப்பாடாகும்; அயல் நாட்டினரும் போற்றும் அரும்பேறற் கலைத்திறனாகும்.

கோயிலைப் பொறுத்தவரையில் பலபொருள்கள் நகாசு வேலையுடன் அமைக்கப்பட்டு வருகின்றன மிகச் சிறப்பாகக் **கோயில்** என்று போற்றப்பெறும் **திருவரங்கத்தில்** வைணவர்களால் **'பிரணவாகார விமானம்'** அமைக்கப்பட்டுள்ளது. அவ்விமானம் நகாசு வேலைப்பாட்டுடன் கூடியதாகும். அதே போலச் சைவர்களால் 'கோயில்' என்று போற்றப்பெறும் **தில்லைப் பொன்னம்பலத்தில்** விமானம் பொற்றகட்டால் வேயப்பட்டுள்ளது. எனினும், **நகாசு வேலைப்பாடு அவ்வளவாக இல்லை.**

வசதியுள்ள சில பெருங்கோயில்களில் கருவறைக்கு முன்னுள்ள **வாயில்** (அருகாலும், கதவுகளும், படிகளும்), பித்தளையாலோ வெள்ளியாலோ, சிற் சில இடங்களில் பொன்முலாம் பூசப்பெற்ற செம்பாலோ, நகாசுவேலைப்பாட்டுடன் இருத்தலைக் காணலாம். எடுத்துக் காட்டாகத் **தில்லை நடராசர் சன்னிதியில் திருக்களிற்றுப் படியும்** அதனையொட்டிய **வாயிலும், கனகசபையில் முன்முகப்புக் கதவுகளும்** காண்க. அவை யாவும் நகாசு வேலைப் பாட்டுடன் கூடிய வெள்ளித்தகட்டால் போர்த்தப் பெற்றவையாகும்

இத்தகைய நகாசு வெலைப்பாடமைந்த வாயில்களைச் சில கோயில்களில் கண்ட பிறமதத்தினரும் தம் வழிபாட்டு இடங்களில் நகாசுடன் கூடிய வாயில்களை அமைக்க முற்பட்டுள்ளனர். எடுத்துக்காட்டாக **நாகூர் மீரான்சாயபு தர்காவில்** மூன்று வாயில்கள் நகாசு அமைந்த **வெள்ளித்தகட்டால்** போர்த்தப் பெற்றிருத்தலைக் காண்க.

இந்துமதக் கோயில்களில் மக்களின் சமயவுணர்வை வளப் படுத்தும் வகையிலே பல விழாக்கள் கொண்டாடப்பெறும். விழாத் தொடக்கமாகக் கொடியேற்றப் பயன்படும் **கொடித் தம்பத்தில்** போர்த்தப்படும் உலோகத்தகடுகளில் கண்கவர் நகாசு வேலை இடம் பெறுகிறது.

உற்சவத்திருமேனிகள் அமர்ந்து உலாவருதற்கேற்ப அழகு மிகு வாகனங்கள் அமைந்திருக்கும். வசதியுள்ள கோயில்களில் **வெள்ளிவாகனங்களும் தங்கவாகனங்களும்** இருத்தலைக் காண லாம்; அவற்றில் நகாசு வேலைப்பாடு அமைந்திருக்கும். சிறப் பாக வைணவக் கோயில்களில் **தங்கக் கருடாழ்வார்**, சைவக் கோயில்களில் வெள்ளியாலும் தங்கத்தாலுமான **இடபவாகனம், பூதவாகனம்**, மயில்வாகனம் முதலியவையும், **கயிலாச வாகனம்**, பொதுவாக **வெள்ளிரதம், தங்காதம், பல்லக்குப்பீடம்** முதலிய பலவும் நகாசு வேலைப்பாட்டுடன் கூடியவை.

ஆலயங்களில் **திருவாசி** எனும் ஓர் அமைப்பு, தெய்வச்சிலை களுக்குத் தோற்றப்பொலிவை மிகுதியாக்கத் துணைநிற்கும்; இதுவும் நகாசுவேலைப்பாட்டுடன் கூடியதாகும். எளிய கோயில் களில் மரத்தாலான சிற்பத் திருவாசியையும், வசதியுள்ள கோயில்களில் நகாசு உலோகத்தகடு போர்த்திய திருவாசியையும் காணலாம். சமயத்திருமடத்து அதிபர்களும் தாம் அமர்ந்திருக்கும் இருக்கைக்குப் பொலிவூட்டும் **வண்ணம் திருவாசிகளைப் பொருத்திக்கொண்டு** அருட்காட்சி வழங்குவர்.

பெருமாள் கோயில்களில் அடியார்களுக்குச் சார்த்தும் **சடாரியில்** நகாசுவேலை சிறப்பாக அமைந்திருக்கும். பொது வாகக் கோயில் அணிகலன்களிலும், தட்டு முதலிய பூசைப் பொருள்களிலும் நகாசுவேலையைக் காணலாம் அடியார்கள் அணியும் **கௌரிசங்கம்** எனும் அணியில் முன்னும் பின்னுமுள்ள முகப்புக்களில் நுண்ணிய நகாசு வேலையைக் காணலாம்.

சமய இயலிலேயல்லாமல் உலக இயலிலும் சில அணிகலன் களிலே நகாசுவேலை பயன்பட்டு வருகிறது. சிலம்பு, தண்டை, ராக்கடி, நாகர், திருகுப்பூ, ஜிம்கி, மேகலை முதலியவற்றில்

அமைந்துள்ள நுண்ணிய நகாசுவேலை மிகவும் போற்றத்தக்கது. கைத்திறனால் புலப்படுத்த வேண்டிய கலைநுட்பம் வரப்பெற்ற கலைஞர்கள் இக்காலத்தில் அருகிவருகின்றனர். இந்நிலையிலே, நகாசுவேலைத்திறத்தை அச்சாக ஆக்கிக் கொண்டு கலைப் பொருள்களைச் செய்து வருகின்றனர். இவ்வாற்றான் தஞ்சா வூர்த்தட்டு உலகில் சிறப்பினையும் போற்றுதலையும் பெற்று வருகிறது.

23. பல்லவர் காலச் சிற்பங்கள் — சிற்பக்கலை முன்னோடி நிலை:

தமிழ்நாட்டுச் சிற்பக்கலையை உலகம் புகழ்தற்கு முன்னோடியாக வழிவகுத்துத் தந்த பெருமை **மாமல்லபுரத்துச்சிற்பங் களைச்** சாரும். பல்லவர்கள் தாம் ஆர்வமுடன் கட்டிய கோயில் களைச் சிற்பக் களஞ்சியங்களாக்கினர் என்பதை நேரில் காண் பவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்வர். கட்டடக்கலையுடனும் சார்த்திக் காண வேண்டிய சிற்பங்கள் சிலவற்றை முன்னரே கண்டோம்; சிறப்பு நோக்கில் மேலும் பலவற்றைக் காண்போம், பல்லவர் சிற்பங்களின் படிநிலை வளர்ச்சியை ஈண்டு ஓரளவு முதற்கண் காண்போம்.

மகேந்திரவர்ம பல்லவன் காலத்துக் குடைவரைக் கோயில்கள் தூண்களைக் கொண்ட மண்டபங்களாகத் தோற்றமளிக்கும். (தூண்போதிகைகள் உருண்டு காடிகள் வெட்டப்பட்டவை அவன் மகன் காலத்தியவை) மலைகளின் அடிவாரத்திலோ உச்சியிலோ அல்லாமல் இடைப்பகுதியில் மகேந்திரவர்மன் குடை வரைக் கோயில்களை அமைத்தான். "மாமண்டூரிலும் மகேந்திர வாடியிலும், சிங்கவரத்திலும், நாமக்கல்லிலும் பெருமாள் கோயில்களைக் குடைந்தெடுத்தான். சீயமங்கலத்திலும், பல்லா வரத்திலும், வல்லம், தளவானூர், திருக்கழுக்குன்றம, திருச்சி ராப்பள்ளி முதலிய இடங்களிலும் சிவாலயங்களைக் குடைந் தான். **மண்டகப்பட்டில் மும்மூர்த்தி ஆலயங்களை** அமைத்தான். எனவே, அவனைச் **சேதகாரி** (கோயில் அமைத்தவன்) என்றதில் வியப்பில்லை"[1] என்று பேராசிரியர் **வி.டி. செல்வம்** தருங்குறிப்

1. தமிழகம் வரலாறும் பண்பாடும், மதுரை பப்ளிஷிங்ஹவுஸ்; 1976, பக். 127-128.

பினைக் காண்க. **நாமக்கல் மலைக் கோயில்** (அரங்கநாதர் மலைக்கோயில்) மகேந்திரன் அமைத்தவையேயாகும். இங்கு இருக்கும் **பள்ளி கொண்ட பெருமாள்** திருவுருவம் சிறந்த சிற்ப வேலைப்பாடு கொண்டது. இக்கோயில் முன்மண்டபத்துக்கு வெளியிடம் மூங்கிலால் செய்த தாழ்வாரத்தைப் போல மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட கலைத்திறம் கொண்டது.

மகேந்திரவர்மனை அடுத்து அவன் மகன் முதலாம் **நரசிம்ம வர்மன்** குடவரைக் கோயிலின் வளர்ச்சியில் உச்சக்கட்டத்தை எட்டும் வண்ணம் திருச்சி, திருவெள்ளறை, குடுமியாமலை, திருமயம் முதலிய இடங்களில் குடவரைக் கோயில்களை உருவாக்கினான். **மாமல்லனாகிய** தன் பெயரால் மகாபலிபுரத்தை **மாமல்லபுரம்** எனவும் வழங்குமாறு செய்து அங்குக் குடைவரைக் கோயில்கள் சிலவற்றைக் கண்டான், மெலும், தனிப்பாறையைக் குடைந்து **ஒற்றைக்கல் கோயில்களையும்** அமைத்தான். இத்தகைய கோயில்கள் தேர் (இரதம்) போன்று தோற்றமளித்தமையின் தருமராசன் **தேர், பீமசேனன் தேர், அருச்சுனன் தேர், திரௌபதி தேர், சகாதேவன் தேர்** என வழங்கப் படுகின்றன. **சகாதேவன் தேர்** போன்றே அமைக்கப்பட்ட விமானம் **திருத்தணிகை** வீரட்டானேசுவரர் **கோயிலில் காணலாம்.**

ஒற்றைக்கற் கோயில்களாகிய பஞ்சபாண்டவர் தேர்களுக்கு அருகே சிவபிரான், துர்க்கை, இந்திரன் ஆகியவர்களுக்குரிய ஊர்தியான **நந்தி, சிங்கம், யானை** ஆகியவை கற்சிலை வடிவில் நிற்றலைக் காண்க.

பாறைகளின் மீது புராணக் கதைகளைச் சிற்பங்களாக வடிக்கச் செய்த முதல் பெருமை மாமல்லனுக்கு உண்டு, **கோவர்த்தன மலையைக் கண்ணன் ஏந்தி நிற்குங்காட்சி, கங்கைக் காட்சி** அல்லது **கங்கையவதாரம் (பகீரதன் தவம்)** ஆகிய இரண்டும் மிகச்சிறப்புடையவை, பகீரதன் தவம் என்பதை **அருச்சுனன் தவம்** என்றும் கூறுவர். பாறைச் சிற்பங்களுள் அருச்சுனன் தவம் ஓர் ஆற்றின் நீரோட்டத்தையே காட்டுகிறது. **நாகர்** மகிழ்ச்சியுடன் நீராடுதல், **பிராமணன் ஒருவன்** நீர்க் குடத்தைத் தோள் மீது சுமந்து செல்லுதல், நீர் அருந்த **மான்**

ஒன்று ஆற்றின் அருகே வருதல். ஆற்றுக்கு மேற்புறம் இரு அன்னப்பறவைகள் நீரில் வீழ்ந்து நீராட நிற்றல், கீழ்ப்புறம் ஒரு பெருமாள் கோயிலைச் சுற்றிலும் முனிவர் பலர் அமர்ந்து தவம் புரிதல், பூனை ஒன்று பின்னங்கால்களில் நின்று கொண்டு முன்னங்கால்களைத் தலைக்கு மேல் சேர்த்து யோகநிலையில் இருப்பது போல் காட்சியளித்தல், அதனைக் கண்டு எலிகள் அச்சம் நீக்கி அருகில் வந்து பணிதல் போன்ற காட்சிகள் அனைத்தும் இமயமலையடிவாரத்தில் கங்கைக்கரைச் சமயப் பண்பாட்டுக் காட்சியை ஒருவகையில் நினைவுபடுத்துபவையாக உள்ளன என அறிஞர்பெருமக்கள் கருதுகின்றனர்.

மாமல்லனுக்குப் பிறகு வந்த அவன் மகன் **பரமேசுவரவர்மன்** மாமல்லபுரத்தில் **கணேசர் கோயிலையும் இராமானுஜர் மண்டபத்தையும்** அமைத்தான். அவனே தருமராசர் தேரின் மூன்றாம் அடுக்கை முடித்தான்[1] என்பர் புலவர் சொ. முருகேசனார்.

பல்லவன் இராசசிம்மன், மாமல்லபுரத்தில் **கடற்கரைக் கோயிலைக்** கற்களையடுக்கிக் கட்டுமான முறையில் கட்டி முடித்தவன். **காஞ்சிக்கயிலாசநாதர் கோயிலையும் காஞ்சி ஐராவதேச்சுரர் கோயிலையும் பனைமலைக் கோயிலையும்** சிற்ப எழிலுடன் கட்டிய பெருமையைக் கொண்டவனும் அவனே. அவனைப் பின்பற்றியே இரண்டாம் பரமேசுவரவர்மன், காஞ்சியில் **வைகுண்டப் பெருமாள் கோயில்** (பரமேச்சுரவிண்ணகரம்) திருவதிகையில் **வீரட்டானேசுவரர் கோயில்** ஆகியவற்றையும் கட்டுமானக் கோயில்களாக எடுப்பித்தான்.

பொதுவாகப் பல்லவ மன்னர்கள் சமய ஈடுபாட்டுடன் கோயிற் பண்பாட்டினைப் போற்றிக் காக்கக் கோயிலெடுப்பித்தும், கோயிலில் ஓவியக்கலையுடன் சிற்பக் கலையையும் குடிகொள்ளச் செய்தும் தனிப்பெருமை ஈட்டிக் கொண்டவர்கள். சாளுக்கியர் தொடர்பு, மாமல்லபுரச் சிற்பங்களில் கலைத் தாக்கம் கொண்டுள்ளது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கணிப்பு "வாதாபியில் புலிகேசியின் சிற்றப்பன் **மங்களேசன்** அழகுற அமைத்த குகைக்கோயில்கள் பல உண்டு. அவை

1. பல்லவர் ஆட்சி, பக். 65.

வேலைப்பாடு கொண்டவை; கண்ணையும், கருத்தையும் ஈர்ப்பவை. அவற்றைக் கூர்ந்து நோக்கிய **நரசிம்மவர்மன்** மாமல்லபுரத்தில் அவைபோல அமைத்துள்ளான் என்பது பொருந்தும். சாளுக்கியர் வளர்த்த கலைகளைக் கண்டு மகிழ்ந்த நரசிம்மன், அவற்றை அமைத்த வல்லுநரை அழைத்துச் சென்று மாமல்லபுரத்தில் அமைத்தான் என்று எண்ணத்தக்க விதமாக ஒருமைப்பாடு காணப்படுகிறது''[1] எனப் **புலவர் சோ. முருகேசனார்** எழுதிச் செல்வது காண்க.

சுருக்கமாகப், பல்லவர் காலத்துக்குடைவரைக் கோயில்களில் காணலாகும் **சுவர்ச்சிற்பங்களும்** மாமல்லபுரம் **பாறைச் சிற்பங்களுமே** பிற்காலத்தில் வழிவழிவந்த மாமன்னர்கள் கட்டிய கோயில்களில் அமைத்த **சுவர்ச் சிற்பங்களுக்கு** முன்னோடிகளாக அமைந்தன. ஆலய நுழைவாயிலுக்கு மேலே செதுக்கப்படும் சிவகணங்களும், கொடுங்கைக் கூடுகளில் தோன்றும் மனித முகங்களும், மாமல்லபுரத்துக் குகைக்கோயிற் சிற்பங்களைப் பின்பற்றியவையே என்பது[2] **டாக்டர் ஆர். வெங்கட்ராமன்** போன்ற வரலாற்று அறிஞர்களின் கருத்தாகும்

24. பாண்டியர் காலப் பண்டைய சிற்பங்கள்:

பல்லவ மன்னர்கள் கற்சிற்பக் களஞ்சியங்களுக்கு முன்னோடிகளாக விளங்கியதை வரலாறு கூறும், அவர்களைப் பின்பற்றிப் பாண்டிய மன்னர்களும், சோழமன்னர்களும், விஜயநகர-நாயக்க மன்னர்களும் தம் கலையார்வத்தைப் புலப்படுத்தும் வகையில் குடைவரைக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் ஆகியவற்றைச் சிறந்த சிற்பக் களஞ்சியங்களாகவே ஆக்கியுள்ளனர்.

பாண்டியர்கள் கி.பி 6,7,8 ஆம் நூற்றாண்டுகளில் எழிலும் ஏற்றமும் மிகுந்த சிற்பங்களைக் குகைக் கோயில்களில் அமைத்துள்ளனர். **திருப்பரங்குன்றம், திருமய்யம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி** முதலிய இடங்களில் காணலாகும் குடைவரைச் சிற்பங்கள் அக்காலத்திய சிற்பியரின் கலைத்திறனை நன்கு

1. பல்லவர் ஆட்சி, பக். 57-58
2. இந்தியக் கோவில் கட்டிடக்கலை வரலாறு, பக். 65

புலப்படுத்துவனவாக உள்ளன. எடுத்துக்காட்டாகக் **குன்றக்குடி சிற்பங்களைச்** சிறிது காண்போம்.

குன்றக்குடிக் கீழ்க்கோயிலின் ஒரு பகுதியில் மேற்கேயிருந்து கிழக்கே வரிசையாக 1. **சுந்தரேசுவரர் கோயில்**, 2. **அண்ணா மலையார் கோயில்** *(மாசிலீச்சுரம்)*, 3. **மலைக் கொழுந்து நாதர் கோயில்**, 4. **சண்டேசுவரர்** கோயில் ஆகிய குடைவரைக் கோயில்கள் உள்ளன.

''**சுந்தரேசுவரர், அண்ணாமலையார், மலைக் கொழுந்து நாதர் ஆகிய மூன்று குடைவரைக் கோயில்களிலும்** சிவலிங்கங்கள் மூன்றும், தூண்களும், கருவறைகளும், புடைப்புச் சிற்பங்களும் மலையிலே குடைந்து உருவாக்கப் பெற்றவை. வண்ணவேலைப் பாடுடைய **புடைப்புச்சிற்பங்கள்** வியக்கத்தக்க கலையழகுடன் மிளிர்கின்றன. **மலைக் கொழுந்து நாதர்** கோயிலில் மட்டும் மேற்புறம் தெற்குக் கோடியிலிருந்து **பாலமுருகன்**, **துவாரபாலகர் திருமால், கருடாழ்வார், நான்முகன்**, சிவபெருமான், **மகிடா சுரமர்த்தனி, சங்கரநாராயணர், ஆடல்வல்லான், துவாரபாலகர், வலம்புரி விநாயகர்** ஆகிய பதின்மூன்று புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. இவற்றுள் **துவாரபாலகர்கள், வலம்புரி விநாயகர்**, திருமால், நான்முகன், சிவபெருமான், மகிடாசுரமர்த்தனி, சங்கரநாராயணர் ஆகிய ஏழும் சிறப்பானவை. **ஆடல்வல்லான்** கண்ணையும், கருத்தையும் கவரும் கலையழகுடன் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. நடுவிலுள்ள அண்ணாமலையார் கோயிலில் **துவாரபாலகர், திருமால், வலம்புரி விநாயகர் சிவலிங்கம்** ஆகிய நான்கு புடைப்புச் சிற்பங்கள் உள்ளன''[1] என்று **மரு. பரமகுரு** எழுதிச் செல்வதைக் காண்க.

மலைக்கொழுந்து நாதர் குடைவரைக் கோயிலுக்குக் கிழக்குப் புறத்தில் பாறையில் சிறிய அறை போன்று செதுக்கப்பட்ட இடத்தில் புடைப்புச்சிற்பமாகச், **சண்டேசுவரர்** திருமேனியைக் காணலாம். பதுமாசனம் இட்டு யோகநிலையில் படிமமாக அமைக்கப்பட்டுள்ள **சண்டேசுவரர்**, தமிழ்நாட்டில் பிற கோயில்களில் இல்லாத புதுமை கொண்டது என்பர். சண்டேசுவரருக்கு

1. குன்றக்குடி சண்முகநாதப் பெருமான் திருக்குட நீராட்டு நினைவு மலர் - 1979,

வலப்புறம் தனித்து மழுவாயுதம் பொறிக்கப் பட்டுள்ளமை வியத்தகு சிறப்பாகும்.

மேலும், மலைக்கொழுந்துநாதர் குடைதளியில் வீரர்கள் தம்மைப்பலியிடுங் காட்சியுடன் கொற்றவை அர்த்த நாரீசுவரர், குடமுழா முதலிய இசைக்கருவிகள் முழங்க ஆடும் சிவனுடைய தாண்டவம் முதலிய சிற்பங்கள் ஆறடி உயர அளவுகளில் அமைக்கப்பட்டுள்ளன.

குன்றக்குடி மலைக்கோயிலில் உள்ள மூலவர் ஆறுமுகங்கள் பன்னிருகைகள் ஆகியவற்றுடன் கோலாகலமாக எழுந்தருளி யுள்ளது, காணவேண்டிய எழுச்சிமிகு காட்சியாகும். குன்றக்குடிக் கோயிலில் பலர் திருப்பணியுள்ளது. மருதுபாண்டியர் திருப் பணிகள் பிற்காலத்தவை; எனினும் அவை போற்றத்தக்கவை. சண்முகநாதன் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்குக் குல தெய்வமாக விளங்குவதால், அவன், 'செட்டிமுருகன்'' எனுஞ் சிறப்புப் பெயரால் அழைக்கப் பெறுகிறான்,

25. சிற்பியர் திருப்பெயர்கள்:

தமிழ்நாட்டில் கோயிற்பண்பாட்டை உருவாக்க மாமன்னர் களும் பெருங்கொடைவள்ளல்களும் சமய ஈடுபாடு கொண்ட பிற அருளாளர்களும் பெரிதும் பாடுபட்டுள்ளனர் என்பது உண்மையே. வியத்தகு ஆலயங்களையும் உலகம் வியக்கும் அழகிய சிற்பத்திருவுருவங்களையும் அமைத்திட அவர்களுக்கு மிகவும் துணைநின்றவர்கள் - எண்ணத்தைச் செயற்படுத்தியவர் கள் - கலைக்கற்பனையும் வினைத்திறனுங் கொண்ட சிற்பியர்கள் என்பதும் இணைத்துச் சிந்திக்கவேண்டிய செய்தியாகும். ஆனால் இந்தியநாட்டில், சிறப்பாகக் கன்னட நாட்டில் சிற்பியர்களின் பெயர்கள் அறிமுகமான அளவிற்குத் தமிழ்நாட்டுச் சிற்பியர் களின் பெயர்கள் ஏனோ அறிமுகமாகவில்லை! எனினும், சிற்சில பெயர்களாவது தெரிவது போற்றற்குரியது.

''மகேந்திரவர்மனின் மகன் நரசிங்க போத்தரையன் (நரசிம் மன்) பல்லவச் சக்கரவர்த்தியாக முடிசூடினான். இவ்வரசனது காலத்திலேதான் லலிதாலயன் சிற்ப அரசனாக விளங்கினான்.

பல்லவரது ஆட்சிக்கு அடங்கிய இடங்களில் நடைபெற்றுவந்த திருப்பணிகளையெல்லாம் மேற்பார்வை செய்து வந்த சிற்பியும் இவனே. இவனது சிற்பத்திறங்களை மகாபலிபுரத்திலும் பிற இடங்களிலும் காணலாம். **அவந்திசுந்தரி கதை** என்னும் காவியமும் லலிதாலயனைப் பற்றிக் கூறும்''[1] என **ஆர். எஸ். உருக்குமிணி** எழுதிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

நரசிம்மவர்மனின் தந்தை **மகேந்திரவர்மனுக்குச் சித்திரகாரப் புலி, இலலிதாலயன்** முதலிய சிறப்புப்பெயர்கள் உண்டு. தன் தந்தையை நினைவுகூரும்வகையில், **இலலிதாலயன்** எனும் பெயரிட்டே தன் தலைமைச் சிற்பியை அழைக்கத் தொடங்கியதும் அந்தச் சிற்பியின் இயற்பெயர் வழங்காமற் போயிற்றோ என நினைக்கத் தோன்றுகிறது.

பிற்காலச் சோழர்களுள் **முதலாம் இராசராசன்,** சிற்ப எழிற் கூடமாகிய **தஞ்சைப்பெருவுடையார் கோயிலைக் கட்டுவித்தான்.** அதனைச் சிறப்புடன் அமைக்கத் துணைபுரிந்த சிற்பியர்களாகிய **பெருந்தச்சர்கள்** பெயர்கள் சில கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றன. **அவர்களுள்** தலைமைப் பெருந்தச்சர் பெயர் **இராசராச பெருந்தச்சன்** என்பதாகும்.

திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயில் பல்லவர் காலத்திலிருந்தே சிறப்புடன் இருந்து வருங்கோயிலாகும். இது பற்றி **S. R. பாலசுப்பிரமணியம்** எழுதுகையில், ''இப்பழைய கோயில் **முதலாம் இராசேந்திரன்** காலத்தில் சதுரானன பண்டிதரின் வேண்டுகோளுக்கிணங்கி அரசனுடைய ஆணையால் **'ரவி'** என்ற **நேர வீர சோழ தச்சனால்** முத்தள விமானமுடையதாகக் கருங்கல்லால் புதுப்பிக்கப்பட்ட செய்தி இங்குள்ள கல்வெட்டொன்றிலுள்ள வடமொழிச் சுலோகத்தால் உணரப்படுகிறது''[2] என்று குறிப்பிட்டுச் செல்வது காண்க.

26. சிவலிங்கத் தோற்றம்:

பண்டைய காலத்திலிருந்து மக்களிடையே சமயவுணர்வு மலர்ந்து வளர்ந்து வருகின்ற சூழலில், வேதமும், தோத்திரமும்.

1. இந்தியச் சிற்பங்கள், பக். 42
2. சோழர் கலைப்பாணி, பக். 133.

சாத்திரமும், சரித்திரமும் எழலாயின. சமயவுணர்வின் அடிப் படையில் காலத்தின் தேவையாக எழுந்தன கோயில்கள்; அவற் றுக்குத் தெய்வச் சிலைகளும், படிமங்களும் அமைக்க வேண்டிய இன்றியமையாமையை யுணர்ந்தனர் மக்கள். கோயில் காரண மாக அமைந்த மூர்த்தியும், மூர்த்தி காரணமாக அமைந்த கோயிலும் என வரலாறுகள் பலவாறாக உண்டு.

சிலைகளையும், படிமங்களையும் அமைக்கையில் சாத்திரங் கள் (ஆகமங்கள்) தேவைப்பட்டன. சாத்திரங்கள் சமயச் சாத்தி ரங்களாகவும், சிற்பச் சாத்திரங்களாகவும் அமைந்து, தெய்வத் திருமேனிகளை அமைக்கத் துணைநின்றன.

முதற்கண் சமயச் சாத்திரம் பற்றிச் சிறிது காண்போம். சைவ சித்தாந்த நூலில் **பதி பசு பாசம்** எனும் முப்பொருள் பேசப்பெறும். பதியாகிய இறைவன், பாசங்களினின்றும் உயிர் களைத் திருவருளால் மீட்டுத் தன்னுடன் ஒன்றுவித்துக் கொள் கிறான் என்பர்; இதனையே, பசுவாகிய உயிர், ஆணவம் கன்மம் மாயையாகிய மும்மலங்களினின்றும் நீங்கி இறைவனையடை கிறது என்றும் கூறுவர். எவ்வாறோ இறைநாட்டங் கொண்டு உயிர் உய்தியடைய வேண்டியது என்பது நியதியாகின்றது. அத்தகைய இறைவன், உயிர்களின் பக்குவத்திற்கேற்பப் பொது வாக அருவநிலையிலும், உருவநிலையிலும், அருவ-உருவ நிலை யிலும் தோன்றி அருள்புரிகிறான் என்பர். அவ்வாறான மூவகை நிலைகளுள் அருவ-உருவ நிலையினை (அமைப்பினை)க் கொண்டதே **'சிவலிங்கம்'** ஆகும்.

கல்கண்டைக் காண்கையில் புறத்தோற்றம் **உருவம்** எனவும், அதனைச் சுவைத்துக் காணும் தித்திப்பு **அருவம்** எனவும் கொண் டால், கண்ணிற்படும் இறைத்திருமேனி **உருவம்** எனவும், இறை வனை அகக்கண்ணால் அனுபவிப்பது **அருவம்** எனவும் எண்ணத் தோன்றும். தத்துவச் சிந்தனையாக உணர வேண்டிய குறிப்பு இது.

புராண அடிப்படையில் சிவலிங்கத் தோற்றம் பற்றிக் காண் போம்.

முன்னொரு காலத்தில் **திருமாலும் பிரமனும்** தங்களைத் தாங்களே முழுமுதற்கடவுள் — **பரம்பொருள்** — என்று செருக்குற்று நின்றனர்; **''நானேகடவுள்''** என்று இருவரும் இகலுற்ற நிலையில், பரம்பொருளாகிய **சிவபெருமான் சோதிப்பிழம்பாகக் காட்சியளிக்கலானான்**. சோதியாகிய அனற்பிழம்பு விண்ணிலும் பாதளத்திலும் — எல்லா அண்டங்களிலும் — பரவி நின்றது. **அதன் அடிமுடி காணத் திருமாலும் பிரமனும், முறையே வராகம் (பன்றி) அன்னம் ஆகிய உருக்கொண்டு பெருமுயற்சி மேற்கொண்டனர்.** திருமால், சோதிப்பிழம்பின் அடிகாண இயலாமல் தன் தோல்வியை ஒப்புக் கொண்டான்; பிரமனோ ஆணவங் காரணமாக உண்மையறிவு மறைக்கப் பட்ட நிலையிலே **'முடி'** யைக் கண்டு விட்டதாகப் பொய் கூறினான். (நூலறிவினால் சிறந்தோங்கியவர்கள் தத்துவங்களைக் கரைத்துக் குடித்து விட்டுச் சிலநேரங்களில் தாங்கள் சொல்வது தான் சரியெனப் பொய்களும் சாதிப்பது உண்டு என்பது இதன் உட்கிடை) ஆனால் இறைவனை இப்படியெல்லாம் பொய்கூறி அடைந்து விட இயலாதல்லவா? இத்தகைய சூழலில் அனற்பிழம்பை — அக்கினித்தம்பத்தைப் — பிளந்து கொண்டு உக்கிர வடிவத்துடன் சிவபெருமான் காட்சியளித்தான். பொய்மைக்குப் பாடம் புகட்டக் கருதியதால் பிரமனுக்கு எங்கும் கோயிலுண்டாகாத வாறு சபித்தான். பதைபதைத்த பிரமன் தன் தவறுணர்ந்து இறைவனிடம் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொண்டான். திருமாலும் பிரமனும் மீண்டும் சிவன் ஆற்றலையும் பெருமையையும் பாடித் துதித்துப் பூசித்து வழிபடலாயினர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று, இறைவன் மக்கள் வழிபாட்டிற் குகந்த வண்ணம் **இலிங்க வடிவ மாகக்** காட்சியளித்தான். இதுவே இலிங்கத் தோற்றத்திற்கு வாயிலாகுமென்று **இலிங்கபுராணம்** எடுத்தியம்பும். இந்தப் புராண நிகழ்ச்சிக்கு அரண்கோலும் வகையில் சில இலக்கியச் சான்றுகள் வருமாறு:

''அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல
முடிகண் டேன்என்றயன் பொய்மொழிந் தானே''[1]

1. திருமந்திரம், 359

"மாலொடும் மறையோதிய நான்முகன்
காலொடும் முடிகாண்பரி தாயினான்"[1]

"திருமா லடிவீழத் திசைநான் முகனேத்த
பெருமா னெனநின்ற பெம்மான் பிறைச்சென்னி"[2]

"அரனார் அழலுருவாய் அங்கே அளவிறந்த
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ"[3]

"தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாய கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்த படிவிரித்தார்"[4]

இவ்வாறான சிறப்பிற்குரிய தலம் புராண அடிப்படையிலே **திருவண்ணாமலை** எனக்கொண்டு, அந்த நோக்கில் **கார்த்திகை மாதத்தில் தீபத்திருவிழா** மிக ஆர்வத்துடன் அங்குக் கொண்டாடப்படுகின்றது. இந்நிலையில் சிவ பரம்பொருளை **'மூலக் கொழுஞ்சுடர்'** எனத் திருவண்ணாமலையில் வைத்துப் போற்றுவதே சைவமரபும் முறையுமாகும். ஆனால், திருவாலவாயாகிய **மதுரையில்** எழுந்தருளியுள்ள சொக்கலிங்கத்தை 'மூலக் கொழுஞ்சுடர்' என்று **கல்லாடம்** போற்றி நிற்கிறது.

'செம்பொன்னாலும், மணிகளாலும் செய்த முடியினையுடைய திருக்கோயிலின் கண் தனிச்சிறப்புடன், ஒளியாத குளிர்ந்த அருள்மிகு அங்கயற்கண்ணம்மையுடன் எழுந்தருளும் எங்கும் நிறைந்த முதன்மையுடைய கொழுவிய ஒளிப்பிழம்பாகிய இறைவன்' எனும் பொருண்மையில் **கல்லாடத்தில்,**

"செம்பொன்மணி குயிற்றிய சிகரக் கோயிலு
ளமையாத் தண்ணளியுமையுட னிறைந்த
ஆலவா யுறைதரு **மூலக் கொழுஞ்சுடர்**"[5]

1. திருமுறை. 5.35,9
2. திருமுறை. 18.4.9
3. திருவாசகம், திருத்தோணோக்கம், 12
4. பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம், 78
5. கல்லாடம், 28, 8 - 10

என வருதல் காண்க. உலகிலுள்ள ஏனைய இலிங்கங்களுக்கெல்லாம் மதுரையிலுள்ள சொக்கலிங்கம் **மூலலிங்கமாகும்** என்பது கருதியே கல்லாடம் 'மூலக்கொழுஞ்சுடர்' எனப் போற்றுவதாயிற்று. இந்த அரிய குறிப்பினை உளத்துட் கொண்ட **பரஞ்சோதி முனிவர்** தாம் பாடியருளிய **திருவிளையாடற் புராணத்துள்,**

"பொன்னெடு மேரு வெள்ளிப் பொருப்புமந் தரங்கே தாரம்
வன்னெடும் புரிசை சூழ்ந்த வாரண வாசி யாதிப்
பன்னருந் தலங்கள் தம்மிற் பராபர லிங்கந் தோன்றும்
முன்னரிக் கடம்பின் மாடே மூத்ததிச் சைவ லிங்கம்,"[1]

"அப்பதி யிலிங்க மெல்லாம் அருட்குறி யிதனிற் பின்பு
கப்புவிட் டெழுந்த இந்தக் காரண மிரண்டி னாலும்
ஒப்பரி தான ஞான வொளிதிரண் டன்ன இந்தத்
திப்பிய இலிங்கம் மூல விலிங்கமாய்ச் சிறக்கு மன்னோ,"[2]

எனக் குறிப்பிட்டுச் செல்லுதல் காண்க. எவ்வாறோ **திருவண்ணாமலையும், மதுரையும்** மூலலிங்கத் தோற்றத்திற்கு உரிமை கொண்டாடுகின்றன. திருவண்ணாமலையில் அரும் பெருஞ் சோதியாகத் தோன்றினாலும், அதற்கு இலிங்க வடிவங் கொடுத்தது மதுரையிலே எனக்கொள்வது பொருத்தமே; இஃது ஒருபுறமிருக்க இலிங்கத்தின் தத்துவத்தினைச் சாத்திர அடிப் படையில் சிறிது விளக்கமாகக் காண்போம்.

26.1. இலிங்கமும் வீரசைவமும்:

சைவசமயம், **சித்தாந்த சைவம், சைவசித்தாந்தம்** ஆகிய பெயர்களால் தொன்றுதொட்டு வழங்கிவரும் சிவ வழிபாட்டுக் கொள்கையிலே **இலிங்க வழிபாடு** சிறப்பிடங் கொண்டுள்ளது. இத்தகைய வழிபாட்டிற்கு ஆக்கமளித்தவர்கள் **சமய குரவர்களும், சந்தான குரவர்களும்** அவர்கள் வழிவந்த **அருளாளர்களும்** ஆவார்கள். இஃது ஒருபுறமிருக்க, **வீரசைவம்** என்பது **கன்னட நாட்டில்** கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒருவகை

1. மூர்த்தி விசேடப்படலம், 2
2. மேலது, 3

மறுமலர்ச்சி இயக்கமாக அமைந்தது. அந்த வீரசைவத்தில் சிவ வழிபாடும் சிவனடியார்களுக்குப் பணிபுரிதலில் ஈடுபாடும் சிவலிங்கம் தரித்தலும் பொறுப்பாக வற்புறுத்தப்பட்டன.

வீரசைவர்கள் தம் குருவினால் முறைப்படி வழங்கப்பெற்ற இலிங்கத்தினைத் **தலை, கழுத்து, தோள், மார்பு** ஆகியவற்றுள் ஒன்றில், எப்போதும் பிரிவற அணிந்து கொண்டிருப்பர். இத் தகைய **இலிங்க தாரணம்** அவர்களுக்கு இன்றியமையாத பெருஞ் சிறப்பினையளிப்பதாகும். வேதம், ஆகமம், உபநிடதம், புராணம் முதலிய பலவற்றாலும் நன்கு வற்புறுத்தப்படுவது இலிங்க தாரணம் என்பது வீரசைவ சித்தாந்தம். இதனைச் **'சித்தாந்த சிகாமணி'** எனும் நூலில், **துறைமங்கலம் சிவப்பிரகாசர்,**

''சதுமறை யுள்ளும் மிக்க
சாத்திரங் களினும் ஈறொன்
பதுவித புராணத் துள்ளும்
பகர்தரு காமி கம்தான்
முதல்வரும் ஆக மத்தும்
மொழிந்திடப் பட்டி டுஞ்சந்
ததமும்மெய் விடாஇ **லிங்க**
தாரணம் விறற்சை வர்க்கே''[1]

எனப்பாடிச் செல்வதால் உணரலாம். இலிங்கதாரணம் செய்து கொள்ளுங் காரணத்தினாலேயே வீரசைவர்கள் **'இலிங்காயதர்'** என அழைக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் சில இடங்களில் **'பண்டாரங்கள்'** என்றும், மலையாளப் பகுதிகளில் **'தேவர்'** என்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

வீரசைவப் பெருமக்கள் தம் வைராக்கிய சித்தத்துடன் தம் உடலில் பிரிவற எப்பொழுதும் உயிர்ப்பொறுப்பாக அணிந்து கொண்டு, முறையாகப் பூசைபுரிந்து வழிபட்டு வரும் இலிங்கத்தை, **'இட்டலிங்கம்'** (இஷ்டலிங்கம்) எனப் போற்றிக் குறிப்பிடுவர். அதற்குச் செய்யும் **பூசை தரிசனம் மூர்த்தம்**

1. இலிங் தாரணத்தலம், 27

பிரசாதம் நிட்டை தியானம் ஆகியவற்றையே அவர்கள் பெரிதும் முதன்மையும் சிறப்புமாகக் கொண்டு மனநிறைவடைவார்கள். இவ்வாறு போற்றப் பெறும் இட்டலிங்கத்தைத் தவிர, வேறு பரார்த்தம் என உள்ள பிற இலிங்க வடிவங்களிடத்தும் அவர்கள் அத்துணை பத்தியும் ஈடுபாடும் கொள்ள பாட்டார் கள். கற்புடைய நங்கை ஒருத்தி, தனக்கென்று விரும்பியமைந்த கணவனைத் தவிர வேறு எவரையும் மனத்தினாலும் கருதாது வாழ்வது இயல்பாகும். அத்தகைய நிலையில் தனக்குரிய **இட்ட லிங்கம் தவிர வேறு எதிலும் அன்பும்** நாட்டமும் **செலுத்தாத உறுதிப்பாடு கொண்டு விளங்குவதிலேயே வீரசைவர்களின் வாழ்வு** அமைந்திருக்கும். இதனைத் **துறையூர் சிவப்பிரகாச தேசிகர்,**

> "கணவன்பால் இன்பமுறும் கற்புடையாள் வேறோர்
> கணவன்பால் இன்பமுறச் சிந்தித்து - அணைவுறாள்
> ஆங்கதுபோல் இஷ்டலிங்கத் தாகுமன்பு வேற்றுலிங்கத்
> தோங்கவிடா தாங்கதும்வீ ரம்"[1]

எனக் கூறிச் செல்வதால் உணரலாம்.

தீக்கை பெற்ற வீரசைவர்கள் தம்மைப் போன்று இட்டலிங்க பூசை புரிந்து வரும் தம்மவரையே மதித்து, அவர்களுடன் ஒன் றாக இருந்து உண்ணுதல் முதலிய எச்செயலையும் செய்ய ஒருப் படுவர். ஏனையோரிடம் சமமாகப்பழக அவர்களின் சமயக் கோட்பாடு இடந்தருவதில்லை இத்தகைய உறுதிப்பாடுடைய வீரசைவத்தின் கோட்பாட்டினை,

> "இவ்விரதம் இல்லாதார் எவ்விரதர் ஆயிடினும்
> அவ்வவரோ டொன்றாய் அருந்தல்முதல் எவ்வெவையும்
> உள்ளத்தா லும்நினையா துற்றஇடம் சற்றகலாக்
> கொள்கைத்தாம் கோலமும்வீ ரம்"[2]

எனும் செய்யுளால் புரிந்து கொள்ளலாம். **இவ்வாறான சமய வைராக்கிய சித்தம், வைணவர்களுள் வடகலையினரிடம் பெரிதும் அமைந்திருக்கக் காணலாம்.**

1. அத்துவித வெண்பா, 36
2. அத்துவித வெண்பா, 37

தம் உடலில் இலிங்கதாரணம் புரிந்து கொண்டு, தம் ஞானாசிரியர் உபதேசித்த வண்ணமே தம் கரத்து அமர்த்தி இட்டலிங்க பூசை செய்வதில் மிகுந்த ஆர்வமும், உறுதியும் கொண்டு ஒழுகும் விரமுடைய சைவரே வீரசைவர் என்பது தெளிவு. இத்தகைய நெறிமுறைகளைத் **துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்** தாம் இயற்றியுள்ள '**சித்தாந்த சிகாமணி**' எனும் நூலின்கண் தெளிவாக்கியுள்ளார்; அவை வருமாறு:

"அத்தனை அகம்த ரிக்க
அசத்தன்எ னினும்அ தாஅன்று
சத்தனே எனினும் ஞான
தற்பர லிங்க மேனன்
புத்தியின் திட்பம் எய்திப்
புறத்துஇலிங் கம்த ரிக்க
வித்தக நெறியு ணர்ந்தோர்
வீரசை வர்கள்தாம் அன்றே"[1]

"தம்பொரு ளாம்இ லிங்கம்
தன்னைவள் ளிதழ்அ விழ்ந்த
வம்பலர் கந்தம் ஆதி
மருவுற முறையிற் கொண்டு
கம்பமில் மனத்தி னோடு
கரபீடத் தினில்அர்ச் சிப்பர்
இம்பரின் என்றும் சுத்தர்
எனப்படும் வீர சைவர்"[2]

பொதுவாக விரசைவ சமயக் கோட்பாடுகளைக் காண்பவர்கள் வீரசைவமானது ஏதோ பிற சமயங்களை வெறுக்கும் குறுகிய நோக்குடைய பிடிவாதச் சமயம் போலக் கருதலாம்; அது தவறு. ஆன்மிகச் சமய நெறிக்குப் பிறரால் கேடு நேராமற் பேணித் தம் கோட்பாடுகளைப் பாதுகாத்துக் கொள்ளும் அஞ்சா முயற்சியே வீரசைவமாக அமைந்தது. நாட்டு நலங் கருதிச் சான்றோர்களால் வளர்க்கப்பட்ட ஒரு சிறந்த பண்பாட்டு நெறியே வீரசைவம் என்பதை நன்கு பயின்றவர் உணர்வர்.

1. இலிங்க தாரணத்தலம், 20.
2. இலிங்க தாரணத்தலம், 24

சிவனை வழிபடும் நெறியாகிய ஞானவித்தையில் ஆர்வந் தழைக்க ஈடுபாடு கொண்டு, சிவனும் சீவனும் ஆகிய இருவரும் ஒன்றுபடுதலாகிய **சிவசீவ ஐக்கியம்** என்பதிலே உயிரோட்டங் கொண்டு, பிறப்பு இறப்புக்கள் கெடுமாறு ஒன்றி மகிழ்பவனே வீரசைவன். இதுவே இலிங்கதாரணம் பெற்ற இலிங்காயதரின் குறிக்கோள்; இதனைச் **சித்தாந்த சிகாமணியில்,**

"சித்தம் ஆகும் சிவமய மாகிய
வித்தை யூடு விசேடம தாகியே
எத்தினால் இங்குஇர மிப்பவன் அன்னவன்
பொய்த்தி டாத புகழ்வீர சைவனே,"[1]

"தீது அகன்ற சிவசீவ ஐக்கியமாம்
வீத ரும்பெரு வித்தையின் நன்குறச்
சாதம் இன்றி ரமிக்குமச் சைவன்மற்
றோதில் அன்னோன் உயர்வீர சைவனே"[2]

எனும் செய்யுட்கள் புலப்படுத்தும்.

26.2 இலிங்கம் - வகைகள் (திருமூலர் பார்வையில்)

அ) அண்டலிங்கம்:

அருளியலில் தோய்ந்த ஞானியர், யோகியர், சித்தர் முதலிய தவத்தினர் தாம் அருளனுபவங்களை **'இலிங்கம்'** தொடர்பாகக் கூறியுள்ளனர். அவற்றையெல்லாம் தொகுத்துக் காண்கையில் இலிங்கத்தின் மாட்சி ஓரளவு புரியலாகும். ஈண்டு அவ்வாறான தொடர்பில் **திருமூலர்** அருளிய சில செய்திகளைக் காண்போம்.

உலகமும் உலகின்கண் தோன்றிக் காணலாகும் சராசரங்கள் அனைத்தும் சிவவடிவம் எனக் கொள்வது சைவமரபாகும். சத்தியை முதற் காரணமாகக் கொண்டு இறைவன் உலகினைப் படைத்தருளுகிறான். போகம், முத்தி, புத்தி, சித்தி, ஆகமநூல், முப்பத்தாறு தத்துவங்கள், அத்துவாக்கள் ஆகியவை அனைத்தும் சிவனது ஆணையால் நிகழ்வனவே. பஞ்ச பூதங்களைத் தன்னுருவாகக் கொண்ட **சகுண பரசிவத்தைத்** தேவர்கள் பலரும் வழிபடு

1. உபதேசம் 15
2. மேலது, 16

கின்றனர்; ஆனால், அவர்களும் **நிர்க்குண சிவத்தை** அறிய மாட்டார்கள். எனினும், தீ, அயன், மால், ஞாயிறு, இந்திரன் முதலிய தேவர்களுக்கும் அவர்களுடன் கலந்து உள்நின்று உணர்த்துபவனாகச் சிவனே விளங்குகின்றான். உண்மை தெரிந்து வழிபடுகின்றவர்களுக்குச், சகஸ்ராரத்தில் வீற்றிருக்கும் பராசக்தியின் பேரருள் கிட்டும்.

உலக நன்மைக்காகக் கருப்பக் கிருகத்தின் மேல் கட்டப்படும் கோபுரம் **தூலலிங்கம்** ஆகும்; கருப்பக் கிருகத்திலுள்ள இலிங்க வடிவம் **சூக்குமலிங்கம்** ஆகும்; பலிபீடம் **இடபலிங்கம்** ஆகும். இவ்வாறு கோயிலமைப்பில் வழிபடப் பெறும் இறைவனின் பெருமையை அண்டலிங்க அணுகுமுறையில் உணர்ந்தின் புறலாம்.

"இறைவனது திருவடிகள், கீழுலகமாகும்; திருமுடி, ஆகாயத்துக்கும் அப்பாற்பட்டதாகும்; திருமேனி ஆகாயமாம். ஆதலால் இதுவே, சிவபிரான் உலகமே உருவமாகக் கொண்ட திருக்கோலமாகும். நிலம் **ஆவுடையார்;** ஆகாயம் **இலிங்கம்,** கடல் **திருமஞ்சனச்சாலை;** மேகம் **கங்கை நீர்;** நட்சத்திரங்கள் ஆகாய லிங்கத்தின் மீது விளங்கும் **மாலை;** எட்டுத்திக்குகள் **திருஆடை.**" இவையே அண்டலிங்கத்தின் அடையாளங்களாகும்.

ஆ) பிண்டலிங்கம்;

மக்களின் உடலமைப்பானது **சிவலிங்கம்** போன்று உள்ளது. மேலும், அதுவே **சிதம்பரமாகவும், சதாசிவமாகவும்,** இறைவனது **திருக்கூத்தாகவும்** அமைந்துள்ளது என்பது திருமூலரின் கருத்தாகும். இதனைத் **திருமந்திரத்தில்,**

"மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே"[1]

எனவரும் செய்யுளால் உணரலாம்.

1. திருமந்திரம், 1726

மானுடராக்கை ஐம்பூதச் சேர்க்கையால் ஆனதால், இறந்தவர்கள் மீண்டும் வினைக்கீடாகப் பிறக்கின்றனர். இறைவனை வணங்கினால் பிறப்பு அறும். உடலெடுத்தபோதே பிரமன் முதலான மூர்த்திகள் ஐவரும், உடலை வழியாகக் கொண்டே உள்ளிருந்து அருள்கின்றனர். இறைவன், அன்பு வாயிலாகக் கொண்டு உயிர்களைச் சிவமாக்கி ஆண்டருள்கின்றான்.

நாடிகள் பத்தினையும் தூய்மை செய்து கொண்ட நிலையில் புலன்வழி நடவாமல் சிவனை வழிபட்டால், அவன் அந் நாடிகளை இடமாகக் கொண்டு அருள்புரிவான் என்பது கருத்து; இதனால் பிண்டலிங்கச் சிறப்பு இனிது புலப்படும்.

இ) சதாசிவலிங்கம் :

இரு திருவடிகள், பத்துத் திருக்கரங்கள், ஐந்து முகங்கள், பதினைந்து கண்கள் முதலியவற்றைக் கொண்டு **சதாசிவமூர்த்தி** விளங்குவர். அயன், திருமால், உருத்திரன், மகேசன், திருவருட்சக்தி ஆகியவர்கள் அனைவரையும் பொதுவாகச் சதாசிவன் என்பர்.

சித்தாந்த சமயத்தில் கூறப்படும் மேலாலவத்தை ஐந்து, கீழாலவத்தை ஐந்து, ஆகப் **பத்து நிலைகள்** உள்ளன. மேலும், மேடம் முதலான இராசிகள் **பன்னிரண்டும்**, பிரமன் திருமால் உருத்திரன் சதாசிவன் மகேசன் சக்தி என்னும் திருமேனிகள் **ஆறும்**, பஞ்சபூதங்கள், ஞாயிறு, திங்கள், உயிர் ஆகிய வடிவங்கள் **எட்டும்** உள்ளன. இவை அனைத்தையும் கொண்டு அருள்பவனாகச் சதாசிவன் விளங்குகிறான்.

எல்லாத் தத்துவங்களும் சதாசிவத்தின் கலப்பால் இயங்குவன என்பதும், ஆதலால் **'தத்துவங்க ளனைத்துமே சதாசிவம்'** என்பதும் புரிந்து கொண்டு வணங்கித் துதித்தல் வேண்டும்; அந்நிலையில் மனத்தின் மயக்கம் அகன்று திருவடிஞானத் தெளிவு பிறக்கும்.

சிவனுக்கு இருதயமாகிய **ஞானசத்தி**யும், சிரமாகிய பராசக்தியும், சிகையாகிய **ஆதிசக்தி**யும், கவசமாகிய **இச்சாசக்தி**

யும், கண்ணாகிய **கிரியாசக்தியும்** அமைந்து, நலம் பயந்தருளும் திருவருட் சக்தியின் வடிவையே தன் வடிவாகக் கொண்டு- நவந்தருபேதங் கொண்டு - நின்று உலகினை இயக்கியருளுகிறான் இறைவன்; அவனருளால் அவனைப்பாடிப் பரவினால் நம் நெஞ்சகத்தே (அவ்விறைவன்) கோயில் கொண்டருள்வான்.

இலிங்க உருவத்தின் **அடிப்பீடம் பிரணவ உருவமாகும்.** இலிங்கத்தின் **கண்டமாகிய அதோ** முகம், பிரணவ எழுத்துக்களில் **மகாரத்தைக்** குறிக்கும்; இலிங்கத்தின் **நடுவட்டம் உகாரத்தைக்** குறிக்கும். மேல் **இலிங்க** பாகம் **அகாரத்தைக்** குறிக்கும்; இவ்வாறான செய்திகளைச் சதாசிவலிங்கம் **என்பதை** விளக்குதற்காகக் கூறிச்செல்கிறது **திருமந்திரம்** (1730—1752).

ஈ) ஆத்மலிங்கம்:

அகாரம் **சிவன்;** உகாரம் **சக்தி;** சிவத்துடன் சக்தி கூடுகையில் பொருள்களெல்லாம் இயங்கும் என்பதை அடிப்படையாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இந்த **அகார உகாரங்களை உணர்ந்தால் அவையே லிங்கமாகும்.**

ஆதாரமும் ஆதேயமுமான (முறையே) விந்துவும் நாதமும் உலகமாக விரிவடையும். **விந்து** பீடமாகவும், **நாதம்** சிவலிங்கமாகவும் புலப்படும். இவ்விரண்டின் **சேர்க்கையே** மன மணி லிங்கமாகிய **ஆத்மலிங்கம்** ஆகும். திருக்கோயில்களில் இருக்கும் இலிங்கம் **தாபரலிங்கம்** ஆகும்; அடியார்கள் **சங்கமலிங்கம்** எனப் படுவர். அத்தகைய அடியார்களின் திருவேடங்களும் இலிங்கமே யாகும்.

மூலாதாரத்தே சிவஒளியையும் ஐம்பது அக்கரங்களை (எழுத்துக்களை)யும் காணலாம். உச்சித்தாமரையில் மனோன் மணியுடன் விளங்குவது அகர முதல்வனாகிய சிவனேயாம் **சிவலிங்க பீடம உயிர்நிலையாகும்; பீடத்தின்** குழியே **சிவஞானம் ஆகும்;** குழிமேல் **தோன்றும்** இலிங்கம் **சிவமெய்யாகும்; பரமான்மா சதாசிவம் ஆகும்** உயிர்களின் நெஞ்சகத்தே இறைவன் குடிகொண்டு வாழும்போது, அவ்வின்பப் பெருவாழ்வில் உயிர் தன்னையும் சிவனையும் நாடும் என்பது உணர வேண்டிய உண்மையாகும்.

உயிர்களின் உய்திக்காகவே இறைவன் தன் திருவருளால் கட்புலனாகும்படி தோன்றியருள்கிறான். எல்லாத் தேவர்களும் அப்பெருமானைப் பரவிப் பணிந்து தொழுகின்றனர் என்பது **'ஆத்மலிகம்'** எனும் பொருண்மையில் **திருமூலர்** தருஞ் செய்தியாகும்.

உ) ஞானலிங்கம் :

உருவம், அருவம், அருவுருவம் எனும் மூன்றிலும் புலப்படும். **இறைவன்** உயிர்களுக்கு ஞானம் வழங்குதற்காகக் **குருவாகத்** தோன்றியருள்வான். அத்தகைய பெருமானை நாடிக் கேட்பவர்களுக்கு வேண்டுவதை அருளும் பாங்கினனாகிச் **சதாசிவனாக** விளங்குவான். சதாசிவன் நவந்தரு பேதங்களை — ஒன்பது பேதங்களைத் — தானே இச்சா மாத்திரத்தில் உண்டாக்கிக் கொள்வான். தேவர்களுக்கும் எண்திசைத் தெய்வங்களுக்கும் **பிரமன் திருமால் உருத்திரன் ஈசன் ஆகிய நால்வர்க்கும் முழுமுதற் கடவுளாக விளங்குபவன் சதாசிவன்** என்பது மரபு.

மனோன்மணி, சதாசிவத்துடன் பிரிப்பின்றி விளங்குகிறாள். அன்னை, அத்தன் என்னும் இருவரில் எவரை வழிபடினும் சதாசிவனுக்குச் சமமாக ஓர் பாதியினைக் கொண்ட நிலையில், சக்தி தத்துவத்துக்கு மேலே ஒளிர்பவள் பராசக்தி; அப்பரையினுள்ளே தான் நின்மல சிவத்துக்கு இடமாகும். அதற்கு மேல், யாதினும் தோயாது நிற்கும் தூயஒளியாகிய சிவம் நிற்கும்; மேல், பராசக்தியுடன் கூடியும் கூடாமலும் ஈசன் ஒளிர்வது தானான உண்மை நிலையாகும்.

சிவத்தின் உண்மை நிலையை மாதொரு பாகனாகக் கண்ட அடியார்களது இதயத்தே சிவன் எழுந்தருளியிருப்பான். அப்பனும் அம்மையும் ஒன்றாய்க் கலந்து கூடிய சேர்க்கையே ஞானமுண்டாகும் இடமாகும். அவ்விருவரும் கூடியிருக்கும் சிறப்பான இடம் கொப்பூழாகிய சுவாதிட்டானமாகும். பரமன் பராசக்தியை உடன் வைத்து மகிழ்ந்திருக்கும் இடமே நெஞ்சமாகிய **அநாகதத் தானமாகும்.**

சக்தியும் சிவமும் இன்றி எப்பொருளும் தோன்றாது; சத்தியே எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாம்; **ஞானலிங்கம்**, எனும் பார்வையில் திருமந்திரம் சில நுண்குறிப்புகளைக் கூறிச் செல்லும்.

ஊ) சிவலிங்கம்:

இறைவனாலே உலகம் நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியவை விளக்கமுறும். ஐம்பூதங்கள் யாவையுமான சிவனைத் திருவருளால் ஓர் எல்லைப்படுத்தி நாம் வழிபடுதல் இயலும். இறைவனைத் திருமஞ்சன நீராட்டி, நாண்மலரால் அருச்சித்து, அவன் திருப்பெயர்களைச் செபித்துத் திருவடியை உள்ளன்போடு உணர்ந்து போற்றி உருக வேண்டும். இவையே ஒரு குறியின் கண் வைத்து வழிபடும் உத்தியாம். இவ்வாறு வழிபடுவதால் ஐம்புலன்களையும் வென்று ஒருமுகவுணர்வில் இன்பமுறலாம் என்று ஆன்றோர் நம்புவர்.

அயன், மால், உருத்திரன், மகேசன், முத்திப்பயனளிக்கும் சதாசிவன் ஆகிய திருவடிவங்களனைத்தும் பயன்களை நல்கும் இறைவனேயாம்; அவனே சிவலிங்கமாம் என்று உணருமாறு **திருமந்திரம்** நல்லாற்றுப்படுத்துகிறது.

சிவலிங்கவுணர்வைக் கொண்டு, உயிரானது உடலைவிட்டுப் பிரியும் வரையில், பிராண வாயுவை அடக்கி முறைப்படுத்தி ஒழுகினால் திருவடிப் பேறாகிய **பரகதி** கிட்டும் என்பது உயிர் நம்பிக்கை.

ஆகவே, திருமந்திரத்தில் கூறப்பட்ட **அண்டலிங்கம்**, **பிண்டலிங்கம்**. **சதாசிவலிங்கம்**, **ஆத்மலிங்கம்**, ஞானலிங்கம், **சிவலிங்கம்** என்ற ஆறு லிங்கங்களும், ஆன்மநலப் பக்குவர்களுக்கேற்ப வகைப் படுத்தப்பெறும். "**சரியை கிரியை பற்றியவர்க்கு** அண்டலிங்கம், சதாசிவலிங்கம் விளக்கப்பட்டுள்ளன. பிண்டலிங்கம் **யோகி**களுக்குக் கூறப்பட்டுள்ளது; ஆத்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் **ஞானயோகத்தினருக்குக்** கூறப்பட்டுள்ளன"[1] எனச் **சிவ யோகி** மா **இரத்தினசபாபதி பிள்ளை** குறிப்பிடுவது ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தக்கதாகும்.

1. திருக்கோயில், நவம்பர் 1972, பக், 675.

இலிங்கம் என்பது **சிவபரம்பொருட் குறியீடு.** ஆன்மாக்களை உய்விக்க வந்த நல்லடையாளம் என்பதை முதற்கண் உணர்ந் தால், படிப்படியே அருளியற் சிந்தனைமலர்ச்சியால் தெளிவு - ஆன்ம ஞானம் - பிறக்கும். அந்நிலையில், சிவமே ஆன்மாக் களின் பக்குவம் நோக்கித் தியானத்திற்கும், பூசனைக்கும் காரண மாகும் - **'சிவம்'**விளங்கும் - 'சிலை' முதலிய திருமேனிகள் கற் பிக்கப் பட்டமையின் நோக்கம் இனிது புலப்படும்.

இலிங்கம் என்பது பிரணவ சொரூபமாகும் என்ற நம்பிக் கையில் அதனையணுக வேண்டும். இந்த அடிப்படையில் **சிவ யோகி மா. இரத்தினசபாபதி பிள்ளை,** "புறத்தே காணப்படும் லிங்கத்தில் அகார, உகார, மகாரம் உள்ளது. லிங்கத்தின் உள்ளும் புறமுமாகப் பிரணவத்தில் உள்ள விந்து நாதங்கள் வியாபித்துள்ளன. மனிதன் தோளுக்கு மேலுள்ள சிரசு எவ்விதம் உள்ளதோ, அதுபோல் லிங்கத்தின் பாணம் உள்ளது. பூத வெளியாகிய ஆகாயத்தை லிங்கத்தின் பாணம்(சிரசு) ஊடுருவி உயர்ந்துள்ளது என்பது இந்த யூகத்தால் புலனாகும். ஆனால் நிலை கீழ்வரையில் வியாபித்தும் உள்ளது என்பதை லிங்கத்தின் மூன்று உறுப்புகளையும் இணைத்துக் காட்டியுள்ளார் (திரு மூலர்)"[1] எனக்கூறிக் கீழ்க்காணும் **திருமந்திரச்** செய்யுளை எடுத்துக் காட்டுகிறார்.

"இலிங்கநற் பீடம் இசையும் ஓங்காரம்
இலிங்கநற் கண்ட நிறையும் அகாரம்
இலிங்கத்திள் வட்ட நிறையும் உகாரம்
இலிங்கம் அகாரம் நிறைவிந்து நாதமே" (1753)

இத்தகைய கருத்துக்கு இயையும் வண்ணம், "அகாரம் கண்டம், உகாரம் கோமுகம், மகாரம் வட்டம் எனவும்; அதன் விருத்தம் **உருத்திரபாகம்,** நடுவில் எட்டுமூலை **விட்டுணுபாகம்,** கீழ்ப்பகுதி யின் அடி நான்குமூலை **பிரமபாகம்** எனவும்; உருத்திரபாகம் **'பும்லிங்கம்',** விட்டுணுபாகம், **'ஸ்திரீலிங்கம்',** பிரமபாகம் **'நபுஞ்சகலிங்கம்'** எனவும் அறிய விளங்கும்"[2] எனவருங்குறிப்பு மனங்கொள்ளத்தக்கதாகும்.

---

1. திருக்கோயில், நவம்பர் 1972, பக். 675-676
2. திருக்கேதீச்சரம் திருக்குடத்திருமஞ்சன மலர், 1976, பக். 31-32

இலிங்கத் திருமேனியில் உருத்திர — விட்டுணு — பிரமக் கூறுகளை மக்கள் உணர்ந்துய்யும் நோக்கத்திலே குமரிமாவட்டம் சுசீந்திரம் எனுந் திருத்தலத்தில் **தாணு மாலயப் பெருமான்** (தாணு — சிவன்; மால் — விட்டுணு; அயன் — (பிரமன்) ஒரே கற்சிலையில் எழுந்தருளியுள்ளமை கருத்துப் புலப்பாட்டுடன் கண்டுணரத்தக்கதாகும். இத்தொடர்பில் மேலும் ஒரு சிறப்புக் குறிப்பினைக் காண்போம்.

அத்திரி முனிவருக்கும் கற்பிற் சிறந்த அவர் மனைவியான அனுசூயாவுக்கும் **ஞானாரணியத்தில்** (சுசீந்திரத்தை அடுத்துள்ள இன்றைய ஆசிரமந்தான் அன்றைய ஞானாரண்யம் என்பது) **மும்மூர்த்திகளும் இலிங்க வடிவில் தோற்றமளித்தனர் என்பது சுசீந்திரம் தலபுராணக் கூற்று.**

சிவலிங்கத்தில் **அடி நடு மேல்** என்பவை முறையே **பிரம பாகம் விட்டுணுபாகம் உருத்திரபாகம்** என அழைக்கப்பெறினும், சைவஞானியர் சிலர், ''ருத்ரபாகம் **என்பதுதான் சிவபாகம்,** ஏனைய இரு பாகங்களையும் **ஆவுடையார்** என்று சொல்வது வழக்கம்''[1] எனக் கூறி வருவதும் ஆராய்தற்குரியதாகும்.

இஃது ஒரு புறமிருக்க, இலிங்கத்திருவுரு வாயிலாக ந,ற நிலைகளைக் காணுந் திறமும், அதன் வாயிலாக உய்யுந் திறனும் யோகியர்க்கு வாய்ப்பாக அமையும். ஐம்புலன்களையும் வென்று பரம்பொருளை ஏகவுருவில் கலந்து இன்புற்றுத் தன்னை மறந்து ஒன்றி நிற்கையில் ஒரு வியத்தகு அனுபவம் சித்திக்கும். இதனை அனுபவ பூர்வமாகப் புலப்படுத்துகையில், ''சிவம் உலகுக்கு உரிய ஏகநாதர் என்பதை அறிந்து அவனைத்தொழ நான் ஐம்புலன்களையும் வென்று ஏகவுருவில் கலந்து இன்புற்று என்னை மறந்து நின்ற போது அவன் எனக்கு அருள் வழங்கினன். அப்போது பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன், பரவிந்து, பரநாதம், சத்தி, சிவம் என்ற ஒன்பது நிலைகளும் ஒன்றாகத் தூணாகாரச் சோதியாக

1. வேங்கட சுப்பிரமணியன், தினமணி-சுடர், 5-3-1978

(சோதிலிங்கமாக) நிலைபெற்றது''[1] என எழுதிச் செல்வது பெரிதும் சிந்தித்துப் போற்றுதற்குரியதாகும்.

ஆக, இலிங்கத் திருவடிவினை நோக்குகையில் **சைவம் வைணவம், சாக்தம்** முதலிய சமய ஒருமைப்பாட்டுணர்வு ஏற்படவேண்டுமென்பதே, இவ்வாறெல்லாம் அனுபவ வாயிலாகக் கண்டுணர்ந்து கற்பித்தவர்களின் அடிப்படை நோக்கமாகும். அந்த நோக்கம் நிறைவேற மக்கள் புரிந்து கொண்டு ஒத்துழைத்தால் நாடு பண்பாட்டு நெறியில் நடையிட்டு ஒளிரும் என்பது திண்ணம்.

எ) சிவலிங்கம் - சிறப்புநோக்கு:

பாரதப்பெருநாட்டில் இமயமலையில் **அமர்நாத்** என்னுமிடத்தில் பனிக்கட்டியால் **இலிங்க வடிவம்** அமைந்து, அதனைப் பக்தியார்வத்துடன் சிறப்பாக வழிபட்டு நிற்பர்; தமிழ்நாட்டுச் சைவசீலர்கள் சிலர் பக்தி வைராக்கியவுணர்வுடன் சென்று வழிபாடு புரிந்த நிலையில் '**கயிலைச்செல்வர்**' என்று மக்களால் போற்றவும் பாராட்டவும் பெறுகின்றனர்.

தென்னாட்டில் **திருவிடைமருதூரில்** வழிபடப்பெறும் **மகாலிங்கமே** மிகச்சிறப்பாகவும், அதற்குப் பரிவாரத் தெய்வங்களாகத் **தில்லை நடராசர், ஆலங்குடி** தட்சணாமூர்த்தி, **சுவாமிமலை முருகன், திருவலஞ்சுழி வெள்ளைவாரணர், சீர்காழி சட்டையப்பர் (வைரவர்)** ஆகியோர் அமைந்திருப்பதாகவும் கூறுவர். இஃது ஒருபுறமிருக்க, **மதுரையிலுள்ள சொக்கலிங்கத்தையே** மிகப் பெருமைப்படுத்திக் கூறுவர். ''மதுரையைத்தவிர ஏனைய திருத்தலங்களில் காணலாகும் இலிங்கங்களெல்லாம் தனித்தனி ஒன்றான அமைப்புடைய **வியட்டிலிங்கம்;** இத்தலத்திலுள்ள இலிங்கமோ எல்லாம் ஒருங்கு திரண்டு தொகுதியான அமைப்பும் ஆற்றலுமுடைய **சமட்டிலிங்கம்** எனக் கருதுவர். மதுரையிலுள்ள சொக்கலிங்கத்தின் பெருமையை புலப்படுத்துகையில், 'இத்தலத்து இலிங்க மூர்த்தத்தைக் கண்டு வழிபட்டால், வேருக்கு ஊற்றும் நீரானது மரத்தையும் அதனுடைய பல்வேறு எண்ணற்ற கிளைகளையும் வளர்த்துச் செழிப்படைவித்தல் போல, ஏனைய

1. 'திருக்கோயில்', நவம்பர், 1972

எல்லாத் தலங்களிலும் உள்ள இலிங்கங்களையும் தனித்தனியே கண்டு வழிபடுவதால் உண்டாகும் சிவ புண்ணியம் கிடைக்கும் என்பது திண்ணம்''[1] எனப் **புலவர் செந்துறைமுத்து** கூறிச் செல்வது மனங்கொள்ளத்தக்கதாகும்.

27. பூசையில் சிவலிங்கமும் சோதி வடிவமும்:

சிவலிங்க அமைப்பு ஒருவகையில் சோதிவடிவ அடையாளம் என்பது சமயச் சான்றோர்களின் கருத்தாகும். சிவபரம் பொருளாகிய ஈசுவரன் சோதி மயமானவன் என்பதையும், அத்தகைய **சோதி மயமானவனும் சிவலிங்கத்தில் நன்கு புலப்படுபவன்** என்பதையும் அடியவர்கள் உணர்ந்து போற்றுமாறு சமயப்பண்பாட்டு உத்தி கையாளப்பட்டுள்ளது. இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

தில்லைப் பெரும்பதியில் கனகசபைக்கு முற்பகுதியில் ஆறு கால பூசைச் சிறப்பினைச் சந்திர மௌலீசுவரராகிய **படிக லிங்கம்** பெறுதலைக் காணலாம்; இரத்தினசபாபதியாகிய **மாணிக்கக் கூத்தன்** (சிவலிங்கத்தின் வளர்நிலை வடிவம்) **காலை**யில் இரண்டாங்காலப் பூசைச் சிறப்பினைப் **பெறுதலையும்** காணலாம். ஈசுவரனுக்குத் தீபாராதனை புரியும் **வேளையில் கருப்பூரச் சோதியை மாணிக்க லிங்கத்தினூடே காணும்போது ஈசுவரன் செஞ்சோதிமயமானவன்** என்ற உணர்வு தோன்றும்.

சூதவனம் என்று வழங்கப்படுவது **மாங்காடு எனும்** திருத்தலமாகும். அருள்மிகு காமாட்சியம்மையால் **அருள்வளம்** கொழிக்கும் அக்கோயிலில் ஈசுவரனுக்குத் தீபாராதனை புரியும் வேளையில், **கருப்பூரச்சோதி இலிங்கத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம்.** அதனைக் காண்பவர்கள் ஈசுவரன்சோதி **வடிவினன்** என்னும் உணர்வைக் கொண்டு மகிழ்வர்.

27.1. சிவலிங்கமும் விடங்கர் திருமேனியும்:

சோழர்குலத் தோன்றலாகக் கருதப்பெறும் **முசுகுந்தச்** சக்கரவர்த்தி, இந்திரனிடமிருந்து பெற்று வந்த சிவலிங்கத் திரு

2. பாண்டிநாட்டுக் கோயில்கள் பக். 15

மேனிகளைத் தென்னாட்டிலே **ஏழு தலங்களில்** வழிபாட்டிற்கென அமைத்தான். உளியால் செய்யப்படாமல் தாமே தோன்றியவர் எனப்பொருள்படும் **விடங்கர்** அமைந்த அந்த **ஏழுதலங்களிலும்** சுவாமி, **தியாகராசர்** என்று அழைக்கப்படுகின்றார். ஏழு தலங்களும் **சப்த விடங்கத்தலங்கள்** என மக்களால் போற்றப்பெறுகின்றன. முசுகுந்தச் சக்கரவர்த்தி கொணர்ந்தவையாகக் கருதப்பெறும் **சிவலிங்கத் திருமேனி** ஒவ்வொன்றும், **அவ்வத்தலத்திலும் தியாகராசருக்கு அருகே பாதுகாப்புடன் உள்ள பெட்டகத்தில் காணப்பெறும்.**

தியாகராசர் எனப்பெறும் விடங்கரின் பெயர்களும், கோயில் கொண்டுள்ள தலங்களும், விடங்கரின் நடனங்களும் வருமாறு:

தலம்	**விடங்கர்**	**நடனம்**
திருவாரூர்	வீதிவிடங்கர்	அசபா நடனம்
திருநள்ளாறு	நக(நாக)விடங்கர்	உன்மத்த நடனம்
நாகப்பட்டினம்	சுந்தரவிடங்கர்	பாராவாரதலிங்க நடனம்-வீசி நடனம்
திருக்காறாயில்	ஆதிவிடங்கர்	குக்குடநடனம்
திருக்குவளை (திருக் கோளிலி)	அவனிவிடங்கர்	பிருங்க நடனம்
திருவாய்மூர்	நீலவிடங்கர்	கமல நடனம்
திருமறைக்காடு (வேதாரண்யம்)	புவனிவிடங்கர்	அம்சபாத நடனம்

சப்தவிடங்கத் தலங்களை நினைவூட்டும் வெண்பா வருமாறு:

> ''சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
> காரார் மறைக்காடு காறாயில் - பேரான
> ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
> சத்த விடங்கத் தலம்''

27.2. சிவலிங்க வழிபாடும் சோதி வழிபாடும்:

சிவலிங்க வழிபாடு உலகந்தழுவிய நிலையில் மிகமிகத் தொன்மையானது என்பது தெளிவு. சிவபரம்பொருளைச் சோதியாகவும், சுடராகவும், சூழொளி விளக்காகவும், ஒளிவடிவங்களாகிய ஞாயிறு, திங்கள், விண்மீண்கள் முதலியவையாகவும் கொள்வர்; அந்நிலையில் அவற்றை வழிபடுதலும் ஒருவகையில் சோதி வழிபாடு எனவே கூறலாம். இத்தகைய **சோதிவழிபாடு குறித்து நாயன்மார்களும், ஆழ்வார்களும் பிற அருட்செல்வர்களும் தாம் பாடிய இலக்கியங்களில் நவின்றுள்ளனர்.** படிப்படியே வளர்ந்து வந்த இந்த ஒளிவழிபாட்டினைச் சிறப்பாகக் கொண்டு, உலகினர் நம்புமாறு இனிது எடுத்துரைத்த பெருமை **வடலூர் வள்ளற்பெருமானுக்கு** உண்டு.

மானுட உடம்பாகிய கோயிலுக்குள் உயிர்க்குயிராகிய பரம்பொருள் சிவசோதியாக விளங்கி நிற்கிறான் என்பது சைவ சமய நம்பிக்கை. **சிவசோதி** அதனைச் சூழ்ந்தொளிரும் தன்மையதாய் விளங்கும்; **ஆன்மசோதி** அதனைத் தாங்கி நிற்கும் இயல்பினதாகும். எனவே ஆன்மசோதியுள் அருட்சோதியும், அருட்சோதியுள் சிவசோதியும் விளங்கித் தோன்றும் என அருளாளர்கள் கருதுகின்றனர்,

மேற்காணும் **சிவசோதி, அருட்சோதி, ஆன்மசோதி** என்பவற்றைச் சிவலிங்கக் கூறுகளாகவே உணர்தல் வேண்டும். இதனைத் **திருமுருக. கிருபானந்த வாரியார்** விளக்குகையில், "இதனையே சிவலிங்கம் என்று உணர்க. மேல்நோக்கியுள்ள சிவலிங்கம் **சிவசோதி;** அதைச் சூழ்ந்துள்ள ஆவுடையார் **அருட்சோதி;** அதனைத் தாங்கும் பீடம் **ஆன்மசோதி;** எனவே, **'உடம்பில் உள்ள உயிர் 'சிவலிங்கம்'** என்று உணர்க.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்

— திருமந்திரம். 1823

சிவலிங்க வழிபாடும் சோதி வழிபாடும் ஒன்று என்று உணர்க. சிவலிங்க வழிபாட்டின் சூட்சுமம் ஜோதி வழிபாடு ஆகும்''[1] என எழுதிச் செல்லுதலைக் காண்க.

1. திருக்கோயில், மார்ச், 1977

இத்தகைய கருத்தூற்றங்களைப் புலப்படுத்தும் வகையில் **வடலூர் இராமலிங்க** அடிகள். சோதிவழிபாட்டின் பெருமையைத் தம் திருவருட்பாவில் பல இடங்களிலும் சுட்டிச் சென்றுள்ளார், அவரது மகுடத் திருவாக்காக, "**சோதியுட் சோதியுட் சோதி**" என்பதைக் கொள்ளலாம்.

27.3. வியத்தகு சிவலிங்கங்கள் (தலப் பெருமையுடன்)

அ) சுசீந்திரம் தாணுமாலயர் :

சுசீந்திரத்தில் **தாணு மால் அயன்** ஆகிய மும்மூர்த்திகளும் ஒன்றன்மேல் ஒன்றாக லிங்கம் போன்ற அமைப்பில் காட்டப் பட்டதுபோல, சிவனுக்கும் திருமாலுக்குமுள்ள ஒன்றிய நிலையைக் காட்டுவதற்காகத் **திருப்பாற்கடல்** எனுந் திருத்தலத்தில் ஒரு வியத்தகு மூலவர் அமைந்துள்ளார். "அரி–அர அபேதத்தைக் காட்டும் அதிசயமாக ஒரு க்ஷேத்திரத்தில் சிவலிங்கத்துக்கான ஆவுடையாரின் **மேல் லிங்கத்தின் ஸ்தானத்தில் மகாவிஷ்ணு** நின்று கொண்டிருப்பார். அந்த ஊருக்குத் திருப்பாற் கடல் என்று பெயர்"[1] எனவரும் அருங்குறிப்பினைக் காண்க.

ஆ) சகசிர லிங்கம் - ஆயிரத்தளி:

ஆன்மிக சமயத்திலே, ஒருமையில் பன்மையும், பன்மையில் ஒருமையும் காணும் வித்தகத்தைச் சிற்பியர் தம் ஆன்மநலக் கற்பனைக் கலைப்படைப்பிலே இவ்வாறு காட்டியுள்ளனர்.

சகசிர லிங்கம் எனும் ஒரே லிங்கத்தில் ஆயிரம் இலிங்கங்கள் அமைக்கப்பட்டிருத்தலைச் சில திருத்தலங்களில் காணலாம். முன்னொரு காலத்தில் ஆயிரம் லிங்கங்கள் ஒரே தலத்தில் இருந்துள்ளன என்பதும் தெரிய வருகின்றது.

கண்டியூர் அருகே **வீரசிங்கம் பேட்டையில்** ஆயிரத்தளி எனுஞ் சிவாலயம் உள்ளது; அங்கே ஆயிரம் சிவலிங்கங்கள் இருந்துள்ளன; அதேபோலத் திருக்காட்டுப்பள்ளியருகே **நேமம்** திருக்கோயிலிலும் ஆயிரம் சிவலிங்கங்கள் இருந்துள்ளன என்பது

1. கல்கி தீபாவளிமலர், 198, பக். 52.

வரலாற்றால் தெளிவுறப் புலப்படுகிறது என்பார் **குடவாயில் பாலசுப்பிரமணியன்.**

சமய ஞானியரும் சிற்பியரும் புரிந்த சமயக் கலைக் கற்பனையின் விளைவே ஒரே இலிங்கத்தில் ஆயிரம் இலிங்கங்கள் அமைக்கப்பட்டு, **'சகசிர லிங்கம்'** உருவானதாகும்; இவ்வாறான இலிங்கத்தைத் தில்லைநடராசர்கோயில் போன்ற சில தலங்களில் காணலாம்.

இ) காஞ்சி ஏகம்பத்து 1008 சிவலிங்கங்கள் கொண்ட ஒரே லிங்கம்:

காஞ்சி ஏகாம்பரநாதருக்கு (சிவலிங்கத்திற்கு)த் தனிப் பெருமை உண்டு. எனினும், அங்குள்ள மாவடியைச் சுற்றியுள்ள பிராகாரத்தில் புராண அடிப்படையிலே 136 சிவலிங்கங்கள் உள்ளன. பொதுவாகச் சில சிவாலயங்களில் காணலாகும் 108 சிவலிங்கங்கள் கொண்ட ஒரே சிவலிங்கமும் உள்ளது. 1008 சிவலிங்கங்கள் கொண்ட ஒரே சிவலிங்கமும் சிறப்பாக உள்ளது. பன்மையில் ஒருமை காணும் தத்துவத்தை இத்தகைய சிவலிங்கங்கள் வாயிலாக மக்கள் உணர்ந்தால் நல்லது.

ஈ) திருப்புனவாயில் - சிவலிங்கம்:

பாடல்பெற்ற பாண்டி நாட்டுத் தலங்கள் பதினான்கனுள் ஒன்றாகக் கருதப்பெறும் இத்திருத்தலம் மிகத் தொன்மையானது. **பழம்பதி, விருத்தபதி** எனவும் அழைக்கப்பெறும் இது திருவாடானைக்கு வடக்கே 12 கல் தொலைவில் உள்ளது. இத்தலத்திற்குச் செல்லுங்கால் கற்குன்றும் தூறும் கடுவெளியும் இக்காலத்தும் பொலிவின்றித் தோன்றுவதைக் காணலாம். இதனை முற்காலத்தே **சுந்தரமூர்த்தி சுவாமிகள்,**

> ''கற்குன்றும் தூறும் கடுவெளி யும்கடற் கானல்வாய்ப்
> புற்கென்று தோன்றிடும் எம்பெரு மான்புன வாயிலே '[1]

எனக் கூறிச் செல்வதால் அறியலாம். நான்மறைகளும் வழிபட்ட

1. திருமுறை, 7,50, 4

இத்தலத்தின் கோயில் பெரிது. இங்குள்ள **நந்தியும்**, **மூல லிங்கமும்**, **ஆவுடையாரும்** மிகப்பெரியவை.

"சுவாமிக்கு 3 முழ உடை வேண்டும்; ஆவுடையாருக்கு 30 முழ உடை வேண்டும். "**மூன்று முழமும் ஒரு சுற்று, முப்பது முழமும் ஒருசுற்று**" என்று பழமொழியாகச் சொல்வது இத் தலத்துச் சுவாமியைப் பற்றித்தான்.... பாண்டி 14 தலமும் திருப் புனவாயிலேயே இருப்பதாக ஐதிகம். பதினான்கு இலிங்கங்களும் உள்ளன."[1] என்று **வ த. சுப்ரமணியப்பிள்ளை** எழுதிச் செல்வது சிந்தித்துப் போற்றத்தக்கதாகும்.

உ) திருப்பனந்தாள் — சிவலிங்கம்:

திருப்பனந்தாள் தாடகேச்சுரமாகிய அருள்மிகு சடையப்பர் கோயிலில் உள்ள மூலவராகிய சிவலிங்கம் நேரேயில்லாமல், ஒரு காலத்தில் பெரிதும் சாய்ந்திருந்தது. சிவபக்தி மிகுந்த ஓர் அடியவளாகிய தாடகையின் பூசை காரணமாகச் சிரந்தாழ்த்திய சிவலிங்கம் என்பது புராணப் பின்னணியாகும். இந்தச் சிவலிங் கத்தின் உச்சியில் சடை-முடி அமைப்பு உள்ளது. (தாடகைக் காகச் சாய்ந்த திருக்கோலம், குங்கிலியக்கலயநாயனரின் பக்திக் குக் கட்டுப்பட்டு நிமிர்ந்ததாகப் பெரியபுராணத்திலும் குறிப்பு உள்ளது).

மிகத் தொன்மையதாக இந்தச் சிவலிங்கம் கருதப்படுகிறது,

26. சிவபிரானுக்குரிய சில சிறப்புப் பெயர்கள்:

சைவ சமயப்பெருங்கடவுளாகிய சிவபிரானுக்குரிய சிறப் பினையொட்டிப் பல திருவுருவங்கள் கற்பிக்கப்பட்டன சிவனது பெருமையை விரிக்கும் பெயர்களாகச் சிலவற்றைப் போற்றிக் கூறுவர். இதனை நன்குணர்ந்த **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை** எழுதிய **திருவம்பர்ப்புராணத்தில்** சில செய்யுட் களாகப் புலப்படுத்தியுள்ளார். அந்த அடிப்படையில் சிவ பிரானின் சிறப்புப் பெயர்களும் அவற்றின் சுருக்கமான பொருண்மையும் வருமாறு:

---

1. சிவஸ்தல மஞ்சரி, பக். 281

1. **பவன்** — எல்லாவற்றையும் தன்னிடமிருந்து தோற்றுவிப்பவன்.
2. **உருத்திரன்** — உயிர்களின் பிறப்பு இறப்பு ஆகிய நோய்களை நீக்கிக் குற்றங்களையெல்லாம் ஒருங்கே போக்குபவன்.
3. **மிருடன்** — எல்லோரையும் சுகமடையும்படி செய்த நிலையில், அவர்களை உரிய இடத்தில் சேரும்படி வைப்பவன்.
4. **ஈசானன்** — தனக்கு மேற்பட்டோர் ஒருவரும் இல்லாதவன்.
5. **தாணு** — சிறிதும் அசைவின்றி நிலைபெற்றிருப்பவன்
6. **சம்பு** — உயிர்களுக்கெல்லாம் வீடு பேற்றின்பத்தினைக் கொடுத்து அருள்பவன்.
7. **சருவன்** — கொடியவர்களைத் தண்டித்துக் கொல்பவன்.
8. **உக்கிரன்** — சூரியன் சந்திரன் முதலிய கோள்களின் தோற்றம் மறைவு, கடல்கள் எல்லை கடத்தல் அடங்கி நிற்றல், நிலம், தீ, நீர், வளி, விசும்பு என்னும் ஐம்பூதங்களின் தோற்ற ஒடுக்கங்கள் ஆகியவற்றிற்கெல்லாம் காரணமாக நின்று, முறைப்படி நடத்துபவன்.
9. **பர்க்கன்** — சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றிற்கும் ஒளிகொடுப்பவன். காயத்திரி முதலிய மந்திரங்களால் வழிபடப்பெறுபவன். உயிர்களின் அறியாமை, பேதமை முழுவதையும் போக்கியருள்பவன்.

10. மாதேவன் — எல்லையில்லாத பேரொளிமயமாக வீற்றிருக்கும் இயல்பினன்.

11. பரமேசுவரன் — ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் ஆற்றுபவன்.

மேற்காணும் சிறப்புப் பெயர்களெல்லாம் சிவபெருமானுடைய தனித்தன்மையையும், அளவிலாற்றலையும், திருவருளையும் சிந்திக்கச் செய்யும் பாங்கினில், வடமொழியாளர்கள் கண்டு புலப்படுத்திய மெய்ப்பொருளியற் பெயர்களே. இந்தப் பெயர்களை மந்திரமெனப் போற்றித் தமிழ்ப்பெருமக்களும் சிவபரம் பொருளின் சிறப்புக்களை யுணரும்வகையில் தம் தத்துவக் கற்பனையை வளர்த்துள்ளனர்; மேலும், சமயச்சிந்தனை மலர்ச்சியால் உள்ளுணர்வுடன் இறைத்திருவுருவங்களை மனத்துள் பக்தியார்வத்துடன் கொள்கின்றனர். சிற்பங்கள் சிலவற்றைக் கலைஞர்களைக் கொண்டு வடிக்கவும், அவை வாயிலாகக் கோயிற்பண்பாட்டை வளர்க்கவும் முனைந்துள்ளனர். (சக்தியின் பல்வேறு திருப்பெயர்களையும், திருவுருவங்களையும் தத்துவத்தையும் முன்னரே கண்டோம். அதேபோன்று சிவனுடைய திருப்பெயர்களையும், திருவுருவங்களையும், தத்துவத்தையும் வைத்துக் கொண்டு கலைக் கற்பனை புரியும் முயற்சியே இதுவெனக் கொள்ளுதல் பொருந்தும்).

சிற்பக்கலை - பண்பாட்டுக் கூறுகள்

(தொடர்ச்சி – 1)

சிவமூர்த்தங்கள்:

மகேசுவர வடிவங்களின் தோற்றம்

சதாசிவமூர்த்தி

ஈசானமூர்த்தி

1. சோமாஸ்கந்தர்
2. நடராசர்
3. இரிடபாரூடர்
4. கலியாணசுந்தரர்
5. சந்திரசேகரர்

சத்யோசாத மூர்த்தி

21. இலிங்கோத்பவர்
22. சுகாசனர்
23. உமாமகேசர்
24. அரியர்த்தர்
25. அர்த்தநாரீசுவரர்

தத்புருட மூர்த்தி

6. பிட்சாடனர்
7. காமாரி
8. காலாரி
9. சலந்தராரி
10 திரிபுராரி

வாமதேவ மூர்த்தி

16. கங்காளர்
17. சக்கரதானர்
18. கஜாந்திகர்
19. சண்டேச அனுக்கிரகர்
20. ஏகபாதர்

அகோரமூர்த்தி

11. கஜாரி
12. வீரபத்திரர்
13. தட்சணாமூர்த்தி
14. கிராதமூர்த்தி
15. நீலகண்டர்

நன்றி: தயாரிப்பு: வலையப் பேட்டை கிருஷ்ணன்

விளக்கவுதவி: வித்வான் [illegible]ா. சிவகுருநாத பிள்ளை, சுந்தரப் பெருமாள் கோயில்

பார்வை நூல்: திருமயிலை கபாலீச்சுவரம் கும்பா[illegible] மலர், 1982.

28.1. தாமரைமலரில் அமரும் சிவபிரான்:

அடியார்களின் தூய நெஞ்சத்தாமரையில் விரைந்தேகி அமரும் இயல்பினன் கடவுள் என்னும் பொருளில், **திருவள்ளுவர்** "மலர்மிசை ஏகினான்"[1] எனக் கூறிக் காட்டுகின்றார். தூய நெஞ்சத்தைத் தாமரையாக உருவகப்படுத்திக் காணும் நெறியில், **சிவபிரானையும்** தாமரை மலர்மீது அமர்ந்துள்ளவன் என அருளாளர்கள் குறிப்பிடலாயினர். **திருச் சிவபுரப்பதிகத்தில் சம்பந்தப்பெருமான்,**

> "பவமலி தொழிலது நினைவொடு **பதுமநன் மலரது மருவிய**
> **சிவனது** சிவபுர நினைபவர் செழுநில னினில்நிலை
> பெறுவரே"[2]

எனப்பாடிச் செல்வதால், **பதுமனாகிய பிரமனது சிருட்டித் தொழிலைப் புரியும் நினைவுடன் தாமரை மலரில் வீற்றிருக்கும் சிவன்** என ஈண்டுப் பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளமை சிந்திக்கத் தக்கது; இதனால், தாமரை மலரில் அமைந்துள்ள சிவன் திருவுருவத்தைப் பிரமன் தியானித்தலால் அவனும் தாமரையினனாகப் படைப்புத் தொழிலைப் புரிந்து வருகின்றான் என்றும் பொருள்நயங் கூறுவர்.

ஆருயிர்களையெல்லாம் திருவருளால் காக்கும் ஆதியந்தணனாகச் சிவன் விளங்குவதால், அந்தணர்க்கு அடையாளப் பூவாகிய தாமரையைக் கையிலும், தாமரை மலர் மாலையை மார்பிலும் கொண்டு இலங்குகின்றான் இதனை **அப்பரடிகள்,**

> "தங்கையின் யாழும் வைத்தார் **தாமரை** மலரும் வைத்தார்
> கங்கையைச் சடையுள் வைத்தார் கழிப்பாலைச்
> சேர்ப்பனாரே"[3]

என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

1. குறள். கடவுள் வாழ்த்து, 10.
2. திருமுறை, 1,21.1
3. திருமுறை, 4,30,1

"அல்லியந் **தாமரைத்தார்** ஆரூரன்"[1]

என்றும் பாடிச் செல்வதால் உணரலாம். தாமரையை உகக்கும் சிவ பிரானுக்குத் தாமரைமலர்களாலேயே திருவீழிமிழலையில் **திருமால்** வழிபாடு புரிந்ததையும் ஈண்டு நினைவிற் கொள்ளலாம்.

திருமகளுக்குச் **செந்தாமரையும்**, கலைமகளுக்கு **வெண்தா மரையும்**, நான்முகனுக்குப் பொதுவாகத் **தாமரையும்** இருக்கை யாகக் கூறப்படும். சரவணப் பொய்கையில் தாமரையில் தவழ்ந்த **பாலமுருகனுக்கும்** தாமரையை இருக்கையாக அமைப்பது உண்டு. தாமரைக் கண்ணனாகிய **திருமால்**, தாமரை மலருடன் பல் வகைகளில் சார்த்திக் கூறப்படுதல் சமயமரபாகவே உள்ளது. **உமையம்மையும்** தாமரை மலரைக் கையிலேந்தியவளாகச் சித்திரிக்கப்படுகிறாள். இவ்வாறெல்லாம் பல தெய்வங்களும் தாமரை மலருடன் சார்த்தி உணரப்படுவதால், இடபவாகன னாகிய **சிவனையும்** தாமரையிருக்கையில் அமர்த்தியும் அவனுக்குத் தாமரைமலர் மீது கொண்டுள்ள விருப்பத்தைப்பு லப்படுத்தியும் மகிழ்ந்துள்ளது பக்தியுள்ளம்; அந்தப்பக்தியுள்ளம் கலைப்படைப் புக்கள் வாயிலாக விளக்கந்தந்துள்ளமை சிந்திக்கத்தக்கது.

28.1.1. சிவத்திருமேனிகளின் உருவபேதங்கள்:

தமிழ்நாட்டில் சமயங்கள் பலவாக இருப்பினும் மக்களில் இந்துமதப் பிணைப்புடன் பெரும்பாலோர் சைவசமயத்தினராய் இருப்பதாலும், சைவச் சார்புடைய திருக்கோயில்களே பலவாக இருப்பதாலும், **சிற்ப இலக்கணத்துடன் கூடிய அழகுத்திருவுரு வங்கள் பெரும்பாலும் சைவத் தொடர்புடன் கூடியனவாகவே காணப்படுகின்றன.** சிவபிரானின் திருவிளையாடல் வேறுபாடு பற்றிச் சில வடிவங்கள் **போக** அமைப்பிலும், சில **யோக** அமைப் பிலும், சில **வேக** அமைப்பிலுமாக அமைந்துள்ளன. **சிவஞான சித்தியாரில்,**

"யோகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்

1. திருமுறை, 7,22,10

வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்டலோரார்
ஊகியா மூட ரெல்லா மும்பரி னொருவ னென்பார்''[1]

என வருஞ் செய்யுளைக் காண்கையில், உயிர்களுக்குப் போகம் நல்குதற் பொருட்டுப் போகமூர்த்தியாகவும், உயிர்களுக்கு முத்தி யுதவுதற் பொருட்டு யோக மூர்த்தியாகவும், உயிர்களைத் தண்டித்து, அவற்றின் வினை நீக்குதற் பொருட்டு வேக, அல்லது கோப மூர்த்தியாகவும் இறைவன் விளங்குகிறான் என உணரலாம். இவ்வாறான நோக்கிலே, எடுத்துக்காட்டாக **உமா மகேசுவரமூர்த்தியைப் போக மூர்த்தியாகவும், தட்சணாமூர்த்தியை யோகமூர்த்தியாகவும், காலசம்மாரமூர்த்தியை வேகமூர்த்தியாகவும் விளங்குதலைக் காணலாம்.**

சிவனின் உருவபேதம் பற்றிச் சிந்திக்கையில் **க. நவரத்தினம்** எனும் கலைத்திறளாய்வாளர், "ஐந்தொழிற் பொருட்டுப் பராசக்தி யொன்றாலாகிய **சிவம், சக்தி, நாதம், விந்து** என்ற இவைகள் **நிஷ்களம்** என்றும், விந்துவினின்று உதித்த சாதாக்கிய **தத்துவத்தை** அதிட்டித்துள்ள **சதாசிவம், நிஷ்கள களம்** என்றும், சாதாக்கிய தத்துவத்தினின்று உற்பத்தியானதும் ஞானசக்தி குறைந்தும் கிரியாசக்தி நிறைந்தும் இருப்பதுமாகிய **மகேசுவர தத்துவத்தைத்** தனக்கு நிலைக்களமாகக் கொண்டுள்ள சிவனானவன் **சகளசிவன், தடஸ்தசிவன், அதிகாரசிவன்** என்னும் பெயர்கள் பெறுவன் என்றும் சிவாகமங்களில் உரைக்கப்படும்,"[2] என்பது தத்துவ அடிப்படையில் உணரத்தக்கதாகும். கலையடிப்படையிலும் சாத்திர அடிப்படையிலும் இதுபற்றி ஓரளவு விளக்கமாகக் காண்பது சமயப் பண்பாட்டின் சீர்த்தியை யுணர வாய்ப்பாகும்.

பொற்கட்டியும் அதனால் செய்யப்பெறும் **அணிகலன்களும் போலவே சிவபரம்பொருளும் சிவமூர்த்தங்களும்** வேற்றுமை **யற்றவை;** இத்தகைய பக்குவப்பட்டவுணர்வுடன் சிவமூர்த்தங்களைப் போற்றும்போதுதான் சமயவுலகில் தோன்றிய அவற்றின்

1. சுபக்கம், பிரமாணவியல், 50
2. தென் இந்தியச் சிற்ப வடிவங்கள்

நோக்கம் நிறைவேறும்; சமயப்பண்பாட்டின் புலப்பாடும் புரிய வரும்.

28.1.2 மகேசுவர மூர்த்தங்கள் - சிறப்புக்குறிப்பு:

சகளசிவன் எனக் காண்கையில் குணங்குறியோடு கூடிய உருவத்திருமேனியுடைய சிவன் என்பது தெளிவாகும். குணங் குறியற்ற பரம்பொருள் ஆன்மாக்கள் மீது வைத்த பரங்கருணை யால் பல்வகைத் திருமேனிகள் **தன்னிச்சையாக** எடுத்துக் கொள்ளும். சிவபிரான் கொள்ளும் **உருவத்திருமேனிகள்** பலவாக அமைந்திருப்பினும். **மகேசுவர மூர்த்தங்களாக இருபத்தைந்து வடிவங்களே** சிவாகமங்களில் கூறப்பட்டுள்ளன. அவை அர்த்த நாரீசுவரர், சந்திரசேகரர், உமாமகேசர், இடபாருடர், கலியாண சுந்தரர், பிட்சாடனர், காமாரி, காலாரி, திரிபுராந்தகர், சலந்த ராரி, கஜசம்மாரர், வீரபத்திரர், சங்கரநாராயணர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கஜமுகாநுக்கிரகர், சோமாஸ் கந்தர், ஏகபாதர், சுகாசனர், தட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவர்.

சிவபிரானின் அருளுருவத் திருமேனியிலே தோன்றிய குணங் களும், கையிலேந்திய படைகளும், தொழில்களுமாகிய எல்லாம் அவரது முழுமுதல் உண்மையை உணர்த்த அமைந்தவையாகும். எனவே, கலைப்படைப்பில் உருவாக்கியவற்றை அருள்வடிவ வெளிப்பாடுகளே என உணர்தல் வேண்டும். "சிவ வடிவத்திற்குச் சிறப்பாகக் கூறப்பட்ட அங்கங்களாவன: திரிநேத்திரம் (முக்கண்), சதுர்ப்புஜம் (நான்கு கைகள்), சடாமகுடம் என்பன. ஆபரணங் கள், புலித்தோல், உபவீதம் (பூணூல்), ஹாரம் (மாலை) கேயூரம் (தோளணி), குண்டலம், சர்ப்பம் என்பனவாம். ஆயுதங் கள் சூலம், மழு, வாள், வச்சிரம், அபயம், நாகம், பாசம், அங்குசம், கண்டாமணி, அங்கி (நெருப்பு) என்பனவாம்"[1] எனக் கூறி, ஆயுதங்கள் பற்றிய தத்துவத்தை அறிஞர் **க. நவரத்தினம்** விளக்கிச் செல்கிறார். "சூலமானது ஆரணி, செநநி, உரோத யித்திரி என்னும் மூன்று சக்திகளையும் குறிக்கும். **ஆரணி** என்

1. தென் இந்தியச் சிற்பவடிவங்கள், பக். 119

பது சங்காரம், அநுக்கிரகம் என்னுங் கிருத்தியங்களைச் செய்யுஞ் சக்தி; **செநநி** பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்குஞ் சக்தி; **உரோதயித்திரி** திதியும் திரோதானமுஞ் செய்யுஞ் சக்தியாகும். **மழு** சத்தியத்தையும், **வாள்** பிரதாப குணத்தையும்; **வச்சிரம்** பிறிதொன்றாற் பேதிக்கப்படாத இயல்பையும்; **அபயம்** அநுக்கிரகத்தையும்; **நாகம்** சுத்த மாயையையும்; **பாசம்** அசுத்த மாயையையும்; **அங்குசம்** விவர்ணத்தை (அகந்தையை)யும். **கண்டாமணி** சுத்தநாதத்தையும், **அக்கினி** பாச சங்காரத்தையும் குறிக்குமென்பது சைவாகமக் கருத்தாகும்.''[1] என விளக்குவது சிந்திக்கத்தக்கதாகும். மானும் வாளும் ஏந்திய கையனாகச் சிவன் குறிப்பிடப்படுதல் யாவரும் அறிந்ததே; **மான்** அசுத்த மாயையையும், **வாள்** ஞானத்தையும் குறிக்கும் என்பது திருமூலர் திருமந்திரவாக்காகும். மாணிக்கவாசகர், ''ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப் பறையறைமின்''[2] எனக்கூறிச் செல்வது இயைபுடன் கருதத் தக்கதாகும்.

பொதுவாக ஆண்டவனது **திருக்கைகள்** நான்கு அல்லது எட்டு என அமைகையில் உலகெங்கும் நீண்டு பரந்து நிற்கும் **திசைகளைக்** குறிக்கும். அஃது ஒருபுறமிருக்க, இறைவனது **பேராற்றலை** யுணர்த்தவும் திருக்கைகள் பயன்படுகின்றன எனலாம். வேக மூர்த்தம் அல்லது சம்மார மூர்த்தத்தைச் சிற்பத்தில் கொணர்கையில், எட்டு, பத்து, பதினாறு அல்லது பதினெட்டுத் திருக்கைகளுடன் புராணப்பின்னணியில் இயற்றப்படுதலைக் காணலாம்.

பொதுவாகச் சிவன் கைகள் மான்மழு ஏந்தியனவாகியும், அபய வரத முத்திரைகள் உடையனவாகியும் இருப்பதைக் காணலாம் பெரும்பாலும் சிவத் திருவுருவங்கள் உமையாகிய அம்மையுடனே பொருந்திச் சக்தியும் சிவமுமாகவே அமைந்திருக்கும் ஆயினும், பிட்சாடனம், கங்காளம், அர்த்தநாரீசுவரம், சுகாசனம், காமாந்தகம், தட்சணாமூர்த்தம் எனும் திருவடிவங்களுடன் சக்தியின் வடிவங்கள் தனியே அமைக்கப்படுவதில்லை. சிறப்பாக, இறைவன் வேகமூர்த்தமாக அமைகையில் உமையம்மையைக்

1. தென் இந்தியச் சிற்ப வடிவங்கள் பக். 119
2. திருவாசகம், திருப்படையெழுச்சி, 1

தன்னுடன் இணைத்துக்கொண்டு காட்சியளிப்பதில்லை. காரணம், அருளே திருவுருவமாக அமைந்த உமையை — அனைத்துயிர்க்கும் தாயாகிக் கருணைபொழியும் தன் சக்தியைத் — தன் வேகவடிவத்துடன் இணைத்துக்கொள்ளச் சிவன் விரும்பாமையே யாகும்.

சிவலிங்கத்தில் உருவத்திருமேனிக் கூறுகள் சில இருப்பதனால் அதனையே மூலமாகக் கொண்டு அறுபத்து நான்கு இறைவடிவங்களையும் பற்றிக் கூறும் **'சிவபராக்கிரமம்'** என்ற வடமொழி நூலும், **பாம்பன்சுவாமிகள் வரைந்துள்ள 'அட்டாட்ட விக்ரகலீலை'** என்ற தமிழ்நூலும் இக்காலத்தில் கிடைக்கின்றன. இந்த மூர்த்தங்கள் எவ்வாறான அமைப்புக்களைக் கொண்டவை எனச் சிந்தித்து அறிதல் கலைநோக்கில் தேவையேயாகும்.

"திருவானைக் காவலில் அருள்மிகு ஸ்ரீ **ராஜராஜேசுவரர் கோயில் சதுஷ் ஷஷ்டிகலேசுவரர்** என 64 மூர்த்திகளைக் குறிக்கும் வகையில் அத்தனை பட்டைகளுடன் பிரதிட்டிக்கப்பட்டுள்ளது. சென்னை அருள்மிகு ஸ்ரீ **கச்சாலீசுவரர் கோயிலில்** சுமார் 50 மூர்த்தங்களின் படங்கள் உள்ளன. பொதுவாக மகேசமூர்த்தங்கள் இருபத்தைந்து பழக்கத்தில் உள்ளவையாகும். அவைகளை மதுரை அருள்மிகு ஸ்ரீ சுந்தரேசுவரர் **திருக்கோயிலில்** துவஜ ஸ்தம்பத்தின் (கொடிமரத்தின்) அருகே காணலாம். இன்றைய காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் அலகாபாத் திரிவேணி **ஆதிசங்கர விமான மண்டபக் கோயிலிலும்** இத்திருக்கோலங்கள் உள்ளன. அறுபத்து நான்கு சிவமூர்த்தங்களுள், இருபத்தைந்து தனிப்பெருஞ் சிறப்புப் பெற்றவை"[1] என்று **டாக்டர் எஸ். விஸ்வநாத சிவாச்சாரியார்** குறிப்பிட்டுச் செல்வது மனங்கொள்ளத்தக்கதாகும்.

அறுபத்துநான்கு மூர்த்திகளையும் கீழ்க்கண்டவாறு பாகுபடுத்திக் காட்டுவர்'[2] அவற்றை உணர்ந்து சிந்திக்கையில் சிவனது பெருமையும் பேராற்றலும் தெள்ளிதின் புலப்படும்.

1. 'சிவபெருமானின் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள்' எனும் நூலுக்குச் சுகவனேஷ்வர் எழுதிய விமர்சனம்; திருக்கோயில், நவம்பர், 1991
2. மேலது.

மூல அல்லது பொதுவடிவு	அதனுடன் இணைந்த திருவுருவங்கள்
1. **இலிங்க முர்த்தி**	1. **இலிங்கோத்பவர்**
	2. முகலிங்க மூர்த்தி
2. **சதாசிவம்** (சுகுண பிரம்மம்)	1. மகாசதா சிவ மூர்த்தம்
	2 இலகுளேசுவர மூர்த்தம்
	3. ஏகபாத ஏக மூர்த்தம்
3. அ) **உமா மகேசமுர்த்தி**	1. சுகாசன மூர்த்தி
	2. உமேசமூர்த்தி
	3, **சோமாஸ் கந்தர்**
	4. **சந்திரசேகரர்**
	5. **இரிடபாருடர்**
	6. **கங்காதரர்**

மூல அல்லது பொதுவடிவு	அதனுடன் இணைந்த திருவுருவங்கள்
	7. கங்கா விசர்ச்சனர்
	8. **கலியாண சுந்தரர்**
	9. அர்த்த நாரீசுவரர்
	10. கௌரி வரப் பிரதர்
	11. கௌரீ லீலா சமன் வித மூர்த்தி
	12. பிரார்த்தனா மூர்த்தி
ஆ) **நடேச முர்த்திகள்**	1. சந்தியா நிருத்தர்
	2. **சதா நிருத்தர்**
	3. ஊர்த்துவதாண்டவ மூர்த்தி
4. **தட்சணாமுர்த்தி**	1. **யோக தட்சணாமுர்த்தி**
	2. வீணா தட்சணா மூர்த்தி
	3. குரு மூர்த்தி
5. **வீரமுர்த்திகள்**	
அ) தேவர்களின் செருக்கினை அடக்கிய மூர்த்தங்கள்	1. சரபமூர்த்தி
	2. வீரபத்திரர்

	3. தட்சயக்ஞஹதமூர்த்தி
	4. கங்காள முர்த்தி
	5. மத்ஸ்யாரி
	6. கச்சபேசுவரர்
	7. வராஹாரி
	8. காமதகன முர்த்தி
ஆ) அத்திர முர்த்தங்கள்	1. பாசுபத மூர்த்தி
	2. அகோராத்திர மூர்த்தி
	3. கிராத மூர்த்தி
இ) அசுரர் அரக்கர் முதலி யோரை அழிக்கும் மூர்த்தங்கள்	1. திரிபுராந்தகர்
	2. கச சம்மாரர்
	3. சார்துலஹர மூர்த்தி
	4. சலந்தரவத மூர்த்தி
ஈ) பைரவ முர்த்தங்கள்	1. ஆபத் உத்தாரண மூர்த்தி
	2. வடுக மூர்த்தி
	3. சேத்திர பாலக மூர்த்தி
	4. பிரம்ம சிரச்சேத மூர்த்தி
	5. இரத்த பிட்சாபிரதான மூர்த்தி
6. வைத்திய முர்த்திகள்	1. ஜீவராபக்ந மூர்த்தி
	2 மிருத்யுஞ்சய மூர்த்தி
	3. நீலகண்ட மூர்த்தி
7. அயன்மாலுக்கு முதல்வன் என விளங்கும் முர்த்திகள்	1. சங்கர நாராயண மூர்த்தி
	2. ஏக பாத திருமூர்த்தி
	3. திரிபாத திருமூர்த்தி
	4 சக்கரப் பிரத மூர்த்தி
8. ஏனைய லீலா முர்த்திகள்:	1. இடபாந்தகர்
	2. புசங்கலலித மூர்த்தி
	3. புசங்கத்திராச மூர்த்தி
	4. பிட்சாடன முர்த்தி

5. சண்டேசானுக்கிரக மூர்த்தி
6. அசுவாரூட மூர்த்தி
7. கசாந்திக மூர்த்தி
8. கருடாந்திக மூர்த்தி
9. சிஷ்யபாவ மூர்த்தி

மேற்காணும் சிவமூர்த்தங்களைப்பற்றி விளக்கமாகப் பண்பாட்டு அடிப்படையில் ஆராயலாம். எனினும், தேர்ந்தெடுத்த சில மூர்த்தங்களுக்கே ஈண்டு ஓரளவு விளக்கம் தரப்படுகிறது. ஏனையவற்றை ஆகம விளக்க நூல்களில் கண்டு கொள்க,

தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் ஆன்மநலம் வளர்க்கும் அழியாக் கலைப்பெருஞ் செல்வங்களான சிற்பத்திருவுருவங்களை ஓரளவேனும் புரிந்து போற்ற மகேசுவர மூர்த்தக் குறிப்புக்கள் பயன்படும்.

சிவமூர்த்தங்கள் அறுபத்து நான்காகக் குறிப்பிடப்படினும் இலக்கியங்களில் மிகச் சிறப்பாகப் போற்றப்படுபவை சிலவே; அவற்றுள்ளும் நடேசமூர்த்தி, இடபாரூட மூர்த்தி, சந்திரசேகர மூர்த்தி, கலியாணசுந்தரமூர்த்தி, தட்சணாமூர்த்தி பிட்சாடன மூர்த்தி, திரிபுராந்தக மூர்த்தி, பைரவ மூர்த்தி, சங்கரநாராயண மூர்த்தி, கஜசம்மார மூர்த்தி, காலசம்மாரமூர்த்தி, அர்த்த நாரீசுவரமூர்த்தி, வைரவமூர்த்தி, நீலகண்டமூர்த்தி ஆகியவை மிகச்சிறப்பிற்கு உரியநிலையுடன் இலக்கியங்களிலும் திருவிழாக்களிலும் கொண்டாடப் பெறுதலைக் காணலாம்

28.1.3 இலிங்கமும் மகேசுவர மூர்த்தங்களும்-ஒப்பீடு:

ஊரும் பேரும், குணமும் குறியும், முன்னும் பின்னும், போக்கும் வரவும், புணர்வும் பிரிவுமில்லாப் பரம் பொருளைக் குணம் குறிகளால் வகுக்கும் எல்லைக்குள் அகப்படுத்திப், புறத் தோற்றங்கொடுத்து மக்களின் பார்வைக்குள் அடங்கச் செய்யும் முயற்சியின் விளைவே தெய்வச்சிலையாகும். **ஆன்மாக்கள் உய்ய வேண்டித் தெய்வம் தன் அருள்மேலீட்டால் பல்வேறு உருவங்கள் கொள்கின்றது.** புலன்களால் எட்டவியலாத தெய்வத்தை அறிய

வழிவகையறியாமல் தடுமாறும் சிற்றறிவுடையவர்களுக்குள் தெளிவும் பக்குவமும் ஓரளவு உடையவர்க்கு உரியதாகச் **சிவலிங் கத்திருமேனி** அமைகிறது. இதனை யுணரமாட்டாத எளியவர் களுக்காகவே **கை கால் முகம் முதலிய உறுப்புக்கள் பொருத்திய இறைத்திருவுருவங்களாகும்.** அத்தகைய திருவுருவங்கள் உலகத் திலேயுள்ள பல வகைப்பட்டவர்கள் தகுதிக்கும், ஆவலுக்கும் கற்பனை விருப்பங்களுக்கும் ஏற்றவாறு, வழிபடுவதற்கேற்ற வண்ணம் அவை பல வகைப்பட்டு விளங்குகின்றன

"இந்திரியங்களால் கிரகிக்க முடியாத இறைவனை அறிய வகையறியாது தடுமாறும் சிற்றறிஞர்களுக்குள் விவேகமும் பக்கு வமும் மிக்கவர்க்குரியது சிவலிங்கத்திருமேனி இதைக் கிரகித்து இறைவனை உணரமாட்டாதார்க்கே கை கால் முதலிய உறுப்புக் கள் பொருந்திய இதர தோற்றங்கள்"1 என்று **எஸ். சுவாமிநாத சிவாசாரியார்** கூறுவது இங்குச் சிந்தித்துத் தெளிதற்குரியதாகும்.

இறைவனைச் **சிலைவடிவில் வழிபாடு செய்வதைவிட இலிங் கத்தில் வழிபாடு செய்வது மிக மேலானதாகும்;** இதனை **மகா பாரதத்திலுள்ள ஒரு நிகழ்ச்சி** விளக்கி நிற்கும்.

"அசுவத்தாமன் (துரோணரின் மகன்) அக்கினி அஸ்திரத்தை நரநாராயணர்கள்மேல் பிரயோகித்தார். அது பாண்டவர்கள் சேனையை அழித்தது. ஆனால் நரநாராயணருக்குத் தீங்கு செய்ய முடியாது போயிற்று. இதனால் மனமுடைந்த அசுவத் தாமன் போரை நிறுத்திக் களத்தைவிட்டு ஓடினான். வியாச முனிவர் அசுவத்தாமனுக்கு முன் எதிர்ப்பட்டு, "நீ யாது காரணத்துக்காகப் போரைவிட்டு ஓடுகிறாய்?" என்று கேட்டார்; நான் பிரயோகித்த அக்கினி அஸ்திரத்துக்கு எவரேனும் தப்ப முடியாது; நரநாராயணரைச் செயிக்க முடியாதுபோன காரணம் யாது என அறியப் போகின்றேன்" என்றான். கேசவார்ச்சுனரைப் போல் நீ தவத்தினால் சிறந்தனையேயாயினும், அவ்விருவரும் யுகந்தோறும் சிவபிரானை இலிங்கத்திலே அர்ச்சிக்கின்றார்கள். நீ அச் சிவனை விக்கிரகத்தில் வழிபடுகிறாய்; ஆதலின் அவர் தவ வலிமை உனது தவ வலிமையில் சிறந்தது" என்று **வியாசர்**

1. சிதம்பரம் ஸ்ரீ சிவகாமியம்மாள் திருக்கோயில் திருக்கும்பாபிஷேக மலர். 972, பக். 34

கூறினார். எனவே, **மகேசுவர வடிவங்களுக்கும் மேலானது சிவலிங்கம்** என்பதும், அவ்வழிபாடு மிக்க சிறப்புடையது என்பதும் சிவாகமநூல் துணிபு ஆகும்''[1] என **எஸ். காளஹஸ்தீஸ்வரக்குருக்கள்** எழுதிச் செல்வது காண்க.

28.2. அர்த்தநாரீசுவரர்:

சிவன் தான் ஒரு பாதியாகவும் உமையம்மை மற்றொரு பாதியாகவும் கொண்டிலங்கும் திருவுருவமே அர்த்தநாரீசுவர மூர்த்தமாகும். **மாதொரு பாகன்** என்றும் **அம்மையப்பன்** என்றும் இவ்வடிவம் வழங்கப்படும். ஆணும் பெண்ணும் இணைதலாய்ப் படைப்பாக்கம் எனும் சமயவுண்மையை உலகுக்குணர்த்த மேற்கொண்ட திருவுருவமே இதுவெனலாம்.

புராணப் பின்னணியைச் சிறிது காணின் இவ்வுருவத்தின் சிறப்பு இனிது புலப்படும்.

உலகத்தில் மக்களினத்தைத் தோற்றுவிக்கப் படைப்புத் தெய்வமான **நான்முகன்** பிரசாபதிகள் என்னும் ஆணினத்தைத் தோற்றுவித்து, மானுடர்களை உலகில் ஏற்படுத்துமாறு கட்டளையிட்டான். அவர்களால் அந்தக் கட்டளையை நிறைவேற்றித்தர இயலவில்லை. இந்நிலையில் குழப்பமடைந்த நான்முகன், சிவனை வணங்கி, இனப்பெருக்கம் ஏற்பட வழிவகை செய்யுமாறு வேண்டிக்கொண்டான். சிவன் அர்த்தநாரீசுவரர் திருக்கோலத்தில் காட்சியளிக்கவே, நான்முகன் தம் தவற்றினையுணர்ந்து, இனப்பெருக்கத்திற்கு ஆணும், பெண்ணும் இணைந்திருக்க வேண்டிய உண்மையைப் புரிந்துகொண்டான் என்பர்.

அர்த்தநாரீசுவரர் தொடர்பாக மற்றொரு புராணப் பின்னணியும் உண்டு. திருக்கயிலை மலையில் தம் தேவி பார்வதியுடன் சிவபிரான் அமர்ந்திருக்கையில், சிவபிரானிடம் மட்டுமே பத்திபூண்ட **பிருங்கி முனிவர்** அவரை மட்டும் நாள்தோறும் வலம் வந்து வணங்கிவந்தார். இதனைக் கண்ட அம்மை சினங்கொண்டு, பிருங்கியின் உடலில் தசையும் குருதியும் வற்றிப்

1. திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சனமலர், 1976, பக். 33

போகுமாறு சாபமிட்டாள். இதனால் பிருங்கி ஒடுங்கி ஓர் எலும்புக்கூடு போலானார். நிற்கவும் இயலாத பிருங்கி நிலையினைக்கண்ட சிவபிரான் அவருக்கு மூன்றாவது காலை வழங்கியுதவினார். அதனால் பெருமகிழ்ச்சியுற்ற முனிவர் சிவனருளை எண்ணித் தம் மூன்று கால்களால் நடனம் ஆடினார் (பிருங்கி நடனம்). எனினும், தம் வழிபாட்டு நியமத்தில் சிறிதும் மாறாமல், அம்மையை வணங்காமல் சிவனை மட்டுமே வழிபட்டு வந்தார். மேலுஞ் சினங்கொண்ட அம்மையார் இறைவனைக் குறித்து நோன்பியற்றி இறைவனுடைய இடப்பாகம் முழுவதிலும் இடம்கொள்ளும் வரம் பெற்றாள். சிவனும் உமையம்மையும் இணைந்த நிலைகண்ட பிருங்கி முனிவர், வைராக்கியத்தில் தளராமல், சிவனை மட்டும் வழிபட ஒரு வண்டுருவங்கொண்டு, சிவசக்தியிணைந்த திருவுடலைத் துளைத்துக் கொண்டு வலம் வந்து சிவனை மட்டுமே வணங்கிச் சென்றார். பக்தியின் உயிர், வைராக்கியத்தில் உள்ளது என்பதைச் செயற்படுத்திக் காட்டினார்; யாரும் செய்யவியலாத வியத்தகு செயலைப் புரிந்தார். இவரது பக்திவைராக்கியச் சிறப்பினைக் கண்ட அம்மையார் பாராட்டி அவருக்கு அருள் புரிந்தார். ஆகவே, முனிவருக்காக இணைந்த திருவுருவமே அர்த்தநாரீசுவரராகப் போற்றப்படுகின்றது என்பர்

28.2.1 சிற்பக் கலையில் அர்த்தநாரீசுவரர்:

சிவன் திருக்கோயில்கள் பலவற்றிலும் அர்த்தநாரிசுவரரின் திருக்கோலம் காணலாம். சிற்பங்களில் அர்த்தநாரீசுவரரது வலப்பாகம் சிவனுடைய சிறப்புக் கூறுகளைக் கொண்டும் இடப்பாகம் உமையம்மையின் சிறப்புக் கூறுகளைக் கொண்டும் விளங்கும்.

இத்திருவுருவத்தில் வலப்பக்க ஆண்தலையில் சடைமுடியும் பிறைமதியும், வலக்காதில் மகரகுண்டலம் அல்லது சர்ப்பக் குண்டலமும் காட்சியளிக்கும். நெற்றிக்கண்ணில் பாதி, வலப்பக்க அர்த்தநாரீசுவரரின் வலப்பக்க நெற்றியில் அமைந்திருக்கும். வலப்பக்கம் ஆணின் மார்பையும், வலப்பக்க உடல் முழுதும் திருநீற்றையும், வலப்பக்க இடை புலித்தோலாடையையும் பொருந்தி விளங்குமு. பாம்பாலான பூணூல் வலப்பக்க

மார்பில் காணப்படும். வலக்காலைச் சிறிது வளைத்துக் கொண்டு நிற்பதும் தெரியும். ஆக வலப்பக்கம் முழுமையும் ஆடவர்க்குரிய அமைப்புக்களைப் பெற்று ஓரளவு அச்சத்தைத் தருவதைப் போன்று காணப்படும்.

இடப்பாகம் பெண்மைக்குரிய அழகினையும் பொலிவையும் பெற்று, அம்மையாரின் சிறப்புக் கூறுகளைக் கொண்டு இலங்கும். இடப்பக்கத்துத் தலையில் கரண்ட மகுடமும், நன்றாகச் சீவப் பட்டு ஒரு கயிற்றினால் கட்டப்பட்ட தலைமுடியும் இனிது காட்சியளிக்கும். இடப்பக்கச் செவியில் 'வாளகா' எனும் குண்டலம் காணப்படும். இடக்கண்ணில் மை பூசப்பெற்றும், இடப்பக்க நெற்றியில் பொட்டு இடப்பெற்றும் காட்சியளிக்கும். இடப்பக்கக் கைகளில் வளையல்களிருக்க இடப்பக்க மார்பில் பெண்மைப் பூரிப்புடன் கூடிய திரண்டு உருண்ட பொலிவினைக் காணலாம். இடப்பக்கக் கழுத்தில் மகளிர் கழுத்தணிகளும் இடப்பக்கக் கணுக்காலில் சிலம்பும், இடப்பாதம் மருதாணியிட்ட சிவப்புடனும் காட்சியளிக்கும். பெண்மைக்குரிய இடப்பக்க முழுமையும், கருநிறம் அல்லது கிளிப்பச்சை வண்ணங்கொண்டு விளங்கும்

''அர்த்தநாரீசுவரரின் சிற்பங்கள் நான்கு, மூன்று அல்லது இரண்டு கைகளைப் பெற்றுக் காணப்படுகின்றன. நான்கு கைகள் உள்ள அர்த்த நாரீசுவரரின் வலக்கைகளுள் ஒன்று மழு அல்லது சூலத்தையும், மற்றொன்று வரதமுத்திரை அல்லது அபய முத்திரையையும் கொண்டிருக்கும்,

இடப்பக்கக் கைகளுள் ஒன்று சிறிது வளைந்து சென்று நந்தியின் தலையினைத் தொட்டுக் கொண்டிருக்கும்; மற்றொரு கை கடகமுத்திரையுடன் நீலோற்பலம் எனும் மலரினைப் பெற்றிருக்கும். நான்கு கைகளுடைய அர்த்தநாரீசுவரரின் சிற்பம் பாதாமியில் உள்ள குடைவரைக் கோயிலிலும், மாமல்லபுரத்தில் உள்ள தருமராசா இரதக் கோயிலிலும் உள்ளன. சென்னை அருங்காட்சியகத்தில் காணப்படும் அர்த்தநாரீசுவரரின் வெண் கலச் சிலை, நான்கு கைகளைக் கொண்டது.

மூன்று கைகள் உள்ள அர்த்தநாரீசுவரரின் இரண்டு கைகள் வலப்பக்கமும், ஒரு கை இடப்பக்கமும் காணப்படும். வலப்பக்கக்

கைகளில் சூலமும், அட்சமாலையும், இடப்பக்கக் கையில் மலர் அல்லது கண்ணாடி அல்லது கிளியும் இருக்கும். கும்பகோணத் திலுள்ள நாகேசுவர சுவாமி கோயிலின் அர்த்தநாரீசுவரரின் சிற்ப மும் மூன்று கைகளையுடைய சிற்பங்களாகும்''[1] எனவருங் குறிப்பு அரிதின் போற்றத்தகும் கலைநுணுக்கச் செய்தியாகும்.

இவையே யல்லாமல், அர்த்தநாரீசுவரர் திருவுருவம் இரு கைகளை மட்டுங்கொண்டே அமைந்திருப்பதும் காணலாம். இத்தகைய வுருவத்தில், வலக்கை வரதமுத்திரை அல்லது கபாலமாகிய மண்டையோட்டினைக் கொண்டும், இடக்கை கீழ் நோக்கி வளைந்து நந்திகேசுவரரின் தலையினைத் தொடுவது போன்றும் காணப்படும். பொதுவாக, அர்த்த நாரீசுவரருக்கு அருகில் நந்திகேசுவரரை அமைப்பது உண்டு.

சிற்ப உலகில் பொதுவாக அர்த்தநாரீசுவரர் திருவுருவத்தில் சிவனுக்கு முதன்மையும், அவனுக்கு அடுத்த நிலை சக்தியாகிய உமையம்மைக்கும் தரப்பெறும். இதற்கு மாறாகச் சக்திக்கு முதன்மையும் சிவனுக்கு அடுத்த நிலையும் தந்த அர்த்தநாரியைச் சிற்பியர் அமைப்பதும் உண்டு. எடுத்துக்காட்டாகத் தாராசுரத் திலுள்ள அர்த்தநாரீசுவரரைக் காண்க. பொதுவாக ஆண் பெண் கூறுகள் இணைந்த அர்த்தநாரீசுவரர் திருவுருவத்திலே வலக் கரங்களிலே உருத்திராக்கமாலை, கத்தி கட்வாங்கம், தாமரை இருக்க, இடக்கரங்களிலே பாசம், அபயம் தண்டம், கபாலம் பொருந்தியிருத்தலைக் காணலாம்.

(இடப்பாகம் திரண்ட மார்பகத்துடனும், கணுக் கால்வரை நீண்ட ஆடையுடனும் கூடிய அர்த்தநாரீசுவரருக்குப் பொது வாக வலப்பாகம் சடைமுடியிருக்கும்; மூர்க்கப் பார்வையும் இருக்கும்) ''சிலையில் இடப்புறம் கரண்ட மகுட மிருப்பதற்குப் பதிலாகத் தலைமுழுவதும் கரண்ட மகுடமாகவேயிருத்தலைக் காணலாம். எனவே, தேவியின் அங்கமாகவே சிவன் அமைந் துள்ளான் எனக் கருதுமாறு இது காட்டப்பட்டிருக்கிறது''[2].

1. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி ஒன்று, பக். 571
2. ஞானவழி, டிசம்பர், 1989.

தியானமந்திரத்தின் உதவியால் பொதுவாகச் சிற்பியர் தெய்வச்சிலைகளை வடிப்பது மரபே; எனினும், தெய்வநலக் கலைக் கற்பனையுடன் உள்ளுணர்வின் உந்துதலால் கலைப் படைப்புக்களை உருவாக்குகையில் சிற்பியர் தெய்வத்தின் திரு முன்னரே தாம் இருப்பதாகிய ஒன்றிய உணர்வினையும் பெறுவர். அந்நிலையில், மேற்காணும் கலைப்படைப்பினைப் போன்று சிலவற்றை விந்தைக் குரியனவாக, ஆனால் அரியன வாகப் படைத்துக் காட்டியுள்ளனர்.

பொதுவாகப் பழம்பெருந்திருக்கோயில்களில் — பாடல் பெற்ற சிவத்தலங்களில் — சிவலிங்கமே மூலவராகப்பணிபூசனை ஏற்றுக் கொள்ளும் நிலையிலிருக்கும். ஆனால், **திருச்செங்கோடு மலை மீதுள்ள கோயிலில் மூலத்தான மூர்த்தியாக விளங்கியருள்வது அர்த்தநாரீசுவர வடிவமேயாகும்.** பாடல் பெற்ற தலங்களுள் இவ்வடிவினில் இறைவனைப் பூசிப்பது வேறெங்கும் இல்லை யென்பது **கோயிற் கலைப்பண்பாட்டு** அடிப்படையில் மனங் கொள்ளத் தக்கதாகும்.

28.2.2. அர்த்த நாரீசுவரர் — தத்துவம்:

காணப்படும் இவ்வுலகம் மட்டுமன்றி, அண்ட சராசரங்களும் **அனைத்து** அண்டங்களும் வெளிகளும் உயிரினங்களும் இயற் **கையின்** அனைத்து அம்சங்களுமே பரம்பொருளாகிய கடவுளால் **படைக்கப்பட்டவை** என இந்துமத நூல்கள் கூறிக்காட்டும். இதுபற்றி ஆராய்ச்சி மேற்கொண்ட வல்லுநர்கள் ஒருவகைத் தெளிவான கொள்கையைப் புலப்படுத்தியுள்ளனர். அதனை **ஊன்றிப்பார்க்கையில் அர்த்தநாரீசுவர தத்துவத்திற்கான** பிடிப்பு **உள்ளதை** உணரலாம். ''இந்து மதநூல்கள்...... இப்படிப்பட்ட ஒரு **மா**பெருஞ் சக்திக்கு ஒருபகுதி **நிலைத்திருக்கும்** பண்புடனும் இன்னொரு பகுதி **இயங்கும்** பண்புடனும் அமைந்திருப்பதாகவும் கூறும். இதுவே **சிவ — சக்தி** தத்துவத்தின் அடிப்படை; உருவ அமைப்பில் **அர்த்தநாரி** எனக் குறிப்பிடப்படுவதும் இதுவே.

அர்த்தநாரீசுவரரின் வலப்பகுதி பூரண ஞானம் கொண்டது. இடப்பகுதி விரிவான சக்தியைக் கொண்டது. வலப்பாகமான **சிவம் நிலைத்த சக்தியின்** உருவம் (Static power); இடப்பாக **உருவம்**

சக்தி இயங்கக் கூடியது (Active energy). இது மாறுதல்களையும் இயக்கத்தையும் தோன்றச் செய்யக் கூடியது. உலகத்திலுள்ள சக்திகள் எல்லாமே இந்த இரண்டு வகைகளுள் அடங்கக் கூடியவை தாம். இதுவே **அர்த்தநாரீசுவா தத்துவம்''**[1] எனக் குறிப்பிடப்படுவது சிந்தித்துப் போற்றுதற்குரியதாகும்.

சாக்த மதம் தென்னாட்டில் பரவி வளர்ந்ததன் பயனாக **மாதொரு பாகர்** திருவுருவம் மிகுந்த சிறப்பினைக் கொண்டது. இஃது இல்லற வாழ்வினர் சிறப்பாக வழிபடத்தக்க திருவுருவம் என்பதால், இதனை வழிபடும் நிலையில் மக்களிடம் காம இச்சை படிப்படியாகக் கெடவும், பால்வேற்றுமையிலிந்து விடுபடவும் இயலும் என்பர்; மேலும், ஆண்மை மாறி ஒளிமயமான புருடர்களாவதற்கு வாய்ப்பு உண்டாக்கும் எனநம்பினர்.

தத்துவ நோக்கில் அமையப்பெறும் அர்த்தநாரீசுவரரைப் போற்றும் வகையில் **திருவாசகமும்** குறித்துச் செல்லும்; இதனைத்.

''தோலும் துகிலும் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ''[2]

எனவரும் பாடலால் காண்க. இதற்குச் சிரசின்மேல் **வெண்ணிற ஒளியையும் பச்சையொளியையும்**. நாதமும் சோம சூரிய அக்கினி மண்டலங்களையும் காண்பர் என்பது பொருள்; இறைவர் சூழ வட்டமாக மண்டலமாக விளங்குவதில் **சிவமும் சக்தியும்** உள்ளது என்று மெய்ப்பொருளியலார் விளக்கங் கூறுவர். இவ்வாறான தத்துவச் சிந்தனைகளுக்குத் **திருவாசகத்தில்,**

''பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே''[3]

1. ஞானபூமி, ஏப்ரல் 1988
2. திருக்கோத்தும்பி, 18
3. கண்டபத்து 10

எனவரும் பாடல் ஊற்றுக்களமாய் விளங்கும். '**உயிருக்கு** உயிராய் உடங்கியைந்து இயக்குந்தன்மையுடைய அர்த்த நாரியைக் கிளரொளியை மரகதத்தை' எனக் குறித்தமையால் நன்கு உணரலாம்.

உமையொரு பாகனாகச் சிவபிரான் விளங்குந்தன்மை தமிழ்ப் பெருமக்கள் பண்டுதொட்டே உணர்ந்த செய்தியேயாகும். மாதொரு பாகனாய்ச் சிவன் இருக்குத் தன்மையும், பின்பு அப்பெண்ணுருவைத் தன்னுள் அடக்கிக் கொண்டு தான் மட்டும் விளங்குந் தன்மையும் உடைய இயல்பினைத் தமிழர்கள் உணர்ந்து போற்றியுள்ளனர். இதனைப் **புறநானூறு கடவுள் வாழ்த்தில்**.

''பெண்ணுரு வொருதிற னாகினின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்''

எனப் **பாரதம் பாடிய பெருந்தேவனார்** பாடிச்செல்வதால் உணர லாம். இறைவனது ''தொன்மைக் கோலம்'' என்ற தொடர்பில் அறிஞர் **கி. வா. ஜகந்நாதன்** எழுதியுள்ள குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது. அது வருமாறு; தத்துவங்களையும் பிரபஞ்சத் தையும் படைப்பதற்கு முன்பு இறைவன் தனக்கே உருவத்தைப் படைத்துக் கொள்கிறான். எல்லாவற்றையும் படைப்பது அருட் சக்தியாதலின், அச்சக்தியை முதன்முதலாகத் தன் ஒரு பாதியில் புலப்படும்படி கோலம் கொள்கிறான். தனித்தனியே அம்மையும் அப்பனுமாகக் கோலம் கொள்வதற்கு முன்பு, திருமால் பிரமன் முதலிய மூர்த்திகளை உண்டாக்குவதற்கு முன், பெரும்படைப் பின் முதற் செயலாகத் தன்னையே **மாதிருக்கும் பாதியனாகப்** படைத்துக் கொள்கிறான்; 'பாதி மாதுடனாய பரமனாக' விளங்குகிறான். பிறகே தனித்தனியே பிரிந்து '**இடபாரூடர், சந்திரசேகரர் சோமாஸ்கந்தர்** என்று பல கோலங்களை எடுத்துக் கொள்கிறான்.''[1] இதனால், பரம்பொருளாகிய சிவனின் தொன்மைக்கோலம் அர்த்தநாரீசுவரர் என்பது தெளிவாகும்.

1. *திருக்கோயில் (17 ஆம் ஆண்டு மலர்) 1974*

28.3. ஆடல்வல்லான் — திருவுருவச் சிறப்பு:

ஐம்பூதத் தலங்களுள் ஆகாசத் திருத்தலமாகத் தில்லைப் பேரூர் கருதப்படும். இவ்வூருக்கு **ஞானாகாசம்**, **சிதாகாசம்**, **சிற்றம்பலம்**, **சிதம்பரம்** எனப் பல பெயர்கள் உண்டு. இத்தலத்தின் சிறப்பு நடராசப் பெருமானாகிய ஆடல்வல்லான் எனும் மூர்த்தியால் அமைந்ததாகும்.

நடராசப் பெருமானுக்கு அமைந்த **சபைகள் ஐந்து** ஆகும். திருவாலங்காடு **இரத்தினசபையாகவும்**, மதுரை இரசித சபையாகவும், திருநெல்வேலி **தாமிரசபை** யாகவும், திருக்குற்றாலம் **சித்திரசபை** யாகவும், சிதம்பரம் **கனகசபை** யாகவும் அமைந்து அவனது ஆடற்கோலத்தை உலகுக்கு உணர்த்தும்.

இவையே யல்லாமலும் தில்லைப் பெருங்கோயிலிலேயே நடராசருக்கு ஐந்து சபைகள் உண்டு. அவை முறையே **சிற்சபை**' **இராச சபை**, **கனக சபை**, **நிருத்த சபை**, **தேவசபை**, என வழங்கும்.

பொதுவாகச் சிவபெருமான் புரிந்தருளும் ஆடலைத் **தாண்டவம்** என்பர். அந்தத் தாண்டவங்கள் ஏழுவகையின; அவை முறையே **காளிகாதாண்டவம்**, **கௌரிதாண்டவம்**, **சந்தியா தாண்டவம்**, **சங்கார தாண்டவம்**, **திரிபுர தாண்டவம்**, **ஊர்த்துவ தாண்டவம்**, **ஆனந்த தாண்டவம்** என அமையும். இவற்றுள் தில்லையில் ஆடியருளிய இறைவனது தாண்டவம் ஆனந்த தாண்டவம் ஆகும். நடராசப் பெம்மான் **ஆனந்தக் கூத்தன்** என்பதை **மணிவாசகப் பெருமான்**,

',ஆனந்தக் கூத்தன்
அருள்பெறில் நாம் அவ்வணமே
ஆனந்த மாகிநின்று
ஆடாமோ தோள்நோக்கம்''[1]

எனக் குறிப்பிடுதலால் அறியலாம்.

1. திருவாசகம், திருத்தோணோக்கம், 8

எல்லாம் வல்ல பரமன், தனக்கென ஒருருவும் பெயரும் கொண்டிராவிடினும் உயிர்களின் உய்திக்காக மேற்கொள்ளும் திருவுருவங்கள் பலவாகும். அவற்றுள் **நடராச வடிவமே** மிகச் சிறந்ததாகும்.

நடராசத் திருவுருவம் பழமையும், பெருமையும் வாய்ந்து, நலங்கள பல நல்குந் திறத்தது. உலக மக்கள் - சிறப்பாகக் கலை வல்லுநர்கள் - போற்றிப் புகழுஞ் சிறப்பினையுடையது; இத்திருவுருவம் இடம் பெறாத சைவக் கோயிலைத் தமிழகத்தில் காண வியலாது. இத்தகைய ஆடல் வல்லானிடத்தும், அப்பெருமானின் திருவடிவச் சிறப்பிலும் தமிழ்ச் சான்றோர்கள் பலரும் மிகவும் ஈடுபாடு கொண்டு, தாம் பெற்ற அருளனுபவங்களை இலக்கியங்கள் வாயிலாகக் கூற முயன்றுள்ளனர்.

ஆடல்வல்லானின் பெருமையைப் பண்டைய தமிழ்ப்பெரு மக்களும் உணர்ந்திருந்தனர் என்பது சிலப்பதிகாரம் கலித்தொகை போன்ற இலக்கியங்களில் காணலாகும் புகழுரைகளால் அறியலாம். பக்தியிலக்கியக் காலத்திலே தோன்றிய சைவப் பெருமக்கள் பாசுரங்களாலும், திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமடலாலும் ஆடல்வல்லானது திருக்கூத்துப் பெருமையை விளக்கமாக உணரலாம்.

நடராசத் திருவடிவம் கலைநலம் மிக்கது; கவர்ச்சி மிகு அவ்வடிவத்தின் ஒவ்வொரு பகுதியும் தத்துவ நுட்பங் கொண்டது எனலாம்.

சூரியன் தோன்றுங் காட்சியிலும், கடலலைகளிடையேயும், கோள்கள் - விண்மீன்களின் சுழற்சியிலும், மின்னல் இடி மழையிலும், மலைவீழ் அருவியிலும், பாய்ந்தோடும் ஆறுகளிலும், பிரளய இயக்கத்திலும், அனைத்துயிர்களின் இயக்கத்திலும் **ஆடல்வல்லானின் கூத்துக் கூறுகளைக்** கண்டு களிக்கலாம் என்பர். அற்புதக் கூத்தன் தன் கண்களை மூடிக் கொண்டே அல்லும் பகலும் ஆடிக்கொண்டிருக்கிறான்; அவன் விழிதிறந்த நிலையில் ஆடினால் விழியிலிருந்து தோன்றும் கனற்பொறியால் உலகமே சிதைந்து உருக்குலைந்துவிடும் என்பர்.

ஒவ்வொருவர் நெஞ்சிலும், நாடியிலும் உயிர்த் துடிப்பாய் விளங்கும் **சுத்த சக்தி சிவமே** நடராசர் ஆகும் என்பதை உணர்த்தும் வகையில் **திருமுலர்,**

"தத்துவம் ஆடச் சதாசிவம் தானாடச்
சித்தமும் ஆடச் சிவசக்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் அம்பலக் கூத்தே"[1]

எனக் கூறிக் காட்டுகிறார். பிறவி வேரைக் களையும் இத்திருமந்திரம் நடராசப் பெருமானையே **நவதந்திரயோகமூர்த்தியாகப்** புகழ்ந்து போற்றுகிறது.

திருநாவுக்கரசரோ நடராசத் திருவுருவக் காட்சியைக் காணும் நோக்கத்தில் மனிதப்பிறவியை மதித்து வேண்டி நிற்கிறார்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்
சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்
வெண்ணீறும்
இனித்த முடனே எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே"[2]

இந்தப் பாசுரம் நடராசப்பெருமானை ஒரு வகையில் படம் பிடித்ததே போன்ற சிறப்பினையுடையது; சிற்பியர்க்கு ஒரு வகையில் 'தியான சுலோகம்' போலுள்ளது.

28.3.1 ஆடல்வல்லான் - தத்துவ நுட்பம்:

நடராசப் பெருமானின் ஒவ்வொரு பகுதியும் கவினுடையதாய் மெய்ப்பொருளியலுண்மைகளைப் புலப்படுத்தும் பாங்கினது. **அத்திருவுருவம்,** பரந்த திருமுக மண்டலம், பனித்த சடை, திருமுடியில் கங்கை, இளம்பிறை, குனித்த புருவம், நெற்றிக்கண், கொவ்வைச் செவ்வாய், குமிண்சிரிப்பு, நீலகண்டம்,

1. திருமந்திரம், 2789
2. திருமுறை, 4. 81, 4

பால்வெண்ணீறு, வல மேற்கையில் உடுக்கை, இட மேற்கையில் அனல், வல முன்கை அபயக்கை, இடமுன்கை வீசிய கை, புலித் தோலாடை, பாம்பு அணிகள், எடுத்த திருவடி, முயலகன்மீது ஊன்றிய திருவடி ஆகிய பலவற்றைக் கொண்டு பெருவனப்புடன் திகழ்கின்றது.

1 பரந்த திருமுக மண்டலம்:

நடராசப் பெருமானது நாயகத்தன்மையும், எல்லையில்லா அழகும்,இனிய தண்ணருள் சுரக்கும் பாங்கும் உணர்த்தும் வகை யில் திருமுகம் அமைந்துள்ளது.

2. பனித்த தாழ்சடை:

சிவநெறிக்குரிய தவவொழுக்க மாட்சியையும் நிறைஞானத் தையும் உணர்த்தும் வகையில் அசையும் சடை அமைந்துள்ளது. இதற்கியைபாகத் திருமூலர் "நுண்சிகை ஞானமாம்"[1] எனக் கூறுவதையும், "சைவம் விட்டிட்ட சடைகளும் சடைமேல் தரங்கமும்"[2] எனத் திருவிசைப்பாவில் மொழிவதையும், "பிறை யிதழித் தாழ்சடையான்"[3] எனச் சிவஞானசித்தியாரும் கூறிச் செல்வது காண்க.

பெருமானின் சடைகளாகப் பதினாறு காணப்படும்; அவற் றுள் பதினைந்து தொங்குவதையும், ஒன்று கட்டியுள்ளதையும் காண லாம். அவரை வழிபடுகையில் அமைய வேண்டிய சோடச உப சாரங்களை இவை குறிக்கும் என்பர்.

3. சடையிலமைந்த கங்கை:

இறைவனது பேராற்றலையும், வேகங்கெடுத்து ஆண்டருளும் திறத்தையும் குறிக்கும் வகையில் 'சடையிலமைந்த கங்கை' உள்ளது. சுந்தரர், "சடையில் கங்கை தரித்தானைச் சாராதார்

1. திருமந்திரம், 230
2. கருவூர்த்தேவர் திருவிசைப்பா 13.4
3. சிவஞான சித்தியார் (சுபக்கம்), விநாயகர் துதி

சார் வென்னே''[1] எனப் பாடிச் செல்வதால் இவ்வுண்மை விளக்கமாகும்.

4. சடையில் பிறையணிதல்:

தன் கலைகள் தேயும் நிலைக்குச் சாபம் பெற்ற சந்திரன் தன் தவறுணர்ந்து சிவனிடம் அடைக்கலம் புகுந்தான். சரண் அடைந்தவர்களைத் தலைமேல் வைத்துப் பாதுகாக்கும் தன் உயரிய பண்பினைப் புலப்படுத்தும் வகையில் அதற்கு அடையாள மாக இளம்பிறையைச் சடையிலணிந்து காட்சி தருகிறான் சிவபிரான்.

5. குனித்த புருவம்:

புருவத்தை வளைத்தல் நெறித்தல் முதலியவை, பரத நாட்டியக் கலையில் காணலாகும் மெய்ப்பாட்டு வகைகளாகும். அனைத்துலகத்தையும் ஆட்டுவித்துக் கொண்டு, தானும் ஆடி யருளும் தாண்டவக் கோனுக்கு இஃது ஓர் ஆடற்குறிப்பாகும். மேலும், தன்பாற் போந்து குறையிரந்து முறையிடும் அடியார் களின் குறிப்பறிந்து அவர்களின் விண்ணப்பங்களைக் கூர்ந்து நோக்கிக் கேட்டருளும் கருணைப் பாங்கினையும் இது சுட்டும் எனக் கூறுவர்.

6. குமிண் சிரிப்பு:

இறைவன் தன்னை நாடி அருகில் வருபவர்களை அருளுடன் வரவேற்று, அவர்கள் தாம் புரியாமல் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொண்டு, அவர்களுக்கு வாழ்வியலில் ஒருவகை யீடுபாட்டினை விளைவிக்கும் பாங்கினில் தெம்பளிக்கும் ஊக்கச் சிரிப்பு இது,

''சென்று தொழுமின்கள் தில்லையுள்
சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாய்? என்னும்
எம்பெருமான்றன் திருக்குறிப்பே''[2]

1. திருமுறை. 7.86.1
2. திருமுறை. 4.8.2

எனவரும் திருப்பாசுரப் பகுதியையும் இதற்கு அரணாகக் கொள்ளலாம்.

7. பவளமேனி:

பவளம் போற் சிவந்த மேனியன், தீவண்ணன், மாணிக்கக் கூத்தன் என்றெல்லாம் அழைக்கப்பெறும் ஆடல்வல்லான், சிவன் ஆதலின் அதற்கேற்பச் செந்நிறமுடையவன். நெருப்பானது செந்நிற முடையதாய்த் தன்பால் எய்தும் பொருள்களை யெல்லாம் தூய்மைப் படுத்தி நிற்கும், அதுபோல், சிவனும் தன்பால் அன்பு கொண்டு அடைபவர்களின் மாசுகளை நீக்கித் தூய்மையாக்கி அருள்கின்றான் என்பது குறிப்பு.

8. திருவெண்ணீறு:

உலகில் எல்லாச் சடப்பொருள்களும் அழிந்து, கடைசியில் நீறுஆகும். அத்தகைய நீறு மற்றொன்றாக மாறி அழிவ தில்லை. ஆதலின், திருநீறு அழிவிலாத் தன்மையையும், தூய இயல்பினையும் உணர்த்துவதாகும். "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்"[1] என்றும், "நீறுதிரு மேனிமிசையாடி நிறை வார்கழல் சிலம்பொலி செய, ஏறுவிளை யாடவிசை கொண்டு பலிக்கு வருமீசனிடமாம்"[2] என்றும் வரும் ஆன்றோர் திருவாக்கு கள் இயைபுடன் சிந்திக்கத்தக்கன. நடராசப் பெருமான் சுடலை யிலாடும் பிரான் ஆதலின், அச்சுடலையிற் கிடைக்கும் சாம்பலின் அடையாளமாக - மும்மலத்தைச் சுட்டெரித்ததன் அறிகுறியாக — வெண்ணீறணிந்து பொலிவுடன் காணப்படுகிறான் செந்நிறத் திரு மேனியில் வெண்ணீறு சன்னித்துக் காணப்படும் திருக்கோலம், காண்பார் நெஞ்சத்தைக் கவர்ந்து பிணிக்க வல்ல பாங்கினது என்பது உணரத்தகும். இதனை நன்குணர்ந்த சைவவுலகம் திரு முறையில் 'திருநீற்றுப்பதிகத்தை' உயிரோட்ட முள்ளதாக மிகச் சிறப்புடன் போற்றி வருதலையும் இயைபுடன் சிந்திக்கலாம்.

1. திருமுறை, 4,81,4
2. திருமுறை, 3,79,6

9. நெற்றிக்கண்:

'நுதல் விழி நாட்டத்து''[1] 'நெற்றிமேற்கண்ணினானே''[2], ''ஒற்றை ஏற்றனை நெற்றிக்கண்''[3], ''கண்ணுதலான்''[4] என்றெல்லாம் அருட்சான்றோர்கள் போற்றும் நிலையில், நெற்றிக்கண் சிவனுக்குரிய சிறப்புடைய அடையாளமாகும். அது, ஞானத்திருவினனாகிய **திருமுருகனை** ஈசன் ஆறு தீப்பொறிகள் வாயிலாகத் தோற்றுவித்த சிறப்பிற்குரியது; ஞானக்கண் எனப் போற்றுதற்குரிய இயல்பினது.

10. நீலகண்டம்;

திருப்பாற் கடலைக் கடைந்த போது தோன்றிய பல பொருள்களுள் ஆலாலமாகிய கொடிய நீலநஞ்சும் ஒன்றாகும். யாருங் கண்டு அஞ்சிய நிலையில் உயிர்களைக் காத்தற் பொருட்டுச் சிவன் தானே ஏற்று உண்டு, தன் கண்டம் கரிய நிறமாகக் கொண்டவன்; அதனால் நீலகண்டன் எனக் காரணப் பெயர் பெற்றவன். விண்ணோர் அமுதுண்டும் சாவ, ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டும், இருந்தருள் செய்யும் பெருந்தகையாம் சிவபிரானின் நயத்தக்க நாகரிகத்தை, உலகுயிர்கள் வாழும் பொருட்டுத் தாம் புலப்படுத்திய பெருங்குணத்தை உணர்த்தும் அடையாளமாகத் **திருநீலகண்டம்** விளங்குகிறது எனலாம். சைவவுலகம் நீலகண்டத்திற்கு அளிக்கும் சிறப்பினைச் **சம்பந்தர்** அருளிய '**நீலகண்டப் பதிகத்**' தாலும், நாயன்மார்களுள் **இருவர்** முறையே **திருநீலகண்டக்குயவனார்**, **திருநீலகண்ட யாழ்ப்பாணர்** எனத் திருப்பெயர் கொண்டும் இலங்கியமையாலும் உணரலாம்.

11. உடுக்கை:

சிற்பவுலகில் ஆகம அடிப்படையில் ஆடல்வல்லான் எட்டுத் தோள்கள் உடையவனாகவும் கூறப்பெறுகிறான்; அதற்கேற்ப எட்டுக்கைகளையும், அதற்கும் மேற்பட்ட கைகளையும் அந்தக் கூத்தப் பெருமானுக்கு அமைப்பது உண்டு. எனினும், பெரும்

1. சிலப்பதிகாரம் ஊர்காண் காதை, 7
2. திருமுறை, 4,51,1
3. திருமுறை, 7,57,8
4. திருவாசகம், சிவபுராணம், 21

பாலும் சிறப்பாக நான்கு கைகளையே சிவனுக்குப் பொருத்திக் காண்பது சைவவுலகில் வழக்காகும். அவற்றில் வலக்கை ஒன்றில் டமருகம் எனப்படும் உடுக்கை இருத்தலைக் காணலாம். உடுக்கையை அவ்வாறு ஏந்தியிருப்பதானது, ஒலியையெழுப்பி அணுத்துகள்களைத் திரட்டி உலகப் பொருள்களைப் படைக்கும் நோக்கத்தில், ஆடல் வல்லான் பரநாதத்தைத் தோற்றுவிக்கும் பான்மையை உணர்த்துவதாகும் என்பர் பெரியோர். மேலும், சுக்கில சுரோணிதத்தால் நாதம் அமைகையில் மக்கட் பிறப்பாகிய உயிர் தோன்றும்; இந்த நாதத்தை உண்டுபண்ணுந் திறத்தது உடுக்கை என்றும் விளக்கங் கூறுவர்.

12. அனல்:

ஆடல்வல்லான் மேல் இடக்கையில் ஏந்தியிருக்கும் அனலுடன் கூடிய சுடர், உலகுயிர்களின் மாட்டுக் கொண்ட பெருங்கருணைத் திறத்தது ஆகும். பிறந்தும் இறந்தும் துயருற்று வருந்தும் உயிர்களின் இளைப்பினை நீக்கும் பொருட்டுச் செய்யும் அழித்தல் தொழிலுக்கு அடையாளமாக அந்த நெருப்பு விளங்குகிறது. ''அழிப்பு இளைப்பு ஆற்றல்''[1] என்பர் அருணந்தி சிவாச்சாரியார்.

13. அமைந்த கை:

ஆடல்வல்லானின் முன் வலக்கை அபயமுத்திரையுடன் கூடியது. அடியவர்கள் தன்னை நாடி அடைக்கலம் புகுகையில் எடுத்துச் சுமக்கும் இயல்பினன் இறைவன். உயிர்களை நோக்கி ''இமைப்பொழுதும் உங்கள் நெஞ்சிலிருந்து நீங்காமல் நான் இருக்கும் போது, வீண் அச்சம் கொள்ளற்க!'' எனக்கூறி ஆறுதலளிக்கும் வகையில் தேற்றுங் கையாக அமைந்த கை உள்ளது. இந்த அமைந்த வலக்கை இறைவனது காத்தல் தொழிலைக் காட்டி நிற்கும்.

14. வீசிய கை:

ஆடல் வல்லானின் முன் இடக்கை யானையின் துதிக்கையினைப் போன்று நீண்டு வளைந்து காணப்படும்; இதனை

1. சிவஞானசித்தியார்

கஜ ஹஸ்தம்' எனக்கூறுவர். இத்திருக்கையின் ஒருவிரல் தூக்கிய திருவடியைக் காட்டிக் கொண்டிருக்கும். இதன் குறிப்பு யாதெனின், 'இந்தத் திருவடியை யுணர்ந்து கொண்டு நம்பித் தொழுதால் உயிர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு நல்லது' என்பதாகும். இக்கருத்தினைக் **குமரகுருபர அடிகள்,**

''கூடும் கதிஒருகாற் கும்பிட்டாற் போதுமென
நாடும் அபிநயத்தை நண்ணிற்றால் — ஓடியகட்
காதனார் காணவொரு கால்காட்டிக் கையமைத்து
நாதனார் ஆடும் நடனம்'' 1

எனப் பாடிச் செல்வதால் அறியலாம்.

15. எடுத்த திருவடி:

ஆடல் வல்லானது இடத் திருவடியைத் தூக்கிய திருவடி எனவும் கூறுவர். 'தூக்கிய திருவடி துணையென நம்பினேன்''[2] எனப்பாடிச் செல்வார் **யோகி சுத்தானந்த பாரதியார்.** இத்திருவடி அம்மையின் பாகத்திற்குரியது; ஆதலின் அருளே வடிவமாகத் திகழ்வதாகும். "துன்பக் கடலிடைத் தோணித்தொழில் பூண் தொண்டர் தம்மை, இன்பக் கரை முகந்து ஏற்றுந் திறத்தன''[3] என **அப்பரடிகள்** கூறுவதற் கிணங்கப் பிறவிக் கடலில் வீழ்கையில் அலமந்து தத்தளிக்கும்போது அருளுதல் தொழிலை அந்தத் தூக்கிய திருவடியே பொறுப்பேற்கும் எனலாம். மேலும் அவரே,

''தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ
நம்மை ஆட்கொண்டதே''[4]

எனப்பாடிச் செல்வதையும் மனத்துட் கொண்டு போற்றலாம்.

16. ஊன்றிய திருவடி:

ஆடல் வல்லானது வலத்திருவடி, அர்த்தநாரி தத்துவத்தில்

1. சிதம்பர மும்மணிக்கோவை, 30
2. சுத்தானந்த பாரதியார் கீர்த்தனை
3. திருமுறை, 4,92,6
4. திருமுறை 4,81,10

ஆண்பகுதிக்கு உரியது. இது முயலகன் எனும் கொடியவனை மிதித்து அடக்கும் முறையில், அவன்மீது ஊன்றிக் காணப்படும். நன்கு மிதித்து ஒரேயடியாக நசுக்கி விடாமல், மெல்லெனத் தன் காலை இறைவன், முயலகன் மீது ஊன்றி நிற்பது சிந்திதற்குரியது. அஃதாவது, இந்நிலைமையால், மலத்தை முழுவதுமாக அழித்து விடாமலும், அதே வேளையில் மலத்தால் உயிர்கள் பெரிதும் வருந்தாமலும், வினைப்பயன்களை உயிர்கள் நுகருமாறு செய்ய இறைவன் இயற்றும் ஒருவகை நல்லுபாயம் எனலாம்; இவ்வாறு இறைவன் இயற்றுவது மறைத்தல் தொழிலைக் குறிக்கும்.

17. முயலகன்:

ஆடல்வல்லானது திருவடிக்கீழ் அமைந்துள்ள இவனைப் பூதம், குறள், அசுரன், அபசுமாரன் முதலிய பெயர்களிட்டுச் சைவ நூல்கள் அழைக்கும். முயலகன் ஆணவ மலத்திற்கு அறிகுறி என்பர். சைவசித்தாந்தப்படி ஆணவ மலம் தன் வலிமையில் வற்றுமேயன்றி முற்றுமாக அழிவதில்லை. அதுபோன்று முயலகனும் இறைவன் திருவடிக் கீழ்க் காணப்படுவான். "இறைவனுக்குப் படிநிலையாய் அமைந்து உதவுதல் போல, முயலகன் காணப்படுகின்றான், அதுபோல ஆணவமலமும் உயிர்களின் இறையின்ப நுகர்ச்சிக்கு ஓராற்றாற் காரணமாகின்றது. 'இத்தை விளைவித்தல் மலம்' என்பது காண்க. 'மாயாதே தன் சத்தி மாய்ந்து' முத்தி நிலையில் உயிர்களின் பால் ஆணவமலம் அடங்கிக் கிடப்பது போல, முயலகனும் இறைவனின் திருவடிக் கீழ், "மாயாதே தன்சத்தி மாய்ந்து கிடக்கின்றான் என்க"[1] என ந. ரா. முருகவேள் விளக்கந் தருவது போற்றுதற்குரியதாகும். சிலர், அம்பலவன் திருவடிக் கீழுள்ள முயலகன், ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களின் ஏக உரு எனவும் கூறுவர்.

பெரும்பாலும், நடராச மூர்த்தங்களில் முயலகன் இருப்பதும் இருக்க வேண்டுவதும் சைவசித்தாந்தப்படி இயைபுடையதே. எனினும், **திருப்பாச்சிலாச்சிராமம்** எனும் சைவத்திருத்தலத்தில்

1. திருக்கோயில், ஜனவரி, 1969.

மட்டும் ஆடல்வல்லானின் திருவடிக்கீழ் முயலகன் காணப்படவில்லை. காரணம், கொல்லி மழவன் மகளுக்கு முயலகன் எனும் நோய் பீடிக்கப்பட்ட நிலையில் திருஞான சம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளி இத்தலத்து இறைவன் மீது பதிகம் பாடி முயலகன் எனும் நோயைத் தீர்த்தருளியதாகவும், அதனால் இத்தலத்து நடராசரின் திருவடிக்கீழ் முயலகன் அமையவில்லை என்பதாகவும் கூறுவர்.

18. தென்திசை நோக்குதல்:

எல்லாச் சிவன் கோயில்களிலும் ஆடல்வல்லான் திருவடிவம் தெற்கு நோக்கியே அமைந்திருக்கும். தென்திசை இயமன் திசையாகும். தன்னை வழிபடும் அடியவர்கட்குத் தென்திசையிலிருந்து வரும் இயமனால் யாதொரு தீங்கும் நேராமற் காத்தருள்வதற்காகக் கூத்தப் பெருமான் தெற்கு நோக்கி ஆடியருளுகிறான் என்பர் சான்றோர்; இதற்கியைந்த வண்ணம் குமரகுருபர அடிகள்,

''அடிப் பதுமத்து ஒன்று எடுத்துத்
  தென்பால் முகமாக நின்று
நடிப்பதும் அத்தன்மை யாம்
  நமனார் இது நாடுமினே''[1]

எனப் பாடிச் செல்வதைக் காணலாம்.

திருவிளையாடற் புராண ஆசிரியர் **பரஞ்சோதி முனிவர்** சிறப்பாக ஒருவகைக் கற்பனையில், தென்திசை நோக்கியாடும் கூத்தனிடம் அமைதி காண்கிறார்; அதனைக் காண்போம்.

அல்லும் பகலும் ஆடிக் கொண்டிருக்கும் ஆடல்வல்லான், தன் ஆடலின் இளைப்பை ஓரளவு தவிர்க்கத் தன் திருமுக மண்டலத்தில் தென்றற் காற்று வீசும் வகையில் தென்திசை நோக்கியாடுகிறானாம்! மேலும், தென்னாட்டுச் செந்தமிழைச் செவிமடுக்கவும் இவ்வாறு தென்திசை நோக்கி ஆடுகிறானாம்! இத்தகைய வளமான கற்பனையைப் **பரஞ்சோதி முனிவர்**,

1. சிதம்பர மும்மணிக் கோவை, 16

"கடுக் கவின்பெறு கண்டனும் தென்றிசை நோக்கி
அடுக்க வந்துவந்து ஆடுவான் ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென் கால்திரு முகத்திடை வீசி
மடுக்க வும்தமிழ் திருச்செவி மாந்தவும் அன்றே"[1]

எனப் பாடிச்செல்வதால் உணரலாம்.

19. மாதொரு பாகம் நோக்குதல்:

ஆடல்வல்லானின் திருவடிவத்தை அமைக்கும் சிற்பியர்கள் அதன் முக மண்டலம் சிறிது சாய்ந்த வண்ணம் சிவகாமியம்மையை நோக்கி ஆடுவதுபோல அமைப்பர். நடராசப் பெருமான் இங்ஙனம் அம்பிகையை நோக்கி ஆடுதலைச் **சேக்கிழாரும்,**

"இடம ருங்குதனி நாயகி காண ஏழ்பெரும்புவனம் உய்ய
எடுத்து
நடந் வின்றருள் சிலம்பொலி போற்றும் நான்ம றைப்பதியை
நாளும் வணங்க"[2]

என அருளிச் செய்வதால் அறிந்தின்புறலாம்.

உமையாள் காணுமாறு ஆடல்வல்லான் திருக்கூத்து நிகழ்த்துதலை அருட்செல்வர்கள் பலரும் சிறப்பாகப் பாடிச் சென்றுள்ளனர்.

திருவேட்களத் தேவாரத்தில் **திருஞானசம்பந்தர்,**
"மந்த முழவ மியம்ப மலைமகள் காண நின்றாடி"[3]

எனப் பாடிச் சென்றுள்ளமை காண்க.

குமரகுருபர சுவாமிகள் இக்காட்சியை மிகநயமாக – அழகுற - விளக்கிச் செல்கிறார். குழந்தையின் குடர், காரமான மருந்தைச் செரிக்கும் ஆற்றலில்லாதிருப்பதை யுணர்ந்து, தாயானவள் அம் மருந்தினைத் தான் உண்டு, அம்மருந்தின் பயனைத் தன் பாலின்

1. திருவிளையாடற்புராணம்,
2. திருத்தொண்டர் புராணம்
3. திருமுறை, 1, 39, 1

வழியே குழந்தை பெறுமாறு செய்து நோய் தணிப்பதே போல, அம்பிகையும் ஆடல்வல்லானின் திருக்கூத்தைத் தான் கண்டனுபவித்து, அதன் பயனை உயிர்கள் அடைந்திடுமாறு செய்விக்கிறாளாம்! இதனைப்,

''பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாய்உண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக்கு இன்னருள் கிடைப்ப
வையம்ஈன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட ஐயரித் தடங்கண்
திருமாண் சாயல் திருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்தன்......''[1]

எனப்பாடிச் செல்வதால் அறியலாம்.

28.3.2. நடராசத் திருமேனியில் காணலாகும் சில நுணுக்கங்கள்:

தில்லையம்பலவாணரின் திருவடியில் காணலாகும் காப்பில் **பதினான்கு சலங்கைகள்** உள்ளன. ஏழிரண்டு **பதினான்கு புவனங்கள்** அசைய ஆடும் அவரது பேராற்றலை இவை குறிக்கும். அவர் அணிந்துள்ள **அரைஞாணில் எண்பத்தொரு சங்கிலி வளையங்கள்** உள்ளன; அவை **எண்பத்தொரு பிரணவ மந்திரங்களைக்** குறிக்கும்

பதினாறு சடைகளாடும் வண்ணம், நடராசப்பெருமான் எலும்புகள் கோத்த ஒரே மாலையை அணிந்திருப்பார். **எலும்பு மணிகளோ** எண்ணிக்கையில் **இருபத்தெட்டாகும். இவை இருபத்தெட்டு சதுர்யுகங்கள்** முடிவுற்றன என்பதைக் குறிக்கும். இவ்வாறே நடராசத் திருமேனியில் காணலாகும் ஒவ்வொரு பொருளுக்கும் நுணுக்கமான பொருள்விளக்கங்கள் உண்டு. எனவே, நடராசத் திருமேனி மிகச்சிறந்த தத்துவப் புலப்பாடு என அறிக.

28.3.3. நடராசத்திருமேனி - ஒரு சிறப்புக் குறிப்பு:

''தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'' என்று சைவப்பெருமக்கள் குறிப்பிடும் வகை

1. சிதம்பர மும்மணிக்கோவை, 2. 14, 12

யில், தென்னாட்டில் சிறப்பாகக் கொண்டாடும் **வகையிலுள்ளது** சிவன் திருமேனி- **'நடராசன்'** (ஆடல்வல்லான்)- என்பதே. திரு வுருவத் திருமேனியாக விளங்கும் ஆடல்வல்லானது **'இரகசியம்'** காண்கையில், திரைவிலக்கப்பட்டு, அப்பெருமானே வானவெளி யாய் - வானமெங்கும் அருவாய் - **வில்வதளமாலையாக** உணர்த் தப்படுதலை ஓர்தல் வேண்டும். இதற்கு இயைபாகப் பஞ்ச பூதங்களாம் இறைவன், இதயத்தானத்தில் **பிரபஞ்ச இயக்கமாக** ஆடிடும் திருக்காட்சியைக் காண்கையில்,

''காளியோ டாடிக் கனகாசலத் தாடிக்
கூளியோ டாடிக் குவலயத்தே யாடி
நீடியநீர் தீகால் நீள்வானிடை யாடி
நாளுற அம்பலத்தே யாடும் நாதனே''

என்ற திருப்பாடலை நினைவிற் கொள்ளலாம். இந்தத் தாண்டவத்தை - மந்திரத்தைத் - தென்னாட்டின் வடபகுதியிலும் போற்றுஞ் சூழல் காலப்போக்கில் உருவாயிற்று; இதனைத் தேச வரலாற்றால் அறியலாம்.

சாளுக்கிய மன்னர்களின் தலைநகரான **''வாதாபியில் குகைக் கோயிற்** சுவரில் **பதினாறு திருக்கரங்களுடன் கூடிய ஒரு சிவ தாண்டவ மூர்த்தம்** செதுக்கப்பட்டிருக்கிறது(கி.பி. 578), பல்லவர் காலத்தில் காஞ்சியம்பதியில், கைலாசநாதர் கோயில் சுவரிலும் (கி.பி. 675) நடராசவடிவம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. **ஆரியபுரம்** என்னும் சாளுக்கிய நாட்டு நகரிலும், **பத்துக்கரங் களுடைய ஒரு நடராச வடிவம் உள்ளது. எல்லோராக்குகைக் கோயில்களிலும் நடராஜ வடிவங்கள்** இருக்கின்றன'' என்று **திருமுருக கிருபானந்தவாரியார்** தம் **'வாரியார் விரிவுரை'**யில் குறிப்பிட்டுச் செல்வது சிந்திக்கத்தக்கது.

மேற்காணும் குறிப்புக்களால் **நடராசர்திருமேனி**யில் தமிழ்ப் பெருமக்களேயல்லாமல், பாரதநாட்டிலே **வடநாட்டவரும்** ஈடு பாடு கொண்டிருந்தமை புலனாகும்.

28.4. சோமாஸ்கந்தமூர்த்தி - விளக்கமும் சிறப்பும்:

ஸ-உமா-ஸ்கந்தர் என்னும் வடமொழிச் சொற்கள் மூன்றும் இணைந்து, **'சோமாஸ் கந்தர்'** எனவரும். இந்த மூர்த்தம், சிவ

பெருமான் ஸ்கந்தமூர்த்தியாகிய திருமுருகனைத் தமக்கும் உமா தேவியாருக்கும் நடுவே இருக்கச் செய்து, எழுந்தருளியிருக்கும் திருவுருவமாகும். ஈசானமூர்த்தி அடிப்படையிலும், உமாமகேசு மூர்த்தி அடிப்படையிலும் சார்த்திச் சமயச்சான்றோர்கள் இந்த மூர்த்தியை வழிபட்டு வருகின்றனர்.

எல்லாச் சிவன்கோயில்களிலும் சோமாஸ்கந்த மூர்த்தம் சிறப்புற அமைத்து வைத்து வழிபடப்பெறுதலைக் காணலாம். இதே மூர்த்தம் பெரும்பாலான சிவன்கோயில்களில் உற்சவ மூர்த்தியாக விளங்குதலையும் காணலாம். பல்லவர்காலத்தில் அந்தப் பேரரசர்கள் அமைத்த சிற்பங்களில் சோமாஸ்கந்தர் திருவுருவம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்ததை முன்னரே கண்டோம்; அந்தத் தொடர்பில் மேலும் சில குறிப்புக்களைக் காண்போம்.

மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், திருமறைக் காடு, வைத்தீசுவரன்கோயில் முதலிய பல திருத்தலங்களில் அமைந்துள்ள சிவாலயங்களில், சிவலிங்கத்திற்குப் பின்புறமுள்ள கருவறைச்சுவரில் சோமாஸ்கந்தமூர்த்தி திருவுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன[1]

தந்தையும், தாயும், மகனும் கடவுளர்களாக அமைந்து, அவர்கள் ஒருங்கே அமர்ந்து திருக்காட்சி வழங்குகையில், இடர்ப்பாடு நீங்கி அனைத்து நலங்களும் வளங்களும் கிட்டும் என்பது சமய நம்பிக்கை; இல்லற மாட்சியைப் புலப்படுத்தவும் இதே திருக்கோலம் பொறப்புடன் அமைந்துள்ளது என்றும் நம்புவர். இதுபற்றி ஆராய்ந்து விளக்குகையில், "சமண பௌத்த சமயங்களின் விளைவாகத் துறவறமே சால்புடைத்தென்னும் கொள்கை பெரிதும் பரவி வந்த காலையில், மக்கட் சமுதாயம் வளர்ந்தோங்கி நிலைபெறுதற் பொருட்டுக் குடும்ப வாழ்வின் நலங்களையும் இல்லறமே நல்லற மாதலையும் வலியுறுத்தித் தெளிவுறுத்தல், பக்தியியக்கத்தைப் பரப்பி நாட்டு மக்கள்பால் மறுமலர்ச்சியுணர்வு கிளர்ந்தெழச் செய்தருளிய, ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் அரும்பெருங் கடப்பாடு ஆயிற்று. அவ்

1. Gods and Man, (Prof G. S. Ghurye) P. 47 - 49

வகையில் குடும்பவாழ்வின் அளப்பரு நலங்களையும், அரும்பெருஞ் சிறப்பினையும் விளக்குவதாகப் போற்றிப் பரப்பப்பெற்ற திருவுருவமே சோமாஸ்கந்த மூர்த்தம் எனலாம். மாபெரும் யோகியாக விளங்கும் சிவபெருமானே, மிகப்பெரிய யோகி (குடும்பி) யாகவும் திகழ்வது, வியப்பிற்குரிய தொன்றன்றோ?"[1] என்று எழுதிச் செல்வது மனங்கொண்டு போற்றற்குரியது.

சோமாஸ்கந்த மூர்த்தத்தையும் தமிழக மூர்த்தியாகக் காணும் வகையில் திருமுருக கிருபானந்த வாரியார், "மெய்யெழுத்துக்களில் வல்லினம் மெல்லினம், இடையினம் என்ற மூவகைப் பாகுபாடு உண்டு. வல்லினம் குறிக்கச் சிவனும், மெல்லினம் குறிக்க உமையம்மையும். இடையினம் குறிக்கக் கந்தப் பெருமானும் அமைந்து, அவர்களின் இணைப்புத் திருக்கோலமாகச் சோமாஸ்கந்தமுர்த்தம் திருக்காட்சி வழங்கி வருகிறது"[2] என்ற கருத்தைப் பல சமய மேடைகளில் கூறியுள்ளமை நினைவிற்கொண்டு போற்றலாம்.

28.5. சந்திரசேகரர்: திருவுருவச்சிறப்பு :

பிறைச் சந்திரனுக்கு அருளும் நோக்கத்தில் அவனைத் தம் தலையில் அணிந்து கொண்டு சிவபிரான், சந்திரசேகரமூர்த்தியாகத் திகழ்கின்றார். அதன் புராணப் பின்னணியைச் சிறிது காண்போம்.

தக்கன் தான் பெற்ற அசுவினி முதலிய பெண்கள் இருபத்தெழுவரையும் சந்திரனுக்குத் திருமணம் செய்வித்தான். சந்திரன் தன் தேவியருள் கார்த்திகை, உரோகினி ஆகிய இருவரிடமே மிகுந்த அன்பு செலுத்திய காரணமாக ஏனையோரைப் புறக்கணித்து வந்தான் இதனைத் தெரிந்து கொண்ட தக்கன் பொறாத நிலையில் சினங்கொண்டு சந்திரன் நாளுக்கு ஒரு கலையாய்த் தேய்ந்து அழியச் சாபங்கொடுத்தான். அந்தச் சாபங் காரணமாகத் தன் கலைகள் ஒவ்வொன்றாய்க் குறைந்து வருவதை யுணர்ந்தான் சந்திரன்; அஞ்சியவனாய் ஒரு கலை

1. திருக்கோயில் (திங்களிதழ்), சனவரி, 1967
2. நேரில் கேட்டுக் குறித்த செய்தி

யுடன் சிவபரம்பொருளை யடைந்து தன் நிலையைக் கூறிக் காத்தருளுமாறு வேண்டிக் கொண்டான். தன்னிடம் அடைக் கலமாகிய சந்திரனைத் தன்திருமுடி மீது தரித்துக் காப்பாற்றி னான்; தக்கனது சாபத்தால் தேய்ந்து வருங் கலைகளை மீண்டும் தன் வரத்தால் வளர்ந்து வரவும், இனி உலகத்தில் சந்திரன் தேய்ந்தும் வளர்ந்தும் வரவும் அருள் புரிந்தான். சிவபெருமான் தன் திருமுடிமேல் சந்திரனைத் தரித்துக் கொண்டமையால் சந்திர சேகரனாக வழங்கப் பெற்றான் என்பது புராண வரலாறு.

28.5.1. சந்திரசேகரர் — கலைநோக்கில்:

சிவனுக்கென அமைந்த அனுக்கிரக மூர்த்தங்களுள் ஒன்றாகச் சந்திரசேகர மூர்த்தம் அமைந்துள்ளது. இத்திரு வுருவ அமைப்பினைப் பற்றிச் சுப்பிரபேத ஆகமம், சில்ப ரத் தினம் ஆகிய நூல்களில் காணலாம். சந்திர சேகர மூர்த்தங்கள் நிற்குந் திருக்கோலத்தில் அமைதி தவழச் சந்திரனைத் திரு முடியில் தாங்கிய சிறப்புடன் காணப்படும். மூவகைச் சந்திர சேகரமூர்த்தங்களாகக் — **கேவல சந்திர சேகரரும், உமாசகித சந்திரசேகரரும், ஆலிங்கன சந்திர சேகரரும்** — திருக்கோயில் களில் காணப்படுகின்றன.

கேவல சந்திரசேகர மூர்த்தத்தின் பக்கத்தில் சக்தியின் திரு வுருவம் அமைக்கப்படுவதில்லை. தனித்திருக்கும் மூர்த்தமாகிய இத்திருவுருவத்துக்கு நான்கு கைகள் உண்டு; மேலிரு கைகளில் மான் மழு ஏந்தியும், கீழிரு கைகளில் அபயம் வரதம் ஆகிய முத்திரைகளைக் கொண்டும் நின்ற கோலத்தில் இருப்பதைக் காணலாம்.

உமா சகித சந்திரசேகர மூர்த்தத்துக்கும் கேவல சந்திர சேகரரைப் போல் நான்கு திருக்கைகள் உண்டு. அருகில், உமா தேவியின் வடிவம் பங்கமாகியும், கடக அத்தமும், லோல அத்தமும் அமையப் பெற்றுக் காணப்படும். சிவமும் சக்தியும் சாந்தம் தவழ அழகுடன் அமைந்திருக்கும்.

ஆலிங்கன சந்திரசேகர மூர்த்தம், உமாதேவியை அணைத்திருக்குந் திருக்கோலத்துடன் காணப்படும். அஃதாவது சிவபிரான் தன் திருக்கைகளால் உமையம்மையின் தோளையோ இடையையோ அணைத்துக் கொண்டிருக்கும் வகையில் திருமேனிகள் அமைந்திருக்கும். சிவன் சக்தி உருவங்கள் ஒரே பீடத்தில் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பாகும். இத்தகைய ஆலிங்கன சந்திர சேகரரைப் பிரதோச மூர்த்தி எனவும் கூறுவர். சில திருக்கோயில்களில் **பிரதோச வழிபாட்டுக் காலத்தில்** இத்திருமேனியை வீதியுலாவாக எழுந்தருளச்செய்தல் உண்டு; கோயிற் பிராகாரத்தில் வலமாக எழுந்தருளசெய்தலும் உண்டு.

28.6. உமாமகேசர்:

அனைத்துலகையும் வாழவைப்பதற்குச் சக்தியும் சிவமும் சேர்ந்து காட்சியளிப்பதும் செயற்படுவதும் சிறப்பு என அருளாளர்கள் கூறுவர். மலரில் நறுமணமும், தீயில் வெம்மையும், மணியில் ஒளியும் போலச் சக்தியும்சிவமும் பிரிவற்று விளங்கும். அந்நிலையில் பிரிவற்று ஒளிரும் சக்தியே படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களை நிகழ்த்தி, உயிர்கள் எல்லாம் உய்தி பெறுவதன் பொருட்டு, உமாதேவியாக வடிவங்கொள்ளும் 'உம' (உ+ம்+அ) என்பதில் உ என்பது காத்தலையும், ம் என்பது அழித்தலையும், அ என்பது படைத்தலையும் சுட்டும் என விளக்கங் காண்பர். உத்தம சித்த **விருத்தியாகவும் தேவிப்பிரணவமாகவும் விளங்குபவள் 'உமா'** என்றும் கூறி மகிழ்வர்.

அத்தகைய உமாவைத் தம் இடப்பாகத்தில் கொண்டருள்பவர் உமாமகேசர். நான்முகன் திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவம் என்னும் ஐவரும் தம் திருமுன்னர், ஐந்தொழில்களில்-முறையே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகியவற்றில் — தத்தமக்குரிய கடமையைப் புரிந்து நிற்கச் சிவபிரான் அவற்றைக் கடைக்கணித்துக் கொண்டு அசைவற்று நிற்பார். அந்நிலையில் சிவபிரான் தம் இடப்பாகத்தில் உமாதேவியரை அருட்பொலிவிலே உடன் கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலையே உமாமகேசர் வடிவம் என விளக்கமாகக் கூறுவர்.

"**கல்யாணசுந்தரர்** நின்ற கோலத்திலும், **உமாமகேசர்** அமர்ந்த கோலத்திலும் '**சிவசக்தி**' நினைப்பை அடியார்களுக்கு ஊட்டும் வகையில் அமைவர் என்பது சிறப்பக்கலை நோக்காகும். மகேச னாகிய சிவபிரான் அமர்ந்த கோலத்தில் வலக்காலைத் தொங்க விட்டுக் கொண்டும், இடக்காலை மடித்து ஆசனத்தின் மேல் வைத்துக் கொண்டும், அருகே உமையம்மையை அமர்த்திக் கொண்டும் அமையும் தோற்றமே உமாமகேசுவரமூர்த்தமாகும். ஒப்பியல் நோக்கில் கண்டு விளங்குகின்ற ஒப்புமை நோக்கில் காண வேண்டுமெனில், சிவபெருமான் வடிவமான **உமாமகேசு வரமுர்த்தியைப்போல இலட்சுமி நாராயண முர்த்தங்களை** அமைப் பது உண்டு. இலட்சுமி நாராயணர் வலக்காலைத் தொங்க விட்டு இடக்காலை மடித்து ஆசனத்தின் மேல் வைத்துக் கொண்டு, அந்தத் திருவடியில் இலக்குமியை உட்கார வைத்தி ருக்கும் வகையில் இருக்கும், அல்லது இலக்குமி இல்லாமலும் மேலே குறித்த படிக்கு வடிவம் இருக்கும்" என்பது அறிஞர் **எஸ்.எல். தாத்தாச்சாரியார்** கருத்தாகும். இது கொண்டு உமாமகேசர் திருவுருவத்தை நன்கு புரிந்து கொள்ளலாம்.

28.7 இடபாருடர்:

திரிபுராந்தகரை அடுத்து வந்த சிவத்திருமேனியே இடபாருட மூர்த்தம் ஆகும். திரிபுரஅசுரர்கள் (தாரகாட்சன், கமலாட்சன் வித்துன்மாலி) விண்ணிலே சூழ்ச்சியுடன் உலவி இயக்கிய செம்புக்கோட்டை, பொன்கோட்டை இரும்புக்கோட்டை ஆகிய முப்புரங்களைச் சிவபெருமான் போர்க்கோலத்தில் அழிக்குந் திருவுருவமாக அமைத்ததே திரிபுராந்தகர் என்று கண்டோம். திரிபுரங்களைத் — திரிபுரஅசுரர்களை — அழிப்பதற்காகச் சூரிய னையும் சந்திரனையும் தேர்ச்சக்கரங்களாகவும், பூமியைத் தேராகவும், மேருமலையை வில்லாகவும் கொண்டு போர்க்குப் புறப்படுகையில் சிவன், தன் மூத்தபிள்ளையாகிய விநாயகரை வழிபடாத காரணத்தால் தேரின் அச்சு ஒடிந்தது. அந்நிலையில் திருமால் இடப (எருது) வடிவங் கொண்டு சிவனைத் தாங்கி நின்றார்; அவ்வாறு திருமால் தாங்கி நிற்கச் சிவன் கொண்ட திருக்கோலமே இடபாருடர் என்பதாகும். இந்தப் புராண வரலாற்றினை **உபதேச காண்டத்தில்** காணலாம்.

22.7.1. இடபவாகனமூர்த்தி — சிறப்புக் குறிப்பு:

சிவபெருமான், அடியவர்களுக்கு அருள்புரியும் நோக்கில் காட்சியளிக்கையிலே தன் தேவி உமையம்மையுடன் இடப வாகனத்தில் எழுந்தருளுவது மரபாகும். சைவத்தலங்கள் பல வற்றிலும் இடப வாகன மூர்த்திகளை ஆராய்ந்தால், பெரும் பாலும் ஒரே வகை அமைப்புடன் காணப்படுவது தெரியவரும். ஆனால், மிகச்சில இடங்களில் சிவபிரானது தோற்றத்தில் சிற்சில மாற்றங்கள் தென்படும்

திருவெண்காட்டிலுள்ள இடபவாகனர் சிலையில் சிவ பி;ரானது தோற்றம் ஒருவகைத்தனிச்சிறப்புடன் இருத்தலைக் காணலாம். தலையணியைப் பொறுத்த வரையில் சிவபிரான் **தலைப்பாகை** யுடன் விளங்குகிறார். இது பற்றி ஆராய்ந்து எழுதுகையில் **அறிஞர் வேலுசாமி சுதந்திரன்,** "ஆகமங்களிலும் சிற்பநூல் களிலும் இத்தகு தலையணி விவரிக்கப்படவில்லை. இறைவனை வயோதிக வடிவில் பல இடங்களில் பார்த்து மகிழ்ந்த சிற்பி, இங்கு ஒரு **விவசாயியாகப்** பார்க்க விரும்பி, இத்தகு தலைப் பாகையைக் கொடுத்திருக்கிறான். **இது தமிழ் நாட்டுப் பண் பாட்டைப் பிரதி**பலிக்கிறது. தலைப்பாகை அணிந்த கோலத்தில் ஓர் உருவத்தைப் பல்லவர்காலக் **கிருட்டின மண்டபத்தில்** (மாமல்லபுரத்தில்) பார்க்க முடியும். தலைப்பாகை அணிந்து பால் கறக்கிற காட்சி, சமுதாயச் சூழலை எடுத்துக் காட்டும். இரிடபவாகனர் அணிந்திருக்கும் பாகையோ, சோழர்களின் தனிக் கலைவண்ணம் எனலாம்,"[1] எனப்புலப்படுத்துங் குறிப்பு மனங் கொண்டு சிந்திக்கத்தக்கது.

28.8. கலியாண சுந்தரமூர்த்தி (திருமண வழகர்):

முன்னொரு காலத்தில் முனிவர்கள் சிலர் மறைகளிலும் சிவாகமங்களிலும் தமக்குள்ள ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு, அவற்றின் நுண்பொருள்களை விளக்கி யருளுமாறு சிவபிரானை வேண்டி நின்றனர். அதன்படி இறை

1. இ.ப.க.த.மன்றம் 22-ஆவது கருத்தரங்க ஆய்வுக்கோவை, 1991, பக். 745 - 746.

வனும் அவர்களுக்குச் சரியை கிரியை யோகம் பற்றிய செய்திகளை மனங்கொள்ளுமாறு விளக்கியருளினான். வேத சிவாகமப் பொருள்களுள் ஞானபாதப் பொருளை மட்டும் சொல்லிக் காட்டுவது முறையன்றெனக் கருதி, மோன நிலை மேற்கொண்டு யோக நிலையில் அமர்ந்தவனாய்ச் சின்முத்திரையைக் காட்டியருளினான். அவ்வாறு சிவபரம்பொருள் யோக நிலையில் அமர்ந்திருந்த சில கணங்கள் உலகுயிர்களுக்குப் பல ஊழிக்காலமாயின. அப்போது உயிர்களெல்லாம் போக நுகர்ச்சியின்றி வெறுமனே செயலற்றவையாயின. அதனைக் கண்ட நான்முகன் திருமால் முதலியோர் உலகவுயிர்கள் மீண்டும் போக நுகர்ச்சி கொண்டு இன்புறுமாறு அருள்புரிதல் வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டனர். **இறைவன் உலக நலங்கருதி, இல்லற வாழ்வின் மேன்மையையும் உணரும் பொருட்டு,** முன்னமே இமவான்மகளாகப் பிறந்து வளர்ந்து வந்த **பார்வதியம்மையைத் திருமணம் புரிந்து கொண்டருளினான்.** இந்நிலையலமைந்த திருக்கோலமே கலியாண சுந்தரமூர்த்தம் **என** வழங்கப்படுகிறது.

மணிவாசகர் இந்த மூர்த்தத்தில் ஈடுபாடு கொண்டவராய்,

''மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ!
உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண்
சாழலோ!''[1]

எனப்பாடிக் காட்டுதல் காண்க.

இதனால், இறைவனும் தனக்குத் திருமணம் என்ற நிலையில் உலகறிய அதனை வைதிக முறைப்படி வேள்வி வளர்த்துத்தான் செய்து கொண்டான் என்பது பெறலாகும். மணிவாசகர் காலத்திலும் சிறந்து விளங்கிய சமயப்பண்பாட்டினை இறைவன் மீது ஏற்றிக் கூறிய பாங்கினை யுணரலாகும்.

1. திருவாசகம், திருச்சாழல், 13

28.8.1. கலியாணசுந்தரர் - கலைநோக்கில்:

இந்தியக் கலைவரலாற்றில் கலியாண சுந்தரத் திருக்கோலத்திற்கு ஒரு சிறப்பான இடமுண்டு. எலிபெண்டா, எல்லோராக் குகைக் கோயில்களில் கலியாணசுந்தரக்கோலம் பெரிய சிற்ப வடிவங்களில் காணலாம். தஞ்சைப் பெரிய கோயிலில் இரண்டாம் திருக்கோபுர வாசலின் கீழ்ப்பகுதியிலும், கருவறையின் நுழைவாயிலின் இடப் படிக்கட்டின் பக்கச் சுவரிலும் சிவபெருமானின் திருமணக்காட்சி, தொடர் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளமையும், மதுரைத் திருக்கோயில் கம்பத்தடி மண்டபத் தூணிலும், புதுமண்டபத்திலும் பரமனின் திருமணக்கோலம் அமைக்கப்பட்டுள்ளமையும் சிறப்பாகக் கண்டு போற்றத்தக்கது.

மதுரையில் காணப்பெறும் மீனாட்சி திருமணக்காட்சியில், இறைவன் பெருமிதத்துடன் நிற்கத் தேவி அருகில் நாணத்துடன் ஒரளவு குனிந்த நிலையில் இருப்பதையும், அருகிலே திருமால் ஆர்வமுடன் கெண்டியிலிருந்து நீர்வார்த்துத் தன் தங்கை உமா தேவியை மணஞ் செய்து தருவதையும் காணலாம். சிற்பத்தின் கீழ்ப்பகுதியில் நான்முகன் வேள்வித்தீ வளர்த்தலையும் கண்டு, நாயக்கர் காலச்சிற்ப நேர்த்தியை மிகப்போற்றி நிற்கலாம். ஆனால், செப்புத் திருமேனிகளில் இத்தகைய கோலாகலக் காட்சியைக் காணவியலாது.

கலியாணசுந்தரர் திருக்கோலத்தைச் செப்புப் படிமங்களில் அமைக்கையில் சிவபிரானையும், பார்வதியையும் மட்டுமே காணலாம். "இறைவன் வலப்புறம் உள்ள தேவியின் வலக்கையைப் பற்றிக்கொண்டும், தேவி நாணத்தோடு கண்களைக் கீழே நோக்கிக் கொண்டும் உள்ள திருமேனிகளை வடக்காலத்தூர், திருவீழிமிழலை, திருக்கோளிலி (திருக்குவளை), திருவேள்விக்குடி, திருவொற்றியூர், திருமணஞ்சேரி ஆகிய கோயில்களில் காணலாம். திருவெண்காடு, கோனேரி, ராசபுரம் ஆகிய இடங்களிலுள்ள செப்புத் திருமேனிகளில் சிவபெருமான் இறைவியின் வலக்கரத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறார். திருவெண்காட்டுத் திருமேனியில் அவர்களின் இருபுறமும் திருமாலும் திருமகளும் இருக்கின்றனர். நாணமுற்ற மணப்பெண்ணைத் திருமகள் ஒரு கையினால் பின்

பக்கம் அணைத்துச் சிவபெருமானை ஒட்டி நிற்கச் செய்யத் தள்ளுவதைக் காணலாம். திருமால் தாரைவார்த்துத் தருவதற்காக நிற்கிறார்.

கோனேரிராசபுரத்திலுள்ள திருமேனியில் இறைவன் இறைவி அருகே கெண்டி ஏந்திய திருமாலும், கீழ்ப்புறத்தில் நான்முகனும் உள்ளனர்"[1] என்று ஆராய்ந்து கீ. ஸ்ரீதரன் எழுதிச் செல்வது மனங்கொண்டு போற்றத்தக்கதாகும். ஒவ்வொரு காலத்திலும் சிற்பியர் மனத்தில் தோன்றிய 'சிவபிரானின் கலியாணக் கோலக் காட்சி' பல்வகைக் கலை நுட்பக் கூறுகளைக் கொண்டுள்ளது என்பதை நினைவிற் கொள்வோம்

கலைவண்ணம் பொருந்திய கலியாண சுந்தரரை வழிபட்டு வந்தால் விரைவில் இல்லற மாட்சிக்கு வழிபிறக்குமென்றும், மனமகிழ்ச்சியாக வாழ்வியலே அமையுமென்றும் மக்கள் நம்புகின்றனர். சிறப்பாகத் **திருமணஞ்சேரியில்** நிருத்த மண்டபத்தில் **நடராசமூர்த்தி** காட்சியளிப்பதையும், அவருக்கு எதிர்ப்புறத்தில் கிழக்கு முகமாகக் **கலியாணசுந்தரமூர்த்தி** திருமணக்கோலத்தில் காட்சியளிப்பதையும் காணலாம். இம்மூர்த்தியை வழிபடுவதற்காக மக்கள்பலர், குறிப்பாகத் திருமணமாகாத இளைஞரைவிட மகளிர்பலர் திரளாக வருவதையும், வணங்கிப் பிரசாதம் பெற்று வேண்டிக்கொண்டே திரும்புவதையும் காணலாம்.

28.9. பிட்சாடனர்(பிச்சையுகக்கும் பெருமான்):

சிவபெருமானின் சிறந்த மூர்த்தங்களுள் ஒன்றான பிட்சாடனர் அடியவர்களை மிகச்சிந்திக்க வைக்கும் திருவுருவமாகும். உலகில் சீவான்மாக்கள் — அடியவர்கள் — புரிந்திடும் தீமைகளை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு நன்மைபுரிவதற்காகவே பரமன் பிச்சையையும் உகக்கும் பெருமானாகவும் காட்சியளிக்கிறார்.

சிவபிரான் தம்பால் அன்புகாட்டும் அடியவர்களுடைய தீயவற்றையே — பாதகங்களையே — தமக்கு உண்ணுஞ்சோறாக வாங்கிக் கொள்ள அவாவித்தேடித் திரிகின்றார். இக்கருத்தை உணர்த்தும் வகையில் **மணிவாசகர்,**

1. வாழ்வியற் களஞ்சியம். தொகுதி. தொகுதி-6, பக். 800

''பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்''[1]

எனப் பாடியுள்ளமை காண்க; சண்டேசுவரர் தம் தந்தையின் கால்களிரண்டையும் வெட்டிய பாதகத்தையும் சிவபுண்ணியமாகக் கருதி ஏற்றுக்கொண்ட சிவனது சிந்தைப் போக்கினை ஈண்டு இயைபுடன் சிந்திக்கலாம். இத்தகைய சிவபிரான் நச்சுப்பாம்பினைத் தன் கச்சையாகக் கட்டிக்கொண்டு, பிறைச் சந்திரனைத் தலையில் சூடிக்கொண்ட நிலையில் நாள்தோறும் கபாலமேந்திய கோலத்தில் பிச்சையெடுக்கிறார்; பிச்சையுகக்கும் பெருமானது திருக்கோலத்தை அருளாளர்கள் பலரும் போற்றிக் கூறியுள்ளனர். **திருஞானசம்பந்தர்,**

''நச்சரவு கச்செனஅ சைச்சுமதி
யுச்சியின்மி லைச்சொரு கையான்
மெய்ச்சிர மணைச்சுலகி னிச்சமிடு
பிச்சையமர் பிச்சனிடமாம்''[2]

எனப் பாடிச் செல்லுதல் காண்க.

பிச்சையுகக்கும் பெருமானின் பல்வகைச் சிறப்புக் கூறுகளை ஆராய்கையில், அவர்தம் **நிருவாணகோலத்தை** முதற்கண் ஆராய்வோம். தாருகவன இருடியர்களின் ஆணவத்தை யடக்கச் சிவபிரான், இருடிபத்தினியர் காணும் வகையில் திகம்பரராகவே எழுந்தருளினார். திகம்பரக் கோலத்தினைத் **திருஞானசம்பந்தர்** குறிப்பாகக்,

''கொக்கரவ கூன்மதியர் கோபர்திரு மேனிச்
செக்கரவர் சேருமிட மென்பர்தட மூழ்கிப்
புக்கரவர் விஞ்சையரும் விண்ணவரும் நண்ணி
நக்கரவர் நாமம்நினை வெய்தியநள் ளாறே''[3]

எனக் கூறிக் காட்டுதலால் உணரலாம். சமணர்களுடைய தாக்கம் சைவசமயத்தில் ஒரு காலத்தில் இருந்தமையால் இத்தகைய நிருவாணக் கோலத்தைப் பிச்சையுகக்கும் பெரு

1. திருவாசகம், திருத்தோணோக்கம், 7
2. திருமுறை, 3,67,11
3. திருமுறை, 2,33,4

மானிடம் சார்த்திக் கூறவேண்டிய நிலையிருந்தது. ஆனால், சமண சமயத்தைத் தழுவித்தாம் பட்ட பாடெல்லாம் தம் நினைவிற் கொண்டவராய் அப்பரடிகள், இறைவனை உடையுடுத்தியவராகவே காட்ட முனைகிறார். கீளாடையும் கோவணமும கட்டியவராகவும், பட்டுடுத்தியவராகவும், தோலாடை கொண்டவராகவும் பாடிச்சென்றுள்ளார். எடுத்துக்காட்டாகத் தோலாடையுடுத்திக் கொண்டு, கபால மேந்தியவராய் இறைவர் எழுந்தருளுதலைக்,

"கறுத்ததொரு கண்டத்தர் காலன் வீழக்
காலினாற் காய்ந்துகந்த காபாலியார்
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறுந்
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார் ...."[1]

எனப் பாடிச் செல்வதால் உணரலாம்.

பிச்சையுகக்கும் பெருமான் ஊரெல்லாம் திரிகின்ற இயல்புடையார்; எனினும், ஆடலுடன் மாயம் பேசித்திரிகிறாராம்! இதனை அப்பரடிகள் புலப்படுத்துவதைப்,

"பட்டுடுத்துப் பவளம்போல் மேனி யெல்லாம்
பசுஞ்சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி யிங்கே வந்தார்க்
கெவ்வூரீர் எம்பெருமான் என்றேன் ஆவி
விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி
வேறோர் பதிபுகப் போவார் போல
வட்டணைகள் படநடந்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னினாரே"[2]

எனவரும் பாட்டால் காணலாம். இத்தகைய திருப்பாடல்களைத் தியானசுலோகங்களெனக் கொண்டு சிற்பியர் வடித்த இறைத்திருமேனிகளைப் பல கோயில்களில் காணலாம். சிறப்

1. திருமுறை, 6,58,6
2. திருமுறை, 6,58,7

பாகத் **திருவலம்புரம்** எனுந் தலத்தில், **வட்டணைபட நடந்த திருக்கோலத்திலுள்ள செப்புத் திருமேனி** சிற்பக் கலையின் நேர்த்திக்கு அடையாளமாக உள்ளது.

தஞ்சாவூர்க் கலைக்கூடத்தில், இருடிபத்தினியர் சூழக் காபாலியராகத் தோன்றுங் கோலத்தைக் கற்சிலை வடிவில் கண்டு போற்றலாம். இது சிற்பியின் கலைநேர்த்திக்குச் சான்று.

பிச்சையுகக்கும் பெருமான், பண்டைய புராணப் பெருமையுடன் மட்டும் பிணைந்த திருக்கோலம் அன்று. **சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகத் திருக்கச்சூரில்** வீடுதோறும் பிச்சையெடுத்து, அவரை உண்பித்த எளிவந்த திருக்கோலமும் ஆகும்; ஈண்டு அதனையும் இயைபுடன் சிந்திக்கலாம்.

அனைத்துலகங்களையும் படைத்துக் காத்து நிற்கும் பரம்பொருளாகிய சிவபிரானே உலகவுய்தி நோக்கில், பிச்சையுகக்கும் பெருமானாகவும் திருக்கோலங் கொள்வதை ஆலயப்பெருந் திருவிழாவில் மக்களுக்கு உணர்த்தச் சான்றோர்கள் பண்டே கருதினர். அதன் கலையுணர்விளைவே **'பிட்சாண்டவர் புறப்பாடு'** ஆகும். இதனைச் சிறப்பாகத் தில்லைத் தெரிசனத் திருவிழாவில் எட்டாம் நாள் **தங்கரதப் புறப்பாடாகக்** கொண்டாடி வருகின்றனர். 'எடுப்பது பிச்சை, ஆனால் ஏறுவது தங்கரதம்' — என்ற குறிப்பில் நிரம்பச் சிந்திக்க இடமுண்டு.

28.10. காமாரி (காமனை எரித்த கண்ணுதற் கடவுள்):

உயிர்களின் உய்தி பொருட்டுப் பற்பல திருவேடங்கொள்ளும் பரனாகிய சிவன் புரிந்த வீரச்செயல்களுள் ஒன்று மன்மதனாகிய காமனை எரித்ததாகும். காமதகன மூர்த்தமாகச் சைவப்பெருமக்களால் போற்றப்பெறும் இத்திருவுருவம் மிகச் சிறப்பாகத் **திருக்குறுக்கை வீரட்டானத்துள்** காணலாம். சிவபெருமான் காமனை எரித்த நிகழ்ச்சி இத்தலத்திலே நிகழ்ந்ததாகப் பெரியோர்கள் கூறுவர்.

28.10.1. காமதகனத்துக்கு அமைந்த புராணப் பின்னணி:

சிவபிரான் தக்கன் வேள்வியைச் சிதைத்தருளிய பின்னர் இறைவியுடன் திருக்கயிலையில் வீற்றிருக்கின்றார். அப்போது இறைவி தன் நாயகனைத் தொழுது, "யான் முன்பு தக்கனுக்கு மகளாகத் தோன்றித் **தாட்சாயனி** எனும் பெயருடன் வாழ்ந்தேன். தங்களைத் தகாத முறையில் இகழ்ந்து பழிக்கான அக் கொடியவனுடைய (தக்கனுடைய) தொடர்புடனிருக்கும் என் பெயரையும் உடலையும் இனி யான் விரும்பவில்லை. இவை நீங்கிப் பழைய சிறப்புடன் மீண்டும் பிராட்டியாதல் வேண்டும்" என வேண்டிக் கொள்கிறாள். சிவபிரானும் அதற்கிசைந்து, "இமவான் என்னும் மலையரசன் உன்னைத் தன் திருமகளாகப் பெறத் தவம்புரிந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு மகளாகத் தோன்றி, அவனது வேண்டுகோளை நிறைவேற்றி உன் களங்கம் தவிர்க" எனப் பணித்தருள்கின்றான்.

அதன்படியே **அம்பிகை, இமவான் காணுமாறு ஒரு பொய்கையில் தாமரை மலரில் ஒரு குழந்தையாக அவதரிக்கின்றாள்.** அந்தப் பெண்குழந்தையைக் கண்ட பர்வதராசன் களிப்புற்றுத் தன்மனைவி மேனையிடம் கொடுத்துக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகிறான். அதனால் அம்பிகைக்கு மலைமகள் - **பார்வதி** — எனத் திருப்பெயர் உண்டாயிற்று. ஐந்து வயது நிரம்பிய அம்மலைமகள், சிவபெருமானை மணக்க விரும்பிக் கடுந்தவம் புரிய விரும்பினாள்; பெற்றோர்களும் வேறு வழியின்றித் தம் மகள் தவம்புரிவதற்கு உடன்படுகின்றனர்.

இந்நிலையிலே, சிவன் அம்பிகையைப் பிரிந்து தனித்திருக்கிறார். அஞ்ஞான்று **சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர்** ஆகிய தவமுனிவர் நால்வரும் சிவனைக்கண்டு ஞானத் தெளிவு நாடுகின்றனர். கல்லால மரத்தின் புடை அமர்ந்து நான்மறைகளுக்கும் ஆறங்கங்களுக்கும் அப்பாலாய் விளங்கும் சிவபெருமான், நான்மறை ஆறங்கங்களுணர்ந்த சனகாதி முனிவர்களுக்கு, ஞானத்தெளிவை' — வாக்கிறந்த பூரணப்பொருளைத் - தான் இருந்தபடி யோகமுத்திரையால் உணர்த்தியருளினார்.

யோகமூர்த்தியாய் விளங்கிய அந்தப்பரமனை உலகஉய்திக்காக அந்தத் தவத்திலிருந்து கலைக்கவேண்டிய சூழல் ஏற்பட்டது, அந்நிலையில் தேவர்களின் விருப்பத்திற்கும் வேண்டுதலுக்கும் இணங்கி **மன்மதன், சிவன் மீது காமக்கணைகளைத் தொடுத்தான்.** மலரம்புகள் பட்ட நிலையில் பரமன் **தவங்கலைந்த நிலையின ராய்ச் சினங்கொண்டு நெற்றிக்கண்ணைத் திறந்து,** மன்மதனைச் **சாம்பலாக்கினார்.** காமனின் மனைவி இரதி, இதனைக்கண்டு கதறியழுது தன் கணவனை மீட்டுத் தருமாறு பரமனை வேண்டி நின்றாள். அவளுக்கு அருளும்நோக்கில், "இவன் உனக்கு மட்டும் உருவத்துடனும், ஏனைய தேவர்களுக்கு அருவமாகவும் அமைவான்" என வரம் தந்தார். அருவநிலையில் அங்கமற்றவ னாய் விளங்கும் காமன், 'அனங்கன்' என்ற பெயரையும் பெற் றான். காமனை எரித்தருளிய இறைவனது இந்தத் திருக் கோலத்திற்குக் **'காமாரி'** என்றும், **'காமதகனமூர்த்தி'** என்றும் திருப்பெயர்கள் உண்டாயின.

ஓவியத்திலும் சிற்பத்திலும் காமதகனமூர்த்தியைப் போற்றிக் கொண்டாடும் சமயப்பெருமக்கள், இந்த மூர்த்திக்கான தனிச் சிறப்பை நன்கு நினைவுகூரும் வகையில் இலக்கியங்களில் சிறப் புடன் குறிப்பிடலாயினர்; 'காமன் சிவனால் எரிந்தானா? எரிய வில்லையா?' எனும் தலைப்பிலே **'எரிந்தகட்சி, எரியாத கட்சி'** எனப்போட்டியுணர்வுடன் எதிரெதிரே அமர்ந்து, **இலாவணி** பாடும் வழக்கத்தையும் தொடங்கலாயினர். காமன் திருவிழாத் தொடர்பில் இவை பற்றிய செய்திகளைப் பண்பாட்டு நோக்கிலே ஓரளவு விளக்கமாகப் பின்னர்க் காண்போம்.

28.11. கால சம்மாரர்:

சிவனுடைய மகேச்சுர மூர்த்தங்களுள் ஒன்றாகிய கால சம்மாரரைக் **காலாரி** என்றும், **காலகாலமூர்த்தி** என்றும் வழங்குவர். இம்மூர்த்திக்கு அமைந்த புராணப் பின்னணியை முதற்கண் காண்போம்.

முன்பொரு காலத்தில் **மிருகண்ட முனிவர்** புத்திரப் பேற்றிற் காகத் தவமிருந்தார். இறைவன் இவர்முன் தோன்றிப்

பதினாறு ஆண்டு ஆயுளுடைய நன்மகன் வேண்டுமா, நூறாண்டு ஆயுளுடைய தீய பண்புடைய மகன் வேண்டுமா எனக் கேட்கவே, முனிவர் பதினாறாண்டு வாழ்வுடைய நன்மகனே வேண்டுமெனக் கேட்டார். இறைவனும் அதற்கருளியமையால், முனிவர்க்கு ஒரு நன்மகன் தோன்றிக் கல்வி கேள்விகளில் சிறந்தவராய் **மார்க்கண்டேயர்** எனும் பெயரில் வாழ்ந்து வரலாயினார். மார்க்கண்டர் பெற்றோர்களின் இசைவுடன் தலப்பயணஞ் செய்து வருகையில், ஒருநாள் **திருக்கடவூர்** அணைந்து சிவலிங்கத்தை வழிபட்டுக் கொண்டிருந்தார். பதினாறு ஆண்டு நிறைவுபெறும் அவரைக் காலன் நெருங்கி உயிரைக் கவரவந்தான்; இதனை யறிந்த அவர், இலிங்கப் பெருமானைத் தழுவிக் கொண்டார். காலன் தன் பாசத்தை மார்க்கண்டர் மீது வீசவே, அது சிவலிங் கத்தையும் சேர்த்து இழுத்தது. அடியவர்க்கு அருளும் இறைவன் அந்த லிங்கத்தில் தோன்றித் தம் காலினால் உதைத்துச் சூலத் தால் மார்பினில் குத்தி அவனது ஆணவத்தை அழித்தருளினார்; மார்க்கண்டேயருக்கு "என்றும் பதினாறு ஆண்டு" என்ற பெரு வாழ்வினையும் அருளினார். இதனால், இறைவன் **காலசம்மாரர்** எனும் காரணப்பெயரால் வழங்கப் படுகிறார். கால சம்மாரரின் பெருஞ்சீர்த்தியை யுணர்ந்த அருளாளர்கள், இவரைப் பல படியாக நினைவுகூர்ந்து வந்துள்ளனர். மார்க்கண்டேயருக்காக இயமன் பட்ட பாட்டினை நினைத்துப் பார்த்தால் அன்பர்க்கு இறப்பைப் பற்றிய அச்சமே வாராது என்ற குறிப்பில் **தாயுமானவர்**, "மார்க்கண்டர்க்காக அன்று மறலிபட்ட பாட்டை உன்னிப், பார்க்கின் அன்பர்க்கு என்ன பயங்காண்? பராபரமே"[1] எனப்பாடிச் செல்லுதலால் உணரலாம்.

கால சம்மாரரின் மேன்மையை உணர்ந்த **கம்பரும்**, மிகுந்த பக்தி ஈடுபாட்டுடன்,

"நஞ்சினை மிடற்று வைத்த நகைமழு வாளன் நாளும்
தஞ்சென முன்னம் தானே தாதைபாற் கொடுத்துச் சாதல்

1. தாயுமான சுவாமிகள் பாடல்கள், பராபரக்கண்ணி, 128

அஞ்சினேன் அபயம் என்ற அந்தணற்காக அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும் மேன்மையின் மேன்மை
யுண்டோ?''[1]

என்ப்பாடிச் செல்லுதல் மனங் கொள்ளத் தக்கதாகும்.

அட்ட வீரட்டானங்களுள் ஒன்றாகிய திருக்கடவூரில் சிவபரம் பொருளை நாவினால் நவின்று உரைப்பார்களைச் சிவனுடைய சுற்றத்தார்களாகவே இயமதூதுவர்கள் கருதி அஞ்சி அகல்வர் என்பது அப்பரடிகளின் நம்பிக்கை. திருவைந்தெழுத்து ஓதி இறைவனைப் பற்றியமையால் மார்க்கண்டர் காலன் பிடியிலிருந்து உய்ந்த திறத்தினைப்,

''பதத்தெழ மந்திரம் அஞ்செழுத் தோதிப் பரிவினொடும்
இதத்தெழு மாணிதன் இன்னுயிர் உண்ண வெகுண்டடர்த்த
கதத்தெழு காலனைக் கண்குரு திப்புன லாறொழுக
உதைத்தெழு சேவடி யான்கட வூருறை உத்தமனே''[2]

என் அப்பர் பெருமான் பாடிச் செல்வதால் அறியலாம்.

காலசம்மாரர் தமிழ்மக்களிடையே நன்கு அறிமுகமாகும் வண்ணம் திருக்கடவூரில் ஆண்டுதோறும் காலசம்மாரம் (எமசம்மாரம்) ஒரு பெருந் திருவிழாவாகவே நடைபெறுகிறது.

தத்துவநோக்கில் காலசம்மாரைக் காண்கையில், சிவபரம் பொருள் காலநியதியைக் கடந்த பெருமையை நினைவிற் கொள்ள வேண்டும். விளக்கமாகக் கூற வேண்டுமெனின், காலசம்மாரர் எனும் சிவபிரான் மூலமும் நடுவும் ஈறும் அற்ற (எமபயம் நீக்கும்) பரம்பொருளே என்பதாகும்.

28.11.1. கால சம்மாரர் - கலைக்குறிப்பு:

காலசம்மாரர் தமிழகத்திலும் வடநாட்டிலும் நன்கு அறிமுகமான மூர்த்தியாவார். கரண்ட மகுடந்தாங்கிய காலன் (எமன்), மலர்களால் சிவலிங்கத்தை அருச்சித்துக் கொண்டிருக்கும்

1. கம்பராமாயணம், வீடணன் அடைக்கலப்படலம், 115
2. திருமுறை, 4,108,2

மார்க்கண்டேயரைப் பாசத்தால் கவர நினைப்பதும், மார்க் கண்டேயர் அஞ்சி இலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டுள்ளது மான காட்சி, வடநாட்டுச் சிற்பக்கலைஞர்களைக் கவர்ந்துள்ளது. இத்தகு திருவுருவில் எல்லோராவிலுள்ள தசாவதாரக் குகை யிலும், எல்லோரா கயிலாசநாதர் ஆலயத்திலும் சிற்பங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் பட்டீசுரம், திருச்செங்காட்டங்குடி ஆகிய தலங்களிலும் இத்தகைய காட்சிச் சிற்பங்கள் உள்ளன.

"காலாரிமூர்த்தி தாமரைப்பீடத்தில் வலக்காலை ஊன்றிக் கொண்டு, இடக்காலைத் தூக்கி எமனின் மார்பில் உதைப்பது போல் சிற்பங்களில் காணப்படுவார். சிவனுக்கு மூன்று கண் களும். கோரைப் பற்களும், அனல் மகுடமும், நான்கு அல்லது எட்டுக் கைகளும் காட்டப்பட்டிருக்கும். நான்கு கைகள் பெற்றி ருக்கும் திருவுருவில் இரு வலக் கைகளில் சூலமும் பரசும் ஆயுதங் களாகவும், இரு இடக்கைகளில் வியப்பு, சுட்டு முத்திரைகளாக வும் காட்டப்படும். எட்டுக் கைகள் இருப்பின் வலக்கைகள் நான்கிலும் சூலம், அங்குசம், வச்சிரம், நண்டுமுத்திரை ஆகிய வையும், இடக்கைகள் நான்கிலும் கேடயம், பாசம்(கயிறு), வியப்பு, சுட்டு முத்திரையும் இடம் பெற்றிருக்கும். இத்திரு வுருவில் இறைவன் செவ்வண்ணம் கொண்டவராய் இருப்பார்"[1] என்று சொ. சாந்தலிங்கம் எழுதிச் செல்லும் குறிப்பு மிகவும் மனங்கொள்ளத்தக்கதாகும்.

தமிழ்நாட்டிலுள்ள திருத்தலங்கள் பலவற்றிலேயுள்ள கோபுரங்களில் சுதைச் சிற்பங்களாகக் காலசம்மாரக் காட்சி அமைந்துள்ளமை கருதிப் போற்றற்குரியது.

கலைச்சிறப்புமிக்க காலசம்மாரர் திருவடிவங்களாகத் திருக் கடவூரில் இரண்டு உள்ளன. அவை 1. உமையன்னையுடன் கூடிய காலசம்மாரர், 2. அந்தகனை மாய்க்க இலிங்கத்தினின் றும் வெளிப்பட்ட காலசம்மாரர். இரு மூர்த்தங்களும் மிகுந்த மூர்த்திகர முள்ளவையாக வழிபடப் பெறுகின்றன.

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - எட்டு, பக் 241

காலசம்மார மூர்த்தியின் கலைவனப்பில் ஈடுபட்டு, பக்தியுணர்வுடன் வழிபட்டுவரின், வஞ்சக நெஞ்சங்கொண்டு எதிர்க்கத் தலைப்படும் பகைவர்களிடமிருந்தும், நோய்நொடிகளை முன்னறிவிப்பாகக் கொண்டு வரும் சாக்காட்டினின்றும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள இயலுமென்பது நம்மனோர் நம்பிக்கை.

28.12. திரிபுராந்தக மூர்த்தி:

திரிபுர அசுரர்களாகிய **தாரகாட்சன் கமலாட்சன் வித்யுன்மாலி** ஆகியோரைச் சிவபெருமான் வென்று நின்ற திருக்கோலமாகிய திரிபுராந்தகமூர்த்தி பற்றிய புராணப்பின்னணியையும் மூர்த்திச் சிறப்பினையும் 'தமிழ்ப்பண்பாட்டு வரலாறு - முதல் பாகத்தில்' காணலாம். அந்நூலில் ஓவியமாட்சி வரையப்பட்டதாதலின், ஈண்டுச் சிற்பக்கலை மாட்சியினைச் சிறிது காண்போம்.

மாமல்லபுரத்தில் முப்புரமெரித்த விரிசடைக் கடவுளைச் சிற்பியர் இரண்டு வகைகளில் புலப்படுத்தியுள்ளனர். கடற்கரைக் கோயிலின் வடபாற்சுவரில் திரிபுரமெரிக்கத் தேர் மீதேறி வில்லைக் கையில் தாங்கித் திரிபுராந்தகமூர்த்தி போர்புரியும் பெருவீரத் தோற்றத்துடன் காட்சியளிக்கிறார். அடுத்ததாகப் பலிபீடத்தின் அருகிலுள்ள கொடித் தூண் பகுதியில் ஒரு புறமுள்ள உருவத்தில் நான்கு திருக்கரங்களுடன் திரிபுராந்தகர் காட்சியளிக்கிறார்; அவர் திருக்கரங்களுள், கீழ்க்கரம் நீண்ட காம்பையுடைய மழுவை ஏந்தி நிற்க, மற்றொரு கரத்தில் ஒரு வில்லைப் பிடித்திருக்கும்நிலையில், மேற்கரங்களுள் ஒன்று சூலத்தையும் மற்றொன்று அம்பையும் பிடித்திருக்கக் காணலாம்.

பல்லவர் காலச் சிற்ப நோக்கில் **காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலிலுள்ள** திரிபுராந்தகர் சிற்பமும் சிறப்புடையதாகும். சிவபெருமான் போர்க்கோலத்துடன் தேரில் ஏறிச் செல்வது போன்ற காட்சியில், தேரினருகே **துர்க்கையும்**, வலப்புறத்தில் **திரிபுரபைரவியும்** அமர்ந்த நிலையில் காணப்படுவது மிகவும் சிந்திக்கத்தக்கதாகும்.

வேக மூர்த்தியாகச் சிவன், அசுரர்களை வதைக்கப் புறப்படுகையில் பெருஞ்சக்தி வாய்ந்த அகிலாண்ட நாயகி

யான **உமையம்மை** உயிர்த் தொகுதி மேல் வைத்துள்ள தாயன்பு காரணமாகத் தன் நாயகனின் அருகிலிருப்பதில்லை என்பது சமய மரபாகும். எனினும் சிவபிரானுக்கு வெற்றியை வகுக்கும் **துர்க்கை** (வேகவடிவச்சக்தி) — கொற்றவை என்பாளும் திரிபுரங்களுடன் தொடர்புடைய **திரிபுரபைரவியும்** பராசக்தியின் அம்சங்களாக அமையலாம் என்பது புராண அணுகுமுறையும் பண்பாட்டு அமைதியுமாகும் எனலாம்.

சோழ மன்னர்களைப் பொறுத்த வரையில் **திரிபுராந்தகர்** மீது அளவற்ற ஈடுபாடு உண்டு. போர்க்களத்தில் வெற்றிக்கு வழிகாட்டுங் கடவுளாகத் திரிபுராந்தகரைக் கொண்டமையால் முற்காலச் சோழர்களும் பிற்காலச் சோழர்களும் திரிபுராந்த கரைக் கற்சிற்பத்திலும் செப்புத் திருமேனிகளிலும் அமைத்துப் போற்றி வழிபட்டுள்ளனர். (தஞ்சைப் பெரிய கோயிலில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஓவியங்களுள் '**திரிபுராந்தகர்**' குறிப்பிடத் தக்கது என முன்னரே கண்டோம்.)

''முற்காலச் சோழர்காலக் கோயில்களில் தேவ கோட்டங் களில் திரிபுராந்தகரின் திருவுருவத்தைக் காணலாம். இருக்கு வேளிர்களின் தலைநகரான கொடும்பாளூரில் உள்ள கோயிலின் விமானத்தில் சிவபெருமான் முப்புரத்தையும் அழித்த பின்னர், காலை மடித்து வில்லைக் கையிலே ஏந்தி வேகமாகச் சுழன்று ஆடுகின்ற நிலையில் ஒரு சிற்பம் உள்ளது. தஞ்சைப் பெரிய கோயில் கருவறையின் மேல் நிலைகளில் முப்பது **திரிபுராந்தகர்** சிற்பங்கள் காணப்படுகின்றன'[1] என எழுதிச் செல்லும் குறிப்பு மனங் கொள்ளத்தக்கது.

பிற்காலச் சோழமன்னர்களும் தம் முன்னோரைப் போலத் திரிபுராந்தகர் திருமேனியில் பெரிதும் ஈடுபாடு கொண்ட வர்களாய் விளங்கியுள்ளனர் தாராசுரம் கோயிலிலும், தஞ்சைப் பெரியகோயிலைப் பின்பற்றித் திரிபுராந்தகரைச் சிற்பத் தொடரமைப்பிலே கண்டுகளிக்கலாம் பிற்காலச் சோழர்களைப் பணிக்கு எடுத்துக் காட்டாகத் தில்லைப் பெருங்கோயிற்

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-பத்து, பக். 347

கோபுரங்களில் திரிபுராந்தகமூர்த்தி தன் தேவியுடன் வில்லேந்தி நிற்கும் கோலத்தைக் காணலாம். இத்தகைய வடிவத்தைச் சுதையமைப்பில் தமிழ்நாட்டுப் பல கோயில்களிலே காணலாம். நாயக்கர் காலத்தில் சிற்பத்தூண்கள் சிலவற்றில் திரிபுராந்தகரின் சிற்பம் அமைந்திருப்பதைக் கலைநேர்த்தியுடன் கண்டு களிக்கலாம்.

செப்புத்திருமேனிகளைப் பொறுத்தவரையில் திரிபுராந்தகரின் செப்புப்படிமங்கள் சோழர்காலத்திலேதான் மிகுந்த அளவில் உருவாக்கப்பட்டுத் திருக்கோயில்களில் இடங்கொண்டன. "சோழர்காலக் கல்வெட்டுக்களில் இத்திருமேனி திரிபுரவிசயர், திரிபுவனசுந்தரர் எனக்குறிக்கப்படுகிறது. திருநல்லம் எனப் பெறும் கோனேரிராசபுரம் கோயிலுக்குச் **செம்பியன் மாதேவி** பல தானங்களை அளித்தாள். அதில் திரிபுராந்தகரையும் தேவியையும் செப்புத்திருமேனியாகச் செய்தளித்து வழிபாட்டிற்காகத் தானமளித்திருக்கிறாள். இன்றும் அத்திருமேனி வழிபாட்டில் உள்ளது"[1] என வருங்குறிப்பு மனங்கொள்ளத்தக்கது. "தஞ்சை மாவட்டத்தில் முதலாம் குலோத்துங்க சோழனுடைய காலத்துத் திரிபுராந்தகர் திருமேனி ஒன்று காணப்படுகிறது. இத்திருமேனியின் பீடத்தில் இதனுடைய வழிபாட்டிற்காகச் சோழப்பேரரையன் என்பவனால் நிலதானம் அளிக்கப்பட்ட கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் இவ்வாறு திரிபுராந்தகர்திருமேனி வடிப்பது குறைந்துவிட்டது"[2] என்று **கி. ஸ்ரீ தரன்** எழுதுங்குறிப்பினால் மக்களின் மனப்போக்கைப் பொறுத்தே கடவுட்படிமங்களின் தேவையுணரப்பட்டது எனலாம்.

தஞ்சைக்கோயில் கல்வெட்டினைக் கொண்டு 'தஞ்சை அழகர்' என்ற திருமேனி செய்தளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இது திரிபுராந்தகர் திருமேனியாக இருக்கலாம் என்பது வரலாற்று அறிஞர்கள் கருத்தாகும்.

1. வாழ்வியற்களஞ்சியம், தொகுதி பத்து. பக். 347-348
2. மேலது, பக். 348

28.13. சலந்தராரி (சலந்தரவத மூர்த்தி):

முன்னொரு காலத்தில் திருக்கயிலையில் சிவபெருமான் ஓர் உக்கிரமூர்த்தி வடிவங்கொண்டு நிற்கையில், இந்திரன் கண்டு சினந்து தன் கையிலிருந்த வச்சிரப் படையால் தாக்கினான்; அது பொடிப்பொடியாகியது. சிவபெருமான் வெகுண்டுநின்றமையால் தன் திருமேனியில் உண்டாகிய வியர்வையை வழித்தெறிந்தார். கடலில் வீழ்ந்த அவ்வியர்வை ஓர் ஆண்குழந்தை ஆயிற்று; கடலரசன் அன்பாக அதனை வளர்த்து வந்தான். சலத்தில் தோன்றிய படியால் அக் குழந்தையின் பெயர் **சலந்தரன்** என ஆயிற்று. அசுரப் பண்புடன் வளர்ந்த சலந்தரன் மயன் எனும் சிற்பியைக் கொண்டு ஒரு நகரம் உண்டாக்கிய நிலையில், காலநேமியின் மகளாகிய பிருந்தையை மணம் புரிந்து கொண்டு வாழ்ந்தான். தேவர்களுக்கு இடையூறு விளைவித்துக் கொண்டே, சிவபெருமானையும் வெல்வேன் என்று பெரும் படையுடன் கயிலைக்கு வந்தான். அங்கு அடைக்கலம் புகுந்திருந்த முனிவர்கள் அஞ்சி நடுநடுங்கினர். இறைவன் ஒரு முதிய வேதியர்வடிவுடன் சலந்தரனிடம் வந்து உரையாடுகையில், சலந்தரனோ தன்னிடம் வந்துள்ளவன் சிவபெருமான் என்று புரிந்துகொள்ளவில்லை; சிவபெருமானைத் தான் வெல்லவந்திருந்தலையே கூறினான். உடனே அவனிடம், "நீ சிவனை எதிர்த்து வெல்ல நினைப்பின் இவ்வுருளைப் படையை எடுப்பாயாக!", என இறைவன் கூறிக் கொண்டே நிலத்தில் கீறி ஒரு பெரிய உருளைப்படையை உண்டாக்கினான். சலந்தரன் இகழ்ந்து கொண்டே அவ்வுருளைப் படையை எடுத்து மார்பிலும் தோளிலும் தலையிலும் வைத்துக் கொண்டான். அந்தச் சக்திப்படை அவனை இரு பிளவாகப் பிளந்து கொன்று விட்டுச் சிவபெருமான் திருக்கையை மீண்டும் வந்தடைந்தது. மேலும், இறைவனது நெற்றிக்கண்ணால் சலந்தரன் படையினரும் அழிந்தனர். இவ்வாறு சலந்தரனைக் கொன்ற சிவனது வடிவம் **சலந்தரவத மூர்த்தி**யாக அழைக்கப்படுகிறது.

அசுரசக்தி தன்னிடமிருந்து தோன்றியதேயெனினும் அதுவும் அழிக்கப்பட வேண்டுவதே என்பதைப் புலப்படுத்துவதே இம் மூர்த்தியின் உள்ளார்ந்த தத்துவமாகும்.

23.14. கச சம்மார மூர்த்தி:

சிவபிரானின் சம்மாரமூர்த்தித் திருக்கோலங்களுள் இதனைக் கய(கஜ) சம்மாரர், வேழம் உரித்த பிரான், ஆனை உரித்த பெருமான் முதலிய திருப்பெயர்களிட்டு அழைப்பர். இந்தத் திருக்கோல அமைப்பினைப் பற்றிக் கூர்மபுராணம், வராக புராணம், சுப்ரபேத ஆகமம், அம்சும பேத ஆகமம், சில்பரத்தினம் ஆகியவை சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. இம்மூர்த்தியின் சிறப்பான சிற்ப வடிவங்கள் காஞ்சிக் கயிலாச நாதர் கோயிலிலும், வழுவூர், திருச்செங்காட்டாங்குடி, திருத்துறைப் பூண்டி, விருத்தாசலம், பேரூர்க் கோயில்களிலும் காணலாம். மக்களின் தெய்வ நலக் கலைச்சுவை விருந்தெனத் தஞ்சைக் கலைக் கூடத்திலுள்ள தாராசுரச் சிற்பத்திலும் இம்மூர்த்தியைக் கண்டு போற்றலாம்.

இத்திருமேனியின் வடிவமைப்பைக் காண்போம்- சிவபிரான் ஓர் ஆனையின் உடலைத் தூக்கி, அதன் வயிற்றை இரு கைகளால் கிழித்து, அத்தோலைப் போர்த்திக் கொண்டு, சுழன்று ஒரு காலை மடக்கித் தாண்டவமாடும் அமைப்பில் இஃது உள்ளது. "சிவன் முகத்தில் சினம் தெரிகிறது; கரங்களில் உடுக்கை, சூலம், கபாலம் பாசம் ஆகியவற்றை ஏந்தியும், இரு கரங்களில் யானையின் தோலினுள் விரலை நுழைத்துக் கொக்கி போன்று அமைத்துக் கிழிப்பது போலவும் சிவ வடிவம் காணப் படுகிறது. யானைத் தலையின் மீது ஒரு காலில் நின்று மற்றொரு காலை மடக்கி நடனம் ஆடுவது போன்று அவர் உருவம் அமையப் பெற்றுள்ளது. யானையின் கால்கள் இறைவனின் தலைக்கு மேலே காட்டப்பட்டுள்ளன. சிற்பத்தின் இடப்புற முனையில் பார்வதி தம் இடையில் குழந்தை வடிவ முருகனை வைத்துக்கொண்டு, இறைவனின் இக்கோலத்தைப் பார்த்துச் சற்றுப் பயந்த தோற்றத்துடன் காட்சி தருகிறார்"[1] என்று வழுவூர் கால சம்மார மூர்த்தியின் வடிவத்தைக் கி. ஸ்ரீதரன் விளக்கிச் செல்வது மனங்கொள்ளத் தக்கது.

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - ஆறு, பக். 468

28.14.1 கச சம்மார மூர்த்தி - புராணப்பின்னணி:

தாருகாவனத்து முனிவர்கள் சிவபரம் பொருளின் பெரும் புகழினை உணராதவர்களாய்ச் செருக்குடன் வாழ்ந்தனர். சிவனை அழிக்கும் நோக்கத்தில் அபிசார வேள்வியொன்றனை நடத்த முற்பட்டனர். அவ்வேள்வியிலிருந்து தோன்றிய யானையைச் சிவன் மீது ஏவினர். அனைத்தையும் அறிந்த அப்பெருமான் அந்தக் கொடிய ஆனையைக் கொன்று அதன் தோலை ஆடையாகப் போர்த்திக் கொண்டு தாண்டவமாடினார். அந்த வடிவமே கச சம்மாரராக அமைந்தது என்பது புராண மாகும்.

மேலும், ஆனைமுகங்கொண்ட கசமுக அசுரனை அழித்த திருத்தலமாகத் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்கு அருகி லுள்ள வழுவூரைக் கூறுவர்; சிவனுடைய வீரம் நிகழ்ந்த திருத் தலங்களாக அட்ட வீரட்டானத் தலங்களாகப் போற்றப்பெறும் தலங்களுள் ஒன்றாக **வழுவூர்** சைவப் பெருமக்களால் கருதப் பெறுகிறது.

மேலும், கரிய யானை வடிவங்கொண்ட **கயாசுரன்** கடுந் தவம் புரிந்து கமலயோனியிடம் அழியாவரம் வேண்டினான் என்றும், அந்தி வண்ணனாகிய சிவனை எதிர்க்காமலிருக்கும் வரை அழிவு நேர்டாது என நான்முகன் வரந்தந்தருளினான் என்றும், ஆணவச் செருக்கினால் கயாசுரன் தேவலோகம் புகுந்து ஐராவதத்தின் வாலைமுறுக்கிச் சுற்றியும், அமராவதியை அழித் தும் தேவர்களைத் துன்புறுத்தினான் என்றும், அதன் பயனாகத் தேவர்களுக்கு அடைக்கலம் வழங்கிய சிவனைச் சூரன் எதிர்த் தான் என்றும், யானை வடிவமுடைய அவனைக் கிழித்துத் தோலைச் சிவன் போர்த்திக் கொண்டார் என்றும் புராணக் குறிப்புக்களைப் பலவாறாக விளக்கிக் கூறுவர். கச சம்மார மூர்த்தியை நாளும் வழிபடுவதால் மக்களின் அகச்செருக்கு நீங்கும் என்பது சமய நம்பிக்கையாகும்.

சைவத் திருமுறைகளில் கச சம்மாரமூர்த்தியைப் போற்றிக் குறிப்பிடும் இடங்கள் பல உள்ளன; அவற்றுள் சில வருமாறு;

''விரைதரு வேழத்தின் ஈருரிதோல்
மேல்மூடி வேய்புரைதோல்
அரைதரு பூந்துகில் ஆரணங்கை
அமர்ந்தா ரிடம்போலும்''1

''கொடுங்கரிக் குன்று உரித்து அஞ்சுவித்தாய்
வஞ்சிக் கொம்பினையே''2

''போழ்ந் தியானை தன்னைப் பொருப்பன்
மகள் உமை யச்சங் கண்டவன்''3

''ஒரு பதத்தினைக் கவானுறுத் திருக்கரத்து உகிரால்
வெரிநிடைப் பிளந்து ஈரிருதாள் புடைமேவக்
குருதி கக்கியே ஒலிட அவுணர் தங்குலத்துக்
கரிஉரித்தனன் கண்டு நின்று அம்மையுங்கலங்க''4

28.14.2. கச சம்மாரர் - கலைநோக்கில் சிறப்புக் குறிப்புக்கள்:

கருங்கற் சிற்பத்திலும் சுதைச்சிற்பத்திலும் கசசம்மார மூர்த்தியின் வடிவங்கள் பலவாகக் காணப்படினும், **காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலில்** காணலாகும் **'கஜயுத்தமூர்த்தி'** மிகப் பழமையான சிற்பமாகும். **வழுவூரில்** காணலாகும் செப்புத் **திருமேனியாகிய கச சம்மாரமூர்த்தி**, சிற்பியரின் நேர்த்தியான படைப்பாகும்; அது சோழர்காலக் கலைவண்ணமாகும்.

ஆகமப் பிரியனாகிய இராசசிம்மன் காலத்துக் கயிலாசநாதர் கோயில் சிற்பத்திருவுருவில், கச சம்மாரரின் ஒரு கை ஆச்சரிய முத்திரை காட்டுகிறது. மிக நீண்ட திரிசூலத்தினால் யானையைக் குத்தி, வலக்காலால் உடலை அழுத்தி, இடக்காலை **உத்குதி காசன** முத்திரையில் யானைத் தலையை மிதிக்கும் கோலத்துடன் அது காணப்படுகிறது. அருகில் உமையம்மை சிவனின் சினங்

1. திருமுறை, 3, 103 (திருவலம்புரம்), 7
2. திருவாசகம், நீத்தல் விண்ணப்பம் - 19
3. திருவாலியமுதனார் திருவிசைபபா, 22 - 4
4. கந்தபுராணம், 6, 13, 146

கண்டு அஞ்சிப் பதைபதைத்து, ஒடுங்கி நிற்கும் பாவம் பல்லவச் சிற்பத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கயனைச் சம்மாரம் புரிகையில் உமை அஞ்சி நிற்கும் இந்தக் காட்சியை மனத்துட் கொண்டே அருளாளர்கள் பலரும் தம் பாடல்களில் இதனைப் போற்றிக் கூறியுள்ளனர் என்பதும் ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தக்கது.

28.15. வீரபத்திரர்:

வீரபத்திரர் எனும் மூர்த்தமும் **அகோரமூர்த்தியும்** வேறு வேறானவை. இவை வெவ்வேறு புராணச் சூழலில் உருவான சிவமூர்த்தங்கள். **விநாயகர் முருகர்** என்பவர்களைப்போல, வீரபத்திரமூர்த்தியும் சிவபிரானின் வேறல்லாத சிறப்பினர் என்பதே சமய அருளாளர்களின் கொள்கை. சிவபிரானின் கூறு அமைந்த வீரபத்திரருக்குப் புராண பின்னணி **கந்தபுராணத்திலும்**, **தக்கயாக பரணியிலும்** சிறப்பாகக் கூறப்பெறுகின்றது.

நான்முகனின் வழித்தோன்றலாகிய **தக்கன்**, ஆணவமேம் பாட்டால் சிவபிரானைத் தன் **மருமகன்** என்றும் மதியாமல் நிந்தித்துக் கொண்டேயிருந்தான். தான் நடத்தும் பெரிய வேள்வியில் முறையான அவிப்பாகத்தைச் சிவபெருமானுக்குக் கொடாமல் புறக்கணிக்கவும் முற்பட்டான். தொன்றுதொட்டு வழக்கிலிருந்த வேள்வி மரபினை மீறி இவ்வாறு வேள்வி புரிய முற்பட்டதும், அவனுக்குத் தக்க பாடம் புகட்டும் வகையில் சிவ பிரான், வீரபத்திரரைத் தம் கூறாகத் தோற்றுவித்தருளினார்; அவரைக்கொண்டே தக்கனது வேள்வியையும் சிதைத்து அழிக்கச் செய்தார்.

வீரபத்திரரை வழிபட்டுப் போற்றி நிற்பவர்கள் பலராக இருப்பினும், **இலிங்காயதர்** எனும் வீரசைவப் பெருமக்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவராவர். வீரபத்திரரைத் தம் **திருவாசகத்தில்,**

> "விண்பட்ட பூதப்படை வீர பத்திரரால்
> புண்பட்டவா பாடிப் பூவல்லி கொய்யாமோ,"[1]

என **மாணிக்கவாசகர்** பாடியருளுதல் காண்க.

1. திருப்பூவல்லி, 4.

28.16. சங்கரநாராயணர்:

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று தமிழகச் சான்றோர் முழக்கமிடினும், தமிழ்நாட்டில் சமயங்கள் பல்கிய நிலையில்தத்தம் சமயமே பிற சமயங்களினும் மேலானது என மக்கள் கூறத் தலைப்பட்டனர். மக்களிடையே தெய்வச் சமய வளாகத்தில் ஒருமையுணர்வும், ஒற்றுமையுணர்வும் தழைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் அருட்செல்வர்களும், கலைஞர்களும் பாடுபட்டு வந்துள்ளனர். சைவ - வைணவச் சமயங்களிடையே நிலவ வேண்டிய ஒருமையுணர்விற்காக, அருட்செல்வர்கள் சைவ சமயக் கடவுளையும், வைணவ சமயக் கடவுளையும் ஒருங்கிணைத்துக் **'சங்கரநாராயணன்'** **'அரிஹரன்'** என்றெல்லாம் திருப்பெயர்களிட்டு வணங்கவும், வழிபடவும் சூழலையுருவாக்கியுள்ளனர். உலகினரிடையே ஒருமையுணர்விலே பழமொழியாக **'அரியும் சிவனும் ஒன்று, அறியாதவன் வாயில் மண்ணு'** என்று வழங்கி வருவதும் இங்கு இயையுடன் சிந்திக்கத்தக்கது.

சிவமூர்த்தங்களுள் ஒன்றாகச் 'சங்கரநாராயணர்' மரபாகப் போற்றப்படுவது ஒருபுறமிருக்க, வைணவச் சான்றோர்களும் ஒருமையுணர்வுடன் **''திருமாலும் சிவனும் ஒன்றே''** எனப்போற்றிய குறிப்புக்களும் உள்ளன.

பொய்கையாழ்வார், திருவரங்கத் திருமாலினும், தில்லைப் பொன்னம்பலச் சிவன் வேறல்லன் என்ற குறிப்புடன் **திவ்யப் பிரபந்தத்தில்** ,

''பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந் தாய நெடுமாலும் – என்றும்
இருவரங்கத் தாற்றிரிவ ரேலும் ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன்''[1]

எனக் கூறுவதும், பிரமன் திருமாலின் உந்தியானாகவும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளாகிய சிவன் திருமாலின் ஆகத்தானாகவும் பொலிவுறுதலைச்,

1. இயற்பா, முதல் திருவந்தாதி, 98

''செய்ய
மறையான் நின் உந்தியான் மாமதிள்மூன் றெய்த
இறையான்நின் னாகத் திறை'.[1]

என மொழிவதும் சிந்தித்துப் போற்றத்தகும்.

பேயாழ்வாரும் பொய்கையாழ்வாரின் சமய வொருமையுணர் விற்கு அரண்தேடும் வகையில் ஒரு பெருந்திருவுருவத்தில் இரு பெருஞ்தெய்வத் திருமேனிகளைக் கண்டு காட்டுகிறார்; அதனைத்

''தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால் — சூழும்
திரண்டருவி பாயுந் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றா யிசைந்து''[2]

என வருந் திருப்பாசுரத்தால் உணரலாம்.

இவ்வாறெல்லாம் வைணவச் சமயத்தினர், திருமாலிடம் சிவபெருமானைக் கண்டு போற்றி நிற்கின்றனர். சைவ சமயத் தினரோ சிவபெருமானிடம் திருமாலைக் காண்பதுடன் சிவ மூர்த்தங்களுள் ஒன்றாகவே **சங்கர நாராயணரைப்** போற்றி வழிபடுகின்றனர்.

28.16.1 சங்கர நாராயணர் - கலைக் குறிப்பு:

அர்த்தநாரியெனும் **மாதொரு பாகத்தான்** திருமேனியில் வலப் பாகத்தில் சிவபிரானும், இடப்பாகத்தில் உமையும் ஒரே உருவமைப்பில் விளங்குவது போலச், **சங்கர நாராயணர்** திருமேனி யிலும் வலப்பாகத்தில் சிவபிரானும், இடப்பாகத்தில் திருமாலும் ஒரே உருவமைப்பில் விளங்கக் காணலாம்.

சங்கர நாராயணர் திருமேனி பல இடங்களில் காணப்படி னும் சங்கர நாராயணர் (சங்கர நயினார்) திருக்கோயிலில் காணப்படுவது மிகவும் சமயக் கலைச் சிறப்பினைக் கொண்டது.

1. இயற்பா, முதல் திருவந்தாதி, 29
2. இயற்பா, மூன்றாந் திருவந்தாதி, 63

28 16.2. சங்கர நாராயணர் - தத்துவம்:

எக்காலத்தில் தோன்றியது என யாராலும் வரையறுத்துக் கூறவியலாத தொன்மையை யுடையது இந்துமதம், இந்த மதத்தில் கடவுளர் பலராகிய நிலையில் சமயப் பிரிவுகளும் பல ஆயின. அவ்வாற்றான் சிவனைப் பரம்பொருளாகக்கொண்ட **சைவமும்,** விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொண்ட **வைணவமும்** தலைசிறந்தவை எனலாம். ஆனால் ஒன்று மற்றொன்றுக்கு ஒத்துழைப்புடன் இயங்க, அவ்வச் சமயத்தினரும் விடவில்லை; காழ்ப்பினை வளர்த்துக் கொண்டு இகலி நின்ற நிலையில் அவர்களை நன்னெறிப் படுத்தச் **சிவனும் திருமாலும்** வேறுவேறல்லர், ஒருவரே எனப் போற்றுதற்குரிய வண்ணம் **சங்கரநாராயண மூர்த்தம்** சான்றோர்களால் அமைக்கப் பட்டது.

சிவன் திருமேனியில் திருமால் பாதியராக வுள்ளாரெனினும் திருமால் திருமேனியில் சிவன் பாதியராக வுள்ளாரெனினும் உள் நோக்கம் ஒன்றே; இதனைச் சமய அன்பர்கள் நன்குணராத காரணத்தால் சமய வொருமைப் பாட்டிற்குத் தடையேற் படுகிறது.

'அரியும் சிவனும் ஒன்று' என்னும் நோக்கத்தில் சான்றோர் விளக்கங்கள் தந்துள்ளனர்; அவற்றுள் ஒன்றனைக் காண்போம்.

'நாராயண' என்ற திருமால் திருநாமத்திலிருந்து **'ரா'** எனும் எழுத்தையும், **நமசிவய** என்ற சிவனது திருவைந்தெழுத்திலிருந்து **'ம'** எனும் எழுத்தையும் இணைத்து உச்சரிப்பின் **'ராம'** நாமம் ஆகும். இராமநாமப் பெருமை உலகெலாம் உணரத்தக்க சிறப்புடையதாகும் எனக் கொள்ளுதல் வேண்டுமென்றும், **'ராம'** என்பதனுள், அரியும் சிவனும் உள்ளனர் என்றும் அருட்செல்வர்கள் சிலர் கூறுவர். ஆனால் இதனைச் சைவ அடியவர்கள் ஏனோ ஏற்கத் தயங்குகின்றனர்!

28.17. கிராத மூர்த்தி:

சிவபெருமானின் சிறப்பான மூர்த்தங்களுள் கிராதமூர்த்தியும் ஒன்றாகும். **தொன்மம்** (Myth) எனும் அடிப்படையிலும் இந்தத் திருவுருவம் சிறப்பாகக் கருதத்தக்கது.

உலகத்தில் மக்களின் பொருளியல் பரிணாம வளர்ச்சியில் **வேட்டையாடுதல்** முதலாவதான காலகட்டத்தைச் சார்ந்ததாகும். எனவே தொன்ம அடிப்படையில் கடவுளர்களைக் காண நினைத்த சமய அணுகுமுறையானது, இராமன், சக்தி, **வேடுவமுருகன்** முதலிய கடவுளர் கைகளில் வில்லையும் அம்பையும் பொருத்திக் காட்டியது; அந்நிலையில் சிவபிரான் கையிலும் வில்லையும் அம்பையும் பொருத்திக் கிராத (வேட்டுவ) மூர்த்தியாகக் காண்பதில் வியப்பில்லை.

கிராத மூர்த்தியாகச் சிவனைக் காண்கையில், புராணங்கள் சிலவும் இயைபாக அமைந்தன.

ஊழிக்காலமாகிய பிரளயம் ஏற்பட்டபோது, சிவபிரான் ஒரு வேட வடிவமாகக், கிராதமூர்த்தியாகத் தோன்றியருளினான் பிரளய வெள்ளத்தில் மிதந்துவந்த அமுதக் குடத்தைத் தன் அம்பால் உடைத்தருளித் திருக்குடமூக்கு குடவாயில் முதலிய திருத்தலங்கள் உண்டாதற்கு வழிவகுத்தான் என்பது புராணம். அந்தக் கிராதமூர்த்தியின் திருக்கோலமுடைய கருவறை ஆதி கும்பேசுவரர் ஆலயத்தில் அருள்மிகு மங்களாம்பிகையின் சன்னிதியிலேயே அமைந்துள்ளது. (ஒவ்வொரு மாதமும் வரக்கூடிய மகநட்சத்திர நாளில் கிராத மூர்த்தியை அடியார்கள் வழிபட்டு மிகப் பலன் பெற்று வருகின்றனர்).

மகாபாரத காலத்தில் அருச்சுனன், துரியோதனாதியரைப் போரில் வெல்லுதற்கு வாய்ப்பாகச் சிவபெருமானிடமிருந்து **பாசுபத அத்திரம்** வாங்கவேண்டிய சூழல் அமைந்தது. சிவனே வேடத்திருவுருவந்தாங்கிய நிலையில், பார்வதியும் வேடுவச்சியாக மாறித் தன் நாயகனுடன் வருகிறாள். வேதங்களையே நாய்களாக மாற்றிக்கொண்டு, பன்றிவேட்டை குறித்து வருகையில், அருச்சுனனுக்கும், கிராதவுருவில் வந்த சிவனுக்கும் வாதமும் வழக்கும் ஏற்பட்டன. அருச்சுனனின் வில்லால் சிவன் தன் தலையில் அடிவாங்கினான் என்பதும், சிவன் மோதிய நிலையில் அருச்சுனன் வானில் உயரவீசப்பட்டுக் கலங்கி வீழ்ந்தான் என்பதும், பிறகு பாசுபதம் இறைவனால் பெற்றான் என்பதும் **திருவேட்களத்துடன்** தொடர்புடைய புராணச் செய்திகளாகும். (இதே பாசுபதம்

வழங்கும் நிகழ்ச்சி **திருவேட்டக் குடியில்** சார்த்திக் கூறப்படுவது சிந்திக்கத்தக்கது).

எவ்வாறோ கிராதமூர்த்தியாகச் சிவபெருமான் எழுந்தருளியமை சைவசமயப் புராண அணுகுமுறையில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

28.18. கங்காள மூர்த்தம்:

ஊழிமுதல்வனாய் விளங்கும் சிவபெருமான் ஒருகாலத்தில் அனைத்தையும் அழித்த நிலையில், தானொருவனாகவே நிற்கும் ஆற்றல் படைத்தவனாய் விளங்குகிறான் என்பது சைவப் பெருமக்களின் அசையாத நம்பிக்கை.

அழிப்பின் பேரெல்லையைக் குறிக்கும் விதத்தில் பிரம விட்டுணுக்களின் எலும்புகளை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு, அதனை ஒரு கழியில் கோத்துத் தன்தோளின் மீது விரும்பியணிந்த வண்ணம் உலவுந் திருக்கோலமே கங்காள மூர்த்தம் எனலாம்.

இந்தத் தத்துவ நுண்பொருளை **மாணிக்கவாசகர்,**

"நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்தரத் திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ"[1]

எனக் கூறிச் செல்வதாலும்,

"பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடன் மூடி யிறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே"[2]

எனவரும் **அப்பர்** திருவாக்காலும் உணரலாம்.

1. திருவாசகம், திருச்சாழல், 11
2. திருமுறை, 4, 112 (பொது), 7

கங்காளர் திருமேனி கொண்டு, "இறைவன் **காலாதீதன்** என்பதும், பிரமன் திருமால் முதலாயினோர் வினைக்கீடாக வடிவு கொண்டு வினைக் கழிவில் இறப்பர்; அங்ஙனம் இறந்தவர் களின் எலும்புகளை நரம்பில் கோத்துக்கட்டி மாலையாக அணிந்தும் முழு எலும்புகளைத் தண்டமாக ஏந்தியும் '**ஈறிலா தவன்** **யான்** ஒருவனே' என்பதையுணர்த்தியருளுகின்றார்"[1] என்று விளக்கிக் காட்டுவார் **மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்.**

சுடலையாடியாகிய சிவபெருமானுக்கு மிகவும் இயைபான காரணத் திருவுருவமாகக் கங்காளர் திருமேனியைச் சைவவுலகம் போற்றிக் கூறும்.

28.19. சண்டேச அனுக்கிரக மூர்த்தி: சண்டே சுவரர் — கோயில்சிறப்பு:

சண்டேச அனுக்கிரகரை நன்கு புரிந்துகொள்ளச் சண்டே சரைப்பற்றிச் சிறிது முதற்கண் தெரிந்துகொள்வது நல்லது. சிவன் கோயில்கள் அனைத்திலும் சண்டேசுவர மூர்த்தம் எழுந்தருளச் செய்திருப்பதை மரபாகக் காணலாம். இறைவனுக்குத் திரு முழுக்குச் செய்யப்படும் பொருள்கள் வெளியில் செல்ல அமைந் திருக்கும் கோமுகத்தின் (கருவறைக்கு இடப்புறத்தின்) அருகே ஒரு சிறுகோயில் காணப்படும். அதனுள்ளே சண்டேசுவரரின் திருவடிவம் இடம் பெற்றிருக்கும். சில கோயில்களில் சண்டே சுவரர் சந்நிதி முகப்பில், "திருவுருவின் மேல் நூலைப் போடா தீர்கள்" என வேண்டுகோள் இருக்கும். இருப்பினும் சிலர் தம் ஆடையினின்றும் நூலைப் பிய்த்தெடுத்துச் சண்டேசுவரரின் மீது பயபக்தியுடன் போட்டுவிட்டு, இரு கைகளைத் தட்டியபின் வணங்கிச் செல்வர்; காரணம், சண்டேசுவரர் பக்தியுறைப்பிலே உறங்கிக் கொண்டிருப்பதாகவும், எனவே அவர் காது கேளாதவர் என்பதாகவும் ஒருவகை நம்பிக்கை. அவரைத் தட்டிக் கூப் பிட்டுத் தாம் கோயிலுக்கு வந்ததைச் சொல்லிவிட்டுப் போக வேண்டும் என்றும், இல்லையெனில் தாம் கோயிலுக்கு வந்து இறைவனை வழிபட்டது தெரியாமற் போகலாம் என்றும் சிலர் கற்பித்துப் பரப்பியுள்ளனர். இவை சமயத்தில் நுழைந்து விட்ட மூட நம்பிக்கைகளேயன்றி உண்மைகள் அல்ல.

1. திருவாசகம், திருவாவடுதுறை ஆதீனப்பதிப்பு, பக். 637

திருவாரூர்க் கோயிலில் சண்டேசர் இருக்க வேண்டிய இடத்தில் **எமன்** இருப்பது வீந்தைக்குரியது. **எம சண்டி** என அழைக்கப்பெறும் இது, இக்கோயிற் சிறப்புகளுள் ஒன்றாகவே கருதப்படுகிறது.

28.19.1. சண்டேசுவரர் - வரலாற்றுப் பின்னணி:

திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்துள் தனியடியார் அறுபத்து மூவருள் ஒருவர் சண்டேசுவரர். இவரைச் சண்டிகேசுவரர் என்று அழைப்பர்.

சோழப் பேரரசர்கள் முடிசூட்டிக் கொள்ளும் பெருமைக் குரிய ஐந்து பதிகளில் ஒன்றான **சேய்ஞலூரில் எச்சதத்தன்** என்பவருக்கும், **பவித்திரை** என்பவளுக்கும் **விசாரசருமனார்** அவதரித்தார், சிறுவயதிலேயே மதிநலமும் ஆன்மிக நாட்டமும் கொண்டவராய் விளங்கினார். ''அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடுங் கழலே'' என்ற சிந்தனையுடனேயே வளர்ந்து வரலானார்.

ஒரு நாள் பசுமேய்ப்பவன் ஒரு பசுவை ஓங்கியடிப்பதைக் கண்ட விசாரசருமர். ஆனிரையின் பெருமையுணர்ந்த காரணத்தால் அதனைக் காக்கும் பொறுப்பை மேற்கொண்டார். மண்ணியாற்றங்கரையில் வேண்டுமளவு பசும்புல்லும் நீரும் உண்ணப் பெற்றமையால் பசுக்கள் மகிழ்வுற்று, விசாரசருமரைக் காண்கையில் தம்மையறியாமலேயே தூய இனிய பாலைப் பொழியலாயின. இதைக் கண்ணுற்ற அவர் ஆத்தி மரத்தடியிலே மணலால் இலிங்கம் அமைத்து ஆவின் பாலைக் கொண்டு சிவபூசை புரிய நாட்டங் கொள்ளலானர். சிவபூசைக்கு இவ்வாறு பாலைப் பொழியினும் பசுக்களிடம் பால் எப்போதும் போல் ஊற்றங்கொண்டு, மீண்டும் கறக்கும்போது நிறைவாகவே இருந்து வந்தது.

விசாரசருமனார் இங்ஙனம் நாளும் பாலினால் சிவபூசை புரிதலைக் கண்ட ஒருவன், பசுக்களின் சொந்தக்காரர்களாகிய அந்தணர்களிடம் நடந்ததைக் கூறிவிட்டான். அந்தணர்கள்

விசாரசருமனாரின் தந்தை எச்சதத்தனிடம் குறைகூறவே, அவன் மறுநாள் தன் மகனைப் பின் தொடர்ந்து சென்று, நிகழ்ச்சிகளைக் காணலுற்றான். தன் மகன் பாலினால் சிவபூசை புரிவதைக் கண்டதும் சினமுற்றுத் தன் கைத்தண்டினால் மகனைப் புடைத்துத் திட்டினான். ஆனால், சிவத்தொண்டு புரிந்து கொண்டிருந்த விசாரசருமரும் இதை உணர்ந்து கொள்ளவில்லை. இந்நிலையில் ஒருநாள் எச்சதத்தன் மிகுந்த கோபங்கொண்டு, திருமஞ்சனக் குடப்பாலைக் காலால் இடறிச் சிந்தினான். இதைக் கண்ணுற்ற விசாரசருமனார் தம் முன் கிடந்த கோலை எடுக்கவே, அது மழுவாக மாறிட, அதனைக் கொண்டு தந்தையென்றும் பாராமல் அவன் காலை வெட்டினார். அதன் பின்னும் அவர் தம் சிவபூசையைத் தொடர்ந்து செய்யலானார். அவரது முறுகிய சிவத்தொண்டினைப் – பக்தியுறைப்பினைக் – கண்ட இறைவன் தன் பூத கணங்கள் புடைசூழ எழுந்தருளி,

"நம்பொருட்டால் ஈன்ற தாதை விழவெறிந்தாய்
அடுத்த தாதை இனிஉனக்கு நாம்"[1]

என்று திருவாய் மலர்ந்தருளினான். மேலும், தம் திருத்தொண்டர்களுக்குத் தலைவனாக்கிச் **சண்டீசப் பெரும் பதவியை**யும் தந்தருளினான்; தம் தலையில் **சூடியிருந்த கொன்றை மலர் மாலையையும்** அவரது தலையில் சூட்டி மகிழ்ந்தான் என்பது பெரியபுராணம் தருஞ்செய்தியாகும்.

இத்தகைய அரும்பெரும் நிகழ்ச்சியை அருளாளர்கள் பலரும் பாராட்டிப் பாடியுள்ளனர். சிறப்பாகத் **திருஞான சம்பந்தர்**,

"வந்த மணலால் இலிங்க மண்ணியின்கண் பாலாட்டுஞ்
சிந்தை செய்வோன் தன்கருமந் தேர்ந்து சிதைப்பான் வருமத்
தந்தைதனைச் சாடுதலும் சண்டீசன் என்று அருளிக்
கொந்தணவு, மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே"[2]

என்றும், **திருநாவுக்கரசர்**,

1. பெரியபுராணம், சண்டேசுர நாயனார் புராணம், 54
2. திருமுறை, 1, 62, 4

''நிறைந்த மாமணலைக் கூப்பி நேசமோடு ஆவின்பாலைக்
கறந்து கொண்டு ஆட்டக்கண்டு கறுத்ததன் தாதை தாளை
யெறிந்த மாணிக்கு அப்போதே எழில்கொள் சண்டீசன் என்னச்
சிறந்தபேர் அளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே''[1]

என்றும், **சுந்தரமூர்த்தி சுவாமிகள்,**

''இண்டைமலர் கொண்டுமணல் இலிங்கமது இயற்றி
இனத்தாவின் பாலாட்ட இடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி அண்டர்தொழு தேத்த
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கன தூர்வினவில்''[2]

என்றும் போற்றிப் பரவுவதைக் காண்க,

28.19.2. சண்டேசுவரரும், சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தியும்:

சிவன் கோயில்களில் சண்டேசுவரர் திருவுருவம் கையில் மழுவினை ஏந்திய நிலையில் காணப்படும்.

சண்டேசுவரர் காரணமாகவே இறைவனுக்குள்ள மகேச்சுர மூர்த்தங்களுள் ஒன்றாகச் சண்டேசுர அனுக்கிரகமூர்த்தி போற்றப்படுகின்றது. ஆகமங்களில், ''சண்டிக்கு அருள்பாலிக்கும் வடிவில் இறைவனும், இறைவியும் உட்கார்ந்த நிலையில் இருக்க வேண்டும். இவர்கள் முன்பு சண்டிகேசுவரர் நின்ற நிலை அல்லது உட்கார்ந்த நிலையில் கூப்பிய கைகளுடன் காணப்படவேண்டும். இறைவன் மாலையில் ஒரு நுனியைத் தன் வலக் கையால் பிடித்து, இடக்கையால் மாலையைச் சண்டிகேசுவரருக்கு அணிவிக்கும் நிலையில் இருக்க வேண்டும்''[3] எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஆகமங்களில் கூறப்பட்டுள்ள சண்டிகேசுவர அனுக்கிரக மூர்த்தியின் வடிவ அமைப்பு, அருட்பாடல்களாகிய திருமுறைகளைப் பின்பற்றி உருவாக்கியிருக்க

1. திருமுறை, 4, 73, 5
2. திருமுறை, 7, 16, 3
3. இந்துசமயக் கடவுள்களின் திருவுருவங்கள், பக். 72

லாம் என்பது அறிஞர்கள் கருத்தாகும். இத்தகைய முறையில் திருமுறைப் பாடல்கள் பலவும் 'தியான சுலோகங்கள்' போலப் பல இறைத்திருமேனிகளை வடிவமைக்கத் துணைநின்றுள்ளன என்பது சிந்திக்கத்தக்கதாகும்.

சிவன் திருக்கோயில்களில் இறைவனது கருவறையைச் சுற்றி அட்ட பரிவார ஆலயங்கள் என எட்டுச் சிறுகோயில்கள் கட்டப் பெறும். பரிவாரத் தெய்வங்களாக விநாயகர், முருகன், சூரியன், சந்திரன், ஏழு கன்னியர், சேட்டை, பைரவர், சண்டிகேசுவரர் ஆகியோர் போற்றப் பெறுவர். இவர்களுள் சண்டிகேசுவரர் ஒருவர் மட்டுமே மானுடப்பிறவியெடுத்து, இறைவனால் ஆர்வமுடன் திருமகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர். திருஞான சம்பந்தர் இறைவனைச் சற்புத்திர மார்க்கத்தில் அணுகி நற்பேறு பெற்றவரே. அவரைத் திருமுருகனின் மறு அவதாரமாகவே சைவ நன்மக்கள் போற்றி வருகின்றனர் என்பதும் உண்மையே. எனினும், சமய குரவரோ, சிறப்பாகத் திருஞான சம்பந்தரோ சிலைவடிவில் இடம் பெறாத சிவன் கோயில்கள் கூட உண்டு. ஆனால், சண்டிகேசுவரர் இடம் பெறாத சிவன் கோயிலைக் காணவியலாது. எனவே, தனிச்சிறு கோயிலாக இருப்பினும் அதனுள் சண்டிகேசுவரர் திருவுருவத்திற்கு இடங்கொடுத்துள்ளமை நினைந்து போற்றுதற்குரியதாகும்.

சண்டிகேசுவர அனுக்கிரகமூர்த்தி அல்லது சண்டிக்கு அருள் பாலிக்கும் வடிவு, கங்கை கொண்ட சோழபுரத்திலும் திருவாலிச் சரத்திலும் மிக நேர்த்தியாக அமைந்துள்ளது. தமிழ்ப்பெருமக்கள் சமய நோக்கிலும் கலைநோக்கிலும் இந்தத் திருவடிவங்கண்டு போற்றக் கடமைப்பட்டவர்களாவார்கள். வெளிநாட்டவர்களும் இந்த வடிவங்கண்டு போற்றிப் புகழ்ந்துள்ளமை, தமிழ்ச் சமயக் கலைப்பண்பாட்டிற்குக் கிடைத்த ஒருவகை வெற்றி எனலாம்.

28.20. நீலகண்டர் (திருநீலகண்டமூர்த்தி):

அடியார்களுக்குத் தீங்குநேரும்போது, தீங்கினின்றும் விடுவித்துப் பாதுகாத்தருளும் சிவபெருமானை ஆபத்துசகாயராக உலகம் போற்றும். உலகத்துக்கே தீங்கு நேருங்காலத்துத் தன்னலந்துறந்து உலக உயிர்களைக் காக்கும் உத்தமராக விளங்கிய

இறைவன் திருக்கோலத்துள் ஒன்றே, கறைக்கண்டராகிய நீல கண்டமூர்த்தியாகும். இதனை **ந. ரா. முருகவேள்** விளக்குகையில் "உலக உயிர்களெல்லாம் அழிவு எய்தாதபடி, எல்லையற்ற தனது பேரருளின் பெருக்கால் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினை விரும்பி ஏற்று உண்டருளிய நிலையிலேயே, சிவபெருமான் **திருநீலகண்டர்** எனப் போற்றப்படுகின்றார்...... எல்லாச் சைவத் திருக்கோயில்களிலும் நிகழும் பிரதோஷ தரிசனம் என்னும் நிகழ்ச்சி இத்திருவுருவத்தின் அருட்சிறப்பை நினைவு கூர்ந்து போற்றுவதேயாகும்'' என எழுதிச்செல்வது மனங் கொண்டு போற்றத்தகும்.

சங்க காலத்திலேயே நீலகண்ட மூர்த்தியைப் பற்றிய பெருமை தமிழ் மக்களிடையே அறிமுகமாகியிருந்தது. எடுத்துக் காட்டாகக்,

''கறைமிட றணியலும் அணிந்தன்று அக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே''[1]

என்று பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிச் செல்வது காண்க.

நீலகண்டரின் பெருஞ்சிறப்பினையுணர்ந்த இளங்கோவடிகளும் சமயக்குரவர்களும் பிற அருளாளர்களும் புகழ்ந்து பாடியுள்ளனர்.

''விண்கணார் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்''[2]

என்று **இளங்கோவடிகளும்,**

''வடங் கெழுமலை மத்தாக வானவர் அசுரரோடு
கடைந்திட எழுந்த நஞ்சங்கண்டு பஃறேவரஞ்சி
அடைந்துநுஞ் சரணமென்ன அருள்பெரி துடையராகித்
தடங்கடல் நஞ்சமுண்டார் சாய்க்காடு மேவினாரே''[3]

என்று **திருநாவுக்கரசு சுவாமிகளும்,**

1. புறநானூறு, கடவுள் வாழ்த்து, 5-6
2. சிலப்பதிகாரம், வேட்டுவ வரி, வரிப்பாடல் - 21
3. திருமுறை, 4, 65, 2

"ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ"[1]

என்று **மணிவாசகரும்** பாடிச் செல்வது சாண்க.

நீலகண்டம் எனும் நாமத்தை **மந்திரமாக** இடைவிடாமல் தியானித்தும் ஓதியும் சிறப்புற்றவர் **திருநீலகண்ட நாயனார்;** திருஞான சம்பந்தப் பெருமானுடைய பாசுரங்களை யாழிலிட்டுப் பெருமை சேர்த்தவர் **திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்**. திருஞான சம்பந்தர் நீலகண்டத்தின் பெருமையை நன்கு உலகிற்குணர்த்தத் **திருநீலகண்டப்பதிகம்** பாடியுள்ளதைச் சைவவுலகம் நினைந்து போற்றி வருகிறது. இவ்வாறெல்லாம் புகழ்தற்குரிய சிவனது அளப்பருங்கருணைக்குச் சிறந்த அடையாள மூர்த்தியாக விளங்குவதே **'திருநீலகண்ட மூர்த்தி'**யாகும்.

28.21. சக்கரப் பிரதர்:

சிவபெருமானே **பரம்பொருள்** எனக் காட்டுதற்கு அமைந்த மூர்த்தங்களுள் சக்கரப்பிரதமூர்த்தியும் ஒன்றாகும். சலந்தராசுரனைக் கொன்றமையால் **சலந்தராரி** என வழங்கப்படும் சிவனிடம் இருந்தது சக்கரப்படை. அதனைத் **திருமால்** ஆயிரம் தாமரை கொண்டு நாள்தோறும் அருச்சித்துப் பெறமுயன்றார். ஒருநாள் ஆயிரம் தாமரை மலர்களில் ஒன்று குறையவே, திருமால் தம் விழித்தாமரை மலரையே அருச்சிக்கவும் முனைந்தார் என்பது புராணம். இவ்வாறான குறிப்புக்களைத் **திருஞான சம்பந்தர்**,

"தரையொடு திவிதல நலிதரு தகுதிறலுறு **சலதரனது**
வரையன தலைவிசை யொடுவரு **திகிரியை** அரிபெற
அருளினன்"[2]

என்றும், (திவிதலம் — விண்ணுலகம்)

"**மாலா யிரங்கொண்டு மலர்க்கண் ணிடஆழி
ஏலா வலயத்தோ டீந்தா** னுறை கோயில்"[3]

1. திருவாசகம், திருச்சாழல், 8
2. திருமுறை 1,20 2
3. திருமுறை, 1,82,6

என்றும், **திருநாவுக்கரசர்,** (ஏலாவலயம் — சுமக்கலாற்றாத சக்கரம்).

'ஏறுடன் ஏழடர்த்தான் எண்ணி ஆயிரம் பூக்கொண்டு
ஆறுடைச் சடையினானை அர்ச்சித்தான் அடியி ணைக்கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக்
கூறுமோர் ஆழி ஈந்தார் குறுக்கைவீ ரட்ட னாரே''[1]

என்றும் பாடிச் சென்றுள்ளனர். இன்னும் பல அருளாளர்கள் இந்தப் புராணச் செய்தியினை ஏற்றுப் போற்றியுள்ளனர்.

28.22. விக்கினப் பிரசாதர்:

நற்செயல்களுக்குத் தடையாகிய விக்கினத்தைத் தீர்த்தருளும் **விநாயகர்** நடுவே அமர்ந்திருக்க, வலப்புறம் **சிவபிரானும்** இடப் புறம் **உமையன்னையும்** அமர்ந்த கோலத்தினை விக்கினப் **பிரசாத மூர்த்தம்** என்பர் ஒன்றிய நிலையில் இந்தத் திருமேனியைக் **கயமுகானுக்கிரகர்** என்றும் கூறுவர்.

உமையன்னை இரு திருக் கைகளுடனும், விநாயகர் வழக்க மான தம் நான்கு திருக் கைகளுடனும, சிவபிரான் தம் நான்கு திருக் கைகளுடனும் ஒன்றியமர்ந்த கோலம் இதுவாகும். சிவ பிரானது மேல் வலத்திருக்கையில் மழுப்படையும், மேல் இடத் திருக்கையில் **மானும்,** கீழ்வலத் திருக்கையில் **வரதமுத்திரையும்,** கீழ் இடத்திருக்கையில் அபயமுத்திரையும் பொருந்திய வண்ணம் திருக்காட்சியளிக்கும் இந்த மூர்த்தம் ஆலயங்களில் பெருவழக்கில் காணவியலாது. **கந்தன்** நடுவேயமர்ந்திருக்க, வலப்புறம் **சிவ பிரானும்** இடப்புறம் உமையன்னையும் அமர்ந்துள்ள **சோமாஸ் கந்தமூர்த்தத்தின்** தாக்கத்தால் இந்த மூர்த்தம் அமைந்துள்ளதோ என்று அடியார்களைச் சிந்திக்கச் செய்யும் நிலையில் இஃது ஒரு மகேசுவரமூர்த்தமாகப் போற்றப்படுகிறது.

---

1. திருமுறை, 4,49.5

28.23. ஏகபாத மூர்த்தி:

சிவனின் மகேசுவர மூர்த்தங்களுள் ஒன்றாக ஏகபாதமூர்த்தம் கருதப்படும். படைப்புக் காலத்துக்கு முன்னும் சர்வசங்கார காலத்துக்குப் பின்னும் தனித்து நிற்கும் சிவமூர்த்தியாதலின் இவருக்குக் கலையுலகில் ஆன்மிக அடிப்படையில் ஒரே பாதம் அமைத்துள்ளனர். இதனால், பரம்பொருளாகிய சிவபிரானே படைப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் நான்முகனையும் திருமாலையும் தன்னிடமே தோற்றுவித்தருளுகின்றான் என்பது சைவப் பெருமக்களின் நம்பிக்கை.

ஏகபாத மூர்த்தியை அமைக்கும் சிற்பியர் கொண்டுள்ள தியான சுலோகத்தையும், விளக்கத்தையும் காண்பது இம்மூர்த்தியைத் தக்கவாறு புரிந்து கொள்ள உதவும். தியான சுலோகம் வருமாறு:

''தியாயேத் கோடிர விப்ரம் திரிநயனம்
கீதாம்சு கங்கா தரம்
ஹஸ்தே டங்கம் ருகக்ம் வராபயகரம்
பாததக யுக்தம் விபும்
சம்போர் தக்ஷிண வாகமக்ஷ புஜயோர்
பிரம்மாச் யுதாப் யாம் யுதம்
தத்தல்ல க்ஷணமா யுதை; பரிவ்ருதம்
ஹஸ்தத்வயாட் யாஞ்ஜலிம்''

இதற்குப் பொருள் காண்கையில், 'கோடி சூரியப் பிரகாசமுடையவரும், சந்திரனையும் கங்கையையும் தாங்கியவரும், மழு மான் வரதம் அபயம் ஆகியவற்றைக் கையில் கொண்டவரும் எங்கும் வியாபித்தவரும் வலப்பாகத்தில் கைகூப்பிப் படைக் கருவிகளுடன் நிற்கின்ற பிரமனை யுடையவரும், இடப்பாகத்தில் திருமாலையுடையவரும் ஒரே கால் உள்ளவருமான அருள்மிகு ஏகபாத மூர்த்தியைத் தியானிக்கிறேன்' என்பது சாரமாகப் புலப்படும்.

சித்தாந்த அடிப்படையில் ஏகபாதமூர்த்தியை நோக்குபவர்கள், "சிவபெருமான் பிரம விட்டுணுக்களை முன்னே தந்து அவர்களைப் படைத்தல் காத்தல் தொழில்களைச் செய்வித்து, அவ்வுயிர்களில் இருவினையொப்பு, மலபரிபாகம் வரப்பெற்ற ஆன்மாக்களை வீடு பேறடையச் செய்து, ஏனைய உயிர்களையும் உலகங்களையும் யுகமுடிவில் சங்கரித்து, அதன் பின்னர்ச் சில காலம் சென்றும் மீண்டும் முன்போல் உலகத் தோற்றத்தைப் புரிந்தருள்வார். இதன் ஒடுக்கக் காலத்தில் பிரமன் திருமால் ஆகியோரின் எலும்புகளைத் தரித்தும் அவர்தம் மண்டையோடுகளை மாலையாகத் தொடுத்தணிந்தும் அவர்தம் சிகைகளைப் பூணூலாகத் தரித்தும் விளங்குவார். அவர்களைத் தம் முத்தலைச் சூலத்தில் ஏந்தி நிற்றலும், அவர்களை நெற்றிக் கண்ணால் சாம்பலாக்கி அச்சாம்பலைத் திருமேனியில் பூசுதலும் புரிவார். இவ்வாறு செய்தல் அத்தேவர்களிடம் இறைவன் கொண்ட கருணையினாலேயாகும். இவ்வாறு இறைவன் மும்மூர்த்திகளையும் தம்முள் ஒடுக்கி ஏகராய் நின்ற நிலையைக் குறிப்பதே ஏகபாதர் திருவுருவமாகும்" எனக் கூறி விளக்குவர்.[1]

ஏகபாத மூர்த்தியின் பெருமையைப் பக்தியிலக்கியக் காலத்தில் மக்கள் நன்கு உணர்ந்து போற்றியுள்ளனர். எடுத்துக் காட்டாகத் திருநாவுக்கரசர் தம் திருவெண்காட்டுப் பதிகத்தில்,

"பாதம் தரிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதம் படாவண்ணம் நின்ற பாதர்
ஏழுலகு மாய்நின்ற ஏக பாதர்
ஓதத் தொலிமடங்கி யூருண் டேறி
யொத்துலக மெல்லாம் ஒடுங்கியபின்
வேதத் தொலிகொண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே"[2]

எனப் பாடியருளுதலைக் காண்க.

1. வி. சா. குருசாமி தேசிகர் முதலியோர்.
2. திருமுறை, 6, 35 2

மும்மூர்த்தியும் ஒரே மூர்த்தியமைப்பில் காணச்செய்வது கொண்டு, சமயவொருமைப்பாட்டிற்கு வழிவகுத்துள்ள சைவ மெய்யன்பர்களின் உள்ளப்பாங்கினை யுணரலாம். ஆனால், நாயகத்தன்மை சிவபிரானுக்குக் கிடைப்பதை வைணவ மெய் யன்பர்கள் ஏற்க ஒருப்படுவதில்லை. மாறாக, ஊழியிறுதியில் அனைத்துத் தேவர்களும் ஒடுங்கிய நிலையில், திருமால் ஊழி வெள்ளத்தின் மீது பாலகனாக ஆலிலைமேல் பள்ளி கொண்டிருப் பதாகக் கருதிக் கூறி மகிழ்கின்றனர்.

சிற்பக்கலை நோக்கில் மும்மூர்த்திகளும் ஏகபாத மூர்த்தி வாயிலாக ஒரே மூர்த்தியமைப்பில் அமைந்துள்ளனர். என்பது கூறப்படுகிறது. திருவானைக்காவிலுள்ள திருக்கோயிலில் உள்ள ஏகபாததிருமூர்த்தி சிற்பக்கலை நோக்கில் மிகச் சிறந்தது எனக் கூறுவார் பி.வி. ஜெகதீச அய்யர்[1]. இந்தத் திருவுருவத்தின் தாக்கமாக முத்தலைச் சூலம் சைவமக்களிடையே நன்கு அறிமுக மாகியுள்ளது என்பதும் சிந்திக்கத்தகும்; தத்துவப் புலப்பாட்டின் சீர்மைதான் என்னே!

28.24. சுகாசன மூர்த்தி:

உடலை எப்பக்கத்திலும் சாய்க்காமல் நேராக நிமிர்த்திய நிலையில் கைகளைச் சமச்சீருடையனவாகக் கோலித்து, ஒரு காலைத் தொங்கவிட்டும் மறுகாலை மடக்கியும் அமர்ந்துள்ள ஆசனமே சுகாசனமாகும். சிவபெருமானின் சுகாசன மூர்த்த மானது உமாசகித சுகாசன மூர்த்தம், உமாமகேசுவர சுகாசன மூர்த்தம், சோமாஸ்கந்த சுகாசன மூர்த்தம் என மூன்று வகைத் திருவடிவங்களில் அமைந்துள்ளது. பொதுவாகச், "சுகாசன மூர்த்தம் என்பது உமையவள் தன் பக்கத்திலில்லாது, தனித்துச் சுகாசனமிட்டிருப்பது. உமா சகித சுகாசனமூர்த்தம் என்பது சுகாசனமிட்டிருப்பது; சோமாசுகந்த சுகாசன மூர்த்தம் பால சுப்பிரமணியரை மத்தியில் உடையதாய்த் தேவியோடு மிருப்பது"[1] எனக் க. நவரத்தினம் விளக்கிச் செல்வது காண்க. மேற்காணும் சுகாசன மூர்த்தங்கள் அனுக்கிரகமூர்த்தங்கள் எனப்

1. South Indian Shrines (1920). P. 112
2. தென்இந்தியச் சிற்பவடிவங்கள்,

படுபவையாகும்.

சிவபிரான் தொடர்பில் மிகச்சிறப்பான அனுக்கிரகமூர்த்தங்களாகச் சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தம், **கிராதார்ச்சுன அனுக்கிரக முர்த்தம், இராவண அனுக்கிரக முர்த்தம்** ஆகியவை கூறப்படும். இவை பற்றிய விளக்கங்களைச் சைவசமயப் புராணங்களில் கண்டு கொள்ளலாம். ஈண்டுச் சுகாசனமூர்த்திக்கெனக் கூறப்படும் புராணப் பின்னணியைச் சிறிது காண்போம்.

திருக்கயிலைமலையின் உச்சியில் கோடிக் கதிரவர்கள் தோன்றினாற் போன்று பேரொளி வீசும் நவமணி மண்டபத்தில் அன்பர்களுக்கு அருள்புரியுங் குறிப்போடு உமையம்மையாருடன் இரத்தினசிம்மாசனத்தில் ஒளிர் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோலமாக இது போற்றப்படுகிறது. "சிவபிரானுக்கும் உமைக்கும் அருகில் திருமால் பிரமன் முதலிய தேவர்களும், இந்திரன் முதலிய தேவர்களும், இந்திரன் முதலிய திக்குப் பாலகர்களும், அஷ்டவசுக்களும், தேவர்கள் முனிவர்கள் கருட கந்தர்வர் சித்தர்களும் துதித்து வணங்குகின்றனர். தும்புரு, நாரதர் இன்னிசை பாடுகின்றனர். வேதங்கள் தோத்திரம் செய்கின்றன. அரம்பையர் ஆடுகின்றனர். இறைவன் எல்லோருக்கும் வேண்டும் வரங்கள் அளிக்கின்றார். அம்பிகை வேத சிவாகமங்களின் உண்மையை உணர்த்தி அருளுமாறு வேண்ட, இறைவன் சுகாசனமாக எழுந்தருளி அன்னைக்கு அவற்றின் உண்மைப் பொருளை உபதேசித்தருளுகின்றார்"[1] என விளக்கிச் செல்லுதல் மனங்கொள்ளத் தக்கது.

சிற்பக்கலை நோக்கிலும் சமயவுளவியல் நோக்கிலும் காண்பவர்கள், சுகாசன மூர்த்தங் காரணமாக உயிர்களுக்கு இங்கிதமான ஞானத் திருவருள் செவ்விகூடுமென்றும், அதற்குரிய இறைமையின் பொலிவு அதனில் பொங்கி நிற்கிறது என்றும் கூறுவர். "சிவபெருமான் அம்மையாரைத் தமது அருகில் இருத்தி, வலக்காலைத் தொங்கவிட்டுக் கொண்டும், இடக்காலை அரியாசனத்தின் மீது மடக்கிக் கொண்டும் அமர்ந்திருந்து, ஒரு திருமுகமும் ஆறுதிருக்கைகளும் உடையவராய், வலத்திருக்கை ஒன்றில் சின்முத்திரையைக் காட்டிக் கொண்டு, வேத சிவாகமத்

1. கலைமகள் தீபாவளிமலர், 1991.

தத்துவப் பொருள்களை உபதேசிக்கும் நிலையே சுகாசன வடிவம் எனப்படும். சுகாசனமாவது, **சுவத்திகம் கோமுகம் பதுமம் வீரம் கேசரி பத்திரம் முக்தம் மயூரம் சுகம்** என்னும் ஒன்பது வகை ஆசனங்களுள் ஒன்று. எவ்வாறு அமர்ந்தால் சுகமும் திடனும் உண்டாகுமோ, அவ்வாறு அமர்வது சுகாசனம் எனப்படும்"[1] என்று **ந.ரா. முருகவேள்** எழுதிச் செல்வதும் உளங்கொண்டு போற்றத்தக்கது.

28.25. இலிங்கோத்பவர்:

சிவபிரானின் **முதன்மையான மூர்த்தமாகக்** கருதப்பெறுவது இலிங்கோத்பவர் ஆகும். சிவபரம் பொருளின் திருவடிகாண முயன்ற திருமாலுக்கும், திருமுடிகாணமுயன்ற நான்முகனுக்கும் புலப்படாத நிலையில் பேரொளிப் பிழம்பாகத் – தீபத்தம்பமாக மண்ணுக்கும், விண்ணுக்குமாக நெடிய நிலையிலிருந்த – தோற்றம் இது என்பர். இதுவே சிவலிங்கத் திருவுருவில் வழிபடப்படுகிறது; எனினும், இதற்குச் சில சிறப்பு அடையாளங்கள் உண்டு.

சிவலிங்கத்தில் பாணத்தின் கீழ்ப்பகுதியில் **வராகவுருவில் திருமால்** பூமியைத் தோண்டிச் செல்வது போலவும் மேற்பகுதியில் **அன்னவுருவில் நான்முகன்** விண்ணில் பறந்து செல்வது போலவும் அமைப்பது சிற்ப மரபாகும். எனினும் கலையுலகில் சிற்பியர்க்கென ஓரளவு சுதந்திரம் உண்டு; கலைமரபை மீறியும் சிற்பியர் தம் கற்பனையை முடுக்கிவிட்டுத் தம் கலைப்படைப்பினை உருவாக்கியுள்ளனர்; சில எடுத்துக்காட்டுக்களைக் காண்போம்.

திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயில் முதல் பிராகாரத்தில் காணப்பெறும் இலிங்கோத்பவர் விந்தையாக உள்ளது. "வராக உருவில் திருமால் கால்களை நீட்டி நீந்துவது போலவும், மேல் முடியின் மீது அன்னம் அமர்ந்துள்ளது போலவும் கண்ணியோடு லிங்கோத்பவர் விளங்குகிறார். வழக்கமாக அன்னம் அருகில் பறப்பதுபோல் இருக்கும்; இது சிற்பியின் தவறு என்பர் சிலர்"[2] எனுங் குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

1. திருக்கோயில், ஜனவரி. 1972
2. அண்ணாமலையார் திருக்கோயில் திருக்குடமுழுக்கு மலர். 1976, பக். 18

காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் கர்ணலாகும் இலிங்கோத்பவமூர்த்தத்தில் வராகத்திருவுருவில் திருமாலும் அன்ன வடிவமெடுக்காமலேயே தனியாகப் பிரமனும் கீழும் மேலுமாக அமைந்துள்ளமை விந்தைக்குரியதாகும். சிற்பியின் கற்பனையில் இத்தகைய அமைப்புள்ளதற்கு ஆகமத்தில் இடமுண்டா என்பது தெரியவில்லை.

பொதுவாகச் சிவன் கோயில்களின் கருவறையில் மேற்குச் சுவரின் புறத்தே இலிங்கோத்பவர் இடம் பெறுதலைக் காண லாம்.

28.26. எக்ஞேசுவரர் :

எக்ஞம் என்பது வேள்வியைக் குறிக்கும். இந்து மதத்தில் வேள்விகள் பல்வகையின; அவ்வேள்விகளுள் கன்மவேள்வி, தவவேள்வி, செபவேள்வி, தியானவேள்வி, ஞானவேள்வி ஆகிய ஐந்தும் சைவசமயத்தில் சிறப்பாகக்கொள்ளத்தகும். அவேள்விப் பயன்களை அருளும் சிவமூர்த்தியே ஏக்ஞமூர்த்தியாகப் போற்றப் படுகிறார்.

''வேதமுறைப்படி செய்யப்பெறும் **பிரமவேள்வி** (வேதம் ஓதுதல்), **தேவவேள்வி** (வழிபாடு செய்தல்), **மனிதவேள்வி** (விருந்தோம்பல்), **உயிர்வேள்வி** (உயிர்களிடத்து இரக்கம்கொண்டு உணவிடுதல் முதலியன செய்தல்), **பிதுர்வேளவி** (தென் புலத்தார் கடன்தீர்த்தல்) ஆகிய ஐவகை வேள்விகளும் சைவவேள்வியாகிய கன்மவேள்வியில் அடங்குவன. **தவ வேள்வி என்பது** சரியை, **கிரியை, தியானம் என்ற மூன்று நெறிகளிலும் நிற்றலாகும்.** உரிய திட்சைகளைப் பெற்றுத் திருவைந்தெழுத்தைக் கணித்தல் **செப வேள்வி;** சிவனது அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளையும் தியானித்தல் **தியானவேள்வி;** பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் சிறப்புகளை உணர்ந்து, ஞானநூல்களை ஓதுதல், ஓதுவித்தல், கேட்டல், பின்னர்ச் சிந்தித்தல், நிட்டை கூடல் ஆகியவை **ஞானவேள்வி.** இந்த ஐவகை வேள்விகளின் பயன் களை அருள்பவர் எக்ஞேசுவரர்''[1] என்று **கோ. மு. முத்துசாமி**

1. கோபிற்களஞ்சியம் அறிமுகம், பக். 45-46

பிள்ளை எழுதிச் செல்வது இயைபுடன் சிந்தித்துப் போற்றத் தக்கதாகும்.

"அவர் கருணை பொங்கித் ததும்பும் திருமுகங்கள் இரண்டும் திருவடிகள் மூன்றும், கூரிய நீண்ட கோடுகள் நான்கும், வழிபடும் அடியவர்களின் பலங்களைப் போக்கியருள்கின்ற திருக்கைகள் ஏழும் உடையவராக விளங்குவார்"[1] என்று **ந. രா. முருகவேள்** எக்ஞேசுவரரின் உருவப் பொலிவைக் கூறுதலும் சிந்திக்கத்தகும்.

28.27. ஆபற்சகாயர் (ஆபத்துசகாயர்):

உலகத்தில் தீயோரை ஒறுத்து நல்லோரைத் தீங்கினின்றும் - ஆபத்தினின்றும் - பாதுகாத்து உதவியருளுபவன் இறைவன். எனவே, அவனை ஆபற்சகாயமூர்த்தியாக வழிபடுவது அடியார் களின் வழக்கமாகும். இந்த மூர்த்தியைப் பற்றி **ந. ரா. முருக வேள்** விளக்குகையில், "இறைவன் தன்னைத் தொழுபவர்களின் துயரங்களைப் போக்கிக் காத்தலையே தனக்குரிய தொழிலாகக் கொண்டவன். தன்னுடைய அடியவர்களுக்கு இடுக்கண் (ஆபத்து) நேருங்காலங்களிலெல்லாம் துணை புரிபவர் (சகாயர்) ஆக எழுந்தருளி இடர்களைந்து அருள்புரியும் கடப்பாடு மேற் கொண்டு திகழ்பவர் ஆபற்சகாயர் எனப்படுவர். விநாயகர், முருகர், திருமால், பிரமன், மகேசுவரி, நாராயணி, கௌமாரி, இந்திராணி, காளி, அபிராமி, வாராகி என்னும் ஏழு மாதர்கள், ஒன்பது கோள்கள், முனிவர்கள் ஆகியோர் அருகே சூழ்ந்து நிற்க, அழகிய பொற்றவிசின் மீது வீற்றிருந்து அருள்பவர் ஆபற் சகாயர் என நூல்கள் நுவலும்"[2] என விளக்கிச்செல்வது மனங் கொள்ளத்தக்கதாகும்.

28.28. இடபாந்திகர்:

திருமால் இடபமாக வந்து சிவனைத் தாங்கி நிற்கின்றார் என்பது ஒருபுறமிருக்க, மற்றொரு சூழலில் அறக்கடவுளே- தருமதேவதையே — இடபமாகச் சிவனைத் தாங்கி நிற்கிறது என்றும் கூறுவர். அதற்கேற்பவும் சமயநெறியில் அமைதி

1. திருக்கோயில், டிசம்பர், 1971
2. திருக்கோயில், ஜனவரி, 1972

உண்டு. அவ்வாற்றான் தோன்றியருளியதை இடபாந்திகர் திருமேனியாகும்.

பேரூழிக்காலத்தில் எல்லா உலகங்களும் உயிர்களும் ஒடுங்கி அழிகின்ற நிலையில், தானும் அழிய நேரிடுமோ என்று அஞ்சி நடுங்கிநிற்கிறது அறக்கடவுளாகிய தருமதேவதை. அத்தகைய சூழலில் சிவபெருமானைச் சார்ந்து உய்திபெறலாமென்ற நோக்கத்தில் தருமதேவதை வெண்ணிற இடப வடிவங்கொண்டு விரைந்து அடைக்கலமாகிறது. தஞ்சமடைந்த அறவெள் விடையாகிய அதன்மீது இறைவன் அமர்ந்து அருள்புரிகின்றார். இந்த அமைப்புடைய மூர்த்தியே இடபாந்திகர் திருவுருவமாகும்.

இறைவன் கொண்ட கங்காதரர் திருவுருவத்துக்கும் கங்கா விசர்ச்சனர் திருவுருவத்துக்கும் கலையமைப்பில் சிறிது வேறு பாடு இருப்பதுபோல, இடபாரூடர் திருவுருவத்துக்கும் இட பாந்திகர் திருவுருவத்துக்கும் சிறிது வேறுபாடு உண்டென அறிக.

28·29. கங்காதரர் - சிற்பவடிவம்:

சிவபெருமான் தன் இடக்காலை வளைத்து, வலக்காலை நேராகத் தரையில் ஊன்றி நிற்கும் திருவுருவமாகக் கங்காதரர் அமைந்திருக்கும். தன் தேவி உமையம்மையை முன் இடக் கையால் அணைத்தபடி முன் வலக் கையால் அவளது கன்னத் தைத் தொட்டுக் கொண்டிருப்பதாக அஃது அமைந்திருக்கும்; மேலும், தன் பின் வலக்கை மழுப்படை தாங்கவும், அம் மழுப் படை கங்கை பொருந்தியுள்ள தன் சடையைத் தொட்டுக் கொண்டிருக்கவுமான அமைப்பிலும், தன் இடக்கை மானை ஏந்திக் கொண்டிருக்கும் அமைப்பிலும் காணப்படும்.

உமையம்மையின் வலக்கால் ஓரளவு வளைந்தும், இடப் புறக்கால் நிமிர்ந்தும், இடக்கை மலரேந்தியும் வலக்கை பக்கத்தே தொங்கித் தாழ்ந்தும் காணப்படும்.

சைவசமயம் பல்லவர் காலத்தில் - பக்தி இயக்கக் காலத்தில் தழைத்தோங்கியது. அக்காலத்தில் பல்வகைச் சிவமூர்த்தங் களும் மக்களிடையே பெருவழக்கில் அறிமுகமாயின.

மகேந்திரவர்ம பல்லவன், அப்பரடிகளால் சைவத்தின் மேன்மையை உணரத்தலைப்பட்டான்; எனவே, **சமணக் கொள்கையினின்றும் விடுபட்டுப் பல்லாற்றானும் சைவ சமய ஆக்கத்திற்கு வழிகோலினான்.** அந்நிலையில், ''இந்த இலிங்கத்தினால் பெற்ற அறிவு என்றென்றும் நிலைத்து நிற்கட்டும்'' என்று பக்தி வைராக்கியத்துடன் **திருச்சிராப்பள்ளிக் குகைக் கோயிலில்**, கங்கையைத் தன் திருச்சடையில் அணிந்த **கங்காதரத்** திருவுருவத்தினை வியத்தகு வண்ணம் செதுக்கச் செய்து பெரும்புகழ் கொண்டுள்ளான். இந்தக் **கங்காதர மூர்த்தம்** பலருங் கண்டு பரவத்தக்கதாகும். மக்கள் பலர் அங்குச் சென்று ஏனோ காண்பது கூட இல்லை!

கங்காதர மூர்த்திக்குப் புராணப் பின்னணியாகப், ''பார்வதி பிராட்டி சிவமூர்த்தியின் கண்களை விளையாட்டாக மூடிய காலத்தில் அவளது நகத்திற் பிறந்த கங்கையைத் தரித்த சிவன் திருவுரு''[1] என்று **அபிதான சிந்தாமணி கூறும்.** இதனை விளக்கமாகத் தொடர்ந்து ஆராய்ந்து காண்போம்.

28.29.1. துங்க கங்காதரன்:

முன்னொரு காலத்தில் திருக்கயிலைமலைப் பூஞ்சோலையிலே சிவபெருமான் தனியே எழுந்தருளியிருந்தார். அவ்வேளையில் அங்கு வர நேர்ந்த உமாதேவியார், தம் அன்பு விளையாட்டாகச் சிவபெருமானின் இரு கண்களையும் தம் திருக்கைகளால் மூடி நின்றார்; அதனால் உலகமெங்கும் இருள்பரவி உயிரினங்களெல்லாம் துன்புறலாயின. அத்துன்பத்தைப் போக்க வேண்டிய நிமித்தம், பரமேசுவரன் தன் நெற்றிக் கண்ணைத் திறந்தான். அந்நிலையில் உலகில் இருள் நீங்கி ஒளி படரலாயிற்று; எனினும், அக்கண்ணொளியின் வெப்பம் நீங்க இறைவி தன் கைகளை எடுத்தாள். அப்போது அவள் திருக்கையின் நகக்கால் தோறும் வியர்வை பெருகுகிறது; அது வெள்ளமாய்ப் பெருகி உலகங்களையெல்லாம் மூடிவருதலைக் கண்ட பரமன் உயிர்களைக் காக்கும் பொருட்டு அவ்வெள்ளமாகிய கங்கையினைத் தம் சடைமுடியில் தாங்கிக் கொண்டார். தூய்மையான அந்தக்

1 அபிதான சிந்தாமணி, பக், 314

கங்கையை அவ்வாறு தாங்கிய திருக்கோலமே **'துங்க கங்காதரம்'** எனப் புராணச் சார்புடன் சிற்பநூல்கள் கூறும்.

புராணக் கூற்றுக்கள் வெவ்வேறாக அமையினும் துங்ககங்காதரனும், கங்காதரனும் சிற்ப நோக்கில் பெரும்பாலும் ஒரே அமைப்பினைக் கொண்டுள்ளமை சிந்திக்கத்தகும்.

28.29.2 கங்காதரர் - புராணப் பின்னணி:

தேவநதி என்றும் **ஆகாசகங்கை** என்றும் புகழப்பெறும் **கங்கை** முதற்கண் விண்ணுலகிலேயே இருந்து, பின்பு பூவுலகில் இறங்கிப், பின் கீழே பாதாளத்திற்குச் சென்ற சிறப்பின் காரணமாக, இதனைத் 'த்ரி+பா+கா' (மூன்று வழிகளில் செல்பவள்) என்று பெயரிட்டழைப்பர். விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்குக் கங்கை வந்த கதை இதிகாச புராணங்களில் இரண்டு வகையாகக் காணப்படுகிறது.

சிவபெருமான் கங்கையைத் தன் தலையில் தரிக்கக் காரணமாயிருந்த புராண வரலாற்றினைச் சிறிது காண்போம்.

இமயமலையின் மகளாய்த் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி வானிலே தங்கியிருந்தாள் கங்கை. அயோத்தியை ஆண்ட சகர மாமன்னர் தம் அசுவமேத வேள்வியைத் தொடங்குவதற்கு முன், இந்திரன் வேள்விக் குதிரையைத் திருடிக்கொண்டு போய்ப் பாதாளத்தில் தவமிருக்கும் கபிலமுனிவரின் அருகில் கட்டிவிட்டான். சகரருடைய மக்கள் அறுபதினாயிரவர்களும் குதிரையைத் தேடிக் கொண்டே, பூமியைத் தோண்டிப் பாதாளம் வரையில் சென்றனர். அங்கே, கபிலருக்கு அருகே தம் தந்தையின் வேள்விக் குதிரையைக் கண்டதும் அவரைத் திருடரென்று தாக்குதற்கு ஓடி வந்தனர். ஆனால், கபிலரோ தம் தவக் கண்ணால் அவர்களனைவரையும் சாம்பலாக்கினார். சகரரின் மூத்த மனைவியின் மைந்தன் அசமஞ்சன் மகனான **அஞ்சுமான்** வாயிலாகச் சகரபுத்திரர்களுக்கு நேர்ந்த கதியை அறியலானார் சகரர்; கங்கை நீரைக் கொண்டு வந்து, சாபத்தால் பற்றியெரிந்த தம் புத்திரர்களின் சாம்பல் குவியலை

நனைத்தால் அவர்களின் ஆன்மா கடைத்தேறும் என்ற செய்தி யையும் **சுபர்ணன்** என்ற தெய்வப்பறவையிடமிருந்து அறிந்து கொண்டார். ஆனால், **சகரரோ**, அவருக்குப்பின் மன்னரான **அஞ்சுமானோ, திலீபனோ** எவ்வளவோ பாடுபட்டும் கங்கையை விண்ணுலகத்திலிருந்து கீழே கொணர முடியவில்லை. திலீபனுக்கு மகனான **பகீரதன்** தன் தவத்தால் **நான்முகனையும் சிவபிரானை யும் கங்கையையும்** திருப்தி செய்து, கங்கையைக் கீழிறக்கித் தன் முன்னோர்கள் கடைத்தேறும்படி செய்தான். பகீரதனால் பூலோகத்திற்கு வந்தமையால் கங்கைக்குப் **பாகீரதி** எனப்பெயர் ஏற்பட்டது.

பிரமன் வரங்கொடுத்தும் வானிலிருந்து கடுவிசையுடன் விழும் கங்கைப் பெருக்கைத் தாங்க வல்லவர் சிவபெருமானே என்பதையுணர்ந்து, அவரைக் குறித்துத் தவங்கிடந்து, கீழே விழும் கங்கையைத் தாங்கியருளுமாறு வேண்டிக் கொண்டான் பகீரதன். இத்தகைய சூழலில் கங்கையைத் தம் தலையில் தாங்கியதால் சிவனுக்குக் **'கங்காதரர்'** என்ற பெயர் ஏற்பட லாயிற்று. கங்கையின் கடிய வேகங் கெடுத்தாண்ட வேந்தராகக் கங்காதரத் திருவுருவம் உலகிற்கு நன்மையளித்து வருகிறது.

கங்கையைச் சிவபிரான் தம தலையில் ஏற்றமை குறித்துச் சிந்திக்கையில் வேறொரு புராணக் குறிப்பினையும் இணைத்து இயைபுடன் சிந்திப்பர். இது பற்றிய விளக்கத்தினைத் **'துங்க கங்காதரர்'** என வருந்தலைப்பில் முன்னரே கண்டோம். எனி னும், இதன் தொடர்பாகக் கூறப்பெறும் மற்றொரு சிறு குறிப் பினையும் மனத்துட் கொள்ளுவது பொருத்தமாகும்.

கங்கை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிவருகையில், தன் தலையில் சூடிய சிவபெருமானை நோக்கிப் பிரமன், திருமால், இந்திரன் வேண்டிக் கொள்கின்றனர். அவர்களின் வேண்டு கோளுக்கிணங்கத் ''தன் சடைமுடியிலுள்ள கங்கையில் ஒரு சிறிதை யள்ளி மூவர்க்கும் தந்தருளினார்; அம் மூன்றினுள் பிரமனது சத்தியலோகத்தையடைந்த கங்கையைத் தான் பகீரதன் கடுந்தவம் புரிந்து நிலவுலகிற்கு வரும்படி செய்தான்''[1]

1. மெய்கண்டார் (திங்களிதழ்), டிசம்பர், 1991, பக். 26-27

என்பது சிறப்புக் குறிப்பான புராணப் போக்காகும். பொது வாகச் சிவபிரான் தன் சடையில் கங்கையைத்தரித்த மூர்த்தமே **கங்காதரர்** என வழங்கலாயிற்று.

வைணவப் புராணப்படி, சிவபெருமான் திருமாலைப் பாத பூசை செய்கையில், கால்விரல்களின்றும் பெருகிய நீர் வெள்ளமே கங்கையாயிற்று என்றும் கூறுவது உண்டு. இத்தகைய புராணக் கூற்றுக்கள் தத்தம் சமயமே சிறந்தது எனக்கருதி வாதிடும் பௌராணிகர்களின் சிந்தனை - கற்பனை – விளைவாகும்.

புராணக் கூற்றுக்கள் பல்வேறு அமைப்பில் இருப்பினும், சிவபிரான் தம் சடாமுடியில் கங்கையைத் தரித்துள்ளார் என்பது சமய அருளாளர்களின் துணிவும் நம்பிக்கையுமாகும்.

(இந்தியப்பெருநாட்டில் **கன்னியாகுமரி** தொடங்கிக் **கங்கை** வரையிலுமுள்ள எல்லாத்தீர்த்தங்களும் ஒருமைப்பாட்டுணர்வில் 'கங்கை' எனக் குறித்திடுதல் சமய மரபாகும் இதனைத் தீபாவளிக் காலத்தில், ''கங்கா ஸ்நானம் ஆயிற்றா?'' என வினவுதலாலும் அறியலாம். தென்திசைக் குமரித் தீர்த்தத்திற்கும், கங்கையோடு ஒத்த உயர்வினைத் **திருநாவுக்கரசு சுவாமிகள்** வழங்கக் கருதுகிறார்; எனவே, தம் தேவாரத்தில் சிவனின் பல வகைச் சிறப்புக்களைப் போற்றுகையில்,

''மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமும் ஆனாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி''[1]

எனக்குறிப்பிட்டுச் செல்கிறார். உமையம்மையுடன் கங்கையை இணைத்துக் கூறும் புராணக் குறிப்பு இருப்பதாலும், அவ்வாறாகக் கன்னியாகுமரியை இணைத்துக் கூறும் புராணக்குறிப்பு இல்லாமையாலும், சிற்பத்திருவுருவத்தில் கங்காதரனையே சமய அருளாளர்கள் போற்றலாயினர் இந்நிலையில், எப்படியோ கன்னியாகுமரிக்கும் சிறப்பினை வழங்கக் கருதிய அப்பரடிகளின் திருவுள்ளத்தைப் போற்றி நிற்கலாம்.)

1. திருமுறை, 6, 57, 5

28.30. கங்கா விசர்ச்சனமூர்த்தி;

கங்காதரராக விளங்கும் சிவபிரானே கங்கா விசர்ச்சனராகவும் அருளவேண்டிய பெருஞ் சிறப்பினைப் பெறுகிறார்.

சிற்பத்திலோ ஓவியத்திலோ கங்காதரரைக் காணும்போது அவரது தலையுச்சியைச் சாரக் கங்கை இருக்குமாறு அமைப்பது மரபு. சிவனது தலையில் கங்கையிருப்பதாகக் கருதுவது புராண மரபு; அந்தக் கங்கையால் உயிரினங்களுக்குப் பெரும்பயன் விளைய வேண்டுமெனின், கங்கை தன் நீர்ப் பெருக்குடன் இறங்கி வரவேண்டும். இந்த உபாயத்தை உட்கொண்டு புலப் படுத்திய கலைப்படைப்பே கங்கா விசர்ச்சனராக அமைந்தது; இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

மாமன்னன் பகீரதனின் பெருமுயற்சியால் கங்கை இறங்கி வரும் சூழல் உருவாயிற்று. எனினும், 'சிவன் என்னைத் தாங்கி ஊன்றி நிற்க இயலுமா? அவனையும் இழுத்துக் கொண்டு பாதாளம் செல்வேன்' என்று ஆணவத்துடன் விழலானாள் கங்கை. அவள் செருக்கை அடக்கும் வகையில் அவளைத் தம் சடையின் ஒரு பகுதியில் அடக்கிக் கொண்டார். பல்லாண்டுகள் சிவபிரான் தலையிலே கங்கை கட்டுண்டு சுழன்று கொண்டிருந் தாள். மறுபடியும் பகீரதன் கடுந்தவமிருந்து சிவனை வேண்டி நிற்க, அவர்தம் தலையிலிருந்து ஏழு அருவிகளாகக் கங்கைப் பெருக்கை விடுவித்தார் என்பது புராணம். இவ்வாறு, **சிவன் தம் தலையிலிருந்து கங்கையை விடுவிக்கும் திருக்கோலமே கங்கா விசர்ச்சன மூர்த்தம்** என்பது.

'நீர்மிகின் சிறையுமில்லை' என்ற திருவாக்கு உலக மக்களிடையே அனுபவப் பழமொழியாகிவிட்டது. உலக மக்களை உயிர்வாழச் செய்வதற்கு நீர் தேவைப்படுகிறது; ஆனால், பெரு வெள்ளமாகிவிட்டால் நீரே அஞ்சத்தக்கதாகிவிடுகிறது. உயிர் களைக் காத்தருளும் சிவபெருமான், நீரை, உயிர்களுக்கு நிலை யறிந்து உதவுவதற்கு ஒரு தெய்வநலப் பேராற்றல் தேவைப் படுகிறது. அந்த ஆற்றல் சிவபிரானிடமே உள்ளது என்பதை உணர்த்துவதற்காகவே எழுந்தவையே **கங்காதர மூர்த்தமும் கங்காவிசர்ச்சன மூர்த்தமும்** ஆகும்.

28.30. சரப மூர்த்தி—புராணப் பின்னணி:

சிவபிரான் தொடர்பான மகேசுவர மூர்த்தங்களுள் ஒன்றாகச் சிலரால் இது கருதப்படாவிடினும், இதுவும் சிவமூர்த்தமே யாகும். பெருவலிமை படைத்த **சரபமூர்த்தியின் ஆற்றல் வாயு பகவானை ஒத்தது** என்பது ஆகமக் குறிப்பாகும்.

இரணியகசிபு எனுங் கொடிய அசுரனைக் கொன்ற பின், அசுரனின் செங்குருதியை உறிஞ்சிய காரணத்தால் **நரசிம்மர்,** அசுரவெறி கொண்டு, சுற்றிய உலகுயிர்களுக்குக் கொடுந்துன்பம் விளைவிக்கத் தொடங்கினார். அக்கொடுமையினின்றும் திருமாலையும் மக்களையும் விடுவிக்கக் கருதிச் சிவபிரான் **சரப அவதாரம்** எடுத்தார்; பரந்தாமனைக் கொடிய வெறியுணர்வினின்றும் மாற்றி, எல்லா உலகுயிர்களையும் மீட்டார்.

நரசிம்மரின் அசுரத்தனத்தை அடக்கியபின், திருமறைக் காடு வந்தருளினார் சிவன் என்பதும், அந்தச் சிவனைத் திருமால் வழிபடலானார் என்பதும் புராணக் குறிப்புக்களாகும்.

நரசிம்மத்திடம் குடிகொண்டிருந்த அசுர குணங்களைச் சரபமூர்த்தியாகத் தோன்றி அழித்தது போல, மக்களிடம் அடங்கிக் கிடந்த நிலையில் — திருவருளை அவர்கள் பெறாத வகையில்—இடையறாது துன்புறுத்தும் அசுரகுணங்களை ஈசன் அழித்தருளுவான் என்பது தத்துவ உட்கிடையாகும். சரப மூர்த்தியைத் திருக்கோயில்களில் பிரதிட்டை செய்து வழிபடுவதால் பகைவர்கள் அழிவர் என்பதும், போரில் ஆட்சித் தலைவர்க்கு வெற்றியும் நன்மைகளும் ஏற்படும் என்பதும் நோய்கள் நீங்கும் என்பதும் உத்தரகாரண ஆகம அடிப்படையில் விளைந்த நம்பிக்கை என்பர்.

28.31.1. சரபமூர்த்தி-கலைக்குறிப்பு:

சரபமூர்த்தியின் திருவுருவம் பெரிய வியப்பிற்குரியதாகும். மானுடவுருவையோ, பறவையுருவையோ, விலங்குருவையோ

தனித்த நிலையில் பொருந்தியிராமல், எங்கும் காணவியலாத வகையிலமைந்த ஒருவகைக் கலப்புத்திருவுருவம் இதுவாகும். இந்தத் திருவுருவத்தைச் **சிம்மக்ன மூர்த்தி** என்றும் வழங்குவர். இதனைச் சரபேச மூர்த்தி எனக் குறிப்பிடும் **காமிகாகமம்** இதன் வடிவத்தை விளக்கிச் செல்கிறது. அதுவருமாறு: சரபமூர்த்தியின் உடல் பொன்னிறமுடையதாய்ப் பறவை போன்றது; சரபமூர்த்தி மேல்நோக்கிய இரு இறக்கைகளையும் சிவந்த இருகண்களையும் எட்டுக் கால்களையும், விலங்கினுடைய வாலையும், மனித உடலையும், சிம்மத்தின் தலையையும், மகுடத்தையும் பக்கத் தந்தங்களையும் உடையவராகக் காட்சியளிக்கிறார். தம் இரு கால்களால் மனிதவுடலுடன் கூடிய நரசிம்மத்தினைத் தூக்கிக் கொண்டிருக்கும் நிலையில், காண்போர்க்கு அச்சுறுத்தும் வண்ணம் இம்மூர்த்தி காட்சியளிப்பார்,

சரப மூர்த்தியின் திருவுருவம் தமிழ்நாட்டில் சில தலங்களில் வெவ்வேறு அமைப்புக்களுடன் காணப்படுகிறது. எடுத்துக் காட்டாகத் திருக்கைகளின் எண்ணிக்கையைச் சிறிது சிந்திக்கலாம். **சிதம்பரம் திருப்புவனம்** ஆகிய இடங்களில் நான்கு திருக்கைகளுடன் சரபமூர்த்தி காட்சியளித்தலைக் காணலாம்.

''சிரீத்துவநிதி என்னும் நூல், சரபமூர்த்தி முப்பத்திரண்டு கைகளுடன் விளங்குவதாகக் குறிப்பிடுவதுடன் வலக்கைகளில் வச்சிரம், மூசுதி, அபயம், சக்கரம், சக்தி, தண்டம், அங்குசம், கட்கம் (குத்துவாள்), கதவான்யம் (கதையாயுதம்), பரசு, அக்கமாலை, எலும்பு, தனு(வில்), முசலம் (உலக்கை), அக்கினி ஆகியவைகளையும், இடக்கைகளில் பாசம், வரதம், கதை, பாணம், துவசம், வாள், பாம்பு, தாமரைமலர், கபாலம், புத்தகம், ஆலம் (வட்டவடிவக் கருவி), முத்கரம் (அழிக்குங்கருவி) ஆகியவைகளையும் உடையதாய், ஒருகை துர்க்கையை அணைத்துக் கொண்டுள்ளதாகவும் விளங்கியது என்று குறிப்பிடுகிறது.''[1] எனவருங் குறிப்பு ஒப்பிட்டு நோக்கில் ஆராயத் தக்கது.

1, வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - எட்டு, பக்-674.

சரபமூர்த்தியைக் கலைப்படைப்பாக ஆக்குவதற்கு வடமொழியிலும் தமிழிலுமாக ஆகமச் சான்றுகள் கிடைக்கின்றன. 'சரபம் பற்றிய கதைக் கூறுகள் **ஸ்காந்த மகாபுராணம், தைத்ரியகம், காசி காண்டம், பிரும்மாண்ட புராணம், நரசிம்மோத்ர புராணம்** என்ற கிரந்தங்களில் காணக் கிடைக்கின்றன. இச்சரப மூர்த்தியைப் பற்றி முதலில் முழங்குவது **ரிக்வேதம்**''[1] எனக் கூறுகிறார் **நாராயணசுவாமி;** இது மனங்கொள்ளத்தக்கது.

தமிழில் **சரபபுராணம்** எனும் பெயரிலுள்ள அழகியநூல் சரப மூர்த்தியை விவரித்துக் கூறுகிறது. மேலும், **உபதேச காண்டத்தில்,**

"சரபம் பேருரு வெடுத்தனள வொழி தடக்கை
விரவித் திண்சிறை வெள்ளிடை புதைந்து றமீப்பாய்ந்
துரவத் திண்பத மெட்டினாங் கிளைத்த வெள்ளுகிரான்
கிரணம் பொற்கிரி யெடுப்பினுங் கிழங் கெனக் கிழியும்
கறித்துமிழ்ந்த துகரங்களைக் கதிர்முடிச் சிரத்தைக்
கொறித்துமிழ்ந்தது குருதி கொப்பளித்து பஃறோன்
முறிந்த முக்கிய திடிக்குர லெழுப்பிய முழக்கிற்
செறிந்த புண்செருக் கிழந்து யரிழந்தச் சீயம்"
(சீயம்-சிங்கம்)

என வருதலைக் காண்க. அதனால், **சரபம் என்பது** ஒருவகை **வியத்தகு பிராணி** என்பது பெறப்படும் பொதுவாகச் **சிம்மத் தலையும், கூரிய மூக்கும், கோரைப்பல்லும், நான்கு கைகளும், வாலுமுடையது சரபம்** என்பதும் அறிதல் நல்லது. இது தரிசிப்பதற்கு அச்சந்தரும் வகையில் அமைந்த மூர்த்தி. "தியானத்தில் இம்மூர்த்திக்கு இரண்டு பக்ஷியின் வடிவமான தலை, எட்டுக்கால், வால், இரண்டு சிறகு உடையதாக இருக்கும்''[2] என வருங் குறிப்பும் இயையுடன் சிந்திக்கத்தகும்.

இந்தச் சரபமூர்த்தியின் சிற்பவடிவங்கள் தமிழ்நாட்டில் பல இடங்களில் காணப்படுகின்றன. தாம்பரத்திற்கு அருகிலுள்ள

1. ஓம் சக்தி தீபாவளி மலர், நவம்பர், 1989, பக்.21
2. ஓம் சக்தி தீபாவளி மலர், நவம்பர், 1989 பக். 21

மாடம்பாக்கம், சிதம்பரம் நிருத்திய சபையின் தென்பக்கச் சந்நிதி, **தாராசுரம்** ஐராவதேசுவரர் ஆலயப் பிராகாரம் முதலிய இடங்களில் சரபமூர்த்தியின் பெருமையையுணர்ந்து மக்கள் வழிபடுகின்றனர். அதற்கேற்பச் சிற்ப மாட்சியும் சமயச் சிறப்புங் கொண்ட திருவுருவங்களை அவ்விடங்களில் போற்றிக் காணலாம். இவ்வுருவத்தைச் சுதைச் சிற்ப வடிவத்தில் தமிழ் நாட்டிலுள்ள பல கோயிற்கோபுரங்களில் கண்டு மகிழலாம். எனினும், சரபமூர்த்திக்கென மிகச்சிறப்பு வாய்ந்த தலம், கும்பகோணத்திற்கு 8 கிலோமீட்டரில் அமைந்துள்ள **திரிபுவன வீரேசுவரர்** ஆலயமேயாகும். திரிபுவனச் சக்கரவர்த்தியென அழைக்கப்பெற்ற **மூன்றாங்குலோத்துங்க சோழன்**, தான்கொண்ட வடநாட்டு வெற்றியின் அடையாளமாக அமைத்த திரிபுவனத்தில் சரபமூர்த்தியை மிகச் சிறப்புடன் பிரதிட்டை செய்துள்ளான். இங்கே சரபமூர்த்தியின் கருங்கற் சிற்பமும், செப்புச்சிலையும் கலைமாட்சிப் படைப்புக்களெனக் கலையுலகமும் சமயவுலகமும் போற்றிப் புகழ்கின்றன.

28.32. அகோர மூர்த்தி:

சிவபெருமானின் வேகமூர்த்தங்களுள் அகோர மூர்த்தியும் ஒன்றாகும். காரணாகமம், சிவதத்வரத்னாகரம் முதலிய கலை நூல்களில் இந்த மூர்த்தியின் திருவுருவ இலக்கணங்களைச் - சிறப்பாகத் திருவுருவக் குறிப்புக்களைக் - காணலாம்.

அகோர மூர்த்தியின் திருவுருவத்தை எட்டு, பத்து, முப்பத்திரண்டு கைகளுடைய நிலையில் சிற்பிகள் அமைத்துள்ளனர். ''எட்டுக் கைகளுடைய திருவுருவத்தில் சூலம், உடுக்கை, பாசம், பாலம், தண்டம், வில், அம்பு, குறுவாள் ஆகியவை இடம்பெறும். கருத்த நிறமுடைய இவரது உடல் ஆடையின்றியோ, யானை, சிங்கம் ஆகியவற்றின் தோல்களிலான ஆடையணிந்தோ காணப்படும். உடலில் பாம்புகள் தேள்கள் ஆகியவை அணிகலன்களாகத் திகழும். மிகுந்த அச்சத்தினையூட்டும் முகத்தோற்றமும், வாயின் இருபுறமும் வளைந்த கோரைப்பற்களும், பாம்பினால் கட்டப்பட்ட தலைமுடியும், கழுத்தில் மட்டும் நீல நிறமும் இத்திருவுருவத்தின் சிறப்புகளாம்.

மற்றொரு திருவுருவ அமைப்பில் எட்டுக்கைகளும், மூன்று கண்களும், அச்சந்தரும் முகத்தோற்றமும், கறுத்த நிறமும், வளைந்த கோரைப்பற்களும் காணப்படும். இவரது கழுத்தில் தலைமாலையும், குறுவாள் மாலையும் (Kadgamala), தேள்களாலான மாலையும் இடம் பெறுவதுண்டு தலைமுடி தீச்சுடர் போலிருக்கும். செந்நிற ஆடையும் சிவந்த மலர்மாலையும் இவருக்கு அணிவது வழக்கம். இவர் கைகள் வேதாளம், குறுவாள், உடுக்கை, கபாலம், மணி முதலியவைகளைக் கொண்டும், மற்றிரு கைகள், சூலத்தை பார்புக்கு எதிராகச் சற்றுமேல் நோக்கிப் பிடித்தவாறும் காணப்படும்"[1] எனவரும் குறிப்பினைக் காண்க.

பத்துக்கைகளுடைய அகோரமூர்த்தியைத் **தசபுய அகோரமூர்த்தி** என்பர். இவர் எட்டுக்கைகளில் பரசு, உடுக்கை, குறுவாள், கேடயம், அம்பு, வில், சூலம், கபாலம் ஆகியவற்றைக் கொண்டு காட்சியளிப்பார். மற்றும் எஞ்சிய, அவருடைய இரு கைகள் அபயம் வரதம் ஆகிய முத்திரைகளுடன் காணப்படும். **அடியார்களின் சமயக் கற்பனை காரணமாக** முப்பத்திரண்டு **கைகளுடன் கொடிய** தோற்றம்போல அகோரமூர்த்தி **திருவுருவம் உண்டாயிற்று எனலாம்.** இம்மூர்த்தியின் அச்சத்தின் பிரதிபலிப்பாய்த் தலையில் சடாமகுடம், பிறைச்சந்திரன் ஆகியவற்றையும் முக்கண்களையும் காணலாம்

தமிழ்நாட்டில் அகோரமூர்த்தியின் திருவுருவங்களைத் **திருவெண்காடு, திருக்கழுக்குன்றம்**, பட்டீசுவரம் முதலிய இடங்களில் கண்டு வழிபடலாம்.

28.33. பைரவர்:

பைரவர், **சிவபெருமானின்** கூறு (சிவாம்சம்) என்றும், **'சிவனுக்குப் பாதுகாவலர்'** என்றும், **'திருத்தலங்களைப் பாதுகாப்பவர்'** என்றும் பலபடக் கூறுவர். **பைரவன்** என்பதற்குப் பெண்பால் **பைரவி** (துர்க்கை)யாகும். இது கொண்டே பைரவமூர்த்தம் **வேக முர்த்தம்** என்பது பெறப்படும்.

1. வாழ்வியற் களஞ்சியம், முதல்தொகுதி, பக், 103-104.

சிவனது நெற்றிக் கண்ணில் தோன்றியவராகக் கொண்டு பைரவரைச் **சிவகுமாரர்** என்றும் கூறுவர்.

இந்தியப் பெருநாட்டில் காசியிலிருந்து கன்னியாகுமரி வரையிலுமுள்ள சிவாலயங்களில் **பைரவர்** எனும் காவல் தெய்வம் இடம் பெற்றிருத்தலைக் காணலாம். மக்களிடையே நன்கு அறிமுகமான இந்தத் தெய்வத்தைப் பல்வேறு நிலைகளில் வழிபடலாயினர்; அதற்கேற்பப் பைரவத் திருவுருவங்கள் பல்கிக் கொண்டே வந்தன. பிறகு, ஆகம அடிப்படையில் **அறுபத்து நான்கு வகையினவாக** (அஷ்டாஷ்ட பைரவர்) ஒரு வகை வரையறை செய்தனர். அவற்றுள் **எட்டுத் திருவுருவங்கள்** மிகச் சிறப்புடையவையாகும். அவையாவன: **மகாவைரவர், உக்கிர வைரவர், சண்டாள வைரவர், குரோதவைரவர், உன்மத்த வைரவர், கபால வைரவர், பீஷ்ண வைரவர், சாகரவைரவர்.** இந்த வைரவர் எண்மரைக் கூறி, இவர்கள் சிவலோகத்தில் சோதி மயமான கோட்டையில் எட்டு வாசல்களிலும் காவல் செய்து கொண்டிருப்பவர் என்று **அபிதான சிந்தாமணி** கூறும். **திருவாய்மூரில்** எட்டு வைரவமூர்த்திகள் இருந்தன என்றும், இக்காலத்தே ஏழு வைரவமூர்த்திகளே காணப்படுகின்றன என்றும் அங்குச் சென்றால் அறிந்து கொள்ளலாம்.

பைரவர் என்றதும் முன்னையோர், சிற்ப நோக்கில் **தியான சுலோகம்** கண்டனர். செஞ்சடையும், மிகத்தூய்மையான **உடம்பும்**, சிவந்த தேஜசும் (மேனியொளியும்) கூடிய நிலையில், **சூலம்** கபாலம் உடுக்கை முதலியவற்றைத் தரித்துக் **கொண்டு** உலகத்தைக் காப்பாற்றுபவராகவும், நிர்வாணத்துடன் **நாயினை** வாகனமாகக் கொண்டவராகவும், முக்கண்ணுடையவராகவும், ஆனந்த வடிவினராகவும், பூதப்ரேதராகவும், திருத்தலங்களை (க்ஷேத்திரங்களைக்) காப்பாற்றுபவராகவுமுள்ள **பைரவரை** வணங்குகிறேன் எனும் பொருளில் தியானசுலோக **பைரவரஷ்டோத்தரத்தில்** அமைந்துள்ளமை காண்க.

மேலும் பிரமனது **கபாலத்தை** உள்ளங்கையிற் கொண்டு, தேவர்கள் அஞ்சி நடுங்கிய வண்ணம் வலம் வரும்படியாகச் சூரியோதயப் **பலிபிச்சை யெடுத்துக் கொண்டே திருமாலுக்கு உயிர்தந்து**

மயங்கிப் போரில் வெல்லத்தக்க சூலமும் மாணிக்கமுடைய பாம்பும் உடுக்கையும் கொண்ட திருக்கோலத்துடன் மறக்கருணை யுடையவராய்க் கொன்றைப்பூ அணியும் பைரவரை நினைத்துத் துதிப்போம் எனும் பொருளில், திருப்பாதிரிப் புலியூர்ப் புராணத்தில்,

''தருணமலர்க் கோயிலிறை யுச்சிமுடிக்
கபாலத்தைத் தளிர்க்கை யேந்தி
அருணநீர் பலிக்கிமையோர் நடுங்க வலம்
வந்த மாற்காவி நல்கி
மருணனிசெய் மூவிலைமேல் மணிநாகம்
உடுக்கையி வைவயங்க ஏந்திக்
கருணைமறம் பூண்டெழில் செய் கடைஞாழல்
வயிரவரைக் கருதி வாழ்வாம்''
(தருணமலர் - தாமரை; இறை — பிரமன்)

என வருஞ் செய்யுள் காண்க. இது தியான சுலோகம் போலவே உள்ளது.

இவ்வாறே தமிழிலக்கியத்தில் பல இடங்களிலே பைரவர் தோற்றத்தினைப் பற்றிய குறிப்புக்கள் உண்டு. எனினும், பொதுவாகப் பைரவருக்குச் சுவாலை மகுடமும் திருக்கைகளில் சூலமும் உடுக்கையும் காணப்படும் எனவும், நிர்வாண கோலத்தினர் எனவும் பலர் அறிவர்.

நகரத்தார் கோயிலாகிய இலுப்பைக் குடிக்கோயிலில் வடுக பைரவரைக் காணலாம். இங்குக் காணலாகும் வைரவர் இரட்டை வாகன முடையவர். பாண்டிய நாட்டில் இலுப்பைக் குடி, மாத்தூர், ஆமூர், கொத்தப்புள்ளி ஆகிய திருத்தலங்களில் வைரவர் இரட்டை வாகனங்களுடன் காட்சியளிக்கிறார். இவ்வாறான வைரவத் திருவுருவங்கள் மிகச் சிறப்புடையன என நாட்டவர் போற்றுகின்றனர்.

காசியில் காவல் நாயகராக விளங்குபவர் கால பைரவர்; ''கால பைரவ மூர்த்திக்கு நாய்தான் வாகனம். சூலமும் உடுக்கையும் மழுவும் பாசக்கயிறும் ஏந்திய ஈசனின் திருவடிவ

மாகவே காலபைரவரைக் கருதுகிறார்கள். அவர் உள்ள இடத்தில் யமபயம் இல்லை என்பது ஐதீகம். நாம் செய்த பாவங்களை அவரிடம் முறையிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் போக்கடித்து விடுவார் என்ற நம்பிக்கையும் உண்டு''[1] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கது.

சீர்காழியில் வழிபடப்பெறும் சட்டை நாதரைப் பைரவத் திருமேனியாகவே சைவசமயத்தினர் போற்றி வருகின்றனர். தமிழகத்து நாயகக் கோயிலான தில்லை நடராசர் ஆலயத்திலும், காசியைப் போலவே காவல் தெய்வமாகக் கால பைரவர் சிறப்பிடங் கொண்டுள்ளார் இஃது ஒரு வகையில் தெய்வ நலக் கலை ஒருமைப் பாட்டினை உணர்த்தும் வகையில் உள்ளது எனலாம்.

சிற்பக் கலைநோக்கில் தில்லை நடராசர் ஆலயத்திலுள்ள சுவர்ண கால பைரவர் உற்சவத்திருமேனியாகப் பலருங் காண அமைந்துள்ளமை மனங்கொள்ளத் தக்கது. காஞ்சி ஏகாம்பர நாதர் கோயிலிலுள்ள சுசிதாங்க பைரவர் உற்சவத்திருமேனியாக அருள்கொழிக்க அமைந்துள்ளமையும் காணத்தக்கது.

மூர்த்தங்களுள் பிச்சையுகக்கும் பெருமானும் பைரவரும் நிர்வாண கோலத்தில் அமைந்திருப்பது கொண்டு, இத்திருவுருவங்கள் சமணத்தாக்கத்தின் விளைவு எனலாம். பைரவரையே சமண தீர்த்தங்கரருடன் இணைத்துக் கூறுவர். ''சமண தீர்த்தங்கரர்கள் இருபத்து நால்வர் சிறப்பாய்ப் போற்றப் படுபவர்கள். இவர்களுள் 23 ஆவது தீர்த்தங்கரராகப் 'பார்சுவநாத்' காசித் தலத்தில் பிறந்தவர். இவருடன் சேர்த்துப் பைரவரையும் ஜைன சமயத்தவர் வழிபடுகிறார்கள்[2] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்க தக்கது; ஆராயத்தக்கது.

மதக் காழ்ப்பினால் பைரவர் தொடர்பாகக் காணலாகும் சில செய்திகள் ஆராய்ச்சிக் குரியவையாக உள்ளன. பழைய குடவரைக் கோயில்களில் சமணச்சிற்பங்களைச் சிதைத்துவிட்டு

1. ஞானபூமி (திங்களிதழ்), நவம்பர் 1992

2. 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் (திங்களிதழ்), ஜனவரி, 1989.

அந்தப்பகுதிகளை அழிப்படுத்திவிட்டுக் கி.பி. 13 ஆம் நூற்றாண்டளவில் புதிய சைவச் சிற்பங்கள் எடுத்துக்காட்டாகத் (திருப்பரங்குன்றத்து இரண்டாவது குடைவரைக் கோயிலில்) தோற்றுவிக்கப்பட்டிருக்கலாம் என்பது அறிஞர் **எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்** கருத்தாகும்[1]. இந்நிலையில் **பைரவர் சிற்பம்** இக்குடைவரைக் கோயிலில் இடம் பெறலாயிற்று.

திருப்பரங்குன்றம் இரண்டாவது குடைவரைக் கோயிலில் இன்று வெளிச் சுவரில் **'பைரவர்'** என்று அழைக்கப்படும் **பாகுபலி** உருவச் சிற்பம் பற்றி எழுதுகையில், "இந்தச்சமணச் சிற்பத்தைச் சைவச் சிற்பமாக மாற்ற முனைந்தவர்கள், அந்த **அம்மண** (நிர்வாண) **நிலையைப்** பயன்படுத்தி, உருவத்தின் பின்புறம் நாயைச்செதுக்கி, உடம்பிலும் சில மாற்றங்களைச் செய்துவிட்டனர். ஆனால், ஒன்றை அவர்கள் மறந்து விட்டனர்.

பைரவர் பொதுவாக 4 கரங்களுடன் தான் காணப்படுவார். ஆனால், இங்குப் பைரவர் என அழைக்கப்படுபவருக்கே, இரண்டு கரங்கள் தான் உண்டு. அதுவும் வெறுமனே கீழே தொங்க் விடப்பட்டுள்ளன. இதன் மூலமும் இது சமணக் குகையாக இருந்திருக்க வேண்டும் என்று உணரலாம். காலஞ் சென்ற **டாக்டர் தேவகுஞ்சரி**, 'இந்தப் பைரவர் ஒரு சமணத் தீர்த்தங்கரரைப் போலத் தோற்றமளிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். (D. Devakunjari, Madurai through the Ages, p.112) "[2] எனக் குறிப்பிட்டுச் செல்வது மிக்வும் சிந்திக்கத் தக்கதாகும்.

28.34. மகா சதாசிவ மூர்த்தி (சிறப்புக்குறிப்பு):

சிவபராக்கிரமத்தை மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் சைவ ஆகம அடிப்படையிலே தத்துவப் புலப்பாடாக **மகாசதா சிவமூர்த்தியை** ஆன்றோர்கள் போற்றி வந்துள்ளனர்.

1. முற்காலச் சோழர்கலையும் சிற்பமும், பக். 90
2. மேலது.

சிவமூர்த்தங்களை '**அறுபத்து நான்கு**' எனவும், மிகச்சிறப்பாக '**இருபத்தைந்து**' எனவும் பாகுபடுத்திக் கூறுவதை முன்னரே கண்டோம். சிறப்பான மூர்த்தங்களைக் கண்டு வருகையில், சிவமூர்த்தமாக **மகாசதாசிவமுர்த்தியை**ச் சிறப்பு நோக்கில் சிறிது சிந்திப்போம்.

தனித்தனியே விளங்கும் பரம்பொருள், மக்களுக்காகத் தொகுப்புத் திருவடிவமாகவும் விளங்கவல்லது என்பதைப் புலப்படுத்தவே மகாசதாசிவமூர்த்தத்தைக் கலையுலகில் கண்டு உள்ளனர். இதுபற்றி விளக்குகையில், "பகவான் பரமேசுவரனுடை மூர்த்திகள் 25 என ஆகமங்கள் (ஸ்கந்த புராணம்) கூறும். அப்படிக் கூறப்பட்ட 25 மூர்த்திகளுக்கான 25 தலைகளுடனும் (திருமுகங்களுடனும்), 50 திருக்கைகளுடனும் உள்ள, போக அதிகார மடங்கிய மூர்த்திதான் '**ஸ்ரீ மகாசதாசிவர்**' விக்கிரகம்; **புதுக்கோட்டையில்** உள்ள **ஸ்ரீ புவனேசுவரி ஆலயத்தில்** பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

பரமேசுவரனுடைய 25 மூர்த்திகள் விவரம் பின்வருமாறு: 1. லிங்கோத்பவமூர்த்தி, 2. சுகாசனமூர்த்தி, 3. உமாமகேசுவர மூர்த்தி, 4. கல்யாண சுந்தரமூர்த்தி, 5. அர்த்தநாரீசுவரமூர்த்தி, 6. சோமாஸ்கந்தமூர்த்தி, 7. சக்கரப்பிரதமூர்த்தி, 8. திரிமூர்த்தி, 9. சங்கரநாராயணமூர்த்தி, 10. தட்சணாமூர்த்தி, 11. பிட்சாடன மூர்த்தி, 12 கங்காளமூர்த்தி, 13. காமசம்மாரமூர்த்தி, 14. காலசம்மாரமூர்த்தி, 15. சலந்தரசம்மாரமூர்த்தி, 16. திரிபுரசம்மாரமூர்த்தி, 17. சரபமூர்த்தி, 18. நீலகண்டர், 20. அஜைகபாத மூர்த்தி, 21. பைரவமூர்த்தி, 22. இரிடபாருடமூர்த்தி, 23. சந்திரசேகரமூர்த்தி, 24. ஆனந்தத் தாண்டவமூர்த்தி, 25. கங்காதரமூர்த்தி'[1] எனக் கூறிச் செல்வது சிந்திக்கத்தக்கது.

இந்த மூர்த்தத்தைச் சிற்பத்தில் - கல்லிலோ உலோகத்திலோ - அமைப்பது மிகக்கடினம்; எனவே, கோபுரத்தில் தில்லை முதலிய பல தலங்களில் சுதைச்சிற்பமாக அமைத்துள்ளனர். ஆனால், புதுக்கோட்டையில் **விக்கிரகத்தில்** மகாசதாசிவ மூர்த்தியை அமைத்துள்ளதைச் சிறப்பாகப் போற்றலாம்.

1. தினமலர் - தீபாவளிமலர், 1993, பக்.532

சிற்பக்கலை-பண்பாட்டுக் கூறுகள்

(தொடர்ச்சி - 2)

29 திருமாலின் ஐவகை நிலைகள்:

பரத்துவம் என்பது வைகுந்தமாகிய நித்திய விபூதியிலே வைணவர் 'நலம் அந்தம் இல்லதோர் நாடு' என்று போற்றுதற்குரிய **பரமபதத்திலே** உலகியல் வாழ்வினின்று விடுபட்ட சூழலில் **பகவத் அனுபவமே பொழுதுபோக்காக** இருக்கும் முக்தர்களுக்கும், வினை காரணமாக எந்த நாளும் உலகில் **திரும்பப் பிறவாத பெருநிலையிலுள்ள** அனந்தன் கருடன் முதலிய **நித்திய சூரிகளுக்கும் போக்கியனாக இறைவன் எழுந்தருளியிருக்கும் நிலை.**

இஃது, அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கின்ற நீர் (ஆவரண ஜலம்) போன்றது. பரவாசு தேவனாய் இருக்கும் நிலை நித்தியர் முக்தர்களின் அனுபவத்திற்காக என்பது நினைவு கூரத்தக்கது.

வியூகம் என்பது படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில் புரியவும், உலகினர்க்கு நன்மையையுண்டாக்கித் தீமைகளைப் போக்கிக் காத்தருளவும், வீடுபேறு பெறவிரும்பி முயலும் முமுட்சுக்கள் உலகியல் வாழ்வை விடுவித்துக் கொண்டு தன்னை வந்தடைவதற்கு ஏதுவான அருளைப் புரியவும், **சங்கருடணன், பிரத்தியும்நன்,** அநிருத்தன், வாசுதேவன் என்பவர்களாகத் **திருபாற்கடலில் விளங்கும் நிலையாகும்.** இந்நிலைக்கு இயைபாக **ந. ரா. முருகவேள்,**

"செங்கட் காரி! கருங்கண் வெள்ளை!
பொன்கட் பச்சை! பைங்கண் மாஅல்!"[1]

எனவரும் **பரிபாடல்** அடிகளையும், அவற்றிற்கு ஆசிரியர் பரிமேலழகரால்,

'செங்கட் காரி - வாசுதேவன்! கருங்கண் வெள்ளை - சங்கருடனன்! பொன்கட்பச்சை என்பது பிரத்தியும்நன் என்

1, பரிபாடல் (திருமால் பாடல்), 81-82

னும் வடமொழித் திரிபு. செங்கண்மால் - பசிய உடம்பினை யுடைய அநிருத்தன். நால்வகை வியூகமும் கூறியவாறு' என வகுக்கப்பட்டுள்ள உரையும் ஈண்டு அறியத்தக்கன''[1] என்று எழுதிச் செல்லுங் குறிப்பு மிகச் சிறப்புடையது.

இஃது, எளிதிற் கிட்ட இயலாத **திருப்பாற்கடல்** போன்றது என்ற குறிப்பு மிகச்சிறப்பினதாகும். மேலும், இது பிரமன் இந்திரன் முதலியவரின் கூக்குரல் கேட்கைக்காக என்பது நினைவுகூரத் தக்கதாகும்.

'விபவம்' ஆவது உலகத்து **எல்லாப்பொருள்களாகவும் வந்து தோற்றமளிப்பதாகும்.** மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், இராமன், பரசுராமன், கண்ணன், பலராமன், கல்கி ஆகிய **அவதாரங்களாகும்.** ''எந்நின்ற யோனியுமாய்ப் பிறந் தாய் இமையோர்கள் தலைவா'', ''பிறப்பில் பல்பிறவிப் பெம் மான்'', ''மீனோ டாமை கேழல் அரிகுறளாய் முன்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும் ஆனான்'' என்றெல் லாம் நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் வரும் ஆழ்வார்கள் திரு வாக்கினைக் காண்க. விபவாவதாரங்கள் அவ்வக் காலத்தில் வாழ்ந்திருப்பவர்களுக்காக என எண்ணுவது மரபு ஆகும்.

அந்தரியாமித்துவம் என்பது உலகத்து அனைத்துப் பொருள் களிலும் அனைத்து உயிர்களிலும் உட்கலந்து நிற்பதுடன், அவற்றையெல்லாம் இயக்கி நிற்கும் நிலையாகும். ''உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளன்'' என்றும், ''கரந்த சில் இடந்திகழ் பொருள்தொறும் கரந்துளன்'' என்றும் பலபடப் பாடியுள்ள திருப்பாசுரங்களைக் காண்க.[2]

அர்ச்சாவதாரம் என்பது திருக்கோயில்களிலும் தனிப்பட்ட வைணவரில்லங்களிலும் எழுந்தருளி, அன்பர்கள் உவக்கும் **உபா தானப்பொருளே** தனக்குத் **திருமேனியாகவும்,** அவர்கள் விரும்பும் **திருநாமங்களே** தனக்குத் **திருநாமமாகவும்,** அவர்கள் விரும்பும் **பாவனையே தன்வண்ணமாகவும் நிற்கும் நிலையாகும்.** ''பின்னா

1. திருக்கோயில், டிசம்பர், 1965
2. மேலது, மார்ச்சு, 1973

னார் வணங்கும் சோதி" என்று சிறப்பிக்கப் பெற்றதும், இறைவன் தன் குணநிறைவுடன் திகழ்வதும் ஆழ்வார்கள் பல இடங்களிலும் (திவ்யதேசங்களிலும்) **பிரபத்தி பண்ணியதும் அர்ச்சாவதாரமேயாகும். பரத்துவ நிலையில் இறைவனின் ஒளி, பகல் விளக்குப் போல மழுங்கியிருக்கும்;** அர்ச்சாவதாரத்திலோ இருட்டறையில் விளக்குப் போல மிகவும் பிரகாசம் பெற்றுத் திகழும். மேலும், தனது குணநிறைவையும் உரிமையியல்பையும் குலைத்துக் கொண்டு, தன்னை விரும்பாதவர்களைத் தான் விரும்பிப் பேணிக்காத்து நிற்கும் நிலை அர்ச்சாவ தாரம் ஆகும்"[1] என விளக்கிப் **பொய்கையாழ்வார்** அருளிய,

"தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமருகந்தது எப்பேர்மற் றப்பேர் — தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியான் ஆம்"

எனவரும் திருப்பாசுரத்தை எடுத்துக்காட்டுவார் **ந. ரா. முருகவேள்.**

வைணவ மரபில், அர்ச்சையினை நீர்விடாய் கொண்டவன், எளிதிற் சென்று இறங்கி வேண்டுமளவும் பருகலாம்படி தேங்கியுள்ள மடுக்கள் போன்றது என **ஸ்ரீ வசந பூஷண** வாக்கியத்தை நினைவுகூர்வர். "அடியோமுக்கே எம்பெருமான் அல்லீரோ நீர்!" எனத் **திருமங்கையாழ்வார்** பணித்தருளியபடி அர்ச்சாவதார நிலை ஒன்றே, நம் போன்ற அடியார்களை உய்விக்க அமைந்தது எனலாம்.[2]

அந்தரியாமித்துவம், தரையிற் பதிந்து மறைந்து கிடக்கும் **நீர்** (பூகதசலம்) போன்றது; **பரத்துவம்,** அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கின்ற நீர் (ஆவரணசலம்) போன்றது; **வியூகம்** எளிதிற்கிட்ட இயலாத திருப்பாற்கடல் போன்றது; **விபவம்,** முன்பே பாய்ந்து வடிந்தொழிந்த பெருக்காறு போன்றது; **அர்ச்சாவதாரம்,** நீர்விடாய் கொண்டவன் எளிதிற்சென்று

1. திருக்கோயில், டிசம்பர், 1965
2. மேலது, டிசம்பர், 1965

இறங்கித் தான் வேண்டுமளவும் பருகலாம்படி தேங்கியுள்ள மடுக்கள் போன்றது என அருளாளர்கள் பலரும் விளக்கிக் கூறிவருகின்றனர்.

''வேதத்துக்குப் **பரத்துவத்தில்** நோக்கு; பாஞ்சராத்திரத்திற்கு **வியூகத்தில்** நோக்கு; இதிகாச புராணங்களுக்கு **விபவத்தில்** நோக்கு; திவ்வியப் பிரபந்தங்களுக்கு **அர்ச்சையில்** நோக்கு''[1] எனவரும் அருங்குறிப்பினைக் காண்க.

ஆழ்வார்கள் அருளிச் செயல்களாகிய திவ்வியபிரபந்தங்கள் செந்தமிழுக்குப் பெரிதும் ஆக்கந்தரும் ஆன்மநலக் கருவூலம். அதன் அடிப்படையில் காண்கையில் அர்ச்சாவதாரத்தின் அளப்பரும் பெருமையை உணரலாம்.

29.1. சிற்பக்கலைநோக்கில் திருமால் திருவுருவம் (தியான சுலோகம்):

வைணவச் சமயப் பரம்பொருளாகிய திருமாலின் பெருமையை இனிதுணர்ந்த அருளாளர்கள், அந்தக் கடவுளை அர்ச்சாவதாரத்தில் பேரழகின் உறையுளாகக் காண முயன்றுள்ளனர். தசாவதாரங்களுக்கு மூல நாதனாகிய திருமாலைச் சிற்பத்தில் முறையாக வடிப்பதற்காகத் **தியான சுலோகத்திலும் ''ஸசங்க சக்ரம் ஸகிரீட குண்டலம்''** எனத் தொடங்கும் **தியான சுலோகத்தின்** தமிழ் விளக்கம் வருமாறு; நீலமேக சியாமளனும், சங்கம் சக்கரம் ஆகியவற்றைத் தாங்கியவனும், கிரீடம் தரித்தவனும், காதுகளில் குண்டலங்களை அணிந்தவனும், பீதாம்பரத்தை இடையில் தரித்தவனும், தாமரை மலர் போன்றவையும் நீண்டவையுமான கண்களையுடையவனும், மார்பில் ஆரங்களையும் கௌத்துபமணியையும் தரித்தவனும், சாந்தனும், பாம்பைப் படுக்கையாகவுடையவனும், சுரர்களுக்கு அதிபதியும், உலகமளவு வியாபித்திருப்பவனும், ஆகாயத்தையொத்தவனும், நல்ல அங்கங்களையுடையவனும், மகாலட்சுமியின் கணவனும், பிறப்பு அச்சத்தைப் போக்குபவனும், ஸ்ரீ வத்சத்தையுடையவனும், பரிசுத்தமானவனும், யோகியரின் மனத்தில் பூசிக்கப்படுவதற்

1 திருக்கோயில், மார்ச்சு, 1973

காகவே நிறைந்திருப்பவனும், எல்லாவுலகங்களுக்கும் ஒரே நாதனாக, ஒரே காப்பாளனாக விளங்குபவனுமான விஷ்ணுவை வணங்குகின்றேன்''

இத்தகைய **சுந்தரவரதப்பெருமாளின் வாகனம்** பறவையரசனாகிய **கருடனாகும்**. கருடனை வைணவசமயத்தார் பக்தியார்வமுடன் **'பெரிய திருவடி'** எனப் போற்றி நிற்பர். திருமாலைச் சிந்திக்கையில் பெரியதிருவடியைச் சிறப்பாக இணைத்துச் சிந்திப்பர்; **கருடாழ்வார்** என்றும் போற்றி வணங்குவர்.

29.2. திருமாலின் அவதாரச் சிறப்பு:

அவதாரம் என்பதற்கு மேலிருந்து கீழிறங்குதல் எனப் பொருள் கொள்வர். இந்து சமயத்தில் காத்தற் கடவுளாகிய **திருமால்** உயிர்கள் உய்வதன் பொருட்டுக் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறியை யுணர்த்தும் வகையில், தானே நடந்து காட்டும் பொருட்டுப் பல்வகை உயிர்களாகத் தோன்றுவதே **அவதாரம்** ஆகும்.

உலகத்திலே எவ்வெக் காலங்களில் அறம் தேய்ந்து மறம் (அல்லவை) பெருகுகின்றனவோ, அவ்வக் காலங்களில் இறைவர் தம்மைத்தாமே தம் மாயையிலே புகுத்தி, மானுடச்சட்டை தாங்கி வெளிப்படுறார் என்று **பகவத்கீதை** பகரும்.

திருமாலின் அவதாரங்கள் எண்ணிலவாக இருப்பினும் பரிணாம அடிப்படையில் **பத்து** (தசாவதாரம்) எனக் கூறுவர். "மனித இயற்கையினும் தாழ்ந்த விலங்குத்தன்மை நிலை, **மீன், ஆமை, பன்றி** என்னும் அவதாரங்களிலே குறிப்பிடப்படுகின்றது. பிறகு விலங்குலகு மனிதவுலகுக்கு மாறுவதை **நரசிம்மாவதாரம்** காண்பிக்கிறது. **வாமனாவதாரம்** மனித இயற்கை முழுவளர்ச்சியடையாமையைக் காட்டுகிறது. மனிதனது முதல்நிலை, கொடிய விலங்குத் தன்மையான பழிவாங்கும் நாகரிக மற்ற நிலை என்பதைப் **பரசுராமவதாரம்** அறிவிக்கிறது. தூய நற்குணம் நிரம்பிய மக்கட் பண்பை **இராமவதாரம்** தெரிவிக்கிறது. இச்சையொன்றும் கொள்ளாமல் உலகிலுள்ள தீயசக்தியுடன் போராடி வெற்றி

பெறுவதைக் **கிருஷ்ணாவதாரம்** குறிக்கிறது. எல்லா உயிர்களிடமும் இரக்கம் வேண்டுமென்பதைப் **புத்தாவதாரம்** வெளியிடுகிறது. தீமையையும், ஒழுங்கின்மையையும் வெட்டி வீழ்த்துவதை வாளோடு தோன்றும் **கற்கியவதாரம்** தெரிவிக்கிறது''[1] என வருங்குறிப்பு ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

மேற்காணும் அவதாரங்களுள் **புத்தாவதாரத்திற்குப்** பதிலாகப் **பலராம அவதாரத்தைத்** திருமால் அவதாரமாகவே கருதுவதும் உண்டு. ஒரே காலத்தில் இரட்டை இரட்டை அவதாரங்கள் திருமால் எடுத்தமை பற்றிக் கூறுகையில், திரேதாயுகத்தில் **'இராமனும் பரசுராமனும்'** என்றும், துவாபரயுகத்தில் **'கிருஷ்ணனும் பலராமனும்'** என்றும் கூறுவதை ஈண்டு இயைபுபடுத்திக் காணலாம்.

தெய்வத் தன்மையின் இருப்பு நிலைக்கு நேர்சான்றாக அவதாரம் அமைந்துள்ளது. தெய்வம் மனிதனாக இறங்கி வருதல் உயிர்களின் உய்திக்காக என்பதும், மனிதன் தெய்வமாக உயர்வது அறத்தில் சான்றூன்றி வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதால் என்பதும் உணரத்தக்க குறிப்புகளாகும். மனிதத்தன்மை வாயிலாகத் தெய்வநலத்தைப் புலப்படுத்த முயன்று ஒவ்வொருவரும் ஒருமையுணர்வுடன் தூயநெறியில் இயங்கினால் வீடுபேறு உறுதி என்பது தெள்ளிதாகும்.

ஊழ்வயத்தால் இவ்வுலகியல் வாழ்வில் சிற்சில காலங்களிலே நல்லோர் துன்பமடைவதும், தீயோர் இன்புற்றுவாழ்வதும் (உலகியலில்) காணக்கூடிய காட்சிகளாகத் தெரியலாம். ஆனால், நன்மையின் விளைவு நன்மையே என்பதையும், தீயதன் விளைவு தீயதே என்பதையும் தக்க நேரத்தில் இறைவன் உணர்த்த வேண்டியவனாகிறான். இந்நிலையில் **நல்லாரைத் தக்கவேளையில் காக்கவும், பொல்லாரைக் கடிந்து நீக்கவும்,** இவ்வாற்றான் அறநெறியை நன்கு நிலைநாட்டவும் இறைவனது அவதாரம் நிகழ்ந்து வருகிறது. காலத்தின் இயல்பிற்கும் மக்களின் போக்கிற்கும் ஏற்றவாறு புதியனவாகச் **சில அறநெறிகளைக் காட்டி**

1. கலைக்களஞ்சியம் தொகுதி ஒன்று, பக்-227

மக்களைப் பல பரம்பொருளிடம் சேர்ப்பதும் அவதார நோக்க மாகவே அமையும் எனலாம்.

"உலகம் மேலும் மேலும் உயர்ந்து முழுநலம் அடைய வேண்டும் என்னும் பெருநோக்கம் அவதாரக் கொள்கையில் அமைந்திருக்கிறது. உத்தம வாழ்க்கை வாழ்ந்த பெரியோர்கள் தங்கள் பிரகிருதிக்குத் தாங்கள் அடிமைகளாகாமலும், குணங் களால் கட்டுப்படாமலும், வினையினால் தொடக்குண்ணாமலும் வெற்றி பெறும்பொழுது அவர்கள் தோற்றத்தை அவதாரம் என்று கருதுவது மக்கட் பிறப்பின் முன்னேற்றத்திற்கு ஊக்கந் தரும் கருத்தாகும்"[1] எனவரும் குறிப்பு எல்லோரும் சிந்தித்துப் போற்றத்தக்கதாகும்.

மக்களிடையே வாழும் சிலர் தம் முறையான சிந்தனை யாலும் செயற்பாட்டாலும் அவதார புருடர்கள் எனப் போற்றப் பெறுவதைக் காண்கையில், ஒவ்வொருவரும் தம்மைத் தலை யாகச் செய்து கொள்ள முயலலாமல்லவா? இஃது ஒரு புற மிருக்கத் திருமால் மக்களின் உய்திக்காக எடுத்த பத்து அவதாரங் களைப் பற்றியும் கலையுலகில் அவை பெற்றுள்ள இடம் பற்றி யும் ஓரளவு சிந்திப்போம்.

29.2.1 தசாவதாரத் தோற்றம் - சிறப்புக் குறிப்பு:

பாரதப் பெருநாட்டில் வடக்கே விட்டுணுவின் தசாவதாரக் கொள்கை, காலத்தின் கட்டாயத் தேவையாயிற்று; பிறகு, இது நாடெங்கும் பரவலாயிற்று. இது தொடர்பாகப் புரிந்த ஆராய்ச்சி யில், "வேத காலத்தில் புராணங்கள் கிடையா. குப்த அரசர் கள் காலத்தில்தான் அவை தோன்றின. பௌத்த சமயப் பிரசாரத்தினால் வேத ஒழுக்கங்கள் மிகவும் நலிவுற்றன. ஆனால் பௌத்தம் மூலக்கொள்கைகளுக்கு மாறுபட்டு நழுவி நசித்த போது வேத தர்மங்களை அதன் பழைய நிலைக்குக் கொணர அரும்பாடு பட வேண்டியதாயிற்று புராணங்கள், உபபுராணங் கள் மூலமாகத்தான் சிறிதுசிறிதாக மக்களை உயர்நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என்ற நிலைமை ஏற்பட்டது. அதன்

1. கலைக்களஞ்சியம், தொகுதி ஒன்று, பக். 227.

பலன் தான் தசாவதாரங்களின் தோற்றம். ஆனாலும் 8-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு **திரிவிக்கிரம, வராக, நரசிம்ம, காளி யமர்த்தன அவதாரங்களைத்தவிர** மற்றவை வெகுவாய்ப் பரவ வில்லை''[1] என்றும், ''ருக்வேதத்தில் தருமத்தைக் காக்கப் **பரமபுருஷன் மூன்று அடி எடுத்துவைத்து**, தைத்ரியத்தில் **பிரஜா பதி** உலகைச் சிருஷ்டிக்க வியாபித்த வெளியை நோக்க, ஒரு தாமரையிலையைக் கண்ணுற்று, அதன் தண்டை, **வராக** உருக் கொண்டு பற்றி, அடி புகுந்து புவியைக் கண்டு மேலே கொணர்ந் தான் என்றவை தான் **திரிவிக்கிரம, வாமன, வராக** அவதாரங் களுக்குக் கருப்பொருளாய் அமைந்தன''[2] என்றும் கூறுவது கொண்டு, எவ்வாறு சமயச் சிந்தனை விசுவரூபங்கொள்ளும் என்பது புலனாகும்.

29.2.2. திருமாலின் அவதாரங்கள் - விளக்கம்:

திருமாலின் அவதாரப் பெருமை தமிழ்நாட்டில் பண்டு தொட்டே மக்களால் உணரப்பெற்று வருகின்றது. **பரிபாடலில்,**

''முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலிற்
பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோ ரிலையே''[3]

எனவருவது கொண்டு உயிர்த்தொகுதிகளுள் பல்வேறு வகைகளில் திருமால் அவதரித்துள்ளார் என உணரலாம். எனினும், தேர்ந்த சில அவதாரங்களாகப் பத்து அவதாரங்களைக் கொள் வதால் ஏனையவற்றையெல்லாம் அடக்கிக் காண்டல் சிறப் புடையதாகும். **திருமங்கையாழ்வார் பாசுரத்தில்,**

'மீனோடு ஆமை கேழல் அரி குறளாய் முன்னும்
இராமனாய்த்
தானாய்ப் பின்னும் இராமனாய்த் தாமோ தரனாய்க்
கற்கியும்

1. தமிழக அற்புத ஆலயங்கள், பக். 44
2. மேலது
3. பரிபாடல், 3,71-72

ஆனான் தன்னைக் கண்ணபுரத்து அடியன் கலியன்
ஒலிசெய்த
தேனார் இன்சொல் தமிழ்மாலை செப்பப் பாவம்
நில்லாவே''[1]

என வருதலால், மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், திரிவிக்கிரமன், பரசுராமன், தசரதராமன், பலராமன், கண்ணன், கற்கி, ஆகிய பத்து அவதாரங்களை அறியலாம். 'தசாவதாரங்களின் சிறப்பு' எனப் பெரிய திருமொழியில் வரும் பதிகத்தில்,

''மலைகளை மீது கொண்டு வருமீனை மாலை
மறவா திறைஞ்சென் மனனே''[2]

என்று மச்சாவதாரத்தையும்,

''அருவரை யன்ன தன்மை அடலாமை யான
திருமால் நமக்கொ ரரணே''[3]

என்று கூர்மாவதாரத்தையும்,

''ஆதிமுன் ஏன மாகி அரணாய மூர்த்தி
அதுநம்மை யாளு மரசே''[4]

என்று வராக அவதாரத்தையும்,

''அளவெழ வெம்மை மிக்க அரியாகி அன்று
பரியோன் சினங்க ளவிழ
வளையுகி ராளி மொய்ம்பில் மறவோன தாகம்
மதியாது சென்றொ ருகிரால்
பிளவெழ விட்ட குட்ட மதுவைய மூடு
பெருநீரின் மும்மை பெரிதே''[5]

என்று நரசிம்ம அவதாரத்தையும்,

1. நாலாயிரதிவ்யப் பிரபந்தம், பெரிய திருமொழி, 8ஆம் பத்து, 8.10
2. மேலது, 11ஆம் பத்து, 4.1
3. மேலது, 11ஆம் பத்து, 4.2
4. மேலது, 11ஆம் பத்து, 4.3
5. நாலாயிர திவ்யப்பிரபந்தம், 11ஆம் பத்து, 4.4.

''வெந்திறல் வாணன் வேள்வி யிடமெய்தி அங்கொர்
குறளாகி மெய்ம்மை யுணரச்
செந்தொழில் வேத நாவின் முனியாகி வைய
மடிமூன் றிரந்து பெறினும்
மந்தர மீது போகி மதிநின் றிறைஞ்ச
மலரோன் வணங்க வளர்சேர்
அந்தர மேழி னூடு செலவுய்த்த பாதம்
அதுநம்மை யாளு மரசே''[1]

என்று வாமன - திரிவிக்கிரம அவதாரங்களையும்,

''இருநில மன்னர் தம்மை யிருநாலும் எட்டு
மொருநாலு மொன்று முடனே
செருநுத லூடு போகி யவராவி மங்க
மழுவாளில் வென்ற திறலோன்''[2]

என்று பரசுராம அவதாரத்தையும்,

''அலைமலி வேற்க ணாளை யகல்விப்ப தற்கொ
ருருவாய மானை யமையாக்
கொலைமலி வெய்து வித்த கொடியோன் இலங்கை
பொடியாக வென்றி யமருள்
சிலைமலி செஞ்ச ரங்கள் செலவுய்த்த நங்கள்
திருமால் நமக்கொ ரரணே''[3]

என்று தசரத இராமாவதாரத்தையும்,

''முன்னுல கங்க ளேழும் இருள்மண்டி யுண்ண
முதலோடு வீடு மறியாது
என்னிது வந்த தென்ன இமையோர் திகைப்ப
எழில்வேத மின்றி மறையப்
பின்னையும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி
இருள்தீர்ந்திவ் வைய மகிழ

1. நாலாயிர திவ்விய பிரபந்தம், 11 ஆம் பத்து, 4.5.
2. மேலது, 11 ஆம் பத்து, 4.6,
3. மேலது, 11 ஆம் பத்து, 4.7.

அன்னம தாமி ருந்தாயிருந்தங் கறநூல் உரைத்த
அது நம்மை யாளு மரசே''[1]

என்று அன்னமாகிய அவதாரத்தையும்,

''...... தொலைய
உணமுலை முன்கொடுத்த வுரவோள தாவி
யுகஉண்டு வெண்ணெய் மருவிப்
பணமுலை யாயர் மாதர் உரலோடு கட்ட
அதனோடு மோடி அடல்சேர்
இணைமரு திற்று வீழ நடைகற்ற தெற்றல்
வினைபற்ற றுக்கும் விதியே''[2]

என்று கண்ணனது அவதாரத்தையும், கூறிச் சென்றுள்ளார் திருமங்கையாழ்வார். இதன்கண் வாமன அவதாரத்துடன் திரிவிக்கிரம அவதாரத்தையும் இணைத்துள்ளதையும், கண்ணனது அவதாரத்திற்கு அடுத்ததாக இனி நிகழவிருக்கும் கற்கி அவதாரத்தையும் குறிப்பிடாமல், அதற்குப் பதிலாக அன்ன அவதாரத்தைக் கூறுகிறார். இது நன்கு சிந்தித்தற்குரிய குறிப்பாகும்.

அவதாரம் பற்றிய ஆய்வில், பொதுவாகப் பலராம அவதாரத்திற்குப் பதிலாகப் புத்தரை ஓர் அவதாரத்தவராகவே கொள்ளப் படுவதுண்டு என்பதை ஈண்டு நினைவிற் கொள்ளலாம்.

'திருக்கோயில்' இதழாசிரியராகப் பணியாற்றிய ந. ரா. முருகவேள், ''யதீந்திர மயதீபிகை'' என்னும் நூலில், அதனை இயற்றிய ஸ்ரீ நிவாச தாசர் என்பவர், திருமாலின் திருவவதாரங்கள் 36 என்று பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார். அவை முறையே வருமாறு:

1) பத்மநாமர்
2) துருவன்
3) அநந்தன்
4) சாக்தயாத்மா
5) மதுசூதனன்
6) கபிலன்

1. நாலாயிர திவ்யப்பிரபந்தம், 11ஆம் பத்து, 4,8
2. மேலது, 11ஆம் பத்து, 4.9.

7) விசுவரூபன்
8) விஹாங்கமன்
9) பாதலவக்தரன்
10) தர்மன்
11) வாகீஸ்வரன்
12) ஏகாம்போநிதிசாயீ
13) கமடேஸ்வரர்
14) வராகர்
15) நரசிம்மர்
16) பியூஷஹரணர்
17) ஸ்ரீபதி
18) காண்டாத்மா
19) ரர்குஜித்
20) காலநேமிக்கா
21) பாரிஜாத ஹரா
22) லோகநாபா
23) சாந்தாத்மா
24) தத்தாத்ரேயர்
25) நியக்ரோத சாயி
26) ஏகருங்கதானு
27) திரிவிக்கிரமன்
28) நரன்
29) நாராயணன்
30) ஹரி
31) கிருஷ்ணன்
32) பரசுராமன்
33) இராமன்
34) வேதவித்
35) கல்கி
36) பாதாள சாயிதர்''[1]

அவர் இவ்வாறு எழுதிச் செல்வது சமய அடிப்படையில் சிந்தனையைப் பெரிதும் மலர்த்தி விரிவுபடுத்தும்.

திருமாலின் அவதாரங்கள் 22 என்றும், அவற்றில் சிறப்பான பூரண அவதாரங்களாக - மானுடச் சட்டை தரித்து மக்களோடு மிகப்பழகி அறிவியலுண்மைகளை உலகுக்குணர்த்திய தெய்வநலத் திருவுருவங்களாக - அமைந்தவை இராமாவதாரமும் கண்ணனவதாரமும் ஆகும் என்று பலரும் கருதுவர். இக்கருத்திற்கேற்ப, இராமாவதாரப் பெருமையை விளக்கும் வகையில் இராமாயணமும், கண்ணனவதாரத்தின் சிறப்பினை ஒருவகைத் துணைப் பாத்திர நிலையிலிருந்து விளக்கும் மகாபாரதமும் அமைந்துள்ள சிறப்பினை எடுத்துக் கூறுவர்.

பொதுவாகக் கட்டடக்கலை - சிற்பக்கலை நோக்கில் தசாவதாரங்களைக் காண வேண்டுமெனின், திருவரங்கம் பெரிய கோவிலுக்கு ஒருகல் தொலைவில் தசாவதாரங்களுக்கெனவே ஒரு கோயிலும், திருநெல்வேலி மாவட்ட அம்பாசமுத்திரத்துக்கு அருகே மன்னார்கோயிலில் ஒரு கோயிலும் அமைந்திருக்கக் காணலாம்.

1. திருக்கோயில், ஜனவரி, 1966.

திருச்சி மாவட்டம் அரியலூரில் நரசிம்ம சுவாமி கோயிலில் தசாவதார மண்டபம் ஒன்று உள்ளது; அதன்கண் பத்துத்தூண் களில் ஒவ்வொரு தூணிலும் ஒவ்வோர் அவதாரம் மிகச் சிறந்த சிற்ப மாட்சியுடையதாய் அமைந்துள்ளமை கண்டு போற்றத் தக்கதாகும்.

29.3. மச்சாவதாரம்:

திருமால் மீன்வடிவினைக் கொண்டு நிகழ்த்திய மச்சாவதார வியத்தகு நிகழ்ச்சி வைவசுவத மனுவின் காலத்தியது என்பர். முன்பொரு காலத்தில் நான்முகன் திருமறைகளை ஓதிக் கொண்டிருந்தபோது அயக்கிரீவன் என்ற வஞ்சக அசுரன் அவற்றைத் திருடிக்கொண்டு போய்க் கடலின் அடியில் ஒளிந்து கொண்டான். திருமால் மச்சாவதாரமெடுத்துக் கடலினின்றும் மறைகளை மீட்டருளினார் என்பது புராணக்குறிப்பாகும்.

ஆழ்வார்கள் தம் அருளிச்செயல்களில் மச்சாவதாரத்தின் பெருமையை யுணர்ந்து தக்கவாறு புலப்படுத்தியுள்ளனர்.

திருமங்கையாழ்வார் தாம் மங்களாசாசனம் புரிந்தருளிய திருப்பதியாகிய திருநறையூரில்,

'முந்நீரை முன்னாள் கடைந்தானை மூழ்த்தநாள்
அந்நீரை மீனாய் அமைத்த பெருமானைத்
தென்னாலி மேய திருமாலை யெம்மானை
நன்னீர் வயல்சூழ் நறையூரில் கண்டேனே''[1]

என்று பாடியருளுதல் காண்க.

மச்சம் (மீன்) எவ்வாறு நீர்நிலைகளிலுள்ள அழுக்குகளைப் போக்கித் தூய்மையாக்குகிறதோ, அவ்வாறே மச்சாவதாரப் பெருமாளும் உலகுயிர்களின் மாசுகளை நீக்கி மேம்படுத்துகிறார் என்பது இவ்வவதாரத்தால் உணர்ந்து கொள்ள வேண்டிய அருங்குறிப்பாகும்.

1. பெரிய திருமொழி, 6,8,2.

"திருமாலின் மச்ச அவதாரம் சிற்பங்களில் வழக்கப்படும் பொழுது, மீன் போன்றோ அல்லது தலைப்பகுதி ஆண்வடிவை யும் அடிப்பகுதி மீன் வடிவையும் கொண்டோ அமைக்கப்படும். நான்கு கைகளைக் கொண்டு விளங்கும் இவருடைய இருகை களில் சங்கும் சக்கரமும், மற்றிரண்டு கைகளில் அபய முத்திரை யும் வரத முத்திரையும் காணப்படும். பல அணிகலன்களையும் தலையில் கிரீட மகுடத்தையும் இவர் அணிந்திருப்பார்,"[1] என்று குறிப்பிடுவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

நக்கீரர் எழுதிய **இறையனார் களவியலுரையில்** காணலாகும் நீர்ப்பிரளயங்களை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தால் திருமாலின் மச்சாவதாரத்தின் தொன்மையை ஓரளவு புரிந்து கொள்ள இயலும். நக்கீரர் நீர்ப்பிரளயங்களைக் கால எல்லை களாகக் குறிப்பதை அவர்தம் உரை வாயிலாக அறிந்து கொள்ள லாம். அவரது கருத்தினைப் **பாகவத புராணத்துடன்** இணைத்து இயைபாகச் சிந்திக்க இடம் உள்ளது.

"ஒரு பிரளயத்தில் பாகவத புராணம் கூறுகிறபடி மலைய மலையை ஒட்டிய தமிழகம் அழியாமல் நின்றது. அப்போது ஒரு மீன் தப்பி மீண்ட மனுவுக்கு அருகிருந்த ஒரு படகைக் காட்டியது. அதனில் அவன் உயிர் தப்பினான் எனத் தெரி கின்றது. அந்த மீனே திருமாலின் முதலாவதாகிய மச்சாவதாரம் எனக் கருதப்படுவது. **பாண்டியன் இலச்சினையும் மீன் என்ப தால், இவ்வாறு மனுவுக்கு** (முதல் மனிதனுக்கு) **வழிகாட்டியது பாண்டியனே** (தமிழனே) **எனக் கொள்ளக்கிடக்கின்றது.** ஆக, மனித நாகரிகத்திற்கு வழிகாட்டியவன் தமிழன் எனப் பாராட் டப் பெறுகிறான்"[2] என **டாக்டர் மு. கோவிந்தசாமி** எழுதிச் செல்வது நினைவிற் கொண்டு சிந்திக்கத் தக்கதாகும்.

29.3.1. மச்சாவதாரத்துடன் இணைத்துச் சிந்திக் கப்பெறும் அன்ன அவதாரம்:

நான்மறைகளைக் காணாமல் நான்முகன் புலம்புவதை யறிந்து, பிரளய காலத்தில் திருமால் பொருத்தமான வகையிலே

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஒன்று, பக், 856
2. தமிழக வரலாறு (கி.மு. 5000 முதல் கி.பி. 20 ஆம் நூற்றாண்டு வரை), பக், 5-6

மச்சாவதாரம் எடுத்தார். மறைகளை மீட்டநிலையில், அவ்வவதாரத்தின் நோக்கம் நிறைவேறியதும், திருமால் அன்னப்பறவையாக வடிவங் கொண்டார். பாலையும் நீரையும் பகுத்துண்ணும் திறமுடைய அன்ன வடிவத்துடன், அருமறைகளின் பொருள் நுட்பங்களையெல்லாம் நான்முகனுக்குப் பகர்ந்தருளினார் திருமால். அதன் பின்னர்த் திருமால் சத்தியவிரதனுக்கும் அவனுடன் இருந்த முனிவர் முதலானோருக்கும் இன்னருள் வழங்கினார் என்பது புராணப் போக்காகும்.

மச்சாவதாரமும், அன்ன அவதாரமும் திருமால் கொண்டருளிய அடுத்தடுத்த அவதாரங்களாகும்.

"சோமுகன் என்னும் அரக்கனை அழித்ததும், அயனுக்கு அருளியதும் இவ்விரண்டு அவதாரங்களின் சிறப்புச் செயல்கள்.

நாரணன் அருளால் நான்முகனுக்கு அருமறைகள் கிடைத்தன. நமக்கும் நல்வாழ்வு கிடைக்க வேண்டுமானால் நாமும் அவன் மலர்ப் பாதங்களையே சரணாகப் பற்ற வேண்டும் என்பதே இவ்வவதாரத்தால் நாம் அறிந்து கொள்ளும் உட்பொருளாகும்"[1] என மாருதிதாசன் எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்கதாகும்.

நான்மறைகளை ஊழியிருளினின்றும் காப்பாற்றியது திருமாலின் மச்சாவதாரம் என்பது ஒருபுறமிருக்க, இதே பொறுப்பினை மேற்கொண்டருளியது அன்ன அவதாரமும் ஆகும் என்பது ஆன்றோர்க்கு உடன்பாடான செய்தியாகும்.

அன்னப்பறவையாகித் திருமால் அருமறைகளை மீட்டுத் தக்கோர்க்கு வழங்கிய பேரருளை மனத்துட்கொண்ட பெரியாழ்வார்,

"துன்னிய பேரிருள் சூழ்ந்து உலகைமூட
மன்னிய நான்மறை முற்றும் மறைந்திட
பின்னிவ் வுலகினில் பேரிருள் நீங்க அன்று
அன்னம தானானே அச்சோ அச்சோ
அருமறை தந்தானே அச்சோ அச்சோ!"[2]

1. திருமாலின் திருஅவதாரங்கள், பக். 24-25
2. பெரியாழ்வார் திருமொழி, 10.8

எனப் பாடியருளுவதால் உணரலாம்.

29.4. கூர்மாவதாரம்:

முன்னொரு காலத்தில் திருமாலின் திருவுள்ளப்படி, **தேவர்கள் அசுரர்களைத் துணைசேர்த்துக் கொண்டு திருப்பாற் கடலைக் கடைந்து அமிர்தம் பெறத் திட்டமிட்டனர்.** மந்தர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் அரவத்தினைக் கடையுங் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைய முனைந்தனர். பேருருவில் அமைந்த மத்தின் அடிப்பகுதியில் தாங்கும் வலிமைக்கு ஒன்றும் இல்லாமையால் மத்து அமிழலாயிற்று. இதனைக் கண்ணுற்ற திருமால் கனமான ஓதுகுடன் கூடிய ஆமை வடிவத்தை (கூர்ம அவதாரத்தை) எடுத்துக்கொண்டு, மத்தின் அடிப்பகுதியிலமர்ந்து அதைத் தாங்கினார். அதனால், திருபாற் கடல் கடைய வாய்ப்பேற்பட்டது; அவ்வாற்றான் **திருமகள், அமுதம், சந்திரன், உச்சைசிரவம்**, ஐராவதம், பாரிசாதம் முதலிய பல பொருள்களும் தோன்றுதற்கு வழியுண்டாயிற்று.

ஆழ்வார்கள், கூர்ம அவதாரத்தில் ஈடுபாடு கொண்டு பல வாறு போற்றியுள்ளனர். **திருமங்கையாழ்வார்,**

"ஆமை யாகி அரியாகி
அன்ன மாகி அந்தணர்தம்
ஓம மாகி ஊழியாய்"[1]

என்று பாடிச் செல்கையில் 'ஆமையாகி' எனக் குறித்தமையும், அவரே கூர்ம அவதாரக் காரணத்தை விளக்குகையில்,

"செருமிக வாளெயிற்ற அரவொன்று சுற்றித்
திசைமண்ணும் விண்ணு முடனே
வெருவர வெள்ளை வெள்ளமுழுதுங் குழம்ப
இமையோர்கள் நின்று கடையப்
பருவரை யொன்று நின்று முதுகிற்
பரந்து சுழலக் கிடந்து துயிலும்

1 பெரிய திருமொழி, 8 ஆம் பத்து, 6.5

அருவரை யன்ன தன்மை யடல்
ஆமையான திருமால் நமக்கோ ரரணே''1

என்று குறித்தமையும் காண்க. கூர்மவதாரச் சிறப்பினை யுணர்ந்து, பாகவதம்,

''அந்தரத் துறை யமரரும் அசுரருங் கடையும்
மந்தரத் திணை மறுகும் அவ்வாரிதி மருவிச்
சுந்தரப் பெருங் கமடமாய் முதுகினிற் சுமந்தான்
கந்தரத்தினிற் கவுத்துவம் கவினிய கண்ணன்''

என இயம்பிச் செல்லுதலையும் காண்க.

சிற்பக்கலையில், மச்சாவதாரம் போன்றே கூர்மாவதாரமும் தலைப்பகுதி ஆணின் முகத்தைக் கொண்டது; ஆனால் கீழ்ப்பகுதி ஆமை வடிவத்தினைக் கொண்டிருக்கும் அமைப்பினையுடையது; கூர்மஅவதாரத்திலும் திருமாலுக்கு நான்கு திருக்கைகள் உண்டு.

கூர்மாவதாரத்தின் தத்துவம் காண்கையில், ரசோ குணமும் தமோ குணமும் அசுராம்சம் எனவும், சத்துவகுணம் தேவாமிசம் எனவும், இறையருள் சத்துவ குணம் நிறைந்த அடியார்களுக்கே வாய்க்கும் எனவும், திருமால் இந்த அவதாரம் வாயிலாகப் புலப் படுத்தியுள்ளார். மக்கள், ஆமையைப் போன்று பாதுகாப்பாகப் புறத்தீங்குகள் தம்மைப் பற்றாமலிருக்க ஐம்புலனடக்கம் கொள்ள வேண்டும் என்பது தத்துவப் பயனாகப் பெறலாகும் குறிப் பாகும்.

29.5. வராக அவதாரம்:

திருமாலின் பத்து அவதாரங்களுள் பரிணாமத்தின் படிநிலைகளான மீன், ஆமை, பன்றி ஆகிய அவதாரங்கள் மனித இயற்கையினும் தாழ்ந்த விலங்குத் தன்மை நிலையை உணர்த்தும் எனலாம். அதிலும், விலங்குகளுள் தாழ்ந்ததாக உலகியலில் கருதப்படும் பன்றியுருவிலே இறைவன் வராக அவதாரமெடுத்துத் தெய்வநலத்தின் பெருநிலையை யுணர்த்தியுள்ளான். சிற்பக்

1. பெரிய திருமொழி, 11ஆம் பத்து, 4-2

கலையடிப்படையில் காண்பதற்கு முன், வராக அவதாரத்துப் புராணப்பின்னணியைச் சிறிது நோக்குவோம்.

இரணிய கசிபு என்பவனின் உடன்பிறந்தவனாகிய இரணியாட்சன் கொடிய அசுரன்; இவன் பூமியைக் கவர்ந்து கொண்டு கடலுட் சென்றுவிடவே, தேவர் முனிவர் முதலியோரின் வேண்டுகோளுக்கிணங்கத் திருமால் பூமியை மீட்க வேண்டிய பொறுப்பினை மேற்கொள்கிறார். நீருக்கும் சேற்றுக்கும் அஞ்சாத பெரிய வராக அவதாரமெடுத்துக் கடலினுட் புகுந்து, இரணியாட்சனைக் கண்டுபிடித்து, வென்று, பாதாளத்திலிருந்த பூமியைத் தம் கோட்டினால் எடுத்து வந்து, அதற்குரிய இடத்தில் நிறுவினார் என்பது புராண வரலாறு. மற்றொரு வரலாறும் உண்டு. ''இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருப்பது சுவேத வராக கல்பம். இதற்கு முந்தியது பாத்ம கல்பம். அக்காலத்தில் எழுந்த பிரளயத்தின் இறுதியில் பரம்பொருளாகிய திருமால் ஏகார்ணவ மான பிரளய நீரில் முழுகியிருந்த பூமியை மேலே எடுக்க நினைத்து வராகவதாரத்தைச் செய்தருளிக் கோட்டுநுனியில் பூமியை எடுத்து வந்தனர் என்ற வரலாறும் அறியத்தக்கது''[1] என்று எழுதிச் செல்கிறார் டாக்டர் ந. சுப்புரெட்டியார்.

வராக அவதாரத்தில் ஈடுபாடு கொண்ட ஆழ்வார்கள் தாம் அருளிச் செய்துள்ள திவ்யப்பிரபந்தத்தில் இவ்வவதார மாட்சியை ஏற்புடைய இடங்களில் குறிப்பிட்டுள்ளனர் ;அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

திருமாலின் அவதார நோக்கத்தை நன்கு புரிந்திருந்தவர் பொய்கையாழ்வார். ''இறைவன் தன் வாமன அவதாரத்தில் அடியாலளந்த மண்ணுலகத்தை (விண்ணவரும் மண்ணவரும் நடுங்கும்படியாகத் திரிவிக்கிரமனாக வளர்ந்து அளந்த இப் பூமியை), வராக மூர்த்தியாய்ப் பிரளய வெள்ளத்தில் மூழ்கி அண்ட பத்தியில் நின்றும் குத்தி எடுத்துக்கொண்டு வந்தார். அக்காலத்தில் அம்மூர்த்தியின் ஒரு கோரப்பல்லின் நுனியில் அடங்கிக் கிடந்ததல்லவா இப்பூமி!'' என்று வியந்து நிற்கிறார் இதனைப்,

1. சப்தகிரி (திங்களிதழ்), ஜீன், 1990

"பொருகோட்டோர் ஏனமாய்ப் புக்கிடந்தாய்க்கு அன்றுன்
ஒருகோட்டின் மேல்கிடந்த தன்றே — விரிதோட்ட
சேவடியை நீட்டித் திசைநடுங்க விண்துளங்க
மாவடியின் நீயளந்த மண்''[1]

எனவரும் பாசுரத்தால் அறியலாம்.

விட்டுணுசித்தராகிய **பெரியாழ்வார்** கண்ணனவதாரத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். எனினும், திருமாலின் பிற அவதாரங்களையும் ஏற்புடைய இடங்களில் நினைந்து போற்றுகிறார். அவர் வராக அவதாரத்தினைப் போற்றி நிற்பதை,

"..... ... கேழலொன்றாகிக்
கோட்டு மண்கொண்ட கொள்கையி னானே!
குஞ்சரம் வீழக் கொம்பொசித் தானே''[2]

எனவரும் பாசுரப் பகுதியால் உணரலாம்.

திருமங்கையாழ்வார் தம் பாசுரங்களில் பல இடங்களிலும் வராக அவதாரத்தைக் குறிப்பிட்டுப் போற்றி நிற்கிறார். எடுத்துக்காட்டாகக்,

"கிடந்த நம்பி குடந்தை மேவிக் கேழலாய் உலகை
இடந்த நம்பி எங்கள் நம்பி...''[3]

என்றும்,

"பண்டேன மாய் உலகை அன்றிடந்த
பண்பாளா! என்று நின்று
தொண்டானேன்......''[4]

என்றும் அந்த **ஆழ்வார்** பாடிச் செல்வது காண்க.

29.5.1. வராக அவதாரம் - சிற்பக்கலை நோக்கு:

வராக அவதாரம் கலையுலகில் வெவ்வேறு திருவுருவங்களில் காட்சியளிப்பதைக் காணலாம். திருமால் **பூவராகன்**, **ஆதி**

1. இயற்பா - முதல் திருவந்தாதி, 9
2. பெரியாழ்வார் திருமொழி, 5ஆம் பத்து, 1-5
3. பெரிய திருமொழி, 6ஆம் பத்து. 10,1
4. பெரிய திருமொழி. 7ஆம் பத்து, 4,7

வராகன் (யக்ஞவராகன்), **பிரளய வராகன்** என்ற திருநாமங்களில் திருக்கோயில்களில் கண்டு வழிபடப்படுகின்றனர். வராக அவதாரச் சிற்பங்கள் **மாமல்லபுரம், இராசம், நாகணபுரம்** ஆகிய இடங்களிலும், **ஸ்ரீ முஷ்ணம்** திருக்கோயிலிலும் சிறப்பாகக் காணலாம். சென்னை அருங்காட்சியகத்தில் வராக அவதாரத்தைக் காட்டும் வெண்கலச் சிலையொன்றும் நன்கு பாதுகாக்கப்பட்டு வருதலைக் காணலாம்.

23.6. நரசிம்மாவதாரம்:

வராக அவதாரத்தால் **இரணியாட்சன்** கொலையுண்ட நிலையில், அவன் தம்பி **இரணியகசிபு**விற்குத் திருமாலின் மீது அடங்காச் சினமுண்டாயிற்று. நான்முகனை நோக்கி மந்தர மலையின் உச்சியில் அமர்ந்து, கடுந்தவம் மேற்கொண்டான் இவனது தவத்தினைக் கண்டு, இவன் முன் தோன்றி நான்முகன் சில வரங்களைக் கொடுத்தான். அவற்றுள் ஒன்று, 'திருமாலைத் தவிர வேறு யாராலும் தான் கொல்லப்படுதல் கூடாது' என்பதாகும். அவனுக்குப் **பிரகலாதன்** என்ற தவப் புதல்வன் பிறந்தான். குழந்தைப் பருவத்திலிருந்தே பிரகலாதன் திருமாலடியவனாகக் காணப்பட்டான். தன் பகைவனாகிய திருமாலின் மீது, தன் மகனுக்கும் பகைமையுணர்ச்சி வளர வேண்டுமென்ற நோக்கத்தில், அத்தகைய உணர்ச்சி யூட்டக்கூடிய ஓர் ஆசிரியரை இரணியகசிபு நியமித்தான்; தன் எண்ணம் பலனளிக்காமற் போகவே, தன் ஒரே மகனென்றும் பாராமல் பல வழிகளிலும் அவனை அச்சுறுத்தி ஒறுத்து வரலானான். மதம் பிடித்த யானைகளாலும், நச்சுப்பாம்புகளாலும் கொல்ல நினைத்தும் இயலவில்லை; அந்நிலையில் இரணிய கசிபு, பிரகலாதனைக் கொழுந்துவிட்டெரிகின்ற தீயில் தள்ளிவிடவும் துணிந்தான். தீ குளிர்நிழல் போல் தணியலாயிற்று. அத்தீயிலிருந்து கிளம்பிய ஒரு பூதம் பிரகலாதனைக் கொல்ல முயல்கையில், திருமாலின் **சுதர்சனச் சக்கரம்** அந்தப் பூதத்தின் தலையினைத் துண்டாக்கிற்று. தன் கொடிய முயற்சிகளில் தோல்வியுற்ற இரணியகசிபு பிரகலாதனை நோக்கிக் கோபத்துடன், ''உன் திருமால் எங்கேயடா இருக்கிறான்?'' என்று வினவினான். அதற்குப் பிரகலாதன், ''அவன் அசையும்

பொருள் அசையாப் பொருள் ஆகிய அனைத்திலும் உள்ளான்'' என்று மறுமொழி பகர்ந்தான். இதனைக் கேட்ட இரணிய கசிபு, அருகிலிருந்த தூணைக்காட்டி ''இத்தூணில் இருக்கிறானா?'' என்று வினவ, ''அவன் தூணிலும் உள்ளான், துரும்பிலும் உள்ளான்'' என்று பிரகலாதன் கூறினான். அந்தத் தூணை இரணியகசிபு சினத்துடன் உதைத்ததும், தூணைப் பிளந்து கொண்டு திருமால் **நரசிம்ம வடிவங் கொண்டு** தோன்றி அவனைக் கீழே தள்ளித் தம் கூரிய நகங்களால் அவன் வயிற்றைக் கிழித்துக் குடலைப் பிடுங்கி மாலையாகப் போட்டுக் கொண்டு பேராரவாரம் புரிந்தார். அடியவனாகிய பிரகலாதன், நரசிம்மரைக் கண்டு பக்தியுணர்வு பொங்கப் பாடித் துதித்து வணங்கினான். நரசிம்மர் அவனுக்கு ஆசிகூறி மறைந் தருளினார் என்பது புராணச் செய்தியாகும்.

திருமாலின் எளியனாந் தன்மை (சௌலப்பியம்) **நரசிம்ம அவதாரத்தால்** நன்கு புலப்படுத்தப்பட்டதாக வைணவப் பெரியோர்கள் கூறி மகிழ்வர். இதனை நன்குணர்ந்த **கம்ப நாட்டாழ்வார்** தாம் பாடியருளிய இராமாயணம் யுத்த காண்டத்தில் **வீடணன்** வாயிலாக நரசிம்மாவதாரத்தின் இயல்பையும் பெருமையையும் இனிது இயம்பி நிற்கிறார். இத்தகைய சிறப்பிற்குரிய பகுதி **'இரணியன் வதைப் படலம்'** என்பதாகும். அப்படலத்துள் காணலாகும்,

> ''சாணிலும் உளன்ஓர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட
> கோணினும் உளன்மா மேருக் குன்றினும் உளன்இந் நின்ற
> தூணினும் உளன்நீ சொன்ன சொல்லினும் உளன்இத் தன்மை
> காணுதி விரைவின் என்றான் நன்றெனக் கனகன்
> சொன்னான்''[1]

எனவருஞ் செய்யுளில் சூழலையும் பாங்கினையும் காண்க.

ஆழ்வார்கள் பலரால் போற்றப்பெறும் நரசிம்மாவதாரச் சிறப்பு அளப்பரிது; எடுத்துக் காட்டாக விட்டுணுசித்தராகிய பெரியாழ்வார்,

1. இராமாயணம், யுத்த காண்டம், இரணியன் வதைப்படலம், 124

"நாதனை **நரசிங்கனை** நவின்று
ஏத்து வார்கள் உழக்கிய
பாத தூளி படுதலால்இவ்
வுலகம் பாக்கியம் செய்ததே"[1]

என்றும், **நம்மாழ்வார்,**

"எங்கும் உளன்கண்ணன் என்றமக னைக்காய்ந்து
இங்கில்லை யால்என்று இரணியன் தூண்புடைப்ப
அங்குஅப் பொழுதே அவன்வீயத் தோன்றியஎன்
சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே"[2]

என்றும் பாடியருள்வது காண்க.

29.6.1 நரசிம்மாவதாரம் — சிற்பக்கலை நோக்கு:

அடியவர்களை உற்றுழிக்காத்தருளும் நரசிம்பர் பல்வகைத் தோற்றங்களில் பல்வேறு திருநாமங்களுடன் காட்சியளிப்பதை யுணர்ந்து, சமயக்கலைஞர்கள் சிற்பம் முதலிய கலைகள் வாயிலாகப் போற்றியுள்ளனர். சிற்பத்தில் வியத்தகு வண்ணம் திகழும் **சிங்கப் பெருமான் அருளுருவங்களை,**

1.	இலட்சுமி நரசிம்மர்	— அகோபிலம்
2.	யோக நரசிம்மர்	— சோளிங்கர், சிந்தலபூடி
3.	சந்திராந்த நரசிம்மர்	— நாமக்கல்
4.	உக்கிர நரசிம்மர் அல்லது இரணியசம்மார உக்கிர நரசிம்மர்	— திருவரங்கம்
5.	வராக நரசிம்மர்	— சிம்மாசலம்
6.	பிரகலாத நரசிம்மர் அல்லது பிரகலாத வரத நரசிம்மர்	— கீழ்அகோபிலம்
7.	பர்முலிதி நரசிம்மர்	— சிங்கவேள் குன்றம்

1. பெரியாழ்வார் திருமொழி 4.6
2. திருவாய்மொழி, 2,8,9

8. பார்க்கவ நரசிம்மர் — அகோபிலம்

9 காரங்கி நரசிம்மர் — அகோபிலம்

என வகைப்படுத்திக் கலையுலகில் புலப்படுத்தியுள்ளனர்; இவ்வெழி லுருவங்களைச் **சிங்கவேள் குன்றம்** என்னும் திவ்விய தேசத்தில் நவ நரசிம்மராக வைணவவுலகம் கண்டு போற்றி வருகிறது.

வைணவப் பெருமக்கள் வேறொரு பார்வையிலும் நரசிம்மப் பெருமானைக் கண்டு **துவாதச நரசிம்ம மூர்த்திகளாக** வழிபாடு புரிந்து வருகின்றனர். அத்தகைய துவாதச மூர்த்திகள் எழுந்தருளியுள்ள திருமால் திருத்தலங்களும் போற்றத்தக்கவை ஆகும்

1 யோகநரசிம்மர் — சோளிங்கர்

2. தெள்ளியசிங்கர் (யோக நரசிம்ம திருக் கோலம்) — திருவல்லிக்கேணி

3. சாந்த நரசிம்மர் — திருநீர்மலை

4. படலாத்ரிநரசிம்மர் — சிங்கப் பெருமாள் கோயில்

5. ஸ்தாரக நரசிம்மர் — யானை மலைக்குகைக் கோயில் (மதுரையருகில்)

6. பானக நரசிம்மர் — மங்களகிரி

7. இரணியசம்மார உக்கிரநரசிம்மர் — திருவரங்கம்

8. ஸ்ரீ தேவி பூதேவி சமேத நரசிம்மர் — மங்களகிரி

9. லட்சுமி நரசிம்மர் — அகோபிலம்

10. யோக நரசிம்மர் — சிந்திலபூடி

11. சுதர்சன நரசிம்மர் — தாடிக் கொம்பு

12. பிரகலாதவரதசிம்பர் — கீழ் அகோபிலம்

ஈடும் எடுப்புமில்லாத திருமாலருள் **நரசிம்மாவதாரத்தில்** புலப்படுவதை அருளாளர்கள் பலர் தோய்ந்து அனுபவித்துள்ளனர்; தம் பக்தியனுபவங்களைப் பலவகைகளில் புலப்படுத்தியுள்ளனர்; சிலர் திருவாக்குகளைக் காண்போம்.

''அளந்திட்ட தூணை அவன்தட்ட வாங்கே
வளர்ந்திட்ட வாளுகிர்ச் சிங்க வுருவாய்
உளந்தொட் டிரணியனொண் மார்பகலம்
பிளந்திட்ட கைகளால் சப்பாணி பேய்முலை யுண்டானே''[1]

எனப் **பெரியாழ்வார் திருமொழி** மொழிதலாலும்,

''ஆடுமரவில் துயிலரங் கேசன் அருமகற்கா
நீடுந்தறியில் உதித்திலனேல் நிகிலப் பொருள்கள்
ஊடும் புரத்தினும் உண்மையெவ் வாறிவ் வுலகறியும்
ஈடும் எடுப்பு மில்லா வொரு தெய்வ மிவனெவனே''[2]

என்று **திருவரங்கத்து மாலை** கூறி நிற்றலாலும் நரசிம்மத்தின் பெருமையுணர்க. இவையெல்லாம் சிற்பியர்க்குத் தியானசுலோகங்கள் போலப் பயன்பட்டுள்ளன.

இவ்வாறெல்லாம் பெருஞ்சிறப்பிற்குரிய நரசிம்மாவதாரத்தின் எழில் தோற்றங்கள்-வேடத் திருவுருவங்கள்- சிற்பவுலகில் தனி முத்திரைகள் பதித்துள்ளன.

தமிழ் நாட்டில் திவ்யதேசங்கள் பலவற்றுள் நரசிம்மத் திருவுருவங்களின் பல்வேறு கோலங்கள் காணப்படினும், **கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி திருக்கோயிலின்** கருவறையினைச் சுற்றியுள்ள கோட்டங்களில் காணலாகும் **சில நரசிம்மத் திருவுருவங்கள்** மிகநேர்த்தியாக அமைந்துள்ளன; கண்டு போற்றி வழிபடத்தக்கவை.

29.7. வாமனாவதாரமும் திரிவிக்கிரம அவதாரமும்:

திருமால் குறளுருவினனாகத் தோன்றிப் பிறகு திரிவிக்கிரமனாக நெடிதுயர்ந்து **மகாபலிச் சக்கரவர்த்தியின் ஆணவத்தினை**

1. பெரியாழ்வார் திருமொழி 1ஆம்பத்து, 7 9
2. திருவரங்கத்து மாலை (பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்)

அடக்கிய அவதாரமாகும். அதன் புராணப் பின்னணியினைச் சிறிது காண்போம்.

திருப்பாற் கடலினின்றும் அமிர்தத்தைக் கடைந்தெடுத்த தேவர்களும், அசுரர்களும், அந்த அமிர்தத்தைப் பகிர்ந்து கொள்ளாமல் தந்நலத்துடன் தாமே பெறவேண்டும் என்று போரிட்டு நின்றனர். தேவர் தலைவனான இந்திரன், அசுரர் தலைவனான மகாபலிச்சக்கரவர்த்தியின் உடலைத் துணித்தான். அசுரர்கள் மகாபலியின் உடலைப் பாதாளத்திற்கு எடுத்துச் சென்று அசுர குருவான சுக்கிராச்சாரியாரைக் கொண்டு, மகாபலியை உயிர்ப்பித்து எழச் செய்தனர். பிறகு, வைரங்கொண்ட மகாபலி இந்திரனுலகிற்குச் சென்று தேவர்களைப் போரில் சிதறியோடச் செய்தான். தேவர்களின் துயர் களையுமாறு, தேவர்க்கு அன்னையாகிய அதிதி திருமாலை வேண்டவே, அவரும் அதிதியின் வயிற்றில் இந்திரனுக்கு இளையவனாகப் பிறந்தருளினார். அவரே குறளுருவ - வாமனப் - பெருமைக்குரியவர். மகாபலி நருமதையாற்றங்கரையில் ஒரு பெரிய வேள்வியை நடத்துகையில், அங்குக் கூடியிருந்த பலருள் வாமனரும் ஒருவர்; அவரது தோற்றத்தில் தோய்ந்த கம்பநாட்டாழ்வார், "நீலநிறத்து நெடுந்தகை வந்து ஓர், ஆல்அமர் வித்தின் அருங்குறள் ஆனான்"[1] எனக் கூறிக் காட்டுவார்; அத்தகைய பெருமான் வேள்வி நடைபெறுகையில் தானம் கேட்கலாம் என்ற உணர்வில், மகாபலியிடம் தம் காலடியால் அளக்கக்கூடிய மூன்றடி இடத்தைத் தானமாக வழங்குமாறு வேண்டி நின்றார். அங்கு வாமனராக (இரு திருக்கரங்களுடன்) வந்திருப்பவர் திருமால் என்பதைப் புரிந்து கொண்ட சுக்கிராச்சாரியார் மகாபலியைக் காப்பதற்காகத் தானமளிக்காதிருக்கத் தடைசெய்ய முயன்றார். தடுத்தும் பொருட்படுத்தாமல், மகாபலி, தானத்திற்கு இசைந்து அப்படியே மூன்றடி நிலத்தைத் தாரை வார்த்து வழங்கினான். வாமனர் விசுவரூபமெடுத்துத் திரிவிக்கிரமராக, இரண்டடிகளால் வானம் நிலம், கீழுலகு ஆகியவற்றை அளந்த நிலையில், மூன்றாவது, அடியை எங்கு வைத்து அளப்பது என வினவினார். மகாபலியும் உடன்பட்டு, மூன்றாவது அடியைத் தம் தலைமீது வைக்கும்

1. இராமாயணம், பாலகாண்டம், வேள்விப்படலம், 20

படி பணிவுடன் வேண்டிக் கொள்ளவே, அப்படியே செய்து அவனைக் கீழுலகத்தில் ஆழ்த்திவிட்டார். தேவர்கள் தாம் இழந்த அமரருலகத்தை மீட்டனர்; வாமனாவதாரத்தின் நோக்கம் நிறைவேறியது என்பது புராணக்குறிப்பாகும்.

29.7.1. திரிவிக்கிரம அவதாரம்-சிற்பக்கலை நோக்கு:

வாமன அவதாரத்தின் நோக்கம் திரிவிக்கிரம அவதாரத்தில் நிறைவு கொள்வதால், திரிவிக்கிரம அவதாரமே சிற்பக்கலையுலகில் சிறப்பிடம் பெறுவதாயிற்று.

திரிவிக்கிரமனாக - **உலகளந்த பெருமாளாக** - வைணவ ஆலயங்கள் பலவற்றிலே சிற்பத்திருவுருவங்களைக் காணலாம். ஒரு காலை ஊன்றிய நிலையில், உலகளந்த பெருமாள் தம் மற்றொரு காலை மேலுலகை நோக்கித் தாவவிடுகின்ற திருக் கோலம் அவரது அளப்பரும் பெருமையையும், ஆற்றலையும் புலப்படுத்தும் என்பர். இந்தச் சிலைவடிவைப் பார்க்கும் போதெல்லாம் கடவுளின் பெருமையையும் தம் சிறுமையையும் அடியார்கள் உணர வாய்ப்பு உண்டாகும் என்றும் கூறுவர்.

பொதுவாக உலகளந்த பெருமாளைச் சிற்பத்தில் வடிக் கையில் மிகப்பெரிய அளவிலேயே வடித்தமைக்கின்றனர். எடுத்துக்காட்டாகக் காஞ்சி உலகளந்த பெருமாள் திருவுருவச் சிலையைக் காண்க.

வாமன - திரிவிக்கிரம அவதாரப் பெருமையைக் கேரள மக்கள் மிகவும் போற்றிக் கொண்டாடுகின்றனர்; சிற்பப்பண் பாட்டு நோக்கில் கேரள நாட்டிலும் களஆய்வு புரிய இட முள்ளது என உணர்வது நல்லது.

29.8. பரசுராமாவதாரம்:

முன்னொரு காலத்தில் அக்கினி பகவான், **கார்த்தவீரியார்ச் சுனன்** என்ற மன்னனிடம் தமக்கு உணவு வேண்டுமென்று கேட்கவே, அவனும் தன் பேரரசில் எப்பகுதியை வேண்டுமானா லும் உணவாகக் கொள்க என்று இசைவளித்தான். அக்கினி,

பல காடுகளைக் கொளுத்திக் கொண்டு வருகையில் **ஆபவர்** என்னும் மாமுனிவர் வசித்து வந்த காட்டையும் தீக்கிரையாக்கினான். தாம் வசித்து வந்த காடு தீக்கிரையானதற்குக் காரணம் கார்த்தவீரியன் என்னும் சத்திரியன் என்பதைப் புரிந்து கொண்டார் முனிவர். இராவணனைவிட வலிமை மிக்கவன் கார்த்தவீரியன் என்பதைப் புரிந்திருந்த அவர், "சத்திரிய குலமே அழிவதற்காகத் திருமால் பரசுராமராக அவதரிப்பாராக" என்று சாபமிட்டார். அவ்வாற்றான், **சமதக்கினி முனிவருக்கும் இரேணுகைக்கும் பிறந்தவரே பரசுராமர்** ஆவார்.

கங்கைக்கரையில் தன் கணவரின் வேள்வி முதலிய கிரியைகளுக்குத் தண்ணீர் கொணரச் சென்ற **இரேணுகை**, சித்திரரதன் எனும் **கந்தருவனது அழகில் சிறிது நேரம் வயமிழந்தாள்;** பிறகு, தன் செயலுக்கு அஞ்சியவளாய்க் காலந்தாழ்த்தி வந்தாள்; இதனையறிந்த **சமதக்கினி** முனிவர், **கடமை தவறிய மனைவியைக் கொல்லுமாறு தம் மைந்தர்களிடம் உத்திரவிட்டார்;** ஆனால், யாரும் தாயைக் கொல்ல உடன்படவில்லை. அந்நிலையில், **பரசுராமன் தம் தாயைக் கொன்றார்.** எனினும் தம் மதிநலத்தால் உயிரைமீட்டார். இதனால் 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' எனும் பழமொழிக்கும் இலக்கியமாயினார் என்பர்.

பரசுராமர் சிவனை நோக்கித் தவம் புரிந்து வில்வித்தையில் பெருந்தேர்ச்சி பெற்றார். சிவன் அவருக்குப் **பரசு** (கோடரி) எனும் படைக்கலம் வழங்கவே, அன்று தொடங்கிப் **பரசுராமன்** எனும் திருப்பெயருக்குப் பெருமையேற்பட்டது. "பாரத நாட்டை இருபத்தொரு முறை சுற்றி வந்து க்ஷத்திரியர்களை (அரசவம்சத்தினரை)க் கொன்ற பாவத்தைத் தீர்ப்பதற்குப் பரசுராமர் குருச்சேத்திரத்தில் வேள்வி செய்தார். அப்போது தம் பொன், பொருள் அனைத்தையும் காசியபருக்குக் கொடுத்து விட்டார். தமக்கென ஓர்இடம் இல்லாததால் **காசியபர்** சொன்னதற்கேற்பத் தென்னாட்டின் மேற்குக் கடற்கரைக்குச் சென்று, **வருணபகவானை** வேண்டிக் கடலில் ஒரு பகுதியை நிலமாகப் பெற்றார். அது இன்றைய **கேரளநாடு** என்று சொல்லப் படுகிறது"[1] என வருங்குறிப்பு இயைபுடன் சிந்திக்கத்தக்கது.

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஒன்று, பக். 858

பரசுராம அவதாரத்தில் மிகச்சிறப்பான குறிப்பு, சத்துவ குண இராமாவதாரம் நடந்த அதே காலத்தில், இராமனிடமே மோதக்கூடிய முரட்டியல்பான அவதாரமாக இஃது அமைந்ததே; அதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

மிதிலை மன்னன் சனகனுடைய பேரவையில் சிவனுடைய வில்லை (சிவதனுசை) முறித்துச் சீதையைத் திருமணம் புரிந்து கொண்டான் சக்கரவர்த்தித் திருமகன் இராமன். கோசலநாடு நோக்கி இராமன் திரும்பிக் கொண்டிருக்கையில் பரசுராமர் எதிர்ப் படலானார். "முன்பே வலிவற்றுக்கிடந்த சிவதனுசை நாணேற்றி முறித்தது பெருவலிமையாகாது. என்னிடமுள்ள திருமாலின் வில்லை நாணேற்ற முடியுமா?" என்று பரசுராமர் இராமனிடம் கேட்கவே, அவனும் உடன்பட்டுத் தன் வலிமையைக் காட்டும் வகையில், அந்த வில்லை முறித்தான். பரசுராமர் இராமனை வாழ்த்தியதுடன் தம் தவவலிமையையும் அவனுக்கு வழங்கி விட்டு, மரீசந்திரமலைக்குத்தவஞ் செய்யும் பொருட்டுச் சென் றார் என்பது புராண வரலாறாகும்.

29.8.1. திருமாலின் கூறாகிய பரசுராமன் தசரத ராமனிடம் தோற்றதன் உட்கிடை:

அதுலன் எனும் கொடிய ஓர் அரக்கன் கடுந்தவமியற்றிப் பிரமனிடம் இருவரங்கள் பெறுகிறான்; அந்நிலையில், எல்லா இடங்களிலும் தான் பரவியிருக்கும் பேற்றினையும், திருமால் எப்போது தோல்வி அடைகிறாரோ அப்போதுதான் தனக்கு அழிவு நேரவேண்டுமென்ற தற்பாதுகாப்பினையும் பெற்றுச் செருக்கி நிற்கிறான். மேலும், சிவனிடமிருந்தும் சாமர்த்திய மாக ஒருவரம் பெறுகிறான்; அதனால், திருமாலின் உடலுக்குள் தான் பொருந்தியிருக்கக்கூடிய ஒரு வியத்தகு சிறப்பினையும் அடைகிறான்; அஃதாவது, பரசுராம அவதாரத்தில் அவனது நாபிப் பகுதியில்இருந்து வருகிறான்.

அதுலன் தன் கடுந்தவங் காரணமாகத் 'தபோமயன்' என வும், உலகெங்கும் வியாபித்திருந்தமையின் 'லோகமயன்' எனவும் பெயர்பெற்று வாழ்ந்து வருகையில் அவனையழிக்கப் பரசுராம னுக்கும் தசரதராமனுக்கும் போர் ஏற்பட வேண்டிய சூழல்

அமைகிறது." **விஷ்ணு தனுசை** (வில்லை) **நாணேற்ற இயலுமா?**", எனப் பரசுராமன் இராமனிடம் கேட்கவும், அதற்கு இராமன் இணங்கவுமான சூழலில் போர் மூளுகிறது.

பரசுராம அவதாரம் முற்றுப்பெற வேண்டிய கட்டத்தில், இராமன் பரசுராமரை நோக்கி, "இந்த வில்லில் நாணைப்பூட்டி உம் கால்களில் நடக்கும் சக்தியை அழிக்கவா? தவத்தால் நீர் தேடிய ஒப்பற்ற உலகங்களை அழிக்கவா?" என்று கேட்டு நிற்கிறான். அதற்குப் பரசுராமர், "கால்களினால் நடக்கும் சக்தியை அழிக்க வேண்டா; என் 'லோகமயன்', 'தபோமயன்' என்ற புகழை அழிப்பாயாக" என்று கூறித் தம்முள் அடங்கியிருக்கும் அசுரனைக் கொல்லுமாறு சூசகமாகப் பதிலிறுக்கிறார்; இக்குறிப்பினை **வான்மீகியும்** எழுதுகிறார்.[1]

வேறு எவருடன் போரிட்டாலும் திருமால் தமக்குத் தோல்வி கிடையாது என்பதாலும், ஒரு கொடிய அரக்கனின் அழிவை உட்கிடையாக அவர் கருதியதாலும், தம்மைத்தாமே தோற்கடித்துக்கொள்ளும் உத்தியாகப் பரசுராம அவதாரத்தைத் தோற்றுவித்து அருளினார் எனலாம்.

'இறைவனே தன்னைத்தான் வெல்ல வேண்டும்' என்பதைப் பரசுராம அவதாரம் வாயிலாகக் காட்டியமையால், மக்கள் நன்குணர்ந்து 'தம்மிடமுள்ள அசுர சக்திகளை வெல்ல முயல வேண்டும்' என்பது உணர வேண்டிய அருங்குறிப்பாகும்.

29.8.2. பெருவலிமைக்கு எடுத்துக்காட்டாகிய பரசுராமன்:

"திருமாலின் அவதாரங்களுள் பரசுராமரின் வலிமையும் வெற்றியும் வியப்பிற்குரியது. மும்மூர்த்திகளுள் முதல்வராகக் கருதப்படுபவர் முக்கட் பெருமான்! அவர் அமர்ந்துறையும் இடம் கைலாயம். அந்தக் கைலாயத்தைத் தன் கையாலேயே பெயர்த்தெடுத்த வலிமையுடையவன் **இராவணன்**. அந்த இராவணனையே வெற்றி கொண்டவன் **கார்த்த வீரியன்**. அந்தக்

1. ஞானபூமி (திங்களிதழ்), ஆகஸ்டு, 1984.

கார்த்த வீரியனையே கொன்றொழித்த ஆற்றல் மிக்கவர் பரசுராமர் எனின், அவர் வீரமும் வெற்றியும் விளம்பும் தகைத்தோ!'',[1] என **மாருதிதாசன்** எழுதிச் செல்லுங் குறிப்பால் பரசுராமரின் அளப்பரும் ஆற்றல் புலனாகும்.

தீயகுணத்தை மாற்றி நலஞ்சேர்க்கும் ஆற்றலுடைய அவதாரமாக இந்த அவதாரத்தை மக்கள் கருதுகின்றனர். **மாருதிதாசன்** பரசுராமரைப் போற்றுகையில்,

''குணமில்லேன் நலமில்லேன் கோடரியால்
குறைகளையும் பரசு ராமா!
கணமேனும் பெருஞானம் தரும்நூலைக்
கற்பதற்கு மனமு மில்லேன்!
குணமுடைய பெரியோரைக் கூடுதற்குத்
திறனில்லேன் கொடியேன் மூடக்
குணத்தாலே அழியுங்கால் எதிர்வந்து
தீக்குணத்தை மாற்றி யருளே''[2]

எனப் புலப்படுத்திச் செல்வது மனங்கொள்ளத் தக்கதாகும்.

29.8.3. பரசுராமாவதாரம் - சிற்பக்கலை நோக்கு:

திருமாலின் பிற அவதாரங்களின் பெருமையையுணர்ந்து மக்கள் வழிபடுவதைப்போல் பரசுராம அவதாரத்தின் பெருமையையுணரினும், தனியே அதனைப் பூசித்து வணங்கும் நிலை வழக்கத்தில் இருப்பதாகத் தெரியவில்லை; அதனால் பெருந்திட்டத்தில் பரசுராமருக்குத் தனிக்கோயில் அமைக்கவில்லையெனலாம்.

பரசுராம அவதாரத்தைப்போல **நரசிம்மவதாரமும்** ஆவேச வடிவமுடையதே; எனினும், அடியார்க்கு அருள்புரியும் சக்தியைப் பரசுராமரிடம் பொருத்திப் பார்க்கும் சமயமரபு மக்களிடம் இல்லை. மேலும், முத்தியடைய நினைக்கும் சமயவுணர்வினருக்கு இவ்வவதாரம் ஏற்புடையதாகத் தோன்றவில்லை.

1. திருமாலின் அவதாரங்கள், பக். 106
2. மேலது, பக். 96.

பொதுவாகத் "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" எனும் உயரிய பண்பாட்டினையுணர்த்தும் வகையில் பரசுராம அவதாரம் இராமாவதாரத்துடன் ஒத்து அமைந்திருப்பதால், கலையுலகில் இதனைப் போற்றி நிற்பதைக் காணலாம். ஓவியத்திலும், சிற்பத்திலும் பரசுராமரை அமைக்கையில் தம் இரு கைகளுள் ஒன்றிலே பரசு எனும் படையை ஏந்திநிற்கும் ஒரு முனிவர் தோற்றமாக அமைக்கின்றனர்.

கருநாடகமாநிலத்தில் மைசூருக்சருகில் நஞ்சன்கூடு எனும் தலம் உள்ளது; அங்கிருக்கும் நஞ்சுகண்டேசுவரர் ஆலயத்திற்கு அருகில் பரசுராம க்ஷேத்திரம் இருக்கிறது; அங்கே பரசுராமருக்கெனத் தனி ஆலயங் காணலாம்.

திருவரங்கம் தசாவதாரக் கோயிலில் பரசுராமருக்காகத் தனிச் சன்னிதியில் பரசு எனும் கோடரியைத் தன் தோள்மேல் சாத்தியவண்ணம் நிமிர்ந்து நிற்கும் பரசுராமன் திருவுருவத்தைக் காணலாம். காஞ்சி வரதராசர் கோயில் நூற்றுக்கால் மண்டபத்திலும், அரியலூர் தசாவதார மண்டபத்திலும் கோயில்தூண்களில் பரசுராமர் சிற்பங்கண்டு மகிழலாம். காஞ்சியில் 'பரசுராமேசம்' என்றே ஒரு தனிச் சிவன் கோயில் இருப்பது அறியத்தக்கது. மற்றும் திருப்பழுவூர் என்ற சிவத்தலத்தில் வடமூலநாதேசுவரர் ஆலயத்தின் முன்வாயிலிலும் பரசுராமர் திருவுருவத்தைக் காணலாம்.

29 9. இராமாவதாரம்:

தென்னிலங்கையை ஆட்சி புரிந்த இராவணன், தேவர் முனிவர் முதலிய நல்லவர்களுக்குத் தீமைகளைப் புரிந்து வந்தமையால், பொறுக்க வியலாத தேவர்கள் சிவனிடம் முறையிடவும், சிவன் பிரமனிடம் முறையிடவும், பிரமனும் சிவனும் திருமாலிடம் முறையிட்டனர்; அந்நிலையில் திருமால் நிலவுலகத்தில் இராமன் எனும் மானுடனாக அவதாரஞ் செய்து இராவணனைக் கொல்வதாக வாக்களிக்கிறார். அதற்கேற்ப அமைந்ததே இராமவதார உட்கிடை. இந்த அவதாரத்தில் திருமால் தம் சங்கு, சக்கரம், ஆதிசேடன் ஆகியோர் தம் உடன் பிறப்பினராகத்

தோன்றுவார்கள் என்றும், தேவர்கள் வானரர்களாகத் தோன்று வார்கள் என்றும் அமைத்துக் கொள்வது நியதியாயிற்று; இவ்வாறு இராமாயணப் போக்கு அமைந்துள்ளது.

இராமாவதாரத்தைப் போற்றிப் புகழும் வகையில், இந்தியப் பெருநாட்டின் பலமொழிகளிலும் சிற்சில நிகழ்ச்சி வேறுபாடு களுடன் இராமாயணங்கள் பலவாகத் தோன்றியுள்ளன. இதி காசங்கள் என இந்திய நாட்டுக்கு அமைந்த இரண்டனுள் முதலாவதாக **இராமாயணம்** அமைந்துள்ளது; இதற்கு அடுத்த தாக **மகாபாரதம்** அமைந்துள்ளது என்பதும் குறிக்கத் தக்க செய்தியாகும்.

இராமாவதாரத்தின் சிறப்பினைப் புரிந்து கொள்ளும் வகையில் இராமாயணச் செய்திகள் சிலவற்றைக் காண்பது நல்லது; காரணம், சில செய்திகள்-நிகழ்ச்சிகள் - சிற்பக்கலை வடிவங்களாக அமைந்திட வழிகோலியுள்ளன என்பதே.

கோசல நாட்டின் தலைநகரான அயோத்தியிலிருந்து ஆட்சி புரிந்தவன் **தசரத சக்கரவர்த்தி;** அவனுக்கு மனைவியர் அறுபதி னாயிரவர்; எனினும், **கோசலை, கைகேயி, சுமித்திரை** ஆகிய மூவர் பட்டத்துத் தேவியராய் விளங்கினர். குலகுருவான **வசிட்டர்** அறிவுரைப்படி, புத்திரகாமேட்டி எனும் வேள்வியைச் செய்யவே, கோசலை வாயிலாக **இராமனும்**, கைகேயி வாயிலாகப் **பரதனும்**, சுமித்திரை வாயிலாக **இலக்குவனும் சத்துருக்கனனும்** அவதரித்துத் தசரதனுக்குப் புதல்வர்களாயினர் அவர்கள் விற்பயிற்சி வல்லவர்களாய் அரசமரபிற்கேற்ற ஒழுக்கத்துடன் திகழ்ந்தனர்.

ஒருமுறை **விசுவாமித்திரர்** வேண்டுகோட்படி இராமனும் இலக்குவனும் வேள்விகாக்கச் சென்று, அரக்கர்களை விரட்டினர். தாடகை எனும் அரக்கியை இராமன் தன் வில்லுக்கு இரையாக்கினான்.

மிதிலை மன்னன் சனகரிடமிருந்த சிவபெருமான் வில்லை வளைத்து (முறித்து), சனகர் மகள் **சீதையை** இராமன் திருமணம் புரிந்து கொண்டான். இலக்குவன் **ஊர்மிளையையும்,**

பரதன் மாண்டவியையும், சத்துருக்கனன் சுருதகீர்த்தியையும் மணம் புரிந்து கொண்டனர். அனைவரும் அயோத்திக்குத் திரும்புகையில், வழியிலே பரசுராமரை வென்று அவரது தவ வலிமையை இராமன் பெற்றுப் பெருமை கொண்டான். ஈண்டு, இராமன் வில்லுடனும் அம்புடனும் சார்த்தியே உருவ அமைப்பினைக் கொண்டிருத்தலால் **வேட்டைக்காலம்** (Hunting stage) என்பதை நினைவுறுத்தும் **தொன்மம்** (myth) உள்ளது என அறிஞர் பலரும் கருதுகின்றனர்.

இராமனுக்கு முடிசூட்டத் தசரதன் முயலுகையில், கைகேயி யின் காரணமாக இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வசிக்க வேண்டியவனாயினான். இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் **தண்ட காரணியம்** சென்றனர். இராமன் கங்கை யைக் கடக்கும் சூழலில் வேடன் **குகனின் நட்பினைப் பெற்றான். விராதன் எனுங் கொடிய அரக்கனை** அழித்தபின், **சரபங்கர், அகத்தியர் முதலிய முனிவர்களின் வாழ்த்தினைப் பெற்றான்;** பஞ்சவடிக்குச் சென்று குடில் அமைத்து இலக்குவனுடனும் சீதையுடனும் வாழ்ந்து வரலானான்.

இராவணன் தங்கையான **சூர்ப்பணகையின்** சூழ்ச்சியால் ஆண்டி வேடம் புனைந்து வந்த இராவணனால் சீதை வஞ்சக மாகக் கவரப் பெற்றாள். அவளை வான்வழியே தூக்கிச் செல்கையில், இராவணனிடமிருந்து அவளை மீட்கச் **சடாயு** முயன்றும் பயனில்லை. **அசோகவனத்தில் சீதை சிறைவைக்கப் பட்டாள்.** உயிர் பிரியும் நிலையிலிருந்த சடாயு வாயிலாகச் சீதையை இராவணன் தூக்கிச் சென்றான் என்பதையறிந்த இராமன், **இரிசியமுக மலையில்** அனுமனுடன் இருந்த **சுக்கிரீவன்** முதலிய வானரர்களின் நட்பினைப் பெற்றான். அனுமன் வாயிலாகச் சீதை அசோகவனத்திலிருப்பதைத் தெரிந்து கொண்டு, வானரர்களின் துணையுடன் இலங்கைக்குப் பாலம் அமைத்து, இலங்கை சென்று வீடணனது ஆலோசனை யைப் பெற்று இராவணனைப் போரில் வென்றான். இராவண வதத்திற்குப் பிறகு, இராமன் தன் மனைவி சீதையின் கற்பை உலகறியச் செய்வதற்காக அவளைத் தீயில் புகச்செய்து, அப் பழுக்கற்ற சூழலில் சீதையுடனும் மற்றவர்களுடனும் இராமன்

அயோத்திக்குத் திரும்பி வந்து முடிசூட்டிக் கொண்டான் என்பது காப்பியப் போக்காகும்.

29.9.1. இராமாவதாரம் - சிற்பக்கலை நோக்கு:

சிற்ப நோக்கில் இராமன் நின்ற கோலத்தில் காட்சியளிப்பான். மேலும், சிலைகளில் இராமனுக்குப் பக்கத்தில் **சீதையும்**, வலப்பக்கத்தில் **இலக்குவனும்** காணப்படுவர்; இராமனை வணங்கிய வண்ணம் **அனுமன்** நின்று கொண்டும், சில சிலைகளில் ஒரு காலை மடக்கியும் மற்றொரு காலை மண்டியிட்டும் காணப் படுவான். பெரும்பாலும், **இராமன் இலக்குவன் சீதை அனுமன் ஆகிய நால்வரும் அமைந்த சிலைகளே தமிழ்நாட்டில் பல இடங்களில் காணப்படுகின்றன.** ஓவியத்தில், **இராமர் பட்டாபிடேகக் காட்சியே** பெரும்பாலும் இடம் பெறுவது வழக்கத்தில் உள்ளது; காரணம், பூசை வழிபாட்டிற்குப் பட்டாபிடேகக்கோலத்துப் பட்டாபி இராமனையே மக்கள் விரும்புகின்றனர் எனலாம்.

இராமாயண நிகழ்ச்சிகள் தொடர்பாகச் சிற்பக்கலைப் படைப்புக்கள் சிலவற்றை இராமர் கோயில்களில் கண்டு களிக்கலாம். சிவன் கோயில்கள் சிலவற்றிலும் இராமனது **வில்லாற்றலைத்** தோற்றுவிக்கும் கோதண்டராமன் திருவுருவங்களைக் காணலாம். எடுத்துக்காட்டாகத் **தாரமங்கலம்** திருக்கோயிலில் **வாலியை இராமன் மலறந்து நின்று அம்பெய்யும் காட்சியைக்** கூறலாம்; அங்கே, இராமன் சிலையருகே நின்று கொண்டு வாலியின் சிலையினைக் காணுமாறும், வாலியின் சிலையருகே நின்று கொண்டு இராமன் சிலையைக் காணவியலாதவாறும் சிற்பியின் கற்பனை உத்தி செயற்பட்டிருந்தலைப் போற்றி நிற்கலாம்.

29.10. கிருட்டிணாவதாரம்:

வடமதுரையில் **யாதவ குலத்திலே** வசுதேவருக்கும் தேவகிக்கும் குழந்தையாகக் கிருட்டிணன் அவதரித்தான். வசுதேவருக்கும் தேவகிக்கும் பிறக்கும் குழந்தையால் தனக்குக் கேடு நேரிடும் என்பதைத் தெரிந்து கொண்ட **கம்சன்,** கிருட்டிணனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தான். **பூதனை** என்ற அரக்கியை

அனுப்பிக் கிருட்டிணனுக்கு நச்சுப்பால் ஊட்டுமாறு செய்தான். ஆனால், கிருட்டிணன் அவளது பாலுடன் உயிரையுஞ் சேர்த்துக் குடித்து விட்டான்; பிறகு, கம்சனால் அனுப்பப்பட்ட சகடா சுரன், வத்சாசுரன், பகாசுரன், அகாசுரன், அரிட்டாசுரன், கேசி, வியோமாசுரன் ஆகியோரையும் கொன்றுவிட்டான்.

ஒருமுறை கிருட்டிணன் மண்ணைத் தின்று கொண்டிருக் கையில் சினமுற்ற யசோதை அவன் வாயைத் திறக்கச் சொல்லிப் பார்த்தபோது, அவன் வாயில் அனைத்துலகங்களையும் கண்டு வியப்புற்றாள்; விந்தைக்குரிய தெய்வநலப்பேராற்றல் அவனிடம் பொதிந்திருப்பதை உணர்ந்து கொண்டாள்.

யமுனையாற்றில் குதித்து விளையாடுவதுபோல அங்கு வாழ்ந்து வந்த கொடிய காளியன் என்ற பாம்பினைக் கண்ணன் அடக்கி அதன்மேல் நடனமாடிக் 'காளிங்க நர்த்தனன்' என்று அடியவர்களால் அழைக்கப்பட்டான்.

கோகுலத்திலுள்ள ஆயர்கள் ஆண்டுதோறும் இந்திர விழாவைக் கொண்டாடி வந்தனர். இந்திரனுக்கு மாற்றாக இடையர் குலத் தெய்வமான கோவர்த்தன மலைக்கே விழா எடுக்குமாறு பணித்தான் கண்ணன்; அவர்களும் ஏற்று அவ்வாறே செய்தனர். இதனால் சினங்கொண்ட இந்திரன், கோகுலத்தினை அழித்தற்காக விடாமழை பெய்விக்கவே, கண்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கிக்குடையெனப் பிடித்தவண்ணம் ஆயர்களைக் காத்தருளினான்.

கண்ணன் தன்னைக் கொல்லவந்த மல்லர்களைக் கொன்ற துடன், அவர்களை ஏவிய கம்சனையும் கொன்றான். விதர்ப்ப மன்னனான வீடுமனின் மகள் உருக்குமணியைக் கவர்ந்து வந்து, கண்ணன் தன் மனைவியாக்கிக் கொண்டான். பிறகு, சத்ராசித்து என்பவருக்கு மகளான சத்தியபாமாவையும் திருமணம் புரிந்து கொண்டான்.

மகாபாரதப் போரிலே கண்ணன் பாண்டவருக்கு உறுதுணை யாக நின்று. துரியோதணன் முதலிய கௌரவர்களிடம் தூது சென்றான். பிறகு, அவர்களைத் தோற்கடிக்கக் காரணனானான்,

இதற்கிடையில், துரியோதனனது அவையில் **திரௌபதியைத்** துச்சாதனன் துகிலுரிய முற்பட்ட நிலையில், அவளது அபயக் குரலைக் கேட்டு அவளுக்கு ஆடையைத் தந்து மானங்காத்ததும் பாரதப் போரில் அருச்சுனனுக்குச் சாரதியாக அமைந்ததும், அவனுக்குக் **கீதையை** அறிவுறுத்தியதும் சிறப்பான நிகழ்ச்சிகளாகும்.

29.10.1. கிருட்டிணாவதாரம் - பண்பாட்டுச் சிறப்பு நோக்கு:

இராமாவதாரமும், கிருட்டிணாவதாரமும் (கண்ணன் பிறப்பும்) பண்பாட்டு அடிப்படையில் சிறப்பாகச் சிந்திக்கத் தக்கவை. அவ்விரு அவதாரங்களுள் பொதிந்துள்ள வாழ்வியற் செய்திகள் பல; அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

மேற்காணும் இரு அவதாரங்களும் பூரண அவதாரங்களாக மானுடத்தின் மேன்மையை உலகிற்கு உணர்த்தும் சிறப்புடையவையாகும், இராமாவதாரத்தில் **இராமன் தன் பெற்றோர்களின் கட்டளைகளைத் தலைமேற் கொண்டும், உடன்பிறப்புணர்வை உலகில் விரித்துக் காட்டியும், பிறன்மனை நயத்தலை ஒறுத்துக் காட்டியும், அடைக்கல மாட்சியை உலகிற்கு உணர்த்தியும் நின்று பெருமைகொள்கிறான்.** கண்ணனவதாரத்தில் அருள்மிகு**கண்ணன் நல்லோர் பக்கஞ் சார்ந்து,** மண்ணாசையும் குரோதமும் கொண்ட **துரியோதனாதியரைக் கொல்லத் துணைநின்றும்,** மனப்போராட்டத்திற்கிடையே சிக்கித் தவித்த **அருச்சுனனைத் தேற்றிச் செயற்படும் வகையில் கீதையை உபதேசித்தும் பெருமை கொள்கிறான்.** ஒப்பீட்டு நோக்கில் இராமனையும் கண்ணனையும் சீர் தூக்கிப் பார்க்கும் மக்கள், ''இராமனைப் போல் வாழ்க, கண்ணன் சொற்படி வாழ்க'' எனக் கூறத் தலைப்பட்டனர் சிறப்பான காரணம், கண்ணனவதாரத்தில் சூழ்ச்சிகள் பலவாக இருத்தலேயாகும்.

மக்கள் தம் வாழ்வியலில் நன்றியுணர்வு, வினைக்கொள்கை முதலியவற்றை மனத்துட் கொண்டு செயற்படுத்தல் வேண்டும். இதற்கியைபாக இவ்விரு அவதாரங்களுள் காணலாகும் சிறப்பான இரு நிகழ்ச்சிகளைக் காண்போம்.

பாரத இதிகாசப்போக்கில் ஒரு சிறப்பான குறிப்பு வருகிறது. ஒரு காலத்தில் கண்ணன் தன் கைவிரலில் காயம் பட்டு நிற்கையில், பாஞ்சாலியாகிய திரௌபதை தன் துகிலில் ஒரு துண்டுத் துணியைக் கொண்டு கட்டியுதவுகிறாள்; அதற்கு ஈடுசெய்வது போலத் துரியோதனனது அவையில் திரௌபதையின் துகிலைத் துச்சாதனன் உரிகையில் துகில் வளருமாறு கண்ணன் அருளுகின்றான்; இதனால், நன்றி மறப்பது நன்றன்று என்பதும், 'தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாகக் கொள்வர் பயன்தெரிவார்' என்பதும் மக்கள் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். இஃது ஒருவகையில் மக்களுக்கேற்ற பண்பாட்டுக் குறிப்பென்றே கொள்ளலாம்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பது நாடறிந்த பழமொழியும் நல்லுரையுமாகும். இதற்கியைபாக இரு அவதாரங்களையும் இணைத்துப் பார்க்கும் சிறப்புக் குறிப்பொன்று உள்ளது.

''திருமால், இராம அவதாரத்தில் வாலியை மறைந்திருந்து கொன்றதால் கிருட்டின அவதாரத்தில் ஒரு மரத்தின் மீது இருக்கும் பொழுது இவரது கால் பெருவிரலின் அசைவைப் புறாவின் அசைவாகக் கருதிய வேடன் ஒருவன் அதன்மீது அம்பெய்ததால் இவ்வுலக வாழ்வை நீத்தார் எனக் கூறுவர்''1 என வருங் குறிப்பு மிகவும் ஆழ்ந்து சிந்தித்தற் குரியாகும்,

29.10.2 கிருட்டிணாவதாரம் - சிற்பக்கலை நோக்கு

பாரத நாடெங்கும் இந்துக்கள் கண்ணனைத் தம் கண்கண்ட தெய்வமாகப் போற்றி வருகின்றனர். இராமன் தன் ஒரேமனைவி சீதையுடனேயே வாழ்ந்து நல்லறங்காத்தவன்; ஆனால், கண்ணனோ உருக்குமணி சத்தியபாமா மற்றும் கோபியர்களிடம் குலவிக் களித்தவன்; பாரதப்போர் நடைபெறுகையில், பாண்டவர்கள் வெல்லும் பொருட்டுச் சில சூழ்ச்சிகளைக் கூட அரசியல் என்ற போர்வையில் துணிச்சலுடன் புரியுமாறு தூண்டியவன்; இதனால், மக்களிடையே, ''இராமனைப் போல் ஒரே மனைவி

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஏழு, பக். 407-408.

யுடன் வாழ வேண்டும்; கண்ணனைப் போல் மனைவியர் பலருடன் வாழாமல், அவன் உரைத்த கீதைக்கிணங்க வாழவேண்டும்'' என்ற உணர்வு உண்டாயிற்று.

ஓவியத்திலும், சிற்பத்திலும் கண்ணனுடைய திருவிளை யாடல்கள் மக்களின் ஈடுபாட்டிற்கேற்பப் பலவாக இடம் பெற லாயின. எனினும், கண்ணன் எடுத்த திருப்பேருருவமும் (விசுவரூப தரிசனம்), அவன் காட்டிய கீதோபதேசமும், கோபியர்களுடன் அவன் ஆடிய இராசலீலையும், கோகுலத்தைக் காக்கக் கோவர்த் தன மலையைக் குடையாகப் பிடித்த காட்சியும், காளிங்க நர்த்தன மும், சத்தியபாமா உருக்குமணியுடன் கூடிய அவனது எழிற் கோலமும், திரௌபதிக்கு ஆடை வழங்கிய கருணைக் காட்சியும் இவை போன்றவையும் சிற்ப வரிசையில் சிறப்பிடம் பெறு கின்றன. கண்ணன் தான் மானுடனாக அவதரித்து அதன் மாட்சியை மக்களுக்கு உணர்த்த வந்தமையின் இரு திருக் கரங்களே அவனுக்குப் பொருத்தமாயின. விசுவரூபம் எடுக்கும் போது மட்டும் திருமுகங்களும் திருக்கைகளும் பலவாக அமைய லாயின; எனினும், கால்கள் இரண்டே எந்நிலையிலும் அவனுக்கு அமைந்தன என்பதும் நினைவிற் கொள்ளத்தக்கது.

திருமாலே கண்ணனாக அவதரித்த சிறப்பினை மனத்துட் கொண்டு, அரவணையில் பள்ளிகொண்ட கோலத்திலும் கண்ண னைச் சிற்பியர், வியக்கத்தக்க நிலையில் சிலைவடிவில் கண்டுள்ளனர்.

சிற்பவுலகத்தில் கண்ணன் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் தொடர்பு படுத்தப்பெற்றுக் காட்டப்பெற்றுள்ளதைப் பல திவ்ய தேசங்களிலும் காணலாம். இவற்றுக்கு முன்னோடியாக மாமல்ல புரத்தில், கோகுலத்தைக் காக்கக் கோவர்த்தன கிரியைக் குடை யாகப் பிடித்த காட்சி பாறைச்சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளதை நினைவிற் கொள்ளலாம்.

29.10.2.1. காளியமர்த்தனர் - சிறப்பு நோக்கு:

கண்ணனவதாரத்தில் பல வியத்தகு அருட்செயல்களைப் புரிந்துள்ளான் கண்ணன். எனினும், சிற்சில செயல்களே சிற்பக்கலையில் இடங்கொண்டுள்ளன.

கோகுலத்தில் பசுக்களை மேய்க்கும் நிலையில் வேய்ங் குழலூதும் கண்ணனை - வேணுகோபாலனைச் - சிற்ப வடிவத்தில் பலவாகக் காணலாம். ஆயர்களையும் கன்று காலிகளையும் காத்தருளியதுடன், கண்ணன் தன்னை எதிர்த்து வந்த கொடியவர்களைக் கொன்ற இளம்பருவச் செயல்களையும் சிற்ப வடிவில் பல இடங்களில் காணலாம்.

இவ்வாறான சிறப்புமிகு அருட்செயல்களைக் குறிக்குந் திருவுருவங்களில் ஒன்றே, **'காளியமர்த்தனர்'** ஆகும். அது பற்றிய புராணப் பின்னணியையும், சிற்பவடிவமைதியையும் சிறிது காண்போம்

காளியன் (காளிங்கன்) எனுங் கொடிய நச்சரவம் யமுனை நதிக்கரையருகிலுள்ள ஒரு குளத்தில் இருந்து கொண்டு அங்கே வரும் கோகுலத்துக் கால்நடைகளுக்கும், ஆயர்களுக்கும் துன்பங்களைத் தந்து வந்தது. அப்பாம்பின் கொடுமையை அடக்கும் நோக்கத்தில், கண்ணன் அதன் மீதேறி நடனமாடி விரட்டியதாகப் புராணம் கூறும்.

சிற்பவடிவில், கண்ணன் காளியனாகிய அரவின் மீது நின்று கொண்டு, தன் இடக்கையினால் அப்பாம்பின் வாலைப் பிடித்துக் கொண்டு வலக்கையால் அபய முத்திரை காட்டிக்கொண்டுமிருப்பான்; இடக்காலைச் சிறிது வளைத்துப் பாம்பின் தலையில் ஊன்றி உறுதியாக வைத்தும், வலக்காலைச் சிறிது உயரே தூக்கிப் பாம்பினை உதைக்கப்போகும் நிலையிலும் இருப்பான்.

அவதார நோக்கத்தில் கொடியோரை அடக்குதலும் அடியாரைக்காத்தலும் காளியமர்த்தனக் கோலத்தில் அமைந்திருத்தலைக் காணலாம்.

''காளியமர்த்தனர் வடிவத்தைச் செப்புத் திருமேனியாகவும் சிற்பவடிவத்திலும் காணலாம். பல்லவர் காலம் முதல் பின்னர் வந்த நாயக்க மன்னர் காலம் வரை, கலைச் சிறப்பில் இத்திருவுருவம் ஒரு தனியிடத்தைப் பெற்று விளங்குவதைக் காண்கிறோம்.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலிலும், தருமராச ரதம் என அழைக்கப்படும் ஒற்றைக் கல் கோயிலிலும் காளியமர்த்தனரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. சோழ மன்னர்கள் காலத்திலேதான் காளியமர்த்தனரின் செப்புத் திருமேனி வடிவங்களை அதிக அளவில் காணலாம். இத்தகைய அழகான செப்புத் திருமேனி ஒன்று, புதுதில்லி தேசிய அருங்காட்சியகத்தில் உள்ளது. ஐந்து தலை அரவின் மீது நின்று கண்ணன் ஆடுகின்றார் ஐந்து தலைக்கு உள்ளே காளியன் மனித உருவில் இறைவனைக் கை கூப்பி வணங்கும் தோற்றத்துடன் காணப்படுகின்றது.''[1] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

29.11. பலராமாவதாரம்:

வசுதேவரின் பிறிதொரு மனைவியான உரோகிணிக்குப் பிறந்தவர்; கண்ணனுக்குத் தமையன் முறையில் அமைந்தவர். இவர் கண்ணனுடன் **சாந்தீபினி** முனிவரிடம் கல்வி பயின்றார். கம்சனால் மற்போருக்கு ஏவப்பெற்ற **முஷ்டிகனையும்** அவன் துணைவன் **கூடனையும்** வென்றார். கம்சனைக் கொன்ற கண்ணனுடன் போருக்கு வந்த அவன் தம்பியர் எண்மரையும் தம் கலப்பை ஆயுதத்தால் கொன்றவர். இவருக்கு வாய்த்த முதல் தேவி **இரேவதி;** இரண்டாம் தேவி **வாருணி.** இவரைத் **திருமாலின்** அம்சமாகவும், **ஆதிசேடன்** அம்சமாகவும், பரமபத நாதரது **வெண்ணிறமான** அம்சமாகவும் புராணங்கள் கூறும்.

ஒரே குண்டலத்தையுடையவரான பலராமருக்குப் **படைக்கருவி கலப்பையாகும்;** இவருக்கு அமைந்த கொடி **பனைக் கொடியாகும்;** இவருக்கு வாருணியாகிய யமுனை இரு நீலஆடைகளையும் ஒரு பொன்மாலையையும் அளித்தனள் என்றும், அவற்றையணிந்த நிலையில் **நீலாம்பரன்** எனப் பெயரடைந்தனன்[2] என்றும் கூறுவர்.

சங்கசூடனது சிரோரத்தினத்தின் பொருட்டுக் கண்ணனிடம் சினமுற்று, விதர்ப்ப தேசத்திலிருந்து மீண்டும் அதனைக் கண்ணனளிக்கப்பெற்றுக் கொண்டவர்.

---

1. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி, பக், 288-89
2. அபிதான சிந்தாமணி, பக் 1049

பாண்டவர்களும் கௌரவர்களும் தமக்குள் கொண்ட பகைமையை விடுத்துச் சமாதானமாக வாழவேண்டும் என்ற முயற்சியில் தோல்வி கண்டமையால், பாரதப்போரில் தாம் கலந்து கொள்ள மனமின்றித் தீர்த்த யாத்திரை செய்து நைமிசாரணியம் அடைந்தார். அதனருகே முனிவர்களுக்குத் துன்பமிழைத்துக் கொண்டிருந்த **வத்கலன்** என்ற அசுரனை அழித்தார்.

பாரதப் போர் முடிந்து முப்பத்தாறு ஆண்டுகள் கழித்துப் பலராமர் துவாரகையில் **பிரபாச தீர்த்தக்** கரையில் யோகத்தில் அமர்ந்து உயிர்துறந்தார் என்பர்[2].

இக்காலத்தில் பலராமன்கோயில் தமிழகத்தில் காணப்படாவிடினும், சங்க காலத்தில் இருந்தது. கலப்பை ஏந்திய கோலத்தில் தமிழகத்திலே **தசாவதார மண்டபங்கள்** பலவற்றில் அவனுடைய சிற்பத் திருவுருவங்களை இக்காலத்தில் கண்டு போற்றலாம்.

29.12. கல்கியவதாரம்:

திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகக் கருதப்பெறும் கல்கி அல்லது **கற்கியவதாரம்** இனி எடுத்தருளக்கூடிய அவதாரம் என்பர். கல்கியைப் பற்றிய விரிவான செய்திகளைக் **கல்கி புராணம்** கூறும்.

கலியுக முடிவில் சம்பளமென்னும் சிற்றூரில் **விஷ்ணு எச்சனுக்கும்** அவன் மனைவி **சுமதிக்கும் குதிரை முகத்துடன்** திருமால் **கல்கியென** அவதரித்து, அறத்தைக் காக்கவும் மறச் செயல்களை நீக்கவும் முனைகிறார் என்பர். இவருடன் பிறக்கும் சகோதரர்களாகக் **கலி, பிராக்கியவன். சுமந்திரர்** ஆகியோர் கருதப்படுகின்றனர். கல்கி **பரசுராமரிடத்தில்** நான்மறைகளையும் வில் வித்தையையும் கற்றுக் கொள்வதுடன், சிவபெருமானை நினைத்துத் தவம்புரிந்து **குதிரையையும்** எல்லாமறிந்த **கிளியையும்** வலிமைக்குரிய **வாளையும்** பெறுகின்றார். இவருக்கு மனைவியராகப் **பத்மாவதியும் சாமாவதியும்** அமைகின்றனர். பத்மாவதி

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஒன்று, பக். 861

வாயிலாக ஜயன் விஜயன் ஆகிய இரு புதல்வர்களைப் பெறுகிறார் என்றும், இருடியர்களைக் காக்கும் பொருட்டுக் **குதோதரி காஞ்சன்** ஆகியோரைக் கொல்கின்றார் என்றும் இவரது வரலாறு விரிவாகக் கூறப்படுகிறது.

பொதுவாக, அநீதியை நீக்கவும் அறத்தை நிலைநாட்டவும் தோன்றுகின்ற அவதாரமாகவே கல்கியவதாரம் அமையும் எனலாம். விஷ்ணு எச்சன் என்பதற்குப் பதிலாகக் கல்கியின் (திருமாலின்) தந்தையை **விட்டுணுயசசு**[1] என்றும் கூறுவர்.

''பகவானோ கலி புருஷனை எதிர்க்கக் குதிரைமேல் ஏறிக் கொள்வார்; கண்டோர் வியக்கும் வண்ணம் படைகளுக்குள்ளே புகுவார்; பகைவர்களின் தலைகளைத் தான் பிடித்துள்ள கத்தியால் கண்ட துண்டமாக வெட்டிப் போடுவார். பகைவர்கள் பிரயோகிக்கும் ஆயுதங்களைப் பாழாகச் செய்வார். எதிரிகளின் மாயையை இல்லாமல் செய்து விடுவார். கலிபுருஷனைப் பலவகையிலும் கதிகலங்கச் செய்வார். கலிபுருஷன் தன் வலிமை யடங்கப் பெறுவான். அவன் தலைமயிரைப் பற்றி அவன் கழுத்தின் மேல் கத்தியை எறிந்து வெட்டப் புகுவார். ஆனால், கலி புருஷனோ பகவானைப் பலவகையாகப் போற்றித் துதித்துத் தன்னை உயிரோடு விட்டுவிடும்படி வேண்டிக் கொள்வான் கல்கியும் அவனுக்குக் கருணை காட்டுவார்''[2] என்று கல்கி யவதாரத்தின் இயல்பு பற்றி **மாருதி தாசன்** குறிப்பிடுவது காண்க. திருக்கோயில்களில் திருமாலின் தசாவதாரங்களைப் பரிணாம முறையில் வரிசைப்படுத்திக் கற்சிற்பத்திலும் சுதைவேலைப் பாட்டிலும் காட்டியுள்ளனர். அவ்வரிசையில், கல்கியவதாரத்தைக் கலைஞர்களின் கற்பனைப்படைப்பில் கண்டு களிக்கலாம். திருமால் மேற்கொண்டவையாகக் கருதப்பெறும் **புத்தர், அயக்கிரீவர், கபிலர், வியாசர்** முதலிய அவதாரங்களை ஈண்டு விரிக்கிற் பெருகும்.

இது வரையில் **திருமாலின் அவதார நோக்கில்** அவரது தசாவதாரத்தைக் கண்டோம். இனி **அவரது அர்ச்சை நோக்கில்** சிறப்பான சில செய்திகளைக் காண்போம்.

1. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஒன்று, பக், 86|
2. திருமாலின் திரு அவதாரங்கள், பக். 175

29.13. திருமால் பெருமை - அர்ச்சை நோக்கில்:

பண்டைக்காலம் முதலே திருமால் வழிபாடு தமிழ்நாட்டில் இருந்து வந்துள்ளது. தொல்காப்பியத்தில், ''மாயோன் மேய காடுறை உலகமும்''[1] என்பது கொண்டு முல்லைத்திணைத் தெய்வமாக மக்களிடையே மாயவனாகிய திருமால் நன்கு அறிமுகமாயிருந்தமை புலனாகும். சங்க இலக்கியமாகிய எட்டுத்தொகையுள் ஒன்றாகிய பரிபாடலில் திருமால் பற்றிய பாடல்கள் திருமாலின் பெருமையை எடுத்துக்கூறும்.

அடியார்கள், தம்மைத் தத்தம் நிலைக்கேற்ப வழிபட்டு உய்யும்பொருட்டு அருள்மாயவனாகிய திருமால் ஐந்து நிலையில் பாத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை எனும் நிலையில் நின்று காட்சியருளுகிறாரெனினும், 'அர்ச்சை'யெனும் அர்ச்சாவதாரமே எளிய வழிபாட்டிற்குரிய சிறந்த வாய்ப்பினை நல்கும். தடாகத்துத் தெளிந்த நீர் போன்ற இந்த நிலைக்கே வைணவப் பெருமக்களிடையே ஏற்றமும் ஈடுபாடும் மிகுதி யென்பர்.

மும்மூர்த்திகளுள் திருமாலே காக்குங் கடவுளாகப் போற்றப் பெறுவதால் அவரது பெருமை சமயவுலகத்தில் மிகவும் பரவு தலைப் பெற்றுள்ளது.

சிவபெருமானுக்கு மூர்த்தி விசேடம் போலத் திருமாலுக்கு அவதார விசேடம் உண்டு. ஆனால், சிவபெருமானுக்கு அமைந்துள்ள திருவுருவங்களைப் பற்றிக் கூறும் நூல்கள் பலவாக இருத்தல் போலத் திருமாலுக்குள்ள திருவுருவங்களைப் பற்றிய நூல்கள் அவ்வளவு இல்லையெனலாம். எனினும், திருமால் திருவுருவங்களைப் பற்றிப் பழைய வைகானச ஆகம நூல்களில் சிறப்பாகவும், பாஞ்சராத்திர ஆகம நூல்களில் ஓரளவு குறிப்பாகவும் வடிவ விளக்கம் கூறப்பட்டுள்ளது என்பர். ''தென்னிந்தியத் திருமால் வடிவங்கள் பெரும்பாலும் ஆகமநூல் வழியில் அமைந்தவைகளேயாகும். ஆகம முறைப்படிக்குத் திருமால், ஆலயங்களில் நின்ற இருந்த கிடந்த திருக்கோலங்களில் அமைய வேண்டும். இவைகள் யோகம் போகம் வீரம் அபிசாரிகம் என நான்கு விதமாக

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், 5

அமையலாம். யோகிகள் **யோக மூர்த்திகளையும்**, குடும்பத்தில் உள்ளவர்கள் **போக மூர்த்திகளையும்**, வீரர்கள் **வீரமூர்த்திகளையும்**, பகைவர்களுக்குத் துன்பம் இழைக்க விரும்புகிறவர்கள் **அபிசாரிக மூர்த்தியையும்** வணங்குவார்கள். ஆக, இவை மொத்தம் பன்னிரண்டு பிரிவுகள் கொண்டவை. மேலும், இப்பன்னிரண்டு மூர்த்திகள், உபமூர்த்திகளுடன் முதல் இடை கடை என்று மூன்று பிரிவுகளாக **முப்பத்தாறு மூர்த்தங்களாக** அமையும். இன்று பழக்கத்தில் திருமால் வடிவங்கள் போகமூர்த்திகளாகவோ அல்லது யோக போக மூர்த்திகளாகவோ தான் காணப்படு கின்றன; வீரமூர்த்திகள் அருமை. **அபிசார மூர்த்தங்கள் இன்று இல்லவே இல்லை** எனலாம். இதனை வேண்டும் பொழுது அமைத்து அழித்து விடுவதும் உண்டு'' என்று கூறுவார் தஞ்சை **என். எஸ். தாத்தாச்சாரியார்**. இதனால், வைணவத் தமிழ்ப் பெருமக்கள் எவ்வாறு பண்பாட்டு அடிப்படையில் - உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற நோக்கில் - தம் கடவுள் திருவுருவங்களை அமைப்பதில் நாட்டங் காட்டியுள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஓவியங்களிலும், சிற்பங்களிலும் சிவபெருமான் திருவுருவங் களையும் திருமால் திருவுருவங்களையும் அமைக்கும்போது ஒப்பீட்டு நோக்கில் சில செய்திகளைக் காண்டல் இயலும். சிவ பெருமான் திருவுருவங்கள் பெரும்பாலும் **நின்ற** கோலத்திலும், **இருந்த** (அமர்ந்த) கோலத்திலுமே அமைந்துள்ளன; தமிழ் நாட்டில் ஓரிரு இடங்களில் சிவனது கிடந்த கோலமும் காணப் படுகின்றது என்பர். ஆனால், திருமால் திருவுருவங்கள் **நின்ற** கோலத்திலும் **இருந்த** கோலத்திலும் **கிடந்த** கோலத்திலுமாகப் பல கிடைக்கின்றன. சிவனளவில் அரிதான கிடந்த கோலம், திருமாலளவில் பெருவழக்காக இருத்தலைக் காணலாம். திரு வரங்கத்திலுள்ள திருமாலுக்குப் பள்ளி கொண்ட பெருமான் என்றே திருப்பெயர் உண்டு என்பதை ஈண்டு இயைபுடன் சிந்திக் கலாம்.

பண்டைத் தமிழகத்தில் **திருவரங்கத்திலே** எழுந்தருளியுள்ள அரங்கப் பெருமானின் **கிடந்த** வண்ணத்தையும், **திருவேங் கடத்திலே** எழுந்தருளியுள்ள நெடியோனின் **நின்ற** வண்ணத்தை

யும் கண்டு போற்றுவது வைணவப் பெரும்பேறாகக் கொண்டிருந்தனர்; இதற்குச் சான்றாகச் **சிலப்பதிகாரத்தில்,**

"நீல மேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெரு துருத்தித்
திருவமர் மார்பன் **கிடந்த வண்ணமும்**
வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் **நின்ற வண்ணமும்**"[1]

எனவரும் அடிகளால் வைணவத்திற்கே சிறப்பாகவுரிய இறைவனது **'சௌந்தர்யம்' தொடர்பான அழகு ஆராதனையையும்** கண்டு போற்றலாம்.

திருமாலின் நின்ற கோலத் திருவுருவங்களும் இருந்த கோலத்திருவுருவங்களும் திவ்ய தேசங்கள் பலவற்றில் காணக் கிடைக்கின்றன. அவற்றுள் சிலவற்றின் பெருஞ்சிறப்பினைக் காண்போம். **காஞ்சிபுரம்** பல்லாற்றானும் திருமாலின் திருவடிவங்களுக்குப் புகழ்பெற்ற திவ்யதேசம். அங்கே அருள்மிகு வரதராசப் பெருமாள் (அத்தியூரான்) கோவிலில் உள்ள **வரதராசப் பெருமாள் சிலை** சௌந்தரியத்துடன் கூடிய **நின்ற திருக்கோலமுடையது.**

1. காடு காண் காதை 35-51.

கசேந்திரன் என்னும் யானையே கலைவடிவாக அமைந்து நிற்க, அதன்மீது எழுந்தருளியுள்ள வரதராசப் பெருமாளைப் **பூதத்தாழ்வார்**, ''அத்தியூ ரான்புள்ளையூர்வான் அணிமணியின் நாகத்தின் மேற்றுயில்வான்''[1] எனப்பாடிச் சென்றுள்ளார். கட்டடக் கலைத்திறனும் சிற்பக் கலைத்திறனும் நிரம்பிய இத்திருக்கோயிலில் **நின்ற கோலத்திலமைந்த சுவாமி** அருளாளப் பெருமான், பேரருளாளர், சுவாமி தேவராஜர், தேவாதிராஜர், பிரணதார்த்திஹரர் என்ற திருப்பெயர்களுடனும் அழைக்கப் படுகிறார். தாயாரின் பெயர் **பெருந்தவத் தாயார்.**

பிரமதேவன் இங்குப் பெருவேள்வி புரிந்து இங்குள்ள இறைத் திருவருளால் படைப்பாற்றலைப் பெற்றதாகப் புராணச் செய்தி உள்ளது.

29.14. திருமாலின் சயனக் கோலம் — விளக்கமும் வகைகளும்:

'பள்ளிகொண்ட பெருமாள்' என்று பத்தியார்வமுடன் அடியவர்களால் அழைக்கப்பெறும் திருமாலின் கிடந்த கோலம்-சயனக்கோலம் - ஏழு வகைப்படும். வைணவ மரபுப்படி அமைந்த அந்தத் தெய்வநலத் திருக்கோலங்கள் வாயிலாகச் சிற்பியரின் கைவண்ணக் கலைப்படைப்பினை உணர்ந்து போற்றலாம். சயனக் கோலங்கள் வருமாறு;

1. **'கோயில்'** என்றதும் வைணவர்கள் நினைவிற் கொள்கின்ற பெருஞ்சிறப்பினைக் கொண்ட பூலோக வைகுண்டமாகிய **திருவரங்கத்தில்** பள்ளி கொண்டிருக்கும் சயனநிலையை **வீரசயனம்** என்பர். தென்னிலங்கைக் கோமானாகிய இராவணனைச் செற்றுத் தெற்குநோக்கிப் பள்ளி கொண்டிருப்பது இங்குத் திருமாலின் சிறப்பாகும்.

2. **மாமல்லபுரத்தில்** திருமால் கீழே தரையில் படுத்துக் கொண்டிருக்குந் திருவுருவக் காட்சியினைக் கண்டு மகிழலாம். அத்தகு காட்சியினைக் **கடல்மல்லைத் தல சயனம்** என வைணவச் சான்றோர் கூறுவர்.

1. இயற்பா, இரண்டாந் திருவந்தாதி, 96.

3. **ஸ்ரீ வில்லிபுத்தூர், திருமயம், திருக்கோட்டியூர் முதலிய** பல திவ்யதேசங்களில் பாம்பணையில் பள்ளிகொண்டிருக்கும் திருக்காட்சியினைக் கண்டு போற்றுவர். அந்நிலையில் நாபிக் கமலத்தில் **நான்முகன்** வீற்றிருக்கவும், திருமாலின் திருவடிகளைத் **திருமகளும் பூமகளும்** வருடிக்கொண்டு அமர்ந்திருக்கவுமான திருக் காட்சியைக் காணலாம். அருகில் **பிருகு, மார்க்கண்டேய இருடி,** மற்றும் **வடவாலமரம்** இருக்கும். இத்தகைய திருக்காட்சியினைப் **போக சயனம்** என்பர்.

4. மயிலாடுதுறைக்கருகில் **சிறுபுலியூரில்** குழந்தை வடிவத் திலே பரந்தாமன் பள்ளிகொண்டிருக்குந் திருக்கோலக் காட்சி யினைக் காணலாம்; அதற்குப் **பாலசயனம்** என்பது பெயராகும்

5. **திருக்குடந்தையில்** திருமால் முழுமையாகப் படுத்து மில்லாமல், அமர்ந்துமில்லாமல் ஒருவகைச் சயனக்கோலத்தில் இருப்பதைக் காணலாம். அதற்கு **உத்தானசயனம்** எனப்பெய ராகும்.

6. **திருமோகூரில்** திருமால் மூலவராக நின்றும் கிடந்தும் திருக்காட்சியளிக்கிறார். எனினும், பெருமாள் மட்டும் பாம் பணையில் பள்ளிகொண்டிருக்கவும், திருமகள் பூமகள் ஆகிய தேவியர் இருவரும் பெருமாளின் திருவடிகளுக்கருகே பிரார்த் திப்பதுபோலக் கைகளை வைத்துக் கொண்டிருக்கவுமான திருக் காட்சியினையும் தனியே காணலாம். இதனைப் **பிரார்த்தனை சயனம்** என்றும், இந்தக் காட்சியினைப் போல் வேறெங்கும் காணமுடியாது என்றும் கூறுவர். இங்கு மூலவர் நின்றும் கிடந் தும் காட்சிதரும் சிறப்பு உண்டு என்பது மனங்கொள்ளத்தக்கது.

(திருப்பாற் கடலைக் கடைந்த காலத்தில் எழுந்த அமிர் தத்தை அரக்கர்கள் பங்கு பெறாமலிருக்கவும், தேவர்கள் துய்த் திடவும் திட்டமிட்ட திருமால் **மோகினியவதாரம்** எடுத்தார் என்பர். அவ்வாறு மோகினியவதாரம் எடுத்தது **மோகனூராகிய** இத்திருத்தலத்திலே என்பதால், புராணக் கூற்றிற்கேற்ப இத் தலம் **'மோகனபுரம்'** என்றும், **'மோக க்ஷேத்திரம்'** என்றும் வழங்கலாயிற்று.)

7. தமிழ்நாட்டிலேயன்றி, இக்காலக் கேரள நாட்டிலே விளங்கும் **திருவனந்தபுரத்தில்** மூன்று வாசல்களுடன் அனந்த பதுமநாபனாகப் பள்ளி கொண்டிருக்கிறார் திருமால். இந்தச் சயனத் திருக்கோலத்தினை **அனந்தசயனம்** என மரபாக ஆர்வ முடன் கூறுவர்.

29.15. பல வகையான திருமால் திருவடிவங்கள்:

சங்க காலத்தில் திருமாலுருவங்கள் **பற்றிய** செய்திகள் கிடைப்பினும், அவ்வுருவங்கள் நாம் காணுமாறு கிடைக்கவில்லை தமிழகத்தில் **இன்றுள்ள திருமாலுருவங்கள்** பெரும்பாலும் **பல்லவர் காலத்திற்கு** (கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு)ப் **பிற்பட்டவையே** யெனலாம். ''**பிருகத் சம்மிதை** என்ற பழைய வடமொழி நூலில் (கி.பி. 400) உருவ இலக்கணங்கள் ஐந்து செய்யுள்களிலே கூறப் பட்டுள்ளன. அவையாவன; திருமாலின் திருமேனியில் கைகள் எட்டு அல்லது நான்கு அல்லது இரண்டு இருக்கலாம். எட்டுக் கைகளானால். வலக்கைகளில் கத்தி கதை அம்பும் இடக் கைகளில் வில் கேடயம் சங்கு சக்கரமும், ஒரு வலக்கை அபய முத்திரையுடனும் இருக்கும். நான்கு கைகளானால், வலக்கை அபயமுத்திரையுடனும் இடக்கை சங்கேந்தியும் இருக்கும். இந்த வடிவங்கள் மார்பில் **ஸ்ரீவத்சம்** என்ற மருவுடனும், **கௌஸ்துபம்** என்ற ஆபரணத்துடனும், காதுகளில் கடுக்கன்களும், தலைமேல் முடியும் (கிரீடம்) துலங்க இருக்க வேண்டும். திருமுக மண்டலம் கம்பீரமாகவும், புன்சிரிப்புடனும் இருக்கவேண்டும் என்பதே யாகும்''[1] எனவருங் குறிப்பு மிகவும் சிந்தித்துப் போற்றற்குரியது.

தொன்மையான திருமால் சிற்பங்களில் திருமகளும் பூமகளு மாகிய இரு பிராட்டியரும் மருங்கே இருப்பதில்லை. பிற்காலச் சிற்பக்கலை வளர்ச்சி காரணமாகப் பிராட்டியர்களுடன் கூடிய திருமாலுருவங்கள் அமைக்கப்பட்டன எனலாம்.

விஷ்ணுதர்மோத்திரம் என்ற ஆகம நூலிற்கிணங்கத் **திருமால் கருடன் மேல் நான்கு முகங்களுடனும் எட்டுத் திருக்கைகளுடனும்** வீற்றிருக்கும் திருக்கோலத்தில் அமையலாம் என்பது தெரிகிறது

1. திருக்கோயில், மார்ச்சு, 1972.

அப்படி அமைகையில் கிழக்கு முகம் **சாந்தமுள்ளதாகவும்,** தெற்கு முகம் **நரசிங்கமுகமாகவும்.** மேற்கு, அஃதாவது பின் பக்க முகம் **கபிலர்முகமாகவும்,** வடக்கு முகம் **வராக முகமாகவும்** காணப்படுகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் **நெடியோன்** எனத் திருமால் அழைக்கப் பெறுவதால் நின்ற திருக்கோலங்கள் மிகுதியாக உள்ளன என நினைக்கத் தோன்றலாம் ஆனால், சயனத் திருக்கோலங்களே மிகுதியாகவும், அதற்கடுத்தநிலையில் நின்ற திருக்கோலங்களும். அதற்கடுத்த நிலையில் அமர்ந்த திருக்கோலங்களும் அடியவர்களால் வழிபடப்படுகின்றன.

29.16. திருவரங்கப்பெருமாள் - திருவுருவச்சிறப்பு

திருமாலடியவர்கள் நலந்தரும் சொல்லாகிய எட்டெழுத்து-**ஓம் நமோ நாராயணாய**-மந்திரத்தை உயிர்நாடியாகக் கருதுவர். நாரயணன் என்னும் திருநாமத்திற்கு வைணவப் பெரியவர்கள் பலவகைப் பொருள்களைக் கூறி மகிழ்வர். நாராயணனது ஆறு திருக்குணங்களைப் புரிந்து கொள்ளும் வகையில், ''புருஷகார பலத்தாலே சுவாதந்திரியம் தலை சாய்ந்தால், தலையெடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது **நாராயணபதம்**. அவையாவன **வாத்சல்யமும், சுவாமித்துவமும், சௌசீல்யமும், சௌலப்பியமும், ஞானமும். சக்தியும்** என்பன''[1] என்று தாம் அருளிய முமுட்சுப்படி எனும் நூலில் **பிள்ளை லோகாசாரியர்** எழுதிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கது.

அ) வாத்சல்யம்:

தன் கன்றினிடத்திலே பசு கொண்டிருக்கும் பரிவே வாத்சல்யமாகும். தன் கன்றின் மீதிருக்கும் அழுக்காகிய வழும்பினையும் நாக்கால் நக்கி விரும்பியுண்ணும்; தன் பாலை உண்ணக்கொடுத்துக் கன்றை வளர்க்கும். அக்கன்றுக்கு ஊறு செய்பவர்களைத் தன் கொம்பாலும், குளம்பாலும் எதிர்த்துத் தன் கன்றுக்கு யாதொரு ஊறும் நேராதபடி பாதுகாக்கும். அதுபோல இறைவனும் அடியவர்களின் குற்றங்களை, ''என்னடியார் அது செய்

1. திருக்கோயில், அக்டோபர், 1971.

யார், செய்தாரேல் நன்று செய்தார்'' என்று விரும்பி ஏற்று மகிழ்வான். அவர்களுக்குத் தீங்கு ஏதும் நேராமல் அவர்களைப் பெருங்கருணையுடன் கண்ணெனப் பாதுகாத்தருள்வான். இறைவனின் இவ்வியல்பே **வாத்சல்யம்** ஆகும்.

ஆ) சுவாமித்துவம்:

உடைமையை உடையவனாய்க் கொண்டிருக்கும் இருப்பு சுவாமித்துவம் ஆகும். சேதனன் (அறிவுடையவன்) ஆகிய உயிர், தன்னைப் புறக்கணித்து இருப்பினும், அவனைக் கைவிட மனம் வாராமல் எவ்வாறேனும் ஆட்கொண்டு காத்தருளுதற்கே விரும்பி நிற்பது; ஓரளவு எதிரான சூழல் புக்குத் திரிவதற்கு உரியபடி உயிர்கள் இருப்பினும் கருணையால் (அருளால்) அவற்றுக்கும் இறைவனுக்குமுள்ள உறவுமுறையே **சுவாமித்துவம்** ஆகும்.

இ) சௌசீல்யம்:

உயர்வற உயர்ந்தவனாய் ஒப்பிலியப்பனாகத் தான் இருப்பினும், எத்துணை இழிந்தவரோடும் யாதொரு வேறுபாடுமின்றி ஒருங்கே மேல் விழுந்து புரையறக் கலந்து பழகித் தண்ணளி புரியும் பண்பே **சௌசீல்யம்** ஆகும்.

ஈ) சௌலப்பியம்

எத்துணையும் உயர்ந்த இறைவன் எத்துணையும் எளிவந்து யாவரும் எளிதாகத் தன்னைப்பற்றிக் கொள்ளும்படி தன் திருவடிவைக் கண்ணுக்கு இலக்காக்கியருளும் சுலபத்தன்மையே **சௌலப்பியம்** ஆகும்.

உ) ஞானம்:

உயிர்கள் கீழ்நின்ற நிலையையும், அவற்றை மேல் உய்த்துக் காத்தற்குரிய வழிவகைகளையும் அறிந்திருக்கும் தன்மையே **ஞானம்** ஆகும்.

ஊ) சக்தி:

அங்ஙனம் தான் அறிந்தவாறு சேதனர்களின் குற்றங்களையும், இழிவுகளையும் போக்கி, அவற்றிற்குத் தன்னைத் தந்து நலம் புரிதற்குரிய பேராற்றலே **சக்தி**யாகும்.

29.16 1. திருவரங்கப் பெருமானிடம் காணலாகும் ஆறு தெய்வநலப் பண்புகள்:

திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள நம் பெருமாள் திருவுருவத்திலே வாத்சல்யம் முதலிய ஆறு பண்புகளும் பொருந்தியுள்ளன. எவ்வாறெனின், "பெருமாள் தம் திருக்கைகளிலே முறையே தரித்துக்கொண்டுள்ள **திருவாழி, திருச்சங்கு** என்னும் திவ்விய ஆயுதங்கள் அவர்தம் **ஞானம், சக்தி** என்னும் பண்புகளை உணர்த்துகின்றன. அடியார்களை நோக்கி அஞ்சேல் என்று அருளிச்செய்யும் நிலையிலுள்ள **அபயஅஸ்தம்** என்னும் திருக்கை, அவரது **வாத்சல்யம்** என்னும் பண்பைக் குறிக்கும். அவரது **திருமுடி**, அனைத்திற்கும் அனைவருக்கும் தலைமை நிலையில் விளங்கும் அவர்தம் **சுவாமித்துவத்தைப்** புலப்படுத்தும். அவர்தம் **திருமுகமும் புன்முறுவலும்** அவர்தம் **சௌசீல்யத் தன்மையைச்** சுட்டும். ஒளிமிக்க அழகிய தாமரை மலர்ப்பீடத்தில், அவர்தம் திருவடிகளை ஊன்றி நிற்கும்நிலை, அவருடைய எளிமை என்னும் **சௌலப்பியத் தன்மையைச்** சாலவும் விளக்கும்"[1] என்று வைணவ மரபு அடிப்படையில் நேர்த்தியாக எழுதிச் செல்கிறார் **ந, ரா. முருகவேள்.**

இங்ஙனம் நாராயணனின் ஆறு திருக்குணங்களும் ஒருங்கே அழகுறத் **திருவரங்கனிடம்** பொருந்தியுள்ளமை நினைந்து நினைந்து இன்புறத்தக்கதாகும். இவ்வாறு கடவுள் திருவுருவங்களில் **சௌந்தர்யங்** கண்டு, அழகு **ஆராதனை** புரிவது தமிழ்ப் பண்பாட்டுடன் இயைந்து புலப்படும் சமயப் பண்பாட்டு நெறியாகும்.

30. சைவ வைணவச் சமயங்களிடையே ஒற்றுமைக் கூறுகள்:

இந்துமதப் புராணங்களிடையே சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் நெருங்கிய தொடர்பிருத்தலை முன்னரே கண்டோம் சிறப்பாக இவ்விரு தெய்வங்களுக்கிடையே மைத்துன உறவே உண்டென்பது கருதத்தக்கது. சமயங்களிடையே ஒற்றுமையுணர்வு வலுப்பெறுவதால் மக்களிடையே ஆன்மவுணர்வும்

1. திருக்கோயில், அக்டோபர், 1971

தெய்வ நம்பிக்கையும் வளரும், அதனால் நாத்திகக் காழ்ப் புணர்ச்சி உலகில் படிப்படியே குறையும். இதனை நன்குணர்ந்த நம் முன்னோர்கள் சமயங்களை வளர்க்கும் கவின் கலைகள் வாயிலாகச் சமயவொற்றுமைக்கு வழிகோலினர். இதனைச் சிற்பக்கலைப் படைப்புக்கள் வாயிலாகச் சிறிது காணலாம்.

1. சிவனுக்கும் திருமாலுக்குமுள்ள ஒற்றுமையையுணர்த்தும் வகையில் காஞ்சிபுரம் - வேலூர்ப் பெருஞ் சாலையிலுள்ள **திரு பாற்கடலில்** ஒரு கலைப் படைப்பு உள்ளது. திருப்பாற்கடல் திருத்தலத்தில் சிவலிங்கத்துக்கான ஆவுடையாரின் மேல் இலிங் கத்தின் தானத்திலே திருமால் நின்று கொண்டிருத்தலைக் காண லாம். ''இலிங்கம் இருக்குமிடத்தில் மகாவிஷ்ணுவா?'' என யாரும் கண்டு வியந்து போற்றும்வண்ணம் சிற்பியின் கற்பனை இங்குத் திருவடிவங் கொண்டுள்ளது.

2. சிவனும் திருமாலும் - சங்கரநாராயணர் - திருக்கோலத் தில் அமைந்திருப்பதைச் **சங்கரநயினார் கோயில்** போன்ற சில தலங்களில் காணலாம். இவ்வாறு சிற்பங்களை அமைத்ததன் நோக்கம் உலகில், சைவ - வைணவச் சமயங்களில் நிலவ வேண் டிய ஒற்றுமையேயாகும். இக்கொள்கைக்கு அரண் செய்யும் பாங்கில் அருளாளர்கள் பெருமுயற்சி மேற் கொண்டுள்ளனர். **அப்பரடிகள்,**

''தேசனைத் தேசமாகுந்
திருமாலோர் பங்கன் தன்னைப்
பூசனைப் புனிதன் தன்னைப்
புணரும் புண்டரீகத் தானே''[1]

என்றும்,

''சீரேறு திருமாலோர் பாகத் தான்காண்
திருவா ரூரான் காண்என் சிந்தை யானே''[2]

என்றும் பல இடங்களில் இக் குறிப்புடன் பாடிச் செல்லுதலைக் காணலாம்.

1. திருமுறை, 4. 33, 9
2. திருமுறை 6, 24, 5

30.1. அர்த்தநாரி நாராயணர்:

'**அர்த்தநாரி**' என்றவுடன் 'சிவனும் உமையும் ஒன்றிய திருவுருவம்' (வலப்பக்கம் சிவனும் இடப்பக்கம் உமையும் ஒன்றிய ஒரே உருவம்) யாருக்கும் நினைவிற்கு வரும். ஆனால், சமயவுலகில் காணலாகும் எத்தனையோ விந்தைகளுள் ஒன்றாக "**அர்த்தநாரி நாராயணர்**" திருவுருவம் உள்ளது.

கயாவில் உள்ள **ஸ்ரீதலா** ஆலயக் கல்வெட்டில் (EP. Ind-vol. XXXVI PP92) ஒருகுறிப்பு உள்ளது. '**கமலார் தாங்கின நாராயணர்** (கி.பி.12ஆம் நூ.) எனக் குறிக்கப்படுகிறது. இது பற்றிய புராணக் குறிப்பு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை; எனினும், மேற்படி கோயில் கல்வெட்டிலே அர்த்தநாரி நாராயணனுக்குக் கோயில் இருந்ததைப் பற்றிய குறிப்பு உள்ளது.

நேபாளத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட **ஓர் அர்த்தநாரி நாராயணர்**- செப்புத்திருமேனி (கி பி.13ஆம் நூ.) **சுவிட்சர்லாந்தில் பாசல் அருங்காட்சியகத்தில்** உள்ளது; வலப்புறம் பெண்ணாகவும் இடப்புறம் ஆணாகவும் உருவகிக்கப்பட்டு **எட்டுத்திருக்கைகளுடன்** விளங்குகிறது. தாமரைப்பீடத்தில் நேராக நிற்கும் நிலையில், வலக்காதில் குண்டலமும் இடக்காதில் வலையமும் இருத்தலைக் காணலாம். வலப்புறமுள்ள நான்கு கைகளில் **சக்கரம், சங்கு, தாமரை** உள்ளன. இடப்புறமுள்ள கைகளில் ஒன்று உடைந்துள்ளது; ஏனையவற்றில் சுவடி **கண்ணாடி கலசம்** உள்ளன.[1] இஃது ஒருபுறமிருக்கத், தமிழ்நாட்டிலும் அர்த்தநாரி இயல்புடைய '**இராசகோபாலசுவாமி**' உள்ள தென்பதையும் நினைவிற் கொள்ளலாம்.

மன்னார்குடி **இராசகோபாலசுவாமி** மிகவும் எழில் வாய்ந்த -சக்தி வாய்ந்த மூர்த்தி; இந்த விக்கிரகத்தில் **பாதி பெண். பாதி ஆண்** இலக்கணங்கள் அமைந்துள்ளன. **ஸ்ரீவித்யா ராசகோபால மந்திரம்** உள்ளதை வைணவர்கள் போற்றிநிற்பர். அந்த மந்திரமூர்த்தியே இராசகோபாலனாக அருள்பாலித்து வருகிறார்.

1 தொல்பொருளியல்அறிஞர் இராசேந்திரனிடம் நேரில் பெற்ற செய்தி.

302. திருமாலின் அங்கங்களும் நம்மாழ்வாரின் அங்கங்களும் - ஒப்பியல் நோக்கு:

மக்களின் உய்திக்காகவே பல அவதாரங்கள் எடுத்தருளும் திருவுள்ளங் கொண்டவர் திருமால். சங்கு, சக்கரம், வாள், கதை, வில் ஆகிய ஐந்து படைக்கலங்களைக் கொண்டவர் என்றும், திருமகள் பூமகள் ஆகிய தேவியருடனும் உந்திக்கமலத்தில் நான் முகனுடனும், ஆதிசேடனாகிய நாகத்து அணையில் பள்ளிகொண் டருள்பவர் என்றும் போற்றப்படும் **காத்தற்கடவுள்** அவர். அவர் தம் இச்சையால் எடுத்த அவதாரங்கள் சிலவற்றில் **திருப்பேருருவம்** (விசுவரூபம்) காட்டியருளிய நிலையில் அனைத்து அண்டங்களிலும் உள்ள எல்லாப்பொருள்களும் அவருடைய அங்கங்கள் ஆயின. காலமும் இடமும் கடந்த காரணப்பொருளாகிய அவர் நிலை அது. காலமும் இடமும்ஓரளவு வரையறைப்படுத்திய மானுடனாக அவதரித்த **நம்மாழ்வார்க்குப்** பிற **ஆழ்வார்களெல்லாம்** அங்கங்களா யினர்; இஃது இவ்வாழ்வார் நிலை, இவ்வாறு போற்றுவது வைணவ மரபாகும்.

''**நம்மாழ்வார்** ஆழ்வார்களின் தலைவராக விளங்குகிறார். நம்மாழ்வார் அவயவியாகவும், மற்றைய ஆழ்வார்கள் அவயவங் களாகவும் நம் முன்னோர்கள் கருதி வருகின்றார்கள். இவருக்குப் **பூதத்தாழ்வார்** திருமுடியாகவும், **பொய்கையாழ்வாரும் பேயாழ்வா ரும்** கண்களாகவும், **பெரியாழ்வார்** திருமுகமாகவும், **திருமழிசை யாழ்வார்** கண்டமாகவும், **குலசேகரஆழ்வார், திருப்பாணாழ்வார்** இவர்கள் திருக்கைகளாகவும், **தொண்டரடிப்பொடியாழ்வார்** திரு மார்பாகவும், **திருமங்கையாழ்வார்** கொப்பூழாகவும், **மதுரகவியாழ் வாரும் எம்பெருமானாரும்** (இராமாநுசர்) திருவடிகளாகவும் அமைந்துள்ளதாக ஆன்றோர்கள் கூறுவர்''[1] என **ஆர். சுப்பாராவ்** எழுதிச் செல்வது காண்க.

திருமாலின் கலியாண குணங்களில் ஆழ்பவர்களாகிய ஆழ் வார்கள், தம் கைங்கரியத்தால் திருமாலின் நேரடிச் சேவகர்களா யினர். திருமாலின் படைக்கலங்களோடு உருவகப்படுத்தி ஆழ்வார் களைக் கூறும் மரபும் வைணவத்தில் உண்டு, திருமாலின் வலத்

1. ஸப்தகிரி (திங்களிதழ்), நவம்பர், 1992.

திருக்கையில் ஏந்தியுள்ள **சுதர்சனம்** எனுந் **திருவாழியை** (சக்கரத்தை) ஓர் ஆழ்வாராகவே கருதிச் **சக்கரத்தாழ்வார்** என்றே வைணவர்கள் போற்றி மகிழ்வர். இதனால், **ஆழ்வார்** என்பதன் பெருஞ் சிறப்பினை உய்த்து உணரலாம். மேலும் ஒரு குறிப்பினைக் காண்போம்.

திருமாலின் ஓர் உறுப்பினைப்போலவே நம்மாழ்வாரைக் கருதுவர். இந்த மரபினைத் திருமால் கோயில்களில் பின்பற்றும் நடைமுறையால் காணலாம், திருமாலின் திருவடிகளுக்கு அளப்பரிய ஆற்றலும் பெருமையும் உண்டு. அவற்றைத் தம் முடிமீது வைத்துக் கொள்வதைப் பெரும் பேறாகவே கொள்வது திருமாலடியவர்களின் நடைமுறையாகும். இந்த நடைமுறையினைச் சடாரி (சடகோபர் அமிசம்) சார்த்திக் கொள்வது வாயிலாகத்-திருமாலின் திருவடிகளும் நம்மாழ்வார் அமிசமும் ஒன்றெனக் கொள்வது வாயிலாகப்-புரிந்துகொள்ளலாம்.

30 3. மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியே:

ஒரே பரம்பொருளின் பல்வேறு தெய்வநலத் தோற்றங்களே **சிவன், திருமால், சக்தி, கணபதி, முருகன், சூரியன், பிரமன்** என்றெல்லாம் சமயஞானியர் கூறி வந்துள்ளனர். இவ்வுண்மையை மக்களுக்கு உணர்த்தப் பல்வேறு உத்திகளை ஆர்வமுடன் அருட் சான்றோர்கள் கையாண்டுள்ளனர்.

சிவனும் சக்தியும் ஒன்றே என்பதை **அர்த்தநாரீசுவரர்** திருவுருவம் உணர்த்தும். சிவனும் திருமாலும் ஒன்றே என்பதைச், **'சங்கர நாராயணர்'** திருவுருவம் உணர்த்தும். ஓங்காரமாகிய பிரணவ வடிவமே கணபதிக்கும் முருகனுக்கும் சார்த்திக் கூறுவது கொண்டு, கணபதியும் முருகனும் சிவனின் வேறல்லர் என்பது தெளிவாகும். சூரியன், சிவ சூரியன் என்ற வழக்கினைக் கொண்டு சூரியனும் சிவனின் வேறல்லன் என்பது புரியலாகும். படைப்புத் தெய்வமாகிய பிரமனும் சிவனோடு இயைந்த திருவுருவமேயாகும். சிவனே பிரமனாகிப் படைத்தும், திருமாலாகிக் காத்தும், உருத்திரனாகி அழித்தும் வருபவன் என்பதும் ஈண்டு இயையுடன் சிந்திக்கத் தகும். மேலும், பிரமனே திருமாலின் உந்திக் கமலத்தவனாகப்

போற்றப் பெறுதலினால் அவன் திருமாலின் அங்கமாகவே வழிபடத்தக்கவன் என்பது புலப்படும்.

சுசீந்திரத்தில் **தாணுவாகிய** சிவனும், **மாலாகிய** விட்டுணுவும், **அயனாகிய** பிரமனும் இணைந்து தாணுமாலயனாக விளங்குதலைப் பலரும் அறிவர். இதனால் மும்மூர்த்தி வழிபாடு, ஒரே இடத்தில் நடைபெறுகின்றது.

ஆந்திரா நாட்டில் மும்மூர்த்திகளின் தலைகளையும் இணைத்து அமைத்த திரிமூர்த்தி உருவச்சிற்பம் உண்டு.

தமிழ் நாட்டில் பண்டு தொட்டே மும்மூர்த்திகளுக்காகச் சிலையமைத்து மன்னர்கள் போற்றி வந்துள்ளனர். முதன் முதலில் **மண்டகப்பட்டில்** பல்லவன் மகேந்திரவர்மன், குடைவரைக் கோயிலிலே மும்மூர்த்திகளாகச் செதுக்கச் செய்துள்ளான். இது, பிரமீசுவர **விஷ்ணு** லக்ஷித **குடைவரைக் கோயில்** என்று அழைக்கப்பெறுகிறது. பிறகு, மாமல்லபுரத்தில் **திரிமூர்த்தி குடைவரைக் கோயில்** அமைக்கப்பட்டது.

திருக்கழுக்குன்றம் எனுந் திருத்தலத்தில் வாழைப்பூக்குருத் தினைப்போல் சிவபிரான், சுயம்புமூர்த்தியாக எழுந்தருளி யுள்ளார். சிவலிங்கத்திற்குக் கவசம் அணிவித்துள்ளனர். கரு வறையில் **திருமால், நான்முகன்** முதலானோர் திருவுருவங்கள் இருத்தலைக் காணலாம். சமய பொருமைப்பாட்டு அடிப்படை யில் இது நினைவில் கொள்ளத்தகும் அரும்பெருஞ் சிறப்புமிகு அமைப்பாகும்.

பொதுவாகக் கும்பகோணம் முதலிய மிகச் சில இடங்களைத் தவிரப் **பிரமனுக்குத்** தனியே கோயில் அமைவது வழக்கத்தில் இல்லை. ஆனால். பிரமனைத் தனியே மரத்தடியில் வைத்து வழிபடும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

"கொங்கு நாட்டில் **பொள்ளாச்சி வட்டத்தில்** ஒரு சில கோயில்களில் **சிவன் திருமால்** மற்றும் **பிரமன்** ஆகிய மூவரும் ஒன்றாக ஒரே வரிசையில் மூவர்களாக வைக்கப்பட்டு வணங்கப் படுகின்றனர்.

இந்தக் கோயில்கள் **சமணலிங்கேசுவரர் கோயில், அமணிசுவரர் கோயில் அம்மணிஈசுவரர் கோயில்** என்றெல்லாம் பலவாறாக அழைக்கப்பெற்று வருகின்றன.

இந்தக் கோயில்களுக்கெல்லாம் மூலக்கோயில் உடுமலை வட்டத்தைச் சார்ந்த **திருமூர்த்தி மலையில்** உள்ள **அமணலிங்கேசுவரர் கோயில்** என்பர்''[1] எனத் **தி. இராசமாணிக்கம்** எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்கது. மேலும், மும்மூர்த்திகளையும் ஒரே மூர்த்தியெனக் கொள்ளாமல், வேறு வேறு **எனக்** கூறுபவர்கள் சமயவுலகின் உண்மை நோக்கத்தைப் புரிந்து கொள்ளாதவர்களே; இதனைத் **திருமூலர்,**

''ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித்து உலகம் பிணங்குகின் றார்களே''[2]

எனக் கூறிக்காட்டுதலால் உணர்ந்து கொள்ளலாம். இவ்வுண்மையைப் பலரும் உணர்ந்து கொண்டால் பிணக்கின்றி உலகம் பண்பாட்டுடன் வாழும்.

1. ஓம் சக்தி (திங்களிதழ்) தீபாவளி மலர், 1992, பக்.198
2. திருமந்திரம், 104

சிற்பக்கலை - பண்பாட்டுக் கூறுகள்

(தொடர்ச்சி—2)

31. சக்தி வழிபாடு:

சக்தியைப் போற்றி வணங்குவதென்பது மிகப்பண்டு தொட்டே இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்து வந்துள்ளது. ஆராய்ச்சியாளர்களின் கருத்தின் படி சிந்துவெளி நாகரிகம் ஏறத்தாழக் கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்; அந்த நாகரிகத்தின் சுவடுகளாக, **மொகஞ்ச தாரோ ஆரப்பா** எனும் இடங்களில் அகழ்வாராய்ச்சிகளிற் கிடைக்கப் பெற்ற உலக **அன்னையின் மண்சிலைகளைக் கொண்டு, சக்தி** வழிபாடு **மிக மிகத் தொன்மையானது** என்பது புலனாகும்.

"தொல் பொருள் ஆராய்ச்சித் துறைப் பேரறிஞர் ஆகிய **சர் ஜான் மார்ஷல்** (Sir John Marshall) என்பார் சிந்து வெளிப் பகுதியிற் கிடைத்த அன்னையின் சிலைகளைப் போலவே **பாரசீகம், ஏஜியன், எலம், மெசபட்டோமியா, பிரான்ஸ், காஸ்பியா, பாலஸ்தீனம். சைப்ரஸ், கீரீட், எகிப்து, துருக்கி** முதலிய பல்வேறு பகுதிகளிற் கிடைத்த சிலைகளும் இருப்பதனால், அம்பிகை வழிபாடு மிகப்பழங்காலத்திலேயே பல நாடுகளிலும் பரவியிருத்தல் வேண்டும் என்று விளக்குகிறார்"[1] என்ற குறிப்பு மிகச் சிந்தித்தற்குரியது.

உலகளாவிய நிலையிலிருந்த சக்தி வழிபாடு, பல்வேறு மதங்களிலும் சிறந்தோங்கி வந்துள்ளது. எடுத்துக் காட்டாக **அன்னை மரியாள்** (Mother Mary) சிறப்பைக் கொண்டாடுவதன் வாயிலாகக் **கிறித்துவ மதமும், தாராதேவியின்** புகழைப் போற்று வதன் வாயிலாகப் **பௌத்தமதமும்** ஒரு வகையில் தாய்த் தெய்வமாகிய சக்தி வழிபாட்டினை உடன்பட்டு ஏற்றுக் கொண்டமையை நன்குணர்த்தும்; இதனை நினைவுகூரலாம்.

31. 1. சாக்த சமயம்:

இந்து மதத்தில், சிறப்பாகச் **சைவம்** (சிவனைப் பரம்பொரு ளாகக் கொண்டு வழிபடுவது), **வைணவம்** (விட்டுணுவைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுவது), **சாக்தம்** (சக்தி

யைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுவது), **காணா பத்யம்** (கணபதியைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுவது), **கௌமாரம்** (குமரனைப் பரம்பொருளாகக் கொண்டு வழி படுவது), **சௌரம்** (சூரியனைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடுவது) என ஆறு சமய வழிபாடுகள் உண்டு. அவற்றுள் சாக்தத்திற்கெனத் தனிச்சிறப்பும் உண்டு.

சக்தியைச் சிவபெருமானுக்குத் தேவி என்றும், திருமாலுக் குத் தங்கை என்றும், கணபதி முருகன் ஆகியோருக்குத் தாய் என்றும் கூறுகின்ற புராணப் போக்கு களால் இந்து சமயங் களிடையே நிலவ வேண்டிய ஒற்றுமை புலப்படும். இதனை உணரவேண்டுவது மக்களின் கடமையாகும்.

இந்தியப் பெரு நாடு எனும் நோக்கில் சக்தியின் பெருமை யினைச் சிந்திக்கையில், காஷ்மீரத்தில் **சஷிர பவானியும்**, மகாராட்டிரத்தில் **துளஜா பவானியும்**, குஜராத்தில் **அம்பாஜியும்**, உத்திரப் பிரதேசத்தில் **விந்தியாவாசினியும்**, வங்காளத்தில் **காளியும்**, அசாமில் **காமரூபியும்**, மைசூரில் **சாமுண்டீசுவரியும்**, கேரளத்தில் **பகவதியும்**, காஞ்சியில் **காமாட்சியும்**, மதுரையில் **மீனாட்சியும்**, தில்லையில் **சிவகாமியும்**, திருவாரூரில் **கமலாம்பிகையும்**, திருவானைக்காவில் **அகிலாண்டேசுவரியும்**, திருவண்ணா மலையில் **உண்ணாமுலையம்மையும்**, திருக்கடவூரில் **அபிராமியும்** பெருஞ்சிறப்புடன் வழிபடப் பெறுதலைக் காணலாம்; வடக்கே காசி **விசாலாட்சியும்** தென் கோடியில் **கன்னியாகுமரியம்மனும்** அம்பிகை வழிபாட்டிலே ஒருமைப்பாட்டின் நிலைக்களங்களாக விளங்குதலையும் காணலாம்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் அம்மையின் அருள் தலங்கள் சக்திபீடங்கள்-பல அமைந்துள்ளன. **தந்திர சூடாமணி, குப்ஜிகாதந்திரம், ஸ்காந்தபுராணம், தேவி பாகவதம்** முதலிய வற்றில் சக்திபீடங்களின் பெயரும் எண்ணிக்கையும் சிற்சில வேறுபாடுகளுடன் கூறப்படுகின்றன. சக்திபீடங்கள் மொத்தம் **அறுபத்து நான்கு ஆகும்**. அவை இந்தியா முழுவதும் பல்வேறு பாகங்களிலும் பரவலாக அமைந்திருக்கின்றன; இதனால்

இந்தியப் பெருநாட்டின் ஒருமைப் பாட்டையும், சக்திவழி பாட்டின் செல்வாக்கினையும் பெருமையினையும் உணர்ந்து கொள்ளவியலும்.

சக்தியை ஆற்றலும் ஆவேசமும் மிக்கவளாக மறக்கருணை நெறியில் வழிபடுவதும் உண்டு; அவளையே அழகும் அருளும் நிரம்பிய வளாக அறக்கருணை நெறியில்] வழிபடுவதும் உண்டு. வடநாட்டில் **மறக்கருணை** அணுகு முறை மிகுதி; தென்னாட்டில் **அறக் கருணை** அணுகுமுறை மிகுதி எனப் பொதுவாக உணர்ந்து கொள்ளலாம்.

31.2. சக்தி-தத்துவ நோக்கு:

தனக்கு நிலைக்களமான **பரப்பிரமத்தின் வெளித் தோற்றமே சத்தி** என வழங்கப் பெறுகிறது. ''சக்தியை முக்குணங்களின் **காமியாவஸ்தை**. என்றும் **அவ்வியக்தம்** (புலப்படாதது) என்றும் மூலப் பிரகிருதியான (பிரபஞ்சத் தோற்றத்திற்கும் காரணமான) மாயையென்றும், சத்தான பிரமத்திற்கும் அசத்தான பிரபஞ் சத்திற்கும் விலட்சணமானது (வேறானது) என்றும் கூறுவர். அதன் பொருள் யாவற்றையும் இயற்றும் திறமை யென்பதாகும்.

இத்தன்மை வாய்ந்த சக்தியானது **சத்துவ** குணத்தையடைந் தால் **காப்பாற்றும் சக்தி**யெனவும், **இராசத** குணத்தையடைந்தால் சீவராசிகளைப் **படைக்கும் சக்தி**யெனவும், **தாமத** குணத்தையடைந் தால் **அழிக்கும் சக்தி**யெனவும் அழைக்கப்பெறும்''[1] எனவரும் குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கதாகும். இதனால், மும்மூர்த்திகளின் ஆற்றல்களும் சக்திக்கு உண்டென்பது அறிய வேண்டிய தத்துவ மாகும்.

சக்தியைத் தத்துவ நோக்கில் உணர்ந்து உபாசிக்கும் **சாக்தர்கள்** தம் வழிபடு கடவுள் மனத்தால் நினைக்கவோ, கண்ணால் காணவோ, இலக்கணங்களால் தெரிவிக்கவோ முடியாத சிறப்பினையுடைய **'அப்பாலுக்கு அப்பாலான'** நிலை யினையுடைய அரும்பொருளாக மதிக்கின்றனர்; தொடக்கம், நடுநிலைமை, முடிவு என்ற மூன்றும் அற்றதாக அப்பொருள் இருப்பினும், பெரும்பாலும் சக்தி என்ற பெண்பாலான

சொல்லினாலே பக்தியுடன் வழங்கப் படுவதால் அது பெண் பாலாகவே கருதப்படுகிறது. பக்தர்களின் தத்துவம் உலகில் அருளியலில் பயன்படுவான் வேண்டிச் சாக்தர்கள் சில அணுகு முறைகளைப் பின்பற்றி வருகின்றனர்.

''அறிகின்றான், விரும்புகின்றான், முயல்கின்றான் என்ற வழக்குகளின் பிரமாணத்தினால் **ஞானம், இச்சை, கிரியை** என்ற வடிவமாயிருப்பதோடு, மகத்தத்துவம், அகங்காரம், பஞ்ச பூதங்கள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், மனம், புத்தி, பிராணன், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொடுதல், பேசுதல், எடுத்தல், போதல், விடுதல் முதலிய **பலவிதச் செய்கைகளும் இச்சக்தியின் வடிவங்களே**யாகும். இவ்விதம் பலவாகத் திகழும் சக்தியின் நுட்பத்தினை ஆராய்ந்தறிவதே பந்தத்தினின்று விடுதலை பெறுவதற்குரிய வழியென்பது இவ்வுபாசகர்களுடைய சித்தாந்தமேயாகும்''[1] எனவருங் குறிப்பு மெய்ப்பொருளியல் நோக்கில் மனங்கொள்ளத் தக்கதாகும்

சக்தி, பல்வேறு வடிவங்களில் வழிபடப் பெறுவது பலரும் அறிந்ததே, சக்தி வழிபாட்டினரும் தத்தமக்குரிய சக்தியின் வடிவங்களை மனத்திலே கற்பித்துக் கொண்டு அவற்றுக்கும் கலைவடிவந் தந்து, உபாசனை ஆர்வமுடன் புரிந்து, சோரிய பலன்களைப் பெற்று வருகின்றனர். **தாம் கொண்ட தத்துவ அணுகுமுறைக் கேற்பத் தனிப்பட்ட** முறையிலே **மந்திரங்களையும்** வழிபாட்டு **விதிகளையும் அமைத்துக்** கொண்டு **சமயநெறியைப் போற்றி வருகின்றனர்.** சமய நூல்களிலே காணப்பெறும் மந்திரங் களைத் தாமாகக் கற்றால் ஒருவிதமான பலனும் கிடைக்காது எனக் கருதி, குருவின் உபதேச வாயிலாக முறையான தீட்சை பெற்று, அதற்கேற்பச் சாதனங்களையும் அமைத்துக் கொண்டு, **சக்தி**யை வழிபடுவதிலேயே பெரிதும் நாட்டஞ் செலுத்தி வரு கின்றனர்; மேலும் தாம் வழிபடும் சக்தியாகிய கடவுளுக்குப் பல பண்புநலங்களையும் பல திருவுருவங்களையும் கற்பித்துக் கொண்டு **ஆர்ச்சா** மார்க்கத்தையே மேலெனப் போற்றி

1. கலைக்களஞ்சியம், தொகுதி நான்கு, பக். 539.

வருகின்றனர். **மந்திர — தந்திர — யந்திரத்தின்** பெருமையையும் உணர்ந்து, பிறர்க்கும் அப்பயன்பாட்டினை உணர்த்தி வருகின்றனர்.

சக்தி உபாசகர்களின் உட்பிரிவுகளையும், அவற்றின் தத்துவங்களையும் பற்றி மிக விளக்கமான கூறுகளைத் தத்துவ நூல்களாகிய **ருத்திரயாமலம், ஞானார்ணவம், தந்திரராசம், சாரதா திலகம், பிரபஞ்சசாரம், திரிபுரா ரகசியம், யோகினி ஹிருதயம், வாபகேச்வரதந்திரம், சதுமசதி, குலசூடாமணி, மகாநிர்வாண தந்திரம், தந்திராலோகம், ஸ்ரீ நேத்திர தந்திரம், ஸ்ரீ வித்யார்ணவம், காமகளா விலாசம்** முதலியவற்றில் கண்டு கொள்க.

சுருக்கமாகச் சத்திதத்துவம் யாதெனின், யாவற்றையும் இயற்ற வல்ல பேராற்றலுடையது; அது பரமான்மா அல்லது பரம்பொருள் என்பதினின்றும் வேறுபடாமலிருந்தும் பிரபஞ்ச வடிவாக வேறுபட்டிலங்குவது; சிவபரம்பொருளாகிய சக்தருக்கும் சக்திக்கும் அமைந்துள்ள தொடர்பானது, சந்திரனுக்கும் நிலவொளிக்குமுள்ள இடையறாத் தொடர்பினைப் போன்றது. இவ்வுண்மையை அறிவதே **'பிரகிருதி புருஷ விவேகம்'**[1] ஆகும். இதன் நுண்கூறுகளை யுணர்ந்து முறையாக வழிபடுவதே உபாசனா தத்துவத்தின் அடிப்படைக் கருத்தாகும். இதுவே பிறவிப் பெருங்கடலைக் கடந்து பிறவா நெறியில் பேரின்பந் துய்க்கும் உத்தியெனக் கொள்வதே சாக்தேய தத்துவத்தின் பரம சித்தாந்தம் எனலாம்.

31.2.1. சக்திபேதங்கள்—கலைநோக்கு:

தெய்வநோக்கிலே, அனைத்துக்கும் மேலான **சக்தி** ஒன்றேயெனினும், தொழிற்பாட்டால் அது பலவகையாகக் கருதிக் கூறப்படும். ''சக்திதான் பலவோ என்னில் தான் ஒன்றே; அநேகமாக வைத்திடும் காரியத்தால்''[2] எனக் குறிப்பிடுவது **சிவஞான சித்தியார்.**

1. கலைக் களஞ்சியம், தொகுதி நான்கு, பக். 540.
2. சிவஞான சித்தியார், சுபக்கம், |சூ., 61.

மணிவாசகர் தம் திருவெம்பாவையை நவசக்திகளின் செயலை உள்ளுறுத்தியே பாடியுள்ளார் என்றும், அதனாலேயே அதற்குச் **'சக்தியை வியந்தது'** என்ற நுண்பொருள் தலைப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அறிஞர்கள் கூறுவர். இதனால், **'சக்தி ஒன்றே பல்வேறு வடிவ பேதங்கள் கொண்டு உயிர்களின் பொருட்டு வெவ்வேறு தொழில்களியற்றி நலம்புரியும்'** என்பது உய்த்துணர வேண்டியதாகும்.

நவசக்திகள்:

நவசக்திகள் பற்றி விளக்குகையில், ''1. **மனோன்மணி**, பக்குவம் எய்திய உயிர்களை மலத்தினின்று நீக்கிச் சிவத்துடன் சேர்க்கும். 2. **சர்வபூததமணி**, உயிர்களிலெல்லாம் ஒன்றி உடன் கலந்து நின்று, அவற்றின் புண்ணிய பாவங்களை அகற்றுவிக்கும். 3. **பலப்பிரதமணி**, சூரியனிடத்தில் பதிந்து நின்று தீய கிருமிகளை அழித்து, நல்ல பொருள்கள் பெருகி வளர்வதற்கு ஆக்கம் அளிக்கும். 4. **பலவிகரணி**, சந்திரனிடத்தில் நிலைபெற்ற அமுதத் துளிகளைச் சொரிவித்துப் பயிர்பச்சைகளும் உயிர்த் தொகுதிகளும் தழைத்துச் செழித்தோங்க உதவிசெய்யும், 5. **கலவிசரணி**, வானத்தில் இருந்து எல்லாப் பொருள்களையும் ஏற்று நின்று அவைகள் தன்னிற் கலந்து இணைய இடம் தந்து நிற்கும். 6. **காளி**. காற்றின்கண் இனிது கலந்து பிராணமயமாய் விளங்கி, உயிர்களுக்கு நலம் விளைவிக்கும். 7. **இரவுத்திரி**, நெருப்பின் கண் தங்கி அதற்கு வெப்பம் அளித்து நிற்கும். 8. **சேட்டை**, நீரில் நிலைபெற்று அதற்குக் குளிர்ச்சியையும் சுவையையும் உண்டாக்கும். 9. **வாமை**, மண்ணில் விளங்கி ஐம்பூதங்களின் இயல்புகளும் செயல்களும் நிகழுமாறு செய்யும்''[1] என **ந.ரா. முருகவேள்** எழுதிச்செல்வது சிந்திக்கத்தக்கதாகும். சக்திகளின் ஆற்றல், பன்முகமாய் உலகை இவ்வாறெல்லாம் காத்தருளுதல் கொண்டு, **'சர்வமும் சக்தி மயம்'** எனும் பொன் மொழி முற்றிலும் உண்மையெனலாம்.

நவசக்திகளைப் பற்றி இத்தகைய விளக்கம் தரப் பெறினும் முற்காலத்தில் அவை ஓவியத்திலோ சிற்பத்திலோ இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

1. திருக்கோயில், அக்டோபர், 1969.

31.3. சக்தியின் வியத்தகு சிற்பம்: நிசும்பசூதினி:

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், பல்லவ ஆதிக்கத்தின் கீழ் ஒரு குறுநிலத் தலைவனாக ஆட்சிபுரிந்த **விசயாலயன்,** சமயம் பார்த்திருந்து தஞ்சாவூர் மீது படையெடுத்துத். தஞ்சாவூர், வல்லம், செந்தலை முதலிய இடங்களில் ஆட்சிபுரிந்த முத்**தரையர்களைப் போரிட்டு வென்று,** பிற்காலச் சோழர் பரம்பரை ஆட்சி செய்ய வழிகோலினான். **அவன் வழிபட்டு வந்த தெய்வம் நிசும்ப சூதினி.**

தஞ்சையைக் கைப்பற்றியபின் அங்கே ஒரு சிறு ஆலயத்தைக் கட்டி நிசும்ப சூதினியை எழுந்தருளச் செய்தான். அவ்வாலயத்தில் நிசும்ப சூதினியின் திருவுருவம் ஒன்றே உள்ளது. தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கிப் **பராசக்தி,** கொலையிற் கொடிய **நிசும்பனை அழித்து உலகத்திற்கு நன்மை விளைவித்தாள்;** அங்ஙனமே தனக்கும் தான் ஆளும் தஞ்சைத் தரணிக்கும் நன்மை விளைவிக்க வேண்டுமென்ற நோக்கில் விசயாலயன், **பத்ர காளியாகிய நிசும்பசூதினியை** ஆர்வமுடன் வழிபடலானான். பிறகு, சோழர்களுக்குத் **திரிபுராந்தகமூர்த்தியும் நிசும்ப சூதினியும்** வீரம் விளைவிக்கும் கண்கண்ட தெய்வங்களாயினர்.

நிசும்பசூதினி ஆலயத்தைக் **'காளிகோயில்'** என்று ஊர்மக்கள் அழைத்து வருகின்றனர். சுற்றுப்புறத்திலுள்ள ஊர்மக்கள் இந்தச் சக்திக்கு ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் சிறப்பாக **இராகு கால பூசை** நடத்துகின்றனர்; அவ்வாற்றான் 'இராகு காலக் காளி' என்றும் அழைக்கின்றனர். அக்கோயிலுக்குப் போகுந் தெருவினை **"இராகுகாலக் காளி சந்து"** என்றே வழக்கத்தில் கொண்டுள்ளனர்.

இந்தச் சக்தியைப் பற்றி இலக்கியப் பேரறிஞர் **மு. அருணாசலம்,** 'நிசும்ப சூதினி வடிவம் ஆறடி உயரமும் அதற்கேற்ற கனத்த ஆகிருதியும் உடையது. கருவறை வாயிலில் துவார பாலகியரும் உள்ளனர். இவை சுதையால் அமைந்தவை. நிசும்ப சூதினியின் உருவம் இருந்த கோலம்; இடக்கால் மடிந்துள்ளது; வலக்கால் கீழே படுத்துக்கிடக்கின்ற நிசும்பன்

தலையில் மிதித்திருக்கிறது. அவனையன்றிப் பின்னும் சில அசுரர்களை ஓர் ஆசனம் போல் அமுக்கி வைத்து, அவ்வாசனத்தின் மீது தேவி அமர்ந்திருக்கிறாள். தேவிக்கு எட்டுக்கைகள் (அட்ட புஜங்கள்); எட்டுக் கைளிலும் சூலம், வாள், கேடயம், கபாலம், டமருகம், வில், அம்புகள் உள்ளன. ஒரு கை கஜ ஹஸ்தம்; வாகனம் இல்லை. தலையில் சுடர் அமைந்த கிரீடம் உள்ளது. தேவியின் தலை இடப் பக்கம் சற்றுச் சாய்ந்தே உள்ளது''[1] என விளக்கிச் செல்வது சிந்திக்கத் தக்கது.

பகைவர்கள் வெற்றிகொள்ளத் துணைநிற்கும் தெய்வமாகக் **கொற்றவையைத்** தமிழ்மக்கள் வழிபாடு செய்வர்; அத்தகைய நோக்கில் **விசயாலயனும் கொற்றவை அம்சமாக நிசும்ப சூதினியை வழிபட முற்பட்டான்** எனலாம். விசயாலயன் மரபில் வந்த சோழ மன்னர்கள் சிற்பத்திலமைந்த நிசும்பசூதினியையும், ஓவியத்திலும் சிற்பத்திலுமாக அமைந்த திரிபுராந்தக மூர்த்தியையும், மிகுந்த ஈடுபாட்டுடன் வழிபட்டு வரலாயினர் என்பது வரலாற்றால் கிடைக்கும் செய்தியாகும்.

31.3.2. சக்தியின் பல்வேறு திருவுருவங்கள்:

தமிழ்நாட்டிலும் இந்தியப் பெரு நாட்டின் பல பகுதிகளிலும் காணலாகும் சக்திபேதங்கள் பலவாகக் காணப்படுகின்றன. சக்தி வழிபாட்டினையே முழுமையாக நம்பியிருக்கும் **சாக்தேய சமயத்தின் தந்திர நூல்களில்** சக்தியின் வடிவ வேறுபாடுகள் பற்பல உண்டு; அவற்றை விரிக்கிற் பெருகும். அவற்றுள் தியான சுலோகங்களின் வாயிலாகக் கிட்டும் சில குறிப்புக்களை மட்டும் ஓரளவு ஈண்டு நோக்குவோம்.

அ. பாலாம்பாள்:

இந்தச் சக்தி, நான்கு திருக் கைகளை யுடையவள்;, அந்தக் கைளில் முறையே **அக்கமாலை, புத்தகம், அபயமுத்திரை வரத முத்திரை** ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறாள். நீலோற்பல மலரில் வீற்றிருப்பவளாகிய இவள் **செந்நிறங் கொண்டவள்;** ஆகமங்களில் இவளுக்குப் பதினான்கு வகையான

1. திருக்கோயில், மார்ச்சு, 1980

திருவுருவ அமைப்புக்கள் இனிது கூறப்பெற்றுள்ளன. இவளது **மூலமந்திரம் மூன்று** அல்லது **ஆறு எழுத்துக்களைக்** கொண்டது என்பது நினைவிற் கொள்ளத்தக்கது.

ஆ. லலிதாம்பாள்:

சிந்தாமணி எனும் சிறப்புமிகு நவமணித்திரளால் அமைக்கப் பெற்ற மாளிகையில், நான்முகன் திருமால் உருத்திரன் ஈசுவரன் ஆகிய நால்வரையும் நான்கு கால்களாகக் கொண்ட திருக்கட்டிலில். **காமேசுவரரின் மடியில் வீற்றிருப்பவள்;** பதினாறு **வயதினாள் எனக் கூறத்தக்கவள். பாசம். அங்குசம், பஞ்சபாணம், கரும்பாலாகிய வில் ஆகியவற்றை ஏந்தியவள்.** தலையில் பிறை சூடிக் காணப்படுவாள்; செந்நிறத் திருமேனியளாக விளங்கு கிறாள். இவளது மூலமந்திரம் **பதினைந்து** எழுத்**துக்களைக் கொண்டதாகும்.** அது பன்னிரண்டு வகைகளில் வெவ்வேறாக அமையும் என்பர்; **பதினாறு எழுத்துக்களை** இவளது மூலமந்திரம் **'ஷோடசி'** என்றும், **பதினெட்டு எழுத்துகளைக் கொண்ட மூல மந்திரம் 'சௌபாக்ய வித்யை'** என்றும் வழங்கப்படும். **அனந்த வைரவம், அயக்ரீவம், தட்சிணாமூர்த்தம்** என, இவரை வழிபடும் நெறிகள் மூவகைப் படும். இவள் எல்லாவுலகுக்கும் **பேரரசி** நிலையில் விளங்குபவள். **இராஜ மதங்கி, மந்திரிணி** ஆகியோர் இவளுக்கு அமைச்சர்களாக விளங்குகின்றனர். காஞ்சியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு **காமாட்சியம்மையே** ஸ்ரீலலி**தா தேவி** யாகக் கருதப்படுகின்றாள்.

இ. இராச ராசேசுவரி:

இவள் லலிதா தேவியைப் போன்றே திருவுருவங் கொண்டவள். இவளுக்குரிய ஒரு **மூலமந்திரம்** இருபத்**தெட்டு எழுத்துக்கள் கொண்ட மகாசோடசி** என்பதாகும். ஸ்ரீவித்யையே இப்படிவங்களுக் கெல்லாம் உரிய பொதுவான சாத்திரமாகும், **இராசராசேசுவரி ஞானத்தின் முழுநிறைவைக் குறிக்கின்றாள்.** இவள் நாற்பது வயதினளாகக் கருதப்படுபவள். சித்திரைத் திங்களில் வரும் **வசந்த நவராத்திரி விழா** இராசராசேசுவரிக்கு மிகவும் சிறப்பினதாகும்.

ஈ. நவாட்சரி பாலா:

இந்தத் தேவி, பாலாம்பாளின் திருவடிவத்தினையே கொண்டவள். **ஒன்பது எழுத்துக்களைக் கொண்ட மூலமந்திரத்தையே** உடையவள். அங்கம் **உபாங்கம் பிரத்தியங்கம் எனும் மூன்றனுள் லலிதா தேவியின் அங்கமாகத் திகழ்பவள்.**

உ. அன்ன பூரணி:

லலிதா தேவியின் **உபாங்கமாகத்** திகழும் இவளின் வலக்கையில் **பொன் அகப்பையும்,** இடக்கையில் **மணிகள் பதித்த பொற்கலசத்தில் பாற்சோறும்** ஏந்தி, உயிர்களுக் கெல்லாம் உணவு வழங்கும் தாயாக விளங்கி வருகிறாள்; **பொன் நிறங்கொண்டவளாகிய** இவள் பொற்கலனும் பூமாலைகளும் அணிந்திருப்பவள். **காசிவிசுவநாதருக்குச் சக்தியாகவும்** காசித் திருத்தலத்தினைத் தனக்கே உரிய சிறப்பிடமாகவும் கொண்டு அருளாட்சி புரிந்து வருகிறாள்.

ஊ. அசுவாருடாம்பாள்:

லலிதா தேவியின் **பிரத்தியங்கமாகத்** திகழும் இத்தேவி, **செம்மேனியினளாய்ச்** சிவப்பான ஆடைகளும் சிவந்த நிற அணிகலங்களும் தரித்துக் கொண்டு, செந்நிறக் குதிரையைச் செலுத்திக் கொண்டு வரும் இயல்பினள். ஒளிமுகமும் முக்கண்களுமுடைய இவளுக்குத் திருக்கைகள் நான்கு. அவற்றில் முறையே **பல்லம் (சவுக்கு) எனும் படையும், சர்ப்பாத முத்திரையும்** பகைவரைப் பிணிக்கும் **பாசமும்,** தீயவரை அச்சுறுத்தும் **பொற்பிரம்பும்** ஏந்தி உயிர்களை அருள்பாலிக்கிறாள்.

எ. இராச மாதங்கி:

கடம்பமலர் சூடியவளாய் அமிழ்தக் களிப்பில் திளைப்பவளாய் விளங்குமிவள் மடியில் **வீணையை** வைத்துக் கொண்டு **இயக்குபவள்; செந்நிற ஆடை** யுடுத்திக் கொண்டும் நெற்றியில் **கத்தூரித்திலகம்** அணிந்து கொண்டும், காதில் **சங்கக்குழை** தரித்துக் கொண்டும் விளங்குமிவள் **பிறைசூடும் பெருமாட்டி.** புன்முறுவல் பூத்த திருமுகத்தினையுடையவளாய்க் **கலைமகளின்** அறிகுறியாகக் **கிளியை** ஏந்திக் கொண்டிருப்பவள். **மரகத**

(பச்சை) **மணியின் நிறம் வாய்ந்தவளாகிய** இவள், இராச ராசேசுவரியின் அறிவியற் கலையியல் ஆற்றலாக விளங்குபவள். மாசித்திங்களில் வரும் **நவராத்திரிவிழா** இவளுக்கு உரியதாகும். **மதுரை மீனாட்சியம்மையை இராசமாதங்கியாகவே** அருளாளர்கள் போற்றி வருகின்றனர்.

ஏ. லகுசியாமளா (லகுசியாமா):

மதங்க முனிவரின் திருமகளாக அவதரித்த இவள், வைர மணிகள் பதித்த வீணையை இயக்குபவள். அமிழ்தக்களிப்பினை யுடையவளாகிய இவள், **இந்திர நீலநிறங் கொண்ட ஒளிமேனி யளாகவும்** பேரழகியாகவும் திகழ்பவள். இராசமாதங்கியின் அங்க தேவதையாகக் கருதப்படுகிறாள்.

ஐ. வாக்வாதினி:

வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவளாகிய இவளுக்குப் **பாரதி** என்ற திருப்பெயரும் உண்டு. தன் இருகைகளிலும் **எழுது கோலும் புத்தகமும்** ஏந்திக் காணப்படுவாள். இளம்பிறை சூடிய இவள் **வெண்ணிறத்தவள்**. உலக வாழ்வின் அச்சத்தைப் போக்குந் திறமுடைய இவள், இராசமாதங்கியின் உபாங்க தேவதை. **இவளைக் கலைமகளின்** கூறாக அருளாளர்கள் கருதுகின்றனர்.

ஒ. நகுலி:

இராசமாதங்கியின் பிரத்தியங்க தேவதையாகிய இவள், முத்துப்போன்ற **வெண்முறுவலையுடையவள்**. பகைவராகிய நாகங்களின் நாக்கினை அறுப்பவள். பக்தர்களுக்கு நேரிடும் துன்பம் தெரிந்து உதவிபுரிபவள்.

ஓ. வராகி:

லலிதா தேவியின் படைக்குத் தலைவியாக இவள் விளங்கு பவள். தண்டினி எனவும் அழைக்கப்படும் இவள், சம்புகேசுவரம் எனும் திருவானைக்காவல் **அகிலாண்டேசுவரியாகக்** காட்சியளிக் கிறாள். இவளது இருக்கை தாமரை மலராகும். கார்கால மேகமெனும் **கரியநிறங் கொண்ட இவள்**, தன்பால் அடைக் கலங்கொண்ட அடியவர்களின் வேண்டுகோளினை நிறைவேற்றி

அருளுகின்றாள். தன் எட்டுத் திருக்கைகளிலும் முறையே **சக்கரம், வாள், உலக்கை, கலப்பை, அபயம், வரதம், சங்கு, கேடயம்** ஆகியவற்றைக் கொண்டருள்பவளாகிய இவள் **ஆஷாட மாதத்தில் வரும் நவராத்திரி விழாவிற்கு** உரியவள். **இலகுவராகி, சொப்பனவராகி, திரஸ்காணி** ஆகிய மூவரையும் முறையே **அங்கம், உபாங்கம், பிரத்தியங்கம்** எனும் தேவதைகளாகக் கொண்டவள்.

ஔ. புவனேசுவரி:

தேவிபாகவதம் எனும் நூலில், மிகவும் போற்றப் பெறும் இவள் **கதிரொளி நிறமுடையவள்.** திருமுடியில் பிறையும் காதுகளில் தோடு முதலிய அணிகலன்களும் தரித்த இவள் தன் நான்கு திருக்கைகளிலும் முறையே **பாசம் அங்குசம் அபயம் வரதம்** ஆகியவற்றைக் கொண்டவள் **சாக்த வழிபாட்டின் தலையாய தெய்வமே புவனேசுவரி** என்று கூறுவர். ஸ்ரீவித்யையின் **பஞ்ச தசாட்சரி** மந்திரம் இவளுக்கு உரியதாகும். இவளது **ஓரெழுத்து மந்திரத்தை** உச்சரிக்கும் நற்பேறுடையவர்கள் முற்றுணர்வும் பேரின்பமும் எய்துவர்.

க. சண்டி:

மின்னலைப் போன்று பளிச்சிடும் ஒளியுடைய இவள், தனக்குச் சிங்கத்தினை ஊர்தியாகக் கொண்டு. அச்சமிகு தோற்றத்துடன் விளங்குபவள். மாதர்கள் ஒன்பதின்மர் சூழக் காணப்படுமிவள் முக்கண்ணும் பிறைமுடியுங் கொண்டிருப்பவள். சண்டன் எனும் அசுரனைக் கொன்றமையால் **சண்டி** எனும் பெயரைத் தாங்கிய இவளுக்குத் திருக்கைகள் எட்டு. அவற்றில் முறையே சக்கரம், கதை, வாள், கேடயம், அம்பு, வில், பாசம், கண்டனம் ஆகியவற்றைக் கொண்டிருக்கிறாள். இவளது மூலமந்திரம், ஒன்பது எழுத்துக்களைக் கொண்டதாகும்.

கா. துர்க்கை:

பராசக்தியின் காவற் படைத்தலைவியாக இவளைக் கருதுவர். ஆபத்துக் காலத்தில் அடைக்கலம் புகும் அடியவர்களின் அச்சம் போக்கி அருள்புரியும் வல்லவள் இவள். **துர்க்கம்** என்பது

அகழி; அது பகைவர் நம் நாட்டின் மதிலை அணுக முடியாமல் செய்யும் திறம்வாய்ந்தது; அப்படி வழிபடும் அன்பர்களைத் துன் பங்கள் அணுகாவண்ணம் காத்தலால், இவள் துர்க்கை எனப் பெயர் பெற்றாள் என்பர். அரசர்க்கும் வீரர்க்கும் உரிய வழிபடு தெய்வமாகிய இவள், ஐப்பசித் திங்களில் வரும் **நவராத்திரி விழா வில்**, கௌரி, இலக்குமி, சரசுவதி ஆகிய மூவரும் சேர்ந்த ஒரு ருவமாகத் திகழ்வாள். அக்கினி கலை, சூரிய கலை, சந்திரகலை எனும் முக்கூறும் தன்பாற் கொண்டு ஆட்சி செலுத்துகின்றாள். ஆபத்துக் காலத்தில் தேனிலே தோய்ந்த வெட்சிப்பூவைத் தூவித் **துர்க்கசூக்தம்** எனும் மந்திரம் ஓதி அருச்சனை செய்து வழிபட்டு வந்தால், எல்லாத் துன்பங்களும், பிணிகளும் கதிரவனைக் கண்ட பனிபோல விலகியொழியும். இவளின் நான்கு திருக்கைகளிலும் முறையே **சங்கு, சக்கரம், வில், அம்பு** ஏந்தியிருப்பாள். தலையில் திருமுடியும் பிறையும் சூடிக் காட்சியளிக்கும் இவளுக்கு **ஊர்தி சிங்கமாகும்.** பசும்புல் நிறத்தவளாகிய இவளுக்கு **மானும் ஊர்தியாகும்.**[1]

கொற்றவையே பிற்காலத்தில் துர்க்கையாக வழிபடப்பெறு கிறாள் என்பது அறிஞர் பலரின் துணிபாகும். மக்களின் சமய மனப்போக்கிற்கும் காலத்தின் தேவைக்குமேற்பத் துர்க்கையிலும் ஒன்பது வகையுண்டாகி, '**நவதுர்க்கை**' என அழைக்கப்படும் மரபு உண்டாயிற்று. எடுத்துக்காட்டாக, இரணியூர்க் கோயிலில் - **நவதுர்க்கை மண்டபத்தில்** - நவதுர்க்கை, உருத்திர துர்க்கை, ஸ்தூல துர்க்கை, மகிடாசூர மர்த்தினி, சூலனி துர்க்கை, ஜல துர்க்கை, மகாதுர்க்கை, பிரம்மதுர்க்கை, விஷ்ணுதுர்க்கை ஆகிய திருவுருவங்களைக் காணலாம். எல்லாவற்றையும் ஈண்டு விரிக் கிற்பெருகும். மிகச் சிறப்புடன் வழிபடப்பெறும் **மகிடா சூர மர்த்தினியைப்** பற்றி ஈண்டுச் சிறிது காண்போம்.

கி. மகிடா சூரமர்த்தினி:

சக்தியின் வேக வடிவங்களுள் ஒன்றான மகிடா சூரமர்த்

1. இதிற்காணும் திருவுருவம் பற்றிய பல செய்திகள் ந.ரா. முருகவேள் வழங்கிய திருக்கோயில் (நவம்பர், 1969) இதழை அடிப்படையாகக் கொண்டவை.

தனியைத் தமிழ்ப் பெருமக்கள் பண்டைக் காலந்தொட்டே வழிபாடு செய்துவந்துள்ளனர்.

சிலப்பதிகாரம் **வேட்டுவ வரியில்** மகிடா சுரமர்த்தனியைப் போற்றிப்புகழும் பகுதி மிகவும் சிந்திக்கத்தக்கது; அது வருமாறு:

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்;

வரிவளைக்கை வாளேந்தி **மாமயிடற்** செற்றுக்
கரிவதிரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்
அரியரன் பூவிலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்;"[1]

இந்தப் பகுதியைக் காணுங்கால் மாமயிடனாம் **மகிடாசூரனை** (எருமைக்கடாத் தலையுடைய அசுரனை) எதிர்த்துப் போரிட்டு **வெற்றிபெறும் காட்சி** நம் மனக்கண்முன் தோன்றும். இதனையே ஒருவகையில் **தியானச் சுலோகமாகக்** கொண்டு பிற்காலச் சிற்பியர் மகிடாசூரமர்த்தனியின் சிலைவடிக்க முற்பட்டுள்ளனர் எனலாம். அவ்வாறான சிற்பங்களுக்கு முன்னோடியாக **மாமல்லபுரத்தில்** கி.பி. ஏழாம் நூற்றாண்டில் கற்பாறையில் செதுக்கப்பட்ட **மகிடாசூரமர்த்தினிச் சிற்பம்** அமைந்துள்ளது எனலாம்.

வரபலங்கொண்ட ஆணவத்தால் தவமுனிவர்களுக்கும் நல்லவர்களுக்கும் தீங்கிழைத்துக் கொண்டிருந்த எருமைக்கடாத் தலையுடைய மகிடாசூரனை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொண்ட நிகழ்ச்சி தமிழ்மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றுள்ளது. எனவே, அதனை நினைவிற்கொள்ளும் வகையில் தமிழ் நாட்டிலே **நவராத்திரி** பெருஞ்சிறப்புடன் கலைவிழாவாகவே கொண்டாடப்படுகின்றது. மாமயிடனைப் போரில் வென்ற நிகழ்ச்சி, தொன்மைக் காலத்தில் எருமைநாடு எனவழங்கப்பெற்ற **கருநாடக மாநிலத்தில்** நிகழ்ந்ததாகக் கருதுவதால், நவராத்திரிச் சிறப்பு அங்கே மிகுதியாக உண்டு. மைசூரில் கோலாகலமாக

1. சிலப்பதிகாரம், வேட்டுவ வரிப்பாடல்கள் 7, 8,

நடைபெறும் **தசராப் பண்டிகை** நவராத்திரிப் பெருமைக்காகவே அமைந்தது என்பது பலரும் அறிந்ததே.

கீ. வனதுர்க்கை - சிறப்புக் குறிப்பு:

'கொற்றவை', 'காளி' எனப் பெருஞ் சக்தியின் ஒருவகை வடிவமே **'வனதுர்க்கை'** யாகும். அறிஞர்கள் சிலர், துர்க்கையின் பல்வேறு கூறுகளை ஆராய்ந்துள்ளனர். பல சிவாலயங்களில் துர்க்கையின் திருவுருவம் இருப்பினும், சில சிவாலயங்களில் வன துர்க்கை எனக் குறிப்பிட்டுக் கூறுகின்றனர். ஈண்டு மேலைக் கடம்பூர் அருள்மிகு அமிர்தகடேசுவரர் திருக்கோயில் அர்த்த மண்டபத்தின் வடவெளிப்புறக் சுவரிலே காணலாகும் (தேவக் கோட்டத்தில் அமைந்துள்ள) வனதுர்க்கை பற்றிச் சிறிது காண்போம்.

வரலாற்று அறிஞர் **எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்,** தாம் எழுதியுள்ள **'நான்கு சோழர் கோயில்கள்'** எனும் ஆங்கில நூலில் மேலக் கடம்பூர் வனதுர்க்கைக்கு ஆறுகரங்கள் உண்டு எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தத் துர்க்கை பற்றி ஆராய்ந்த **சின்னத் தம்பி,** "வனங்கள் மிகுந்த இவ்விடத்தில் வனதுர்க்கையை இக் கரக்கோயிலின் தேவக் கோட்டத்தில் வைத்து வழிபாடு செய்து வருகின்றார்கள்; மேலும், எட்டுக்கைகள் இருந்தால் தான் தேவியை **வனதுர்க்கை** என்று அழைக்க முடியும் என்று சைவ ஆகமங்களும் கூறுகின்றன. தேவியானவள் திரிபங்க நிலையில் மகிசா சூரன் தலைமீது நின்ற நிலையில் காணப் படுகிறாள். மகிசா சூரன் இரு கொம்புகளுடன் வழவழப்பான கருங்கல்லால் அமைக்கப்பட்டு மிகவும் பொலிவுடன் காட்சியளிக் கிறான். தேவியானவள் பெரிதும் எழில்கோலத்துடன் காட்சி தருகின்றாள். **தமிழகத் திருக் கோயில்களிலுள்ள சிவாலயங்களில் இக் கரக்கோயிலில் அமைந்துள்ள தேவியே மிகவும் கலைநுட்பத் துடனும் வனப்புடனும் காட்சியளிக்கின்றாள்** என்றால் அது மிகை யாகாது"[1] என்று எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்கது.

1. 22-ஆவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, இ.ப.க.த, மன்றம், 1993 பக். 361,

துர்க்கையின் வாகனமான சிங்கம் பாய்ந்தோடும் நிலையில் நேர்த்தியாகச் சிற்பி வடித்துள்ளான். தேவி எட்டுக் கைகளோடு காட்சியளிக்கிறாள். அவளின் வலக்கைகளில் முறையே கட்கம், அபயம், சக்கரம், சக்தி ஆகிய சின்னங்களும், இடக்கைகளில் முறையே வேதாளம் (பறவை), கட்டிய வலம்பிதம், சங்கு, கேடயம் ஆகிய சின்னங்களும் அமைந்துள்ளன. பல்வகை அணி கலன்கள் அணிந்துள்ள நிலையில், தலையில் கரண்ட மகுடமும், மார்பில் சுச்சையும், காதில் யாளிப்பிரேதம் போன்ற குண்டலங் களும், வயிற்றில் சன்னவிரமும், கழுத்தில் மாலையும், கைகளில் கேயூரங்களும் வளையல்களும், கால்களில் சிலம்புகளும், இடுப்பில் ஆடையும் கொண்டு எழிலாகத் தோன்றுகிறாள். தேவக் கோட்டத்தின் இருபக்கங்களிலும் சோழர்கால அரைத்தூண்கள் பொலிவூட்டுகின்றன. இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு, இந்த வனதுர்க்கைக்கு எட்டுக்கைகள் உள்ளன எனத் த சின்னத்தம்பி அழகுறத் தம் ஆராய்ச்சிக்கு அரண்சே ்லுகிறார். சிறந்த ஆராய்ச்சி அறிஞர்கள் (எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் போன்றவர்கள்), இவ் வனதுர்க்கைக்கு ஆறுகைகள் உள்ளன என ஏன் கூறினர் என்பது புரியவில்லை.

கு எட்டுத் திருக்கை துர்க்கை:

தமிழ்நாட்டிலுள்ள திருவாஞ்சியம் காசிக்கு ஒப்பச் சிறந்த திருத்தலமாகும். இத்தலத்திலே தனிக்கோயிலில் குடிகொண் டுள்ள துர்க்கைக்கு எட்டுத் திருக்கைகள் உள்ளமையால் அஷ்ட புஜ துர்க்கை என மக்களால் அத்தெய்வம் போற்றப்படுகிறது. இஃது ஓர் அபூர்வமான சிற்பக்கலைப் படைப்பென்பர். பிற திருக்கோயில்களில் துர்க்கை மகிடாசுரனின் தலைமீது நிற்பது போலவே காட்சியளிப்பது பொதுவான மரபாகும். மானுட வுடலும் எருமைத்தலையுமுடைய மகிடனைச் சக்தி ஒரு காலால் மிதித்தவாறும், ஒரு கையில் கைத்தடியை ஊன்றியவாறும் மறு கையில் அவ்வரக்கனை வேலால் குத்தியவாறும் இக்கோயிலில் இங்குத் தோன்றுகிறாள். மக்களால் மிக ஆற்றல் வாய்ந்த தெய்வமாக இவள் போற்றப்படுகிறாள்.

31.4. திருமாலின் சக்திதேவிகள்:

திருமால் தாம் எடுக்கும் அவதாரத்திற்கேற்பத் தேவியரின் திருப்பெயர்களை அமைத்துக் கொள்வார். பொதுவாகத் திருமாலுக்குத் தேவியராகத் **திருமகள், பூமகள்** சிறப்பாகக் கூறப்படுவர். திருமகளாகிய இலட்சுமி எட்டுவகைத் திருவுருவங்களைப் பெறுவாள்; **ஆதிலட்சுமி, தனலட்சுமி, தானியலட்சுமி, சந்தானலட்சுமி, மகாலட்சுமி, கஜலட்சுமி, வீரலட்சுமி, விசயலட்சுமி** என வருந்திருப் பெயர்கள் காண்க. அட்டலட்சுமிகளை வேறுவகைப் பாகுபாட்டிலும் கூறுவர் திருக்கோயில்கள் சிலவற்றில் அட்டலட்சுமி திருவுருவங்களைக் காணலாம். சென்னை பெசண்ட் நகர் அஷ்டலட்சுமி கோயிலில் எல்லாத்திருவுருவங்களையும் காண்க. சிறப்பாகக் கஜலட்சுமியின் திருவுருவம் பண்டைக்காலத்திலிருந்து கட்டடச் சிற்பக்கலையில் இடங் கொண்டுள்ளது.

பாண்டியனது அரண்மனை வாயிலின் மேற்புறத்தில் மரத்திலே **கஜலட்சுமியின்** சிற்பவுருவம் இருந்தமை பற்றிக் குறிப்பு உள்ளது. கஜலட்சுமியின் இருபக்கங்களிலும் இரண்டு பெண் யானைகள் நிற்கின்றன; ஒவ்வொன்றும் தன் துதிக்கையில் செங்கழுநீர் மலர்களைத் தாங்கியிருப்பது போலத் தோற்றமளிக்கிறது; இதனை **நக்கீரர்,**

"போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்து"[1]

எனக் கூறிச் செல்வதால் உணரலாம். இத்தகைய அமைப்பினைக் கலித்தொகையில் விளக்கமாக,

"வரிநுதல் எழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித்
திருநயந் திருந்தன்ன"[2]

எனக் கஜலட்சுமியின் உருவத்தைச் சித்திரித்த குறிப்பினால் உணரலாம். இவ்வாறான கஜலட்சுமியின் அமைப்பினைப் பல ஆலயங்களில், சிறப்பாக அம்மன் சன்னிதியின் நுழைவாயிலில் மேற்புறத்தே அமைந்திருக்கக் காணலாம். திருமகள் தம் இல்லத்

1. நெடு நல்வாடை, 83
2. குறிஞ்சிக்கலி, 8, 5-7.

தில் குடி புகுந்திருக்க வேண்டுமென்ற ஆவலில் பொருட் செல்வர்களும் தம் வளமனைகளில் நுழைவாயிலில் மேற்புறத்தே அமைத்து மனநிறைவு கொண்டு வருகின்றனர்.

31.4.1 வைணவ நோக்கில் சக்தி – பிராட்டி (சிறப்பு நோக்கு):

திருமாலின் சிறப்புக்குரிய சக்தியாகத் திருமகள் விளங்குகிறாள் என்பது அனைவரும் அறிந்ததே. தம்மை என்றும் பிரியாதிருக்க வேண்டும் என்னும் கருத்தில் திருமகளைத் தம் மார்பில் கொண்டுள்ளார் என்றுங் கூறுவர். பெருமாளைப் பிரியா இயல்பினளாதலின் **பிராட்டி** என்றே திருமகள் அழைக்கப் படுகிறாள். அலர்மேல் மங்கை உறைமார்பனைப் **பெரியாழ்வார்,**

> ''வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு''[1]

எனப்பாடிச்செல்லும் திருப்பாசுரப் பகுதியால் இது தெற்றென விளங்கும். உயிர்கள் தம் கைங்கரியவுணர்வுடன் திருமாலிடம் சேவை சாதித்து உய்திக்கு வழிகோலுபவள் பிராட்டி; அவள் தாயாக அனைவரையும் எடுத்துக்காக்கும் பொறுப்பினை மேற்கொள்ளுவதால் உயிர்களைக் காக்குங் கடவுளாக விளங்கும் தன் நாயகரைப் பிரியமாலிருக்கிறாள் என்பது உணரவேண்டிய செய்தியாகும். **'புருஷகார'** — தத்துவநோக்கில் 'தெய்வநலத் திருத்தாயாக' விளங்குகின்ற காரணத்தால் வைணவர்கள் **தாயார்** என்றே ஆர்வமுடன் அழைத்துப் பெருமாள் கோயிலில் **தாயார் சன்னிதி**யையும் அமைத்துள்ளனர்.

திருமால் கொள்ளும் அவதாரங்களுக்கேற்பத் **திருமகளும்** பல்வேறு **திருவுருவங்களுடனும் திருப்பெயர்களுடனும் தோன்றியருளுகின்றாள்.** பெருமாளை இறைக்கணமும் பிரியா இயல்பினளாம் பிராட்டி என்பது உண்மையேயாயினும், இராமாவதாரத்தில் பிராட்டி சனக மன்னனின் திருமகளாகத் தோன்றிய நிலையில், பெருமாளை மூன்று முறை பிரித்திருக்க வேண்டியவளாகின்றாள்.

1. நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருப்பல்லாண்டு 2.

இராவணன் சீதையைப்-பிராட்டியை-வஞ்சகமாகக் கவர்ந்து சென்ற நிலையில் இலங்கை அசோகவனத்தில் அவள் சிறையிலிருந்த காலத்தில் பிரிந்திருக்கிறாள்; என்றாலும் அந்தப் பிரிவு இராவணன் முதலிய அரக்கர்களை இராமன் வதஞ்செய்யும் நோக்கிலும், தேவர் முனிவர் முதலிய நல்லோரைத் துன்பங்களினின்று விடுவிக்கும் நோக்கிலும் அமைந்தது. பிராட்டியின் பிரிவு, உயிர்களின் மேல் கொண்ட பரிவு ஆகும்

இராமபிரான் உலகமக்களின் பழிதூற்றலுரைக்கு அஞ்சிப் பிராட்டியைக் காட்டிற்குக் கொண்டுபோய்விடவேண்டிய நிலை ஏற்படுகிறது தன் அண்ணன் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு இலக்குவன் சீதையைக் காட்டிலே விட்டு வருகையில் இரண்டாம் பிரிவு ஏற்படுகிறது. இந்தப் பிரிவில் இதைத் தன் கடமைப் பொறுப்புக்களை உலகிற்குணர்த்த வாய்ப்பினைப் பெறுகிறாள்; இதனைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

இலக்குவன் சீதையைத் தேரிலேற்றிக் கொண்டு போய்க் கங்கைக் கரையையடைந்ததும், தான் அவளைக் காட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்த காரணத்தைக் கூறுகிறான். மனம் நைந்து கலங்கிய சீதை கதறியழுது, "இலக்குவனே இஃது எனக்குப் பொறுக்கத்தக்க துயரமன்று; யான் இப்போதே இக்கங்கையில் வீழ்ந்து உயிரை ஒழித்துவிடலாம் அங்ஙனம் செய்யின் அது உயர்குலத்தில் தோன்றிய பெருமானுக்கு ஒரு பழிப்பாகும். சருவுற்றுள்ள யான் இப்பொழுதே உயிரைத் துறந்தால் குலமரபு அழிந்து, இரகுவம்சம் பாழாய்ப் போம். மகப்பேறு நிகழ்ந்தபின் உயிர்துறந்தால், 'குற்றம் உள்ளவளாகையால் அன்றோ, தன்னைத் தானே முடித்துக் கொண்டாள்' என்று உலகம் பழிப்புரை முழக்கும்'' என்று பலவாறாகச் சொல்லி, உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய சமயத்தும், அது செய்ய மாட்டாமல் பெருமாள் திருவுள்ளத்தையே கடைப்பிடித்துப்பின் சென்று, தன் உயிரைத் தாங்கிக் கொண்டிருந்தாள். இதனால் பரமபுருடனுக்கு உரிமைப்படுதலாகிய பாரதந்திரியம் என்னும் பிராட்டியின் பண்பு வெளிப்பட்டது''[1] என்று ந.ரா. முருகவேள் விளக்கிச் சொல்வது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

1. திருக்கோயில், அக்டோபர், 1971

இதனால் இல்லறத்தில் புகும் மனைவியானவள் கொண்டான் குறிப்பறிந்து தன் கடமைகளைப் பொறுமையுடன் ஆற்ற வேண்டும் என்பதும், 'தற்கொலைக்கு எத்தகைய சூழலிலும் இடந்தரலாகாது' என்பதும், தன் புகுந்த வீட்டிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் குழந்தைகளைப் பெற்று ஆளாக்க வேண்டிய பெரும் பொறுப்பிலிருந்து நழுவக் கூடாது என்பதும் உணர வேண்டிய படிப்பினைகளாகும்.

மூன்றாம் முறையாகப் பிராட்டி பிரிவது பற்றிக் **கம்ப ராமாயணம் உத்தரகாண்டத்தில்** சிறப்பாகக் கூறப்படுகிறது. பெருமாள் முன்னிலையில் சீதை வந்திருக்கும்போதே அவதாரக்கடமை நிறைவேறும் வகையில் பிரிந்து, தான் தன் பிறந்தகமாகிய பூமிக்குள் புகவேண்டி அவள் சித்தமாகிறாள். அப்போது சீதை தன்பெருமாளை வழிபட்டுக் கொண்டே, "அடியேன் பெருமாளையன்றி மற்றெவரையும் மனத்தினாலும் சிந்தியாதவளாயின் இந்தப் பூமிப்பிராட்டி எனக்கு இடங்கொடுக்கக் கடவள்" என்று பலவாறாகச் சொல்லி நிற்கிறாள். அந்நிலையில் பூமி பிளக்கவே அதனுள்ளிருந்து ஒரு சிறந்த ஆசனம் வந்து பிராட்டியைத் தாங்கிக் கொண்டு பூதலத்தினுள் புகுகின்றது; அதுகண்டு விண்ணவர்கள் பூமாரி பொழிந்து புகழ்ந்தனர் என்பது வரலாறு. "பிராட்டியின் இப்பிரிவால், அவளது **அநங்யார்கத்துவம்** என்னும் பரமபுருடனையன்றி வேறு எவர்க்கும் அடிமைப் படாத பெற்றிமை இனிது விளங்குகிறது"[1] என்று விளக்கங் கூறுவார் **ந. ரா. முருகவேள்.**

பிராட்டி வாயிலாக நாம் புரிந்து கொள்ள வேண்டிய தத்துவங்கள் மூன்றாகும். அவை **கிருபை, பாரதந்திரியம், அநங்யார்கத்துவம்** எனப்படும். இவற்றையே **புருஷகாரம்** என்பது வைணவச் சமயமரபு

கிருபை என்பது பிறஉயிர்கள் படும் துன்பத்தைப் பொறுக்க மாட்டாமையாகும். **பாரதந்திரியம்** என்பது, தனக்கென ஒரு தற்சுதந்திரம் கொள்ளாமல் பரமபுருடனாகிய இறைவனுக்கே உரிமைப்பட்டு இயங்குதலாகும். **அநங்யார்கத்துவம்** என்பது

1. திருக்கோயில், அக்டோபர், 1971, பக் 26

பரமநாயகனாகிய ஒருவனுக்கேயன்றி வேறு எவர்க்கும் அடிமை யாகாதிருத்தலாம். இத்தகைய மூன்று பண்புகளாலும் உருவாகும் புருடகாரத்தைப் புரிவதற்காகவே பிராட்டி பல்வேறு திருவுரு வங்களில் பிரானுடன் திவ்ய தேசங்களில் எழுந்தருளியுள்ளாள். **ஆங்காங்கும் அமைந்துள்ள சிற்பத் திருவுருவங்கள் உயிர்களை** உய்திக்கு வழிவகுப்பனவையாக வுள்ளன. பிராட்டி தம்பெருமானை என்றும் பிரியாதவள் என்பதை உணர்த்துவதற்காகவே **இலட்சுமி நாராயணன், இலட்சுமி நரசிம்மன்** முதலிய திருப் பெயர்கள் வைணவ வழக்கில் போற்றப்பெறுகின்றன.

ஆகவே, பெருமானை என்றும் பிரியாதவளே **பிராட்டி** என்பதும், அவதார நோக்கில் பிரிவு எனக் கூறினாலும் பிராட்டி புருடகாரபூதையாக அருள்பாலிக்கிறாள் என்பதும், பரமபுருடனின் ஒருவகைத் திருவிளையாடலாகவே பிரிவு கூறப்படினும் அவர்கள் திருவுள்ளங்களிலே பிரியாமை கடைப்பிடியாகவுள்ள தென்பதும் உணர வேண்டிய செய்திகளாகும்.

31.5. சரசுவதி—பெருமையும் சிற்பச் சிறப்பும்:

பிரமனுக்குத் தேவியாகவும் சிவபிரானுக்கு ஞானசக்தி யாகவும் விளங்கக் கூடிய சரசுவதி, சமய வளாகத்தில் மிகச் சிறப்பினைக் கொண்டவள். வேதகாலத்துத் தெய்வங்களுள் ஒருத்தியாகப் போற்றப்படும் சரசுவதி, வடநாட்டில் கங்கா தேவியைப் போல **நதிதேவதையாகக்** கொண்டாடப்படுகின்றாள். **நதிகளுள் உயர்வானது சரசுவதி;** தேவியருள் மகிமை பொருந்தி யவள் சரசுவதி என்று **ரிக்வேதம்** குறிப்பிடுகின்றது. யாகங்கள் செய்யப்பட்டு வந்தபோதெல்லாம் கூடச் சரசுவதிதேவி ஒரு முக்கிய தேவதையாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறாள் எனச் சமயச் சான்றோர்கள் கூறுவர்.

சரசுவதி வழிபாடு இந்தியாவில் மட்டுமன்றித் **திபேத்து, ஜாவா, ஜப்பான்** போன்ற கிழக்காசிய நாடுகளிலும் கூடத் தொன்றுதொட்டு இருந்து வருகிறது; இதற்கு அந்நாடுகளில் காணலாகும் சிற்பங்களைச் சான்றாகக் கொள்ளலாம். இந்து மதத்தில் மட்டுமன்றிச் **சமண பௌத்த மதங்களிலும்** போற்றப்

படுஞ் சிறப்பினைக் கொண்ட **சரசுவதியை**, ஒரு **சமஷ்டிக் கடவுளாகவே** கொள்ளலாம்.

சைவப் பேரருளாளர் **குமரகுருபர சுவாமிகளுக்குக் கண்** கண்ட தெய்வமாக விளங்கிய கலைமகளின் பெருமையை, அவர் பாடியருளிய **சகல கலாவல்லி மாலையால்** உணரலாம். எல்லாக் கலைகளுக்கும் நாயகியான சரசுவதியைப் பண்டைய சிற்பக்கலைஞர்கள் தத்தம் கலைப் பாணியில் பல்வகைச் சிற்பத் திருவுருவங்களில் வடித்துத்தந்துள்ளனர். இவளுக்கெனச் சிறப்பு அடையாளங்களாக **உருத்திராக்க மாலை, புத்தகம், வீணை, அங்குசம்** ஆகியவை அமைந்துள்ளன. தென்னாட்டைப் பொறுத்த வரையில் சரசுவதியின் வாகனம் **மயில்** ஆகும். அன்னமும் வாகனம் என்பர். ஞான அமைதியின் திருவுருவமாகிய சரசுவதியை வடநாட்டில் வேறு கோணத்தில் காண்கின்றனர். ''வடநாட்டிலுள்ள சில இடங்களில் **ஆடுகள்** கூடச் சரசுவதிக்கு வாகனமாகக் காட்சியளிக்கின்றன. தவிர வடநாட்டில் கூடச் சரசுவதிக்கு நரபலி கொடுக்கும் பழக்கம் இருந்து வந்தது'' என்பது **வி.எஸ். ஸ்ரீநிவாசன்** கருத்து; இது சிந்திக்கத்தகும்.

வீணையுடன் சரசுவதி காட்சியளிப்பது சோழமன்னர்கள் காலத்திற்குப் பிறகே என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். **கங்கை கொண்ட சோழபுரத்தில்** காணலாகும் சரசுவதி, வீணையின்றி **ஞான சரசுவதியாக** இருத்தலைக் காண்க. தஞ்சைமாவட்டம் **கூத்தனூரிலுள்ள** சிறிய ஆலயத்தில் **ஞானசரசுவதியின்** சிற்பம் காணலாம். தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் தென்புறப் பிராகாரத்தின் கோபுரச்சுவரிலும் **ஞானசரசுவதியின்** அழகிய சிற்பத் திருக்கோலத்தினைக் கண்டு வணங்கலாம். அந்த ஞானசரசுவதியின் இரு மருங்கிலும் சேடியர்கள் இருத்தலும் ஒருவகைச் சிற்பச் சிறப்பு என்பர். **தாராசுரத்திலும்** ஞான சரசுவதியின் அழகுச் சிற்பம் உள்ளது.

பல கலைகளுக்கும் நாயகியாக விளங்கும் **கலைமகளுக்குச்** சிற்பத்திருவுருவங் கண்ட கவின்கலையுள்ளம், யாழ்த்தெய்வமாகிய **மாதங்கிக்கோ,** இசைப்பண்களுக்கு (இராகங்களுககு)த் தெய்வங்களாக விளங்கும் **இராகதேவதைகளுக்கோ** சிற்பத்திரு

வுருவங்களை அமைத்ததாகத் தெரியவில்லை. ஆனால், இந்தக் கலைத் தேவதைகளுக்கெல்லாம் சாத்திரங்களில் தியான சுலோகங்கள் போன்ற அரிய குறிப்புக்கள் உள்ளன என்பர்.

31.6. சப்த மாதர்கள்:

ஏழு கன்னியராகிய சப்த மாதர்கள் பழைமையான சிவன் கோயில்களில் இடம் பெற்றிருத்தலைக் காணலாம். அவர்களுக்கு இரு புறமும் வீரபத்திரரும் விநாயகரும் காணப்படுகின்றனர்.

ஒரு காலத்தில் ஏழு கன்னியராகிய **பிராமி மகேசுவரி கௌமாரி வைஷ்ணவி வராகி இந்திராணி சாமுண்டி** எனுஞ் சக்திகளுக்குத் தனித்தனியாகச் சிறுகோயில்கள் அமைந்திருந்தன என்றும், காலப் போக்கில் அவை சிதைந்து விட்டமையால் ஆங்காங்கிருந்த கற்சிலைகளைத் திரட்டிக் கோயில் சுற்றில் அட்ட பரிவார தேவதைகளுள் ஒரு பிரிவில் அடக்கி, மக்கள் வழிபடலாயினர் என்பர். இந்த ஏழு கன்னியருடன் **யோகேசுவரி** என்ற பெண் தெய்வத்தையும் சேர்த்துக் **கன்னியர் எண்மர்** என்றும் கூறுவர்.

31.6.1. புராணப்பின்னணி:

இரணியன் மகன் பிரகலாதனுக்குப்பின் **அந்தகாசுரன்** ஆட்சிக்கு வந்து, நான்முகனிடம் வரங்கள் பல பெற்றுப்பெரு வல்லமையுடன் ஆண்டு வருகையில் வானவர்களைத் துன்புறுத்தி வந்தான். வானவர்களின் முறையீட்டிற்கிணங்கிச் சிவபெருமான் அந்தகாசுரனுடன் போர் புரிய நேர்ந்த போது, அசுரன் தன் காயக் குருதியினின்றும் ஆயிரக் கணக்கான அந்தகாசுரர்களைத் தோற்றுவித்தான். திருமால் தன் சக்கரப் படையால் குருதியில் தோன்றியவர்களைக் கொன்று குவித்த வேளையில், சிவன் அந்தகாசுரனைத் தன் சூலத்தில் கோத்து நடனமாடத் தொடங்கினான்; அந்தகாசுரனது உடம்பினின்று குருதி தரைமீது விழுவதைத் தடுக்க **யோகேசுவரியைத்** தோற்றுவித்தான். அதே நோக்கத்துடன் ஒத்துழைப்பினை நல்க, **பிரமன், மகேசுவரன் விட்டுணு, குமரன், வராக மூர்த்தி, இந்திரன். இயமன்** ஆகிய எழுவரும் தம் சக்திகளின் அடையாளங்களாக முறையே

பிராமி மகேசுவரி வைஷ்ணவி கௌமாரி வராகி இந்திராணி சாமுண்டி ஆகிய எழுவரையும் தோற்றுவித்தனர். அந்தகாசூரன் அழிக்கப் பட்டான் இத்தகைய சூழலே சப்த மாதர்களின் தோற்றத்திற்கான புராண வரலாறு ஆகும். இந்நிகழ்ச்சி நடந்ததாகக் கூறப்படும் திருத்தலம், அட்ட வீரட்டானங்களுள் ஒன்றாகிய திருக்கோவலூர் ஆகும்.

ஏழு கன்னியருள் விட்டுணுவின் சக்தியான வைஷ்ணவி இருக்கையில், (விட்டுணுவின்) பத்து அவதாரங்களுள் ஒன்றான வராக மூர்த்தியின் சக்தியான வராகியும் அமைவதற்குக்காரணம் என்னவெனவினவலாம்.அக்காலமக்களிடையேபல்லவர்கள் சாளுக்கியர்கள் பற்றிய பண்பாட்டுச் சிந்தனைக்கு மதிப்பிருந்தமையால் வராக மூர்த்தியை இயைபுடன் சிந்திக்கும் வண்ணம் சிற்பக் கலை நலம் வராகியைத் தோற்றுவிக்கலாயிற்று. சாளுக்கியர்கள் பல்லவர்கள் ஆகியோரின் குடை வரைக் கோயில்களிலும் வராகம் (பன்றி) புதைச்சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளதையும், கீழைச் சாளுக்கிய மன்னவர்கள் வெளியிட்ட நாணயத்தில் வராகமுத்திரை பதிக்கப்பட்டுள்ளதையும். சிறப்பாகக் கொடியில் வராகவுருவம் பொறிக்கப்பட்டதையும், அவர்களால் வெளியிடப்பட்ட ஒரு வகைப்பொற் காசு 'வராகன்' என்ற பெயருடன் புழக்கத்தில் தொணர்ந்துள்ளதையும் கண்டு இயைபுடன் நினைவுகூரலாம்.

யோகேசுவரியையும் ஏழுகன்னியருடன் சேர்த்து எண்மராகக் கொள்வதை உருவக அணுகுமுறையில் விளக்கஞ் சொல்லத் தலைப் பட்டனர். "எட்டு மாதர்களும், எட்டுக் குணங்களைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றனர்; யோகேசுவரி ஆசையையும், மகேசுவரி சினத்தையும், வைஷ்ணவி பேராசையையும், பிரம்மி ஆணவத்தையும், கௌமாரி மாயையையும், இந்திராணி குற்றங் கண்டுபிடித்தலையும், சாமுண்டி கோள் சொல்லுதலையும், வராகி பொறாமையையும் குறிப்பனவாம். (மேலும்) சிவபெருமான் அந்தகாசுரனுடன் நடத்திய சண்டை அறிவிற்கும் அறியாமைக்கும் இடையே ஏற்பட்ட ஒன்றாகக் கருதப்படுகிறது. கல்வி அறிவால் சினம், பேராசை போன்ற குணங்களை அடக்கத் தவறினால், அறியாமை அதிகரிக்கிறது. அறிவினால் எட்டுக் கெட்ட குணங்

களையும் அடக்கி விட்டால் அறியாமை அழிந்து விடும்; இதுதான் வராக புராணத்தில் அந்தகாசூரனுடன் நடைபெற்ற போருக்கும் கூறப்பட்டுள்ள தத்துவம்"[1] எனவருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கதாகும்.

சப்தமாதர்கள் வழிபாடு முற்காலப் பாண்டியமன்னர்களாலும், கி.பி.9 ஆம் நூற்றாண்டுக்குப் பின் அரசாண்ட பல்லவர்களாலும், சோழர்களாலும், முத்தரையர்களாலும் கைக்கொள்ளப்பட்டது என்பதை வரலாற்று அடிப்படையில் அறியலாம். ஆலம் பாக்கம், வேளச்சேரி, திருத்தணி, திருவக்கரை, சிவபுரிப்பட்டி ஆகிய ஆலயங்களில் அமைந்துள்ள சப்தமாதர் சிலைகள் பிற்காலப் பல்லவர்களாலும் சோழர்களாலும் அமைக்கப்பட்டவை என்பர்.[2]

31.6.1. நடனமாடும் சப்த மாதர்கள்:

சிவபிரான் நடனமாடும் போது அவரோடு சேர்ந்து கொண்டு சப்த மாதர்களும் நட மிடுங் காட்சி பல்வேறு இடங்களில் சிற்பியரால் உருவாக்கப் பட்டுள்ளது. மேலைச் சளுக்கியரின் (கி.பி. ஆறாம் நூற்றாண்டு) கலைப்பாணியில் அய்ஹோளேயிலும், கூர் ஜர பிரதிசாரர் (கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு) கலைப்பாணி யில் இராசஸ்தானத்திலே அபனேரியிலும், அலகாபாத் அருங் காட்சியகத்திலுமாக இத்தகைய காட்சித் திருவுருவங்களைக் காணலாம். திருப்பரங்குன்றம் முதல் குடைவரைக் கோயிலிலும் இவ்வாறான காட்சியைத் தமிழ்ப்பெருமக்களுக்குக் காட்டிடச் சிற்பியர் முனைந்து உருவாக்கினர். ஆனால், "இச் சிற்பங்கள் துரதிர்ஷ்ட வசமாகப் பின் எழுந்த சுவர்களுக்குள் சிக்கி இப்போது வெளித் தெரிய வில்லை. அற்புதமான இச்சிற்பங்களை வெளிக் கொணர வேண்டுமெனின் பின் எழுப்பப்பட்ட சுவர்ப்பகுதியை அப்புறப்படுத்த வேண்டும்.

சப்த மாதருள் பிராமி, சாமுண்டா ஆகிய இருவர் மட்டுமே இப்போது வெளிப்பகுதியில் பாதியுடலோடு தெரிகின்றனர்.

1. இந்து சமயக் கடவுள்களின் திருவுருவங்கள், பக்-75
2. சப்தகிரி, ஜுன், 1990.

பிராமியின் வலப்பக்கத் தலை தெரிகின்றது. இரு கரமும் காணப்படுகின்றன. சாமுண்டாவின் தலை முழுவதும் தெரிகிறது.

இருவருடைய கால்களும் சதுரநடமாடும் சிவனின் கால்களைப் போலவே சதுர தாண்டவ நிலையில் உள்ளன. இவர்களுக்கும் கீழே பூத கணமொன்று முழவை முழக்கிக் கொண்டு இருக்கிறது; ஏனைய மாதர் கட்டிடப் பகுதிக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்; இப்படியொரு அற்புதச் சிற்பத்தை வாதாபி சென்றுதான் காணமுடியும்.

இவ்வடபுறச் சுவரில் மண்டபம் எழுப்பப்பட்ட பகுதியில் சிறு மாடமொன்றும் பூட்டப்பட்டுக் கிடக்கிறது. அதனுள் வராகி, இந்திராணி, கௌமாரி, மாகேசுவரி ஆகியோரும் நடமாடும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய கால்களுக்கடியில் இரண்டு பூத கணங்களின் தலைகள் மட்டும் செதுக்கப்பட்டுள்ளன''[1] என்று செ. வேங்கடசாமி எழுதிச் செல்கையில் நம் சிற்பக் கலைச் செல்வங்கள் எங்ஙனம் முறைப்படி போற்றப் படவில்லை என்பதை அறியலாம்.

31.7. கலையமைப்பில் சப்த மாதர்களும் வீர பத்திரரும் விநாயகரும்:

ஆகம அடிப்படையில் முறையாக அமைக்கும் சிற்பங்களுக்கே தெய்வ நல ஆற்றல் உண்டென்பதைக் கண்டு வருகிறோம். அவ்வாற்றான் வீரபத்திரருக்கும் சப்த மாதர்க்கும் விநாயகருக்கும் அமைந்த இலக்கணங்களைச் சிறிது காண்போம். (ஊர்தி, கொடி, மரம் ஆகியவை சிற்பியின் வசதிக்கேற்ப அமைக்கப்படும்)

அ. வீரபத்திரர்:

நான்கு கைகள், மூன்று கண்கள், சடை, அபய வரதக் கை முத்திரைகள், மேற்கைகளில் சூலம், கதை; ஊர்தி-இடபம், கொடி-இடபம், மரம்-ஆலமரம். (முன்னரே வீரபத்திரரைப்

1. திருப்பரங்குன்றம், பக். 72.

பற்றிக் கூறியிருப்பினும் சப்தமாதருக்குப் பாதுகாப்புத் தெய்வமாக இருக்கையில் காணவேண்டிய அவரது கோலச் சிறப்பு ஈண்டுக் கூறப் பெறும்.)

ஆ. பிராமி:

நான்கு முகங்கள், நான்கு கைகள், சடாமகுடம், அபய வரதக் கை முத்திரைகள், மேற்கைகளில் சூலம், செபமாலை; அன்ன ஊர்தி, அன்னக் கொடி, அரசமரம் ஆகியவை பிராமிக்கு உண்டு.

இ. மகேசுவரி:

நான்கு கைகள், மூன்று கண்கள், அபயவரதக் கைமுத்திரைகள்; மேற்கைகளில் சூலம், செபமாலை; இடப ஊர்தி, இடபக் கொடி, வில்வ மரம் மகேசுவரிக்கு உரியவை.

ஈ. கௌமாரி:

நான்கு கைகள், மூன்று கண்கள், சர்வாபரணம், கிரீடம், அபயவரதக் கை முத்திரைகள், சக்திவேல், மலர்க்கை; மயிலூர்தி, மயில் கொடி, அத்திமரம் ஆகியவை கௌமாரிக்கு உரியவை.

உ. வைஷ்ணவி:

நான்கு கைகள், கிரீட மகுடம், பீதாம்பரம், அபய வரதக் கை முத்திரைகள், மேற்கைகளில் சங்கும் சக்கரமும்; கருடவூர்தி, கொடி—சரக் கொன்றை என்னும் ராச விருட்சம், இவை வைஷ்ணவிக்கு உண்டு.

ஊ. வராகி:

நான்குகைகள், கரண்டமகுடம், அபயவரதக் கை முத்திரைகள், மேற்கைகளில் கலப்பையும் உலக்கையும் உண்டு. மகிடக்கொடி, புன்கமரம் ஆகியவை வராகிக்கு உரியவை.

எ. இந்திராணி:

ஐந்திரணி என்றும் அழைக்கப்படும் இந்த அன்னைக்கு நான்கு கைகள், மூன்று கண்கள், கிரீட மகுடம், சகலாபரணம்,

அபய வரதக் கைமுத்திரைகள், மேற்கைகளில் சங்கும் வச்சிரா யுதமும்; யானை ஊர்தி, யானைக் கொடி, கற்பக விருட்சம் உண்டு.

ஏ. சாமுண்டி:

மேல்நோக்கிய கோசம், நான்கு கைகள், மூன்று கண்கள் புலித்தோல் ஆடை, யானைத்தோல் போர்வை, அபயவரதக் கைமுத்திரைகள், மேற்கைகளில் சூலமும் கபாலமும், கடைவாயில் இரு வீரப்பற்கள், கபால மாலை; பயங்கரத் தோற்றத்துடன் பிரேத ஊர்தி, ஆலமரம், வலக் கால் படுத்து இடக்கால் தொங்குதல் ஆகியவை சாமுண்டிக்கு உரியவை.

ஐ. விநாயகர்:

சப்தமாதர் வரிசையில் அமைக்கையில், அமர்ந்த நிலை, நான்கு கைகள், மேல்கைகளில் அங்குசமும் பாசமும், வலக் கையில் ஒடிந்த தந்தம், இடக் கையில் மோதகம்; பெருச்சாளி ஊர்தி ஆகியவை விநாயகருக்கு உரியவை.

31.7.1. சப்தமாதர்—தத்துவம்:

தீயவற்றை எதிர்க்கும் ஆற்றல்களே சப்த மாதர்களாக உருவகிக்கப் பெறுகின்றன. சண்டன் முசுண்டன் எனப் பெயரிய அரக்கர்கள் முறையே மூளைவலிமையும் உடல் வலிமையும் உள்ளவர்களென்பது உருவகம். இரத்தபீஜன் எனப்பெயரிய அரக்கன் என்பது தீய ஆசையின் உருவகம். அந்த ஓர் ஆசையி லிருந்து பல ஆசைகளாகப் பெருகுவதான இயற்கையைப் புராணம் தத்துவக் குறிப்பாகச் சுட்டும். இவற்றையெல்லாம் அழித்தவை சப்தமாதர்களாகிய சக்திகள்; முன்பே சக்திகளைக் குணங்களாக உருவகிக்கக் கண்டோம், அந்தச் சக்திகளுடன் காமேசுவரியையும் சேர்த்துச் சக்திகள் எண்மர் எனவும் சிலர் கூறுவர். சக்திகள் முறையே போரிட்டு அழிக்க வேண்டியவை எவையெனக் கீழே காண்க.

''யோகீசுவரி — காமம்
பிராம்மி — மதம்
மகேசுவரி — குரோதம்

கௌமாரி — மோகம்
வைஷ்ணவி — உலோபம்
இந்திராணி — மார்ச்சரியம்
(மதாச்சரியம்)
வராகி — அசுயை
சாமுண்டி — பைசன்யம்

தீயவைகளை எதிர்த்துப் போரிடும் ஆத்ம வித்தை தான் சப்தமாதாக்களின் போர் என்பார் டாக்டர் எ.வி. ஜெயச் சந்திரன்; இவ்வுயரிய கருத்துக்களை நமக்கு அறிவுறுத்தி நம்மை நல்வழிப்படுத்தத் தான் அன்னை, ஆலயத்தில் சப்தமாதாக்கள் சன்னதியை அமைத்துள்ளாள் போலும்''[1] எனக்குறிப்பிடுவது போற்றத் தக்கது.

சிவனுடைய அம்சமாகத் தீயசக்திகளை ஒடுக்கத் தோன்றிய வீரபத்திரர் சப்தமாதர்களின் போருக்கும் வெற்றிக்கும் ஒத்துழைப்பு நல்கும் நோக்கத்தில், சக்திகளின் வரிசையில் முதலிடத்தில் வைக்கப்படுகிறார். தீமையை எதிர்த்துப் போரிடும் சக்தியின் செயல்களுக்கு யாதொரு இடர்ப்பாடும் ஏற்படா திருக்கும் பொருட்டுச் சப்தமாதர்களை அடுத்துக் கடைசியில் விநாயகர் வைக்கப்படுகிறார் எனலாம்.

31.7.2. சிற்பத்தில் சப்த மாதர்கள்;

பொதுவாகச் சிவாலயங்களில் தெற்குப் பிராகாரத்தில் வடக்கு நோக்கிச் சப்தமாதர்கள் சிலைகள் அமைக்கப்பட்டிருத்தல் மரபாகும். சப்த மாதர்கள் சிலைகளுக்கு முதலில் வீரபத்திரரும் கடைசியில் விநாயகரும் அமைக்கப்படுதலைமரபாகக் காணலாம். ,'காசிப சிற்ப சாத்திரத்தில் குறிப்பிட்டபடி (சப்த மாதர்) ஒவ்வொரு திருவுருவமும் நான்கு கைகளையுடையது. அபய வரத அஸ்தங்களுடன் தங்களுக்குரிய ஆயுதங்களை ஏந்தியிருக்கும். வேறு சில சிற்ப சாத்திரங்களில் பிராமிக்கு ஆறு கரங்களும், மகேசுவரிக்குப் பத்துக் கரங்களும், கௌமாரிக்குப் பன்னிரண்டு கரங்களும் குறிக்கப்படுகின்றன.......... தமிழகத்தில் நெல்லை

1. சப்தகிரி, ஜூன் 1990.

மாவட்டம் **களக்காட்டில்** அருள்மிகு **சத்திய வாகீசுவரர் கோவிலி லும்** அன்னையர்கள் தமக்குரிய வாகனங்களுடன் காட்சியளிக் கின்றனர். பல்லவர் சோழர் காலச் சிற்பங்கள் நான்கு கைகளு டன் காட்சியளிக்கின்றன ஆனால் கி.பி. 7,8 ஆம் நூற்றாண் டைச் சார்ந்த பாண்டியன் குடைவரைக் கோவிலாகிய, **குன்றத் தூர்** (மதுரை மாவட்டம்), **திருக்கோலக்குடி** (ப.மு.தே.மாவட்டம்) ஆகிய இடங்களில் சப்தமாதர்கள் இரண்டு கைகளுடன் விளங்கு கின்றனர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது''[1] என **அறிஞர் சீ. இலட்சுமணன்** எழுதிச் செல்வது சிந்திக்கத் தக்கதாகும்.

சிற்பியர் பொதுவாகத் தியானமந்திரங்களை அடியொற்றியே சிலைகளை வடித்தாலும், சில வேளைகளில் தம் கற்ப னைக்கும் குறிப்பிட்ட அளவு இடம் தந்து சிலைகளை வடிப்பதி லும் அவற்றை இடம் தேர்ந்து அமைப்பதிலும் நாட்டம் செலுத் தியுள்ளனர், சப்தமாதர் வரிசையில் **வீரபத்திரருக்குப்** பதிலாக **வீணாதர தட்சிணா** மூர்த்தியை அமைக்கும் வழக்கம் உண்டு. ஆனால், **திருக்கோலக்குடிக் குகைக் கோயிலில்** அந்த இடத்தை **இடபாரூடன் (சிவபெருமான்) அடைந்துள்ளார்.** இது சிறப்பாகவும் குறிப்பாகவும் நோக்கத்தக்கது, பசும்பொன் மாவட்டத்தில் திருப்பத்தூரிலுள்ள சப்தமாதாக்கள் கோவில் **பூமாயிஅம்மன் கோவிலென்று** வழங்கப்படுகிறது. ஆனால், சப்த மாதாக்கள் சிலைகள் அங்குள்ளன என்பதும் ஆராயத்தக்கது.

சிதம்பரம் ஆடல் வல்லானால் மிகச் சிறப்பினைப் பெற்றுள் ளது; மேலும், **சிவகாமியம்மையாலும் தில்லை மாகாளியாலும்** மக்களிடையே போற்றுதலைக் கொண்டது. சிதம்பரத்தில் பல் வேறு இடங்களில் பல்வேறு நோக்கங்களில் பரிவார தெய்வங்கள் எனும் உணர்வில் சிற்சில தொன்மையான கோயில்களைக் காணலாம். அவற்றுள் **விளங்கியம்மன் கோயிலில்** சப்தமாதர் சிலைகள் தொன்மையான சிற்ப அமைதியுடன் வழிபாட்டிலிருத் தலைக் கண்டு மகிழலாம். இச் சிலைககள் எக் காலத்தவை என உறுதியாகக் கூற இயல வில்லை.

1. சப்தகிரி, ஜுன், 1990

31.8. சேட்டை (மூதேவி)-புராணக்குறிப்பும் உருவ அமைப்பும்:

திருபாற் கடலைக் கடைந்த நிலையில் **திருமகள், காமதேனு, சந்திரன், உச்சைச்சிரவம்** முதலிய பொருள்கள் **பல** தோன்றியதைக் கூறுவர். திருமகளுக்கு முன்னவளானநிலையில் மூதேவியாகிய **ஜேஸ்டாதேவியும்** தோன்றினள் என்பர். மூதேவியைச் **சேட்டை** என்றும் அழைப்பது வழக்கம். அத்தகைய சேட்டைக்கும் தமிழ் நாட்டில் பல்லவர் காலந் தொட்டு வழிபாடு நிகழ்ந்துள்ளது என்பது சிந்திக்கத்தக்க குறிப்பாகும்: **இராச சிம்மன்** எடுப்பித்த காஞ்சிக் **கயிலாச நாதர் கோயிலில்** சேட்டையின் உருவம் சிறப்பாக அமைந்துள்ளது. கும்பகோணம் குப்பேசுவரர் கோயிலில் சேட்டையின் திருவுருவம் காணப்படுகிறது. **வெடால்** ஆண்டவர் கோயிலில் காணலாகும் சேட்டையின் **சிலை** பற்றிச் சிறிது காண்போம்.

மதுராந்தகத்திலிருந்து சூனாம்பேடு வழியாக 37 ஆவது கிலோ மீட்டரிலும், செய்யூரிலிருந்து சூனாம்பேடு செல்லும் வழியில் 12ஆவது கிலோ மீட்டரிலும் **வெடால்** என்னுஞ் சிற்றூர் உள்ளது. அங்குள்ள கிழக்கு நோக்கியுள்ள வெடால் ஆண்டவர் கோயில் தூங்கானை மாட அமைப்பில் அமைந்துள்ளது.

இக்கோயில் தென்புறம் தனியாக இருக்கும் **சேஸ்டா தேவி** சிலை பல்லவ மன்னர் காலத்தது எனலாம். எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்பெறும் இச் சிற்பம் இக்கோயிற் சிற்பங்களுள் மிகப் பழமையானது, "தலையில் கரண்டமுடி, காதுகளில் பருத்த குண்டலங்கள், அழகிய கழுத்தாரம், அதன்மேல் கழுத்தையொட்டிய அட்டிகை, குவிந்த மார்பகங்கள், பெருத்த வயிறு, காலணிகள், கையணிகள், காக்கைக் கொடி, கையில் துடைப்ப ஆயுதம், அழகிய மகள்' அழகற்ற நந்திமுகங் கொண்ட மகன் ஆகியவற்றுடன் இம்மூதேவி கம்பீரத் தோற்றத்துடன் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

வறுமையில் வாடுவோரும், தீய கோள்களால் துன்பப் படுவோரும், திருமணம் ஆகாதோரும் ஏழு வெள்ளிக் கிழமைகள் வந்து இந்த ஜேஸ்டாதேவிக்குப் பொங்கலிட்டுப் பூசை செய்து

பயன் பெற்றுள்ளனர் எனக் கூறுவர்''[1] என வருங்குறிப்பு மிகவும் பண்பாட்டு அடிப்படையில் சிந்திக்கத் தக்கதாகும்.

சேட்டையின் திருவுருவங்களாகப் பல அமைப்புக்களுடன் சில நூல்கள் கூறுகின்றன; சிலகுறிப்புகளைக் காண்போம்.

1. ''சேட்டையுருவில் இரத்த ஜேஸ்டா நீல ஜேஸ்டா என்னும் இருவகைகள் இருந்தமை விஷ்ணு தர்மோத்திரம் என்னும் நூலின் வாயிலாக அறியப் பெறுகின்றது. ஜேஸ்டா தேவியின் உரு மூன்று பகுதிகளையுடையது. நடுவில் சேட்டையின் உருவம் அமைகையில் ஜேஸ்டா தேவி இரண்டு கைகளும் இரண்டு கண் களும் உடையவள். பெரும் கன்னங்களும் உந்திவரை ஞாலும் (தொங்கும்) பெருந்தனங்களும், பேழைவயிறும் உடையவள். உயர்ந்த நாசியும் தொங்கும் கீழுதடுகளும் உடையவள்; பத்மாசனத்தின் மீது வீற்றிருப்பவள். இரு கால்களையும் தொங்குமாறு விட்டு அமர்பவள்; ஒற்றை முடிச்சினையுடைய கூந்தலையுடையவள். முகத்தில் திலகத்துடன் காணப்பெறு பவள்''[2] என வருங்குறிப்பினைக் காண்க.

2. சேட்டையின் உருவத்தில் வலக்கை நீலோற்பல மலரை ஏந்தியிருக்கும், இடக்கை அவளது இருக்கையின் மீது வைக்கப் பட்டிருக்கும். பல சிலைகளில் இடக்கை, அருகிலுள்ள பெண்ணின் மேல் வைத்திருப்பதாக அமைந்துள்ளது, சிலவற்றில் வலக்கை நீலோற்பல மலரைத் தாங்கியதாகவும், இடக் கை அபயக் கையாகவும் இருப்பது போலக் காணப்படும்.

3. ஜேஸ்டா தேவியின் வலப்புறம் ஒரு கலப்புருவமாகக் காணப்படும், இவ்வுரு மனித உடலும் மாட்டுத் தலையும் உடைய ஓர் ஆணின் உருவமாகும் இது வலக்கரத்தில் தண்டமும் இடக் கரத்தில் பாசமும் ஏந்தியதாக அமையும். இவ்வுருவின் வலக்கால் தொங்க விடப்பட்டதாகவும், இடக்கால் மடிக்கப் பட்டதாகவும் இருக்கும். பூர்வ காரணாகமம் இவ்வுருவத்தினை

1. அமுதசுரபி தீபாவளிமலர் 1989
2. திருக்கோயில், ஜூன். 1980

மூதேவியின் எழுச்சியுற்ற மகன் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

4. ஜேஸ்டா தேவியின் சிலைக்கு அருகில் இடப்புறத்தில் ஒரு பெண்ணுருவம் காணப்படும். இவளைப்பற்றி அறிஞர்கள் கருத்து வருமாறு: இவள் மணமாகாத கன்னியாவாள். இவள் அக்கினிமாதா என்னும் பெயருடையவள் என்று அம்சுமத்பேதாகமம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இவளுடைய இடக்கால் தொங்குவதாகவும், வலக் கால் மடிக்கப்பட்டதாகவும் அமைப்பர். வலக்கரம் நீலோற்பல மலர் ஏந்தியதாக இருக்கும். பூர்வ காரணாகமத்தில் இவள் மூதேவியின் சகோதரியாகக் கூறப்பட்டுள்ளாள். இந்த அருங் குறிப்பு, மூதேவி பற்றிய திருவுருவ நுட்பத்தையறிந்து கொள்ளத் துணைநிற்கும்.

31.8.1. சேட்டை வழிபாடு-சிறப்புக்குறிப்பு:

பல்லவர்கள் காலத்தைக் காட்டிலும் சோழர் காலத்தில் சேட்டை வழிபாடு சிறப்புற்றிருந்தமைக்குக் கல்வெட்டுச் சான்றுகளைக் காணலாம். பார்த்திபேந்திரவர்மன் எனும் சோழனது மூன்றாம் ஆட்சியாண்டில் அமைந்த உத்தரமேரூர்க் கல்வெட்டில் ஜேஷ்டா தேவி வழிபாடு பற்றிய குறிப்பு உள்ளது. "உத்தரமேரூரின் ஒரு பகுதியாகிய குமண்பாடி என்னுமிடத்தில் சேட்டையார் திருக்கோயில் இருந்தது இவளுக்கு அமுதுபடையலும் அருச்சனைகளும் நிகழ்ந்தன. இவ்வாறு வழிபாடாற்ற 1148 குழி நிலம் தரப் பெற்றிருந்தது. மாயிலட்டி என்பவனிடம் முதற்பொருள் கொண்டு, நம்மூர் குமண்பாடி சேட்டையாருக்கு அர்ச்சனா போகத்திற்கும் திரு அமுதுக்கும் வைத்த பூமியைச் சபையினர் இறையிலியாக்கினர்"[1] எனவரும் கல்வெட்டுச் செய்தி சேட்டைக்கு அக்காலத்திலிருந்த சிறப்பினையுணர்த்தும்.

பாண்டிய நாட்டிலும் ஜேஸ்டாதேவிக்கு வழிபாடு சிறப்புடன் நடந்துள்ளது. திருப்பரங்குன்றம் முதலான இடங்களில் சேட்டையார் திருவுருவம் காணப்படுவதால் ஆங்காங்குள்ள சேட்டைக்கு வழிபாடு நிகழ்ந்திருக்க வேண்டுமென அறியலாம். பிற்காலத்தில்

1. திருக்கோயில். ஜுன், 1980.

இவ்வழிபாடு வழக்கிழந்து போயிற்று. சிற்சில கோயில்களில் இதன் சிறப்பினையுணராது, சேட்டையுருவங்களை அப்புறப் படுத்தியுள்ளனர் என்பதும் கருதத்தக்கது.

31.9. கொடிப்பெண்கள்-அமைப்பு:

பொதுவாக ஆகம அடிப்படையில் கோயில் கோபுர வாயிலி லும் உட்புறக் கோயிற் பிராகாரத்துக்குச் செல்லும் வாயிலிலும் சன்னிதிவாயிலிலும் கதவுகள் பொருத்தப்பெறும்; அவற்றின் இரு நெடிய பக்கங்களிலும் அடுக்கடுக்காகக் கொடி வளைவு களுடன் கூடிய கொடிப் பெண்களைக் காணலாம். சிறப்பாக அம்மன் சன்னதி வாயிலில் இத்தகைய கொடிப்பெண் சிற்பங்கள் அமைந்திருத்தலைக் காணலாம்.

அடியவர்களுடைய தெய்வத்திருவருளுக்குத் தாமும் ஆதரவாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில், கங்கையாறும் யமுனையாறும் இவ்வாறு இரு கொடிப் பெண்களாகத் தோன்றிக் கோயில் வாயிலையும் சன்னிதி வாயிலையும் புனித மாக்கி நிற்கின்றன ராம். இதனைச் சமய அடிப்படையில் நம்புவது மரபாகும்.

சிவபிரானுக்கு உகந்த கங்கையையும், திருமாலுக்குக்-கண்ணக் னுக்கு-உகந்த யமுனையையும் இரு கொடிப் பெண்களாக வாயிலில் எதிரெதிரே சிற்ப வடிவில் நிற்கச் செய்யும் உத்தியால் சைவ-வைணவ ஒற்றுமைப் பண்பாட்டினைச் சிற்பியர் இனிது தம் கலைவாயிலாக உணர்த்தியுள்ளனரோ எனச்சிந்திக்கத் தோன்றலாம்.

மேலும், கொம்பினைப் பற்றிப் படரும் இயல்பினது கொடி என்பதும், பெண்ணும் கொடியைப் போன்றே வாழ்வியலில் (கொம்பனைய) நாயகனைப் படரும் இயல்பினள் என்பதும் உலகியல் உள்ளன. இந்த உலகியலுண்மையினை அருளியல் வளாகமாகிய ஆலயத்தில் சிற்பம் வாயிலாகத் -தெய்வநல ஆறுகள் வாயிலாக-உணர்த்தியதும் மிகவும் போற்றற்குரிய அருங்குறிப்பாகும்.

32 சிற்பம் போற்றும் பெண்மை:

உலகில் நடைமுறையில் ஆடவரைக் காட்டிலும் மகளிருக்கென ஒருவகைத் தனித்தன்மையும் ஏற்றமும் தெய்வநலப் பொலிவும் உண்டு. தமிழ்த்தென்றல் **திரு. வி.கலியாண சுந்தரனார்** தம் எழுத்திலும் பேச்சிலும் பெண்மையின் தூயஎழிலில் தெய்வநல இருப்பினைக் கண்டு வழிபாடியற்றியவர் என்பது தெளிவு. பெண்ணின் பெருமையைத் தமிழ்ப் பெருமக்களுக்கு இந்த நூற்றாண்டில் புலப்படுத்திய சான்றோர்களில் இவருக்கெனச் சிறப்பிடம் உண்டு.

பொதுவாகக் கதைகளிலும், காப்பியங்களிலும், காதற் கவிதைகளிலும் மகளிர் எவ்வாறு உயிரோட்டமாக விளங்குகின்றனரோ, அவ்வாறே ஓவியம், சிற்பம், ஆடல் ஆகிய அழகுக் கலைகளிலும் அவர்கள் ஒருவகை நாயகத்தன்மையுடன் **உயிரோட்டமாகக் காட்சியளிக்கின்றனர்.** அதிலும், சிற்பக்கலையில் பெண்மையின் இளமை, எழில், கவர்ச்சி, தெய்வநலம் ஆகிய அனைத்துக்கும் அடிப்படையாக மகளிரின் வடிவங்கள் அமைந்துள்ளன. கஜீராஹோ சிற்பங்களில்தான் காதலின்பப் புலப்பாடு என்று இல்லாமல்; தென்னகத்திலே **காஞ்சிக்கோயில் சிற்பங்கள், குடந்தை இராமசாமி கோயில் சிற்பங்கள், திருவரங்கம் கோயிற் சிற்பங்கள்** முதலிய பல கோயிற்சிற்பங்களிலும் காதற் சிறப்புடன் கூடிய தெய்வநல எழில் கோலங்களைக் காணலாம்; **தேர்ச் சிற்பங்களிலே காதலின் எழிற் கூத்தின் புலப்பாட்டினைச் சிறப்பாகக் காணலாம்.**

இவ்வுலக மகளிருருவச் சிற்பங்களிலிருந்து தெய்வத் தேவியர்களின் திவ்யத் திருமேனி வரையில் பெண் கோலங்களைச் சிலையாகச் செதுக்குவதும், செப்புத்திருமேனியாக வார்ப்பதிலும் பண்டைக் கலைஞர்கள், உயர்ந்த சுவைத்திறனுடன், கலை நுட்பவுணர்வுடன் பக்தியீடுபாட்டுச் சிந்தனையுடன் தம்மையே வழங்கியுள்ளனர். அஃதாவது, பெண்மையை அதற்குரிய அழகின் நிறைவான சித்திரிப்புக்கும் கலையின் தெய்வாம்சத்திற்கும் சிறிதும் குறை யேற்படா வண்ணம் தம்மாலியன்ற கலைத் தொண்டினைப் புரிந்துள்ளனர்.

இந்தியச் சிற்பவுலகில், அதிலும் தமிழ்நாட்டுச் சிற்பவுலகில் கடவுளர் அல்லாத பெண்வடிவங்களை-வனப்புமிகு மங்கையரின் மேனி எழிற் கூறுகளைக்-காணவேண்டும் எனின், நாடாண்ட மன்னர்களின் தேவியர், சேடிப்பெண்கள், ஆடல்நங்கையர், ரிஷிபத்தினியர், நாட்டுப்புறத்துக் குறத்தியர் ஆகியோரின் சிற்பக்கோலங்கள் முதன்மையுற்றிருத்தலைக் கண்டுபோற்றலாம்.

தேவருலக மங்கையரைப் பொறுத்த வரையில் வனப்புமிகு அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை, அப்சரச சுந்தரிகள், இரதி, கந்தருவகன்னியர், இயக்கியர் போன்ற புராணச்செல்வியர் ஆகியோரின் பேரெழிற் கோலங்கள் கலை நாட்டத்தைப்பெறு பவையாகவுள்ளன. தெய்வத்தேவியர் (சக்திகள்), சப்த மாதர்கள் முதலிய தெய்வச் சிலைகளிலும் சாமுத்திரிகா லட்சணமும் சிற்பநூலழகுக் கூறுகளும் கலையமைப்புடன் நேர்த்தியாக அமைந்துள்ளன. இத்தகைய அழகுத் திருக்கோலங்களைத் தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றிலும் கண்டு பாராட்டலாம்.

சிற்ப எழில் கொஞ்சும் கற்சிலைகளுக்கும் செப்புத்திருமேனி களுக்கும் காட்சிக் கருவூலங்களாகத் திருக்கோயில்கள் விளங்கு கின்றன. அரசமாதேவியரின் வாளிப்பான உடலமைப்பு, தீபச்சுடர் போல் ஒளிரும் திருமுகம், பிறைநுதல், கொடியிடை, எழில் சிந்தும் புன்னகை, சங்கு போன்று கழுத்துக்கு மேலும் அழகு சேர்க்கும் அணிகலன்கள், கூந்தலொப்பனை, ஒயிலான தோற்றப் பொலிவு ஆகியவற்றைக் காணப் பாண்டியர், பல்லவர், சோழர், விசயநகர-நாயக்க மன்னர் காலப் படைப்புக்களைக் காண்க; எடுத்துக் காட்டாகச் சிலவற்றைக் காண்போம்.

மதுரைத் திருக்கோயிலில் காணலாகும் மங்கையர்க்கரசி, காஞ்சிக் கயிலாசநாதர் ஆலயத்திலுள்ள ரங்கபதாகை (பல்லவ அரசி), கோனேரி ராசபுரத்திலுள்ள கண்டராதித்த சோழன் மனைவி செம்பியன் மாதேவி, மதுரை திருமலைநாயக்கர் மகாலிலுள்ள நாயக்கமன்னர்களின் தேவியர் முதலியோரின் கற்சிற்பங்கள் சிற்பக் கலைமுத்திரைக்கு எடுத்துக்காட்டுக்களாகும். திரிபுவனம் சரபேசு வரர்கோயிலின் சன்னதி முகப்பின் இருபக்கத்திலும் காணலாகும்

கட்டழகுக் கன்னியரின் சிற்பவுருவங்களும் தமிழர்களின் கலை நேர்த்திக்கு நல்ல அடையாளங்களாகும்.

பெண்மையின் மெல்லியவுணர்களைக் கலை நுணுக்கத்துடன் புலப்படுத்த வாயிலாக உள்ளது நடனக்கலை; அழகும் இளமையும் கைகோத்து நடனமிடும் இளங் கன்னியரின் நளின ஆடற்கலைக் கூறுகளைத் திருவரங்கம், தஞ்சாவூர், மதுரை, காஞ்சி, தில்லை, விருத்தாசலம், திருவாரூர், குடந்தை ஆகிய பல திருத்தலங்களில் கண்டு மகிழலாம்.

அரசகுமரிக்குக் குறத்தி குறிசொல்வதைக் கிருஷ்ணாபுரம் சிற்பங்களில் கண்டு களிக்கலாம். மகளிர்க்குத் திலகம்(பொட்டு) இன்றியமையாச் சிறப்பினையுடையது என்பதை யுணர்த்தும் வகையில் திலகமிட்டுக்கொள்ளும் நங்கை யின் சிறபத்தைத் திருவரங்கம் கோயிலில் காணலாம். இதன் விளக்கம் பின்னர்க்காண்க.

'பெண்மை'யை மக்கள் வாழ்வுக்கு ஒளியூட்டி வழிகாட்டும் பேராற்றல் என்பதை உணரச் செய்தவர்கள் தமிழ்நாட்டுக் கலைஞர்கள். தெய்வநல அழகை மக்கள் வழிபட வேண்டும் என்ற நோக்கத்தில் தாயும் சேயுமாகப் பாசப்பிணைப்புச் சிற்பங்களையும் சிற்பியர் படைத்துள்ளனர். விஷ்ணு சித்தர் எனும் பெரியாழ்வார் தாமே யசோதையாக மாறிய பாவனை யுடன் கண்ணனுக்கு அமுதூட்டியும் சீராட்டியும் மகிழ்ந்தார் என்பதைத் திவ்யப்பிரபந்தத்தில் காணலாம். இதனை மனத்துட் கொண்டு, தாயின் குழந்தைப் பாசத்தைப் புலப்படுத்தும் வகையில் யசோதையும் கண்ணனுமாக அமைந்த சிற்பங்கள் தென்னகத் திருக்கோயில்களில் உள்ளன.

பெண்களே ஒளிவிளக்குகள் என்பதும், விளக்குகளை இரு கைகளிலேந்தித் திருக்கோயில்களின் சன்னிதியருகே பாவை விளக்குகளாகப் பெண்மையைப் போற்றியுள்ளனர் என்பது ஒப்பீட்டு நோக்கில் சிந்தித்துமகிழ வேண்டிய செய்திகளாகும். ஆகவே, பெண்களைத் தீப இலக்குமி களாகப் போற்றும் தமிழ்ப் பண்பாட்டின் சீர்மையை உலகமே வியந்து பாங்குடன் போற்றுவதில் வியப்பில்லை.

இவ்வாறெல்லாம் பலவகைகளில் பெண்மையின் பெருமையை உலகறியச் செய்தவர்கள் தமிழ் நாட்டுச் சிற்பியர் என்பது உண்மையே. எனினும், மாமன்னனைப் பெருமைப் படுத்து மளவிற்குப் பட்டத்துத் தேவியரைக் கூடச் சிற்பத்தில் பெருமைப்படுத்த இயலாத சூழ் நிலையில் ஒரு காலத்தில் இருந்துள்ளனர் என்பதையும் மறப்பதற்கு இல்லை. மாமல்லபுரத்தில் மகேந்திர வர்மனது பெரிய சிலையையும், அவனுக்கு அருகில் விகிதப் பொருத்த மில்லாத அவனது பட்டத்துத் தேவியின் சிறு வடிவினதாகிய சிலையையும் காண்க. இது காலச் சூழலின் கட்டாயம் என்பதைத் தவிர வேறு சொல்வதற்கு நியாயமில்லை.

33. ஆறுகள்-சிற்பம்:

இந்தியநாட்டில் நாடு. ஆறு. மொழி முதலியவற்றையும் தாயாகவும் தெய்வமாகவும் மதித்துப் போற்றுகின்ற பண்பாடு பண்டுதொட்டே இருந்து வருகிறது. இந்திய நாட்டையே 'பாரததேவி'யாக அழைத்து அதனை ஒரு பெண்வடிவிலும், தென்குமரியையே தெய்வத்தாய் என அழைத்து அதனை ஒரு பெண் வடிவிலும் ஓவியம் சிற்பம் முதலிய கலைப்படைப்பில் கண்டு மகிழ்கின்றனர், இதே உணர்வின் விரிவாக்கத்தில், நாட்டிலே பாய்ந்தோடிப் பயிர்வளம் காணச் செய்கின்ற வற்றா நீர் வளமுடைய ஆறுகளை (ஜீவ நதிகளை) மதித்துப் போற்றியுள்ளனர்; இவ்வாற்றான். அவற்றைப்பெண் தெய்வங்களாகக் கலைப்படைப்பில் உருவாக்கி வழிபடுகின்றனர். இந்து மதவுணர்வுடன் தமிழர் சமயத்தொடர்புடன் கங்கை, யமுனை, கோதாவரி, சரயு, சரசுவதி, நருமதை, மகாநதி, பாலாறு, காவேரி ஆகிய ஆறுகளைச் சில இடங்களில் பெண் தெய்வங்களாக வழிபட்டு வருகின்றனர்

சிலை வடிவங்களில் ஆறுகளைக் காண்பதற்கு உதவியாகத் தியான மந்திரங்களையும் மக்கள் உருவாக்கியுள்ளனர். எடுத்துக்காட்டாகக் கங்காதேவியை நான்கு திருக்கைகளுடனும். மூன்று கண்களுடனும் தூய படிக நிறத்துடனும், மகர மீனில் ஏறியமர்ந்திருக்கும் தோற்றத்துடனும் வெண்பட்டு அணிந்தவளாக-மங்களகரம் மிகு அமைப்புடையவளாக- அடியவர்கள்

கண்டுள்ளனர். இந்தப் பொருள் நலத்துடன்கூடிய தியான சுலோகம் வருமாறு:

> ''சதுர்புஜம் திரிநயனம்
> சுத்த ஸ்படிக சந்நிபாம்
> தியாயேத் ஹம் மசராரூடாம்
> சுப்ர வஸ்திராம் சுசிஸ்மிதாம்''

இந்துமதக் கோட்பாட்டிற்கிணங்க இந்தியாவிலுள்ள அனைத்து ஆறுகளையும் நீர்நிலைகளையும் கங்கை யெனப் பாவித்துப் பயன்கொள்ளலாம் என்பர். இதனைத் **தீபாவளி நாளில்** ஒருவரையொருவர் கண்டு அளவளாவுகையில். **'கங்கா ஸ்நானம் ஆயிற்றா?''** எனக் கேட்கும் பழக்கம் இருந்து வருவதால் ஊகிக்கலாம்.

கங்கையைத் தம் சமயப் பண்பாட்டுடன் இணைத்த நிலையில் தமிழர்கள் வாழ்வதால் தெய்வநல கங்கைக்கு ஆலயம்கட்டிக் **கங்கையம்மன் கோயில்** என வழிபாடு பல இடங்களிலும் நிகழ்ந்து வரக் காணலாம்.

33.1. கங்கையம்மன்:

தமிழ்நாட்டில் சக்திவழிபாடு எனும் நோக்கில் காளியம்மனுக்கும், மாரியம்மனுக்கும், எல்லையம்மனுக்கும் அடுத்தபடியாகக் **கங்கையம்மன்** சிற்றூர்ப்புறங்களில் கொண்டாடப் பெறுதலைக் காணலாம். வடநாட்டையும் தென்னாட்டையும் ஆன்மிகவளாகத்தில் இணைத்து ஒருமையுணர்வை ஊட்டவல்ல தெய்வமாகக் கங்கையம்மன் விளங்கி வருகிறாள்,

தமிழ் நாட்டில் பெண் தெய்வங்களுள் சிறுதெய்வமாகக் கருதப்படும் கங்கையம்மன், வடநாட்டில் பெருந்தெய்வமாக மக்களால் வழிபடப்பெறுகிறாள். கங்கையம்மனைப் பார்வதியுடன் இணைத்துக்கண்டு, **அன்னபூரணி** (அன்ன பூர்ணா) என வட இந்தியாவில் அழைக்கின்றனர் ''வட இந்தியக்

குகைக்கோயில்களில் இத்தெய்வத்திற்குரிய சிலைகள் காணப் படுகின்றன. கங்கையாறு சிறந்து ஓடும் அரித்துவாரில் (Haridwar) இத்தெய்வத்திற்கு முதன்மை தரப்படுகிறது. இத்தெய்வம் வெண்மை நிறங்கொண்டது; முதலையை வாகனமாக உடையது. இதன் வலக்கையில் கருநெய்தற்பூவும், இடக்கையில் பூரண கும்பமும் அமைந்துள்ளன"[1] என **இரா. குருநாதன்** தரும் குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

வாரணாசி எனுங் **காசியில்** அமைந்துள்ள தனிமாடக்கோ யிலிலுள்ள **கங்கையம்மனுக்கு** நான்கு கைகளுடன் கூடிய **பளிங்கு உருவம் இருத்தலைக் காணலாம்.** அந்தத் திருவுருவத்தில் ஒரு கை மேல் நோக்கியும், ஒரு கை கீழ்நோக்கியும், ஒரு கை பூவினை ஏந்தியும், ஒரு கை செப்புக்குடம் தாங்கியும் விளங்குதல் சிற்ப நோக்கிலும் தத்துவ நோக்கிலும் இயையுடன் சிந்திக்கத் தக்கது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் **கங்கையம்மன் வழி பாடு திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் மிகுதியாகக் காணப்படுகிறது.** பொதுவாகச் சித்திரை மாதத்தில் கங்கையம் மனுக்கு விழா எடுக்கின்றனர். கேழ்வரகுக் கூழ்வைத்து வழி படுவதும், உடம்பில் ஊசி குத்தியும் அதன் மறுமுனையில் எலுமிச்சம் பழத்தினைக் கோத்துத் தொங்க விட்டும் காலில் பெரிய கட்டையைக் கட்டிக் கொண்டும் ஊர் வலம் வருவதும் ஆகிய நேர்த்திக் கடன் புரிகின்றனர்.

உருவம் செதுக்கப்பெறாது வெறும் கல்லாக அமைந்த உருவினையும் கங்கையம்மன் என்று கொண்டு போற்றி வழிபடுவர். **கங்கம்மன்** என்றும் வழக்கில் இத்தெய்வத்தைக் குறிப்பிடுவர். மக்களுக்குப் பெயராக வழங்கப்பெறும் **கங்கம்மன், கங்கப்பா** போன்ற பெயர்கள் இத்தெய்வ வழிபாட்டின் மேன்மையை உணர்த்துவனவாய் அமைந்துள்ளன. இந்தக் குறிப்பும் பண்பாட்டு அடிப்படையில் மனங்கொள்ளத்தக்கது.

சிற்றூர்ப்புறத் தெய்வமாகிய கங்கையம்மன், சில பேரூர் களிலும் கண்கண்ட தெய்வமாக வழிபடப்படுதலையும்.

1. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி ஆறு, பக், 463

காணலாம். எடுத்துக்காட்டாகச் சென்னைச் சூளைமேட்டில் அமைந்துள்ள **கங்கையம்மனுக்குச்** சிறந்த வழிபாடும் விழாவும் நடைபெறுதலைக் காண்க. அத்தெய்வங்காரணமாக அந்த வளாகத்துத் தெரு ஒன்று **'கங்கையம்மன் கோயில் தெரு'** என்று இன்றும் அழைக்கப்படுதல் சிந்திக்கத்தக்கது.

'நீரின் றமையா துலகு' என்பதை மக்கள் தம் உள்ளத் துட்கொண்டே **கங்கையம்மன்** என்றும், **மழையம்மன்** என்றும், **மாரியம்மன்** என்றும் அமைத்து வழிபடலாயினர்; இதுவே சமயப்பண்பாட்டு வளாகத்தில் சிறப்புப் பண்பாட்டு நோக்கில் கொள்ள வேண்டிய குறிப்பாகும்.

34. விநாயக வழிபாட்டின் தொன்மை:

விநாயகர் அல்லது கணபதியை இந்துக்கள் மட்டும் தாம் வழி பாடு செய்து வருகின்றனர் என்பது இல்லை; **சமணர்களும்,** அவர் களைவிடப் **பௌத்தர்களும்** முறையாகக் கணபதி வழிபாடு புரிந்து வருகின்றனர். இந்தியமக்களிடையே **மராத்தியர்கள்** இவ்வழி பாட்டில் மிகுதியாகச் சிந்தித்து **உலகம்** போற்றும் வகையில் பெரு நாட்டங் கொண்டுள்ளனர். எனவே, **மகாராட்டிர மாநிலம்** கணபதி வழிபாட்டிலும் விழாச்சிறப்பிலும் ஈடுபாடு கொண்ட தாக இன்றும் விளங்கி வருகிறது.

உலகநோக்கில் சிந்திக்கையில் திபேத்து, பர்மா, ஜாவா, இந்தோசீனா, ஜப்பான், இலங்கை, மலேசியா முதலிய பல நாடுகளிலும், இந்து - பௌத்தக் கொள்கைகளைப் பின்பற்றும் பலரும் கணபதியைப் போற்றி வருகின்றனர். இவ்வாறான உலக நாட்டத்தைப் பெற்றுள்ள கணபதியைப் பற்றிய குறிப் புக்கள் வேதத்திலோ சங்க இலக்கியத்திலோ இல்லை. எனவே, **கணபதி** வழிபாட்டினைச் **சங்கம் மருவிய காலத்த தாகவே** ஆய்வியலறிஞர்கள் கொள்கின்றனர்.

பல்லவ மன்னன் **நரசிம்மன்** சாளுக்கியருடன் போர்புரிந்து வெற்றி பெற்று மீள்கையில், அவனுடைய படைத்தளபதியாக விளங்கிய **பரஞ்சோதி, வாதாபியிலிருந்து கணபதியைத் திருச்** செங்காட்டங்குடியில் **கொணர்ந்து கணபதி** வழிபாட்டிற்கு வழி

வகுத்தார் என்பர். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பரஞ்சோதியாகிய **சிறுத்தொண்டர்** இவ்வாறு கொணர்தற்கு முன்னரே, கணபதியால் வழிபடப் பெற்ற சிவபெருமான் (சிவலிங்கம்) **கணபதீச்சுவரன்** என வழங்கப் பெற்றுள்ளான் என்பர். இவ்வாறான தொடர்பிலே **திருச்செங்காட்டங்குடியில்** அமைந்த கோயில் **'கணபதீச்சரம்'** என்று அழைக்கப்படும்; இந்த வழக்காறு எப்போது தோன்றியது என்பது சரியாகப் புரியவில்லை. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள **பிள்ளையார்பட்டி விநாயகர்** கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்பதும் ஆராய்ந்து பார்த்தற்குரியதாகும்.

கணபதியின் சிற்பம் முதன் முதலில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தான் காணப்பட்டது என்பர்; எனினும், 4-ஆம் நூற்றாண்டில் தான் முழு உருவமும் உறுப்புக்களும் காணப்படுகின்றன. சிற்பங்களில் பலவித உருவங்களோடு கணபதியைக் காணலாம். **பலவித** ஆசன பந்தங்களில் வீற்றிருப்பவராகவும், நர்த்தனம் செய்பவராகவும் அவர் காணப்படுகிறார்; "ஐந்து பிள்ளையார்களாயிருந்து, பின் ஐந்துதலைப் பிள்ளையாரானார்; **கனேசானி என்ற** பெண் உருவத்தோடும். சில சமயம் வைரவ மசத்தோடும், பெருச்சாளியில்லாமல், மயில், தவளை, ஆமை முதலிய வாகனங்களோடும் காணப்படுகிறார். நேபாளத்தில் சூரியனது அமிசமாயும் சீனத்திலும் ஐப்பானிலும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு நிற்கும் காங்கி-டென் என்ற இரட்டைத் தெய்வமாகவும் தென்படுகிறார்", எனுங்கூற்று[1] பண்பாட்டுப் பரவல் அடிப்படையில் ஆராயத் தக்கதாகும்.

34.1 விநாயகர் பண்பாட்டுத் தாக்கம்:

சப்தமாதாக்கள் நாட்டு நலத்துக்கும் பாதுகாப்புக்கும் துணை நிற்பவர்கள் என முன்னரே கண்டோம். விநாயகர் நன்மைதரும் எந்தச் செயலுக்கும் பாதுகாப்பாக விளங்கும் கடவுள். எனவே, சப்தமாதாக்களை அமைக்கும் வகையில் விநாயகரையும் உடன் வைத்து வழிபடத் தொடங்கினர். பண்பாட்டுத் தாக்கம் எனும் நோக்கில் காண்கையில், காஞ்சியில்

1. கலைக் களஞ்சியம், மூன்றாந் தொகுதி

உள்ள **கைலாச நாதர் கோயிலில்** கீழ்க்காணும் ஒரு சிறப்புக் குறிப்பினை நினைவிற் கொள்ளலாம்.

"இராச சிம்மனால் காஞ்சியில் கட்டப்பட்ட கயிலாச நாதர் கோயிலில் **கணேசர் சிற்பம் சப்த கன்னியருடன் காணப் படுகிறது.** இவ்வாறு சப்த கன்னியருடன் விநாயகரை அமைக்கும் வழக்கம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் **சாளுக்கிய நாட்டில்** அதிகமாக இருந்தது. எனவே, இவ்வழக்கம் சாளுக்கிய நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்குப் பரவியிருக்க வேண்டும் என்பது தெளிவாகும்"[1].

34.2. விநாயகர் - மூர்த்திச் சிறப்பு:

உலகத்தில் இந்து சமயத்தினர் எந்த நற்செயலைத் தொடங்கினாலும் விநாயகனை வணங்க வேண்டுமென்பது அவர்கள் தம் உள்ளார்ந்த உணர்வும் மரபும் ஆகும். விநாயகன் என்பதால் தனக்கு மேற்பட்ட நாயகன் அல்லது தலைவன் இல்லாதவன் எனப் பொருண்மை கொள்வர். ஆரும் அளவறியாத ஆதியும் அமுதமுமான முழுமுதற்கடவுளாகவே விநாயகன் அல்லது கணபதியைச் சிறப்பாகக் கொண்டுள்ளனர். காணாபத்திய அடியவர்கள் மக்களுக்கும், மற்றொர்க்கும் நேரவிருக்கும் இடுக்கண்களையும், இடையூறுகளையும் (விக்கினங்களையும்) தீர்த்து அருளுங் காரணத்தால் விநாயகன் எனப்பெரிதும் போற்றுவர். விக்கினேசுவரனைப் பரவி, எந்த நற்செயலைத் தொடங்கினாலும், எண்ணியதை எண்ணியாங்குத் திண்ணிதாய்ச்செய்து முடிக்கலாம் என்பதும், இல்லையெனில் தடைகள் பல நேரும் என்பதும் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்து வருகிறது.

மக்களேயன்றித் தெய்வங்களும், தேவர்களும் விநாயகனை மதித்துப் போற்றவேண்டிய நிலையில் உள்ளனர் என்பதற்குப் புராண நிகழ்ச்சிகள் உள்ளன. எடுத்துக்காட்டாகத் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள் தொடர்பான ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம்

1. கோயிலும் இறைவழிபாடும், பக். 5,6.

தன் தந்தையாகிய சிவபெருமான் தன்னைப் பொருட்படுத்தாமல் - நினையாமல் - முப்புரம் எரிசெய்ய புனைந்த போது, அவருக்கே இடையூறு விளைவிக்கக் கருதினான் விநாயகன். அஃதாவது, திரிபுர அசுரர்களை வெல்வதற்குத் தன் திருத்தேர் ஏறிச் சிவன் புறப்படுகையில் அவனது தேரின் அச்சினை முரியுமாறு செய்தான்; இதனை அருணகிரி நாதர்,

"முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா"[1]

எனக் கூறிச் செல்வதால் உணரலாம். அடியார்களின் இடையூறுகளை நீக்கியருளுவதற்காகவே விநாயகன் தோன்றியுள்ளான் என்பது,

"பிடிஅதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே"[2]

என்னும் திருஞான சம்பந்தரின் திருவாக்கால் அறியலாம்.

நம்பியாண்டார் நம்பிகளின் திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலையில்[1], "என்இடர் கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்" என்றும் விநாயகபுராணத்தில், "இடர்கள் முழுவதும் அவனருளால் எரிவிழும் பஞ்செனமாயும்" என்றும், வரும் குறிப்புகளைக் கொண்டு விநாயகன் மக்களின் இடர்தவிர்க்கும் பெருங்கடவுள் என்பது தெளிவு.

விநாயகன் - தத்துவம்:

விநாயகனது திருவுருவம், ஆனைமுகங் காரணமாக ஓங்காரமாகிய பிரணவத்தினை நினைவூட்டுவதாகக் கொள்வர். ஓங்கார வடிவினன் இவன் என்பது விநாயகர் அட்டோத்திர சத நாமங்களில், "ஓம் ஓங்காராய நம" எனத் துதிக்கப் படுவதால் உணரலாம்.

1. திருப்புகழ், (கைத்தலம் நிறைகனி)
2. திருமுறை, 1. 153, 5

விநாயகனுடைய நான்கு கைகள் வானவர்இயல்பையும் **தும்பிக்கை** விலங்கியல்பையும் குறிக்கும் என்பர். தும்பிக்கை யுள்ளிட்ட ஐந்து கைகளும் பண்புத் தத்துவங்களாகும். மத்தள வயிறும், குறுகிய கால்களும் பூத இயல்பையும், ஏனைய உடலுறுப்புகள் மானுட இயல்பையும், ஒரு பக்கம் உள்ள கொம்பு ஆண் இயல்பையும், மற்றொருபக்கம் கொம்பின்றி யிருப்பது பெண் இயல்பையும் புலப்படுத்திக் காட்டும். பொது வாக **ஆனைமுகம்** அஃறிணையையும், ஏனைய உறுப்புக்கள் உயர்திணையையும் உணர்த்தும் என்பர்.

வெட்ட வெளியில் — அம்பலம் பெரு வெளியில் - ஓங்கார நாதத்தினின்றும் உண்டாகியது உலகம் என்பர். அந்த ஓங்கார அடிப்படையை நினைவிற் கொள்ளுமாறு ஆனை முகனது திருவடிவம் அமைந்திருக்க, உலகம் யாவும் அவனுக்குள் அடக்கம் என்பதை உணர்த்தும் வகையில் அவனது மத்தள வயிறு உள்ளது என்றும் தத்துவம் கூறுவர்.

ஆனைமுகனது ஊர்தி **பெருச்சாளி;** பெருச்சாளி நிலத்தைக் கீழறுத்துச் செல்லும் இயல்பினது. அதனை அடக்கியாளும் திறத்தினன் ஆனைமுகன் என்பது உட்கிடை. "தமிழ்நாட்டில் 'விநாயகர் அறுவடைக்குரிய கடவுள்' என்றும், அதுபற்றியே அறுவடைப்பயனை அழிக்கும் பெருச்சாளியை அடக்கி ஊர்தி யாகக் கொண்டுள்ளார்"[1] என்றும் கூறுவது ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தக்கது. உழவர்கள் அரும்பாடுபட்டுப் பயிர் விளை வித்தாலும், பயிர்களை எலிகளும், பெருச்சாளிகளும், பெரு மளவுக்கு அழித்தலால் வேளாண்மை பாதிக்கப்படும். அந்தப் பாதிப்பிலிருந்து உழவர்களை விடுவித்து உதவியருள்வது விநாயகர் என்று நினைவிற் கொள்ளுமாறு **பெருச்சாளியூர்தி** கருதப்படுகிறது. மேலும், தத்துவ அடிப்படையில் காண்கையில் ஐந்து கைகளுள் ஒன்றில் அமைந்த **மோதகம்** ஆன்மாக்களைக் காக்கும் பொறுப்பையும், பிறிதொன்றிலுள்ள **தந்தம்** தேவர் களுக்கு அருள்செய்யும் நோக்கத்தையும், மற்றொன்றிலுள்ள **நீர்க்கலசம்** உயிர்களின் மாயையை அகற்றும் நோக்கத்தையும், பிற இருகைகளில் கொண்ட **பாசக்கயிறும்** அங்குசமும் ஆன்

1 திருக்கோயில், அக்டோபர், 1969

மாக்களைத் தீங்கு அணுகாமல் காக்கும் நோக்கத்தையும் குறிக்கும் என்பர். வேறொரு நோக்கில் ஐங்கரனின் ஐந்து திருக் கைகளும் **படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்** ஆகிய இறைப்பண்புகளாம் ஐந்தொழிலைக் குறிக்கும் என்பர்.

சிவபரம் பொருளை நினைவூட்டும் வகையில் ஆனை முகனுக்கும் மூன்று கண்கள் உண்டு. இம் **மூன்று கண்களும் சூரியன், சந்திரன், அக்கினி** ஆகியவற்றை நினைவு படுத்தும்.

சிவபெருமானுடைய கணங்களுக்குப் பொறுப்பான அதிபதி யாக விளங்கும் காரணத்தால் விநாயகனைக் **கணபதி கண நாயகன்** கணேசன் என்றும் வழங்குவர்.

விநாயகன் திருக்கைகளிலுள்ள மோதகம், பாசம், அங்குசம், ஒற்றைக் கொம்பு ஆகிய ஒவ்வொரு பொருளுக்கும் தத்துவம் உண்டென்பதை முன்னரே கண்டோம்; மேலும், சிறிது விளக்க மாக வேறொரு நோக்கில் காண்போம்.

விநாயகனுக்குப் **பிள்ளையார் சதுர்த்தியன்று மோதகம்** செய்து படைத்து வழிபடுவர். மோதகமானது எள், வெல்லம் ஆகிய வற்றால் செய்யப்படும் இனிப்புப் பண்டம். மோதகத்திலுள்ள **எள்** உலகப் பற்றைக் குறிப்பதாகக் கொண்டு அதை மனிதன் தியாகம் செய்ய வேண்டும் என்றும், அப்போது தான் மறுமை யின்பம் கிட்டும் என்றும், மறுமை இன்பத்தை வெல்லம் குறிப் பிடுவதாகக் கருதியே எள்ளுடன் வெல்லம் சேர்க்கப்படுகிறது என்றும் கூறுவர் இந்த நோக்கத்தில் படைக்கப்படும் மோதகத் தினை விநாயகன் மனமகிழ்ச்சியுடன் ஏற்பதன் அடையாளமாக அவனது மோதகக் கை அமைந்துள்ளது எனலாம்.

மற்றொரு கையில் உள்ள **பாசம்**, மக்களுக்கு எமபயத்தை நினைவூட்டி, நமன் தமர் எமபாசத்துடன் அணுகுமுன், தன் திருவடி நிழலை நாடி அடைவதால் உய்யலாம் என்னும் திருக் குறிப்பினைக் கொண்டது என்பர்; மேலும், பாசம் என்பதைக் **குடும்பப் பாசம்**, அல்லது உலகப்பற்று எனக் கொண்டு வாழ்க் கையிலுள்ள சிற்றின்பமாகிய **பாசம் ஒருநாள் எமபாசமாக மாறலாம்** என நினைப்பதற்கு இஃது அடையாளமாகும். எனவே

மறுமை இன்பத்தை அடைய உலகியல் பற்றினை அழித்தல் நல்லது - உகந்தது - என்பது கருத்து. ''பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு''[1] எனும் வள்ளுவர் வாய்மொழியை ஈண்டு இயைபுடன் நினைவுகூரலாம்.

பிறிதொரு கையில் உள்ள **அங்குசம்** மக்களின் **அறிவைச்,** சிறப்பாக **விவேகத்தை,** உணர்த்துவதாகும். மானுடமனம் பல்வேறு ஆசைகளில் சிக்குண்டு, அலைமோதி அல்லல் படுகின்றது. அந்நிலையில் விவேகமாகிய நல்லறிவே - **மதிநல உணர்வே** - மனத்தை அடக்கியாண்டு துணைநிற்கும். ஈண்டு விவேகத்தின் சிறப்பை நன்கு புரிந்து கொள்வது நல்லது. மனத்தைத் தோணியாக்கி, உலகியல் வாழ்க்கையைத் தோணிப் பயணமாக உருவகித்துச் செல்லும் **அப்பரடிகள்,**

''மனமெனுந் தோணிபற்றி மதியெனும் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகெட லோடும் போது
மனனெனும் பாறை தாக்கி மறியும் போ தறியவொண்ணா
துனையுனும் உணர்வை நல்காய் ஒன்றியூ ருடைய கோவே''

எனக் கூறிச் செல்வது காண்க. இதனுள் உணர்வு **என்பது விவேகத்தைக் குறிக்கும்.** மனம் பல்வேறு சுழற்சிகளால் அலமந்து துடிக்கும் நிலையையும், அதற்குள்ள உய்தியையும் **வடலூர் வள்ளற் பெருமான்,**

''சூரிட்ட நடையில் என் போரிட்ட மனதை நான்
சொல்லிட்ட முடன் அணைத்துத்
துன்றிட்ட மோனமெனும் நன்றிட்ட அமுதுண்டு
சும்மா இருத்தி யென்றால்
காரிட் டிதற்குமுன் யாரிட்ட சாபமோ
கண்டிலேன் அம்மம் மஓர்
கணமேனும் நில்லாது பொல்லாது புவியிற்
கறங்கெனச் சுழல்கின்றதே

1. குறள் 350
2. திருமுறை, 4,46,2.

தாரிட்ட நீ அருள் சீரிட்டி டாய்எனில்
தாழ்பிறவி தன்னில் அதுதான்
தன்னை வீழ்த்துவதன்றி என்னையும் வீழ்த்தும்இத்
தமிய னேன்என் செய்குவேன்
ஆறிட்ட சடையாளர் தில்லையம்பதி மருவும்
அண்ணலார் மகிழும் மணியே
அகிலாண்ட மும்சரா சரமும் ஈன்றருள் பரசி
வானந்த வல்லி உமையே''[1]

என விளக்கிச் செல்வதால் அறியலாம். நிலையின்றிச் சுழலும் **மனத்தை அடக்கியாளத் திருவருள்வயப்பட்ட அறிவே-விவேகமே-துணை நிற்கும்** என்பது இதனால் உணரப் பெறும். இத்தகைய பொருண்மையுடன் கூடிய 'அறிகுறியாகவே விநாயகன் தன் கையில் அங்குசத்தை ஏந்தியருள்கின்றான்.

மேலும், விநாயகனாகிய **கணபதி** எனும் பதத்திற்குத் தத்துவப் பொருளும் கூறுவர். கணபதி என்பதில் '**க**' என்பது மனோவாக்குகள் என்றும், '**ண**' என்பது அவற்றைக் கடந்த நிலை என்றும், அவ்விரண்டுக்கும் '**பதி**யாக' - ஈசனாக - விளங்குகின்றான் என்றும் கூறுவர். இதனால் கணபதியே **கணேசன்** என்றும் அழைக்கப் படுகின்றான்.

சிலர் '**க**' என்பது அறிவு என்றும், '**ண**' என்பது வீடு என்றும் கொண்டு, கணேசன் அறிவுக்கும், வீட்டுக்கும் உரிய தெய்வம் என்று கூறுவர். '**வக்கிரதுண்டர்**' என்னும் அவருடைய பெயர் கொடிய மாயையைத் துண்டித்து அருள்பவர் என்றும் கூறுவர். "**லம்ப உதரர்**" (பெருவயிறர்) என்னும் அவருடைய பெயர், தம் அறிவிற்குப் புலனான பிரபஞ்சம் முழுவதையும் உண்டு தம்முள் அடக்கிக் கொள்பவர் என்றும் பொருள்படும். அவர் ஊரும் வாகனமாகிய **மூஷிகம்** (மூஞ்சூறு) நமக்குள் இருந்து நம்மை அழிக்கும் கள்ளத் தன்மையான உலகப்பற்று என்றும், அவர் உண்ணும் மோதகம் இன்பத்தைப் பயக்கும் ஞானம் என்றும் கூறுவார்கள்''[2] என்பது சிந்திக்கத் தக்கசெய்தியாகும்.

1. திருவருட்பா. 2596
2 கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று

சக்திகள் ஐம்பத்தொருவகை என்பது இந்து சமயத்தினர் கொள்ளும் மரபாகும். சக்தியொடு தொடர்புபடுத்தித் திருமுருகன் கூறப்படுவது வழக்கமாகும். **'திருமுருகனே சக்திநாதன்'** என்று அழைக்கப்படுபவன். அவனையொத்த சக்திச் சிறப்பு **விநாயகனுக்கும்** உண்டு. ''சக்திகள் ஐம்பத்தொரு வகை என்றும், அதனால் கணபதியும் ஐம்பத்தொரு வகை என்றும், ராகவபட்டர் என்பவர் **சாரதாதிலகம்** என்ற நூலின் உரையில் கூறுகிறார்,''[1] என்னும் குறிப்பு இயைபுடன் மனங்கொள்ளத் தக்கதாகும்.

பல பண்புகளின் உருவகங்களை இந்து சமயத் தெய்வங்களிடம் பொருத்திக் காண்பதை அடியவர்கள் ஆர்வமுடன் போற்றி வருகின்றனர். அவ்வாற்றான் **கணபதிக்கு** அமைந்துள்ள உருவகக் கூறுகளும், தத்துவங்களும் தமிழர் தம் கற்பனையையும் சமயப் பண்பாட்டினையும் புலப்படுத்தி நிற்கும்.

கணபதியைப் **பிரமசாரியாகவே** பொதுவாகக் கூறுவர். ஆனால், உருவக அணுகுமுறையாலும், தத்துவக் கோட்பாட்டாலும் அவரே ஒருவகையில் இல்லறத்தாராகப் போற்றப் படுகின்றார். விநாயகர் தம் மடிமேல் சக்தியை வைத்துக் கொண்ட நிலையில் வல்லப **கணபதியாகப்** போற்றப்படுகிறார் என்று காணபதர் கூறுவர். விநாயகர் தெளிந்த அறிவையும், பயனையும் நல்குவதன் காரணமாக அவருக்குச் **சித்தி, புத்தி** என்ற தேவியர்களும், **க்ஷேமம், லாபம்** என்ற புதல்வர்களும் இருப்பதாகவும், அவர் காரியங்களைக் கெடுக்கும் ஆணவம் என்ற அரக்கனை அழித்து வெல்லுவதாகவும் கூறுவார்கள்.[2] தென்னாட்டில் சிறப்பாகத் தமிழ்நாட்டில் சித்தி, புத்தி என்ற தேவியருடன் கூடிய விநாயகர் திருவுருவங்கள் பலவாக அமைந்துள்ளன.

1 கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று

2 மேலது

34.3. விநாயகர் - சிலை செய்யப் பயன்படும் பொருள்கள்:

கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே தமிழ்நாட்டுக்கு பெரிதும் அறிமுகமாகிப் பரவிய நிலையில் ஆலமரம், அரசமரம், வன்னி மரம் வேப்பமரம், ஆற்றங்கரை, குளக்கரை, முச்சந்தி, மலை, முக்கு, நாற்சந்தி, வீட்டுமாடங்கள், ஊர்க் கோடி முதலிய இடங்கள் எங்கெங்கும் குடிகொண்டு அருள்பாலித்து வருகிறார் விநாயகர் எண்ணிலடங்காப் பெருமையுடைய அவரை மக்கள் தத்தம் தேவைக்கேற்பக் களிமண்,பசுஞ்சாணம், பசுவெண்ணெய், பனைவெல்லம், மஞ்சள், கருங்கல், உலோகம், வெள்ளைச்சலவைக் கல், அத்தி மரம், வெள்ளெருக்கு வேர், ஆகியவற்றால் உருவாக்கி வழிபாடு புரிந்து வருகின்றனர். எனினும், **விநாயகர் சதுர்த்தி** நாளில் களிமண் பிள்ளையாரும், பொங்கல் **திருநாளில்** பசுஞ்சாணப் பிள்ளையாரும், **நோன்பு** சடங்கு முதலிய **காலங்களில்** மஞ்சள் பிள்ளையாரும் வீட்டு வழிபாட்டில் இடம் பெறுகின்றனர் கருங்கல் பிள்ளையாரும் உலோகப் பிள்ளையாரும் கோயில் வழிபாட்டில் இடம் பெறுகின்றனர். இஃது ஒருபுறமிருக்க வியக்கத் தக்க வகையில் வேறு பல் பொருள்களாலும் பிள்ளையார்ச் சிலைகள் உருவாக்கப் பட்டுக் கோயில் வழிபாட்டில் இடம் பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக. ஒரு வகை நுரையால் உருவாக்கப்பட்ட **'வெள்ளை வாரணர் சிலை,** கும்பகோணத்திற்கு அருகேயுள்ள திருவலஞ்சுழித் தலத்தில் வழிபாட்டில் உள்ளமையைக் காண்க.

''பொதுவாக எல்லாவற்றிலும், சிறப்பாக **'வெள்ளெருக்கு வேரிலான பிள்ளையாருக்குத்** தெய்வநல ஆற்றல் **மிகுதியாகவுண்டு'** என்பது அகத்திய முனிவர் கூற்றாகும்; இது சிந்திக்கத் தக்கதாகும். எனினும் இக்காலத்துக் கலைஞர்கள் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டுப் பல்வேறு அளவுகளில் பல்வேறு பொருள்களால் பிள்ளையார் சிலைகள் செய்து மக்களின் நாட்டத்தைக் கவர்ந்து வருகின்றனர். அரை சென்டிமீட்டர் அளவு முதல் ஐந்தடி உயரம் வரை, பல அளவுகளில் கிடைத்த பிள்ளையார்கள் மஞ்சள், களிமண், வெட்டிவேர், தங்கம், வெள்ளி, கருங்கல். பிளாஸ்டர் ஆப் பாரீஸ், சந்தனம் போன்ற இருபதுக்

கும், மேற்பட்ட பலவித மூலப் பொருட்களால் செய்யப் பட்டு இருந்தன. வெள்ளெருக்கு வேரில் ஆன பிள்ளையார் தான் இதில் விசேடமானது''[1] என வருங்குறிப்பு ஈண்டு இயைபுடன் சிந்திக்கத் தகும்.

34.4. விநாயகர் - பல்வேறு திருவுருவங்கள்:

இறைவன், மக்களின் உய்திககாகவே பல்வேறு திருவுருவங்களைத் தன்னிச்சை வாயிலாக எடுத்துக் கொண்டருள்பவன். ''நெஞ்சினால் நினைப்பான் யவன் அவன் ஆகும் நீள்கடல் வண்ணனே''[2] என **நம்மாழ்வாரும்,** ''கருதுவார் கருதும் உருவமாம் கங்கை கொண்ட சோளேச்சுரத்தானே''[3] எனக் **கருவூர்த் தேவரும்** அருளிச் செய்துள்ளமை காண்க. அடியார்களின் விருப்பத்திற்கேற்பப் பல்வகைத் திருவடிவங்கள் கொள்ளுதல் ஆனைமுகனாகிய விநாயகனுக்கும் உண்டு. அவன் பல்வேறு வகைகளில் காட்சியளித்து நலம் புரிந்தருளுதலை நூல்கள் முப்பத்திரண்டு வகைகளாகக் குறிப்பிட்டுள்ளன. அவை வருமாறு:

1. பால கணபதி
2. தருண கணபதி
3. பக்தகணபதி
4. வீர கணபதி
5. சக்தி கணபதி
6. துவஜ கணபதி
7. சித்தி (பிங்கல) கணபதி
8. உச்சிஷ்ட கணபதி
9. விக்கினராச கணபதி
10. க்ஷிப்பிர கணபதி
11. ஏரம்ப கணபதி
12. லட்சுமி கணபதி
13. மகா கணபதி
14. விஜய (புவனேச) கணபதி
15. நிருத்த கணபதி
16. ஊர்த்துவ கணபதி
17. ஏகாட்சர கணபதி
18. வர கணபதி
19. திரியட்சர கணபதி
20. ஹரித்ர கணபதி
21. ஏகதந்த கணபதி
22. சிருட்டி கணபதி
23. உத்தண்ட கணபதி
24. ருணமொச்சக கணபதி
25. துண்டி கணபதி
26. துவிமுக கணபதி
27. திரிமுக கணபதி
28. பஞ்சமுக கணபதி
29. சிம்ம கணபதி
30. யோக கணபதி
31. துர்க்கை கணபதி
32. சங்கட ஹர கணபதி,

1. தமிழ் உலகம்-இதழ், அமெரிக்காவில் வெளியிடப் பெற்றது
2. திருவாய் மொழி, 3, 6, 9
3. திரு விசைப்பா (கங்கை கொண்ட சோளேச்சுரம்) 5, 4

அரித்திர கணபதிக்குப் பதிலாக க்ஷிப்ர ப்பிரசாத கணபதியைக் கூறுவதும் உண்டு. மேற்கண்ட கணபதி வடிவங்களைச் சிற்பத்திலும், ஓவியத்திலும் அமைத்து அடியவர்கள்வழிபட்டு வருகின்றனர் இவ்வாறான திருவுருவங்களைப் புகழ் பெற்ற விநாயகர் திருக்கோயில்களில் கண்டு களிக்கலாம். மேலும், இவற்றுள் முதற்கண் உள்ள **பதினாறு வகை கணபதிகளின் திருவுருவங்களும் ஒரு வகையில் மிகச் சிறப்பிடம் தரும் வகையில் அவற்றைக் கொண்டாடுவர்; அவை காஞ்சி காமகோடி பீடாதிபதி** அவர்களால் நிறுவப் பெற்ற **இராமேசுவரம்** மண்டபத்தில் மிக அழகிய வண்ணம் எழுந்தருளக் செய்யப் பெற்றுள்ளன. அங்கே, அவற்றைக் கண்டு போற்றி மகிழலாம்.

34.5. விநாயகர் - கச்சியப்ப முனிவர் கற்பனையில்:

''**கவிராட்சசர்**'' எனப் புலவர்பெருமக்களால் பாராட்டப் பெற்ற **கச்சியப்ப** முனிவர் தாம் பாடியருளிய **தணிகைப் புராணத்தில்,** ஆபத்சகாய விநாயகப் பெருமானின் சிறப்பினைக் கற்பனை நயத்துடன் போற்றியுள்ளார். ஐங்கரனாகிய விநாயகரின் ஐந்து திருக்கைகளும் புரிகின்ற செயல்களை அழகுறச் சித்திரிக்கையில், ஒரு கையில் மோதகம் ஏந்தியும், மற்றொரு கையில் ஏகதந்தம் கொண்டும், பிறிதொரு கையில் நீர் நிறைந்த பொற்கலசம் ஏந்தியும், எஞ்சிய இரு கைகளில் அங்குசமும், பாசமும் தரித்தும் காணப்படுதலைக் கூறுகிறார். அதே வேளையில் மோதகம் ஏந்திய கையைத் தமக்காகவும், ஒற்றைக் கொம்புள்ள கையைத் தேவர்களுக்காகவும், இரத்தினக் கலசம் ஏந்திய கையை தம் தாய் தந்தையர்களாகிய உமையையும் மகேசுவரனையும் வழிபடுவதற்காகவும் பயன்படுத்துகிறாராம்! மேலும், இவ்வாறு ஒவ்வொரு திருக்கையினையே பிறசெயல்களுக்காகப் பயன்படுத்தும் **விநாயகர், தம் அடியார்களுக்காக மட்டும் இரு கைகளையும் ஒருங்கே** பயன்படுத்திச்

1 திருவாய்மொழி, 3,6.9

2 திருவிசைப்பா (கங்கைகொண்டசோழேச்சரம்), 5

சித்தமாக இரு கைகளையும் ஒருங்கே பயன்படுத்தச் சித்தமாக இருக்கிறாராம்! அஃதாவது தம்மைப் போற்றி வழிபடும் அடியார்களின் இடையூறுகளை நீக்கி, இன்பங்களையே தரும் இயல்பினராகிய அவர், **ஆணவ மலம்** என்னும் கொடிய யானையை அடக்கிப்பிணித்து, அடியனாம் தனக்குத் திருவருள் வழங்குவதற்காக **அங்குசம், பாசம்** ஆகிய இரு கருவிகளைத் தம் எஞ்சிய இரு திருக்கைகளிலும் ஏந்திக் கொண்டுள்ளாராம்! இத்தகைய நயத்தகு கற்பனை நலத்தினைப்,

''பண்ணியம் ஏந்தும் கரம் தனக்கு ஆக்கிப்
பால்நிலா மருப்பு அமர் திருக்கை
விண்ணவர்க்கு ஆக்கி, அரதனக் கலச
வியன்கரம் தந்தை தாய்க்கு ஆக்கிக்
கண்ணில் ஆணவவெங் கரிபிணித் தடக்கிக்
கரிசினேற்கு இருகையும் ஆக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபற்
சகாயனை அகம்தழீ இக் களிப்பாம்''1

எனவரும் பாடலுள் காணலாம்.

34.6. விநாயகர் புரிந்த வியத்தகு செயல்கள்:

புராணத் தொடர்புடனும், வரலாற்றுத் தொடர்புடனும் விநாயகர் பல அரிய செயல்களைப் புரிந்தவராகப் போற்றப் படுகிறார். அருஞ்செயல்கள் பலவற்றுள் சில வருமாறு:

அ) கயமுகாசுரனை வதைத்து முனிவர்களையும் பிற நல்லோர்களையும் காத்தருளியது.

ஆ) திரிபுர சம்மாரத்தின் போது, சிவனது தேரின் அச்சினை முறித்துத் தம் நாயகத் தன்மையைப் புலப் படுத்தியது.

இ) வேதவியாசர் மகாபாரதம் எழுதுதற்கு உதவிபுரியும் வகையில் அவர் சொல்லச் சொல்ல விநாயகர் மேருமலையில் தம் கொம்பு கொண்டு அதனை எழுதியருளியது.

1 தணிகைப் புராணம், கடவுள் வாழ்த்து, 3

ஈ) கந்தன், குறவக்குலமகள் வள்ளியைத் திருமணம் புரிதற்கு வாய்ப்பாக வள்ளியை மிரட்டிப் பணிய வைத்து அவனுக்குத் திருமணம் முடித்து வைத்தது.

உ) தம் அடியவள் ஔவையின் பக்தியைப் போற்றித் தம் துதிக்கையால் எடுத்து அவளைத் திருக்கயிலையில் சேர்த்தது.

ஊ) அகத்திய முனிவர் தம் கமண்டலத்தில் கொணர்ந்த நீரை, விநாயகர் காக்கையுருவில் சென்று அந்தக் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியாறாகப் பாயுமாறு செய்தருளியது.

எ) திருமுறைப் பதிகங்களை மீண்டும் மக்களிடையே பரப்பும் வண்ணம், தில்லைத் திருக்கோயிலிலுள்ள அறையைக் காட்டியதும், திருமுறைகளைத் தொகுக்கக் காரணமாயிருந்த நம்பியாண்டார் நம்பிகள் படைத்த திருவமுதையுண்டு அவருக்குத் திருமுறை தொகுக்கும் சூழலையுண்டாக்கியது மாகிய அருட்செயல்கள்.

34.7. பிள்ளையார் சுழி - தத்துவம்:

மக்கள் - தாம் புரியுஞ் செயல்கள் தடையின்றி நிறைவேற வேண்டுமென்ற நோக்கத்தில் விநாயகரை வணங்கி வருகின்றனர். **விக்கினம்** எந்தச் செயலிலும் நேராதிருப்பதற்காகத் தாம் எழுதத் தொடங்குகையில் **பிள்ளையார்சுழி** இடுவதைப் பலர் மரபாகக் கொண்டுள்ளனர்; அதன் தத்துவம் என்னவெனக் காண்போம்.

பிள்ளையார் சுழி என்பது, **அகரம் உகரம் மகரம்** ஆகிய மூன்றையும் பிணைப்பதாகவுள்ளது. அகரம் உகர மகரங்கள் ஓம் எனும் பிரணவத்திலுள்ளதைச் சமய நூல்கள் கூறும், நாதப் பிரமம் ஆகிய **ஓம்** எனும் பிரணவம், பிள்ளையார் சுழியால் நினைவுகூரப்படுகிறது என்பது சமய நம்பிக்கை. பிள்ளையார் சுழியில் உள்ள வட்டவடிவம் சிவசக்தி பீடம் எனும் ஆவிடை என்றும், நீண்டு நிற்கும் கோடு மூலத்தம்பம் எனும் சிவலிங்கம், என்றும் சொல்லப்படும். இவற்றை முறையே **விந்து** என்றும் **நாதம்** என்றும் தத்துவ ஞானியர் வழங்குவர். மேலும், பிள்ளையார் சுழியின் வட்டவடிவு **மூலாதாரபீடம்** எனவும், நீளவடிவு

அதன்கண் எழும் **பிரமநாடி** எனவும், அது **மூலக்கணபதி நிலையம்** எனவும், அக்கணபதி சொரூபம் ஆகிய பிரணவாதாரம் எனவும், **எழுத்துக்களின் வித்து** எனவும், வேதத் தலைதரு பொருளாய் விளங்கும் **மௌனக்குறி** அல்லது ஊமை எழுத்து எனவும் நூல்களில் கூறப்படும். எந்த ஒரு நல்ல பொருள் பற்றியோ நற்செய்தி குறித்தோ நல்ல நிகழ்ச்சியைக் கருதியோ எழுதுவதற்குத் தொடங்கும் முன்னர்ப் பிள்ளையார்சுழி அமைத்துக் கொள்வது இந்துக்களில் பலர் மேற்கொள்ளும் மரபு. ஒருவன் தான் மேற்கொள்ளும் செயலைத் தடங்கலின்றி நிறை வேற்றியருளுமாறு பிள்ளையார் திருவுருவினையே வைத்து வழிபடுவதைப்போன்றதாகும். இதுபிரமப்பொருளாற் படைக்கப் பெற்ற பிண்டத்தின் கண் **தாரக ஓங்காரம்** எவ்விதம் அமைந் துள்ளதோ, அவ்விதமே, 'ஓ' எனும் வடிவம் தமிழிலும் கிரந்தத்திலும் செவ்விதின் அமைக்கப்பட்டுள்ளமை பற்றிச் சான்றோர் பலர் போற்றிக் கூறியுள்ளனர். சுருக்கமாக, ஓங்காரமாகிய பிரணவத்தின் ஓர் அடையாளத். திருவுரு வமே ஆனைமுக வடிவம் என்பதும், அதன் குறியீடே **பிள்ளையார் சுழி** என்பதும் ஈண்டு இயைபுடன் சிந்திக்கத் தகும்,

34.8. விநாயகரும் தோப்புக் கரணமும்:-

நாட்டில் பிள்ளையார் கோயிலுக்குச் செல்பவர்கள் வழிபாடு புரிகையில் **தோப்புக் கரணம்** - வலக்கையால் இடக் காது கீழ்ப்பகுதியையும் இடக்கையால் வலக்காது கீழ்ப் பகுதி யையும் பிடித்துக் கொண்டு நின்ற நிலையில் உட்கார்ந்தெழுவது- பலமுறை புரிதலைக் காணலாம். இத்தகைய வழிபாட்டு முறைக்கும் புராணப் பின்னணியுண்டு.

ஒருகாலத்தில் திருமாலின் திருவாழியை அவருடைய மருமகனான பிள்ளையார் விளையாட்டாகப் பிடுங்கித் தம் வாயில் போட்டுக் கொண்டு விட்டார். விளையாட்டியல்புடைய பிள்ளையாரிடமிருந்து அதனைத் திரும்பிப் பிடுங்குவதற்காக ஓர் உபாயத்தைக் கையாண்டார் திருமால்.

பிள்ளையாரைச் சிரிக்க வைத்து அவர் களிப்பாக இருக்கும் போது சக்கரம் வாயினின்றும் கீழேவிழும்; அப்போது அதனை

எடுத்துக் கொண்டுவிடலாம் என்று திருமால் தந்திரத்துடன் தம் நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக் கொண்டு மேலும் கீழுமாக ஆடத்தொடங்கினார். அதுகண்ட பிள்ளையார் விழுந்து விழுந்து சிரித்தார். உடனே சக்கரம் கீழே விழ, அதனைத் திருமால் எடுத்துக் கொண்டு விட்டார்.

"தோர்பி; கர்ணம்" என்பதே தோப்புக் கரணம் என மருவியது. தோர்பி என்றால், 'கைகளினால்' என்றும், 'கர்ணம்' என்றால் 'காது' என்றும் பொருளாகும். தோர்பி கரணம் எனின் கைகளால் காதைப் பிடித்துக் கொள்வதாயிற்று

தோப்புக் கரணம் போட வைத்ததன் நோக்கத்தை ஆராய்ந்தால் தமிழ்நாட்டுப் பண்பாட்டின் சீர்மை புலனாகும்; வழிபாடு வாயிலாகவே உள்ளத்துக்கும், உடலுக்கும் ஆக்கநலந் தேடும் - நம் முன்னையோரின் சிந்தனைத்திறம் அறியலாகும். அஃதாவது, உள்ளங்காலிலிருந்து தலையுச்சி வரையில் நரம்புக் கற்றைகள் பலவும் உடம்பின் நல்லியக்கத்திற்குக் காரணமாவதால், காதுகளைப் பிடித்துக் கொண்டு அடிக்கடி உட்கார்ந்தெழுவதால்-தோப்புக் கரணம் போடுவதால்-நரம்புக் கற்றைகள் சுருங்கிச் சோர்வடையாமல் குருதி நன்கு பாய்ந்து மூளைக்கு வலிமை உண்டாகும் என்பதே அறிவியலணுகுமுறை யாகும்; குருதியோட்டத்தால் மூளை நல்ல நிலையில் வைக்கப்படும் போது சாத்துவிகச் சிந்தனைகள் மலரும் என்பது சமயந்தழுவிய அறிவியலணுகுமுறையாகும்.

(திருமாலின் சக்கரத்தை விழுங்கிய பிள்ளையாரிடமிருந்து அதனை மீட்பதற்கு விடுவசேனர் விகடக்கூத்து ஆடியதாகவும் புராணக் கூற்று உள்ளது. அதனை இந்நூலில் 'ஆடற்கலைப் பண்பாடு' எனும் வேறோரிடத்தில் காண்க.)

34.9. விநாயகர் - சில சிறப்புப் பெயர்களும் தலங்களும்:

கணபதியை வழிபடும் அடியவர்கள் தம் மனத்திற்குத் தோன்றிய பெயர்களிட்டு அழைப்பதில் ஆர்வங்காட்டியுள்ளனர்.

கணபதியின் திருவுருவம் சிற்ப அடிப்படையில் வகைப்படுத்தப் பெற்றாலும், அந்த வரையறையைக் கடந்தும் பல பெயர் களிட்டுத் திருவுருவம் அமைத்து வழிபட்டு வருகின்றனர். ஊர்த்தொடர்புடன் நினைக்கத்தக்க சில நிகழ்ச்சிகள் கணபதி யின் திருவருள் தொடர்பினைக் கொண்டிருப்பின், அவற்றை நினைவுகூரும் வகையிலும் அந்தத் தெய்வத்திற்குப் பல திருப் பெயர்கள் தோன்றலாயின. அனைத்து நோக்கிலும் எல்லா வற்றையும் கூறிக்காட்ட இயலாது. நூற்றுக் கணக்கான திருப் பெயர்களுள் குறிப்பிடத்தக்க சிலவற்றைக் காண்போம்.

'ஊருக்கு ஒரு பிள்ளையார்' என்ற வழக்கு ஒரு புறமிருப் பினும், ஊருக்குப் பல பிள்ளையார்களும் உண்டு என்பதை மறத்தலாகாது. பெருஞ்சிறப்புமிகு கணபதியின் சில பெயர்களைச் சில தலங்களுடன் இயைத்துக் காண்போம்.

திருத்தலம்		கணபதியின் பெயர்
அத்திகிரி காஞ்சிபுரம் திருக்களர்	—	வலம்புரி விநாயகர்
அன்பிலாலந்துறை	—	செவிசாய்த்த பிள்ளையார்
அம்பல்	—	சுட்டு விநாயகர்
கடிகுளம் திருக்கருகாவூர் சிதம்பரம்	—	கற்பக விநாயகர்
சிதம்பரம்	—	நரமுக விநாயகர்
காஞ்சிபுரம்	—	விகடசக்கர விநாயகர்
குடந்தைக் கீழ்க் கோட்டம் நாகேசுவர சுவாமி கோயில்	—	கங்கை கணபதி
கீழ்வேளூர் திருமழபாடி	—	சுந்தர கணபதி
சித்தமல்லி	—	முக்கந்த பிள்ளையார்
சிவகாசி	—	பஞ்சமுக விநாயகர்
சுவாமிமலை	—	வல்லப கணபதி
திருக்கச்சூர்	—	தாலமூலவிநாயகர், கருக்கடி விநாயகர்
திருக்கடவூர்	—	கள்ளவாரணப் பிள்ளையார்

திருக்காறாயில்	—	கடுக்காய் விநாயகர்
திருக்கொட்டையூர்	—	கோடி விநாயகர்
திருச்சிராப் பள்ளி	—	உச்சிப் பிள்ளையார், மாணிக்க விநாயகர்
திருச்செங்காட்டங்குடி திருப்புகலூர் திருவாரூர்	—	வாதாபி விநாயகர்.
திருந்து தேவன் குடி	—	கர்க்கடகம் (நண்டு) பூசித்த விநாயகர்
திருநல்லூர்	—	சாளக்கிராம விநாயகர்
திருநள்ளாறு	—	சொர்ண விநாயகர்
திருநறையூர்ச் சித்தீச்சரம் திருவிடை மருதூர்	—	ஆண்ட விநாயகர்
திருநாட்டியத்தான்குடி	—	கைகாட்டி விநாயகர்
திருநாரையூர் திருவெண்ணெய் நல்லூர்	—	பொல்லாப் பிள்ளையார்
திருப்பனையூர்	—	துணையிருந்த விநாயகர்
திருப்புறம்பயம்	—	தேன்விநாயகர், பிரளயம் காத்த விநாயகர்
திருமுருகன் பூண்டி	—	கூப்பிள்ளையார்
திருவாரூர்	—	மாற்றுரைத்த விநாயகர்
திருவாவடுதுறை	—	துணைவந்த விநாயகர், அழகிய விநாயகர், சிவப்பிரகாச விநாயகர்
திருவானைக்கா	—	வல்லப கணபதி
திருவின்னம்பர்	—	நிருத்தன விநாயகர்
திருவீழிமிழலை	—	படிக்காசு விநாயகர்

திருவுசாத்தானம்	—	குவதனப் பிள்ளையார்
திருவையாறு	—	ஆதிவிநாயகர், ஆவுடை விநாயகர்
நாகப்பட்டினம்	—	மாவடிப் பிள்ளையார், நாகாபரணப் பிள்ளையார், பஞ்சமுக சிம்மவாகன விநாயகர்
மதுரை	—	வல்லப கணபதி முக்குறுணிப்பிள்ளையார் சித்தி விநாயகர்
மயிலாடுதுறை	—	ஸ்ரீ வல்லபகணபதி, ஸ்ரீ களம் சுற்றி விநாயகர், கண் கொடுத்த விநாயகர், ஸ்ரீ செங்கழுநீர் விநாயகர், ஸ்ரீ காஞ்சிபுரம் விநாயகர், ஸ்ரீ காசிதூண்டி விநாயகர், ஸ்ரீ மங்கள விநாயகர், முக்குறுணி விநாயகர், அகஸ்திய விநாயகர்.
மயூரபுரல்	—	மயூரேச விநாயகர்
வல்லம்	—	வரசித்தி விநாயகர்

34.10, விநாயகர்-வியத்தகு சிற்பங்கள்:.

அ) **வலம்புரி விநாயகர்;** பாண்டி நாட்டிலே இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த குன்றக் குடிக்கு அருகேயுள்ள **பிள்ளையார் பட்டிக் கோயில்** உள்ளது. அங்கே கருவறையிலே வலம்புரி **விநாயகராக இரு திருக்கைகளுடன்** விளங்கும் கணபதியின் திருவுருவத்தைக் காணலாம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்தத் திருவுருவம் மிகத் தொன்மையதாகப்-பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகக்-கருதுகின்றனர். கணபதிக்கு முதன் முதலாகத் தமிழ்நாட்டில் எடுக்கப்பெற்ற பல கோயில்களுள், இதுவே வரலாற்றுச் சிறப்பு மிக்க பழமையான கோயிலாகும் ஒப்பீட்டு நோக்கில், திருநாரையூரிலுள்ள **பொல்லாப்பிள்ளையார்**

(வலம்புரி விநாயகர்) திருவுருவமும் பிள்ளையார்பட்டி விநாயகர் திருவுருவமும் கலையமைப்பிலும் தொன்மையான மூர்த்திகரத்திலும் கண்டு போற்றி வழிபடத் தக்கவை.

ஆ) நாக யஞ்ஞோபவீத கணபதி: மீனம்பாக்கத்திற்கும் பல்லாவரத்திற்கு இடையே யுள்ள திரிசூலம் (திருசுரம்) எனும் தலத்தில் பிரும்மபுரீசுவரர் ஆலயத்தில், சர்ப்பத்தைப் பூணூலாக அணிந்திருக்கும் விநாயகர் வியத்தகு வடிவமைப்பில் எழுந்தருளியுள்ளார்.

இ) ஓங்கார ஒலிவிநாயகர்: காஞ்சிபுரத்திலே திருவோணகாந்தன் தளி என்னும் திருக்கோயில் தேவாரப் பாடல் பெற்ற சிறப்பினையுடையது. அங்குக் கருவறை மண்டபத்தினது நுழைவாயிற் சுவரின் முகப்பில் விநாயகர் திருவுருவம் வியத்தகு முறையில் அமைந்துள்ளமை நோக்கத் தக்கது. "அவர்தம் அருகே சென்று, நம் செவியை அணுக வைத்து நிற்பின், ஒரு வகை ஓங்கார ஒலி ஒலித்துக் கொண்டிருப்பதைக் கேட்கலாம். இத் திருவுருவை அமைத்த சிற்பக் கலைஞர் யாரோ? சிலையில் அமைந்த திருவுருவில் எங்ஙனம் இவ்வகை ஒலி எழுகின்றது என்பது வியப்பாக உள்ளது! எத்தனையோ நெடுங்காலமாக, எத்தனையோ பல்லாயிரக் கணக்கான மக்கள், இவ்வொலியைக் கேட்டு, மகிழ்ந்து வியந்து வணங்கிச் செல்கின்றனர்"[1] என வருங் குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

ஓங்காரமாகிய பிரணவத்தின் திருவுருவாக விளங்கும் கணபதியிடம் ஓங்கார ஒலி கேட்குமாறு செய்த சிற்பக்கலை நுணுக்கம் தமிழ் நாட்டுக் கலைத்திறனுக்குப் பெருமைகாட்டுவது எனலாம்.

ஈ) கற்பக கணபதி: திருப்பரங்குன்றத்து மலையைக் குடைந்து மிகப்பெரிய விநாயகர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது ஏனைய இடங்களில் காணப்பெறும் விநாயகருக்கும் இங்குள்ள விநாயகருக்கும் நிரம்ப வேறுபாடு இருத்தலைக் காணலாம்.

1. திருக்கோயில் (திங்களிதழ்) அக்டோபர், 1069

பொதுவாகப் பிற இடங்களில் மேலிரு கைகளில் **அங்குசமும் பாசமும்** கணபதி ஏந்தியிருப்பார். ஆனால் இங்குள்ள கணபதியோ மேலிரு கைகளில் **ஒரே கரும்பை** - நீளக் கரும்பைத்-தலைக்குப் பின்புறம் வைத்துப் பிடித்த வண்ணம் காணப்படுகிறார்.

கணபதிவழிபாடு தொடங்கிய காலத்திலிருந்து கணபதி யுருவங்கள் (தாருண கணபதி, வீரவிக்கினேசுவர கணபதி, இலட்சுமண கணபதி, பிரசன்ன கணபதி, உன்மத்த உச்சிட்ட கணபதி, விக்னராச கணபதி, புவனேச கணபதி, நிருந்தகணபதி, ஹரித்ர கணபதி ஆகியவை) பலவாக அமைந்தும், கணபதியின் பின் இருகைகளில் மட்டும் **பாசமும் அங்குசமும்** இருந்து வந்துள்ளன. ஆனால், திருப்பரங் குன்றத்திலுள்ள கற்பக கணபதி மட்டும் தம் இரு கைகளில் கரும்பைப் பிடித்துக் கொண்டு தாமரைமலர் மீது பத்மாசனத்தில் அமர்ந்துள்ளார். இவரைப் பற்றிக் குறிப்பிடும் **செ.போசு**, ''கணுக்கால் வரை ஆடை காணப்படுகிறது. யக்ஞோப வீதம் (பூணூல்) மார்பில் படிந்து செல்கிறது. கீழிரு கரங்களில், கீழ் வலக் கரத்தில் மோதகம் வைத்துள்ளார்; இடக்கையைத் தொடைமீது வைத்திருக்கின்றார். தோள்பட்டையில் வாசிபந்தம் உள்ளது. முன்னிரு கைகளிலும் காப்புகள் உள்ளன. மார்பில் உருத்திராட்ச மாலை, காசுமாலை, ரோசாப்பூமாலை, ஆக மும்மாலைகளோடு காட்சியளிக்கின்றார். தும்பிக்கையில் மணி உள்ளது, தலையில் கரண்டமகுடம் உள்ளது.

விநாயகரைச் சுற்றிலும் மேற்புறம் பூதகணங்களும் தேவர்களும் இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டிருப்பதாகக் காட்டப் பட்டுள்ளனர். அனுமன் ஒரு புறம் இடக்கையால் சஞ்சீவி பர்வதத்தைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு வருகிறான். ஒரு பூதகணம் இடக்கையில் சங்கேந்தி வருகிறது. மற்றொரு கணம் வலக்கையில் கத்தியை வைத்துக் கொண்டு இடக்கையில் மாதுளங்கனியைப் பிளந்து கொண்டு இருக்கிறது. மற்றொரு பூதம் தன்னிரு கரங்களால் மத்தளத்தை முழக்குகிறது. ஒரு பூதம் பலாப்பழத்தைத் தலையில் வைத்துத் தூக்கிக் கொண்டு வருகிறது. இன்னொரு பூதகணம் இளநீர்க்காயை ஏந்திக் கொண்டு வருகிறது. அமரனொருவன் அஞ்சலித்த நிலையில்

நின்று கொண்டிருக்கிறான். மற்றுமொரு பூதம் நின்று கொண்டிருக்கிறது. இன்னொரு பூதம் மிருதங்கம் வாசிக்கின்றது. விநாயகருக்கு இருபுறமும் கந்தர்வர் இருவர் சாமரம் வீசிக் கொண்டு இருக்கின்றனர்''[1] என்று அந்தக் கணபதியினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இதனால், சிற்பியருலகத்தில் தெய்வ நலச் சார்புடன் எவ்வாறெல்லாம் கற்பனையை விரிய விட்டுக் கலைப் படைப்பினை உருவாக்கியுள்ளனர் என அறியலாம்.

உ) முக்குறுணிப் பிள்ளையார்:

மதுரை, சிதம்பரம், திருச்செந்தூர், காஞ்சிக்குமரகோட்டம் முதலிய திருத்தலக் கோயில்களில், முக்குறுணி விநாயகர் திருவுருவங்கள் மிகப் பெரியனவாக அமைந்திருக்கலாம். ஆனை மிகமிகப் பெரிய விலங்காதலின், ஆனையின் முகத்தைக் கொண்ட விநாயகப் பெருமானுக்கும் மக்கள் பெரிய திருவுருவம் அமைக்க எண்ணினர் போலும்! இவருக்கு, முக்குறுணி அரிசியைக் கொண்டு மோதகம் செய்து ஒரு காலத்தில் படைக்கப் பெற்றமையின், இக்காலத்தும் காரணப் பெயராக முக்குறுணிப் பிள்ளையார் என்றும், முக்குறுணியரிசிப் பிள்ளையார் என்றும் மக்கள் வழங்கி வருகின்றனர்.

ஊ) சாளிக் கிராமப் பிள்ளையார்:

தஞ்சை மாவட்டத்தில் சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றாகக் கருதப்பெறும் திருநள்ளாற்றில், சாளிக்கிராமம் என்னும் சிலைவடிவத்தில் கணபதி பூசிக்கப்பெறுகிறார். சிற்பநோக்கத்தில் இந்தச் சிலை மிகவும் போற்றற்குரியது.

எ) பாலகணபதி:

செங்கை அண்ணா மாவட்டம், ''வேலூர்க் கோட்டையில் சிற்பக் கலைநலம் செறிந்த திருக்கல்யாண மண்டபத்தில், நவநீத கிருஷ்ணரைப் போல அழகிய குழந்தை வடிவத்தில்

1. திருப்பரங்குன்றம், பக். 69-70.

விநாயகர் விளங்குகிறார்,"[1] என்பது கலைநுட்பப் பார்வையில் கருதத்தக்கது.

ஏ) பஞ்சமுக விநாயகர்:

விநாயகருக்குப் பெருச்சாளி வாகனம் பெரும்பாலும் கூறப்படும். அவருக்குச் சில இடங்களில் சிங்கமும் ஊர்தியாகப் பயன்படுவதைக் காணலாம்.

"சிங்கத்தின் மீது அமர்ந்து கொண்டு ஐந்து தலைகளுடன் கூடிய பஞ்சமுக விநாயகர் திருவொற்றியூர்த் தியாகேசுவரர் கோயிலிலும், நாகப்பட்டினம் காயரோகணேசுவரர் கோயிலிலும் எழுந்தருளியுள்ளார். திருவொற்றியூரில் ஐந்து தலைகளும் ஒரே வரிசையில் உள்ளன. நாகப்பட்டினத்தில் நான்கு திசைகளிலும் நான்கு தலைகளும் மேலே ஒரு தலையும் உள்ளன "[2] என்பது சமய அடிப்படையில் கண்ட சிற்பவுலகச் சாதனைகள் எனலாம். சிவபரம் பொருளாகிய சிவபெருமானுக்கு ஐந்து தலைகளாதலின், அதே பிரணவப் பொருளுணர்த்தும் ஆனைமுகனுக்கும் ஐந்து தலைகள் அமைவது பொருத்தமேயெனக் கருதிச் சிற்பியரும் சமய ஞானியரும் ஒன்றி உருவாக்கிய திருவுருவமோ இஃது எனச் சொல்லத் தோன்றும்.

ஐ) திருவண்ணாமலையில் சிம்மக்கால் விநாயகர்:

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் ஆலயத்தில் '**சிம்மக் கால் விநாயகர்**' எனும் வியத்தகு பிள்ளையாரைக்காணலாம். சிம்மவுடலுடன் இருகால்களிலே நிற்கும் இந்த விநாயகர் திருவுருவத்திற்கு நான்கு திருக்கைகள் உள்ளன. மேலிரண்டு கைகளில் தாமரை மலர்களும். கீழ்இடக்கையில் மோதகமும், கீழ்வலக்கையில் தந்தமும் ஏந்திய அழகிய கோலத்துடன் காணலாம். இத்திருவுருவத்தின் புராணப் பின்னணி நன்கு புலப்படவில்லை

ஒ) அர்த்தநாரி கணபதி அல்லது சக்தி கணபதி:

சில்பர த்தினத்தில் (தொகுதி 1 பக். 104) இது பற்றியகுறிப்பு உள்ளது. மத்தியப் பிரதேசத்தில் **மந்தாத** என்னும் ஊரிலுள்ள

1. திருக்கோயில் [திங்களிதழ்], அக்டோபர், 1969.
2. மேலது

அமரேசுவரர் **கோயிலில்** கி.பி. 1063 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்றில் **அர்த்தநாரி கணபதி** பற்றிய குறிப்பினைக் காணலாம்.[1] இது பற்றிய விளக்கமான கட்டுரை Journal of Indian History (Vol P. 112) எனும் ஆய்விதழில் காண்க. அர்த்தநாரி கணபதி தமிழகத்தில் உள்ளதா என்பது புலப்படவில்லை. இதுகுறித்துக் களஆய்வு புரிந்தாலோழிய இதற்கு விடை காண்பதரிது.

ஓ) நிறம் மாறும் விநாயகர்:

கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரத்திலிருந்து ஒரு கல் தெற்கேயுள்ள **கேரளபுரத்தில்** ஒரு சிவாலயம் உள்ளது. அங்கே வெளிப்பிராகாரத்தில் ஓர் ஆலமரத்தின் கீழ் வெயிலையும் மழையையும் குளிரையும் காற்றையும் பொருட்படுத்தாமல் **விநாயகர்சிலை** ஒன்றைக் காணலாம். "இத்திருவுருவச் சிலை ஆவணிமாதத்திலிருந்து **ஆறுமாதம்** வெள்ளை **நிறமாகவும், மாசி மாதத்திலிருந்து கறுப்பு நிறமாகவும்** நன்கு தோற்றமளிப்பது விஞ்ஞானவுலகிற்கு ஒரு புதிராகவே இருக்கிறது. இதன் வெள்ளை நிறம் கண்ணைக் கூச வைப்பதால் நெடுநேரம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இத்திருவுருவச் சிலை **சந்திர காந்தக்** கல்லால் உருவாக்கப்பட்டது என்பர்"[2] எனவருங் குறிப்பு ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இந்தச் சந்திரகாந்தக் கல்லைச் சிற்பியர் எப்படிப் பெற்றனர் என்பதும், இக்கல்லைக் கொண்டு சிற்பம் உருவாக்கலாம் எனக் கண்ட அவர்தம் கலைத்திறம் எப்படிப்பட்டது என்பதும் யாருக்கும் சரியாகப் புரியவில்லை. சிற்பத்திறன் மட்டுமன்று, சிற்பத்திற்கான கல்லும் வியப்பளிக்கக் கூடியது.

ஔ) சர்ப்ப நடன விநாயகர்:

திருவான்மியூர் அம்மன் சன்னிதி வெளிமண்டபத் தூண் ஒன்றில், படம் பிடித்தாடும் **சர்ப்பத்தின்** தலைமீது **காலை ஊன்றியவாறு விநாயகர்** நடனமாடுவதான **சிற்பக் காட்சி**[3] மிகவும் வியக்கத்தக்க நிலையில் உள்ளது.

1. தொல்பொருளியல் அறிஞர் இராசேந்திரனிடம் கேட்டது
2. குமரிமாவட்டக் கோயில், பக் 130-131
3. திருவான்மியூர் ஈசன்-மருந்தீசர்தல வரலாறு, பக்-84

க) உப்பூர் வெயிலுகந்த விநாயகர்:

தக்கன் புரிந்த வேள்வியில் கலந்து கொண்டதால் பற்கள் சிதைந்த நிலையில் பரிகாரம் (உய்தி) தேடிய **சூரியன்**, பாண்டிய நாட்டில் சேதுமூலமாகிய தேவிபுரத்திற்கு வடக்கிலுள்ள **உப்பூரில்** எழுந்தருளியுள்ள விநாயகரை வழிபட்டுப் **பயன்** பெற்றான் என்பது ஐதீகம். எனவே, விநாயகரை **ஆத பேச்ச விநாயகர்** அல்லது **வெயிலுகந்த விநாயகர்** என்பர். பார்க்கவ புராணத்திலும் உப்பூர்த்தலபுராணத்திலும் போற்றப் படும் இந்த விநாயகரை, மும்மூர்த்திகளுக்கும் முத்தொழில் வழங்கிய முழுமுதற் கடவுளாகவே போற்றி, அவருக்குப் பத்து நாள் பெருவிழா நடத்துகின்றனர். படைகளேந்திய நான்கு திருக்கைகளும் தாமரை மலர் போன்ற திருவடிகளும், சந்திர ஹாரம் கொன்றைமலர் தரித்த திருமார்பும், முக்கண்ணும் கொண்ட இந்த விநாயகர் மிகத்தொன்மையான - மிக மூர்த்தி கரம் வாய்ந்த - கண்கண்டதெய்வமாக வட்டார மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

34.11. விநாயகரும் விசுவக்சேனரும்:

விநாயகர் வைணவர்களாலும் போற்றி வணங்குதற்குரிய **சமஷ்டிக் கடவுள்** (Federal God) எனலாம். எனினும், வைணவர்கள் விநாயகருக்குப் பதிலாக **விசுவக் சேனரை** விக்கினமின்றிக் காக்கும் ஆற்றலுள்ள பொறுப்பான தெய்வம் ஆகக்கொண்டாடி வருகின்றனர்.

விசுவக் சேனரைச் **சேனை முதலியார்** (படைத்தலைவர்) என்றும், **சேனைநாதன்** என்றும் கூறுவர். சைவசமயத்தில் சிவ பெருமானுக்குச் சண்டேசுவரர் எப்படியோ அப்படியே வைணவ சமயத்தில் திருமாலுக்கு விசுவக்சேனர் விளங்குகிறார் எனலாம் நித்தியசூரிகளுள் ஒருவராகக் கருதப்பெறும் இவர், பெருமாள் கோயிற் பணிகள் பலவற்றையும் மேற்பார்வையிட்டு ஆட்சி புரிபவராகவும், பெருமாள் திருவுலா வருகையில் உடன் வருபவராகவும் வைணவம் போற்றிக் கொண்டாடுகிறது.

விநாயகர் பல்வேறு திருவுருவங்களில் பல்வேறு நோக்கங் களுடன் வழிபடப் பெறுகின்றார். !ஆனால், விசுவக்சேனரோ

குறிப்பிட்ட இருவகைத் திருவுருவத்தில் பெருமாளுக்குப் பாது காப்பாளராகப் போற்றப்படுகின்றார்.

கரிய திருமாலுக்குப் பெருந்தொண்டு புரியும் விசுவக்சேனரின் நிறம் கரியது. தலையில் திருமுடி உண்டு. அவர் நான்கு திருக்கை களுடன் காணப்படுபவர்; அவர்தம் மேலிருகைகளில் சங்கும் சக்கரமும் எழிலூட்டும்; கீழிரு கைகளில் கதாயுதமும் பிரம்பும் அழகு செய்யும். சிலவற்றில் இடக்கை இடுப்பில் இருக்க வலக்கை அதிகார முனைப்பில் அச்சுறுத்துவது போலக் காணப்படும்.

"வைஷ்ணவ சமயக் கொள்கையின் படி **ஸ்ரீநாராயணரும் மகாலட்சுமியும்** முறையே முதல் **இரண்டாம் ஆசார்யர்களாகவும் விளங்க,** இவரே (விசுவக்சேனரே) மூன்றாம் **ஆசார்யராகத் திகழ்கின்றார்.** பெருமாள் கோயில்களில் இவருக்கு வடகிழக்கு மூலையில் சந்நிதி அமைந்திருக்கும். இவர்தம் திருநட்சத்திரம் **ஐப்பசிப் பூராடம்; மனைவியின்** பெயர் சூத்ராவதி. சைவத்தில் **விநாயகர்** போல, வைஷ்ணவத்தில் இவரை எல்லாச் செயல்களுக் கும் தொடக்கத்தில் வணங்கி வழிபடுவர். திருவரங்கம் பெருமாள் கோயில், திருமலை முதலிய தலங்களில் உள்ள கோயில்களில் பிரம் மோற்சவம்தொடங்குவதற்கு ஒருநாள் முன்னர்,இவரைத் திருவீதி எழுந்தருளச் செய்து வலம் வருவிப்பது வழக்கம். பிரம்மோற் சவப் பெருவிழாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் (security arrangements) செம்மையாகச் செய்யப்பட்டுள்ளனவா என்று இவர் மேற்பார்வையிடுவதாக ஐதீகம்"[1] என விளக்கங் காண்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

34.12. விநாயகர் - பிற சமயங்களில் தாக்கம்:

பொதுவாக விநாயகர், மக்களின் இடையூறுகளை நீக்கிக் காத்தருளுந் தெய்வமாகப் போற்றப்படுதல் பெருவழக்கமாகும், சைவசமயத்திலேயன்றிக் **காணாபத்தியம்** எனும் சமயத்தில், விநாயகரைப் பரம்பொருளாகவே வழிபடுதலை மகாராட்டிர மாநிலத்தில் காணலாம். வைணவச் சமயத்திலும் விநாயகருக்கு

1. திருக்கோயில் (திங்களிதழ்) டிசம்பர், 1965,

விசுவக்சேனர் அல்லது தும்பிக்கையாழ்வார் எனத் திருப்பெயரிட்டு வழிபாடு இருந்து வருதலை முன்னரே கண்டோம்.

விநாயகன், கணேசன் என்றெல்லாம் ஆண்பாலில் குறித்திடும் தெய்வம், சாக்தத்தின் தாக்கத்தாலோ என்னவோ பெண்பாலில் குறித்திடும் தெய்வமாகக் கணேசானி, எனுந்திருப் பெயருடன் வழிபடப் பெறுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும். தமிழ்நாட்டில் சுசீந்திரம் தாணுமாலயப் பெருமாள் கோயிலில், அம்மன் சன்னிதிக்கு எதிர்ப் பகுதியிலும், மத்தியப் பிரதேசத்தில் பேராகட் (Bheraghat) என்னும் இடத்திலுள்ள யோகினி கோயிலிலும் உள்ள 'கணேசானி' திருவுருவங்கள் விநாயகரின் பெண்மைத் திருவுருவங்களாகவே காட்சியளிக்கின்றன என்பதையும், திபேத்தில் பல இடங்களில் இத்தகைய திருவுருவங்கள் காணக்கிடைக்கின்றன என்பதையும் ந.ரா. முருகவேள் எடுத்துக் கூறுவது மிகமிகச் சிந்திக்கத் தக்கது; சமயவொருமைப் பாட்டு அடிப்படையிலும் நோக்கத் தக்கதாகும்.

மங்கோலியாவில் பௌத்தமதம் பரவிய காலத்தில் விநாயகர் வழிபாடும் அங்குச் செல்வாக்கைப் பெறலாயிற்று. "திபேத் வழியாக மங்கோலியாவில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில், பாக்ஸ்பா (Hphags-pa) என்னும் துறவியின் மூலம், மகாயான பௌத்தம் பரவியது. அவர் குப்ளாகான் சக்கரவர்த்தியையும் (Emperor Kublakkan) மதம் மாற்றியதாகக் கூறப்படுகின்றது. சிவபிரானின் அம்சமாக மங்கோலியர்கள் மகாயானரைக் கருதினர். ஆதலின், மங்கோலியாவில் விநாயகரும் செல்வாக்குப் பெற்றதில் வியப்பில்லை. மங்கோலியர்களின் தெய்வங்களுள் ஒருவராக, நிருத்த கணபதியும் தழுவிக் கொள்ளப் பெற்றார். அவருக்குப் பெருச்சாளி வாகனமும், நான்கு கைகளும் உண்டு; அவற்றில் அவர் முறையே பரசு மூலகந்தம் மோதகக் கலசம் திரிசூலம் ஆகியவற்றை ஏந்தியிருக்கின்றார்"[2] எனவரும் அருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத் தக்கதாகும்.

1 திருக்கோயில் [திங்களிதழ்], ஆகஸ்டு, 1971

2 மேலது

35. வேலன் - பெருமைக் கூறுகள்:

பண்டைய தமிழகத்தில் குறிஞ்சி நிலத்தெய்வமாகச் சேயோனாகிய; வேலன் வழிபடப்பெற்றான்; தொல்காப்பியமும், "சேயோன் மேய மைவரை யுலகமும்"[1] எனக் கூறிச் செல்லும். பத்துப்பாட்டில் நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படையும், தொகைநூலுள் ஒன்றாகிய பரிபாடலில் 'செவ்வேள்' பாடல்களும் திருமுருகன் பெருமையைப் போற்றி நிற்கின்றன. சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையும், இந்திரவிழவூரெடுத்த காதையில் வரும் "அறுமுகச்செவ்வேள் அணிதிகழ் கோயிலும்"[2] எனுங் குறிப்பும் சிலப்பதிகாரக் காலத்தில் மக்களிடையே நிலவி வந்த முருக வழிப்பாட்டினை யுணர்த்தும்; அவன்தன் வீரப்பெருமையினை விளக்கும்.

தொடக்கக் காலத்தில் முருகனது வேற்படையை வைத்தே பூசனை நடைபெற்றதென்பது சமயவழிபாட்டு வரலாற்றில் நினைவிற் கொள்ள வேண்டிய குறிப்பாகும் வேல் என்பது வெற்றியின் அடையாளமாகும் திருப்பரங் குன்றத்தில் மூலவருக்கு அபிடேகம் கிடையாது; வேலுக்குத்தான் அபிடேகச் சிறப்பு என்பது மனங்கொள்ளத் தக்கது.

வேல்வைத்து வணங்கப் பெற்ற கோயிலில் பூசனை புரிபவன், வெறியாட்டுக்காலத்தில் வேலினைத் தாங்கி வெறியாடினமையால் அவனும் வேலன் என்றே அழைக்கப்பட்டான்

திருமுருகனின் பெயர்கள் பலவாக இருப்பினும், வேல் என்பதைத் தொடர்பு படுத்திக் கதிர்வேல், வடிவேல், ஞானவேல், வச்சிரவேல், சிங்காரவேல், குழந்தைவேல், வீரவேல், வெற்றிவேல் முதலிய பெயர்களால் அவனை அழைப்பதில் இன்பங் கொள்கின்றனர்; வழி வழியே சிலர் தம் மக்களுக்கு அப்பெயர்களிட்டு வழங்குவதையும் மரபாகக் கொண்டுள்ளனர்.

34.1. கந்தன் -புராணப் பின்னணி

திருக்கயிலை மலையில் உமையம்மையுடன் சிவபெருமான் எழுந்தருளியிருக்கையில் அசுரர்களின் கொடுமையைத் தாங்

1. தொல்காப்பியம், அகத்திணையியல், 5
2. இந்திர விழவூரெடுத்த காதை, 170

கொணாத தேவர்கள், சிவபெருமானிடம் சென்று தங்கள் குறை களை முறையிட்டு நிற்கின்றனர். அவனும் அவர்களின் முறை யீட்டிற்கு இரங்கி ஆவன புரியச் சித்தமாகித் தம் இயல்பிலுள்ள **ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்** எனும் ஐந்து முகங்களுடன் கீழ்நோக்கியுள்ள **அதோமுகம்** எனும் முகத் தையும் கொண்டு ஆறுமுகங்களுடையவனாய், ஆறு நெற்றிக் கண்களினின்றும் ஆறுகனற்பொறிகளை வெளிவிடுத்தான். அவை எல்லா உலகங்களிலும் பரவித் தேவர்களுக்கு அச்சத்தை விளை விக்கவே, சிவன் அவற்றைத் தன் திருக்கையால் எடுத்து **வாயு** தேவனிடம் தந்தான்; அவன் அதனைத் தாங்கலாற்றாமல் **அக்கினி** பகவானிடம் அளித்தான்; அவனும் அதனைத் தாங்கிக் கொள்ள இயலாமல் **கங்கை** யாற்றில் விட்டான். கங்கையும் தாங்கமுடியா மல் தன் மடியில் தாங்கிக் கரையிலுள்ள **சரவணப் பொய்கையில்** விடுவித்தாள். அங்கு **அப்பொறிகள்** ஆறும் **ஆறு குழந்தைக ளாயின, கார்த்திகைப் பெண்கள் அறுவரிடமும் பாலுண்டு விளை யாடின**. சிவன் அக்குழந்தைகளை **உமையம்மையிடம்** காட்டவே, அவள் அந்த **ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து** எடுத்து **அணைத்தாள். ஆறு** முகமும் **ஓர்** உருவமும் **கொண்ட** குழந்தை **யாகியது**. அதைக் கண்டு மகிழ்ந்து **கந்தன்** எனப் பெயரிட்டு முகத் திலணைத்து ஆர்வமுடன் திருமுலைப்பால் ஊட்டிய நிலையில், கந்தனைச் சிவனிடம் தந்தாள். **கந்தர் கலிவெண்பாவில்** காணும் இதே வரலாறு சிற்சில மாற்றங்களுடன், **பரிபாடல் கந்தபுராணம்** முதலிய தமிழ் நூல்களில் காணலாம்.

கந்தன், **சூரபத்மன், சிங்கமுகன், தாரகன்** முதலிய அசுர களிடம் போரிட்டு வெற்றிபெறத் துணையாகும் **வண்ணம்** நவவீரர்கள் தோற்றங் கொண்டனர். அஃது எவ்வாறெனின் உமையம்மையின் காற்சிலம்பிலிருந்து சிதறிய நவமணி களினின்றும் **மாணிக்கவல்லி, முத்துவல்லி, புஷ்பராக வல்லி, கோமேதகவல்லி, வைடூரியவல்லி, வைரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, இந்திர நீலவல்லி** எனும் நவசக்தியர் தோன்றவே, அவர்கள் சிவனை விருப்புடன் நோக்கிக் கருக்கொண்ட நிலையில் அவர்களிட மிருந்து **வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேச் சுரர், வீரபுரந்தவர், வீரராட்சசர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர்,**

வீரதீரச் என்னும் **நவவீரர்கள்** தோன்றினர். இவர்கள் துணை நிற்கக்கூடிய சூழலில், **சூரபதுமன்** முதலிய அசுரர்களை வென்று **கந்தன்** பெருவெற்றியைக் கொண்டனன் என்பது புராணம்.

35.1. முருகன் - தமிழ்க் கடவுள்:

திருமுருகாற்றுப் படையிலும், பரிபாடலிலும் பரவப்பெற்ற **திருமுருகன் குறிஞ்சிநிலத் தமிழ்த் தெய்வமாவான்**. முருகனே, அகத்திய முனிவருக்கு முதன்முதலில் தமிழ்மொழியை அறிவுறுத்தினான். மேலும், சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளைத் தமிழிலேயே உபதேசித்துச் சாமிநாதனாக விளங்கினான். இதனை **அருணகிரிநாதர்,**

"கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழாற் பகர்வோனே."

எனத் தம் திருப்புகழ் வாயிலாகப் புலப்படுத்தியுள்ளார். மதுரை மாநகரில், ஆலவாய் அவிர்சடைக் கடவுளுடன் குன்றம் எறிந்த குமரவேளும் சங்கம் இருந்து தமிழாய்ந்ததை **நக்கீரரும் இறையனார் களவியலுரையில்** குறிப்பிட்டுச் செல்கிறார். "சங்கத் தமிழின் 'தலைமைப் புலவா"[1] எனக் குமரகுருபர **அடிகளால்** பாராட்டப் பெற்ற திருமுருகன் **புலவர் புராணம்** பாடியருளிய திருப்புகழ்த் **தண்டபாணி அடிகளுக்குத்** தமிழ் வடிவினனாகவே காட்சியளித்துள்ளான். அந்நிலையிலேயே, அவர்,

"கண்நிகர் மெய்யும், சென்னிக்
கணம்உறழ் இனத்தின் கூறும்
திண்ணிய புயங்க ளேபோல்
திகழ்தரும் உயிரும், வேறொன்
றெண்ணிடற் கரிய தாகும்
எஃகமும், ஜியலில் காட்டும்
புண்ணிய முருகன் செய்ய
பொற்பதம் போற்றி வாழ்வாம்"[2]
(முருகன் செய்ய — முனிக்கோன் செவ்வேள்; பாடபேதம்)

---

1 முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், தாலப்பருவம், 6
2 புலவர் புராணம், அகத்திய மகாமுனிவர் சருக்கம், 32

எனப்பாடிக் களிக்கிறார். இதனால், தமிழ்மொழியிலுள்ள வல்லினம், மெல்லினம், இடையினம் என வழங்கும் **மெய்யெழுத்துக்கள் பதினெட்டும்** தன் கண்களாகவும், அகரம் முதலிய **உயிரெழுத்துக்கள் பன்னிரண்டும்** தோள்களாகவும், தனிநிலை எனப்படும் **ஆய்த எழுத்தே**, ஒப்புயர்வற்ற நிலையில் தனிச் சிறப்பாகத் திகழ்ந்திடும் வேலாகவும் கொண்டு தமிழ்க் கடவுளாகிய திருமுருகன் விளங்குகிறான் என்பதை அறியலாம்

அடியவர்களுக்கு நன்மையே புரிந்திடும் திருமுருகன், அவர்கள் செய்யுங் குற்றங்களைப் பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு நல்லருள் புரியும் இயல்பினன்; தண்டிக்கும் இயல்பே இல்லாத சிறந்த தமிழ்க் கடவுள் முருகன் என்பது பல இலக்கியங்களால் உணரலாம்,

இத்தகைய அருட்கடவுள், குழந்தைகளுக்குக் **குழந்தை வேலனாகவும், பால முருகனாகவும்,** இளைஞர்களுக்குப் **பால சுப்பிரமணியனாகவும்,** கலைஞர்களுக்கு **ஆறுமுகனாகவும், தேவசேனாபதியாகவும்,** மந்திர உபதேசம் பெற விரும்பி வழிபடும் அடியவர்களுக்குச் **சாமிநாதனாகவும்,** இல்லற நிலையினர்க்கு வள்ளி தெய்வயானையுடன் கூடிய **சுப்பிரமணியனாகவும்,** துறவற ஞானியர்க்குப் பழனியாண்டவன் (அல்லது தண்டாயுதபாணி) ஆகவும் பிறவாறும், பக்திநோக்கில் அவரவர்களுக் கேற்பப் பல்வேறு திருவுருவங்களில் தோன்றி அருள்பாலித்து வருகிறான் எனலாம்.

35.3. முருகப் பெருமானின் பல்வகைத் திருவுருவங்கள்:

முருகன் கொண்ட பல திருவுருவங்களுள் பதினாறு அழகிய அருள்மிகு வடிவங்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றன. **குமாரதந்திரமும், தணிகைப் புராணமும்** பதினாறு திருவுருவங்களைக் குறிப்பிடும். 1. ஞானசக்திதரன், 2. கந்தசாமி, 3. தேவசேனாதிபதி, 4 சுப்பிரமணியர், 5. களிற்றூர்திப்பெருமான், 6. சரவணபவன், 7. கார்த்திகேயன், 8. குமரன், 9. ஆறுமுகவர், 10. தாரகாந்தகர், 11. சேனாதிபதி, 12. பிரமசாத்தன், 13. வள்ளி கல்யாண சுந்தரர், 14. பாலசுப்பிரமணியர், 15. கிரவுஞ்ச பேதனர்

16. சிகிவாகனர் என்ற வடிவங்களும் செப்புத் திருமேனி யமைப்பில் கலைப் படைப்புகளாயின. இந்தப் பதினாறு பெயர்களையும் நாள்தோறும் யார் சிந்தித்து உச்சரிக்கின்றாரோ அவர் எல்லாப் பழிபாவங்களினின்றும் விடுபடுபவர் என்பது சமய நம்பிக்கை.

அ) ஞானசக்தி தரன்:

மூன்றிலைகள் பொறித்தவேற்படையை வலக்கையில் வாங்கி நிற்குந் திருக்கோலம்.

ஆ) கந்தசாமி:

இஃது ஆறு முகங்களும் பன்னிருதோளுங் கொண்டு விளங்குங் குழந்தைத் திருக்கோலம் எனலாம். இசைப் பேரறிஞர் மீ.ப.சோமு 'கந்தன்' கோவணாண்டியாகப் பழநி மலையில் நிற்குந் திருக்கோலம் எனப்புலப்படுத்துகிறார் (சித்தர் இலக்கியம்ii,பக். 352); காரணம், மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் எழுதித் திருவாடுதுறை ஆதின வெளியீடாகிய முருகன் எனும் நூலிலுள்ள படம் பழனி தண்டாயுதபாணியாகவே காட்சியளிக்கிறது.

இ) தேவசேனாபதி:

ஆறு முகங்களும் பன்னிரு தோள்களுங் கொண்டு அமர்ந்து முருகப்பெருமான் தேவி தெய்வயானையைத் தன் துடைமீது, இருத்தி வீற்றிருக்கும் திருக்கோலம்.

ஈ) சுப்பிரமணியர்:

ஈசனது பரப்பிரம்ம வொளியே ஆறுமுகனாகி அமைந்த திருக்கோலம்.

உ) களிற்றூர்திப் பெருமான்:

பிணிமுகம் எனும் யானையை வாகனமாகக் கொண்ட முருகன் திருக்கோலம்; இக்கோலத்தை வடமொழியில் கஜவாகன சுவாமி என்றும் அழைப்பர்.

ஊ) சரவணபவன்:

சரவண மடு அல்லது பொய்கையை யடைந்து சிவபெருமானுடைய வீரிய தீப்பொறிகள் ஆறுமுகனாகியதால் அமைந்த திருக்கோலம்.

எ) **கார்த்திகேயன்:**

சரவணப் பொய்கையில் தோன்றிக் கார்த்திகைப் பெண்கள் அறுவரால் வளர்க்கப் பட்டமையால் முருகன் கொண்ட திருக்கோலம்.

ஏ) **குமாரன்:**

இளமையழகுடன் திகழ்ந்து நிற்கும் முருகன் திருக்கோலம்.

ஐ) **ஆறுமுகவர்:**

ஈசனது வீரியமாகத் தோன்றிய தீப்பொறிகள் ஆறு குழந்தைகளாகச் சரவணப் பொய்கையில் மாறிப் பின்னர் உமையம்மையின் அணைப்பில் ஆறுமுகப்பெம்மானாக மாறியதால், அவருக்கு இஃது அமைந்த திருப்பெயராயிற்று. சண்முகச் சுவாமி என்றும் அழைக்கப் படுவது உண்டு.

ஒ) **தாரகாந்தகர்:**

பல நூறு ஆண்டுகள் தவமிருந்து எல்லா வலிமையையும் பெற்ற, மாயையில் வல்ல அசுரன் தாரனுக்கு மகனாய்த் தோன்றியவன் தாரகன்; இவன் கன்மமே வடிவெடுத்தவன். பிரமனைக் குறித்துத் தவமிருந்த தாரகன், தான் ஈசனது வீரியத்தினால் உருவாகும் புத்திரன் தேவசேனாதிபதியாக வந்து, தன்னை நோக்கிப் படை எய்து அதனால் தனக்கு இறுதி நேர வேண்டுமென்று வரம் பெற்றவன், அவ்வாறே சேனாபதியாக வந்து தாரகனைக் கொன்று விளங்கிய வீரத் திருவுருவம் இது.

ஓ) **சேனாபதி:**

இத்திருவுருவத்தைச் சேனாநி என்றும், தேவசேனாபதி என்றும் அழைப்பர். சூரபதுமனை வென்ற வீரஎழில் திருக்கோலம் இது.

ஔ) **பிரம சாத்தன்:**

பிரமனது செருக்கையடக்க, அவனிடம் பிரணவத்திற்குப் பொருள் கூறுமாறு கேட்டான் முருகன்; பிரணவத்தின் பொருளறியாததற்காகப் பிரமனைச் சிறையில் அடைத்தான். அந்நிலையில் திருவேங்கடமலையை யடைந்து படைப்புத் தொழிலை முருகனே மேற்கொண்டான். இதனைத் தேவர்கள் வாயிலாக

அறிந்த சிவன் நந்திதேவரை அனுப்பிப் பிரமனை மீட்டுவந்து, தானும் முருகனும் வேறு என்பது தவறு என்பதைக் கூறி, ஆறுமுகனைக் குறித்துத் தணிகை மலையில் தவமிருக்கப் பணித்தான். பிரமனும் அவ்வாறே தவமிருந்து படைப்புத் தொழிலை மீளவும் பெற்றான். இதையடுத்து முருகன் பிரம சாத்தனாகத் திருக்கோலம் கொண்டான் என்பது புராணம்.

க) வள்ளி கல்யாண சுந்தரர்:

சிவமுனி எனும் மாமுனிவராகத் தோன்றிய திருமால் நிட்டையிலிருந்தபோது அந்த இடத்திற்கு அழகிய மான்வடிவத்தில் வந்த **திருமகள்**, அம்முனிவரது காமப்பார்வையினால் கருவுற்று வேடர்குலத் தலைவன் நம்பிராஜனின் நிலத்திலிருந்த **வள்ளிக் கிழங்கு அகழ்ந்த ஒரு குழியில் அழகிய பெண்மகவொன்றினை ஈன்று விட்டுச் சென்றாள்**. இவ்வாறு திருமாலின் மகளான **சுந்தரி**, திருமுருகப் பெருமான் அருளியபடி அப்பெண் குழந்தையை நம்பிராஜன் எடுத்து **வள்ளி** எனப் பெயரிட்டு வளர்ப்பு மகளாக வளர்த்து வந்தான். பருவமுற்று வள்ளி தினைப் புனத்தினைக் காத்திருந்த நிலையில், அங்கு வந்த திருமுருகன் வள்ளியின் அழகில் சொக்கியநிலையில் வில்கொண்டு வேடனாகவும், வேங்கை மரமாகவும், வயோதிகனாகவும் பல வேடங்கள் தரித்துத் தமையன் விநாயகன் ஒத்துழைப்புடன் வள்ளியைத் தேவர்கள் முன்னிலையில் திருமணம் புரிந்து கொண்டான்.

இவ்வாறு திருமணக்கோலத்துடன் அவன் இருப்பதையே வள்ளி கல்யாண சுந்தரத் திருக்கோலமென்பர், வள்ளி **மணாளன்** என்றும் இத்திருவுருவம் பெயர் பெறும்.

கா) பால சுப்பிரமணியர்:

ஓம் எனும் பிரணவத்தின் பொருளை அறிந்துள்ளாயோ என்று கேட்ட தன் தந்தை சிவபெருமானிடம், முருகன் அதனைக் குரு-சீடன் என்ற முறைப்படியே ஓத வேண்டுமென்று கூறவே, ஈசன் சீடனாக அமர, முருகனாகிய பாலன் குருவாகித் தகப்பன் சாமியாக நின்று, பிரணவத்தின் பொருளை முறையாக உணர்த்தியருளினான், இந்தத் திருக்கோலத்தையே **பாலசுப்பிரமணியர்** என்பர். இக்கால வழக்கில் சாமிநாதக் கடவுள் திருவுருவமாகக் காணப்படுகிறது.

கி) கிரவுஞ்ச பேதனர்:

சில மந்திரங்களை உச்சரித்து மலைகளை உருவாக்கித் தன் வழியே இயங்கும் மக்களைத் திசைமாற்றித் தவறான வழியில் செலுத்தித் துன்புறுத்தி வந்தான் **கிரவுஞ்சன்** (சூரபதுமனின் தம்பி). அந்த அரக்கன், அகத்திய முனிவரிடமும் தன் மாய வேலையைக் காட்ட முனைந்தான். அந்நிலையில் அம்முனிவரின் சாபத்திற்காளாகி, மலையுருவமாகவே மாறி மீண்டும் எல்லோரையும் துன்புறுத்தலானான்; இறுதியில் முருகனது வேலுக்கு இலக்காகி மடிந்தான். கந்தபுராணக் கதை நிகழ்ச்சியாக இதன் அடிப்படையில் காட்சி தரும் முருகனது தோற்றமே **கிரவுஞ்ச பேதனர்** திருக்கோலமாகும்.

கீ) சிகிவாகனர்:

திருச்செந்தில் அலைவாயிலில் கடலுள் மாமரமாக நின்ற சூரபதுமனை முருகன் இரண்டாகப் பிளக்கவே, அவன் இறவா வரம் பெற்றிருந்தமையால், உடலின் இரு பாகங்களுள் ஒன்று மயிலாகவும், மற்றொன்று சேவற் கோழியாகவும் மாறின. மயிலை வேலவன் தன் ஊர்தியாகவும், சேவலைத்தன் கொடியில் சின்னமாகவும் ஏற்றருளினான். மயில்வாகனனாகச்-சிகிவாகனராகக்-கொண்ட திருக்கோலம் இத்தகைய சிறப்பினையுடையது. ''வேலும் மயிலும் துணை'' என்று மக்கள் ஆர்வமோடு அழைத்து நற்பேறு பெறுவதற்கு வழிவகுக்கும் அருளார் திருவுருவம் இது.

55.4 முருகனது மயில் - தத்துவம்:

சிவகுமாரனாகிய கந்தவேள், சூரபதுமனுடன் போரிடுகையில் எத்தனையோ மாயைத் திறங்களைச் சந்திக்க வேண்டியவனானான். கடலின் நடுவே மாமரமாய் நின்ற சூர பதுமனைக் கந்தன் தன் வேலால் இரு கூறுகளாக்கினான். ஒரு கூறு மயிலாகவும் மற்றொரு கூறு வேலாகவும் மாறின நிலையில், சூரனைத் தனக்குள் அடக்கி வைக்கும் நோக்கத்தில், மயிலைத் தனக்கு வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் கந்தன் கொண்டருளினான் என்பது கந்தபுராண நிகழ்ச்சி.

ஆணவத்தின் உருவகமே மயிலின் தோற்றம் எனவும், **விந்து** தத்துவத்தின் விளக்கமே மயிலின் தோற்றம் எனவும், அதுவே குடில சக்தியெனவும் பலபடியாகக் கூறுவர். வானவில்லிலுள்ள நீலம் முதல் சிகப்பு ஈறாகவுள்ள ஏழு நிறங்களையும், மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் ஆகிய ஏழு வகையான ஆணவத்தின் தன்மைகளுக்கு ஒப்பிடலாம். மேலும், சூரனின் ஓர் அங்கமாகிய மயிலில் காணலாகும் ஏழுநிறங் களும் குறிப்பாய் ஆணவத்தை உணர்த்துகின்றன எனலாம். எனவே, சூரபன்மனிடத்துப் பொருந்தியுள்ள ஆணவ மலம் மயில் வாயிலாகப் புலனாகும் எனவும் அறிஞர்கள் விளக்கம் காண்பர்.

முருகனுக்கு **யானை, ஆட்டுக்கடா** முதலிய சிலவும் ஊர்திக ளாயின. எனினும், **மயிலே சிறப்பான** ஊர்தியாகும். மயில்வாக னன் என்றாலே முருகனைத் தான் குறிக்கும் என்பது உலகறிந்த உண்மை.

55.5. கார்த்திகேயன் - ஒரு பிரம்மச்சாரி:

கந்தன், முருகன், கடம்பன், சண்முகன், குமாரன் முதலிய திருப்பெயர்களால் வழங்குஞ் செவ்வேளைக் குறிஞ்சி நிலத் தெய்வமென்றும், தமிழ்க் கடவுள் என்றும், தமிழ்ப் பெருமக்கள் கொண்டாடி வருகின்றனர். முருகனுக்கு **வள்ளியையும். தெய்வானையையும்** இரு பெருந்தேவியர்களாகவும், முறையே **இச்சாசக்தி, கிரியாசக்தி** எனும் தத்துவ நோக்கில் அவர்களை இரு சக்திகளாகவும் கற்பித்து வழிபடுகின்றனர். ஆனால், **வடநாட்டில் கார்த்திகேயன்** என்ற திருப்பெயரில் வழிபடப் பெறும் கந்தனுக்கு ஏனோ தேவியரைக் குறிப்பிடுவதில்லை! **அவனைப் பிரம்மசாரியாகவே** வழிபட்டு வருகின்றனர்.

கார்த்திகேயன் இவ்வாறு பிரம்மசாரியாக இருப்பதற்கும் ஒரு புராணக்கதை நிகழ்ச்சியைத் தத்துவ நோக்கில் குறிப்பிடு கின்றனர். முன்னொரு காலத்தில் கார்த்திகேயன் சிறு பிள்ளையாகப் பூனையுடன் விளையாடிக் கொண்டிருந்தான் எனவும், விளையாட்டாக அதன் முகத்தில் கீறிவிட்டான் எனவும், பூனை ஓடிப்போய்விட்ட நிலையில், தன் அன்னை

பார்வதியைக் காண வந்தான் எனவும், அவள் முகத்திலே ஒரு கீறல் விழுந்திருக்கக் கண்டு ''அம்மா, உங்கள் முகத்திலே எப்படி இந்தக் கீறல் ஏற்பட்டது?'', என வினவினான் எனவும், அதற்குப் பார்வதி, ''கார்த்திகேயா, உனக்குத் தெரியாதது போல் கேட்கிறாயே! நகத்தாலே நீ தானே இப்படிக் கீறினாய்?'' என்று கூறினார் எனவும் புராண நிகழ்ச்சி அமைந்துள்ளது.

பூனையின் முகத்தில் கீறியதற்கும் அன்னை பார்வதி முகத்தில் அமைந்த கீறலுக்கும் என்ன தொடர்பு என்று கார்த்திகேயன் சிந்திக்கும் வேளையில், ''குழந்தாய், இவ்வுலகத்திலே உள்ள அனைத்துப் பொருள்களிலும் எல்லா உயிர்களிலும் நான் இருக்கிறேன். அவையெல்லாம் என்னையல்லாமல் இருப்பில்லை; எந்த உயிருக்காவது ஒரு துன்பம் நேர்ந்தாலும் நானே அதை அனுபவிக்கிறேன்'', என்று பார்வதி தெளிவுறுத்தினாள்.

''கார்த்திகேயனுடைய ஞானக்கண் திறந்து விட்டது. உடனே அவனுக்கு எல்லாம் தாயின் வடிவமாகவே விளங்கின. பெண்கள் அனைவரும் தாயின் வடிவங்களாகவே காட்சியளித்தார்கள். கார்த்திகேயன் பிரம்மச்சாரியாகவே வாழ்வதென்று முடிவு செய்து விட்டான்''[1] என்ற புராண நிகழ்ச்சியின் உள்ளுறையை வாங்கிப் பெ.தூரன் எழுதிச் செல்வது மனங் கொள்ளத்தக்கது.

வடநாட்டில் நிலவிய **பௌத்தம் சமணம்** ஆகிய மதங்கள் போதித்த **உயிர்க்கு உறுகண் செய்யாமை** எனும் கோட்பாட்டினை **இந்து மதமும்** ஏற்றுச் செயலாற்றினால் மக்களிடையே செல்வாக்கு மிகும் என்ற காரணத்தால் உருவாக்கப்பட்ட புராண நிகழ்ச்சியே இதுவெனலாம். ஆனால், தமிழ்நாட்டில் தமிழ்ப் பண்பாட்டுக்கு உகந்த முறையில் **களவு மணத்துக்கு வள்ளியையும், கற்பு மணத்துக்குத் தெய்வானையையும் கார்த்திகேயனுடன் இயைபுபடுத்திக் காட்டியதே தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாகியது.**

1. அமுத சுரபி தீபாவளி மலர், 1973

35.6. முருகன் திருக்கைகளின் சிறப்பும், படைக்கலச் சிறப்பும்:

நலமார் ஆறுமுகங் கொண்ட திருமுருகனுடைய பன்னிரு திருக்கைகள் பகைவரை அடக்கவும் அடியவரைக் காக்கவும் அமைந்தவையாகும். அந்தத் திருக்கைகளின் செயலை இணை இணையாக விளக்க முற்படும் நக்கீரர் பெருமான், 'வீட்டுலகத்தே செல்லும் முறைமையினையுடைய துறவிகளுக்குப் பாதுகாவலாக ஏந்தியது ஒரு கை; மருங்கிலே வைக்கப்பட்டது மற்றொரு கை; செம்மை நிறம் பெற்ற ஆடையையுடைத்தாகிய தொடையின் மேலேகிடந்தது ஒருகை; அங்குசங் கடாவி யானையைச்செலுத்த மற்றொரு கை; அழகிய பெரிய பரிசையோடு வேற்படையையும் வலமாகச் சுழற்றி நிற்க இரு கைகள்; முனிவர்களுக்குத் தத்துவங் களைக் கூறி உரையிறந்த பொருளை உணர்த்துங் காலத்துத் திருமார்போடே விளங்க ஒருகை, அதற்கு இணையாக மார்பின் மாலை தாழ்ந்ததனோடே சேர்ந்து அழகு பெறும் வகையில் மற்றொரு கை; கீழ் நோக்கி வீழும் தொடியோடே மேலே சுழன்று களவேள்விக்கு முத்திரை கொடுப்பது ஒரு கை; அதற் கிணையாக ஓசையினிதாகிய ஒலிக்கின்ற மணியை மாறி ஒலிக்கப் பண்ணுதற்காக மற்றொரு கை; நீல நிறமுடைய மேகத்தாலே மிக்க மழையைப் பெய்விக்க ஒரு கை; தெய்வ மகளிர்க்கு மண மாலை சூட்டி நிற்க மற்றொரு கை. இவ்வாறு அந்தப் பன்னிரு கைகளும் ஆறு திருமுகங்களின் பகுதியிலே படுமாறு வினை செய்கின்றன'' எனக் கூறிக் களிக்கிறார்; இதனைத் திருமுரு காற்றுப்படையில்,

''வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க் கேந்தியது
ஒருகை; உக்கஞ் சேர்த்தியது ஒருகை;
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇயது
ஒரு கை

அங்குசங் கடாவ ஒருகை; இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலந் திரிப்ப, ஒருகை
மார்பொடு விளங்க, ஒருகை

தாரொடு பொலிய, ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப, ஒருகை
பாடின் படுமணி இரட்ட, ஒருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட,
ஆங்கப் பன்னிரு கையும் பாற்பட இயற்றி'' (106—118)

எனவரும் அடிகளால் உணரலாம். இதனைப் பயின்ற அனுபூதிச் செல்வராகிய **குமரகுருபர அடிகளார்,**

''கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புறசயிலம் பன்னிரண்டும் — ஆரமுதம்
தேவர்க் குதவுந் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மெண்கரமும் — ஓவாது
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர வணிந்த திருக்கரமும் — மார்பகத்தில்
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கிலொரு கரமும் — மொய்த்த
சிறுதுடிசேர் கையுமணி சேர்ந்த தடங்கையும்
கறுவுசமர் அங்குசஞ்சேர் கையும் — தெறுபோர்
அதிர்கே டகஞ்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்''[1].

என அழகுறப் பாடிச்செல்வது காண்க. இவற்றையெல்லாம் நெஞ்சத்துட் கொண்ட சிற்பியர், பௌராணிகத் தத்துவத்திற்கு இயையுமாறு பன்னிருகைப் பெருமானின் திருக்கைகளுக்குப் படைக்கலங்களைப் பாங்குற அமைத்துக்காட்ட முயன்றுள்ளனர்;

திருமுருகனுடைய பன்னிரு திருக்கைகளிலும் பன்னிரு படைகளை ஏந்தியிருக்கிறான் என்றும், **உருத்திரர் பதினொருவரும் அருட்சக்தியும் ஆகக்கூடிய பன்னிருவரும் பன்னிரண்டு படைகளாக விளங்குகின்றனர்** என்றும் அடியவர்கள் கருதத்

1. கந்தர் கலி வெண்பா, 47 - 53
2. ஞானபூமி [திங்களிதழ்] ஜூன், 1988,

தலைப்பட்டனர். ஒவ்வொரு படையும் முருகனின் ஒவ்வொரு சிறந்த இயல்பினையோ அறக்கருணையையோ மறக்கருணையையோ குறிக்கும் என்பது தத்துவ விளக்கமாகும். அது வருமாறு:

1. தோமரம் - சுத்த தத்துவங்களைப் படைக்கும் ஆற்றல்
2. துவசம் (கொடி) — பிரபஞ்ச வெற்றிப்பாடு.
3. வாள் — பிறப்பு இறப்பு அறுக்கும் பெருமை.
4. வச்சிராயுதம்—ஒருவராலும் வெல்லப்படா உயர்வு.
5. பிராசம் (ஈட்டி) } உயிர்களின் மும்மல ஒழிப்பு
6. கோதண்டம் }
7. அம்பு (கணை) } முக்குணங்களையும் இயக்குதல்
8. அங்குசம் — }
9. கண்டை — பரநாதத்தை இயக்கும் பண்பு.
10. கமலம் — உலகை நியதிப்படி தோற்றி ஒடுக்கும் வலிமை
11. பரசு (மழு) — உயிர்களின் இடர்களைக் களைந்தொழிக்கும் இயல்பு.
12. வேல் — அஞ்ஞானத்தை அழித்து ஞானத்தை அளிக்குந் தன்மை''[1]

மேற்காணும் படைகளுள் 'வேல்' என்பதற்குரிய சிறப்பு மிகவும் தனித்தன்மை வாய்ந்தது. பண்டைத் தமிழர்தம் வாழ்வியலில் செவ்வேளாகிய திருமுருகன் போர் மாட்சியுடைய தெய்வமாக விளங்கியதை மையமிட்டே மேற்கூறிய படைக்கலங்கள் அமைந்தன என்பதே பண்பாட்டு அடிப்படையில் மனங்கொள்ள வேண்டிய சிறப்புச் செய்தியாகும்.

வேலாயுதமே ஒரு தெய்வமெனப் பண்டுதொட்டு மக்கள் வழிபட்டு வருவதையும், திருமாலின் ஆழியாகிய சுதர்சனச் சக்கரமே சக்கரத்தாழ்வாராக வழிபட்டு வருவதையும் சிறப்பாக ஒப்பு நோக்கில் சிந்திக்கலாம் .

1. ஞானபூமி [திங்களிதழ்], ஜுன், 1988

35.7. வியத்தகு முருகன் சிற்பங்களும் செப்புச் சிலைகளும்:

தமிழகத்தில் பல ஊர்களிலே வியத்தகு முருகன் சிற்பங்களும் சிலைகளும் பரவலாக வழிபாட்டில் உள்ளன; சிலவற்றை மட்டும் ஈண்டுச் சிறப்பாகக் காண்போம்

அ. வேலுடையான் பட்டி (வேல்ராம்பட்டு) முருகன்:

தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டத்தில் நெய்வேலிக்கு அருகில் **வில்லுடையான்பட்டி** எனும் முருகத்தலம் உள்ளது. அப்பெயர் மருவி, **வேலுடையான்பட்டி**, **வேல்ராம்பட்டு** எனும் பெயர்களில் வழங்குகிறது.

இங்குள்ள சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் முருகன் தன் திருக் கரங்களில் வில்லும் அம்பும் ஏந்தியவனாய், விரிசடையுடனும் இடுப்பில் சல்லடத்துடனும் வேடர் கோலத்தில், ஒரே முகமுடையவனாய் எழிற் கோலத்துடன் காட்சியளிக்கின்றான். வள்ளி தெய்வயானை ஆகிய இரு தேவியரும், முருகன் இரு மருங்கிலும் ஒரே கல்லில் நின்ற கோலத்தில் விளங்குகின்றனர். மிக வியக்கத்தக்க இந்தச் சிலை, வள்ளியை மணக்க முருகன் வேடர் கோலத்தில் வந்து மணந்து கொண்ட காட்சியை நினைவு படுத்தும். இது சுயம்புவாய் உள்ளது.

ஆ. வெட்டுவான் கோயில்:

சிற்பப் பெருமை கொண்டது வெட்டுவான் கோயில் என்பதைப் பலரும் அறிவர். அங்குள்ள முருகன் கோயிலில் "குடைவரையில் **ஆறு திருக்கரங்களுடன் கூடிய முருகப்பெருமான்** சிறப்புற்று விளங்குகிறார். பொதுவாக **இரண்டு** அல்லது **பன்னிரண்டு** திருக்கரங்களுடன் காணப்படும் முருகன், ஆறு திருக்கரங்களுடனும் மயில் வாகனத்துடனும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளார்"[1] எனவருங் குறிப்பினைக் காண்க.

இ. பொருள் வைத்தசேரி:

எண்கண் முருகன், எட்டுக்குடி **வேலவன்**, சிக்கில் **சிங்கார வேலன்** ஆகிய முருகர் சிலைகள் மிகச் சிறந்த சிற்பநேர்த்தியுடன்

1 தினமலர் தீபாவளிச் சிறப்புமலர், 1990, பக். 240

ஒரே சிற்பவல்லுநரால் உருவாக்கப்பட்டவையென்பர். சிக்கிலுக்கு அருகே பொருன்வைத்நசேரி (பொறவச்சேரி) ஆலயத்தில் அமைந்துள்ள முருகன் சிற்பம் சிற்பக்கலையின் மகுட முத்திரை பெற்றது எனலாம். மயில்வாகனத்தின் மீது வீற்றிருக்கும், முருகன் எழிற்கோலம் நம் தமிழ் நாட்டுக்கு மட்டுமின்றித் தென்னாட்டுக்கே, ஏன், பாரதப்பெருநாட்டுக்கே கலைப் பெருமை சேர்க்க வல்லதாகும்.

ஈ ஓதிமலை முருகன்:

ஆறுபடை வீடுகளிலும் பிற முருகன் தலங்களிலும் முருகனின் பல்வேறு திருவுருவங்களைக் காணலாம். குமாரக் கடவுளின் தத்துவத்திற்கேற்பவும் பல்வேறு திருவிளையாடல்களுக்கேற்பவும் சிற்பியர் ஆகம அடிப்படையில் திருவுருவங்களை அமைக்கலாயினர்: குமாரதந்திரம், ஸ்ரீதத்துவநிதி ஆகிய இரு நூல்களிலும் 22 வடிவங்ள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் சேனாதிபதி, சரவண பவன், கிரவுஞ்ச பேதன், சேனானி என்ற வடிவங்களுக்கு 6 முகங்களும், அக்கினி ஜாத சுப்பிரமணியனுக்கு 2 முகங்களும், செளர பேய சுப்பிரமணியனுக்கு 4 முகங்களும் கூறப்பட்டுள்ளன. ஏனைய வடிவங்களுக்கு ஒரு முகம் தான். 2, 4, 6, 8, 10, 12 இருக்கலாம் என்று ஆகமங்கள் விதித்துள்ளன. எந்த வடிவமும் 5 முகங்கள் கொண்டதாகவும் விதிக்கப்படவில்லை."[1] என்று குறிப்பிடும் தி. ராஜமாணிக்கம், ஒரு வியத்தகு சிற்பவடிவத்தினை ஓதிமலை என்னும் திருத்தலத்தில் கண்டு அதன் விவரங்களை எழுதிச் சென்றுள்ளார்.

கோவை மாவட்டத்திலுள்ள ஓதிமலை என்பது, தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலைச் சிறப்பினைக் கொண்டுள்ளதோ என நினைக்கத் தோன்றும். பிரணவப் பொருளைப் புலப்படுத்த வியலாத நான்முகனைச் சிறையிட்ட இடம் இரும்பறை எனவும், பிரணவத்தின் பொருளைச் சிவபிரானுக்கு உபதேசித்த- ஓதிய மலை என்பதால் இது ஓதிமலை என மருவிய நிலையில் வழங்கலாயிற்று என்பதும் ஊர்மக்களின் செவி வழிச்

1. மஞ்சரி, செப்டம்பர், 1985

செய்தி என்பர். எவ்வாறோ, இந்த ஓதிமலையில் எழுந்தருளியுள்ள கோயில்மூலவருக்கு 5 முகங்களும் 8 கைகளும் உள்ளன. தலைகளுக்கும் பின்னால் ஒளிவட்டம் அமைப்பாக உருவாக்கப் பட்டுள்ளது. இத்திருவுருவத்தில் வலக்கைகளில் ஒன்று அபய முத்திரையுடனும், ஏனையவற்றில் கத்தி, அம்பு, வச்சிராயுதம் ஆகியவற்றுடனும் இருத்தலைக் காணலாம். இடக்கைகளில் ஒன்று வரத முத்திரையுடனும், ஏனைய மூன்றில் கேடயம், வில், பாசம், ஆகியவற்றுடனும் இருத்தலைக் காணலாம்.

சமபங்க நிலையில் நின்ற தோற்றத்துடன் கூடிய இத்திருவுருவத்தின் தலைகளைக் கரண்ட மகுடங்கள் அணிசெய்வது வனப்புடன் உள்ளது. மார்பு இடுப்பு முதலிய அங்கங்களும் எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளன.

கைதேர்ந்த சிற்பி இதனை இவ்வாறு உருவாக்கியதன் நோக்கம் சரிவரப் புரியவில்லை எனினும், "சிவனும் முருகனும் வேறு வேறல்லர் என்பதை யுணர்த்தும்நோக்கில் முருகனுக்கு ஐந்து தலைகள் அமைக்கலாம் என்று இந்தச் சிலையைச் சிற்பி நிறுவினான் போலும்.........

எட்டுக்கைகள் கொண்ட முருகன் வடிவில் பொதுவாக. இருகைகள் அபய-வரத முத்திரைகளில் இருக்க, ஏனையவற்றில் வச்சிரம், சக்தி, கத்தி, கேடயம், வில் மற்றும் அம்பு இருக்க வேண்டும். ஆனால் இங்குள்ள வடிவில் சக்தி என்ற படைக்கலத்துக்குப் பதிலாகப் பாசம் காணப்படுகிறது. இது காண வேண்டியஅரிய கலைப் படைப்பாகும்."[1] என்று குறிப்பிடுவதை அடிப்படையாகக் கொண்டு மேலும் சிந்திக்கலாம்.

உ) சென்னிமலை - அக்கினிஜாத சுப்பிரமணியன்:

'குமாரதந்திரம்' எனும் நூல் வாயிலாக அறியலாகும் முருகனின் பதினாறு திருவுருவங்களைத் தவிர, **'ஸ்ரீ தத்வநிதி'** எனும் நூல் வாயிலாக ஆறுதிருவடிவங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றே **'அக்கினிஜாத சுப்பிரமணியன்'** ஆகும்.

1. மஞ்சரி, செப்டம்பர், 1985.

சென்னிமலை மேலுள்ள ஆலயத்தில் முருகன் மூலவராக எழுந்தருளியுள்ளான். "கருவறையின் தென்புற வெளிப்புறச் சுவரிலுள்ள புரையில் அக்னிஜாத சுப்பிரமணியன் வடிவம் காணப்படுகிறது. இங்குள்ள வடிவிற்கு 'ஸ்ரீ தத்வநிதி'யின் படி 2 தலைகளும் 8 கைகளும் உருவாக்கப்பட்டுள்ளன. தலைகளில் கிரீடங்கள் இலங்க, இடக் கைகள் மூன்றில் நெய்யுடன் கூடிய கலம், கேடயம் மற்றும் சக்தியும், வலக் கைகள் மூன்றில் கரண்டி, கத்தி, மற்றும் வச்சிரமும் உள்ளன. முன் வலக்கை அபய முத்திரையிலும், முன் இடக் கை ஊருமுத்திரையிலும் காணப்படுகின்றன. ஆகமத்தின்படி அமைக்கப்பட வேண்டிய அக்க மாலை (உருத்திராக்க மாலை], மற்றும் கோழிக்குப் பதில் கத்தி உள்ளன. சுவஸ்திக் முத்திரைக்குப் பதில் அபயம் மற்றும் ஊருமுத்திரைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மூர்த்தி சிறிதாக இருப்பினும், கலையழகுடன் மிளிர்கிறது.

சிற்சில மாற்றங்களுடன் ஆகமவிதிகளின் படி உருவாக்கப் பெற்ற, இரண்டு தலைகளைக் கொண்ட அக்னிஜாத சுப்பிரமணியனின் திருவுரு வேறு எங்கும் காண்டற்கரிய ஒன்றாம்,"[1] என்று தி. இராசமாணிக்கம் எழுதிச் செல்வதைக் காண்க. இந்த அரிய படைப்பினால், ஆகம அடிப்படையில் இயங்கும் சிற்பி, சில வேளைகளில் அதனையும் கடந்து தன் கலைக் கற்பனையால் அரிய படைப்புக்களை உருவாக்கிவிடுகிறான் என்பது அறியலாகும்.

36. நந்திகேசுவரர்:

சிவபெருமானுக்கு அருகிருந்து தொண்டு புரிவதில் பெருநாட்டமுள்ளவர் நந்தியம் பெருமான் எனும் நந்திகேசுவரர். புராண அடிப்படையில், திரிசூலி உன்ற பெரிய தவவலிமை கொண்ட அந்தணருக்குச் சிவன் அருளால் பிறந்த மகனே, பிற்காலத்தில் நந்திகேசுவரர் ஆனார் என்பர். காளைமாட்டின் முகத்துடன் பிறந்த இவ் வியத்தகு குழந்தை சிவபெருமானால் முடி சூட்டப் பெற்ற பெருமைக்கு உரியவரானார்.

1. ஆறுமாமுகனின் அரிய திருவுருவங்கள் (கழகவெளியீடு), 87. பக். 11

கொள்ளிடக் கரையிலமைந்த பாடல் பெற்ற தலமாகிய **திருமழபாடி** என்ற தலத்தில் அமைந்த **நந்திகேசுவரருக்கும்** வசிட்ட முனிவரின் மகள் **ஊர்மிளைக்கும்** நடைபெற்ற திருமணத்தைப் பரமனே முன்னின்று நடத்தியதாக ஐதிகம். இதனையொட்டித் **திருமணத்** **திருவிழா** திருமழபாடியில் ஒவ்வொரு பங்குனிமாதத்திலும் நடைபெறுகிறது.

ஒவ்வொரு சிவத்தலத்திலும் நந்தியம்பெருமான் சிவனை நோக்கியே படுத்திருப்பதைக் காணலாம். அஃதாவது, சிவன் முன் "அம்மையப்பா! நீதான் அனைத்தும்; நினைப்பது நடப்பது நடத்தப்படுவது எல்லாம் உன் செயலின்றி வேறில்லை; நீயேகதி என்ற நினைப்பில் படுத்திருப்பதாகக் கூறுவர். ஒவ்வொருவரும் சிவன் முன் அடைக்கலமாகி நந்தியம் பெருமான் போல் வணங்கிக் கிடந்தால், எல்லாவற்றையும் இறைவன் நன்கு நடத்திச் செல்வான் என்பது கருத்து. முக்கியமாகப் **பிரதோச** காலத்தில் நந்தியையும், சிவனையும் வணங்கி வழிபடுவது மிக உயர்வையும் நலத்தையும் தரும் என்பது சமயநம்பிக்கை.

இராவணன் தொடர்பாக ஒரு செய்தி அறியத்தக்கது. ஒரு சமயம் திருக்கயிலையில் இராவணன் ஈசுவரனை நோக்கிக் காட்சிக்காக வரவே, நந்தியம் பெருமான் அவனை நோக்கி, "அம்மையும் அப்பனும் உள்ளே ஏகாந்தமாக உரையாடிக் கொண்டிருக்கின்றனர். சிறிது நேரங்கழித்துஉள்ளே செல்ல இசைவளிக்கிறேன்" எனக் கூறினார். அவனே வெகுண்டு "நீ யார்? இப்படிக் குரங்கு போல் வழிமறைக்கின்றாயே!" என இழித்துப் பேசினான். அதுகேட்ட நந்தியம் பெருமான், "என்னைக் குரங்கு என்று இகழ்ந்து பேசிய நீயும் உன் நாடும் குரங்குகளால் ஒரு காலத்தில் அழியட்டும்?" என்று சாபமிட்டார். அவ்வாறே அனுமன் முதலியோரால் இலங்கையரக்கர்கள் அழிந்தமையை ஈண்டு நினைவுகூரலாம்.

மருத்துவன் என்ற அசுரன் சீர்மிகு நந்தியம்பெருமானுக்குத் துன்பங் கொடுக்கவே, அந்த அசுரனை வதைக்கவே **அகோர சிவரூபமாக**-அகோர மூர்த்தியாகத்-**திருவெண்காட்டில்** சிவபெருமான் தோன்றியதாகத் தல வரலாறு கூறும்,

திருநாளைப் போவாராகிய **நந்தனாருக்காகத் திருப்புன் கூரில்** நந்தி விலகி இறைவன் திருக்காட்சிக்கு வழிவகுத்ததமையை நினைவிற் கொள்ளலாம். இறைவன் திருவருளால் திருஞான சம்பந்தர் பட்டீசுவரத்தில் **முத்துப்பந்தல்** பெறுகிறார். முத்துப் பந்தலில் சம்பந்தர் வருங் கோலாகலக் காட்சியைத் தானும் காணவும், சம்பந்தர் தம்மைத் தரிசிக்கவும் இறைவன் **திருநந்தி கேசுவரரை விலகியிருக்குமாறு அருளிச் செய்ததைப் பழையாறு ஆலயத்திலும் காணலாம்.** இதற்குச் சிற்பச்சான்றுடன் இலக்கியச் சான்றும்[1] உண்டு. தஞ்சைப் பெரிய கோயிலிலும், இராமேசு வரத்திலும் மிகப்பெரிய நந்தியம்பெருமான் சிலைகளைச் கண்டு கலைச் சிறப்பினைப் போற்றலாம். பொதுவாகச் சிவன் கோயில் மதில்களில் நந்தியின் சிலைகள் அணி செய்யும்; அவை சிவன் கோயிலுக்குப் பாதுகாப்பு அடையாளமாகும்.

சில திருத்தலங்களில் நந்தியம்பெருமான் இறைவன் திருமுன் நின்ற கோலத்தில் இருப்பதைக் காணலாம். எடுத்துக் காட்டாகத் **திருவல்லம்** எனுந் தலத்தில் நந்தியின் நின்ற திருவுருவம் கிழக்குத் திசை நோக்கி இருத்தலைக் காண்க. சிவன் திருக்கோயில்களில் பெருந்திருவிழா -பிரம்மோற்சவம்- நடைபெறுகையில் முதலிலே **அதிகாரநந்தி**யைக் கண்டு வணங் கலாம். ஆனால், காளையுருவத்திலும் மாறுபட்ட நிலையில் **அதிகாரநந்தி** காணப்படும் என்பதை நினைவிற் கொள்க,

36.1. நந்தியம்பெருமான் - தத்துவம்:

இறைவனுக்கு மிகவும்அணுக்கத் தொண்டராகிய நந்தியம் பெருமானின் அருள்பெற்ற பெருஞ்சித்தரே **திருமூலர்** எனும் நாய னார்; அவரது திருமந்திரவாக்கினால் நந்தியின் பெருமையை உணரலாம்; இதனைச்,

1, வேண்டு நந்திநீ விலகெனச்சொனாய்
பூண்ட அன்புடைப் புகலி வள்ளற்கா
முண்ட வெவ்வினை விலக முன்னினும்
மீண்டுய் வேனருள் பழசை எந்தையே'
- திருப்பழசைப் பதிற்றுப் பத்தந்தாதி (மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அருளியது.)

"சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையாற்
புந்திக் குள் நிற்பது நந்திபொற் பாதமே"[1]

எனவரும் பாடலால் தெளிக.

36.2. நந்தி விலகிய இடங்கள்:

அ) திருநாளைப் போவார் எனும் நந்தனாருக்காகத் திருப்புன் கூரில் நந்தி விலகிச் சிவாலயச் சன்னிதியைக் காணுமாறு செய்ததைச் **சேக்கிழாரின்** திருத்தொண்டர் புராணத்தால் அறியலாம்.

ஆ) கீழ்வேளூர் கேடிலியப்பர் சன்னிதியில் வெளிப் பிராசாரத்தில் சுதையால் அமைந்த **பெரிய நந்தி** கொடிமரத்தை அடுத்துள்ளது. இது சன்னிதியை விட்டுத் தென்பக்கம் சிறிது விலகியிருத்தலைக் காணலாம். ஓர் அடியவளுக்காக அவளது கற்புநிலையை மக்களுக் குப் புலப்படுத்தவே இவ்வாறு நந்தி விலகியிருப்பதாகக் கூறுவர். கோயிலில் பூசை புரிந்து வந்த ஆதி சைவர் ஒருவர் தம் மனைவி, கருவுற்ற இரண்டாம் மாதத்தில் காலமாகி விட்டார். கர்ப்பம் முற்றி உரிய காலத்தில் ஆண்குழந்தை பிறந்தது. குழந்தை வளர்ந்து பெரியவனாகி, முறையாகக் கல்வி கற்றுச் சிவாகமப் பண்டிதனாகிய நிலையில் சங்கடம் தோன்றியது. தாயாதிகள் பொறாமையால், அவனுக்குரிய பூசை மானியம் கிடைக்காதவாறு, ஆதிசைவருக்கு அவன் பிறந்தவன் இல்லை என இழுக்குக் கற் பித்தனர். உடனே அவன் தாய் **கேடிலியப்ப சுவாமியிடம்** வந்து குறையிரந்து நின்றாள். அந்த நங்கையின் கற்பைக் காக்க, இறை தன் கையிலிருந்த **மழுப்படையை நேரே ஏவியதும்**, குறிப் பறிந்து நந்தி சிறிது விலகியது. பழி கூறிய தாயாதிகளின் தலை களை மழுப்படை கொய்து தள்ளியது என்பர். இவ்வாறான நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் இன்றும் நந்தி விலகிக் காட்சியளிக்கிறது.

இ) பழையாறைக் கோயில் முன் கோபுரத்திற்கு அருகில் உள்ள நந்தியும் உள் மண்டபத்திலுள்ள நந்தியும் விலகியுள்ள நிலையில்

1. திருமந்திரம், 185

சிற்ப அமைப்பைக் காணலாம். "முத்துப் பந்தல் பெற்ற திரு ஞான சம்பந்தர் வருகை தரும் காட்சியைத் தாம் காணவும், தம்மைத் தமிழ் ஞான சம்பந்தர் தரிசிக்கவும் இறைவன் திருநந்தி தேவரை விலகியிருக்குமாறு அருளியதாகப் புராணங்கள் கூறும்"[1] என்று எழுதி,

"வேண்டு நந்தி நீ விலகெனச் சொன்னாய்
பூண்ட அன்புடைப் புகலி வள்ளற்கா
மூண்ட வெவ்வினை விலக முன்னினும்
மீண்டுய் வேனருள் பழசை எந்தையே"

என்பது மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் அருளிய திருப்பழசைப் பதிற்றுப்பத்தந்தாதியாகும்"[2] எனப் புலவர் வே. மகாதேவன் விளக்கிச் செல்வது காண்க இத்தலங் களேயன்றித் திருப்பூந் துருத்தியிலும் நந்தி விலகியிருப்பதைக் காணலாம்.

37. சிற்றூர்ப்புறத்தெய்வங்கள் (கிராமதேவதைகள்)

இயற்கையின் ஆற்றல்களாகிய நிலம் நீர் தீ காற்று விண் ஆகிய ஐந்து பூதங்களைத் தம் வாழ்வியல் பாதுகாப்பினை யொட்டிய நம்பிக்கையில் தெய்வங்களாகப் போற்றி வழிபட்டு வந்தமை பண்டைய சமய வழிபாட்டுக் கொள்கையாகும். இயற்கையின் சூக்குமங்களைப் புரிந்து கொண்ட நிலையில், மனிதன் தன் அச்சத்தைப் போக்கிக் கொள்ளவும், இயற்கை யின் சீற்றத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தொடங்கிய இந்தத் தெய்வ வழிபாடு, உலகில் பல்வேறு இன மக்களிடையே பண்டுதொட்டு இருந்து வருகிறது.

பல தெய்வ வழிபாட்டின் சார்பாகக் கிளைத்த சமயங்களுள் பெருந்தெய்வ நோக்கில் சைவம் வைணவம் சாக்தம் காணாபத் யம் கௌமாரம் சௌரம் என்பவை தமிழ்நாட்டில் போற்றப் பட்டன. எனினும், மக்களிடையே இயல்பாகச் சூரிய வழிபாடு இருப்பினும், சௌரம் ஒரு சமயப் பெருநோக்கில் தமிழ் நாட் டிலே சிறப்பாக இல்லை. இந்நிலையில், மக்களின் நம்பிக்கையை ஒட்டி, ஆவிகள் முதலிய தொடர்புடன் நூற்றுக்கணக்கான சிறு தெய்வங்கள் சிற்றூர்ப்புறங்களில் அறிமுகமாகிக் காலூன்றியுள்

1,2. மகாமகம் [விழாக் குழுவினர்] சிறப்புமலர், 1992

என. நாட்டுப் புறவியலில் சாதி, தொழில், சமுதாயம் முதலிய நோக்கில் தொடர்ந்து களஆய்வு, 'சிறுதெய்வங்கள்' பற்றி நடைபெற்றுவரின் பல அரிய செய்திகள் கிட்டும். அவை வாயிலாகச் சிற்றூர்ப்புற மக்களின் வழிபாடுகள், சடங்குகள், நம்பிக்கைகள் முதலிய பண்பாட்டுக் கூறுகள் மேலும் தெரியலாகும்

சாதி, குலம் தொடர்பாக நாட்டுப்புறத் தெய்வங்கள் மக்களின் வாழ்வியலில் பெருந்தாக்கத்தை உண்டாக்கியுள்ளன. எடுத்துக் காட்டாக மீனவர் சாதியில் நாட்டுப்புறத் தெய்வங்கள் சில உள்ளன; அவற்றுள் 'குட்டியாண்டவர்' எனுந் தெய்வம் பல குப்பங்களில் போற்றி வழிபடப் பெறுகின்றது. குட்டியாண்டவரை வழிபட்டநிலையில் மீன் பிடிக்கச் செல்கையில் சேலா, சுறா முதலிய மீன்களால் துன்பம் நேராது என்ற நம்பிக்கை இன்றும் உள்ளது. எனவே, ஒவ்வொரு குப்பத்திலும் அத் தெய்வம் தன் குதிரைப் பரிவாரங்களுடன் அமர்ந்திருக்கும் திருக்கோலம் கல்லிலோ சுதையிலோ உள்ளது. பிறகு, குலதெய்வம் பற்றித் தனியே காண்போம்.

ஊர்தோறும் காவல் தெய்வங்களாகப் பல அமைந்தன, க்ஷேத்திர பாலர் எனப் பிற்காலத்தில் அழைக்கப் பட்ட ஊர்க் காவல் தெய்வம், ஊரின் வடகிழக்கில் நிறுவப்பட்டுள்ளதைப் பல ஊர்களில் காணலாம். "க்ஷேத்திரபாலர் ஆடையில்லாமலும் முக் கண்களுடனும் விரிந்த சடா மகுடத்துடனும் இரண்டு, நான்கு, ஆறு அல்லது எட்டுக்கைகளுடனும் காட்சியளிப்பார்; இவருடைய படைக்கலங்கள் சூலம், கபாலம், மணி, பாசம் முதலியவை; இவர் பைரவரின் அமிசம் என்று கருதப்படுபவர்"[1] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது. பெருந் தெய்வத்திற்குரிய அடிப்படைக் கூறுகள் ஊர்க்காவல் தெய்வத்திடம் அமைந்துள்ளமை காண்க.

திருமாலின் கூறுடையவராகவும் - தொடர்புடையவராகவும்-மன்னார்சாமி போற்றப்படுகிறார்; நல்ல கரிய நிறங்கொண்ட இவரும் காவல் தெய்வமாகவே உள்ளார். கரிய நிறங்கொண்ட கருப்பண்ணசாமியும் பல சிற்றூர்களில் சக்திவாய்ந்த தெய்வமாகப் போற்றப்படுகிறார். கள்ளழகர் கோயிலிலுள்ள,

1. வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி பத்து. பக். 851

சிற்பத் திருவுருவில் காணலாகும் **கறுப்பர், பதினெட்டாம்படிக் கறுப்பராகப் பெரிதும்** போற்றப்படுதலைப் பலரும் அறிவர். கறுப்பர் வீற்றிருந்தருளும் சில கோயில்களில் இரும்புச் சங்கிலிகள் தொங்கும்; எனவே, இவரைச் **சங்கிலிக் கறுப்பர்** என மக்கள் வழங்கிவருவர்.

ஐயனார் எனும் பெயரிய ஊர்க்காவல் தெய்வம் தமிழ் நாடெங்கும் பரவிக் காணப்படும். **சபரிமலை ஐயப்பனுடன்** இத் தெய்வம் தொடர்பு படுத்திப் பேசப்படுகிறது. ஆனை குதிரை போன்ற பரிவாரங்களுடன் ஐயனார், மக்களிடையே பெருஞ் செல்வாக்கினையும் மதிப்பினையும் பெற்றுள்ளமை நாடறியும். முனீசுவரனும் பலர் அறிந்த சக்தி நிறை தெய்வம்.

மதுரை நாயக்கர் வமிசத்தில் பிறந்த அரசகுமாரியைக் காதலித்துப் பல துன்பங்களை அடைந்த **மதுரைவீரன்,** சிறு தெய்வங்களுள் பலருக்கும் அறிமுகமான தெய்வமாகும். பொம்ம நாயக்கருக்குக் காவலாளியாக இருந்த **மதுரைவீரனுடைய ஆவியே** தெய்வமாக இருந்து, மறவர்களால் மாடுகளைத் திருடச் செல்லுமுன் வழிபடப் படுகிறது. "துர்மரணம் அடைந்த பண்டை வீரர்களின் ஆவிகளே, மாடன், **சாம்பன், சின்னன், மழிக்கன்** முதலியோராக உள்ளன. சுடுகாட்டில் வசிக்கும் மாடன் **சுடலைமாடன்**"[1] என வருங் குறிப்பினை நினைவிற் கொள்ளலாம். இந்தத் தெய்வங்கள் பலவும் தமிழ்நாட்டின் தென்பகுதியில் பயபக்தியுடன் வழிபாடுகளைப் பெற்று வருகின்றன.

பெண்தெய்வங்களாகச் சிற்றூர்களில் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படுபவை பல உள்ளன. அவற்றுள் **பத்திரகாளி, திரௌபதியம்மன்,** அங்காளம்மன், **செல்லியம்மன், ஏகாத்தாள், நாடியம்மன், கோடியம்மன்,** முத்தாளம்மன், **கண்ணாத்தாள், பொன்னியம்மன், பிடாரியம்மன், பச்சையம்மன், மாரியம்மன்** முதலிய தெய்வங்கள் மிகச் சிறப்புடையவை. காளிக்கு **மாடு, ஆடு, கோழி** முதலியவை சிறப்பாகப் பலிதரப்படும். **வேப்ப மரத்து அடியில்** வீற்றிருந்து, பிறகு கோயில் வளாகத்தில் குடியிருப்பினைக் கொண்ட **மாரியம்மன்** மிகமிகச் சக்திவாய்ந்த

1. வாழ்வியல் களஞ்சியம்-தொகுதி பத்து, பக். 851

தெய்வமாகும். இத்தெய்வத்துக்குக் கோபம் வந்தால் ஊரில் **வைசூரி** போன்ற நோய்கள் உண்டாகும் என்பது சமய நம்பிக்கை. இத்தெய்வத்தின் கைகளில் **கபாலம், சூலம், கத்தி, அரவம், தீச்சுடர்** முதலியவை காணப்படும். இவளுக்கு வேலையாட்களாகப் **பேச்சியம்மனும் பாவாடைராயனும்** சிறப்பாகக் கருதப்படுகின்றனர்.

இயக்கி (இசக்கி), ரேணுகா, நீலி, காட்டேறி முதலிய தெய்வங்களும் சிற்றூர்ப்புறங்களிலே இன்றும் வழிபாட்டில் உள்ளன. குமரிமாவட்டத்தில் **இயக்கியும் ரேணுகாவும்** சிறப்புமிகு சிற்றூர்ப் புறத்தெய்வங்கள். அது நிற்க, ஒரு கோயிலிலே சில சிற்றூர்த் தெய்வங்களும் **காணப்படுகின்றன.** எடுத்துக்காட்டாகத் தஞ்சாவூர் மாவட்டம் மாப்பிள்ளைக்குப்பம் **அங்களாம்மன் கோயிலில் பேச்சியம்மன், காட்டேறி** முதலிய சிறுதெய்வங்களுக்குச் சன்னிதிகள் அமைந்திருத்தலைக் காணலாம்.

காலத்தையொட்டிய கவின்கலைநேர்த்தி யில்லாவிடினும், சிற்றூர்ப்புறத் தெய்வங்கள் பக்தர்களின் மனத்தில் **பயபக்தி** யெழுச்சியுண்டாகும் வண்ணம், சுதையாலோ மரத்தாலோ கல்லாலோ அமைக்கப்பட்டிருக்கும். சுதைச்சிற்பத்திலோ மரச் சிற்பத்திலோ **அழுத்தமான வண்ணம் (Strong Colour)** பூசப் பட்டிருக்கும்.

பொதுவாகச் சிற்றூர்ப் புறத்தெய்வங்களைப் பெருந்தெய்வங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கையில், மக்களின் ஈடுபாட்டைப் பொறுத்துச் சிறுதெய்வங்களே படிப்படியாகப் பெருந்தெய்வநிலையை அடைந்து போற்றப்படுதலைக் காணலாம். எடுத்துக்காட்டாகச் **சமயபுரம் மாரியம்மனைப்** பெரிதும் போற்றி நினைவிற் கொள்ளலாம்.

37.1. குலதெய்வம்:

தெய்வநம்பிக்கையில் ஊறித் திளைத்த மக்கள், சமுதாயத்தில் கோயில்களிலே வழிபடப் பெறும் பெருந்தெய்வங்களேயன்றித் **தம்** குலமரபிற்கென வரித்துள்ள **சிறுதெய்வங்களையும்**

குலதெய்வங்களாகப் போற்றி வழிபடலாயினர், ஞானியரும் ஆசாரிய புருடர்களுங் கூட இத்தகைய குல தெய்வ வழி பாட்டிற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உள்ளனர்.

ஒவ்வொரு குடும்பத்திலும் குடும்பத்தினருக்குத், தக்க வேளை களில் இடர்களைப் போக்கிப் பாதுகாப்பளிக்குங் கண்கண்ட தெய்வமாகக் குலதெய்வம் போற்றப்படும். குடும்பப் பொறுப்புத் தெய்வமாகிய குலதெய்வம் நகர்ப் புறத்தைக் காட்டிலும் நாட் டுப்புறத்திலே மக்களின் வழிபாட்டினைச் சிறப்பாகப் பெற்று வருகின்றது. குலதெய்வத்தை இல்லுறை தெய்வமாகவே போற்றிப் பரவுவதும் உண்டு.

கடவுள் அல்லது பரம்பொருள், நன்கு திருவருள் பொழியும் நிலையில் மேல்நிலைத் தொட்டி (Over head tank) எனக் கொண் டால்,அந்தத்தொட்டியுடன் தொடர்புகொண்டு நீராகிய கருணை யைக் கொண்டு வரும் நீர்க்குழாய்களைப் போன்றவையே குல தெய்வங்களாகும். ஒவ்வொரு குடும்பத்துடன் வழிவழியே ஒன்றிய நிலையில் போற்றப்படும் குலதெய்வங்களுக்கு ஆண்டுக்குக் குறைந்தது ஒரு முறையேனும் படையலிடுவதை மரபாகக் கொள்வர். குலதெய்வங்களைச் சில இடங்களில் இல்லுறை தெய்வங்களாகவே கொள்வதால், சில குடும்பத்தினர் வெளி யூருக்குக் குடிபெயர்ந்தாலுங் கூடத் தம் முன்னையோர் வழிபாடு புரிந்த அதே இடங்களுக்குச் சென்று படையலிடு வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

ஒரு குடும்பத்தில் யாருக்கேனும் நோயோ இடர்ப்பாடோ நேர்ந்தகாலத்தில்,அதனை நீக்கக்கருதும் அருளாளரோ குடும்பப் பொறுப்பிலுள்ளவரிடம், "உங்கள் குலதெய்வத்துக்கு ஏதோ குறைவைத்துள்ளதாகத் தெரிகிறது; அதை நிறைவேற்றி வைப் பதாக நேர்ந்து கொண்டு, ஒரு நாணயத்தை மஞ்சள் துணியில் முடிந்து கையில் கட்டுக!" எனக் கூறுவது உலகியல் நடைமுறை யில் பல இடங்களில் உண்டு. குடும்பத்தாரின் தெய்வ நம்பிக்கை யைப் பொறுத்து நோயோ இடர்ப்பாடோ நீங்கி விட்டால், குலதெய்வத்துக்கு நேர்த்திக் கடன் புரிவதையும் வழக்கத்தில் காணலாம்.

இவ்வாறு வாழ்வியலில் இன்றியமையாச் சிறப்பினைக் கொண்டுள்ள குலதெய்வத்தை விளக்குகையில், "சட்டமன்றத்தில் ஒரு சட்டம் அல்லது விதி நிறைவேற்றப்பட்டாலும், அதனை அமுல்படுத்துவது பரவலாகவுள்ள ஊர் அதிகாரிகளே. அது போல் பிரபலமான பெருந் தெய்வங்களை யெல்லாம் தரிசித்து அருள் பெற்றாலும், குடும்பத்துக் குலதெய்வத்தின் அருட்கண் ணோட்டம் இல்லாவிடின் நிறைந்த பலனை அனுபவிக்க முடியாது எனச் சமயப்பெரியோர்கள் (சங்கரச்சாரியார் போன்றோர்) கூறுவதை இன்றும் சமுதாயத்தில் காணலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து குலதெய்வ வழிபாடு தொடங்கி விட்டது. இதிகாசமாகிய இராமாயணத்தில் இராமன் இட்சுவாகு வமிசத்தில் வந்தவன் எனக் கூறப்படினும், அவனுக்குக் குலமுதல்வன் சூரியன் எனப் போற்றப்பட்டுள்ளான்: எனவே, சூரிய குலத்தினனாக இராமன் கருதப் படுதலைக் காணலாம்.

மிகத்தொன்மையான குலத்தினர் என்று கருதப்படும் வண்ணம் மாமன்னர்கள் சூரிய குலத்தினர் என்றும், சந்திரகுலத்தி னர் என்றும் தம்மை அழைத்துக் கொண்டனர். இவ்வாற்றான் சோழர்கள் சூரியகுலத்தினர் என்பதும், பாண்டியர்கள் சந்திர குலத்தினர் என்பதும் அறியலாகும்.

சிலப்பதிகாரத்தில் வரும் வணிகர் குலத்தோன்றல் கோவலன், மாதவி வாயிலாகப் பிறந்த குழந்தைக்கு மணிமேகலை என்று பெயர் சூட்டினான்; காரணம், அவனுக்குக் குல முன்னோர்கள் ஒரு காலத்தில் கடலிலே மரக் கலத்தில் சென்ற போது சூறா வளியினின்றும் காத்ததெய்வம் மணிமேகலா தெய்வம் என்பதால். இதனால் குலதெய்வத்தை நினைவுகூர்வது மிகப் பொறுப்பான செயலாகப் பண்பாட்டு அடிப்படையில் கொள்ளலாம்.

குலதெய்வங்கள் பற்றி ஆராய்ந்தால், தாம் குறிப்பிடும் குலதெய்வங்கள் தம் குடும்பத்தினரை இவ்வாறெல்லாம் காத்து வந்துள்ளன என்று முன்னோர்கள் கடந்த கால நிகழ்ச்சிகளை விவரிப்பார்கள். எனவே, தம் குலத்தினர் தொடர்ந்து சங்கடங்களின்றி நலத்துடனும் வளத்துடனும் வாழ்வதற்காகத் தம்

மரபுப்படி வழிபாடு பயபக்தியுடன் நடத்துகின்றனர். இந்தக் கடமையைச் செய்யாமல் விட்டுவிட்டால் நன்மைகள் குறையவும் நோய்நொடிகள் முதலிய சங்கடங்கள் மிகுதியாகவுமான சோதனைகளை ஒவ்வொருவரும் அனுபவத்தில் காண்கின்றனர்.

பெற்றோர், மூதாதையர், முன்னோர் ஆகியோருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளையும் உணர்ந்துபார்த்து வழிபடும் முறைகளைப் பெரியோர்கள் விதித்துள்ளனர், குலதெய்வத்துக்குச் செய்ய வேண்டிய பூசையுணர்வுடன், குறிப்பிட்ட பெரியோர்களுக்கும் வழிபாடு புரிவது நல்ல பண்பாடாகும். வழிபாட்டுக் கேற்பத் திருவுருவங்களைக் கொள்வது ஒவ்வொரு குடும்பத்தினரும் பின் பற்றுதற்குரிய விதிமரபில் அமையும்,

குல தெய்வத்தைப் போற்றி வழிபடும் மரபு இட எல்லைகளைத்தாண்டி அமைவதும் உண்டு. தமிழ் நாட்டு இராமேசுவரத்தில் எழுந்தருளியுள்ள இராமநாத சுவாமி நேபாள நாட்டு மன்னர்களுக்குக் குல தெய்வமாக இக் காலத்தும் இருந்து வருவது மனங் கொள்ள வேண்டிய குறிப்பாகும்.

37.2. ஊர்த் தெய்வம்:

பண்டுதொட்டே மக்களிடையே இல்லுறைதெய்வம், குல தெய்வம், ஆவிக்கோட்பாட்டுத்தெய்வம் (God based on spiriticism) ஆகியவை வழக்கிலிருந்து வந்தன. அவற்றைப் போலவே ஊர்த்தெய்வக்கோட்பாடும் தொன்மைக் காலத்திலிருந்தே வழக்கில் உள்ளது.

பொதுவாக, ஊர்களின் புறத்தே ஊர்க்காவல் தெய்வங்களாக ஐயனார், முனீசுவரர், சுடலை மாடன், கறுப்பண்ணசாமி, வேடப்பர், கொளஞ்சிப்பர், பிரமராயர் முதலிய சிறு தெய்வங்கள் மக்களின் பக்தியார்வ வழிபாடுகளைப் பெற்று வந்துள்ளன. இத்தகைய ஊர்க்காவல் தெய்வங்கள் ஒரு புறமிருக்கப், பேரூர்களில் அவ்வூர்ப் பெயர்களைத் தாங்கிய காவல் தெய்வங்களும் வழக்கில் இருந்து வந்துள்ளன

பூம்புகார் எனும் பேரூர், சம்பாபதி என்று பண்டைக் காலத்தில் வழங்கி வந்தது. அந்த ஊர், சம்பாபதி எனும்

ஊர்த் தெய்வத்தால் காக்கப்பட்டமையின், காரணப்பெயராக இவ்வாறு அமைந்தது என்பர்; இதனை **மணிமேகலையால்** அறியலாம்.

மேலும், சிலப்பதிகாரத்தில் மதுரையைக் காத்து வந்த ஊர்த் தெய்வம் **மதுராபதி தெய்வம்** என்பது தெரிய வரும்.

முறை பிறழ்ந்த பாண்டிய மன்னனால் கண்ணகி தன் கணவன் கோவலனைப் பறிகொடுத்த நிலையில், அம்மன்னன் முன் சென்று வழக்காடி வென்ற நிலையில் சீற்றத்துடன் நிற்கிறாள். கடுஞ்சீற்றத்தின் விளைவாக மதுரைப் பெருநகரத்தைத் தீக் கிரையாக்க முனைகிறாள். ஒருவன் புரிந்த அநீதி காரணமாகத் தன் ஊரே அழிவதா என நினைத்த மதுராபதி தெய்வம், சீறிய கற்பினளாகிய கண்ணகியின் மனத்தில் பரிவுணர்வு ஏற்படும் சூழலை உருவாக்குகிறது. மதுரை முற்றிலுமாக அழியாமல் காக்கப்படுகிறது. மேலும், மதுராபதி தெய்வமே கண்ணகியிடம்,

"ஈரேழ் நாளகத்து எல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவி னல்லதை
ஈனோர் வடிவிற் காண்டல்இல்..."[1]

என்று கூறி, அவள் பிற்காலத்தே அடையவிருக்கும் பெருநிலையினையும் நாளினையும் உணர்த்தி நிற்கிறது. இவ்வாறு ஊர்த் தெய்வமாகவும், பாண்டியர்களின் குலதெய்வமாகவும் கருதத் தக்க முறையில் மதுராபதி தெய்வம் நடந்து கொள்கிறது.

இவ்வாறான ஊர்த்தெய்வங்களுக்கும் அவ்வவ்வூரிலும் ஏனைய தெய்வங்களுக்கு ஆலயங்கள் இருந்ததே போல் இருந்தன எனக் கொள்வதே பொருத்தமாகும். பூம்புகாரில் நடந்த அகழ்வாராய்ச்சியில் சம்பாபதிக் கோயில் அமைந்திருந்த தடயங்கள் கிடைத்துள்ளன என்பர். கோயிலென அமையுங் காலத்து, அதற்கெனத் தெய்வச்சிலையும் அமைந்திருக்கும்; தொடர்ந்து அறிஞர்கள் புரியும் ஆராய்ச்சியால் இனி எதிர் காலத்தில் சில செய்திகள் தெளிவு கொள்ளலாம்.

1. சிலப்பதிகாரம், கட்டுரைக்கதை, 174-176

இக்காலத்தில், ஊர்த்தெய்வம் இருந்த இடத்தில் ஊர்க் காவல் தெய்வம் பயபக்தியுடன் போற்றப்படுகிறது எனலாம்.

38. மண்ணுக்குள் மறைந்துகிடந்து, கிடைக்கும் கற்சிலைகளும் செப்புத் திருமேனிகளும்:

மதக் காழ்ப்புணர்ச்சியாலும் பிற காரணங்களாலும் தமிழ் நாட்டுக் கற்சிலைகளும் செப்புத் திருமேனிகளுமாகப் பல கலைப் படைப்புக்கள் மண்ணுக்குள் மறைந்து கிடக்கின்றன. நெருக்கடி யான சூழலில் கோயில்களிலுள்ள சில நில அறைகளிலும் கோயிலுக்கு வெளியே உள்ள வயல் வெளிகளிலும், வாய்க்கால் கரைகளிலும், சிலைகளைப் புதைத்து வைத்துத் தமிழ்ப் பெரு மக்கள் காப்பாற்ற முனைந்துள்ளனர். புதை பொருள்கள் உள்ள இடத்தைப் பின்னர்க் கண்டுபிடிக்கும் நல்ல நோக்கத்தில் அந்த இடத்தில் குறிப்பாக மரங்களை நட்டுக் கல்லில் அடையாளமும் பொறித்துள்ளனர். ஆனால், இத்தகைய இடங்களில் சிலவற்றைத் தான் ஆர்வமுள்ள தொல்பொருளியலாரும் பிறரும் கண்டு பிடித்துள்ளனர். இன்னமும் மண் வயிற்றிலிருந்து பல வியத்தகு சிலைகள் வெளிவர வேண்டியுள்ளன. தமிழக மக்களின் நல்லூழால் கிட்டிய சிலைகளைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள முயல்வோம்.

தஞ்சாவூர் அரண்மனையில் அமைந்துள்ள கலைக்கூடத்திற்குச் சென்றால் எவ்வாறெல்லாம் சிலைகளைப் பெற்றுள்ளனர் என்பது தெரிய வரும். பண்பாட்டு நோக்கில் கலைக்கூடம் புரிந்துள்ளது பெருஞ்சாதனையே.

கங்கை கொண்ட சோழபுரத்தில் ஆதித்தியர் கற்சிலைகள் சிலவற்றைச் சில ஆண்டுகளுக்கு முன்னே தொல்பொருளியலார் கண்டுபிடித்துள்ளனர். **தில்லை** நடராசர் கோயிலில் மறைவான அறையிலிருந்து வியத்தகு செப்புச்சிலைகள் பல (70) கண்டுபிடிக்கப் பட்டுத் தில்லைவாழ் அந்தணர்கள் அவற்றைப் போற்றி வரு கின்றனர். இவ்வாறாகக் கண்டு பிடிக்கப்பட்ட சிலைகள் விவரம் பற்றி அறிய வேண்டுமெனின் தொல்பொருளியல் துறையை நாட வேண்டும்,

தமிழகத்தில் பொதுவாகக் கிடைக்கப் பெற்ற சில சிலை களைப்பற்றித் **தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்,** "சில

வருஷங்களுக்கு முன்பு திருத்துறைப் பூண்டியை அடுத்த தில்லை விளாகத்தில் கிடைத்த கோதண்டராமரும் நாதாந்த நடனரும், இன்று தமிழ்நாட்டில் மிகப்பிரசித்தமானவர்கள். இதை அடுத்த பட்டிச்சுவரத்தில் தேனுபுரீசுவரர் ஆலயத்தில் கிடைத்தவைகளும் கண்டு மகிழத்தக்கவையே. இந்த முறையிலே தான், சென்ற இரண்டு வருஷ காலத்தில் (1968—1970) தஞ்சையை அடுத்த புதுக்குடியிலும் கும்பகோணத்தை அடுத்த சிவபுரத்திலும், மாயூரத்தை அடுத்த திருவாலங்காட்டிலும், பட்டுக்கோட்டையிலும், கந்தர்வக் கோட்டையை அடுத்த காயாவூரிலும், சீர்காழியை அடுத்த திருவெண்காட்டிலும், அற்புதமான சிலைகள் மண்ணுக்குள் இருந்து வெளி வந்திருக்கின்றன. புயலால் அடிபட்டு விழுந்த மரத்தை வெட்டி எடுத்தபோது வெளிப்பட்டவை சில. வயலை வெட்டி நிலத்தைத் திருத்தியபோது வெளிவந்தவை சில; இடிவிழுந்த நிலவறைகளைச் செப்பஞ் செய்தபோது கண்டு பிடிக்கப்பட்டவை பல; இவைகளில் எல்லாம் சிறந்தவை அந்தத் திருவெண்காட்டிலிருந்து கிடைத்துள்ள எட்டு விக்கிரகங்கள் தான். அவைகளின் கலையழகில் ஒரு கோடி காட்டுவதே இன்று என்னுடைய முயற்சி"[1] என எழுதிச் செல்வது சிந்திக்கத்தக்கது. அவர் எழுதிய பிறகு, கடந்த சில ஆண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்டவையும் மிகுதியாக உள்ளன. இனிமேல் தொடர்ந்து கண்டு பிடிக்கப்பட வேண்டிய சிற்பக் கலைச் செல்வங்களும் பலவாக இருக்கும்.

39. நவக்கிரகங்கள்:

உலகத்தில் தோன்றியுள்ள உயிர்கள் அனைத்திற்கும், (சிறப்பாக மானுட உயிர்களுக்கு) அவ்வவற்றின் ஊழ்வினைப் பயனைக் காலமறிந்து ஊட்டி நிற்கும் பணியில் மிகவும் செயல் படுகின்ற பொறுப்பு நவக்கிரகங்களுக்கு உண்டு. எனவே, கிரகசாரமாகிய கிரகங்களின் சஞ்சரிப்பைக் கொண்டு நன்மைகளை மிகுவித்துக் கொள்ளுதற்கும், இடையூறுகளைத் தணித்து கொள்வதற்கும் இயல்பாக மக்கள் விரும்புகின்றனர்; இவ்வாற்றான் நவக்கிரகங்களைச் சிந்தித்து வழிபாடாற்றியும், இக்

1. இந்தியக் கலைச் செல்வம், பக். 111 - 112

கட்டான நிலைகளினின்றும் விடுபடுதற்கான முயற்சியில் சாந்தி புரிகின்றனர்; சாந்திபுரிதல் எனும் நோக்கில், நவக்கிரகங்கள் மூர்த்திகரமாக விளங்கும் சில தலங்களை நாடிச் செல்கின்றனர்.

நவக்கிரகங்களுள் சூரியன், தலைமைத் தானம் பெற்றுத் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகிய கோள்களின் ஒத்துழைப்புடன் மக்களின் வாழ்க்கைப் போக்கினை நிர்ணயஞ் செய்து வருகின்றான் என்பது சமய நம்பிக்கை.

விண்ணகத்தே இயங்கும் கோள்கள் பலவாக இருப்பினும், மக்களின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் பொறுப்பில் நவக்கிரகங் களையே வானநூற் புலவர்கள் சோதிடக்கணக்கிற் கொண் கொண்டுள்ளனர். இந்த நவக்கிரகங்களுள்ளும் இராகும் கேதுவும் சாயா கிரகங்களாகவே மதிக்கப் பெறுகின்றன. சூரியன் தன்னொளி — சுயம்பிரகாசம் — மிக்கதெனவும், அதன் ஒளியை வாங்கிக்கொண்டு ஒளிவிடும் கோள்களுள் ஒன்றே விண்ணில் பால்நிலவைத்தரும் சந்திரன் ஆகும். சூரியனும் சந்திரனுமே சிவபிரான் தொடர்பினை மிகக் கொண்டுள்ள கிரகங்களாகப் போற்றப்பெறும். அக்கினியுடன் சேர்ந்து இவற்றைச் சிவனுடைய முக்கண்களாகச் 'சோம சூர்யாக்கினி' (திங்களும் ஞாயிறும் அனலும் எனக் கருதும் மரபினால் உணரலாம்.

நவக்கிரகங்கள் பரம்பொருளாகிய சிவனுக்குப் பரிவார தெய்வங்களாகவே கருதப்படும், நவக்கிரகங்கள் பூசித்த தலங்கள் என்ற நோக்கிலும், நவக்கிரகங்களுள் ஒவ்வொன்றும் சிறப்பாகப் பூசிக்கப் பெறுந்தலங்கள் என்ற நோக்கிலும் ஆராய்ந்தால் நவக்கிரக நாயகர்களின் சிறப்பும் ஆற்றலும் நன்கு புலப்படும்.

முதற்கண் இலக்கியச் சார்பிலும் புராண அடிப்படையிலும் கலை நோக்கிலும் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றன் சிறப்பியல்பு களைப் பற்றிச் சிறிது காண்போம.

சிவன் திருக்கோயில்களில் பெரும்பாலும் நவக்கிரகங்கள் இடம் பெற்றுள்ளன என்பது உண்மையே, எனினும், சில

வைணவத் திருக்கோயில்களிலும் அவை பிரதிட்டை பண்ணி யிருத்தலைக் காணலாம். எடுத்துக்காட்டாகச் சென்னை அடையாறு அனந்த பத்மநாப சுவாமி கோயில், மதுரைக் கூடலழகர் கோயில், மதுரையில் சௌராஷ்டிரர் கிருஷ்ணன்கோயில், தஞ்சாவூர் தெற்குவீதியிலுள்ள பெருமாள் கோயில் முதலியவற்றைக் காண்க.

39.1. நவக்கிரகத் தலங்கள் :

நாட்டு நலத்துக்கும் வளத்துக்கும் மக்களின் வாழ்க்கைப் போக்குக்கும் நவக்கிரகங்கள் பெரிதும் காரணகர்த்தாக்கள் என்பது இந்து மத நம்பிக்கை. நவக்கிரகங்கள் தேவர்களையும் மற்றோரையும் பாதித்துள்ள நிகழ்ச்சிகள் புராணங்களில் கூறப் பெறுகின்றன. பற்பல வகையினரும் பரவிப் போற்றும் நவக் கிரகங்களே தங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்ட நிலையில், பரம் பொருளாகிய கடவுளை வணங்கி உய்தி பெற்ற நிகழ்ச்சிகளும் புராணங்களில் உண்டு. அவ்வாறான நோக்கில் முதற்கண் நவக்கிரகத் திருத்தலங்களையும், அடுத்து நவக்கிரகங்கள் வழிபட்ட திருத்தலங்களையும் ஈண்டுக் காணலாம்.

கிரகம்	சிறப்புத்தலம்
சூரியன்	சூரியனார் கோயில்
திங்கள்	திருவேங்கடம் (திருவக்கரை, திருக்கருகாவூர், திருவிடை மருதூர் முதலியவும் சந்திரனுக்குரியவை)
செவ்வாய்	பழநி, வைத்தீசுவரன் கோயில்
புதன்	மதுரை
வியாழன்	திருச்செந்தூர், ஆலங்குடி
வெள்ளி	திருவரங்கம், திருவேற்காடு, திருவாடானை கஞ்சனூர் ஆகியவை.
சனி	திருநள்ளாறு
இராகு	திருக்காளத்தி
கேது	திருக்காளத்தி

நவக்கிரகங்களெல்லாம் பரம்பொருளாகிய கடவுளின் விருப்பத்திற்கும் கட்டளைக்கும் இணங்கவே உயிர்களின் ஊழ்வழி

அவற்றை இயக்கும் ஆற்றல் படைத்தவை, அந்த நவக்கிரகங்களையும் ஊழ்வினை ஆட்டிப் படைப்பதாகக் கொள்வது பௌராணிக அணுகுமுறை; அவ்வாற்றான் ஞாயிறு திங்கள் முதலிய கிரகங்கள் ஊழ்வினைக்கு ஆட்பட்டு இடருறுவதும் அவ்விடர்களினின்றும் உய்வதற்குக் கடவுள் வழிபாடு நிகழ்த்துவதுமாகிய செய்திகள் புராணங்களில் உள்ளன. அந்த அடிப்படையில் ஞாயிறு முதலிய கிரகங்கள் வழிபாடு புரிந்த தலங்களைக் காண்போம்.

கிரகம்	வழிபாடு புரிந்த திருத்தலம்
ஞாயிறு	1. திருக்குடந்தை (கும்பகோணம்) நாகேசுவரன் கோயில்
	2. திருத்தாளமுடையார் கோயில்
	3. திருவெண்காடு
	4. திருச் சாய்க்காடு
	5. கருங்குயில் நாதபுரம்
	6. திருத்துருத்தி (குத்தாலம்)
	7. திருவாஞ்சியம்
	8. திரு நாகேசுவரம்
	9. தேர்த் தகையூர்
	10. திருமீயச்சூர்
	11. திருவாவடுதுறை.

மேற்கண்ட தலங்களேயன்றி வடநாட்டில் **கேதாரமும்** சூரிய பூசை பெற்ற தலமாகக் கருதப்பெறும். தமிழ்நாட்டில் நவக்கிரகங்கள் ஒன்றாய்க் கூடியிருந்த தலம் **சூரியனார் கோயில்** என்றும், அங்கேயிருந்து தனித்தனியாய்ப் பூசை நிகழ்த்திய தலங்களே மேற் கூறப்பட்ட தலங்கள்[1] என்றும் கூறுவர்.

கிரகம்	வழிபாடு புரிந்த திருத்தலம்
2. சந்திரன்	(தமிழ் நாட்டில் ஐந்து)
	1. கஞ்சனூர்
	2. அச்சுத மங்கலம்

1. சூரியனார் கோயில் கும்பாபிஷேக மலர், 1988, பக். 36–37

3. கும்பகோணம் - சோம நாதர் கோயில்
4. மானாமதுரை
5. திருவெண்காடு

3. செவ்வாய் (அங்காரகன்)

(தமிழ்நாட்டில் நான்கு)
1. வைத்தீசுவரன்கோயில்
2. அத்திப்புலியூர்
3. இலந்துறை
4. திருமங்கலக்குடி

4. புதன்

(தமிழ் நாட்டில் ஒன்று)
1. திருவெண்காடு

5. வியாழன் (குருபகவான்)

(தமிழ் நாட்டில் மூன்று)
1. திருக்கொண்டீச்சுரம்
2. பெருஞ்சேரி
3. மாக்குடி என்ற மாங்குடி (கொல்லுமாங்குடிக்கு மேற்புறம் உள்ளது)

6. வெள்ளி (சுக்கிரன்)

(தமிழ் நாட்டில் நான்கு)
1. ஸ்ரீ வாஞ்சியம்
2. சிதம்பரம்
3. திருக்கோடி கா
4. காஞ்சிபுரம்

7. சனி (சனீசுவரன்)

(தமிழ் நாட்டில் ஐந்து)
1. வழுவூர்
2. திருநள்ளாறு
3. வேதாரணியம்
4. திருவாரூர்
5. குச்சனூர்

8. இராகு

(தமிழ் நாட்டில் இல்லை; வடநாட்டில் ஒன்று)
கேதாரம்.

9. கேது (தமிழ் நாட்டில் இல்லை; இலங்கையில் ஒன்று) திருக்கேதீச்சுரம்

39.2. சுசீந்திரம் -நவக்கிரகக் கோயில்:

பாரதத்தின் தென்கோடியிலுள்ள குமரிமாவட்டம் சுசீந்திரம் பல்வகைக் கலைச்சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டது. இங்குக் காணலாகும் அருமையான நவக்கிரகக் கோயில் உலகில் வேறெங்கும் காணப்படாத வியத்தகு கலைமாட்சியுடையதாகும்.

பொதுவாகத் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் நவக்கிரகங்கள் கீழே பீடத்தின் மீதே இருக்கும். ஆனால், சுசீந்திரத்தில் சூரியன் சந்திரன் முதலிய ஒன்பது கிரகங்களும், மேடம் இடபம் முதலிய பன்னிரு இராசிகளும் ஒரு பெரிய கருங்கற் பலகையில் பொறிக்கப்பட்டு, மண்டபத்தின் மேல் விதானத்தில் பொருத்தப் பட்டுத் தரையை நோக்கி கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளன. மேற் கூரையிலிருந்து கீழ் நோக்கியுள்ள இந்தக் கிரகங்களுக்கு நேராகத் தரைத்தள வரிசையில் ஒரு மேடை அமைக்கப்பட்டுள்ளது. கிரகசாந்தி பெறும் மக்களும் அடியவர்களும் அந்த மேடைமீது நெய்விளக்கேற்றி மிகுந்த பயபக்தியார்வத்துடன் வழிபடுதலை இன்றும் காணலாம்.

தமிழ்நாட்டில் பெரும்பாலும் கருங்கற் சிற்பங்களாக நவக்கிரகங்கள் மூன்று வரிசையில், மும்மூன்று கிரகங்கள் நிற்கும் நிலையிலும், சில இடங்களில் ஒரேவரிசையில் நிற்கும் நிலையிலும், மிக அரிய காட்சியாக ஓரிரு இடங்களில் அமர்ந்த நிலையிலும், அமைந்திருப்பதைக் காணலாம். ஆனால், சுசீந்திரம் நவக்கிரகக் கோயிலில் ஒவ்வொரு கிரகமும் தத்தம் வாகனத்தின் மீதமர்ந்து காட்சியருளுதலைக் கண்டு மகிழலாம்; கோயமுத்தூர் கோனியம்மன் கோயிலில் நவக்கிரகங்களுள் ஒவ்வொரு கிரகமும் தன் தேவியோடு அமைந்திருப்பதைக் கண்டு வியப்புறலாம்.

இஃது ஒரு புறமிருக்க, நவக்கிரகங்கள் சிற்பத் திருவுருவங்களிலேயன்றி வேறுவகையாலும் சிலதலங்களில் வழிபடப்படுதல்

உண்டென அறியலாம். ''தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருப்பைஞ்ஞீலி என்ற சிவத்திருத்தலத்தில் நவக்கிரகங்களை விக்கிரகங்களுக்குப் பதிலாக (நவ)தீபங்களால் வழிபாடு செய்கிறார்கள்''[1] என வருங் குறிப்பு மிகவும் சிந்தித்தற்குரியது.

39.3. நவக்கிரகச் சிலைகள் -சக்கர அமைப்பு:

சக்தியுள்ள நவக்கிரகங்களைத் திருக்கோயில்களில் அமைப்பது தொடர்பான சில முறைகளைக் கண்டோம். அவையல்லாமல் வேறு முறைகளிலும் வியத்தகு வண்ணம் அவற்றை அமைப்பது உண்டு; அவை பற்றிச் சிறிது காண்போம்

கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைந்துள்ள சூரிய சக்கரத்தின் அமைப்பு,சிறப்பாகக் காணத்தக்கது; அதனை நினைவூட்டும் வகையில், கோயம்பேடு குறுங்காலீசுவரர் ஆலயத்தில் புதுமையான முறையில் நவக்கிரகச் சக்கரம் பிரதிட்டை செய்யப் பட்டுள்ளது (சென்னையிலிருந்து பூவிருந்த வல்லிக்குப் போகும் நெடுஞ் சாலையில் 8 கி.மீ. தொலைவில் இடப்புறத்திலே கோயம்பேடு அமைந்துள்ளது). இயற்கைவளம் நிறைந்த கோயம்பேடு ஆலயத்தில் அழகுநிறை கல்பீடத்தின்மீது தாமரை மலரிருக்கையில் சூரிய பகவான் தன் தேவியருடன் நின்ற வண்ணத்திலும், ஏழு குதிரைகளைப் பூட்டிய ஒற்றைச் சக்கரத் தேரை அருணன் ஓட்டிக் கொண்டிருக்கும் பாவத்திலும், சிற்ப அமைப்பு உள்ளது. தாமரைப்பீடத்தைச் சுற்றி ஏனைய எட்டுக் கிரகங்கள் தத்தம் ஊர்திகளுடன் முறைப்படி அமைக்கப் பட்டுள்ளன, தமிழ்நாட்டிலுள்ள சிற்பியர் தங்கள் கலை மரபுகளைப் பின்பற்றி நடப்பர்; எனினும், கற்பனையையும் திறமையையும் தொடர்ந்து அழகுடன் புலப்படுத்துவதிலும் நாட்டங் கொண்டுள்ளனர் என்பதற்கு அடையாளமாக இந்தப் புதிய முறையிலான நவக்கிரகச் சக்கரம் உள்ளது எனலாம் இந்தச் சக்கரப் பிரதிட்டை காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராசாரிய சுவாமிகள் நல்லாசியுடன் நிறைவேறியதாகும்.

1. ஸனாதன தர்மபீடம் (திங்களிதழ்), அக்டோபர்,95 பக், 13

39.4 சூரியன்:

சூரியனைச் சிவத் தொடர்புடன் கண்டு **'சிவசூரியன்'** என்றும், **வைணவத்** தொடர்புடன் கண்டு **'சூரியநாராயணன்'** **என்றும் அழைத்து** வழிபாடு புரிவது தமிழ்நாட்டு மரபாகும்.

சூரியனை ஞாயிறு, பகலவன், ஒளியோன், அருக்கன், மார்த்தாண்டன், வெங்கதிர்ச் செல்வன், வெய்யோன், செங்கதிரோன், கதிரவன், சுடர், பானு, தினகரன், பரிதி, திவாகரன், அருணன், அனலி, கனலி, சோதி, இரவி, உருகெழு மண்டிலம் முதலிய பல பெயர்களில் மக்கள் அழைக்கின்றனர். **சோதிட நூலுக்குக் கண்ணின் ஒளிபோல விளங்குபவன்** சூரியன் என்பர். ''இவர் எப்பொழுதும் விழிப்புள்ளவர்; கொழுத்த தேகி, சம வளர்த்தி, கொஞ்ச ரோமமுள்ளவர்; அதிக வீரத்தன்மையும் சுறுசுறுப்பு முள்ளவர், மஞ்சள் நிறமுள்ள கண்ணும் செம்மை வர்ணமுள்ள தேகமும் பித்தகுணமும் உடையவர், கிழக்குத்திசைக்கு உரியவர்; ஆண்கிரகம், சத்திரிய ஜாதி, ஐந்து கிரணமுடையவர்''[1] என்று வருணிக்கப்படுதல் காண்க. மேலும், **நவக்கிரக தியான சுலோகங்கள்** சூரியனை **வருணிக்கையில்,**

''சௌரம் குங்கும சங்காசம் ரத்நாபரண பூஷிதம்!
மாணிக்க மகுடாபேதம் ரக்தபுஷ்பை நலங்கிருதம்!
சதுர்புஜ சமோபேதம் பத்மத்வய கரான்விதம்!
அபீதி வரதோபேதம் பிரபாமண்டல மத்யகம்!''[2]

(குங்குமம் போன்ற செந்நிறத்தவரும், சிவந்த இரத்தினங்களால் ஆன அணிகளைப் பூண்டவரும், மாணிக்க மணியினாலான மகுடத்தினைச் சூடிச் சிவந்த மலர்கள் நிறைந்த மாலையணிந்தவரும், தம் நான்கு கைகளில் மேலிரண்டில் தாமரை மலர்களையும், மற்றவற்றில் அபய வரத முத்திரை கொண்டு பேரொளி பொருந்திய மண்டலத்தில் வசிப்பவருமான சூரியனைப் போற்றுவோம்) என்றும்,

1. சூரியனார் கோயில் கும்பாபிஷேக மலர் [1988], பக். 61.
2. மேலது, பக். 8

''சௌரம் குங்கும சம்காசம் சர்வாபரண பூஷிதம்
துவிநேத்ரம் சாருவதநம் ரக்த மாலாநு லேபநம்
சதுர்புஜ சமோபேதம் பரிதச் சாம்புஜத் வயம்
அபீதி வரதோபேதம் ப்ரமாமண்டல மண்டிதம்
உபவீத சமாயுக்தம் உஷாப்ரத்யுஷ சேவிதம்''[1]

(சிவந்த ஒளியுடையவரும், எல்லாவகையணிகள் பூண்டவரும், இரு கண்களும் அழகான முகமும் உடையவரும், நான்கு கைகளுடையவரும், சிவந்த மலர்களை யணிந்தவரும், விரிந்த செந்தாமரை மலர்களை இரு கைகளிலும் ஏந்திய நிலையில் அபய வரதமும் உடையவரும், பூணூல் தரித்தவரும், உஷா தேவி பிரத்யுஷா தேவி என இரு சக்திகளை யுடையவருமான சூரியபகவானைச் சேவிக்கிறேன்) என்றும் வரும் குறிப்புக்களைக் காணின் சூரிய மூர்த்தியின் வடிவ அமைப்பினை ஓரளவு புரிந்து கொள்ளலாம்.

ஏனைய கோள்களை விடச் சூரியனுக்கு மிகச் சிறப்பான இடம் சமுதாய நடைமுறையுலகிலும், சமயவுலகிலும், கலையுலகிலும் கிடைத்தமைக்குரிய காரணங்கள் சிந்திக்கத்தக்கவை.

சமுதாயத்தில் மக்களை உணர்வுடன் வாழச் செய்வதில் சூரியனுக்கு நிரம்பப் பங்கு உண்டு. பகற்காலங்களில் பல்வகைத் தொழில்களில் ஈடுபடவும், பல்வகைக் கல்வி கலைகளில் நாட்டஞ் செலுத்தவும், புத்துணர்ச்சியோடு பல்வகை நல்ல செயல்களில் முயற்சி மேற்கொள்ளவும் மக்களுக்குப் பெரிதும் ஊக்க மூட்டுவது சூரியவொளியேயாகும். மக்களுக்குப் பயன்படும் தாவரவுலகிற்கும், விலங்கியலுலகிற்கும், பௌதிக — வேதியியல் உலகிற்கும் ஊட்டந்தருதற்கு அடிப்படையாக விளங்குவதே சூரியன் என்பது அறிஞர்களின் கொள்கையாகும். ஆகவே, இருள் நீங்கிச் சமுதாயம் இயங்குவதற்குச் சூரியன் அடிப்படைத் தேவையென்பதையுணரலாம். இதனையெல்லாம் நன்குணர்ந்தே உலகம் வாழவேண்டும் என்ற நோக்கத்தில், புறநானூற்றில் **நக்கீரர்,**

1. சூரியனார் கோயில் .... கும்பாபிஷேக மலர் (1988), பக். 61

"அங்கண் விசும்பினா ரிருளகற்றும், வெங்கதிர்ச் செல்வன்"[1], எனக் கூறுகிறார். சூரியவழிபாடு தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வளர்ந்து வந்துள்ளது. சூரிய இயக்கத் தொடர்பில் தட்சணாயணம் முடிந்து உத்தராயணம் தொடங்கும் முதல் தேதியை மகர சங்கராந்தி (தை—முதல்நாள்) பொங்கல்விழாவாக இனிது கொண்டாடுவதையும் ஈண்டு நினைவிற் கொள்ளலாம்.

சமயவுலகில் சூரியனுக்குரிய உயர் நிலை மிகவும் சித்தித்துப் போற்றுதற் குரியதாகும். உலக வுயிர்களின் மகிழ்ச்சியைப் பொறுத்ததே சமய வளர்ச்சியாகும். உலகத்திலுள்ள உயிரினங் கள் எல்லாம் மகிழும்படி ஞாயிறு அலைக்கடலிலே தோன்றி வருகிறது என்பதும், அது மேருமலையைச் சுற்றி வருகிறது என்பதும் பல சமயத்தினராலும் புகழ்ந்து போற்றப்படும் செய்தியாகும். இக்கருத்திற்கு ஏற்றவாறு,

> "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"[2]

என்றும்,

> "தயங்குதிரைப் பெருங்கடல் உலகுதொழத் தோன்றி
> வயங்குகதிர் விரிந்த உருகெழு மண்டிலம்"[3]

என்றும்,

> "முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி
> ஏமுற விளங்கிய சுடர்"[4]

என்றும்,

> "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
> காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
> மேரு வலன்திரித லான்"[5]

என்றும் வரும் செய்யுட் பகுதிகளைக் காண்க.

சமயநோக்கில் சூரியனுக்கமைந்த புராணப்பின்னணியையும் இயைபுடன் காணலாம்.

1. புறநானூறு, 56, 22-23
2. திருமுருகாற்றுப்படை, 1-2
3. அகநானூறு, 263
4. நற்றிணை, 283
5. சிலப்பதிகாரம், மங்கலவாழ்த்துப்பாடல், 4

காசிப முனிவன் முதல் மனைவிக்கு மூத்த மகனாகப் பிறந்தவன் சூரியன் எனவும், மூத்த மகனாதலால் அவன் க்ஷத்திரிய தர்மத்தை ஏற்றுச் சம்புத்தீவில் (இந்தியத் துணைக்கண்டத்தில்) அரசாட்சியை நடத்தி வந்தான் எனவும், அவனுக்கு மனைவியர் நால்வர் (சங்கை, பிரபை, ரைவத நாட்டு இளவரசி, சாயா தேவி) எனவும் கூறுவர். அவர்களுள், ''முதல் மனைவிக்கு வைவசுதமனு, இயமன், அசுவினி தேவர்கள் என்ற பிள்ளைகளும், யமுனை என்ற பெண்ணும் பிறந்தார்கள். இரண்டாம் மனைவிக்குப் பிரதவனும், சாயா தேவிக்குச் சாவர்ணி, சனி என்ற பிள்ளைகளும், தபதி, வியப்பு ஆகிய பெண்களும் பிறந்தார்கள்.

சூரியனுடைய நான்காவது மனைவியான சாயாதேவியை முதல் மனைவியான சங்கை தன் நிழலால் தோற்றுவித்தாள். தன் நிழலை ஒரு பெண்ணாக அவள் தோற்றுவிக்கக் காரணம் சூரியனுடைய வெப்பத்தை அவளால் தாங்க முடியவில்லை. அவள் கணவனிடம் சொல்லாமல் தன் தாய்வீட்டிற்குச் செல்லத் தீர்மானித்தாள். அவள் இல்லாதது சூரியனுக்குத் தெரியா திருக்கத் தன் நிழலைத் திரட்டித் தன்னைப் போன்ற தோற்றமுடைய ஒரு பெண்ணாகத் தோற்றுவித்துச் சென்றாள். உண்மையறியாத சூரியன் சாயாதேவியிடம் பழகி வந்ததால் சாவர்ணி, சனிபகவான் என்ற இருபிள்ளைகளும், தபதி, வியப்பு என்ற இரு பெண்களும் பிறந்தார்கள்.

சூரியனுடைய பிள்ளைகளும் பெண்களும் சர்வேசுவரனைக் குறித்துத் தவம் செய்தார்கள். சர்வேசுவரன் அவர்கள் தவத்துக்கு மெச்சிப் பதவிகளை அளித்தார்''[1] என விஸ்வநாத சிவாச்சாரியார் எழுதிச் செல்வது புராணத் தொடர்புடைய சமயவுலகிற்கும் கவின்கலையுலகிற்கும் நன்கு ஊற்றந்தரும் செய்தியாகும்.

சூரியன் வழி வந்தவர்களை இதிகாசங்களுடனும் சமய இலக்கியங்களுடனும் இயைபுபடுத்துதற்கேற்ப அமைந்த சில செய்திகளை ஈண்டு ஓரளவு நினைவுகூர்வோம்.

1. நவக்கிரக வழிபாடு, பக், 5,6

சூரியனுடைய மகனான வைவசுதமனு ஆறாவது மன்வந்தர மனுவானார். அந்த மனுவழி வந்த அரசர்கள் சூரியகுலத்து அரசர்களாக வழிவழியே கூறிக்கொள்ள வாய்ப்பு ஏற்படலாயிற்று வடநாட்டிலும் தென்னாட்டிலும் வாழ்ந்த சூரிய குலத்து மாமன்னர்கள் வரலாற்றிலும் இலக்கியங்களிலும் கலையுலகிலும் இடம் பெற்றுள்ளதை ஈண்டு இயைபுடன் சிந்திக்கலாம். எடுத்துக்காட்டாக, வடநாட்டு **இராமன் சூரிய குலத்து மன்னனாகவும்,** தென்னாட்டு **மனுநீதிச்சோழன்** சூரிய குலத்து **மன்னனாகவும்** புகழ்பெற்ற வரலாற்றுச் செய்திகள் மக்களுக்கு அறிமுகமானவையே யாகும்.

சூரியனுடைய மற்றொரு மகனான இயமன், ஈசுவரன் திருவருளால் தென்திசைக்கு அதிபதியாயினன் என்பர். சூரியனுக்குச் சாயாதேவி வாயிலாகப் பிறந்தவன் **சனிபகவான்;** நவக்கிரக நாயகர்களுள் ஒருவனாகவும் சனிசுவரன் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றவனாகவும் விளங்குகின்றான் என்பதும், சூரியகுமாரியர்களான யமுனா தபதி ஆகிய இருவரும் **புண்ணிய ஆறுகளாயினர்** என்பதும் புராண அடிப்படையில் சிந்திக்க வேண்டிய அருங்குறிப்புக்களாகும். இதனால், புராணக்குறிப்புக்கள் மக்களிடையே கொண்ட தாக்கத்தை யுணரலாம்.

சூரியன் என்பவன் காசியபருக்கு முதல் மனைவி அதிதி வாயிலாகப் பிறந்த மூத்தமகன் எனக் கண்டோம். பெயரளவில் ஒருவன் போலத் தோன்றினாலும், சூரியன் 'துவாதச ஆதித்தர்' என்பதைக் குறித்து நிற்பவனாவான். அஃதாவது, காசியபருக்கு அதிதி வாயிலாகப் பிறந்த பன்னிரு பிள்ளைகளும் ஒருசேர (மொத்தத்தில்) சூரியன் — ஆதித்தன் — என்று பெயர் பெறுவர் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். இராசிச் சக்கரம் பன்னிரண்டிலும் ஆதித்தர்கள் ஒவ்வொரு பெயரில் வலம் வருவர் என்பது சோதிட மரபாகும். இராசிகளில் சூரியன் (ஆதித்தன்) பெயர்கள் வருமாறு:

இராசி		சூரியன் பெயர்
1. மேடம்	—	அம்சமான்
2. இரிடபம்	—	தாதா
3. மிதுனம்	—	சவிதா

4.	கடகம்	—	அரியமான்
5.	சிம்மம்	—	விசுவான்
6.	கன்னி	—	பகன்
7.	துலாம்	—	பர்ஜன்யன்
8.	விருச்சிகம்	—	துவஷ்டா
9.	தனுசு	—	மித்திரன்
10.	மகரம்	—	விஷ்ணு
11.	கும்பம்	—	வருணன்
12.	மீனம்	—	பூஷா

39.4.1. கலை நோக்கில் சூரியன்:

திருக்கோயில்கள் பலவற்றுள் வெளியேயும் உள்ளேயும் சூரியச் சிலைகளை அமைத்துள்ளனர்; சூரியனை இனங்கண்டு கொள்ளுமாறு சிலைகளை அமைக்கையில் சூரியனது மகுடத்திற்குப் பின்னணியாக ஒரு வட்டம் அமைந்திருந்தலைக் காணலாம். எடுத்துக் காட்டாகத் தில்லை நடராசர் கோயில் கீழைக் கோபுரத்தின் கிழக்கு நோக்கிய பகுதியில் (நுழைவாயிலையடுத்த வடபகுதியில்) சூரியன் சிலையிருந்தலைக் காண்க.

கங்கை கொண்ட சோழபுரத்தில் — அதன் வளாகத்தில் — அகழ்ந்த போது பன்னிரு ஆதித்தர் சிலைகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன என அறிகிறோம். சூரிய குல மன்னர்களாகிய சோழர்கள் கட்டிய பல திருக்கோயில்களுள் இவ்வாறான சிலைகள் சில கண்டெடுக்க வாய்ப்பு உள்ளது என்பதையும் ஆய்வுத் தொடர்புடையவர்கள் சிந்திக்கலாம்.

மேலும், கங்கை கொண்ட சோழபுரத்தில் கிழக்கு நோக்கிய வாயில்வழி நுழைந்ததும், மண்டபத்தின் இடப்பக்கத்தே கமலயந்திரம் எனும் சூரியந்திரம் இருந்தலைக் காணலாம். அதன் அமைப்பு மிகவும் சிறப்ப நேர்த்தி கொண்டது. எட்டுக் கோள்கள் (கிரகங்கள்) புறத்தேயிருக்க, விரிந்த தாமரையிதழ் களில் சூரியன் உலகத்தைக் காத்தருளும் பொருட்டு, ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் உலா மேற்கொள்ளும் பாங்கினில்

அமைந்த அந்தச் சிற்பக் கலைப்படைப்பு, உலகத்தில் தமிழர் களின் கலைக் கற்பனையைத் தெள்ளிதின் புலப்படுத்தும் **கவின்** கலைக்கருவி யெனலாம்.

சூரியன் வழிபாடு புரிந்த திருத்தலங்களுள் **குடந்தை நாகேச் சுவரர்** கோயிலும் ஒன்றாகும், அந்தத் திருக்கோயில் பிராகாரத் தின் வடகிழக்குப் பகுதியில் சோழர் காலத்தில் எடுப்பிக்கப் பட்ட **சூரியன் கோயிலைக்** காணலாம். அதனில் எழுந்தருளிய சூரியன் திருவுருவம் சிற்பஎழிலுடன் கூடியதாகும். மாமகத்தில் நீராடி இதனை வணங்குபவர்கள் நலம் பல பெறுவர் என்பது பலரது சமய நம்பிக்கை.

எல்லாவற்றிலும் சிறப்பாக, ஆடுதுறைக்கு அருகே அமைந் துள்ள **சூரியனார் கோயில்** நவக்கிரகமாட்சியும், தனித்தன்மை யுடன் கூடிய **சூரியனது** பெருமாட்சியும் கொண்டு விளங்குந் திருத்தலமாகும்.

தத்துவ நோக்கில் சூரியனைப் போற்றுபவர்கள் சூரிய வுதயத்தைப் **படைப்பாகவும்,** நண்பகலாகிய மதியத்தைக் **காப்பாகவும்,** அந்தியாகிய முன்னிரவை அழிப்பாகவும் கூறிச் **சிருட்டி திதி லயம்** ஆகிய அனைத்தும் சூரியனால் நிகழ்வதே என்று தத்துவ அரண் கோலுவர். மேலும், சூரியனிடமிருந்து **காயத்திரி, சாவித்திரி, சரசுவதி** ஆகிய சக்திகள் தோற்றங் கொள்கின்றன என்றும், ஆயுளும் உணவும் உணர்வும் உயிரிரக்க மும் சூரியனருளால் கிடைப்பனவே என்றும், அறிவியல் நடை யை உள்ளுறுத்தித் தத்துவப் புலப்பாட்டினைக் காட்டுவர்.

சமய அணுகு முறையில் ஈண்டு ஒரு சிறப்புக் குறிப்பினை நினைவிற் கொள்ளலாம். முக்கண்ணனாகிய சிவபிரானுக்கு ஒரு கண்ணாக விளங்கும் சூரியன், திருமாலே இராமனாக அவதார மெடுத்த நிலையில் அவனுக்குக் குலமுதல்வனாகக் **காத்தல்** அடிப்படையில் விளங்குகின்றான். இராவணனுடன் போர் புரிந்து இராமன் வெற்றி கொள்வதற்கு முன்னேற்பாடாகப்- பூர்வாங்கப் பாதுகாப்பாக- அவனே சூரிய வழிபாடு புரிந்துள் ளான்; அப்போது அவன் உச்சரித்த தோத்திரம், **ஆதித்த ஹிரு தயம்** என்று சமய அறிஞர்கள் கூறி வருகின்றனர்.

39.4.2. அர்த்த நாரி சூரியன்:

அக்கினி புராணத்தில் 'ஈசாவேவாம் அர்த்தலைதத்தம்-ரவிம்' (அக்கினிபுராணம்,. 3019) என்ற குறிப்பினால் அர்த்த நாரி சூரியன் பற்றிச் சிந்திக்க இடம் உள்ளது ஸ்ரீலிங்க புராணத்திலும் (இயல் 11; 19-7), மச்ச புராணத்திலும் (55, 5-6) இது பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

சூரியன் தன் திருவுருவத்தில் பெண்ணுக்கு இடம் தாரா விடினும், சிவனுக்கு இடந் தந்துள்ளார். சிவனும் சூரியனும் இணைந்த வியத்தகு அர்த்த நாரி சூரியன் உருவத்தை மார்த் தாண்ட பைரவர் என அக்கினி புராணம் கூறும்.[1]

39.5. சந்திரன்:

சந்திரன் எனப் பெயரிய திங்கள், மக்கள் வாழ்வில், காலக் கணிப்பிலே மிகச் சிறந்த இடம் பெற்றுள்ளது. ஞாயிறு காரண மாக, ஒரு நாளில் பகற் பகுதி நிர்ணயிக்கப்படுகிறது வளர்தலும் தேய்தலும் கொண்ட சந்திரன் காரணமாக மாதம்(மதியம்) நிர்ணயிக்கப்படுகிறது எனவே, மாதத்தைத் 'திங்கள்' எனவும் குறிப்பிட்டு வருகின்றனர்; அவ்வாற்றான் சித்திரைத் திங்கள், வைகாசித் திங்கள் முதலியவை வழக்காற்றில் இருப்பதைக் காண்க.

'வாரம்' என்பது ஏழு நாட்களைக் கொண்ட ஒரு காலப் பகுதி; இத்தகைய வாரமெனும் நடைமுறை உலகந் தழுவியது. தமிழ் நாட்டு வழக்கிற் கேற்ப ஞாயிறுக்கு அடுத்த திங்கள், ஏனைய கிழமைகளில் குறிப்பிடத்தக்கதாகும். சிவபரம் பொருளாகிய இறைவனுக்கு வலக்கண்ணாகவும் இடக்கண் ணாகவும் முறையே ஞாயிறும் திங்களும் அமைந்திருப்பது கொண்டு, அவற்றை ஒருவகைப் பொருத்தமுடன் ஒன்றற்கு அடுத்து மற்றொன்றை வைத்துக் காண்பது மரபும் இயைபு முடையதாகும். கலைஞர்களும் புலவர்களும் இவ்வாறான போக்கிலேயே ஞாயிற்றையும் திங்களையும் கண்டு காட்டி யுள்ளனர். எனினும், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திலே மங்கல வாழ்த்துப்பாடலைத் தொடங்குகையில் கையில் இம்மர பினைப் பின்பற்ற வில்லையெனா யாரும் வினவலாம். அஃதாவது

1. தொல்பொருளியலறிஞர் இராசேந்திரனிடம் நேரில் பெற்ற செய்தி

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்"[1]

எனப் பாடிய பிறகே,

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்"[2]

எனப் பாடியுள்ளாராதலால், ஞாயிற்றுக்கு முன்னதாகத் திங்களை வாழ்த்தி, முறைவைப்பு மரபினைப் பின்பற்றவில்லையேயெனக் கூறலாம். சிலப்பதிகாரத்துக்கு உரை வகுத்த **அடியார்க்கு நல்லார்** தரும் விளக்கத்தால் முறை வைப்புத் தொடர்பாகத் தெளிவு பெறலாம்.

மாபெரும் பத்தினி கண்ணகி பிறந்த சோழநாட்டைப் பெருமைப் படுத்த வேண்டுமென்ற நோக்கில், சோழ மன்னர்களுக்குக் குலமுதல் தலைவனாகிய ஞாயிறுக்கு முதற் சிறப்பினைத் தர வேண்டுவது முறையே; எனினும், 'செங்கோல். தொடர்பாகச் சிலப்பதிகாரக் காப்பியப் போக்கே மாறுபடுவது பற்றி **இளங்கோவடிகள்** அதுபற்றியும் சிந்தித்திருக்க வேண்டும்' அவ்வாற்றான், தென்னவன் செங்கோல் வளைந்து நிமிர இருப்பதையும், சோழ மன்னவன் செங்கோல் எக்காலத்தும் வளையாது நிமிர்ந்திருப்பதையும் ஒப்பிட்டுச் சிந்தித்து, **'வெண் கொற்றக் குடை'** யைச் செங்கோலுக்கு ஒப்பான துணைக்கருவியாகக் கொண்டு, அதனை உவமநலத்துடன் சிறப்பிக்கிறார். அஃதாவது, சோழனது குளிர்ச்சியையுடைய வெண்குடை, உலகைப் பொதுவற அளிசெய்து காத்தலால் திங்களுக்கு உவமையாக்கிக் காட்டுகிறார் இளங்கோவடிகள். இதனை மனத்துட் கொண்ட அடியார்க்கு நல்லார் நேரிடையாக இதனைக் கூறாது, "இத்தொடர் நிலை செய்யுட்குச் சிறந்த மங்கல மொழியாகலின் திங்களை முற்கூறினார்" எனக் கூறிச் சென்றமை கருதத்தக்கது,

1. சிலப்பதிகாரம், மங்கல வாழ்த்துப்பாடல், 3
2. மேலது, 4

எவ்வாறோ திங்கள், தமிழ் மக்களது வாழ்வில் சிறந்த இடம் பெற்ற கோள் எனப் போற்றப் பெறுகிறது. அத்தகைய திங்கள் தெய்வ நலத்துடன் புராணங்களில் இடம் பெற்றுள்ள பாங்கினை ஓரளவு விளக்கமாகக் காண்போம்.

திருமாலின் இதயத்திலிருந்து பிறந்தவன் என்றும், அமுதம் பெறுதற்காகத் திருப்பாற்கடலைக் கடைந்த நிலையில் அக்கடலி லிருந்து திருமகளுக்கு முன்னே பிறந்தவன் என்றும் கூறுவர். மேலும், அத்திரி முனிவர்க்கும் அநுசூயா தேவிக்கும் திருமகனாகப் பிறந்தவன் என்றும் புராணங்கள் கூறும்.

தக்கனுக்குப் பெண்மக்களாகத் தோன்றிய அசுவதி முதலிய இருபத்தேழு பேரையும் திருமணம் செய்து கொண்டவன் சந்திரன் என்றும், அந்த இருபத்தேழு பேரில் ஏனோ உரோகணியிடத்தில் மட்டும் அவன் மிகுந்த காதலுடன் வாழ்ந்தமையால் தக்கன் சாபத்திற் காளாகி நாள்தோறும் தேய்ந்து வரலானான் என்றும், பின்னர், சிவபெருமான் திருவருளால் நாள்தோறும் வளர்ந்து வரும் பேறு பெற்றான் என்றும் கூறுவர். இக் காரணம் பற்றிச் சந்திரன் அக்காலத்திலிருந்து தேய்தலும் வளர்தலுமான நிலையைக் கொண்டு விளங்குகின்றான் என்பர்,

39.6 செவ்வாய்:

தமிழ் மக்கள் வாழ்க்கையில் செவ்வாய் மிகவும் தாக்கம் கொண்டுள்ளான். செவ்வண்ணங் கொண்ட கிரகமாகிய செவ்வாயை அங்காரகன் என்றும் அழைப்பர். விண்ணில் செவ் வொளி வீசி விளங்குங் காரணத்தால் செவ்வாயைச் செம்மீன் என்றும் கூறுவர். ''முந்நீர் நாப்பண் திமில் சுடர் போலச், செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்''[1] என்று சங்கப்புலவர் பாடியுள்ளமை காண்க: செவ்வாய்க்கு அதிதேவதையாகச் சுப்பிர மணியரைக் கூறுவர்.

இவரது பிறப்பினைப் பற்றிப் பல்வேறு புராணக் கூற்றுகள் உண்டு. ''சிவபெருமான் உமாதேவியைப் பிரிந்து தனித்துக் கல் லாலின் கீழ் யோகத்திலிருந்த சமயம் அவரது நெற்றிக்கண்ணிலி ருந்து நீர்த்துளி ஒன்றுபூமியில்விழுந்தது. அந்த நீர்த்துளியிலிருந்து

1. புறநானூறு, 60, 1-2

பிறந்தவர் அங்காரகர். அதனால், பூமிதேவியின் மகன் என்று கூறப்படுவர் என்றும், "பாரத்துவாச முனிவரின் மகனாகப் பிறந்து பூமிதேவியால் வளர்க்கப் பெற்றவர் என்றும், வீரபத்திரக் கடவுள் தக்கயாகத்தை அழித்தபிறகு தேவர்களின் வேண்டு கோளுக்கு இரங்கிக் கோபம் தணிந்து அங்காரக வடிவம்ஆனார்" என்றும் புராணங்கள் பலவாறாகக் கூறுகின்றன.[1]

செவ்வாய், குருதியைப் போல் சிவந்த திருமேனியுடையவன். செம்மலர் அவனுக்கு விருப்பமாகும். நான்கு திருக்கைகளுடைய அவன், அபயம் சக்தி ஆயுதம், கதை, சூலம் முதலிய கொண்டு சிவப்புக் குடையுடன் இலங்குகிறான். அவனுக்கு வாகனம் மேடம் (ஆடு); எட்டுக் குதிரைகள் பூட்டிய தேரிலும் அவன் செல்பவன் என்பர். நான்மறைகளுள் சாமவேதத்தை ஆட்சி செய்யுங்கிரகமாகச் செவ்வாயைக் கருதுவர்.

அங்காரகனைப் பற்றிய பாடலொன்று,

"செங்கண்ணன் செப்மேனிச்
செல்வன் செம் மாலையினான்
அங்கையில் வேல்சூலம்
அடற்கதைகொள் - மங்கலத்தான்
மோதுந் தகரேறும்
மூர்ந்து நிலமகட்குக்
காதற்செய் அங்கா ரகன்,,

எனச் சித்திரிப்பது அவனுடைய வடிவத்தைத் தெரிந்து கொள்ளத் துணைநிற்கும்.

39. 7. புதன்:

வியாழபகவானாகிய குருவின் மனைவி தாரை ஆவாள்; அவள் சில காலம் சந்திரனுடன் வாழ்ந்து புதனைப் பெற்றாள் என்பது புராணக் கூற்று. கல்விக்கும் வித்தைக்கும் அறிவுக்கும் காரணனாகக் கருதப்படும் புதன் பற்றிய வரலாற்றுக் கூறு

1. சூரியனார் கோயில் குப்பாபிஷேகமலர், 1988, பக். 21.

களைப் பாரதமும் பாகவதமும் கூறும். தாரைக்கும் சந்திரனுக்கும் தோன்றியமையால், நான்முகனாகிய பிரமன் அவனைச் சூரியன் பக்கலில் உறையும்படி செய்தான் என்பர்[1]. புதனுக்கு அதிதேவதையாக விட்டுணு கருதப்படுகிறார்.

இருக்கு வேதத்தின் ஐந்தாவது காண்ட அதிகாரியாகப் புதன் அமைந்துள்ளான். ''புதன் சிங்கவாகனம் உடையவன்; மஞ்சள் மாலை அணிந்தவன்; பொன்மீது ஆசை உடையவன்; மஞ்சள் ஆடை புனைபவன். நான்கு கரங்களிலும் வரதம், வாள், கேடயம், கதை உடையவன். புதன் விஷ்ணுவைப் போல் தோற்றமுடையவன். விஷ்ணுதர்மோத்தரம் என்னும் நூல் இதைக் கூறுகிறது. பச்சை நிறத்தையும் விரும்புகிறவன்''[2] என வருணிப்பது கொண்டு அவன் திருவுருவம் அமைக்கப்படும்.

புதனுக்கு அமைந்துள்ள சிறப்புப்பெயர்களாகிய புத்திமதாம் சிரேஷ்டன், புத்திதாதா, புத்தி விவர்த்தனன், தனப்பிரதன், மனோகரன், விஷ்ணுரூபி, கிரக பீடாஹரன் (மற்றைக் கிரகங்களால் ஏற்படும் பீடையை நீக்குபவன்) என்பவை கொண்டு அவனது ஆற்றலை யுணரலாம். நல்ல கிரகமாய புதன் வியாபாரத் திறமைக்கும் துணைநிற்பவன். **பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது** என்பது தமிழ் நாட்டார் பழமொழி.

தமிழ்நாட்டில் **திருவெண்காடு**, புதனுக்கு விருப்பமான தலமாகும். அங்குப் புதனைச் சிறப்பாகக் காணலாம். புத பகவானை **மதுரைச்சொக்கநாதராகவும் திருப்புல்லணை திருமயம்** முதலிய தலங்களில் **திருமாலாகவும்** ஒப்பிட்டுக் காணும் மரபு உண்டென்பர்[3].

சூரியனுக்கு மிக அருகிலிருக்கும் புதனை ஒளி காரணமாக வானில் மிகுதியாகக் காணவியலாது. சில மாதங்கள் சூரிய உதயத்திற்கு முன்னும், சில மாதங்கள் சூரிய அத்தமனத்திற்குப் பின்னும் ஒரு மணி நேரம் காணலாம். சோதிட நூற்கிணங்கப்

1. புள்ளிருக்குவேளூர் மகா கும்பாபிஷேக மலர், 1970, பக். 24.
2. மேலது
3. அமுதசுரபி - திங்களிதழ், ஜூன், 85

புதன் கல்விக் கிரகமாக விருப்பதால் அவனை மக்கள் மிகவும் போற்றி வழிபடுகின்றனர்.

"மதனநூல் முதலாவுள்ள மறைகளும் கல்வி ஞானம்
விதயுடன் அவரவர்க்கு விஞ்சைகள் அருள்வோன் திங்கள்
சுதன் பவிசுபாக்கியங்கள் சுகம்பல கொடுக்க வல்லன்
புதன்கவி புலவன் சீர்மால் பூங்கழல் போற்றி போற்றி"

39.8. வியாழன் (குரு):

குரு என்றும், பிரகஸ்பதி (மேதாவி) என்றும், பொன்னன் என்றும், வியாழன் அழைக்கப்படுகிறார். பிரமதேவனின் மானச புத்திரர்களுள் ஒருவரான **ஆங்கிரச** முனிவருக்கும் **சிரத்தா தேவிக்கும்** பிறந்தவர் இவர் என்பர்[1]. ஆங்கிரச முனிவருக்கும் **வசுதா** என்பவளுக்கும் பிறந்த பிள்ளைகளில் ஏழாவது பிள்ளை பிரகஸ்பதி[2] என்றும் கூறுவர். எவ்வாறோ பிரமனின் பேரராக வியாழன் கருதப்படுகிறார்.

பிரகஸ்பதி காசியில் நெடுந்தவம் புரிந்து தேவர்களுக்குக் குருவாக விளங்கும் பதவி பெற்றவர் என்பர். இவர் ஒரு நீதிநூல் இயற்றியதாகத் திருக்குறள் பரிமேலழகர் உரையில் காணப்படுகிறது.[3]

நான்கு சக்கரங்கள் கொண்டதும் எட்டுக்குதிரைகள் பூட்டப் பட்டதுமாகிய தேரையுடைய வியாழன், ஒருமுகம் நான்கு திருக் கைகளும் உடையவர். செபமாலை, கமண்டலம், யோகதண்டம் ஆகியவை மூன்று கரங்களை யலங்கரிக்க, அபயக்கரத்தையும் கொண்டவர். **விஷ்ணு தர்மோத்தரம்** எனும் நூற்படி 'பிரகஸ்பதி இரண்டு கரமுடையவர்' என்பது அறியலாகும். "புத்தகமும் அட்ச மாலையும் ஏந்திக் கொண்டிருப்பவர்; சாந்த மூர்த்தி"[4] என்பதும் அறியப்படும்.

1. புள்ளிருக்கு வேளூர் கும்பாபிஷேக மலர்-1970, பக். 242
2. சூரியனார் கோயில் கும்பாபிஷேக மலர்-1988, பக். 22
3. புள்ளிருக்கு வேளூர் கும்பாபிஷேக மலர்-1970, பக்.242
4. மேலது

தம்மைப் பணிந்து வழிபடுபவர்களுக்கு வேண்டியவற்றை அருள்பவராகிய வியாழன் தென்முகக் கடவுளாகிய தட்சிணா மூர்த்தியாகவே போற்றப்படுகிறார். "திருவாரூர், ஆலங்குடி, மாயூரம் (மயிலாடுதுறை) - இத்தலங்களைக் குருஸ்தலமாகவும் தட்சணாமூர்த்தி வடிவத்தைக் குருவாகவும் கருதி மக்கள் வழிபடுகின்றனர்"[1] எனவருவது ஈண்டு இயையுடன் சிந்திக்கத் தக்கதாகும். மேலும், முகவையில் (இராமநாதபுரத்தில்) உள்ள நயினார் கோயிலில் குருபகவான் தட்சணாமூர்த்தியாகச் சுமார் 6 அடி உயரத்தில் ஆசனத்தில் அமர்ந்து காட்சியளிக்கிறார். சைவர்கள் இந்தத் தெய்வத்தைத் தட்சணாமூர்த்தியாகவும், வைணவர்கள் நாராயணன் எனவும் [2]அழைக்கின்றனர். என்பது சிந்திக்கத்தக்கது. சோழ நாட்டில் திருத்தேவூர் என்ற தலத்தில் பிரகஸ்பதிக்குத் தனி இடம் உள்ளது; தலத்து இறைவன் பெயர் தேவகுருநாதன் ஆகும்.

உயர் பதவி, நீதி, மனமகிழ்ச்சி, சமய ஞானம், புத்திரப் பேறு, செல்வம் முதலியவற்றை நல்கும் அவருக்கு அதிதேவதை, பிரமன் ஆவான்.

"மறைமிகுகலை நூல் வல்லோன் வானவர்க்கு அரசன் மந்திரி
நறை சொரி கற்பகப் பொன்நாட் டினுக்கு அதிபனாகி
நிறைதனஞ் சிவிகை மன்றல் நீடு போகத்தை நல்கும்
இறைவன் குருவியாழன் இணையடி போற்றி போற்றி"

39.9. வெள்ளி (சுக்கிரன்):

அசுர குருவாகக் கருதப் பெறும் சுக்கிரன், சூரியனுக்குக் கிழக்கில் நன்மை பயக்கும் கிரகமாகக் கருதப்படுகிறார். பிருகு முனிவருக்கும் புலோமசை என்பவருக்கும் பிறந்தவராகிய இவர், பார்க்கவன் என்ற பெயரும் கொண்டவர்.

சிவபெருமானைக் குறித்துத் தவம் புரிந்து அமிர்த சஞ்சீவினி மந்திரத்தை உபதேசமாகப் பெற்ற பெருமைக்குரியவர் சுக்கிரன். எனவே, இம்மந்திரத்தைச் சுக்கிரனிடமிருந்து அறிந்துவரத் தன்

1. புள்ளிருக்கு வேளூர் கும்பாபிஷேகமலர், 1970, பக். 242.
2. மேலது

மகன் கசனை வியாழன் அனுப்பி அவன் வாயிலாக அவர் கற்று உணர்ந்தார் என்று மகாபாரதம் கூறுகின்றது.[1]

உலகமே போற்றும் சுக்கிரனது வாழ்க்கையோ கடுஞ்சோதனைகள் நிறைந்தவை. பல அருந்தவங்கள் புரிந்து வியத்தகு வரங்கள் பல பெற்ற அவர், பல நூல்களையும் கலைகளையும் பயின்றவர். '**சுக்கிரநீதி**' என்ற நூல் இவரால் எழுதப்பட்டது என்பர்.

நவக்கிரகங்களில் ஒருவரான சுக்கிரன் யோகக் காரர் எனப் புகழப்படுகிறார். அவர் வியாழனிடம் பகைமை பூண்டவராகப் புராணத்தில் கருதப்படுகிறார்.

மக்களுக்கென அமையும் தசாபுத்தி- காலங்களில் சுக்கிரனது தசையிலோ புத்தியிலோ நல்லயோக முண்டாகும். உலக வழக்கில் **சுக்கிரதசை** (இருபது ஆண்டுகள்) ஒருவரது சாதகத்தில் நடை பெறும் காலத்தில் செல்வ வளமும் உலகப்புகழும் கிட்டும் என்பது நம்பிக்கை. சாதகத்தில் சுக்கிரன் பகைமையோடிருப்பின் சங்கடமேற்படும்; எனவே, சுக்கிரனைப் பூசித்துச் சாந்தி பெறுவது மக்களியல்பு. பொதுவாக, நவக்கிரகங்களுள் சுக்கிரனைப் போல் பிறர் கொடுப்பதில்லை எனக் கூறுவர்.

பருந்து வாகனமுடைய சுக்கிரனுக்கு நான்கு கைகள் உண்டு; முன் வலக்கை அபயமுத்திரை, பின்வலக்கை உருத்திராக்க மாலை, முன் இடக்கை கமண்டலம், பின் இடக்கை யோகதண்டம் கொண்டு சடைமுடி மரவுரி தரித்து இவர் விளங்குவார். எட்டுக் குதிரைகள் பூட்டிய ஐங்கோண வடிவமும், நான்கு சக்கரங்களும் கொண்ட வெள்ளித் தேரையுடையவராகச் சுக்கிரன் போற்றப்படுகிறார்.

''**விஷ்ணுதர்மோத்திரம்** என்னும் நூல், சுக்கிரன் ஒரு முகம் இரு கைகள் கொண்டவன் என்கிறது. நிதியும் புத்தகமும் தாங்கியவன்''[2] எனக் கூறுவதும் சிந்திக்கத்தக்கது.

தமிழகத்தில் திருநாவலூரில் **சுக்கிரபகவான்** திருவுருவத்தைச் சிறப்பாகக் காணலாம்.

1. புள்ளிருக்கு வேளூர் கும்பாபிஷேக மலர்1970, 1970, பக், 242
2 மேலது-,பக்.324

39.10. சனீசுவரன்:

நவக்கிரக மண்டலத்தில் ஏழாவதாகச் சூரியனுக்கு மேற்கில் விளங்கிடும் ஆற்றல்படைத்தவன் சனீசுவரன். இவனைச் **சனீசுவரன்** என்றும், **சனிபகவான்** என்றும் கூறுவர். எல்லோரையும் ஆட்டிப் படைக்கும் இவன் தன்னை வழிபட்டவருக்கு அருள் புரியும் வள்ளல் எனலாம்.

புராண அடிப்படையில் **சூரியனுக்கும் சாயாதேவிக்கும் இரண் டாம்** குமாரனாகத் தோன்றிய சனி, தன் பெரிய தாயாரான சஞ்ஞிகையைப் புறக்கணிப்பாகப் பேசினான். அதனால், அவ ளுடைய மகன்இயமனால் தண்டத்தால் காலில் அடிக்கப் பெற்றுக் கால் ஊனமடைந்தான். வலக்கால் சிறிது நொண்டியான சனிக் குத் **தக்கவேள்வியில்** ஒரு கண்போயிற்று என்ற கூற்று உண்டு.[1] நீலா, மந்தா, சேஷ்டை ஆகிய மனைவியர் மூவருடைய, சனிக்குப் புதல்வனாகத் தோன்றியவன் குளிகன். குளிகனில் எது செய்தா லும் மேலும் மேலும் பெருகும்; அதனால் நல்ல காரியங்களே செய்வர். தீயன செய்யக் கூடாது[2] என்பது மக்கள் நம்பிக்கை.

சனிபகவானின் திருவுருவம் பற்றி நூல்களில் சில முரண்கள் உள்ளன. ''ஒரு முகம், நான்கு கைகள், அம்பு வில் வாள் வரதம் முதலியன கொண்டவன். நீலமேனி சடைமுடி கரு நிற ஆடைகளும். சந்தனம் நீலமணி மாலை முதலியவவும் உடையவன் என்று நவக்கிரக ஆராதனம் கூறுகின்றது சனி ஒருமுகம் இரண்டு கைகள் உடையவன் என்று விஷ்ணுதர்மோத்திரம் கூறுகின்றது[3]. சனிபகவானுக்கு ஊர்தி காகம் ஆகும்; வடமொழியில் கழுகை வாகனமாகக் கூறுகிறார்கள். சனிக்கு 108 நாமங்கள் உண்டு. இவனை வழிபட்டால் நீண்ட ஆயுளுடன் வாழலாம் என்பர்.

நவக்கிரகங்களுள் சனிக் கென மக்களிடையே தனிச் சிறப்பு உண்டு. ''சனியைப் போல் கொடுப்பவனும் இல்லை; கெடுப்பவ

1. புள்ளிருக்கு வேளூர் மகாகும்பாபிஷேக மலர், 1970, பக். 244
2. மேலது
3. மேலது

னும் இல்லை'' என்பது தமிழர்களிடையே வழங்கி வரும் முது மொழியாகும். அஃதாவது. சாதகமுறைப்படி துன்பத்தையும் இன்பத்தையும் தீவிர தரத்தில் வழங்கும் கிரகமாக இதனைக் கொள்வர். மிகப் பழைய ஆலயங்களில் நவக்கிரகங்களின் சன்னிதி கிடையாது; சனீசுவரனின் சன்னிதி மட்டும் அமைக்கப்படுவது உண்டு. திருநெல்வேலி மாவட்டத்தில் பிரமதேசத்திற்கு அருகேயுள்ள திருவாலீசுவரத்தில் சனீசுவரர் சன்னிதி மட்டுமே யுள்ளமை காண்க.

காரைக்காலை யடுத்த திருநள்ளாறு எனுந்தலத்தில் சனிபகவானுக்கு மிகுந்த ஏற்றமும் தோற்றமும் உண்டு. சனிபகவானுக்கென்று தங்கக்கவசமும் சார்த்தி மகிழ்கின்றனர். ஆனால், இந்தியாவிலேயே சனீசுவர பகவானுக்குத் தனிக் கோயில் தமிழகத்தில், மதுரை மாவட்டத்தில் சின்னமனூருக்கு அருகிலுள்ள (செண்பக நல்லூர்என்ற)குச்சனூர் தான் உள்ளது; இங்கு அவர் சுயம்புவாகவும் உற்சவமூர்த்தியாகவும் விளங்கி அருள்பாலிக்கிறார்''[1]. மேலும், திருவானைக்காவில் சனிக் கிரகத்தின் திருவுருவத்தைச் சிறப்பாகக் காணலாம்.

39.11. இராகு(செம்பாம்பு):

நவக்கிரக மண்டலத்தில் எட்டாமவனாகச் சூரியனுக்குத் தெற்கில் அசுபக் கிரகமாக விளங்குபவன் இராகு. இவனைச் 'சாயாக்கிரகம்' (Nodes-invisible planet) என்று கூறுவர் விப்ர சித்தி என்ற அசுரனுக்கும் தட்சனின் பெண்ணான சிம்மிகை என்பவளுக்கும் பிறந்தவன்.

திருப்பாற் கடலைக் கடைந்த நிலையில் அமிர்தம் வந்தபோது சுக்கிரனது அருளால் இராகு, தேவ வடிவம் பெற்று, அதனை வாங்கி உண்டான் சூரிய சந்திரர் இதனைச் சாடை காட்டத் திருமால் (மோகினியுருவில்) தன் கையிலிருந்த சட்டுவத்தால் இராகு தலையில் அடித்தார்; தலை வேறாகவும் கைகள் உடல் மற்ற உறுப்புகள் வேறாகவும் ஆனநிலையில் இராகு, அமிர்தம் உண்ட காரணத்தால் பிழைக்கலானான்; தலை அழியாமல் வளர்ச்சி பெற்றுப் பின்பு. பாம்புடல் ஒன்றுடன் இயைந்து விழலானான்.

1. தினமலர் (வாரமலர்), 3-2-1991

பின்பு, பகைமை காரணமாகச் சூரியன்சந்திரர்களைப்பிடிக்கத் தொடங்கினான் என்றும், அதுவே கிரகணம் என்றும் கூறுவர். ஆனால், அறிவியல் வேறு விதமாகக் கூறும்.

தவவலிமையால் கிரகப்பதவி அடைந்த இராகுவின் மனைவி சிம்ஹீ; மகன் அமுத சூடிகன். கரிய நிறமுடைய இவனுக்கு ஆடையும் கரிய நிறம்; சூலம், கேடயம், வாள், வரதம் கொண்ட கைகளுடையவன்; எனினும், கருணை பெருகும் கண்கள் உடையவன் என்று 'சிற்பரத்தினம்' எனும் நூல் கூறும். இராகு முறம் போன்ற வடிவமான ஆசனமுடையவன்; சிங்க வாகனத்தையும் ஆட்டுவாகனத்தையும் கொண்டவன்.

விஷப் பிராணிகளால் உண்டாகும் தீங்கினை நீக்க இராகுவை வழிபடுவர். காஞ்சி காமாட்சியம்மன் கோயிலுக் கருகில் உள்ள ஊரகம் உலகளந்த பெருமாளைத் தரிசனம் செய்பவருக்கு இராகு பிரீதியாகும் என்பது தமிழ் மக்கள் நம்பிக்கை.

கும்ப விருச்சிக இராசிகளைக் கடக்குங் காலத்தில் இந்த இராசிக் காரர்கள் வாழ்வில் செல்வ வளங்காண்பர் என்பது சோதிட நூல் நம்பிக்கை. நவக்கிரக நாயகர்களில் மிகச் சிறந்த இக்கிரகத்தின் சிறப்பான காட்சியைத் திருக்காளத்தியில் காணலாம்.

39.12. கேது (கரும் பாம்பு):

இராகுவின் கதையைப் போலவே கேதுவின் கதையும் அமைந்துள்ளது. இராகுவின் தலை துண்டிக்கப்பட்டதால், இரண்டு உடல்கள் ஏற்பட்டன என்றும், தலை இராகுவாகவும், உடல் கேதுவாகவும் ஆயின என்றும் கூறுவர்.

கேது பின்பு திருமாலை நோக்கித் தவமிருந்து மூன்று அல்லது ஐந்து தலைகள் கொண்ட அமைப்பினைப் பெற்றான். அவன் செம்பாம்பு உருவமுடையவன் என்பது வழக்கு. கேதுவின்

கருப்பு. அவனுடைய இரு கைகளுள் ஒன்று அபயங்காட்டியும் மற்றொன்று கதை ஏந்தியும் காணப்படும். பத்துக் குதிரைகள் பூட்டிய தேரில் வருபவனாகிய கேது (ரௌத்திர கேது எனும் நோக்கில்) மிகச் சினங்கொண்டவன்; முக்கோண வடிவங் கொண்ட கொடியுடையவன். மேருவை இடமாகச் சுற்றும் இயல்பினனாகிய அவன் முருக வேளுக்கு வெண்கவரி வீசுஞ்சிறப் புடையவன் என்பர்.

இராகுவுக்கும் கேதுவுக்கும் தோற்றத்தில் சில ஒப்பீட்டுக் கூறுகள் உண்டு. இராகுவுக்குத் தலைதவிர உடலமைப்பு, பாம் பாகும்; கேதுவுக்கு உடல் தவிரத் தலையமைப்பு, பாம்பாகும். இராசி வட்டத்தில் இராகுவுக்கும் கேதுவுக்கு மெனத் தனியிடங்கள் இல்லை. திருக்காளத்தியில் இந்தக் கிரகத்தைச் சிறப்பான வடிவத் தில் காணலாம்.

புகைநிற மேனியனான கேது கழுகின் மேல் ஊர்பவன். அவனை அலி என்றும் கருதுவர் நவக் கிரகங்களுள் ஒன்றாக வைத்துப் பூசனை பெறும் கேது, பல பீடைகளையும் நீக்குபவன் என்றும், தைரியம் செல்வம் வெற்றி ஞானம் வீடுபேறு முத லியவற்றுக்கு வழி வகுப்பவன் என்றும் நம்புவர். இந்தக் கிரகம் மக்கள் வாழ்வில் சாதனை புரியுங் கிரகம் என்றும் கூறுகின்றனர்.

40. சிற்ப நோக்கில் அரிய சிறு தெய்வங்கள்:

ஆலய வளாகத்தில் புராணம் ஆகமம் முதலிய சமய நூல்கள் வாயிலாகப் புலப்படுத்தப்பட்ட சிறு தெய்வங்கள் (சிலை வடிவில்) பல உள்ளன. அனைத்தையும் விளக்கி கூறினால் நூல் மிகவும் விரியும். எனவே, தேர்ந்தெடுத்த சிலவற்றை மட்டும் தொடர்ந்து காண்போம்.

40.1. குபேரன்:

உலகம் நிலை பெற்றிட எட்டுத் திக்குகளிலும் எட்டு யானைகள் (திக் கஜங்கள்)தாங்கி நிற்கின்றன என்பதும், பாது காவலாகத் திக்குப் பாலகர்கள் எண்மர் இருந்து வருகின்றனர்

என்பதும் மத நம்பிக்கையாகும். அவ்வாறான அஷ்ட திக்குப் பாலகர்களுள் ஒருவனாகக் **குபேரன்** போற்றப்படுகிறான்.

சிற்பக்கலையில் திக்குப் பாலகர்கள் ஏதோ ஒரு வகையில் இடம் பெற்றிருப்பதை ஆய்வு நோக்கில் கண்டு மகிழலாம்.

இயக்கர்களைப் பற்றி முன்னரே கண்டோம். இயக்கர் குல அரசனான குபேரன், மாமுனிவர் **புலத்தியருக்கு** மகனான **விசுரவசுவுக்கு இதவிதா** எனும் தேவியிடம் பிறந்தவன். (விசுரவசுவின் வேறு மனைவியின் குமாரனே இராவணன் எனப்படுவதால், குபேரனுக்கு இராவணன் ஒன்று விட்ட சகோதரன் ஆவான்.) குபேரன், இராவணனால் விரட்டப்பட்ட நிலையில், வட திசையிலே **அளகாபுரியைத்** தன் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான்; சிவனுக்குத் தோழனாக விளங்கினான். இவனைப் பற்றி **டாக்டர் ந.ரா, ஸ்ரீநிவாசன்** எழுதுகையில், "**கும்பதிதனம்,** என்னும் செல்வத்தைத் தன்னிடம் அடக்கி **வைத்துக்** கொண்டிருப்பதனால் குபேரன் என்று பெயர் பெற்றான் என்று **வாசஸ்பத்யம்** கூறுகிறது. குபேரன் என்ற பெயருக்குக் **குற்சிதமான,** அதாவது விகாரப்பட்ட உடம்பை உடையவன் என்றும் பொருள்படும்; இது ஏனெனில், இவன் ஒரு சமயம் இமய கிரிச் சாரலில் தவஞ்செய்து கொண்டிருக்கையில், அங்கு எழுந்தருளிய சிவபிரானது பக்கத்தில் நின்ற **உமாதேவியின்** மேல் இடக் கண்ணைச் செலுத்தினான், அவ்வபசாரத்தால் அக்கண் பசந்து ஒளி மழுங்கப் பெற்று ஏகாக்ஷி **பிங்களன்,** எனும் பெயரைப் பெற்றான் என்பது உத்தரகாண்ட வரலாறு.

யக்ஷர் குல அரசனான **குபேரன் குள்ள உருவமுடையவன்.** அவனுக்கு **மூன்று கால்கள், ஒரே கண். பற்களோ எட்டேதான். இவன் வாகனம் குதிரை; ஆயுதம் கட்கம்; மாலை சீரக்க தார்; பூந்தோட்டம் சைத்திராதம்; விமானம் புஷ்பகம்; குபேரனின் மனைவி சித்ரரேகை; புத்திரன் நளகூபரன். அவனுக்குப் பெரிய தொந்தி இருக்கும்;** இவனைப் பின்பற்றியே பெரிய செல்வந்தர்களுக்கும் பணத்தொந்தி விழுகிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது"[1] என்று மிகச் சுவையாகச் சித்திரித்தலைக் காண்க.

1. கலைமகள் தீபாவளிமலர், 1991. பக். 191

மக்களுக்கு நலம்புரியும் இயக்கர்களுள் குபேரன் குறிப்பிடத் தக்கவன் என்று கருதி அவனைச் சிற்பத்தில் நன்கு வடித்துள்ளனர்.

40 2 இயமன்-வழிபாடு:

உயிர் கவரும் **கூற்றுவன்** என்றும் **காலன்** என்றும், வேறுபாடு கருதாமல் விதிவழியேஇயங்குவதால் **தருமராசன்** என்றும் அஞ்சப் படும் இயமனுக்கு மக்கள் வழிபாடு செய்யும் இடங்கள் சில உள்ளன திருக்கடவூரில் மார்க்கண்டேயரைக் காத்தற் பொருட்டுக் காலனைச் **சிவன்** வதம் புரிந்து **காலாரி, கரிகாலன்** என்றெல்லாம் பெயர் பெற்றதைச் சமயவுலகம் நன்கு அறியும்

அத்தகைய காலனுக்குத் திருக்கடவூர் அமிர்தகடேசுவரர் ஆலயத்தில் **தனிச் சன்னிதி** அமைத்து மக்கள் வழிபடுகின்றனர். **காசித்** தலத்திற்கு ஈடான **திருவாஞ்சியம்** எனும் வாஞ்சிநாத சுவாமி திருக்கோயிலில் ராஜகோபுரத்தையடுத்து இயமனுக்குத் தனிக்கோயில் எடுத்து மிகச்சிறப்பாக வழிபடுகின்றனர். இங்கு இயமன் அமர்ந்த கோலத்தில் தன் வாகனமான **எருமைக்கடா** இன்றிக் காட்சியளிக்கிறான். தன் இடக்காலை மடித்தவாறும் வலக்காலைத் தொங்கவிட்டவாறும் அமர்ந்த கோலத்தில் பாதக்குறடுடன் அவன் இருத்தலையும், அவனுக்கு அருகேயுள்ள ஒருவன் கதாயுதம் ஏந்தியவனாய் ஒரு கையை உயர்த்தியவாறும், மற்றொரு கையைத் தொங்கவிட்டவாறும் காட்சியளித்தலையும் காணலாம். இயமனுக்கு அருகே **சித்திரகுப்தர்** இடம் பெற்றிருப்பதும் புராணநோக்கில் பொருத்தமாக அமைந்துள்ளது. எனினும் இயமனே இத்தலத்தில் சிவபெருமானுக்கு வாகனமென்று இருப்பதாக மக்கள் உணர்ந்து கூறிவருகின்றனர். இதற்கியைபாக மரத்தாலான மிகப்பெரிய இயமவாகனம் அமைத்து, **மாசிப்பரணி** விழாக்காலத்தில் அதன் மேல் இறைவன் அமர்ந்து திருவீதியுலா வருதல் மரபாகப் பின்பற்றப்படுகிறது.

பல்லுயிர்களைக் கவரும் பழி நீங்கும் பொருட்டு **இயமதருமன்** திருவாஞ்சியத்தில் இறைவனுக்கு வழிபாடு புரிந்து அருள்

பெற்றான் என்பது புராணம். ''இத்தலத்திலும் அதன் அருகே யுள்ள பகுதிகளிலும் எவர்க்கும் இறப்பிற்கு முன் ஏற்படும் மரண பயம் இல்லை; இங்கு இறப்பவர்களுக்கு இயமவாதனை இல்லை. இங்கு உயிர்துறப்போரின் வலச்செவியில் இறைவன் அஞ்செழுத்தை ஓதி, அவ்வுயிர்களைச் சிவலோகத்திற்கு அழைத்துச் செல்வதாக நம்பப்படுகிறது[1]'' என வருங்குறிப்பு சிந்திக்கத்தக்கது.

40.2.1. சித்திர குப்தர் வழிபாடு:

உலகந்தழுவிய பல மதங்களில், உயிர்களை நேரமறிந்து கவர்கின்ற பொறுப்பினை ஒரு தெய்வம் மேற்கொண்டுள்ளது என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. அந்தத் தெய்வத்தைச் **சாவுத்தெய்வம்** (God of Death) என்பர். அத்தெய்வத்தின் ஏவலைக் கேட்கப் பல தேவதைகள் உண்டு. இந்து மதத்தில் **இயமனை**, உயிர் கவரும் சாவுத்தெய்வமாகக் கருதி வருகின்றனர்; அவனுக்கு உள்ள ஏவலர்களுள் ஒருவராகக்- கணக்கராகச்- **சித்திரகுப்தரை** எண்ணுகின்றனர். சித்திரம்—சிவன் எழுதிய ஓவியம், குப்தர் - கணக்கர்;இது தொடர்பாக ஒரு புராண நிகழ்ச்சியை எடுத்துக்காட்டுவர்.

''உமாதேவியார் வியக்கும்படி தங்கப்பலகை யொன்றில் எழுதிய ஓவியம் உயிர்பெறட்டும் என்று தேவி வேண்டச் சிவபெருமான் அந்தச் சித்திரத்தைப் பேசுமாறு செய்து தமது சித்தத்தையும் விளக்கினர்.

''உயிர்கள் செய்யும் நன்மை தீமைகளை உடன் அறிந்து அவைகளுக்கு ஏற்பத் தீர்ப்பு வழங்கும் பொறுப்பை யமதர்மனிடம் கொடுத்துள்ளோம்-நீ அவனுக்கு உதவியாகக் கணக்கு எழுதி வருவாயாக?'' என்று அருளினார். அப்படி வந்தவரே **சித்திரகுப்தர்**''[2] எனுங் குறிப்பினைக் காண்க.

'உயிர்வேறு உடல்வேறு' எனக் கூறுபோடும் கூற்றுவனாகிய இயமனைக் **காலன்** என்றும் கூறுவர். அவனுக்கு உதவியாகக்

1. ஞானவழி [திங்களிதழ்], மார்ச்சு, 1990
2. காஞ்சி காமாட்சி, பக். 82

கணக்கெழுதும் சித்திரகுப்தருக்கு உதவியாகவும் சாட்சியாகவும் விளங்கக்கூடியவர்கள், காலத்தை நாளும் நிர்ணயிக்கும் சூரியனும் சந்திரனும் ஆவார்கள்

காஞ்சிபுரத்தில் பேருந்து நிலையத்திற்கு அருகில் காணலாகும் சித்திரகுப்தர் கோயிலை எடுப்பிதவன் ஒரு சோழ மன்னன் என்பர். இது போன்ற கோயிலைத் தமிழ்நாட்டில் வேறெங்கும் காண இயலாது. சித்திர குப்தர் சிலை ஆகம முறைப்படி, ஒரு கையில் ஓலைச்சுவடியும் மற்றொரு கையில் எழுத்தாணியுமாக இலங்குவதை இன்றுங் காணலாகும், பௌர்ணமி நாளில் சித்திர குப்தரை வழிபடுவதால், அவருக்கடங்கிய கேது பகவானால் அடையாளங் காட்டப்பெறும் தோடங்களுக்குப் பரிகாரம் கிடைக்கும் என்பது மக்களின் நம்பிக்கை

சித்திரகுப்தனை வழிபடுவதாகக் கொண்டு, மக்கள் பலர் சித்திராபௌர்ணமியன்று பொங்கலிட்டுப் படையல் இடுகின்றனர். இதற்கான புராண இயைபு சரியாகப் புரியவில்லை.

41. தெய்வப் படைக் கலங்கள்-பன்முகப் பயன்பாடு

இந்து மதத் தெய்வங்களாகிய சிவபிரான், திருமால், கந்த வேள், இந்திரன், வருணன், விநாயகர், ஐயப்பன், கொற்றவை முதலிய சத்திகள், நாட்டுப்புறத் தெய்வங்கள் ஆகியோர் தம் திருக்கைகளிலேந்திய படைக்கலங்கள் பலவாக உள்ளன. படைக் கலங்களுள் சிலவற்றின் தோற்றத்தையும் தத்துவத்தையும் முன்னர் ஓரளவு கண்டோம்.

புராணப்போர்கள் எனும் தொன்ம (myth) அடிப்படையில் காண்கையில், போர்க்களங்களில் மக்களுக்குப் பயன்பட்ட சில கருவிகள் அவ்வாறான அமைப்பிலோ சில மாறுதல்கள் கொண்ட அமைப்பிலோ, தெய்வங்களின் திருக்கைகளில் பொருத்திப் பார்க் கப்பட்டன. தொன்மத்தாக்கமும் சிற்பியர் கலைத்திறனும் பல் வகைப் படைக்கலங்களின் அமைப்பை உருவாக்கின. இந்நிலையில் சில படைக்கலங்கள் தெய்வங்களுக்குச் சமமான சிறப்பையும் பெறலாயின. இவை தொடர்பான சில நுண்கூறுகளைக் காண்போம்.

சிவனுக்கும் சக்திக்கும் சிறப்புப் படைக்கலமான மூவிலைவேலும் (சூலமும்), திருமாலுக்குச்சிறப்புப் படைக்கலமான சுதர்சனச் சக்கரமும், கந்தவேளுக்குச் சிறப்புப் படைக்கலமான வேலும், இந்திரனுக்குச் சிறப்புப்படைக்கலமான வச்சிராயுதமும் தெய்வங்களாகப்போற்றப்படுஞ் சிறப்பினைக் கொண்டவை. அவற்றிலும், சுதர்சனச்சக்கரத்தினைச் சக்கரத்தாழ்வாராகவே கொண்டு, அந்தத் தெய்வத்தின் திருக்கரங்களிலும் படைக்கலங்களை வைத்து அடியவர்கள் போற்றிவணங்கி வருகின்றனர். அது நிற்கத், திருமாலுக்கென அமைந்துள்ள பஞ்ச ஆயுதங்கள் பற்றிச் சமயப் பண்பாட்டு அடிப்படையில் சிறிது ஆராய்வோம்.

திருமாலடியவர்கள் திவ்யதேசங்களுக்கு எழுந்தருளிப் புரிந்த மங்களா சாசனத்தால்-அருளிச் செயலால்-பஞ்சாயுதங்களோடு (சுதரிசனம், சக்கரம், பாஞ்சசன்னியம் எனும் சங்கு, சாரங்கம் எனும் வில், நாந்தகம் எனும் கத்தி, கௌமோதகீ எனும் கதை) கூடிய திருமாலை எப்படிப் போற்றியுள்ளனர் என்பது அறியலாகும். ''ஆழ்வார்களின் அருளிச் செயலால் திருமாலுக்கு எவ்வளவு ஏற்றமோ அவ்வளவு ஏற்றம் திவ்வியாயுதங்கள் ஐந்திற்கும் உண்டு''[1] என்று ஸ்ரீரங்கம் தவத்திரு கோவிந்தராஜ சுவாமிகள் அவர்கள் குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது.

திருமால் தம் திருக்கைகளில் ஏந்திய ஆயுதங்கள் பெரும்பாலும் போர்க்கருவிகள்; எனவே, அவை அடியார்களுக்கு அச்சமின்மையையும் ஆக்கத்தையும் பாதுகாப்பையும் அருள வல்லவை.

பொதுவாகச் சிறுவர்களுக்குத் தெய்வப் பாதுகாப்பு ஏற்படும் வகையில் ஆனேற்று அவிர்பூணும், ஐம்படைத்தாலியும் அணிவிப்பது சங்க காலத்திலிருந்து தொடர்ந்து வந்த சமய நம்பிக்கையும் வைத்து பழக்கமுமாகும். சைவசமயத்தவர் காளையுருவத்தை உருவாக்கியது ஆனேற்று அவிர்பூண்; வைணவச் சமயத்தவர் திருமாலின் பஞ்சாயுதங்களைப் பொறித்து உருவாக்கியது ஐம்படைத்தாலி. ஆனேற்று அவிர்பூண் வழக்கற்ற நிலையில், ஐம்படைத்தாலிஇந்துக்கள் எல்லாரிடமும் வழக்கில் இருந்து வந்தது;

1. சப்தகிரி [திங்களிதழ்], ஆகஸ்டு, 1992

பிற்காலத்தில் அதுவும் வழக்கற்றுப் போயிற்று, காரணம், தெய்வப்பண்பாட்டுக் கூறுகளைத் தக்கவாறு உணர்ந்து தமிழர்கள் பின்பற்றி வாராமையே; அல்லது, முன்னோர்கள் போற்றிவந்த சமயமரபுகளின் பெருமையை உணராமையே எனலாம்.

எவ்வாறோ திருமாலின் திருவுருவங்களிலாவது ஐம்படைகளை மறவாமல் சிற்பியர் கலைமரபுடன் போற்றியமைத்து வருகின்றனர்; அவற்றைக் கண்டேனும் பண்பாட்டு மரபினை நினைவிற் கொள்வோம்.

41.1. அத்திர தேவர்:

அஸ்திரம் என்பது அத்திரம் என ஆகும். இஃது ஆயுதத்தைக் குறிக்கும். கோயில்களில் தெய்வத்திருமேனி உலாவருமுன், தெய்வத்தின் அத்திரமாகிய அத்திரதேவரை உலாவரச் செய்வர்; அவ்வாறு உலா வருகையில் **எட்டுத் திக்குகளிலும் அத்திரதேவருக்குமுன்** முறையான **பலி** (சோற்றுருண்டை) **இடுவர்.** இதனால், தெய்வத்திருமேனி உலா வருகையில் தீங்கு ஏதும் நடைபெறாது என்பது சமய நம்பிக்கையாக இருந்து வருகிறது.

சங்க காலத்திலிருந்தே தெய்வத்தின் சக்தி, அந்தத் தெய்வத் தொடர்புடைய பொருளிலோ படைக்கலத்திலோ உண்டென்று மக்கள் நம்பி வந்துள்ளனர். வருணனுக்கு வாகனம் சுறாமீன்; ஆதலின், சுறாக்கோடு நட்டு வருணனை வழிபட்டுள்ளனர் சிலப்பதிகாரத்தில் வாள்களிலும் வீரர்தோள்களிலும் **கொற்றவை** (பாலை நிலத் தெய்வம்) உறைவதாக **நம்பி வந்துள்ளனர்.** இத்தகைய எண்ணத்தின் வளர்ச்சியால், சிவனது **படைக்கல**மாகிய **சூலத்தின்** வாயிலாகச் சிவனையும், திருமாலின் படைக்கலமாகிய **சக்கராயுதம்** (சக்கரத்தாழ்வார்) வாயிலாகத் திருமாலையும், இந்திரனது படைக்கலமாகிய **வச்சிராயுதம்** வாயிலாக இந்திரனையும், திருமுருகனது படைக்கலமாகிய **வேல்** வாயிலாகத் திருமுருகனையும், அம்பிகைக்கும் கணபதிக்கும்

உரிய அங்குசம் வாயிலாக முறையே அம்பிகையையும் கணபதியையும் வழிபாடு புரியலாயினர்.

தெய்வங்களின் படைக்கலங்களுக்கெல்லாம் பொது நிலையிலும் நாயகத்தன்மையிலும் அத்திர தேவர் விளங்குகின்றார். எனவே, கோயிலுக்குக் கோயில் அத்திர தேவரின் வடிவமும் வேறுபடுவது இயல்பாயிற்று "பல திருக்கோயில்களில் சூலாயுதம் மட்டுமே அத்திரதேவராக எழுந்தருளியிருக்கும், சில கோயில்களில் சூலத்தின் இடையில் சந்திரசேகரர் திருவுருவத்துடன் உமாதேவி திருவுருவத்தையும் அமைப்பது வழக்கம். செங்கற்பட்டு மாவட்டம் கும்மங்கலம் அகத்தீசம் கோயில், திருமயிலைக் காரணீசர் கோயில் ஆகிய இடங்களில் இத்தகைய அத்திரதேவர்களைக் காண்கிறோம்.

அம்பிகை கோயிலிலும் விநாயகர் கோயிலிலும் அங்குசம் அத்திரதேவராக விளங்குகிறது. இவ்வங்குசத்திலும் அம்பிகை, கணபதி உருவங்களைக் காண்கிறோம். சென்னை ஜார்ஜ்டவுன் பிரசன்ன விநாயகர் கோயில் அத்திரதேவரில் விநாயகர் உருவமும், சென்னை காளியம்மன் கோயிலிலுள்ள அங்குசத்தில் அன்னை அமர்ந்துள்ள வடிவமும் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

திருமால் கோயிலில் சக்கரத்தாழ்வார் எனப்படும் அத்திர தேவரைக் காண்கிறோம். இது சக்கர வுருவிலும் சில சமயம் சக்கரத்துடன் அறுகோண நட்சத்திரமும், நான்குபுறமும் தீச்சுடர்களிலும் காட்டப்பெற்றுள்ளன. முருகன் கோயில்களில் வச்சிராயுதம் அத்திரதேவராக விளங்குகிறது"[1] எனக் கோ மு. முத்துசாமி பிள்ளை எழுதிச் செல்லும் குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது. தமிழ் நாட்டுக் கோயில்கள் பலவற்றையும் ஆராய்ந்தால் இந்த அடிப்படையில் பல செய்திகள் கிடைக்கும்.

"மயிலை அருள்மிகு காரணீசுவரர் திருக்கோயிலில், அஸ்திரதேவர் இரிடபவாகனத்துடன் காட்சியளிப்பது சிறப்பான ஒன்றாகும். மாசிமகம் தோறும் அஸ்திரதேவர் தீர்த்தம் பாலிக்கக் கடற்கரைக்குச் செல்வார் என்பது மரபாக உள்ளது"[2] என வருங் குறிப்பினையும் காண்க.

1 கோயிற்களஞ்சியம்-அறிமுகம். பக்.4

2. அம்மன் தரிசனம் [திங்களிதழ்], பிப்ரவரி,92.பக்.14

41.2 சக்கரத் தாழ்வார்:

சிவனுக்குரிய படைக்கலங்களுள் சூலமும், முருகனுக்குரிய படைக் கலங்களுள் வேலும் போன்று, திருமாலுக் குரிய படைக் கலங்களுள் சக்கரம் மிகச் சிறந்ததாகும். திருமாலின் சக்கரப் படையைச் சுதர்சனம் என வழங்குவர். இந்தச் சக்கரத்திற்குச் சைவ நூல்களிலும் வைணவ நூல்களிலும் புராண நிகழ்ச்சி களுடன் கூடிய பெருமை உண்டு.

திருவீழிமிழலையில் திருமால் ஆயிரம் தாமரை மலர்களிட்டு வழிபாடுபுரிந்து, சிவனிடமிருந்து ஆழிப்படையைப் பெற்றதாகக் கூறுவர். சிவனுக்கு ஏற்றம் தரும் வகையில் புராண நிகழ்ச்சி இருப்பினும், திருமாலே இந்தச் சக்கரப் படையைப் பெறுவதற்குச் சிவபூசை செய்யவும் தயங்கவில்லை யென்பது சிந்திக்கத் தக்கது. அத்தகைய பெறலரும் சிறப்பு மிக்க படையே சுதர்சனச் சக்கரம் என்பது தெளிவு.

திருமாலுக்குப் பல வெற்றிகளைத் தேடித் தந்த சுதர்சனச் சக்கரம், ஆழ்வாராகவே போற்றப் பெற்றுச் சக்கரத் தாழ்வார் என அழைக்கப் பெறுகிறது. பெரிய வரப் பிரசாதியாகிய இவரை வலம் வந்து பூசை நியமத்துடன் வேண்டிக் கொண்டால் ஏவல், பில்லி, சூனியம், கொடு நோய் முதலிய தீங்குகள் நீங்க வும் நன்மைகள் பெருகவும் வழியேற்படும் என்பது அடியவர்கள் நம்பிக்கை. மணமாகாத பெண்கள் நாட்காலை நீராடித் தூய வுள்ளத்துடன் இப்பெருமானை வழிபட்டு வந்தமையால் திருமணமாகி நலம் கொண்டுள்ளனர் என்பர்.

காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் கோயில், கும்பகோணம் சக்கரபாணி சுவாமி கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில் முதலியவற்றில் எட்டுத் திருக்கைகளுடன் கூடிய சக்கரத் தாழ்வார் சன்னிதிகள் உள்ளன.

திருவரங்கக் கோயிலில் ஐந்தாவது திருச்சுற்றில் எழுந்தருளி யுள்ள சக்கரத்தாழ்வார் வியத்தகு சிற்பநேர்த்தி கொண்ட திருவுருவம். இவருக்குப் பின் சக்கரக் குறி உள்ளது. இவருக்குப் பின்புறத்தில் நரசிம்மர் திருவுருவத்தைக் கண்டு வழிபடலாம்.

குடந்தை சக்கரபாணி கோயிலில் சக்கரத் தாழ்வாரை வரு ணிக்கையில், ''வட்டமான **சக்கரத்தின்** நடுவில் **அறுகோணத்தில்** சாய்ந்து கொண்டு கீழே பதும பீடத்தின் மேல், எட்டுக்கரங்கள் கொண்டு சேவை சாதிக்கிறார்......... எட்டுக்கரங்களும் **திகிரி உலக்கை**, அங்குசம், **தாமரை, சங்கு, வில், அம்பு, பாசம், கதை** ஆகிய ஆயுதங்களை ஏந்திக் கொண்டிருக்கின்றன. கோரைப் பற்கள் இரு புறமும், ஜுவாலை வீசும் திருமுடியும், மூன்று கண்களும் கொண்டு **உக்கிர மூர்த்தியாய்** விளங்குகிறார்.......... பக்கத்தில் அபய **வரத** முத்திரைகளுடன் காட்சியளிக்கிறாள் **சுதர்சன வல்லி**. கருப்பக் கிருகத்திலே சூரியன், பிரமன், அக்கினி முதலியோர் எழுந்தருளியுள்ளனர். சுவாமிக்கு வில்வ அர்ச்சனை செய்வர்ாகள்[1] என்று **ராதாகிருஷ்ணப் பிள்ளை** விளக்கந்தருதல் காண்க.

சுதர்சனம் எனும் சக்கரமே திருமாலுக்கு ஒரு படைக்கலமாக விளங்குகையில், அந்தப் படைக்கலத்திற்கும் சில படைக்கலங்கள் உள்ளன எனச் சமயக்கற்பனையுடன் கூடிய புராண ஆகம அணுகு முறைகள் பெருவியப்பிற்குரியவை; சமய ஒருமுகநாட்டத் துடன் சிற்பத் திருவுருவில் இவற்றை அழகாக வடிக்க மேற் கொண்ட சிற்பியின் கலைக்கற்பனை நயத்தகு தென்னாட்டின் கலைமரபைப் புரிந்து கொள்ளத் துணை நிற்கும்.

திருமாலின் **பாஞ்ச சன்யம்** எனும் சங்கும், **ஆழ்வாராகப்** போற்றப் பெறினும், **சக்கரத்தாழ்வார்** போன்ற மிகுந்த சிறப் பினை வைணவர்கள் வழங்குவதில்லை. எனினும், சிற்பத் திருவுரு வில் முகம் கை கால் முதலிய அங்கங்களுடன் பாஞ்சசன்ய ஆழ் வாரை வைணவ ஆலயங்களில் கண்டு வழிபடலாம். எடுத்துக் காட்டாகத் **தில்லை கோவிந்தராசர்** ஆலயத்தின் தென்கிழக்கே வடக்குநோக்கிய சன்னிதியில் **சக்கரத்தாழ்வாரும் பாஞ்சசன்ய ஆழ்வாரும்** எழுந்தருளியிருத்தலைக் காண்க.

எங்கும் காணவியலாத **வியக்கத்தகு சக்கரத்தாழ்வார்**, பெரு மாளின் வீரஅமிசமாக, மதுரை மாநகரிலிருந்து (யானை மலை

1. தென்னாட்டுக் கோயில்கள்-3, பக்.130

வழியாக) 13 கி.மீ. தொலைவிலுள்ள **திருமோகூர்** காளமேகப் பெருமாள் **கோயிலில்** காணலாம். யோக நரசிம்மருடன் காட்சி யளிக்கும் தொன்மையான சக்கரத்தாழ்வார் (14திருக்கைகளுடன் காட்சியளிப்பவர்) தம்மை வழிபடுகிறவர்களுக்கு நல்ல உடல் நலமும், நிறை ஆயுளும், நீங்காத செல்வமும், இன்ன பல நற் பேறுகளும் வழங்க வல்ல மூர்த்திகரமான தெய்வமாகப் போற் றப்படுகிறார்.

42. நாகர் தாக்கம்-அன்னை வேண்டவராசியம்மன் (சிறப்புக்குறிப்பு):

இந்த மண்ணுலகிலுள்ள சமயமாட்சி காரணமாக **நாக உலகத்தி லுள்ள நாகர்களும் நாககன்னியர்களும்** இந்து சமயத்துடன் இயைபு படுத்தப்பட்டுள்ளனர். சக்தியின் அருளாட்சியைப் புலப்படுத்தும் வண்ணம் செங்கற்பட்டு மாவட்டம் **நெல்லிக்குப்பம்** — நெல்லி வனம் — என்னும் தலத்தில் **வேண்டவ ராசியம்மன்** கோயிலைக் காணலாம். இத்தலம் ஏழு நாக கன்னியர்கள் பூசித்ததும், கந்தருவ உலகத்திலிருந்து வந்த கன்னியர்கள் பூசித்ததுமாகிய பெருமைக்குரிய திருத்தலமாகும்.

ஆதிசேடன், கார்க்கோடகன், வாசுகி, அனந்தன், குளிகன், பதுமன், மகாபதுமன் முதலிய நாகக் கூட்டங்கள் இங்கு வந்து வழிபட்டதை நினைவிற் கொள்ளும் வகையில், வேண்டவ ராசியம்மன் பாதத்தின் அருகில் இராச நாகங்கள் இருக்கும் வியத்தகு காட்சியைக் காணலாம். இப்பிராந்தியத்தில் அருளாட்சி புரியும் இந்த அம்மன் தன் திரிசூலத்தினால் ஒப்புமையற்ற தனிச்சிறப்பினை மக்களுக்கு உணர்த்தி வருகிறாள் எனலாம்.

"சிரசில் ஏழு நாகங்கள் விற்றிருக்கும் காட்சி ஏழுலோகங் களையும் காப்பவள்; ஏழு நாடிகளில் உறையும் சக்தி, ஏழு பிறவிப்பவ்வம் போக்க வந்த சக்தி, ஏழு நாத சக்தி என்பதை யும் புலப்படுத்துகின்றன. பஞ்ச பதுமைகளைத் தனது பாதத்தின் கீழ் நிறுத்தியுள்ளதை நோக்குமிடத்து, பஞ்சமா பாதகங்களை நீக்கும் **பரமசக்தி — பஞ்சாட்சரி — பஞ்சகிருத்**

தியங்களை நடத்தும் தேவி என்பதைப் புலப்படுத்துகின்றன''[1] என வருஞ் சமயத் தத்துவக்குறிப்பு மனங்கொண்டு போற்றத் தக்கதாகும்.

தமிழ் நாட்டில் பயபக்திவளர்ச்சியால் **நாகர்சிலைகள்** பல்வேறு அமைப்புக்களில் உருவாயின. சமயப்பண்பாட்டில் **'நாகர்தாக்கம்'** அமைந்துள்ள பாங்கினை முன்னரே கண்டோம்; இயைபுடன் ஈண்டு நினைவுகூர்க.

43. கோயில் வாயிற் காவலர்கள் (துவார பாலகர்கள்):

நாட்டையும் ஊரையும் கோயிலையும் அமைத்த மன்னரும் மக்களும் அவற்றைத் தக்கவாறு பாதுகாத்தற்கும் வழிவகைகள் கண்டுள்ளனர். கோயிலைப் பொறுத்தவரையில் பாதுகாப்பிற்காகக் காவலர்களை நியமித்திருந்தனர். எனினும், கலை நோக்கிலே கருவறை முகப்பிலும் மண்டபவாயிலிலும் கோபுர **துவார பாலகர்களை** வலப்பக்கத்தும் இடப்பக்கத்துமாக அலங்கரிக்கும் வகையில் அமைக்க ஏற்பாடு புரிந்துள்ளனர். துவார பாலகர்களின் எடுப்பான தோற்றமே கோயிலை நேரடியாகக் கண்காணிப்பதாக அமைந்துள்ளமை போற்றத்தக்கது. பெண் தெய்வக்கோயிலில் பெரும்பாலும் **துவாரபாலகியர்** அல்லது **துவாரபாலிகையர்** இடம் பெற்றிருப்பர்; சிற்சில இடங்களில் துவாரபாலகரும் இடங்கொள்வர். இவ்வாறான வாயிற் காவலர்க்குப் புராணப் பின்னணியும் உண்டு.

புண்ணியப் பெருவடிவமாகவே திகழும் **திருமாலின் பரம பதத்தை வைகுண்டம்** (வைகுந்தம்) எனவும் வழங்குவர். அங்குத் திருமாலின் வாயிற் காவலர்களாக விளங்குபவர்களுள் சிலர் வருமாறு: 1. விசுவக் சேனர், 2. நந்தர், 3. சுநந்தர், 4. பத்ரர் 5. சுபத்ரர், 6. ஜயன், 7. விஜயன், 8. சண்டன், 9. பிரசண்டன், 10. பவன், 11. பிரபவன், 12. குமுதன், 13. குமுதாட்சன், 14. சீலன், 15. சசீலன், 16. சுருஷணன்.

1. திருக்கோயில், ஜூலை, 1976

மேற்கண்டவர்களுள் ஐயனும் **விஜயனும்** வாயிற் காவலர் நிலையில், பரமபதநாதனைக் கண்டு வழிபட ஆர்வமுடன் வந்த **சனகாதி** முனிவரைத் தடுத்து நிறுத்தியமையால், சாபத்திற் குள்ளாயினர். **கிருதயுகத்தில்** அவர்களிருவரும் **இரணியகசிபு இரணியாட்சன்** எனும் பெயர்களிலும், **திரேதாயுகத்தில் இராவணன் கும்பகருணன்** எனும் பெயர்களிலும், **துவாபர யுகத்தில் சிசுபாலன் தந்தவக்ரன்** எனும் பெயர்களிலும் மூன்று பிறப்பெடுத்துப் பிறகு உய்தி கொண்டனர் என்பது புராணம். இவர்கள் (துவாரபாலகர்கள்) துவாரகையில் இலட்சுமியின் வரவைத் தடுத்து இச்சாபம் அடைந்தனர் எனவும் கூறுவர்.

இஃது ஒரு புறமிருக்கக் **கருடாழ்வாரும் அனுமாரும்** வாயிற் காவலர் நிலையில் அமைக்கப்படுதலும் உண்டு அதே நிலையில் **கங்கையும் யமுனையும்** அமைக்கப்படுதலும் உண்டு. சிற்பியரின் கற்பனைக்குப் புராணப் பின்னணியும் அமைந்திருக்கலாம்.

திருக்கயிலையில் சிவபிரானுக்கு வாயிற்காவலர்களாக **அதிகார நந்தி** முதலிய சிலர் உள்ளனர்.

துவாரபாலகர் சிற்பத்தைத் தமிழ்நாட்டு ஆலயங்களில் முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் பல்லவ மன்னர்கள், அவர்கள் காலத்திலிருந்து துவாரபாலகர் வடிவங்களில் படிப் படியே மாற்றங்கள் ஏற்பட்டுவந்தன; அவற்றிற்கேற்பப் புராணப்பின்னணியும் அமைந்தது.

பொதுவாகப் பல்லவர்காலச் சிவன்கோயில்களில் இரு கைகளுடனும் பூதஉருவத்துடனும் துவாரபாலகர்களைக் காணலாம். இவர்களுள் **கண்டாகர்ணன் குடகர்ணன்** என்போர் சிறு துவாரபாலகர்களாகக் கருதப்படுகின்றனர். "உத்திர மேரூர்ச் **சுந்தரவரதர்கோயிலில்** துவாரபாலகர்களாக **நவன், சூடன்** என்போர் விளங்குகின்றனர். இதே கோயிலில் மூன்றாந்தளத்தி லுள்ள திருவரங்கநாதர் வாயிலில் **கங்கையும் காவிரியும்** துவார பாலிகைகளாக விளங்குகின்றனர்"[1] எனக் **கோ.மு. முத்துசாமி பிள்ளை** எழுதிச் செல்வது காண்க.

---

1. கோயிற் களஞ்சியம் - அறிமுகம், பக். 77

திருமுருகனின் வலிய துவாரபாலகர்களாகச் சுமுகர் சுதாகர் ஆகியோர் உள்ளனர்; இவர்கள் தேவ இனத்தவர்கள். ஆனால், பழநியாண்டவர் திருக்கோயிலில் முகக்காவலர்களாக இடும்பனும் கடம்பனும் இருப்பதையும் நினைவிற்கொள்ளுதல் வேண்டும். விநாயகருக்குக் கோயிற்காவலராக அதிபலன், பலன் ஆகியோர் கூறப்படுகின்றனர் எனினும், ஆடற்கோலத்திலிருப்பின் விநாயகருக்குத் துவார பாலகர்களாக லம்போதரன் குண்டோதரன் ஆகியோர் செயற்படுகின்றனர் என்பர். இவற்றையெல்லாம் ஆராயமுற்பட்டால் போதிய புராணப் பின்னணி நிரம்ப இருக்கும்.

43.1. துவார பாலகரும் துவார பாலிகைகளும்-கலை நோக்கு:

கருவறையின் இருபுறங்களிலும் துவாரபாலகர்களை முதற்கண் அமைத்த பெருமை **மகேந்திரவர்ம பல்லவனைச்** சாரும். "அக்காவலர் **பாகை** உடையவர். அவர்தம் வலக்கை இடக்கை மீது இருக்கும். இடக்கை ஒரு தடியைப் பிடித்திருக்கும். அக்காவலர் தடி மீது முன்புறம் சிறிது சாய்ந்தபடி, பார்ப்பவரை அடிக்க முயல்பவரைப் போலக் காணப்படுவர்"[1] எனக்கூறிக் காட்டுகிறார் **டாக்டர் மா. இராசமாணிக்கனார்.**

பல்லவர்காலக்கட்டடங்களையும் சிற்பங்களையும் ஆராய்ந்த நிலையில் **டாக்டர் ஆர். வெங்கட்ராமன்**, "பல்லவர் குடைவரைத் துவாரபாலகர்கள் இரண்டு கரங்களுடனும், துவக்கக் காலத்தில் முன்நோக்கிய முகத்துடனும், காலப்போக்கில் பக்கவாட்டில் தலையைத் திருப்பிய நிலையிலும் (profile) காட்சியளிக்கின்றனர். இவ்விருவருள் **ஒருவருக்குத் தலையில் இரு கொம்புகள்** உள்ளன. **இவர் நந்தியாக இருக்கலாம்** (இத்தகைய துவாரபாலகரைப் பாண்டியர், முத்தரையர், சாளுக்கியர், இராஷ்டிர கூடர் குகைகளிலும் காணலாம்)"[2] என்று எழுதிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கது. **நந்திகேசுவரரே** துவாரபாலகர்களுள் ஒருவராக நின்று பணிபுரிகிறார் என்று கொள்வது **மிகப் பொருந்துவ**தாகவும் உள்ளது.

1. பல்லவர் வரலாறு (கழகப்பதிப்பு), பக். 96-97
2. இந்தியக் கோவில் கட்டிடக்கலை வரலாறு, பக்- 39

மாமல்லபுரம் **திரௌபதி இரதத்துத் துவாரபாலிகைகள்** அழகானவர்கள். பிற்காலத் துவாரபாலகிகளுக்கு முன்னோடிச் சிலைகள் இவை எனக் கொள்ளலாம்.

சோழமன்னர்களின் கலைத்தொண்டின் வளர்ச்சிக்காலத்தில் சிற்பக்கலையில் சில குறிப்பிடத்தக்க **பாணிகள்** (styles) ஏற்பட்டன. அந்நிலையில், "அர்த்த மண்டபத் துவாரபாலகர் (5 அடிஉயரம்) சடாமகுடத்துடனும் ஒரு கையில் தடி (கதை), மற்றொரு கையில் **'விஸ்மய'** முத்திரையுடனும், தலையில் கொம்புகளுடனும் உள்ளனர்"[1] என வருங்குறிப்பினையும் நினைவிற்கொள்க தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஏழு திருவாயில்களில் வலத்திலும் இடத்திலுமாகத் துவாரபாலகர்கள் உயரமும் பாரிப்புமுடைய தோற்றத்துடன் காணப்படுகின்றனர். அவற்றுள், சுப்பிரமணிய சுவாமி கோயிலின் முன்னுள்ள துவார பாலகர்கள் மாசற்ற கருங்கல்லால் மிக வனப்புடன் அமைந்துள்ளனர். இக்கோயில் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகும்.

பொதுவாகப் பல்லவர் காலத்துத் துவாரபாலகர்களுக்கு இரண்டே கைகள்தாம் இருக்கும். சோழர்கள் சிலர் இதனைப் பின்பற்றினர்; ஆனால் முதலாம் **இராசராசன்** காலத்திலிருந்து துவாரபாலகர்களுக்கு நான்கு கைகள் அமைப்பது ஒருவகைச் சிற்பமரபு ஆயிற்று. சில துவாரபாலகர்கள் முறுக்கிய மீசையுடன் பெருமிதத்துடன் காணப்படுகின்றனர்; சிலர் மீசையின்றிச் சாந்தம் தவழும் முகத்துடன் காணப்படுகின்றனர். தமிழ்நாட்டு ஆலயங்களில் எண்ணமுடியாத அளவிற்கு வெவ்வேறு அமைப்புக்களுடன் துவார பாலகர்கள் உள்ளனர் எனலாம். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

43.2. சிறப்பான சில துவாரபாலகர்கள்:

அ) தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஏழுவாயில்களிலும் துவாரபாலகர் சிலைகள் உள்ளன மகா மண்டபத்துக்கும் நந்தி மண்டபத்துக்கும் நடுவேயுள்ள துவாரபாலகர் மண்டபத்திலுள்ள துவாரபாலகர்கள் 18 அடி உயரமும் 8 அடி அகலமும்

1. இந்தியக் கோவில் கட்டடக்கலை வரலாறு, பக். 93

கொண்ட பெரிய திருவுருவங்கள் நான்கு திருக்கரங்கள் கொண்டவை. இடப்பக்கத்துத் துவாரபாலகர் மழுவாயுதத்தின் மீது இடக்காலைக் குறுக்கே மடக்கி ஊன்றியும், வலப்பக்கத்துத் துவாரபாலகர் ஒரு தம்பத்தின் மீது வலக்காலைக் குறுக்கே மடக்கி ஊன்றியும இருத்தலைக் காணலாம் வலக்காலை ஊன்றிய தம்பத்தைச் சுற்றி ஒரு மலைப் பாம்பு ஒரு யானையை விழுங்கிக் கொண்டிருப்பது அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது. தெற்கு வாயில் துவாரபாலகர் சிலையிலும் இத்தகைய அமைப்பு உள்ளது. இவ்வாறே சிறு மாற்றத்துடன் திருநள்ளாறு முதலிய தலங்களிலும் தம்பத்தைச் சுற்றி மலைப்பாம்பு காட்டப்பட்டுள்ளது.

தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள துவாரபாலகர்களுள் வழவழப்பான அழகிய துவாரபாலகர் சிலைகள், வடமேற்கேயுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயில் முகப்பில் காணப்படுகின்றன.

ஆ) திருவரங்கம் அரங்கநாதர் கோயிற் கோபுரங்களில் பல்வேறு அமைப்புடைய துவாரபாலகர்கள் உள்ளனர்; கோயிலின் உட்புறத்தை நோக்கியுள்ள வாயிற் காவலர்கள் சிலரைத் **துவாரபாலகர்** என அழைக்காமல் **பலிபேரர்** என்று அழைக்கின்றனர். இவர்கள் விழாக் காலத்தில் சுவாமி புறப்பாட்டு வேளையில் யாதொரு தீங்கும் நேராமல் காப்பதாக அங்குள்ள பெருமக்கள் கூறுகின்றனர்.

அரங்கநாதர் கருவறைக்கு முன்னர் அமைந்துள்ள வாயிற் காவலர்கள் (துவார பாலகர்கள்) திருவுருவங்கள் வெண்கலத்தாலானவை; அழகிய இந்தத் திருவுருவங்களை **ஜயன் விஜயன்** என்பர்.

இ) தஞ்சை அரண்மனை அருங்காட்சியகத்திலுள்ள துவார பாலகர்:

சிலைகள் மிக நேர்த்தியான சிற்பப் படைப்பாகும். அவற்றுள், **இரண்டாம் இராசராசன் மேலைச் சாளுக்கியரை** வென்றதன் அடையாளமாகத் தலைநகர் **கல்யாணபுரியிலிருந்து** ஒரு துவார பாலகர் **சிற்பக்கலை** எடுத்து **வந்து தாரா சுரம்**

கோயிலில் அமைத்திருந்தான், வழவழப்பாக அமைந்துள்ள அந்தச் சிலையின் கீழ் ஊன்றிய தம்பத்தின் கீழ் ஒரு பூனை எலியைப் பிடிக்கிறது. ஒரு பாம்பு எலியை விழுங்குகிறது. இத் துவார பாலகர் ஒரு அடி மரத்தின் மீது முழங்கையை ஊன்றிக் கொண்டு அம் மரத்தின் பொந்துகள் வழியாக நுழைந்துவரும் பாம்பின் தலை மீது கையை வைத்துள்ளார். அந்தப் பாம்பு ஓர் எலியை வாயில் கவ்வியுள்ளது. அடி மரத்தில் சுண்டெலி உடும்பு ஆகியவை ஏறுகின்றன. மரத்தின் பொந்திலிருந்து ஒரு ஆந்தை எட்டிப் பார்க்கிறது. இவ்வளவு இடையூறுகள் சுற்றியிருந்தும் வாயில் காக்கும் துவார பாலகரின் நாட்டம் சிதறவில்லை என் பதைக் காட்டச் சிற்பியர் தம் திறத்தை இவ்வாறு காட்டி யுள்ளனர்.

ஈ) இரணியூர்க் கோயில் துவார பாலகர்கள்:

பொதுவாக நகரத்தார் கோயில்களில் துவாரபாலகர் சிலைகள் வனப்புடன் உள்ளன. சிறப்பாக, இரணியூர்க் கோயில் இராசகோபுரத்தின் வெளிப்புறமுள்ள வலப்புறச் சுவரில் துவார பாலகர் திருவுருவம் கலைநோக்குடன் போற்றத் தக்கது. இது பற்றி **மா. சந்திரமூர்த்தி**, "இவ்வுருவம் வலது காலைச் சிம்மத் தின் மீது ஊன்றி, தூக்கிய இடது காலை மற்றொரு சிம்மத்தின் தலைமீது கொண்டு 4 கரங்களுடன் கீழ்த்திசையை நோக்கிக் கோபுரவாயிலைக் காத்து நிற்கிறது. துவார பாலகரின் மேற்கை கள் இரண்டும் அங்குசத்தையும் நாக பாசத்தையும் பிடித் துள்ளன. கீழ் வலக்கை சூசி முத்திரை காட்டி எச்சரிக்கிறது. இடக்கை நீண்ட கதாயுதத்தின்மீதுஅமைந்துள்ளது. சடாமகுடம் தலைமாலை, வட்டக் குழை, பதக்கம் கோத்த கொத்துச் சரம், தோள்வளை, காப்பு, இடைக்கச்சை, தொடைமாலை, கழல் ஆகிய அணிகலன்கள் துவார பாலகரை அலங்கரிக்கின்றன.

பரந்த முகமும், அகன்ற நெற்றியும், நெளிந்த புருவமும், விரிந்த கண்களும், பருத்த விழியும், புடைத்த நாசியும், திறந்த வாயும், கோரைப்பற்களும் கொண்டு இவ்வுருவம் காட்சியளிக் கிறது. நகரத்தார் கலை"[1] என்று விளக்கியெழுதியுள்ளார்.

1. இரணியூர்க் கோயில். பக் 50-51

உ) புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில்:

பெருந் தெய்வங்கள் எழுந்தருளியுள்ள ஆலயங்களில் மட்டுந் தான் துவார பாலகர் சிலைகள் உள்ளன என்பதில்லை; காளியம்மன் மாரியம்மன் முதலிய பல தெய்வங்களின் ஆலயங்களிலும் துவார பாலகர் அல்லது துவார பாலிகையர் சிலைகளைக் காணலாம். எடுத்துக்காட்டாகப் புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலைக் காண்போம்.

மாரியம்மன் குடிகொண்டுள்ள கருவறை வாசலேயன்றி முன் முகப்பு மண்டபத்திலும் துவார பாலிகையர் சிலைகள் உள்ளன. தென்பாலுள்ள துவார பாலிகை வலக்காலைக் குறுக்கே மடக்கிக் கதையில் காலூன்றியும், இடக்காலை நேரே மடக்கிக் கதையில் ஊன்றியும் காணப்படுகின்றனர். மேலிரு கைகள் பரசும் பாசமும் ஏந்தியும், கீழிரு கைகளுள் ஒன்று வியப்புமுத்திரையும் மற்றொன்று கதையின் பிடியிலுமாக அமைந்தும் காணப்படுகின்றன.

அச்சந்தரும் பேய்ச்சியம்மன் சன்னிதிக்கு முன்னரும் துவார பாலகர் சிலைகள் உள்ளன; அவையும் எழில் வாய்ந்தவையே.

43.3. துவார பாலகர்கள்-சிறப்புக் குறிப்பு:

ஆலயங்களின் உள்(மண்டப) நுழைவாயிலிலும் சன்னிதிக்கு முன்னரமைந்த நுழைவாயிலிலும் துவார பாலகர் சிலைகளை ஆலயப் பாதுகாவலர்களாகப் போற்றியமைப்பது சிறந்த நோக்கத்துடன் கூடிய சமயக் கலை மரபாகும். ஆனால், கோபுரங்களைக் கட்டுகையில் ஒவ்வொரு மாடத்தின் (அடுக்கின்) இரு பக்கங்களிலும் துவார பாலகர்களை அமைக்கும் வழக்கம் உள்ளது கோபுரப் பாதுகாப்பிற்காகக் காற்று உள்நுழைந்து செல்லும்வகையில் (பெருஞ் சாளரம் போன்று) அமைந்துள்ள பகுதிக்கும் துவார பாலகர்கள் தேவையா என யாரும் நினைக்கலாம். மெய்ஞ்ஞானத்துடன் விஞ்ஞானமும் கைகோத்துச் செல்லும் ஆலயக் கட்டடக்கலைக்கு இஃது ஓர் எடுத்துக் காட்டு எனச் சிலர் கூறுவர். எப்படியோ கோபுரத்திற்கு எழில் கூட்டும் வகையில் துவார பாலகர் சிலைகள் இவ்வாறு அமைந்துள்ளன என யாரும் மனநிறைவு கொள்ளலாம்.

44. சமய அருளாளர்கள் சிலைகள்:

பௌத்த மதத்திலும் சமண மதத்திலும் தத்தம் மதத்தைப் பரப்பிட அருளாளர்களைப் — போதிசத்துவர், தீர்த்தங்கரர்களை — முறையே ஆலயங்களில் வைத்து வழிபடுவதைப் பார்த்த **இந்து மதத்தினர்**, தம் ஆலயங்களிலும் தெய்வச் சிலைகளேயல்லாமல், மதக் கொள்கைகள் பரவிடப் பெருங்காரணியர்களாக விளங்கிய **சமயாசாரியர்களையும், சந்தான ஆசாரியர்களையும், ஆழ்வாராதியர்களையும்,** பிற **அருளாளர்களையும்** நினைவிற் கொண்டு அவர்கள் சிலைகளையும் நன்றிக் கடப்பாட்டுடன் நிறுவத் தலைப்பட்டனர்.

சைவத் திருமுறைகளும் வைணவ அருளிச் செயல்களும் மக்களிடையே பரவத் தொடங்கிய சோழர் காலத்தில் இத்தகைய அருளாளர் சிலைகள் பலவாக ஆலயங்களில் நிறுவப்பட்டன என்பது வரலாற்றால் அறியலாகும்.

சைவ சமயத்தைப் பொறுத்த வரையில், திருத்தொண்டர் புராணத்தால் பரவப்பெற்ற **தனியடியார் அறுபத்து மூவரையும், தொகையடியார் ஒன்பதின்மரையும், சமயாசாரியார் நால்வரையும், சந்தான** ஆசாரியார் **நால்வரையும்** பாடல்பெற்ற பல சிவாலயங்களில் கற்சிற்ப வடிவில் காணலாம்; சில சிறப்புடைய தலங்களில் கற்சிலைகளுடன் செப்புத் திருமேனிகளும் அமைந்திருக்கக் காணலாம். சில தலங்களில் அறுபத்துமூவர் **சிலைகள்,** நாயன்மார்களின் சிறப்பான தொண்டுகளை விளக்கும் வகையிலும் அமைந்திருக்கக் காணலாம்.

காஞ்சிபுரம் **கச்சபேசுவரர் கோயிலில்** பல வியத்தகு சிற்பங்கள் அமைந்துள்ளன. "இங்குள்ள சிற்பங்களுள் அறுபத்து மூவரின் திருவுருவங்கள் தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. பிற ஆலயங்களில் இச்சான்றோர்கள் நின்ற கோலத்தில் காட்சியளிப்பர். கச்சபேசுவரர் கோவிலில் உள்ள சில நாயன்மார்களின் சிற்பங்கள் அவரவர்களின் வரலாற்றை விளக்குவதாக அமைந்துள்ளன. **இயற்பகை நாயனார்** கத்தி கேடயம் ஏந்தியவாறு போர்க் கோலத்தில் காட்சியளிக்கிறார். வேட்டுவர் கோலத்தில்

கண்ணப்பரும், கலயம் ஏந்திய நிலையில் **குங்கிலியக் கலயரும்.** நெஞ்சுக்கு நேராகச் சிவலிங்கத்தை ஏந்திய **பூசலாரும்,** யாழை மீட்டியவாறு அமர்ந்துள்ள நிலையில் **திருநீலகண்ட யாழ்ப்பாண ரும்,** சிறுவனை மடியில் கிடத்தியவாறு அமர்ந்த நிலையில் **சிறுத் தொண்டரும்** காட்சியளிக்கின்றனர். ஆயுதமேந்தியவாறு தோன்றும் **சேரமான் பெருமாளுக்கு** அருகே குதிரை உளளது. கையில் தண்டமும், தலையில் கலயமும் சுமந்தவாறு **தண்டியடி கள்** காட்சியளிக்கிறார். சடைமுடியையுடைய அரசரின் வெட்டப் பட்ட சிரத்தைச்சுமந்தவாறு **புகழ்ச்சோழர்** உள்ளார் இதுபோலவே பல நாயன்மார்களின் திருவுருவங்கள் அவர்களது வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பையளிக்குமாறு அமைந்துள்ளது, கச்சபேசு வரர் கோயிலுக்கே உரிய சிறப்பு"[1] என்று எம். **இராசுகோபாலன்** எழுதிச் செல்வது சிந்திக்கத்தக்கது. இங்குள்ள நாயன்மார் சிலைகளுடன் **தாராசுரத்தில்** காணலாகும் சுவர்ச்சிற்ப வரிசை யிலுள்ள நாயன்மார் சிலைகளையும், **திருப்பனந்தாள் சடையப்பர்** ஆலயத்திலுள்ள சுவர்ச்சிற்ப வரிசையிலுள்ள நாயன்மார் சிலை களையும் ஒப்பீட்டு நோக்கில் ஆராய்ந்து போற்றலாம்.

திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) **மணிவாசகருடன்** வரலாற்றுத் தொடர்புடையது. ஆதலின், அவரது புராணத் தொடர்புடன் கூடிய அழகான உருவச் சிற்பங்களை ஆலய மண்டபத்தில் கண்டு மகிழலாம்.

திருமுருகனின் ஆறு படைவீடுகளிலும் கௌமாரச் சிறப் புடைய சில தலங்களிலும் அருளாளர் சிலைகள் உண்டு. **அருணகிரிநாதர்** போன்ற **அனுபூதிமான்களின்** சிலைகள் மிகக் குறிப்பிடத்தக்கவை.

வைணவ சமயத்தைப் பொறுத்த வரையில் நாலாயிர திவ்யப்பிரபந்தங்களை அருளிய **ஆழ்வார்களையும்,** சமயம் பரவத் துணை நின்ற **ஆசாரியர்களையும்.** அருளிச் செயலுக்குப் பேருரை **கண்ட ஆசாரியப் பெருமக்களையும்** நினைவிற்கொண்டு சிலை வடிவில் அவர்களை வழிபடுகின்றனர். எனினும் சில சிறப்புக் குறிப்புகள் உண்டு

1. அருள்மணம் திகழும் ஆலயம், 1989, பக். 52-53.

ஆலயங்களில் வரிசைப்பட வைத்துள்ள கற்சிலைகளும் செப்புச் சிலைகளுமேயன்றிச் சில ஆழ்வார்களுக்கும், ஆசாரியர்களுக்கும் தனிச் சன்னிதியமைத்து வழிபடுதலும் உண்டு. எடுத்துக்காட்டாகத் திருவரங்கத்திலே நம்மாழ்வார் ஆண்டாள் முதலியவர்களுக்கும், இராமானுசர் முதலியவர்களுக்கும் அமைந்துள்ள சன்னிதிகளைக் கோயில் வளாகத்தில் காணலாம்.

இந்து மதத்தினர், "ஆண்டவனைவிட அடியார்கள் சிறந்தவர்கள்" என்றும், "ஆண்டவனே தொண்டருள் ஒடுக்கம்" என்றும் அடியார்களை மிகப்போற்றி நிற்பவர்கள். எனவே, தெய்வத் திருக்கோயில்களில் அடியார்களின் பெருமையை மக்கள் உணரும் வண்ணம் பல உத்திகளைக் கையாண்டுள்ளனர்; இவ்வாற்றான் சைவர்களை விட வைணவர்கள் முனைந்து பணியாற்றியுள்ளனர்.

சைவ சமயத் திருத்தொண்டர்களைச் சிலை வடிவாக்குகையில், தம் வழிபடு கடவுளுக்குள்ள நாகாபரணம் நாகக்குடை முதலிய சிறப்புக் கூறுகளைப் பொருத்தி அமைப்பதில்லை. வைணவர்களோ தம் ஆழ்வாராதியர்களுக்கு இவ்வகைச் சிறப்புக் கூறுகளைப் பொருத்திக் காணாவிடினும், ஆசாரியர்களுக்குப் பொருத்திக் கண்டுள்ளனர் எடுத்துக்காட்டாக மணவாள மாமுனிகளுக்கு ஐந்துதலை நாகம் குடைபிடிப்பது போன்ற சிலையமைப்பினைச் சில ஆலயங்களில் காணலாம்.

44.1. அருளாளர்சிலை — சிறப்புக்குறிப்பு:

வைணவ சமயத்தவர்கள் தெய்வச் சிலையை 'அர்ச்சாவதாரம்' என்றே போற்றி வழிபடுங்கொள்கையினர் என்று கண்டு வருகிறோம் வைணவ ஆசாரியர்களுள் சிறப்பிடம் பெற்றவர் உடையவர் எனும் ஸ்ரீ இராமநுசர் ஆவர். இவருக்கு இவர் காலத்திலேயே சிலையமைத்துப் போற்றி வழிபட்டுள்ளனர் என்பது சிறப்பாகச் சிந்திக்க வேண்டியதாகும்.

ஸ்ரீ இராமாநுசர் அவதரித்த சிறப்புடைய திருத்தலம் ஸ்ரீ பெரும்புதூர் ஆகும். மிகுபுகழ்கொண்ட உடையவரைச்

சேவிப்பதனால், அவரது இதயத்தில் கோயில் கொண்டுள்ள 108 திவ்யதேசத்து எம்பெருமான்களையும் சேவித்த பலன் கிடைக்கும் என்பது வைணவப்பெரியவர்களின் சமய நம்பிக்கை. இத்தகைய பெருஞ்சீர்த்திக்குரிய ஸ்ரீ இராமாநுசரின் திருமேனி யைச் சிற்பிகளைக் கொண்டு அமைத்து, அதனை ஸ்ரீ பெரும் புதூரில் தனிச் சன்னிதியில் தெற்கு நோக்கி எழுந்தருளச் செய்துள்ளனர். இதனைப்பற்றி எம். இராதாகிருஷ்ணப்பிள்ளை எழுதுகையில், "முதலியாண்டான், கந்தாடையண்ணன் ஆகி யோரின் வேண்டுகோளுக்கிணங்கி, உடையவர் காலத்திலேயே அவரைப் போன்ற திருமேனி சிற்பிகளைக் கொண்டு செய்யப் பட்டது. உடையவர் அந்த விக்கிரகத்தைத் தாமே ஆலிங்கனம் செய்துகொண்டு தமது சக்தியை அதில் பிரவேசிப்பித்தார் என்கிறார்கள். அந்த விக்கிரகம் பிரதிட்டை செய்விக்கப்பட்ட காலத்தில் ஸ்ரீ ரங்கத்தில் எழுந்தருளியிருந்த உடையவருக்கு மிகுந்த ஆயாசம் உண்டாயிற்று என்றும் கூறுவர். தமருகந்த இந்த அர்ச்சாவிக்கிரகத்தில்தான் உடையவர் பூரணகளையோடு எழுந்தருளியிருக்கிறார். தமரான கந்தாடையாண்டானால் உகந்து பிரதிட்டை செய்யப்பட்ட படியால் தமருகந்ததிருமேனி யென்று இம்மூர்த்தியைக் கூறுவர்"[1] என விளக்கிக் கூறுவது மனங்கொள்ளத் தக்கதாகும்.

44.2. சமயத் தொண்டாற்றிய பிற சான்றோர் சிலைகள்:

தமிழ்நாட்டின் பல பகுதிகளில் சமயந்தழைக்கப் பாடுபட்ட வர்கள் வரிசையில் திருவருட்செல்வர்களேயல்லாமல், ஆலயங் களையும் பிறசமய நிறுவனங்களையும் தோற்றுவித்த மாமன்னர் களும் குறுநிலமன்னர்களும் வள்ளன்மை கொண்ட சான்றோர் களும் பலராக உள்ளனர். அவர்களுள் பலர் சிலைவடிவில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களைப் பற்றியெல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதவேண்டியது 'நன்றிக்கடப் பாட்டுடன் பொருத்தமே'; எனினும், சில பெயர்களை மட்டும் ஈண்டு நினைவுகூர்வோம்.

திருவுருவ அமைப்பிலே தில்லை நடராசர் கோயிலில் இரணியவர்மன் சிற்பம், பச்சையப்பமுதலியார் சிற்பம் முதலியவை

1. தென்னாட்டுக் கோயில்கள் (முதல்பாகம்), பக். 37

யும், மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் **திருமலை நாயக்கர்-பட்டத்தரசிகள்** சிற்பங்கள் முதலியவையும் அமைந்திருத்தலைக் காணலாம். திருமலை நாயக்கரின் சகோதரர் **அளகாத்திரி நாயக்கர்** சிற்பம் அவர் கட்டிய **பேரூர்க் கனக சபையில்** அமைந்துள்ளது. **பழநி** மலைக்கோயிலில் ஆயக்குடி ஜமீன்தார்கள் ஜமீன்தாரிணிகள் சிலைகள் அமைந்துள்ளன.

திருப்புத்தூர்த் திருத்தளிநாதரின் திருக்கோயிலையடுத்துப் பைரவர் திருக்கோயில் உள்ளது; இதன் முகமண்டபத் தூண்களில் (பதினெட்டில் இரண்டு தூண்களில்) சிவகங்கைச் சீமைக்குப் பெருமை **சேர்த்த மருது சகோதரர்** சிற்பத்திருவுருவங்களைக் காணலாம். இவற்றைப்பற்றி **டாக்டர் இரா. கலைக்கோவன்** எழுதுகையில், ''பெரிய மீசையும் கூப்பிய கைகளில் அக்கமாலையுமாய்க் காட்சியளிக்கும் **பெரியமருது**வின் ஆடையணிகள் அரசர்க்குரிய மிடுக்கை அழகாய்க் காட்டுகின்றன பக்கவாட்டில் சரிந்த பெரிய கொண்டையும், இடுப்பாடையின் இடைக்கத்தியும், கன்னப்பிதுக்கங்களும் சிரித்த முகத்திலும் சினக்குறிப்பு காட்டுகின்றன. இந்தச் சினம் வள்ளுவரின் வெகுளிச்சினம் அல்ல. காப்பியர் காட்டும் பெருமிதத்தில் விளைந்த வீரச்சினம்! இந்த வீரரின் இளையவராய்ச் **சின்னமருது** கூப்பிய கைகளும் அக்கமாலையுமாய் எதிரில்! அண்ணனின் எதிரில் நிற்கிறோம் என்ற எண்ணமே அவரது முகத்தில் தயக்கத்தையும் பணிவையும் நிறைத்துள்ளது''[1] என்று இலக்கியச்சுவைபடச் சித்திரித்துச் சென்றுள்ளார்.

தஞ்சைப் பெரிய கோயில் எடுப்பித்த சோழமாமன்னன் **இராசராசன் சிலை**, கோயில் உள்வளாகத்தில் காணப்படவில்லை; எனினும், கோயில் இடப்பக்க வெளிப்புறத்தில் சாலையருகில் இக்காலச்சிற்ப எழிலுடன் சிலை அமைந்துள்ளது.

44.2.1. மன்னர்முடிகள் தொடர்பான சிற்பங்கள்:

சிற்பங்களில் மன்னர்களின் திருவுருவங்களை அமைப்பதன் வாயிலாக, அக்காலத்து மன்னர்களின் முடி (மகுட) அமைப்

1. அமுதசுரபி தீபாவளிமலர், 1990, பக். 128

பினைத் தெரிந்து கொள்ளலாம்; நாகரிக வளர்ச்சியில் இதுவும் குறிக்கத்தகும்.

மாமல்லபுரத்தில் ஆதிவராகக் குகையில் சிற்பத்திலே காணலாகும் சிமம விஷ்ணு, மகேந்திரன் ஆகிய இரு மன்னர்களின் தோற்றத்திலிருந்து, பல்லவ மன்னர்களின் மகுடங்கள் **உருளையாகவும் நெடியவையாகவும்** உள்ளன என்பது தெரிய வரும்; அவற்றின்மேல் தாமரை மொட்டினைப் போன்ற அணியிருத்தலையும் காணலாம். முடியும் முடிசூடுதலும் பற்றி **அறிஞர் இரா. நாகசாமி** எழுதுகையில், "காஞ்சியில் வைகுந்தப் பெருமாள் கோயிலில் பல பல்லவ மன்னர்களின் சிலைகள் உள்ளன. அவற்றில் சிறந்த வேலைப்பாடு உடைய முடிகள் காண்பிக்கப்பட்டுள்ளன. சிலவற்றில் கண்ணியைப்போல் தடித்த மாலை போன்ற அணி, முடியின் அடியை அலங்கரிக்கின்றன; மேல்பகுதி கூர்முனையாக உள்ளது.

இவை தவிரக் **காஞ்சி** வைகுந்தப் பெருமாள் கோயிலில் நந்திவர்மனின் வரலாற்றைக் குறிக்கும் சிற்பங்கள் உள்ளன. அவற்றில் நந்திவர்மனுக்குச் சூட்டுவதற்காக மகாமாத்திரர் முதலானோர் ஒரு தட்டில் முடியை ஏந்தி வந்தனர் என்றும், நந்திவர்மனின் தந்தையால் அதை என்னவென்று அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லையென்றும், அது பல்லவர்முடி என்றும், யானையின் உருவில் இருந்தது என்றும் குறிப்பு உள்ளது. இந்தியாவில் வடமேற்குப் பகுதியில் ஆண்ட அரசர்கள் யானைத் தலை போன்ற முடிகளைப் பூண்டிருப்பது காண்பிக்கப்பட்டு உள்ளது. வைகுந்தப் பெருமாள் கல்வெட்டு இவ்வாறு குறிப்பினும் சிற்பத்தில் யானைத்தலை போன்ற முடி காணப்பட வில்லை"[1] என்று எழுதிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கது. முடிசூட்டு விழாச் சிற்பத்தை நோக்குகையில், முடி உருளையாகவும் நெடிதாகவும் இருப்பதைத் தெளிவாக அறியலாம்.

பிற மன்னர்களின் முடி பற்றி ஆராய்ந்து எழுதுகையில், 'பாண்டிய மன்னருடைய சிற்பம் என்று கூறும் வகையில் திட்ட வட்டமாகக் கூறக்கூடிய சிற்பம் ஏதுமில்லை. எட்டாம் நூற்

1. யாவரும் கேளிர், வாசகர் வட்டம் (சென்னை, 17), 1973, பக். 30-31

றாண்டில் பாண்டியர் செய்தளித்த கடவுளர் சிற்பங்களில் காணப்படும் முடிகளைப் போலவே அம்மன்னர்களது முடிகள் இருந்திருக்கக் கூடும். சோழ மன்னர்களது முடிகள் அதிகம் நீண்டோ அல்லது குறைந்தோ இன்றி, மேல் கூர்மையாக மிக வும் வேலைப்பாட்டுடன் திகழ்ந்திருக்க வேண்டும் என்று சில செப்புப் படிமங்களிலிருந்து அறியலாம். விஜயநகர மன்னர்களது முடிகள் நீண்டு நான்கு புறங்களிலும் பட்டையான தங்கத் தகட்டுடன் திகழ்ந்திருந்தன என்று கிருஷ்ண தேவராயருடைய சிற்பத்திலிருந்து காண்கிறோம். இவருடைய சிலைகள் தில்லை யிலும் உள்ளன. இதுபோன்றுதான், பின்னர் வந்த நாயக்க மன்னர்களின் முடிகளிலும் காணப்படுகின்றன. இன்றும் ஸ்ரீரங்கத்தில் அரையர் என்பார் சூடும் முடி போன்றவை அவை. இருப்பினும் திருமலை நாயக்கரின் முடி. மேல்நுனியில் ஒருபுறம் வளைந்து காணப்படுகிறது. மேலும், நல்ல பொன்னும் பட்டும் முத்துக்களும் இரத்தினங்களும் இழைத்துச் செய்யப்பட்டு விளங் குவதைக் காண்கிறோம். திருமலை மன்னர் தாம் அணிவது போன்ற முடி ஒன்றை மதுரை அங்கயற்கண்ணி ஆலயத்திற்கு அளித்தது இன்றும் உள்ளது''[1] என வருங்குறிப்பும் பண்பாட்டு அடிப்படையில் சிந்திக்கத்தகும். சிற்பத்தில் காணலாகும் அணி கள் பற்றி விளக்கமுற்படின் விரிந்து செல்லும்.

45. சிற்பவுலகில் சிம்மம் பெறும் சிறப்பு:

உலக இயற்கையில் சிங்கம் அல்லது சிம்மம் எனும் விலங்கு உடலுறுதிக்கும் வல்லமைக்கும் வீரத்துக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அதனைக் காண்கையில் பல விலங்குகளும் அஞ்சியோடுதலால் அதனையே உலகியலில் 'காட்டுராஜா' என்று வழங்கி வருகின்றனர். காட்டிற்கு அரசாகச் சிங்கம் விளங்குதல் போல, நாட்டுக்கு அரசாக விளங்குபவன் (மன்னன்) பகைவர் களைப் புறங்காண்பதில் நாட்டங் கொள்வான். தன் பார்வையி லிருந்து கொண்டு பெருமிதவுணர்ச்சியைத் தூண்டும் வகையில் மன்னன் தான் அமர்ந்து ஆட்சி செய்தற்குரிய ஆசனத்தில்

1. யாவரும் கேளிர், வாசகர் வட்டம் (சென்னை, 17), 1973, பக். 31

சிங்கத்தின் உருவத்தை அமைத்துச் **சிங்காதனம்** அல்லது **சிம்மாசனம்** எனக் கொண்டான்; அதனைத் தமிழில் அரியணை என்பர்.

பொதுவாகச் சிம்மவுருவத்தைச் சிற்பத்தில் அமைக்கையில் சுருங்கிய நெற்றியும், வளைத்த புருவமும், உருண்டு மிரட்டுங் கண்களும், பிளந்த வாயும், கோரைப் பற்களும் மடித்த உதடும், அடர்ந்த பிடரிமயிரும் தலையிலே முறைப்படி அமைப்பர். உடலின் உறுதிப் பாட்டினை நன்கு புலப்படுத்தும் வகையில் வாகாகத் திரண்டு பருத்த தசைப்பற்றும், புடைத்த நரம்புகளும், சிறுத்த வயிறும், முறுக்கிய வாலும் புலப்பட அமைப்பர். சிம்மத்தின் அமர்ந்த அமைப்புக்கும் நின்ற நிலைக்கும் சிற்சில வேறுபாடுகள் உண்டு.

ஆராய்ச்சி நோக்கில் சிம்மவுருவத்தைக் காண்கையில் சிற்சில கேள்விகள் எழலாம். உலகில் உலவும் சிங்கத்துக்கும் சிற்பவுலகில் அமைக்கப்படும் சிங்கத்துக்கும் ஏதோ ஓரளவு வடிவ வொற்றுமை காணப்படும். எனினும், பெருமளவு மாறு பட்டிருப்பதும் தெரியும். சிற்பத்தில் உருவாகும் சிம்மம், அரியணையிலோ கோயில் தூணிலோ காணும்போது இதனைக் கற்பனையுருவம் என்று கூறவும் துணிவர். உண்மை யாதெனில், சிற்பியெனுங் கலைஞன் இவ்வடிவத்தில் உடற்சாயலை அல்லது உடற்கூறுகள் சிலவற்றைக் காட்டிய நிலையில், கலைக் கற்பனை யுடன் சிங்கத்தின் வீரத்தையும் பகைமீது சீறும் சீற்றவுணர்ச்சியை யும் அவற்றாலான தோற்றப் பொலிவையும் காட்ட முனை வான். இதுபற்றிச் சிந்திக்கும் **சிற்பி கணபதி ஸ்தபதி**, "வீரத் தையும், (பிற விலங்குகளுக்குப்) பய உணர்ச்சியையும் வலியுறுத்த வேண்டியிருப்பதால் **'சிம்மத்தின் கால்களில் புலி நகங்களை வைத்துக் காட்டுக'** என ஒரு சிற்ப நூல் சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய வீர வடிவத்தில் எத்தனை அழகுதான் காட்டப் பட்டுள்ளது! சோகத்திலும், கோபத்திலும், பயத்திலும் இன்னும் பல்வேறு உணர்ச்சிகளிலும் புற அழகையும் சுவைபட அமைத்துக் காட்டிய நமது சிற்ப மரபை என்னென்று புகழ்வது"!1 எனக் கூறிச் செல்வது காண்க.

1. திருக்கோயில் (திங்களிதழ்) பிப்பிரவரி, 1974, பக். 227

தத்துவ நோக்கிலும் சிம்மவுருவத்தைச் சிற்பத்தில் காட்டியுள்ளனர். கோயில் கருவறைச் சுவர்ப்புறக் கோட்டத்தில் **ஆலமர் செல்வன்** திருவுருவத்தைச் சில இடங்களில் சிறிது வெளிக் கொணர்ந்து காட்டியிருப்பர்; அந்நிலையில் பீடத்தைத் தாங்கும் வகையில் சிம்ம வடிவச் சிற்பங்களை அமைப்புடன் அழகாகக் காணலாம். தவயோகியாகிய இறைவனுக்குப் புற வலிமை கட்டுப்பட்டு அடங்கிக் கிடக்கும் என்பதாகிய இதன் தத்துவத்தைக் குறிப்பாக உணரலாம்.

கோயில் விழாக்களில் பயன்படுத்தும் **சிம்மவாகனத்தில்,** சிற்பச் சிறப்பை நன்கு புலப்படுத்தும் சிம்மத்தினும் வலிமை கொண்ட ஆளியைச் சிற்பத்தில், காட்டுகையில் கலைக் கற்பனை மிகுதியாக அமைந்திருக்கும்.

திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகிய **நரசிம்மாவதாரத்தைச்** சிற்பத்தில் காட்டுகையில் சிம்மத் தலையமைப்பை எவ்வாறெல்லாம் காட்டியுள்ளனர் என்பதைப் பல திருக்கோயில்களில் உற்று நோக்கித் தமிழ்நாட்டுச் சிற்பத்திறனைப் போற்றிடலாம்.

45.1. சிம்மக்கேணிகள்:

கடிய தோற்றத்துடன் பெரிய சிம்மம் தன் வாயைப் பிளந்து கொண்டு அமர்ந்திருப்பது போன்ற அமைப்பினைக் கொண்டது சிம்மக்கேணி அல்லது சிம்மக் கிணறு ஆகும். முன்னங்கால்களுக்கிடையே நுழைவாயில் அமைந்திருக்கவும், அதன் வழியே உட்பக்கத்தில் படிப்படியாக இறங்கிக் கேணிநீரை அடையவுமான உத்தியுடன் கூடியது இது.

சுதைச்சிற்பத்தாலான ஆளரி அல்லது சிம்ம அமைப்பு அக்காலக் கலைவண்ணத்தைப் புலப்படுத்தக் கூடியதாகும். **கங்கை கொண்ட சோழபுரத்திலே,** கோயிலின் முன்புறத்தே இடப்பக்கத்திலும், **கும்பகோணம் நாகேசுவரர் கோயிலின்**

முன்புறத்தே வலப்பக்கத்திலும் சிம்மக்கேணிகள் அமைந்திருத்தலைக் காணலாம்; வாயிலில் கதவுகள் உண்டு; பூட்டிப்பாதுகாக்கும் வசதியுண்டு

கோயிலிலுள்ள தெய்வச் சிலைகளின் அபிடேகத்திற்குத் தேவையான நீரைச் சிம்மக்கேணிகளிலிருந்து எடுத்துக்கொள்வர் என்பது தெரிகிறது இக்கேணிகளிலிருந்து நீரைப்பயன்படுத்திக் கொள்ளாத காரணத்தால் இவை பாசிபிடித்துக் காணப்படுகின்றன; இவை அமைக்கப்பட்டதன் நோக்கம் இக்காலத்தில் ஏனோ நிறைவேறவில்லை!

46. 'சாமரம்' (சாமரை) இடங்கொண்ட சிற்பங்கள்

பண்பாட்டு நோக்கில் பல செய்திகளைத் திரட்டுகையில் சிந்தித்துப் போற்றுதற்குரிய பல பொருள்கள், கலையனுபவச் சூழலில் தென்படும். சமயம், அரசியல் ஆகியவற்றின் தொடர்புடனும் சில பொருள்களைச் சிந்திக்க வேண்டிய நிலையும் ஏற்படும்.

வாழ்வியலில் மங்கலப் பொருள்களுக்கென ஒரு வகைத் தனிச் சிறப்பு இருந்து வந்துள்ளது. அதிலும், **அட்டமங்கலம்** என்பதற்குத் தனிமதிப்பு இருந்து வந்துள்ளதை இலக்கியமும் கலை வரலாறும் எடுத்துக் காட்டுகின்றன.

அட்டமங்கலப் பொருள்களாகக் **கண்ணாடி**, **பூரணகும்பம்**, **இடபம்**, **இரட்டைச் சாமரம்**, **சுவஸ்திகம்**, **சங்கு**, **தீபம்**, **ஸ்ரீவத்சம்** என்பவை உள்ளன. இவற்றுள் **'சாமரம்'** தொடர்பான சிற்பங்கள் குறித்துச் சிறிது காண்போம். இது பற்றி ஆராய்ந்துள்ள அறிஞர் **கி. ஸ்ரீதரன்** எழுதுகையில், ''முற்காலச் சிற்பங்களில் இறைவன் தலைக்கு மேலே இருபுறமும் சாமரை இருக்கும். இது போன்ற அமைப்பைச் சோழர்காலச் சிற்பங்களில் அதிகமாகக் காணலாம். தஞ்சைப் பெரிய கோயிலில் திருமகள் கலைமகள் ஆகிய இரு சிற்பங்களின் அருகில், இருபுறமும் இருபெண்கள் நின்று கொண்டு சாமரம் வீசுவது போன்ற சிற்பங்கள் அழகுற உள்ளன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கலைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

காஞ்சிபுரத்தில் கைலாசநாதர் கோயிலில் **சக்தியின் சிற்பம்** ஒன்று உள்ளது. அன்னையின் அருகில் சாமரை வீசும் பெண்கள் இருக்க, ஆனந்தமோன நிலையில் இருக்கும் அன்னையாக அவள் காட்சி தருகிறாள்.

இவ்வாறு சாமரை வீசும் பெண்கள் **'சாமர தாரிணிகள்'** என்று அழைக்கப்பட்டனர். சமண **தீர்த்தங்கரர்** சிற்பங்களிலும் இருபுறமும் சாமரதாரிணிகள் உருவம் காணப்படுகின்றன''[1] என விளக்கமாகக் குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது.

சாமர தாரிணிகளைக் **'கவரிப் பிணாக்கள்'** என்றும் அழைத்துள்ளனர் என்பதும், அவர்களுக்கு மன்னர்கள் தானம் வழங்கியுள்ளனர் என்பதும். இறைவனுக்குச் சாமரை வீசும் நோக்கத்தில் தங்கப்பிடியமைத்த சாமரம் திருச்சாத்துறைக் கோயிலுக்கு வழங்கப்பட்டது என்பதும் கல்வெட்டுகளால் புலப்படுஞ் செய்திகள். இவற்றை மனத்துட் கொண்டு **'சாமரம் இடங்கொண்ட சிற்பங்களை'**க் காண்கையில், பண்பாட்டுப் பதிவுகள் நன்கு தெளிவாகும்.

கலை ஒப்பீட்டு நோக்கில், சிற்பியர்களை விட **ஓவியர்களே** சாமரம் வீசுதலை நிரம்பப்பொருட்படுத்திப் பயன் கொண்டு உள்ளனர் என்பதையும் நினைவிற் கொள்ளலாம்.

47. உடற்பயிற்சிச் சிற்பங்கள்:

ஆன்ம நலத்துக்குப் பயன்படும் சமயச் சார்பான சிற்பங்கள் ஆலயங்களில் பலவாகக் காணப்படுவது இயல்பே; எனினும், உடல்நலத்துக்குப் பயன்படும் உடற்பயிற்சிச் சிற்பங்களும் சில ஆலயங்களில் காணப்படுகின்றன.

ஆவுடையார்கோயில் மண்டப விதானத்தில் உடற்பயிற்சிச் சிற்பம் வட்டவடிவமாகக் காணப்படுகிறது. இரு ஆடவர்கள் உடம்பை வளைத்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் தம் இரு கால்களையும் இரு கைகளால் பற்றிக் கொள்ளும் தோற்றத்

1. கலைமகள் (திங்களிதழ்), அக்டோபர், 1963

துடன் காணப்படுவர். மேலும், ஒருவர் இடக்காலை மற்றொருவர் இடக்காலால் சேர்த்து நிற்க, அந்தக் காலை மற்றொருவர் கையால் பற்றிக் கொள்ளும் வகையிலும் காணப்படுவர். இதே போன்ற உடற்பயிற்சிச் சிற்பம், குடந்தையருகேயுள்ள **பட்டீசுவரம்** ஆலயத்திலும் (கி.பி. 1542இல் கட்டப்பட்டது) காணப் படுகிறது.

திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் சேஷாரயர் மண்டபம் நாயக்கர் காலக் கற்சிற்பக் களஞ்சியம் என்பது பலரும் அறிந்ததே. அங்கு வட்ட அமைப்பில் இரு மகளிர் தம் உடம்பை வளைத்த வண்ணம் ஒருவர் கையை மற்றொருவர் கையோடு பிணைத்துக் கொண்டு காணப்படுகின்றனர்; மேலும், ஒருவர் இடக்காதை மற்றொருவர் தம் வலக்காலால் பிணைத்துக் கொண்டும் உடற்பயிற்சி செய்யுந் தோற்றத்தில் உள்ளனர். நாயக்கர் காலக் குதிரை வீரர் தூண்களுள் ஒன்றில் வேறொரு தோற்றத்துடன் உடற்பயிற்சிச் சிற்பத்தைக் காணலாம். வயிற்றை மேலே காட்டிய வண்ணம் இருவர் வளைந்த நிலையில் கைகளைத் தரையில் ஊன்றிக் கொண்டுள்ளனர்; அவர்களின் இருவர் வயிற்றின் மீது வேறொருவர் வளைந்துகொண்டு உடற்பயிற்சி புரிகின்றார்; அஃதாவது, ஒருவரது வயிற்றில் காலை ஊன்றிக் கொண்டும், மற்றொருவரது வயிற்றில் கையை ஊன்றிக் கொண்டும் உடற்பயிற்சி செய்கின்றனர். இவை போன்ற உடற்பயிற்சிச் சிற்பங்களை ஆராய்ந்து பார்க்கையில் மிகப்பலவாகக் காணலாம்.

கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயில் நவராத்திரி மண்டபத் தூண்களில் நிலத்தில் கையை ஊன்றிய வண்ணம் ஒருவர் தம் கால்களை இடப்புறத்தும் வலப்புறத்தும் சுழற்றிக் காட்டும் சிற்பத்தைக் காணலாம். மேலும், சில உடற்பயிற்சிச் சிற்பங்கள் அங்கு உள்ளன.

48. தண்டனை புலப்படுத்துஞ் சிற்பங்கள்:

கலைப்புரவலர்களாகிய மன்னர்கள், கலைஞர்களுக்கும் பணியாளர்களுக்கும் ஊக்கந்தரும் வகையில் வாரிவழங்கியுள்ளனர்; எனினும், தவறுசெய்தாலும் கொடுந்தண்டனை

யளித்துத் தம் நேரிய ஆட்சித் திறனைப் புலப்படுத்தியுள்ளனர். தண்டனை வழங்குவதைச் சிற்பத்திலும் வடிக்கச் செய்துள்ளனர் என்பது பண்பாட்டுக் குறிப்பாகும்.

கண்கவர் சிலைகளை உருவாக்கும் சிற்பிகளுக்குத் **திருமலை நாயக்கர்** புதுமையான முறையில் கூலி வழங்க இருப்பதாக அறிவித்தார். கருங்கல்லைச் செதுக்கும்போது எவ்வளவு தூள் விழுகிறதோ அதனை ஒரு துணியில் முடித்துக் கொண்டு, சிற்பி கொணர்ந்தால் அந்த மூட்டையைத் தராசில் வைத்து நிறுத்து, எடைக்கு எடை **தங்கக்கட்டிகளை** வழங்க முற்பட்டார். இதனை அறிந்ததும் சிற்பியர்க்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது; தத்தம் திறமையைக் காட்ட முனைந்தனர். இதுபற்றித் **தி. செல்லப்பா** எழுதுகையில், "ஒவ்வொரு சிற்பியும் முழுமூச்சாக வேலையில் ஈடுபட்டனர். இதில் மூன்று பேருக்குப் பேராசை வந்துவிட்டது. அவர்கள் வீட்டிலிருந்து வரும்போதே கொஞ்சம் கல்தூளை அள்ளிக்கொண்டு வந்தனர். அத்துடன் வேலை செய்த தூளையும் சேர்த்துக் கட்டிக் கூலி வாங்கி விட்டனர். திருமலை நாயக்கருக்குச் சந்தேகம் வர உடனடியாக மாறு வேடத்தில் வந்து சோதனையிட்டுத் தவறு செய்தவர்களைக் கண்டு பிடித்தார்.

அவர்களைக் கைதுசெய்து கடும் தண்டனை விதித்தார். ஒரு குழிதோண்டி அதற்குள் மூன்று பேரையும் இறக்கிக் கழுத்துவரை மண்ணால் மூடி யானையின் காலால் அவர்களின் தலைகளைத் தட்டச் செய்து அவர்களைக் கொன்றார். இந்த நிகழ்ச்சியையும் சிற்பமாக வடிக்கச் செய்தார்"[1] என விளக்கிச் செல்வது சிந்திக்கத்தக்கது.

மேற்கூறிய தண்டனையால், திருமலை நாயக்கரின் உயிருக்கு உயிரான சிற்பச் செல்வத்தை வடிக்குஞ் சிற்பியே யானாலும், தவறு செய்தால் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பது நன்றாகப் புலனாகும். தண்டனை வழங்கும் நிகழ்ச்சிச் சிற்பத்தைச் **சுசீந்திரம் கருட மண்டபத்தில்** இன்றும் காணலாம்.

1. *தினமலர் தீபாவளிமலர், 1991, பக். 32*

நாயக்க மன்னரின் நீதிக்கு அறிகுறியாகத் தராசு ஒன்றையும் அந்தச் சிற்பத்தூணில் செதுக்கச் செய்துள்ளமை அக்காலப் பண்பாட்டு அடையாளமாகும். இதே கோயிலில், வேறொரு மன்னரும் பணியாளன் ஒருவனுக்குத் தண்டனை விதித்துள்ளதைச் சிற்பமாக வடிக்கச் செய்துள்ளார். **பாலமார்த்தாண்ட வர்மா ராஜா காலத்தில்** கள்ளக் கணக்கு எழுதிய குற்றத்திற்காக ஒரு மனிதரின் கையைத்தொடையில் வைத்து அதில் ஆணி கொண்டு அடித்துவிட்டனர். இதுவும் சிலையாக வடிக்கப்பட்டு இந்தக் கோயிலில் வைக்கப்பட்டிருக்கிறது''[1] என வரும் அரிய குறிப்பினைக் காண்க.

தமிழக ஆலயங்களில் தொடர்ந்து கள ஆய்வு செய்தால் இத்தகைய அரிய கலைச் செல்வங்கள், பண்பாட்டு நோக்கில் பலவாகக் கிடைக்கும் எனலாம்.

49. தியாகமுத்திரைப் புலப்பாட்டுச் சிற்பங்கள்:

போர்க்களத்தில் வீரம் விளைவித்து மாண்ட தியாக வீரர்களைப் போற்றும் விதத்தில் **நடுகல்** நடுவதும் வழிபடுவதுமாகிய குறிப்புக்கள் இலக்கியத்தில் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் இத்தகைய நடுகற்கள் பலவாகத் தொல்பொருள் இயலார் கண்டுபிடித்துள்ளனர். இஃது ஒரு புறமிருக்கப் பல வகைகளிலும் தியாக வீரத்தைப் புலப்படுத்திய நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் சில சிற்பங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதை வாயிலாகச் **சதுக்கப் பூதத்துக்குத்** தம்மையே பலியிடும் வீரமறவர்கள், ''பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி''த் தம் தலையையே அரிந்து வைத்துள்ள நிகழ்ச்சி பற்றி அறியலாம். அவ்வாறான **தியாக நோக்கத்தில்,** ''முற்காலத்திலே **கொற்றவைக்குத் தலைப்பலி இடுவது** வழக்கமாக இருந்திருக்கிறது. **இதனைச் சிங்கவரம்,** மாமல்லை, **திருப்பரங்குன்றம்** முதலிய இடங்களிலுள்ள **குகைக்கோயிற் சிற்பங்களில் காணலாம். இச்சிற்பங்களில் இறைவனின் இருமருங்**

1. தினமலர் தீபாவளிமலர், 1991, பக். 32

கிலும் ஆடவர் இருவர் சிற்பங்கள் காணப்படுகின்றன. அவர்களுள் ஒருவர் தமது தலையினை அரிந்து இறைவிக்குப் பலியிடுவதாகக் காணப்படுகின்றார். 'நவகண்டம் கொடுத்தல்' என்பது உடலிலுள்ள ஒன்பது பகுதிகளிலிருந்து தசையினை அரிந்து இறைவிக்கு நேர்த்திக்கடன் செலுத்துவதாகும். கம்பவர்மன் என்னும் பிற்காலப் பல்லவ அரசன் காலக் கல்வெட்டொன்று, ஒக்கண்ட நாகன் ஒக்கதின் தன்பட்டி போத்தன் என்பான் கொற்றவைக்கு நவகண்டமும் தலைப்பலியும் கொடுத்தான் எனக்கூறுகிறது. கொற்றவைக்குத் தலைப்பலியிடும் வழக்கம் சோழர் காலத்திலும் இருந்ததைக் கலிங்கத்துப் பரணியில் காணலாம்,''[1] என வருங்குறிப்பினைக் காண்க.

50. வெற்றிக்கு அறிகுறியாகக் கலைப்பொருள்களைத் தம் நாட்டிற்குக் கொணர்தல்:

சங்கம் மருவிய காலத்துக் காப்பியமான சிலப்பதிகாரத்தில், வடபுலத்து மன்னர்களிடமிருந்து திருமாவளவன் கொணர்ந்த பொருள்களை, இளங்கோவடிகள்,

> ''மாநீர்வேலி வச்சிர நன்னாட்டுக்
> கோன்இறை கொடுத்த கொற்றப்பந்தரும்
> மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன்
> பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்
> அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
> நிவந்தோங்கு மரபில் தோரணவாயிலும்
> பொன்னினும் மணியினும் புனைந்தன வாயினும்
> நுண்வினைக் கம்மியர் காணாமரபின''[2]

எனக்கூறிக் காட்டுதலைக் காணலாம். இந்த வழக்கம் மன்னர்களிடமும் வழக்கமாகப் போற்றப்பட்டது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நரசிம்மவர்ம பல்லவன் பகைப்புலத்தே சென்று வாதாபியை வென்ற நிலையில் பரஞ்சோதியின்

1. கோயிலும் இறைவழிபாடும் [டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன்], பக். 21 & South Indian Inscriptions, vol. 12. No. 106
2. சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை, 99-106

(சிறுத்தொண்டரின்) துணையுடன் அங்கிருந்து கொண்டு வந்ததே **விநாயகர் சிலை** என்பது வரலாற்றால் கிடைக்குஞ் செய்தியாகும்.

முதலாம் இராசராசனின் தலைமைப் பெருந்தேவியான **உலோகமாதேவியால்** கட்டப்பட்ட அழகிய தென்கயிலாயமாகிய திருவையாறு பல சிறப்புக்களைக் கொண்ட ஆலயம்; அங்குள்ள சில தூண்களும் வரலாற்றுச் சிறப்பினைக் கொண்டவை. "இந்தத் தென்கயிலாயத் **திருச்சுற்று மாளிகைத் தூண்கள் நுளம்பபாடியிலிருந்து சோழர்களால் கொண்டு வரப்பட்டவை யாகும்.** இத்தூண்கள் நுளம்பர்களது கலைத்திறனையும், தஞ்சைச் சோழர்களின் வெற்றிச் சிறப்பினையும், கலையார்வத்தையும் உணர்த்துகின்றன."[1] என்று **V. கந்தசாமி** எழுதிச் செல்வது சிந்தித்துப் போற்றுதற்குரியது.

பகைப்புலத்திலிருந்து கோயிலுக்கு அணிசெய்த **துவாரபாலகர்** சிலைகளைத் தம் நாட்டுக்குக் கொணர்ந்து, தாம் கட்டும் கோயில்களில் அலங்கரித்த நிகழ்ச்சிகளும் உண்டு.

மேலைச்சாளுக்கியருடன் கொண்ட தொடர்பால் சோழர்கள் தாம் அமைத்த கோயிற் சிற்பங்களில் அவர்களின் சிற்பக்கலைக் கூறுகளை ஏற்றுப் போற்றியுள்ளனர் என்பது வரலாற்று அறிஞர்களின் கருத்து. தாராசுரத்தில் அச்சுறுத்தும் வகையில் பெருங்கதாயுதத்துடனும், தலையில் கொம்புகளுடனும், சிங்கத்தலை போன்ற மாதிரி (design)யுடன் திரிசூலத்தையும் அலங்காரமாகக் கொண்ட தலைமுடியுடனும் துவாரபாலகர் காட்சியளிப்பர். மாலை போன்று அலங்கரிக்கும் **யக்ஞோபவீதமும்** சாளுக்கியரின் கலைத்தாக்கத்தினைப் புலப்படுத்தும்,"[2] என்பர் **சி. சிவராமமூர்த்தி.**

---

1. தமிழ் நாட்டின் தல வரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும், பக். 158

2. The garland decoration of their yajnopavita again recalls chalukya influence-The chola temples. Page, 32.

51. உலகினர்க்குப் பாடம் புகட்டும் சிற்பங்கள்:

1- ஆவுடையார் கோயில் (திருப்பெருந்துறை) வளாகத்தில் **தியாகராச மண்டபம்** என்ற பெயரில் ஒரு மண்டபம் உள்ளது. அங்கு மாணிக்கவாசகரின் திருக்கோலங்கள் சிற்ப அமைப்பில் இரண்டு உள்ளன. **ஒன்று**, அரிமர்த்தன பாண்டியனுக்கு **அமைச்சராகப் பணிபுரிந்த நிலையிலமைந்த கோலம்; மற்றொன்று அவரது** துறவுக் **கோலம்**. ''அந்தக்கோலத்தில் (அமைச்சர் கோலத்தில்) தானே அவர் இங்கு முதல் முதல் வந்திருக்கிறார். மன்னனுக்கு உரிய கிரீடம் கூட அவர்தலையை அலங்கரிக்கிறது. காதிலே குண்டலங்கள், மார்பிலே ஆரம், கைகளிலே அணிகள் எல்லாம் அணிந்து கம்பீரமாக நிற்கிறார். இதற்கு எதிர்ப் புறமோ, அவரது துறவுக்கோலம், எல்லா அணிகளையும் பணிகளையும் உதறிவிட்டுக் கூப்பிய கையராய் நிற்கிறார். இந்த வடிவில் தானே இறைவன் திருவடியில் நிலைத்து நின்றிருக்கிறார் அவர்''[1] எனச் சுவைபட மணிவாசகரின் இருவேறு பட்ட கோலங்களைச் சித்திரித்துச் சொல்கிறார் **தொ மு. பாஸ்கரத் தொண்டைமான்.**

உலகியல் வாழ்வுக்கும் துறவற வாழ்வுக்குமுள்ள நல்லவேறு பாட்டினைக் கலைப்படைப்புக்களின் வாயிலாக மக்களுக்கு உணர்த்துகையில் மக்கள் புரிந்து கொண்டு நிலைபேறுடைய நன்னெறி தலைப்படுவார்கள் என்பது அருளாளர் கருதது.

வடநாட்டிலே பௌத்தராலயங்களில், புத்தருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கலைவாயிலாகச் சித்திரிக்கையில் அவரது பருவ வாழ்க்கையையும் துறவு வாழ்க்கையையும் அருகருகே காட்டிச் சென்றுள்ளதை இயைபுடன் ஈண்டு நினைவு கூரலாம்.

52. பதினாறுவகை தானச் சிற்பங்கள்:

தானத்தின் சிறப்பைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாகப் பலரும் அறிவர். தமிழ்நாட்டில் புராண-ஆகமத் தாக்கம் படிப்படியே ஏற்பட்ட நிலையில் **பதினாறுவகை தானம்** - சோடச

1. வேங்கடம் முதல் குமரிவரை [காவிரிக்கரையிலே] பக். 114.

மகாதானம்-என்பது மாமன்னர்களிடையே செல்வாக்கினைப் பெற்றது. **நிர்ணய சிந்து** எனும் வட மொழி நூல் சோடச மகாதானங்கள் பற்றிக் கூறுகிறது. "அவை கோதானம், பூமி தானம், படுக்கைதானம் (படுக்கை, விளக்கு, புட்பங்கள், பழம் ஆகியவற்றோடு), இரணியதானம் (தங்கம்), வெள்ளிதானம் தேர்தானம், கஜதானம் (யானை), அசுவதானம் (குதிரை), வத்திரதானம் (ஆடை), தானியதானம், இரத்தினதானம், வீடுதானம், கம்பளி தானம், கன்னியாதானம், அன்னதானம் (அறுசுவை உண்டி அளித்தல்), குடைதானம் என்பவை என விவரிக்கின்றது"[1] என வருங்குறிப்பினைக் காண்க. இத்தகைய தானங்களை மன்னர்களும் மக்களும் புரிதல் வேண்டுமென்பதற்காக ஓவியம் சிற்பம் முதலியவற்றின் வாயிலாக ஆலய வளாகத்தில் புலப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு தானத்தைப் பற்றிய நிகழ்ச்சியினை ஆலயத்தில் எங்கோ சிற்சில இடங்களில்தான் காணலாம். ஆனால், தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னன் **இரகுநாத நாயக்கன்** (கி.பி. 1600—1632), தானச்சிறப்பைப் புலப்படுத்தவே **குடந்தை மகாமகத் திருக்குளத்தை** அலங்கரிக்கும் வகையில் **சோடச மண்டபங்கள்** கட்டுவித்தான் இம்மண்டபங்களுள் வடமேற்குத் திக்கில் காணலாகும் **துலாபுருஷமண்டபம்** மிகப்பெரியதும் சிறப்பு வாய்ந்ததுமாகும். இம்மண்டபத்தில் தான் **இரகுநாத நாயக்கர்** துலாதானம் நல்கியதாகத் தஞ்சைச் சரசுவதிமகால் நூலக ஏட்டுச்சுவடிகள் கூறுகின்றன. "இத்தகைய தானங்களை (பதினாறு வகையான தானங்களை) இப்பெருமன்னன் மாமகத் தீர்த்தமாடி ஒவ்வொரு மண்டபத்திலும் அமர்ந்து வழங்கியதை இப்பதினாறு மண்டபத்து விதானங்களில் உள்ள சிற்பக் காட்சிகள் வாயிலாக அறியலாம்"[2] என வரும் அரிய குறிப்பு மனங்கொள்ளத்தக்கது.

53. பௌத்த, சமணச் சிற்பங்கள்—சிறப்புக்குறிப்பு:

ஒப்பியல் நோக்கில், இந்து மதத்துச் சைவசமயத் திருவுருவச் சிற்பங்களும், சமணமதத் திருவுருவச் சிற்பங்களும் (அருகப் பெருமான் திருவுருவம் முதலியவை) நின்ற வண்ணமாகவும்,

1. மகாமகம் [விழாக்குழுவினர்] சிறப்பு மலர், 1992
2. மேலது

அமர்ந்த வண்ணமாகவும் அமைக்கப்படுகின்றன. எனினும், அரியனவாக ஓரிரு இடங்களில் சிவபிரான் பள்ளிகொண்ட கோலத்தில் சிலைகள் உள்ளன; ஆனால், சமணச்சிற்பங்கள் **கிடந்த கோலத்தில்** அமையப்பெறுவதில்லை

இந்து மதத்து வைணவத் திருவுருவச் சிற்பங்களும் **நின்ற வண்ணமாகவும், அமர்ந்த வண்ணமாகவும், கிடந்த வண்ண மாகவும்** மூவகைக் கோலங்களில் அமைக்கப்பட்டு உள்ளன.

எனினும், சிவபிரான் திருவுருவங்களைத் தாண்டவக் கோலத்திலும் [நடராஜர் ஊர்த்துவ தாண்டவர் முதலியவை] திருமாலின் அவதாரத் திருவுருவங்களைக் கூத்தாடுங்கோலத் திலும் [குடக்கூத்து காளிங்கமர்த்தனம் முதலியவை] அமைப்பது உண்டு. ஆனால், அருகர் **புத்தர்** திருவுருவங்களைச் **சாந்தத்** திருவுருவத்தில் **காணலாமே** ஒழியக், **கூத்தாடும் கோலத்தில் காண இயலாது;** காரணம், அம்மதத்தவர்கள் **தவநிலையிலேயே அருகரையும் புத்தரையும்** அமைப்பதைக்கலை மரபாகக் கொண்டவர்கள்.

பொதுவாகச் சைவ, வைணவச் சமயங்களிலே பெரிய தெய்வங்களுக்கு ஆற்றல் மிகுதியென்ற நோக்கில் அவற்றிற்கு நான்கு முதல் இரட்டைப்படையில் பல திருக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன. சிறு தெய்வங்களுக்குப் பெரும்பாலும் இரண்டு கைகள் அமைக்கப்படும். மிகப் பழமையான சிவன் திருமால் திருவுருவங்களுக்கு இரண்டு திருக்கைகள் விதிவிலக்காக–அரிய நிலையில் — அமைக்கப்படுவதும் உண்டு. ஆனால், "அம்மன் திருவுருவம் தனியாக அமைக்கப்படும்போது, நான்கு கைகளை உடையதாக அமைக்கப்படுகின்றது. அதுபோலவே, திருமாலின் சக்தியாகிய **தாயார்** (இலக்குமி) திருவுருவம் திருமாலுக்குப் பக்கத்தில் அமைக்கப்படும்போது, திருமாலின் ஆற்றலுக்குக் குறைந்த ஆற்றலுள்ளவர் என்பதைக் காட்டுவதற்காகத் திருமகளுக்கு இரண்டு கைகள் மட்டும் அமைக்கப்படுகின்றன. திருமகள் திருவுருவம் தனிமையாக அமைக்கும்போது நான்கு கைகளை உடையதாக அமைக்கப்படுகிறது."[1] என்று மயிலை

1. கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழாமலர், 1961. பக். 102

சீனிவேங்கடசாமி ஆய்வடிப்படையில் கூறிச் செல்வது மனங் கொள்ளத்தக்கது.

இந்துமதத்தின் இத்தகைய அமைப்பிற்கு நேர்மாறாகப் பௌத்த சமணக் கோட்பாட்டின்படி, அவர்களின் முதல் தெய்வங்களாகிய புத்தர் அருகர் திருவுருவங்களுக்கு இரண்டு கைகளும், சிறு தெய்வங்களுக்கு மட்டும் நான்கு கைகளும் எட்டுக் கைகளுமாக அமைக்கப்படுகின்றன. இவ்வாற்றான் "பௌத்த மதத்தின் சிறுதெய்வமாகிய போதி சத்துவர் எனப்படும் அவலோகிதருக்கு நான்கு அல்லது எட்டுக்கைகள் உள்ளன"[1] என்று மயிலை. சீனி. வேங்கடசாமி எழுதுவதை இயைபுடன் சிந்திக்கலாம்.

சைவ, வைணவ நோக்கில் இந்திரன் சிறு தெய்வமாதலின் அவனுக்கு இருகைகள் மட்டும் சிற்பத்தில் இடந்தந்துள்ளனர்; பௌத்த, சமண நோக்கில் புத்தருக்கும் அருகருக்கும் இந்திரன் கீழ்ப்பட்டவனே; ஆதலின், அம்மதங்களின் மரபுப்படி இந்திரனுக்கு நான்கு கைகள் அமைந்துள்ளன.

53.1 புத்தரும் மகாவீரரும் - சிறப்புக் குறிப்பு:

பௌத்த மத நாயகராகிய போதிசத்துவரையும், சமணமதத் தீர்த்தங்கரர்களுள் ஒருவராகிய மகாவீரரையும் அமர்ந்த கோலத்திலே சிலைகளில் காண்பவர்கள் பலர், வேறுவகைப்படுத்திக் காணவியலாதவர்களாக உள்ளனர். புத்தர் சிலையில் முடியமைப்பையும், ஆடையமைப்பையும் காணலாம்; அருகர் சிலையில் மழித்த தலையமைப்பையும், பெரும்பாலும், ஆடையில்லாத அமைப்பையும் காணலாம்.

தமிழ்நாட்டில் பல இடங்களில் புத்தர் சிலைகளும் அருகர் சிலைகளும், காணக்கிடைக்கின்றன. சில சிலைகள் எங்குள்ள ஆலயங்களிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்டன என்பதும் அறிஞர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

தஞ்சைக் கலைக்கூடத்தில் காணலாகும் புத்தர்பிரான்சிலை தெய்வநலப் பொலிவு, தியானத்தாலும் சாந்தத்தாலும் விளைந்த

1. கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழாமலர், 1991, பக். 102

தாகும் முன்னொரு காலத்தில் மகா போதிமரத்து அடியில் **சித்தார்த்தர்** எந்நிலையில் தியானத்தில் அமர்ந்தாரோ, அந்நிலையைக் கற்பனையால் காணுமாறு இச்சிலை **அபராஜித** ஆசனத்தில் அமைந்துள்ளது. அபராஜித ஆசனம் என்பது, அந்த ஆசனத்தில் அமர்ந்துள்ளவரது வைராக்கியத்தை — உறுதிப் பாட்டினை — எவராலும் தோற்கடிக்க முடியாதவகையில் அமைந்ததாகும். சிலையிலமைந்த திருமுகப்பொலிவிற்காகச் சிற்பி, முதற்கண் நல்ல தியானத்தில் இருந்திருக்க வேண்டும் எனலாம்.

53.1 1. சமணச் சிற்பங்கள் - பழையன:

தமிழ்நாட்டில் வெவ்வேறு காலங்களில் பல்வகைச் சமயங் களும் கோட்பாடுகளும் தோன்றித் தத்தம் பங்கினை மக்களின் பண்பாடு குறித்து வழங்கியுள்ளன. அவற்றுள் சில சமயங்கள் இந்து மதத்தோடு இணைந்தன; சில சமயங்கள் சிதைந்தன. பண்டைக் காலத்தில் பாரத நாடெங்கும் பரவியிருந்த சமணக் கோட்பாடு, தமிழகத்திலும் செல்வாக்குடன் திகழ்ந்தது என்பது வரலாறு.

தமிழகத்தில் ஆங்காங்கு - காடுமேடுகளில் - காணப்படும் குடைவரை கோயில்களும் சமணர் பள்ளிகளும் சமண சமயத் தீர்த்தங்கரர் திருவுருவங்களும் சிறந்த வரலாறறுக்குச் சான்று களாக உதவுகின்றன.

இன்று **நாகர்கோயில்** எனப் பெயரிய **கோட்டாறு** முன்னொரு காலத்தில் சமணர்களின் சிறந்த பிரச்சாரக் கேந்திரமாக விளங்கியுள்ளது, அக்காலத்தில் சமணப் புலவர்கள் கூடித் தமிழ் வளர்த்த **'புலவர்சேரி'** என்பதே **'புரவச்சேரி'** யாக மாறியுள்ளது. நாகர்கோயில் நாகராசர் ஆலய அர்த்த மண்டபத் தூணில் **மகாவீரர் திருவுருவச் சிலை** தவஞான அமைதியுடன் காட்சி யளிக்கின்றது. மேலும், **பார்சுவநாதர், பத்மாவதி** ஆகியோரின் திருவுருவங்கள் காணக் கிடைக்கின்றன.

விளவங்கோடு வட்டத்தில் **சிதரால்** எனப்படும் **திருச் சாரணத்து** மலையின் **உச்சியில்** இயற்கையாக அமைந்த ஒரு

தொங்குபாறையின் அடியில் சமணக் குகைக்கோயில் ஒன்று உள்ளது. "அக்கோயிலின் வடக்கே அமைந்துள்ள பாறையில் இரண்டு வரிசைகளாகச் சமணத் துறவிகளின் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன"[1] என வருங் குறிப்பினைக் காண்க.

பழநித் தலத்துக்கு மேற்கே பத்துக்கல் தொலைவில் ஐவர் மலை உள்ளது. கல்வெட்டுச் சான்றுகளால் இஃது ஒரு காலத்தில் சமணர்களின் உறைவிடமாக இருந்து வந்துள்ளது தெரிய வரும். சமணத் தீர்த்தங்கரர்கள் பதினாறு பேருடைய சிலைகள் பழங்கால வரலாற்றுச் சின்னங்களாகத் தொங்கு பாறைக் கண் காணப்படுகின்றன. ஐவர்மலை என்றதும், கற்பனைக்குப் பேர் போன சில தமிழர்கள் பஞ்சபாண்டவர்கள் தம் வனவாசத்தின் பிற்பகுதியில் அஞ்ஞாதவாசம் செய்த இடம் என்று கூறி வருகின்றனர்.

முன்னொரு காலத்தில் மயிலாப்பூர் கடற்கரையருகே (இப்போதுள்ள செந்தோம் சர்ச்சு இருக்குமிடத்தில்) இருந்தது நேமிநாதர் கோயில்; "பிறகு, ஒரு காலத்தில், கடல்நீர் இக்கோயிலை அழித்து விடுமென்று அஞ்சி இக்கோயிலில் இருந்த அருகக் கடவுளின் திருமேனிகளைச் சித்தாமூர் என்னும் ஊரில் கொண்டுபோய் வைத்திருக்கிறார்கள்"[2] என்றும், "தோமையார் கோவிலுக்கு எதிரிலுள்ள அனாதைப் பிள்ளைகள் விடுதியில் பல ஆண்டுகளுக்கு முன்னே சமணக் கடவுள் உருவங்கள் இருந்தன என்று ஆர்க்கியாலஜி அறிக்கை கூறுகிறது. இதன் அருகிலுள்ள கன்னிப்பெண்கள் மடத்தில் ஒரு பெரிய சமணத் திருவுருவம் இருந்ததாயும், அது இப்போது அவ்விடத்தில் புதைக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது"[3] என்றும் மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிச் செல்வது காண்க.

செங்கை அண்ணா (செங்கற்பட்டு) மாவட்டம் உத்தரமேரூரில் சுந்தரவரதப் பெருமாள் கோவிலில் ஆதிநாதர் (இருஷபதேவர்) திருவுருவம் இருத்தலைக் காணலாம். இங்கு முற்காலத்தில் சமணர் ஆலயம் இருந்திருக்க வேண்டும்.

1. தினமலர் - தீபாவளி மலருடன் இணைப்பு, 1994, பக். 444
2 & 3. சமணமும் தமிழும், பக். 99 (with reference to PP. 74 & 175, Antiquities of St. Thome and Mylapore)

இதே மாவட்டம் **ஆனந்த மங்கலத்தில்** (ஒலக்கூர் புகை வண்டி நிலையத்திலிருந்து 8 கி.மீ.) கற்பாறையில் சமணத் திருவுருவங்கள் காணப்படுகின்றன; இவ்வுருவங்களின் நடுநாயகமாக உள்ளது **ஆனந்த தீர்த்தங்கரரின்** திருவுருவம். "இத் தீர்த்தங்கரரின் பெயரே இவ்வூருக்கும் பெயராக அமைந்திருக்கிறது. ஆநந்த தீர்த்தங்கரருக்கு ஒரு யக்ஷி குடைபிடிப்பது போன்றும். மற்றொரு யக்ஷி சாமரை வீசுவது போன்றும் அமைக்கப்பட்டுள்ளது,"[1] என்று எழுதிச்செல்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி.

பெரிய **காஞ்சிபுரத்தில்** ஒரு தோட்டத்தில் சமணத்திருவுருவம் இருக்கிறது. "பெரியகாஞ்சிபுரத்துக்குப் போகும் பாதையில் ஒரு சமணத் திருவுருவம் இருக்கிறது. காமாட்சியம்மன் கோவிலின் இரண்டாவது பிராகாரத்தில் சமண உருவங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. யதோத்காரி பெருமாள் கோயிலருகில் ஒரு சமணவுருவம் இருக்கிறது."[2] என்ற குறிப்பும், 'விஷார்: இதுவும் மாகறலுக்கு அருகிலுள்ள ஊர், இங்கும் சிதைந்துபோன சமணத் திருவுருவங்கள் காணப்படுகின்றன,"[3] என்ற குறிப்பும், வடஆர்க்காடு சம்புவராயர் மாவட்டம் **காவனூரு** எனும் ஊரில் சமணத் திருவுருவங்கள் காணப்படுகின்றன[4] என்ற குறிப்பும். **குகை நல்லூர்** (குடியாத்தம் வட்டம்) எனும் சிற்றூரில் சமண உருவங்கள் உள்ளன[5] என்ற குறிப்பும், தமிழ் நாட்டில் பல இடங்களில் சமணத் திருவுருவங்கள் காணக் கிடைப்பதைப் புலப்படுத்தும்.

சமணச் செல்வாக்கு மிகுதியாக இருந்த ஊர்களுள் **பொன்னூர்** (அழகிய சோழ நல்லூர்—வடஆர்க்காடு சம்புவராயர் மாவட்டம்). இவ்வூரில் ஆதிநாதர் கோயில் உள்ளது. இக் கோயிலில் உள்ள **ஜுவாலா மாலினி அம்மன்** (இயக்கி) பேர் போனது.[6]

---

1 சமணமும் தமிழும். பக். 100

2,3. மேலது, பக். 101

4. மேலது, பக். 104

5. மேலது, பக். 105

6. மேலது, பக். 113

53.1.2. சமணச் சிற்பங்கள் — புதியன:

தமிழ்நாட்டில் வணிகம், தொழில், வட்டிக்கடை முதலிய நோக்கங்களுடன் குடியேறிய சமணப் பொருட் செல்வர்கள் ('ஜெயின்' முதலிய மார்வாரிகள்), தம் வழிபாட்டிற்காகச் சமணக் கோயில்களைக் கட்டியுள்ளனர். சென்னையிலும், அதனையடுத்த புழல் முதலிய இடங்களிலும், திருப்பாதிரிப் புலியூரிலும் சமணக் கோயில்கள் சிலவற்றைக் காணலாம்.

"திருவல்லிக் கேணியிலுள்ள (3, பி.வி. நாயக்கர் தெரு) சமணர் கோயில் மிக்க புகழ் பெற்றதாக உள்ளது. இது சென்னை நகரிலுள்ள புதிய சமணர் கோவிலாகும். இக்கோவில் 1980 ஆம் ஆண்டு (பிப்ரவரி, 8) வழிபாட்டிற்குத் திறக்கப் பட்டது. இக்கோவில் சமண சமயத்தின் முதல் தீர்த்தங்கரரான **ஆதிநாதருக்காக** அமைக்கப்பட்டதாகும். ஆதிநாதரின் திரு வுருவம் அருகில் **சாந்திநாதர், மகாவீரர்** என்ற இரு தீர்த்தங்கரர் களின் திருவுருவங்களும் உள்ளன. மகாவீரரின் முக்கிய சீடரான **கௌதமி சுவாமியின்** சிலையும் இக்கோவிலில் உள்ளது சமணத் திருவுருவச் சிலைகள் யாவும் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள **மக்ரானா** என்னுமிடத்திலிருந்து கொண்டு வரப்பட்ட சலவைக் கற்களால் ஆனவை; இக்கோவில் அவற்றால் கட்டப் பட்டுள்ளது"[1] என்று வருங்குறிப்பு மிகவும் பண்பாட்டுநோக்கில் மனங்கொள்ளத் தக்கது.

53.2. தலை சாய்ந்த புத்தரும் திருநாமம் தரித்த புத்தரும்:

200 ஆண்டுகளுக்கு முன்பு, சேலம் வட்டாரத்தில் பௌத்த மதம் மிகத் தழைத்தோங்கியிருந்தது. பல இடங்களிலும் புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டு வழிபாட்டில் இருந்தன. சமயப் பூசல்கள் காரணமாகப் பௌத்த மதம் நிலைகுலைந்ததும், புத்தர் சிலைகளும் பல மாற்றங்களுக்கு உட்பட்டன; சில சிலைகள் கேட்பாரற்ற நிலையில் சிதைவுக்குள்ளாயின. இது காலத்தின் கோலம்!

1. தமிழ் நாட்டில் தல வரலாறுகளும் பண்பாட்டுச் சின்னங்களும், பக். 50-51

மாற்றங்களுக்குட்பட்ட இரு சிலைகள் பற்றிக் காண்போம். சேலம் நகரின் நடுப்பகுதியில் 'கோர்ட்டு' வளாகத்திற்கு எதிரே அரசமரமும் வேப்பமரமும் பின்னிப்பிணைந்த - ஒரு பழைய கட்டடத்தின் கீழே - ஒரு முனியப்பன் கோயில் காணப்படும். புத்தர் சிலையை முனியப்பனாக மக்கள் வழிபட்டு வருகின்றனர். அங்குள்ள பூசாரிவாயிலாகக் கிடைத்த கர்ணபரம்பரைச் செய்தி வியப்பளிக்கும்.

முன்னொரு காலத்தில் சேலம் வட்டாரத்திலே பல இடங்களில் புத்தர்சிலைகள் அழகுற அமைக்கப்பட்டன; அக்காலத்தில் மன்னர்கள், புத்தர் சிலைகளின் உள்பகுதியில் உண்டியல் போல ஓட்டை போட்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது பிற நாட்டினரின் படையெடுப்பு நிகழும்போது, தங்களைப் பலப் படுத்திக் கொள்ளவும் ஒரு வேளை பின்னடைவு நேரும்போது எதிர்த்தாக்குதல் நடத்தவும் பொருள்வசதிக்காக இவ்வாறு திட்டமிட்டனர்; அதன்படி, புத்தர் சிலைகளுக்குள்ளே விலையுயர்ந்த வைர வைடூரியங்களையும் பொன் அணிகலன்களையும் போட்டு மறைத்து வைத்தனர். இவ்வாறு உண்டியல் போலப் பயன்படுத்தப்பட்ட சிலையே இங்கு உள்ளது.

இந்தச் சிலைக்குப் பின்னால் 'தலைதிருக, தனம் கிடைக்கும் என்ற வாக்கியம் உள்ளது இதைத் தெரிந்து கொண்ட யாரோ ஒருவர், சிலைக்குள் இருந்த செல்வத்தையெல்லாம் திருடிச் சென்று விட்டாராம்!

''எப்ப ஒரு சிலையோட தலையை வெட்டிட்டோமோ அப்பவே அதோட பரிணாமம் மாறிப்போகுதுணு ஐதீகம் ஏற்படுத்த, இதை முனியப்பனாகப் பெயர் மாற்றம் பண்ணிட்டாங்க; இப்ப என்னான்னா புத்தரா பாவிச்சு அமைதி வழிபாடும் நடக்குது; முனியப்பனா நெனைச்சு ஆடுகோழிப் படையலும் நடக்குது. இது யார் மாத்தினது, எப்படி மாறிச்சுன்னெல்லாம் எங்களுக்குத் தெரியாதுங்க''[1] என்று பூசாரி கூறுவது சிந்திக்கத் தக்கது.

---

1. ஆனந்த விகடன் [வாரவிதழ்] 15-10-1995

உயிர்க்கொலையையும் புலால் புசிப்பையும் வெறுத்த **புத்தரே.** இவ்வாறு முனியப்பனாக மாறிய நிலையில் உயிர்க் கொலையையும் புலால் படையலையும் ஏற்பவராகச் செய்த மக்களின் பண்பாட்டை என்னவென்று கூறுவது? இஃது ஒரு புறமிருக்க **ஆறகலூரில** (சேலத்திலிருந்து தம்மம்பட்டி செல்லும் வழியில் 17ஆவது கி.மீ.) புத்தரைப் பெருமாளாக்கித் திரு நாமமும் சார்த்தியிருப்பது வியக்கத்தக்கது. இவ்வளாகத்தில் **'அண்ணன் புத்தர்', 'தம்பி புத்தர்'** என இரு சிலைகள் உள்ளன.

அண்ணன் புத்தர் பற்றி விளக்குகையில், ''கோயிலின் உள்ளே நுழைந்து பார்த்ததும் வியந்து விட்டோம், கிட்டத் தட்ட ஆறரை அடி உயரமும் ஆறடி அகலமும் கொண்ட பிரம் மாண்டமான சிலை அது; மேலே பட்டுத்துணி போர்த்தப்பட்டு. நெற்றியில் பெருமாள் நாமம் சார்த்தப்பட்டிருந்தது கோயிலின் பக்க வாட்டுப்பகுதி முழுக்கவே செழிப்பாய்ப் பட்டு வஸ்திரங் கள்! அக்கம் பக்கத்தில் விசாரித்த போது ஆளுக்கொரு கதை சொன்னார்கள்''[1] என்றும், ''குங்குமம், புஷ்ப பூசையில் தொடங்கிப் பெருமாளுக்கான சகல தெய்வ காரியங்களும் செய்யப்படுகின்றன அண்ணன் புத்தருக்கு!

தம்பியின் (தம்பி புத்தரின்) நிலைதான் பரிதாபம்! ஊரை விட்டு ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்; வயல்காட்டின் நடுவே சிதில மாய் இருந்தது அந்தச் சிலை! புத்தரை மையமாகக் கொண்டு வளர்ந்திருந்தன செடி கொடிகள்.... பக்கத்திலே போகாதீங்க, எதுனா கெடுதல் வந்தாலும் வரும் என்று பயங்காட்டினார்கள் பக்கத்து மக்கள்''[2], என்றும் வருகின்ற குறிப்புக்களைக் காண்க.

கள ஆய்வு (field work) புரிந்து, செய்திகளைத் திரட்டினால் இவ்வாறு பல வியப்புறு புத்தர் சிலைகள் பற்றிய கதைகள் கிடைக்கும். திருச்சி, தஞ்சாவூர் மாவட்டப்பகுதிகளில் பல புத்தர் சிலைகள் புதையலாகப் புதைந்து கிடைத்தலைக் காண லாம் என ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுவதை ஈண்டு இயைபுடன் நினைவிற் கொள்ளலாம்.

1&2. ஆனந்த விகடன் [வார விதழ்], 15-10-1995

அருங்காட்சியகங்களில் காணலாகும் புத்தர் கற்சிலைகள் போதிசத்துவர் உலோகத் திருமேனிகள் ஆகியவற்றைக் கண்டு பௌத்தர்கள் தொடர்பில் சிற்பக் கலைப் பண்டுபாட்டுக் கூறுகளை அலைஅலையாக நினைவிற் கொள்ளலாம்.

54. தமிழ்த்தாய்-திருவுருவச் சிலை:

சரசுவதியாகிய கலைமகள், **நாமகள் நாமடந்தை வா(க்)கீசுவரி** எனப் போற்றப்படுதலால், **மொழிக்கென** ஒரு தெய்வம் தனியே அமைக்க வேண்டுமென்பது பற்றி நம் முன்னோர் தீவிரமாகச் சிந்திக்கவில்லை எனினும், மொழிப்பெருமையை மிகச்சிறப்புடன் மக்களுக்கு உணாத்தும் வண்ணம் பிற்காலச் சான்றோர்கள் **'மொழித்தெய்வம்'** எனக் கூறலாயினர் அவ்வாற்றான் **தெய்வகலைத்** தமிழையும் இனிது போற்றும் வகையில் **'தமிழன்னை'**. **'தமிழ்த் தெய்வம்'** எனப் போற்றத் தலைப்பட்டனர். நற்சிந்தனையின் விளைவாகக் **கற்பனைக் களஞ்சியம் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,**

''மறைமுதற் கிளந்த வாயான்
மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி
இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை
அனைத்தும்வென் றாரி யத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
உள்நினைந் தேத்தல் செய்வாம்''

என்று பாடித் துதித்தார். இவருக்குப் பின்னர்த் தோன்றிய தமிழ்ச் சான்றோர்கள் சிலர், தமிழ்த் தெய்வ நினைப்புடன் தம் அஞ்சலியைச் செலுத்தியுள்ளனர். சில எடுத்துக் காட்டுகளைக் காண்போம்.

மனோன்மணியம் பாடியருளிய **சுந்தரம் பிள்ளை,** நாட்டெல்லைச் சிறப்புடன் மூவாப் பெருமொழியாக விளங்கிடும் தமிழின் ஏற்றத்தை, ''எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே'' என மொழிந்து போற்றி நிற்கிறார்; தமிழ்த்

தாய் வாழ்த்தாக அமைந்த அவர்தம் இரு பாடல்களும் தமிழர்களால் போற்றுதற்குரியவை.

கவிவளஞ் செறிந்த **தவயோகி சுந்தானந்த பாரதியார்**, சிறந்த தமிழ் நூல்களை அணிகலன்களாகவும், சூளாமணியைப் பொன் முடியாகவும், திருக்குறளைச் செங்கோலாகவும் கொண்டு இலங்குகின்ற தமிழ்த் தாயை வாழ்த்தி மகிழ்கிறார்; இதனைக்'

"காதொளிரும் **குண்டலமும்,** கைக்கு **வளை**
யாபதியும், கருணை மார்பின்
மீதொளிர்சிந் **தாமணியும்**, மெல்லிடையில்
மேகலையும். **சிலம்பார்** இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும, பொன்முடி
சூடாமணியும், பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் **திருக்குறளைத்**
தாங்குதமிழ் நீடு வாழ்க"

என வரும் பாடலால் கண்டு இன்புறலாம்.

செயல்முறையில் கலைப்படைப்பின் வாயிலாக மக்கள் கண்டு மகிழும் வண்ணம், காரைக்குடி கம்பன் கழகத்தைத் தோற்றுவித்த இலக்கியப்பெருஞ் சுவைஞர் **கம்பனடிப்பொடி சா. கணேசன்,** தமிழ்த்தாயின், திருவுருவத்தைத் தம் கற்பனைக் கேற்ப முதற்கண் ஓவியமாகத் தீட்டச் செய்தார்.

மதுரையில் சிறப்பாக நடைபெற்ற **ஐந்தாம் உலகத்தமிழ்மா நாட்டை** யொட்டிய காலச் சூழலில், தமிழறிஞர்கள் **பலரைக்** கூட்டிச் சிந்திக்க வைத்தும், அவர்கள் தம் கருத்தைத் தனிப் பட்ட முறையில் புலப்படுத்தச் செய்தும் தமிழ்த்தாயின் திருவுருவத்தை முதற்கண் ஓவியமாகத் தீட்டச் செய்தார் **கலைமாமணி டாக்டர் ஆறு. அழகப்பன்.** பிறகு, அவரே தமிழ்த் தாயின் திருவுருவத்தை அரிதின் முயன்று **சிற்பமாகவும்** **வடித்து** மகிழ்ந்தார். அந்தச் சிற்பப்படைப்பில், **இருக்கை** — இயல் இசை நாடகம் ஆகியவற்றையும் மூவேந்தர்களின் இலச்சினைகளாகிய **புலி வில் கயல்** ஆகியவற்றையும் கொண்டது; அணிந்துள்ள மாலை **குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல்** மலர்களால்

ஆனது; அபயகரத்திலுள்ள **அ·ன்,** தமிழில் முதல் எழுத்து **'அ'வும் இறுதியெழுத்து 'ன்'** என்பதுவும் தமிழையும் தமிழறிவையும் சுட்டும்; திருக்கையிலுள்ள **ஏடு,** இலக்கிய வளர்ச்சியைக் குறிக்கும்; **அணிகலன்கள்,** தமிழ்ப்புலவர்கள் சூட்டிய இலக்கிய இலக்கணம் முதலிய நூல்களைக் குறிக்கும்; உடுத்தியிருக்கும் சேலையிலுள்ள அன்னக் **கரை,** குறை நீக்கிக் குணங்கொள்ளும் அன்னம்' என்பதன் அறிகுறி; கன்னித்தமிழையுணர்த்தும் (இளமைத் தோற்றத்துடன் கூடிய) கருங்கூந்தல் தெரியுமாறு திருமுடியமைப்பு; **தாமரையில்** வைத்துள்ள ஒரு **திருவடி,** மனத் தாமரையில் பொருந்தும் தமிழ் நலங்குறிக்கும் என விளக்கங் கொள்ளலாம்.

இஃது ஒரு புறமிருக்கக், **காரைக்குடியில் கம்பன் மணிமண்டபத்திலே தமிழ்த்தாய்க் கோயிலைக் கட்டித் தமிழ்த்தாய்ச் சிலையை** (நான்கு திருக்கைகளுடன்) 16—4—93 வெள்ளியன்று நிறுவியுள்ளமை குறிக்கத்தக்கது; மேலும், **'தமிழ்த்தாய்ப் பிரபந்தம்'** எனும் நூலும் வெளியிட்டுள்ளமை நோக்கத்தக்கது.

6 அ. சிற்பக்கலை - பண்பாட்டுக் கூறுகள்

(அரிய சிறப்புக்கலைப் படைப்புக்கள்)

முத்திரையுரை: தமிழகத்தில் காணலாகும் வியக்கத் தகு சிற்பங்களும் நயத்தகு உலோகத் திருமேனி களும் பிறவும்-சிறப்புப்பார்வை:

'சிற்பக்கலை — பண்பாட்டுக் கூறுகள்' எனும் தலைப்பிலே சமயம், மெய்ப்பொருளியல், கலைத்திறன், வாழ்வியல் மரபு முதலிய பல கோணங்களில் பல செய்திகளையும், வியத்தகு கலைப்படைப்புக்களையும் கண்டு வருகிறோம். ஆலய வளாகங் களிலும் பிற இடங்களிலும் ஆயிரக்கணக்கில் அழகிய சிற்பங் களாகவும் செப்புத்திருமேனியாகவும் மரச்சிற்பங்களாகவும் மண்டிக் கிடக்கும் இந்தப்புண்ணிய பூமியிலே, இவற்றை யெல்லாம் விளக்கத்துடன் அளவிட்டுக் கூறவியலாது என்பதை நன்குணர்வேன். எனினும், கலையார்வலர்கள் ஆர்வமுடன் ஆராய்ந்து கண்டு காட்டிய வழியிலே சென்று, என்னாலியன்ற மட்டும் சிலவற்றை — இயைபுடன் வியத்தகு சிற்பக்கலைப் படைப்புக்களை — ஓரளவு விளக்கமுடன் கூறமுயன்றேன். மேலும், சமயநோக்கிலும் சுற்றுலா நோக்கிலும் காணத்தக்க அரிய சில கலைப்படைப்புக்களைப் பிற்சேர்க்கையாகவும் வழங்க எண்ணினேன்; அதன் விளைவே இந்தப் பகுதியாகும்.

விரிந்து பரந்து சிந்தித்தவாறே கலையனுபவங் கொள்ளும் வகையில் அமைந்துள்ள இந்தக் கலைப்பரப்பைப் பற்றி. மேலும் ஈண்டு ஒரு குறிப்பினைத் தருவது பொருத்தமாகும். அஃதாவது, இராமாயணம், வில்லி பாரதம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், கந்த புராணம், காஞ்சிப் புராணம், தல புராணங்கள் முதலியவற்றைக் கொண்டும், ஆதியுலா, கலிங் கத்துப்பரணி, குமரகுருபரர் — சிவப்பிரகாசர் பிரபந்தங்கள் முதலிய சிற்றிலக்கியங்களைக் கொண்டும், சைவத் திருமுறைகள், திவ்வியப் பிரபந்தம் முதலிய பக்திப்பனுவல்களைக் கொண்டும், பாரதியார் பாடல்கள் முதலியவற்றைக் கொண்டும் ஆராய்ந்து பார்த்தால், சிற்பியர்களின் இலக்கியப் பயிற்சியும் கற்பனைத்

திறனும் கைகோத்துச் சென்ற கலைப்பாங்கு இனிது புலப்படும்.

எடுத்துக் காட்டாகக் **கண்ணப்ப நாயனாரின்** முதிர்ந்த பக்திப்படையல் பற்றிச் **சிறிது** காண்போம்.

வேடர் கண்ணப்பரின் படையலைச் சித்திரிக்கும் நிகழ்ச்சியைத் **தஞ்சைப் பெரிய கோயில் இரண்டாம் திருவாயிலின் துணைந்தளத்தில்** அரிய சிற்பப் படைப்பாகக் காணலாம். பெரிய புராணத்துக் கண்ணப்பர் கதைக்கும் இங்குள்ள சிற்ப அமைப்புக்கும் வேறுபாடுகள் உள்ளன. இறைவனது பசியைத் தணிக்கத் **திண்ணனார், பன்றியிறைச்சியைப்** பக்குவப்படுத்தித் தேக்கிலையில் கொணர்ந்ததற்குப் பதிலாக இங்குள்ள சிற்பக் காட்சியில், அவரது கையில் உடும்பு இருப்பது தெரியவரும். இது பற்றி நன்கு ஆராய்ந்து கண்டுபிடித்த கலையார்வலர் டாக்டர். இரா. **கலைக்கோவன்,** "இராஜராஜர் திருவாயில் சிற்பங்களிலே, காளத்திநாதர் முன்நிற்கும் கண்ணப்பர் கையில் **தேக்க இலையில்லை; உடும்பு மட்டுமே காணப்படுகிறது.**

உடும்பையா கண்ணப்பர் இறைவனுக்கு உணவாகத்தந்தார் என்ற **கேள்வி** எழுந்தது. கண்ணப்பர் பற்றிய இலக்கியங்களையெல்லாம் புரட்டியபோது நக்கீரதேவரின் **திருக்கண்ணப்ப தேவரின் திருமறத்தில்** கடும்பகல் வேட்டையில் காதலித்து அடித்த உடும்போடு, சிலை (வில்), கணை (அம்பு), உடைத்தோல், செருப்பு தொடர்ந்த நாயோடு, கண்ணப்பர் சிவலிங்கத்தின் முன் தோன்றியதாகத் தெரிகிறது.

இந்த வர்ணனையை அப்படியே பின்பற்றிச் செய்யப் பட்டிருக்கிறது ராஜராஜன் திருவாயில் கண்ணப்பர் சிற்பம்"[1], என்று ஒருவாறு அமைதி காண்கிறார்.

எப்படியோ கண்ணப்பரின் அன்பழுத்தச் சிறப்பினைச் சைவவுலகு போற்றி வருவதால். பல சிவன் கோயில்களில் கண்ணப்பர் சிலை—தம் கண்ணைப் பெயர்த்து இறைவன்

1. 'ஓம்சக்தி'-13 ஆம் ஆண்டுத் தொடக்க இதழ், பிப்ரவரி, 1995, பக். 28

கண்ணீல் அப்புங்காட்சியுடன் வடிக்கப்பட்ட சிலை—அமைந் திருப்பதைக் காணலாம். இதனை மிகநேர்த்தியாகப் போற்றும் விதத்தில், **தில்லைச் சிதம்பரம் கனகசபையில்** கிழ்ப்புறப் படிக் கட்டிலிருந்து காணும் வகையில், பொன்வேய்ந்துள்ள விமா னத்தின் கீழ்த் தூண்கள் மேல் பாவிய விட்டத்தில் காணலாம். தூண்போதிகைப்பகுதியில் தெற்கு நோக்கிய வண்ணம், திண்ண னார் தம் கண்ணை இடந்து இறைவனுக்கு அப்ப முனைகையில் சிவலிங்கத்திலிருந்து இறைவன் தோன்றுங்காட்சியும், மார்க் கண்டேயருக்காகச் சிவலிங்கத்திலிருந்து இறைவன் தோன்றிக் காலனை வதைக்குங் காட்சியும் அழகுறச் சிற்ப எழிலுடன் காட்டப்பட்டுள்ளன.

இங்குக் கண்ணப்பரை இவ்வாறு அமைக்கும் போது, ''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்'' எனும் **மணிவாசகர்** திருவாக்கினை (திருக்கோத்தும்பி), நினைவிற் கொண்டு சிற்பி இதனை வடித்திருப்பானோ என நினைக்கத் தோன்றும். இவ்வாறெல்லாம் சிற்பக் கலைப்படைப்புக்கள் அலையலையாகப் பல சிந்தனைகளை யெழுப்பும் வண்ணம் தமிழ்நாடெங்கும் நிரம்பப் பரவிக் கிடைக்கின்றன. கலையார்வ நோக்கில், அவற்றுள் சிலவற்றையேனும் மக்கள் கண்டு, நம் பண்பாட்டு மரபுச் செல்வத்தின் (Cultural heritage) பெருமையைப் போற்றுவார்களாக! வியத்தகு கலைப்படைப்புக் களுள் சிலவற்றை ஈண்டுத் தருவது ஒருவகையில் பின்னிணைப் பாகவே கொள்ளலாம். எப்படியோ **'தமிழ்ப் பண்பாட்டு வரலாறு'** வரையறுத்துக் கூறவியலாத ஓர் உயிரோட்டமுள்ள ஆன்மநலக் கலைக்களஞ்சியம்- நல்ல வாழ்வியல் பதிவேடு- என்பதை உணர்ந்து கொண்டால் சரி.

I வியக்கத்தகு கற்சிற்பங்கள்:

1. திருச்சத்திமுற்றம் இறைவித்திருவுருவம்:

கோயிலினுள் நுழைந்ததும் முன் மண்டபத்திலே தெற்கு நோக்கி யமைந்துள்ள இறைவி பெரிய நாயகியைச் சன்னிதியில் காணலாம். முகமண்டபத்தில் நடராசர் சன்னிதியின் முன்னும் கிழக்கு நோக்கிய நிலையில் தழுவக் குழைந்த இறைவனது

திருமுன்னும் அமைந்துள்ள சிற்பத்திருவுருவம் கலைநேர்த்தி கொண்டது. "தழுவக் குழைந்த இறைவனின் திருமுன்னில் இறைவி இலிங்கத் திருமேனியை அணைத்தாற்போல் இருக்கிறார். இந்தத் திருமுன்னின் உட்சுவரில் இறைவி ஒற்றைக்கால் தவக் கோலம் காணப்படுகிறது. மெய் சிலிர்ப்பு ஏற்படுத்தும் இவ்வருள் வடிவம் தமிழரின் கடவுட்காதல் மரபுக்கொரு கற்காவியமாகும்!" என்று 'கலை வளர்த்த திருக்கோயில்" எனும் நூலில் பூரிப்புடன் கூறி நிற்பார் இரா. கலைக்கோவன்.

2. திருவண்ணாமலை அர்த்த நாரீசுவரர்:

திருவண்ணாமலைத் திருக்கோயிலில் அருணாசலேசுவரப் பெருமான் அன்னை உண்ணாமுலையம்மையைத் தம் இடப் பாகத்தில் கொண்டு அர்த்த நாரீசுவரராகத் திகழ்கின்றார். கருவறையில் மூலவராகச் சிவலிங்கத் திருமேனி காணப்படினும், செப்புத் திருமேனியில் அர்த்த நாரீசுவரராகவே திகழ்கின்றார். இத்தகைய அர்த்தநாரீசுவரர் திருவுருவத்தை இத்தலத்திலன்றி வேறு எத்தலத்திலும் காண இயலாது என்பர்.

3. திருக்கண்டியூர் அர்த்த நாரீசுவரர்:

திருக்கண்டியூர்த் திருக்கோயில் திருச்சுற்றாலையில் கீழ்ப் புறமாக **அர்த்தநாரீசுவரர் திருவுருவம்** காணலாம். "ஆகம விதிகளின் படி இந்த வடிவம் நின்ற நிலையில் தான் அமைக்கப்பட வேண்டும். ஆனால், இங்கு இந்த வடிவம் உட்கார்ந்த நிலையில் உருவமாக்கப்பட்டுள்ளது முக்கியமான வேறுபாடாகும். சிவ பெருமானின் ஊர்தியான காளையும் உட்கார்ந்த நிலையில் உள்ளது. 4 கைகள் கொண்ட வடிவின் முன் வலக்கை பின்னால் உட்கார்ந்துள்ள காளைமீதும், பின் வலக்கையில் சிவபெருமான் என்பதற்கேற்ப மழுவும் உள்ளன. இடப்பாதி அன்னை; எனவே, முன் இடக்கையில் பூ அமைக்கப்பட்டுள்ளது. பின் இடக்கையில் உள்ள பொருள் சரியாகத் தெரிய வில்லை. வலக் காதில் குழையும், இடக்காதில் தோடும் காணப்பட மார்பின் இடப்பாகத்தில் கொங்கை உள்ளது. இடக்கால் குத்திட்டும் வலக்கால் தொங்கிய நிலையிலும், அஃதாவது இந்த வடிவம்

உத்குடி இருக்கையில் காணப்படுகின்றது. உட்கார்ந்த நிலையிலுள்ள ஆணொடு பெண்ணாகிய வடிவம் காண்டற்கு அரிய ஒன்றாம்''[1] என்று தி. இராசமாணிக்கம் விளக்கிச் செல்வது காண்க.

4. திருக்கொடுங்குன்றம் பைரவர்:

வரலாற்றுப்புகழ் கொண்ட பாரி ஆண்ட பறம்புமலை, கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருக்கொடுங்குன்றம் என அழைக்கப் பெறலாயிற்று. பாடல் பெற்ற திருத்தலமாகிய அங்குள்ள மங்கை பாகர் திருக்கோயிலும் மிகச் சிறப்புச் செல்வங்கள் நிறைந்தது. நின்ற திருக்கோலத்தில் நான்கு திருக்கைகளுடன் எழுந்தருளியுள்ள பைரவரின் வலத்திருக்கைகளில் சூலமும் உடுக்கையும், இடத் திருக்கைகளில் நாகபாசமும் காலமும் கொண்டுள்ளன. புனுகும் வடைமாலையும் மக்களால் சாத்தி வழிபடப்பெறும் இந்தச் சக்தியுள்ள தெய்வம் 'க்ஷேத்திரபாலகர்' என அழைக்கப் பெறுதலைக் காணலாம்.

பைரவர் திருக்கோயிலுடன் இணைந்து விளங்கும் விசுவநாதர் ஆலயத்தின் முகமண்டபத்திற்கு மேற்கே குடைவரைக் கருவறையைக் காணலாம். கருவறைக்குள் குடைவரையைச் செதுக்குங்காலத்திலேயே பாறையில் செதுக்கி உருவாக்கிய திருமேனிகள் – அம்மையும் அப்பனும் திருமணக் கோலத்தில் எழுந்தருளிய வியத்தகு அருட்காட்சி தெய்வநலக்கலை மாட்சியைப் புலப்படுத்தும். இந்தக் கயிலைக் காட்சிச் சிறப்பினாலேயே இத்தலம் 'தென்கயிலாயம்' எனப் போற்றப் படுகின்றது.

5. சங்கரன்கோயில் சங்கரநாராயணர்:

இந்தத் திருவுருவம் சிறந்த மூர்த்திகரம் வாய்ந்த கலைப் படைப்பாகும். வலப்பக்கம் சிவசொரூபமும் இடப்பக்கம் திருமால் சொரூபமும் அமைந்த இந்த ஒரே சிலையில், சிவபாகம் வெளுப்பாகவும் திருமால் பாகம் கார்மேக வண்ணமாகவும்

1. எண்பெரும் விரட்டத்தலங்கள், பக். 12

இருத்தலைக் காணலாம். இது பற்றிக் கா. சந்தாமுத்து அருச்சகர் கூற்றாக விளக்குகையில், "நாமக்கல்லில் நரசிம்ம சிலாரூபத்தின் கைகளில் ரத்த வண்ணத்தைக் கல்லிலே கொண்டு வந்த சிற்பி, இங்கே ஆழிநிறத்தையும் ஆகாச நிறத்தையும் அற்புதமாக இணைத்திருக்கிறார்.

பாருங்கள்! சிவ பகுதியிலே தலையில் சடாபாரம், விஷ்ணு பகுதியிலே தலையிலே பாதிகிரீடம்; சிவன் நெற்றியில் கண், விஷ்ணு நெற்றியில் திலகம்; காதில், சிவன்—சர்ப்பராசன், விஷ்ணு—மணிகுண்டலம்; சிவன் கழுத்தில் நீலம் (ஆலகாலவிடம்), விஷ்ணுவுகருக் களங்கமற்ற கழுத்து; நெற்றியில் சிவபகுதியில் பாதி விபூதிபூச்சு, விஷ்ணு பகுதியில் பாதி களபகஸ்தூரி; இடுப்பில் சிவன் புலித்தோலாடை, விஷ்ணு பீதாம்பரம்; பாதத்தில் சிவபகுதி சர்ப்பகடகம், விஷ்ணுபகுதியில் நூபுரம்; கையில் சிவபாகத்தில் மழு, விஷ்ணுவுக்குச் சங்கு; மார்பில் சிவனுக்கு உருத்திராட்சமாலை, விஷ்ணுவுக்குத் துளசி மணிமாலை; சிவபாகக்கை சிம்மகர்ணம், வலப்பாகக் கையில் ஒரு மாற்றம்; எல்லா விஷ்ணு சிலைகளுக்கும் வலக்கை தான் அபய ஹஸ்தமாக இருக்கும். அது தான் ஆசிர்வாத மரபு, இங்கே வலக்கையைக் காட்டமுடியாததால் அருள்பாலிப்பானாகக் காட்ட வேண்டி விதிவிலக்காக இடக்கையை அபய ஹஸ்தமாகக் காட்டியிருக்கிறார்கள்,"[1] என்று எழுதிச் செல்வது நோக்கத்தக்கது.

('அர்த்தநாரி' — பற்றிய குறிப்புக்கள் மிகப் புதிராக உள்ளன. அவை பற்றிப் பண்பாட்டு நோக்கில் ஈண்டு இயைபுடன் சிந்திக்கலாம் இதுபற்றி ஆராய்ந்த பேராசிரியர் டாக்டர் இராசு காளிதாசு, "சோழர் காலக்கோயில்கள் சிலவற்றில் மார்பகம் வலப்பக்கம் தோன்றுவது தனிச்சிறப்பாகும் இவை கரந்தை, திருவையாறு, திருவேதிகுடி, திருமழபாடி கோயில்களில் கருவறையின் தேவகோட்டத்தில் பொருத்தப்பட்டுக் காணப்படுகின்றன.......

அர்த்தநாரி என்பது அடிப்படையில் தமிழகத்தைச் சார்ந்த பெண்தெய்வம் என்றும், இது பின்னர்க் காலத்தின் சோலத்தால்

1. ஓம்சக்தி-தீபாவளிமலர், 1992, பக். 245

வடமொழி சாத்திரங்களின் தாக்கத்தால், ஆணாக மாற்றப் பட்டது என்றும் முடிவுக்கு வந்துள்ளது தஞ்சைத் தமிழ்ப்பல் கலைக்கழகச் சிற்பத்துறை''[1] என்று இலக்கிய ஆதாரங்களுடன் எழுதியுள்ளமை காண்க.

இந்த ஆராய்ச்சியில், ''ஒரு முலை குறைத்த திருமா உண்ணி'' எனும் நற்றிணைக் குறிப்பும் (216), சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியாகிய பத்தினிக் கடவுளும், அர்த்த நாரிக்குத் துணைபுரியும் ஆதாரங்களாகும்)

6. புதுமுறையிலமைந்த நவக்கிரக பீடம்:

முதலாம் இராசேந்திரன் காலத்தில் கட்டப்பெற்ற கங்கை கொண்ட சோழீச்சரத்தில் ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றைச் சக்கரத்தேரில், சூரியபகவான் எழுந்தருளிய நிலையில் நடுவிருக்க வுள்ள நவக்கிரக பீடம் மிகுந்த கலைச் சிறப்புடையதாகும். அதே போன்ற சிற்ப நேர்த்தியுடன் கூடிய நவக்கிரக பீடம் கோயம்பேடு (பூவிருந்தவல்லிக்குப் போகும் வழியில் சென்னை யிலிருந்து பத்துக் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது) குசலவ புரீசுவரர் ஆலயத்தில் காணலாம்.

அழகான கற்பீடத்தின் மீது தாமரை மலராசனத்தில் சூரிய பகவானின் ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றைச் சக்கரத் தேர் பாய்ந்தோடும் பாவனையில் அமைக்கப்பட்டுள்ளது. சூரியனைச் சுற்றிலும் கீழே மற்ற கிரகங்கள் தத்தம் வாகனங் களுடன் காட்சி தருகின்றன. பீடத்தைச் சுற்றிலும் இராசிச் சக்கரங்கள் பக்கவாட்டில் செதுக்கப்பட்டிருக்கின்றன.

7. திருவாரூர் எம சண்டீசர்:

திருவாரூர்த் தியாகேசர் பூங்கோயிலில் காணப்பெறும் எமசண்டீசர் வேறெங்கும் காணமுடியாத வகையிலமைந்த வியத்தகு சிற்பமாகும். ''வடக்குப் பிராகாரத்தில் யம சண்டீசர் என அழைக்கப்படும் திருவுருவம் சடாமுடி, தாடியுடன் உள்ளது,

1. கோபுரதரிசனம்-திங்களிதழ். மே, 1993, பக். 25

இஃது ஓர் பல்லவர் காலக் கருங்கற் படைப்பாகும். முன்பு யமனாக — பரிவாராலய தேவதையாக — இடம் பெற்றிருந்த இத்திருவுருவம் தற்போது யமசண்டீசர் என்ற பெயரில் அழைக்கப் படுகிறது''[1] என்று வருங்குறிப்பினைக் காண்க.

8. கொடுங்கலூர் கண்ணகி சிலையும் க்ஷேத்திர பாலர் சிலையும்:

இக்காலக் கேரளமாகிய பண்டைய சேரநாட்டுப் பகுதியிலுள்ளது **கொடுங்கலூர்** பகவதி (காளி) **கோயில்**. ஆதி சங்கரர் ஸ்ரீசக்கரம் பிரதிட்டை செய்த மூர்த்திகரமுள்ள இத் தலத்தில், பத்தினித் தெய்வமாகப் போற்றப்படும் **கண்ணகியின்** திருவுருவச் சிலையைக் காணலாம். **சேரன் செங்குட்டுவனால்** இமயத்திலிருந்து கொண்டு வரப்பட்டுக் கங்கையாற்றில் நீர்ப் படை செய்யப்பட்ட சிறப்பினைக் கொண்டது இத்திருவுருவம் எனப் பலரும் கருதுகின்றனர். தாருகாசுரனை (மகிடாசுரனை) வதஞ்செய்த பெருமை இந்தப் பகவதியம்மனுக்கு உண்டு. காளி கோயில்களில் காண இயலாத 12 அடி உயர **க்ஷேத்திர பாலர் உருவச் சிலை** இங்குப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

தெய்வாமிசம் கொண்ட இக்கோயிலில் கண்ணகியை வழி படும் பழக்கம் பல ஆண்டுகளாக உள்ளதை அறியலாம்.[2]

9. திருவக்கரை முகலிங்கம்:

திருமூலர் திருமந்திரம் ஏழாந்தந்திரத்தில் அண்டலிங்கம் முதலிய ஆறுலிங்கங்களின் சிறப்பினை முன்னரே கண்டோம். ஆனால், இவற்றிலே ஒன்றாக எண்ணப்படாத மும்முகலிங்கமாக ஞான லிங்கம் **திருவக்கரையில்**(திண்டிவனத்திலிருந்து 20 கி. மீ.) உள்ளது இதன் சிறப்பினை எழுதுகையில் **எம். ஜெகதீசன்**, ''திருவக்கரை யில் முகலிங்கம் மூன்று முகங்களுடன்—கிழக்குநோக்கிய **தற்புருட முகம்**, தெற்கே **அகோரமுகம்**, வடக்கே **வாமதேவம்** ஆகத்—திரு நீறு அணிந்த திருக்கோலத்தில் தென்னாடுடைய சிவன் இங்கே

1. திருவாரூர்த் திருக்கோயில் (குடவாயில் பாலசுப்பிரமணியன்). பக், 58-59
2. அம்மன் தரிசனம் (திங்களிதழ்), ஜனவரி 1996, பக் 15

அருள்பாலிக்கிறான். அதிகாலையில் தற்புருடமுகத்தை **மஞ்சள் பூசியும்,** உச்சிக் காலத்தில் வாமதேவ முகத்தைச் **சந்தனம் சாத்தியும்,** மாலையில் அகோர முகத்தைக் **குங்குமம் அணிவித்தும்** வணங்குவோர்க்கு நல்லனவெல்லாம் வழங்கும் நாயகனாய்ப் பிறை சூடிய பெருமான்—கங்கையை முடிவைத்த கங்காதரனின்—அருள்கிட்டும்''[1] என்று எழுதிச் செல்வது வழிபாட்டு நோக்கில் இந்தச் சிற்பக் கலைப்படைப்பின் மூர்த்திகரம் புலப்படுத்தும்.

10. பஞ்சேஷ்டி சிற்பங்கள்:

சென்னைக்கு வடக்கே 29கி.மீ. தொலைவிலுள்ள இந்தச் சிவாலயத்தில் சிவலிங்க வடிவம் **அம்மையும்** அப்ப**னும்** இணைந்து **அர்த்தநாரீசுவரர்** திருக்கோலத்தில் காட்சியளிக்கிறது. இங்குள்ள இராஜகோபுரத்தின் கீழ்த்தளத்தில் மிகுந்த வேலைப்பாடமைந்த புராணச்சிற்பங்கள் உள்ளன. **வஜ்ரபட்டை** என்னும் ஒருவகைச் சிற்ப வேலைப்பாடுகளால் அமைந்தது இந்தக்கோபுரம்.

மிகக்கொடூரமான **துர்க்கையாக இருந்து, அகத்திய** முனி**வரால் துர்க்கா சக்கரத்தைப் பிரதிட்டை** செய்த நிலையில் ஆவேசம் அகன்ற **ஆனந்தவல்லி**யாக மாறி அன்னை அருள் பாலிக்கிறார். ''அன்னை ஆனந்த வல்லியின் 4அடி உயரமுள்ள திருவுருவம் **மரகதப்பச்சை** என்னும் ஒருவகை மூலிகைக் கல்லினால் செய்யப் பட்டு உள்ளது,

அன்னையின் நேர் இடப்புறத்தில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் சிலைகளைக் காணலாம். அந்தச் **சிலைகளில் இருந்து இசைவடிவான சப்த சுவரங்கள்** ஒலிப்பதைக் கேட்கலாம்,''[2] என்று **பேராசிரியர் பால ஜோசியர்** சுவாமி, ஆராய்ந்து எழுதியுள்ளமை காண்க.

---

1. அன்னை அருள் (திங்களிதழ்), மே, 1994, பக். 28
2. ஞானவழி, அக்டோபர், 1987

11. அன்னூர் (அன்னியூர்) மன்னீசுவரர் கோயில்_ இறக்கைகளுடன் சிவலிங்கம்:

கிருதயுகத்தில் **வன்னியூர்** என்றும், திரேதாயுகத்தில் **வானியூர்** என்றும், துவாபரயுகத்தில் **வள்ளியூர்** என்றும், கலியுகத்தில் **அன்னியூர்** என்றும் வழங்கப்படுவதாக நம்பப்படும் அன்னூர் சிவன் கோயிலில், 'அன்னி எனும் வேட்டுவன் வள்ளிக்கிழங்கு தோண்டுகையில் பிரகாசமான தீச்சுடர் தோன்றி இறக்கைகளுடன் சிவலிங்கவுருவத்தில் அருள் செய்தார் அரனார்' என்று போற்றப்படும் லிங்கம் உள்ளது. இறக்கைகளுடன் சிவலிங்கம் காணப்படுவது அன்னூர் ஆலயம் ஒன்றில் தான்''[1] என்பது வியத்தகு சிற்பம் பற்றிய செய்தி.

12. மன்னார்குடி வாசுதேவர்:

மன்னார்குடி இராசகோபாலசுவாமி ஆலயத்தில் அருள்மிகு **வாசுதேவர்** சங்கு சக்கரம் கதை ஆகியவற்றுடன் நான்கு திருக்கைகளையுடையவராய், கிழக்கே திருமுகமண்டலத்துடன் நின்ற திருக்கோலத்திலே—திருமகள் நிலமகளுடன் எழிலாகக்—காட்சியளிக்கிறார். பிரமனால் படைக்கப்பட்டதாகப் போற்றப் படும் **சுயம்பு விமானத்தின்** கீழ் இவ்வாறு காட்சியளிக்கும் திருத்தலம் இது ஒன்றேயென்பர். வாசுதேவர் மிகச் சிறப்புடன் வீற்றிருந்தருளும் தல மாதலின் இதனை '**வாசுதேவபுரி**' என்றும் புராணங்களாலும் மகாபாரதத்தாலும் வழங்கப்படுதலைக் கூறுவர்.

13. தஞ்சாவூர் மாவட்டத்தில் வாகீசுவரசிவன் வாகீசுவரி—சிற்பங்கள்:

தஞ்சாவூர் திருவையாறு வளாகத்தில் பதினைந்துக்கும் மேற்பட்ட **வாகீசுவரர்** சிற்பங்களும், ஏழு **வாகீசுவரி** சிற்பங்களும் இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளன; வாக்குக்குத் தெய்வங்களாக இவை கருதப்படுகின்றன; தாமரைப் பீடத்தில், நான்கு திருமுகங்களுடன் தோற்றமளிக்கும் வாகீசுவரரின் — நான்கு திருக்கைகளில், முறையே தாமரைமலர், செபமாலை, திரிசூலம்.

1. பொன்மலர் (திங்களிதழ்), மே, 1995, மே, பக். 9

பனையோலைச்சுவடி (ஏட்டுச்சுவடி) காணப்படுகின்றன. இவ்வாறு தோற்றமளிக்கும் திருவுருவங்களைப் பிரமன் என்று தவறாகக் கூறியுள்ளனர் என்பது தொல்பொருளியல் அறிஞர் **டாக்டர் ஆர். நாகசாமியின்** ஆராய்ச்சியனுபவக் கருத்து; இதே கருத்தையே வலியுறுத்தித் தொல்பொருளியல் அறிஞர் **குடவாயில் பாலசுப்பிரமணியமும்** ஓர் ஆய்வுக்கட்டுரை '[1] எழுதியுள்ளார்; அதனில் இறுதியாக வரும் வாசகம் வருமாறு: ''The available sculptures of Vagisvara Siva aud Vagisvari are the deities, worshipped by the Lagulisa siddhanta followers during the period of Pallavas and the early Cholas. It is no doubt that these two forms of Siva are the very rare and extra ordinary art-pieces for iconographic study''.

14. இராசசிம்ம பல்லவ திரிபுராந்தக ஆலயத்தில் ஊர்த்துவ தாண்டவம்:

காஞ்சிக் கச்சபேசுவரர் ஆலயத்திற்கு அருகேயுள்ள இக் கோயிலில், மூக மண்டபம் முன்னே விளங்கச் சம சதுரசிர திவிதள நாகர விமானம் உள்ளது. அந்தக் கருவறையின் பின் புறம்-சோமாஸ்கந்தர் பக்கச் சுவர்களில்-வியத்தகு சிற்பங்கள் பல வுள. சிவனுறையும் திருக்கயிலையைப் பெயர்த்தெடுக்கும் இராவணனது முனைப்பு வேகத்தைக் காட்சிப்படுத்திய சிற்பமும் அவற்றுள் ஒன்று. அது பற்றி **வெ. நாராயண சுவாமி** எழுதுகையில், ''அதிபங்க நிலையில், சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம், திரியோபகம், அனுக்கிரகம் என்ற பஞ்ச கிரியைகளையும் ஒரே மேனியில் வெளிப்படுத்தும், தசபுசங்கத் தாண்டமூர்த்தி. இதை வெறும் தாண்டவம் எனக் கூறுவதற்கில்லை. நிருத்த யுக்கம் என்றுதான் வருணிக்க வேண்டும் கிரீடம், வஸ்திர யஞ்ஞோப வீதம், எல்லாமே பல்லவ பாணியை வெளிப்படுத்துகிறது கி.பி 8 ஆம் நூற்றாண்டு, இராசசிம்மப் பல்லவனால் நிறுவப் பட்டது,''[2] என்று விளக்கிச் செல்வது காண்க.

1. The Hindu [Daily], January 14, 1993,
2. தமிழக அற்புத ஆலயங்கள், பக். 35

15. சுருட்டுப் பள்ளியில் சிவனது சயனத் திருக் கோலம்

சிவபிரானுக்குப் பொதுவாகச் சிலை வடிக்கையில் நின்ற கோலத்திலும் அமர்ந்த கோலத்திலுமே அமைப்பர். ஆனால், ஊத்துக்கோட்டை அருகேயுள்ள சுருட்டுப் பள்ளி ஆலயத்தில் சிவபிரான் சயனத் திருக்கோலத்தில் இருப்பதைக் காணலாம். இதன் புராணப் பின்னணி தெளிவாகத் தெரியவில்லை. சிற்பியின் அதிநுக் கற்பனையின் விளைவாக இஃது அமைந்திருக்கலாம்.

16 திருச்செங்காட்டங்குடி நவதாண்டவர்கள்:

திருச்செங்காட்டங்குடித்திருக்கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் 'நவதாண்டவர்கள்' என அழைக்கப்பெறும் சிற்ப நேர்த்திமிகு கலை வடிவங்கள் ஒரு மண்டபத்தில் வரிசையாக உள்ளன. இக்கோயிலின் சிறப்பை மிகுதிப்படுத்துவதற்காகவே உள்ள கஜ சம்மாரர், ஊர்த்துவ தாண்டவர், காலசம்மாரர், திரிபுர சம்மாரர் முதலிய பல வியத்தகு கலைப் படைப்புகளை நேரில் கண்டால்தான் சிறப்பு இனிது விளங்கும். இச்சிலைகளைக் கலையார்வத்துடனும் பக்தி நோக்கிலும் தமிழ்ப்பெருமக்களுக்கு அறிமுகப்படுத்திய பெருமை கவின்கலைத் திறனாய்வாளர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமானைச் சாரும்.

17. திருப்புத்தூரில் கௌரி தாண்டவரென வழங்கும் ஆனந்த தாண்டவர்:

அரிய சிற்பக் கலைப் படைப்புகள் நிறைந்த திருப்புத்தூர்த் திருத்தளிநாதர் கோயில் மைய மண்டபத்தின் உட்புறத்தே தெற்கு நோக்கிய நிலையில் அருள்மிகு பத்துத் திருக்கைகளுடன் கூடிய ஆனந்த தாண்டவர் (கௌரி தாண்டவர் எனப்படுபவர்) அழகிய வியத்தகு காட்சியளித்தலைக் காணலாம். வலப்பக்க, இடப்பக்கத் திருக்கைகளில் பல்வகைக் கருவிகளேந்தியவண்ணம் பல அலங்கரிப்புகளுடன் ஆனந்த நடனமிடும் எம்பிரான், அனைத்துலகும் கண்டு களிப்பில் மூழ்கும் நிலையில் காட்சி தருதல் சமயநோக்கிலும் கலை நோக்கிலும் காணத்தக்கது.

18) தஞ்சைக் கலைக்கூடம் — பிட்சாடனரும் ரிஷி பத்தினிகளும்:

நாடகத்தில் வரும் அழகிய காட்சியைப்போல் அமைந்துள்ள இந்தக் கற்சிலைகள், இரண்டாம் இராசராச சோழன் காலத்தவை; தாராசுரத்தில் போதிய பாதுகாப்பின்றியிருந்த இச்சிலைகள், கலைக்கூடத்தில் அமைக்கப் பெற்றுப் பலரின் நாட்டத்தைக் கவர்ந்து வருகின்றன.

தாருகவனத்தில், 'வேள்விப்பயனில் மட்டும் நம்பிக்கை' கொண்டு கடவுளைப் புறக்கணித்த முனிவர்களுக்குப் பாடம் புகட்டச் சிவனே பிட்சாடனராகவும் திருமாலே மோகினியாகவும் வடிவெடுத்து வந்து, முனிவர்களின் செருக்கையடக்கிய புராணப் பின்னணியைப் பலரும் அறிவர்.

பொதுவாகத், தாருகவன முனிவர் வாழும் தெருப்பக்கம் செல்லும் பிட்சாடனர் நிர்வாண கோலத்திலும் கையில் கபாலத்துடனும் நாக ஆபரணத்துடனும் தான் காணப்படுவது இயல்பு. ஆனால், இங்குள்ள பிட்சாடனர், "தலையில் கிரீடத்துடனும், இடுப்பில் பட்டுப் பீதாம்பரத்துடனும், சர்வ ஆபரணங்களுடனும், பூதகணங்களுடனும் கம்பீரமாக வருகிறார்; கையில் கபாலம் இல்லை. நான்கு கரங்களில் ஒரு கரத்தில் மயில்தோகைக்கட்டு உள்ளது. அற்புதமான பாதுகைகளை அணிந்துள்ளார். ஒரு கையினால் உடுக்கையைப் பிடித்து மற்றொரு கையிலுள்ள சிறு குச்சியினால் ஒலியெழுப்பிக் கொண்டு வருகிறார். பூதகணங்கள் வாத்தியங்களை முழங்கிக் கொண்டு வருகிறார்கள்,"[1] என்றும், ரிஷிபத்தினிகள் பல்வேறு நிலைகளில் தம் வயமிழந்து நிற்பதைக் கூறி, "இந்தக் கற்பு மிக்க ரிஷிபத்தினிகள் நிறையழிந்து பிட்சாடனர் கோலத்தில் வந்திருக்கும் இறைவன் பின்னால் சென்று விடுகின்றனர். பிறகு, மோகினி மறைந்ததும் ரிஷிகள் உணர்வு வரப்பெற்றுத்தங்கள் செயலைக் கண்டு வெட்கித் தலைகுனிந்து தங்கள் தெருவிற்கு வருகின்றனர். வீடுகளில் ஒருவரும் இல்லாதது கண்டு ஓர்

1. கவின்மிகு தஞ்சைக் கலைக்கூடம் (1989), பக். 14

ஆணழகன் பின்னால் தங்கள் கற்புமிக்க மனைவிமார்கள் சென்றுள்ளதைக் கண்டு தங்கள் நிலையும், அவர்களின் அதே நிலையும் கண்டு மேலும் வெட்கித் தலைகுனிந்து, தருக்கு அழிந்து, இறைவன் பெருமையை உணர்கிறார்கள்,''[1] என்றும் **கோ. வீராசாமி** எழுதிச் செல்வதைக் காண்க.

மேலும், சிவனின் திருமுகத்தில் **காணற்கரிய** அற்புதக் காட்சியைச் சிற்பி வடித்துள்ளதையும் காட்டியுள்ளார். ''சிவனின் வலப்புறம் வந்து அவர் முகத்தைப் பாருங்கள். அவர் உதட்டில் தவழும் **புன்னகையைப்** பாருங்கள். **பெண்களை வசீகரிக்கும்** குறும்பான புன்னகை அது! தற்போது இடப்புறம் வந்து அவரது முகத்தைப் பாருங்கள். அருகிலுள்ள சிவகணங் களையும் பாருங்கள் தனக்கு ஏவல் செய்யும் **சிவகணங்கள் தன்னைத் தவறாக நினைத்து விடக்கூடாது என்று நினைத்துத் தன் இடப்புறச்** செவ்விதழ்களில் **கம்பீரமான** புன்னகையைக் காட்டுகிறார்,''[2] என்று சோழர்காலச் சிற்பியின் திறமையைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

19) உத்தமர் கோயிலில் காணலாகும் மும்மூர்த்திகள்:

'**திரிமூர்த்தி க்ஷேத்திரம்**' எனவும், '**நீபவனம்** (கதம்பவனம்)' எனவும, '**திருக்கரம்பனூர்**' எனவும் அழைக்கப்படும் **உத்தமர் கோயிலில்** (பிட்சாண்டார் கோயில்) பிட்சாடனராகச் **சிவ பிரானும்**, புருடோத்தமராகத் **திருமாலும்**, படைப்புக் கடவுளாகப் **பிரமனும்**, தம் தேவியர்களுடன் எழுந்தருளியிருக்கும் வியத்தகு திருக்காட்சியைக் காணலாம். **சுசீந்திரம்** தாணு மாலயப் பெருமான் ஆலயத்தில் ஒரே சிற்பத்தில் மும்மூர்த்திகளையும் கண்டு வழிபடலாம்; ஆனால், இங்கு மும்மூர்த்திகளும் அழகிய திருக்கோலத்தில் தம் தேவியருடன் எழுந்தருளி அருள் பாலித் தலைக் காணலாம். ''தமிழகத்தில் மும்மூர்த்திகளையும் வழிபடும் வழக்கம் கி.பி ஆறாம் நூற்றாண்டு தொடங்கி இருந்து வந்தது என்றாலும், பிற்காலங்களில் அவ்வழிபாடு

1. கவின்மிகு தஞ்சைக் கலைக்கூடம் (1989), பக். 15, 16
2. மேலது, பக். 16

சிவனுக்கும் திருமாலுக்கும் மட்டுமே என்ற வகையில் நிலைத்து நின்று விட்டது. பிரமனுக்கு வழிபாடு மிக அரிதான நிலையிலேயே தமிழகத்தில் காணப்படுகிறது.................சைவமும் வைணவமும் ஒருங்கே இணைந்து இரண்டும் ஒன்றே என்ற உண்மையை விளக்கும் தலமாக அமைந்துள்ளது இக்கோயில்,''[1] எனவருங்குறிப்பு சமயநம்பிக்கையுடன் நோக்கத் தக்கது. இத்தலம். திருமணஞ்சேரியைப் போல் திருமணங்கள் மிகப் பலவாக நடைபெறும் மூர்த்திகரச் சிறப்புடையது.

20) திருவதிகை வீரட்டானேசுவரர் ஆலயம் – சதாசிவர்லிங்கம்:

பண்ருட்டிக்கு அருகிலுள்ள திருவதிகை ஆலயத்தில் சதுர்முகலிங்கம் அல்லது நான்கு முகலிங்கம் **சதாசிவர்** என அழைக்கப்படும் சிறப்பினைக் கொண்டது. கிழக்குமுகம் — **தத்புருடர்முகம்**; தெற்குமுகம் — **அகோரர்** முகம்; மேற்கு முகம் — **சத்யோசாத**முகம்; வடக்குமுகம் — **வாமதேவர் முகம்**; தலைப்பாகம் — இலிங்கவடிவில் **ஈசானர்** — எனும் அமைப்பில் சதாசிவர் எனும் திருப்பெயருடன் சிவபரம்பொருள் காட்சியளித்தலைக் காணலாம். திருநாவுக்கரசு சுவாமிகளை ஆட்கொண்ட வீரட்டானேசுவரர் அருள் வழங்கும் இந்தத் தெய்வ நலத் தலத்திலுள்ள சதுர்முகலிங்கம் பல்லவர் காலத்தில் தனிச் சிறப்பைக் கொண்டது. இதன் பெருமைபற்றிக் கூறுகையில் 'அடிப்பாகத்தில் தாமரை இதழ்கள் கொண்ட சதுர்பீடத்திற்கு மேல் உள்ள வட்ட வடிவ இருப்பிடததில் அமைந்துள்ள (சதுர்முக)லிங்கம் மிகவும கலைநுணுக்க வேலைப்பாடுகளடங்கியுள்ளது,''[2] என வருங்குறிப்பு மிகவும் சிந்திக்கத்தக்கது.

21) கல்லைக்குறிச்சி – கலியுக வரதராசப் பெருமாள்:

தக்க ஆலயங்கட்டி முடித்தபின், இறைத்திருமேனியைப் பிரதிட்டை செய்வது என்பது ஒரு முறை; இறைத்திருமேனியை நிலைநிறுத்தி ஆலய வளாகத்தை விரிவாக்கிக் கொண்டே செல்வது மற்றொரு முறை; இந்த இரண்டாவது முறையைக்

1. மங்கை - திங்களிதழ். ஜனவரி, 1995
2. அன்னை அருள், ஜுன், 1994, பக். 4

கொண்டது அருள்மிகு கலியுக வரதராசப் பெருமாள் கோயில்.

திருச்சி மாவட்டம், **'கலியபெருமாள்கோயில்'** எனப் பலரா லும் போற்றப்படும் கல்லங்குறிச்சியில், கம்பப் பெருமாள் — **அனுமான்** திருவுருவமுள்ள கம்பம்-ஒரு புதற்கண் சாய்வுற்றிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது **திரு. மங்கான் படையாட்சியார்** குடும்பமரபினரால் திருக்கோயில் தொடர்பாகப் பற்பல மண்டபங்கள் சத்திரங்கள் திருக்குளங்கள் முதலியவை அமைக்கப்பட்டுள்ளன. கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகப் போற்றி வணங்கப்படும் **கம்பப்பெருமாள்,** நடுத்தறி அல்லது கம்பத்தில் வணங்கப்படும் சிவபரம்பொருளை யொத்து இங்கு அருள் பாலிப்பது குறிக்கத்தகும். (இந்தத் தகவல் தந்தவர்—பரம்பரை அறங்காவலர் திரு.கோ. கோவிந்தசாமி படையாட்சியார்).

''கல்லங் குறிச்சியுறை கம்பப் பெருமாள்தன்
நல்லடியைப் போற்றுவார்தாம் நாடோறும்—செல்வந்தான்
பெற்றிடுவர் சீர்மிகுந்தே பேருலகில் வாழ்ந்தினிதா
யுற்றிடுவ ரென்றே யுணர்''

22) சேலம் உடையார்ப்பட்டிக் கந்தாசிரமத்தில் அருள்மிகு ஆத்யந்தப்பிரபு:

அருள்மிகு சிவனும் பார்வதியும் இணைந்து **அர்த்தநாரியாக**வும், திருமாலும் சிவனும் இணைந்து **சங்கரநாராயணராகவும்** அமைவதுபோலப் பிரம்மச்சாரிகளான **ஆஞ்சநேயரும் விநாயகரும்** இணைந்து அமைந்த திருவுருவம் **ஸ்ரீஆத்யந்த பிரபு** எனும் திருப்பெயருடன் ஒன்பது அடி உயரத்தில் ஒரு வியத்தகு சிலை, உடையார்ப்பட்டி கந்தாசிரமத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. நயத்தகு சிற்பியின் இந்த வியத்தகு சிலைக்குச் சிற்பநூலில் இடம் உள்ளதா என்பது ஆராய்ச்சிக்குரியது. (ஆதாரம்: அம்மன் தரிசனம், டிசம்பர், 1993).

23) திருநாவலூர் ஆலமர் செல்வனும் சுந்தரரும்:

சிவாலயங்களில் எங்குமே ஆலமர் செல்வனாகிய தெட்சணாமூர்த்தியின்சிலை அமர்ந்த கோலத்தில் தான் இருக்கும். ஆனால்,

''திருநாவலூர் திருக்கோயிலில் தட்சணாமூர்த்தியின் நின்ற **திருக்கோலத்தினைக்** காணலாம். சுந்தரருடைய மூலத்திருவுருவம் உபய நாச்சியாரோடு (பரவை சங்கிலியாரோடு) வெளிப் பிராகாரத்தில் மேற்கு நோக்கிய சன்னிதியில் இருக்கிறது. சுந்தரர் சன்னிதியில் முன்னே யானைவாகனம் நிற்கிறது,''[1] என்று வருங்குறிப்பினைக் காண்க.

24) பாபநாசம் சர்ப்ப விநாயகர்:

தஞ்சை மாவட்டம் பாபநாசம்—திருத்தலத்தில் ஐந்து தலை நாகம் குடைபிடிக்கும் நிலையில் பத்துத்திருக்கைகளுடன் கூடிய வலம்புரிவிநாயகர் சிலையை அமர்ந்த கோலத்திலே காணலாம். திருக்கைகளில் சக்கரம், மழுவாயுதம், மலர், ஒடித்த தந்தம், கலசம், பாசம், பரசு, மோதகம் முதலியவற்றை ஏந்திய வண்ணம், இடத்திருக்காலைப் பீடத்தில் மடித்து வைத்தும் வலத்திருக்காலைத் தொங்கவிட்டும் காட்சியளிக்கும் இந்த விநாயகர் பல தத்துவப் பொருளை உணர்த்துவதாகக் கொள்ளலாம். ஐந்து தலை நாகங்கள் பஞ்சபூதங்களைக் குறிக்கும் வகையில் அவருக்குப் பணிபுரிவதாகவும், நாகத்திற்கு அஞ்சத் தக்க பெருச்சாளி, விநாயகர் அருகே பீடத்தருகே அச்சமின்றி அமர்ந்திருப்பது விலங்கினங்களும் (உயிரினங்களும்) பகைமை யற்றிருப்பதாகவும் கொள்ள இடமுண்டு.

25) திருக்கண்ணபுரம் — சௌரிராசப் பெருமாள் சிலைகள்:

'ஒரு சதுர்யுகம் கண்ட கோயில்' எனப்போற்றப்படும் திருக் கண்ணபுரம் பெருமாள் கோயில் உற்சவநாயகர், பல்லாண்டு களாக நடைபெற்ற அபிடேகம் காரணமாக இளைத்த திரு மேனியுடன் பொற்கவசத்தால் மூடப்பெற்ற நிலையில் காட்சி யளிக்கிறார். இந்தத் திருமேனிக்கு ஒருநாள் மட்டும் (ஏகாதசியும் கேட்டையும் சேர்ந்து வரும் ஆடியில் அல்லது ஆவணியில்) கவசத்தைக் கழற்றிவிட்டு அபிடேகம் செய்வர். ஏனைய நாள்களில் பெருமாளின் திருவடிக்கு மட்டும் அபிடேகம் நடைபெறும்.

1. கலைக்களஞ்சியம், தொகுதி, ஆறு

சருவரையிலே ஆஜானுபாகுவாக நிற்கிறார் பெருமாள், இருபுறமும் ஸ்ரீதேவி பூதேவி நாச்சியார்களுடன்! பீடத்திலிருந்து 14 அடி உயரம்; திருப்பதியில் பெருமாள் கூட 10 அடி உயரந்தான்!

(இங்கு) மூலப்பெருமாள் அபயஹஸ்தத்திற்குப் பதிலாக வரதஹஸ்தத்துடனும், பிரயோக சக்கரத்துடனும் காட்சி தருகிறார். விகடாசுரன் என்ற அசுரனைக் கொல்லச் சக்கரப் பிரயோகம் செய்யும் நிலை, பக்கத்தில் தண்டக முனிவரும் கருடாழ்வாரும் இருபுறம் நின்று பெருமாளைச் சேவித்துக் கொண்டிருப்பதைக் காணலாம்,''[1] என்று வருங் குறிப்பினைக் காண்க.

26) பெரம்பலூர்ப் பெருமாள் கோயிலில் பஞ்ச பாண்டவர்கள்:

மகாபாரதமாகிய இதிகாசத்தில் கண்ணனது திருவருளை மிகப்பெற்றவர்கள் பஞ்சபாண்டவர்கள்; ஆனால், அவர்களுக்குக் கிட்டாத பெருஞ்சிறப்பு. பாஞ்சாலியாகிய திரௌபதைக்கு உண்டு; எனவே, திரௌபதையம்மன் கோயில்கள் தமிழகத்தில் பலவாக ஏற்பட்டுள்ளன. இதுபற்றி முன்னரே கண்டோம்.

சிற்சில இடங்களில் தான் அபூர்வமாகப் பாண்டவர் சிலைகள் கிடைக்கின்றன. அவ்வாற்றான் திருச்சி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர் அருள்மிகு மதனகோபால சுவாமி கோயில் குறிப்பிடத் தக்கது.

தொன்மைச் சிறப்பினையுடையதாகிய இக்கோயிலில் புராணப் பின்னணியுடன் வியாக்கிரபாதர் சிலையும் பஞ்ச பாண்டவர் சிலைகளும் அமைந்துள்ளன; இவை எக்காலத்தியவை என்பது தெளிவாகப் புலப்படவில்லை; தொன்மை நோக்கில் வியக்கத்தக்கவை;

பாண்டவர்கள் தம் வனவாசத்தின்போது பெரும்புலியூர் ஆகிய பெரம்பலூர்ப்பகுதி, அடர்ந்த காடாக இருந்தமையின்

1. ஓம்சக்தி [திங்களிதழ்] நவம்பர் 1990.

இப்பகுதியில் (இக்காலத்தில் **லாடபுரம்**) தங்கியிருந்தனர் என்பர். அக்காலத்தில் பாண்டவர்களால் வழிபடப்பட்ட மதனகோபால சுவாமி கோயிலில், திரௌபதை கண்ணன் ஆகியோருடன் பஞ்சபாண்டவர் சிலைகள் (பீமன், அருச்சுனன், திரௌபதை, தருமர், கண்ணன், நகுலன், சகாதேவன் எனும் வரிசையில்) உள்ளன. இவற்றில், **தருமர் கண்ணன்** ஆகிய சிலைகள் மட்டும் அமர்ந்த கோலத்தில் உள்ளன.

இந்தக் கோயில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் பாண்டிய மாமன்னர் சுந்தர பாண்டியத்தேவரால் செப்பனிடப்பட்டது என்பது தெரிய வருகிறது

27) நாச்சியார் கோயில் கருடாழ்வார்:

கும்பகோணத்துக்குத் தென்கிழக்கேயுள்ள நாச்சியார்கோயில் எனும் வைணவத்திருத்தலத்தில் கல்லாலான **கருடாழ்வார்** உற்சவமூர்த்தியாகவும் சேவைசாதிக்கிறார். இவரை முதல் வாசலில் நால்வரும், இரண்டாது வாசலில் எண்மரும், மூன்றாவது வாசலில் பதினாறு பேரும, நான்காவது வாசலில் முப்பத்து இரண்டுபேரும், முடிவாக அறுபத்து நால்வருமாக எழுந்தருளப் பண்ணுவது வியப்பிற்கும் சிறப்பிற்குமுரிய வைணவ மரபாகும்.

28) திரிபுவனம் சுந்தரப் பெண்மணிகள்:

திரிபுவனம் **சரபேசுவரர் சன்னிதி**யின் வாயில் இருமருங்கும் நின்ற கோலத்தில் காணப்படும் சொக்கழகு வாய்ந்த-சிற்பியரின் முத்திரைக் கலைத்திறம் பெற்ற — **சுந்தரப் பெண்மணிகள்** (கற்சிலைகள்) போல, உலகில் வேறெங்கும் காணமுடியாது என்பது கலைச்சுவைஞர் **தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்** கருத்து.

29) பவானி சங்கமேசுவரர் கோயிற் சிற்பங்கள்:

தமிழ்நாட்டில் **தாடிக்கொம்பு, வெட்டுவான்கோயில், ஸ்ரீமுஷ்ணம், கிருஷ்ணாபுரம், தாரமங்கலம், மதுரை, திருவரங்கம், குடந்தை**

இராமசாமி கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர்கோயில் ஆகிய இடங்களில் காணலாகும் ஆலயச் சிற்பங்கள் மிகுந்த கலைநேர்த்தி கொண்டவை என்பது கலைக்கண் கொண்டு காண்போரின் கருத்து. இந்தச் சிற்பச் சிறப்புவரிசையில் பவானி சங்கமேசுவரர் கோயில் சிற்பங்களையும் சேர்க்கலாம்.

பவானி ஆலயத்தில் அன்னை பவானியின் சன்னிதிக்கு எதிரேயுள்ள சிற்பமண்டபம் 18 தூண்களைக் கொண்டது. கெட்டி முதலியார் காலத்தில் செதுக்கப்பட்ட சிற்பநேர்த்தியைத் தூண்களில் காணலாம். திருவரங்கம் சேஷராயர் மண்டபத்துச் சிற்பவேலைப்பாடமைந்த தூண்களுக்கு நிகரான கலைச்சிறப்பினை இங்கும் காணலாம். "இவை யாளியோடு போரிடும் குதிரை வீரர்கள் சிறுத்தையோடு போரிடும் குதிரை வீரர்களைச் சித்திரிக்குஞ் சிற்பத் தூண்கள்; இத்தகைய சிற்பத் தூண்கள் சிறப்பு மிக்கவை இங்குள்ள **சிரிக்கும் சிலை, கல்விரிக்கும் கலை**" எனப் போற்றப்படுகிறது. இத்தூணிலுள்ள **மங்கைநல்லாள் கைகூப்பி வணங்கும் நிலையில் வடிக்கப்பட்டுள்ளாள். இச்சிலை மீது நீரை ஊற்றினால் சிரிப்பது போலக் காட்சி தருகிறது** என்பர்.

பிறிதொரு தூணில் சமயப்நோக்கில் கொட்டிக் கொடுக்கும் கெட்டிமுதலியாரின் சிற்பமும் மற்றொரு தூணில் சின்னம்மையின் சிற்பமும் வடிக்கப்பெற்றுள்ளன. மேலும், "இம்மண்டபத்தில் உள்ள விதானத்திலுள்ள தாமரை மலரில் கிளிகள், கெட்டி முதலியாரின் சின்னமான வண்ணத்தடுக்கு, வாடாமாலை, மூவேந்தர்களின் சின்னமான வில் புலி கயல். மற்றும் **கோலாட்டக் காட்சிகள்**, 12 மாதங்களுக்கான இராசிகள் போன்ற சிற்பங்கள் எல்லாம் கண்டு இன்புறத்தக்கன"[1] என்று **டாக்டர் சி. மூக்கரெட்டி** விளக்கிச் செல்வது காண்க.

30) நெற்றித்திலகப் பெருமையும் திலகமிடும் பெண் சிற்பமும்:

இந்து மதப்பண்பாட்டு அடிப்படையில் சமயப்பெருமக்கள் தங்கள் நெற்றியில் **திருநீறு, திருமண், கோபிசந்தனம்**, மங்கலமாம்

1. பவானி அருள்மிகு சங்கமேசுவரர் திருக்கோயில் வரலாறு, பக். 11

குங்குமம் ஆகியவற்றில், தம் சார்புடைய சின்னத்தை அணிந்து கொள்வர், இவ்வாறு அணிந்துகொள்கின்ற சமயச் சின்னத்தை வடமொழியில் 'திலகா' எனக் கூறுவர். ஆடவர்க்கும் மகளிர்க்கும் பொதுவாக நெற்றிச்சின்னமிருப்பினும், மகளிர்க்குச் சிறப்பாக நெற்றியில் கட்டாயம் குங்குமம் வைத்துக் கொள்வது பலரிடையே மதிப்பைத் தருவதாகும்; அதிலும் சிறப்பாகத் தலையின் நடுவகிரில் அணிந்து கொள்வது, சமுதாயத்தில் சுமங்கலிகளால் பின்பற்றப்படும் சமயச் சார்பான மரபாகும். காலப்போக்கில் நெற்றியில் திலகமிடுவது அழகுணர்வை மிகுதிப் படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

திலகம் பற்றி ஆராய்ந்துள்ள ராஜ்யஸ்ரீ சந்திரசேகர், ''பெண்கள் அணியும் திலகம் கலாசாரத்தையும், மங்களகரத்தையும் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாது சில மந்திரச் சக்திகளையும் கொண்டதாகும். ஒவ்வொரு நிறப்பொட்டும் ஒவ்வொரு தன்மையைக் குறிக்கிறது. கறுப்புப் பொட்டு அமைதியையும், சிவப்பு நிறத்திலகம் மற்றவர்களைக் கவரும் தன்மையையும், வெண்மை மன அமைதியையும் அளிக்கிறது. மேலும், பொட்டை இட்டுக்கொள்ளப் பயன்படும் விரல்களுக்கும் விசேடம் உண்டு. கட்டைவிரலால் இடுவது சக்தியையும், நடுவிரல் நீண்ட ஆயுளையும், மோதிரவிரல் உடலுக்குப் போஷாக்கையும், ஆள்காட்டிவிரல் சுதந்திரத்தையும் அளிக்கின்றன இன்றும் பரத நாட்டியத்திலும், கதகளி, குச்சுப்புடி போன்ற மற்ற நாட்டியங்களிலும் சாத்திரப்படி நெற்றியில் அணியப்படும் திலகம், முகத்தின் ஒளியைக் காட்டும் வகையில் கம்பீரமாக இடப்படுகிறது''[1] என்று எழுதிச் செல்லும் அரிய குறிப்பு மனங் கொள்ளத்தக்கது.

திருவரங்கம் ஆலயத்தூண் ஒன்றில் திலகமிடும் பெண் தன் இடக்கையில் கண்ணாடியை ஏந்திக்கொண்டு வலக்கையைத் திலகமேந்திய தலைக்குமேல் நளினமாய் உயர்த்திய வண்ணம் நெற்றியில் திலகமிடுவதையும் பண்பாட்டுக் காட்சியாகக் காணலாம். திலகமிடும் பெண்ணின் நளினத்தையும் ஒயிலான

1. ஞானபூமி (திங்களிதழ்), நவம்பர், 1995,

தோற்றத்தையும் பார்க்கும்போது அவள் நடனமங்கையோ என்று எண்ணத் தோன்றும். இதே போன்று வடநாட்டுச் சிற்பங்களிலும் காணலாம்.

31) பெண்மையெழில் தேய்ந்த சிற்பவுருவங்கள்:

நாயன்மார்களுள் ஒருவரான புனிதவதி, இளம்பருவ அழகில் திருமகளாக விளங்கியவர். தம் கணவர் பரமதத்தன் தம்மை விட்டு நீங்கியதும், இறைவனிடம் பேயுருவம் வேண்டிப் பெற்றார். பேயுருவத்தைப் பெற்ற நிலையில், ஆடல்வல்லானின் தூக்கிய திருவடிக் கீழமர்ந்து அவன்புகழ்பாடுஞ் சிறப்பினையும் பெற்றார்; காரைக்காலம்மையாராக விளங்கும் அவர் திருவுருவச் சிற்பங்கள் சில தலங்களில் உள்ளன. காரைக்காலில் சிவன்கோயிலில் காணலாகும் காரைக்காலம்மையாரின் திருவுருவமும், கங்கை கொண்ட சோழபுரத்தில் காணலாகும் (தென்மேற்குப்புறச் சுவர்மாடக்குழியில்) நடராசர் தூக்கிய திருவடிக் கீழமர்ந்துள்ள காரைக்காலம்மையாரின் திருவுருவமும் தசைப்பொதி வற்றிய நிலையில் உள்ளன.

இஃது ஒரு புறமிருக்கத், திருப்புத்தூர்ப் பைரவர் கோயிலில் விமானத்திலே, ''மேல்தள முதல்நிலையில் விமான தேவதைகளுக்குப் பக்கத்திலுள்ள பஞ்சரப்பகுதிகளில் பாலுணர்வுச் சிற்பங்கள் காணப்படுகின்றன. வடகிழக்கு முலைப் பஞ்சரப்பகுதியில் அமைந்துள்ள மூதாட்டி ஒருவரின் சிற்பம் மருத்துவநிலையொன்றை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது. பெண்களுக்கு வயதான நிலையில் அதிகமான பிள்ளைப் பேற்றின் காரணமாகவோ, தசைநாண்கள் தளர்வுறும் நிலையிலோ கருப்பை கீழிறங்குவது உண்டு. இக்கருப்பை இறக்கத்திற்கு, அறுவை செய்து கருப்பையை அகற்றுவது தான் தீர்வாகும். இந்தக் கருப்பை இறக்க நிலையுடன் பஞ்சர மூதாட்டி காட்டப்பட்டிருக்கிறார். நெற்றி நிறைந்த திருநீறும், சற்றே தளர்ந்த மார்பகங்களும், கருப்பை இறக்கமுமாய்க் காட்சியளிக்கும் இவ்வம்மை, பெண்மை எப்படி இச்சமுதாயத்தில் சக்கையாக்கப் படுகிறது என்பதை எடுத்துக் காட்டவே பஞ்சரப்பகுதியில் இடம் பெற்றிருக்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது''[1] என்று

1. அமுதசுரபி தீபாவளிமலர், 1990, பக். 129.

கலைத்திறனாய்வாளர் இரா. கலைக்கோவன் எழுதிச் செல்வது மிகவும் சிந்திக்கத்தக்கது.

32) அட்டமா சித்திகள்-சிற்பங்கள்:

தவச் சிறப்பாலும் யோக சித்தியாலும் சித்தர்கள் எட்டு வகைச் சித்திகளைப் பேறுவர். அட்டமா சித்திகளாக **அணிமா; மகிமா, கருணா, லகிமா, பிராப்தி, பிராகாமியம். இசத்துவம், வசித்துவம்** கூறப்படும். இவற்றின் நாயகியாகச் **சக்திதேவி** கருதப் படுவது சமய மரபாகும். (இந்த அட்டமாசித்திகளை வேறு பெயர்களிலும் அழைப்பது உண்டு)

சிவபெருமான் ஒரு சித்தராகவும் தோன்றித் திருவிளை யாடலைப் புரிந்தமையால், மதுரைமாநகரில் **அட்டசித்தி மண்டபம்** (அட்டசத்தி மண்டபம்) ஒன்று உள்ளது, அங்கு எட்டுச் சிற்பங்களும் சித்திகளை உணரும் வகையில் சிற்பியர் வடித்துள்ள னர். தமிழ் நாட்டின் வியத்தகு சிற்பக்கலைத் திறனுக்கு இச் சிற்பங்கள் சான்று கூறும்

33) வட பொன்னம்பலம் யாளித்தூண்கள் (ஈர்க்கு பிளக்கும் அதிசயம்):

தொண்டைமண்டலத்தே செங்கற்பட்டுக்கு அருகேயுள்ள **வட பொன்னம்பலம்** ஆலயம் தாயார் முகப்பு மண்டபத்தே ஒரு வகைச் சிற்ப அதிசயம் காணலாம், ''சிலாரூபங்களையே புகுத்தாமல் அழகுப்பிம்பமாய்ப்படைப்பது எப்படி என்று காட்டியுள்ளார்கள். பதுங்கும் **சிறு யாளிகள் தலையில், மெலிந்த நீண்ட பட்டை தீட்டிய கிளைத்தூண்கள் கிளம்பிச் சற்றே மலர்ந்த தாமரைப் பலகைப் பீடங்களைத் தாங்கி, அதன்மேல் கொடிகளா, இல்லை, கருங்கல் தானா** என வியக்கும் வண்ணம் சிற்பியின் சிந்தனை சிந்திய' **திசையெல்லாம் கல் வளைந்து கொடுத்துள்ள வேலைப் பாடுகளுக் கெல்லாம் ஒரு சிகரம்** இக்கோயிலில் தானுண்டு; நகாசு **வேலை** கொண்ட இவ்விழைவுகளுள், **சிற்பி** ஈர்க்கு நுழையும் **துளை யொன்று குடைந்துள்ளான்.** அத்துவாரத்தில் ஈர்க்கைச் செலுத்தினால் துளைவழியே புகுந்து மறுபுறம் எதிர்ப்படும் பொழுது நான்காகவும், எட்டாகவும் பிளந்து வரும் அதிசயம் காணலாம். கூரான கத்தி கொண்டு ஈர்க்கை இரண்டாகப்

பிறப்பதே துர்லபம், இங்குத் துளையோ மிகச் சிறியது. அங்கு என்ன மாயம் புகுத்தியுள்ளான் என்று யோசிக்கப் பிரமிப்புத்தான் ஏற்படுகிறது"[1] என்று வெ. **நாராயணசுவாமி** விளக்கிச் செல்வது காண்க.

34) பிரம்மஹத்தியும் கற்சிற்பமும்:

பிராமணனைக் கொன்ற கொலைப்பழியே **பிரம்மஹத்தி** என வழங்கப்படுகிறது. **ஹத்தி** எனின் கொலை செய்தவனைத் தேடி நிற்கும் கொலைப்பாவமாகும். இது சிறிது விளக்கமாக இங்குக் கூறப்படும்.

மக்களேயன்றித் தெய்வங்களும் கொலைப் பழியால் துன்பப் பட்டுள்ளமையைப் புராணங்கள் விரித்துக் கூறும். **இராவணனைக் கொன்ற** கொலைப்பாவம் நீங்குதற்கு, **இராமன்** சிவலிங்க வழிபாடு செய்த இடமே **இராமேசுவரம்** என்பது புராணக் கூற்று. **பிரமனின்** தலையொன்றைச் சிவன் கொய்த இடமே **திருக்கண்டியூர்** ஆகும். எனவே, சிவனையும் **பிரமஹத்தி** தொடர்ந்தது.

வரகுணபாண்டியன் வேட்டைக்குச் சென்ற காலத்தில் இரவிலே அவனது குதிரை ஒரு பிராமணனைக் கொன்று விட்டது. தன் தவறுக்கு அவன் வருந்தினாலும் கொலைப்பாவம் பிரம்மஹத்தியாக அவனைத் தொடர்ந்தது. சுவாமிமலை வந்து விட்டுத் **திருவிடைமருதூருக்கு** வந்ததும் அவனைவிட்டு வெளியிலே நின்றது. இரு நந்திகளின் உத்தரவுக்குக் காத்திருக்கும் நிலையில், கோயில் தோரணவாயிலுக்குத் தென்புறம் சுவர் ஓரமுள்ள துளை வழியாக அந்த அரசனை எதிர்பார்த்தபடி இருக்கிறது. ஒரு தேவதை போலவும் தலைவிரி கோலமாகவும் முழங்கால் மேல் முகத்தை வைத்துக் கொண்டு இளைத்து ஏங்கிக் கிடக்கிறது. இப்படிக் கற்பனை செய்து **சுவர்ச்சிற்பமாகச்** சிற்பி வடித்துள்ளான். கொலைப் பாவத்தைக் கூடச் சிற்பத்தில் வடிக்க முயன்ற சிற்பியின் திறத்தை உலகம் போற்றுகிறது.

1. தமிழக அற்புத ஆலயங்கள், பக் 202.

35) தேவிப்பட்டினம் நவபாஷாணத் தம்பங்கள்:

இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்திலிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள **தேவிப்பட்டினத்தில்** கடலில் கரையோரமாக ஒன்பது **நவபாஷாணத்தம்பங்கள், நவக்கிரங்களை** நினைவூட்டும் வகையில் நிறுவப்பட்டு உள்ளன. மக்களின் பிணிகளைத் தீர்க்கும் மருந்தாற்றலுள்ள அந்த வளாகத்தில் பலரும் நீராடி மலைமகிழ்ச்சி கொள்வதைக் காணலாம்.

இத்தகு வியத்தகு தம்பங்களை நினைவூட்டும் வகையில் **குஜராத்மாநிலம் சோமநாதபுரம்** கடலில் கரையோரமாக **இலிங்கம்** இருத்தலைக் காணலாம். இதுவும் மிகச் சக்திவாய்ந்ததாக வழிபாட்டுடன் போற்றப்படும்.

36) திருவாதவூரில் காணலாகும் புருஷாமிருகம்:

சிவமூர்த்தங்களுள் **சரபமூர்த்தி** எவ்வாறு வியக்கத்தகு திருவடிவங்கொண்டு விளங்குகின்றாரோ, அவ்வாறே விலங்குகளுள் பெருவலிமை கொண்ட ஒரு வகை வியத்தகு விலங்காகப் **புருஷாமிருகம்** கருதப்படுகின்றது.

திருவாதவூர் விஷ்ணுதீர்த்தக்கரையில் நின்று நோக்கினால் குளத்தினுள் இரண்டு கற்கம்பங்கள் தெரியும். அவற்றின் மீது ஒரு கல்விட்டமும் அதன்மேல் ஒரு சிற்பவடிவமும் இருக்கும். அதனையே **புருஷாமிருகம்** என்று இனங்கண்டு கூறுவர். உடம்பெல்லாம் விலங்கமைப்பிலும், முகம்மட்டும் முனிவரது முகம் போலவும் இருக்கும். இது பற்றி மகாபாரதத்தில் விளக்கம் காணலாம்.

பஞ்ச பாண்டவர் தலைவனான **தருமர்,** இராசசூய யாகம் செய்ய முற்பட்டபோது வேள்வித்தலத்தைத் தேர்ந்தெடுத்து அதைத் தூய்மையாக்கும் பொறுப்பினை மேற்கொள்ளப் புருஷாமிருகத்தை வேண்டிக்கொண்டார். அதுவும் அப்படியே பொறுப்பேற்று வேள்வியிடத்தைத் தூய்மையாக்கியது. மேலும், அது விஷ்ணுதீர்த்தத்தின் நடுவே இருந்துகொண்டு நீரையே புனிதமாக்கிக் கொண்டிருக்கிறது. "இந்த வட்டாரத்தில் மழை

யில்லாமலிருந்தால் நூறு தேங்காய்களையும் வேறு பொருள் களையும் கருக்கி இந்தச்சிலையின்மேல் பூசுவார்களாம்! அப்படிப் பூசிய இரண்டு மூன்று நாள்களுக்குள் நல்ல மழைபெய்கிறதாம்! இப்படி ஓர் அனுபவம் இந்தப் புருஷாமிருக வழிபாட்டிலே. ஆகவே, நாம் **விஷ்ணுதீர்த்தம்** அங்குள்ள புருஷாமிருகம் இவைகளை வணங்கிய பின்னரே கோயிலில் நுழைய வேணும்"[1] என்று கலைச்சுவைஞர் **தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்** எழுதிச் செல்வதைக் காண்க.

பாண்டவர்களுள் **வீமனுடன்** சார்த்தியும் புருஷாமிருகம் பற்றிக் கதை கூறுவர். எப்படியோ சிற்பக்கலையுலகில் இதற்கும் ஒரு சிறப்பிடம் உள்ளது. தில்லைச் சிதம்பரம் ஆலயத்தின் கீழ் வாசலில் உள்புறமாகப் படிகளுக்குத் தென்பால் மேடையில் புருஷாமிருகச்சிலை உள்ளது; காண்க.

II அன்புப் புலப்பாட்டுச் சிற்பங்கள்:

1) மணாளனைச் சுமந்து நிற்கும் மங்கை:

இல்லறப் பொறுப்பினை ஆடவரும் மகளிரும் சுமந்து இன்பங் காண்பது என்பது இல்லறத்தை நல்லறமாக்கும் இனிய உத்தி என்பர். பொதுவாக, ஆடவரே இல்லறச் சுமைகளைப் பெரிதும் தாங்குவதாக எண்ணுவது வழக்கத்திலுள்ள போக்கு அல்லது மரபு ஆகும். ஆனால், பொருள் தேடும் பொறுப் பிலே நிரம்ப ஈடுபட்டுள்ள ஆடவர்க்கு இதமான வகையில் குடும்பப் பொறுப்புகளை மகளிரே பெரிதும் ஏற்று நிற்பர் புராணக் காலத்தில் கற்பரசி **நளாயினி** தன் கணவரை **மனம்சுளிக்காமல்** — அவர்தம் சிற்றின்ப வேட்கையைத் தணிப்ப தற்காக — அவரைக் கூடையில் சுமந்து கொண்டு பரத்தை யில்லந் தேடிச் சென்றதாகக் கூறுவர். அதனை மனத்துட் கொண்ட ஒரு சிற்பி, வேறு வகையில் **பெண்ணொருத்தி தன் வீர மணாளனைத் தோளில் சுமந்து கொண்டு போரிடுங் காட்** சியைச் சிற்பத்தில் வடிக்கலானான். இத்தகைய அரிய சிற்பக் காட்சியைக் **கிருஷ்ணாபுரக் கோயிலில்** (திருநெல்வேலி மாவட்டம்) கண்டு களிக்கலாம்.

1. வேங்கடம் முதல் குமரிவரை, பக் 96

2) மனிதாபிமானத்தால் மங்கையின் காலில் தைத்த முள்ளையெடுக்குங் காட்சி:

குறிஞ்சி நிலத்து வேட்டுவ இளைஞர்களிடையே முகிழ்க்கும் காதலையும் சிற்பி இங்கிதமாகத் தன் கலைப்படைப்பில் புலப் படுத்துவது உண்டு.

கங்கை வேடனாகிய **குகனையும்** காளத்தி வேடனாகிய **கண்ணப்பரையும்** கற்றும் கேட்டுமுணர்ந்த சிற்பியர், வேட்டுவர் களிடையே இயல்பாக முகிழ்க்கும் காதலுணர்வையும் சிற்பத்தில் காட்ட முனைந்த இடங்கள் பல இடங்களில் உண்டு. எடுத்துக் காட்டாக **வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயத்தில்** அமைந்துள்ள சிற்பம் நோக்கத்தக்கது.

வேட்டுவ மங்கையின் காலில் முள்தைத்து விடவே அதனைப் பக்குவமாகவும் பரிவாகவும் எடுத்துவிடுதலை ஒரு நல்வாய்ப்பாகக் கொள்கிறான் காதலன். இதனைச் சித்திரிக்கும் சிற்பக் காட்சி அன்பின் ஆழத்தைப் புலப்படுத்தும் பாங்கினில் உள்ளது.

3) சூலுற்ற பெண்யானைக்குக் கருவுயிர்க்குங் காலத்துக் களிறு உதவி புரியுங் காட்சி:

மக்களேயன்றி விலங்குகளும் அன்பின்பிணைப்பில் கட்டுண்டு நிற்கும் காட்சிகள் பல உள்ளன. ஒரு பெண்யானை நிறைசூலில் அலமந்து நிற்கையில், ஆண்யானை அதன் வயிற்றைத் தாங்கிக் கருவுயிர்க்க உதவி புரிதலைச் சிற்பியர் சில கோயில்சிற்பங்களில் காட்டியுள்ளனர், **தில்லை** நடராசர் ஆலயத்தில் **சித்திர சபைப் படிக்கட்டுக் கைச்சுவர்ப்பகுதியில்** இதனைக் காணலாம்.

4) திருபுவனத்தில் ஒருத்தி யானைக் குட்டிக்குப் பால் கொடுக்குங் காட்சி:

திருபுவனம் கம்பஹரேசுவரர் திருக்கோயிலில் வடபுறச் சுவரின் அதிட்டானச் சிற்பங்களுள் ஒன்று வியத்தகு காட்சியைச் சித்திரிக்கிறது. மங்கையொருத்தி ஒரு பீடத்திலமர்ந்த வண்ணம் பரிவுணர்வுடன் தன் **இடப்பக்கத்து மார்பையெடுத்து** ஒரு

யானைக்குட்டிக்குப்பால் கொடுக்கிறாள். பாலருந்திய நிலையில் யானைக்குட்டி தன் மகிழ்ச்சியை முகத்தில் புலப்படுத்துகிறது. அருகிலிருக்கும் மற்றொரு யானைக்குட்டி தானும் அவ்வாறே பால்குடிக்கக் காத்து நிற்கிறது. சிற்பி தன் அதீதக் கற்பனையைக் கல்லில் கலைப்படைப்பாக உருவாக்கியுள்ளது மிகவும் வியக்கத்தக்கது.

திருவிளையாடற்புராணத்தில் மதுரைச் சொக்க நாதன் ஒரு **தாய்ப்பன்றியாக** வடிவெடுத்து, அலமந்து நிற்கும் **பன்றிக் குட்டிகளுக்குப் பாலருத்திய திருவிளையாடல்,** சிற்பியின் மனத்தில் ஒரு வகைக்கற்பனையைக் கிளர்ந்தெழச் செய்து இவ்வாறு கலைப் படைப்பாக உருவாக்கச் செய்திருக்குமோ என யாருக்கும் நினைக்கத் தோன்றும்.

5) தாய்ப்பாசம் புலப்படுத்துஞ் சிற்பங்கள்:

உலகத்தில் உயிர்களிடையே நிலவும் பல உணர்ச்சிகளிடையே அன்புணர்ச்சியே மிக உயர்ந்ததாகும். அதிலும், **'தாய் சேய்'** — அன்புப் பிணைப்பிற்கு ஈடு இணை எதுவுமில்லை. அடியார்கள் இறைவனிடம் கொள்ளுங் கடவுட் காதலைப் புலப்படுத்துகையில், 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' நிற்றலைக் கூறுவர். ஒப்பீட்டு நோக்கில் புலப்படுத்துகையில், ஈன்றணிமையுடைய **பசு** தன் கன்றினிடத்துக் கொள்ளும் பாசவுணர்ச்சியைக் —கன்றை நினைந்து நினைந்து கசிந்து உருகுந்தன்மையை — அன்பின் பேரெல்லைக்கு உவமையாகக் காட்டுவர்; தன் கன்றை நக்கிக் கொடுத்துத் தன் அன்புணர்ச்சியைப் புலப்படுத்துதலையும் சுட்டுவர். இதனை மனத்துட் கொண்ட **மணிவாசகர், திருப் புலம்பலில்** ,

''உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே'' (3)

(கற்றா—கன்று, ஆ; கன்றையுடைய பசு)

எனப் பாடிக் காட்டுவதால் உணரலாம், கன்றையிழந்த பசுவின் மனத்துடிதுடிப்பையும் கதறலையும் திருவாரூரில் நடைபெற்ற

'ஆராய்ச்சிமணி' நிகழ்ச்சியால் — மனுநீதிச் சோழன் தன் மகனைத் தேர்க்காலில் இட்டு முறை செய்த நிகழ்ச்சியால் — நன்கு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறான நிகழ்ச்சிகளையெல்லாம் சிற்பிகள் தங்கள் அரிய கலைப்படைப்புக்களால் மக்களுக்குத் தெரியச் செய்துள்ளனர். இஃது ஒரு புறமிருக்க, மக்களினத்தில் பிள்ளையிடம் கொண்ட அன்பைத் தாய் எவ்வாறெல்லாம் புலப்படுத்தியுள்ளாள் என்பதைப் பாரதத்திருநாட்டில் பல பகுதிகளிலும் சிற்பியர் சிற்பக்கலை வாயிலாக உணரச் செய்துள்ளனர். மேலும், தெய்வ நலப்படைப்பாக, முருகனுடன் உமாதேவி இருத்தலையும், சிவனுக்கும் உமையம்மைக்கும் இடையே முருகன் இருந்தலையும் (சோமாஸ்கந்த மூர்த்தம்) கண்டுபோற்றி நிற்கலாம்.

வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயத்தில், குழந்தையுடன் கொஞ்சும் தாய் மிக நேர்த்தியாகச் சிற்பவடிவில் வடிக்கப் பட்டுள்ளது. ஒப்பியல் நோக்கில், கஜீராஹோ, காந்தாரம், புவனேஸ்வர் முதலிய பல இடங்களில் அன்புப் புலப்பாட்டுச் சிற்பங்களைக் கண்டு போற்றி நிற்கலாம்.

6) தஞ்சைப் பெரிய கோயிலில், அம்மையின் இடுப்பில் குழந்தை:

பெரியகோயில் இராசராசன் திருவாயிலில் 'அருச்சுனன் பாசுபதம் பெற்ற வரலாறு' பற்றிய சிற்பத்தொகுதி உள்ளது. இதில் வேட்டுவக்கோலத்தில் காணலாகும் உமையம்மையின் இடுப்பில் குழந்தை முருகன் இருத்தலைப் படைத்துள்ளனர்.

''அப்பாவும் அம்மாவும் அருச்சுனனைக் காப்பாற்ற வேட்டுவக் கோலத்தில் சென்ற போது முருகனும் குழந்தையாக உமை இடுப்பில் அமர்ந்து சென்ற குறிப்பு வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

மகாபாரதத்தின் எந்த இடத்திலும் வேட்டுவக் கோலத்தில் சென்ற பெற்றோருடன் முருகன் இருந்த தகவல் இல்லை. 'கிராதார்ச்சுனீயம்' என்னும் அழியாக்காவியம் படைத்த பாரவியும் இந்தத் தகவலைத் தரவில்லை.

பதினான்காம் நூற்றாண்டில் செய்யப்பட்டதாகக் கருதப் படும் வில்லிபாரதம் இந்தத் தகவலைத் தருகிறது. ராஜராஜன் திருவாயில் சிற்பங்களைப் பார்த்துப் பாடியதுபோல வில்லியின் பாசுபத வரலாறு அமைந்துள்ளது''[1] என்று டாக்டர் இரா. கலைக் கோவன் ஆய்வடிப்படையில் எழுதுவது மனங்கொள்ளத் தக்கது.

7) திருவாரூரில் நீலோத்பலாம்பிகையும் குழந்தை முருகனும்:

திருவாரூர்த்தியாகேசர் கோயில் இரண்டாம் பிராகாரத்தில் தெற்கு முகமாக இருக்கும் நீலோத்பலாம்பிகை கையில் செண்டு ஒன்று ஏந்தி நின்ற கோலத்தில் திருவுருவம் அமைந்திருக்கக் காணலாம். அருகே தோழி ஒருத்தி தன் தோள் மீது முருகனைச் சுமந்து நிற்பதையும், அம்மை தன் இடக்கரத்தால் முருகனது சுட்டுவிரலைப் பிடித்திருப்பதையும் காணலாம்; மற்றக்கோயில்களில் இல்லாத தனிச்சிறப்பாக இச்சிலையமைப்பு உள்ளது என்பது குடவாயில் பாலசுப்பிரமணியன் கருத்து.

8) கடிதம் எழுதும் நங்கை:

ஆலய வளாகத்தில் ஆன்மநலமாகிய பேரின்பங் குறித்த சிற்பங்கள் ஒருபுறமிருப்பினும், உலகியல் சிற்றின்பங்குறித்த சில சிற்பங்களும் இடங்கொண்டுள்ளமை பற்றி முன்னரே கண்டோம். காதலின்ப நோக்கில் நங்கையர் கடிதமெழுதுவதும் நாட்டுப் பண்பாட்டுடன் பொருந்தியதே.

வடநாட்டு நாடகக் காப்பியமாகிய 'சாகுந்தலம்' காளிதாச ரால் இயற்றப்பெற்றது அதனில், துஷ்யந்த மன்னனுக்குச் சகுந்தலை கடிதமெழுதியதை நாடகம் இயைபுடன் குறித்துச் செல்லும். தமிழ் நாடகக் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில், கோவலனுக்கு மாதவி எழுதிய கடிதம் குறிக்கப்பெறும். இவ் வாறாகக் காணலாகும் காப்பியக் கடிதங்கள் பற்றிச் சிற்பியர் கற்றுத் தெரிந்திருக்கலாம்; எனவே, கடிதம் எழுதும் இளநங்கை யைச்சிற்பத்தில் வடித்துக் காட்டியுள்ளனர் ஆலயவளாகத்திலே

1. ஓம்சக்தி, 13 ஆம் ஆண்டுத் தொடக்க இதழ், பிப்ரவரி, '95, பக். 28-29

'நங்கையர் இல்லையெனில் அழகுக் கலைமலர்ச்சியோ கலையின்பமோ இல்லை' எனும் அறிஞர்களின் கருத்திற்கு அணி சேர்க்கும்வகையில், கடிதம் எழுதும் இளநங்கையும் சிற்பத்தில் நிலைபேறு கொண்டுள்ளாள்.

9) ஸ்ரீ பெரும்புதூர்—பசு, லிங்கத்தின் மீது பால் சொரியுங் காட்சி:

கண்ணப்பர் அன்பின் மேல்வரிச் சட்டமாகத் தம் கண்ணையே இடந்து இறைவன் திருமேனியில் அப்பிய காட்சி அன்பின் சிறந்த புலப்பாடாகும். கடவுட் காதலாகிய பக்தி வளாகத்திலே பறவைகளையும் விலங்கினங்களையும் வைத்துக் காட்டும் சிறப்பு, சமயவுலகில் காணும் வியப்பாகும். இவ்வாற்றான், பூதபுரி எனும் ஸ்ரீ பெரும்புதூர் ஈசன் கோயில் மகாமண்டபத்தில் — சிற்பக் கலைக்கூடமாகத் திகழும் அந்த மண்டபத்தில் — காலசம்மார மூர்த்தி, இராமர், மீனாட்சி திருமணம், வீரபத்திரர், அர்த்த நாரீசுவரர் முதலிய அழகிய சிற்பவரிசையில் முதன்மையாகக் காணத்தக்கது, 'காராம்பசு சிவ லிங்கத்தின் மீது பால் சொரியும் காட்சி'யாகும். இதைத் தவிர வேறு சில ஆலயங்களிலும் இத்தகைய வியத்தகு சிற்பக்காட்சி உண்டென்பர்.

III வியத்தகு செப்புத் திருமேனிகள்:

1) கால்மாறி ஆடின தாண்டவர்:

மதுரை வெள்ளியம்பலத்தில் இராசசேகர பாண்டியன் வேண்டு கோளுக்கிணங்கிய நிலையில் ஆடல்வல்லான் ஊன்றிய தன் வலக்காலைத் தூக்கிய வண்ணமும் தூக்கிய இடத்திருவடியை ஊன்றிய வண்ணமும் ஆடியருளினார். மதுரைக் கோயிலில் உள்ள செப்புத்திருமேனியில், கால்மாறியாடிய நிலையில் பத்துத் திருக்கைகள் உள்ளன. வரதக் கைக்குப் பதிலாக மேல் வலக் கைகளில் உடுக்கை, அங்குசம், கட்கம், கதை, ஆகிய படைகளும், முதல் இடக்கை வலப்பக்கம் மடித்து வீழமைப்பும் (டோலஹஸ்தம்) மற்ற நான்கு இடக்கைகளில் அனல், பாசம், கிடுகு, மேல் அகன்று கீழே சுருங்கியுள்ள ஒருவகைப் படை ஆகியவையும்

கொண்ட திருக்கோலத்தில், வலப்பக்கச் சடையில் கங்கையும் இடப்பக்கச் சடைமீது பிறைச் சந்திரனும், ஊன்றிய இடக் காலின் அடியில் முயலகனும் அமையத் திருவாசியுடன் கூடிய பீடம் உள்ளது.

2) பொன்பதிர்கூடம்—ஸ்ரீசதுர்பு ஜராமர்:

இராமாயணத்தில் அருள்மிகு **இராமன்,** ''மானுடம் வென்ற தம்மா!'' எனும் திருவாக்கிற்கு இலக்கியமாக, மானுடத் திருவுருவத்தில் இரு கைகளுடன் இயங்கியதைச் சமயவுணர்வுடன் பலரும் அறிவர். இதற்கேற்பவே பல திவ்ய தேசங்களில். சிறப்பாக இராமன் கோயில்களில், இராமன் திருமேனி இரு திருக்கைகளுடன் அமைந்திருப்பது மிகப் பொருத்தமாகும். எனினும், சிற்பியர் தம் கலைக்கற்பனையால் இராமன் திரு மேனியில் **நான்கு திருக்கைகளை** அமைத்துள்ளனர். இவ்வாறு அமைக்கப்பட்ட **'ஸ்ரீ சதுர்புஜராமர்'** — செப்புத்திருமேனியைச் செங்கற்பட்டு (செங்கை அண்ணா) மாவட்டம் **பொன்பதிர் கூடம்** எனும் ஊரில் காணலாம்.

அருள்மிகு **கண்ணனது அவதாரத்தில்** மும்முறை நான்கு திருக்கைகளுடன் திருக்காட்சி வழங்கியுள்ளதாகத் திருமாலடிய வர்கள் கூறுவர். அவ்வாறான நிலையில் **சதுர்புஜக்கண்ணன்** செப்புத்திருமேனி பற்றித் தமிழகத்தில் கள ஆய்வு செய்திடின் பல செய்திகள் காணவாய்ப்பு ஏற்படலாம் என்பது ஈண்டு இயைபுடன் சிந்திக்கத்தகும்.

(சதுர்புஜராமனைச் சிற்பியர் உருவாக்கியதற்குக் காரணங் களை ஆராய்ந்த **திருமதி கமலா மாரியப்பன்** (கோவை) கூறுவது பண்பாட்டு நோக்கில் மிகவும் சிந்திக்கத்தக்கது. **வால்மீகி ராமாயணம்** சிற்பியருள்ளத்தில் இத்தகைய கலைப்படைப்பை உருவாக்குதற்குத் துணைபுரிந்திருக்கலாம் என்பது ஒப்பீட்டு நோக்கில் போற்றத்தக்க குறிப்பாகும்)

''வால்மீகி ராமாயணத்தின் படியே ராமன் மூன்று சந்தர்ப் பங்களில் சதுர்புஜதாரியாய்த் தரிசனம் அளிக்கிறார். 1. அவதார காலத்திலேயே **கௌசல்யா தேவிக்கு,** 2. பிறகு, **ரிசியமுச**

பர்வதத்தில் ஆஞ்சநேயருக்குத் தரிசனம் அளிக்கிறார். 3 போர்க் களத்தில் தசக்ரீவன் (இராவணன்) சாய்ந்து விட்டான். எதிரே நிற்கும் மயன்புத்திரி மண்டோதரிக்குச் சதுர் புஜனாகக் காட்சி தருகிறார் இராமர்.

இப்படி மூன்று சந்தர்ப்பங்களில் இராமன் சதுர்புஜதாரியானார் என்கிறது இதிகாசம்'' — [சப்தகிரி (திங்களிதழ்), டிசம்பர், 1986].

3) அனந்த மங்கலத்து அனுமன்:

மயிலாடுதுறை — தரங்கம்பாடிப் பாதையில் பொறையாறு புகை வண்டி நிலையத்துக்கு வடக்கே 2.5 கி.மீ. தொலைவில் உள்ளது அனந்த மங்கலம் எனும் திருத்தலம். இங்கு எழுந்தருளியுள்ள அனுமனுக்குப் பண்டு தொட்டே பல ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தன என்றும், அவையெல்லாம் கால வெள்ளத்தால் அழிந்து போகவே எஞ்சியிருப்பது இப்போதுள்ள ஒரே பழைய கோயில் என்றும் கூறுவர். இக்கோயிலினுள் முதலில் காட்சியளிப்பவர் கருடாழ்வார். அவரை வழிபட்டுக் கொண்டு மேலே நடந்தால் அருமையான அனுமன் சந்நிதியைக் காணலாம்.

அங்கே அனுமன் திருப்பெயர் திரிநேத்ர தசபுஜ வீரஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி ஆகும். "இந்த மூர்த்தி பஞ்சலோகத்தால் ஆனது. உயரம் 4 அடி; மூன்று கண்கள்; அவர் அரக்கர்களை அழிக்கப் புறப்பட்ட போது, நெற்றியிலுள்ள கண் அவருக்குச் சிவபெருமானால் அருளப்பட்டதாம்! தம் தசபுஜங்களுள் வலப்பக்கம் உள்ள ஐங்கரங்களில் முறையே சக்கரம், திரிசூலம், மத்தாட்ஜம், அம்புஜம், அங்குசம் ஆகியவையும், இடப்புறம் உள்ள ஐங்கரங்களில் சங்கு, பத்மம், பாசம், கோதண்டம், நவநீதம் ஆகியவையும் கொண்டு வீரம் பொங்க அருளுகின்றனர் அனுமன்! அவர் கைக் கொண்டுள்ளவற்றுள் அங்குசம் பிரம்மாவினாலும், சங்கு சக்கரம், மத்தாட்ஜம் (வலியசக்திக்கருவி) மூன்றும் விஷ்ணுவினாலும், கோதண்டம், நவநீதம் இரண்டும் இராமபிரானாலும், இறக்கைகள் கருடனாலும், பத்மம் ஈசுவரியாலும், அவர் அரக்கரை

அழிக்கப் புறப்பட்ட போது அருளப்பட்டவையாகும்"[1] எனத் **திருமேனி நாகராசன்** விளக்கிக் கூறுவது சிந்தித்துப் போற்றுவதற்குரிய செய்தியாகும்.

4) திருப்பூவண நாதர் சிலை:

தமிழகச் சிற்ப வரலாற்றில் தனி முத்திரை பதித்த வியத்தகு சிலை இதுவாகும். திருவிளையாடற் புராணத்தாலும் புகழ்ப்பெற்ற சிலை இது எனலாம்.

பொன்னனையாள் என்ற சிவபக்தை நற்பண்புகளின் இலக்கியமாகத் திகழ்ந்தவள். அவளுக்கு உள்ள ஆசை, சிவபெருமானை நல்ல பஞ்சலோகத்தில் ஒரு மூர்த்தியாக வடித்துப் பார்க்க வேண்டும் என்பதாகும். போதிய பொருளின்றி இத்தகைய விருப்பங் கொண்டிருக்கும் அவளது எண்ணம் நிறைவேற இறைவனே ஒரு சித்தர் வடிவில் வந்து, அவளுடைய வீட்டில் கிடக்கும் இரும்பு செம்பு ஈயம் பித்தளை முதலியவற்றைக் கொணரச் செய்து, அன்று இரவே தன் இரசவாத வித்தையால் நல்ல உலோகமாக்கித் தந்து விட்டு மறைந்து விடுகிறான். அந்த உலோகத்தைக் கொண்டு பொன்னனையாள் தேர்ந்த சிற்பியரைக் கொண்டு நேர்த்திமிகு இறைத் திருவுருவத்தை அமைக்கச் செய்து, கண்டு ஆனந்திக்கிறாள்; அழகிய அந்தப் பிரானது கன்னத்தைத் திருகி முத்தமிட்டுக்களிக்கிறாள். அவள் பெற்ற அழகனுபவத்தைப் **பரஞ்சோதியார்,**

"மழவிடை உடையான் மேனி வனப்பினை நோக்கி அச்சோ!
அழகிய பிரானோ என்னா அள்ளி முத்தங் கொண்டு அன்பில்
பழகிய பரனை யானும் பரிவினால் பதிட்டை செய்து
விழவுதேர் நடத்திச் சின்னாள் கழிந்தபின் வீடு பெற்றாள்"

என்று பாடிச் செல்கிறார். அத்தகைய சிற்ப எழில் மிக்க திருவுருவத்தை இன்றும் திருப்பூவணத்தில் கண்டு களிக்கலாம்.

5) காரமடை நஞ்சுண்டேசுவரர் கோயில்—சந்திரசேகரர்:

காரமடை ஆலயத்துச் சந்திரசேகரரின் உலோகப் படிமம் (உற்சவர்) வியத்தகு அமைப்பையுடையது. "பிற ஆலயங்களில்

1. மஞ்சரி [திங்களிதழ்], பிப்பிரவரி, 85

சந்திரசேகரரின் திருமுடியில் கங்கையின் தலை மட்டுமே காணப்படும்; இக்கோயிலில் சந்திரசேகரரின் திருமுடியில் கங்கையின் முழு உருவத்தையும் காணலாம்''[1]

6) வடமதுரை வடிவழகிய இராமர்:

திருமாலின் பல அவதாரங்களுள் ஒன்றாகிய **இராமாவதாரத்தில்** தான் தெய்வநலப்பேரழகு மிகுதியாகக் குடிகொண்டு இருக்கும், கண்ணனவதாரத்தில் கூட இந்த அளவுக்குப் பேரழகை எதிர்பார்க்க வியலாது என்பர். எனவே, திருமால் கோயில்களில் **இராமனைக்** கற்சிற்பத்திலோ உலோகத்திருமேனியிலோ வடித்தெடுக்கச் சிற்பியர் தம் முழு நாட்டத்தையும் செலுத்துவர்.

பல ஆலயங்களில் இராமர் சிலைகள் இருப்பினும், தஞ்சாவூர் மாவட்டம் வடுவூரில் **கோதண்டராமர்** சிலையும், **வடமதுரை வடிவழகிய இராமர்** சிலையும் மிக வியக்கத்தக்க வேலைப்பாடு கொண்டவை. ஈண்டு வடமதுரையிலுள்ள சிலைபற்றிக் காண்போம்.

சென்னையிலிருந்து பெரிய பாளையம் செல்லும் வழியில் பெரிய பாளையத்திற்கு ஒரு கல் முன்பே இறங்கி இடப்பக்க வழியில் அரைக்கல் தொலைவு சென்றால் வடமதுரையை அடையலாம். இங்குள்ள இராமர் ஆலயத்தில் அழகே உருவெடுத்த இராம இலக்குவர் செப்புத்திருமேனிகளைக் காணலாம். ''தாமரைமுக மண்டலம், கருணை பொழியும் கண்கள், மோகன முறுவல், பத்மபாதம், இப்படைப்புக்களுக்கணியாகக் கிரீட மகுடம், குண்டலம், ஆரம்பூண்டு, பொன்பொட்டிட்டுப் பிடரியில் கேசம் சுருண்டு வழிய, **ராமனின் அழகு** பார்த்துப் பார்த்து ரசிக்க வேண்டியது''[2] என்று **வெ. நாராயணசுவாமி** கலையனுபவத்துடன் எழுதிச்செல்வதைக் காண்க.

இந்தத் திருமேனி, அபூர்வமான கருப்புவெண்கலத்தினால் ஆகியது. இது முதலாம் இராசேந்திரன் காலத்தைச் சேர்ந்தது என்பர்.

1. ஆன்மிகந் தழைக்கும் அற்புத ஆலயங்கள், பக். 33
2 தமிழக அற்புத ஆலயங்கள், பக். 131, 135

7) அழகர்கோயில் ஆண்டாள்:

மதுரைக்கு அருகிலுள்ள அழகர் கோயில் பல நோக்கில் சிறப்புடையது. அக்கோயில் வடக்குப்பிராகாரத்தில் ஆண்டாள் சன்னிதி உள்ளது. "உற்சவமூர்த்தியான ஆண்டாள் மற்றத் தலங்களைப் போல் அல்லாது, உட்கார்ந்திருக்கும் பாவனையில் இருக்கிறது. சுந்தரராஜர் தமது திருக்கல்யாண தினத்தன்று ஸ்ரீதேவி, பூதேவி, கலியாணசுந்தரவல்லி, ஆண்டாள் என்னும் தேவிமார்கள் நால்வருடன் எழுந்தருளுகிறார். ஸ்ரீ ஆண்டாள் ரங்கநாதரையும் அவருடைய அம்சமான சுந்தரராஜரையும் தம் கணவனாக வரித்துக் கொண்டார் என்று சொல்லப்படுகிறது"[1] எனத் **தொ. மு. பாசுகரத் தொண்டைமான்** எழுதிச் செல்வது காண்க.

8) அரன்வாயல் நிசும்ப சூதனி:

தொண்டைநாட்டுத் திருவள்ளூருக்கு 8 கி.மீ. தென் கிழக்கிலுள்ளது **அரன்வாயல்** (திருப்பாசூருக்கு எல்லையாக வுள்ளது); இவ்வூர்க் **காளி விக்கிரகம்**, சோழர் காலத்திய உலோகவார்ப்புக் கலை நேர்த்தியைப் புலப்படுத்தும்.

காளிவழிபாட்டின் வளர்ச்சியைக் குறித்த நிலையில், **விசயாலய சோழன்** தஞ்சைப் பெரியகோயிலில் எடுப்பித்த **நிசும்ப சூதனியை** யொத்த கலைப்பாணியில், செப்புத்திருமேனியாக ஒரு வியத்தகு கலைப்படைப்பு உள்ளது. அரன் வாயலில் காணலாகும் இதனை **வெ. நாராயணசாமி** ஒரு கட்டுரையில் விளக்குகையில், "அக்கினிச் சுடரை விளிம்பு அணியாகக் கொண்ட **திருவாசி, கேடயம், பாசம்,** மணி, **கபாலம், கத்தி, வாள், அம்பு, சூலம்** எட்டுக்கைகளிலும் மின்னக், கச்சையணிந்த மார்பில் கபால யஞ்ஞோபவிதம் (மண்டையோடு கோத்த பூணூல்) புரள, மண்டையோடுகள் பிரபையாய் ஜொலிக்கச் செந்தீ கேசமாய்க் கிளர்ந்தெழ, உக்கிரத்திலும் கருணை ததும்பப் பிராகாரத்தில் வீற்றிருக்கிறாள். அமுத மருத்திய செப்பனைய தனத்தினள். 'சிறுமுறுவல் தரளத்

1. வேங்கடம் முதல் குமரிவரை, பக் 111

திருவதனத்தினள்,' என்ற கலிங்கத்துப்பரணி வருணனை எவ்வளவு அற்புதமாய்ப் பொருந்துகிறது, காலடியில் மிதிபடும் அரக்கன் **மகிஷன்** அல்ல, நிசும்பனையும் வதம்செய்தவள் காளி, இவ் விக்ரகம் நிசும்ப சூதனியாயிருக்கலாம்,''[1] என்று குறித்திடுதல் மிகவும் சிந்திக்கத் தக்கதாகும்.

9) திரு அம்பர் மாகாளத்து மோகினி:

பெரியபுராணத்தில் கூறப்படும் **சோமாசி மாற நாயனார்,** யாகம் புரிந்த சிறப்பிற்குரிய இடம், திரு அம்பர்மாகாளத்தில் மாகாளத்துக்கும் அம்பருக்கும் இடையே உள்ளது. அங்கே அச்சந்தீர்த்த விநாயகர் கோயிலுக்கு அருகே வீற்றிருந்த பெருமாள் கோயிலைக் காணலாம். அங்குள்ள வியத்தகு **மோகினி** –திருவுருவம் காணத்தக்கது. ''மோகினியின் அழகிய திருவுருவம் காணப்படும். அதை அருச்சகர் தீண்டிப் பூசை செய்வதில்லை. தூரத்திலிருந்து கொண்டு, ஆடை முதலிய வற்றைக் கோலால் களைவதும் சாத்துவதும் செய்கின்றனர். உலக உயிர்களுக்கெல்லாம் ஊன்றுகோலாக உதவும் அம்மை யாருக்கு இங்கு ஒரு வகைக்கோலால் தொண்டுபுரிவதிலும் ஒரு சிறப்பு உள்ளது''[2] என்று வரும் குறிப்பு நோக்கத்தக்கது.

ஒப்பு நோக்கு ஆய்வில், திருவரங்கத்தில் திருவிழாக் காலத்து எழுந்தருளும் மோகினி (உற்சவர்) திருமேனியையும் அம்பர் மாகாளத்து மோகினியுருவச் சிறபத்தையும் இணைத்துச் சிந்தித்தால் சில தெளிவுகள் கிட்டும்.

10) தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ள இரிடபதேவரும் அம்பிகாவும்:

இடபம் அருகில் இல்லாமலேயே, சிவபிரான் இடபத்தின் அருகில் அதன்மேல் சாய்ந்த வண்ணம் தன் வலக்கையை அதன் முதுகில் வைத்திருக்கும் தோற்றத்தில் காணப்படுகிறான்; இந்தச் செப்புத்திருமேனி தஞ்சைக் கலைக்கூடத்திலுள்ள மிக மதிப்புள்ள திருமேனிகளுள் ஒன்றாகப் போற்றப் படுகின்றது.

---

1. தமிழக அற்புத ஆலயங்கள், பக். 74
2. தினமணி-நாளிதழ், 25-2-73

நீண்டு உயர்ந்த தோற்றமும், வியத்தகு சடையலங்காரமும், சடையுடன் சுற்றிக்கிடக்கும் பாம்புகளும், தன் இடக்கையை (இளம் பெண்ணைப் போல) ஒயிலாகத் தன் தொடைமீது தொட்டுக்கொண்டிருக்கும் பாங்கும் இத்திருமேனியின் சிறப்பை நன்கு எடுத்துக்காட்டும்.

இரிடபதேவரின் அருகில் அம்பிகை உமையும் மிக நேர்த்தியுடன் பெண்மைக்குரிய எழிலுடன் காணப்படுகிறாள். இந்தச் செப்புத் திருமேனியும் இரிடபதேவரின் எழிலுக்கு எழில் கூட்டுவதாக உள்ளது

இந்த வியத்தகு சிலைகளின் முன்னழகை அட்டையின் முன் பக்கத்திலும் பின்னழகை அட்டையின் கடைசிப் பக்கத்திலும் நேர்த்தியாக அச்சிட்டு, அமெரிக்காவில் நடைபெற்ற கண் காட்சிமலரில் வெளியிட்டுப் பெருமை கொண்டனரெனின், அவற்றின் கலைச் சிறப்பை என்னென்பது?

11) வைணவ ஆலயங்களில் பாலகிருஷ்ணன் சிலை:

பல வைணவ ஆலயங்களிலும் ஆலிலையில் பள்ளிகொண்ட கண்ணனாகிய குழந்தை — பாலகிருஷ்ணன் — பூசையிலுள்ள உலோகத்திருமேனி சமயவுலகில் பக்தியூற்றத்தின் சிறந்த புலப்பாடாக மக்களிடையே போற்றப்படுகிறது. குழந்தைப் பேற்றுக்காகத் தவங்கிடப்பவர்களிடம், பூசைநியதியுடன் அர்ச்சகர் உரிய மந்திரஞ்சொல்லிப் பாலகிருஷ்ணன் திருமேனியை வழங்குவார். அதனை மடியில் கிடத்தித் திருவருளை வேண்டிக் கொண்டே தம்பதியர் அர்ச்சகரிடம் திருப்பித் தருவர்; தீட்சை பெறாத மக்களிடமும் கைப்பட்டுத் திரும்பும் பாலகிருஷ்ணன் திருமேனி என்றுமே தெய்வநலத் தூய்மையுடன் விளங்கும்; அதற்கெனத் தனியே பரிகாரம் (கழுவாய்) எதுவும் செய்யத் தேவையில்லை என்பது சிறப்பாக நோக்கத்தக்கது. படையலிட்ட வெண்ணெய்யைத் தம்பதியர் உட்கொள்ள வேண்டுமென்பதும் மரபு.

V சிற்பியர் திறப் புலப்பாடு:

சிற்பியர் தம் திறமையை உருவச் சிற்பங்களிலும் கொடிக் கருக்கு வேலைப்பாடுகளிலும் பிற புது மாதிரிகளிலும் (Designs)

வெளிப்படுத்தியுள்ளனர்; அவற்றிலே தம் கலைக் கற்பனையை இயன்ற வரையில் பயன் படுத்தியுள்ளனர், சில படைப்புக்கள். காண்போரைச் சுண்டியிழுத்துச் சிந்திக்க வைக்கும் பாங்கினில் வேடிக்கையாகவும் வியப்பாகவும் உள்ளன. ஏன் இவ்வாறெல்லாம் படைத்துள்ளனர் என்று ஒவ்வொன்றுக்கும் காரணம் கூற வியலாது; சிலர், சிற்பியர் நினையாத அளவுக்குக் காரணங் களைக் கற்பிக்கவும் முயலுவர்.

1) சிற்பச் சங்கிலிகளும் கல்வளையமும்:

உலகத்தில் வேடிக்கையாக **மணலைக் 'கயிறாய்த் திரித்தல்'** பற்றிப் பேசுவர். கலையுலகில் சுதைவேலைப்பாட்டில் கயிறு களை அமைத்துக்காட்டுகின்றனர். சில கோயில்களில் கருங் கல்லை மிக நயமான உளிகளினால் செதுக்கிச் சிற்பச் சங்கிலி களையும் அமைத்துள்ளனர். இவ்வாறான சிற்பச் சங்கிலிகள் தூண்களின் வளைந்த மேற்பகுதியிலிருந்து தொங்கிக் கொண்டி ருத்தலைக் காணலாம்.

தில்லை நடராசர் ஆலயத்தில் கொடி மரத்தருகேயுள்ள தூண்களிலும், சிவகாமியம்மன் ஆலயத்தூண் ஒன்றிலும் கருங்கற்சிற்பச் சங்கிலிகளைக் காணலாம்.

பிரான்மலையின் அடிவாரத்தில் **திருக்கொடுங்குன்ற நாதர் ஆலயம்** உள்ளது. அவ்வாலயத்தின் வடகிழக்குப் பிராகாரத்தின் கூரைப்பகுதியில் தொங்கும் **கல்வளையங்கள்** சிற்பக்கலைச் சிறப்பு மிக்கவையாக விளங்குகின்றன.

ஸ்ரீமுஷ்ணம் பூவராகசுவாமி கோயில் சிற்பச்சிறப்புமிகு மண்டபத்தில் (40 அடி சதுர மண்டபத்தில்) மேற்கூரையிலிருந்து **இரண்டடிச் சங்கிலிகள்** மூன்று தொங்குவதைக் காணலாம்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலுள்ள முன் முகப்பு மண்டபம் (நந்தி மண்டபத்திற்கு மேற்கேயுள்ள வாயில் மண்டபம்) மேல் விதானத்தில் இரு நாகப்பாம்புகள் (சித்திரக்கவி - நாகபந்தம் போல்) பின்னிக் கொண்டிருப்பது

போன்ற கோல அமைப்பு உள்ளது; அதன் நடுவிலிருந்து ஒரு **பெரிய வளையம்** தொங்குதல் காண்க.

2) குடந்தை சாரங்கபாணி கோயிலில் நவராத்திரி மண்டபச் சிற்பங்கள்:

பெண் ஒருத்தி இரு கைகளைத் தரையில் ஊன்றியவாறு பக்கத்தே இரு புறங்களிலும் தனித்தனியே காலூன்றி நிற்பது போலவும், அவளே மேலிரு புறங்களிலும் தனித்தனியே கால் களை உயரே தூக்கியவாறும் (மொத்தம் நான்கு நிலைகளில் — (Poses) காட்டப் பெற்றிருக்கிறாள்.

குடந்தை சாரங்கபாணி கோயில் அச்சுத பூபால மண்டபம் எனும் நவராத்திரி மணிமண்டபமாகிய ஊஞ்சல் மண்டபத்தின் நடுவேயுள்ள தூண்களில் தென்கிழக்குத் தூணில் (மேற்கு நோக்கிய நிலையில்) இந்தச் சிற்பத்தைக் காணலாம்.

குடந்தை சாரங்கபாணி கோயில் ஆராவமுதன் சன்னிதிக்கு முன்புள்ள திருமாமணி மண்டபத்தின் விதானத்தில் பூ வேலைப் பாடுடைய வட்டமும் யாளி வரிசையும் பல்வேறு புராணச் சிற்பங்களுமுடைய சதுரத்தின் நான்கு கோடியிலும் பெண் ஒருத்தி இரு கைகளைத் தரையில் ஊன்றியவாறு, பக்கத்தே இரு புறங்களிலும் தனித்தனியே கால்களைக் கீழே மடக்கியூன்றி யும், அவளே இரு புறங்களிலும் மேலே தூக்கியும் சிற்பத்தில் காட்டப்பட்டிருப்பதைக் காணலாம். பெண்ணால்தான் உடம்பை எளிதில் இவ்வாறெல்லாம் மடக்கிக் காட்ட முடியும் என்று நினைத்தானோ என்னவோ, சிற்பி இவற்றைச் செய்து காட்டியுள்ளான்.

3) பட்டீசுவரர் - இசை யொலியுடன் கூடிய நந்தி:

கும்பகோணம் வட்டம் பட்டீசுவரர் **இராமலிங்கசாமி கோயிலில்** (சிறு கோயிலில்) காணலாகும். **நந்தியில்** வியத்தகு வேலைப்பாடு உள்ளது. அந்த நந்தியைத் தட்டினால் இசை யொலி எழுதலைக் கண்டு யாரும் வியப்புறுவர்.

4) குரங்குச் சிற்பம்:

பழநி—**ஆவினன்குடி** (பொதினி)யில் பல சிறு திருக்கோயில்கள் உள்ளன. நாயக்கர் காலத்தில் கட்டிய நடராசர் கோயிலை நகரத்தாரும் நாடாரும் புதுப்பித்துத் திருப்பணி செய்துள்ளனர். இங்குள்ள சபா மண்டபத்தில் வியத்தகு **குரங்குச் சிற்பம்** உள்ளது. ''மூன்று உடல்களில் ஒரு குரங்குத் தலையிருப்பது அதிசயமாக இருக்கும் — மனத்தின் அடையாளம் ஆணவம். அது தலைதூக்கினால் மனத்தின் பிற மூன்றும் தலையெடுக்க முடியாதென்று பொருள்''[1] என்று **பேராசிரியர் அ. அறிவொளி** எழுதிச் செல்வது காண்க.

5) தருமபுரி ஆலயத்தில் தொங்கும் தூண்கள்:

தமிழக வரலாற்றில் குறுநில மன்னர்கள் கலைப்பணி நிரம்பப் புரிந்துள்ளனர். அவர்களுள், தகடூரைத் தலைநகராகக் கொங்கு நாட்டை ஆண்டு வந்த அதிகமான் பரம்பரையினர் குறிப்பிடத்தக்கவர்கள். நாமக்கல் குகைக் கோயிலில் வியத்தகு சிற்பங்களைப் படைத்த இவர்களே. தம் **தகடூர்** மல்லிகார்ச்சுனேசுவரர் திருக்கோயிலையும் அருங்கலைக் காட்சியகமாக ஆக்கியுள்ளனர். சிற்பக்கலைப் பண்பாட்டு முத்திரை இங்கே பதிந்துள்ளதென்பர் பலர்.

இவ்வாலயத்து முன் பகுதியிலுள்ள **நவரங்க மண்டபம்** கட்டட அமைப்பாலும் சிற்பமாட்சியாலும் நுளம்பர் காலத்தைச் சேர்ந்த கலைக்கூறுகளை வெளிப்படுத்துகின்றன என்று அறிஞர்கள் கூறுவர். ''இம்மண்டபத்தின் முழு பாரத்தையும் தாங்கி நிற்கும் வேலைப்பாடு மிக்க **இரு தொங்கும் தூண்கள்** ஓர் அற்புதமான படைப்பு. இவற்றின் கீழ்ப்பகுதி பூமியைத் தொடாமல் நிற்கின்றன. அவ்விடத்தில் ஒரு நூல் அல்லது சிறிய துணியைத் தூணுக்கு இடையே செலுத்துமளவு சிறிய இடைவெளி உள்ளது. இத்தூண்கள் அக்காலத்தைச் சேர்ந்த கலைஞர்களின் கைத் திறமையை வெளிப்படுத்துகின்றன. இவை ஒவ்வொன்றும் இரண்டு டன் எடை உடையன.

1. பழநி (மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்) பக். 51

இவற்றையலங்கரிக்கும் சிறிய சிற்பங்கள் ஒரு வரலாற்றுச் சம்பவத்தையோ புராணக்கதையையோ குறிப்பிடுவதாக இருக்கலாம்'[1] என்று வருங்குறிப்பினைக் காண்க.

6) மேலைக் கருவேலங்குளத்தில் சுழலுந் தூண்:

திருநெல்வேலிக்குத் தென்மேற்கே நாகர்கோயில் செல்லும் வழியில் சுமார் 20 கி. மீ. தொலைவில் **மேலக்கருவேலங்குளம்** எனும் புகழ் பெற்ற நடராசர் திருத்தலம் உள்ளது. சிற்பக் களஞ்சியமாக விளங்கும் இத்திருக்கோயிலில் 16 இசைத் தூண்கள் உள்ளன; ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சுவரஒலியமைப் பினைச் சிற்பியர் செய்துள்ளனர். அஃது ஒரு புறமிருக்க நடராசர் சந்நிதியில், முன்மண்டபத் தூண்களில் பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலியோரின் சிற்பங்கள் உள்ளன. ''தவிர, **ஒருதூண் நான்கு புறமும் சுழலும்படி அமைந்திருப்பது மிகவும் அற்புதமானது**''[2].

V பிற சிற்பக்கலைப் படைப்புக்கள்:

1) மரச்சிற்பம் — நீரினுள் சிலை நிறுவும் விந்தை:

தெய்வச் சிலைகளையோ அருளாளர்கள் சிலைகளையோ மலையுச்சியிலோ, கடல், ஆறு, குளம் முதலிய தீர்த்தக் கரையிலோ, காட்டிலோ, சதுக்கத்திலோ அமைத்துக் கோயில் கொள்ளச் செய்தல் சமய மரபாகும். ஆனால், கடலுக்கடியிலோ ஆற்றுக்கு அடியிலோ குளத்திற்கு அடியிலோ நீர் சூழக் கோயில் கொள்ளச் செய்தல் — தாபித்தல் — விந்தைக்கு உரியதாகும். இத்தகைய தெய்வநல விந்தைகளும் உலகில் சில இடங்களில் உள்ளன.

காஞ்சி வரதராசப் பெருமாள் (அத்திகிரி அருளாளன்) கோயில் வளாகத்து **ஆனந்த புஷ்கரணி** குளத்தில் — நீராழி மண்டப அடித்தளத்தில்-ஒருமாடம் ஒன்றிலே அத்திமரத்தாலான **அத்திவரதர்சிலை** நீர்ச்சூழலில் அமைக்கப்பட்டுள்ளது. 40 ஆண்டு

1. அம்மன் தரிசனம் [திங்களிதழ்] நவம்பர் 1995, பக், 6
2. மேலது, ஜூலை, 1994, பக். 46

களுக்கு ஒருமுறை அத்திருக்குளத்தின நீரினின்றும் அத்திவரதரை வெளியிலெடுத்து அதற்குக் கோலாகலமாக ஒரு மண்டலம் திருவிழாக் கொண்டாடி மகிழ்வதைப்பலரும் அறிவர். இவ்வாறு அத்திவரதர் நீருக்கடியில் சில ஆண்டுகள் இவ்வாறு இருப்பதால் உலகத்துக்கு நலமுண்டாகிறது என்பது சமய நம்பிக்கை. தென்னாட்டில், சிறப்பாகத் தமிழ்நாட்டிலே மட்டும் இத்தகைய நம்பிக்கையிருந்து வருகிறதென்பதில்லை. உலகளாவிய நிலையிலும் இவ்வாறான நம்பிக்கை நடைமுறையிலிருந்து வருகிறது. எடுத்துக்காட்டாக அயர்லாந்தில் ஓர் இயேசுபிரான் சிலைபற்றிக் காண்போம்.

"அயர்லாந்தில் உள்ள **போர்டோ மபினோ** கடற்கரையில் 59 அடி ஆழத்தில் ஒரு **கிறித்துவின் சிலையை** நிறுவியிருக்கிறார்கள்.

இந்த அதிசயச் சிலையை நிறுவ உலகம் முழுவதிலுமுள்ள கப்பல் தொழிலாளர்கள் நன்கொடை தந்தனராம்.

கடலில் உயிர்துறந்தவர்களின் ஆத்மசாந்திக்காகவும், கடற்பயணம் மேற்கொள்பவர்களது சுகமான பயணத்துக்காகவும் இந்த இயேசுபிரானின் சிலை ஆசி கூறுவது போன்ற ஐதீகத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது.

சிலைக்கு எதுவும் நேராமலிருக்க அவ்வப்போது கப்பல் தொழிலாளிகள் ஆழத்தில் சென்று பார்த்துப் பாதுகாப்பாக வைத்துள்ளனராம்,"[1] எனக் **கோமளா** குறித்துச் செல்வது மனங்கொள்ளத்தக்கதாகும்.

2) எருமை வெட்டிப்பாளையம் — சாளக்கிராமக் கல்லில் சீதாராமர்:

சைவம் வைணவம் சாக்தம் இம்மூன்றும் ஒன்றையொன்று தழுவி நிற்கும் சமநோக்குத்தலங்களுள் ஒன்று எருமைவெட்டிப் பாளையம். சென்னைக்கு வடமேற்கில் நெல்லூர் நெடுஞ்சாலையில், சோழவரத்துக்கு மேற்கே 3 கல் தொலைவிலுள்ளது

1. தினமணி [நாளிதழ்], 6-7-1972

இத்தலம், பல்லவர் சோழர்களால் வளர்க்கப்பட்ட சிற்பக்கலை, விசய நகர மன்னர் காலத்தே உச்சநிலையடைந்ததை விளக்கும் வகையில் பெருமாள் கோயில் இங்கு உள்ளது.

இராமாயணத்தில், இந்திரனின் மகன் மோகத்தால் மதியிழந்து, காக்கையுருக் கொண்டு சீதையின் மார்பைத்தீண்டி, அதனால் அவள் துன்புற்றதை மனத்துட் கொண்டு சிற்பப் புலப்பாடு உள்ளது. "இதிகாசத்திலுள்ள இப்படலத்தைப் படித்தான் ஒரு **விசய நகரச்சிற்பி. கவியின்** சொற்சித்திரம் இவன் உளிநுனியில் சிற்பச் சித்திரமாய்ப் பரிணமித்தது. **ஒரே சாளக்கிராமக்கல்,** உருவமற்ற அதையே சிற்றுளிமாத்திரம் ஏந்தி, வேண்டாத பாகங்களை நுட்பமாய் நீக்கிச் **சீதாராம பிம்பத்தை** வெளிக் கொணர்ந்து விட்டான். எவ்வளவு பரந்த தோள், புஜபல பராக்ரமத்தை விளம்பரம் செய்வது போலல்லவா விசாலித்துள்ளது? அப்பரந்த கைகளே மிக மென்மையாகி ஜானகியின் குசங்களில் (மார்பில்) பீறிட்ட புண்களை ஸ்பரிசித்து ரணம் ஆற்றும் பாவனையை நமக்குக் காட்டுகிறான் சிற்பி .... "தேவு தென்கடல் அமிழ்து கொண்டநங்கவேள் செய்த ஓவியம்" என்ற **கம்பன்** சொல்லை இங்குச் சீதையின் வடிவில் காண்கிறோம். திவ்ய தம்பதிகளின் கைங்கரியத்தில் ஈடுபடவே கானகம் புகுந்த இளவீரன் இலட்சுமணன் கையில் வில்லேந்தி அருகில் நிற்குங்காட்சியையும் காண்கிறோம்" என்று சுவைபட **அறிஞர் நாராயணஸ்வாமி** (தினமணி — சுடர், 28—9—1980) எழுதிச் செல்வதைக் காண்க.

3) திருஉத்தரகோசமங்கை — மரகத நடராசர்:

பாண்டி நாட்டுத் திருஉத்தரகோசமங்கையில் **மரகதநடராசர் சிலை உள்ளது** என்பது முன்னரே குறிப்பாகக் கூறப்பட்டது. இங்கு அது தொடர்பாகச் சில விளக்கங் காணலாம்.

சைவசமயத்தொன்மைக்கு எடுத்துக்காட்டாகவும், மணிவாசகப்பெருந்தகையால் போற்றப் பட்டதாகவும் விளங்குவது திரு உத்தர கோசமங்கை.

மூர்த்திகரம் வாய்ந்த — விலைமதிப்பரிய — மரகதமெனும் **பச்சைக்கல்லால்** அமைக்கப்பட்ட ஓர் ஆள் உயரமரகத நடராசர்

பெருமானின் சிலை, திருஉத்தரகோச மங்கை ஆலயத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

ஆண்டுக்கு ஒருமுறை, திருவாதிரை நாளில் சந்தனக்காப்பை நீக்கிவிட்டு அபிடேகம் புரிவதை மரபாகக் கொண்டுள்ளனர். வியத்தகு முறையில் கலைநேர்த்தியுடன் அமைந்த அந்தச் சிலாமூர்த்தத்தை அந்த ஒரு நாளில் தான் கண்டு களிக்கலாம். ஏனைய நாள்களில் அதனைச் சந்தனக் காப்புடன் தான் காணமுடியும்.

4) தஞ்சை-புன்னை நல்லூர் அருள்மிகு மாரியம்மன் சிலை:

தமிழ் நாட்டில் பல ஊர்களில் மாரியம்மன் கோயில்களில் பல திருப்பெயர்களிலே அருள்மிகு மாரியம்மன் எழுந்தருளியிருத்தலைக் காணலாம். மூர்த்திகரம் நிரம்பிய மாரியம்மன் வரிசையில் புன்னைநல்லூர் மாரியம்மனும் ஒன்றாகும்.

கலைப்புரவலராகிய தஞ்சை மாமன்னர் **சரபோஜி**, அன்னை மாரியம்மனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி, அம்மனுக்குத் திருக்கோயிலில் மகாமண்டபம், நர்த்தன மண்டபம், முன் கோபுரம், பெரிய திருச்சுற்று மதில் முதலியவை அமைத்துத் திருப்பணி புரிந்துள்ளனர். அவரைப் பின்பற்றி வந்த மராட்டிய மன்னர்களும் பல திருப்பணிகள் புரிந்துள்ளனர் பேரழும் மகிமையும் வாய்ந்த அந்த அம்மனின் சிலை வியக்கத்தகு அமைப்பும் ஆற்றலும் கொண்டது.

பொதுவாக, மாரியம்மன் கோயில்களில் புற்றுருவையடுத்து அம்மன் பிரதிட்டை செய்யப்படுதல் ஒருவகைச் சமய அமைப்பாக இருந்து வருகிறது. வினைதீர்க்கும் இந்த மாரியம்மனும் புற்றினை மையமிட்டே எழுந்தருளியிருப்பதுடன், சாதி சமய வேறுபாடில்லாமல் சைவர் வைணவர் இசுலாமியர் கிறித்துவர் முதலிய பலரும் வழிபாடு செய்யும் நிலையில் மக்களின் குறை நீக்கியருளுகின்றாள். இங்கு அம்மை வடக்கு முகமாக அமர்ந்திருப்பதால், மிகச் சிறப்பாகப் போற்றப் பெற்று **'விஷ்ணு அம்சம்'** என்றும் அழைக்கப் பெறுகிறாள்.

இந்த மாரியம்மன் கீர்த்தி பற்றிக் **கௌதமன்** எழுதுகையில், 'தானாகவே புன்னை நல்லூரில் வந்தமர்ந்து மக்களைக் காத்து

வரும் அன்னை மாரியம்மனைத் தானாகவே தோன்றிய **''ரேணுகா''** தவச்செல்வி என்று மக்கள் பாராட்டுகின்றார்கள், அன்னை புற்றுருவாய் நின்றதால் அந்தப்புற்று **மண்ணோடு தைலங்கள், புனுகு, ஜவ்வாது சேர்த்து அரைத்து அன்னை மாரியம்மனை உருவாக்கினார்கள்.** உயிர்த்தோற்றமாய் அமைந்து விட்ட அந்த அன்னையின் உருவம் **கருங்கல் சிலை** போலாகி விட்டது'' என்று (இந்துமதம் அழைக்கிறது — திங்களிதழ், மார்ச், 1985) விளக்கியுள்ளது மனங்கொள்ளத்தக்கது.

தமிழ்நாட்டில் களனாய்வு மிகப்பரவலாகச் செய்திடின், எவ்வாறான கலவைகளால் சில தெய்வத்திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது தெரியவரும்.

5) சென்னை மயிலாப்பூரில் 'உரைக்கல்' கண்ணன்:

பாரதத்தில் வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் உள்ள தொடர்பால், சிலைவடிக்கும் கற்கள் அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்கும் கொண்டு செல்லப்படுவது உண்டு.

கற்பின் கனலியாகிய கண்ணகிக்குச் சிலை வடிக்கச் சேரன் செங்குட்டுவன் இமயப்படையெடுப்பை மேற்கொண்டது பலரும் அறிந்ததே, மேலும், நருமதையாற்றங்கரையில் கிடைக்கும் கற்களைக் கொண்டு தமிழகத்தில் சில ஆலயங்களில் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டிலிருந்து வடநாட்டுக்கும் கருங் கற்சிலைகள் சென்றுள்ளன. எடுத்துக்காட்டாக வாரணாசி (காசி)யில் அருள்மிகு **விசாலாட்சி** சிலையைக் காணலாம்.

வெள்ளைக்கல் — சலவைக்கல் — சிற்பங்கள் போலவே கட்டளைக்கல் சிற்பங்கள் சிலவும் வடநாட்டிலிருந்து தென் னாட்டுக்கு வந்துள்ளன. ''தங்கத்தை உரைத்துப் பார்க்கும் 'டச்ஸ்டோன் (Touch stone)' என்ற கல்லினால் ஆன கார்முகில் வண்ணன் — **கண்ணனின்** — உருவச்சிலையை **ராஜஸ்தானில்** செய்து, கல்கத்தாவில் முறைப்படி பூசைகள் ஆராதனைகள் செய்தபிறகு சென்னைக்குக் கொண்டு வந்தார்கள். இந்த அபூர்வமான கிருஷ்ண விக்கிரகம், நந்தலாலா சமிதியினரால் **மயிலையில்**, ரங்கா சாலையில் கோவிலில் பிரதிட்டை செய்யப் பட்டு, பக்த கோடிகளால் ஆகர்ஷிக்கப்பட்டு வருகிறது.'' எனவரும் குறிப்பு (அம்மன் தரிசனம், ஆகஸ்டு, 1994) மேலும் மனங்கொள்ளத் தக்கது.

தமிழ்ப் பண்பாட்டின் உயிர்நிலை
தமிழ்ப் பெருமக்கள் போற்றும் அருள்மிகு
தெய்வத் தமிழ்த்தாய்

1




© SHRI MAHALAXMI TEMPLE CHARITIES





















கருப்பண்ணஸ்வாமி


நந்தி
இராமேசுவரக்காட்சிகள்








அருள்தரும் மீனாட்சி

ஞானபூமி
சென்னை பெசன்ட் நகர்
அருள்மிகு அஷ்டலட்சுமி





Sun rise

Suchindrum Temple



கேது
சந்திரன்
செவ்வாய்
சுக்கிரன்
சூரியன்
புதன்
ராகு
குரு
சனி



வரலாற்றுச் சிறப்புமிக்க
புனிதர் தாமஸ் தேவாலயம்
மயிலாப்பூர், சென்னை.





















Kanyakumari District Co-op. Spinning
Mills Ltd.,
Aralvaimozhi,
Kanyakumari District.

PLATE I

PLATE XI

[illegible]



[illegible]



PLATE XI

[illegible]

60
THE TEMPLE OF NATARAJA



கல்லில் காவியம்